வீ.அ.மத்சுலேன்கோ

இரண்டாவது உலக யுத்தம்

முன்னேற்றப் பதிப்பகம்

வி.அ.மத்சுலேன்கோ

இரண்டாவது உலக யுத்தம்

வி.அ.மத்சுலேன்கோ

இரண்டாவது உலக யுத்தம்

(வரலாற்றுச் சுருக்கம்)

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

В. А. Мацуленко

ВТОРАЯ МИРОВАЯ ВОЙНА

на тамильском языке

Matsulenko V.

THE SECOND WORLD WAR

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{1304020000-341}{014(01)-86}$ 341-86

பொருளடக்கம்

முன்னுரை 7

அத்தியாயம் I. யுத்தத்தின் முன்னணைப் பொழுதில் . . 12

1. ஜெர்மானிய பாசிசம்—ஐரோப்பாவில் யுத்தத்தின் முக்கியத் தோற்றுவாய் 12
2. தொலைக் கிழக்கில் யுத்தத்தின் தோற்றுவாய் . . . 20
3. கூட்டுப் பாதுகாப்பு முறையை தோற்றுவிக்க சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் . 24

அத்தியாயம் II. யுத்தத்தின் துவக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள் 34

1. ஜெர்மன்-போலந்து யுத்தம் (1939 செப்டெம்பர்) . . 38
2. பிரான்சின் மீதான தாக்குதல் (1940 மே 10—ஜூன் 24) 49
3. பிரிட்டன் மற்றும் அட்லாண்டிக்கிற்கான சமர் (1940 ஆகஸ்டு 12—1941 ஜூன்) 62
4. பால்கன் மீதான தாக்குதல் (1941 ஏப்ரல் 6—29) . . 67
5. வடக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும் நடைபெற்ற சண்டைகள் (1940 ஜூன்—1941 ஜூன்) . 71
6. சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்கான பாசிச ஜெர்மனியின் தயாரிப்பு. ''பார்பரோஸ்ஸா'' திட்டம் 76
7. சோவியத் யூனியனின் மீது படையெடுக்க இராணுவ வெறி கொண்ட ஜப்பான் செய்து வந்த தயாரிப்புகள். ஆசியாவில் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு . . . 86
8. நாட்டின் பாதுகாப்புத் திறமையை வலுப்படுத்துவது சம்பந்தமாக சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் 89

அத்தியாயம் III. ஜெர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு. ''மின்னல் வேக யுத்தம்'' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி 97
1. சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனியின் துரோகமயமான தாக்குதல். யுத்தத்தின் ஆரம்பக் கட்டம் 97
2. ஸ்மலேன்ஸ்க் சமர் (1941 ஜூலை 10—செப்டெம்பர் 10) 107
3. லெனின்கிராத், கீவ், ஒதேஸ்ஸா மற்றும் செவஸ்தோப்பலின் வீரம் மிக்க பாதுகாப்பு 112
4. மாஸ்கோ அருகே நடந்த சமர் (1941 செப்டெம்பர் 30—1942 ஏப்ரல் 20) 116
5. ஸ்தாலின்கிராத் மற்றும் காக்கசஸின் தற்காப்பு . . 139
6. பசிபிக் சமுத்திரத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் ஜப்பானின் ஆக்கிரமிப்பு (1941 ஜூன்—1942 அக்டோபர்) 148
7. வடக்கு ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் மற்றும் அட்லாண்டிக் பிரதேசத்தில் நேச நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள் (1941 ஜூன்—1942 அக்டோபர்) . 157
8. பாசிச எதிர்ப்பு கூட்டணியின் தோற்றம் . . . 161

அத்தியாயம் IV. யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்பு முனை 167
1. ஸ்தாலின்கிராத் அருகேயும் காக்கசஸிலும் அடைந்த மகத்தான வெற்றி (1942 நவம்பர் 19—1943 அக்டோபர் 9) 167
2. லெனின்கிராத் முற்றுகை உடைப்பு (1943 ஜனவரி 12—30) 184
3. கூர்ஸ்க் சமர் (1943 ஜூலை 5—ஆகஸ்டு 23) . . . 187
4. தினேப்பருக்கான சமர் (1943 ஆகஸ்டு—டிசம்பர்) . 205
5. வடக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும் 1942—1943இல் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் 213
6. 1943இல் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் 234

அத்தியாயம் V. தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு . 240
1. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் பக்கவாட்டுப்

பகுதிகளில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு 245
2. ''சென்டர்'' மற்றும் ''வடக்கு உக்ரேன்'' ஆகிய ஹிட்லர் படைத் தொகுதிகளின் முறியடிப்பு . . . 260
3. தென் கிழக்கு ஐரோப்பாவில் பாசிசக் கூட்டின் தோல்வி 275
4. பால்டிக் குடியரசுகள் மற்றும் ஸபல்யார்யேவின் விடுதலை 327
5. மேற்கு ஐரோப்பாவிலும் இத்தாலியிலும் நேச நாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள் 340
6. பசிபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் ஆசியாவிலும் நேச நாட்டவரின் தாக்குதல் 373
7. எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சி 380
8. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி பலமடைதல் . . 384

அத்தியாயம் VI. பாசிச ஜெர்மனியின் முறியடிப்பு முற்று பெறுதல் 389
1. போலந்தின் விடுதலை (1945 ஜனவரி 12—பிப்ரவரி 2) . 393
2. கிழக்கு பிரஷ்யாவிலும் கிழக்கு பொமெரானியாவிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு . . 404
3. ஆஸ்திரியா, செக்கோஸ்லொவாக்கியாவின் விடுதலை . 411
4. பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும் 426
5. மேற்குப் போர்முனையில் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் 442
6. ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியைப் பற்றிய உடன்பாடு கையெழுத்தாதல் 447
7. பாட்ஸ்டாம் மகாநாடு 451
8. நியூரென்பர்க் விசாரணை . . 454

அத்தியாயம் VII. இராணுவ ஜப்பானின் தோல்வி . . 457
1. 1945 கோடையில் இருந்த இராணுவ-அரசியல் நிலவரம் 457
2. பசிபிக் சமுத்திரப் பகுதியிலும் ஆசியாவிலும் நேச நாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள் 461
3. குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதியும் 470
4. ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி உடன்பாட்டில் கையெழுத்திடுதல் 490

5. டோக்கியோ சர்வதேச ட்ரிப்யூனல் . . . 493

அத்தியாயம் VIII. யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும் 497
1. இராணுவ-அரசியல் முடிவுகள் 498
2. யுத்தத்தின் பிரதான, தீர்மானகரமான போர்முனை . 502
3. சோவியத் இராணுவத்தின் விடுதலைப் பணி . . 510
4. மறக்க கூடாத படிப்பினைகள் . . 517

சுருக்கக் குறியீடுகள் . 527

முன்னுரை

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி மேலும் ஆழமடைந்து வந்த சூழ்நிலைகளில் தோன்றிய இரண்டாவது உலக யுத்தம் (1939—1945) ஏகாதிபத்திய அரசுகள் பின்பற்றிய ஆக்கிரமிப்பு, சோவியத் எதிர்ப்புக் கொள்கையின் நியதியான விளைவாக அமைந்தது. உலகம் முழுவதையும் தனக்கு அடிமைப்படுத்தி அடக்கியாள வேண்டும் என்று முயலும் ஏகாதிபத்தியத்தின் சாராம்சத்திலேயே இந்த யுத்தத்திற்கான காரணங்கள் அடங்கியுள்ளன. உலகை மறு பங்கீடு செய்வதற்காகவும் விற்பனைச் சந்தைகள், மூலப்பொருட்களின் இருப்பிடங்கள் ஆகியவற்றிற்காகவும் நடந்த போராட்டத்தில் பெரும் முதலாளித்துவ அரசுகளுக்கிடையேயான முரண்பாடுகள் கூர்மையடைந்ததன் விளைவாய் யுத்தம் மூண்டது. ஒரு புறம் ஹிட்லரின் ஜெர்மனி, பாசிச இத்தாலி மற்றும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானும், மறு புறம் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடும் இருந்தன. ஆனால் இந்த இரு தரப்புகளுக்கிடையே கடுமையான போராட்டம் நிலவினாலும் சோவியத் யூனியனின் பாலும் சோஷலிசக் கட்டுமானத்தில் இது அடைந்த வெற்றிகளின் பாலும் சர்வதேச அரங்கில் இதன் செல்வாக்கு வளர்ந்து வருவதன் பாலும் உள்ள வர்க்க வெறுப்பு இந்நாடுகளுக்கு பொதுவானதாக இருந்தது.

உலகின் முதல் சோஷலிச அரசை ஒழித்துக் கட்டுவதற்காகவும் உலக அரங்கில் ஆபத்தான போட்டி நாடு என்ற வகையில் ஜெர்மனியை பலவீனப்படுத்தவும் பாசிச ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு நாட்டங்களை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்பி விடுவதற்காக பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தம் சக்திகள் அனைத்தையும் செலவிட்டனர். சோவியத் நாட்டிற்கு எதிராகப் பயன்படுத்த வல்ல முக்கிய தாக்கு சக்தியை இவர்கள் ஜெர்மானியப் பாசிசத்திடம் கண்டதாகக் கருதினர். சர்வதேச, எல்லாவற்றிற்கும் முதலாவதாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பெரும் அரசியல் ஆதரவு மற்றும் தாராளமான நிதியுத

வியைக் கொண்டு ஜெர்மன் பாசிஸ்டுகளும் ஜப்பானிய இராணுவ வெறியர்களும் பலம் மிக்க ஆக்கிரமிப்பு இராணுவ இயந்திரத்தை உருவாக்கினர். முதலில் இந்த இராணுவ இயந்திரம் சீனுவிற்கு எதிராக ஜப்பானுல் முடுக்கி விடப்பட்டது—1931இல் ஜப்பானிய இராணுவம் மஞ்சூரியாவின் ஆக்கிரமிப்பைத் துவக்கியது. இதை அடுத்து ஆஸ்திரியா, செக்கோஸ்லொவாக்கியா ஆகிய நாடுகளை ஜெர்மனி ஆக்கிரமித்தது, போலந்தைக் கைப்பற்றியது. பின்னர், ஜெர்மனியில் பாசிச ஆட்சியைப் பலப்படுத்த எந்த நாடுகள் எல்லாம் உதவி புரிந்தனவோ அந்நாடுகளுக்கு எதிராகவும்—பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் இவற்றின் நேச நாடுகளுக்கு எதிராக—ஆக்கிரமிப்பு இயந்திரம் திருப்பி விடப்பட்டது.

பாசிசம் மற்றும் யுத்தத்திற்கு எதிராக உறுதியோடு, தொடர்ச்சியாகப் போரிட்ட, கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்ட சோவியத் யூனியன் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்த்து நின்றது. முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தேசிய விடுதலை மற்றும் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களும் சோவியத் யூனியனுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு சமாதானத்திற்காகப் போராடினர்.

இரண்டாவது உலக யுத்தம் ஏகாதிபத்திய யுத்தம் என்ற வகையில் முதலாளித்துவ அரசுகளின் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே துவங்கியது. சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி தாக்கியதால் சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்க நேரிட்டதும் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி தோற்றுவிக்கப்பட்டதும் யுத்தத்தின் நியாயமான, பாசிச எதிர்ப்புத் தன்மையை ஊர்ஜிதப்படுத்தியது. இதையடுத்து நடைபெற்ற உலக சம்பவங்களின் வளர்ச்சி, தமது வெளிநாட்டுக் கொள்கையை மறுபரீசலனை செய்யுமாறு அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்களை நிர்ப்பந்தித்தது. 1941ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றுங் காலை அமெரிக்க ஐக்கிய நாட்டின் தற்காலிக அரசுத் துறைச் செயலாளர் வேல்லஸ், ''இன்று ஹிட்லரின் இராணுவம்தான் அமெரிக்க கண்டத்திற்கு முக்கிய அபாயம்''* என்று குறிப்பிட்டார். பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சிலும் இதே போன்ற அறிக்கையை வெளியிட்டார். ஆம், உண்மையில் அப்போது பாசிச அடிமை அபாயம் எல்லா நாட்டு மக்களையும் அச்சுறுத்தியது.

யுத்தத்தின் போக்கில் சோவியத் யூனியனின் அரசியல் லட்சியங்களும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மற்ற மேற்கத்திய வல்

---

* புதிய மற்றும் நவீன வரலாறு, 1974, № 2, பக்கம் 57 (ருஷ்ய மொழியில்).

லரசுகளின் அரசியல் லட்சியங்களும் எல்லாவற்றிலும் ஒத்துப் போக வில்லை. ஆனால் பாசிச அரசுகளை முறியடிப்பதில் இந்நாடுகளுக்கு இருந்த பொது அக்கறை இராணுவ-அரசியல் கூட்டின் அடிப்படை யாக அமைந்தது. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் தோற்றமானது சோவியத் யூனியனின் இராணுவ, பொருளாதார பலத்தை அமெ ரிக்கா, பிரிட்டன் மற்றும் இக்கூட்டணியின் மற்ற உறுப்பு நாடுகள் ஆகியவற்றின் பலத்தோடு ஒன்றிணைக்க உதவியது. யுத்தத்தின் அரசியல் லட்சியங்களையும் போர்த்தந்திர லட்சியங்களையும் வெவ் வேறு விதமாகப் புரிந்து கொண்டதால் தோன்றிய முரண்பாடு கள் இந்த மகத்தான சக்தியை மிகுந்த செயல் வன்மையோடு பயன்படுத்தத் தடையாக இருந்தன.

யுத்தத்தில் பாசிச ஜெர்மனியும் சோவியத் யூனியனும் களைத்துப் போகும் என்றும் எனவே யுத்தத்திற்குப் பின் உலகை மாற்றி யமைக்கும் பிரச்சினைகளைத் தாமே தீர்க்க முடியுமென்றும் மேலைய வல்லரசுகள் திட்டமிட்டன. ஐரோப்பாவில் நேச நாடுகள் இரண் டாவது போர்முனையைத் துவக்கும் பிரச்சினையில் முரண்பாடுகள் மிக வெளிப்படையாகவும் கூர்மையாகவும் வெளிப்பட்டன. சோவியத் யூனியன் தன்னந் தனியாகவே பாசிச ஜெர்மனியை முறியடிக்கும் என்பது 1944ஆம் ஆண்டு கோடையில் அனைவருக்கும் தெட்டத் தெளிவாகப் புரியும் வரை அமெரிக்காவும் பிரிட்டனும் இந்தப் போர்முனையை துவக்குவதை இழுத்தடித்தன.

பாசிச ஜெர்மனியின் முக்கியச் சக்திகள் செயல்பட்ட சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் யுத்தத்தின் தலைவிதி தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்த போது அமெரிக்கா, பிரிட்டனின் போர்த்தந்திரம் வட மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு போன்ற இரண் டாம் பட்ச முக்கியத்துவம் வாய்ந்த போர்முனைகளில் சக்திகளை விரயம் செய்வதில் அடங்கியிருந்தது.

ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் உறுப்பு நாடுகளிடையே முரண்பாடுகள் நிலவிய போதிலும் உலக ஆதிக்கத்திற்கான போட்டி யாளர்களை முற்றிலுமாக முறியடிப்பது எனும் தனது முக்கியக் கடமையை இது வெற்றிகரமாக நிறைவேற்றியது.

சர்வதேச ஏகாதிபத்திய பிற்போக்கால் ஏற்பாடு செய்யப்பட்டு முக்கிய ஆக்கிரமிப்பு அரசுகளாகிய பாசிச ஜெர்மனி, பாசிச இத் தாலி மற்றும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானால் கட்டவிழ்த்து விடப்பட்ட இரண்டாவது உலக யுத்தம் மனிதகுல வரலாற்றிலேயே மிகப் பெரும் யுத்தமாக அமைந்தது. உலக மக்களில் 80 சதவிகிதத் திற்கும் அதிகமானோர் இந்த யுத்தத்தில் இழுக்கப்பட்டனர்; இராணுவ நடவடிக்கைகள் மூன்று கண்டங்களிலும் பெரும் கடல் மற்றும் சமுத்திரப் பரப்புகளிலும் நடைபெற்றன.

பாசிச ஜெர்மனி மற்றும் அதன் கூட்டாளிகளின் தாக்குதலை தன் மீது ஏற்றுக் கொண்ட சோவியத் மக்களின் மாபெரும் தேச பக்த யுத்தம் (1941 – 1945) இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கிய அங்கமாகும். சாராம்சத்தில் மூன்று ஆண்டுகளுக்கு சோவியத் மக்கள், பாசிச ஜெர்மனியின் தலைமையிலான அரசுகளின் கூட்டணியை எதிர்த்து தன்னந் தனியாகப் போரிட்டனர். கிழக்கத்தியப் போர்முனையில்தான் பாசிச ஜெர்மனியின் இராணுவ பலம் தவிடு பொடியாக்கப்பட்டது, கடுமையான சமர்களில் பாசிசம் முறியடிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட நாஜி ஜெர்மனி 1945ஆம் ஆண்டு மே 9ஆம் தேதி சரணடைந்தது. செப்டெம்பர் 2ஆம் தேதி குவாண்டுங் இராணுவம் சோவியத் இராணுவத்தால் முறியடிக்கப்பட்ட பின் இராணுவ வெறி கொண்ட ஜப்பான் நிபந்தனையின்றி சரணடையும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

பாசிசக் கூட்டின் மீதான வெற்றி ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி நாடுகளின் மக்களுடைய பொது வெற்றி என்றாலும் சோவியத் யூனியன் இதில் தீர்மானகரமான பங்காற்றியது. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில்தான் ஜெர்மனி மற்றும் அதன் கூட்டாளிகளின் முக்கிய சக்திகள் ஒழிக்கப்பட்டன.

இரண்டாம் உலக யுத்தம் மக்களுக்கு அளவற்ற துக்கத்தையும் சுமைகளையும் இழப்புக்களையும் கொண்டு வந்தது. இந்த யுத்தத்தில் 50மில்லியனுக்கும் கூடுதலானோர் உயிரிழந்தனர்; 4 திரில்லியன் டாலர்கள் பொருட் சேதம் ஏற்பட்டது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் மற்ற கண்டங்களிலும் எண்ணற்ற நகரங்களும் கிராமங்களும் தரைமட்டமாக்கப்பட்டன, மனித மேதமையின் ஏராளமான மாபெரும் படைப்புகள் மறைந்து போயின, பல லட்சக்கணக்கான மக்கள் காயங்கள், நோய் நொடிகள், பட்டினியால் வாடினர். ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட இரண்டாம் உலக யுத்தத்திற்கு அளிக்கப்பட்ட விலை இவ்வளவு பயங்கரமானதாக இருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தை 5 காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.

முதல் காலகட்டம் (1939 செப்டெம்பர் 1 – 1941 ஜூன் 21)– யுத்தத்தின் துவக்கம், மேற்கு ஐரோப்பிய நாடுகளினுள் ஜெர்மானியத் துருப்புகள் நுழைந்தன.

இரண்டாவது காலகட்டம் (1941 ஜூன் 22 – 1942 நவம்பர் 18) – பாசிச ஜெர்மனி சோவியத் யூனியனின் மீது தாக்குதல் தொடுத்தது, யுத்தம் விரிவடைந்தது, பிலித்ஸ்கிரிக் (மின்னல் வேக யுத்தம்) எனும் ஹிட்லர் சித்தாந்தம் தவிடு பொடியானது.

மூன்றாவது காலகட்டம் (1942 நவம்பர் 19 – 1943 டிசம்பர்

31)—யுத்தத்தின் போக்கில் அடிப்படை மாற்றம், பாசிசக் கூட்டின் தாக்குதல் போர்த்தந்திரத்தின் தோல்வி.

நான்காவது காலகட்டம் (1944 ஜனவரி 1—1945 மே 9)—ஐரோப்பாவில் பாசிசக் கூட்டின் முறியடிப்பு, எதிரி இராணுவத்தை சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் விரட்டியது, இரண்டாவது போர்முனையை ஆரம்பித்தது, ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தது, பாசிச ஜெர்மனியின் முழுத் தோல்வி, இதன் நிபந்தனையற்ற சரணடைவு.

ஐந்தாவது காலகட்டம் (1945 மே 9—செப்டெம்பர் 2)—ஏகாதிபத்திய ஜப்பானின் முறியடிப்பு, ஆசிய மக்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தல், இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவு.

இந்நூலில் திட்டவட்டமான உதாரணங்களில், புதிய, அதிகம் அறியப்படாத பத்திராலய ஆவணங்கள், சோவியத் மற்றும் அயல் நாட்டு அரசியல் பிரமுகர்கள், இராணுவ நிபுணர்களின் நினைவுக் குறிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கிய சம்பவங்கள் விளக்கப்பட்டுள்ளன, இராணுவ-அரசியல் முடிவுகள் தரப்பட்டுள்ளன.

அத்தியாயம் 1

யுத்தத்தின் முன்னணைப் பொழுதில்

1. ஜெர்மானிய பாசிசம் — ஐரோப்பாவில் யுத்தத்தின் முக்கியத் தோற்றுவாய்

இரண்டாம் உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட ஏகாதிபத்தியச் சக்திகள் இது தொடங்குவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே தமது ஆக்கிரமிப்பு அரசியல் மற்றும் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்தத் துவங்கின. 30ஆம் ஆண்டுகளில் உலகில் யுத்தத்தின் இரண்டு முக்கியத் தோற்றுவாய்கள் உருவாயின. இவற்றில் ஒன்று ஐரோப்பாவில் தோன்றிய பாசிச ஜெர்மனியும் இத்தாலியும், மற்றது தொலைகிழக்கில் தோன்றிய இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் ஆகும்.

ஜெர்மானிய ஏகாதிபத்தியம், நியாயமற்ற 1919 ஆண்டு வெர்சேய் சமாதான ஒப்பந்தத்தை ஒழிப்பது எனும் சாக்கின் கீழ் மானுட விரோத பாசிச சித்தாந்தத்தின் அடிப்படையில் ''புதிய முறையை'' தோற்றுவிக்க முயலும் முகமாக உலகை தனக்கு ஆதரவாக மாற்றியமைக்க வேண்டுமெனக் கோரியது.

ஹிட்லரின் தலைமையில் தன்னை தேசிய சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சி என்று வாய்வீச்சோடு தம்பட்டம் அடித்து கொண்ட பாசிச கட்சி ஜெர்மானிய இனத்தின் ஆதிக்கத்திற்கு வகை செய்வதற்காக தேசிய வெறி கொண்ட யுத்தக் கோஷங்களை வெளிப்படையாக முன்வைத்தது, மற்ற மக்களினங்களின் பால் காழ்ப்புணர்ச்சியை பிரச்சாரம் செய்தது, கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக கொடிய அடக்கு முறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்க வேண்டுமென்றும் கோரியது. 1933இல் ஆட்சிக்கு வந்த பாசிஸ்டுகள் ஜெர்மனியின் முற்போக்குச் சக்திகளின் மீது, முதலாவதாக கம்யூனிஸ்டுகள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டனர், ஜெர்மனியின் உலக ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற வெறிபிடித்த கருத்தை பிரகடனப்படுத்தி சகல வித ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஒழித்துக் கட்டினர்.

1935ஆம் ஆண்டு நடைபெற்ற நாஜி கட்சியின் காங்கிரசில்

இன ''விஞ்ஞானம்'' ''இயற்கை மற்றும் மனித வரலாறு பற்றிய தேசிய சோஷலிஸ்டு கருத்தின் மிக முக்கிய அடிப்படை'' என்றும் ''தேசிய சோஷலிஸ்டு பேரரசின் சட்ட முறையின் அடிப்படை'' என்றும் அறிவிக்கப்பட்டது. நிறவெறியின் முக்கிய தத்துவவாதி யாகிய பேராசிரியர் குன்டருக்கு, இக்காங்கிரசால் உருவாக்கப்பட்ட ''விஞ்ஞானத் துறை பரிசு''* அளிக்கப்பட்டது.

பாசிஸ்டுகள் கம்யூனிசத்தையும் சோவியத் யூனியனையும் ''உலகம் முழுவதன் எதிரிகள்'' என்றும் ''மூன்றாவது பேரரசை'' (ஜெர்மனி) ''மேற்கத்திய நாகரிகத்தின் கோட்டை'' என்றும் அறிவித்து ஆயுதந் தரிக்கும் பிரச்சினைகளிலும் கிழக்கிற்கு எதிரான ''சிலுவைப் போர்'' பிரச்சினைகளிலும் இப்பேரரசிற்கு முழு சுதந்திரம் வேண்டுமென கோரினர். யுத்தத்திற்குத் தயாராகும் முகமாக பாசிஸ்டுகள் 1935ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி ஜெர்மானிய இராணுவத்தை—வேர்மஹ்ட்—உருவாக்குவதைப் பற்றியும் கட்டாய இராணுவ சேவை குறித்தும் சட்டமியற்றினர்; நாட்டைக் கண்மூடித்தனமாக ஆயுதந்தரிப்பதில் இறங்கினர். இதற்குப் பின் சில நாட்கள் கழித்து 1935ஆம் ஆண்டு மே 21ஆம் தேதி பாசிச அரசாங்கம் ''பேரரசின் தற்காப்பு'' பற்றிய சட்டத்தை நிறைவேற்றியது; இச்சட்டம் இரண்டாம் உலக யுத்தம் துவங்கும் வரை இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது. யுத்தத்திற்குத் தயார்படுத்திக் கொள்வதிலும் யுத்தத் தைத் துவக்குவதிலும் அதை நடத்துவதிலும் இராணுவ மற்றும் சிவில் ஆட்சியாளர்களின் கடமைகள் அதில் வரையறுக்கப்பட் டிருந்தன. நாட்டில் போர்க்கால சட்டத்தை கொண்டு வருவது, சர்வபொது படைத் திரட்டல் மற்றும் யுத்தத்தை அறிவிப்பது சம்பந்தமாக சகல வித முடிவுகளையும் மேற்கொள்ள இச்சட்டம் ஹிட்லருக்கு உரிமையளித்தது.** நியூரென்பர்க் விசாரணையின் போது இந்த தற்காப்புச் சட்டம்தான் நாஜி ஜெர்மனியின் யுத்தத் தயாரிப்புகள் அனைத்திற்கும் கோடிக்கல் என்று சித்தரிக்கப்பட்டது.

1935ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற பாசிசக் கட்சி யின் ஏழாவது காங்கிரஸ், ஜெர்மனியை ஆக்கிரமிப்பு அரசாக மாற்றுவதற்கான ஜெர்மானியப் பாசிஸ்டுகளின் வெறி பிடித்த நடவடிக்கை முழுவதற்கும் சிகரமாக அமைந்தது. இந்தக் காங் கிரஸ் ''சுதந்திர கட்சிக் காங்கிரஸ்'' என்றும் 1935ஆம் ஆண்டு ''சுதந்திர ஆண்டு'' என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது

---

* *Der Parteitag der Freiheit vom 10—16 September 1935*, Offizieller Bericht, S. 50—54.

** பெ. மியூல்லர்-கில்லெபிராண்ட், 1933—1945இல் ஜெர்மனியின் தரைப்படை, தொகுதி 1, பக்கம் 30 (ருஷ்ய மொழியில்).

இறுதியாக ஜெர்மானியர்களுக்கு இராணுவ அரசுரிமையும் ஆயுதந் தரிக்கும் சுதந்திரமும் கிடைத்துள்ளன என்று நாஜிக் கட்சியினர் அறிவித்தனர். இந்த காங்கிரஸ் பாசிச அரசின் வளர்ந்து வரும் இராணுவ பலத்தின் வெளிப்படையான பிரகடனமாகவும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்காக ஜெர்மானியர்களை சித்தாந்த ரீதியாகவும் மன நிலை ரீதியாகவும் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மிகப் பெரும் பிரச்சார நடவடிக்கையாகவும் அமைந்தது. 1936ஆம் ஆண்டு, அப்போது நிலவிய ஒப்பந்தங்களை மீறி ஹிட்லர் ஆட்சி ரைன் பிரதேசத்திற்குள் இராணுவத்தை அனுப்பியது, மீண்டும் பிரெஞ்சு எல்லையை நோக்கிச் சென்றது.

இவ்வாறாக ஜெர்மனியில் பாசிசம் ஆட்சிக்கு வந்ததானது, எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் யூனியனுக்கு எதிரான சர்வ தேச ஏகாதிபத்தியத்தின் முக்கிய தாக்குதல் சக்தியாக ஜெர்மனியை மாற்றியது. முழு இராணுவமயமாக்கல் மற்றும் உலக ஆதிக் கத்தைக் கைப்பற்றுதல் எனும் பாசிச திட்டம் சோவியத் யூனியனை கைப்பற்றுவதோடு நின்று விடாமல் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளையும் அச்சுறுத்தினாலும் இந் நாடுகளின் ஆளும் வட்டங்கள், சோவியத் நாட்டின் பாலான வர்க்க வெறுப்புணர்வால் உந்தப்பட்டு ''தலையிடாமை'' மற்றும் ''நடுநிலை'' எனும் சாக்குபோக்குகளைக் காட்டி, சாராம்சத்தில் ஆக்கிரமிப்பை நோக்கமாகக் கொண்ட பாசிச கூட்டின் நாடுகளை ஊக்குவிக்கும் கொள்கையை பின்பற்றின. மேலைய நாடுகளின் முதலாளிகளிட மிருந்து, குறிப்பாக அமெரிக்க ஏகபோகங்களிடமிருந்து வந்த முதலீடுகளும் கடன்களும் ஜெர்மனியின் இராணுவப் பொருளா தாரம் புனரெழுச்சி பெற உதவின. இதன் பயனாய் 30ஆம் ஆண்டு களின் இறுதியில் பாசிச ஜெர்மனியின் இராணுவ தொழிற்துறை, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒட்டு மொத்த தரத்தை விட அதிக உயர்வான மட்டத்தை அடைந்தது. இதோடு, இத்தாலியும் ஜப்பானும் தமது பொருளாதாரத்தைக் கணிசமாக இராணுவமயமாக்கின.

மேலும் மேலைய நாடுகள் பாசிச ஜெர்மனிக்கு போர்த்தந்திர முக்கியத்துவமுடைய மூலப்பொருட்களை வழங்கி உதவின. உதாரண மாக 1936ஆம் ஆண்டு அக்டோபரில் பிரபல ஜெர்மன் தொழி லதிபர் ஷாஹ்ட் மூன்றாவது பேரரசின் பொருளாதார அமைச்சரா யிருந்த போது ஆண்டு தோறும் மூன்றரை பில்லியன் மார்க்கு களுக்கும் கூடுதலான மதிப்புள்ள இரும்புத் தாதுவை வாங்குவது சம்பந்தமாக பிரெஞ்சு அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஜெர்மனிக்கு பாக்சைட்டின் வரவும் 6 மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. விமானக் கட்டுமானத்திற்கு மிக முக்கிய

மான அலுமினிய உற்பத்தியில் உலகிலேயே முதலிடத்திற்கு வர இது ஜெர்மானியக் கம்பெனிகளுக்கு உதவியது.

1936ஆம் ஆண்டு செப்டெம்பரில் நாஜிக் கட்சியின் நியூரென் பர்க் காங்கிரஸ், ஜெர்மனியின் பொருளாதாரத்தை யுத்தத்திற்குத் தயாராகும் வழிகளில் மேற்கொண்டு மாற்றியமைக்கும் நான் காண்டு திட்டத்தை அங்கீகரித்தது. நான்காண்டுகள் கழித்து ஜெர் மானிய இராணுவம் செயல்பட தயாராயிருக்க வேண்டுமென்றும் இதே காலகட்டத்தில் ஜெர்மனியின் பொருளாதாரம் யுத்தத் திற்குத் தயாராயிருக்க வேண்டுமென்றும் 1936ஆம் ஆண்டு இலே யுதிர் காலத்தில் வெளியான ஹிட்லரின் இரகசியச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஏகபோகங்களின் உதவியால் புத்துயிர்ப்பு பெற்றிருந்த பாசிச ஜெர்மனியின் இராணுவ தொழிற்துறை துரிதமான வேகங்களில் வளர ஆரம்பித்தது.

ஜெர்மானியப் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு) புள்ளி விவரங்களின்படி 1933 முதல் 1939 வரை நாட்டில் ஆயுத உற்பத்தி 10 மடங்கு அதிகரித்தது, விமான கட்டுமானமோ கிட்டத்தட்ட 23 மடங்கு உயர்ந்தது. ஜெர்மனியின் இயந்திர கட்டுமான தொழிற்சாலைகளின் உற்பத்தி இதே காலகட்டத்தில் கிட்டத்தட்ட 4 மடங்கு அதிகரித்தது; முக்கிய இராணுவ போர்த்தந்திர முக்கியப் பொருட்களின் உற்பத்தியோ இன்னமும் அதிகரித்தது. உதாரணமாய் 1932ம் ஆண்டு 1,90,000 டன்னுக இருந்த அலுமினிய உற்பத்தி 1939ஆம் ஆண்டு வாக்கில் 1,94,000 டன்னுக அதிகரித்தது. இது ஐரோப்பாவிலிருந்த முத லாளித்துவ நாடுகள் அனைத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட அலுமினி யத்தை விட அதிகமாயிருந்தது. அமெரிக்க ஏகபோகங்களின் உதவி யோடு ஜெர்மானியத் தொழிலதிபர்கள் 1938ஆம் ஆண்டு செயற்கை எரிபொருள் உற்பத்தியை 1,600 ஆயிரம் டன் வரை உயர்த்தினர். இரண்டாம் உலக யுத்தம் துவங்கிய போது ஜெர்மனியில்தான் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் (1.6 மில்லியன்) கடைசல் இயந்திரங்கள் இருந்தன. இவ்வாறுக பொருளாதாரத்தை இராணுவ முறைக்கு மாற்றியும் உழைப்பாளிகளைக் கடுமையாகச் சுரண்டியும் மற்றும் அந்நிய கடன் உதவிகளைக் கொண்டும் ஜெர்மனி மகத் தான இராணுவ-தொழிற்துறை உள்ளாற்றலைத் தோற்றுவித்தது, மீண்டும் வலிமை மிக்க ஏகாதிபத்திய வல்லரசுகளில் ஒன்றுக ஆனது. யுத்தத்திற்கும் உலகை மறு பங்கீடு செய்யவும் அது தீவிரமாகத் தயாராகி வந்தது. 1934 முதல் 1940 வரை அதன் இராணுவ உற்பத்தி 22 மடங்கு அதிகரித்தது, துருப்புகளின் எண்ணிக்கை 35 மடங்கு உயர்ந்தது.

நாஜிக் கட்சியினர் அரசு இயந்திரத்தின் எல்லா முக்கியப் பதவி

களையும் தம் கைகளில் எடுத்துக் கொண்டு தமக்கு கீழிருந்த வெகு ஜன ஸ்தாபனங்களை ஆதாரமாகக் கொண்டு, முழு யுத்தத்திற்கு நாட்டை தயார்ப்படுத்தும் பணி அனைத்திற்கும் நேரடியாகத் தலைமை தாங்கினர். ஜெர்மானியர்கள் ஆக்டபஸ் எனும் பயங்கர நீர்வாழினத்தின் கொடுக்குகளில் சிக்குண்டதைப் போல் பாசிசத் தின் பயங்கர முறையால் (கெஸ்டாப்போ, எஸ். எஸ்., எஸ். டி. இத்தியாதி) கிட்டத்தட்ட முற்றிலுமாகச் சூழப்பட்டிருந்தனர். இம்முறை நாடு முழுவதையும் ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குப் பணிவான ஆயுதமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சிக்கலான சர்வாம்ச அமைப்பாக இருந்தது.

சோவியத் யூனியனின் பால் மேலைய வல்லரசுகளின் முதலாளி வர்க்கத்திற்கு உள்ள வெறுப்பைத் திறமையாகப் பயன்படுத்தி அவற்றை மாயையான சோவியத் அபாயம் என்பதாக அச்சுறுத்தி பாசிசத் தலைவர்கள் தம் நோக்கங்களை நிறைவேற்றி வந்தனர். ஹிட்லர் தனது கூட்டாளிகள் மத்தியில் பின்வருமாறு கூறினன்: ''போல்ஷிவிக் பூதத்தின் உதவி கொண்டு, சிவப்பு பிரளயத்திற்கு எதிரான கடைசி அரண் ஜெர்மனி மட்டுமே என்று நம்பச் செய்து தான் என்ஞல் வெர்சேய் வல்லரசுகளை கட்டுப்படுத்தி வைக்க முடியும்... நெருக்கடியான காலகட்டத்தைக் கடக்க நமக்குள்ள ஒரே வழி வெர்சேயிடமிருந்து பிரிந்து மீண்டும் ஆயுதந்தரிப்பதா கும்.''*

*1933*இல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்த உடனேயே ஜெர்மானிய பாசிசம் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முக்கிய தாக்குதல் சக்தியாகவும் யுத்தத்தை தூண்டி விடும் முக்கிய சக்தியாகவும் முன் னின்றது. பாசிச சர்வாதிகாரம் பெரும் மூலதனத்தின் நலன்களை வெளிப்படுத்தியது, பூர்ஷ்வா ஆட்சியின் ஆக்கிரமிப்பு குணம் மிக்க, பயங்கர வடிவமாக விளங்கியது.

உள்நாட்டில் ஜெர்மானியப் பாசிசம் தொழிலாளி வர்க்க ஸ்தா பனங்களை, எல்லாவற்றிற்கும் மேலாக இதன் முன்னணிப் படை யாகிய ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை கலைத்தது, பூர்ஷ்வா மிதவாத சக்திகள் உட்பட மற்ற ஜனநாயகச் சக்திகளை ஒடுக்கியது.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த மட்டில் ''வாழ்க் கைக்கான இடத்தை'' வென்று உலக ஆதிக்கத்தை நிலைநாட்டுவது எனும் தனது குற்ற நோக்கங்களை அது படிப்படியாக நிறைவேற்றத் திட்டமிட்டது: முதலில் மத்திய ஐரோப்பாவில் ஆதிக்க நிலையை கைப்பற்றுவது, பின் அட்லாண்டிக் முதல் உரால் வரை உள்ள நிலப்பரப்பில் ஐரோப்பியப் பேரரசை தோற்றுவிப்பது, அதன் பின் உலக ஆதிக்கத்தை வெல்வது.

---

* K. Ludecke, *I knew Hitler*, New York, 1938, p. 468.

உறுதியான இராணுவப்-பொருளாதார அடித்தளத்தையும் பெரிய இராணுவத்தையும் தோற்றுவித்த பாசிச ஜெர்மனி தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியில் இறங்கியது. 1936இல் ஜெர்மனியும் இத்தாலியும் கம்யூனிச அகில எதிர்ப்பு ஒப்பந்தம் எனும் சோவியத் எதிர்ப்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டன, பின்னால் ஜப்பானும் இதில் சேர்ந்து கொண்டது. பெர்லின்—ரோம்—டோக்கியோ அச்சு என்ற பெயரைப் பெற்ற ஆக்கிரமிப்பு இராணுவ கூட்டு உருவெடுத்தது. 1938ஆம் ஆண்டு மார்ச்சில் ஹிட்லரின் இராணுவம் ஆஸ்திரியாவை ''ஒன்றிணைத்தல்'' எனும் போர்வையின் கீழ் அந்நாட்டை ஆக்கிரமித்தது. செக்கோஸ்லொவாக்கியாவின் மிக முக்கிய எல்லைப் பிரதேசங்களை ஹிட்லரின் ஜெர்மனிக்கு அளிக்கும் உடன்படிக்கையில் அதே ஆண்டு செப்டெம்பர் 29இல் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலியின் பிரதிநிதிகள் மூனிக்கில் கையொப்பமிட்டனர். இது ஐரோப்பிய நிலவரத்தை அடியோடு மாற்றியது. ஆக்கிரமிப்பாளர்களை மேற்கொண்டு ஊக்குவிப்பதும் அவர்களை சோவியத் யூனியனுக்கு எதிராக மூட்டி விடுவதும்தான் இந்த உடன்படிக்கையின் சாரமாகும். பிரிட்டிஷ் பிரதமர் நே. சேம்பர்லேனும் பிரெஞ்சு பிரதமர் ஏ. டலடியேவும் செக்கோஸ்லொவாக்கிய பிரதிநிதிகள் இல்லாத போது ஹிட்லருடனும் முஸ்ஸோலீனியுடனும் சேர்ந்து சதி செய்து, இவர்கள் முன் சரணடைந்தனர். செக்கோஸ்லொவாக்கியாவிற்கு துரோகமிழைக்கப்பட்டது, இதை துண்டந்துண்டமாக குதறுவதற்காக பாசிச ஜெர்மனியின் வசம் இது ஒப்படைக்கப்பட்டது.

செப்டெம்பர் 30ஆம் தேதியன்று மூனிக் உடன்படிக்கைக்கு கூடுதலாக இரு தரப்பு பிரிட்டிஷ்-ஜெர்மன் பிரகடனம் வெளியானது. இது தன் சாரத்தில், தாக்குவதில்லையென்ற உடன்படிக்கையாக விளங்கியது. டிசம்பர் 6ஆம் தேதியன்று பிரெஞ்சு அரசாங்கம் இதே போன்ற பிரகடனத்தில் பாசிஸ்டுகளுடன் சேர்ந்து கையெழுத்திட்டது.

செக்கோஸ்லொவாக்கியாவை பலியாகக் கொடுத்து மேலைய வல்லரசுகள் ஆக்கிரமிப்பாளருடன் செய்து கொண்ட இச்சதியை சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்தது. ''மூனிக்கில் சேம்பர்லேன் ஏதோ பொது உலக அமைதியைக் காப்பாற்றியதாகக் கூறப்படும் டாம்பீகமான பேச்சில் முதல் ஏகாதிபத்திய யுத்தத்தை அடுத்து நடைபெற்ற அனைத்தையும் தன் வெட்கங்கெட்ட தன்மையால் விஞ்சி நிற்கும் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது என்பதை உலகம் முழுவதும் எல்லா மக்களும் தெட்டத்தெளிவாகப் பார்க்கின்றனர்'' என்று ''பிராவ்தா'' பத்திரிகை 1938ஆம் ஆண்டு

அக்டோபர் 4ஆம் தேதி எழுதியது.

உலக மக்கள் அனைவரும் மூனிக் உடன்படிக்கையைக் கண்டித்தனர். பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியப் பத்திரிகையாகிய ''யுமனிட்டேயில்'' 1938ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் தேதி பிரசுரமான ''பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், ஸ்பெயின், செக்கோஸ்லொவாக்கியா, அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து, ஸ்வீடன், கானடா, ஹாலந்து நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளின் அறைகூவலில்'' பின்வருமாறு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது: ''மூனிக்கில் பொது உலக அமைதிக்கு எதிரான குற்றம் இழைக்கப்பட்டுள்ளது... மூனிக் துரோகம் உலகைக் காப்பாற்றவில்லை மாறாக இது உலகை அபாயத்திற்குதான் உள்ளாக்கியுள்ளது, ஏனெனில் இது எல்லா நாடுகளிலும் சமாதான சக்திகளின் கூட்டிற்கு அடி கொடுத்துள்ளது, இதன் மூலம், வெவ்வேறு நாட்டு பிற்போக்கு வட்டங்களின் ஆதரவை உணர்ந்த பாசிஸ்டுகள் தங்கள் கோரிக்கைகளை இன்னமும் ஆழமாக்குமாறு அவர்களை ஊக்குவித்துள்ளது''. ஜனநாயகம், சமூக முன்னேற்றம் மற்றும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான மகத்தான போராட்டத்தில் அணி திரளுமாறு சமாதான ஆதரவாளர்கள் அனைவருக்கும் கம்யூனிஸ்டுகள் அறைகூவல் விடுத்தனர்.

பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுத் தலைவர்கள் நடந்து கொண்ட விதத்தை மதிப்பிட்ட அமெரிக்க வரலாற்றாசிரியர் பிரெடெரிக் ஷூமன் பின்வருமாறு எழுதினார்: இரண்டாம் உலக யுத்தத்தின் முன்னணைப் பொழுதில் ஜனநாயக மக்களின் பொறுப்பு மிக்க பிரதிநிதிகள் வெளிப்படுத்திய முட்டாள்தனம் மற்றும் கபடத்தோடு ஒப்பிடக் கூடிய எதையுமே மனித பலவீனம், முட்டாள்தனம் மற்றும் மனிதர்களால் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து எழுதப்பட்டுள்ள வரலாற்றில் காண முடியாது.

(சோவியத் எதிர்ப்பால் கண்ணவிழ்ந்து போயிருந்த மேலைய வல்லரசுகளின் ஆளும் வட்டங்கள் பாசிச ஜெர்மனிக்கு யுத்தத்திற்கான பாதையை அமைக்க துணை புரிந்ததன் மூலம் தாமே ஆக்கிரமிக்கப்படும் ஒரு நிலைக்கு ஆளாயின.) இதன் தொடர்பாக மூனிக்கில் பிரிட்டிஷ் பிரதமர் சேம்பர்லேனின் பங்கை ஜெர்மன் அயல் விவகாரத் துறையமைச்சர் ரிபெண்ட்ரோப் பின்வருமாறு மதிப்பிட்டார்: ''இந்தக் கிழவர் இன்று பிரிட்டிஷ் பேரரசின் மரண தண்டனையில் கையொப்பமிட்டு இந்த தண்டனையை நிறைவேற்றும் தேதியை முடிவு செய்யும் பொறுப்பை எங்களுக்கு விட்டுள்ளார்.''*

---

* **சோவியத் யூனியனின் சுருக்கமான வரலாறு**, மாஸ்கோ, நவுக்கா பதிப்பகம், 1972, பக்கங்கள் 303—304 (ருஷ்ய மொழியில்).

ஐரோப்பாவில் மேலைய வல்லரசுகளின் கொள்கை தொலை கிழக்கில் ஆக்கிரமிப்பாளரை ''சாந்தப்படுத்தும்'' கொள்கையோடு முற்றிலும் ஒத்திருந்தது. 1939ஆம் ஆண்டு ஜூலையில் பிரிட்டிஷ்-ஜப்பான் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது, இது சாராம்சத்தில் சீனாவை பலி கொடுத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் ஜப்பான் ஏகாதிபத்தியமும் செய்து கொண்ட வெளிப்படையான சதியாக அமைந்தது. பிரிட்டனைப் பொறுத்த மட்டில் இது சீனிலிருந்த ஜப்பானியப் படைகளுக்கு உத்திரவாதமாகும், சீனாவை இவை சோவியத் யூனியன் மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான தாக்குதல் மேடையாகப் பயன் படுத்த முடிந்தது.

1938ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி பாசிச ஜெர்மனி தனது இராணுவத்தை சுதேத் பிரதேசத்தினுள் அனுப்பியது, 1939ஆம் ஆண்டு மார்ச்சில் செக்கோஸ்லொவாக்கியா முழுவதையும் ஆக்கிரமித்தது. 1939ஆம் ஆண்டு வசந்த காலத்தில் பாசிஸ்டுகள் லித்துவேனியாவில் கிளைபெத் பிரதேசத்தைக் கைப்பற்றினர், ருமேனியாவின் மீது தளைபூட்டும் ''பொருளாதார'' ஒப்பந்தத்தைத் திணித்தனர், அந்நாட்டின் பொருளாதாரத்தை ஜெர்மனிக்கு கீழ்ப்படிந்திருக்குமாறு செய்தனர். பாசிச இத்தாலி 1939ஆம் ஆண்டு ஏப்ரலில் ஆல்பானியாவைக் கைப்பற்றியது. 1938ஆம் ஆண்டு இறுதியில் ஜெர்மனி டான்ட்ஸிங் நெருக்கடி என்றழைக்கப் படுவதைத் தோற்றுவித்தது. சுயேச்சையான நகரமாகிய டான்ட்ஸிங்கின் பால் ''வெர்சேயின் நியாயமற்ற தன்மையை'' ஒழிப்பது எனும் போர்வையின் கீழ் போலந்திற்கு எதிரான ஆக்கிரமிப்பை நிறைவேற்றுவதுதான் இந்நெருக்கடியின் சாரமாகும். பிரிட்டனும் பிரான்சும் தமது அரசியல் மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாத்து கொள்ளும் பொருட்டு போலந்து, ருமேனியா, கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு ''பாதுகாப்பு உத்திரவாதங்கள்'' என்றழைக்கப்படும் உத்திரவாதங்களை அளித்தன. இவற்றின் படி போலந்தின் மீது பாசிச ஜெர்மனி தாக்குதல் தொடுத்தால் போலந்திற்கு இராணுவ உதவி அளிப்பதாக இவை உறுதிமொழி தந்தன. ஆனால் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் காட்டியபடி இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

1939 ஏப்ரல்-மேயில் ஜெர்மனி 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ்-ஜெர்மனி கடல் உடன்படிக்கையை ரத்து செய்தது, போலந்தின் மீது படையெடுப்பதில்லை என்று போலந்துடன் 1934இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது, இத்தாலியுடன் ''இரும்பு உடன்படிக்கை'' என்ற ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டது. இதன்படி மேலைய வல்லரசுகளுடன் போர் மூண்டால்

இத்தாலிய அரசாங்கம் ஜெர்மனிக்கு உதவி புரிவதாக உறுதியளித்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் முன்னணைப் பொழுதில் ஜெர்மனியிடம் பலம் வாய்ந்த இராணுவ இயந்திரம் இருந்தது. 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 தேதியன்று ஜெர்மானிய இராணுவத்தில் 4.6 மில்லியன் போர்வீரர்கள் இருந்தனர், இதன் வசம் 26,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் (விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சேர்க்காது), 3,195 டாங்கிகளும் 4,093 போர் விமானங்களும் 57 நீர் மூழ்கிக் கப்பல்கள் உட்பட 107 பிரதான ரக போர்க் கப்பல்களும் இருந்தன.

அதே பொழுது பிரெஞ்சு இராணுவத்தில் 2.674 மில்லியன் போர்வீரர்கள் இருந்தனர்; இதன் வசம் 26,000க்கும் கூடுதலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 3,100 டாங்கிகளும் 3,335 விமானங்களும் 77 நீர் மூழ்கிக் கப்பல்கள் உட்பட 174 பிரதான ரக போர்க் கப்பல்களும் இருந்தன.

தலைநாட்டில் இருந்த பிரிட்டிஷ் இராணுவத்தில் 1.27 மில்லியன் போர் வீரர்கள் (மொத்தமாக பிரிட்டிஷ் பேரரசில் 1.662 மில்லியன்) இருந்தனர்; 5,600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 547 டாங்கிகளும் 3,891 விமானங்களும் 328 பிரதான ரக போர்க் கப்பல்களும் 1,222 கடற்படை போர் விமானங்களும் இருந்தன.

பாசிச ஜெர்மனியின் இராணுவ போர்த்தந்திரம் ''மின்னல் வேக யுத்தம்'' (பிளித்ஸ்கிரிக்) எனும் கருத்தமைப்பை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இதன்படி எதிரி தனது இராணுவத்தையும் இராணுவப் பொருளாதார உள்ளாற்றலையும் முழுமையாக வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே குறுகிய காலகட்டத்திலேயே வெற்றி அடையப்பட வேண்டும். பிளித்ஸ்கிரிக் சித்தாந்தம் பாசிச ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பிரதிபலித்தது, ஜெர்மானிய அரசியல் மற்றும் இராணுவ பிரமுகர்களின் அதிசாகச சிந்தனை முறைக்கு ஏற்றதாயிருந்தது, ஜெர்மானிய இராணுவ வெறியின் வரலாற்றுப் பாரம்பரியங்களைத் தொடர்ந்தது.

இத்தாலியில் இராணுவ சித்தாந்தம் பெரும்பாலும் ''வான் யுத்தத்தில்'' அடங்கியிருந்தது. இதோடு கூட இரு நாடுகளிலுமே டாங்கி யுத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பிரான்சில் ''தற்காப்பு யுத்தம்'' எனும் சித்தாந்தமும் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் ''கடல் யுத்தம்'' சித்தாந்தமும் மேலோங்கியிருந்தன.

2. தொலைக்கிழக்கில் யுத்தத்தின் தோற்றுவாய்

பாசிச ஜெர்மனியைப் போன்றே இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் உலக ஆதிக்கத்திற்கான ஆயுதப் போராட்டத்திற்கு தீவிர

மாகத் தன்னை தயார்ப்படுத்தி வந்தது. அது பல ஆண்டுகளாக சோவியத் தொலைக் கிழக்கிலும் சீனா, மற்ற ஆசிய நாடுகளிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது, சோவியத் யூனியனுக்கு எதிரான பெரிய யுத்தத்திற்குத் தயாராகி வந்தது. அதே நேரத்தில் ஜப்பானிய இராணுவ வெறியர்கள் தமது போட்டியாளர்களாகிய ஐரோப்பிய முதலாளித்துவ வல்லரசுகளையும் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய சந்தைகளிலிருந்து விரட்டியடிக்கவும் பரந்த காலனியாதிக்கப் பேரரசைத் தோற்றுவிக்கவும் முயன்றனர்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்பி விடலாம் என்று கணித்த மேலைய நாடுகள் இதற்கு போர்த் தந்திர மூலப்பொருட்களை அளித்து உதவின, இரும்புத் தாது, எண்ணெய் போன்றவற்றை விற்றன. 1939ஆம் ஆண்டின் முதற் பகுதியில் ஜப்பான் தான் இறக்குமதி செய்த இராணுவத் தளவாடங்களில் 86 சதவிகிதத்தை அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெற்றது. போர்த்தந்திர முக்கியத்துவம் உடைய பொருட்களை இவ்வளவு அதிகமாக ஜப்பான் வெளியிலிருந்து பெறுமலிருந்தால் இயற்கைச் செல்வங்களைப் பொறுத்த மட்டில் ஒப்பீட்டளவில் ஏழ்மை நிலையிலுள்ள ஜப்பானால் யுத்தத்தில் இறங்கியிருக்கவே முடியாது.

இவ்வாறாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்திய, சோவியத் எதிர்ப்புக் கொள்கை பாசிச ஜெர்மனிக்கு மட்டுமின்றி இராணுவ வெறி கொண்ட ஜப்பானுக்கும் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பளித்தது, சோவியத் யூனியனுக்கு எதிராக இவை ஆக்கிரமிப்பில் இறங்குவதற்கு ஊக்கமளித்தது. 1927ஆம் ஆண்டிலேயே "தனக்கா நினைவறிக்கை"* என்றழைக்கப்பட்டதில் சீனா, இந்தியா, மற்ற ஆசிய நாடுகளை வெல்லும் ஜப்பானியத் திட்டங்கள் இடம் பெற்றிருந்தன. சீனாவை கைப்பற்றுவதற்கு ஜப்பான் "முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் வெல்ல வேண்டும். உலகை வெற்றிகொள்ள வேண்டுமானால் நாம் முதலில் சீனாவை வெல்ல வேண்டும். நாம் சீனாவை வென்றால், மற்ற பின்தங்கிய சிறிய ஆசிய நாடுகளும் இந்தியாவும் தென் கடலோர நாடுகளும் நம்மைக் கண்டு அஞ்சி நடுங்கி நம்மிடம் சரணடையும். உலகம் அப்போது கிழக்கு ஆசியா நம்முடையது என்பதைப் புரிந்து கொள்ளும், நம்முடைய உரிமைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்க அதற்கு தைரியமிருக்காது... சீனாவின் எல்லா

---

* ஜெனரல் தனக்கா—பிரபல ஜப்பான் இராணுவ பிரமுகர்களில் ஒருவர்.

மூல ஊற்றுக்களேயும் கைப்பற்றிய பின் இந்தியாவையும் தென் கடலோர நாடுகளேயும் அதற்குப் பின் ஆசியா மைனரையும் மத்திய ஆசியாவையும் இறுதியாக ஐரோப்பாவையும் கைப்பற்ற நாம் செல்லுவோம்''° என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இராணுவத்தை சீரமைத்து மறு ஆயுதந்தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவ வெறி கொண்ட ஜப்பான் தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இறங்கியது. 1931இல் அது வட கிழக்கு சீனவையும் (இங்கே மஞ்ஜோவு-கோ பொம்மை அரசு தோற்றுவிக்கப்பட்டது) பின் உள் மங்கோலியாவின் பகுதியையும் கைப்பற்றியது.

மஞ்சூரியாவைத் துண்டந் துண்டமாக்கிய ஜப்பானிய இராணுவ வெறியர்கள் சீன முழுவதையும் கைப்பற்றவும் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடவும் தயாராகத் தொடங்கினர்கள். ஜப்பானிலும் மஞ்சூரியாவிலும் இருந்த தொழில் நிலேயங்களில் இரும்பு, எஃகு உற்பத்தி, நிலக்கரி எடுத்தல், செயற்கை எண்ணெய் உற்பத்தி முதலியன அதிகமாயின. இராணுவ தொழிற் சாலேகள் ஆயுத உற்பத்தியையும் இராணுவ இயந்திரங்களின் உற்பத்தியையும் அதிகப்படுத்தின. சோவியத், மங்கோலிய, சீன எல்லேகளுக்கருகே ஆக்கிரமிப்பாளர்கள் விமானத் தளங்களேக் கட்டுவதிலும் இருப்புப் பாதைகளே அமைப்பதிலும் சாலேகளேப் போடுவதிலும் படையிருப்பிடங்கள், இராணுவக் கிடங்குகளேக் கட்டுவதிலும் தீவிரமாக இறங்கினர். 1934ஆம் ஆண்டு வாக்கில் மஞ்சூரியாவிலும் கொரியாவிலும் சுமார் 40 விமானத் தளங்களும் 50 இறங்குமிடங்களும் கட்டப்பட்டன. இது தவிர மஞ்சூரியாவில் கிட்டத்தட்ட 1,000 கி. மீ. நீளத்திற்கு போர்த்தந்திர முக்கியத் துவமுடைய இருப்புப் பாதைகள் இடப்பட்டன.

அதே நேரத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராக மஞ்சூரியாவில் வைக்கப்பட்டிருந்த குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கையையும் பலத்தையும் ஜப்பான் அரசாங்கம் அதிகப்படுத்தியது. 1932ஆம் ஆண்டு ஜனவரி 1 தேதி குவாண்டுங் இராணுவத்தில் 50,000 பேர் இருந்தனர் என்ருல்—இது மொத்த ஜப்பானிய இராணுவத்தில் 20 சதவிகிதமாகும்—1937ஆம் ஆண்டு ஜனவரி 1 தேதிக்கு இது 5 மடங்கிற்கும் கூடுதலாகப் பெருகியது, இதன் வசம் 439 டாங்கிகளும் 1,193 பீரங்கிகளும் 500 விமானங்களும் இருந்தன.

மஞ்சூரியாவில் முழு அதிகாரம் செலுத்தும் எஜமானகை விளங்கிய குவாண்டுங் இராணுவத்தின் படைத் தலேமை, ஜப்பானிய

° பசிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தின் வரலாறு, தொகுதி 1, மாஸ்கோ, ''அயல்நாட்டு இலக்கிய பதிப்பகம்'', 1957, பக்கங்கள் 338—339 (ருஷ்ய மொழியில்).

அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல், கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு ஆகியவற்றை ஆக்கிரமிப்பு பிரதேச மக்களின் மீது புகுத்துவதன் மேல் பெருங் கவனம் செலுத்தியது. ''மாபெரும் ஜப்பானைப்'' பயிலுவது பள்ளிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப் பட்டது, இந்த ''மாபெரும் ஜப்பானுடன்'' உரால் வரையிலிருந்த தொலைக் கிழக்கு, சைபீரியப் பிரதேசங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. பல இடங்களில், குறிப்பாக சோவியத் எல்லைக்கு மிக அருகேயுள்ள இடங்களில் ஏராளமான ஜப்பானிய குடியிருப்புகள் உருவாக்கப் பட்டன; சோவியத் யூனியன், மங்கோலிய மக்கள் குடியரசிற்கு எதிரான யுத்தத்தில் இவர்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த இடங்களின் மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன; இவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

தனது ஆக்கிரமிப்பு லட்சியங்களை அடைவதற்கான பெரும் சுதந்திரத்தை அடையும் பொருட்டு ஜப்பான் 1933ஆம் ஆண்டு மார்ச் 27இல் சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேறியது, 1934ஆம் ஆண்டு, கடற்படை ஆயுதந்தரித்தலைப் பற்றிய வாஷிங்டன் மகா நாட்டு (1921 – 1922) உடன்படிக்கைகளை நிராகரித்தது. அதே பொழுது ஜப்பான் பாசிச ஜெர்மனியை நெருங்கி வந்தது, 1936ஆம் ஆண்டு நவம்பர் 25இல் இதனுடன் ''கம்யூனிச அகில எதிர்ப்பு உடன்படிக்கையை'' செய்து கொண்டது, 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் தேதி ஜெர்மனி, இத்தாலியுடன் ''முத்தரப்பு உடன்படிக்கையை'' செய்து கொண்டது.

ஆக்கிரமிப்பு நோக்குடைய வெளிநாட்டு அரசியல் கொள்கை யோடு கூட ஜப்பானின் ஆளும் வட்டங்கள் நாட்டில் வாழ்க்கையை பாசிசமயமாக்கி இராணுவத்தைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்கு உள்நாட்டுக் கொள்கையையும் பின்பற்றின. 1937ஆம் ஆண்டு ஜப்பான் சீனாவிற்கு எதிரான ஆக்கிரமிப்பில் இறங்கியது. சீனாவிற்கு எதிராக ஜப்பானிய இராணுவ வெறியர் களால் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தம் இவர்களுடைய எதிர்பார்ப்பு களுக்கு மாறாக இழுபறி தன்மையைப் பெற்றது.

குவாண்டுங் இராணுவத்தின் படைத் தலைமை, சோவியத் யூனியனுக்கு சொந்தமான சீன-கிழக்கு இருப்புப் பாதையிலும் சோவியத் யூனியன் மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின் எல்லைப் பகுதிகளிலும் இடையறாது இராணுவ சச்சரவுகளை மூட்டி விடும் ஆத் திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இப்பாதையை 140 மில்லியன் யென்களுக்கு விற்கும் யோசனையை 1933ஆம் ஆண்டிலேயே சோவி யத் அரசாங்கம் மஞ்ஜோவு-கோ (உண்மையில் ஜப்பான்) அரசாங் கத்திடம் தெரிவித்தது. தொலைக் கிழக்கில் பூசல்கள் மற்றும் சச்சரவு களின் மூல ஊற்றுகளை அகற்றுவதில் சோவியத் யூனியனுக்கு உள்ள

உண்மையான விருப்பத்தை இந்த நடவடிக்கை தெளிவுபடுத்தியது. ஆனால் இராணுவ வெறி கொண்ட ஜப்பானோ சோவியத் எல்லையில் தொடர்ந்து புதிய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. மொத்தமாக 1935ஆம் ஆண்டில் ஜப்பானியர்களும் அவர்களது ஏஜென்ட்டுகளும் சோவியத் எல்லைகளில் கிட்டத்தட்ட 80 ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஜப்பானிய சுன் காரிய கடற்படையின் ஆத்திரமூட்டும் செயல்கள் அதிகமாயின. 1936ஆம் ஆண்டு சோவியத் எல்லைக் காவற்படை 137 ஜப்பான் ஏஜென்ட்டுகளைக் கைப்பற்றியது.

1938ஆம் ஆண்டு குவாண்டுங் இராணுவம் ஹசன் ஏரிப் பிரதேசத்தில் சோவியத் யூனியன் மீதும் 1939ஆம் ஆண்டு ஹால்ஹின்-கோல் ஆற்றின் அருகே மங்கோலிய மக்கள் குடியரசின் மீதும் ஆயுதத் தாக்குதலைத் தொடுத்தது. சோவியத் இராணுவம் மங்கோலிய இராணுவத்தோடு சேர்ந்து ஆக்கிரமிப்பாளருக்கு தக்கப் பதிலடி தந்தது. ஜப்பானிய இராணுவத்திற்கு சோவியத் இராணுவம் தந்த பதிலடியானது, போர்த்தந்திர மூலப்பொருட்கள் அதிகமிருக்கும் தென் கிழக்காசிய நாடுகளையும் தென் கடலோர நாடுகளையும் வெல்வதற்கு முதல் முக்கியத்துவம் தர வேண்டும் என்று ஜப்பானிய அரசாங்கம் முடிவு செய்ததன் மீது குறிப்பிட்ட தாக்கம் செலுத்தியது.

இவ்வாறாக அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளால் ஊக்குவிக்கப்பட்ட இராணுவ ஜப்பான் சீனாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பில் இறங்கி மஞ்சூரியாவைக் கைப்பற்றி சோவியத் எல்லையருகே வந்தது. அதே நேரத்தில் இது பசிபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து வசமிருந்த பிரதேசங்களின் மீது தாக்குதல் தொடுக்க இரகசியமாய் தயாராகி வந்தது. தொலைக் கிழக்கில் உலக யுத்தத்தின் ஆபத்தான தோற்றுவாய் முளைத்தது.

3. கூட்டுப் பாதுகாப்பு முறையை தோற்றுவிக்க சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள்

சமாதானக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்த சோவியத் யூனியன் யுத்தத்தைத் தவிர்க்கவும் கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தவும் ஏகாதிபத்திய அரசுகளின் சோவியத் எதிர்ப்பு சதியைத் தீவிரமாக எதிர்த்து நிற்கவும் இயன்ற அனைத்தையும் செய்தது. சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை எல்லா நாடுகளுடனும் காரிய ரீதியான தொடர்புகளைப் பலப்படுத்து

வதையும் அண்டை அரசுகளுடன் சமாதான, நல்லண்டை உறவு களை வளர்ப்பதையும் ஆக்கிரமிப்பிற்குப் பலியான, தமது சுதந்திரத் திற்காகப் போராடும் மக்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

உலக நாடுகளிலேயே சோவியத் யூனியன் மட்டுமே பாசிச ஜெர்மனி மற்றும் இத்தாலியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்தது, கூட்டுப் பாதுகாப்பை ஏற்பாடு செய்வது சம்பந்தமான திட்டவட்டமான நடவடிக்கைகளை முன்மொழிந்தது. இத்தாலிய ஆக்கிரமிப்பிலிருந்த எத்தியோபிய மற்றும் ஆல்பானிய மக்களின் பாதுகாப்பிற்கு ஆதரவாயும் ஹிட்லரின் ஆக்கிரமிப்பி லிருந்த செக்கோஸ்லொவாக்கிய மக்களுக்கு ஆதரவாயும் சோவியத் யூனியன் உறுதியோடு நின்றது.

மூனிக் சதி நடக்கவிருந்த தருணத்தில் சோவியத் யூனியன், பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தத்திற்கேற்ப, பாசிச ஜெர்மனியின் தாக்குதலிருந்து பாதுகாத்து கொள்ளும் பொருட்டு கணிசமான அளவு உண்மையான இராணுவ உதவியை செக்கோஸ்லொவாக் கியாவிற்கு முன்மொழிந்தது. இந்நோக்கத்தோடு 76 துப்பாக்கிப் படை மற்றும் குதிரைப்படை டிவிஷன்களும் 3 டாங்கி கோர்பஸ் களும் 22 தனி டாங்கி பிரிகேடுகளும் 12 விமான பிரிகேடுகளும் செஞ்சேனையின் மற்ற பிரிவுகளும் இராணுவத் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

ஆனால் பிரிட்டன் மற்றும் பிரான்சின் நிர்ப்பந்தத்தின் கீழ் செக் கோஸ்லொவாக்கியா இவ்வுதவியைப் பெற மறுத்து பாசிச ஜெர்மனி யிடம் சரணடைந்தது.

ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய மற்ற நாடுகளுக்கு உதவ சோவியத் யூனியன் தயாராக இருந்தது, உண்மையான உதவியை அளிக்கவும் செய்தது.

1939ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மாஸ்கோவில் நடந்த அகில ருஷ்ய கம்யூனிஸ்டுக் (போல்ஷிவிக்) கட்சியின் 18வது காங்கிரசில் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலியின் ஆக்கிரமிப்புச் செயல்கள் அம் பலப்படுத்தப்பட்டன, சமாதான லட்சியத்திற்கும் பல அரசுகளின் அரசுரிமைக்கும் பாசிசக் கூட்டினால் வரும் பேரபாயம் சுட்டிக் காட்டப்பட்டது. அதே நேரத்தில், கூட்டுப் பாதுகாப்பை உருவாக்கு வதை மறுப்பதை நோக்கமாகக் கொண்ட பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டுக் கொள்கையின் உண்மையான சாரம் தோலுரித்துக் காட்டப்பட்டது. ''தலையிடாமை எனும் கொள்கை. ஆக்கிரமிப் பிற்கு உடனிருப்பதையும் யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதை யும் எனவே இந்த யுத்தத்தை உலக யுத்தமாக மாற்றுவதையும் குறிக்கிறது. ஆக்கிரமிப்பாளர்கள் தமது இழிச் செயல்களில் ஈடுபடு

வதற்கு இடையூறு விளைவிக்காமலிருப்பது, உதாரணமாக ஜப்பான் சீனுவுடன், இன்னமும் சிறப்பாகச் சொன்னுல், சோவியத் யூனியனுடன் யுத்தத்தில் மாட்டிக் கொள்வதை தடை செய்யாமலிருப்பது, அல்லது ஜெர்மனி ஐரோப்பிய விவகாரங்களில் சிக்கிக் கொண்டு சோவியத் யூனியனுடன் யுத்தத்தில் இறங்குவதற்கு தொந்தரவு செய்யாமலிருப்பது, யுத்தத்தில் பங்கேற்கும் அனைவரும் யுத்தம் எனும் புதைகுழியில் ஆழ இறங்க வாய்ப்பளித்து, இதில் அவர்களுக்கு இரகசியமாக ஊக்கமளிப்பது, அவர்கள் ஒருவரையொருவர் பலவீனப்படுத்தி உறிஞ்சிக் குடிக்க விடுவது, இவர்கள் போதுமான அளவு பலவீனமடைந்ததும் புதிய சக்திகளோடு மேடைக்கு வருவது, அதுவும் சாதாரணமாக இல்லாமல் ''சமாதான நலன்களுக்காக'' வந்து யுத்தத்தில் பலவீனமடைந்த தரப்புகளுக்குத் தனது நிபந்தனைகளை வைப்பது ஆகியவற்றின் பாலான நாட்டம், விருப்பம்தான் தலையிடாமைக் கொள்கையில் ஊடுருவி நிற்கிறது''* என்று மத்தியக் கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

தென் தப்ருஜா பற்றிய பல்கேரிய-ருமேனிய சச்சரவைத் தீர்ப்பதில் சோவியத் யூனியன் மட்டும்தான் பல்கேரிய மக்களின் தேசிய நலன்களைப் புரிந்து கொண்டு செயல்பட்டது. கிராய்யோவ் நகரில் 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் தேதி கையொப்பமான பல்கேரிய-ருமேனிய ஒப்பந்தத்திற்கேற்ப தென் தப்ருஜா பல்கேரியாவிற்குத் திருப்பியளிக்கப்பட்டது.**

பால்கன் பிரதேசத்தில் யுத்தம் பரவி வருவதைத் தடுக்கும் பொருட்டு சோவியத் யூனியன் யுகோஸ்லாவியாவிற்கு பெரும் அரசியல், தார்மீக ஆதரவளித்தது, ஆல்பானிய மக்களுக்குப் பாதுகாப்பாக அவர்கள் தரப்பில் நின்றது. ஸ்வீடனின் நடுநிலையைப் பாதுகாப்பதில் சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட உறுதியான நிலை, 1940ஆம் ஆண்டு வசந்த காலத்தில் இந்நாட்டை ஆக்கிரமிக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு பாசிச ஜெர்மனியை நிர்ப்பந்தித்தது. 1940ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி ஜெர்மானிய அரசாங்கத்திற்கு அனுப்பியக் குறிப்பில் ஸ்வீடனின் நடுநிலையைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றி சோவியத் அரசாங்கம் குறிப்பிட்டது.***

ஸ்வீடன் வெளிவிவகாரத் துறை அமைச்சர் போன்டர் சோவியத் தூதுவர் கொலன்தாயுடன் நடத்திய கலந்துரையாடலின் போது

---

* **அகில ருஷ்ய கம்யூனிஸ்டுக் (போல்ஷிவிக்) கட்சியின் 18வது காங்கிரஸ். 1939, மார்ச் 10—21,** *சுருக்கெழுத்துப் பதிவு, மாஸ்கோ, 1939, பக்கம் 11 (ருஷ்ய மொழியில்).*

** **சோவியத் கலைக்களஞ்சியம்,** *தொகுதி 8, மாஸ்கோ, 1972, பக்கம் 377 (ருஷ்ய மொழியில்).*

*** **அதே நூல்,** *தொகுதி 29, மாஸ்கோ, 1978, பக்கம் 342.*

சோவியத் யூனியனின் இந்த நடவடிக்கை அமைச்சரவையின் நிலையையும் நடுநிலையைக் கடைபிடிப்பதென்ற ஸ்வீடனின் உறுதியான சித்தத்தையும் பலப்படுத்தும் என்று கூறினார்.

1936—1939ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் மக்கள் நடத்திய தேசிய-புரட்சிப் போரில் சோவியத் யூனியன் வழங்கிய உதவி சர்வதேச பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாகும். சர்வதேசிய அணிகளில் இராணுவ ஆலோசகர்கள், காலாட்படையினர், டாங்கிப்படையினர், விமானிகளாக கிட்டத்தட்ட 3,000 சோவியத் வாலண்டியர்கள் வீரத்தோடு போர் புரிந்தனர். பாசிசக் கலகக்காரர்கள் மற்றும் ஜெர்மானிய-இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடைபெற்ற கடும் சமர்களில் இவர்கள் பெரும் புகழ் பெற்றனர். ஸ்பெயின் நாட்டு குடியரசு இராணுவத்திற்கு சோவியத் ஆயுதங்களும் பல்வேறு வித பொருளாயத உதவிகளும் வழங்கப்பட்டன. சர்வதேச சங்கத்திலும் ஸ்பெயின் விவகாரங்களில் தலையிடக் கூடாதது பற்றி லண்டனில் தோற்றுவிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் கமிட்டியிலும் சோவியத் யூனியன் ஸ்பெயின் மக்களின் நலன்களுக்காக தொடர்ச்சியாகப் போராடியது.

ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தில் மங்கோலிய மக்கள் குடியரசிற்கு சோவியத் யூனியன் வழங்கிய உதவியில் சர்வதேசிய பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு நன்கு வெளிப்பட்டது. 1936ஆம் ஆண்டு மார்ச் 12இல் சோவியத் யூனியனும் மங்கோலிய மக்கள் குடியரசும் பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. இரு தரப்பில் யார் மீதாவது இராணுவ தாக்குதல் தொடுக்கப்பட்டால் மறு தரப்பு இராணுவ உதவி உட்பட சகலவித உதவிகளையும் வழங்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 1939இல் ஜப்பானிய இராணுவ வெறியர்கள் மங்கோலிய மக்கள் குடியரசைத் தாக்கிய போது சோவியத் யூனியன் உடனடியாக மங்கோலிய மக்களின் உதவிக்கு வந்தது. மங்கோலியாவினுள் நுழைந்த ஆக்கிரமிப்பாளர்கள் முறியடிக்கப்பட்டனர். ''ஹால்ஹின்-கோல் சம்பவங்கள், அசைக்க முடியா பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த மங்கோலிய-சோவியத் நட்புறவின் பலத்தையும் உயிர்ப்பையும் மகத்துவத்தையும் மீண்டுமொரு முறை காட்டின. இம்முறையும் எங்களுடைய சுதந்திர நாட்டை ஆபத்து எதிர் நோக்கியிருந்த போது எங்கள் நண்பனும் சகோதரனுமாகிய பெரு வலிமையுடைய சோவியத் யூனியன் நட்புக் கரம் நீட்டியது''[a] என்று பின்னால் மங்கோலிய

[a] யூ. த்ஸெதென்பால், உழைப்பிலும் சமர்களிலும் புடம் போடப்பட்ட நட்பு, ''பிராவ்தா'', 1969 ஆகஸ்டு 20 (ருஷ்ய மொழியில்).

மக்கள் புரட்சிக் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளரும் மங்கோலிய ஜனுதிபதியுமான யூ. த்ஸெதென்பால் எழுதினர்.

பரஸ்பரம் தாக்குவதில்லே என்று 1937 ஆகஸ்டில் சீனுவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தொலேக் கிழக்கில் சோவியத் அரசாங் கத்தின் அடுத்த முக்கிய நடவடிக்கையாக அமைந்தது. இதற்கு ஒன்றரை மாதத்திற்கு முன் ஜப்பானின் புதிய ஆக்கிரமிப்பிற்கு உள்ளான சீனுவுடன் சோவியத் யூனியன் செய்து கொண்ட சமா தான உடன்படிக்கையானது ஜப்பானிய இராணுவ வெறியர்களால் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டிற்கு சோஷலிச அரசு காட்டிய அனுதாபத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது.

ஜப்பானிய இராணுவ வெறியர்களுக்கு எதிராக சீனு நடத்திய தேசிய விடுதலேப் போரில் அதற்கு சோவியத் யூனியன் 1937—1941 ஆண்டுகளில் 940 பீரங்கிகள், சுமாராக 100 டாங்கிகள், 885 விமானங்கள் மற்றும் ஒரு சில ஆயிரம் இயந்திரத் துப்பாக்கிகளே வழங்கி உண்மையான உதவியை நல்கியது. 4,000க்கும் மேற்பட்ட சோவியத் வாலன்டியர்களும் இராணுவ ஆலோசகர்களும் சீனு விலிருந்தனர். சோவியத் விமானிகள் சீன வான் பரப்பில் 100க்கும் மேற்பட்ட ஜப்பான் விமானங்களே சுட்டு வீழ்த்தினர். சீன மக்களின் விடுதலேக்காக, மகிழ்ச்சிக்காக பல சோவியத் போர்வீரர்கள் தம் இன்னுயிர் ஈந்தனர். ''சோவியத் நாடு கம்யூனிஸ்டுகளின், சீன மக்களின் நம்பிக்கைகளே ஏமாற்றவில்லே. மரண அபாயம் நிலவிய போது சோவியத் நாடுதான் முதலில் சீனுவை ஆதரித்தது'' என்று ''மின் பாவோ'' பத்திரிகை அந்நாளில் எழுதியது.

தமது சுதந்திரத்திற்காகப் போராடிய மக்களுக்கு சர்வதேசிய உதவி நல்கியதோடு கூட சோவியத் யூனியன் கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்துவதற்காக உறுதியோடு போராடியது. 1939ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி, பாசிச ஆக்கிரமிப்பாளரைக் கட்டுப் படுத்துவதற்கான சோவியத்-பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஒத்துழைப்பின் விரிவான செயல்திட்டத்தை சோவியத் யூனியன் முன்வைத்தது. ஆக்கிரமிப்பிற்கு எதிரான பரஸ்பர உதவி பற்றியும் ஐரோப்பா விலிருந்த அதிக பலவீனமான நாடுகள் சிலவற்றிற்கு மூன்று வல்லரசு கள் உத்திரவாதம் அளிப்பது பற்றியும் சோவியத் யூனியன், பிரிட் டன், பிரான்சிற்கிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று முன்மொழியப்பட்டது.

இந்த நோக்கத்தோடு 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மாஸ் கோவில் சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று வல்லரசுகளின் இராணுவ தூதுக்குழுக்கள் பேச்சுவார்த்தைகளே நடத்தின.

சோவியத் தூதுக்குழுவிற்கு சோவியத் யூனியன் பாதுகாப்புத்

துறை மக்கள் கமிசாராகிய மார்ஷல் வரஷீலவ் தலைமை தாங்கிஞர். இத்தூதுக்குழுவிற்கு மிகப் பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. பாசிச ஆக்கிரமிப்பு ஏற்படும் பட்சத்தில் பெரும் இராணுவ சக்திகளை (136 காலாட்படை மற்றும் குதிரைப்படை டிவிஷன்கள், 5,000 கனரக பீரங்கிகள், 9,000-10,000 டாங்கிகள், 5,500 வரை போர் விமானங்கள்) அளிக்க சோவியத் யூனியன் தயார் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனல் தேவையான ஆவணங்களில் கையொப்பமிட பிரிட்டிஷ் தூதுக்குழுவிற்கு அதிகாரமேயில்லை என்பது தெளிவாயிற்று. இப் பேச்சுவார்த்தைகளைக் குறித்து பிரிட்டிஷ் அரசியல்வாதி டே. லாயிட் ஜார்ஜ் கேலியாக பின்வருமாறு கூறிஞர்: ''லார்ட் ஹாலிபாக்ஸ் ஹிட்லரையும் ஹேரிங்கையும் சந்தித்தார். ஹிட்லருடன் கொஞ்சிக் குலாவ சேம்பர்லேன் மூன்று முறை தொடர்ந்தாற் போல் சென்ருர். முஸ்ஸோலீனியைக் கட்டித் தழுவவும் அபிஸ்ஸீனியாவைக் கைப் பற்றியதற்காக எமது அதிகாரபூர்வமான அங்கீகார வடிவில் பரிசளிக்கவும் அவர் ஸ்பெயினில் தலையிடுவதற்கும் நாங்கள் எந்த விதத்திலும் தடையாக இருக்க மாட்டோம் என்று சொல்லவும் சேம்பர்லேன் விசேஷமாக ரோமிற்கு சென்ருர். தனது உதவியை நமக்கு முன்மொழியும் அதிக வலிமை வாய்ந்த ஒரு நாட்டிற்கு நம்மை பிரதிநிதித்துவப்படுத்த அந்நிய அமைச்சரகத்திலிருந்து அதிகாரியை அனுப்பிஞர்கள் என்று ஏன் கூற வேண்டும்? இதற்கு ஒரே ஒரு விடை மட்டுமே இருக்க முடியும்: கனவான் நேவில் சேம்பர்லேன், லார்ட் ஹாலிபாக்ஸ் மற்றும் சர் சைமன் ஆகியோருக்கு ருஷ்யாவுடன் கூட்டுச் சேர விருப்பமில்லை''*. பேச்சுவார்த்தைகளுக்கான சம்பிரதாயமான ஒப்புதலை அளித்த பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுத் தலைவர்கள் நடைமுறையில், முதிர்ச்சியடைந்து வந்த பாசிச ஆக்கிரமிப்பிற்கு எதிராக மூன்று நாடுகளின் இராணுவ முயற்சிகளையும் ஒன்றிணைக்கும் சிந்தனையிலிருந்து வெகு தொலைவிலிருந்தனர். பேச்சுவார்த்தைகள் முறிந்தன. இதன் மூலம் சோவியத் யூனியன் தன்னந்தனியாக நிற்கிறது என்றும் இதற்கு கூட்டாளிகள் யாருமில்லையென்றும் இதன் மீது தாக்குதல் தொடுப்பதற்கான பாதை திறந்து விடப்பட்டுள்ளது என்றும் ஜெர்மனிக்கு தெரிவிக்கப்பட்டது. இதுதான் உலகம் முழுவதிலுமிருந்த ஏகாதிபத்தியவாதிகளின் அந்தரங்க நோக்கமாக இருந்தது.

சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்த அதே நேரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மானிய

---

* W. Coates, Z. Coates, *A History of Anglo-Soviet Relations*, London, 1945, p. 614.

அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தது, பரஸ்பரம் தாக்குவதில்லையென ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்றும் உலக அளவில் செல்வாக்கு மண்டலங்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் உடன்படிக்கைக்கு வரலாம் என்றும் ஹிட்லருக்கு முன் மொழிந்தது. பங்கு போடவிருக்கும் நாடுகளில் சோவியத் யூனியனையும் சேர்ப்பது என்ற ஒரு விபரீதமான யோசனையும் இதில் அடங்கியிருந்தது. போலந்திற்கு அளித்த சுதந்திரத்திற்கான உத்திரவாதத்தை கைவிட்டு விடுவதென்றும் செக்கோஸ்லொவாக்கியாவின் விஷயத்தில் நடந்ததைப் போன்றே இதையும் ஹிட்லரிடம் ஒப்படைப்பது என்றும் அது ஒப்புக் கொண்டது.

மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஆளும் வட்டங்கள் குலைத்ததை அடுத்து பாசிச ஆக்கிரமிப்பிற்கு எதிராக கூட்டு எதிர்ப்பை முன்வைத்து இரண்டாம் உலக யுத்தத்தை தவிர்க்கும் கடைசி வாய்ப்பும் கைநழுவிப் போயிற்று. **இரண்டாவது உலக யுத்தம்** எனும் தன் நூலில் பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியர் லிடல் கார்ட் குறிப்பிட்டபடி அந்த நெருக்கடி மிக்க காலகட்டத்தில், ''போலந்திற்கு நேரடி உதவி அளிக்க வல்ல ஒரே வல்லரசாகிய ருஷ்யாவின் ஆதரவைப் பெறுவதுதான் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான ஒரே வாய்ப்பாக இருந்தது.''°

சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் நெருக்கடியானதொரு நிலைமை உருவானது. நடைமுறை ரீதியாக இது ஏற்கெனவே ஜப்பானிற்கு எதிராக யுத்தத்தில் இறங்கி இருந்தது, ஹால்ஹின்-கோல் ஆற்றருகே சோவியத் மற்றும் மங்கோலியப் படைகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தன. போலந்தின் மீது படையெடுப்பதற்காக ஜெர்மனி தயாரானது சோவியத் யூனியனுக்கும் நேரடியான அச்சுறுத்தலாக அமைந்தது. மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் சோவியத் யூனியனை நோக்கி தாக்குதல்களைத் தொடுத்து, இரு போர்முனைகளின் பிடியில் இதை சிக்க வைத்து நசுக்குவது என்ற சர்வதேச ஏகாதிபத்தியத்தின் திட்டங்கள் நிறைவேறும் தருணத்திலிருந்தன.

ஏகாதிபத்திய அரசாங்கங்களின் குற்றத்தால் சோவியத் யூனியனுடனான பேச்சுவார்த்தைகள் முறியடையாமலிருந்தால் யுத்தத்தை தவிர்த்திருக்கலாம். அந்நேரத்தில் சோவியத், பிரெஞ்சு, பிரிட்டிஷ், போலிஷ் இராணுவங்களிடம் 311 டிவிஷன்களும் 11,700 விமானங்களும் 15,400 டாங்கிகளும் 9,600 கனரக பீரங்கிகளும் இருந்தன.

° லிடல் கார்ட், **இரண்டாவது உலக யுத்தம்**. ஆங்கிலத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, இராணுவ பதிப்பகம், 1976, பக்கம் 27.

பாசிச அரசுகளின்—ஜெர்மனி, இத்தாலி—வசமோ 168 டிவிஷன்களும் 7,700 முதல் வரிசை விமானங்களும் 8,400 டாங்கிகளும் 4,350 கனரக பீரங்கிகளும்தான் இருந்தன.

இத்தகையதொரு சிக்கலான, முரண்பாடான நிலவரம் நிலவுகையில், சோவியத் யூனியனுக்கு எதிராக ''சிலுவைப் போரை'' நடத்தும் சர்வதேசப் பிற்போக்கின், மூனிக் கூட்டின் திட்டங்களை எப்படி முறியடிப்பது என்ற பிரச்சினை சோவியத் யூனியனின் முன் நின்றது. பரஸ்பரம் தாக்குவதில்லையென ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று ஜெர்மனி முன்மொழிந்ததற்கு ஒப்புக் கொள்வதுதான் இதற்கான ஒரே வழியாக இருந்தது. இத்தகையதொரு பத்தாண்டு கால ஒப்பந்தம் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு 23ஆம் தேதி கையெழுத்தானது. ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களைக் குலைத்தது, மேற்கிலிருந்து வரும் அபாயத்தை அகற்ற சோவியத் யூனியனுக்கு உதவியது, பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் காட்டியபடி நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த இரண்டு ஆண்டுகளைப் பெற வழி கோலியது.

இதோடு கூட சோவியத் அரசாங்கத்தின் தொலை நோக்குக் கொள்கை, 1939இல் சோவியத் யூனியனை யுத்தத்திற்குள் இழுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களைக் குலைத்தது, சோவியத் நாட்டிற்கு எதிராக கூட்டுப் போர்முனையை ஏற்படுத்துவது சம்பந்தமான இவர்களின் எண்ணங்கள் நிறைவேற இடையூறாக அமைந்தது.

இன்று சோவியத் எதிர்ப்பு போக்கை உடைய ஏகாதிபத்திய பிரச்சாரம் சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தத்தை ஏதோ ''ஐரோப்பாவில் யுத்தத்தைத் தவிர்க்க இயலாததாக'' ஆக்கிய ஒரு ''மிக முக்கிய சம்பவமாக'' சித்தரிக்கிறது. ஆனால் இது தீய நோக்கமுடைய ஒரு பொய். இந்த ஒப்பந்தமல்ல, மாறாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒப்புதலோடு பிரிட்டனும் பிரான்சும் மாஸ்கோ பேச்சுவார்த்தைகளை முறித்ததுதான் பாசிச ஆக்கிரமிப்பை தவிர்க்க இயலாததாக ஆக்கியது. 1939ஆம் ஆண்டின் சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தத்தை ''போலந்தின் நான்காவது பங்கு போடலைப்'' பற்றிய உடன்படிக்கையாக சித்தரிக்கும் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளின் கூற்று சோவியத் நாட்டின் மீதான பயங்கரமான பழிதூற்றலாகும். போலந்தின் இன்றைய எல்லைகளை புனர்நாட்ட போலந்து அரசிற்கு உதவியது, சோவியத் இராணுவம்தான் பெரும் இழப்புகளை விலையாகத் தந்து போலந்து மக்களை பாசிச அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது எனும் நன்கு அறியப்பட்ட உண்மைகள் இந்தக் கற்பனைகளை மறுக்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தை

மூட்டி விட்டவர்களின் முதல் பலியாக போலந்து மாறியது எனும் உண்மை ஆக்கிரமிப்பாளரை கிழக்கு நோக்கித் தள்ளும் ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைவு ஆகும். எனவே பரஸ்பரம் தாக்குவதில்லை என்ற 1939 ஆண்டு சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை திரித்துக் கூற இன்றும் கூட முயலும் பிற்போக்கு வரலாற்றாசிரியர்கள் மற்றும் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளின் தாக்குதல்களுக்கு எவ்வித அடிப்படையும் கிடையாது. அந்நேரத்தில் சோவியத் அரசாங்கத்திற்கு வேறு வழியிருக்கவில்லை என்பதை பல பூர்ஷ்வா அரசியல் பிரமுகர்களே ஒப்புக் கொள்கின்றனர். ரூஸ்வெல்ட் அரசாங்கத்தில் உள்விவகாரத் துறை அமைச்சராக இருந்த ஈகஸ் சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தத்தைப் பற்றி பின்வருமாறு கருத்து தெரிவித்தார்: ''ருஷ்யாவை என்னால் கண்டிக்க முடியாது. சேம்பர்லேன் மட்டுமே இதற்குக் காரணம் என எனக்கு தோன்றுகிறது.''*

அமெரிக்க உதவி அரசுத் துறைச் செயலாளர் வோல்லசும் இதே மாதிரி கருத்து தெரிவித்தார்: ''சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தம் சோவியத் அரசாங்கத்திற்கு ஒரு சில அனுகூலங்களைப் பெறும் வாய்ப்பை அளித்தது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டபடி இரண்டு ஆண்டுகள் கழித்து ஜெர்மனி படையெடுத்த போது இந்த அனுகூலங்கள் சோவியத் யூனியனுக்கு பெரிதும் உதவின''**.

1941ஆம் ஆண்டு ஏப்ரலில் ஜப்பானுடன் நடுநிலையைப் பற்றி சோவியத் அரசாங்கம் செய்து கொண்ட உடன்பாடு சோவியத் அரசாங்கத்தின் சமாதான வெளிநாட்டு நடவடிக்கையின் முக்கிய முடிவுகளில் ஒன்றாகும். சமாதான உறவுகளைக் கடைப்பிடிப்பது, சோவியத் யூனியன், ஜப்பான் மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின் பிரதேச முழுமையையும் அரசுரிமையையும் மதிப்பது என்று இரு அரசுகளும் உறுதியளித்தன.

சோவியத் அரசின் செயல்முனைப்பான சமாதான நோக்கமுடைய லெனினிய வெளிநாட்டுக் கொள்கை ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியது. சமாதானம் எனும் மகத்தான கோஷத்தை முன்வைத்து, நாடுகளுக்கும் மக்களுக்கும் இடையேயான உறவுகளில் புதிய கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்த ஒரு அரசு முதன் முதலாக உலக அரங்கில் தோன்றியுள்ளது என்பதற்கு இது சான்றாக அமைந்தது.

---

* **சோவியத் யூனியனின் சுருக்கமான வரலாறு**, தொகுதி 2, இரண்டாம் பகுதி, இரண்டாம் வெளியீடு (திருத்தங்களும் சேர்த்தல்களும் செய்யப்பட்டிருக்கின்றன), மாஸ்கோ, ''நவூக்கா'' பதிப்பகம், 1972, பக்கம் 309 (ருஷ்ய மொழியில்).

** Summer Wells, *The Time for Decision*, New York and London, 1947, p. 324.

சோவியத் அரசு யுத்தத்திற்கு முன் கடைப்பிடித்த வெளி நாட்டுக் கொள்கையை சகலவிதங்களிலும் திரித்துக் கூற பூர்ஷ்வா வரலாற்றுசிரியர்கள் முயலுகின்றனர். 1939—1941ஆம் ஆண்டு களில் சோவியத் யூனியன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கவில்லை என் பதை இவர்கள் காரணங் காட்டி சோவியத் யூனியன் பாசிச ஜெர்மனி யுடன் சேர்ந்து சதி செய்ததாக குற்றஞ் சாட்டுகின்றனர். சோவியத் யூனியனுக்கு எதிராகப் போர் தொடுக்குமாறு பாசிச ஜெர்மனியைத் தள்ளிய பொறுப்பை மேலைய வல்லரசுகளிடமிருந்து அகற்றுவது தான் இவர்களுடைய கூற்றுகளின் நோக்கமாகும். ஆவணங்களும் மற்ற விஷயங்களும் இத்தகைய கூற்றுகளை ஆணித்தரமாக மறுக் கின்றன.

இரண்டாவது உலக யுத்தம் தவிர்க்க இயலாததாக இருக்க வில்லை. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியால் உருவாக்கப் பட்ட ஒரு புதிய வரலாற்றுச் சகாப்தத்தில் சோவியத் யூனி யனைப் போன்ற ஒரு பலம் மிக்க சமாதான அரண் நிலவும் போது குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில், மொத்தத்தில் இராணுவ அதிசாகசங் களைத் தவிர்க்க இயலாதிருந்தாலும் ஆக்கிரமிப்பு அரசுகளைக் கட்டுப் படுத்தி, இவை புதிய உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடாத வாறு செய்யும் வாய்ப்பு இருந்தது.

அத்தியாயம் 2

யுத்தத்தின் துவக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

இரண்டாம் உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட குற்றம் ஏகாதிபத்தியத்தைதான் சாரும். 30ஆம் ஆண்டுகளில் இது இன்னமும் அதிக இராணுவ வெறி கொண்டதாயும் ஆக்கிரமிப்பு நோக்கமுடையதாயும் மாறியது, உலகின் முதல் சோஷலிச அரசாகிய சோவியத் யூனியனை அழிக்க முயன்றது. ஆனால் முதலாளித்துவ உலகம் பாசிச அரசுகளின் கூட்டு ஒரு புறமும் பூர்ஷ்வா-ஜனநாயக நாடுகளின் கூட்டணி மறு புறமுமாக பிளவுபட்டிருந்தது. விற்பனைச் சந்தைகளுக்காகவும் மூலப் பொருட்களின் இருப்பிடங்களுக்காகவும் இவற்றிற்கு இடையே தோன்றிய ஆழ்ந்த முரண்பாடுகள், இவற்றை ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்க்கும் நாட்டத்தை உருவாக்கின. அதே நேரத்தில் முதலாளித்துவக் கூட்டுகளிலிருந்த அரசுகளை சோவியத் எதிர்ப்பு நிலை ஒன்றிணைத்தது. இது, ஏதோ பாசிச ஆக்கிரமிப்பு இந்நாடுகளைப் பாதிக்காது என்ற ஒரு மாயையை மேலைய நாடுகளில் தோற்றுவித்தது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏகபோகங்கள் இரண்டாம் உலக யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் இயங்கு சக்திகளாகச் செயல்பட்டன. முதலாளித்துவ நாடுகளின் சமுதாய வாழ்க்கை முழுவதையும் இராணுவமயமாக்குவதில் அக்கறை கொண்டிருந்த இவை இராணுவ சச்சரவுகளுக்கு ஏற்பாடு செய்வதிலும் இவற்றை மூட்டி விடுவதிலும் தீவிரப் பங்கேற்றன. இது போர் எனும் நெருப்பு கொழுந்து விட்டு எரியவும் மேன்மேலும் நாடுகளும் மக்களும் யுத்தத்தில் இறங்கவும் சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது.

முதலாளித்துவ அமைப்பின் உள்ளிருந்த இரு ஏகாதிபத்திய கூட்டணிகளுக்கு இடையே—ஒரு புறம் பிரதான பாசிச அரசுகளாகிய ஜெர்மனியும் இத்தாலியும் மறுபுறம் கிரேட் பிரிட்டனும் பிரான்சும்—இரண்டாவது உலக யுத்தம் துவங்கியது.

பாசிசக் கூட்டைச் சேர்ந்த அரசுகள் ஆரம்பம் முதல் இறுதி வரை ஏகாதிபத்திய, நியாயமற்ற யுத்தத்தை நடத்தின. இவை

முதலில் மற்ற முதலாளித்துவ நாடுகளின் மீது தாக்குதலைத் தொடுத்தாலும், உலக ஆதிக்கத்தை வெல்லும் பாதையில் தடையாக நிற்கும் சோவியத் யூனியனை ஒழித்துக் கட்டுவதைதான் தமது முக்கிய நோக்கமாகக் கொண்டன.

இது தவிர பாசிச கூட்டைச் சேர்ந்த அரசுகள், தம் நாட்டு மக்களின், மற்ற மக்களின் அடிப்படை நலன்களுக்கு விரோதமான தெட்டத் தெளிவான ஜனநாயக எதிர்ப்பு நோக்கங்களை நிறைவேற்றுவதை குறியாகக் கொண்டிருந்தன. ஆக்கிரமிப்பாளர்கள் பூர்ஷ்வா-ஜனநாயக சுதந்திரங்களின் மிச்ச சொச்சங்களை ஒழித்துக் கட்டினர், தமது உரிமைகளுக்கு ஆதரவாக உழைப்பாளிகள் நடத்திய எந்த ஒரு போராட்டத்தையும் ஒடுக்கினர், அரசியல் கட்சிகளைத் தடை செய்தனர், கலைத்தனர், தொழிற்சங்கங்களும் மற்ற சமூக நிறுவனங்களும் ஒழித்துக் கட்டப்பட்டன. குறிப்பாக கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் இயக்கத்தை பாசிஸ்டுகள் மிகக் கொடூரமாக நசுக்கினார்கள், இவற்றில் கலந்து கொண்டவர்களைக் கூட்டங் கூட்டமாக சுட்டுக் கொல்லக் கூடச் செய்தனர்.

ஏகாதிபத்திய, மேலாதிக்க லட்சியங்களால் உந்தித் தள்ளப்பட்ட பாசிசக் கூட்டணியின் அரசுகள் உலக ஆதிக்கத்தை அடைய, ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றி தம் ஆளுகைக்கு கீழ் கொண்டு வர துடித்தன. ஹிட்லர் ஜெர்மனி இதில் முக்கியப் பங்காற்றியது. புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதைப் பற்றிக் கனவு கண்ட பாசிச இத்தாலியும் யுத்தத்திற்குப் பிந்தைய பிரச்சினைகளின் தீர்வில் ஜெர்மனிக்குச் சரிசமமாக முக்கிய இடத்தைத் தானும் ஆயுதங்களின் உதவியால் பெறலாம் என திட்டமிட்டது. சீனு மற்றும் சோவியத் தொலைக் கிழக்கின் கணிசமான பகுதி உள்ளிட்ட ஆசியாவில் மேலாதிக்கத்தை நிலைநாட்ட இராணுவ வெறி கொண்ட ஜப்பான் முயன்றது. ஜெர்மனியோடு சேர்ந்து, பசிபிக் சமுத்திரப் பகுதியில் தனக்கு முக்கியப் போட்டியாக விளங்கிய அமெரிக்க ஐக்கிய நாட்டை ஒழித்துக் கட்ட ஜப்பான் விரும்பியது.

யுத்தத்தின் பிற்போக்கு அரசியல் நோக்கங்களுக்கேற்ப பாசிச அரசுகள் மிகக் கொடுமையான, மனிதாபிமானமற்ற முறைகளை — போர்க் கைதிகளை சித்திரவதை செய்வது, பாமர மக்களை கொன்று குவிப்பது, பெண்களின் பால் வன்முறையை பயன்படுத்துவது, நகரங்களை இடித்து தரைமட்டமாக்குவது, கலாச்சார நினைவுச் சின்னங்கள் மற்றும் கலைக்கூடங்களை ஒழிப்பது, கிராமங்கள் மற்ற குடியிருப்புகளை எரிப்பது போன்றவை — பின்பற்றின.

பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் தரப்பிலும் யுத்தம் ஆரம்பக் கட்டத்தில் நியாயமற்றதாக, ஏகாதிபத்தியத் தன்மையை உடையதாக இருந்

தது. 1939ஆம் ஆண்டு செப்டெம்பரில் ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தை பிரகடனப்படுத்திய பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்கள் இதை வெகுஜனங்களின் நலன்களுக்காக துவக்கவில்லை, மாறாக, தனது போட்டியாளனை பலவீனப்படுத்தி, தமது மேலாதிக்க வல்லரசு நிலையை உறுதிப்படுத்த விரும்பிய தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்காகத்தான் துவக்கின. எனவே போலந்தின் மீது ஜெர்மனி படையெடுத்த போது, போலந்திற்கு உண்மையான உதவியை அளிக்க சாரத்தில் இவை ஒன்றுமே செய்யவில்லை. ஜெர்மனியுடனான புதிய சதித்திட்டத்தின் மூலம் உலகில் தம் நிலைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் சோவியத் யூனியனைப் பலியாகக் கொடுத்து ஜெர்மனியுடனான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும் அவை விரும்பின. ''விசித்திரமான யுத்தம்'' என்று அப்போது அழைத்தார்களே, அதன் உட்பொருள் இதில்தான் அடங்கியிருந்தது. சாராம்சத்தில் மூனிக் கொள்கையைத் தொடர்ந்த இது நடைமுறையில் ஜெர்மனியை பலவீனப்படுத்தாது அதை பலப்படுத்தியது.

ஆனால் யுத்த நெருப்பு கொழுந்து விட்டு எரிந்த போது, பாசிச கூட்டை எதிர்த்து நின்ற அரசுகளைப் பொறுத்த மட்டில் யுத்தத்தின் சமூக-அரசியல் தன்மை மாறத் துவங்கியது. இதற்கு முக்கியக் காரணம் பாசிச ஆக்கிரமிப்பு பெருகி வந்தது பல நாடுகளின் தேசிய சுதந்திரத்திற்கு உண்மையான அபாயத்தைத் தோற்றுவித்தது ஆகும். தம்மை அடிமைப்படுத்த பாசிசம் முயற்சி செய்கிறது என்பதை மக்கள் கண்டனர். கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி பல பூர்ஷ்வா தலைவர்களும் இதைப் புரிந்து கொண்டனர். எனவே தேசிய விடுதலைக்காக அரசுகள் நடத்திய போராட்டம் யதார்த்தத்தில் அவற்றைப் பொறுத்த மட்டில் நியாயமான யுத்தமாக மாறியது.

பாசிச ஜெர்மனியின் தாக்குதலுக்கு உள்ளான போலந்து, யுகோஸ்லாவிய மக்கள் ஆரம்பம் முதலே தமது சுதந்திரம், தேசிய விடுதலைக்காக நியாயமான யுத்தத்தை நடத்தினர். இது இவர்களுடைய அடிப்படை நலன்களின் இயற்கையான வெளிப்பாடாக இருந்தது. கிரீஸ், ஆல்பானியா, செக்கோஸ்லொவாக்கியாவின் மக்களும் பின்னர் நார்வே, ஹாலந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் மக்களும் விடுதலைப் போரில் குதித்தனர்.

ஆனால் சோவியத் யூனியன் யுத்தத்தில் ஈடுபட்டதுதான் ஹிட்லர் கூட்டணியின் அரசுகளுக்கு எதிரான யுத்தத்தின் விடுதலை தன்மையை நிர்ணயித்த முக்கிய, தீர்மானகரமான காரணியாக இருந்தது. சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம் (1941—1945) துவங்கியதும் இரண்டாவது உலக யுத்தம் முதலாளித்துவ அமைப்

பின் எல்லைகளை விட்டு வெளி வந்தது, சோஷலிச அரசிற்கும் பாசிச ஜெர்மனிக்கும் இடையேயான போராட்டம் யுத்தத்தின் மையமாக அமைந்தது. ஹிட்லர் ஜெர்மனியின் பிற்போக்குத் தனமான, ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு மாறாக சோவியத் யூனியன் நியாயமான, விடுதலை நோக்கங்களை முன்வைத்தது. எனவேதான் சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்துடன் மற்ற மக்களினங்களின் பாசிச எதிர்ப்பு விடுதலைப் போராட்டம் ஒன்று கலந்தது.

''சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது, ஹிட்லர் படைகளைத் தோற்கடிப்பதற்காகக் கிளர்ந்தெழுந்த ஜனநாயக மக்களின் வெற்றிக்கான ஆதாரமாக விளங்கிய தீர்மானகரமான அம்சங்களை இந்த யுத்தத்திற்கு அளித்தது. சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது முதலாவதாக இதனுடைய மேலைய நேச நாடுகளின் துரோகத்தனமான மூனிக் கொள்கை தவிடு பொடியானதைக் குறித்தது, இந்த யுத்தத்தின் உறுதியான பாசிச எதிர்ப்பு தலைமைக்கு வழிகோலியது. சோவியத் யூனியன் பங்கேற்காது இருந்திருந்தால், பாசிசத்தின் மீது ஆழ்ந்த அனுதாபம் காட்டி ஹிட்லருடன் சதி செய்ய எப்போதுமே தயாராயிருந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பாசிசத்திற்கு எதிரான உறுதியான போராட்டத்தில் இறங்கியிருப்பார்கள் என்ற பேச்சிற்கே இடமில்லை. இரண்டாவதாக, சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதன் விளைவாக காரியத்தின் போக்கை நிர்ணயித்த குறிப்பிட்ட அரசியல் போர்த்தந்திரம் நடைமுறைப்படுத்தப்படலாயிற்று...''* என்று அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் வில்லியம் ஃபோஸ்டர் எழுதினார்.

ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் உள்நாட்டு பிற்போக்கிற்கு எதிராக நடந்த ஆயுதந்தாங்கிய எழுச்சிகளில்—இந்த எழுச்சிகள் ஒரு சில ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் மக்கள் ஜனநாயக, சோஷலிசப் புரட்சிகளாக வளர்ச்சியடைந்தன—இரண்டாம் உலக யுத்தத்தின் நியாயமான, விடுதலை தன்மை நன்கு வெளிப்பட்டது.

ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைப் பொறுத்த மட்டில் யுத்தத்தின் நியாயமான, விடுதலை தன்மை, ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்கத்திற்கு எதிரான காலனி மற்றும் சார்பு நாட்டு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தியது.

சர்வதேச ஏகாதிபத்தியம் திட்டமிட்டபடி யுத்தம் நடைபெறவில்லை. சோவியத் யூனியனுக்கு எதிரான சிலுவைப் போருக்குப்

---

* வி. ஃபோஸ்டர், **சுருக்கமான அமெரிக்க அரசியல் வரலாறு.** ஆங்கிலத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1953, பக்கம் 609.

பதில் ஹிட்லர் தனது படைகளை முதலாவதாக பிரிட்டிஷ்-பிரெஞ்சு கூட்டிற்கு எதிராக அனுப்பினான். பிரபல பிரெஞ்சு அரசியல் பிரமுகர் ஏரியோ சரியாகக் குறிப்பிட்டபடி பாசிச ஜெர்மனி, தன் கழுத்துக் கயிற்றை அறுத்து, எஜமானனையே கடித்த நாயைப் போலிருந்தது.

போலந்தை அடுத்து டென்மார்க், நார்வே, ஹாலந்து, பிரான்ஸ் பின்னர் பால்கன் நாடுகள் பாசிசத் துருப்புகளால் கைப்பற்றப்பட்டன. பிரான்சிலும் பெல்ஜியத்திலும் பிரிட்டிஷ் பயணப் படைகள் தோல்வியுற்றன. இத்துடன் யுத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது.

1. ஜெர்மன்-போலந்து யுத்தம் (1939 செப்டெம்பர்)

போலந்து அரசை ஒழித்துக் கட்டி போலந்து மக்களை அடிமைப் படுத்துவதுதான் போலந்திற்கு எதிராக பாசிச ஜெர்மனி தொடுத்த யுத்தத்தின் நோக்கமாகும். போலந்தை முறியடிப்பதன் மூலம் தமது போர்த்தந்திர நிலையை மேம்படுத்திக் கொள்ளவும் கூடுதல் இராணுவப்-பொருளாதார மூல ஊற்றுகளைப் பெற்று சோவியத் யூனியனை தாக்குவதற்கான தாக்கு முனையை ஏற்படுத்தவும் ஹிட்லர் துருப்புகள் முயன்றன.

டான்ட்ஸிங்கை (கிதான்ஸ்க்) தருமாறும் ''போலந்து இடைவழியில்''* சாலையையும் இருப்புப் பாதையையும் அமைக்கும் உரிமையை அளிக்குமாறும் போலந்திற்குக் காலக்கெடு தந்து ஜெர்மனி 1939ஆம் ஆண்டு மார்ச் 21ல் கோரிக்கையை விடுத்தது. போலந்து அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளை நிராகரித்தது.

ஏப்ரல் 3ஆம் தேதி ஜெர்மானியப் படைத் தலைமை போலந்தின் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டத்தை உருவாக்க ஆரம்பித்தது. இத்திட்டம் ''வெள்ளைத் திட்டம்'' என்ற பெயரைப் பெற்றது. ஏப்ரல் 11ஆம் தேதி ஹிட்லர் யுத்தத்திற்குத் தயாராகும் கட்டளையில் கையெழுத்திட்டான். ஒருவரையொருவர் பரஸ்பரம் தாக்குவதில்லையென்று 1934இல் செய்து கொள்ளப்பட்ட ஜெர்மன்-போலந்து உடன்படிக்கையை பாசிச ஜெர்மனி ஏப்ரல் 28ஆம்

---

* வெர்சேய் சமாதான ஒப்பந்தத்தின்படி பூர்ஷ்வா-நிலவுடைமை போலந்திற்குக் கிடைத்த குறுகலான போலந்து நிலப்பகுதி 1919—1945 ஆண்டுகளில் போலந்து இடைவழி, டான்ட்ஸிங் இடைவழி என்று அழைக்கப்பட்டது. இது பால்டிக் கடலுக்கு செல்ல போலந்திற்கு வாய்ப்பளித்தது. போலந்து நகரமாகிய கிதான்ஸ்கும் இதைச் சுற்றியுள்ள பிரதேசமும் ''டான்ட்ஸிங் சுயேச்சை நகரம்'' என்ற ஒரு தனி அரசு அமைப்பாக (சர்வதேச சங்கத்தின் பராமரிப்பின் கீழ்) அமைக்கப்பட்டது.

தேதி முறித்துக் கொண்டு ஆக்கிரமிப்பிற்கான நேரடியான தயாரிப்பில் இறங்கியது. தன் பங்கிற்கு போலந்து இராணுவத் தலைமை தன் நாட்டின் மேற்கு எல்லைகளின் தற்காப்புத் திட்டத்தைத் தீட்டத் துவங்கியது. போர்த்தந்திர தற்காப்பில் இறங்கி எதிரியைத் தடுத்து நிறுத்துவதும் பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நேச நாட்டுத் துருப்புகளின் தாக்குதலுக்கு தயார்ப்படுத்திக் கொள்ள நேரத்தைப் பெறுவதும்தான் இத்திட்டத்தின் சாரம். மேற்கொண்டு பொதுவான எதிர்த்தாக்குதலுக்குத் தயாராகி நிலவரத்திற்கு ஏற்றபடி செயல்பட வேண்டும்.

யுத்தத்தின் துவக்கத்தில் பாசிச ஜெர்மனியின் படைத் தலைமை போலந்தின் மேற்கு எல்லையில் பெரும் சக்திகளை குவித்தது. இவற்றில் 62 டிவிஷன்கள் (7 டாங்கி மற்றும் 4 மோட்டார் டிவிஷன்கள் உட்பட), 2,800 டாங்கிகள், 6,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் சுமார் 2,000 விமானங்கள் (முதலாவது, நான்காவது வான் படைகளைச் சேர்ந்தவை) முதலியன அடங்கியிருந்தன, மொத்தம் 16 லட்சம் பேர் இருந்தனர். இவை ''வடக்கு'' படைத் தொகுதியிலும் (3வது படை—கிழக்குப் பிரஷ்யாவில், 4வது படை—போமெரானியாவிலும்) ''தெற்கு'' படைத் தொகுதியிலும் (8, 10, 14வது படைகள் சிலேஸியாவில்) இடம் பெற்றிருந்தன. ''வடக்கு'' படைத் தொகுதிக்கு கர்னல் ஜெனரல் போக்கும் ''தெற்கு'' படைத் தொகுதிக்கு கர்னல் ஜெனரல் ருன்டிஷ்டேட்டும் தலைமை தாங்கினர்.

போலந்துடனை யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட பாசிச ஜெர்மனியின் கடற்படையில் 2 போர்க் கப்பல்களும் 7 நீர்மூழ்கிக் கப்பல்களும் நாசகாரிக் கப்பல் படைப்பிரிவும் இழுவைப் படகு யூனிட்டும் கடற்படை விமானப் பிரிவும் அடங்கியிருந்தன. இது தவிர ஸ்வினே மியூன்ட்டில் (ஸ்விஞ்னே ஊஸ்தியே) செயலில் இறங்கத் தயாரான நிலையில் 3 குரூசர் கப்பல்களும் பில்லாவுவில் (பால்டீய்ஸ்க்) நாசகாரிக் கப்பல் படைப்பிரிவும் டர்பேடோ படகுகள் தொகுதியும் நின்றன. போலந்தின் கப்பற்படைத் தளங்களைச் சுற்றி வளைப்பது, இதன் கடற்படையை ஒழிப்பது, நடுநிலை நாடுகளுடன் போலந்திற்கு உள்ள கடல் வர்த்தகத்தைக் குலைப்பது, கிழக்குப் பிரஷ்யா, ஸ்வீடன் மற்றும் பால்டிக் கரையோர அரசுகளுடன் பாதுகாப்பான கடல் வழித் தொடர்புகளுக்கு வகை செய்வது ஆகியனதான் கப்பற்படையின் முன்னிருந்த கடமைகளாகும்.*

பாசிச ஜெர்மானியத் துருப்புகளை போலந்து இராணுவம் எதிர்த்து

---

* *Der Zweiten Weltkrieg in Bildern und Dokumenten,* Bd. 1. Die Bleitzkriege 1939—1940, München, 1968, S. 50.

நின்றது. இதன் வசம் 39 காலாட்படை டிவிஷன்களும் 11 குதிரைப் படை பிரிகேடுகளும் 3 மலையேற்ற பிரிகேடுகளும் 2 கவச, மோட்டார் பிரிகேடுகளும் சுமாராக 80 தேசியப் பாதுகாப்பு பட்டாலியன்களும் இருந்தன, மொத்தமாக 10 லட்சம் போர் வீரர்கள் இருந்தனர்; 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் தேதி இதன் வசம் 220 எளிய டாங்கிகளும் 650 சிறு பீரங்கி ஏந்திய டாங்கிகளும் கவச மோட்டார் வாகனங்களும் 43,00 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 800 போர் விமானங் களும் 16 போர்க் கப்பல்களும் உதவி படகுகளும் இருந்தன.

ஆனால் போலந்து படைத் தலைமையால் இராணுவத்தை போர் நடவடிக்கைகளுக்கு தயார்ப்படுத்தவும் தேவையான படைத் திரட்டு களாகப் பிரிக்கவும் இயலவில்லை, அணி திரட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. அணி திரளும் கட்டளை ஆகஸ்டு 31ஆம் தேதிதான், அதாவது யுத்தம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள்தான் பிறப்பிக்கப் பட்டது; இந்நேரத்தில் முழுவதுமாக அணி திரட்டப்பட்ட பாசிச ஜெர்மானியத் துருப்புகள் படையெடுக்கத் தயார் நிலையில் இருந் தன. தற்காப்பு அணிகளில் போலந்து படைத் தலைமையால் 24 காலாட்படை டிவிஷன்களையும் 8 குதிரைப்படை, 1 மோட்டார், 3 மலையேற்றப் பிரிகேடுகளையும் 56 தேசியப் பாதுகாப்பு பட்டாலியன் களையும் மட்டும்தான் நிறுத்த முடிந்தது.

இச்சக்திகள் எல்லாம் மேற்கேயிருந்த எல்லை வட்டாரங்களில் பரவலான அரை வட்டத்தில் அமைந்திருந்ததால் போலந்துத் துருப்புகள் சிதறிப் போயிருந்தன, ஒரு இடத்தில் கூட தெளிவான பலம் கொண்ட படைத் திரட்டுகள் இருக்கவில்லை.

பெரும் இடைவெளிகள் விட்டு, பரஸ்பர பீரங்கித் தொடர் பின்றி இருந்த எதிர்ப்பு முடிச்சுகளும் ஆதாரத் தளங்களும்தான் போலந்து தற்காப்பின் அடிப்படையாக விளங்கின. மேலும் காலாட் படை டிவிஷன் இருந்த இடத்தில் டாங்கி எதிர்ப்புச் சாதனங்கள் 1 கி. மீ. போர்முனைக்கு இரண்டிற்கும் மேற்படாத விகிதத்தில் மிகவும் குறைவாக இருந்ததால் மேலே கூறிய சக்திகளையும் எளி தாக சுற்றி வளைத்து செல்ல முடிந்தது.

போலந்தின் கப்பற்படையில் 4 நாசகாரிக் கப்பல்களும் (இவற்றில் 3 பிரிட்டனுக்குச் சென்று விட்டன), 5 நீர்மூழ்கிக் கப்பல்களும் 1 கண்ணி வெடி வைக்கும் கப்பலும் 6 இழுவைப் படகுகளும் துணைக் கப்பல்களும் ஒருசில கரைப் பாதுகாப்பு பட்டாலியன்களும் கடல் விமானப் படையும் இருந்தன. கிதீனியா கப்பற்படைத் தளம் மற்றும் ஹேல் தீபகற்பத்தின் பாதுகாப்பிற்கு வகை செய்வது, இறங்குப் படைகள் இறங்கத் தடை செய்வது, எதிரியின் கப்பல் களுடன் போரிடுவது கண்ணி வெடிகளை வைப்பது ஆகியனதான்

கப்பற்படையின் கடமைகளாக இருந்தன.*

சக்தியிலும் சாதனங்களிலும் ஹிட்லர் படைகள் கணிசமான அளவு விஞ்சி நின்றதைப் பார்க்கும் போது இவையெல்லாம் போலந்து இராணுவத்தை மிகக் கடுமையான நிலையில் வைத்தன.

பாசிச ஜெர்மனியின் படைத் தலைமை இரண்டு தாக்குதல்களைத் தொடுக்கத் திட்டமிட்டது. பிரதான தாக்குதலை 3வது படையைக் கொண்டு கிழக்குப் பிரஷ்யாவிலிருந்தும், இரண்டாவது தாக்குதலை 10வது படையைக் கொண்டு சிலேஸியாவிலிருந்து வீஸ்லா மற்றும் நாரெவ் ஆறுகளின் மேற்கே இருந்த போலந்து இராணுவத்தின் முக்கியச் சக்திகளை சுற்றி வளைத்து முறியடிக்கும் பொருட்டு வார்ஸா மீது ஒன்றிணையும் திசைகளில் தொடுப்பது.

இத்தாக்குதலை திடீரெனத் துவங்கும் பொருட்டு பாசிஸ்டுகள் சில மூடு தந்திர பாசாங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கிழக்குப் பிரஷ்யாவில் நடந்த சமரின் 25வது ஆண்டு விழாவில் பங்கேற்பது எனும் சாக்கின் கீழ் போர்க் கால எண்ணிக்கையை அடைந்திருந்த நிரந்தர டிவிஷன்கள் ''வடக்கு'' படைத் தொகுதி போர்த்தந்திர ரீதியாக நிறுத்தப்பட்டிருந்த பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன, ''இலையுதிர்கால ஒத்திகைகள்'' எனும் சாக்கின் கீழ் சாதாரண காலாட்படை மற்றும் மோட்டார் டிவிஷன்கள் போலந்தின் எல்லைகளின் அருகே கொண்டு வரப்பட்டன.

ஆகஸ்டு 31ஆம் தேதி போலந்து எல்லையின் அருகேயுள்ள ஜெர்மன் நகரமாகிய கிலேய்விட்ஸில் ஆத்திரமூட்டும் பாசிச சம்பவம் ஒன்று நடைபெற்றது. இச்சம்பவம் போலந்தின் மீது படையெடுப்பதற்கான சம்பவமாக பாசிஸ்டுகளால் பயன்படுத்தப்பட்டது. பின்வருமாறு இச்சம்பவம் நடந்தது. ஜெர்மனி தாக்கப்பட்டதைப் போன்றதொரு நாடகத்திற்கு ஏற்பாடு செய்த பாசிஸ்டுகள் போலந்து இராணுவத்தின் உடையில் வேடம் போட்டு ஸ்தல வானொலிக் கட்டிடத்தினுள் புகுந்து மைக்கின் முன் ஒரு சில குண்டுகளைச் சுட்டு விட்டு, போலந்து மொழியில் முன்னரே தயாரிக்கப்பட்ட வாசகத்தைப் படித்தனர்; ''ஜெர்மனிக்கு எதிராக போலந்து யுத்தத்தில் இறங்க வேண்டிய நேரம் வந்து விட்டது'' என்று இதில் கூறப்பட்டிருந்தது. நன்கு நம்பச் செய்வதற்காக பாசிஸ்டுகள் தம்மோடு டஜன் கணக்கான ஜெர்மன் குற்றவாளிகளை போலந்து இராணுவ ஆடையை அணிவித்து கூட்டி வந்து கிளேய்விட்ஸிலேயே சுட்டுத் தள்ளினர். இதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் ஹிட்லர், ''யுத்தத்தை மூட்டி விடுவதற்கான பிரச்சார சாக்கை நான் தருகிறேன். இது உண்மையானதாயிருக்குமா என்பது முக்கியமல்ல. வென்றவனை பின்னால், அவன் கூறியது உண்மையா இல்லையா

* *Mala encyklopedia wojskova*, t. II, S. 276.

என்று கேட்கப் போவதில்லை''* என்று தன் ஜெனரல்களிடம் ஏளனமாக குறிப்பிட்டான்.

1939ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் தேதி பாசிச ஜெர்மானியத் துருப்புகள் நயவஞ்சகமாக போலந்தின் மீது படையெடுத்தன. அதிகாலைப் பொழுதில், 4 மணி 45 நிமிடத்திற்கு ஹிட்லரின் விமானப்படை போலந்து நாட்டின் விமான நிலையங்கள், தகவல் தொடர்பு அமைப்புகள், இருப்புப் பாதை மையங்கள், பொருளாதார மற்றும் நிர்வாகக் கேந்திரங்கள் மீது குண்டு மழை பொழிந்தது. இதன் விளைவாய் முதல் நாளன்றே போலந்து விமானப் படைக்கு பெருத்த சேதங்கள் ஏற்பட்டன. முக்கியத் திசைகளில் போலந்து போர்முனை ஜெர்மன் டாங்கி டிவிஷன்களால் பிளவுபடுத்தப்பட்டது; இந்த டிவிஷன்களுக்குப் பின்னால் மோட்டார் படைப்பிரிவுகள் வந்தன; இவற்றின் பக்கங்களில், வலப்புறமும் இடப்புறமுமாக காலாட்படை வந்தது.

கிழக்குப் பிரஷ்யாவிலிருந்து முன்னேறிய 3வது பாசிச ஜெர்மானியப் படை செப்டெம்பர் 7ஆம் தேதியன்று நாரெவ் ஆற்றை அடைந்தது, சிலேஸியாவிலிருந்து முன்னேறிய ''தெற்கு'' படைத் தொகுதியின் முன்னணிப் படைப்பிரிவுகள் செப்டெம்பர் 8ஆம் தேதி வார்ஸாவை நெருங்கின.

போலந்து அரசாங்கம் இராணுவ உடன்படிக்கையின்படி தரைப் படைகளை முன்னுக்கு கொண்டு வந்தும் விமானப்படைத் தாக்குதல்களின் மூலமும் உடனடியாக உதவி புரியும்படி பிரான்ஸையும் பிரிட்டனையும் வற்புறுத்தி வேண்டியது. ஆனால் நேச நாடுகள் நடைமுறையில் ஒன்றுமே செய்யவில்லை. வெர்சேய் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்காக மகாநாடு ஒன்றை கூட்டுவது சம்பந்தமாக பிரான்சும் பிரிட்டனும் 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் தேதி ஹிட்லரின் இராஜதந்திரிகளோடு பேச்சுவார்த்தைகளைத் துவக்கினார்கள். ஆனால் இது வெற்றி பெறவில்லை. தனக்கு நெருங்கியவர்கள் மத்தியில் ''மூனிக்வாதிகளின்'' தலைவராகிய சேம்பர்லேனைப் பற்றி ஹிட்லர் பின்வருமாறு அலட்சியத்தோடு குறிப்பிட்டான்: '''குடையேந்திய இந்த மனிதன்' மட்டும் என்னிடம் பெர்ஹ்டேஸ்காடனுக்கு வரப் பார்க்கட்டும்... காலால் அவனை பின்புறம் உதைத்து மாடிப்படியில் உருட்டி விடுவேன். இவ்வாறு நான் செய்யும்போது இதை ஏராளமான பத்திரிகையாளர்கள் இருந்து பார்க்கும்படி கவனித்துக் கொள்கிறேன்.°°

---

* *IMT*, ஆவணம் 1014—P, p. 523–524. 1939 ஆகஸ்டு 22இல் உயர் ஜெனரல்களின் முன் ஹிட்லரின் இரண்டாவது உரை.

°° **இரண்டாவது உலக யுத்தத்தின் வரலாறு**, தொகுதி 3, பக்கம் 14 (ருஷ்ய மொழியில்).



1939ஆம் ஆண்டு செப்டெம்பரில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் போலந்தின் மீது தொடுத்த தாக்குதல்

செப்டெம்பர் 3ஆம் தேதிதான் பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனிக்கு எதிராக முறைப்படி யுத்தத்தை அறிவித்தன. ஆனாலும் ஜெர்மனிக்கு எதிரான தீவிர இராணுவ நடவடிக்கைகளை இவை துவக்கவில்லை.

செப்டெம்பர் 9ஆம் தேதி சவாராவில் பிரெஞ்சு இராணுவம், குறுகிய நோக்கங்களோடு தாக்குதலை மேற்கொண்டாலும் செப்டெம்பர் 12ஆம் தேதி இது நிறுத்தப்பட்டது. போலந்திற்கு உண்மையான உதவியளித்து, மேற்கேயிருந்து பாசிச ஜெர்மனியைத் தாக்கி தோற்கடிக்க பிரிட்டனிடமும் பிரான்சிடமும் பெரும் இராணுவச் சக்திகளிலிருந்தும் சாராம்ச ரீதியாக பிரிட்டனும் பிரான்சும் தமது கூட்டாளிக்குத் துரோகமிழைத்தன.

நேச நாடுகளின் இராணுவங்களை எதிர்த்து நின்ற ஜெர்மானிய "C" படைத் தொகுதியில் 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் நடுவில் 43 காலாட்படை டிவிஷன்கள் இருந்தன. மேற்கு ஜெர்மனி வரலாற்றுசிரியர் என். ஃபோர்மன் எழுதியபடி இவற்றில் "11 நிரந்தர காலாட்படை டிவிஷன்களை மட்டுமே முழு மதிப்புள்ள டிவிஷன்களாகச் சொல்ல முடியும். எஞ்சியவை அனைத்தும் முற்றிலும் புது அமைப்புகளாக இருந்தன; இவை தமது பயிற்சியிலும் இராணுவ சாதனங்களிலும் துரிதமான தந்திர யுத்தத்தை நடத்துவதற்கான கோரிக்கைகளுக்கு முற்றிலும் ஒத்திருக்கவில்லை... மேலும் இவற்றில் ஒரு பகுதி படைகள் திரட்டப்பட்டிருந்த பிரதேசத்திற்குச் செல்லும் வழியில்தான் இருந்தன. படைத் தொகுதியின் ("C".—ப-ர்.) வசம் ஒரு டாங்கியோ ஒரு மோட்டார் யூனிட்டோ கூட இல்லை)"*.

ஜெர்மனியுடனான எல்லையில் பிரான்சிற்கோ சுமாராக 90 யூனிட்டுகள் இருந்தன. பீரங்கிகள், டாங்கிகள், விமானங்களின் எண்ணிக்கையில் பிரெஞ்சு இராணுவம் பாசிச ஜெர்மானியப் படைகளை விஞ்சி நின்றது. ஹிட்லரின் ஜெனரல் கால்டர் தன்னுடைய யுத்த நாட்குறிப்பில் எழுதியுள்ளபடி மேற்குப் போர்முனையில் ஜெர்மானியர்களிடம் சுமார் 300 பீரங்கிகளும்—டிவிஷன் பீரங்கிகளைச் சேர்க்காது—பிரான்சிடம் 1,600 பீரங்கிகளும் இருந்தன.** பிரெஞ்சு இராணுவத்திடம் சுமாராக 2,000 டாங்கிகள் இருந்தன, ஜெர்மானியர்களிடம் கிட்டத்தட்ட டாங்கிகளே இருக்கவில்லை. நேச நாடுகளிடம் கிட்டத்தட்ட 3,000 விமானங்கள் (பிரான்சிடம் 1,400, பிரிட்டனிடம் 1,500) இருந்தன. "சென்டர்" படைத் தொகுதி

---

* N. Vormann, *Der Feldzung 1939 in Polen Weissenburg*, 1958, S. 71.

** ஃபெ. கால்டர், **யுத்த நாட்குறிப்பு**, தொகுதி 1, பக்கம் 32 (ருஷ்ய மொழியில்).

யிலோ குறைவான எண்ணிக்கையில்தான் இவை இருந்தன.

நேச நாடுகளின் இராணுவங்கள் தாக்குதலைத் தொடுக்குமோ என்று பாசிச ஜெர்மனியின் இராணுவத் தலைவர்கள் குலை நடுங்கினார்கள் என்பதற்கு நியூரென்பர்க் விசாரணையின் போது வெளியான விவரங்கள் சான்று பகர்கின்றன. உதாரணமாக பீல்ட்மார்ஷல் ஜெனரல் வெ. கைடல் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்: ''பிரான்சும் பிரிட்டனும் மட்டும் தாக்குதலைத் தொடுத்திருந்தால் எங்களால் முற்றிலும் கற்பனையான தற்காப்பைத்தான் எதிராக வைத்திருக்க முடியும்''*. இது பற்றி ஜெனரல் யோடல் பின்வருமாறு கூறினான்: ''1939ஆம் ஆண்டிலேயே நாங்கள் தோல்வியடையவில்லை என்றால் அதற்குக் காரணம், போலந்துடன் நாங்கள் யுத்தத்தில் இறங்கியிருந்த போது மேற்கே 23 ஜெர்மன் டிவிஷன்களுக்கு எதிராக நின்ற சுமார் 110 பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் டிவிஷன்கள் முற்றிலுமாக செயலற்று இருந்ததே.''**

இவ்வாறு செயலற்று இருந்ததன் காரணம் தெட்டத்தெளிவு. பாசிச ஜெர்மனியை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்ப பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஆளும் வட்டங்கள் கொண்டிருந்த நாட்டம்தான் இக்காரணம் ஆகும். பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் ஜெனரல் போர்ஃபின் கூற்றுப்படி ''நமது லோரைன் சேனையின் முழுச் செயலின்மைக்கான காரணத்தை அரசியல் நிலைகளில்தான் தேட வேண்டும்.''***

''வடக்கு'' படைத் தொகுதியின் துருப்புகள் வார்ஸாவை கிழக்கேயிருந்தும் ''தெற்கு'' படைத் தொகுதியின் துருப்புகள் வார்ஸாவை தெற்கேயிருந்தும் சுற்றி வந்து 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் தேதி விளாதாவா பிரதேசத்தில் ஒன்றிணைந்தன. போலந்து இராணுவத்தின் முக்கியச் சக்திகளைச் சுற்றிய முற்றுகை வளையம் ஒன்றிணைந்தது. அதே நாளன்று போலந்து அரசாங்கம், தனது தொலை நோக்கற்ற கொள்கையால் தேசியப் பேரழிவிற்கு இட்டுச் சென்ற நாட்டையும் மக்களையும் விதியின் இச்சைக்கு விட்டு விட்டு ருமேனியாவிற்கு ஓடியது. ஆனால் போலந்து தேசபக்தர்கள்—இராணுவ மற்றும் சிவில்—பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான வீரப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். முழு முற்றுகையில் பாசிசத் துருப்புகளின் கடுமையான குண்டு வீச்சின் கீழ் வார்ஸாவின் பாதுகாவலர்கள் 20 நாட்களுக்கு வீரத்தோடு போரிட்டனர். செப்டெம்பர் 12ஆம் தேதி சண்டைகள்

* நியூரென்பர்க் விசாரணை, தொகுதி 1, பக்கம் 421 (ருஷ்ய மொழியில்).

** அதே நூல், பக்கம் 525.

*** A. Beanfre, *Le drame de 1940,* Paris, 1965, p. 206.

நடந்து கொண்டிருந்த பிரதேசத்திற்கு ஹிட்லர் வந்தான். போலந்தின் தலைநகரைக் கைப்பற்றும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு ஹிட்லர் தரைப்படைத் தலைமையிடம் கோரினான். வார்ஸா மீது குண்டு மழை பொழிய ஆரம்பித்தது. இதில் 1,150 விமானங்கள் கலந்து கொண்டன. இராணுவ அமைப்புகள் இந்த கொடூரமான குண்டு வீச்சிற்கு உள்ளாக்கப்படவில்லை, மாறாக மக்கள் வசிக்கும் வீடுகள்தான் பாதிக்கப்பட்டன. அதே நேரத்தில் நகரம் கடுமையான பீரங்கித் தாக்குதல்களுக்கும் உட்படுத்தப்பட்டது. ஆனால் வார்ஸா பாதுகாப்பாளர்கள் பாசிஸ்டுகளைத் தொடர்ந்து எதிர்த்தனர். பெரும் ஆட்சேதங்களும் போர்த்தளவாடங்கள், தண்ணீர், உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளின் கடும் பற்றாக்குறையும்தான் சரணடையும் உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி வார்ஸா நகரத்தவரைக் கட்டாயப்படுத்தின. தலைநகரைக் காத்து நின்றவர்களில் மொத்தம் 2,000 போர்வீரர்களும் அதிகாரிகளும் கொல்லப்பட்டனர், 16,000 நபர்கள் காயமடைந்தனர்; சிவில் மக்களில் சுமார் 60,000 பேர் மாண்டனர் ஒரு சில பத்தாயிரம் பேர் காயமடைந்தனர்.* வார்ஸா நகரின் வீரம் மிக்க தற்காப்பு, முழு முற்று கையில் இருந்த ஒரு பெரிய நகரின் மக்கள், சக்திகளில் விஞ்சி நின்ற ஆக்கிரமிப்பாளனை ஆண்மையோடு எதிர்த்து நின்றதற்கு இரண்டாம் உலக யுத்தம் முழுவதிலுமே முதல் உதாரணமாகத் திகழ்ந்தது.

மோட்லின் கோட்டைக்கான சண்டைகள் செப்டெம்பர் 30ஆம் தேதி வரை நீடித்தன, ஹேல் தீபகற்பத்தில் போலந்து வீரர்கள் அக்டோபர் 2 வரை பாதுகாத்து நின்றனர். அக்டோபர் மாதத்தின் துவக்கத்தில் போலந்தில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. மிக்ரா, மிலாவா அருகேயும் பிஸோரிலும் மோட்லின், ரதோம், வேஸ்டெர்பிளாட்டேயின் பாதுகாப்பின் போதும் வார்ஸாவின் தற்காப்பின் போதும் போலந்து இராணுவத்தினர் வீரத்தோடு எதிர்த்து நின்றாலும் போலந்தின் தோல்வியைத் தவிர்ப்பது இயலாததாகியது. போலந்து பாசிச ஜெர்மானியத் துருப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.

ஜெர்மன்-போலந்து யுத்தத்தின் போது போலந்து இராணுவம் 66,300 போர்வீரர்களைப் பறிகொடுத்தது; 1,33,700 பேர்கள் காயமடைந்தனர், சுமார் 4,20,000 பேர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பாசிச ஜெர்மானிய இராணுவம் 10,600 பேரை இழந்தது; 30,300 பேர் காயமடைந்தனர்; 3,400 பேர் தொலைந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

---

* *Historia wojskowosei polskej*, S. 473.

போலந்தின் தோல்விக்கான காரணங்கள் என்ன? முதலாவதாக, பூர்ஷ்வா-நிலவுடைமை போலந்து அரசின் பலவீனத்தைக் குறிப்பிட வேண்டும். சோவியத் யூனியனுடன் தற்காப்புக் கூட்டை செய்து கொள்ள மறுத்த இது பிற்போக்குத்தனமான உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கையைக் கடைபிடித்தது. இரண்டாவதாக, போலந் திடம் போதுமான இராணுவ-பொருளாதார உள்ளாற்றல் இல்லாத தால், இதனுல், இராணுவ-பொருளாதாரத் துறையில் பலமான பாசிச ஜெர்மனியுடன் நேருக்கு நேர் நின்று போரிட இயலவில்லை. மூன்ருவதாக, பிரிட்டன் மற்றும் பிரான்சுடன் கூட்டு சேருவதைப் பற்றிய போலந்தின் எதிர்பார்ப்புகள் கைகூடவில்லை. போலந்தின் தனிமை, போலந்து இராணுவத்தை—குறிப்பாக டாங்கிகளிலும் விமானங்களிலும்—விஞ்சி நிற்கவும் நடவடிக்கையை விரைவான வேகத்தில் செய்து முடிக்கவும் வேர்மஹ்டிற்கு உதவியது.

யுத்தக் கலையைப் பொறுத்த மட்டில் ஜெர்மானிய-போலந்து யுத்தம் ஆக்கிரமிப்பாளனின் நடவடிக்கைகளில் புதியதைக் காட்டியது: போர்வீரர்களை அணி திரட்டி நிறுத்தும் நடவடிக்கைகளை முன் கூட்டியே நிறைவேற்றுவது; முன்னதாகவே தோற்றுவிக்கப்பட்ட தரைப்படைகளின், குறிப்பாக டாங்கி மற்றும் விமானப்படைகளின் திடீர் பெருந் தாக்குதல்களின் வளர்ந்து வரும் பங்கு; தற்காப்பை முறியடிப்பதற்காகவும் ஆழத்திற்குள் ஊடுருவி செயல்படும் போது வெற்றியை வளர்ப்பதற்காகவும் எதிரியின் பெரும் படைத் திரட்டு களைச் சுற்றி வளைக்கும் தந்திரத்திற்காகவும் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட டாங்கிப் படைகளின் பெரும் வாய்ப்புகள் ஆகியன வெளிப்பட்டன.

ஜெர்மானிய-போலந்து யுத்தத்தின் விளைவுகள் போலந்து மக் களுக்கு சோகமயமானவையாக அமைந்தன. எஸ். எஸ். மற்றும் போலீஸ் தண்டனைப் படைகள் போலந்திற்குள் புகுந்தன. போலந்து அரசு முறையையும் போலந்து மக்களையும் ஒழிக்கும் ஹிட்லரின் அதிபயங்கர செயல்திட்டம் நிறைவேற்றப்படலாயிற்று. போஸ்னன், போமெரானியா, சிலேஸியா, லோட்ஸ் மாகாணங்கள் மற்றும் கேலெட்ஸ், வார்ஸா மாகாணங்களின் பகுதி ஆகியன (அவற்றின் ஜனத்தொகை 95 லட்சம் ஆகும்) ''ஜெர்மன் நிலப்பகுதிகளாக'' அறிவிக்கப்பட்டு பாசிச ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டன. எஞ்சிய நிலப்பரப்பு முழுவதும் ''ஆக்கிரமிக்கப்பட்ட போலந்து பிரதேசங் களின் ஜெனரல்-கவர்னர் மாகாணமாக'' மாற்றப்பட்டது. இது 1940ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் ''ஜெர்மன் பேரரசின் ஜெனரல்-கவர்னர் மாகாணம்'' என்று அழைக்கப்படலாயிற்று.

ஹிட்லரால் ''ஜெனரல்-கவர்னர் மாகாணத்தின்'' தலைவனுக நியமிக்கப்பட்ட போலந்து மக்களின் கொலைப்பாதகன் ஃபிரான்க்

போலந்தில் தனது நடவடிக்கையைப் பற்றி பின்வருமாறு அறிவித்தான்: ''வெற்றி பெற்ற கிழக்கத்தியப் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஆணையும் யுத்தப் பிரதேசம் என்ற வகையிலும் யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பகுதி என்ற வகையிலும் ஈவிரக்கமின்றி இப்பிரதேசத்தை அழித்து நாசப்படுத்தும் அசாதாரணக் கட்டளையும் எனக்குப் பிறப்பிக்கப்பட்டன. இந்த பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் கட்டமைவிலிருந்து நான் இடிபாடுகளை மலை போல் குவிக்க வேண்டியிருந்தது''* ஆனால் போலந்து மக்களை குலைக்க இயலவில்லை. நாட்டில் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டம் மேன்மேலும் பரவலானது.

ஜெர்மானியத் துருப்புகள் போலந்தினுள் நுழைந்ததும் இவை கிழக்கு நோக்கி விரைவாக முன்னேறியதும், சோவியத் யூனியனைத் தாக்குவதற்காக இதன் எல்லையருகே வசதியான நிலைகளைக் கைபற்ற ஹிட்லர் அரசாங்கம் முயலுகிறது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி காட்டியது. உருவாகிய நிலவரம் சோவியத் அரசாங்கத்தை விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்தது. ஜெர்மானியத் துருப்புகள் கிழக்கு நோக்கி முன்னேறுவதைத் தடுப்பதும் இவை சோவியத் எல்லைக்கு வராதிருக்குமாறு செய்வதும் அவசியமாயிருந்தது. சோவியத் மக்களால் தமது சகோதரர்களாகிய மேற்கு உக்ரேனியர்கள் மற்றும் பெலோருஷ்யர்களின் நிலையைக் கண்டு—இவர்கள் பான் போலந்தில் உரிமையற்ற தேசிய இனத்தவராக இருந்து, பின்னால் முற்றிலுமாக விதியின் கரங்களுக்கு விடப்பட்டவர்களாயிருந்தனர்—பாரா முகம் காட்ட இயலவில்லை. எனவேதான் செப்டெம்பர் 17ஆம் தேதி சோவியத் அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி செஞ்சேனை மேற்கு உக்ரேன் மற்றும் மேற்கு பெலோருஷ்யாவிற்கு விடுதலைப் பயணத்தை மேற்கொண்டது. கிழக்கு நோக்கிய பாதை ஹிட்லருக்கு அடைக்கப்பட்டது, பாசிசத் துருப்புகள் நிற்க வேண்டியதாயிற்று.

1939 அக்டோபரில் மேற்கு உக்ரேனிலும் மற்றும் மேற்கு பெலோருஷ்யாவில் பொதுமக்கள் கவுன்சில்களுக்கான ஜனநாயகத் தேர்தல்கள் நடந்தன. மக்களின் சித்தத்தை நிறைவேற்றிய பொது மக்கள் கவுன்சில்கள் மேற்கு உக்ரேனையும் மேற்கு பெலோருஷ்யாவையும் சோவியத் மக்களின் சோதரக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்திற்கு வேண்டுகோள் விடுத்தன. இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

---

* S. Piotrowski, *Dziennik Hansa Franka Warszawa,* 1957, S. 96.

2. பிரான்சின் மீதான தாக்குதல் (1940 மே 10 — ஜூன் 24)

நேச நாடுகளின் செயலின்மையும் அவற்றின் மூனிக், சோவியத் எதிர்ப்பு கொள்கையும் போலந்தை விரைவாக முறியடிக்க மட்டு மின்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தயார்படுத்தவும் ஹிட்லருக்கு உதவின. படையெடுப்பதில்லையென்ற தனது உறுதிமொழிகள் அனைத்தையும் ஹிட்லர் காலில் போட்டு மிதித்தான். 1940ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் தேதி பாசிச ஜெர்மா னியத் துருப்புகள், யுத்த அறிவிப்பின்றியே டென்மார்க் நாட்டினுள் நுழைந்தன, டென்மார்க் விரைவிலேயே ஆக்கிரமிக்கப்பட்டது. அதே நாளன்று நார்வே நாட்டிற்கு எதிரான ஜெர்மன் ஆக்கிரமிப்பு துவங்கியது. கடல் இறக்குப் படைகள் ஓஸ்லோ, அரெண்டால், கிறிஸ்தியான்சான், ஸ்டாவன்கேர், ஏகெர்சுன், பேர்கென், டிரோன் ஹேய்ம், நார்விக் ஆகிய இடங்களிலும் ஓஸ்லோ, ஸ்டாவன்கேர், மற்ற இடங்களில் இவற்றோடு கூட வான் இறக்குப் படைகளும் இறக்கப்பட்டன. தேசபக்த சக்திகளும் நார்வே இராணுவ படைப் பிரிவுகளும் எதிர்ப்பைக் காட்டினாலும் பாசிஸ்டுகள் நாட்டின் முக்கிய போர்த்தந்திர மையங்களைக் கைப்பற்றினர்.

ஏப்ரல் நடுவில் நார்வேயில் பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புகள் தரையிறங்கின. இவை நார்விக்கை திரும்பப் பிடித்தன. ஆனால் பாசிச ஆக்கிரமிப்பாளர்களை உறுதியோடு எதிர்த்து நிற்க முடி யாததால் ஜூனில் நார்வேயிலிருந்து இப்படைகள் வெளியேறின. நார்வே மக்களின் துரோகியாகிய குவீஸ்லிங்கின் தலைமையிலிருந்த ''ஐந்தாவது படை'' என்றழைக்கப்பட்ட பாசிச ஆதரவு சக்திகளின் துணையோடு பாசிச ஜெர்மானியத் துருப்புகள் இரண்டு மாதத்திற்குப் பின் நாட்டை முற்றிலுமாக ஆக்கிரமித் தன.

இவ்வாறாக போலந்திற்கு எதிரான யுத்தத்தில் நடந்ததைப் போலவே ஹிட்லரின் படைத் தலைமை திடீர் தாக்குதல், எதிரி களின் முகாமில் நிலவிய முரண்பாடுகள், இவர்களுடைய யுத்த சித்தாந்தங்களின் பாதுகாப்புத் தன்மை, யுத்தத்தை வழிநடத் தியவர்களின் பலவீனம் ஆகியவற்றைப் பயன்படுத்தி டென்மார்க், நார்வேக்கு எதிராக வெற்றிகரமாக விரைவான தாக்குதலை நடத்த முடிந்தது. இந்நாடுகளைக் கைப்பற்றியதன் விளைவாக வடக்கே—சோவியத் யூனியனின் எல்லையருகே—முக்கியப் போர்த்தந்திர தாக்கு முனைகள் பாசிச ஜெர்மனிக்குக் கிடைத்தன, ஜெர்மனி தனது கடற்படைத் தளங்களை ஏற்படுத்தும் முறையை மேம்படுத்திக் கொண்டது, டென்மார்க், நார்வேயின் பொருளாதார ஊற்று

களையும் ஸ்வீடனின் இரும்புத் தாதுவையும் பயன்படுத்தும் வாய்ப் பைப் பெற்றது.

நார்வே மீதான தாக்குதல் முடிவடையும் முன்னரே, பாசிச ஜெர்மனியின் படைத் தலைமை ''கேல்ப்'' (மஞ்சள் திட்டம்) எனும் திட்டத்தை நிறைவேற்றப் புகுந்தது. இதன்படி லுக்ஸம்பர்க், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து வழியாக பிரான்சின் மீது மின்னல் வேகத் தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் நேச நாடுகளின் படைகளை முறியடிப்பது, ஹாலந்தை யும் பெல்ஜியத்தையும் கைப்பற்றுவது, பிரான்சை யுத்தத்திலிருந்து வெளியேற்றி பாசிச ஜெர்மனிக்கு ஆதாயமான சமாதானத்தில் கையெழுத்திடும்படி பிரிட்டனைக் கட்டாயப்படுத்துவது ஆகியவை தான் பிரான்சின் மீதான தாக்குதலின் நோக்கமாகும்.

''A'' படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல் ருன்டிஷ்டேட்) 4, 12, 16வது படைகள், டாங்கிப் பிரிவு, 15வது விசேஷ டாங்கி கோர்பஸ் ஆகியவற்றைக் கொண்டு மேற்குப் போர்முனையின் மத் தியப் பகுதியில் முக்கியத் தாக்குதலைத் தொடுப்பது என்பதுதான் பிரான்சை முறியடிப்பதில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டமாகும். இந்த படைத் திரட்டில் 7 டாங்கி டிவிஷன்கள் உட்பட 45 டிவிஷன்கள் இருந்தன. கிட்டத்தட்ட 1,000 விமானங் களை உடைய 3வது விமானப் படை விண்ணிலிருந்து இந்த படைத் திரட்டிற்கு ஆதரவளித்தது. படைகளுக்குப் பின்வரும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது: பிரெஞ்சுத் துருப்புகள் டாங்கிகளை எதிர்பார்க் காத லுக்ஸம்பர்க், பெல்ஜிய அர்டேன்னி வழியாகச் சென்று செடான் மற்றும் ஸ்டேனே போர்முனையில் மாஸ் ஆற்றை அடைந்து மஜினோ எல்லைக்கோட்டோடு நேச நாட்டு முதல் படைத் தொகுதி இணையும் இடத்தருகே பிளந்து கொண்டு வெளியே வருவது. மேற்கொண்டு அராஸ், புலோன் திசையில் தாக்குதலைத் தொடர்ந்து, லா மான்ஷ் கரையருகே வந்து, பெல்ஜியத்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சுப் படைகளைச் சுற்றி வளைத்து, ''B'' படைத் தொகுதியோடு கூட்டாகச் சேர்ந்து இவற்றை ஒழித்துக் கட்டுவது. ஜெனரல் கிளேஸ்ட்டின் டாங்கிப் பிரிவும் (1,250 டாங்கிகள்) ஜெனரல் கோட்டின் டாங்கி கோர்ப சும் (542 டாங்கிகள்) இதில் முக்கியப் பங்காற்றின.

''B'' படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல் போக்) 18வது, 16வது படைகளைக் கொண்டும் 16வது விசேஷ டாங்கி கோர் பசைக் கொண்டும் (3 டாங்கி டிவிஷன்கள் உட்பட மொத்தம் 29 டிவிஷன்கள்) மேற்குப் போர்முனையின் வலது பகுதியில் துணைத் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இப்படைத் தொகுதிக்கு விண்ணி லிருந்து 2வது விமானப்படை ஆதரவளித்தது. 18வது படையின் துணை யோடு (7வது கா. டி., 1வது டா. டி., 1வது மோ. து. டி., 1வது

கு. டி.) ஹாலந்து நாட்டினுள் நுழைவது, பாராசூட் மற்றும் வான் இறக்குப் படைப் பிரிவுகளைக் கொண்டு ஹேக், ரோட்டர் டாமைக் கைப்பற்றி ஹாலந்து இராணுவத்தின் எதிர்ப்பை செய லற்றதாக்குவது எனும் கட்டளை இப்படைகளுக்கு இடப்பட்டது. ரோட்டர்டாம் பிரதேசத்தினுள் புகுந்து வான் இறக்குப் படைப் பிரிவுகளுடன் இணையுமாறு 18வது படையின் முக்கியச் சக்தி களுக்குக் கட்டளையிடப்பட்டது.

நாமூர், லியேஸ், அன்த்வேர்பன் ஆகிய கோட்டைகளைச் சுற்றி வந்து இவற்றிற்கு எதிராக தடைகளை அமைத்து "A" படைத் தொகுதி லா மான்ஷுக்கு வரும் முன் பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்பு களைக் கட்டிப் போடுவது, இதன் மூலம் நேச நாட்டு முதலாவது படைத் தொகுதியைச் சுற்றி வளைக்கும் ஆபத்தை ஏற்படுத்துவது எனும் கடமை பெல்ஜியத்திற்கு எதிராக நிறுத்தப்பட்ட 6வது படை யின் முன் (16வது விசேஷ டாங்கி கோர்பஸ் உட்பட 17 டிவிஷன்கள்) வைக்கப்பட்டது. எனவே "B" படைத் தொகுதி ஹாலந்தைக் கைப்பற்றி, பெல்ஜியத்தில் நேச நாடுகளின் துருப்புகளைக் கட்டிப் போட்ட பின் "A" படைத் தொகுதியோடு கூட்டாகச் சேர்ந்து இவற்றை ஒழித்துக் கட்டுவதில் பங்கேற்க வேண்டும்.

மேற்குப் போர்முனையின் இடது பகுதியில் ஜெனரல் லெயேபின் தலைமையின் கீழிருந்த "C" படைத் தொகுதிக்கு மஜினோ எல்லைக் கோட்டருகே பிரெஞ்சுத் துருப்புகளைக் கட்டிப் போடும் கட்டளை இடப்பட்டிருந்தது. இதன் வசம் 1வது மற்றும் 7வது படைகள்—மொத்தமாக 19 டிவிஷன்கள்—இருந்தன.

வேர்மஹ்டின் சேம இருப்பில் 42 டிவிஷன்களும் 1 பிரிகேடும் இருந்தன.

இவ்வாறாக, பிரான்சினுள் புகுவதற்காக ஹிட்லரின் படைத் தலைமை 136 டிவிஷன்கள் (10 டாங்கி டிவிஷன்கள், 7 மோட் டார் டிவிஷன்கள் உட்பட), 3,824 போர் விமானங்கள், 2,580 டாங்கிகள், 7,378 பீரங்கிகள் (75 மி. மீ. அளவும் அதற்குக் கூடுதலாகவும்) ஆகியவற்றைக் குவித்திருந்தது. இவற்றை எதிர்த்து நின்ற நேச நாட்டு இராணுவங்களின் வசம் 147 டிவிஷன்கள் (23 டாங்கி, இயந்திர மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட), சுமாராக 3,100 டாங்கிகள், 14,500க்கும் கூடுதலான பீரங்கிகள், சுமாராக 3,800 போர் விமானங்கள் முதலியவை இருந்தன. எனவே விகிதப்படி பார்த்தால், குறிப்பாக டாங்கிகளில், நேச நாட்டுத் துருப்புகள் மேலான நிலையிலிருந்தன. ஆனால் பிரெஞ்சு டாங்கிகளில் பெரும்பாலானவை தனி டாங்கி பட்டாலியன்களாக படைகளுக்கு இடையே இருந்ததால் இவற்றை அவ்வளவு பெரு மளவில் பரவலாகப் பயன்படுத்த முடியவில்லை. இது நேச நாடு

களின் மேம்பாட்டை நடைமுறையில் ஒன்றுமில்லாததாக ஆக்கியது. ஜெர்மன் டாங்கிகளோ அமைப்பு ரீதியாக டாங்கி டிவிஷன்களாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததால் அவற்றை பெருமளவில் பரவலாகப் பயன்படுத்த முடிந்தது.

இந்தச் சமரில் சக்திகளின் சமனநிலை பற்றிய பிரச்சினை நவீன பூர்ஷ்வா இலக்கியத்தில் கடுமையான விவாதத்திற்குரிய ஒரு பொருளாக இருக்கிறது. பல பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆசிரியர்கள் நேச நாட்டுத் துருப்புகளின் சக்திகளையும் சாதனங்களையும் பெரிதும் குறைவாக மதிப்பிட்டு, இவை தோற்றதற்கு எதிரியின் எண்ணிக்கை ரீதியான மேம்பாடே காரணம் என்று கூறுகின்றனர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர். உதாரணமாக, அந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களில் ஒருவரான பிரெஞ்சு ஜெனரல் காம்பியேஸ் இதைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்: ''1940ஆம் ஆண்டு பிரான்சின் தோல்வி ஒரு அசாதாரணமான சம்பவமாகும். பொதுவான சக்திகளின் சமன்நிலையைப் பார்த்தால் டாங்கிகள், பீரங்கிகளைப் பொறுத்த மட்டில் பிரெஞ்சு-பிரிட்டிஷ் படைகளுக்கு மேம்பாடு இருந்தது என்பது நமக்கு இப்போது தெரியும்; விமானப் படையில் இவற்றின் பலவீனம் இவ்வளவு விரைவான தோல்வியை முன்கூட்டியே கூறுமளவுக்கு அவ்வளவு அதிகமாக இல்லை.''*

பிரிட்டிஷ்-பிரெஞ்சுப் படைத் தலைமை, 1914இல் நடந்தபடி ஜெர்மானியத் துருப்புகள் மத்திய பெல்ஜியத்தின் வழியாக முக்கியத் தாக்குதலைத் தொடுக்கும் என்று கருதி 1வது, 2வது, 9வது பிரெஞ்சு மற்றும் 7வது பிரிட்டிஷ் பயணப் படைகளை உள்ளடக்கிய மிகப் பலம் வாய்ந்த முதலாவது படைத் தொகுதியை (தளபதி ஜெனரல் பியோ) பிரெஞ்சு-பெல்ஜிய எல்லையில் நிறுத்தியிருந்தது. இத்தொகுதியில் 3 இயந்திர டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 32 பிரெஞ்சு டிவிஷன்களும் 9 பிரிட்டிஷ் டிவிஷன்களும் இருந்தன. மஜினோ எல்லைக்கோட்டை ஆதாரமாகக் கொண்டு நிலையான நேச அணியை தோற்றுவிக்கும் கடமை இந்தப் படைத் தொகுதியின் முன் வைக்கப்பட்டது. அர்டேன்னி திசையில் பெரும் காடுகளும் கரடுமுரடான பாதைகளும் மிகுந்திருந்ததால் இதைக் கடந்து யாரும் வர முடியாது என்று கருதிய பிரெஞ்சு இராணுவம் இப்பகுதியில் குறைந்த அளவு சக்திகளை மட்டுமே—2வது மற்றும் 9வது படைகளிலிருந்து 15 டிவிஷன்களை—நிறுத்தியிருந்தது.

3வது, 4வது, 5வது பிரெஞ்சுப் படைகளை—மொத்தமாக 39 டிவிஷன்களை—உள்ளடக்கியிருந்த 2வது படைத் தொகுதி ஜெனரல்

---

* **இரண்டாவது உலக யுத்தத்தின் வரலாறு,** மாஸ்கோ, இராணுவப் பதிப்பகம், 1974, தொகுதி 3, பக்கம் 89 (ருஷ்ய மொழியில்).

பிரேட்டல் தலைமையின் கீழ் பெரும்பாலும் பிரெஞ்சு ஜெர்மன் எல்லையில் மஜினோ எல்லைக்கோட்டைப் பாதுகாத்து வந்தது.

6வது, 8வது பிரெஞ்சுப் படைகளை—மொத்தமாக 11 டிவிஷன்களை—உள்ளடக்கிய 3வது படைத் தொகுதி (தளபதி ஜெனரல் பெஸ்ஸோன் ரைனின் மேற்பகுதியிலும் ஸ்விட்சர்லாந்துடனை எல்லையிலும் தற்காப்பாக நின்றது. மூன்று படைத் தொகுதிகளும் ஜெனரல் ஜார்ஜின் தலைமையின் கீழ் வட கிழக்கு சேனையாக. ஒன்றிணைக்கப்பட்டன. 17 டிவிஷன்கள் சேம இருப்பில் இருந்தன, பிரெஞ்சு தரைப் படைகளின் தலைமைத் தளபதியாகிய ஜெனரல் காமெலேனின் பொறுப்பில் 6 டிவிஷன்கள் எஞ்சியிருந்தன.

ஹாலந்து இராணுவத்திடம் 10 டிவிஷன்களும் 124 விமானங்களும் இருந்தன. நாட்டின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களைத் தற்காத்து நிற்பது மட்டுமே இதன் கடமையாக இருந்தது. பெல்ஜிய இராணுவத்திடம் 23 டிவிஷன்களும் 410 விமானங்களும் இருந்தன. பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களை ஆதாரமாகக் கொண்டு, நேச நாட்டுத் துருப்புகள் வரும் வரை பாசிசத் துருப்புகளைத் தடுத்து நிறுத்தும் கடமை இதன் முன் வைக்கப் பட்டது.

தாக்குதலுக்காகத் தயாராகி வந்த காலகட்டத்தில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை திடீர் நடவடிக்கைகளில் இறங்குவதன் மீது பெரும் கவனம் செலுத்தியது. இந்நோக்கத்தோடு உருமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, அர்டேன்னி வழியாக புலோன் மீது முக்கியத் தாக்குதல் தொடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தாலும் இது லியேஸ் மீது தொடுக்கப்படும் என்று நேச நாட்டவரை எண்ண வைக்க முடிந்தது.

கூடிய விரைவில் மேற்கே தாக்குதலைத் தொடுக்க ஜெர்மானியர்கள் திட்டமிடுகின்றார்கள் என்பது பற்றிய விவரங்கள் நேச நாடுகளின் வேவு ஸ்தாபனங்களுக்குக் கிடைத்திருந்தாலும் தமது துருப்புகளின் யுத்த தயார் நிலையை மேம்படுத்த இவை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே ஜெர்மனியின் தாக்குதல் நேச நாட்டுத் துருப்புகள் எதிர்பாரா வண்ணமாக அமைந்தன. மே 10ஆம் தேதி அதிகாலை பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு ஹிட்லரின் அறைகூவல் வாசிக்கப்பட்டது. இதில் பிரிட்டனும், பிரான்சும் துரோகக் கொள்கையைக் கடைபிடிப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது, ''இன்று துவங்கும் சமர் அடுத்த ஆயிரமாண்டுகளுக்கு ஜெர்மன் இனத்தின் விதியை நிர்ணயிக்கும்''* என்று அறிவிக்கப் பட்டது. காலை 5 மணி 30 நிமிடத்திற்கு சுமார் 2,000 பாசிச

---

* *Dokumente zum Westfeldzug, 1940,* Gottingen, 1960, S. 3—4.

ஜெர்மானிய விமானங்கள் 70 பிரெஞ்சு, பெல்ஜிய, ஹாலந்து விமானத் தளங்களின் மீது திடீரென குண்டு மழை பொழிந்தன. ஆத்திரமூட்டும் நோக்கங்களுக்காக பாசிச விமானங்கள் ஜெர்மன் நகராகிய ஃபிரைபுர்கின் மீதும் குண்டுகளை வீசின. இந்த குண்டு வீச்சு பெல்ஜிய, ஹாலந்து விமானப்படையால் நடத்தப்பட்டதாக ஹிட்லரின் பிரச்சார இயந்திரம் குற்றஞ்சாட்டியது. அதே நேரத்தில் சுமார் 4,000 பாசிச பாராசூட் படையினர் ஹேக், ரோட்டர்டாம் பிரதேசங்களில் இறக்கப்பட்டனர். ஒரு சில விமானத் தளங்களைக் கைப்பற்றிய இவர்கள் 22,000 வான் இறக்குப் படைப் பிரிவுகள் தரையிறங்க வழி கோலினர். இது தவிர ஹிட்லரின் பாராசூட் படையினர் ஹாலந்தில் மாஸ் ஆற்றின் குறுக்கேயிருந்த மிக முக்கியப் பாலங்களை கைப்பற்றி தமது டாங்கிப் படைகள் வரும் வரை வைத்திருந்தனர், பெல்ஜியத்தில் அல்பெர்ட் கால்வாயின் குறுக்கேயிருந்த இரண்டு பாலங்களைக் கைப்பற்றி 6வது பாசிச ஜெர்மானியப் படை வடக்கேயிருந்து லியேஸைச் சுற்றி வரவும் 16வது டாங்கி கோர்பஸ் செயல்படுவதற்கான திறந்த வெளிக்கு வரவும் வகை செய்தனர்.

மே 12ஆம் தேதி 18வது ஜெர்மானியப் படையின் டாங்கி படைப் பிரிவுகள் ரோட்டர்டாம் பிரதேசத்தில் தமது வான் இறக்குப் படையுடன் இணைந்தன. இரண்டு நாட்கள் கழித்து ஹாலந்து சரணடைந்தது, இதன் இராணுவம் எதிர்ப்பை நிறுத்தியது. வில்ஹெல்மினு அரசியும் ஹாலந்து அரசாங்கமும் லண்டனுக்கு நாடு பெயர்ந்தனர்.

ஜெர்மானியர்களின் முக்கிய தாக்குதல் திசையிலும் "A" படைத் தொகுதியின் போர் நடவடிக்கைகள் வெற்றிகரமாக வளர்ந்து வந்தன. இவை அர்டேன்னியைக் கடந்து பெல்ஜியப் பரப்பின் வழியே சென்று மே 12ஆம் தேதி வாக்கில் பிரெஞ்சு நகரும் கோட்டையுமாகிய செடானைக் கைப்பற்றின. டாங்கிப் பிரிவு முன்னுல் செல்ல வலப்புறமிருந்து இதை 15வது விசேஷ டாங்கி கோர்பஸ் பாதுகாத்தபடியே துணையாகச் சென்றது. பின்னுல் காலாட்படை டிவிஷன்கள் செயல்பட்டன. ஜெனரல் கிளேஸ்டின் டாங்கிப் பிரிவு செடான் பிரதேசத்தில் 9வது பிரெஞ்சு படையின் தற்காப்பை உடைத்துக் கொண்டு, மே 13ஆம் தேதி மூன்று திசைகளில் மாஸ் ஆற்றைக் கடந்து லா மான்ஷை நோக்கி விரைந்தது. மே 20ஆம் தேதி இப்பிரிவு கரையோரத்தை அடைந்தது.

இதன் பின்னுல் 12வது படையும் வலப்புறம் 4வது படையும் இடப்புறம் 16வது படையும் சென்றன. இரண்டு நாட்களுக்குப் பின் டாங்கிப் பிரிவு புலோனையும் அடுத்த நாள் காலேயையும் கைப்பற்றியது. இதன் விளைவாய் பெல்ஜியத்திலும் வடக்கு பிரான்சி

லும் இருந்த பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புகள் தமது பின்னணி களிலிருந்து துண்டிக்கப்பட்டன. ஹிட்லர் படையினரின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி முற்றுகையை உடைக்க நேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. பின்னுல் ஹிட்லரின் பீல்ட்மார்ஷல் ரோம்மல் பின்வருமாறு கூறினுன்: ''1940ஆம் ஆண்டு பிரான்சில் எங்களுடைய 10 கவசடாங்கி டிவிஷன்கள் தாக்குதலை முடித்தன, பிரிட்டிஷ்-பிரெஞ்சு படைத் தலைமையின் செயலின்மை இந்த வெற்றியை இலகுவாக்கியது''. ஜெர்மானியத் துருப்புகளின் மிகப் பெரும் இலாடம் நேச நாடுகளின் 49 டிவிஷன்களை கரையோரத்திற்கு நெருக்கியது.

நிலைமையை மதிப்பிட்ட பிரிட்டிஷ் படைத் தலைமை தனது துருப்புகளை பிரான்சிலிருந்து வெளியேற்றுவது என்று முடிவு செய்து இவற்றை டியூன்கெர்க் துறைமுகத்தின் வழியாக வெளியேற்றத் துவங்கியது. பெல்ஜியப் படைத் தலைமையோ மே 28 நள்ளிரவு 12 மணி 20 நிமிடத்திற்கு நிபந்தனையற்ற சரணடைவு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ஆங்கிலேயர்கள் 3,38,000 போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் பிரிட்டனுக்கு அனுப்புவதில் வெற்றி பெற்றனர், இவர்களில் 2,15,000 பேர் ஆங்கிலேயர்கள், 1,23,000 பேர் பிரெஞ்சு நாட்டவரும் பெல்ஜியர்களுமாவார்கள். ஜூன் 4ஆம் தேதி காலை ஹிட்லரின் துருப்புகள் டியூன்கெர்க்கிற்குள் நுழைந்தன. நகரத்திலிருந்த 40,000 பிரெஞ்சு நாட்டவர் சிறைபிடிக்கப்பட்டனர்.

டியூன்கெர்க் தாக்குமுனைக்காக நடந்த சண்டைகளில் பிரிட்டிஷ் இராணுவத்தின் தரப்பில் 68,000 நபர்கள் கொல்லப்பட்டனர், தொலைந்து போயினர் அல்லது சிறைபிடிக்கப்பட்டனர். சுற்றி வளைக்கப்பட்ட துருப்புகளைக் காப்பாற்றுவதில் பங்கேற்ற 693 பிரிட்டிஷ் கப்பல்கள், படகுகளில் 6 நாசகாரிக் கப்பல்கள் உட்பட 224 மூழ்கடிக்கப்பட்டன. டியூன்கெர்க் பிரதேசத்தில் பிரிட்டிஷ் வான்படை 106 விமானங்களையும் ஜெர்மானிய வான்படை 140 விமானங்களையும் இழந்தன. பிரெஞ்சுக் கரையில் ஆங்கிலேயர்கள் ஏராளமான ஆயுதங்களையும் மற்றும் போர் வாகனங்களையும் விட்டுச் சென்றனர்.

பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பெரும் வெற்றியை அடைந்திருந்த போதிலும் முக்கிய லட்சியம்—ஃபிளான்டிரியாவில் பிரெஞ்சு-பிரிட்டிஷ் படைகளை ஒழிப்பது, சிறைபிடிப்பது—நிறைவேற்றப்படவில்லை. கிளேஸ்ட்டின் டாங்கிப் பிரிவை ஆ கால்வாயருகே, கரையோரத்திலிருந்து 20 கி. மீ. தொலைவில் நிறுத்துவது என்று மே 24ஆம் தேதி பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையால் எடுக்கப்பட்ட முடிவு டியூன்கெர்க்கிலிருந்து நேச நாட்டுத் துருப்புகளை

வெளியேற்றுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தது. இது ஜெர்மானியர்களின் மிகப் பெரும் செயல்முறைத் தவருக அமைந்தது. அபகீர்த்தி படைத்த ''நின்றுவிடும் கட்டளையை'' பிறப்பிக்க ஹிட்லரைத் தூண்டிய காரணங்கள் பூர்ஷ்வா வரலாற்ருசிரியர்களால் பெரிதும் முரண்பாடான விதங்களில் வியாக்கியானப்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம் அரசியல் நோக்கமாகத்தான் இருந்தது. பிரான்சை முறியடித்து யுத்தத்திலிருந்து வெளியேற்றவும் பிரிட்டனுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும் பாசிஸ்டுகள் முயன்றனர். 1940ஆம் ஆண்டு மே 21இல் கால்டர் தன் நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினான்: ''...பிரதான எதிரி... எங்களுக்கு—பிரான்ஸ். உலகில் செல்வாக்கு மண்டலங்களை பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் நாங்கள் பிரிட்டனுடன் உடன்படிக்கையைத் தேடுகின்றோம்.''*

ருன்டிஷ்டேட் பின்னால் பின்வருமாறு குறிப்பிட்டான்: ''எனது விருப்பப்படி இயங்க என்னை அனுமதித்திருந்தால், ஆங்கிலேயர்கள் டியூன்கொர்க்கிலிருந்து அவ்வளவு எளிதாக சென்றிருக்க மாட்டார்கள். ஆனால் ஹிட்லரின் தனிப்பட்ட கட்டளையால் எனது கரங்கள் கட்டப்பட்டிருந்தன. கரையோரத்திலிருந்த கப்பல்களில் ஆங்கிலேயர்கள் ஏறிக் கொண்டிருந்த போது துறைமுகத்தின் அருகே திரிந்து கொண்டிருந்த என்னால் விரலைக் கூட அசைக்க முடியவில்லை. என்னுடைய 5 டாங்கி டிவிஷன்களை உடனடியாக நகரத்திற்கு அனுப்பி பின்வாங்கும் ஆங்கிலேயர்களை ஒழித்துக் கட்டுமாறு நான் உயர் படைத் தலைமைக்கு சிபாரிசு செய்தேன். ஆனால் இதற்குப் பதிலாக ஹிட்லரின் கண்டிப்பான கட்டளை வந்தது. இதன்படி எந்த ஒரு சூழ்நிலையிலும் முன்னேறி தாக்க எனக்கு உரிமையில்லையெனத் தெரிவிக்கப்பட்டது; 10 கி. மீ.க்கு குறைவாக நகரத்தை நெருங்குவது எனக்கு தடை செய்யப்பட்டது... நகரத்திலிருந்து இந்த தூரத்தில் நான் நின்று, ஆங்கிலேயர்கள் எப்படி பின்வாங்குகின்றார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன், எனது டாங்கிகளுக்கும் காலாட்படையினருக்கும் இடத்தை விட்டு அசைவது தடை செய்யப்பட்டிருந்தது.''**

பிரெஞ்சு படைத் தலைமை ஏனு, சோமா ஆறுகளின் ஓரமாக லா மான்ஷ் வரை மஜினோ எல்லைக்கோட்டிலிருந்து புதிய போர்முனையைத் தோற்றுவித்தது. அவசர அவசரமாக 43 டிவிஷன்கள் இதில் இடம் பெற்றன. மஜினோ கோட்டில் பிரெஞ்சு இராணுவம் 17

* கால்டர், யுத்த நாட்குறிப்பு (ஜெர்மன் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது), தொகுதி 1, மாஸ்கோ, 1968, பக்கம் 412.

** Milton Shulman, *Defeat in the West*, London, 1947, pp. 42—43.

டிவிஷன்களை விட்டு வைத்தது. சேம இருப்பில் இதனிடம் 3 குதிரைப்படை டிவிஷன்கள் இருந்தன.

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை நிலவரத்தை மதிப்பிட்டு தனது சக்திகளை விரைவாக இடம் மாற்றி ''ரோத்'' எனும் தாக்குதல் நடவடிக்கையைத் துவக்கியது. இதில் 10 டாங்கி மற்றும் 6 மோட்டார் டிவிஷன்கள் உட்பட 140 டிவிஷன்கள் கலந்து கொண்டன. பிரெஞ்சு இராணுவத்தை முற்றிலுமாக முறியடித்து பிரான்சை யுத்தத்திலிருந்து வெளியேற்றுவதுதான் இந்நடவடிக்கையின் நோக்கம்.

ஜூன் 5ஆம் தேதி அதிகாலையில் பாசிச விமானப்படை சோமா ஆற்றில் பிரெஞ்சு தற்காப்பு நிலைகளை பலத்த குண்டு வீச்சுக்கு உள்ளாக்கியது. மேற்கேயிருந்து பாரிசைச் சுற்றி வரும் பொருட்டு கடலுக்கும் அம்யேனுக்கும் நடுவில் "B" படைத் தொகுதியின் துருப்புகள் (4வது, 6வது படைகள்) ஆற்றைக் கடந்தன; மஜினோ எல்லைக்கோட்டை பின்னணியிலிருந்து சுற்றி வரும் பொருட்டு ஜூன் 9ஆம் தேதி அதிகாலையில் ''A'' படைத் தொகுதியின் துருப்புகள் (9வது, 2வது, 12வது மற்றும் 16வது படைகள்) சுவாசோனுக்குக் கிழக்கே ஏனு ஆற்றைக் கடந்தன. அவசர அவசரமாக பிரான்சால் தோற்றுவிக்கப்பட்ட பாதுகாப்புப் போர்முனையை உடைத்த பாசிச ஜெர்மானியத் துருப்புகள், நடைமுறையில் பிரெஞ்சுத் துருப்புகளின் எதிர்ப்பைச் சந்திக்காததால் இவற்றை பின்னாலிருந்து துரத்த ஆரம்பித்தன.

பிரெஞ்சுப் போர்வீரர்கள், தமது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக வீரத்தோடு போரிட்டனர். ஆனால் உயர் மட்டத்தின் துரோகங்களும் படைத் தலைமையின் செயலின்மையும் ஆயுதங்கள் மற்றும் போர்த் தளவாடங்கள் இல்லாமையும் போரின் போக்கைப் பாதித்தன. ஜெர்மானியத் துருப்புகள் மீண்டும் போர்முனையைப் பிளந்து கொண்டு மேற்கு நோக்கிப் பாய்ந்து சென்றன.

பிரான்சின் சுதந்திரத்தை எதிர்நோக்கியிருந்த அபாயமானது எல்லா தேசபக்த சக்திகளின், மக்கள் அனைவரின் ஒற்றுமையை, ஒருங்கிணைப்பைக் கோரியது. ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக பொது மக்கள் எதிர்ப்பைக் காட்டுமாறும் பாரிஸ் நகரின் தற்காப்பிற்கு ஏற்பாடு செய்யுமாறும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவல் விடுத்தது. ஆனால் சரணடைவாளர்களும் பிரெஞ்சு மக்களின் துரோகிகளும் — ரேய்னோ, பெட்டேன், லவால் போன்ற அரசியல் பிரமுகர்களும் ஜெனரல் காமெலேனை மாற்றிய தலைமை படைத் தளபதி வைகான் தலைமையில் மற்றவர்களும் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் போராட்டத்தைத் துவக்கும் என்றும் பிரெஞ்சு மக்களின் மத்தியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு அதிகரிக்கும் என்றும்

அஞ்சி, இவையனைத்தையும் மறுத்தனர். பிரெஞ்சு அரசாங்கம் பாரிசை விட்டு வெளியேறி தூருக்கு ஓடிப் போயிற்று, இராணுவமோ எதிர்ப்பைக் காட்டுவதற்கான தனது வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தாமலேயே ஆயுதங்களைக் கீழே போட்டது. ஜூன் 14ஆம் தேதி பாசிச ஜெர்மானியத் துருப்புகள் எதிர்ப்பைச் சந்திக்காது பாரிசினுள் நுழைந்தன. பெரும் நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. ஜனத் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர் நகரத்தை விட்டு வெளியேறி இருந்தனர். ஹிட்லர் ஆக்கிரமிப்பைக் கண்டு அஞ்சி கிராமங்கள், நகரங்களிலிருந்து மக்கள் வெள்ளம் எல்லா பாதைகளிலும் நாட்டின் தென் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

பிரிட்டன் மற்றும் பிரான்சுக்கு எதிராக யுத்தத்தில் இறங்குவதென இத்தாலி 1940ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் தேதி முடிவு செய்தது. பிரான்ஸ் முழுத் தோல்வியடையும் தருவாயில் இருக்கிறது என்பதைக் கண்ட முஸ்ஸோலீனி இரையில் பங்கு கேட்பதில் தான் தாமதப்பட்டு விடக்கூடாதே என்று அஞ்சினான். "...யுத்தத்தில் பங்கேற்றவன் என்ற வகையில் சமாதான மகாநாட்டு மேசையில் உட்கார எனக்கு ஒரு சில ஆயிரம் இறந்தவர்கள் மட்டும் போதும்"* என்று முஸ்ஸோலீனி நயவஞ்சகத்தோடு இத்தாலிய இராணுவத்தின் தலைமை படைத் தளபதி மார்ஷல் படோல்யோவிடம் கூறினான். ஆனால் இத்தாலிக்கும் பிரான்சுக்கும் இடையிலான இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பத்தில் மட்டானவையாகத்தான் இருந்தன. ஜூன் 20ஆம் தேதி ஆல்ப்ஸ் மலைகளில் பிரெஞ்சுத் துருப்புகளுக்கு எதிராக இத்தாலியத் துருப்புகள் பொதுத் தாக்குதலைத் தொடுத்த போது இவை பலமான பீரங்கி குண்டு வீச்சுக்கு உள்ளாயின, தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. போர்முனையின் தென் பகுதியில் மென்டோனு பிரதேசத்தில் மட்டும் தான் இவை ஓரளவு முன்னேற முடிந்தது. சமரசத்தைப் பற்றிய பேச்சுவார்த்தைகள் துவங்கும் போது பிரான்சின் கணிசமான பரப்பைத் தன்னால் கைப்பற்ற முடியாது என்று அஞ்சிய முஸ்ஸோலீனி, லியோன் பிரதேசத்தில் வான் இறக்குப் படையைத் தயார்படுத்துமாறும் ரோனு ஆறு வரை பிரெஞ்சு பரப்பைப் கைப்பற்ற முயலுமாறும் கட்டளையிட்டான். ஆனால் முஸ்ஸோலீனியின் திட்டத்தை ஹிட்லர் ஆதரிக்கவில்லை, இந்த "நடவடிக்கை" நிறைவேற்றப்படவில்லை.

சரணடையும் உடன்படிக்கை கையெழுத்தானதுடன் பிரான்சில் இராணுவ நடவடிக்கைகள் 1940ஆம் ஆண்டு ஜூன் 22ஆம்

* H. Azeau, *La guerre franco-italiana. Juine 1940,* Paris, 1967, p. 41.



1940ஆம் ஆண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மீது பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் படையெடுப்பு

தேதி முடிவடைந்தன. 1918ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி பிரெஞ்சு தலைமைத் தளபதி மார்ஷல் ஃபோஷ் எந்த பெட்டியில் கம்பியேன் காட்டில் காய்ஸர் ஜெர்மனியின் சரணகதியை ஏற்றாரோ அதே பெட்டியில் பெட்டேன் ''அரசாங்கம்'' சரணகதி உடன்படிக் கையில் கையெழுத்திட்டது.

சரணகதி உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி பிரெஞ்சு பரப்பு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது: வடக்கு மற்றும் மத் தியப் பகுதிகளில் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பு ஆட்சி நிறுவப் பட்டது, தென் பகுதியில் ஹிட்லர் ஜெர்மனியின் பொம்மையாக தேசிய விரோத பெட்டேன் ஆட்சி நிலைநாட்டப்பட்டது—இது தான் விஷி அரசாங்கம் என்றழைக்கப்பட்டது. இவ்வாறாக பிரான் சின் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு ஜெர்மானியர்களால் ஆக் கிரமிக்கப்பட்டது, எஞ்சிய பகுதியில் ஜெர்மனியைச் சார்ந்திருந்த பெட்டேன் அரசாங்கம் ஆட்சி செய்தது.

இரண்டு நாட்கள் கழித்து பிரான்சிற்கும் இத்தாலிக்கும் இடையே சமரச உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கை யின்படி இத்தாலி, 28,500 மக்கட் தொகையுடைய 832 ச. கி. மீ. பிரெஞ்சு பரப்பை ஆக்கிரமித்தது. இதுதவிர இத்தாலி-பிரெஞ்சு எல்லையில் 50 கி. மீ. தூரம் உட்பகுதி வரை எல்லைப்புற அரண் களை பிரான்ஸ் படைக் கலைப்பிற்கு உள்ளாக்க வேண்டும், துலோன், பிஸேர்டா, அயாச்சோ, ஒரான் துறைமுகங்களில், அல்ஜீரியா, துனீஷியா மற்றும் பிரெஞ்சு சோமாலியாவின் கரை ஆகியவற்றின் குறிப்பிட்ட பிரதேசங்களின் இராணுவத் தன்மையை அகற்ற வேண்டும்.

பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் இவர்களின் கையாட்களுக்கு எதிரான நாட்டின் விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துவதற்காக 1940ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் லண்டனில் ஜெனரல் ஷார்ல் டெ கோலின் தலைமையில் ''சுதந்திர பிரான்ஸ்'' (1942 ஜூலை முதல் ''போரிடும் பிரான்ஸ் கமிட்டி'') எனும் தேசபக்த ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. அதே நேரத் தில் பிரான்சில் எதிர்ப்பு இயக்கம் வளர்ந்து வந்தது.

1941ஆம் ஆண்டு மே மாதம் பிரான்சில் பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்மொழிவின் பேரில் வெகுஜன தேசபக்த ஸ்தாபனம், அதாவது தேசிய முன்னணியும் இதன் இராணுவமாகிய பிரன்திரி யோர் அணிகளும் கொரில்லாப் படையும் தோற்றுவிக்கப்படலாயின.

1941ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் தேதி சோவியத் அர சாங்கம் டெ கோலை சுதந்திர பிரெஞ்சு நாட்டவரின் தலைவராக அதிகாரபூர்வமாக அங்கீகரித்தது.

பிரான்சினுடைய தோல்விக்கான காரணங்கள் யாவை? இப்பிரச்

சினை இன்று வரை பத்திரிகையின் பக்கங்களிலிருந்து அகலவில்லை.

முதலாவதாக, பிரான்சின் அன்றையத் தலைவர்கள் தேசிய விரோதக் கொள்கையைக் கடைபிடித்தனர். இவர்கள் சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்க மறுத்து இதற்குப் பதிலாக மூனிக் கொள்கையைப் பின்பற்றினர், அதாவது 1935ஆம் ஆண்டு மே 2இல் பரஸ்பர உதவி பற்றி செய்து கொள்ளப்பட்ட பிரெஞ்சு-சோவியத் ஒப்பந்தத்தை ரத்து செய்தனர். இரண்டாவதாக, புரட்சியை எதிர்பார்த்து அஞ்சிய பிரெஞ்சு ஆளும் வட்டங்கள் ஜெர்மானிய பாசிசத்திற்கு எதிரான பிரெஞ்சு மக்களின் உறுதியான போராட்டத்தை ஆதரிக்காது ஹிட்லரின் ஜெர்மனியின் முன் அவசரப்பட்டு சரணடைந்தனர். பாரிஸ் கம்யூனின் 70ஆம் ஆண்டு விழாவன்று பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களாகிய மொரீஸ் டொரேசும் ஜாக் டியுக்ளோவும் தலைமறைவாக வந்து கொண்டிருந்த "யுமனிட்டே" பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்கள்: "தொழிலாளி வர்க்கத்தின் முன்னிருந்த பீதிதான் 1871ஆம் ஆண்டு முதலாளிகளை பிஸ்மார்க்கின் அரவணைப்பை நோக்கி ஓடுமாறு செய்தது. பிரெஞ்சு மக்களின் முன்னிருந்த இதே பீதிதான் 1940ஆம் ஆண்டு பிரான்சின் ஆளும் வட்டங்களை ஹிட்லரின் அரவணைப்பை நோக்கி ஓடச் செய்தது."*

மூன்றாவதாக, நவீன யுத்தத்தை நடத்த நேச நாட்டு இராணுவங்கள் தயாராயில்லாதது. முதல் உலக யுத்த அனுபவத்தைக் கண்மூடித்தனமாக நம்பிய பிரெஞ்சு இராணுவத்தினர் முன்கூட்டியே உருவாக்கப்பட்ட தற்காப்பை உடைக்க முடியாது என்று நம்பினர். எனவேதான் ஜெர்மானியர்களிடம் இருந்ததைப் போன்று பரந்த அளவில் பயன்படுத்தவும் மிக விரைவாக செயல்முறை நடவடிக்கைகளை நிறைவேற்றவும் பெரும் மொபைல் படை (முதலாவதாக டாங்கிப் படை) அமைப்புகளும் விமானப்படை மற்றும் வான் இறக்குப் படை யூனிட்டுகளும் உருவாக்கப்படவில்லை.

மேலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பிரதான தாக்குதல் திசையை பிரிட்டிஷ்-பிரெஞ்சுப் படைத் தலைமை தவறாகக் கணித்து, சிக்கலான சூழ்நிலையில் நேச நாட்டுத் துருப்புகளை வழி நடத்துவதில் திறமையின்மையையும் செயலின்மையையும் வெளிப்படுத்தியது. இராணுவத்தின் தோல்விக்கான காரணங்களைப் பற்றி இராணுவ அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் ஜெனரல் காமெலேன் 1940ஆம் ஆண்டு மே 18ஆம் தேதி பின்வருமாறு எழுதினான்: "ஜெர்மானிய டாங்கி டிவிஷன்கள் வந்ததும் பரவலான போர்முனையில் தற்காப்பை உடைத்துக் கொண்டு முன்னேறும் இவற்றின் எதிர்பாரா திறமையும்தான் இந்நாட்களில் முக்கிய போர்த்தந்திர அம்சமாக

* M. Thorez, *Oeuvres*, 1, v.t. XIX, p. 82.

விளங்கியது. ஜெர்மானியர்கள் பரந்த அளவில் டாங்கிகளைப் பயன் படுத்தியதானது பிளவை மூடி மறைப்பதற்கான எல்லா முயற்சி களையும் செயலற்றதாக்கியது, எதிரியைத் தடுத்து நிறுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட சங்கிலித் தொடர்களை ஒவ்வொரு முறையும் முறித்தது. இயந்திரப் படை பிரிவுகளும் யூனிட்டுகளும் போதுமான அளவில் இல்லாததால் தற்காப்பு நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்ற இயலவில்லை.'' *

இந்தத் தாக்குதலின் போது பிரெஞ்சு இராணுவம் 84,000 பேர்களைப் பறிகொடுத்தது, 15,47,000 பேர்கள் சிறைபிடிக்கப் பட்டனர். பாசிச ஜெர்மானியத் துருப்புகளில் 45,500 பேர்கள் மாண்டனர் அல்லது தொலைந்தவர்களாகக் கருதப்பட்டனர், 1,11,000க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். ** பிரதான தாக்குதல் தொடுக்கும் திசையை சரியாகத் தேர்ந்தெடுத்தது, பிரெஞ்சு தாக்குதலுக்கு மிக நன்றாக தயாரானது, திடீரெனத் தாக்கியது மற்றும் டாங்கிகளையும் விமானப்படையையும் பரந்த அளவில் பயன்படுத்தியது ஆகியன பாசிச ஜெர்மானியத் துருப்பு களின் வெற்றிக்கு வழிகோலின.

1940ஆம் ஆண்டு நேச நாடுகள் தோல்வியடைந்ததற்கு போது மான இராணுவத் தலைமையின்மை, தற்காப்பிற்கு ஏற்பாடு செய் வதில் காட்டிய அலட்சியப் போக்கு, அரசாங்கங்களிலும் சமுதாயத் திலும் நிலவிய லஞ்சம் ஆகியவை மட்டுமே காரணங்கள் என்று நம் நாட்களில் பல மேலைய வரலாற்றாசிரியர்கள் கூற முயலுகின்றனர். ஆனால் உண்மையில் 1940ஆம் ஆண்டு ஜூனில் பிரிட்டிஷ்-பிரெஞ்சுக் கூட்டணி தோல்வியடைந்ததற்கான முக்கியக் காரணம் மேலைய வல்லரசுகளின் ஆளும் வட்டங்கள் கடைபிடித்த சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு, மக்கள் விரோதக் கொள்கையில் அடங்கியிருந்தது. ஆக்கிரமிப்பாளனுக்கு எதிரான உறுதியற்ற போராட்டம், கெஞ்சுதல், மற்ற அரசுகளைப் பலியிட்டு சச்சரவைத் தீர்க்கும் முயற்சிகள் ஆகியவற்றைப் போல் வேறு எதுவும் ஆக் கிரமிப்பாளனை ஊக்குவிப்பதில்லையென வரலாறு காட்டுகிறது.

3. பிரிட்டன் மற்றும் அட்லாண்டிக்கிற்கான சமர் (1940 ஆகஸ்டு 12 — 1941 ஜூன்)

பிரான்சின் தோல்வியை அடுத்து அபாயம் கிரேட் பிரிட்டனை நெருங்கியது. உருவாகிய நிலவரமானது ஆளும் வட்டங்களிலிருந்து

---

* M. Gameline, *Servir*, t. 3, p. 424.

** திப்பல்ஸ்கீர்ஷ், இரண்டாவது உலக யுத்தத்தின் வரலாறு. ஜெர்மன் மொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1956, பக்கம் 93.

மூனிக் சரணடைவாளர்கள் தனிமைப்பட்டுப் போகவும் பிரிட்டிஷ் மக்கள் சக்தி அணி திரளவும் துணை புரிந்தது. 1940ஆம் ஆண்டு மே 10ஆம் தேதி சேம்பர்லேனின் அரசாங்கம் வீழ்ந்து வி. சர்ச்சிலின் அரசாங்கம் பதவிக்கு வந்தது. இது முன்னிருந்ததை விட அதிக செயல் வன்மையுள்ள தற்காப்பிற்கு ஏற்பாடு செய்வதில் இறங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசாங்கமும் தனது வெளி நாட்டுக் கொள்கையைப் படிப்படியாக மறுபரிசிலனை செய்ய ஆரம்பித்தது. 1941ஆம் ஆண்டு வசந்த காலத்தில் இது கிரீன்லாந்திற்குள்ளும் கோடையில் ஐஸ்லாந்திற்குள்ளும் தன் துருப்புகளை அனுப்பி அங்கே இராணுவத் தளங்களைத் தோற்றுவித்தது.

1940ஆம் ஆண்டு ஜூலை 16இல் ஹிட்லர் கிரேட் பிரிட்டனின் மீது படையெடுப்பது பற்றிய கட்டளையில் கையெழுத்திட்டான். இது ''கடல் சிங்கம்'' என்ற புனைப் பெயரைப் பெற்றது. பிரிட்டனை படையெடுப்பு அச்சத்தின் கீழ் வைத்திருப்பதும், அதே நேரத்தில் சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்காகத் துவங்கிய தயாரிப்புகளை மூடி மறைப்பதும்தான்—இதுதான் முக்கியமானது—இத்திட்டத்தின் சாரமாகும். ஆகஸ்டு மாத நடுவில் பிரிட்டிஷ் நகரங்களின் மீது பாசிச ஜெர்மானிய விமானப்படையின் பரந்த அளவு குண்டு வீச்சுகள் துவங்கின, இது 1941ஆம் ஆண்டு மே 11 வரை நீடித்தது. அதே நேரத்தில் அட்லாண்டிக்கில் இருந்த ஹிட்லரின் கடற்படைச் சக்திகளின் நடவடிக்கைகள் அதிகரித்தன. ஆனால் சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்காக மிகப் பெரும் அளவில் துவங்கிய தயாரிப்பு, பிரிட்டனுள் நுழைவதைப் பற்றிய சிந்தனையிலிருந்து ஹிட்லர் தலைமையின் கவனத்தை இறுதியாகத் திசை திருப்பியது. மேலும் ஜெர்மனி; இத்தாலி மற்றும் ஜப்பானின் கூட்டு பலப்படுவதானது சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்போடு மிக நெருக்கமாகத் தொடர்புடையதாயிருந்தது; இது 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் தேதி கையொப்பமான பெர்லின் உடன்படிக்கையில் வெளிப்பட்டது.

பிரிட்டனுக்காக நடந்த சமரை நிபந்தனையோடு 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (1940ஆம் ஆண்டு ஆகஸ்டு 13—செப்டெம்பர் 6) வானில் ஆதிக்கம் பெற ஹிட்லரின் படைத் தலைமை முயற்சித்தது. பிரிட்டிஷ் விமானப்படையின் விமானத் தளங்களின் மீது ஏராளமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதற்கும் (நாளொன்றுக்கு 1,000—1,800 விமானத் தாக்குதல்கள்) விண்ணில் நடைபெற்ற கடும் சண்டைகளுக்கும் இதுதான் காரணம்.

இரண்டாவது கட்டத்தின் (1940 செப்டெம்பர் 7—நவம்பர் 13) முக்கிய அம்சம் லண்டனும் பிரிட்டனின் மற்ற நகரங்களும் குண்டு வீச்சுகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகும். மக்களை அச்சுறுத்தி

அவர்களின் தார்மீக பலத்தைக் குலைப்பதுதான் இதன் நோக்க மாகும். செப்டெம்பர் 7ஆம் தேதி ஜெர்மானிய குண்டுவீச்சு விமானங்கள் இரவு 8 மணி முதல் காலை 7 மணி வரை லண்டனை இடைவிடாது தாக்கி 300டன் கன வெடி குண்டுகளையும் 13,000 எரி குண்டுகளையும் வீசின. நகரின் விமான எதிர்ப்பு தற்காப்பு பலவீனமாயிருந்ததால் ஜெர்மானியர்கள் பல கட்டிடங்களை நாச மாக்கினர். இதற்குப் பின் லண்டனின் மீதான விமானத் தாக்கு தல்கள் திரும்பத் திரும்ப நடக்கலாயின. ஆனால் ஜெர்மானிய விமானப்படை, விமானத் தளங்களின் மீதான தாக்குதல்களிலிருந்து லண்டனின் மீதான குண்டு வீச்சிற்குத் தன் சக்திகளைத் திருப்பி யதால், தன் குண்டு வீச்சு விமானங்களின் இழப்பை ஈடு செய்து மேற்கொண்டு ஹிட்லர் துருப்புகளுக்குத் தரும் எதிர்ப்பைப் பலப் படுத்த ஆங்கிலேயர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. செப்டெம்பர் 15ஆம் தேதி இரவில் லண்டன் மீது நடந்த குண்டு வீச்சில் 1,000க்கும் அதிகமான பாசிச விமானங்கள் கலந்து கொண்டன. நகரின் மேலே கடும் வான் சண்டை மூண்டது. பிரிட்டனின் தலைநகருக்கு கொண்டு வரப்பட்ட குண்டு வீச்சு விமானப்படையும் விமான எதிர்ப்பு பீரங்கிகளும் பாசிச பிணந் தின்னி கழுகுகளுக்கு பலத்த எதிர்ப் பைக் காட்டின. இதன் விளைவாய் ஜெர்மானியர்கள் 60 விமானங் களையும் ஆங்கிலேயர்கள் 26 விமானங்களையும் இழந்தனர்.[*] இதை யடுத்து லண்டனின் மீதான குண்டு வீச்சின் வேகங்கள் குறைய ஆரம்பித்தன. ஆங்கிலேயர்களின் தார்மீக பலம் உடைக்கப்பட வில்லை.

மூன்றாவது கட்டத்தில் (1940 நவம்பர் நடுப்பகுதி முதல் 1941 மே வரை) பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை தனது விமானப் படையின் நடைமுறைத் தந்திரத்தை மாற்றிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. இது தனது பகல் நேர விமானத் தாக்கு தல்களை பெரிதும் குறைத்துக் கொண்டு இரவு நேரத் தாக்குதல் களை அதிகப்படுத்தியது; அதிலும் பர்மிங்காம், லிவர்பூல், பிரிஸ் டோல், கோவென்டிரி போன்ற நாட்டின் முக்கியத் தொழிற்துறை மையங்களைத் தாக்கத் துவங்கியது. லண்டனின் மீதான குண்டு வீச்சுகளும் முறையாகத் தொடர்ந்தன. பிரிட்டிஷ் தொழிற்துறை யின் இயக்கத்தைச் சீர்குலைப்பதுதான் இந்தக் குண்டு வீச்சுகளின் நோக்கமாகும்.

மொத்தமாக பிரிட்டனுக்காக நடந்த சமரில் பாசிச ஜெர்மா னிய விமானப்படை 46,000க்கும் மேற்பட்ட விமானத் தாக்குதல்

---

[*] ஜா. பட்லர், பெரும் போர்த்தந்திரம். 1939 செப்டெம்பர் — 1941 ஜூன், மாஸ்கோ, 1955, பக்கம் 275 (ருஷ்ய மொழியில்).

களைத் தொடுத்து பிரிட்டனின் மீது சுமார் 60,000 டன் குண்டு களை வீசியது, 1,700க்கும் கூடுதலான விமானங்களைப் பறி கொடுத்தது. ஆங்கிலேயர்கள் 915 விமானங்களையும் 500க்கும் அதிக மான விமானிகளையும் இழந்தனர். இக்குண்டு வீச்சுகளினால் ஒன்று மறியா சாதாரண மக்கள் — 86,000க்கும் அதிகமானோர் — பாதிக்கப் பட்டனர்; இவர்களில் சுமார் 40,000 பேர் உயிரிழந்தனர். 10 லட்சத்திற்கும் மேலான கட்டிடங்கள் பழுதடைந்தன, பல நகரங் கள் பேரழிவுக்குள்ளாயின.

ஆனால் பாசிச ஜெர்மனியின் முக்கிய நோக்கம் — பிரிட்டனை யுத்தத்திலிருந்து வெளியேற்றுவது — நிறைவேறவில்லை. பிரிட்டனின் தொழிற்துறை விசேஷமாக பாதிக்கப்படவில்லை, இது ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தைத் தொடர்ந்தது. அக்காலகட்டத்தில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயார்படுத்திக் கொள்வது தான் ஹிட்லரின் முக்கியக் கடமையாக இருந்ததும் இதனால் ஜெர் மானியர்கள் நன்கு சண்டை போடக் கூடிய விமானப்படைப் பிரிவு களை மேற்கேயிருந்து கிழக்கே கொண்டு வந்ததும் ஆங்கிலேயர் களின் வெற்றிக்கு துணை செய்தன. சோவியத் யூனியனை முறியடிப் பது அவசியம், இதற்குப் பின் உலக ஆதிக்கத்தை வெல்லுவது சம்பந்தமான மற்ற திட்டங்களை நிறைவேற்றுவது என்று ஹிட்லர் முடிவு செய்தான். இது பற்றி ஜெனரல் கால்டர் தனது நாட்குறிப் பில் பின்வருமாறு எழுதினான். 1940ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் தேதி இரண்டு பிரச்சினைகள் — பிரிட்டிஷ் பிரச்சினையும் கிழக்கத்தியப் பிரச் சினையும் — முன் நிற்கின்றன என்று அவன் குறிப்பிட்டான். சோவியத் யூனியனின் மீது படையெடுப்பது பற்றிய திட்டம் ஜூலை 31ஆம் தேதி ஹிட்லரின் படைத் தலைமையகத்தில் உடனடிக் கடமையாக விவாதிக்கப்பட்டது. ''ருஷ்யா முறியடிக்கப்பட்டால் பிரிட்டன் தனது கடைசி நம்பிக்கையை இழந்து விடும்''* என்று பாசிச ஜெர்மானியத் தலைமை முடிவு செய்தது. எனவே பிரிட்டனின் எதிர்காலம் கிழக்கு நோக்கிய படையெடுப்பின் விளைவுகளைச் சார்ந் திருக்குமாறு செய்யப்பட்டது. அதே நாளன்று, ஜூலை 31ஆம் தேதி கால்டர் எழுதினான்: ''முகமூடி: ஸ்பெயின், வடக்கு ஆப் பிரிக்கா, பிரிட்டன்''.**

யுத்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் ஜெர்மானிய விமானப் படையின் குண்டு வீச்சுகள் தமது லட்சியத்தை நிறைவேற்ற இயலாமல் போனதற்கு முக்கியக் காரணம் ஆங்கிலேயர்கள் எதிரியின் விமானத் தாக்குதல்களை முறியடிக்கும் முறைகளைப்

* ஃபெ. கால்டர், யுத்த நாட்குறிப்பு, தொகுதி 2, பக்கம் 81.
** அதே நூல், பக்கம் 82.

படிப்படியாகக் கற்றுக் கொண்டதுதான். வானொலி கண்டுபிடிப்புச் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதானது இதில் அவர்களுக்கு விசேஷ உதவி புரிந்தது. 1940ஆம் ஆண்டிலேயே இது பிரிட்டனின் வான் எதிர்ப்பு தற்காப்பில் பயன்படுத்தப்பட்டது.

அட்லாண்டிக்கிற்கான சமர் *(1939 செப்டெம்பர் — 1941 ஜூன்).* காலனிகளிலிருந்து பிரிட்டனுக்கு வந்து கொண்டிருந்த சப்ளையைக் குலைத்து இதை முற்றுகையால் நசுக்குவதுதான் இதன் நோக்கம். இச்சமரின் சிறப்பு அம்சம் என்னவெனில் முதலில் இரு தரப்புகளிலுமே சமுத்திர போக்குவரத்து மார்க்கங்களில் குறைவான சக்திகள்தான் செயல்பட்டன. ஆனால் இந்தச் சூழ்நிலைகளிலும் நீர்மூழ்கிக் கப்பற்படைக்கு எதிரான பிரிட்டிஷ் தற்காப்பு முறை பலவீனமாக இருந்ததால் பாசிச ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் நன்றாகப் பயன்படுத்தப்பட்டன.

1940ஆம் ஆண்டு இரண்டாம் பாதியிலிருந்து ஹிட்லரின் படைத் தலைமை அட்லாண்டிக்கில் தனது சக்திகளை அதிகப்படுத்தியது: நீர்மூழ்கிக் கப்பல்கள், சாதாரணக் கப்பல்களைத் தவிர விமானப்படையும் செயல்படத் துவங்கியது. இது பிரிட்டிஷ் கப்பற்படைக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தியது.

மொத்தமாக 1939 செப்டெம்பர் முதல் 1941 ஜூன் வரை அட்லாண்டிக்கிற்கான சமரின் போது நேச நாடுகள் மற்றும் நடுநிலை நாடுகளைச் சேர்ந்த 7.6 மில்லியன் டன் மொத்த எடையுடைய போக்குவரத்து மற்றும் போர்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இவற்றில் 53,4 சதவிகிதத்தை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களும் 18,7 சதவிகிதத்தை விமானப்படையும் 12 சதவிகிதத்தை சாதாரணக் கப்பல்களும் மூழ்கடித்தன. இக்காலகட்டத்தில் ஹிட்லர் ஜெர்மனி 43 நீர்மூழ்கிக் கப்பல்களை இழந்தது.

இவ்வாறாக கிரேட் பிரிட்டனின் முன் அதன் வர்த்தகக் கப்பல்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு கப்பல் போக்குவரத்தே சீர்குலையும் அபாயம் தோன்றியது. ''எதிரி மட்டும் தனது ஆரம்பத் தாக்குதல் சக்தியை இன்னும் சிறிது காலமாவது அப்படியே வைத்திருந்தால் அது எங்களுக்கு பெரும் கேடான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்''[*] என்று இரண்டாம் உலக யுத்தம் பற்றிய அதிகாரபூர்வமான பிரிட்டிஷ் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

போர்க் கப்பல்கள் மற்றும் வர்த்தகக் கப்பல்களின் மாலுமிகளும் பிரிட்டிஷ் உழைப்பாளிகளும் தமது உழைப்பால் நாட்டின் தற்காப்பைப் பலப்படுத்துவதில் கணிசமான பங்காற்றினர். இது தவிர

---

[*] ஜா. பட்லர், ஜா. குவாயர், **பெரும் போர்த்தந்திரம், 1941 ஜூன் — 1942 ஆகஸ்டு.** ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1967, பக்கம் 25.

பிரிட்டிஷ் படைத் தலைமை கடற் காவற் படைகளுக்கு குண்டு வீச்சு விமானங்களை வழங்கியது, வர்த்தகக் கப்பல்களை ஆயுதந் தரித்தது, கடற் காவற் படை செல்லும் மார்க்கங்களை முறையாக மாற்றியமைத்தது, ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் சாதாரணக் கப்பல்களை அவற்றின் தளங்களிலேயே முற்றுகையிடு வதை அதிகப்படுத்தியது. பிரிட்டிஷ் விமானப்படையின் நடவடிக். கைகளின் பயனுய் பிரெஞ்சுத் துறைமுகமாகிய பிரேஸ்தில் ஜெர்மா னியப் போர்க் கப்பல்கள் ''ஷார்ன்கோர்ஸ்டும்'' ''கினேய்ஸினுவும்'' தடுத்து நிறுத்தப்பட்டன. மே 27ஆம் தேதி மிகப் பெரும் ஜெர்மன் போர்க்கப்பலாகிய ''பிஸ்மார்க்'' பிரிட்டிஷ் கப்பற்படையால் மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதானது ஜெர்மா னியக் கப்பற்படைக்குப் பேரிழப்பாக அமைந்தது. இவையனைத்தும் கடல்களிலும் சமுத்திரங்களிலும் பிரிட்டனை எதிர்நோக்கியிருந்த பேரழிவைத் தவிர்க்க பிரிட்டனுக்கு உதவின.

4. பால்கன் மீதான தாக்குதல் (1941 ஏப்ரல் 6 — 29)

சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயாராகி வந்த பாசிச ஜெர்மனி பால்கன் நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. இவற்றைக் கைப்பற்றியதானது சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்கான தெற்குப் போர்த்தந்திரத் தாக்கு முனையை ஏற்படுத்தி மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் திட்ட மிடப்பட்டிருந்த நடவடிக்கைகளுக்கு வகை செய்யும் வாய்ப்பை ஹிட்லருக்கு அளித்தது. 1940ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பல்கேரியாவினுள் நுழைந்தன. ஏப்ரல் 6ஆம் தேதி ஹிட்லர் துருப்புகள் யுகோஸ்லாவியா மற்றும் கிரீசினுள் நுழையத் துவங்கின.

யுகோஸ்லாவியா, கிரீசிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் ஒரே நடவடிக்கையாகத் திட்டமிடப்பட்டன. இதன் நிறைவேற்றத் தில் 12வது மற்றும் 2வது படைகளும் முதலாவது டாங்கிப் பிரிவும் (10 டாங்கி டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 32 டிவிஷன் கள்) 4வது விமான படை மற்றும் 8வது வான் கோர்பசை சேர்ந்த 1,500க்கும் அதிகமான விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டன. இத் தாலிய மற்றும் ஹங்கேரியத் துருப்புகள் துணை திசைகளில் செயல் படுவதற்காக நிறுத்தப்பட்டிருந்தன. பால்கன் நடவடிக்கைக்காக பாசிசக் கூட்டு மொத்தமாக 80க்கும் கூடுதலான டிவிஷன்கள், சுமார் 2,000 டாங்கிகள், 2,000க்கும் கூடுதலான விமானங்கள் ஆகியவற்றை ஒதுக்கியிருந்தது. இதை விடக் கணிசமான அளவு

குறைந்த யுகோஸ்லாவிய, கிரீஸ் சக்திகள்தான் இவற்றிற்கு எதிராக நின்றன. யுகோஸ்லாவியத் துருப்புகளிடம் 28 காலாட்படை, 3 குதிரைப்படை டிவிஷன்களும் 32 தனி ரெஜிமென்ட்டுகளும் பழைய மாதிரியான 110 டாங்கிகளும் 416 விமானங்களும் இருந்தன. கிரீஸ் துருப்புகளின் பெரும் பகுதி — 15 காலாட்படை டிவிஷன்கள் — இத்தாலி-கிரீஸ் போர்முனையில் ஆல்பானியாவில் குவிக்கப்பட்டிருந்தது. பாசிச ஜெர்மனியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க கிரீஸ் படைத் தலைமையால் 6 டிவிஷன்களை மட்டுமே ஒதுக்க முடிந்தது. கிரீசில் பிரிட்டிஷ் பயணப் படை கோர்பஸ் ஒன்று இருந்தது. இதில் ஒரு பிரிட்டிஷ் மோட்டார் பிரிகேட், ஒரு ஆஸ்திரேலிய, ஒரு நியூஜீலாந்து டிவிஷன் (மொத்தமாக 60,000 பேர்கள்) ஆகியனவும் பிரிட்டிஷ் விமானப்படையின் சிறு பிரிவும் (9 ஸ்குவாட்ரன்கள்) இருந்தன. ஆனால் இவை எதுவுமே கிரீஸ் நாட்டவருக்கு எந்த ஒரு முக்கிய உதவியையும் அளிக்கவில்லை. இவ்வாறாக சக்திகளின் சமன்நிலை பாசிசக் கூட்டிற்கு ஆதாயமானதாக, அதுவும் மிக ஆதாயமானதாக, இருந்தது.

யுகோஸ்லாவிய, கிரீஸ் துருப்புகளைச் சுற்றி வளைக்க, அனுகூலமான நிலையிலிருந்த பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்குப் பின்வரும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன: பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, ஆஸ்திரியா ஆகியவற்றின் பிரதேசங்களிலிருந்து ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல் தொடுத்து யுகோஸ்லாவியாவில் நுழைந்து அதைப் பிளவுபடுத்தி அதன் இராணுவத்தை ஒழிப்பது; அதே நேரத்தில் கிரீசுக்கு எதிரான ஆக்கிரமிப்பைத் துவக்கி சலோனிக்கியைக் கைப்பற்றி லாரிஸ் நகரை நோக்கி முன்னேறுவது. விமானப்படை பெல்கிரேடை குண்டு வீச்சிற்கு உள்ளாக்கி விமான நிலையங்கள், இருப்புப் பாதை மையங்களைத் தாக்கி அணிதிரட்டலைக் குலைக்க வேண்டியிருந்தது.

முதல் நாள் படையெடுப்பின் போதே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் விமானப் படையின் ஆதரவோடு 30 — 50 கி. மீ.களுக்கு உட்புகுந்தன. அடுத்த நாள் மசிதோனியாவில் யுகோஸ்லாவியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டன, 3ஆம் நாள் இறுதியில் பாசிச ஜெர்மானியப் படைப்பிரிவுகள் 200 கி. மீ. தூரம் முன்னேறி பெல்கிரேடை அச்சுறுத்தின. ஏப்ரல் 11ஆம் தேதி இத்தாலி, ஹங்கேரித் துருப்புகளின் தாக்குதல் துவங்கியது, இரண்டு நாட்களுக்குப் பின் ஹிட்லரின் துருப்புகள் பெல்கிரேடில் நுழைந்தன. ஏப்ரல் 15ஆம் தேதி யுகோஸ்லாவிய இராணுவம் எதிர்ப்பை நிறுத்தியது, நிபந்தனையற்ற சரணகதி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

கிரீஸ் பரப்பிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முன்னேற்றம் விரைவாக வளர்ந்து வந்தது. இராணுவ நடவடிக்கைகள்

துவங்கிய நான்காம் நாளே ஹிட்லர் துருப்புகள் சலோனிக்கியைக் கைப்பற்றின, ''கிழக்கு மசிடோனியா'' என்ற கிரீஸ் இராணுவம் சரணடைந்தது. பாசிச ஜெர்மானியத் துருப்புகள் தெற்கு நோக்கி மேற்கொண்டு முன்னேறியதானது கிரீஸ் துருப்புகளில் பெரும் பகுதி சுற்றி வளைக்கப்படும் அபாயத்தை ஏற்படுத்தியது. ஏப்ரல் 12ஆம் தேதி கிரீஸ் படைத் தலைமை ஆல்பானியாவிலிருந்து நாட்டின் உட்புறம் நோக்கி தன் துருப்புகளைப் பின்வாங்க ஆரம்பித்தது. இத்தாலியத் துருப்புகள் இவற்றைத் துரத்திச் சென்றன. ஏப்ரல் 23ஆம் தேதி கிரீஸ் இராணுவத்தின் சரணடைவைப் பற்றிய உடன்படிக்கை கையெழுத்தானது, ஏப்ரல் 27ஆம் தேதி பாசிச ஜெர்மானியத் துருப்புகள் ஏதென்சில் நுழைந்தன. சுமாராக 12,000 பேர்களைப் பறி கொடுத்த பிரிட்டிஷ் பயணப் படை கோர்பஸ் கிரீட் தீவிற்கு வெளியேற்றப்பட்டது; இது தன் கனரக ஆயுதங்களையும் போக்கு வரத்து சாதனங்களையும் அப்படியே விட்டு விட்டு சென்றது.

ஜெர்மானியர்களின் கிரீட் வான் இறக்குப் படை நடவடிக்கைதான் பால்கன் நடவடிக்கையின் இறுதி கட்டமாக இருந்தது. இது இரண்டாம் உலக யுத்தத்திலேயே மிகப் பெரும் வான் இறக்குப் படை நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியிலும் ஏஜியன் கடலிலும் ஆதிக்கத்தை வெல்வதற்கான பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் உடைய தீவைக் கைப்பற்றுவதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாகும். இதன்படி முன்னணி வான் இறக்குப் படைகளைக் கொண்டு தீவிலுள்ள 3 விமானத் தளங்களைக் கைப்பற்றி பின்னால் இவற்றில் முக்கியச் சக்திகளை இறக்கத் திட்டமிடப்பட்டது. அதே நேரத்தில் கடல் இறக்குப் படையை இறக்கவும் திட்டமிடப்பட்டது.

சக்திகளின் சமன்நிலை பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. இவற்றின் வசம் 7வது வான் இறக்குப் படை டிவிஷனும் 5வது மலையேற்றப் படை டிவிஷனும் தனிப்பட்ட படைப்பிரிவுகளும்—மொத்தமாக 22,000 நபர்கள்—433 குண்டு வீச்சு விமானங்களும் 233 சண்டை விமானங்களும் 500 போக்கு வரத்து விமானங்களும் 50 வேவு விமானங்களும் 72 சரக்கு கிளைடர்களும் இருந்தன.

கடல் இறக்குப் படையில் சுமார் 7,000 பேர்களும் 70 கப்பல்களும் இருந்தன.

சுமார் 30,000 நபர்கள் இருந்த தீவின் பிரிட்டிஷ் பாதுகாப்புச் சக்திகளும் கிட்டத்தட்ட 14,000 கிரீஸ் போர்வீரர்களும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை எதிர்த்தனர். தற்காப்பில் ஈடுபட்டிருந்த துருப்புகளிடம் போதுமான ஆயுதத் தளவாடங்கள் இருக்கவில்லை:

பீரங்கிகள் போதவில்லை, விமானப்படை இல்லாதிருந்தது, மொத்தம் 6 டாங்கிகள்தான் இருந்தன. பிரிட்டிஷ் படைத் தலைமை கடற்படையின் வான் எதிர்ப்பு தற்காப்பின் மீது முக்கியக் கவனத்தைச் செலுத்தியது (தீவில் 4 போர்க் கப்பல்களும் 1 விமானந் தாங்கிக் கப்பலும் 9 குரூசர்களும் 20க்கும் அதிகமான நாசகாரி கப்பல்களும் இருந்தன).

குறிப்பிட்ட நாளன்று, அதாவது மே 20ஆம் தேதி காலை பெரும் விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் மலேம்யே, ரெட்டிம்னோன், இராக்ளியோன் ஆகிய விமானத் தளங்களிலும் ஹான்யா நகரிலும் ஜெர்மானியப் பாராசூட் வீரர்கள் இறக்கப் பட்டனர். இவர்களால் பேரிழப்பிற்குப் பின் மலேம்யேவிலும் ஹான் யாவிலும் மட்டுமே நிலைத்து நிற்க முடிந்தது. இரண்டாம் நாள் பூராவும் 5வது மலையேற்றப் படை டிவிஷன் பிரிவுகளை ஏற்றிக் கொண்டு விமானங்களும் கிளைடர்களும் இங்கு வரலாயின. அதே நேரத்தில் ஜெர்மானியப் படைத் தலைமை கடல் வழியே இறக்குப் படையைத் தரையிறக்க முயன்றது. ஆனால் இதை பிரிட்டிஷ் கடற்படைக் கண்டுபிடித்து கிட்டத்தட்ட முற்றிலுமாக அழித்தது. பேரிழப்பிற்குப் பின் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் ஜூன் 1ஆம் தேதி தீவைப் பிடித்தன. சுமார் 4,000 பேர் கொல்லப்பட்டனர் அல்லது தொலைந்து போயினர், 2,100க்கும் அதிகமானோர் காய மடைந்தனர், 220 விமானங்களும் கணிசமான அளவு கப்பல்களும் இழப்பிற்குள்ளாயின. பாரசூட் வீரர்களையும் விமானங்களையும் பெரு மளவில் இழந்ததானது ஜெர்மானிய உயர்மட்டப் படைத் தலைமையை பயமுறுத்தியதால் இது மேற்கொண்டு பெரிய வான் இறக்குப் படை நடவடிக்கைகளை நடத்துவதைக் கைவிட்டது.

ஆங்கிலேயர்கள் கிரீட்டில் நடந்த சண்டைகளில் 15,000க்கும் மேற்பட்டோரை பறி கொடுத்தனர்; இவர்களில் 1,742 கொல்லப் பட்டனர், எஞ்சியவர்கள் கெய்ரோவிற்கு அகற்றப்பட்டனர். கடற்படைக்கும் பேரிழப்பு ஏற்பட்டது: 3 குரூசர்களும் 6 கண்ணி வெடிக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன; 1 விமானந்தாங்கிக் கப்பல், 3 போர்க் கப்பல்கள், 6 குரூசர்கள், 7 கண்ணி வெடிக் கப்பல்கள் உட்பட பல கப்பல்களும் சேதமடைந்தன. கிரீஸ் 1 சண்டைக் கப்பலையும் 12 நாசகாரிக் கப்பல்களையும் 10 டார்பேடோ படகுகளையும் 75 சதவிகிதம் வரை தனது வர்த்தகக் கப்பல்களையும் பறிகொடுத்தது. கிரீட் தீவுகளில் இருந்த கிரீஸ் துருப்புகளுக்கும் கணிசமான இழப்புகள் ஏற்பட்டன. 15,000 பேர்கள் கொல்லப் பட்டனர், காயமடைந்தனர், சிறைப்பிடிக்கப்பட்டனர்.

ஹிட்லரின் படைத் தலைமை முன்வைத்த நோக்கங்கள் அடையப் பட்டன. இதில் பாசிச ஜெர்மானிய விமானப்படை தீர்மான

கரமான பங்காற்றியது. இது விண்ணில் ஆதிக்கத்தை வென்று பிரிட்டிஷ் கடற்படைக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

கிரீட் தீவைக் கைப்பற்றியதானது, சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்குத் தயாராகி வந்த தனது துருப்புகளின் வலது புறத்திற்கு நம்பகரமாக வகை செய்ய பாசிச ஜெர்மனிக்கு உதவியது. மேலும் ஏஜியன் கடலிலும் மத்திய தரைக் கடலிலும் உள்ள கடற் பாதைகளின் மீது கண்காணிப்பு நிலைநாட்டப்பட்டது, கிரேட் பிரிட்டனோ மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் மிக முக்கிய ஆதாரத் தளங்களில் ஒன்றை இழந்தது.

இராணுவ நோக்கிலிருந்து பார்க்கும் போது கிரீட் வான் இறக்குப் படை நடவடிக்கை, நார்வே நடவடிக்கையைப் போன்றே இறுதி லட்சியத்தை அடைவதில் தீர்மானகரமானதாக இருந்தது. இதன் முக்கிய அம்சம் என்னவெனில், இறக்குப் படைச் சக்திகளில் வான் இறக்குப் படைகளோடு கூட சாதாரண போர்க்களப் படைகளும் கலந்து கொண்டதாகும். வான் இறக்குப் படைப் பிரிவுகளும் துணைப் பிரிவுகளும் நேரடியாக குறிப்பிட்ட இடத்தில் இறக்கப் பட்டன. இது திடீரென தாக்குதலைத் தொடுக்கவும் விரைவாக லட்சியத்தை அடையவும் உதவியது.

இவ்வாறாக 1941ஆம் ஆண்டு ஜூன் மாத வாக்கில் மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவின் எல்லா நாடுகளும் பாசிச ஜெர் மனியாலும் இத்தாலியாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன, அல்லது இவற்றைச் சார்ந்திருந்தன. இந்நாடுகளின் மூலப் பொருட்களும் இவற்றின் பொருளாதாரமும் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் பாசிஸ்டுகளால் பயன்படுத்தப்பட்டன.

5. வடக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும் நடைபெற்ற சண்டைகள் (1940 ஜூன் — 1941 ஜூன்)

வடக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடல் பிரதேசத்திலும் இத்தாலிய, பிரிட்டிஷ் இராணுவங்களின் போர் நடவடிக்கைகள் 1940ஆம் ஆண்டு ஜூனில் ஆரம்பமாயின. முதல் மாதங்களில் பெரும்பாலும் இத்தாலிய, பிரிட்டிஷ் கடற்படைகளும் கடல்களில் விமானப்படைகளும் சண்டையிட்டன, கிழக்கு ஆப்பிரிக்காவில் காலனிகளுக்காகவும் போர் நடந்தது.

1940ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் தேதி பாசிச இத்தாலி கிரேட் பிரிட்டன், பிரான்சுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியது. இத்தாலியத் துருப்புகள் ஆகஸ்டில் பிரிட்டிஷ் சோமாலி, கெனியா சூடானின் ஒரு பகுதி அகியவற்றைக் கைப்பற்றின, செப்டெம்பர் நடுவில்

சூயஸ் கால்வாயைக் கைப்பற்றி மத்திய கிழக்கில் புகும் நோக்கோடு சூயஸ் கால்வாயின் திசையில் தாக்குதல் தொடுத்து லிபியாவிலிருந்து எகிப்திற்குள் நுழைந்தன.

வடக்கு ஆப்பிரிக்காவில் முக்கியப் போர் 80 கி.மீ. அகலமுள்ள கடலோரப் பிரதேசத்தில்தான் நடந்தது. ஏனெனில் இதன் தெற்கே மணற் குன்றுகளும் தனி மலைக் குன்றுகளும் துவங்கின. ஆங்கிலேயர்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்த 5வது இத்தாலியப் படை 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் தேதி 90 கி.மீ. தூரம் வரை முன்னேறியது. மேற்கொண்டு இத்தாலியத் துருப்புகள் முன்னேறுவது நிறுத்தப்பட்டது. ஏனெனில் 1940ஆம் ஆண்டு அக்டோபரில் பாசிசக் கூட்டு கிரீசுக்கு எதிராகத் துவக்கிய ஆக்கிரமிப்பு ஆங்கிலேயர்களின் முக்கியச் சக்திகளைக் கட்டிப் போடும் என்றும் சூயஸ் கால்வாயை எளிதாகப் பிடித்து விடலாம் என்றும் இத்தாலியப் படைத் தலைமை நம்பியது. ஆனால் இந்தக் கணிப்புகள் நிறைவேறவில்லை.

இடை நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்ட பிரிட்டிஷ் படைத் தலைமை தனது துருப்புகளை பலப்படுத்தி டிசம்பர் 9ஆம் தேதி பதில் தாக்குதல் தொடுத்தது. இதன் விளைவாய் இத்தாலியர்களுக்கு கடுந்தோல்வி ஏற்பட்டது. பிப்ரவரி 10ஆம் தேதி ஆங்கிலேயர்கள் ஏல்-அகேய்லா பிரதேசத்தை அடைந்தனர். இதற்குப் பின் இவர்கள் 1941 மே வரை தேசபக்தச் சக்திகளின் ஆதரவோடு பிரிட்டிஷ் சோமாலி, கெனியா, சூடான், எத்தியோப்பியா, இத்தாலிய சோமாலி, எரிட்ரியா ஆகிய இடங்களிலிருந்து இத்தாலியர்களை விரட்டியடித்தனர். ஆனால் பால்கனில் தனது நிலையை வலுப்படுத்தும் நோக்கத்தோடு பிரிட்டிஷ் படைத் தலைமை தனது துருப்புகளில் ஒரு பகுதியை எகிப்திலிருந்து கிரீசுக்கு அனுப்பியதால் இத்தாலிய யூனிட்டுகள் முழுத் தோல்வியிலிருந்து காப்பாற்றப்பட்டன.

மத்திய தரைக் கடல் பகுதியிலும் இத்தாலியக் கடற்படைக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. 1941 ஜனவரியில் முஸ்ஸோலினி ஹிட்லரிடம் உதவி கோரும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். தன் பங்கிற்கு, மத்திய தரைக் கடல் கப்பல் மார்க்கங்களுக்காக அஞ்சிய ஹிட்லரும் வடக்கு ஆப்பிரிக்காவில் தன் நிலையைப் பலப்படுத்தத் திட்டமிட்டான். 1941ஆம் ஆண்டு துவக்கத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் அங்கு வர ஆரம்பித்தன. விரைவிலேயே இவை ஜெனரல் ரோம்மலின் தலைமையின் கீழ் ''ஆப்பிரிக்கா'' எனும் பயணப் படைக் கோர்பசை (ஒரு டாங்கி டிவிஷன், ஒரு எளிய ஆயுத டிவிஷன்) உருவாக்கின. சிசிலி தீவில் இருந்த 10வது ஜெர்மானிய விமானப்படைக் கோர்பஸ் இதற்கு விண்ணிலிருந்து ஆதரவளித்தது.

படைகளை மாற்றியமைத்த ஜெர்மானிய-இத்தாலியத் துருப்பு கள் 1941 மார்ச் 31இல் தாக்குதலில் இறங்கின. குழப்பத்திற்குள் ளான ஆங்கிலேயர்கள் விரைவாக கிழக்கு நோக்கிப் பின்வாங்கத் துவங்கினார்கள்.

பிரிட்டிஷ் மோட்டார் டிவிஷனின் தலைமையகம் இருந்த ஏல்-மெக்கிலி கோட்டையில் பிரிட்டிஷ் படை இருப்பிடத் தலைவன் ஜெனரல் காம்பியே-பெர்ரி, 5 மற்ற ஜெனரல்கள் மற்றும் 2,000 போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் சிறைபிடிக்கப் பட்டனர். பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முன்னேற்றம் பெரும் பீதியை ஏற்படுத்தியது. இதனால் பீடிக்கப்பட்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் பென்காசி நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருந்த தமது டாங்கிகளை ஜெர்மானிய டாங்கிகள் என்று நினைத்து பெட்ரோல் சேமிப்புக் கிடங்கிற்கு தீமூட்டினர். இதன் விளைவாய் 3வது பிரிட்டிஷ் மோட்டார் பிரிகேடின் டாங்கிகளுக்கு எரிபொருள் இல்லாது போய் அவற்றை அப்படியே விட்டு விட்டு வர வேண்டியதாயிற்று.

ஏப்ரல் 4ஆம் தேதி இரவு இத்தாலிய-ஜெர்மானியத் துருப்புகள் பென்காசியைப் பிடித்தன, ஏப்ரல் 10ஆம் தேதி தோப்ருக்கை நெருங்கி அதைச் சுற்றி வளைத்தன. ஆனால் போகிற போக்கில் அவற்றால் இந்நகரைப் பிடிக்க இயலவில்லை.

ஜெனரல் ரோம்மல் தனது முக்கியச் சக்திகளை எகிப்தை நோக்கி அனுப்புவதென முடிவு செய்தான். ஏப்ரல் 12ஆம் தேதி இவனு டைய துருப்புகள் பார்டியாவில் நுழைந்தன. இந்த இடத்தில் முன்னேறுவது நிறுத்தப்பட்டது.

இவ்வாறாக, ஏப்ரல் நடுவில், 900 கி.மீ. ஆழம் வரை முன் னேறிய ஜெர்மானிய-இத்தாலிய யூனிட்டுகள் மீண்டும் எகிப்தின் எல்லைகளை அணுகி தீவிர நடவடிக்கைகளை நிறுத்தின. முன்னேறித் தாக்குவதை நிறுத்தியதற்கு முக்கியக் காரணம், சோவியத் யூனி யனுக்கு எதிரான ''மின்னல் வேக யுத்தம்'' முடிவடையும் முன் ஹிட்லர் வடக்கு ஆப்பிரிக்காவில் பெரிய தாக்குதலைத் தொடுக்கத் தயாராக இல்லாததுதான். 1941 ஜூன் 21ஆம் தேதி ஹிட்லர் முஸ்ஸோலீனிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டான்: ''1941 இலையுதிர் காலத்திற்கு முன் எகிப்தின் மீது தாக்குதல் கிடையாது''*.

ஐரோப்பாவை மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்க நாடுகளுட னும் மற்றும் இந்தியா, பசிபிக் கடலோர நாடுகளுடனும் இணைக் கும் சுருக்கமான போக்குவரத்து மார்க்கங்கள் செல்லும் மத்திய

---

* *Les Lettres secretes. Enchangées par Hitler et Mussolini (1940—1943)*, Paris, 1946, p. 126.

தரைக் கடலில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு போரிடும் இரு தரப்புகளுமே பெரும் முக்கியத்துவம் அளித்தன. ஜிப்ரால்டரை தம் வசம் வைத்திருந்த ஆங்கிலேயர்கள் மத்திய தரைக் கடலிலிருந்து அட்லாண்டிக்கிற்குப் போகும் வழியைக் கண்காணித்தனர். மத்திய தரைக் கடலின் மையத்தில் இத்தாலிக்கும் வடக்கு ஆப்பிரிக்காவிற்கும் இடையேயான சுருக்கமான போக்குவரத்து மார்க்கங்களில் மால்டா இருந்தது. மிகப் பெரும் கப்பற்படைத் தளமாகிய அலெக்சாந்திரியா பிரிட்டனின் மத்திய தரைக் கடல் கப்பற்படை முழுவதையுமே உள்ளடக்கியிருந்தது. சூயஸ் கால்வாயை தம் வசம் வைத்திருந்ததால் மத்திய தரைக் கடலிலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் மிகச் சுருக்கமான பாதை ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்தது.

மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் துவங்கியதிலிருந்து ஆங்கிலேயர்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று, ஒரான், அல்ஜீரியா, கசபிளான்கா மற்றும் தோக்கார் ஆகிய துறைமுகங்களில் கணிசமான அளவில் இருந்த பிரெஞ்சுக் கடற்படையைக் கைப்பற்றுவது அல்லது செயலற்றதாக ஆக்குவதாகும். 1940 ஜூலை ஆரம்பத்தில் பிரிட்டிஷ் கடற்படைச் சக்திகள் ஆப்பிரிக்கத் துறைமுகங்களில் பிரெஞ்சுக் கப்பற்படையை முற்றுகையிட்டன. ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் எதிராக உடனடியாக யுத்தத்தில் இறங்குதல், அல்லது குறைக்கப்பட்ட அணிகளுடன் பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குச் செல்ல ஒப்புக் கொள்ளுதல், அல்லது கப்பல்களை மூழ்கடித்தல் இவற்றில் ஏதாவது ஒன்றை முடிவு செய்யுமாறு பிரெஞ்சுக் கப்பற்படைக்குக் கெடு அளிக்கப்பட்டது. இக்கெடு நிராகரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கப்பல்கள் பிரெஞ்சுக் கப்பற்படையைப் பெரும் குண்டு வீச்சிற்கும் டர்பேடோ தாக்குதலுக்கும் உள்ளாக்கி பல கப்பல்களை மூழ்கடித்தன. ஒரு சில பிரெஞ்சுக் கப்பல்களுக்கு மட்டுமே துலோனுக்கு தப்பிச் செல்ல முடிந்தது.

டெ கோல் தனது நினைவுக் குறிப்புகளில் இந்நடவடிக்கைகளை ஆங்கிலேயர்களின் ''காட்டுமிராண்டித் தனமான புயல் வீச்சின்'' வெளிப்பாடு என்று குறிப்பிட்டார். ''ஆனால் பிரெஞ்சுக் கடற்படை ஆங்கிலேயர்களுக்கு எதிராக பகைமை நடவடிக்கைகளை எப்போதுமே திட்டமிடவில்லை''[*] என்று அவர் எழுதினார். ஜெர்மானியப்-பிரெஞ்சு சமரசத்தின் நிபந்தனைகளை நம்பாதிருந்தாலும் எந்த நம்பிக்கை பிரெஞ்சுக் கடற்படை வீரர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டதோ அதற்கு இவ்வீரர்கள் தகுதியானவர்கள்.

---

[*] ஷா. டெ கோல், **யுத்த நினைவுக் குறிப்புகள்**. 1940 — 1942, மாஸ்கோ, 1957, பக்கம் 119 (ருஷ்ய மொழியில்).

பிரெஞ்சுக் கப்பல்களை மூழ்கடித்த பின் ஆங்கிலேயர்கள் தமது மத்திய தரைக் கடல் கப்பற்படையைப் பலப்படுத்தி, அதை இரு பகுதிகளாக – கிழக்கு கப்பற்படை (5 போர்க் கப்பல்கள், 2 விமானந் தாங்கிக் கப்பல்கள், 10 குரூசர்கள், 26 நாசகாரிக் கப்பல்கள், 12 நீர்மூழ்கிக் கப்பல்கள்) மற்றும் மேற்கு தனிப்படையணி (பெரிய குரூசர், விமானந் தாங்கிக் கப்பல், 5 குரூசர்கள், 10 நாசகாரிக் கப்பல்கள், 6 நீர்மூழ்கிக் கப்பல்கள்) என்று – பிரித்தனர்.

கடல்வழிப் போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாத்து, எதிரியின் கடற்படையுடனை போரின் மீதும் மால்டாவை தன் வசம் வைத்திருப்பதன் மீதும் முக்கியச் சக்திகளைச் செலுத்துவதுதான் பிரிட்டிஷ் கப்பற்படையின் முக்கியக் கடமையாக இருந்தது.

1940 ஜூன் 10ஆம் தேதி மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் துவங்கிய இராணுவ நடவடிக்கைகள் முதலில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றியைத் தந்தன. உதாரணமாக 1940 நவம்பரில் ''ஆர்க் ரோயல்'' எனும் விமானந் தாங்கிக் கப்பலிலிருந்து இயங்கிய பிரிட்டிஷ் விமானங்கள் தரான்டோவிலிருந்த இத்தாலியக் கடற்படைச் சக்திகளைப் பலத்த தாக்குதலுக்கு உள்ளாக்கின, 3 பெரிய கப்பல்களையும் இரண்டு குரூசர்களையும் சேதப்படுத்தி நீண்ட காலத்திற்குச் செயலற்றுப் போகச் செய்தன. இதன் விளைவாய் இத்தாலியக் கப்பற்படையின் நிலை மிகவும் மோசமாகியது, ஆப்பிரிக்காவிற்கு கடல் வழியாக பொருட்களை எடுத்துச் செல்வது கணிசமான அளவு கடினமாகியது.

பாசிச ஜெர்மனியின் படைத் தலைமை 1940 டிசம்பரில் 140 குண்டு வீச்சு விமானங்கள், 22 சண்டை விமானங்கள், 16 வேவு விமானங்கள் அடங்கிய விமானப்படை கோர்பசை சிசிலிக்கு அனுப்பியது. பின்னால் பிரிட்டிஷ் கப்பற்படைக்கு கணிசமான இழப்பை ஏற்படுத்தவும் கண்ணி வெடிகளை வைத்ததன் மூலம் சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்தைக் கடினமானதாக ஆக்கவும் பாசிஸ்டுகளால் முடிந்தது.

1941 மார்ச் இறுதியில் மத்தப்பான் முனை அருகே (கிரீட் தீவிற்கு தெற்கே) நடந்த சமரில் இத்தாலியக் கப்பற்படை இன்னுமொரு தோல்வியை அடைந்தது. பிரிட்டிஷ் கப்பற்படை இரவு நேரச் சண்டையில் ராடார் சாதனங்களின் உதவியோடு இத்தாலியர்களுக்குச் சொந்தமான ஒரு போர்க் கப்பலையும் 3 கனரக குரூசர்களையும் 2 நாசகாரிக் கப்பல்களையும் கண்டுபிடித்து மூழ்கடித்தது. ராடார் சாதானங்கள் இல்லாததாலும் எனவே எதிரியைக் கண்டுபிடிக்காததாலும் இத்தாலியர்கள் சுடத் துவங்கவே இல்லை.

ஆனால் இதற்குப் பின்னால், குறிப்பாக 1941 மேயில் ஜெர்மானிலேயர்கள் கிரீட் தீவைக் கைப்பிடித்த பின், பிரிட்டிஷ் கப்பற்படை

யின் நிலை பெரிதும் மோசமாகியது. இக்காலகட்டத்தில் இது 3 குருசர்களையும் 7 நாசகாரிக் கப்பல்களையும் இழந்தது (மூழ்கடிக்கப் பட்டன), 3 போர்க் கப்பல்கள், ஒரு விமானந்தாங்கி கப்பல், 6 குருசர்கள் மற்றும் 7 நாசகாரிக் கப்பல்களுக்குச் சேதமேற்பட்டது.

6. சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்கான பாசிச ஜெர்மனியின் தயாரிப்பு. ''பார்பரோஸ்ஸா'' திட்டம்

ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளால் நீண்ட காலமாக ஊட்டி வளர்க்கப்பட்ட ''த்ராங் நாஹ் ஓஸ்தென்'' (கிழக்கு நோக்கிய அணி வகுப்பு) என்ற ஆக்கிரமிப்புக் கருத்துகள் நாஜிகளின் முழு ஆதரவைப் பெற்றன. பாசிசத்தின் ஒருவித வேலைத்திட்டமாகத் திகழும் ''மாய்ன் காம்ஃப்'' எனும் நூலில் ஹிட்லர் வெளிப்படையாகவே பின்வருமாறு அறிவிக்கின்றான்: ''ஐரோப்பாவில் எல்லா நிலப்பரப்புகளையும் பெறுவதைப் பற்றி பேசப்படுகையில், இதை முக்கியமாக ருஷ்யாவிடமிருந்துதான் பிடுங்க வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் புதிய ஜெர்மானிய பேரரசு, ஏற்கெனவே தெவ்தோன் வீரத் திருத்தகைகளால் இடப்பட்ட பாதையில் மீண்டும் பயணத்தைத் துவக்க வேண்டும்.''*

சோவியத் யூனியனின் மீது படையெடுக்கத் தயாரான பாசிஸ்டுகள், உலகின் முதல் சோஷலிச அரசை ஒழித்துக் கட்டுவது, கோடிக் கணக்கான சோவியத் மக்களைச் சுட்டுத் தள்ளுவது, எஞ்சியவர்களை அடிமைகளாக ஆக்குவது என்ற நோக்கங்களை தம் முன் வைத்தனர். 1941 மார்ச் 30ஆம் தேதி வேர்மஹ்டின் ஜெனரல்கள் முன் பேசும் போது ஹிட்லர், ருஷ்யாவுடனான யுத்தத்தில் ''ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டத்தைப் பற்றி பேசப்படுகிறது. நாம் இக்கண்ணோட்டத்தில் பார்க்காவிடில் நாம் எதிரியை முறியடித்தாலும் 30 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் கம்யூனிச அபாயம் தலைதூக்கும். நமது எதிரியை ஏதோ நிறுத்தி வைப்பதற்காக நாம் யுத்தத்தை நடத்தவில்லை''** என்று கூறினான்.

''மூன்றும் ரைஹின்'' (பாசிச ஜெர்மனியை அக்காலத்தில் இப்படித்தான் அழைத்தனர்) இராணுவ-அரசியல் தலைமை சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்காகத் திட்டமிட்டுத் தயாராகி வந்தது.

ஆரம்பத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் மேற்கே எளிதான

---

* A. Hitler, *Mein Kampf*, München, 1942, S. 154.

** ஃபெ. கால்டர், யுத்த நாட்குறிப்பு, தொகுதி 2, இராணுவ பதிப்பகம், 1969, பக்கம் 430 (ருஷ்ய மொழியில்).

வெற்றிகளை அடைந்தன. போலந்திற்கு எதிரான யுத்தம் நடைமுறையில் 3 வாரங்கள் மட்டுமே நீடித்தது, பெல்ஜியம் 18 நாட்களில் ஆக்கிரமிக்கப்பட்டது, நார்வே 2 மாதங்களில் கைப்பற்றப்பட்டது, பிரான்ஸ் யுத்தத்தின் 44வது நாளில் சரணடைந்தது; டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகளைக் கைப்பற்றவோ ஹிட்லர் ஜெர்மனிக்கு ஒரு சில நாட்கள் மட்டுமே தேவைப்பட்டன என்பதைச் சொல்லத் தேவையே இல்லை.

வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தையும் வளமான மூல ஊற்றுகளையும் உடைய பல ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமித்த ஹிட்லர், ஜெர்மனியின் இராணுவ உள்ளாற்றலை துரித கதியில் பெருக்கத் துவங்கினான், சோவியத் எல்லையில் பெரும் இராணுவச் சக்திகளை கொண்டு வந்து நிறுத்தத் துவங்கினான்.

சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் இறங்கும் போது பாசிச ஜெர்மனியிடம் பெரும் இராணுவப்-பொருளாதார வாய்ப்புகள் இருந்தன. பின்வரும் அட்டவணை இதைக் காட்டுகிறது:

முக்கியக் குறியீடுகள்	ஜெர்மனியும் ஆஸ்திரியாவும்	ஜெர்மனியும் அதன் துணை நாடுகள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளும் சேர்ந்து
நிலப்பரப்பு (ஆயிரம் ச: கி. மீ. களில்)	554	3,277
மக்கட்தொகை (மில்லியன்களில்)	76	283
எஃகு உற்பத்தி (மில்லியன் டன்களில்)	20	43.6
நிலக்கரி உற்பத்தி (மில்லியன் டன்களில்)	185	348
எண்ணெய் உற்பத்தி (மில்லியன் டன்களில்)	0.5	10
மின்சக்தி (பில்லியன் கிலோவாட்களில்)	52	110
தானிய உற்பத்தி (மில்லியன் டன்களில்)	13.6	54.8

மேலும் 30 செக்கோஸ்லொவாக்கிய, 92 பிரெஞ்சு, 12 பிரிட்டிஷ், 32 பெல்ஜிய, 18 ஹாலந்து மற்றும் 6 நார்வே டிவிஷன்களின் ஆயுதங்களும் படைத் தளவாடங்களும் பாசிச ஜெர்மனியின் வசம் வந்தன.

பாசிச ஜெர்மனியின் பொருளாதாரமே முன்கூட்டியே போர்க் கால பாதைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. உதாரணமாக இதன்

விமானத் தொழிற்துறை 1940—1941ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 10,000—11,000 விமானங்களை உற்பத்தி செய்தது. 1940இல் டாங்கித் தொழிற்சாலைகள் 1,400 கனரக மற்றும் நடுத்தர டாங்கிகளையும் 2,300 இலகுவான டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களையும் உற்பத்தி செய்தன. ''மாபெரும் ஜெர்மனியின் பொருளாதாரப் பரப்பிலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும் எல்லா உற்பத்திச் சக்திகளையும் இயன்றவரை அணி திரட்டியதன் பயனாய் இராணுவத்திற்கு தேவையானவற்றை அளிப்பது பெரிதும் அதிகப் படுத்தப்பட்டது''* என்று 1940 செப்டெம்பர் 1 முதல் 1941 ஏப்ரல் வரையிலான காலகட்டத்திற்கான ஜெர்மானிய உயர்மட்ட படைத் தலைமையின் இராணுவப் பொருளாதார நிர்வாக மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாசிச ஜெர்மானியத் துருப்புகளைக் கிழக்கே அனுப்பி சோவியத் எல்லையில் இவற்றைக் குவிப்பது 1941இல் வளர்ந்து வரும் வேகத்தில் நடைபெற்றது. பிப்ரவரி—மார்ச்சில் இருப்புப் பாதை வழியாக சோவியத் எல்லையிலிருந்து 150—180 கி. மீ. தூரத்திற்கு 4.5 நாட்களுக்கு 1 டிவிஷன் வந்தது என்றால், மே 25ஆம் தேதியிலிருந்து நாளொன்றுக்கு 1.2—2 யூனிட்டுகள் வர ஆரம்பித்தன; இவை சோவியத் எல்லையிலிருந்து 60—80 கி. மீ. தூரத்தில் இறக்கப்பட்டன. காலாட்படை டிவிஷன்களுக்கு எல்லையிலிருந்து 7—30 கி. மீ. தள்ளியும் டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்களுக்கு 20—30 கி. மீ. தள்ளியும் இருந்த ஆரம்பப் பிரதேசங்களுக்கு துருப்புகளைக் கொண்டு வருவது சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்கு முறையாக 12 மற்றும் 4 நாட்களுக்கு முன்னதாக, மறைவாக, இரவு நேர அணி வகுப்புகளின் மூலம் நடத்தப்பட்டது.

சோவியத் யூனியனின் மேற்கு எல்லை அடிக்கடி மீறப்பட்டது. 1941இன் முதல் பாதியில் ஜெர்மானிய விமானங்கள் 324 தடவை சோவியத் வான் பரப்பை மீறின. யுத்தத்திற்கு முந்தைய 11 மாதங்களில் சோவியத் எல்லைக் காவல் படையினர் சுமார் 5,000 ஜெர்மானிய வேவுக்காரர்களைப் பிடித்தனர்.

சித்தாந்தத் துறையிலும் பாசிஸ்டுகள் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயாராயினர். ஜெர்மானிய மக்கள் கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு மனப்பாங்கில் வளர்க்கப்பட்டனர். ''பல லட்சக் கணக்கான ஜெர்மானியர்கள் நாஜி பொய்ப் பிரச்சாரத்திற்குப் பலியானதும் மிருகத்தனமான இனவெறித்

---

* DMA Potsdam, W = 61. 10/58. BL. 149, 152—155, *«Fall Barbarossa»*, S. 221—225.

தத்துவத்தின், வாழும் இடத்திற்கான போராட்டம் என்ற தத்துவத்தின் விஷம் மக்களின் மனத்தை நச்சுப்படுத்தியதும்தான் எங்களுடைய துரதிர்ஷ்டமாகும். யுத்தம் மற்றும் கொள்ளையடிப் பையடுத்து, மற்ற மக்களினங்களிடமிருந்து பிடுங்கப்பட்ட பொருட்களைக் கொண்டு வயிறுர நல்விருந்து அளிக்கப்படும் என்று ஹிட்லர் உறுதியளித்த போது பரவலான பொது மக்கள் நேர்மை மற்றும் நியாயம் பற்றிய அடிப்படை உணர்வுகளை இழந்து ஹிட்லரைப் பின்பற்றியதுதான் எங்களுடைய துரதிர்ஷ்டம்'' என்று 1945 ஜுன் 13இல் *Die Volkszeitung* பத்திரிகையில் வெளியான ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

1940ஆம் ஆண்டு டிசம்பர் 18இல் ஹிட்லர் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தம் தொடுப்பது பற்றிய 21ஆம் ஆணையில் கையொப்பமிட்டான். இது ''பார்பரோஸ்ஸா'' என்ற அடையாளப் பெயரைப் பெற்றது. இத்திட்டத்தின்படி ஜெர்மனியின் உடனடிப் போர்த்தந்திரக் கடமை பால்டிக் குடியரசுகள், பெலோருஷ்யா மற்றும் மேற்குக் கரையோர உக்ரேனில்* சோவியத் துருப்புகளை முறியடிப்பது; இதற்கடுத்தபடியாக, வடக்கே லெனின்கிராதையும் மையத்தில் மாஸ்கோவையும் தெற்கே உக்ரேனையும் மற்றும் தோனெத்ஸ்க் பிரதேசத்தையும் கைப்பற்றுவது. வோல்கா ஆற்றிற்கும் வட த்விணுவிற்கும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் வருவதுதான் கிழக்கு நடவடிக்கையின் இறுதி நோக்கமாகும். 21ஆம் ஆணையில் கையெழுத்திட்ட ஹிட்லர், பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தம் நடவடிக்கை முழுவதன் வெற்றிக்கும் உறுதியான உத்திரவாதத்தை அளிக்கிறது என்று திடமாக நம்பினுன்: ஆகஸ்டு 15 வாக்கில் மாஸ்கோ விழுந்து விடும், அக்டோபர் 1க்குள் யுத்தம் முடிந்து விடும், அதாவது 2—3 மாதங்களில் சோவியத் யூனியனை ஒழித்துக் கட்டி விடலாம் என்று நினைத்தான்.**

21ஆம் ஆணையிலேயே பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: ''பிரிட்டனுக்கு எதிரான யுத்தம் முடியும் முன்னதாகவே ஜெர்மானிய இராணுவம் குறுகிய கால நடவடிக்கையின் போது சோவியத் ருஷ்யாவை முறியடிக்கத் தயாராயிருக்க வேண்டும்... டாங்கிப் பிரிவுகளை ஆழமாக, விரைவாகப் பயன்படுத்தி தைரியமான நடவடிக்கைகளில் மேற்கு ருஷ்யாவில் உள்ள ருஷ்ய தரைப்படைகளின் முக்கியச் சக்திகள் ஒழிக்கப்பட வேண்டும். எதிரியின் போர்த்

---

* அதாவது, தினேப்பர் ஆற்றின் மேற்குக் கரையிலுள்ள உக்ரேன்.—பொ-ர்.

** கெ. ரெய்ன்ஹார்ட், மாஸ்கோ அருகே நடந்த திருப்பம், பக்கம் 51 (ருஷ்ய மொழியில்).

திறமையுள்ள துருப்புகள் ருஷ்ய பரப்பின் பரந்த வெளிகளுக்குப் பின்வாங்குவதைத் தடுக்க வேண்டும்.

விரைவாக பின் துரத்திச் செல்வதன் மூலம், ருஷ்ய விமானப் படைச் சக்திகள் ஜெர்மானியப் பேரரசின் மீது விமானத் தாக்குதல் களை நடத்த இயலாத ஒரு கோட்டை அடைய வேண்டும்.

வோல்கா-அர்ஹான்கெல்ஸ்க் பொதுக் கோட்டில் ஆசிய ருஷ்யா விற்கு எதிராக தடையரணைக் கட்டுவதுதான் இந்நடவடிக்கையின் இறுதி நோக்கமாகும். இவ்வாறாக தேவையெனில் ருஷ்யர்களிடம் உராலில் எஞ்சி நிற்கும் கடைசி தொழிற்துறைப் பிரதேசத்தை விமானப்படையின் உதவியோடு முடமாக்கலாம்.''*

பாசிச ஜெர்மனியின் தலைமை தீட்டிய திட்டங்களின் அதிசாகசத் தன்மை தெட்டத் தெளிவு. இதில் பாசிச ஜெர்மனி மற்றும் இதனுடைய கூட்டாளிகளின் அரசியல், பொருளாதார, இராணுவ வாய்ப்புகள் மிகைப்படுத்தப்பட்டும் சோவியத் யூனியனின் வாய்ப்பு கள் குறைக்கப்பட்டு மதிப்பிடப்படாமலும் இருந்தன. சோஷலிச அமைப்பின் உள்ளடக்கம், அதன் தன்மை, இதன் மகத்தான வாய்ப்பு கள் ஆகியவற்றை பாசிஸ்டுகள் முற்றிலும் புரிந்து கொள்ள இயல வில்லை. இவர்கள் புதிய சோஷலிச சித்தாந்தம், சோவியத் சமுதா யத்தின் தார்மீக-அரசியல் ஒருமைப்பாடு, சோவியத் மக்களினங் களின் பிரிக்க இயலா நட்பு ஆகியவற்றைக் குறைவாக மதிப் பிட்டனர்.

சோவியத் யூனியனை முறியடித்த பின் மூன்றாம் ரைஹின் தலைமை மத்திய தரைக் கடல் பிரதேசம், ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கிலிருந்த பிரிட்டிஷ் காலனிகள் (உதாரணமாக இந்தியாவை) மற்றும் சில சுதந்திர நாடுகளைக் கைப்பற்ற திட்டமிட்டது; பிரிட்டிஷ் தீவுகளுக்குள் நுழையவும் அமெரிக்கக் கண்டத்தினுள் புகவும், அதாவது உலக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிட்டது.

சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஜெர்மனியின் யுத்த திட்டம் சோவியத் யூனியனை அரசு என்ற வகையில் முற்றிலுமாக ஒழித்துக் கட்டி இந்நாட்டு மக்களினங்களை அடிமைப்படுத்தும் திட்டமாக இருந்தது. பாசிச ஜெனரல்களின் கூட்டம் ஒன்றில் ஹிட்லர் இதைப் பற்றி இழிவாகக் குறிப்பிட்டான்: ''ருஷ்ய இரா ணுவத்தை முறியடித்து லெனின்கிராத், மாஸ்கோ, காக்கசஸைக் கைப்பற்றுவது மட்டும் நமக்குப் போதாது. இந்நாட்டை பூமி யிலிருந்தே ஒழித்துக் கட்டி நாட்டு மக்களை பூண்டோடு அழிக்க

முற்றிலும் இரகசியமானது! படைத் தலைமைக்கு மட்டும். ஆவணங்கள், மாஸ்கோ, 1967, பக்கங்கள் 149—150 (ருஷ்ய மொழியில்).



ஹிட்லரின் ''பார்பரோஸ்ஸா'' திட்டம்

வேண்டும்.'' சோவியத் ருஷ்யாவை விரைவில் முறியடித்து விட முடியும் என்று பாசிஸ்டுகள் உறுதியாக நம்பினர். உதாரணமாக உயர்மட்ட தலைமையகத்தின் தூண்களில் ஒருவனாகிய ஜெனரல் யோடல் சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்குச் சில நாட்கள் முன் ''தாக்குதல் துவங்கி 3 வாரங்கள் கழிந்ததும் இந்த அட்டை வீடு நொறுங்கி வீழ்ந்து விடும்''* என்று கூறினான். ஜெர்மனியின் பழைய இராணுவ நிபுணர்களில் ஓரிருவர் மட்டுமே இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து சந்தேகம் தெரிவித்தனர். உதாரணமாக 1940 ஜூன் 22இல் ரைஹ்ஸ்வெரின் முந்தைய தலைமை தளபதி குர்ட் வான் காமர்ஷ்டைன், ''ருஷ்யாவை நோக்கிச் செல்லும் துருப்புகளில் ஒருவர் கூடத் திரும்பப் போவதில்லை'' என்று அறிவித்தார்.

மேலைய நாடுகளின் ஆளும் வட்டங்களைப் பொறுத்த மட்டில் சோவியத் எதிர்ப்பால் குருடாகிப் போயிருந்த அவை பாசிசக் கூட்டின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் அபாயம் எவ்வளவு பெரியது என்பதை குறைத்தே மதிப்பிட்டனர். யுத்தம் நடக்கவிருந்த சமயத்தில் ஐரோப்பாவில் பயணம் செய்த அமெரிக்க அரசுத் துறைச் செயலாளரின் முன்னாள் துணைவர் சாம்னெர் வேல்லஸ், 1944இல் வெளியிடப்பட்ட **தீர்மானங்களின் நேரம்** எனும் தனது நூலில் பின்வருமாறு எழுதினார்: ''யுத்தத்திற்கு முந்தைய அந்த ஆண்டுகளில், அமெரிக்க ஐக்கிய நாடு உட்பட மேலைய ஜனநாயக நாடுகளில் இருந்த பெரிய நிதி மற்றும் வர்த்தக வட்டங்களின் பிரதிநிதிகள் சோவியத் யூனியனுக்கும் ஹிட்லர் ஜெர்மனிக்கும் இடையிலான யுத்தம் தமது சொந்த நலன்களுக்குத்தான் அனுகூலமானது என்று உறுதியாக நம்பினர். ருஷ்யா கண்டிப்பாகத் தோல்வியடையும் என்றும் இதன் மூலம் கம்யூனிசம் ஒழித்துக் கட்டப்படும் என்றும் இச்சச்சரவின் விளைவாய் பல ஆண்டுகளுக்குப் பலவீனமாயிருக்கும் ஜெர்மனி, எஞ்சிய உலகிற்கு உண்மையான ஆபத்தாக இருக்க முடியாது என்றும் அவர்கள் பறைசாற்றினர்.''**

மூன்று பிரதானத் தாக்குதல்களைத் தொடுக்க ''பார்பரோஸ்ஸா'' திட்டத்தில் திட்டமிடப்பட்டது:

9வது மற்றும் 4வது படைகள், 3வது மற்றும் 2வது டாங்கிப் பிரிவுகள், 9 டாங்கி டிவிஷன்கள், 6 மோட்டார் டிவிஷன்கள், 1 குதிரைப்படை டிவிஷன், 2 மோட்டார் பிரிகேடுகள் உட்பட மொத்தம் 50 டிவிஷன்கள் அடங்கிய ''சென்டர்'' படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல்-பீல்ட்மார்ஷல் போக்) சக்திகளைக் கொண்டு

* **நியூரென்பர்க் விசாரணை** (ஏழு தொகுதிகளில்), தொகுதி 2, மாஸ்கோ, 1957, பக்கம் 507 (ருஷ்ய மொழியில்).

** S. Welles, *The Time for Decision*, New York, 1944, p. 321.

வார்ஸாவிற்கு கிழக்கேயுள்ள பிரதேசத்திலிருந்து மீன்ஸ்க் மீதும் மேற்கொண்டு மாஸ்கோ மீதும் பிரதானத் தாக்குதலைத் தொடுப்பது.

18வது மற்றும் 16வது படைகள், 4வது டாங்கிப் பிரிவு, 3 டாங்கி டிவிஷன்கள், 3 மோட்டார் டிவிஷன்கள் உட்பட மொத்தம் 29 டிவிஷன்கள் அடங்கிய ''வடக்கு'' படைத் தொகுதியின் (தளபதி· ஜெனரல்-பீல்ட்மார்ஷல் லெயேப்) சக்திகளைக் கொண்டு கிழக்கு பிரஷ்யாவிலிருந்து ப்ஸ்கோவ், லெனின்கிராதை நோக்கி பொதுத் திசையில் வடக்கே தாக்குதலைத் தொடுப்பது.

பின்லாந்தின் பரப்பிலிருந்து ''நார்வே'' எனும் பாசிச ஜெர்மானியப் படையும் தென் கிழக்கு மற்றும் கரேலியா எனும் இரண்டு பின்லாந்துப் படைகளும் மொத்தம் 22 டிவிஷன்களும் (இவற்றில் 5 ஜெர்மானிய டிவிஷன்கள்) 1 குதிரைப்படை பிரிகேடும் 2 காலாட்படை பிரிகேடுகளும் தாக்குதலில் இறங்கின. 4 ஜெர்மானிய, 2 பின்லாந்து டிவிஷன்களைக் கொண்டு ''நார்வே'' ஹிட்லர் படை மூர்மன்ஸ்க், கன்டலாக்ஷா மற்றும் உஹ்தா திசைகளில் தாக்கியது. பின்லாந்துத் துருப்புகள் லதோகா ஏரிக்கு கிழக்கேயும் மேற்கேயும் தாக்குதலில் இறங்கி லெனின்கிராத் பிரதேசத்திலும் ஸ்வீர் ஆற்றிலும் ''வடக்கு'' படைத் தொகுதியுடன் இணைந்திருக்க வேண்டும். தென் கிழக்குப் படையிலிருந்து ஒரு பின்லாந்து காலாட்படை டிவிஷன் ஹான்கோ தீபகற்பத்தைக் கைப்பற்ற வேண்டும்.

6வது, 17வது ஜெர்மானியப் படைகள், 3வது, 4வது ருமேனியப் படைகள், 1வது டாங்கிப் பிரிவு, 5 டாங்கி, 4 மோட்டார் டிவிஷன்கள், 6 காலாட்படை, 3 மோட்டார், 4 குதிரைப்படை பிரிகேடுகள் உட்பட மொத்தமாக 63 டிவிஷன்கள் (இவற்றில் 13 காலாட்படை டிவிஷன்களும் 13 பிரிகேடுகளும் துணை நாடுகளைச் சேர்ந்தவை) அடங்கிய ''தெற்கு'' படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல்-பீல்ட்மார்ஷல் ருன்டிஷ்டேட்) சக்திகளைக் கொண்டு லியூப்ளின் பிரதேசத்திலிருந்து ஷித்தாமிர், கீவ் நோக்கி தெற்கே தாக்குதலைத் தொடுக்க வேண்டும். 3வது, 4வது ருமேனியப் படைகள் திராஸ்போல் திசையில் தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

''சென்டர்'' படைத் தொகுதிக்கு 2வது விமானப்படையைக் கொண்டும் ''தெற்கு'' படைத் தொகுதிக்கு 4வது விமானப்படையைக் கொண்டும் ''வடக்கு'' படைத் தொகுதிக்கு 1வது விமானப் படையைக் கொண்டும் ஆதரவளிக்கத் திட்டமிடப்பட்டது.

ஜூன் 18—21இல் ஹிட்லர் துருப்புகள் தாக்குதலைத் தொடுப்பதற்காக ஆரம்ப நிலைகளில் நின்றன.

பாசிச ஜெர்மனியின் பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தம், சோவியத் யூனியனுக்கு எதிரான ஹிட்லர் ஜெர்மனியின் ''தடுப்பு'' யுத்தம் என்ற

கருத்தமைவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தது குறிப் பிடத் தக்கதாகும். இந்த யுத்தத்தின் ''தடுப்பு'' தன்மையை ஆதாரப்படுத்துவதற்காக, ஜெர்மனி உட்பட ஐரோப்பா முழு வதையும் ''கம்யூனிச அபாயம்'' எதிர்நோக்கியுள்ளதாக பொய் கூற்று ஹிட்லர் பிரச்சாரத்தால் முன்வைக்கப்பட்டு உறுதியோடு பரப்பப்பட்டது. இந்நோக்கத்துடன்தான் 1941ஆம் ஆண்டு மே 25ஆம் தேதி ஹிட்லரின் தலைமையகத்திலிருந்து இரகசிய தொலை பேசி தந்தி ஒன்று அனுப்பப்பட்டது. அடுத்த சில வாரங்களில் ருஷ்யர்களின் தரப்பிலிருந்து ஏதோ தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படலாம் என்றும் எனவே இவற்றை தவிர்ப்பதற்காக முழுவதும் வகை செய்ய வேண்டியது அவசியம் என்றும் இத்தந்தி யில் இராணுவ அதிகாரிகளுக்கு கூறப்பட்டிருந்தது.

இன்று பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள், சித்தாந்தவாதிகளில் ஒரு சிலர் (அமெரிக்காவைச் சேர்ந்த டியுபுயீ, பஸ்ஸோனி, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசைச் சேர்ந்த கிளாஸிபெக், வலேன்டி) சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்புத் தன்மை, இதன் நாடுபிடிக்கும் நாட்டங் களைப் பற்றிய கட்டுக் கதைகளை பரப்பி, சோவியத் யூனியனின் மீது தாக்குவது என்று ஹிட்லர் செய்த முடிவை கட்டாயப்படுத்தப் பட்ட நடவடிக்கை என்று சித்தரிக்கவும், ''பிரிட்டனுக்கான சமரின்'' போது பதிலடியைச் சந்தித்து, ''கடல் சிங்கம்'' நட வடிக்கையை நிறைவேற்ற இயலாது என்று உணர்ந்த போதுதான் ஹிட்லர் ஏதோ இம்முடிவை மேற்கொண்டான் என்று கூறவும் முற்படுகின்றனர். ஆனால் சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர் மனி படையெடுத்ததானது நன்கு சிந்திக்கப்பட்டு, முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும் என்பதை மேலே கூறிய தந்திரமான வாதங்களால் மூடி மறைக்க முடியாது. சோவியத் யூனியனை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதோடு நின்று விடாமல் முதல் சோஷலிச அரசையே ஒழித்துக் கட்டுவதையும் இதை ஜெர்மா னியக் காலனியாக மாற்றுவதையும் ஆக்கிரமிப்பாளர்கள் லட்சிய மாகக் கொண்டிருந்தார்கள் என்பது ஹிட்லர் திட்டங்களின் ஆக்கிர மிப்புத் தன்மைக்குச் சான்று பகர்கின்றது.

ஆக்கிரமிப்பு துவங்கிய போது பாசிச ஜெர்மனி முதலாளித்துவ உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த இராணுவ வல்லரசாக விளங் கியது. மொத்தமாக இதன் இராணுவத்தில் 85 லட்சம் போர் வீரர்கள் இருந்தனர்; 214 டிவிஷன்களும் (35 டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட) 7 தனி பிரிகேடுகளும் இருந் தன. விமானப்படையில் 10,000க்கும் அதிகமான விமானங்கள் இருந்தன. கடற்படையில் 5 போர்க் கப்பல்கள், 8 குரூசர்கள், 43 நாசகாரி மற்றும் கண்ணி வெடிக் கப்பல்கள், 161 நீர்மூழ்கிக்

கப்பல்கள், கணிசமான அளவு படகுகள் மற்றும் துணைக் கப்பல்கள் ஆகியவை இருந்தன. சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்காக 152 ஜெர்மானிய டிவிஷன்களும் 2 பிரிகேடுகளும் (இவற்றில் 33 டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள்), 3,950 விமானங்களும் சுமாராக 4,300 டாங்கிகளும் 47,260 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 192 சண்டைக் கப்பல்களும் ஒதுக்கப்பட்டன. இது தவிர துணை நாடுகளாகிய பின்லாந்து, ருமேனியா, ஹங்கேரி ஆகியன 37 டிவிஷன்களைத் தந்தன. மொத்தமாக சோவியத் யூனியனின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட எதிரியின் சக்திகளில் 190 டிவிஷன்கள், சுமார் 4,300 டாங்கிகள், 47,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் 4,980 விமானங்கள் முதலியன அடங்கியிருந்தன. இராணுவ நடவடிக்கைகளை திடீரெனத் துவங்கி, டாங்கிகள், விமானப்படை, காலாட்படையின் பெருமளவு தாக்குதல்களின் மூலம் இவற்றை நடத்தத் திட்டமிடப்பட்டது.

இவ்வாறாக சோவியத் யூனியனின் மீது படையெடுத்த போது பாசிச ஜெர்மனியின் வசம் நவீன ஆயுதங்களையுடைய பெரும் இராணுவம் இருந்தது, பலம் மிக்க இராணுவ பொருளாதாரத்தை இது தன் வசம் வைத்திருந்தது, ஒன்று திரட்டப்பட்ட பாசிச கூட்டணி நிலவியது. இக்கூட்டணியில் ஜெர்மனியைத் தவிர ஜப்பான், இத்தாலி, பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. பாசிச கூட்டணியின் இராணுவம் மேற்கே பெரும் போர் அனுபவத்தைப் பெற்றிருந்தது. சோவியத் யூனியனின் எல்லையில் குவிக்கப்பட்டிருந்த முக்கியச் சக்திகள் முக்கியப் போர்த்தந்திர திசைகளிலும் சோவியத் யூனியனின் முக்கிய அரசியல், பொருளாதார மையங்களை நோக்கியும் திடீர் தாக்குதல்களைத் தொடுக்க முழுத் தயார் நிலையில் இருந்தன.

7. சோவியத் யூனியனின் மீது படையெடுக்க இராணுவ வெறி கொண்ட ஜப்பான் செய்து வந்த தயாரிப்புகள். ஆசியாவில் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு

சோவியத் யூனியனின் மீது படையெடுக்க பாசிச ஜெர்மனி தயாராகி வந்த அதே நேரத்தில் இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் சோவியத் நாட்டிற்கெதிரான தயாரிப்புகளில் இறங்கியது, சீனாவில் தனது நாடுபிடிக்கும் கொள்கையை தீவிரப்படுத்தியது. ''மாபெரும் கிழக்கு ஆசியாவின் கூட்டு மலர்ச்சிக்கான மண்டலத்தை'' தோற்றுவிக்கக் கோரும் வாய்வீச்சான கோஷத்தை முன்வைத்த ஜப்பானிய இராணுவ வெறியர்கள், சோவியத் தொலைக் கிழக்கு, சைபீரியா, சீனா, இந்தோ சீனா மற்றும் ஆசியா கண்டத்திலும் பசிபிக்

சமுத்திரப் பிரதேசத்திலும் உள்ள மற்ற நாடுகளைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினர். அரசாங்கத்தின் கட்டளைக்கேற்ப ஜப்பானிய படைத் தலைமை இரண்டு வகையான யுத்தங்களை—வடக்கே சோவியத் யூனியனுக்கு எதிராக, தெற்கே அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், இவற்றின் நேச நாடுகளுக்கு எதிராக—நடத்தும் திட்டத்தை தீட்டியது.*

1939—1940ஆம் ஆண்டுகளில், மஞ்சூரியாவில் இருந்த குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கை 9 காலாட்படை டிவிஷன்களிலிருந்து 15 காலாட்படை டிவிஷன்களாக அதிகரிக்கப்பட்டு 1940இல் சுமார் 3,50,000 போர்வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கியிருந்தது.**

இரண்டாவது வகையான யுத்தத்தின் போதும் தீர்மானகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. ஒன்றிணைக்கப்பட்ட ஜப்பானியக் கப்பற்படையின் தலைவன் அட்மிரல் யமமோட்டோ 1941ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி விடுத்த அறிக்கை இதற்குச் சான்று பகர்கிறது: ''ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையே யுத்தம் மூண்டால் குவாம், பிலிப்பீன் தீவுகள், ஏன் ஹவாய் தீவுகள், சான்-பிரான்சிஸ்கோ ஆகியவற்றைக் கைப்பற்றுவதோடு நம்மால் நின்று விட முடியாது. நாம் வாஷிங்டனிற்குள் நுழைந்து வெள்ளை மாளிகையில் ஒப்பந்தம் செய்து கொள்வதும் அவசியமாயிருக்கும்''.***

இவ்வாறாக, பாசிச ஜெர்மனியுடனான யுத்தத்தில் மேற்கு ஐரோப்பியக் காலனியாதிக்க நாடுகளின் தோல்வியையும் கிழக்கே இவற்றின் சக்திகளது பலவீனத்தையும் பயன்படுத்தி, பல திசைகளில் ஒரே நேரத்தில் தாக்குதலைத் தொடுப்பதன் மூலம் தென் கிழக்கு ஆசியா முழுவதையும் கைப்பற்ற ஜப்பானிய இராணுவ வெறியர்கள் திட்டமிட்டனர். முதலில் பிரெஞ்சு இந்தோ சீனாவை ஆக்கிரமித்து, பின் இதன் பிரதேசத்தைப் பயன்படுத்தி சீனா, மலாயா மீது தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது.

சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு எதிரான யுத்தத்திற்குத் தயாராவதற்காக முற்ற முழு யுத்த நிலையம் என்ற அதிகாரபூர்வமான அரசாங்க நிறுவனம் ஒன்று பேரரசரின் கட்

---

* சிமாடா தசிஹீக்கோ, கான்டோ கூன் (குவாண்டுங் இராணுவம்), டோக்கியோ, 1966, பக்கங்கள் 153—155.

** ஹடோரி தகுசீரோ, தய்தோவா சென்சோ த்சேன் சி (மாபெரும் கிழக்கு ஆசியாவில் யுத்தத்தின் முழு வரலாறு), பக்கங்கள் 85, 184.

*** L. Baker, *Roosevelt and Pearl Harbor. A Great President in the Time of Crisis,* New York, 1970, p. 37.

டளைப்படி உருவாக்கப்பட்டது. பொது மக்களையும் இந்த யுத்தத் திற்காக நன்கு தயார்படுத்தினர். 1940 நவம்பரில் ஜப்பானிய அரசாங்கம் ''உற்பத்தியின் மூலம் தாய் நாட்டிற்கு சேவை செய்யும் சங்கத்தை நிறுவுவது'' பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றி யது. சாராம்சத்தில், இச்சங்கத்தில் உறுப்பினராயிருப்பது எல்லா தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களுக்கும் கட்டாயமானதாயிற்று. நாட்டில் 46,000க்கும் கூடுதலான சங்கக் கிளைகள் உருவாக்கப் பட்டன, இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 லட்சத்திற்கும் கூடுதலாக இருந்தது.

தனது ஆக்கிரமிப்பு லட்சியங்களை அடைவதற்காக ஜப்பான் தன் முக்கியச் சக்திகளை இராணுவத் தொழிற்துறையை விரைவாக வளர்ப்பதன் மீது செலுத்தியது. தோண்டியெடுக்கும் தொழிற்துறை, பதப்படுத்தும் தொழிற்துறையோடு ஒப்பிடுகையில் இராணுவத் தொழிற்துறை 1938இல் 2.7 மடங்கு விரைவாக வளர்ந்தது என்றால் 1940இல் இது 4.5 மடங்காக இருந்தது. இதன் பயனாய் ஆயுதங்கள் மற்றும் போர் வாகனங்களின் உற்பத்தி விரைவாக வளர வழிகோலப்பட்டது.

இவ்வாறாக தொலைக் கிழக்கிலும் ஆசியாவிலும் பசிபிக் சமுத் திரப் பிரதேசத்திலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஜப்பானிய இராணுவ வெறியர்கள் முயன்றனர். சீனாவின் ஆழத்திற்குள் புகுந்த ஜப்பான் 1940 ஜூன் முதல் 1941 மே வரை பெரும் இழப்பு களுக்குப் பின் நாட்டின் தென் பிரதேசங்களை ஆக்கிரமித்தது. 1940 ஆகஸ்டில் ஜப்பானிய அரசாங்கம் இந்தோ சீனாவை ''பரஸ்பர மலர்ச்சி மண்டலத்தில்'' சேர்த்து, இந்தோ சீனாவில் இராணுவத் தளங்களைக் கட்டவும் இதன் வழியாகத் தன் துருப்புகளை அனுப்ப வும் உரிமை வேண்டுமெனக் காலக்கெடு தந்து பிரான்சிடம் கோரி யது. வடக்கு இந்தோ சீனாவில் ஜப்பானியத் துருப்புகளை வைத்து கொள்ளலாம் என்ற உடன்படிக்கையில் ஹனோயிலிருந்த பிரெஞ்சு காலனி ஆட்சியாளர்கள் 1940 செப்டெம்பர் 27இல் கையொப்ப மிட்டனர். அதே நாளன்று ஜப்பானியத் துருப்புகள் இப்பரப்பிற் குள் நுழைந்தன. இந்தோ சீனாவைக் கைப்பற்றியதன் மூலம் பசிபிக் சமுத்திரத்தில் ''பெரும் யுத்தத்தை'' நடத்துவதற்காக தயார் படுத்திக் கொள்ள ஜப்பான் போர்த்தந்திர மற்றும் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றது. ஆனால் இந்தோ சீனாவின் ஒரு சில பிர தேசங்களில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மக்கள் எழுச்சிகள் வெடித்தன. இவை பிரெஞ்சு மற்றும் ஜப்பானியக் காலனியாட்சி யாளர்களின் கூட்டு நடவடிக்கைகளால் கொடூரமாக நசுக்கப் பட்டன. வடக்கு இந்தோ சீனாவை ஆக்கிரமித்ததானது, அமெரிக்கா வும் பிரிட்டனும் ஆதரித்த ''தொலைக் கிழக்கு மூனிக்'' கொள்

கையைப் பயன்படுத்தி இராணுவ வெறி கொண்ட ஜப்பான் ஆக் கிரமிப்பின் தெற்கு வகையை நிறைவேற்றுவதில் இறங்கியுள்ளதைக் குறித்தது.

எனவே பாசிச ஜெர்மனியைப் போன்றே இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் இராணுவ-பாசிச சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டி, நாட்டின் மூலச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி ''பெரும் யுத்தத்திற்குத்'' தயாரானது. தனது ஆக்கிரமிப்பு லட்சி யங்களை அடைவதற்காக அது ஐரோப்பாவில் பாசிச கூட்டணி நடத்திய யுத்தத்தின் முடிவுகளை அதிக பட்சம் பயன்படுத்த முயன்றது.

8. நாட்டின் பாதுகாப்புத் திறமையை வலுப்படுத்துவது சம்பந்தமாக சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி கணிசமான அளவு கூர்மை யடைந்துள்ளதைக் காட்டும் நிகழ்ச்சிப் போக்குகள் உலகில் நடந்து கொண்டிருந்த போது, சோவியத் யூனியன் சோஷலிசக் கட்டுமானத் தின் இறுதிக் கட்டத்தில் நுழைந்தது, மாமேதை லெனினால் தீட்டப் பட்ட திட்டத்தைக் குறுகிய வரலாற்றுக் காலத்தில் நடைமுறைப் படுத்தியது. நாட்டை தொழிற்துறைமயமாக்குவது, விவசாயத்தில் கூட்டுறவு மற்றும் கலாச்சாரப் புரட்சி பற்றிய லெனினியக் கொள்கை முற்றிலுமாக வெற்றி பெற்றது. சோஷலிசக் கட்டுமானப் போக்கில் சோவியத் சமுதாயத்தின் வர்க்க அமைப்பில் ஆழ்ந்த மாற்றங்கள் ஏற்பட்டன — சுரண்டும் வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் ஒழித்துக் கட்டப்பட்டன. சோஷலிச சமுதாய உறவுகளை மேற்கொண்டு வளர்க்கவும் சோவியத் மக்களின் தார்மீக-அரசியல் ஒற்றுமையை வலுப்படுத்தவும் தேவையான நிலையான அடித்தளம் இடப்பட்டது. சோவியத் யூனியனின் புதிய அரசியலமைப்புச் சட்டம் (1938) சோஷலிசத்தின் வெற்றியை சட்ட ரீதியாக உறுதிப்படுத்தி, சோவி யத் யூனியனின் சமுதாய மற்றும் அரசு கட்டமைப்பின் சோஷலிச அடிப்படைகளையும் குடிமக்களின் பரவலான சமூக சுதந்திரங்கள், உரிமைகளையும் ஊர்ஜிதப்படுத்தியது. சமூக உற்பத்தியின் இடையறு வளர்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உழைப்பாளி களின் வளர்ந்து வரும் பொருளாயத, கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வாய்ப்பளித்தது. தொழிலாளர்கள், உத்தியோ கஸ்தர்களின் ஊதியங்களும் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வரு மானங்களும் அதிகரித்தன. வேலையில்லா திண்டாட்டம் இல்லா

மலிருந்தது, சோவியத் பொருளாதாரத்தின் திட்டமிட்ட, நெருக்கடிகளற்ற வளர்ச்சி, தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை இடையறுது அதிகரித்து வந்தது, பொது நுகர்வு நிதிகளின் அதிகரிப்பு (கல்வி, மருத்துவ உதவி, ஓய்வு ஊதியம் வழங்குதல், குழந்தை பராமரிப்பு இல்லங்களில் குழந்தைகளைப் பராமரித்தல், ஓய்வு போன்றவற்றிற்கான செலவுகளுக்கு இந்நிதிகள் வகை செய்கின்றன) ஆகியவற்றைக் கொண்டு மேலே கூறப்பட்டது அனைத்தும் உத்திரவாதம் செய்யப்பட்டன.

சோஷலிச அமைப்பு உறுதியடைந்ததும் வளர்ந்த பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளமும் கலாச்சாரக் கட்டுமானத்தின் எல்லா இடங்களிலும் பெரும் வெற்றிக்கான அடிப்படையாக அமைந்தன. சோவியத் இலக்கியமும் கலையும் நாடகங்களும் திரைப்படமும் சமுதாய உணர்வின் மீது தீவிரத் தாக்கம் செலுத்தின, உழைப்பாளிகளின் ஆன்மீகச் செழுமைக்கும் சித்தாந்த உறுதிக்கும் உதவின, அவர்களிடம் தேசபக்த உணர்வுகளை தூண்டி விட்டன, கம்யூனிச லட்சியங்களின் வெற்றியில் அவர்களுக்கிருந்த பற்றுறுதியை பலப்படுத்தின.

சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி படையெடுக்கும் அபாயம் நிலவிய சூழ்நிலையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் நாட்டின் பாதுகாப்புத் திறமையை வலுப்படுத்தவும் சோவியத் இராணுவத்தின் போர் வன்மையைப் பெருக்கவும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டன. 1939ஆம் ஆண்டு மார்ச்சில் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் 18வது காங்கிரசால் உருவாக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டம் பாதுகாப்புத் தொழிற்துறையின் மிக முக்கியப் பிரிவுகளை துரித கதியில் வளர்க்கவும் கிழக்கே பலம் மிக்க தொழிற்துறை தளத்தை உருவாக்கவும் திட்டமிட்டது. 1940ஆம் ஆண்டு பாதுகாப்புத் தொழிற்துறையின் உற்பத்திப் பொருட்களின் அளவு மூன்றில் ஒரு பங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது.

பாதுகாப்புத் தேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கணிசமான அளவு அதிகரித்தன: 1939இல் இவை சோவியத் யூனியனின் அரசு பட்ஜெட்டில் 25.5 சதவிகிதமாகவும் 1940இல் 32.6 சதவிகிதமாகவும் 1941இல் 43.4 சதவிகிதமாகவும் இருந்தன. தொழிற்துறையை இராணுவ உற்பத்திக்கு மாற்றியமைத்து ஒன்று திரட்டும் திட்டம் 1941 பிப்ரவரியில் உருவாக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

1939 – 1941ஆம் ஆண்டுகளில், ''இப்போதுள்ள விமானத் தொழிற்சாலைகளை புனரமைப்பது, புதியவற்றைக் கட்டுவது,'' ''1940இல் T-34 டாங்கிகளை உற்பத்தி செய்வது'', ''1940ஆம்

ஆண்டு அரசு சேம இருப்புகளையும் திரட்டு சேம இருப்புகளையும் சேர்ப்பது'' போன்றவற்றைப் பற்றிய பல முக்கியத் தீர்மானங்கள் ஏற்கப்பட்டன. மேற்கூறிய நடவடிக்கைகளின் பயனாய் 1941 கோடையில் சோவியத் விமான மற்றும் டாங்கித் தொழிற் துறைகளின் உற்பத்தித் திறன்கள் பாசிச ஜெர்மனியின் உற்பத்தித் திறன்களை கிட்டத்தட்ட 1.5 மடங்கு விஞ்சியிருந்தன. உதாரண மாக 1940இல் சோவியத் யூனியனின் விமானத் தொழிற்துறை 8,133 போர் விமானங்களை உற்பத்தி செய்தது. அதே நேரத்தில் மிக்-3, லாக்-3, யாக்-1 ஆகிய சண்டை விமானங்கள், பெ-2 குண்டு வீச்சு விமானங்கள், இல்-2 தாழப் பறக்கும் சண்டை விமா னங்கள் போன்ற புதிய வகை விமானங்களின் உற்பத்தியில் ஈடுபடத் துவங்கியது. இல்-2 ரக விமானங்கள் உலகில் வேறெந்த இராணுவத் திடமும் இருக்கவில்லை; 1941ஆம் ஆண்டின் முதல் பாதியில் மட்டும் இந்த ''பறக்கும் டாங்கிகள்'' 2,707 உற்பத்தி செய்யப் பட்டன.

உயர்ந்த இராணுவத் தன்மைகளையுடைய (உறுதியான கவசம், பலம் மிக்க பீரங்கி, உயர்வான வேகம், எல்லா இடங்களிலும் செல்லும் தன்மை) கே. வி., T-34 போன்ற புதிய ரக டாங்கி களை உற்பத்தி செய்யும் முறையை யுத்தத்திற்கு முன் டாங்கித் தொழிற்சாலைகள் கற்றன. யுத்தம் ஆரம்பமான போது 1,861 புதிய ரக டாங்கிகள் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

பீரங்கிகளை உற்பத்தி செய்வதிலும் கணிசமான வெற்றிகள் அடையப்பட்டிருந்தன. இவை பல குறியீடுகளில் தலைசிறந்த அயல்நாட்டு பீரங்கிகளுக்கு எவ்விதத்திலும் குறைந்ததாக இருக்க வில்லை. 1939 முதல் யுத்தம் துவங்கும் வரை பாதுகாப்புத் தொழிற் துறை 46,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் (50 மி. மீ. வகையைச் சேர்க்காது) 2,00,000க்கும் அதிகமான இயந் திரத் துப்பாக்கிகள், தானியங்கித் துப்பாக்கிகளையும் உற்பத்தி செய்தது. யுத்தம் துவங்கவிருந்த போது பி. எம்.-13 என்ற ஜெட் பீரங்கி அமைப்புகளின் (இவை ''கத்யூஷா'' என்றழைக்கப்பட்டன) மாதிரி வடிவங்கள் தோற்றுவிக்கப்பட்டன, பரந்த அளவில் இவற்றின் உற்பத்தி துவங்கியது.

கடற்படை 4 குரூசர்கள், 7 தலைமைக் கப்பல்கள், 30 நாச காரிக் கப்பல்கள், 18 காவல் கப்பல்கள், 38 இழுவைப் படகுகள், 206 நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட பல புதிய கப்பல்களைப் பெற்றது. இது தவிர 477 போர் படகுகளும் ஏராளமான துணைக் கப்பல் களும் கடற்படைக்கு அளிக்கப்பட்டன. யுத்தத்திற்கு முந்தைய மூன்றரை ஆண்டுகளில் மட்டும் 265 புதிய சண்டைக் கப்பல்கள் கட்டப்பட்டன.

யுத்தம் துவங்கவிருந்த தருணத்தில் சோவியத் கப்பற்படையில் 3 போர்க் கப்பல்கள், 7 குரூசர்கள், 59 தலைமைக் கப்பல்கள் மற்றும் நாசகாரிக் கப்பல்கள், 218 நீர்மூழ்கிக் கப்பல்கள், 269 டார்பேடோ படகுகள், 2,558 விமானங்கள் முதலியன இருந்தன.

சோவியத் யூனியனிடம் பலம் மிக்க இராணுவப்-பொருளாதார உள்ளாற்றல் இருந்தது. 1940ஆம் ஆண்டு 15 மில்லியன் டன் இரும்பும், 18 மில்லியனுக்கும் கூடுதலான எஃகும் உற்பத்தி செய்யப் பட்டன, 166 மில்லியன் டன் நிலக்கரியும் 31 மில்லியன் டன் எண்ணெயும் எடுக்கப்பட்டன, சுமார் 3 மில்லியன் டன் பருத்தி அறுவடை செய்யப்பட்டது. 1913ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 12 மடங்கு அதிகரித்த தொழிற்துறைப் பொருட்களின் உற்பத்தி யில் சோவியத் யூனியன் ஐரோப்பாவில் முதலிடத்தையும் உலகில் இரண்டாவது இடத்தையும் வகித்தது.

ஆனால் இராணுவ உற்பத்தியை விரிவுபடுத்தி, சோவியத் இரா ணுவத்தின் ஆயுதத் தளவாடங்களை மேம்படுத்துவது சம்பந்தமாகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் எதிரி கயமைத் தனமாகத் தாக்குதலைத் துவக்கும் முன் நிறைவேற்ற இயலவில்லை. இது பாசிச இராணுவத்துடனை முதல் சண்டைகளின் போக் கையும் முடிவையும் பாதிக்காமல் இருக்கவில்லை. அதே நேரத்தில், யுத்தத்திற்கு முந்தைய ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட பாது காப்புத் தொழிற்துறை செஞ்சேனைக்கு நவீன இராணுவத் தள வாடங்களை (முழுமையாக இல்லாவிட்டாலும் கூட) அளித்தது; இது செஞ்சேனையின் போர் திறமைக்கான பொருளாயத அடிப் படையாக விளங்கி, வரவிருந்த வெற்றிகளுக்கான நம்பகரமான அடித்தளமாகத் திகழ்ந்தது.

சர்வபொது கட்டாய இராணுவ சேவையைப் பற்றி 1939 செப்டெம்பரில் நிறைவேற்றப்பட்ட சட்டமும் பிரதேச வாரியான திரட்டலிலிருந்து ஊழியர் முறைத் திரட்டலுக்கு மாறியதும் இரா ணுவத்தில் சேவைக் காலத்தை 3 ஆண்டுகள் வரையிலும் கப்பற் படையில் இதை 5 ஆண்டுகள் வரையிலும் உயர்த்தியதும் சோவியத் இராணுவத்தை பலப்படுத்துவதில் முக்கியக் கட்டமாக அமைந்தன.

இந்த அடிப்படையில் முப்படைகளும் இவற்றின் படை வகை களும் வளர்க்கப்பட்டன, இவற்றின் கட்டமைப்பு மேம்படுத்தப் பட்டது.

தரைப்படையில் புதிய துப்பாக்கிப்படை, இயந்திரப்படை மற்றும் கவச டாங்கிப்படை யூனிட்டுகளும் விமான, பீரங்கி மற்றும் பொறியியல் படைப்பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டன. கடற்படை யிலும் வான் பாதுகாப்புப் படையிலும் பெரும் நிறுவன நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1941 நடுவில் சோவியத் இராணுவத்

தின் மொத்த எண்ணிக்கை 5 மில்லியனுக்கும் அதிகமானதாக இருந்தது. இது 1939இல் இருந்ததை விட 2.8 மடங்கு அதிகமாகும். யுத்தத்திற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் சோவியத் இராணுவம் 7,000க்கும் அதிகமான டாங்கிகள், சுமார் 30,000 போர்க்கள பீரங்கிகள், 50,000க்கும் அதிகமான மார்டர் பீரங்கிகள், சுமாராக 18,000 போர் விமானங்கள் ஆகியவற்றைப் பெற்றது.

எல்லைப்புறப் பிரதேசங்களை யுத்தத்திற்குத் தயார்படுத்தியது, அதாவது விமானத் தளங்களை ஏற்படுத்தியது, சாலைகளை விரிவுபடுத்தியது போன்றவை நாட்டின் தற்காப்புத் தன்மையைப் பலப்படுத்தியதில் பெரும் பங்காற்றின.

1939ஆம் ஆண்டு பழைய எல்லைப் புறப் பிரதேசங்களில் இருப்புப் பாதைகளின் போக்குவரத்துச் சக்தியில் சோவியத் யூனியனுக்கு இதன் மேற்கேயிருந்த அண்டை நாடுகளை விட 2.5 மடங்கு மேம்பாடு இருந்தது. ஆனால் மேற்கு உக்ரேனும் மேற்கு பெலோருஷ்யாவும் விடுவிக்கப்பட்ட பின் எல்லை 300—350 கி. மீ. தூரம் நகர்ந்தது. இப்பிரதேசங்களின் இருப்புப் பாதைகள் பாழடைந்திருந்தன: பல மார்க்கங்களில் இரண்டாவது பாதை அகற்றப்பட்டிருந்தது. மேலும் இங்கே இருப்புப் பாதை குறுகியதாக, மேற்கு ஐரோப்பியப் பாணியில் இருந்தது.

பிரதான படைத் தலைமையகம், குறிப்பாக ஜூக்கவ் தலைமை தாங்கிய போது, இருப்புப் பாதைகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமென வற்புறுத்தியது. இக்காரியத்திற்கு, புனரமைப்பு வேலை முழுவதற்கும் பெரும் முதலீடுகள்—சுமாராக 10 பில்லியன் ரூபிள்கள்—தேவைப்பட்டன. இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி அதைப் பயன்படுத்துவது எளிதாக இல்லை. எஸ்தோனியா, லாத்வியா, லித்துவேனியாவிலும் இருப்புப் பாதைகள் விஷயத்தில் இதே நிலைதான் நிலவியது.

இவ்வாறாக, யுத்தம் ஆரம்பமான போது சிக்கலான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது. முதல் போர்த்தந்திர படை வரிசையை ஒருமுனைப்படுத்தி நிறுத்த குறைந்தபட்சம் 25 நாட்களாயின.

பாசிச ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கிய போது முதல் போர்த்தந்திர படை வரிசையின் சோவியத் துருப்புகள் நிரந்தர இருப்பிடங்களில் இருந்தன, ஒரு பகுதி முகாம்களிலும் புதிய பிரதேசங்களுக்குச் செல்லும் வழியிலும் இருந்தது. எல்லைப்புற இராணுவ வட்டங்களின் விமானப்படை நிரந்தர விமானத் தளங்களில் இருந்தது. பல யூனிட்டுகளின் பீரங்கிகளையும் விமான எதிர்ப்புச் சாதனங்களையும் சுடும் பயிற்சிகளுக்காக பயிற்சிக் களங்களுக்கு எடுத்துச் சென்றிருந்தனர், சாப்பர் படைப்பிரிவுகள் பொறியியல் முகாம்

களுக்குச் சென்றிருந்தன. துணைப் படைகளைச் சேர்ந்த முதல் படை வரிசையின் துப்பாக்கிப்படை மற்றும் குதிரைப்படை டிவிஷன் கள் மேற்கு எல்லையிலிருந்து 5—50 கி. மீ. தள்ளியும் இரண்டா வது படை வரிசையின் டிவிஷன்கள் 50—100 கி. மீ. தள்ளியும் இருந்தன. இரண்டாவது படை வரிசைகளும் இராணுவ வட்டங் களின் சேமப்படைகளும் மற்றும் பாதுகாப்பு மக்கள் கமிசாரகத் திற்கு நேரடியாகக் கட்டுப்பட்ட டிவிஷன்களும் எல்லையிலிருந்து 100—420 கி. மீ. தள்ளி இருந்தன. பிரதான படைத் தலைமையின் சேமப் படைகள் இருப்புப் பாதைகளில் சென்று கொண்டிருந்தன. பாசிச ஜெர்மானியத் துருப்புகளோ 1941 ஜூன் 22 வாக்கில் ஏற்கெனவே அந்தந்தத் திசைகளில் இயங்குவதற்கு வசதியான படைத் திரட்டுகளாக ஒன்று சேர்க்கப்பட்டு, தாக்குதல் தொடுப் பதற்குத் தயாராக சோவியத் எல்லையின் மிக அருகே நிறுத்தப்பட் டிருந்தன.

இவ்வாறாக 1941 கோடையில், சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி தாக்குதலைத் தொடுக்கும் அபாயம் அதிகரித்த போது, மேற்கு எல்லையில் செஞ்சேனையை நிறுத்துவதற்கான தயாரிப்பு கள் சம்பந்தமாக சோவியத் படைத் தலைமையால் பெரிய அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் துருப்புகளைக் குவிப்பதை யும் எல்லைப்புற வட்டங்களில் உடனடியாகச் செயல்படும் பாது காப்புப் படைத் திரட்டுகளைத் தோற்றுவிப்பதையும் ஜூலை இறுதி யில்தான் முடிக்க முடிந்தது. அதாவது, மேற்கு எல்லைப்புற வட்டங் களின் துருப்புகள் முழு இராணுவத் தயார்நிலையில் வைக்கப் படாததாலும் போர்த்தந்திர ரீதியாக அவற்றை நிறுத்துவதை முடிக் காததாலும் இவை பரவலான போர்முனையில், பெரும் ஆழத்திற்கு சிதறிக் கிடந்தன என்பது இதன் பொருள். மொத்தமாக சக்தி களின் சமன்நிலை பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்குச் சாதகமாக— பொதுவாக 2 மடங்கும் முக்கியத் திசைகளில் 3—4 மடங்கும்— இருந்தது.

இராணுவத்தை முறைப்படி நிறுத்தி வைக்க ஏராளமான தேர்ச்சி மிக்க கமாண்டர்களும் அரசியல் போதகர்களும் இராணுவ நிபுணர் களும் தேவைப்பட்டனர். இவர்களைப் பயிற்றுவிப்பதற்காக 1941இல் பல இராணுவ கல்விக் கூடங்களும் இராணுவ விஞ்ஞானப் பேரவைகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆனாலும் யுத்தம் துவங்கிய போது படைப்பிரிவுகளுக்கு தேவையான அளவு கமாண்டர்களை அளிக்க முடியவில்லை.

சோவியத் போர்க் கலை இராணுவ நடவடிக்கைகளின் வடிவங் கள், முறைகள் சம்பந்தமாக அக்காலகட்டத்தில் மிக முற்போக் கானவையாயிருந்த கருத்துக்களை வகுத்தளித்தது. இராணுவத்

தின் முப்படைகளையும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமானத் தொடர்பில் பயன்படுத்தினால்தான் பலம் மிக்க எதிரியை வெற்றி கொள்ள முடியும் என்று கருதி போர்த்தந்திரம் நவீன ஆயுதப் போராட்டத்தின் தன்மையைச் சரிவர மதிப்பிட்டது. இது ''டாங்கி யுத்தம்'', ''வான் யுத்தம்'', ''கடல் யுத்தம்'' போன்ற பூர்ஷ்வா தத்துவங்களையும்—இவை முக்கியப் பங்கை முப்படைகளில் ஏதாவது ஒரு படைக்கு அல்லது ஒரு படை வகைக்கு மட்டும் தந்தன—மற்றும் ''மின்னல் வேக யுத்தத்தை'' ஆதாரமாகக் கொள்வதையும் நிராகரித்தது.

போர்த்தந்திரக் கலையில், சேனை மற்றும் படை நடவடிக்கைகளைத் தயார்படுத்தி நிறைவேற்றுவது சம்பந்தமான கோட்பாட்டு ரீதியாகப் புதிய, விஞ்ஞான பூர்வமான தத்துவம் சோவியத் இராணுவ விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டது. 30ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஆழ்ந்த நடவடிக்கைத் தத்துவம் இதன் அடிப்படையாகத் திகழ்ந்தது. காலாட்படை, டாங்கிகள், பீரங்கிகள், விமானப்படை மற்றும் வான் இறக்குப் படைகளின் ஒன்று சேர்ந்த தாக்குதல்களின் உதவியால் எதிரியின் பரப்பில் ஆழ ஊடுருவி எதிரியின் தற்காப்பை ஒரே சமயத்தில் செயலற்றதாக ஆக்குவது தான் இதன் நோக்கம். உலகில் வேறு எந்த இராணுவத்திடமும் இத்தத்துவம் இருக்கவில்லை.

படைப்பிரிவுகளிலும் கப்பல்களிலும் போதனைப் பணியை மேம்படுத்தவும் போர்வீரர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை உயர்த்தவும் விசேஷக் கவனம் செலுத்தப்பட்டது. இந்நோக்கத்தோடு இராணுவ மற்றும் கப்பற்படை கட்சி ஸ்தாபனங்களை உறுதிப்படுத்தவும் கமான்டர்கள் மத்தியில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1941 ஆரம்பத்தில் இராணுவத்திலும் கப்பற்படையிலும் 5 லட்சத்திற்கும் கூடுதலான கம்யூனிஸ்டுகளும்—இது 1938இல் இருந்ததை விட மும்மடங்கிற்கும் அதிகம்—20 லட்சத்திற்கும் அதிகமான கம்சமோல் உறுப்பினர்களும் இருந்தனர்.

ஆனால் எண்ணிக்கையில் கணிசமாக அதிகரித்துள்ள இராணுவத்தையும் கப்பற்படையையும் புனரமைத்து, மறு ஆயுதந்தரித்து, புதிய ஆயுதங்களைக் கையாள பயிற்சியளிக்க எதிரியின் ஆக்கிரமிப்பு துவங்கும் முன் வெகு குறைவான காலமே எஞ்சியிருந்தது. புதிய ரக விமானங்களும் டாங்கிகளும் குறைந்த அளவில்தான் உற்பத்தி செய்யப்பட்டன. லாரிகள், இழுவை சாதனங்கள் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் போதவில்லை. அந்நேரத்தில் நாட்டின் பொருளாதார வாய்ப்புகள் இவற்றை இன்னமும் குறைவான காலகட்டத்தில் செய்ய அனுமதிக்கவில்லை.

பொது இராணுவ-போர்த்தந்திர நிலவரத்தையும் பாசிச ஜெர்

மணி தாக்கக் கூடிய காலக்கெடுவையும் மதிப்பிடுவதில் இராணுவ-அரசியல் தலைமை இழைத்த பெரும் தவறுகளும் நாடு தற்காப்பிற்குத் தயாராவதன் மீது தாக்கம் செலுத்தின. சோவியத் யூனியனின் மீது படையெடுக்க ஜெர்மனி தயாராகி வருகிறது என்று செய்திகள் கிடைத்து கொண்டிருந்த போதிலும் வந்து கொண்டிருக்கும் யுத்தத்தை இராஜதந்திர வழியில் தள்ளி வைக்க முடியும் என்று பலர் நம்பினார்கள். மேற்கு இராணுவ வட்டங்களின் துருப்புகள் உரிய நேரத்தில் முழு இராணுவத் தயார் நிலைக்கு கொண்டு வரப்படவில்லை. ஹிட்லர் துருப்புகள் திடீரெனத் தாக்கக் கூடும் என்ற எச்சரிக்கையுடன் கூடிய கட்டளை எல்லைப்புற வட்டங்களுக்கு ஜூன் 21ஆம் தேதி மாலைதான் பிறப்பிக்கப்பட்டது. இது பல படைப் பிரிவுகளைச் சென்று அடையவேயில்லை. ஆக்கிரமிப்பாளனின் முதல் அடி சோவியத் துருப்புகளுக்கு எதிர்பாராததாயிருந்தது.

மாபெரும் சோவியத் படைத் தலைவரும் சோவியத் யூனியனின் மார்ஷலுமாகிய கெ. கா. ஜூக்கவ்—இவர் யுத்தம் துவங்கவிருந்த போது சோவியத் இராணுவ தலைமையகத்தின் தலைவராக இருந்தார்— **நினைவுகளும் சிந்தனைகளும்** எனும் தன்னுடைய நூலில், எதிர்நோக்கி வந்து கொண்டிருந்த ஹிட்லர் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பிற்கு தற்காப்பை ஏற்பாடு செய்வதில் நாடும் இராணுவமும் எப்படி ஈடுபட்டிருந்தது என்பதைப் பற்றிய புறவய ரீதியான மதிப்பீட்டைத் தருகிறார். ''நாட்டின் தற்காப்பு விஷயம் அதன் முக்கிய அம்சங்களிலும் திசைகளிலும் சரியாக இருந்தது என எனக்குத் தோன்றுகிறது. பல ஆண்டுகளாக பொருளாதார மற்றும் சமூக அம்சங்களில் எல்லாம் அல்லது இயன்றது அனைத்தும் செய்யப்பட்டன. 1939 முதல் 1941 நடுப்பகுதி வரையிலான காலகட்டத்தில் தற்காப்பை பலப்படுத்துவதற்காக மக்களும் கட்சியும் விசேஷ முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். இதற்கு ஏராளமான சக்தியும் சாதனங்களும் தேவைப்பட்டன. வளர்ச்சியடைந்த தொழிற்துறை, கூட்டுப்பண்ணை முறை, சர்வபொதுக் கல்வியறிவு, மக்களினங்களின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், சோஷலிச அரசின் பொருளாயத-ஆன்மீகச் சக்தி, போர்முனையையும் பின்னணியையும் ஒன்றுக இணைக்கத் தயாராக உள்ள லெனினியக் கட்சியின் தலைமை இவையனைத்தும் பிரம்மாண்டமான நாட்டின் தற்காப்புத் திறமைக்கு மகத்தான ஒரு அடிப்படையாக, பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் பெற்ற மாபெரும் வெற்றியின் முதல் காரணமாக விளங்கின'' என்று அவர் எழுதினார். ஆனால் அதோடு கூட ''எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் வைக்க வரலாறு உண்மையிலேயே மிகக் குறைவான சமாதான காலத்தைதான் நமக்கு அளித்தது. பலவற்றை நாம் சரியாக ஆரம்பித்தோம், பலவற்றை

முடிக்க முடியவில்லை. பாசிச ஜெர்மனி தாக்கும் நேரத்தை நிர்ண யிப்பதில் நாம் செய்த தவறு தாக்கம் செலுத்தியது. எதிரியின் முதல் அடிகளை எதிர்ப்பதற்கான தயாரிப்புகளில் இருந்த குறைபாடுகள் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தன''* என்று அவர் வலி யுறுத்தினார்.

இவ்வாறாக, நாட்டின் தற்காப்பு வன்மையை பலப்படுத்துவது சம்பந்தமான ஒரு சில நடவடிக்கைகள் சிறிது காலந்தாழ்த்தி எடுக்கப் பட்டாலும் முதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் சமூக-பொருளா தாரச் சாதனைகளும் சோஷலிசக் கட்டுமானப் போக்கில் உறுதி யடைந்த சோவியத் சமுதாயத்தின் சித்தாந்த-அரசியல் ஒற்றுமையும் சோவியத் மக்கள் பாசிசத்தின் மீது அடைந்த வெற்றிக்கு அஸ்தி வாரமிட்டன.

---

* கெ. கா. ஜூக்கவ், **நினைவுகளும் சிந்தனைகளும்**, மாஸ்கோ, 1974, பக்கங்கள் 255, 256.

அத்தியாயம் 3

ஜெர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு. ''மின்னல் வேக யுத்தம்'' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

1. சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனியின் துரோகமயமான தாக்குதல். யுத்தத்தின் ஆரம்பக் கட்டம்

1941ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் தேதி சுமார் அதிகாலை 4 மணிக்கு யுத்த அறிவிப்பின்றியே பாசிச ஜெர்மனி மற்றும் இதன் துணை நாடுகளின் இராணுவங்கள் கிட்டத்தட்ட மேற்கு எல்லை பூராவும் சோவியத் யூனியனுக்குள் துரோகத்தனமாக நுழைந்தன. எல்லா இடங்களிலும் கடும் சண்டைகள் மூண்டன. நாட்டின் மேற்குப் பிரதேசங்களில் இருந்த தொழிற்துறை மையங்கள், துறைமுக நகரங்கள், இருப்புப் பாதை முடிச்சுகள் மற்றும் இராணுவ மையங் கள் மீது ஆயிரக்கணக்கான ஜெர்மானிய குண்டு வீச்சு விமானங்கள் பெரும் தாக்குதலைத் தொடுத்தன. குறிப்பாக எல்லைப்புற வட்டங் களில் இருந்த விமானத் தளங்களின் மீது விண்ணிலிருந்து ஹிட்லரின் விமானப்படை பலத்த தாக்குதலைத் தொடுத்து தரையிலிருந்த 800 விமானங்களை ஒழித்தது. வான் சண்டைகளையும் கணக்கில் கொண்டால் யுத்தத்தின் முதல் நாளன்று சோவியத் விமானப்படை சுமார் 1,200 விமானங்களை இழந்தது. இது விண்ணில் ஆதிக்கத்தை வெல்ல பாசிச விமானப்படைக்கு வாய்ப்பளித்தது.

பாசிச டாங்கிகளும் மோட்டார் காலாட்படையும் பீரங்கிகள் மற்றும் விமானப்படையின் பலத்த ஆதரவோடு சோவியத் எல்லையை மீறி வெள்ளமென உட்புகுந்தன. பெருமளவு போர் தளவாடங்கள் இருந்த பீரங்கி சேமக் கிடங்குகளில் கிட்டத்தட்ட அனைத்தையும் மேற்குப் போர்முனையின் துருப்புகள் விரைவிலேயே இழந்தன. இது தவிர, வெவ்வேறு காரணங்களுக்காக இராணுவத் தயார்நிலைக்கு கொண்டுவரப்படாத ஏராளமான சோவியத் டாங்கி களையும் பீரங்கிகளையும் பாசிஸ்டுகள் கைப்பற்றினர். இது சக்திகளின் சமன்நிலையை இன்னமும் அவர்களுக்கு ஆதரவாக மாற்றியது.

குறிப்பாக லியபாயா, ஷவுலாய், கிரோத்னோ, பிரேஸ்த், விளதீமிர்-வலீனிஸ்கி, துப்னோ, பெரெமீஷ்ல் ஆகிய எல்லைப்புறப் பிரதேசங்களில் யுத்தத்தின் முதல் நாட்களில் கடும் சண்டைகள் மூண்டன. சோவியத் எல்லைக் காவற்படையின் பல பிரிவுகள் அசா

தாரணமான வீரத்துடன் போரிட்டன. உதாரணமாக, விளதீமிர்-வலீனிஸ்கி பிரதேசத்தில் லெப்டினென்டு லபாதினின் 13வது எல்லைக் காவற்படை நிலையம் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் 11 நாட்களுக்குப் போரிட்டது. பெரெமீஷ்லைப் பாதுகாத்த போர்வீரர்கள் பாசிஸ்டுகளின் தாக்குதலை வீரத்தோடு முறியடித்தனர். கடும் சண்டைகளுக்குப் பின் இவர்கள் படைத் தலைமையின் கட்டளைக்கேற்ப நகரத்தை விட்டு வெளியேறினர். ஆனால் மறுநாள் காலையே 99வது துப்பாக்கிப்படை டிவிஷனின் பிரிவுகள் திடீர் எதிர்த்தாக்குதலைத் தொடுத்து பெரெமீஷ்லை விடுவித்து ஐந்து நாட்களுக்கு வைத்திருந்தன. லியபாயாவைப் பாதுகாத்த 67வது துப்பாக்கிப்படை டிவிஷனின் போர்வீரர்கள் தெதாயெவின் தலைமையின் கீழ் உறுதியோடும் துணிவோடும் செயல்பட்டனர்.

பிரேஸ்த் கோட்டை, தேந்தெடுக்கப்பட்ட, ஹிட்லரின் சொந்த ஊர் ஆட்களால் ஆன 45வது காலாட்படை டிவிஷனின் கவனத்தை நீண்ட காலமாக தன்பக்கம் வைத்திருந்தது. முதல் சோவியத் நகரத்தில் இந்த டிவிஷன் அணிவகுத்துச் செல்லும் என்று தரப்பட்டிருந்த உறுதிமொழிக்குப் பதிலாக வார்ஸாவையும் பாரிசையும் பிடித்த இந்த டிவிஷன் பலவீனமடைந்து, புனரமைப்பதற்காக பின்னணிக்கு இட்டுச் செல்லப்பட்டது. எல்லா பக்கங்களிலும் வளைக்கப்பட்ட, குறைவான ஆட்களைக் கொண்டிருந்த பிரேஸ்த் கோட்டையின் பாதுகாப்பு ரெஜிமென்ட் கமிசார் ஃபமின், மேஜர் கவ்ரீலவ், கேப்டன் ஸுபச்சோவ் ஆகியோரின் தலைமையில் ஒரு மாதத்திற்கும் மேலாக எதிர்த்து நின்றது. கோட்டையின் சுவர்களில் இதைப் பாதுகாத்து நின்றவர்கள் எழுதியவை அப்படியே உள்ளன: ''நாங்கள் ஐவர் — செதோவ், கிரூதவ், பகலூப், மிஹாய்லவ், செலிவானவ். 22.6.1941 அதிகாலை 3.15க்கு நாங்கள் முதல் சண்டையை எதிர்கொண்டோம். செத்தாலும் சாவோமே தவிர இங்கிருந்து நகர மாட்டோம்!'' ''நான் இறக்கிறேன், சரணடையவில்லை! தாய் நாடே, விடைகொடு. 20. VII -41''.

ஹிட்லரின் ஜெனரல் கால்டர் ஜூன் 29ஆம் தேதி தனது நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினான்: ''எல்லா இடங்களிலும் ருஷ்யர்கள் கடைசி ஆள் வரை போராடுகின்றனர், ஒரு சில இடங்களில் மட்டுமே சரணடைகின்றனர் என்பதை போர்முனைச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன''.[*]

சோவியத் இராணுவத்தில் ஆரம்பத்திலிருந்தே ''முதல் தரமான போர்வீரர்கள் இருந்தனர்'' என்றும் இவர்கள் ''அசாதாரணமான

---

[*] ஃபெ. கால்டர், யுத்த நாட்குறிப்பு, தொகுதி 3, நூல் 1, பக்கம் 317 (ருஷ்ய மொழியில்).

உறுதியுடன் போரிட்டனர், வியக்கத்தக்க தாங்கும் சக்தியை உடையவர்களாயிருந்தனர்''* என்றும் பீல்ட்மார்ஷல் கிளேஸ்டும் பின்னுல் கூறினுன்.

பரவலான அளவில் வீரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் சோவியத் துருப்புகள் வீரம் மிக்க எதிர்ப்பைக் காட்டினுலும் விஞ்சி நின்ற எதிரியின் சக்திகளைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. மிகவும் அனுகூலமற்ற சூழ்நிலைகளில் யுத்தத்தில் நுழைந்த சோவியத் இராணுவத்தால் அந்நாட்களில் முழுமையான போர்முனையைத் தோற்றுவிக்கவும் முன்கூட்டியே ஆதாயமான நிலைகளை மேற்கொள்ளவும் உறுதியான தற்காப்பிற்கு ஏற்பாடு செய்யவும் இயலவில்லை.

ஜூலை நடுவில் இராணுவ நடவடிக்கைகள் பெரும் பரப்பில்—3,000 கி. மீ. தூரம் நீளத்திற்கும் முக்கியத் திசைகளில் 400—600 கி. மீ. தூரம் ஆழத்திற்கும்—நடைபெற்றன. இராணுவத்தின் சக்திகளைப் பலப்படுத்தும் வேகங்களிலும் இதே போக்குதான் தென்பட்டது. யுத்தத்தின் முதல் நாளன்று பாசிஸ்டுகள் 117 டிவிஷன்களை செயலில் இறக்கினர் என்ருல் 10 நாட்கள் கழித்து இரண்டாவது படை வரிசைகளைச் சேர்ந்த படை யூனிட்டுகளும் துணை நாடுகளின் துருப்புகளும் சண்டையில் இறக்கப்பட்டதை யடுத்து முதல் வரிசையில் இயங்கிக் கொண்டிருந்த எதிரியின் டிவிஷன்கள் 171 வரை உயர்த்தப்பட்டன.

சோவியத் யூனியனின் தரப்பில் எல்லைப்புறச் சண்டையில் பாதுகாப்புப் படைகள் மட்டுமே ஈடுபட்டன. அதற்கடுத்த நாட்களில் எல்லா மேற்கு எல்லைப்புற இராணுவ வட்டங்களின் துருப்புகளும்—170 டிவிஷன்கள்—ஆரம்ப நடவடிக்கைகளில் பங்கு கொண்டன. ஜூலை ஆரம்பத்தில், நாட்டின் உட்பகுதியிலிருந்து வந்த போர்த்தந்திர சேமப் படைகள் சண்டையில் பங்கேற்றன. மொத்தமாக இரு தரப்புகளின் சார்பிலும் யுத்தத்தின் ஆரம்ப வாரங்களில் சுமார் 400 டிவிஷன்களும் ஆயிரக்கணக்கான டாங்கிகளும் விமானங்களும் பத்தாயிரக்கணக்கான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் பெருமளவு மற்ற வகை ஆயுதங்களும் போரில் ஈடுபடுத்தப்பட்டன.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனை பூராவும் செஞ்சேனையின் உறுதியான, இடையருது வளர்ந்து வரும் எதிர்ப்பைச் சந்தித்த எதிரி (உயர்மட்ட படைத் தலைமையகம் போர்த்தந்திர சேமப் படைகளை இடையருது போர்க்களத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தது) தனது முயற்சிகளை சிதறிப் போகுமாறு செய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்டான். எதிரித் துருப்புகளின் தாக்குதல் வேகங்கள் பெரிதும் குறையத் துவங்கின (முதல் நாட்களில் நாளொன்றுக்கு

* B. Liddel Hart, *The German Generals Talk,* New York, Morrow, 1948.

30 கி. மீ. தூரம் முன்னேறிய எதிரி ஜூலை நடுவில் 6—7 கி. மீ. தான் முன் செல்ல முடிந்தது). பியார்னு, தார்த்தூ, ஸ்மலேன்ஸ்கிற்கு மேற்கே, லூகா ஆற்றோரம், கீவிற்கு செல்லும் வழி, உக்ரேன் தலைநகரிலிருந்து தெற்கே தினேப்பர் ஓரம் ஆகிய இடங்களில் எதிரி தன் தாக்குதலை நிறுத்த வேண்டியதாயிற்று. இந்த எல்லைகளில்தான் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஆரம்பக் கால நடவடிக்கைகள் முடிவடைந்தன. சோவியத் இராணுவத்தின் இரண்டாவது போர்த்தந்திரப் படை வரிசையைச் சேர்ந்த, உயர்மட்ட படைத் தலைமையகத்தின் பெரும் போர்த்தந்திர சேமப் படைகள் சண்டையில் இறக்கப்பட்டதையடுத்து 1941ஆம் ஆண்டு கோடைக் கால-இலையுதிர்க்கால நடவடிக்கையின் புதிய கட்டம் துவங்கியது.

யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில், போர்த்தந்திர முன்முயற்சியைக் கைப்பற்றி, வெட்டுத் தாக்குதல்களையும் ஆழமாகச் சுற்றிச் செல்வதையும் பெரும் படைத் திரட்டுகளை மூன்று பக்கங்களிலுமிருந்து சுற்றி வளைத்து செல்வதையும் பரவலாகப் பயன்படுத்திய எதிரியின் நடவடிக்கைகளுக்கு சோவியத் இராணுவம் தீவிர போர்த் தந்திரத் தற்காப்பைப் பதிலாக வைத்தது. எதிரியின் தாக்குதல் வாய்ப்புகளைச் சீர்குலைப்பதும் எதிரியின் முக்கியத் தாக்குதல் திரட்டுகளைக் களைத்துப் போகச் செய்து அவற்றைப் பலமிழக்கச் செய்வதும்தான் இதன் நோக்கமாகும். கடும் தற்காப்புச் சண்டைகளில் ஈடுபட்டிருந்த சோவியத் துருப்புகள் தங்களிடமிருந்த நிலைகளை உறுதியோடு பாதுகாத்த அதே நேரத்தில் தேவையெனில் இடையிலிருந்த நிலைகளுக்கும் பின்னணிகளுக்கும் பின்வாங்கின.

ஏராளமான எதிர்தாக்குதல்களும் படைகள் மற்றும் சேனைகளின் பதிலடிகளும்—சாதாரணமாக இவற்றில் டாங்கி யூனிட்டுகள் பங்கேற்றன—சோவியத் துருப்புகளின் தற்காப்பு நடவடிக்கைகளின் பிரிக்க இயலா அங்கமாக விளங்கின. உதாரணமாக, கௌனஸ் மற்றும் கிரோத்னோ பிரதேசங்களிலிருந்து சுவால்கி நகரை நோக்கியத் திசையில் வட மேற்கு மற்றும் மேற்கு சேனைகளின் பதிலடிகளும் லியூப்ளின் மீதான தென் மேற்கு சேனையின் பதிலடிகளும் இப்படிப்பட்டவைதான்.

சோவியத் துருப்புகளின் பல எதிர்தாக்குதல்களும் பதிலடிகளும் எதிர்ச் சண்டைகளாக, சமர்களாக மாறின. 1941 ஜூன் இறுதியில் லுட்ஸ்க், ரதேஹவா, பிரோது, ரோவ்னு பிரதேசத்தில் தென் மேற்குப் போர்முனையில் துவங்கிய எதிர் டாங்கி சமர், யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தின் மிகப் பெரும் எதிர் சமராக அமைந்தது. இதில் இரு தரப்புகளின் சார்பாயும் 1,500 டாங்கிகள் வரை கலந்து கொண்டன. சோவியத் துருப்புகளின் முக்கிய முயற்சிகள், எதிரியின் முதலாவது டாங்கித் திரட்டை முறியடிப்பதன்

மீது ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தன. ஹிட்லரின் ஜெனரல் கோட் இச்சமரைப் பின்வருமாறு சித்தரித்தான்: ''தெற்கு'' படைத் தொகுதிக்குதான் மிகவும் கடினமாக இருந்தது. வட பக்க யூனிட்டு களின் முன் பாதுகாத்து நின்ற எதிரியின் துருப்புகள் எல்லையி லிருந்து திருப்பியனுப்பப்பட்டன, ஆனால் இவை திடீர் தாக்குதலில் இருந்து விரைவாக சரிபடுத்திக் கொண்டு தனது சேமப் படைகள் மற்றும் உட்பகுதியிலிருந்த டாங்கிப் பிரிவுகளின் எதிர்தாக்குதல களால் ஜெர்மானியத் துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தின. முதலாவது டாங்கிப் பிரிவைப் பிளக்குமாறு 6வது படைக்கு இடப்பட்ட கட்டளை ஜூன் 28 வரை நிறைவேற்றப்பட வில்லை. ஜெர்மானியப் படைப் பிரிவுகள் முன்னேறும் பாதையில் எதிரியின் கடும் பதிலடிகள் பெரும் தடையாக இருந்தன''.[*]

எதிரியால் சீர்குலைக்கப்பட்ட போர்த்தந்திரப் போர்முனையை முக்கியத் திசைகளில் புனரமைத்து ஸ்திரப்படுத்துவதில் படைத் தலைமையின் போர்த்தந்திர சேமப் படைகள் பெரும் பங்காற்றின. உதாரணமாக மத்தியத் திசையில் மட்டும் யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் எதிரியால் குலைக்கப்பட்ட தற்காப்பை புனரமைப்பதற் காக ஜூன் 27 முதல் ஜூலை 10 வரை படைத் தலைமை 36 டிவிஷன் களை மேற்கு சேனைக்கு அனுப்பியது.

பாசிஸ்டுகள் யுத்தத்தின் முதல் நாட்களில் செஞ்சேனையிடம் சந்தித்த வீரம் மிக்க எதிர்ப்பு அவர்களுக்கு எதிர்பாராததாயிருந் தது. பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் கூற்றுப்படியே யுத்தத்தின் முதல் 53 நாட்களில் மட்டும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் ஜெர்மனி 3,90,000 போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும், அதாவது பாசிச ஜெர்மனியின் காலாட்படையில் 11.4 சதவிகிதத்தை பறிகொடுத்தது. அதே நேரத்தில் போலந்து, பிரான்ஸ், நார்வே, டென்மார்க், யுகோஸ்லாவியா, கிரீஸ், லுக்ஸம் பர்க்கில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் இராணுவ நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்த போது மொத்தமாக அவை 3,00,000க்கும் குறைவான போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் மட்டும் தான் இழந்தன.

மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஆரம்ப காலகட்டத்தின் பிர தான இராணுவ-அரசியல் முடிவு என்னவெனில், ''மின்னல் வேக'' யுத்த நடவடிக்கையின் மூலம் சோவியத் ருஷ்யாவை வெற்றி கொள் ளலாம் என்று கணக்கிட்ட ஹிட்லரின் ''பார்பரோஸ்ஸா'' திட்டம் முதன் முதலாகத் தீவிர விரிசல்களைத் தந்ததாகும். இழுபறியான

---

[*] கெ. கோட், **டாங்கி நடவடிக்கைகள்**, மாஸ்கோ, இராணுவ பதிப்பகம், 1961, பக்கம் 80 (ருஷ்ய மொழியில்).

யுத்தம் நடக்கும் என்ற போக்கு தென்பட்டது. இது பாசிச ஜெர்மனியின் திட்டங்களில் அடங்கியிருக்கவில்லை.

எல்லா போர்த்தந்திர திசைகளிலும் ஹிட்லரின் போர்த்தந்திரவாதிகள் திட்டமிட்டபடி யுத்த நடவடிக்கைகள் நடைபெறவில்லை. பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முன்னேற்றத்திற்கு மேன்மேலும் உறுதியான எதிர்ப்பு கிட்டியது. எதிரியை தற்காப்பிற்கு மாறும்படி சோவியத் துருப்புகள் அடிக்கடி நிர்ப்பந்தித்தன. ''ருஷ்யர்களின் உறுதியான எதிர்ப்பு நமது இராணுவ விதிமுறைகளின் எல்லா அம்சங்களின்படியும் போரை நடத்துமாறு நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. போலந்திலும் மேற்கேயும் விதிமுறைக் கோட்பாடுகளிலிருந்து ஓரளவு விலகி தன்னிச்சையாக செயல்பட முடிந்தது என்றால் இப்போது இது அனுமதிக்கத் தகாதது''* என்று தரைப்படைத் துருப்புகளின் தலைமையகத் தலைவன் ஜெனரல் கால்டர் ஜூன் 29ஆம் தேதி தனது அலுவலக நாட்குறிப்பில் எழுதினான். 1941ஆம் ஆண்டு ஜூலை 2இல் **Deutsche Allgemeine Zeitung** என்ற ஹிட்லர் பத்திரிகை பின்வருமாறு எழுதியது: ''கிழக்கே நடைபெறும் சண்டைகள் முற்றிலும் விசேஷத் தன்மையைப் பெற்றிருக்கின்றன. எல்லா இடங்களிலும் ருஷ்யர்கள் கடுமையான, உறுதியான எதிர்ப்பைக் காட்டுகின்றனர் என்பதில்தான் கிழக்குப் போர்முனை பூராவிலும் நடைபெறும் சமர் மாறுபடுகிறது''.

யுத்தத்தின் ஆரம்பக் கட்டம் கற்பித்த பாடங்கள் யாவை? இராணுவத்தின் விழிப்புணர்ச்சியையும் இராணுவத் தயார் நிலையையும் அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தயாரிப்பு நடவடிக்கைகளை யுத்தத்திற்கு முந்தைய காலத்திலேயே மேற்கொண்டிருப்பது அவசியம் என்பது இவற்றில் முக்கியமானதாகும்.

யுத்தத்தின் ஆரம்பக் கட்டம் கற்பித்த பாடங்களில், வானிலும் கடலிலும் ஆதிக்கத்தை வெல்வது உட்பட உடனடி போர்த்தந்திர லட்சியங்களை அடைவதற்காக முதல் தாக்குதலில் அதிகபட்ச சக்திகளையும் சாதனங்களையும் உட்படுத்த ஆக்கிரமிப்பு அரசுகள் காட்டிய நாட்டம், திடீர் தாக்குதலுக்காக இராணுவ நடவடிக்கைகளை மட்டுமின்றி அரசியல் மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளையும் இவை பயன்படுத்தியது, யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் தார்மீக-அரசியல் காரணியின் பங்கு பெரிதும் அதிகரித்தது ஆகியவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்த முடிவுகள் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தின்

---

* ஃபெ. கால்டர், **யுத்த நாட்குறிப்பு**, தொகுதி 3, பாகம் 1, பக்கம் 25 (ருஷ்ய மொழியில்).

சம்பவங்களால் முற்றிலுமாக ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றன. ஆக்கிர மிப்பு அரசுகள் பிரதேசப் போர்களில் திடீரெனத் தாக்குவதைப் பரவலாகப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக 1967இல் ஐக்கிய அரேபியக் குடியரசு, சிரியா, ஜார்டனுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு விமானப் படையின் திடீர் தாக்குதல்களுடன் துவங்கியது; 1945, 1962, 1965ஆம் ஆண்டுகளில் இந்தோனீஷியாவிற்கு எதிரான பிரிட்டன், ஹாலந்தின் ஆக்கிரமிப்பு கடல் இறக்குப் படையினரை திடீரென இறக்கியதுடனும் கப்பற் படை நடவடிக்கையோடும் துவங்கியது. 1960இல் காங்கோவிற்கு எதிரான அமெரிக்க ஐக்கிய நாடு, பெல்ஜியத்தின் ஆக்கிரமிப்பும் வான் இறக்குப் படைகளை திடீரென இறக்கியதால் நிறைவேற்றப் பட்டது.

எனவே அனுபவம் காட்டும்படி, எதிரியின் திடீர் தாக்குதலைத் தவிர்க்க உயர்ந்த நிரந்தர விழிப்புணர்ச்சியும் யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் இயங்க இராணுவத்திற்கு அவசியமான தயாரிப்பும் மிகச் சிறப்பான வேவுப் பணியும் மற்றும் புதிய படை அமைப்புகளைக் கொண்டு வந்து குவிப்பதற்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையும் அவசியம்.

இவ்வாறாக, யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் பாசிஸ்டுகள் பெலோருஷ்யா முழுவதையும், லித்துவேனியா, லாத்வியா, எஸ்தோனியா, மல்தாவியா, உக்ரேனின் பல பிரதேசங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி லெனின்கிராதுக்கு வெகு அருகில் வந்தனர். மரண அபாயம் சோவியத் யூனியனை எதிர்நோக்கியது. சோவியத் மக்கள் எவ்வளவு மகத்தான வீரத்தை வெளிப்படுத்திய போதிலும் போர்முனையில் நிலவிய மிக மோசமான சூழ்நிலையை இதனால் அடிப்படையில் மாற்ற இயலவில்லை. எதிரிக்கு தக்கப் பதிலடி தருவதற்காக எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டக் கூடிய பொது அரசு நடவடிக்கைகள் தேவைப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சி இந் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இது சிக்கலான, கடினமான சூழ்நிலையில் விரைவாக விஷயத்தைக் கிரகித்து, தாய் நாட்டைப் பாதுகாக்க சோவியத் மக்களைத் தட்டியெழுப்பியது. நாடு முழுவதும் ஒரே யுத்த முகமாக மாற்றப்பட்டது. ''எல்லாம் போர்முனைக்கே, எல்லாம் வெற்றிக்காக'' என்ற கட்சியின் கோஷம் சோவியத் மக்கள் அனைவருக்கும் கட்டாயச் சட்டமாக மாறியது.

ஜூலை இறுதியில் மொத்தம் 3,28,000 நபர்களையுடைய 1,755 சண்டை பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டன. எதிரி நாச வேலைக் காரர்கள் மற்றும் பாராசூட் படையினருக்கு எதிரான போராட்டத்தில் இவை முக்கியப் பங்காற்றின. பின்னால் இந்த பட்டாலியன்களில் பெரும் பகுதி நிரந்தர இராணுவத்தில் சேர்ந்தது. 1941ஆம்

ஆண்டின் கடுமையான கோடையிலும் இலையுதிர்க் காலத்திலும் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்களைக் கொண்டு குடிமக்கள் தொண்டர் படையின் 60 டிவிஷன்களும் 200 தனி ரெஜிமெண்ட்களும் ஏராளமான பட்டாலியன்கள், கம்பெனிகள், பிளேட்டோன்கள் மற்றும் அணிகள் போன்ற படைப்பிரிவுகளும் உருவாக்கப்பட்டன. இவற்றிலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை சுமாராக 20 லட்சம் ஆகும். இது தவிர சுமாராக ஒரு கோடி பேர் தற்காப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர், பொறியியல் அரண் களைக் கட்டிக் கொண்டிருந்தனர். 1941 இறுதியில் 400க்கும் அதிகமான புதிய செஞ்சேனை டிவிஷன்களை உருவாக்க முடிந்தது. யுத்தத்தின் முதல் அரையாண்டில் மட்டும் கம்யூனிஸ்டுக் கட்சி 11 லட்சத்துக்கும் அதிகமான கம்யூனிஸ்டுகளையும் 20 லட்சம் கம்சமோல் உறுப்பினர்களையும் 8,800 பொறுப்பு மிக்க கட்சிப் பணியாளர்களையும் இராணுவத்திற்கு அனுப்பி வைத்தது. பாசிசத் திற்கு எதிராக சோவியத் மக்கள் ஒருமனதோடு போராட எழுந்தது அவர்களுடைய அரசியல் முதிர்ச்சிக்கும் தமது தேசபக்த மற்றும் சர்வதேசக் கடமையை அவர்கள் எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதற்கும் சான்று பகர்ந்தது.

யுத்தம் துவங்கியதும், ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிரான போராட் டம் பற்றிய ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமான திட்டத்தை கம்யூனிஸ்டுக் கட்சி வகுத்தது. இது சோவியத் யூனியனின் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டியும் 1941ஆம் ஆண்டு ஜூன் 29இல் வெளியிட்ட ஆணையில் விவரிக்கப்பட்டிருந்தது. சகல வித சக்திகளையும் சாதனங் களையும் யுத்த நலன்களுக்கு அர்ப்பணிக்குமாறும் சோவியத் உள் நாட்டின் பணியை மாற்றியமைக்குமாறும் தேசியப் பொருளா தாரத்தை யுத்த வழிக்கு மாற்றுமாறும் இராணுவத்தை சகல வழிகளிலும் பலப்படுத்துமாறும் எதிரி ஆக்கிரமித்த இடங்களில் கொரில்லா இயக்கத்தை வளர்த்திடுமாறும் சித்தாந்த-அரசியல் பணி முழுவதையும் மாற்றியமைத்திடுமாறும் இந்த ஆணை கட்சி, சோவியத் மற்றும் சமூக ஸ்தாபனங்களிடம் கோரியது. ''ஒரு நிமிடத் தைக் கூட வீணடிக்காது, எதிரியுடனான போராட்டத்தில் ஒரு வாய்ப்பைக் கூட நழுவ விடாது விரைவாக ஒழுங்குபடுத்திக் கொண்டு இயங்கும் திறமையைதான் இப்போது எல்லாமே பொறுத்துள்ளது''* என்று ஆணையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்த ஆணை அப்போது ''ஒரு மாபெரும் அபாய எச்சரிக்கை

---

* சோவியத் யூனியனின் இராணுவத்தைப் பற்றி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி. ஆவணங்கள் 1917 — 1968, மாஸ்கோ, 1969, பக்கம் 301 (ருஷ்ய மொழியில்).

மணியாக ஒலித்தது. 'சோஷலிசத் தாயகம் அபாயத்தில் உள்ளது' என்ற பிரபல லெனினுடைய அறைகூவலின் எதிரொலிகள் இதில் கேட்டன. 'எல்லாம் போர்முனைக்கே! எல்லாம் வெற்றிக்காக!' எனும் கோஷத்தின் மூலம் கட்சி ஒவ்வொரு சோவியத் குடிமகனை யும் அபாயத்தை நேரடியாகப் பார்க்குமாறு செய்தது... நமது பல்தேசிய அரசின் மக்களினங்கள் அனைத்தும் தமது ஒருமனதான ஆன்மீக ஊக்கத்தால் ஆயுதப் பலத்தைப் பன்மடங்கு பெருக்கி உயர் தேசபக்த லட்சியத்தின் பெயரால், தமது தாய்நாட்டின் பாதுகாப்பின் பெயரால் எழுந்து நின்றனர்''* என்று சோவியத் யூனியனின் மார்ஷல் ஜுக்கவ் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினார்.

யுத்தத்தின் போக்கில் கம்யூனிஸ்டுக் கட்சி ''போரிடும்'' கட்சி யாகவும், சமர் புரியும் கட்சியாகவும் கட்சியின் மத்தியக் கமிட்டி நாட்டிற்கும் இராணுவத்திற்கும் உயர் மட்ட அரசியல் மற்றும் போர்த்தந்திரத் தலைமையை அளிக்கும் போர்க்கள தலைமையகமாக வும் மாறியது. கட்சி உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நிரந்தர இராணுவத்தில் இருந்தனர்.

உள்நாட்டு யுத்த அனுபவத்தை ஆதரமாகக் கொண்டு, சோஷ லிசத் தாயகத்தின் பாதுகாப்பை பற்றிய லெனினியக் கருத்துக்களை வழிகாட்டியாகக் கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சி மாபெரும் தேசபக்த யுத்தம் துவங்கியதும் ஆயுதப் போராட்டத்திற்கான கட்சித் தலைமை குறித்த திட்டவட்டமான முறையை உருவாக்கியது. போர்முனை மற்றும் உள்நாட்டின் முயற்சிகளை ஒன்றிணைக்கவும் முக்கியத் தீர்மா னங்களை விரைவாக ஏற்று செயல்படுத்தவும் ஜூன் 30ஆம் தேதி சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவும் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டியும் சோவியத் யூனியனின் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் சேர்ந்து ஸ்தாலினின் தலைமையில் அரசுத் தற்காப்புக் கமிட்டியை உருவாக் கின. அரசு அதிகாரம் முழுவதும் இந்த அரசுத் தற்காப்புக் கமிட் டிக்கு அளிக்கப்பட்டது.

எதிரி கைப்பற்றும் அபாயம் எதிர்நோக்கியிருந்த போர்முனை நகரங்களில் கட்சியின் பிரதேசக் கமிட்டி, நகரக் கமிட்டி முதல் செயலாளர்களின் தலைமையில் நகரத் தற்காப்புக் கமிட்டிகள் தோற்றுவிக்கப்பட்டன. செவஸ்தோப்பல், தூலா, ரஸ்தோவ், ஸ்தாலின்கிராத், கூர்ஸ்க் ஆகிய நகரங்களிலும்—மொத்தமாக 60க்கும் மேற்பட்ட நகரங்களில்—தற்காப்புக் கமிட்டிகள் உருவாக் கப்பட்டன.

---

* கெ. கா. ஜுக்கவ், **நினைவுகளும் சிந்தனைகளும்**, 4வது பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ, 1979, பக்கங்கள் 272—273.

இராணுவத்தை வழிநடத்துவதற்காக அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி பொலிட்பீரோவின் தீர்மானத்தால் 1941ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி பிரதான படைத் தலைமையகம் தோற்றுவிக்கப்பட்டது. இது ஜூலை 10 முதல் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் என்று அழைக்கப்படலாயிற்று.

யுத்தத்தின் முதல் நாட்களிலேயே இராணுவத் தளவாடங்களை—டாங்கிகளையும் விமானங்களையும்—உற்பத்தி செய்யும் பிரச்சினைகள் சம்பந்தமாக சில கூட்டங்கள் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்திய கமிட்டியின் பொலிட்பீரோவில் நடைபெற்றன. ஆயுத உற்பத்தி, தொழிற்துறைகளை நாட்டின் கிழக்கத்தியப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வது ஆகியவற்றின் மீது கட்சியின் மத்திய கமிட்டி பெரும் கவனம் செலுத்தியது. உணவுப் பொருள் இருப்புகள் முதலில் செஞ்சேனைக்கும் தொழிற்துறை மையங்களில் இருந்த மக்களுக்கும் அனுப்பப்பட்டன. நிதி இருப்புகளும் இராணுவச் செலவீனங்களை ஈடு கட்டுவதற்காக அனுப்பப்பட்டன.

பொலிட்பீரோவின் தீர்மானத்திற்கேற்ப ''போர்க் காலத்தில் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களின் வேலை நேரத்தைப் பற்றிய'' சுப்ரீம் சோவியத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கட்டாயமான கூடுதல் வேலை நேரங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டன, விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டன. இது தொழிற்துறை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தாமலேயே உற்பத்தித் திறன்களைக் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உயர்த்த உதவியது.

14 இராணுவ வட்டங்களில் இராணுவ சேவை புரிய இருந்தவர்களை அணி திரட்டியது, யுத்தம் துவங்கியதும் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் மேற்கொண்ட முதல் நடைமுறை ரீதியான நடவடிக்கைகளில் ஒன்றாகும். நாட்டின் மேற்குப் பிரதேசங்களில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஜூலை 1ஆம் தேதி வாக்கில் 53 லட்சம் பேர் இராணுவத்தில் சேவை புரிவதற்காக அணி திரட்டப்பட்டிருந்தனர். தற்காப்பிற்கு ஏற்பாடு செய்தல், சட்ட ஒழுங்கைப் பராமரித்தல் அரசுப் பாதுகாப்பிற்கு வகை செய்தல் ஆகியவை சம்பந்தமான அரசு ஆட்சி உறுப்புகளின் பணிகள் பூராவும் சேனைகள், படைகள் மற்றும் இராணுவ வட்டங்களின் இராணுவக் கவுன்சில்களுக்கும், இவை இல்லாத இடங்களில் படை யூனிட்டுகளின் தலைமை உறுப்புகளுக்கும் அளிக்கப்பட்டன.

இந்நடவடிக்கைகளாலும் இது போன்ற பிற நடவடிக்கைகளாலும் யுத்தத்தின் ஆரம்பக் கால தற்காலிக இடர்ப்பாடுகளைச்

சமாளித்து எதிரியின் மீது இறுதி வெற்றியை அடைவதற்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டது.

2. ஸ்மலேன்ஸ்க் சமர் (1941 ஜூலை 10 — செப்டெம்பர் 10)

எல்லைப்புறத்தில் சமர் மோசமாகி வந்ததால் சோவியத் படைத் தலைமை 1941ஆம் ஆண்டு ஜூன் இறுதியிலிருந்து தினேப்பரின் எல்லையில் இரண்டாவது போர்த்தந்திரப் படை வரிசையின் துருப்புகளை — 22வது, 19வது, 20வது, 21வது படைகளை — நிறுத்தி இவற்றை மேற்குச் சேனையில் சேர்த்தது. ஸ்மலேன்ஸ்க் பிரதேசத்தில் 16வது படை கொண்டு வந்து குவிக்கப்பட்டது. பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் டாங்கிப் பிரிவுகள் தினேப்பரை நெருங்கிய தருணத்தில் இப்படைகளை நிறுத்தி முடிக்க முடியாவிட்டாலும் (24 டிவிஷன்கள் மட்டுமே தம் நிலைகளை மேற்கொண்டன) மாஸ்கோ செல்லும் திசையில் அடுத்து நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போக்கின் மீது இவை தீர்மானகரமான தாக்கம் செலுத்தின. பாசிஸ்டுகள் மாஸ்கோ நோக்கி பிளந்து கொண்டு செல்லாமல் தடுப்பது தான் இவற்றின் கடமையாகும்.

மேற்கு த்வினு, தினேப்பர் ஆறுகளின் எல்லைகளைப் பாதுகாத்த சோவியத் துருப்புகளைச் சுற்றி வளைத்து, ஓர்ஷா, ஸ்மலேன்ஸ்க், வித்தெப்ஸ்க் பிரதேசங்களைக் கைப்பற்றி மாஸ்கோ நோக்கிய சுருக்கமான பாதையைக் கண்டுபிடிப்பதுதான் ''சென்டர்'' படைத் தொகுதியின் கடமையாயிருந்தது. இதற்குப் பின் ஜெனரல் கோட்டின் 3வது டாங்கிப் பிரிவை ''வடக்கு'' படைத் தொகுதியைப் பலப்படுத்த அல்லது கிழக்கு நோக்கி மேற்கொண்டு முன்னேறுவதற்காக, ஆனால் மாஸ்கோவைத் தாக்குவதற்கு இல்லாமல் மாஸ்கோவைச் சுற்றி வளைப்பதற்காகப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ''மாஸ்கோவிலும் லெனின்கிராதிலும் உள்ள மக்களை முற்றிலுமாக ஒழித்துக் கட்டும் பொருட்டு இந்நகரங்களை அடியோடு நாசப்படுத்தித் தரைமட்டமாக்க வேண்டும் என்ற ஹிட்லரின் முடிவு அசைக்க முடியாததாயிருந்தது. ஏனெனில் இப்படிச் செய்யாவிடில் குளிர் காலம் பூராவும் இம்மக்கள் அனைவருக்கும் உணவளிக்க வேண்டியிருக்கும். இந்நகரங்களை ஒழித்துக் கட்டும் கடமையை விமானப்படை நிறைவேற்ற வேண்டும். இதற்கு டாங்கிகளைப் பயன்படுத்தக் கூடாது. இது மக்களைப் படுநாசத்திற்கு உள்ளாக்கியிருக்கும், இதனால் போல்ஷிவிசம் மட்டுமின்றி பொதுவாக மாஸ்கோவிட்களும் (ருஷ்யர்களும்) மையங்களை இழப்பார்கள்''[*] என்று ஜெனரல்

---

[*] ஃபெ. கால்டர், குறிப்பிடப்பட்ட நூல், பக்கம் 101.

கால்டர் தன் நாட்குறிப்பில் எழுதினன்.

சக்திகளின் சமன்நிலை எதிரிக்கு ஆதாயமானதாயிருந்தது. உதாரணமாக ஸ்மலேன்ஸ்க் திசையில் ஆட்கள், பீரங்கிகள், விமானங்களில் எதிரி மேற்கு சேனையை இரு மடங்கும் டாங்கிகளைப் பொறுத்த மட்டில் மும்மடங்கும் விஞ்சி நின்றான்.

ஜூலை 10ஆம் தேதி ஜெர்மானிய 2வது, 3வது டாங்கிப் பிரிவுகள் தினேப்பர் ஆற்றின் எல்லையிலிருந்து ஸ்மலேன்ஸ்கை நோக்கி ஒன்று சேரும் திசைகளில் முன்னேறின. ஸ்மலேன்ஸ்க் சமர் துவங்கியது. இராணுவ நடவடிக்கைகளின் போக்கு மற்றும் முடிவுகளை வைத்து இதை 4 கட்டங்களாகப் பிரிக்கலாம்.

முதல் கட்டம் (ஜூலை 10—20). மேற்கு சேனையின் வலப் புறத்திலும் மையத்திலும் ஹிட்லர் துருப்புகள் தற்காப்பைப் பிளந்தன. எதிரியின் டாங்கி யூனிட்டுகள் 200 கி.மீ. தூரம் வரை முன்னேறி மொகிலோவைச் சுற்றி வளைத்து, ஓர்ஷா, ஸ்மலேன்ஸ்க், ஏல்னு, கிரீச்செவ் ஆகிய நகரங்களைக் கைப்பற்றின. சோவியத் துருப்புகள்—19வது, 16வது, 20வது படைகள்—ஸ்மலேன்ஸ்க் பிரதேசத்தில் எதிரியால் சுற்றி வளைக்கப்பட்டன.

எங்கும் கடும் சண்டைகள் நடைபெற்றன. இவற்றில் சோவியத் போர்வீரர்கள் ஆண்மையையும் வீரத்தையும் வெளிப்படுத்தினர். உதாரணமாக ஜூலை 16இல் எதிரியின் டாங்கிகள் தெற்கேயிருந்தும் வடக்கேயிருந்தும் ஸ்மலேன்ஸ்கினுள் நுழைந்த போது நகரின் தெருக்களில் மூண்ட கடும் சண்டைகள் இடைவிடாது இரவும் பகலும் நடைபெற்றன. ஜெர்மானிய 2வது டாங்கிப் பிரிவின் யூனிட்டுகள் தினேப்பர் ஆற்றின் வழியே நகரின் வடக்குப் பகுதிக்குச் சென்று 3வது டாங்கிப் பிரிவுடன் இணைய ஒரு சில நாட்கள் தொடர்ந்தாற் போல் முயன்றன. ஆனல் பாசிஸ்டுகளின் எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தன. கனரக ஆயுதங்கள் போதாமலிருந்தும் கூட, தாம் நின்ற நிலைகளை இறுதி மூச்சு வரை பாதுகாத்து நின்ற சோவியத் படைவீரர்கள் ஈடு இணையற்ற நெஞ்சுறுதியையும் வளைந்து கொடுக்காத தன்மையையும் வெளிப்படுத்தினர். "ருஷ்யப் போர் வீரனை இரண்டு முறை சுட்டு அதன் பின் அவனைப் பிடித்துத் தள்ளினல்தான் அவன் கீழே விழுவான்" என்று மாபெரும் பிரெடெரிக்கே கூறியுள்ளதாக 2வது டாங்கிப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் குடெரியான் பின்னல் எழுதினன். "1941இலும் நாங்கள் இதே முடிவிற்குத்தான் வர வேண்டியிருந்தது. இப்போர்வீரர்கள் அசைக்க முடியா உறுதியுடன் தங்கள் நிலைகளில் நின்றார்கள்."*

* வி. அ. அன்ஃபீலவ், "பிளிட்ஸ்கிரிகின்" படுதோல்வி, மாஸ்கோ, 1975, பக்கம் 26 (ருஷ்ய மொழியில்).

ஜெனரல் லுகீனின் 16வது படையும் வித்தெப்ஸ்கில் இருந்து பின்வாங்கிய ஜெனரல் கோனெவின் 19 படைப்பிரிவுகளும் ஸ்ம லேன்ஸ்க் பிரதேசத்தில் சண்டையில் ஈடுபட்டிருந்த போது மேற்கு சேனையின் முக்கியச் சக்திகள் ஓர்ஷா, மொகிலோவ், கிரீச்செவ், ஷ்லோபின் பிரதேசங்களில் தீவிர தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. ஜூலை 14ஆம் தேதி ஜெனரல் கூரச்கினின் 20வது படையின் மண்டலத்தில் ஜெட் பீரங்கி அமைப்புகளாகிய M-13 முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டன. இவைதான் பின்னால் சோவியத் படைவீரர்களால் அன்போடு ''கத்யூஷா'' என்று அழைக்கப்பட்டன. கேப்டன் ஃபிளேரவின் பேட்டரி இரயில் நிலையத்திற்கு அருகிலிருந்த எதிரி மீது கடும் அக்கினிப் பிழம்பைப் பொழிந்து, எதிரிக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

13வது படையின் ஒரு பகுதி சோஷ் ஆற்றருகே பிளந்து கொண்டு வந்தது, எஞ்சிய பகுதிகள் எதிரியின் டாங்கித் தாக்குதல் களை முறியடித்து மொகிலோவை தம் வசம் வைத்துக் கொண்டன. மேற்கு சேனையின் இடது புறத்தில் 21வது படை ரொகாச்சோவ் மற்றும் ஷ்லோபின் நகரங்களை விடுவித்து 2வது பாசிச ஜெர்மானியப் படையின் முக்கியச் சக்திகளை தினேப்பருக்கும் பெரெஸினாவிற்கும் இடைப்பட்ட ஆற்றுப் படுகையில் நீண்ட காலத்திற்குக் கட்டிப் போட்டது.

ஸ்மலேன்ஸ்க் சமரின் இரண்டாவது கட்டத்தில் (ஜூலை 27—ஆகஸ்டு 7) சோவியத் படைத் தலைமை சேமப் படைகளைக் கொண்டு மேற்குத் திசையில் எதிர்தாக்குதல்களைத் தொடுத்தது. இந்நோக் கத்திற்காக 5 இயங்குக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவை மேற்கு சேனைக்கு அளிக்கப்பட்டன. இவை பேலிய், யார்த்ஸெவ் மற்றும் ரோஸ்லாவ்ல் பிரதேசங்களிலிருந்து ஒன்று சேரும் திசை களில் ஸ்மலேன்ஸ்க் மீது தாக்குதலைத் தொடுத்தன. 16வது, 20வது படைகளோடு சேர்ந்து இயங்கி நகரின் வடக்கேயும் தெற் கேயும் எதிரியின் படைத் திரட்டுகளை முறியடிப்பதுதான் இவற்றின் கடமையாக இருந்தது.

21வது படையின் மண்டலத்தில் 3வது குதிரைப்படை டிவிஷன் மற்றும் பலப்படுத்தும் படைப்பிரிவுகளை உள்ளடக்கிய குதிரைப் படைத் தொகுதி எதிரியின் பின்னணியினுள் ஊடுருவித் தாக்கியது. எதிர்த்தாக்குதலின் போது சோவியத் துருப்புகளால் எதிரியின் ஸ்மலேன்ஸ்க் படைத் திரட்டை முறியடிக்க முடியாவிட்டாலும் மாஸ்கோ நோக்கிய ''சென்டர்'' படைத் தொகுதியின் முன் னேற்றத்தை இவை குலைத்தன, 20வது படையும் 16வது படையும் முற்றுகை வளையத்திலிருந்து மீண்டு முக்கிய சக்திகளோடு தினேப் பருக்கு பின்னால் விலகிச் செல்ல உதவின.

தற்காப்பிற்கு மாறி, சோவியத் படைகளால் ''சென்டர்'' படைத் தொகுதியின் பக்கவாட்டு பிரிவுகளுக்கு ஏற்பட்டுள்ள அபாயங்களை அகற்றும் வரை மாஸ்கோ நோக்கி முன்செல்வதை தள்ளிப் போடுவது என்று ஜூலை 30ஆம் தேதி பாசிச ஜெர்மானிய படைத் தலைமை தீர்மானம் செய்தது. ஆகஸ்டு 11ஆம் தேதி கால்டர் தன் நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினான்: ''மகத்தான ருஷ்யாவை நாம் சரிவர மதிப்பிடவில்லை என்பதை பொது நிலவரம் மேன்மேலும் தெட்டத்தெளிவாகக் காட்டி வருகிறது... இக்கூற்று எல்லா பொருளாதார மற்றும் ஸ்தாபன விஷயங்களுக்கும் தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் குறிப்பாக முற்றிலும் இராணுவ அம்சங்களுக்கும் பொருந்தும்''.[*]

ஸ்மலேன்ஸ்க் சமரின் மூன்றாவது கட்டத்தில் (ஆகஸ்டு 8—21) இராணுவ நடவடிக்கைகளின் மையம் தெற்கே மாறியது. ஆகஸ்டு 8ஆம் தேதி ஜெர்மானியர்களின் 2வது போர்க்களப் படையும் 2வது டாங்கிப் பிரிவும் மத்திய சேனைக்கு[**] எதிராகத் தாக்குதலைத் தொடுத்தன. பேரிழப்பிற்குப் பின் இவற்றால் தென் கிழக்கு மற்றும் தெற்குத் திசைகளில் சோவியத் துருப்புகளைப் பின்வாங்குமாறு நிர்ப்பந்தித்து ஆகஸ்டு 21 வாக்கில் 120-140 கி.மீ. தூரம் முன்னேறி கோமெல், ஸ்தாரோதூப் எல்லைக் கோட்டை அடைய முடிந்தது. இதன் மூலம் ஹிட்லர் படைகள் பிரியான்ஸ்க்[***] மற்றும் மத்திய சேனைகளுக்கும் இடையில் புகுந்து தென் மேற்கு சேனையின் பக்கவாட்டிற்கும் பின்னணிக்கும் ஆபத்தை ஏற்படுத்தின.

எதிரியின் துஹோவ்ஷினா, ஏல்னா படைத் திரட்டுகளை முறியடிக்கும் நோக்கத்தோடு மேற்கு சேனையும் சேம இருப்பு சேனையின் ஒரு பகுதியும் ஆகஸ்டு 16ஆம் தேதி தாக்குதலைத் தொடுத்தன. இந்தத் தாக்குதல் மேற்கொண்டு வளரா விட்டாலும் ஏல்னா அருகே நடந்த சண்டைகளில் எதிரியின் பலமான தற்காப்பு குலைக்கப்பட்டு ஹிட்லர் படைகள் கடும் தோல்வி அடையுமாறு செய்யப்பட்டது.

ஸ்மலேன்ஸ்க் சமரின் நான்காவது கட்டத்தில் (ஆகஸ்டு 22—செப்டெம்பர் 10) ''சென்டர்'' படைத் தொகுதியை தோற்கடித்து தென் திசையில் தென் மேற்கு சேனையின் பின்னணியை நோக்கிய இதன் முன்னேற்றத்தைக் குலைப்பதென சோவியத் படைத் தலைமை

---

[*] முற்றிலும் இரகசியமானது! படைத் தலைமைக்கு மட்டும், மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1967, பக்கம் 289 (ருஷ்ய மொழியில்).

[**] இது 1941ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் தேதி மேற்கு சேனையின் இடது புறப்படைகளிலிருந்தும் (13வது, 21வது) சேம இருப்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 3வது படையிலிருந்தும் தோற்றுவிக்கப்பட்டது.

[***] சேம இருப்பு மற்றும் மத்திய சேனைகளுக்கு இடையே பிரியான்ஸ்க் திசையின் பாதுகாப்பிற்காக 1941 ஆகஸ்டு 16ஆம் தேதி தோற்றுவிக்கப்பட்டது.

தீர்மானித்தது. இக்கட்டத்தில் எதிரியின் ஏல்ஞ படைத் திரட்டை முறியடிப்பது நிறைவு பெற்றது; பிரியான்ஸ்க் சேனையின் பிர தேசத்தில் 460 தாக்கு விமானங்கள், குண்டு வீச்சு விமானங்களைக் கொண்டு வான் நடவடிக்கை நிறைவேற்றப்பட்டது. இதன் விளை வாய் ஜெர்மானியர்களின் 2 வது டாங்கிப் பிரிவுக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

ஸ்மலேன்ஸ்க் அருகே மேற்கு சேனையின் துருப்புகள் செப் டெம்பர் 1ஆம் தேதி மீண்டும் தாக்குதலைத் தொடுத்தன. ஆனால் இது மேற்கொண்டு வளரவில்லை.

செப்டெம்பர் 10ஆம் தேதி மேற்குத் திசையில் இயங்கி வந்த சோவியத் துருப்புகள் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகத் தின் கட்டளைப்படி தற்காப்பிற்கு மாறின.

650 கி.மீ. நீளத்திற்கும் 250 கி.மீ. ஆழம் வரையிலும் நடை பெற்ற ஸ்மலேன்ஸ்க் சமரின் போது சோவியத் துருப்புகள் எதிரிக்கு பேரிழப்பை ஏற்படுத்தின, தங்கு தடையின்றி மாஸ்கோ நோக்கி முன்னேறலாம் என்ற பாசிஸ்டுகளின் திட்டங்களைக் குலைத்தன. இரண்டாம் உலக யுத்தத்திலேயே முதன் முதலாக பாசிச ஜெர்மா னியத் துருப்புகள் தாக்குதலை நிறுத்தி விட்டு தற்காப்பிற்கு மாறும் படி கட்டாயப்படுத்தப்பட்டன. மாஸ்கோவை பாதுகாக்கவும் மாஸ்கோ அருகே நடந்த சமரில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடிக்கவும் தயார்படுத்திக் கொள்ள சோவியத் படைத் தலை மைக்கு நேரம் கிடைத்தது.

ஸ்மலேன்ஸ்க் சமரின் போது சோவியத் துருப்புகள் மாபெரும் வீரத்தையும் ஆண்மையையும் யுத்தத் திறமையையும் வெளிப்படுத் தின. முதன்முதலாக, மிகச் சிறப்பாக இயங்கிய படை யூனிட்டு களுக்கு கார்டு யூனிட்டுகள் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

ஜெர்மானிய ஜெனரல்களின் ஒப்புதல்படி ஸ்மலேன்ஸ்க் சமரில் ஹிட்லர் துருப்புகள் 2,50,000 போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் இழந்தன. ''படைத் தலைமையகம் திட்டமிட்டபடி எதிரியை முறியடிக்க முடியாவிட்டாலும் எதிரியின் முக்கியத் தாக் குதல் படைத் திரட்டுகள் கடுமையாக அலைக்கழிக்கப்பட்டிருந்தன''° என்று சோவியத் யூனியனின் மார்ஷல் ஜூக்கவ் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினார்.

1941ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் தேதி பாசிச விமானப்படை மாஸ்கோவின் மீது முதல் தாக்குதலைத் தொடுத்தது. இதில் 250 குண்டு வீச்சு விமானங்கள் கலந்து கொண்டன. வான் எதிர்ப்பு

° கெ. கா. ஜூக்கவ், நினைவுகளும் சிந்தனைகளும், மாஸ்கோ, 1974, பக்கம் 309 (ருஷ்ய மொழியில்).

தற்காப்பு நன்முக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் ஒரு சில விமானங்கள்தான் தலைநகரின் மீது பறந்தன, இவையும் பெரும் சேதத்தை ஏற்படுத்தவில்லை. சோவியத் சண்டை விமானங்கள் 12 ஜெர்மானிய விமானங்களையும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் 10 ஜெர்மானிய விமானங்களையும் சுட்டு வீழ்த்தின.

3. லெனின்கிராத், கீவ், ஒதேஸ்ஸா மற்றும் செவஸ்தோப்பலின் வீரம் மிக்க பாதுகாப்பு

''சென்டர்'' படைத் தொகுதி ஸ்மலேன்ஸ்க் திசையில் சோவியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல்களை முறியடித்துக் கொண்டிருந்த போது ''வடக்கு'' படைத் தொகுதி லெனின்கிராதைக் கைப்பற்றவும் ''தெற்கு'' படைத் தொகுதி கீவையும் பின் ஒதேஸ்ஸாவையும் கைப்பற்றவும் முயற்சி செய்தன.

லூகா தற்காப்பு மண்டலத்தைப் பிளந்த பின் எதிரித் துருப்புகள் செப்டெம்பர் 8 முதல் 12 வரை லெனின்கிராதின் வெகு அருகில் வந்து ஷ்லிஸெல்புர்கைக் கைப்பற்றி நகரை தரைப் பகுதியிலிருந்து முற்றுகையிட்டன. மேற்கொண்டு நகரத்தினுள் புகவும் நகரை கிழக்கேயிருந்து சுற்றி வந்து பின்லாந்து துருப்புகளுடன் ஒன்றிணையவும் எதிரி செய்த எல்லா முயற்சிகளும் லெனின்கிராத் சேனையாலும் பால்டிக் கப்பற்படையாலும்—பொது மக்களின் தீவிர ஆதரவோடு—முறியடிக்கப்பட்டன. ஆனால் நகர நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. லதோகா ஏரி மூலமும் வான் மூலமும் மட்டுமே லெனின்கிராதோடு தொடர்பிருந்தது. இது லெனின்கிராதின் தற்காப்பை மிகவும் சிக்கலாக்கியது, ஏனெனில் இவ்வழியில் துருப்புகளுக்கும் நகரில் இருந்த ஜனங்களுக்கும் தேவையான அனைத்தையும் அளிக்க வகை செய்ய முடியவில்லை. செப்டெம்பர் 4 முதல் ஹிட்லர் துருப்புகள் தோஸ்னோ வட்டாரத்திலிருந்து லெனின்கிராதை நோக்கி கனரக பீரங்கிகளால் சுடத் துவங்கியதால் நிலைமை இன்னமும் சிக்கலாயிற்று.

நகரத்தை வீரத்தோடு பாதுகாத்து நின்றவர்களுக்கு நாடு முழுவதுமே உதவிக் கரம் நீட்டியது. ஜூலை 10 முதல் செப்டெம்பர் 30 வரை மட்டும் 17 துப்பாக்கிப்படை டிவிஷன்களும் 3 குதிரைப்படை டிவிஷன்களும் கூடுதலாக லெனின்கிராத் அருகே அனுப்பப்பட்டன. புரட்சியின் தொட்டிலும் லெனினின் நகரமுமாகிய லெனின்கிராதைக் கைப்பற்றி பின்லாந்து துருப்புகளுடன் இணைய வேண்டும் என்ற நோக்கத்தை பாசிச ஜெர்மானியத் துருப்புகளால் இறுதி வரை அடையவே முடியவில்லை. செப்டெம்பர் இறுதியில் லெனின்கிராதின் வடக்கு மற்றும் தெற்கு நுழைவாயில்களில்

போர்முனை ஸ்திர நிலைக்கு வந்தது. சோவியத் துருப்புகள் அசாதாரணமான வீரத்தையும் ஆண்மையையும் வெளிப்படுத்தி, மக்களின் தன்னலமற்ற உதவியோடு கடுமையான தற்காப்புச் சண்டைகளில் நகரைக் கைப்பற்ற விரும்பிய ஹிட்லர் படைத் தலைமையின் திட்டத்தை தவிடு பொடியாக்கின.

வட மேற்கு திசையிலிருந்த துருப்புகள் லெனின்கிராதின் மீதான எதிரியின் தாக்குதலை முறியடித்துக் கொண்டிருந்த போது தென் மேற்கு சேனை கீவ் திசையில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களை எதிர்த்து போரிட்டுக் கொண்டிருந்தது. ஆகஸ்டு 8ஆம் தேதி கீவ் நகரைக் கைப்பற்றி அதே நாளன்று நகரின் மைய சாலையாகிய கிரெஷாதிக்கில் இராணுவ அணிவகுப்பை நடத்துமாறு ஹிட்லர் கட்டளை பிறப்பித்தான். ஆனால் இக்கட்டளை நிறைவேற்றப்படவில்லை. குறுகிய காலகட்டத்திலேயே கீவ் பலம் மிக்க தற்காப்பு பிரதேசமாக மாற்றப்பட்டது. இரண்டு மாதங்களுக்கும் மேலாக கடுமையான சண்டைகள் நீடித்தன. லெனின்கிராத் நகரின் வீரஞ்செறிந்த பாதுகாப்பைப் போன்றே கீவ் நகரின் வீரஞ்செறிந்த பாதுகாப்பும் ஹிட்லரின் ''பிளிட்ஸ் கிரிக்'' திட்டத்தைக் குலைப்பதில் பெரும் பங்காற்றின. கீவ் நகரைப் பாதுகாத்து நின்றவர்கள் தமது வீரத்தாலும் திறமையாலும் ''தெற்கு'' படைத் தொகுதியின் கணிசமான சக்திகளை தம் பக்கம் பிடித்து வைத்திருந்தனர். மேலும் கீவ் நகரின் வீரம் மிக்க பாதுகாப்பு, ''சென்டர்'' படைத் தொகுதியின் ஒரு பகுதியை தெற்கு நோக்கித் திருப்புமாறு பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையை நிர்ப்பந்தித்தது. உக்ரேனின் தலைநகரைப் பாதுகாப்பதில் குடிமக்கள் தொண்டர் படைகள் இராணுவத்திற்கு பெரிதும் உதவின.

மேற்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் தாக்குதல்களின் மூலம் கீவ் நகரைக் கைப்பற்றவும் நகரைச் சுற்றி வளைத்து இதைப் பாதுகாத்து நிற்கும் சோவியத் துருப்புகளைச் சிதறடிக்கவும் எதிரி பன்முறை முயன்றான். பேரிழப்பை விலையாகத் தந்துதான் எதிரியால் நகரத்திற்குள் நுழைய முடிந்தது. செப்டெம்பர் 19ஆம் தேதி 37வது படையினர் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகத்தின் கட்டளைக்கேற்ப கீவ் நகரை விட்டு வெளியேறி கிழக்கு திசையில் விலகிச் சென்றனர்.

கீவ் நகரின் தற்காப்பு 71 நாட்கள் தொடர்ந்தது. இக்காலகட்டத்தில் ஜூலையிலும் ஆகஸ்டிலும் இப்பிரதேசத்தில் தினேப்பரின் கிழக்குக் கரைக்கு பிளந்து கொண்டு செல்ல பாசிச ஜெர்மானியத் துருப்புகள் செய்த எல்லா முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. 20 டிவிஷன்கள் அடங்கிய எதிரியின் பலம் மிக்க படைத்

திரட்டு உக்ரேன் தலைநகரப் பிரதேசத்தில் நீண்ட காலத்திற்குக் கட்டிப் போடப்பட்டது. ஜெர்மானியர்களின் முதல் டாங்கிப் பிரிவும் 2 வாரத்திற்குத் தாமதப்படுத்தப்பட்டது.

ஒதேஸ்ஸாவின் வீரஞ்செறிந்த பாதுகாப்பும் பாசிச ஜெர்மனியின் ''மின்னல் வேக யுத்த'' திட்டத்தை சீர்குலைப்பதில் பெரும் பங்காற்றியது. இந்நகரைக் கைப்பற்றுவதற்கு பாசிஸ்டுகள் பெரும் முக்கியத்துவம் அளித்தனர். இது கிரீமியாவிற்கு செல்லும் வழியைப் பாதுகாக்கும் கருங்கடல் கப்பற்படைத் தளங்களில் ஒன்ருக இருந்தது. எனவே ஒதேஸ்ஸாவை நோக்கி பெரும் சக்திகள்—ஜெர்மானியக் காலாட்படை மற்றும் டாங்கிப் படைப் பிரிவுகளால் பலப்படுத்தப்பட்ட 4வது ருமேனியப் படை, அதாவது மொத்தம் 20க்கும் அதிகமான டிவிஷன்கள்—அனுப்பப்பட்டன. ஒரு சில நாட்களில் நகரத்தைக் கைப்பற்றலாம் என்று கணக்கிட்டு ஆகஸ்டு 8ஆம் தேதி எதிரி தாக்குதலைத் துவக்கினுன்.

4 டிவிஷன்களை உள்ளடக்கிய பிரிமோர் படையும் கருங்கடல் கப்பற்படையும் ஒதேஸ்ஸாவைப் பாதுகாத்தன. இது தவிர நகர மக்கள் எதிரியுடனுன தீவிரப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். இங்கே செயல்பட்ட எதிரியின் துருப்புகளை போர்முனையின் வேறு இடங்களுக்கு மாற்றும் வாய்ப்பை ஹிட்லரின் படைத் தலைமைக்கு அளிக்காது வீரஞ்செறிந்த ஒதேஸ்ஸாவாசிகள் 60 நாட்கள் எதிரியின் தாக்குதலைச் சமாளித்து வந்தனர். எதிரி இந்நகரில் நீண்ட காலத்திற்குக் கட்டிப் போடப்பட்டது மட்டுமின்றி எதிரிக்கு பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்படுத்தப்பட்டன.

ஒதேஸ்ஸா பிரதேசத்தில் பாதுகாத்து நின்ற சோவியத் துருப்புகளின் நிலை உறுதியானதாயும் ஸ்திரமானதாயுமிருந்தது. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் மற்றப் பகுதிகளில் எதிரிக்கு பதிலடி தருவதற்காக துருப்புகளை நகரிலிருந்து வெளியேற்றுமாறு சோவியத் படைத் தலைமை கட்டாயப்படுத்தப்பட்டது. கருங்கடல் கப்பற்படையின் முக்கிய கடற்படைத் தளமாகிய செவஸ்தோப்பலின் பாதுகாப்பை வலுப்படுத்துவது அவசியமாயிருந்த காரணத்தால் துருப்புகளை ஒதேஸ்ஸாவிலிருந்து கிரீமியாவிற்கு கொண்டு செல்வது என்று 1941ஆம் ஆண்டு செப்டெம்பர் 30ஆம் தேதி உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் முடிவு செய்தது. இந்நேரத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் பெரும் பகுதியில் நிலவரம் ஸ்திரமாயிருந்தது. லெனின்கிராத் அருகேயும் ஸ்மலேன்ஸ்கிற்குக் கிழக்கேயும் தினேப்பரின் ஆற்றுமுகப் பகுதியிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன. ஹார்க்கவ் மற்றும் ரஸ்தோவ் திசைகளில் மட்டுமே இவை முன்னேறிக் கொண்டிருந்தன.

1941ஆம் ஆண்டு அக்டோபர் 30இலிருந்து பெரும் கடலோர நகரமும் கருங்கடலில் உள்ள பிரதான கப்பற்படைத் தளமுமாகிய செவஸ்தோப்பலின் பாதுகாப்பு ஆரம்பமாகியது. இந்நகரின் பாதுகாப்பு அமைப்பு 1941 ஜூலையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது. இது 3 பாதுகாப்பு எல்லைகளை—முன்னணி, பிரதான, பின்னணி எல்லைகள்—உள்ளடக்கியிருந்தது. ஆனால் இவற்றின் கட்டுமானம் முழுமை பெறவில்லை. இங்கிருந்த பாதுகாப்புச் சக்திகளிடம் சுமார் 23,000 போர்வீரர்களும் 150 போர்க்கள மற்றும் கரையோர பீரங்கிகளும் இருந்தன. கரையோர பீரங்கிகள் மற்றும் கருங்கடல் கப்பற்படையைக் கொண்டு கடலிலிருந்து பாதுகாப்பிற்கு வகை செய்யப்பட்டிருந்தது. 11வது பாசிச ஜெர்மானியப் படைதான் செவஸ்தோப்பலின் மீது படையெடுத்தது. போகிற போக்கில் நகரத்தைக் கைப்பற்ற இது செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. செவஸ்தோப்பலை பாதுகாத்தவர்கள் ஈடு இணையற்ற உறுதியையும் வீரத்தையும் வெளிப்படுத்தினர். சிறப்பான தலைமைக்காக நவம்பர் 4ஆம் தேதி நகரைப் பாதுகாத்து நின்றவர்களால் செவஸ்தோப்பல் தற்காப்பு மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதில் தரைப்படைகளும் கப்பற்படைச் சக்திகளும் இடம் பெற்றிருந்தன; நவம்பர் 9 முதல் மேஜர் ஜெனரல் பெத்ரோவ் தலைமையிலான பிரிமோர் படையும் இதில் அடங்கியிருந்தது. கருங்கடல் கப்பற்படைத் தலைவன் வைஸ் அட்மிரல் ஒக்தியாப்ரிஸ்கி செவஸ்தோப்பல் தற்காப்பு மாவட்டத்தின் தலைவனாக நியமிக்கப்பட்டார்.

செவஸ்தோப்பலின் 8 மாத தற்காப்பின் விளைவாக எதிரியின் பெரும் சக்திகள் கட்டிப் போடப்பட்டிருந்தன. இவற்றில் கணிசமான பகுதி ஒழிக்கப்பட்டதால் சோவியத்-ஜெர்மானியப் போர் முனையின் தென் பகுதியில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முன்னேற்ற வேகங்கள் பெரிதும் குறைக்கப்பட்டன. இங்கே எதிரியின் தரப்பில் 3,00,000 பேர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். செவஸ்தோப்பல் தற்காப்பின் சிறப்பு அம்சம் என்னவெனில், தரைப்படையானது கப்பற்படையுடனும் விமானப் படையுடனும் சேர்ந்து மிகச் சரியாக இணைந்து செயல்பட்டதாகும். ஒரே படைத் தலைமையைத் தோற்றுவித்ததன் மூலமும் நிர்வாகத்தை திறம்பட ஒழுங்கமைத்ததன் மூலமும் இது அடையப்பட்டது. இத்தற்காப்பின் போது சோவியத் போர்வீரர்களின் வீரம் பரந்த அளவில் வெளிப்பட்டது.

லெனின்கிராத், கீவ், ஒதேஸ்ஸா மற்றும் செவஸ்தோப்பலின் வீரஞ்செறிந்த தற்காப்பு மாபெரும் தேசபக்த யுத்த வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

4. மாஸ்கோ அருகே நடந்த சமர் (1941 செப்டெம்பர் 30 — 1942 ஏப்ரல் 20)

பாசிச ஜெர்மானிய இராணுவத்தின் அழிவை முன்கூட்டியே தீர்மானித்த மாபெரும் முக்கியச் சமர்களில் மாஸ்கோ அருகே நடந்த சமர் ஒன்றாகும். இரண்டாவது உலக யுத்தத்தின் போக்கில் ஹிட்லரின் இராணுவம் அடைந்த முதல் பெருந் தோல்வி, அவ்வளவு கடினமான, சிக்கலான காலகட்டத்தில் சோவியத் மக்களும் இராணுவமும் அடைந்த முதல் பெரும் வெற்றி யுத்தத்தில் அடிப்படை ரீதியான மாற்றத்தின் துவக்கத்திற்கு அடையாளமாகத் திகழ்ந்தது. இச்சமரில் இரு தரப்புகளிலுமாகச் சேர்த்து 20 லட்சத்திற்கும் கூடுதலான ஆட்களும் சுமார் 3,000 டாங்கிகளும் 2,000 வரையிலான விமானங்களும் 25,000க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இந்த மாபெரும் சமரில் சோவியத் போர் வீரர்கள் வீரத்தையும் தாய்நாட்டின் மீதான தன்னலமற்ற விசுவாசத்தையும் வெளிப்படுத்தினர், சமமற்ற போராட்டத்தின் சிக்கலான சூழ்நிலைகளில் சோவியத் போர்க் கலை பாசிச ஜெர்மனியின் போர்க் கலையை விட தான் விஞ்சி நிற்பதைக் காட்டி கடினமானதொரு தேர்வில் வெற்றி பெற்றது.

செஞ்சேனைக்கு மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில்தான் மாஸ்கோ அருகே சமர் துவங்கி, நடைபெற்றது. துரோகத்தனமாக சோவியத் தாய்நாட்டின் மீது பாய்ந்த எதிரியின் விஞ்சி நின்ற சக்திகளுக்கு எதிரான கடும் போராட்டத்தில் சோவியத் துருப்புகளுக்கு கணிசமான அளவு ஆட் சேதமும் இராணுவத் தளவாடங்களின் இழப்பும் ஏற்பட்டன. எதிரி நாட்டின் கணிசமான பகுதியை ஆக்கிரமித்திருந்தான், லெனின்கிராதை முற்றுகையிட்டான், ஹார்க்கவ் தன்பாஸ், கிரீமியாவை நோக்கிப் பாய்ந்தான். தொழிற்துறையின் மூலப்பொருள் இருப்புகளையும் திறமைகளையும் விரிவுபடுத்தவும் செஞ்சேனையின் புதிய படைப்பிரிவுகளையும் யூனிட்டுகளையும் தோற்றுவிக்கவும் எதிரி ஆக்கிரமித்திருந்த பகுதிகளில் கொரில்லா இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யவும் கட்சியும் அரசாங்கமும் தீர்மானகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

எல்லைப்புறச் சண்டைகளிலும் லெனின்கிராதிற்குச் செல்லும் வழியிலும் ஸ்மலேன்ஸ்க் அருகேயும் கீவ் அருகேயும் நடந்த சமர்களிலும் செஞ்சேனை எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவனது சக்திகளை கணிசமான அளவு களைப்படையச் செய்திருந்தது. குளிர்காலத்திற்கு முன்னதாக லெனின்கிராதையும் தெற்கேயிருந்த எண்ணெய் பிரதேசங்களையும் கைப்பற்ற வேண்டும் என்ற

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டம் தோல்வி யடைந்தது. 1941ஆம் ஆண்டு செப்டெம்பர் இறுதியில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் வோல்ஹவ் ஆறு, இல்மேன் ஏரி, ரோஸ் லாவ்ல், பல்தாவா, ஸபரோஷ்யே ஆகிய இடங்களில் நின்றன. மிகப்பெரும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் முக்கியக் கடமைகளை நிறைவேற்றாத ஜெர்மானிய படைத் தலைமை, மாஸ்கோவைக் கைப்பற்றும் நோக்கத் தோடு மத்தியத் திசையில் முக்கியச் சக்திகளை ஒருமுனைப்படுத்து வது என்று முடிவு செய்தது.

அரசியல் மற்றும் போர்த்தந்திர நோக்கிலிருந்து பார்க்கும் போது மாஸ்கோவின் பெரும் முக்கியத்துவம் பாசிஸ்டுகளுக்கு நன்கு புரிந்தது. உலக மக்கள் அனைவருக்கும் இது பாசிசத் திற்கு எதிரான புனிதப் போருக்கு எழுந்த முதல் சோஷலிச நாடாக, மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஒழுங்கமைப்பு மைய மாகத் திகழ்ந்தது. சோவியத் தலைநகரில் ஏராளமான பாதுகாப்பு மற்றும் தொழிற்துறை நிறுவனங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இது நாட்டிலேயே மிகப் பெரும் இருப்புப் பாதை மற்றும் சாலைகளின் மையமாக விளங்கியது. இதைக் கைப்பற்றினால், பாரென்ட்ஸ் கடலிலிருந்து கருங்கடல் வரையிலான மிகப் பெரும் பரப்பில் இயங்கி வந்த சேனைகளுடனும் கப்பற்படைகளுடனும் உள்நாட் டிற்கு உள்ள தொடர்புகள் பெரிதும் குலைக்கப்படும்.

மாஸ்கோவைக் கைப்பற்றும் திட்டத்தை நிறைவேற்றப் புகுந்த ஹிட்லர் தன் துருப்புகளுக்கு விடுத்த அறைகூவலில் பின்வருமாறு எழுதினான்: ''போர்வீரர்களே, உங்கள் முன் மாஸ்கோ நிற்கிறது! இரண்டு ஆண்டுகளில் கண்டத்தின் எல்லா தலைநகரங்களும் உங்கள் முன் தலை வணங்கின, நீங்கள் மிகச் சிறந்த நகரங்களின் தெருக் களில் வெற்றி நடை போட்டீர்கள். மாஸ்கோ எஞ்சியுள்ளது. அதை தலை வணங்கச் செய்யுங்கள், உங்கள் ஆயுதத்தின் பலத்தை அதற்குக் காட்டுங்கள், அந்நகரின் சதுக்கங்களில் நடைபோடுங்கள். மாஸ்கோதான் யுத்தத்தின் முடிவு, மாஸ்கோ ஓய்வைக் குறிக்கும். முன்னேக்கிப் பாயுங்கள்!''

''இன்று மாஸ்கோ நிற்கும் இடத்தில் ஒரு பெரும் கடல் உரு வாக்கப்படும். அது ருஷ்ய மக்களின் தலைநகரை நாகரிக உலகிலிருந்து என்றென்றைக்குமாக மறைக்கும்''* என்று அறிவித்தான் ஹிட்லர். புதிய பாசிச ஜெர்மானியத் தாக்குதலின் (''தைபூன்'' நடவடிக்கை) திட்டப்படி, சோவியத் தற்காப்பு போர்முனையைப் பிளவுபடுத்தி,

---

* *Offiziere gegen Hitler. Nach einem Erlebmisbericht von Fabian von Schlabrendorf,* Zürich, 1946, S. 48.

வியாஸ்மா, கிஷாத்ஸ்க், பிரியான்ஸ்க் பிரதேசங்களில் மேற்கு, சேம இருப்பு மற்றும் பிரியான்ஸ்க் சேனைகளைச் சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டும் பொருட்டு மூன்று போர்க்களப் படைகளையும் (9வது, 4வது, 2வது) மூன்று டாங்கிப் பிரிவுகளையும் (3வது, 4வது, 2வது) கொண்டு துஹோராவ்ஷினு, ரோஸ்லாவ்ல், ஷோஸ்த்கா பிரதேசங்களில் இருந்து கிழக்கு மற்றும் வட கிழக்குத் திசைகளில் பலத்த தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. மேற் கொண்டு காலாட்படை யூனிட்டுகளைக் கொண்டு முன்புறமிருந்து மாஸ்கோ மீது தாக்குதலைத் தொடுத்து, வாகன யூனிட்டுகளைக் கொண்டு வடக்கேயும் தெற்கேயுமாக அதைச் சுற்றி வந்து சோவி யத் தலைநகரத்தைக் கைப்பற்ற எண்ணப்பட்டது.

பாசிச ஜெர்மனியின் படைத் தலைமை தாக்குதலுக்கான தீவிரத் தயாரிப்பை மேற்கொண்டது. தலைநகத்தைக் காத்து நின்ற சோவியத் துருப்புகளுக்கு எதிராக இது மிகப் பெரும் தேர்ந்தெடுக்கப்பட்ட சக்திகளைக் கொண்டு வந்து குவித்தது. போர்முனையில் இயங்கிய மொத்தத் துருப்புகளில் ஐந்தில் இரண்டு பங்கிற்கும் அதிகமாகவும் முக்கால்வாசி டாங்கிகளையும் கிட்டத்தட்ட பாதியளவு சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் சுமார் மூன்றில் ஒரு பங்கு விமா னங்களையும் இது இவ்வாறு கொண்டு வந்தது.

மாஸ்கோவை நோக்கி நின்ற படைத் திரட்டில் 74.5 டிவிஷன் கள் (14 டாங்கி மற்றும் 8 மோட்டார் டிவிஷன்கள் உட்பட) இருந்தன. 18,00,000க்கும் மேற்பட்ட ஆட்களும் 1,700 டாங்கி களும் 14,000க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கி களும் பாசிஸ்டுகளுக்குத் தோன்றியபடி தடுக்க முடியாத தாக்குதலை மாஸ்கோ மீது தொடுக்கத் தயாராயின். 2வது விமானப் படையைச் சேர்ந்த 1,390 விமானங்கள் விண்ணிலிருந்து தரைப்படைகளை ஆதரித்தன.

மேற்கு சேனை (தளபதி ஜெனரல் கோனெவ்), சேம இருப்பு சேனை (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல் புதியோனி), பிரி யான்ஸ்க் சேனை (தளபதி ஜெனரல் யெரியோமின்கோ) ஆகியன எதிரியின் படைத் திரட்டிற்கு (750 கி.மீ. பிரதேசத்தில்) எதிராக நின்றன. இவற்றில் சுமாராக 12,50,000 ஆட்களும் (95 டிவி ஷன்கள்) 7,600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 990 டாங்கிகளும் 677 விமானங்களும் (பெரும்பாலும் பழையதாகிப் போன ரகங்கள்) இருந்தன. எதிரி, சோவியத் துருப்புகளை ஆட் களில் 1.4 மடங்கும் டாங்கிகளில் 1.7 மடங்கும் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 1.8 மடங்கும் விமானங்களில் 2 மடங்கும் விஞ்சி நின்றான்.

உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் நிலவரத்தை சரி

யாக மதிப்பிட்டு, விவேகமான முடிவை மேற்கொண்டது: முன் கூட்டியே தயார்படுத்தப்பட்ட தற்காப்பையும் எதிரி தாக்கக் கூடிய திசைகளில் துருப்புகள் ஆழத்தில் இருப்பதையும் ஆதார மாகக் கொண்டு சோவியத் தற்காப்பைக் குலைக்க விடாமலிருப்பது, எதிரியை அலைக்கழித்து பேரிழப்பை ஏற்படுத்துவது, நேரத்தை வென்று, உறுதியான எதிர்த்தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூல மான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது என்று முடிவு செய்யப் பட்டது.

இந்நோக்கத்தோடு இயங்கும் இராணுவத்தின் தரைப்படை யூனிட்டுகளில் 40 சதவிகிதத்திற்கும் மேலாக போர்முனையின் மேற்குப் பகுதியில் கொண்டுவந்து குவிக்கப்பட்டன, தலைநகருக்கு வெகு அருகேயிருந்த நுழைவாயில்களில் மொத்தமாக 100 கி. மீ. ஆழத்திற்கு 4 தற்காப்பு எல்லைகளும் மாஸ்கோ தற்காப்பு மண்டலமும் தோற்றுவிக்கப்பட்டன. மாஸ்கோ தற்காப்பு மண் டலத்தில் சேம இருப்பு மண்டலமும் இரு தற்காப்பு எல்லைகளும்—பிரதான (மாஸ்கோ அருகே) மற்றும் நகர எல்லைகள்—அடங்கும். படைத் தலைமையகத்தின் முக்கிய சேமப் படைகள் இங்கே அனுப்பப் பட்டன.

தலைநகரின் வான் எதிர்ப்பு பாதுகாப்பின் மீது படைத் தலைமை யகம் முக்கியக் கவனம் செலுத்தியது. இக்கடமை வான் எதிர்ப்பு பாதுகாப்பு படையின் 1வது, 6வது சண்டை விமானக் கோர்பஸ் களுக்கு அளிக்கப்பட்டது. இவற்றிடம், 1,000க்கும் அதிகமான விமான எதிர்ப்பு பீரங்கிகளும் சுமார் 700 சண்டை விமானங் களும் 618 புரொஜெக்டர்களும் 702 வான் கவனிப்பு மற்றும் தகவல் தொடர்பு நிலையங்களும் மற்ற இராணுவத் தளவாடங்களும் இருந்தன. வான் எதிர்ப்புப் பாதுகாப்புப் படைகளின் இச்சாதனங் கள் எதிரி விமானத் தாக்குதல்கள் எத்திசையிலிருந்தும் எந்த உயரத்திலிருந்தும் வந்தாலும் அவற்றை முறியடிக்க உதவின.

தற்காப்புச் சமரைப் பற்றிய சுருக்கமான விவரம். ''சென்டர்'' படைத் தொகுதியின் வலப் புற டாங்கி யூனிட்டுகள் பிரியான்ஸ்க் சேனையின் துருப்புகள் மீது தொடுத்த தாக்குதலுடன் செப் டெம்பர் 30ஆம் தேதி பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தாக் குதல் துவங்கியது. அக்டோபர் 2ஆம் தேதி ஹிட்லர் துருப்புகளின் முக்கியச் சக்திகள் தாக்குதலில் இறங்கின. எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகள் ஒரு சில பகுதிகளில் சேனையைப் பிளந்து கொண்டு சோவியத் தற்காப்பின் உள் ஆழமாக ஊடுருவ முயன்றன. பிரியான்ஸ்க் பிரதேசத்திலும் வியாஸ்மாவிற்குத் மேற்கே யும் நடைபெற்ற கடுமையான சண்டைகளில் அக்டோபர் 5ஆம் தேதி வாக்கில் பிரியான்ஸ்க், மேற்கு மற்றும் சேம இருப்பு சேனை

களின் ஒரு பகுதியை எதிரியால் சுற்றி வளைக்க முடிந்தது.

சோவியத் படைத் தலைமையிடம் இனி சேமப் படைகள் இல்லை என்று தீர்மானித்த ஜெர்மானிய "சென்டர்" படைத் தொகுதியின் படைத் தலைமை "காலந்தாழ்த்தாது மாஸ்கோ நோக்கி தாக்குதலைத் தொடுக்குமாறும் மாஸ்கோ முன்னுள்ள எதிரியின் சக்திகளை முறியடித்து... நகரை நெருக்கமாகச் சுற்றி வளைக்குமாறும்" 4வது டாங்கிப் பிரிவுக்கும் 4வது படைக்கும் கட்டளையிட்டது.

சோவியத் தாயகத்திற்குக் கடினமான அவ்வேளையில் கம்யூனிஸ்டுக் கட்சியும் அரசாங்கமும் தலைநகரைக் காப்பாற்றுவதற்காக சோவியத் மக்கள் அனைவரையும் அணிதிரட்டின. ஆபத்தான எதிரியைத் தடுத்து நிறுத்துவதற்காக உயர்மட்ட பிரதான படைத் தலைமை பல உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அக்டோபரின் முதல் நாட்களிலேயே மஜாய்ஸ்க் கோட்டில் தற்காப்பு பலப்படுத்தப்பட்டது. அக்டோபர் 10ஆம் தேதி மேற்கு மற்றும் சேம இருப்பு சேனைகளின் துருப்புகள் மேற்கு சேனையாக ஒன்றிணைந்தன. லெனின்கிராத் போர்முனையிலிருந்து அழைக்கப்பட்ட ஜெனரல் ஜூக்கவ் மேற்கு சேனையின் தளபதியாக நியமிக்கப்பட்டார். வட மேற்கு மற்றும் தென் மேற்கு சேனைகளிலிருந்து துருப்புகள் உடனடியாக மஜாய்ஸ்க் கோட்டிற்கு அனுப்பப்பட்டன, தொலைக் கிழக்கிலிருந்து வந்த டிவிஷன்களும் இங்கே அனுப்பப்பட்டன. நாட்டின் குடியரசுகள் அனைத்திலுமிருந்து அக்கால கட்டத்திற்கு சாதனையான வேகங்களில் ஆட்கள், ஆயுதங்கள், போர்த் தளவாடங்களோடு புகைவண்டிகள் வந்திறங்கின.

"எல்லாம் சொந்த மாஸ்கோவின் பாதுகாப்பிற்காக" என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவல் விடுத்தது. மாஸ்கோ சமர் முழுவதன் போதும் தலைநகரிலேயே இருந்த கட்சியின் மத்திய கமிட்டி பொலிட்பீரோவும் அரசுத் தற்காப்புக் கமிட்டியும், அரசாங்கமும் படைத் தலைமையகமும் மாஸ்கோவைக் காப்பாற்றுவதற்கான புதிய சக்திகளை அணி திரட்டி அனுப்பவும் தலைநகரின் தற்காப்பைப் பலப்படுத்தவும் நகரில் உயர்வான ஒழுங்கமைப்பைப் பராமரிக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டன.

அரசுத் தற்காப்புக் கமிட்டியின் முடிவின்படி மாஸ்கோவிலும் இதன் அருகேயிருந்த புற நகர்களிலும் முற்றுகை நிலை கொண்டு வரப்பட்டது, இது தலைநகரின் தற்காப்பில் ஒழுங்கமைப்பை அதிகப்படுத்தியது. அதே நேரத்தில் மாஸ்கோ அருகேயிருந்த நுழைவாயில்களில் இரண்டு எல்லைகளைக் கொண்ட (மாஸ்கோவிலிருந்து 15—20 கி. மீ. தொலைவில் பிரதான எல்லை, வட்ட இருப்புப் பாதையை ஒட்டிச் செல்லும் நகர எல்லை) புதிய தற்காப்பு எல்லைக்கோடு

உருவாக்கப்பட்டது. மாஸ்கோ போர்முனை நகரமாகியது.

தோற்றுவிக்கப்பட்ட மாஸ்கோ தற்காப்பு மண்டலத்தில் தலை நகரின் பாதுகாப்புச் சக்திகளும் குடிமக்கள் தொண்டர் படை டிவிஷன்களும் படைத் தலைமையகத்தின் சேம இருப்பிலிருந்து வந்த துருப்புகளும் அடங்கியிருந்தன. 4,50,000 மாஸ்கோவாசிகள் தற் காப்புப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அக்டோபர் 13ஆம் தேதி மாஸ்கோவில் கட்சித் தொண்டர் களின் கூட்டம் நடைபெற்றது. இது பாசிச ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உறுதியான, ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்துமாறும் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துமாறும் பீதியை பரப்புபவர்கள், பேடிகள், துரோகிகளுக்கு எதிராக உறுதியாகப் போராடுமாறும் கம்யூனிஸ்டுகள், கம்சமோல் உறுப்பினர்கள், நகரின் உழைப்பாளி கள் அனைவருக்கும் அறைகூவல் விடுத்தது. நகரில் தொழிலாளர் பட்டாலியன்கள் தோற்றுவிக்கப்பட்டன, மாஸ்கோ தொழிற் சாலைகளில் ஆயுத உற்பத்தி முழு மூச்சோடு நடைபெற்றது.

ஒரு சில நாட்களில் 25 தனி கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கம்பெனிகளும் பட்டாலியன்களும் தோற்றுவிக்கப்பட்டன. இவற் றில் முக்கால்வாசி கம்யூனிஸ்டுகளும் கம்சமோல் உறுப்பினர்களும் இருந்தனர். பெரும்பாலும் இவற்றைக் கொண்டும் உள்நாட்டுச் சண்டை பட்டாலியன்களைக் கொண்டும் மொத்தம் 39,000க்கும் அதிகமான ஆட்களையுடைய குடிமக்கள் தொண்டர் படையின் 4 டிவிஷன்கள் உருவாக்கப்பட்டன. போர்முனைக்கு உதவியாக அக் டோபர் மாதத்தின் முதல் பகுதியில் மாஸ்கோ மொத்தமாக கிட்டத்தட்ட 50,000 போர்வீரர்கள் அடங்கிய இராணுவத்தை கூடுதலாக அனுப்பி உதவியது. ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு கணிசமாக பலப்படுத்தப்பட்டது. 25 ஸ்தல வான் எதிர்ப்பு பாது காப்பு பட்டாலியன்களும் 4 பழுதுபார்த்து புனரமைக்கும் ரெஜி மென்ட்களும் கம்சமோல்-இளைஞர் ஸ்தல வான் எதிர்ப்பு பாது காப்பு ரெஜிமென்ட்டும் 3,600 சுயபாதுகாப்புக் குழுக்களும் உருவாக்கப்பட்டன.

மாஸ்கோ — ஐரோப்பியத் தலை நகரங்களிலேயே இது ஒன்று தான் — தரை வழியாகவோ வான் மூலமோ நெருங்க முடியாததாக இருந்தது.

இதனிடையே எதிரி மாஸ்கோவை நோக்கிப் பாய முயன்று கொண்டிருந்தான். ஜெர்மானியர்கள் அரியோலைக் கைப்பற்றி, தூலாவை நெருங்கினர். அக்டோபர் 14ஆம் தேதி சோவியத் துருப்புகள் கலீனினை விட்டு வெளியேறின. எப்படியாவது எதி ரியை தாமதப்படுத்தி, மஜாய்ஸ்க் எல்லைக்கோட்டில் தற்காப்பை ஒழுங்கமைப்பதற்கான நேரத்தை வெல்வது அவசியமாயிருந்தது.

மேற்கு சேனையின் வலப்புறத் துருப்புகளைக் கொண்டு ஜெனரல் கோனெவின் தலைமையின் கீழ் கலீனின் சேனை தோற்றுவிக்கப் பட்டது. மேற்கு, கலீனின் சேனைகளும் மித்ஸேன்ஸ்க் — ல்கோவ் எல்லைக்கோட்டுக்குப் பின்வாங்கிய பிரியான்ஸ்க் சேனையும் கடும் எதிர்ப்பைக் காட்டி எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு களைத் தடுத்து நிறுத்தின. வியாஸ்மா அருகே சுற்றி வளைக்கப்பட்ட சோவியத் படைகள் முக்கியச் சக்திகளுடன் இணைவதற்காக கிழக்கே பிளந்து செல்ல முயன்று தொடர்ந்து போரிட்டன. இவை ''சென்டர்'' படைத் தொகுதியின் 28 யூனிட்டுகளைக் கட்டிப் போட்டன.

சோவியத் தலைமை மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஜெர்மா னியர்கள் முன்னேறுவது மேன்மேலும் குறையத் துவங்கியது. அக் டோபர் மாதத் துவக்கத்தில் ஹிட்லர் படைகள் நாளொன்றுக்கு 25 கி. மீ. முன்னேறின என்றால் மாத இறுதியில் இவ்வேகம் 2 — 3 கி. மீ.களாகக் குறைந்தது. அக்டோபர் 30ஆம் தேதி வாக்கில் மஜாய்ஸ்க் மற்றும் வலகலாம்ஸ்கிற்குக் கிழக்கே போர்முனை ஸ்திர மடைந்தது. மாஸ்கோ மீதான முதல் ஜெர்மானியத் தாக்குதல் தோல்வியடைந்தது. சோவியத் துருப்புகளின் உறுதியான பாது காப்பால் எதிரியின் சக்திகள் கணிசமான அளவு பலவீனமடைந் தன, எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகள் பரவலான போர்முனையில் சிதறிக் கிடந்தன. மாஸ்கோ மீதான ஜெர்மானியத் தாக்குதலில் இரண்டு வார இடைவெளி ஏற்பட்டது.

சோவியத் உயர்மட்ட படைத் தலைமை இடை நேரத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்தியது. துருப்புகள் தேவையான முறையில் மாற்றியமைக்கப்பட்டன, இவற்றிற்கு அவசியமான ஆட் களும் இராணுவத் தளவாடங்களும் அளிக்கப்பட்டன. மாஸ்கோவிற்கு அருகேயிருந்த நுழைவாயில்களில் பல அடுக்குகளையுடைய, பல படை வரிசைகளைக் கொண்ட தற்காப்புக் கட்டுமானம் தொடர்ந் தது.

நவம்பர் 7ஆம் தேதி செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற வழக்க மான சோவியத் இராணுவ அணிவகுப்பு பெரும் அரசியல் முக் கியத்துவம் உடையதாய் அமைந்தது. உலகெங்கும் உள்ள உழைப் பாளிகள் இதை, தமது தலைநகரைப் பாதுகாத்து நிற்க சோவியத் மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியா உறுதியின் வெளிப்பாடாக, சோவியத் மக்களின் பலம் மற்றும் வெற்றியில் இவர்களுக்குள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாக ஏற்றனர்.

நவம்பர் நடுவில் திஹ்வின் மற்றும் ரஸ்தோவ் அருகே சோவியத் துருப்புகள் எதிர்தாக்குதலைத் தொடுத்தன. இங்கே இயங்கி வந்த எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்டி இவற்றைக் கொண்டு ''சென்டர்'' படைத் தொகுதியை பலப்

படுத்தும் வாய்ப்புகளை அகற்றுவதுதான் இதன் நோக்கமாகும்.

நவம்பர் 15—16இல் பாசிச ஜெர்மானிய இராணுவம் மாஸ்கோவின் மீது இரண்டாவது தாக்குதலை — இம்முறை இதுவே கடைசியுமாகும் — தொடுத்தது. 13 டாங்கி டிவிஷன்கள், 7 மோட்டார் டிவிஷன்கள் உட்பட 51 டிவிஷன்களை உள்ளடக்கிய ''சென்டர்'' படைத் தொகுதியின் துருப்புகள் பலம் மிக்க இரண்டு படைத் திரட்டுகளின் மூலம் மாஸ்கோவை சுற்றி வந்து — வடக்கே வலகலாம்ஸ்கிலிருந்து யாஹ்ரமா, நகீன்ஸ்க் நோக்கியும் (3வது, 4வது டாங்கிப் பிரிவுகள்), தெற்கே தூலா பிரதேசத்திலிருந்து கஷீரா, நகீன்ஸ்க் நோக்கியும் (2வது டாங்கிப் படை) — சோவியத் தலைநகரைச் சுற்றி வளைத்து அதே நேரத்தில் போர்முனையிலிருந்து முன்னேக்கி தாக்கி கைப்பற்ற முயன்றன. போர்முனையிலிருந்து முன்னால் 4வது போர்க்களப் படை (18 டிவிஷன்கள்) தாக்கியது. வடக்கே 9வது படைக்கும் தெற்கே 2வது படைக்கும் ''சென்டர்'' படைத் தொகுதியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகளை உருவாக்கும் கட்டளை இடப்பட்டது.

உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் எதிரியின் திட்டங்களையும், எதிரித் துருப்புகள் திரட்டப்படும் போக்கையும் உரிய நேரத்தில் கண்டுபிடித்து மேற்கு சேனைக்கு கூடுதல் ஆட்கள், டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் விமானங்களை அளித்து பலப்படுத்தவும் தற்காப்பை, குறிப்பாக டாங்கி எதிர்ப்பு பாதுகாப்பை மேம்படுத்தவும் மாஸ்கோ பிரதேசத்தில் சேமப் படைகளை ஒருமுனைப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் பயனாய் தற்காப்பு மேலும் உறுதியானதாயும் நிலையானதாயும் மாறியது. என்றாலும் எதிரி இன்னமும் ஆட்களின் எண்ணிக்கையிலும் சாதனங்களிலும் பொதுவாக விஞ்சி நின்றான். ஆட்களைப் பொறுத்த மட்டில் இது 2 மடங்காயும் டாங்கிகளில் 1.5 மடங்காயும் பீரங்கிகளில் 2.5 மடங்காயும் இருந்தது. விமானங்களைப் பொறுத்த வரை சோவியத் தரப்பு 1.5 மடங்கு விஞ்சி நின்றது.

பாசிஸ்டுகள் சோவியத் தலைநகரின் நிலையை மோசமாகக் கருதி வெற்றியில் உறுதியோடு இருந்தனர். கிளீன்-சோல்னெச்னகோர்ஸ்க் மற்றும் ஸ்தாலினகோர்ஸ்க்-கஷீரா திசைகளில் கடும் சண்டைகளுக்குப் பின் பேரிழப்பை விலையாகத் தந்துதான் எதிரியால் நகரின் வடக்கேயும் — மாஸ்கோ-வோல்கா கால்வாய்க்கும் கிரூக்கவோவிற்கும் — தெற்கேயிருந்து கஷீருக்கும் வர முடிந்தது. ஆனாலும் எதிரியால் சோவியத் போர்முனையில் பிளவை ஏற்படுத்த முடியவில்லை. மேற்கு, கலீனின் சேனைகள், தென் மேற்கு சேனையின் வலப் புற மற்றும் மாஸ்கோ தற்காப்பு மண்டலம் ஆகியவற்றின் துருப்புகள் எதிர்தாக்குதல்களையும் பதிலடிகளையும் மேற்கொண்டு எதிரியின்

பலம் மிக்க டாங்கி தாக்குதலை எதிர்த்து நின்றன. இதில் ஜெனரல் ரக்கசோவ்ஸ்கியின் தலைமையிலிருந்த 16வது படை, ஜெனரல் பன்ஃபீலவின் 316வது டிவிஷன், ஜெனரல் தவதோரின் குதிரைப் படையினர், கர்னல் கதுக்கோவின் முதல் கார்டு டாங்கி பிரிகேடு மற்ற படைப் பிரிவுகள் ஆகியன சிறப்பாகப் போரிட்டன. வியத் தகு தைரியத்தையும் மிகப் பெரும் வீரத்தையும் வெளிப்படுத்திய சோவியத் போர்வீரர்கள் இறக்கும் வரை தலைநகரின் சுவரருகே பாதுகாத்து நின்றனர். இந்நாட்களில்தான் கம்பெனியின் அரசியல் போதகராகிய கிலச்கோவின் தலைமையில் பன்ஃபீலவ் வீரர்கள் அற்புதமானதொரு வீரச்செயலை ஆற்றினர். ''ருஷ்யா மகத்தானது, ஆனால் பின்வாங்க இடமில்லை, பின்னாலிருப்பது மாஸ்கோ'' என்று கிலச்கோவ் கூறிய போது இதில் மாஸ்கோவைப் பாதுகாத்து நின்ற அனைவரின் உணர்ச்சிகளும் சிந்தனைகளும் பிரதிபலித்தன. 28 போர் வீரர்கள் 50 எதிரி டாங்கிகளைக் கண்டும் பின்வாங்காது, 18 டாங்கி களை அழித்து, உறுதியாகப் பாதுகாத்து நின்றனர். சோவியத் படைவீரர்களின் உறுதி எதிரியை அதிசயிக்க வைத்து, கலங்கச் செய்தது.

டிசம்பர் ஆரம்பத்தில் எதிரி நரோ-ஃபமீன்ஸ்க் பிரதேசத்திலிருந் தும் தூலா அருகேயிருந்தும் மாஸ்கோவைத் தாக்க கடைசி முயற் சியைச் செய்தான். ஆனால் சோவியத் துருப்புகளின் வீரஞ்செறிந்த முயற்சிகளால் எதிரியின் இம்முயற்சிகளும் குலைக்கப்பட்டன. பாசிஸ்டு களுக்கு மிகப்பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

டிசம்பர் 5ஆம் தேதி வாக்கில் மாஸ்கோ மீதான ஜெர்மானியத் தாக்குதல் எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட்டது. எதிரியின் தாக்கு தல் வாய்ப்புகள் மங்கிப் போயின.

நவம்பரில் தலைநகரின் உழைப்பாளிகள் போர்முனைக்கு மதிப்பிட முடியா உதவியை அளித்தனர். மோசமான பருவநிலைகளிலும் எதிரி விமானப்படை தாக்கிய போதிலும் மாஸ்கோவாசிகள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தன்னலங் கருதாது உழைத்து ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங்களையும் உற்பத்தி செய்தனர், நகருக்கு வரும் நுழைவாயில்கள் அருகேயும் நகரத்திலும் தற்காப்பு அரண் களைக் கட்டினர். தற்காப்பு காலகட்டத்தில் மாஸ்கோவாசிகள் மொத்தமாக 676 கி. மீ. டாங்கி எதிர்ப்பு அகழிகளையும் 445 கி. மீ. டாங்கி எதிர்ப்புக் குழிகளையும் தோண்டினர், 1,300 கி. மீ.க்கும் அதிகமான நீளத்திற்கு இரும்பு முள் கம்பி தடைகளைப் போட்டனர், 380 கி. மீ. நீளத்திற்கு டாங்கி எதிர்ப்புத் தடைகளை உருவாக்கினர், 30,000க்கும் அதிகமான பீரங்கி மேடைகளைக் கட்டினர். மாஸ்கோ அருகே 1,528 கி. மீ. தூரத்திற்கு காட்டு தடையரண்கள் உருவாக்கப்பட்டன. மாஸ்கோ பிராந்தியத்தில்

எதிரியிருந்த பகுதிகளில் 41 கொரில்லாப் படை அணிகள் இயங்கின. இவை நிரந்தர இராணுவத்திற்கு பெரிதும் உதவின.

மாஸ்கோ அருகே நடைபெற்ற தற்காப்பு போரில் சோவியத் இராணுவம் வெற்றி பெற்றது. மாஸ்கோ மீதான இரண்டாவது தாக்குதலின் போது மட்டும் எதிரி 1,50,000க்கும் மேற்பட்டோரையும் சுமார் 800 டாங்கிகளையும் கிட்டத்தட்ட 300 பீரங்கிகளையும் 1,500 விமானங்களையும் பறிகொடுத்தான். விமானப்படை தாக்குதல்களால் மாஸ்கோவை அழிக்க வேண்டும் என்ற திட்டத்தையும் பாசிஸ்டுகளால் நிறைவேற்ற இயலவில்லை. வான் எதிர்ப்பு பாதுகாப்பை பலப்படுத்தியதானது நல்ல பயன்களை அளித்தது. நவம்பரில் ஒரு சில விமானங்கள் மட்டுமே நகரத்திற்குள் ஊடுருவின. 1941 ஜூலை—டிசம்பரில் மாஸ்கோ வான் எதிர்ப்பு பாதுகாப்பு எதிரியின் 122 வான் தாக்குதல்களை முறியடித்தது; இவற்றில் 7,146 விமானங்கள் கலந்து கொண்டன. 299 விமானங்களால் மட்டுமே—தாக்குதலில் ஈடுபட்ட விமானங்களின் மொத்த எண்ணிக்கையில் இது 3 சதவிகிதத்திற்கு சற்று அதிகம் மட்டுமே—நகரத்தினுள் ஊடுருவ முடிந்தது.

சோவியத் துருப்புகளுக்கும் கணிசமான சேதங்கள் ஏற்பட்டன. ஆனால் ஹிட்லர் இராணுவத்திற்கு மாறாக சோவியத் இராணுவம் பலவீனமடையாதது மட்டுமல்ல, மாறாக வலுவானதாக மாறியது. நாட்டின் உட்பகுதிகளிலிருந்து மேன்மேலும் புதிய சேமப் படைகள் அனுப்பப்பட்டன; கிழக்கத்தியப் பிரதேசங்களிலிருந்து ஆயுதங்களையும் போர்த்தளவாடங்களையும் ஏற்றிய இரயில் வண்டிகள் இடைவிடாமல் மாஸ்கோவிற்கு வந்து கொண்டிருந்தன. போர் முனைக்கு அவசியமான அனைத்தையும் தருவதற்காக சோவியத் மக்கள் அனைவரும் தன்னலங் கருதாது உழைத்தனர். ''எதிரியை முறியடிப்பது மாஸ்கோ அருகே துவங்க வேண்டும்'' என்ற கட்சியின் கோஷம் உள்நாட்டில் தன்னலமற்று உழைக்க சோவியத் மக்களுக்கு உற்சாகமூட்டியது, போர்முனையில் ஈடு இணையற்ற பெரும் வீரத்தை வெளிப்படுத்த போர்வீரர்களுக்கு ஊக்கமளித்தது. செஞ்சேனை எதிர்தாக்குதலைத் தொடுப்பதற்கான வாய்ப்பு தோன்றியது.

சோவியத் துருப்புகளின் எதிர்தாக்குதல். டிசம்பர் ஆரம்பத்தில், மேற்குத் திசையில் இயங்கி வந்த சோவியத் துருப்புகள், படைத் தலைமையகத்தால் தோற்றுவிக்கப்பட்ட சேம இருப்புப் படைப்பிரிவுகள், யூனிட்டுகளைக் கொண்டு கணிசமான கூடுதல் பலத்தைப் பெற்றன. ஆனாலும் முக்கியக் குறியீடுகளில் எதிரி இன்னமும் விஞ்சி நின்றான். டிசம்பர் 1 தேதி பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டில் 17,08,000 படைவீரர்களும் இராணுவ அதிகாரிகளும் இருந்தனர், 13,500 சாதாரண மற்றும் மார்டார் பீரங்கிகளும்

1,170 டாங்கிகளும் 615 விமானங்களும் இருந்தன. இதை எதிர்த்து நின்ற சோவியத் துருப்புகளில் 11,00,000 ஆட்கள் இருந்தனர், 7,652 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 774 டாங்கிகளும் (222 நடுத்தர, கனரக டாங்கிகள் உட்பட) 1,000 விமானங்களும் இருந்தன. எனவே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் சோவியத் துருப்புகளை ஆட்களில் 1.5 மடங்கும் பீரங்கிகளில் 1.8 மடங்கும் டாங்கிகளில் 1.5 மடங்கும் விஞ்சி நின்றன. விமானங்களில் மட்டுமே சோவியத் படைத் திரட்டு எதிரியை விஞ்சியிருந்தது (1.6 மடங்கு). மேற்குத் திசையிலிருந்த போர்முனை விமானப்படையில் புதிய ரக விமானங்களின் எண்ணிக்கை 47.5 சதவிகிதமாயிருந்தது.

இவ்வாறாக சிக்கலான சூழ்நிலையில்—எதிரியை விட எண்ணிக்கை குறைவான நிலையில்—சோவியத் துருப்புகள் எதிர்தாக்குதலைத் தொடுத்தன.

முந்தைய இராணுவ நடவடிக்கைகளால் பலவீனமடைந்திருந்த எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டை கலீனின், மேற்கு மற்றும் தென் மேற்கு சேனைகளின் சக்தியைக் கொண்டு (பிரியான்ஸ்க் சேனை 9.11.41இல் கலைக்கப்பட்டது) முறியடிக்க உயர் மட்ட பிரதான படைத் தலைமை திட்டமிட்டது. இதில் முக்கியப் பங்கு மேற்கு சேனைக்கு அளிக்கப்பட்டிருந்தது. தலைநகரின் வட மேற்கிலும் தெற்கிலும் (கிளீன், சோல்னெச்னகோர்ஸ்க், தூலா பிரதேசத்தில்) எதிரியின் படைத் திரட்டுகளை அழித்து மாஸ்கோவை எதிர்நோக்கிய அபாயத்தை அகற்றுவதுதான் இதன் உடனடிக் கடமையாக இருந்தது. கலீனின் சேனை பலமான தாக்குதலைத் தொடுத்து, கலீனின் நகரைக் கைப்பற்றி, மேற்கு சேனைக்கு எதிராக இயங்கி வந்த பர்சிச ஜெர்மானியத் துருப்புகளின் பின்னணிக்கு வர வேண்டும். தென் மேற்கு சேனையின் கடமை எலேட்ஸ் பிரதேசத்தில் எதிரியை முறியடித்து, இதன் மூலம் தூலா பிரதேசத்தில் எதிரியை ஒழித்துக் கட்டுவதில் மேற்கு சேனையின் துருப்புகளுக்கு உதவுவதாக இருந்தது.

சோவியத் துருப்புகளின் எதிர்தாக்குதல் 1941ஆம் ஆண்டு டிசம்பர் 5—6இல் 200 கி.மீ. நீள போர்முனையில் துவங்கியது. இது ஜெர்மானியர்கள் எதிர்பாராததாக அமைந்தது. எதிர்தாக்குதல் திட்டத்தை மிக இரகசியமாக வைத்திருந்ததும் (இதைப் பற்றி உயர் மட்ட படைத் தலைமையின் ஒரு சில நபர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது) துருப்புகளை மாற்றியமைத்து நிறுத்துவதை மறைவாகச் செய்ததும் இதற்குக் காரணமாகும். எதிரிக்கு தெரியாதபடி சோவியத் படைத் தலைமை உள்நாட்டிலிருந்து கணிசமான அளவு சேமப் படைகளைப் போர்முனைக் கோட்டிற்குக் கொண்டு வந்தது. துருப்புகள் உருமறைக்கும் கட்டுப்பாட்டைக்

கண்டிப்பாகப் பின்பற்றின, இரவு நேரங்களில் மட்டுமே ஓரிடத்திலிருந்து வேறிடம் சென்றன. நெருப்பு மூட்டுவதும் எதிர்தாக்குதலுக்கான தயாரிப்புகளைப் பற்றிப் பேசுவதும் வானொலி தொடர்பு கொள்வதும் முற்றிலுமாக தடை செய்யப்பட்டிருந்தது. சப்ளை நிலையங்கள் மற்றும் பயண மார்க்கங்களின் உருமறைப்பு பயனுள்ளதாக இருந்தது.

உருமறைப்புக் கட்டுப்பாட்டை துருப்புகள் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை எல்லா மட்டங்களிலும் இருந்த படைத் தலைமையகங்கள் கண்காணித்தன. இந்நடவடிக்கைகளின் பயனாய், எதிர் தாக்குதல் துவங்கும் நேரத்தில் சோவியத் துருப்புகளின் படைத் திரட்டை எதிரி ஒற்றர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. ஹிட்லரின் பிரதான படைத் தலைமையகத்தின் அன்றாட அறிக்கை வரைபடத்தில் கூட டிசம்பர் 6ஆம் தேதியன்று மேற்கு சேனையின் 10 படைகளில் 7 படைகள் மட்டுமே காட்டப்பட்டிருந்தன (1வது தாக்குதல் படையும் 20வது மற்றும் 10வது படைகளும் குறிக்கப் படவில்லை).

வடக்கே திஹ்வின் அருகேயும் தெற்கே ரஸ்தோவ் அருகேயும் சோவியத் துருப்புகளின் தாக்குதல் எதிரியைத் தவறான கணிப்பிற்கு இட்டுச் செல்லவும் எதிரிப் படைகளைக் கட்டிப் போடவும் உதவின.

சோவியத் படைகள் தந்த முதல் அடிகளிலேயே ஹிட்லர் துருப்புகளுக்கு இழப்புகள் ஏற்பட்டன, இவை பின்வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டன. "அந்நாளைய நிகழ்ச்சிகள் மீண்டும் பயங்கரமானவை, வெட்கக்கேடானவை... மிகப் பயங்கரமானது என்னவெனில், கோட்பாட்டு ரீதியான போர்த்தந்திர தீர்மானங்களை ஏற்பதற்குப் பதில் வேர்மஹ்ட்டின் உயர்மட்ட பிரதான படைத் தலைமை (OKW) நம் துருப்புகளின் நிலையைப் புரிந்து கொள்ளாது ஓட்டைகளை மூடி மறைப்பதில் ஈடுபட்டுள்ளதுதான்"* என்று கால்டர் டிசம்பர் 7ஆம் தேதி நாட்குறிப்பில் எழுதினான். ரூஸா மற்றும் ஒஸ்தாஷ்கவ் எல்லைக்கோட்டிற்கு "சென்டர்" படைத் தொகுதியின் துருப்புகள் பின்வாங்கிச் செல்ல வேண்டும் என்ற கட்டளையை இப்படிப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாக கால்டர் கருதினான். ஆனால் நிலவரம் இப்படி மாறும் என்பதை எதிர்பாராத ஹிட்லர் தாமதப்படுத்தினான். 3வது மற்றும் 4வது டாங்கிப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல்கள் ரெய்ன்ஹார்ட், ஹெப்னரும் 2வது டாங்கிப் படையின் தலைவன் ஜெனரல் குடெரி

---

* ஃபெ. கால்டர், யுத்த நாட்குறிப்பு. தொகுதி 3, பாகம் 2, பக்கம் 103 (ருஷ்ய மொழியில்).

யானும், செஞ்சேனையின் தாக்குதல்கள் வலுத்து வருகின்றன, தமக்குக் கீழுள்ள துருப்புகள் முன்னேறுவதை நிறுத்தி விட்டன என்று அறிவித்த பின்னர்தான் டிசம்பர் 8ஆம் தேதி, கிழக்குப் போர்முனை பூராவும் ஜெர்மானிய இராணுவத்தைப் போர்த்தந்திரத் தற்காப்பிற்கு மாறச் சொல்லிக் கட்டளையிடும் 39ஆவது ஆணையில் ஹிட்லர் கையெழுத்திட்டான். மாஸ்கோவைக் கைப்பற்ற எண்ணிய பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டங்கள் தவிடு பொடியானதும் யுத்தத்தை விரைவில் முடிக்கலாம் என்ற அதன் நம்பிக்கை சரிந்து வீழ்ந்ததும் தெட்டத் தெளிவாயின. ஹிட்லர் துருப்புகளின் தாக்குதல் சீர்குலைந்து போனதற்கு ருஷ்ய பனிக்காலம்தான் அந்த ஆணையில் காரணமாகக் குறிப்பிடப் பட்டிருந்தது: "கிழக்குப் போர்முனையில் பனிக்காலம் முன் கூட்டியே ஆரம்பமாகியதும், சப்ளைகளை எடுத்து செல்வதில் இதன் தொடர்பாகத் தோன்றிய இன்னல்களும் எல்லா பெரும் தாக்குதல் நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தி தற்காப்பிற்கு மாறுமாறு நிர்ப்பந்திக்கின்றன..."*. பனிக்காலம் முன்னதாக வந்தது காரணமாகக் கூறப்பட்டது முற்றிலும் நம்பத் தகுந்ததாகவே இல்லை. வானிலை நிலைய தலைமை நிர்வாக பத்திராலயத்தினுடைய புள்ளி விவரங்களின்படி 1941 டிசம்பரில் மாஸ்கோ அருகே சராசரி வெப்ப நிலை —4, —6°C ஆகத் தான் இருந்தது. டிசம்பர் 5—7இல் குளிர் —28°C ஆக இருந்தாலும் இது சிறிது காலம் மட்டுமே நீடித்தது. யுத்தத்தை பனிக்காலம் துவங்கும் முன்னரே முடித்து விடத் திட்டமிட்ட பாசிஸ்டுகள் பனிக்காலச் சூழ்நிலைகளில் இயங்க தன் துருப்புகளைத் தயார்படுத்தவில்லை என்பதை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை.

இதனிடையே சோவியத் துருப்புகளின் எதிர்தாக்குதல் வளர்ந்து வந்தது. டிசம்பர் 17ஆம் தேதி வாக்கில் மாஸ்கோவிற்கு வடக்கேயும் வட மேற்கேயும் தாக்குதலைத் தொடுத்த யூனிட்டுகள் எதிரியை மேற்கே 60 கி.மீ. தூரம் வரையும் தூலா மற்றும் எலேட்ஸ் பிரதேசங்களில் 90 கி.மீ. வரையும் பின்னுக்குத் தள்ளின, எதிரிக்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்தி மாஸ்கோவை எதிர்நோக்கிய நேரடி அபாயத்தை அகற்றின. இந்த எதிர்தாக்குதலை மேற்கொண்டு தொடர்ந்த சோவியத் துருப்புகள், எதிரியின் உறுதியான எதிர்ப்பை மீறி கொண்டு, சக்திகளும் சாதனங்களும், குறிப்பாக டாங்கிகள், பீரங்கிகள், படைத் தளவாடங்கள் போதாதிருந்த போதிலும் இவற்றைப் பொருட்படுத்தாது, குளிர், நல்ல பாதைகள் இல்லாமை, ஆழமான பனி ஆகியவற்றை அலட்சியப்படுத்தி போர்முனை பூராவும் எதிரியை இடைவிடாது தாக்கின.

---

* *Hitlers Weisungen für die Kriegführung 1939—1945*, S. 171—172.

டிசம்பர் 25 வாக்கில் கலீனின் சேனையின் படைகள் இன்னமும் 25—40 கி. மீ. தூரம் முன்னேறின. மேற்கு சேனையின் வலப்புற மற்றும் மையப் பகுதிகள் லாமா, ரூஸா, நாரா ஆறுகளின் எல்லைகளையும் இடப் பகுதி ஓகாவின் கிழக்கு கரையையும் கலூகா நகரையும் அடைந்தன. தென் மேற்கு சேனையின் (18.12.1941இலிருந்து பிரியான்ஸ்க் சேனையின்) படைகள் அரியோல் திசையில் மேற்கு நோக்கி 20—60 கி. மீ. முன்னேறி சொர்ன், நவசீல், லீவ்னி நகரங்களை நெருங்கின. தாக்குதல் போர்முனை மேன்மேலும் பரவலாகி ஜனவரி ஆரம்பத்தில் 1,000 கி. மீ. ஆக இருந்தது. எதிரி எல்லா சக்திகளையும் பயன்படுத்தி சோவியத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முயன்றான். ஒரு சில இடங்களில் கடும் சண்டைகள் நடைபெற்றன, இழுபறி சண்டைகளாக நடந்தன. ஆனாலும் எதிர்தாக்குதல் தொடர்ந்தது. ஜனவரி 8ஆம் தேதி வாக்கில் ரிஷேவின் மேற்கிலும் கலூகாவிற்குத் தெற்கிலும் எதிரியின் த்ற்காப்பு போர்முனை பிளக்கப்பட்டது. சோவியத் துருப்புகள் மேற்கொண்டு பொது தாக்குதலை வளர்ப்பதற்கான சூழ்நிலைகள் உருவாயின.

கலீனின், மேற்கு மற்றும் பிரியான்ஸ்க் சேனைகள் தம் முன் வைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றின. எதிர்தாக்குதலின் போது இவை 11 டாங்கி மற்றும் 4 மோட்டார் டிவிஷன்கள் உட்பட 38 பாசிச ஜெர்மானிய டிவிஷன்களை முறியடித்தன, பிராந்திய நகரங்களாகிய கலீனின், கலூகா உட்பட 11,000 குடியிருப்புப் பகுதிகளை விடுத்தன, தூலா சுற்றி வளைக்கப்படும் அபாயம் அகற்றப்பட்டது. ஜெர்மானியர்கள் இச்சமரில் 5,00,000 ஆட்களையும் 1,300 டாங்கிகளையும் 2,500 பீரங்கிகளையும் 15,000 வாகனங்களையும் இழந்தனர். எதிரி மாஸ்கோவிலிருந்து 100—250 கி. மீ. தூரம் பின்னுக்குத் தள்ளப்பட்டான்.

மாஸ்கோ அருகிலான எதிர்தாக்குதல் மேற்கொண்டு செஞ்சேனையின் பொதுத் தாக்குதலாக மாறியது. இது 1942 ஜனவரி முதல் ஏப்ரல் வரை நீடித்தது. இக்காலத்தில் சோவியத் துருப்புகள் எதிரியை வித்தெப்ஸ்க் திசையில் 250 கி. மீ. தூரமும் கிஷாத்ஸ்க் மற்றும் யூஹ்னவ் திசையில் 80—100 கி. மீ. தூரமும் பின்னுக்குத் தள்ளின, மாஸ்கோ, தூலா பிராந்தியங்களையும் கலீனின், ஸ்மலேன்ஸ்க் பிராந்தியங்களின் பல மாவட்டங்களையும் விடுவித்தன. நூறாயிரக் கணக்கான சோவியத் குடிமக்கள் பாசிச அடிமைத் தளைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். எதிரிக்கு கடும் தோல்வி ஏற்பட்டது. 16 டிவிஷன்களும் 1 பிரிகேடும் சீர்குலைக்கப்பட்டன. ஜனவரி 1 முதல் மார்ச் 30 வரை ''சென்டர்'' படைத் தொகுதி

3,33,000க்கும் கூடுதலான ஆட்களைப் பறிகொடுத்தது*. இரு பக்கங்களிலும் ஆழமாகச் சுற்றி வளைத்ததன் மூலம் சோவியத் துருப்புகள் இதை மிக மோசமான இயங்கு நிலையில் வைத்தன. மேற்கு ஐரோப்பாவிலிருந்து 12 டிவிஷன்களும் 2 பாதுகாப்பு பிரிகேடுகளும் அனுப்பப்பட்டதால்தான் முழுத் தோல்வியை இதனால் தவிர்க்க முடிந்தது.

மாஸ்கோ அருகில் செஞ்சேனை மிகப்பெரும் இராணுவ-அரசியல் வெற்றியைப் பெற்றது. இது மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போக்கின் மீது, மொத்தமாக இரண்டாம் உலக யுத்தப் போக்கின் மீது தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த வெற்றி சோவியத் சமூக மற்றும் அரசு அமைப்பின் மேம்பாட்டையும் சோவியத் சமுதாயத்தின் தார்மீக-அரசியல் ஒருமைப்பாட்டையும் உலகம் முழுவதற்கும் நம்பத்தக்க முறையில் காட்டியது. தலைநகர வாயில்களின் அருகே நடந்த சமரில் யுத்தத்தின் ஆறு மாதங்களில் செஞ்சேனை முதன்முதலாக ஹிட்லர் துருப்புகளின் முக்கியப் படைத் திரட்டிற்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்தியது. ''பிளிட்ஸ்கிரிக்'' பாசிச திட்டம் முழுத் தோல்வி அடைந்தது. ஜெர்மானிய இராணுவத்தை ''வெல்ல முடியாது'' என்ற மாயையை உலகின் முன் செஞ்சேனை உடைத்தெறிந்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் பாசிஸ்டுகள் முதல் பெரும் தோல்வியைத் தழுவினர்.

பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தோல்வி ஹிட்லர் இராணுவத் தலைமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. ஜெர்மனியின் தரைப்படைகளின் தலைமைத் தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் வான் பிராவுகிச் ''நோயின்'' காரணமாய் டிசம்பர் 19ஆம் தேதி தன் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டான். தரைப்படைகளின் தலைமையை ஹிட்லர் தானே மேற்கொண்டான். ''சென்டர்'' படைத் தொகுதியின் தலைமைத் தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் வான் போக் டிசம்பர் 18ஆம் தேதி தன் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டான். டிசம்பர் 26ஆம் தேதி கர்னல் ஜெனரல் குடெரியான் பதவி நீக்கம் செய்யப்பட்டான். 3வது டாங்கிப் பிரிவின் தளபதி கர்னல் ஜெனரல் ஹெப்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டான், எல்லா பட்டங்களும் விருதுகளும் அவனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. 9வது படையின் தளபதி கர்னல் ஜெனரல் ஷ்டிராவுஸ் அவசர அவசரமாகத் தான் நோய்வாய்பட்டிருப்பதாக அறிவித்தான். ''வடக்கு'' மற்றும் ''தெற்கு'' படைத் தொகுதிகளின் தலைமைத் தளபதிகள், 20வது லப்லான்ட் படை மற்றும் 17வது படையின் தளபதிகள், இன்னும் பல கோர்பஸ்கள், டிவிஷன்களின்

---

* K. Reinhardt, *Die Wende vor Moskau*, S. 232.

கமாண்டர்கள் ஆகியோருக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. 1941 டிசம்பர் முதல் 1942 ஏப்ரல் வரை 35 நாஜி ஜெனரல்கள் தம் பதவிகளிலிருந்து அகற்றப்பட்டனர். "மார்னுவில் நடந்த சமருக்குப் பின் இந்த அளவுக்கு ஜெனரல்கள் தூக்கியெறியப்பட்ட தில்லை"* என்று பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியர் ஃபூல்லர் எழுதினார். ஜெனரல்களை மாற்றியதோடு கூட இராணுவத்தில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுவதும் நடந்தது. மாஸ்கோ அருகே சமர் நடந்த காலகட்டத்தில் ஜெர்மானிய இராணுவ போர்க்கள ட்ரிப்யூனல்களில் 62,000க்கும் மேற்பட்ட போர்வீரர் கள், படைத்துறைப் பதவி வகிக்காத அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் கடுந் தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

மாஸ்கோ அருகே சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றிக்கு பெரும் சர்வதேச முக்கியத்துவம் இருந்தது. உலகம் பூராவும் இது, பாசிசத்தின் மீது முற்போக்குச் சக்திகள் அடைந்த பொது வெற்றி யாக ஏற்றுக் கொள்ளப்பட்டது, விடுதலையை விரும்பும் மக்களின் மனநிலையை பலப்படுத்தியது, பாசிசத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்தியது, ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி வலுவடைவதில் கணிசமான பங்காற்றியது.

சோவியத் யூனியனின் முதல் இராணுவ வெற்றி, அட்லாண்டிக் சமுத்திரத்தின் இரு புறங்களிலும் நீண்ட காலமாக நிலவி வந்த உறுதியின்மை மற்றும் குழப்பத்திற்கு முதன்முதலாக முடிவு கட்டியது** என்று முற்போக்கு இத்தாலியப் பிரமுகர் பட்டாலியா கோடிட்டுக் காட்டினார். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிகப் பிரபலமான பிரமுகர்களில் ஒருவராகிய வி. ஃபோஸ்டர் இவ்வெற்றியின் முக்கியத்துவத்தை இன்னமும் அழகாக அடை யாளச் சிறப்போடு குறிப்பிட்டார். மாஸ்கோ அருகே சோவியத் இராணுவம் தொடுத்த எதிர்தாக்குதல், பாசிசத்திற்கு எதிரான மாபெரும் மக்கள் தாக்குதலுக்கு மாறியதைக் குறித்தது என்று அவர் எழுதினார்.

அந்நாட்களில் பாசிசத்திற்கு எதிரான மக்களின் போராட்டத் தில் சோவியத் யூனியன் ஆற்றிய மிகப் பெரும் பங்கை ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் இருந்த அரசுகளின் பல அரசியல், இராணுவ பிரமுகர்கள் குறிப்பிட்டனர். ரூஸ்வெல்ட், ஸ்தாலின் பெயருக்கு அனுப்பிய செய்தியில், செஞ்சேனையின் வெற்றிகளைக் கண்டு அமெ ரிக்க ஐக்கிய நாட்டில் நிலவும் சர்வபொது உற்சாகத்தைப் பற்றிக்

---

* ஜா. ஃபூல்லர், இரண்டாவது உலக யுத்தம் 1939—1945, பக்கம் 169.

** ர. பட்டாலியா, இத்தாலிய எதிர்ப்பு இயக்க வரலாறு (1943 செப்டெம்பர் 8— 1945 ஏப்ரல் 25). இத்தாலிய மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1954, பக்கம் 47.

குறிப்பிட்டார்.* 1941ஆம் ஆண்டு டிசம்பர் நடுவில் பிரிட்டிஷ் இராணுவம் தென் கிழக்கு ஆசியாவில் தோல்வியுற்ற போது வி. சர்ச்சில் படைத் தலைமையகத்தின் தலைவர்களுக்கான நினைவுக் குறிப்பில் பின்வருமாறு எழுதினார்: ''இன்று யுத்தத்தின் போக்கில் முக்கியக் காரணி ருஷ்யாவில் ஹிட்லர் அடைந்த தோல்விகளும் அவனுக்கு ஏற்பட்ட இழப்புகளுமாகும்''**. மாஸ்கோ அருகே அடையப்பட்ட வெற்றியானது சொந்த ஆயுதங்களின் துணை கொண்டு செஞ்சேனையால் அடையப்பட்ட சோவியத் வெற்றி மட்டுமல்ல, இது எல்லா பாசிச எதிர்ப்பு நாடுகளுக்கும் முதல் பழிவாங்குதலாகவும் விளங்கியது என்று பிரபல பிரெஞ்சு இராணுவ பிரமுகரும் வரலாற்றாசிரியருமான காயோம் குறிப்பிட்டார். பிரெஞ்சு பிரதான படைத் தலைமையகத்தின் முன்னாள் துணைத் தலைவராகிய ஜெனரல் ஷாஸ்ஸேன், ''மாஸ்கோ அருகே நடந்த சமர் சுதந்திர உலகைக் காப்பாற்றியது''*** என்று அறிவித்தார்.

மாஸ்கோ அருகே அடைந்த வெற்றியானது, சோவியத் நாட்டை நோக்கி நிற்கும் 10 லட்சம் பேரடங்கிய குவாண்டுங் இராணுவத் தோடு ஜப்பான் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தில் இறங் கும் அபாயத்தைக் கணிசமாகக் குறைத்தது. மாஸ்கோ அருகே நடந்த சம்பவங்கள் துருக்கிய ஆக்கிரமிப்பு வட்டங்களின் நிலையில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தின.

பெரும் தற்காப்பு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளை நடத் துவதில் செஞ்சேனைக்கு மிகச் சிறந்த அனுபவம் கிட்டியது, செஞ் சேனை இன்னமும் வீரம் மிகுந்ததாகியது, புடம் போட்டு எடுக்கப் பட்டது. போர்க் கலையின் நோக்கிலிருந்து பார்க்கும் போது இதற்கு ஆழமான தற்காப்பிற்கும் சேனைத் தொகுதிகளைக் கொண்டு தாக்கு தலைத் தொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ததும் எதிரிக்கு பலத்த பதிலடிகளைத் தந்ததும் திடீரென எதிர்தாக்குதலைத் தொடுத்ததும் போர்த்தந்திர சேமப் படைகளைத் திறமையாக, உரிய நேரத்தில் பயன்படுத்தியதும் வெற்றிகரமான இரவு நேர நடவடிக்கைகளும் பெரும் வான் இறக்குப் படைகளைப் பயன்படுத்தியதும் படைத் தலைமையகமும், சேனைகள் மற்றும் படைகளின் தளபதிகளும் யூனிட்டு கள், படைப் பிரிவுகள், துணைப் பிரிவுகளின் கமாண்டர்களும் துருப்பு களுக்குத் திறமையாகத் தலைமை தாங்கியதும் பெரிதும் படிப்பினை தருவதாக அமைந்தன.

---

* சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, தொகுதி *2*, பக்கம் *16*.

** ஜா. பட்லர், ஜா. குவாயர், **பெரும் போர்த்தந்திரம். 1941 ஜூன் — 1942 ஆகஸ்டு**, பக்கம் *246* (ருஷ்ய மொழியில்).

*** L. Chassin, *Histoiremiliaire de la seconde guerre mondiale. 1939—1945,* Paris, 1951, p. 128.

மேற்குத் திசையில் விண்ணில் ஆதிக்க நிலையிலிருந்த சோவியத் விமானப்படை தரைப்படைகளுக்கு பெரிதும் உதவியது. மொத்த மாக எதிர்தாக்குதலின் போது இது சுமார் 16,000 விமானப் பறத்தல்களை நடத்தியது. இதில் கிட்டத்தட்ட பாதி எதிரி ஆட்களையும் இராணுவத் தளவாடங்களையும் அழிப்பதற்காக நடத்தப் பட்டவை. சோவியத் போர்வீரர்கள் பெரும் வீரத்தையும் உயர்ந்த போராட்ட மனப்பாங்கையும் வெளிப்படுத்தினர். மாஸ்கோ அருகே ஆற்றிய மகத்தான செயல்களுக்காக மாஸ்கோ நகர லெனின் கிராத்ஸ்கி வட்டத்தின் குடிமக்கள் தொண்டர் படையின் 18வது டிவிஷன் உட்பட 46 யூனிட்டுகளும் படைப்பிரிவுகளும் கார்டு பட்டத்தைப் பெற்றன.

சோவியத் கொரில்லாப் படைவீரர்கள் மாஸ்கோ அருகே எதிரியை முறியடிப்பதில் கணிசமான பங்காற்றினர். மக்களின் ஆதர வோடு, சோவியத் இராணுவத்துடன் சேர்ந்து இவர்கள் உறுதி யோடும் வீரத்துடனும் எதிரியுடன் போரிட்டனர்.

''மாஸ்கோவின் தற்காப்பிற்காக'' எனும் பதக்கம் 1944ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 10 லட்சத்திற்கும் கூடுதலானோருக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டது. தலைநகர உழைப்பாளிகளின் மகத் தான சேவைக்காகவும் எதிரியுடனான போரில் இவர்கள் காட்டிய ஆண்மை, வீரத்திற்காகவும் 1947ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் தேதி மாஸ்கோவிற்கு லெனின் விருது அளிக்கப்பட்டது. மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் மக்கள் அடைந்த வெற்றியின் 20ஆவது ஆண்டு விழாவின் போது மாஸ்கோவிற்கு ''வீரத்திரு நகர்'' எனும் பட்டம் வழங்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெர்மானியத் துருப்புகளின் தோல்வி ஜெர்மானிய இராணுவத் தலைமையை நிலைகுலையச் செய்தது. ஹிட்லரின் ஜெனரல் வெஸ்ட்ஃபால் எழுதியபடி ''முன்னர் வெல்லற் கரியது என்று கருதப்பட்ட ஜெர்மானிய இராணுவம் அழிந்து விடும் நிலையிலிருந்தது''* என்று ஒப்புக்கொள்ளும்படி ஜெர்மா னியப் போர்த்தந்திரவாதிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஹிட் லரின் பல ஜெனரல்கள் இருண்ட கணிப்புகளைத் தந்தனர். ''மாஸ்கோ சமர் ஜெர்மானியத் துருப்புகளுக்கு இரண்டாம் உலக யுத்தத் திலேயே முதல் பெரும் தோல்வியைக் கொண்டு வந்தது'' என்று 4வது போர்க்களப் படையின் முன்னாள் படைத் தலைமையகத் தலைவன் பிளுமின்ஸ்டிரிட் ஒத்துக்கொண்டான். ''போலந்திலும் பிரான்சிலும் பால்கன்களிலும் ஹிட்லருக்கும் அவனுடைய இராணு

* ஸி. வெஸ்ட்ஃபால், இதரர், **மரணத்துக்கு ஒப்பான முடிவுகள்**. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, இராணுவப் பதிப்பகம், 1958, பக்கங்கள் 64, 108.

வத்திற்கும் அவ்வளவு மகத்தான வெற்றிகளை அளித்த பிளிட்ஸ் கிரிகின் முடிவை இது குறித்தது... ருஷ்ய நடவடிக்கையும் குறிப்பாக இதன் திருப்பு முனையாகிய மாஸ்கோ சமரும் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் ஜெர்மனிக்கு முதல் பலத்த அடியைத் தந்தது''[*]. ''ஹிட்லரின் திட்டங்களும் இவற்றோடு சேர்ந்து ஜெர்மனி வெற்றிகரமான யுத்தத்தை நடத்துவதற்கான வாய்ப்புகளும் 1941 அக்டோபரிலேயே, குறிப்பாக 1941 டிசம்பரில் மாஸ்கோ அருகே ருஷ்ய எதிர்தாக்குதல் துவங்கியவுடனேயே தகர்ந்து வீழ்ந்தன... ஹிட்லரின் போர்த்தந்திர நோக்கங்கள் சோவியத் தலைமை மற்றும் இதன் இராணுவத்தின் உறுதியான எதிர்ப்பால் இறுதியாக அழிக்கப்பட்டன''[**] என்ற முடிவிற்கு வந்தார் மேற்கு ஜெர்மானிய இராணுவ வரலாற்றாசிரியர் ரெய்ன்ஹார்ட். நியூரென்பர்க் விசாரணையில் ''பார்பரோஸ்ஸா'' திட்டம் தோல்வியடையும் என்று எப்போது புரிய ஆரம்பித்தது என்ற கேள்விக்கு பீல்ட்மார்ஷல் கைடல் விருப்பமின்றியே ''மாஸ்கோ'' என்ற ஒரு சொல்லைப் பதிலாக அளித்தான். அவர்கள் மாஸ்கோ அருகே யுத்தத்தை முடிக்க எண்ணினர், ஆனால் அவர்களுக்கோ இது அங்கேதான் துவங்கியது.

மேலைய நாடுகளைச் சேர்ந்த இன்னும் சில ஆராய்ச்சியாளர்கள் பின்வருமாறு கருத்துரைத்தனர். உதாரணமாக, **ஜெனரல் குடேரியானும் நவீன பிளிட்ஸ்கிரிகின் வரலாறும்** எனும் நூலின் ஆசிரியர் பிரேட்லி, மாஸ்கோ அருகே ஜெர்மானியர்கள் தோல்வி அடைந்ததிலிருந்து ''பிளிட்ஸ்கிரிகுகளின் காலம் ஜெர்மானியத் தரப்பிற்கு திரும்பி வர முடியாத பழைய காலத்திற்குச் சென்று விட்டது''[***] என்று கருதுகிறார். இன்னொரு பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் லிச், **ருஷ்யாவிற்கு எதிரான ஜெர்மானியப் போர்த்தந்திரம், 1939—1941** எனும் நூலில் பிளிட்ஸ்கிரிக் ஏன் தோல்வியடைந்தது என்பதற்கு திட்டவட்டமாகப் பதில் அளிக்கிறார்: ''தங்களுடைய பிளிட்ஸ்கிரிக் சோவியத் யூனியனை வெற்றி கொள்ளும் திறமை வாய்ந்தது என்று நம்பியதன் மூலம் ஜெர்மானியத் தலைவர்கள் பயங்கரத் தவறிழைத்தனர். சோவியத் யூனியனின் பலத்தை போதுமான அளவு மதிப்பிடாதது அவர்களுடைய பிரதான தவறாகும்''[****].

அதே நூல், பக்கம் 108.

** K. Reinhardt, *Die Wende Von Moskau*, S. 7, 291.

*** Bradly D., *Generaloberst Heinz Guderian und die Eutstehungsgeschichte des modernen Blitzkrieges*, Osnabrück, 1978, S. 233.

**** Leach B., *German Strategy Against Russia 1939—1941*, Oxford, 1975, pp. 91, 240.

பிளிட்ஸ்கிரிகின் தோல்விக்கான காரணங்களைப் பற்றிய பிரச்சினை மேற்கத்திய வரலாற்றியலில் இன்று வரை மிகக் கடுமையான பிரச்சினைகளில் ஒன்ருக இருந்து வருகிறது. சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் பாசிச பிளிட்ஸ்கிரிகின் தோல்விக்கான காரணங்களைப் பற்றி அங்கே—குறிப்பாக ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும்—நிறைய எழுதப்படுகிறது. அவ்வாறு எழுதப்பட்டவற்றில் சகலவிதக் கற்பனைகளும், புரட்டுகளும், அப்பட்டமான பொய்களும் நிறையவே உள்ளன; ''தற்செயலான தோல்வி'' மற்றும் ஹிட்லரின் ''மரணத்துக்கு ஒப்பான தவறுகள்'' ஆகியவற்றைப் பற்றிய ஏராளமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நிச்சயமாக இவை அனைத்தும் ஆதாரமற்ற கற்பனைகளாகும். வரலாற்று உண்மைகளையும் ஆவணங்களையும் நாம் அணுகியதுமே இக்கற்பனைகளின் செயற்கைத் தன்மை வெளிப்படுகிறது.

''மின்னல் வேக'' யுத்த திட்டத்தின் தோல்விக்கான காரணங்களை ஆராயும் போது பூர்ஷ்வா வரலாற்ருசிரியர்களிடம் ஒரு பொதுவான போக்கைக் காணலாம். உண்மைக் காரணங்களைத் திரித்துக் கூற அல்லது இவற்றைப் பற்றி மௌனம் சாதிக்கும் முயற்சி, இவற்றிற்குப் பதிலாக சகலவிதமான கற்பனைக் கூற்றுகளைக் கூறுவது, வேர்மஹ்டை, இதன் போர்க் கலையை, எல்லாவற்றிற்கும் மேலாக பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தத்தை நியாயப்படுத்துவது முதலியன இப்போக்கிற்கு உரித்தான அம்சங்களாகும்.

நவீனச் சூழ்நிலைகளில் பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தம், எந்த வார்த்தைகளினுல் மூடி மறைக்கப்பட்டிருந்தாலும் தனது அரசியல் சாரத்தை மாற்றவில்லை. இது ஆக்கிரமிப்பு யுத்த சித்தாந்தமாகத்தான் இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது.

மாஸ்கோ அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது ஹிட்லர் போர்த்தந்திரத்தின் ஆதாரமின்மையை மட்டுமின்றி பாசிச ஜெர்மனியின் தலைவர்களின் கொள்கை முழுவதன் அதிசாகசத் தன்மையையும் அம்பலப்படுத்தியது. ஹிட்லர் போர்த்தந்திரவாதிகளின் முக்கியத் தவறு என்னவெனில், இவர்கள் செஞ்சேனைக்கு எதிராக மட்டுமே யுத்தம் நடத்த எண்ணினுர்கள், ஆனுல் சோவியத் மக்கள் அனைவரின் எதிர்ப்பையும் இவர்கள் சந்திக்க நேரிட்டது.

சோவியத் மக்கள் அனைவரையும் தன்னைச் சுற்றி அணி திரட்டி இராணுவ அணிகளை ஒருங்கிணைத்து வீரச் செயல்களைப் புரிய போர்வீரர்களுக்கு ஊக்கமளித்த கம்யூனிஸ்டுக் கட்சியின் மிகப் பெரும் இராணுவ-ஸ்தாபன அமைப்புப் பணி மற்றும் இராணுவ-சித்தாந்தப் பணியின் பயனுகத்தான் மாஸ்கோ அருகே மகத்தான



க லீ னி ன் தே ச னை
22ப.
29ப.
கலீனின்
31ப.
30ப.
மாஸ்கோ-வோல்கா
கால்வாய்
வோல்கா
அரேஷ்கி
ஸ்தாரிட்ஸா
வோல்கா
லாமா
திமித்ரவ்
கிளீன்
ரிஷேவ்
லதோஷின்
சோல்னெச்னகோர்ஸ்க்
தெராயெவா ஸ்லபதா
பகுரேலயே கரதிஷே
3டா. ப.
வலகலாம்ஸ்க்
இஸ்த்ரா
க்ருக்கவோ
ஷகவ்ஸ்காயா
ஸ்னிகிரி
9ப.
20ப.
தெதவ்ஸ்க்
மாஸ்கோ
16ப.
ரூஸா
பலாஷ்கினோ
ரூஸா
5ப.
சிசோவ்கா
மாஸ்கோ
தோரகவோ
கூபின்கா
கிஷாத்ஸ்க்
மஜாய்ஸ்க்
33ப.
நரோ-ஃபமீன்ஸ்க்
4டா.ப.
வெரேயா
4ப.
கலோம்னா
வியாஸ்மா
மலாயரஸ்லாவித்ஸ்
ஓகா
மெதீன்
அலேஷ்கவோ
உக்ரா
49ப.
பூஹ்னவ்
தீஹனவா பூஸ்தின்
1 கார். கு. கோ.
கலூகா
ஓகா



1941 டிசம்பர்—1942 ஜனவரி ஆரம்பத்தில் மாஸ்கோ அருகே சோவியத் துருப்புகளின் எதிர்தாக்குதல்

வெற்றியை அடைவது சாத்தியமாயிற்று. சோவியத் மக்களால், கட்சியின் தலைமையின் கீழ், பாசிச ஜெர்மனி தாய்நாட்டைத் திடீரென தாக்கியதால் ஏற்பட்ட கொடிய விளைவுகளை அகற்றி, கடுமையான, உக்கிரமமான போராட்டத்தில் சக்திகளின் சமன் நிலையை மாற்ற முடிந்தது.

சோவியத் மக்களும் இராணுவமும் தலைநகர வாயில்களின் அருகே உயிரோட்டமுள்ள சோவியத் நாட்டுப் பற்றின் மிகச் சிறந்த உதார ணங்களைக் காட்டினர். போர்முனையில் காட்டிய மிகப் பெரும் வீர தீரங்களாலும் உள்நாட்டில் வெளிப்படுத்திய மகத்தான உழைப் பாலும் உயர்ந்த கட்டுக்கோப்பாலும் தாங்கி நிற்கும் திறமையாலும் பெரும் பலமுடைய எதிரியின் தாக்குதல்களை இவர்களால் முறி யடிக்க முடிந்தது. தன் பங்கிற்கு இவ்வெற்றி மக்களின், இராணு வத்தின் தார்மீக மனநிலையை உயர்த்துவதற்கு மதிப்பிட முடியா முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. ''மாஸ்கோ அருகே அடையப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியானது புதிய வீரதீரச் செயல்களுக்கு மக்களை ஊக்குவித்தது, எதிரி கண்டிப்பாக முறியடிக்கப்படுவான் எனும் நம்பிக்கையைப் பலப்படுத்தியது''° என்று லி. இ. பிரேஷ்னெவ் குறிப்பிட்டார்.

1941ஆம் ஆண்டு சோவியத் மக்களுக்கும் இராணுவத்திற்கும் பெரிதும் கடினமான யுத்த ஆண்டாக இருந்தது. இந்த ஆண்டில் திடீர் சம்பவங்களும் பேரிழப்புகளும் பெரும் நாசங்களும் நிறைந் திருந்தன. கடுமையான போராட்டம் மிகவும் கூர்மையடைந்து போராட்ட இழை அதிகபட்சம் இழுக்கப்பட்டிருந்த போது மிகக் கடுமையான நெருக்கடி நிலைகள் இந்த ஆண்டுடன் தொடர்பு கொண்டிருந்தன. ஆனால் 1941ஆம் ஆண்டு சோவியத் நாட்டைப் பொறுத்த மட்டில் வீரஞ்செறிந்த சம்பவங்கள் நிறைந்த ஆண்டாக வும் இருந்தது. சில சமயங்களில் இலக்கியத்தில் சித்தரிக்கப்படு வதைப் போல துயர நிகழ்ச்சிகள் அல்ல, மாறாக வீரஞ்செறிந்த சம்பவங்கள்தான் பாசிச கொலைபாதகர்களுக்கு எதிரான இளம் சோஷலிச அரசின் மகத்தான போராட்டத்தில் முக்கியமானவை யாக இருந்தன.

யுத்தத்தின் ஆரம்பத்தில் இவ்வளவு சிக்கலான, கடினமான சூழ்நிலையில் இருந்த ஒரு அரசு இவ்வளவு துரோகமான, வலிமை யான எதிரியின் மீது இந்த அளவு உறுதியான வெற்றி அடைந்த தற்கு வரலாற்றில் ஈடு இணையே கிடையாது.

சோவியத் யூனியன் 1941ஆம் ஆண்டிலேயே தான் ஒரு

° லி. இ. பிரேஷ்னெவ், **லெனினியப் பாதையில்**, தொகுதி 1, மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1970, பக்கம் 126 (ருஷ்ய மொழியில்).

பலமான நாடு என்று காட்டியது. எந்த ஒரு மேலைய நாட்டாலும், வேறெந்த சமூக, அரசு அமைப்பாலும் முடியாததை சோவியத் யூனியன் செய்தது. ஆக்கிரமிப்பாளனின் பாதையைத் தடுத்து நிறுத்தியது, எதிரியின் திட்டங்களை சீர்குலைத்தது, எதிரிக்கு பெருமளவு ஆட்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது, இறுதியாக, பிளிட்ஸ்கிரிக் சித்தாந்தத்தை முடிவாகக் குழிதோண்டி புதைக்கும் முகமாக மாஸ்கோ அருகே எதிரியின் முக்கியப் படைத் திரட்டை முறியடித்தது இவையனைத்தும் பெரும் சர்வதேச எதிரொலியை உண்டாக்கியது, இரண்டாம் உலக யுத்தத்தின் பொது போக்கில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியது, வரவிருந்த மகத்தான வெற்றிகளுக்கான உறுதியான அஸ்திவாரத்தை அமைத்தது.

5. ஸ்தாலின்கிராத் மற்றும் காக்கசஸின் தற்காப்பு.

ஸ்தாலின்கிராத் தற்காப்பு (1942 ஜூலை 12 — நவம்பர் 18)

1942 மே மாதம் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் தற்காலிக நிசப்தம் நிலவியது. மாஸ்கோ அருகில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடித்ததாலும் பனிக்கால தாக்குதலின் வெற்றிகளாலும் ஊக்கம் பெற்ற சோவியத் மக்கள் தேசியப் பொருளாதாரத்தை போர்க்கால முறையில் மாற்றியமைப்பதை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள். அதிக அளவு ஆயுதங்கள், குறிப்பாக டாங்கிகள், விமானங்கள், ஜெட் மற்றும் பீரங்கிச் சாதனங்கள், போர்த் தளவாடங்கள் முதலியவற்றை செஞ்சேனை பெற ஆரம்பித்தது. உள்நாட்டில் புதிய போர்த்தந்திர சேமப் படைகள் தோற்றுவிக்கப் படலாயின.

சோவியத் யூனியனின் சர்வதேச நிலவரம் மேம்பட்டது. 1942ஆம் ஆண்டு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையைத் துவக்குவதைப் பற்றி பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. அதே ஆண்டு 26 நாடுகள் கையொப்பமிட்ட ஒரு பிரகடனத்தில் எல்லா சக்திகளையும் சாதனங்களையும் ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு அனுப்புவதாக உறுதியளித்தன. உலகம் பூராவும், குறிப்பாக பாசிஸ்டுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நாடுகளில் பாசிச எதிர்ப்புச் சக்திகள் தீவிரமடைந்தன.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையை இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கியப் போர்முனையாகக் கருதிய பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை மேன்மேலும் புதிய துருப்புகளை இங்கே அனுப்பியது. 1942 மே மாத வாக்கில் இரண்டாவது போர்முனை

இல்லாததைப் பயன்படுத்திக் கொண்ட பாசிஸ்டுகள், எஞ்சிய போர்க் களங்களில் தனது இராணுவத்தில் சுமார் 20 சதவிகிதத்தை நிறுத்தி விட்டு, கிழக்குப் போர்முனையில் 217 டிவிஷன்களையும் 20 பிரிகேடு களையும் கொண்டு வந்து குவித்தனர். ஜெர்மானியர்களின் படைத் திரட்டில் 60 லட்சத்திற்கும் அதிகமான ஆட்கள் இருந்தனர், 3,200க்கும் கூடுதலான டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் சுமார் 57,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 3,400 விமானங்களும் இருந்தன.

வசந்த காலத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் தோன் றிய நிலவரத்தை மதிப்பிட்ட சோவியத் உயர்மட்ட படைத் தலைமை, கோடைக்கால ஆரம்பத்தில் ஹிட்லர் துருப்புகள் ஒரே நேரத்தில் இரண்டு மிக சாத்தியமான திசைகளில்—மத்திய, தெற்கு திசைகளில்—பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என்று கருதியது. முக்கியத் தாக்குதலை எதிரி மாஸ்கோவை நோக்கிய திசையில் தொடுப்பான் என்று கருதப்பட்டது. இதன் தொடர்பாக, தீவிர போர்த்தந்திர தற்காப்பால் எதிரியின் முன் னேற்றத்தைக் குலைக்கவும், ஆக்கிரமிப்பாளர்களை சோவியத் பூமி யிலிருந்து விரட்டியடிக்கும் நோக்கத்தோடு செஞ்சேனை பின்னர் உறுதியான தாக்குதலை மேற்கொள்வதற்காக சில தனிப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டது. 1942 மேயில் சோவியத் நிரந்தர இராணுவத்தில் 55 லட்சத்திற்கும் கூடுதலான ஆட்கள் இருந்தனர்; சுமார் 4,000 டாங்கிகளும் 44,000க்கும் கூடுதலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 2,200 விமானங்களும் இருந்தன. இவ்வாறாக கோடைக்கால ஆரம்பத்தில் ஆட்கள், பீரங்கிகள், விமானங்களில் எதிரி விஞ்சி நின்றான். செஞ்சேனையிடம் டாங்கிகள் ஓரளவு கூடுதலாயிருந்தன.

ஹார்க்கவ் அருகே சோவியத் துருப்புகள் மேற்கொண்ட நடவடிக் கைகள் சரிவர அமையாததும் கிரீமியாவின் இழப்பும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் தென் புறத்தில் நிலவரத்தைச் சிக்கலாக்கின. ஜூன் 28—30இல் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை தென் மேற்குத் திசையில் பரவலான தாக்குதலைத் துவக் கியது. ஹிட்லர் படைத் தலைமை தோனுக்கு மேற்கே சோவியத் துருப்புகளை முறியடித்து, காக்கசஸின் எண்ணெய் பிரதேசங்களைக் கைப்பற்றி, ஸ்தாலின்கிராத்—ஆஸ்திரகன் கோட்டில் வோல்கா ஆற்றிற்கு வர திட்டமிட்டது. ''இன்னமும் சோவியத்துகளிடம் உள்ள ஆள்பலத்தை இறுதியாக ஒழித்துக் கட்டி இயன்ற அளவு அதிகமாக முக்கிய இராணுவப்-பொருளாதார மையங்கள் அதற்கு கிடைக்காதவாறு செய்வதுதான் நோக்கமாகும்''* என்று ஹிட்

* *Hitler Weisungen für die Kriegfürung 1939—1945*, S. 181.

லரின் 41வது ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 6,55,000 ஆட்கள், 740 டாங்கிகள், 14,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,000க்கும் அதிகமான போர் விமானங்களும் அடங்கியிருந்த பிரியான்ஸ்க், தென் மேற்கு, தெற்கு சேனைகளின் துருப்புகளுக்கு எதிராக 9,00,000 போர்வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள், 1,260 டாங்கிகள், 17,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,640 போர் விமானங்கள் அடங்கிய இரண்டு படைத் தொகுதிகளை ("A" மற்றும் "B") ஹிட்லர் அனுப்பினான். கிட்டத்தட்ட ஒரு மாத சண்டைகளுக்குப் பின் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் ரஸ்தோவைப் பிடித்தன, தோன் ஆற்றை அடைந்து, ஆற்றின் இடது கரையிலிருந்த ஒரு சில தாக்குமுனைகளைக் கைப் பற்றின. ஆனால் தெற்கு மற்றும் தென் மேற்கு சேனைகளைச் சுற்றி வளைத்து, ஒழித்துக் கட்ட இவற்றால் முடியவில்லை. ஹிட்லர் திட் டத்தின் முதல் பகுதி தோல்வி கண்டது. என்றாலும் எதிரி தன்பா ஸைக் கைப்பற்றி தோன் ஆற்றின் ஒரு பெரிய வளைவிற்கு வந்து ஸ்தாலின்கிராதிற்கும் வடக்கு காக்கசஸிற்கும் நேரடி அபாயத்தை ஏற்படுத்தினான். பின்வாங்கிக் கொண்டிருந்த தென் மேற்கு மற்றும் தெற்கு சேனைகளின் துருப்புகள் மிகக் கடினமான நிலைமையிலிருந் தன. "A" படைத் தொகுதி வடக்கு காக்கசஸை நோக்கிச் சென்றது. "B" படைத் தொகுதி ஸ்தாலின்கிராதை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. ஹிட்லரின் 6வது போர்க்களப் படைதான் (தளபதி கர்னல் ஜெனரல் பாவுலுஸ்) இதன் முதுகெலும்பாயிருந் தது. இவை ஐரோப்பாவிலும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனை யிலும் பெரும் யுத்த அனுபவத்தைப் பெற்ற, தேர்ந்தெடுக்கப் பட்ட துருப்புகளாகும். ஜூலை 17ஆம் தேதி வாக்கில் இதில் 13 டிவிஷன்கள் (சுமார் 2,70,000 ஆட்கள், 3,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், கிட்டத்தட்ட 500 டாங்கிகள்) இருந்தன. 4வது வான் படை விமானங்கள் (சுமார் 1,200 போர் விமானங்கள்) இவற்றிற்கு ஆதரவு தந்தன.

உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் தன் சேம இருப்பி லிருந்து 62வது, 63வது, 64வது படைகளை ஸ்தாலின்கிராத் திசைக்கு அனுப்பியது. ஜூலை 12ஆம் தேதி ஸ்தாலின்கிராத் சேனை (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல் திமஷேன்கோ, ஜூலை 23இலிருந்து ஜெனரல் கோர்தவ்) தோற்றுவிக்கப்பட்டது. மேலே கூறிய படைகளைத் தவிர, முந்தைய சண்டைகளில் பலம் குன்றி யிருந்த இன்னும் 5 பொது ராணுவப் படைகளும் வான் படையும் இச்சேனையில் அடங்கியிருந்தன. 520 கி. மீ. தூர பிரதேசத்தில் தற்காப்பில் நின்று எதிரி மேற்கொண்டு முன்னேறுவதைத் தடுக்கும் கடமை ஸ்தாலின்கிராத் சேனையின் முன்னிருந்தது. 12 டிவிஷன்

களை மட்டுமே வைத்துக் கொண்டு (1,60,000 ஆட்கள், 2,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 400 டாங்கிகள்) சேனை இக்கடமையை நிறைவேற்றத் துவங்கியது. 8வது வான் படையில் 454 விமானங்கள் இருந்தன. மேலும் தொலை தூர விமானப் படையின் 150—200 குண்டு வீச்சு விமானங்களும் வான் எதிர்ப்பு பாதுகாப்பின் 102வது டிவிஷனைச் சேர்ந்த 60 சண்டை விமானங்களும் இங்கே செயல்பட்டன. எதிரி ஆட்களின் எண்ணிக்கையில் 1.7 மடங்கும் பீரங்கிகள், டாங்கிகளில் 1.3 மடங்கும் விமானங்களில் 2 மடங்கிற்குக் கூடுதலாகவும் சோவியத் துருப்புகளை விஞ்சி நின்றான்.

ஸ்தாலின்கிராத் சேனையின் முக்கியச் சக்திகள் தோன் ஆற்றின் பெரிய வளைவில் ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தன. எதிரி ஆற்றைக் கடந்து சுருக்கு வழியில் ஸ்தாலின்கிராதை அடைய விடாமல் செய்வதற்காக 62வது, 64வது படைகள் இங்கே தற்காப்பு நிலையை மேற்கொண்டன.

8வது இத்தாலியப் படையும் 3வது ருமேனியப் படையும் ஸ்தாலின்கிராத் திசையில் எதிரியால் அனுப்பப்பட்டன. பிரம்மாண்டமான ஸ்தாலின்கிராத் சமர் ஆரம்பமாகியது.

OKWஇன் 41ஆம் ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்ததை விட அதிக வெற்றிகரமாக கிழக்குப் போர்முனையின் தென் பகுதியில் தாக்குதல் வளர்ந்து வருவதாக எதிரி கருதினான். ஜூலை 21ஆம் தேதி வெளியான 44ஆம் ஆணையில் இதைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது: ''திமஷேன்கோ படைகளுக்கு எதிராக எதிர்பாரா அளவு துரிதமாகவும் அனுகூலமாகவும் வளர்ந்து வரும் நடவடிக்கைகள், கூடிய விரைவிலேயே சோவியத் யூனியனைக் காக்கசஸிலிருந்தும் எனவே முக்கிய எண்ணெய் ஊற்றுகளிலிருந்தும் துண்டித்து, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க இராணுவ சப்ளைகளின் வரவை கடுமையாகச் சீர்குலைக்கச் செய்ய முடியும் என்று நம்புவதற்கான ஆதாரங்களை அளிக்கின்றன. இதன் மூலமும் தோனெத்ஸ்க் தொழிற்துறை முழுவதையும் இழக்கச் செய்வதன் மூலமும் சோவியத் யூனியனுக்கு ஆழ்ந்த விளைவுகளை உண்டாக்க வல்ல அடி தரப்படும்''*.

வோல்கா ஆற்றின் கரைகளில் எதிரியை தடுத்து நிறுத்தி, பின்னர் முறியடிப்பதன் மீது சோவியத் இராணுவ-அரசியல் தலைமை மக்களின், இராணுவத்தின் எல்லா முயற்சிகளையும் ஒருமுனைப்படுத்தியது. கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினரும் சோவியத் யூனியன் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் உதவித் தலைவருமான மாலிஷெவ், உயர்மட்டத் தலைமை படைத் தளபதியின் துணைவர்

* *Hitlers Weisungen für die Kriegfürung. 1939—1945*, S. 194—195.

ஜூக்கவ், பிரதான படைத் தலைமையகத் தலைவர் வசிலேவ்ஸ்கிய் உட்பட பிரபல கட்சி, சோவியத், இராணுவப் பிரமுகர்கள் ஸ்தாலின் கிராத் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டனர். நேரடியாகப் போர் முனைச் சூழ்நிலைகளில் இவர்கள் எதிரிக்கு பதிலடி தருவது பற்றிய உடனடிப் பிரச்சினைகளைத் தீர்த்தனர். ஸ்தாலின்கிராதின் அருகிலும் தொலைவிலும் இருந்த நுழை வாயில்களில் தற்காப்பு எல்லைகள் அமைக்கப்பட்டன. ஸ்தாலின்கிராத் நகரில் டாங்கிகளின் உற்பத்தியைப் பெருக்கவும் நகரின் அருகேயுள்ள நுழைவாயில்களை பலப் படுத்தவும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன, எல்லா ஆட்சக்திகளும் இராணுவ-பாதுகாப்பு மூல ஊற்றுகளும் போர்முனைத் தேவைகளுக்காக அணி திரட்டப்பட்டன. குடிமக்கள் தொண்டர் படைகளை உருவாக்குவது பரவலாக நடைபெற்றது. இதில் 13,600 பேர்கள் சேர்ந்தனர். 83 உள்நாட்டுச் சண்டை பட்டாலியன்கள் தோற்றுவிக்கப்பட்டன, தற்காப்புக் கட்டுமானத்தில் பொறியியல் படைகளோடு சேர்ந்து 2,25,000க்கும் அதிகமான ஸ்தாலின்கிராத் வாசிகள் உழைத்தனர்.

ஆனால் எதிரியோ இழப்புகளைப் பொருட்படுத்தாது, நாட்டின் மத்தியப் பிரதேசங்களைக் காக்கசஸிலிருந்து துண்டிக்கும் முகமாக ஸ்தாலின்கிராதை நோக்கிப் பாய முயன்று கொண்டிருந்தான். பாசிச ஜெர்மானியத் துருப்புகள் மேற்கொண்டு முன்னேறுவதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டியிருந்தது. ஜூலை 28ஆம் தேதி பாதுகாப்புத் துறையின் மக்கள் கமிசார் 227ஆம் கட்டளையைப் பிறப்பித்தார். ''ஒரு அடி கூட பின்வாங்கக் கூடாது'' என்பதுதான் துருப்புகளுக்கு இக்கட்டளை விட்ட கோரிக்கையாகும். கடைசி சொட்டு இரத்தம் வரை, உறுதியாக ஒவ்வொரு நிலையையும் தாய்நாட்டின் ஒவ்வொரு மீட்டர் பூமியையும் பாதுகாக்குமாறு இது படைவீரர்களைக் கோரியது. கோழைகள், பீதியைக் கிளப்புபவர்கள், கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு எதிராக உறுதியான போராட்டம் அறிவிக்கப்பட்டது. 227ஆம் கட்டளை ஆயுதப் போராட்டத்தின் போக்கில் பெரும் பங்காற்றியது.

இதனிடையே தோன் ஆற்றின் பெரிய வளைவில், எண்ணிக்கையில் விஞ்சி நின்ற எதிரியுடன் ஸ்தாலின்கிராத் சேனையின் துருப்புகள் கடுமையாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. 62வது, 64வது படைகளின் வீரர்கள் தீரமாகப் போர் புரிந்தனர். போகும் போக்கில் வோல்காவிற்கு பிளந்து கொண்டு செல்ல எதிரி செய்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன. தற்காப்பு துருப்புகளின் பதிலடிகளும் எதிர்தாக்குதல்களும் இதற்குத் துணை புரிந்தன.

சோவியத் துருப்புகளின் எதிர்ப்பு அதிகமாகியதால், பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை 4வது டாங்கிப் படையை காக்

கசஸ் திசையிலிருந்து ஸ்தாலின்கிராத் திசைக்குக் கொண்டு வருமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. 4வது விமானபடையும் இங்கே மாற்றியமைக்கப்பட்டது. ஸ்தாலின்கிராத் அருகே சண்டைகள் மேன் மேலும் உக்கிரமடைந்தன. இப்போது பாசிசப் படைத் திரட்டு டாங்கிகளில் 4 மடங்கும் பீரங்கிகள், விமானங்களில் இரண்டு மடங்கிற்கு அதிகமாகவும் ஸ்தாலின்கிராதைத் தற்காத்து நின்ற சோவியத் துருப்புகளை விஞ்சியிருந்தது. காக்கசஸிலிருந்து மேன்மேலும் புதிய துருப்புகள் ஸ்தாலின்கிராத் அருகே அனுப்பப்பட்டன. ஆகஸ்டு 23ஆம் தேதி பாவுலுஸ் படையினர் ஸ்தாலின்கிராதிற்கு வடக்கே வோல்காவை அடைந்தனர். அதே நாள் ஜெர்மானிய விமானப் படையின் பெரும் விமான தாக்குதல் நகரத்தை இடிபாடுகளில் மூழ்கடித்தது. எதிரியின் தாக்குதல் மேன்மேலும் வலுத்து வந்தது. ஜெனரல்கள் மலினோவ்ஸ்கிய், மஸ்கலேன்கோ, க்ரிலோவ், சுய்க்கோவ், ஷுமீலவ் ஆகியோருடைய படைவீரர்கள் தாய்நாட்டின் ஒவ்வொரு அடி நிலத்தையும் காத்து நின்று பாசிஸ்டுகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்தினர்.

செப்டெம்பர் — நவம்பரில் சமர் நகரத்தின் உள்ளேயே நடந்தது. ஒவ்வொரு தெருவிற்காகவும் ஒவ்வொரு வீட்டிற்காகவும் மூர்க்கத்தனமான சண்டைகள் நடந்தன. இரவு நேரச் சண்டைகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன, திடீர் தாக்குதல் குழுக்களும் குறி பார்த்துச் சுடுபவர்களும் திறமையாகச் செயல்பட்டனர். ' புகை வண்டி நிலையம் 13 தடவை ஒரு தரப்பிலிருந்து இன்னொரு தரப்பிற்கு கைமாறியது, வீரகாவியமாக மாறியுள்ள சார்ஜன்ட் பாவ்லவின் வீடும், லெப்டினெட் ஸபலோத்னியின் வீடும் 4ஆம் எண் மில்லும் புக முடியா கோட்டைகளாக விளங்கின. என்றாலும் எதிரி நகரின் பெரும் பகுதியைக் கைப்பற்றி ஒரு சில இடங்களில் வோல்கா ஆற்றை அடைந்தான்.

1942 நவம்பர் 18ஆம் தேதி ஸ்தாலின்கிராத் சமரின் தற்காப்புக் கட்டம் முடிந்தது. இக்கட்டத்தில் பாசிச ஜெர்மானிய துருப்புகளில் சுமார் 7,00,000 பேர் கொல்லப்பட்டனர். அல்லது காயமடைந்தனர், 2,000க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,000க்கும் கூடுதலான டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 1,400க்கும் கூடுதலான போர் மற்றும் சரக்கு விமானங்கள் ஆகியவற்றை பாசிச ஜெர்மனி இழந்தது. ஸ்தாலின்கிராதை விரைவாகக் கைப்பற்ற எண்ணிய ஹிட்லர் படைத் தலைமையின் திட்டமும் 1942ஆம் ஆண்டு கோடைக்கால — இலையுதிர்கால நடவடிக்கைகள் அனைத்தின் திட்டமும் முறியடிக்கப் பட்டன. தற்காப்பில் ஆண்மை, உறுதி, உயர்ந்த போர்த் திறமை, பெரும் வீரம் ஆகியவற்றை வெளிப்படுத்திய சோவியத்

துருப்புகள் ஸ்தாலின்கிராத் அருகே இயங்கிய ஜெர்மானியர்களின் பிரதான படைத் திரட்டை அலைக்கழித்து பலவீனப்படுத்தின. மேற்கொண்டு எதிர்தாக்குதலைத் தொடுக்க இது அனுகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது.

காக்கசஸின் தற்காப்பு (1942 ஜூலை 25 — டிசம்பர் 31)

1942ஆம் ஆண்டு கோடைக்கால நடவடிக்கையின் பொது திட்டத் திற்கேற்ப, காக்கசஸை நேரடியாகக் கைப்பற்றும் திட்டத்தை (1942 ஜூலை 23ஆம் தேதியிட்ட OKWஇன் ஆணை №45) பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை 1942ஆம் ஆண்டு நடுவில் தீட்டியது. இது ''எதெல்வேய்ஸ்'' என்ற சமிக்கைப் பெயரைப் பெற்றது. தோனுக்கு பின்னால் சென்ற தெற்கு சேனையின் துருப்பு களை ரஸ்தோவிற்கு தெற்கிலும் தென் கிழக்கிலும் சுற்றி வளைத்து வடக்கு காக்கசஸைப் பிடிப்பதுதான் இதன் சாரம் ஆகும். இதை யடுத்து மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பல்ஷோய் காக்கசஸை சுற்றி வந்து ஒரு பகுதி துருப்புகளைக் கொண்டு நவரஸ்ஸீய்ஸ்க் மற்றும் துவப்ஸேயைக் கைப்பற்றவும் மற்றதைக் கொண்டு எண் ணெய் பிரதேசங்களாகிய க்ரோஸ்னி மற்றும் பாக்கூவைக் கைப் பற்றவும் திட்டமிடப்பட்டது. அதே நேரத்தில் மலைத்தொடரை அதன் மையப் பகுதியில் கணவாய்களின் மூலம் கடந்து டிபிலீஸி, குத்தயீஸி மற்றும் சுகூமி பிரதேசங்களை அடையத் திட்டமிடப் பட்டது.

டிரான்ஸ் காக்கசஸை அடைவதன் மூலம் அங்கேயிருந்த கருங் கடற் படைத் தளங்களை செயலற்றதாக ஆக்கவும் கருங்கடலில் முழு ஆதிக்கத்தை ஏற்படுத்தி துருக்கிய இராணுவத்துடன்—இதன் 26 டிவிஷன்கள் சோவியத் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்தன— நேரடித் தொடர்பை நிலைநாட்டவும் பாசிஸ்டுகள் நம்பினர். இவர்களது கணிப்பின்படி காக்கசஸ் மக்களினங்களுக்கு இடையே தோன்ற வேண்டிய சச்சரவுகளின் மீது பாசிஸ்டுகள் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக எதிரி, 1வது, 4வது டாங்கிப் படைகள், 17வது, 13வது (ருமேனியப்) படைகள் மற்றும் 4வது விமானப்படையின் பிரிவுகள் ஆகியவை அடங்கிய "A" படைத் தொகுதியை பீல்ட்மார்ஷல்-ஜெனரல் லிஸ்ட் தலை மையில் அனுப்பினான். இவற்றில் மொத்தமாக 1,67,000 ஆட்கள் இருந்தனர், 1,130 டாங்கிகளும் 4,540 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,000 விமானங்களும் இருந்தன. இந்த எதிரியின் படைத் திரட்டிற்கு எதிராக 51வது, 37வது, 12வது, 18வது,

56வது காலாட்படைகளும் 4வது வான் படையும் அடங்கிய தெற்கு சேனையும் வடக்கு காக்கசஸ் சேனையின் ஒரு பகுதியும் இருந்தன. இவற்றிடம் 1,12,000 ஆட்கள் இருந்தனர், 121 டாங்கிகளும் 2,160 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 130 விமானங்களும் இருந்தன. தெற்கு சேனையிடம் எதிரியை விட ஆட்கள் 1.5 மடங்கும் பீரங்கிகள் 2 மடங்கும் டாங்கிகள் சுமார் 9 மடங்கும் விமானங்கள் கிட்டத்தட்ட 8 மடங்கு குறைவாகவும் இருந்தன.

உறுதியான தற்காப்புச் சண்டைகளில் எதிரியைக் களைப்படையச் செய்து தடுத்து நிறுத்தும் கடமையும் முனைப்பான தாக்குதலுக்கு மாறிச் செல்வதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் கடமையும் சோவியத் துருப்புகளின் முன் வைக்கப்பட்டன.

சால்ஸ்க், ஸ்தாவ்ரபோல், கிராஸ்னதார் திசைகளில் 1942 ஜூலை இறுதியிலிருந்து கடுமையான சண்டைகள் மூண்டன. ஜெனரல் மலினோவ்ஸ்கியின் தலைமையிலிருந்த தெற்கு சேனையின் துருப்புகள், சக்தியில் விஞ்சி நின்ற எதிரியின் தாக்குதலால் தெற்கேயும் தென் கிழக்கேயும் பின்வாங்கிச் செல்லும்படி கட்டாயப்படுத்தப் பட்டன. இரண்டு நாட்களில் ஹிட்லர் துருப்புகள் 80 கி. மீ. தூரம் முன்னேறின, இவற்றின் டாங்கிப் படைகள் ஸதோன்ஸ்க் மற்றும் சால்ஸ்க் ஸ்டெப்பிகளுக்கு வந்து காக்கசஸின் உட்பகுதியினுள் பிளந்து கொண்டு செல்லும் அபாயத்தைத் தோற்றுவித்தன. நிலவரத்தை மதிப்பிட்ட உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது: ஜூலை 28இல் வடக்கு காக்கசஸ் சேனையும் தெற்கு சேனையும் சோவியத் யூனியன் மார்ஷல் புதியோனியின் தலைமையின் கீழ் ஒரே வடக்கு காக்கசஸ் சேனையாக ஒன்றிணைக்கப்பட்டன. கருங்கடல் கப்பற்படையும் அஸோவ் இராணுவ கப்பற்படையும் இச்சேனையின் செயல் கட்டுபாட்டிற்குள் வைக்கப்பட்டன. தோன் ஆற்றின் தென் கரையில் நிலவரத்தைப் புனரமைப்பதுதான் துருப்புகளின் கடமையாக இருந்தது. டிரான்ஸ் காக்கசஸ் சேனை (தளபதி ஜெனரல் தியுலேனெவ்) மிக முக்கியக் கடமையை நிறைவேற்றியது. இது லாஸரேவ்ஸ்கயேவிலிருந்து பத்தூமி வரை கருங்கடல் கரையோரத்தையும் சோவியத்-துருக்கி எல்லையையும் மற்றும் இரானின் வடக்கு பிரதேசங்களையும் மூடிப் பாதுகாத்தது.

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் எதிரியின் முன்னேற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது என்றாலும் ஒரு சில இடங்களில் எதிரி தொடர்ந்து முன்னேறி மாய்கோப், கிராஸ்னதார், மோஸ்தோக் ஆகியவற்றைக் கைப்பற்றினான், குபான் மற்றும் தேரெக் ஆறுகளைக் கடந்தான். ஆனாலும் எதிரியால் க்ரோஸ்னியை அடைய இயலவில்லை. செப்டெம்பர் துவக்கத்தில் ஹிட்லர் துருப்புகள் பிர

தான காக்கசஸ் மலைத்தொடரில் மிக முக்கிய கணவாய்களைக் கைப்பற்றின. சோவியத் துருப்புகளின் கடுமையான எதிர்ப்பு இங்கே பாசிஸ்டுகளை தற்காப்பிற்கு மாறிச் செல்லுமாறு கட்டாயப் படுத்தியது.

நவரஸ்ஸீய்ஸ்க் பிரதேசத்தில் கடும் சண்டைகள் மூண்டன. பேரிழப்பை விலையாகத் தந்துதான் செப்டெம்பர் 10ஆம் தேதி எதிரியால் நகரைக் கைப்பற்ற முடிந்தது. செப்டெம்பர்–டிசம்பரில் சோவியத் துருப்புகள் தொடர்ந்து கடுமையான தற்காப்புச் சண்டைகளைப் புரிந்தன. அர்ஜோநிகித்சே திசையில் அர்ஜோநிகித்சே நகரருகே எதிரி தடுத்து நிறுத்தப்பட்டான், பின் சோவியத் துருப்புகளின் கடுமையான பதிலடியை அடுத்து எதிரியின் பிரதான படைத் திரட்டு—1வது டாங்கிப் படை—இழப்புகளோடு தற்காப்பிற்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டது.

பிரதான காக்கசஸ் மலைத்தொடரின் மத்தியப் பகுதியிலுள்ள கணவாய்கள் வழியாக டிரான்ஸ் காக்கசசுக்கு பிளந்து கொண்டு செல்ல ஜெர்மானியர்கள் செய்த முயற்சியும் பலிக்கவில்லை. பதிலடிகளை வெற்றிகரமாகத் தொடுத்த சோவியத் படைப்பிரிவுகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்த இவர்கள் நவம்பர் இறுதியில் இங்கும் தற்காப்பிற்கு மாறிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். துவப்ஸே திசையில் பிரதான காக்கசஸ் மலைத்தொடரையும் இதன் மேற்குப் பகுதியில் கடக்க ஹிட்லர் துருப்புகள் செய்த முயற்சியும் பலிக்கவில்லை. 1942 டிசம்பர் நடுப்பகுதி வரை இங்கே தொடர்ந்த கடுமையான சண்டைகளில் எதிரிக்குப் பேரிழப்புகள் ஏற்பட்டன, எதிரி தாக்குதலை நிறுத்தி விட்டு தற்காப்பிற்கு மாறினுன்.

இவ்வாருக கடுமையான 5 மாத காக்கசஸ் தற்காப்பின் போது சோவியத் துருப்புகள் டிரான்ஸ் காக்கசஸ், க்ரோஸ்னி மற்றும் பாக்கூ எண்ணெய் பிரதேசங்களை எதிரி கைப்பற்ற விடவில்லை, எதிரியை தடுத்து நிறுத்தி அவனுக்கு பேரிழப்பை (1,00,000க்கும் அதிகமாேனூர்) ஏற்படுத்தின. 1942 நவம்பரில் ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் இராணுவத்தின் எதிர்தாக்குதல் துவங்கிய போது, இது அங்கே சக்திகளை அனுப்ப எதிரிக்கு வாய்ப்பளிக்கவில்லை.

காக்கசஸின் தற்காப்பில் வடக்கு காக்கசஸ், ஜார்ஜியா, அஸர்பெய்ஜான் மற்றும் அர்மீனியாவின் உழைப்பாளிகள் சோவியத் துருப்புகளுக்குப் பேருதவி புரிந்தனர். இவர்கள் தமது தன்னலமற்ற உழைப்பால் எதிரியை முறியடிக்க போர்முனைக்கு அவசியமான அனைத்தையும் அளித்தனர், தற்காப்பு அரண்களைக் கட்டுவதில் பங்கேற்றனர், குடிமக்கள் தொண்டர் படை, உள்நாட்டுச் சண்டை

மற்றும் கொரில்லா அணிகள், தேசிய யூனிட்டுகள் ஆகியவற்றைத் தோற்றுவித்தனர். சோவியத் யூனியனில் உள்ள எல்லா மக்களினங்களின் பிரதிநிதிகளும் காக்கசஸைப் பாதுகாத்தனர். கடுமையான போர்ச் சுவாலையில் சோவியத் நாட்டிலுள்ள மக்களினங்களுடனான காக்கசஸ் மக்களின் நட்பு உறுதியடைந்தது.

இவ்வாறாக மாஸ்கோ, ஸ்தாலின்கிராத் மற்றும் காக்கசஸின் தற்காப்பு சோவியத் படைவீரர்களின் உறுதி, ஆண்மை, வீரம், ஜெனரல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் உயர்ந்த போர்க் கலை ஆகியவற்றைக் காட்டியது. உலகம் முழுவதும் சோஷலிசத்தின் உயிரோட்டத்தையும் வெல்லற்கரிய தன்மையையும் கண்கூடாகக் கண்டது.

சோவியத்-ஜெர்மானிய போர்முனையில் யுத்தத்தின் தற்காப்புக் கட்டத்தில் நாட்டுப் பரப்பைப் பாதுகாப்பது சம்பந்தமான தேசியக் கடமைகள் மட்டுமின்றி சர்வதேசக் கடமைகளும்—உலக ஆதிக்கத்தை வெல்லும் பாதையில் ஆக்கிரமிப்பாளனை தடுத்து நிறுத்துவது—தீர்க்கப்பட்டன. "ருஷ்யர்கள் மட்டும் மாஸ்கோ அருகேயும் ஸ்தாலின்கிராத் அருகேயும் உறுதியாக நின்றிராவிடில் ஹிட்லர் துருப்புகள் அமெரிக்காவினுள்ளும் கிரேட் பிரிட்டனுள்ளும் நுழையும் உண்மையான அபாயம் தோன்றியிருக்கும்"* என்று இது சம்பந்தமாக அமெரிக்க, பிரிட்டிஷ் பிரமுகர்கள் அறிவித்தனர்.

6. பசிபிக் சமுத்திரத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் ஜப்பானின் ஆக்கிரமிப்பு (1941 ஜூன் — 1942 அக்டோபர்)

ஹசன் மற்றும் ஹால்ஹின்-கோலின் பாடங்களைக் கவனத்தில் கொண்ட ஜப்பானியப் படைத் தலைமை, முதலில் பசிபிக் சமுத்திர பிரதேசத்தில் ஆதிக்கத்தை வென்று, ஸ்திரமான பின்னணியை ஏற்படுத்தி இதற்குப் பின்தான் தன் சக்திகள் அனைத்தையும் சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்புவது என்று முடிவு செய்தது. இந்நேரத்தில் சோவியத் இராணுவம் பாசிச ஜெர்மானியத் துருப்புகளால் முறியடிக்கப்பட்டிருக்கும் என்று அது எதிர்பார்த்தது.

பசிபிக் சமுத்திரத்தில் முக்கிய அமெரிக்க கடற்படை மற்றும் விமானப்படைத் தளங்களின் மீது திடீர் தாக்குதலைத் தொடுத்து, அமெரிக்க கப்பற்படை மற்றும் விமானப்படையின் பிரதான சக்திகளை அழித்து இவற்றைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டது. அதே நேரத்தில் பிலிப்பீன் தீவுகள், தாய்லாந்து, பர்மா, மலாயா,

---

* Leany W. *I was There,* London, 1950, p. 100; Stettinius E., *Roosevelt and the Russians*, Carden City, 1949, p. 7.

இந்தோனீஷியா ஆகியவற்றை விரைவாகக் கைப்பற்றவும் நியூ கினி, சலமோன் தீவுகளை ஆக்கிரமிக்கவும் எண்ணம் இருந்தது. இதற்குப் பின்னால் குரீல் மற்றும் மரியான் தீவுகள், பிஸ்மார்க், இந்தோனீஷியத் தீவுக் கூட்டங்கள், மலாயா, பர்மாவின் மேற்கு எல்லைகள் ஆகியவற்றை அடைந்து கைப்பற்றப்பட்ட இடங்களில் உறுதியாக நின்று கொண்டு, யுத்தத்தைத் தொடரும் எண்ணத்தைக் கைவிடுமாறு அமெரிக்க ஐக்கிய நாட்டை நிர்ப்பந்திக்கத் திட்டமிடப்பட்டது.

இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் இத்தகைய திட்டம் யதார்த்தமானதாக இருக்கவில்லை, ஏனெனில் இது, அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் வன்மையான இராணுவப்-பொருளாதார உள்ளாற்றலோடு ஒப்பிடுகையில் நீண்ட கால யுத்தத்தை நடத்துவதற்கு ஜப்பானிடம் உள்ள குறைவான இராணுவப்-பொருளாதார வாய்ப்புகளை கணக்கில் கொள்ளவில்லை.

1941ஆம் ஆண்டின் இறுதியில் ஜப்பானிய இராணுவத்தில் தரைப் படைகளில் 99 டிவிஷன்கள், 29 தனி பிரிகேடுகள், 18 தனி ரெஜிமென்ட்டுகளும் (கைப்பொம்மை அரசுகளின் துருப்புகளையும் ஏராளமான எல்லைக் காவற்படை அணிகளையும் சேர்க்காது); கடற்படையில் 10 போர்க்கப்பல்கள், 10 விமானந்தாங்கி கப்பல்கள், 37 குரூசர்கள், 113 கண்ணி வெடிக் கப்பல்கள், 63 நீர்மூழ்கிக் கப்பல்களும் விமானப்படையில் 3,740 போர் விமானங்கள் உட்பட 6,946 விமானங்களும் (இவற்றில் 1,700 விமானங்கள் கடற்படை விமானங்களாகும், இந்த விமானங்களில் 575 விமானந்தாங்கி கப்பல்களில் உள்ளவை) இருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், ஹாலந்திற்கு எதிராகச் செயல்படுவதற்கு 2,275 விமானங்கள் ஒதுக்கப்பட்டன. மொத்தமாக முதல் வரிசையில் 2,600 புதிய விமானங்கள் இயங்கின.

தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஜப்பானிய படைத் தலைமை கடல் யூனிட்டுகளை—முக்கியத் தாக்குதல் விமானந்தாங்கி யூனிட், பிலிப்பீன் மற்றும் தெற்கு யூனிட்டுகளை—தோற்றுவித்தது. இவற்றில் கடற்படை மற்றும் விமானப்படையின் முக்கியச் சக்திகள் அடங்கியிருந்தன. மேலும் பசிபிக் சமுத்திர போர்க்கள நடவடிக்கைகளுக்காக 15 டிவிஷன்கள், 6 டாங்கி ரெஜிமென்டுகள், கலப்புப் படைத் தொகுதி மற்றும் ஆதார யூனிட்—மொத்தமாக 4,00,000 போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் — ஒதுக்கப்பட்டன.

இருக்கக் கூடிய சக்திகளைக் கொண்டு பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் உறுதியான தற்காப்பை மேற்கொள்வதன் மூலம் ஜப்பானியர்களின் தாக்குதலை முறியடிப்பது, கூடுதல் துருப்புகள் வந்த

தும் எதிரியை முறியடிப்பது என்பதுதான் அமெரிக்க, பிரிட்டிஷ் படைத் தலைமைகளின் திட்டமாக இருந்தது.

1941ஆம் ஆண்டு இறுதியில், அதாவது ஜப்பானுடனுன யுத்தத்தின் ஆரம்பத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ், ஹாலந்து இராணுவங்களிடம் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் 22 டிவிஷன்களும் (3,70,000க்கும் கூடுதலான ஆட்கள்) 11 பெரிய போர்க் கப்பல்களும் 3 விமானந்தாங்கி கப்பல்களும் 35 குரூசர்களும் 100 கண்ணி வெடிக் கப்பல்களும் 69 நீர்மூழ்கிக் கப்பல்களும் 1,520 விமானங்களும் (இவற்றில் 220 விமானந்தாங்கிக் கப்பல்களில் இருந்தன) இருந்தன. இச்சக்திகள் அனைத்தும் பசிபிக் சமுத்திரம் மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் பரவலான பிரதேசத்தில் சிதறிக் கிடந்தன.

எனவே பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் அனுகூலமான போர்த்தந்திர நிலையில் இருந்த ஜப்பானுல், தேர்ந்தெடுக்கப்பட்ட திசைகளில் குறுகிய காலகட்டத்திலேயே நேச நாடுகளின் சக்தியை கணிசமான அளவு விஞ்சும் வாய்ப்பை ஏற்படுத்த முடிந்தது. செல்வாக்கு மண்டலங்கள் சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் பிரிட்டனுக்கும் இடையே இருந்த முரண்பாடுகளையும் இதன் காரணமாக நேச நாடுகளின் இராணுவத்திற்கு ஒரே தலைமை இல்லாததையும் கணக்கில் கொண்டால் ஜப்பான் இன்னமும் அதிகமான போர்த்தந்திர அனுகூலங்களைப் பெற்றது.

பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் 1941—1942இல் கீழ்காணும் முக்கிய இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றன: 1941 டிசம்பர் 7இல் பேர்ல்-ஹார்பரில் இருந்த அமெரிக்க கடற்படைத் தளத்தின் மீது ஜப்பானின் திடீர் தாக்குதல், மலாயா நடவடிக்கை (1941 டிசம்பர்—1942 பிப்ரவரி), கொரால் கடலில் 1942 மேயில் நடைபெற்ற சமர் மற்றும் 1942 ஜூலையில் மிடுவேயி தீவிற்கு அருகே நடைபெற்ற சமர், 1944ஆம் ஆண்டு பிலிப்பீன் மற்றும் யவான் நடவடிக்கைகள்.

பேர்ல்-ஹார்பர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்

அமெரிக்க கப்பற்படையின் கருவை இயங்காமலிருக்கும் நிலையில் வைப்பது, பசிபிக் சமுத்திரத்தில் ஆதிக்கத்தை வெல்வது, முக்கிய போர்த்தந்திர திசையாகிய தென் கடல்கள் பிரதேசத்தில் தாக்குதலுக்கு வகை செய்வது ஆகியனதான் ஜப்பானியர்களுடைய இந்தத் தாக்குதலின் நோக்கமாகும். 1941ஆம் ஆண்டு நவம்பர் 16இல் 6 விமானந்தாங்கி கப்பல்கள் (353 விமானங்கள்), 2 போர்க் கப்பல்கள், 3 குரூசர்கள், 11 நாசகாரிக் கப்பல்கள், 3 நீர்மூழ்கிக் கப்பல்

கள்[*] ஆகியவற்றை உள்ளடக்கிய ஜப்பானிய விமானந்தாங்கி யூனிட் குரீல் தீவுகளில் உள்ள தளத்திலிருந்து வெளியேறி கடலைக் கடந்து டிசம்பர் 7ஆம் தேதி காலை பேர்ல்-ஹார்பரிலிருந்து வடக்கே 360 கி.மீ. தூரத்திற்கு வந்தது. இந்த அமெரிக்கத் தளத்தில் 94 கப்பல்கள் மற்றும் துணைப் படகுகள்—அவற்றில் 9 போர்க் கப்பல்கள், 8 குரூசர்கள், 29 நாசகாரிக் கப்பல்கள், 5 நீர்மூழ்கிக் கப்பல்கள், 9 கண்ணி வெடி வைக்கும் கப்பல்கள், 10 இழுவைப் படகுகள்—இருந்தன. பேர்ல்-ஹார்பரின் விமானப் படையில் 394 விமானங்களும் வான் எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பில் 294 விமான எதிர்ப்பு பீரங்கிகளும் இருந்தன. படைக் குடியிருப்பில் 42,959 பேர் இருந்தனர். ஆனால் தேவையான தளத் தற்காப்பும் கடல் மற்றும் வான் வேவு பார்த்தலும் ஒழுங்காக ஏற்பாடு செய்யப்படவில்லை. கப்பல்களில் இருந்த மாலுமிகளில் கணிசமான பகுதியினர் 7ஆம் தேதி கரையில் இருந்தனர். இதனால் ஜப்பானிய விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்து கிளம்பிய விமானங்கள், துறைமுகம், விமானத் தளத்தைத் திடீரெனத் தாக்கி அமெரிக்கர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்தின. அமெரிக்கர்களிடமிருந்த 9 போர்க் கப்பல்களில் எட்டும் (4 மூழ்கடிக்கப்பட்டன, 4 பழுதடைந்தன), 6 குரூசர்கள், நாசகாரிக் கப்பல், கணிசமான அளவு சிறு கப்பல்கள் ஆகியனவும் சேதமடைந்தன; 272 விமானங்கள் அழிக்கப்பட்டன, பழுதடைந்தன. அமெரிக்கத் துருப்புகளில் 3,400 பேர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர். ஜப்பானியர்களோ 29 விமானங்கள், 1 நீர்மூழ்கிக் கப்பல், 5 மிகச் சிறிய நீர்மூழ்கிப் படகுகள் ஆகியவற்றை மட்டுமே இழந்தனர்.

அமெரிக்க பசிபிக் கப்பற்படையின் முக்கியச் சக்திகள் இருந்த பேர்ல்-ஹார்பரின் தோல்வி சக்திகளின் சமன்நிலையை ஜப்பானுக்கு ஆதாயமாக பெரிதும் மாற்றியது, பசிபிக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியிலும் தென் கடல்களின் பிரதேசத்திலும் உறுதியான தாக்குதலுக்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. அமெரிக்க தளத்திலிருந்த படைத் தலைமையின் கவனமின்மைதான் பேர்ல்-ஹார்பர் பேரழிவிற்கான முக்கியக் காரணம் என்று அமெரிக்க காங்கிரசால் நடத்தப்பட்ட விசாரணை காட்டியது.

பேர்ல்-ஹார்பர் நடவடிக்கையில், ஜப்பானியப் படைத் தலைமை நிலவரத்தை திறமையாகப் பயன்படுத்தியதும் இதனுடைய உறுதியான, சீரிசைவான நடவடிக்கையும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவைகளாகும். அதே நேரத்தில் ஜப்பானியப் படைத் தலைமை பெரும் தவறுகளையும் செய்தது. உதாரணமாக ஓவாகு

[*] இது தவிர 27 நீர்மூழ்கிக் கப்பல்கள் அடங்கிய யூனிட்டும் இருந்தது.

தீவின் அருகேயும் நம்பகரமாக வேவு பார்க்காததால் அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்களை ஜப்பானியர்களால் கண்டுபிடிக்க இயல வில்லை. இவற்றில் ஒன்று (''என்டர்பிரைஸ்'') பிரதான தளத் திற்கு தென் மேற்கே 210 மைல்களிலும் மற்றது (''லெக்சிங் டோன்'') 700 மைல்களிலும் நின்றது. இதன் விளைவாய் ஜப்பானி யர்கள் இந்த விமானந்தாங்கிக் கப்பல்களைத் தாக்காமல் போர்க் கப்பல்களைத் தாக்கினர். இக்கப்பல்களோ, அமெரிக்கர்களே கூறும் படி ''நவீன ஜப்பானிய பெரிய போர்க் கப்பல்களை எதிர்த்துச் சண்டை போடவும் விரைவாகச் செல்லும் புதிய அமெரிக்க விமா னந்தாங்கிக் கப்பல்களோடு கூடச் செல்லவும் இயலாத அளவுக்கு பலவீனமானவையாக இருந்தன.''°

மேலும் பெருமளவு ஆயுதங்களும் எரிபொருளும் (4,00,000 டன் கனிய எண்ணெய்) மற்ற சாதனங்களும் சேமித்து வைக்கப் பட்டிருந்த பேர்ல்-ஹார்பரை திரும்பத் தாக்கும் வாய்ப்பை ஜப்பா னியர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வாறு செய்யப்பட் டிருந்தால் இழப்பை ஈடுகட்ட நீண்ட காலத்தை செலவிட வேண்டி யிருந்திருக்கும், இது அமெரிக்க கடற்படை பேர்ல்-ஹார்பரை ஒரு தளமாகப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தியிருக்கும்.

மலாயா நடவடிக்கை

இந்நடவடிக்கை ஜப்பானிய இராணுவத்தாலும் கப்பற்படையாலும் 1941 டிசம்பர் 8க்கும் 1942 பிப்ரவரி 15க்கும் இடைப்பட்ட காலத் தில் நிறைவேற்றப்பட்டது. வளம் மிக்க போர்த்தந்திர மூல ஊற்றுகளையுடையதும் பசிபிக் சமுத்திரத்தில் நேச நாடுகளின் போர்த் தந்திர பாதுகாப்பு பொதுப் போர்முனையில் முக்கிய இடத்தை வகிக்கக் கூடியதுமான பிரிட்டிஷ் மலாயாவைக் கைப்பற்றுவதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாகும்.

இந்நடவடிக்கையின்படி எதிரியின் விமானப்படையை ஒடுக்கி, வானில் ஆதிக்கத்தை வெல்லும் நோக்கத்தோடு வடக்கு மலாயா வின் விமானத் தளங்கள் மீது திடீர் விமானத் தாக்குதல்களைத் தொடுப்பதென்றும் அதே நேரத்தில் பெரும் கடல் இறக்குப் படை களை இறக்கி, மலாயாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையோர மாக தரைப்படைகளின் விரைவான தாக்குதலைத் தொடுத்து சிங்கப் பூரைக் கைப்பற்றுவதென்றும் திட்டமிடப்பட்டது. இந்நடவடிக் கையின் நிறைவேற்றத்திற்காக ஜெனரல் யாமசீட்டாவின் தலை மையில் சுமார் 70,000 ஆட்களை உடைய 25வது ஜப்பானிய

° நிமிட்ஸ், போட்டர், சமுத்திர யுத்தம் (1939 — 1945), மாஸ்கோ, 1965, பக்கம் 250 (ருஷ்ய மொழியில்).

படையும் சுமார் 600 போர் விமானங்களைக் கொண்ட 3வது விமானப்படை யூனிட்டும் 9 குருசர்கள், 16 நாசகாரிக் கப்பல்கள், 16 நீர்மூழ்கிக் கப்பல்கள், பல போக்குவரத்து மற்றும் துணைப் படகுகளை உள்ளடக்கிய மலாயா இயங்கு கப்பற்படை அமைப்பும் ஒதுக்கப்பட்டன.

பிரிட்டிஷ் மலாயாவை ஜெனரல் பெர்சிவாலின் தலைமையில் 3 டிவிஷன்கள் மற்றும் தனிப் படைப் பிரிவுகள், மொத்தம் 1,00,000 ஆட்கள் அடங்கிய பிரிட்டிஷ் துருப்புகள் பாதுகாத்தன. 1 போர்க் கப்பல், 1 பெரிய குரூசர், 3 குரூசர்கள், 9 நாசகாரிக் கப்பல்கள், சுமார் 250 கரையோர விமானப் படையின் விமானங்கள் அடங்கிய கிழக்கு கப்பற்படை இவற்றை ஆதரித்தது. ஹாலந்து நீர்மூழ்கிக் கப்பல்களின் ஸ்குவாட்ரனும் ஆங்கிலேயர்களிடம் இருந்தது. இது போக நடவடிக்கையின் போது ஆங்கிலேயர்கள் கூடுதலாக 45,000 ஆட்களையும் 141 விமானங்களையும் சிங்கப்பூருக்கு அனுப்பினர்.

சிங்கப்பூர் கோட்டையில் 406 மி. மீ. அளவு வரையிலான பீரங்கிகளும் 5 விமானத் தளங்களும் பெருமளவு போர்க் கருவிகளும் ஆயுதத் தளவாடங்களும் உணவுப் பொருட்களும் இருந்தன. ஆனால் தீபகற்பத்தில் பயன்மிக்க இறக்குப் படைத் தற்காப்பு ஒழுங்கமைக்கப்படவில்லை. தரைப்படை, கப்பற்படை, விமானப் படையின் நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட ஒற்றுமை நிலவவில்லை. பிரிட்டிஷ் ஜெனரல்கள், அட்மிரல்கள், இராணுவ அதிகாரிகளின் போர் பயிற்சித் தரம் குறைவாக இருந்தது. போர்வீரர்களின் போர்த் திறமையும் தாழ்வானதாக இருந்தது.

நுழைவதற்கான தயாரிப்புகளும் துருப்புகளை நிறுத்துவதும் ஜப்பானால் முன்கூட்டியே நிறைவேற்றப்பட்டன. இறக்குப் படை கடல் வழியே கடப்பதற்கு கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் இந்தோசீனா விமானத் தளங்களிலிருந்த விமானங்களும் மூடி, பாதுகாப்பு அளித்தன. 1941 டிசம்பர் 8 இரவில் கோட்டா-பாரு மற்றும் சோங்குஹிலா (சின்கோரா) பிரதேசங்களில் ஜப்பானியத் துருப்புகளின் இறக்கம் துவங்கியது. கரையோரத்தில் ஜப்பானியப் படையிறக்கத்திற்கு பிரிட்டிஷ் தரப்பிலிருந்து பெரிய எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை. இறக்குப் படையை முறியடிப்பதற்காக ''பிரின்ஸ் ஆப் வேல்ஸ்'' போர்க் கப்பல், ''ரிப்பல்ஸ்'' பெரிய குரூசர், 4 நாசகாரிக் கப்பல்கள் அடங்கிய கிழக்கு ஸ்குவாட்ரனை பிரிட்டிஷ் படைத் தலைமை சிங்கப்பூரிலிருந்து சியாம் வளைகுடாவிற்கு அனுப்பியது எவ்விதப் பயன்களையும் தரவில்லை. பிரிட்டிஷ் கப்பல்கள் வான் பாதுகாப்பு இன்றி சென்றன. இவற்றைக் கண்டு பிடித்த ஜப்பானியர்கள் டிசம்பர் 10ஆம் தேதி விமானத் தாக்குதலின் மூலம் போர்க் கப்பலையும் பெரிய குரூசரையும் மூழ்கடித்

தனர். இது ஆங்கிலேயர்களின் சக்தியை இன்னமும் பலவீனப்படுத்தியது.

அதே நேரத்தில் மலாயாவின் மேற்கு மற்றும் கிழக்குக் கரையோரமாகத் தாக்குதலைத் தொடர்ந்த 25வது ஜப்பானியப் படை ஆங்கிலேயர்களின் பலத்த எதிர்ப்பைச் சந்திக்கவில்லை. 1942 ஜனவரி 31இல் ஜப்பானியத் துருப்புகள் பிரிட்டிஷ் மலாயாவின் தென் கோடியிலிருந்த ஜோஹோர்-பாரு இடத்தைக் கைப்பற்றின. பிரிட்டிஷ் மற்றும் மலாயா படைப்பிரிவுகள் சிங்கப்பூருக்குப் பின்வாங்கின. ஆனால் இங்கும் இவை நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. பிப்ரவரி 8இல் ஜப்பானியர்கள் ஜோஹோர் வளைகுடாவைக் கடந்து சிங்கப்பூரை அடைந்தனர், பிப்ரவரி 15இல் கோட்டையை முற்றிலுமாகப் பிடித்தனர்.

மலாயா நடவடிக்கையின் போது ஜப்பானியர்கள், தொலைக் கிழக்கில் ஆங்கிலேயர்களின் மிகப் பலமான படைத் திரட்டை முறியடித்தனர், வட திசையில் பர்மாவை நோக்கியும் தென் கிழக்கு திசையில் ஹாலந்து இந்தியாவை நோக்கியும் தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான போர்த்தந்திர நிலைகளைக் கைப்பற்றினர். பிரிட்டிஷ் தரப்பில் 1,40,000 பேர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், சிறைபிடிக்கப்பட்டனர்; ஜப்பானியர்களின் தரப்பில் சுமார் 10,000 பேர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர்.

பெரும் கடல் இறக்குப் படைகளை திடீரென இறக்கியதும் விமானத் தளங்களிலேயே பிரிட்டிஷ் விமானங்களை அழித்ததன் மூலம் விண்ணில் ஆதிக்கத்தை வென்றதும் தரைப்படை தாக்குதலை விரைவாக வளர்த்ததும் நடவடிக்கையின் வெற்றிக்கும் தரையிலிருந்து சிங்கப்பூர் கோட்டையைக் கைப்பற்றியதற்கும் காரணங்களாகும். குழம்பிப் போன ஆங்கிலேயர்களால் இறக்குப் படைக்கு எதிராக தற்காப்பை ஏற்பாடு செய்யவும் முப்படைகளுக்கு இடையே ஒற்றுமைக்கு வகை செய்யவும் இயலவில்லை, நன்கு ஆயுதந் தரித்த, பெரும் பாதுகாப்புச் சக்திகளைக் கொண்டிருந்த சிங்கப்பூர் கோட்டையைப் பாதுகாப்பதை இவர்கள் கைவிட்டனர்.

கொரால் கடலிலும் மிடுவேயி தீவிலும் நடந்த சமர் (1942)

பசிபிக் சமுத்திரத்தில் எந்த ஒரு தரப்பாலும் எதிரியை முறியடிக்க முடியாமல் போன முதல் சமராக இது ஜப்பானியக் கப்பற்படைக்கு அமைந்தது. நியூ கினி தீவின் தென் கிழக்குப் பகுதியைப் பிடிப்பதற்கு பெரும் முக்கியத்துவம் அளித்த ஜப்பானியர்கள் கொரால் கடலில் உள்ள மிக முக்கியத் துறைமுகமாகிய மோர்ஸ்பியைக்

கைப்பற்றத் தீர்மானித்தனர். அமெரிக்கப் படைத் தலைமையோ ஜப்பானியர்களின் இத்திட்டத்தைச் சீர்குலைக்கத் தீர்மானித் தது.

1942 மே 7–8இல் அமெரிக்க கப்பற்படைக்கும் (143 விமானங்களைக் கொண்ட 2 விமானந்தாங்கிக் கப்பல்கள், 8 குரூசர்கள், 11 நாசகாரிக் கப்பல்கள்) ஜப்பானியக் கடற்படைக்கும் (125 விமானங்களைக் கொண்ட 1 இலகுவான மற்றும் 2 கனரக விமானந் தாங்கிக் கப்பல்கள், 9 குரூசர்கள், 15 நாசகாரிக் கப்பல்கள் இத் தியாதி) இடையே கடற் சண்டை நடைபெற்றது. இச்சண்டையின் சிறப்பு அம்சம் என்னவெனில் போர்க் கலையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக நீர் பரப்பின் மீது மிதந்து கொண்டிருந்த கப்பல்கள் எதிரியை நோக்கி ஒரு முறை கூடச் சுடவில்லை. விண்ணி லிருந்து தாக்குவதன் மூலம் முதலில் எதிரியின் விமானந்தாங்கிக் கப்பல்களை ஒழிக்கும் நோக்கத்தோடு கடற்படை விமானங்கள்—டார்ப்பிடோ ஏந்தி விமானங்களும் குண்டு வீச்சு விமானங்களும்—மட்டுமே சண்டையிட்டன.

மே 7ஆம் தேதி ஜப்பானியப் போர் கப்பல்களின் ஸ்குவாட் ரனைக் கண்டுபிடித்த அமெரிக்கர்கள் விமானந்தாங்கிக் கப்பல் களில் இருந்த விமானங்களின் தாக்குதலால் ''சேஹோ'' எனும் இலகுவான ஜப்பானிய விமானந்தாங்கிக் கப்பலை மூழ்கடித்தனர். அடுத்த நாளன்று ''செக்காகூ'' எனும் ஜப்பானிய விமானந்தாங்கிக் கப்பலும் ''யோர்க்டவுன்'' மற்றும் ''லெக்சிங்டோன்'' எனும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களும் சேதமடைந்தன. மொத் தமாக அமெரிக்கர்கள் 1 விமானந்தாங்கிக் கப்பல், எண்ணெய்க் கப்பல், நாசகாரிக் கப்பல், 66 விமானங்கள், 543 ஆட்களையும் இழந்தனர்; ஜப்பானியர்கள் 1 விமானந்தாங்கிக்கப்பல், நாசகாரிக் கப்பல், 4 இறக்குப்படைத் தோணிகள், 77 விமானங்கள் மற்றும் சுமார் 900 ஆட்களையும் இழந்தனர்.

இழப்புகள் ஏற்பட்டதும் அமெரிக்க கப்பற்படையைப் பற்றிய சரியான விவரங்கள் இல்லாததால் போர்ட்-மோர்ஸ்பியில் இறங்கும் எண்ணத்தைக் கைவிட்ட ஜப்பானியர்கள் துலாகி தீவில் இறங்கினர். அமெரிக்கர்களால் ஜப்பானிய கப்பற்படையின் அடையாளச் சமிக் கையைக் கண்டுபிடிக்க முடிந்ததால் ஜப்பானியர்களின் திட்டம் அமெரிக்காவிற்கு முன்கூட்டியே தெரிய வந்தது. இது ஜப்பானியர் களின் தோல்வியில் கணிசமான பங்காற்றியது.

கொரால் சண்டைக்குப் பிறகு பசிபிக் சமுத்திரத்தின் தென் பகுதியில் தீவிர நடவடிக்கைகளில் இறங்குவதை ஜப்பானியப் படைத் தலைமை கைவிட்டு அலெவூட் தீவுகளின் மேற்குப் பகுதி யையும் அமெரிக்க கப்பற்படையின் பெரும் சக்திகள் குவிக்கப்பட்

டிருந்த மிடுவேயி தீவில் முக்கிய அமெரிக்க இயங்கு தளத்தையும் கைப்பற்ற முயற்சி செய்தது.

கடல் இறக்குப் படைகளை திடீரென இறக்கி மிடுவேயி தீவு, அத்து மற்றும் கீஸ்கா தீவுகளைக் கைப்பற்றுவது, பிரதானச் சமரில் அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை அழிப்பது, இதன் மூலம் பசிபிக் சமுத்திரத்தின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளில் மேற் கொண்டு போர்த்தந்திர லட்சியங்களை நிறைவேற்றுவதற்காக கடலில் ஆதிக்கத்திற்கு வகை செய்வது என்பதுதான் ஜப்பானியப் படைத் தலைமையின் திட்டமாக இருந்தது.

நடவடிக்கைக்குத் தயாராகையில் ஜப்பானியப் படைத் தலைமை, திடீரெனத் தாக்குதல் தொடுப்பதன் மீது பெரும் கவனம் செலுத்தி யது. இந்நோக்கத்தோடு அது நடவடிக்கைக்கான உருமாற்றம், எதிரிக்குத் தவறான தகவல்களை அளித்தல் ஆகியவை சம்பந்தமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

உதாரணமாக அலெவூட் திசையில் ஒரு நாள் முன்னராகவே நடவடிக்கைகளைத் துவக்கத் திட்டமிடப்பட்டது; இது பிரதான தாக்குதலின் திசையிலிருந்து அமெரிக்கர்களின் கவனத்தையும் சக்திகளையும் திருப்ப வேண்டும். இது தவிர நீர்மூழ்கிக் கப்பல்கள் முன்கூட்டியே கொணர்ந்து நிறுத்தப்பட்டன. ஆனால் ஜப்பானியர் களின் அடையாள சமிக்கையை முன்கூட்டியே அறிந்திருந்த அமெ ரிக்கர்கள் ஜப்பானியர்களின் திட்டங்களைத் தெரிந்து கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்: மிடுவேயிக்கு அருகேயிருந்த நுழை வாயில்களில் இவர்கள் 19 நீர்மூழ்கிக் கப் பல்களை நிறுத்தினர், 700 மைல் சுற்று வட்டாரத்திற்கு விமான வேவு பார்த்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் மிடுவேயி தீவில் 120 விமானங்கள் பறந்து தாக்க வல்ல இராணுவத் தயார்நிலையில் இருந்தன, தீவு பலத்த பாதுகாப்பின் கீழ் வைக்கப் பட்டது. 1942 ஜூலை 4–6இல் 3 விமானந்தாங்கிக் கப்பல்கள், 8 குரூசர்கள், 14 ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல்கள், 24 நீர்மூழ்கிக் கப்பல்கள் அடங்கிய அமெரிக்க கப்பற்படைக்கும் 11 பெரிய போர்க் கப்பல்கள், 5 விமானந்தாங்கிக் கப்பல்கள், 14 குரூ சர்கள், 58 ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல்கள், 10 நீர்மூழ்கிக் கப்பல்கள் அடங்கிய ஜப்பானிய முக்கியத் தாக்குதல் யூனிட்டிற்கும் இடையே நடைபெற்ற சண்டையில், கொரால் கடலில் நடை பெற்ற சண்டையைப் போன்றே நீர்ப்பரப்பின் மீது மிதந்து கொண் டிருந்த கப்பல்கள் நேரடியாகத் தம்மிடையே சண்டையிடவில்லை. விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்து விமானங்கள் மட்டுமே தாக்கு தலை நடத்தின.

மிடுவேயி தீவருகே நடந்த சண்டையில் ஜப்பானியர்கள் 4

விமானந்தாங்கிக் கப்பல்களேயும் 1 கனரக குரூசரையும் 332 விமானங்களேயும் இழந்தனர். அமெரிக்கர்களின் இழப்பு கணிசமான அளவு குறைவாக இருந்தது. அவர்கள் 1 நாசகாரிக் கப்பல், மிடுவேயி தீவிலிருந்த 30 விமானங்கள் உட்பட 150 விமானங்கள் ஆகியவற்றை மட்டுமே இழந்தனர்.

மிடுவேயி தீவின் அருகே நடைபெற்ற சமரின் போது நேச நாட்டுக் கடற்படை முதன் முதலாக வெற்றியடைந்தது. இது அதற்கு அதிக அனுகூலமான சூழ்நிலேயை ஏற்படுத்தியது. போரிடும் தாப்புகளிடமிருந்த சக்திகளின் சமன்நிலே கிட்டத்தட்ட சமமாகியது, ஜப்பான் தாக்குதலேக் கைவிட்டு தற்காப்பிற்கு மாறி செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.

பசிபிக், சமுத்திரப் பிரதேசத்தில் மேற்கொண்டு 1942இல் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் மட்டானவையாக இருந்தன. வடக்கே ஜப்பானியர்கள் அலெவூட் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த அத்து மற்றும் கீஸ்கா தீவுகளேக் கைப்பற்றினர். பசிபிக் சமுத்திரத்தின் தென் மேற்குப் பகுதியில் பெரும்பாலும் குவாடல்கனல் தீவிற்காகவும் நியூகினி தீவின் தென் கிழக்குப் பகுதிக்காகவும் சண்டைகள் நடந்தன.

7. வடக்கு ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் மற்றும் அட்லாண்டிக் பிரதேசத்தில் நேச நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள் (1941 ஜூன் — 1942 அக்டோபர்)

சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி கயமைத்தனமான தாக்குதலேத் தொடுத்த பின் ஹிட்லர் தலேமை தனது துருப்புகளில் பெரும் பகுதியை சோவியத்-ஜெர்மானியப் போர்முனேயிலேயே தொடர்ந்து வைத்திருந்தது; வடக்கு ஆப்பிரிக்காவில் இக்கால கட்டத்தில் 10 இத்தாலிய மற்றும் ஜெர்மானிய டிவிஷன்கள் மட்டுமே இருந்தன.

அனுகூலமான சூழ்நிலேயைப் பயன்படுத்திய பிரிட்டிஷ் படைத் தலேமை பாசிசக் கூட்டணிக்கு மத்திய தரைக் கடலில் இருந்த போக்குவரத்து மார்க்கங்களின் மீதான இராணுவ நடவடிக்கைகளின் தீவிரத்தை அதிகப்படுத்தியது. தரைப் படைகளே 8வது படையாக (6 காலாட்படை, 1 கவசடாங்கி டிவிஷன், 2 காலாட்படை மற்றும் 3 கவசடாங்கி பிரிகேடுகள்) ஜெனரல் மொன்ட்கமேரியின் தலேமையில் ஒன்றிணேத்த பிரிட்டிஷ் படைத் தலேமை 1941 நவம்பர் 18இல் வடக்கு ஆப்பிரிக்காவில் தாக்குதலே மேற்கொண்டது. பிரிட்டிஷ் துருப்புகள் இங்கே இத்தாலிய-ஜெர்மானியத் துருப்பு

களைத் தோற்கடித்து 1942 ஜனவரி 10 வாக்கில் இவற்றை ஏல்-அகேய்லாவிற்குத் தெற்கே பின்தள்ளின. ஆனால் பிரிட்டிஷ் துருப்புகள் பெரும் பரப்பில் சிதறிக் கிடந்தன. ஒரேயொரு கவசடாங்கி பிரிகேடு மட்டுமே ஏல்-அகேய்லா பிரதேசத்திற்கு வந்தது. ஜெர்மானிய ஜெனரல் ரோம்மல் இதைப் பயன்படுத்திக் கொண்டான். 1942 ஜனவரி 21இல் இந்த ஜெனரல் தொடுத்த பலத்த பதிலடி தன் லட்சியத்தை நிறைவேற்றியது. ஆங்கிலேயர்கள் பின்வாங்கத் துவங்கினர். தொடர்ந்து தாக்கிய ரோம்மலின் துருப்புகள் ஜூலை ஆரம்பத்தில் ஏல்-அலாய்மெனே அடைந்த போது அங்கே முன் கூட்டியே தயார்படுத்தப்பட்ட நேசத் துருப்புகளின் தற்காப்பைச் சந்திக்க நேரிட்டதால் தாக்குதலை நிறுத்தும் கட்டாயத்திற்குள்ளா யின. இந்த எல்லைக்கோட்டில் போர்முனை ஸ்திரமடைந்தது. இது இவ்வாறு நடைபெற இன்னொரு காரணம் 2வது பாசிச ஜெர்மானிய விமான படையின் ஒரு பகுதி மத்திய தரைக் கடல் பிரதேசத்திலிருந்து சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்கு மாற்றப்பட்டதாகும்.

இவ்வாறாக 1940—1942இல் வடக்கு ஆப்பிரிக்காவில் இராணுவ நடவடிக்கைகள் இரு தரப்புகளுக்கும் மாறி மாறி கிடைத்த வெற்றி களுடன் நடைபெற்றன. இதற்குக் காரணம் என்னவெனில், தாக்கக் கூடிய தரப்பால் சுற்றி வளைக்கும் யுக்தியைப் பயன்படுத்தி துரத்திச் செல்ல இயலாமல் போனதும், இத்தகைய சூழ்நிலைகளில் எதிர்த் தரப்பால் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பு எல்லை களுக்குப் பின்வாங்கிச் செல்ல முடிந்தது மட்டுமின்றி பதிலடிக்கு ஏற் பாடு செய்ய முடிந்ததும் ஆகும். அதோடு கூட போரிட்ட இரு தரப்பு களுக்குமே பொறுமையும் உறுதியும் தற்காப்பில் ஸ்திரமும் போத வில்லை. சுற்றி வளைக்கப்படும் அபாயம் தோன்றிய போது சாதாரண மாக பீதி தோன்றி, கட்டளையின்றியே துருப்புகள் பின்வாங்கின.

மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் இத்தாலியின் போக்கு வரத்து மார்க்கங்களில் போராட்டம் வலுத்தது. 1941ஆம் ஆண்டு ஆகஸ்டில் வடக்கு ஆப்பிரிக்காவிலிருந்த இத்தாலிய-ஜெர்மானியத் துருப்புகளுக்கு அனுப்பப்பட்ட சரக்குகளில் 33 சதவிகிதத்தையும் அக்டோபரில் 63 சதவிகிதத்தையும் நவம்பரில் 70 சதவிகிதத் திற்கு அதிகமாகவும் ஆங்கிலேயர்கள் மூழ்கடித்தனர். இது பாசிஸ்டு களின் கடல் மார்க்கங்கள் கிட்டத்தட்ட முடமாக்கப்படும் ஒரு நிலைக்கு இட்டுச் சென்றதால் ஹிட்லர் படைத் தலைமை அட்லாண் டிக்கிலிருந்து தனது டார்பேடோ படகுகளில் ஒரு பகுதியையும் 17 நீர்மூழ்கிக் கப்பல்களையும் மத்திய தரைக் கடல் பகுதிக்கு மாற்றுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது.[°]

° பி. ருகே, சமுத்திர யுத்தம் 1939 — 1945.

1941 நவம்பர் — டிசம்பரில் ஜெர்மானியப் படகுகளும் நீர்மூழ்கிக் கப்பல்களும் இத்தாலியக் கப்பற்படையுடன் கூட்டாகச் சேர்ந்து பிரிட்டிஷ் கப்பற்படையின் மீது பல பலத்த தாக்குதல்களைத் தொடுத்து பெருத்த நாசத்தை ஏற்படுத்தின: 3 போர்க் கப்பல் கள், ''ஆர்க் ராயல்'' விமானந்தாங்கிக் கப்பல் உட்பட ஏராளமான கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது நீண்ட காலத்திற்கு பழு தடைந்து போகுமாறு செய்யப்பட்டன. இதன் விளைவாய் பிரிட்டிஷ் தரப்பில் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் 3 குரூசர் களும் ஒரு சில ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல்களும் மட்டுமே எஞ்சியிருந்தன. கடல் ஆதிக்கம் இத்தாலிய-ஜெர்மானியப் படைத் தலைமையின் கரங்களுக்கு மாறியது.

இதே காலகட்டத்தில் ஜெர்மானியர்களின் இரண்டாவது விமானப் படைக் கோர்பசின் பிரிவுகள் மால்டாவை பன்முறை தாக் கின. துறைமுகக் கட்டிடங்களும் விமானத் தளங்களும் சேதமடைந் தன. இவையெல்லாம் சேர்ந்து ஆங்கிலேயர்களின் கடினமான நிலையை ஆழப்படுத்தின. இவர்களால் தம் தரைப்படைகளை கப்பற்படையைக் கொண்டு ஆதரிக்க இயலவில்லை. மேலும் வடக்கு ஆப்பிரிக்காவில் இயங்கி வந்த துருப்புகளுக்கு சாதனங்களை எடுத்துச் செல்லும் பிரச்சினையைத் தீர்ப்பது சிக்கலாகியது.

சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் துவங்கியதும் ஹிட்லர் கிட்டத்தட்ட தன் விமானப்படை முழுவதையும் மேற்கிலிருந்து கிழக்கே அனுப்பியதால் அட்லாண்டிக்கில் நிலவரம் நேச நாடு களுக்கு ஆதாயமாக மாறியது. பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சில் இது பற்றி பின்வருமாறு எழுதினர்: ''ருஷ்யாவில் புகும் ஹிட்லர் திட்டங்கள் விரைவிலேயே எங்களுக்கு வான் பரப்பில் தேவையான இடைவேளையை அளித்தன. இப்புதிய நடவடிக்கைக்கு ஹிட்லர் ஜெர்மானிய விமானப்படையை கணிசமான அளவு இடம் மாற்ற வேண்டியிருந்தது. எனவே மே மாதத்திலிருந்து எமது கப்பல்களுக்கு எதிரான எதிரி விமானப்படை நடவடிக்கையின் அளவுகள் குறைந் தன''*.

தமது நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் கடல் போரில் ஆங் கிலேயர்களுக்கு உதவுவதற்காகவும் அமெரிக்க ஐக்கிய நாடு மேற் கொண்ட நடவடிக்கைகள் அட்லாண்டிக்கில் போக்குவரத்து மார்க்கங்களில் ஆங்கிலேயர்களின் நிலையை இலகுவாக்கிய இன்னொரு முக்கிய அம்சமாக இருந்தன. *1941* ஜூலையில் ஐஸ்லாந்திலிருந்த ரெய்க்ஜாவிக் தளத்தில் அமெரிக்க கப்பற்படை ஆங்கிலேயர்களை மாற்றி, இதைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் பாதுகாப்பு முழுவதை

* W. Churchill, *The Second World War*, Vol. III, p. 143.

யும் தான் ஏற்றுக் கொண்டது. இறுதியாக ஆங்கிலேயர்களே கடல் போக்குவரத்து மார்க்கங்களில் தற்காப்பை வலுப்படுத்தி மேம்படுத்துவது சம்பந்தமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இவையனைத்தும் அட்லாண்டிக்கில் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களால் பிரிட்டிஷ் மற்றும் நடுநிலை நாடுகளின் கப்பல்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்தன. 1941 ஏப்ரலில் இந்த இழப்புகள் 6,53,960 டன்னுக இருந்தன என்றால் 1941 ஜூலையில் இவை 1,20,975 டன்னுகக் குறைந்து அதே ஆண்டு நவம்பரில் 1,04,212 டன்னுக இருந்தன.

1941 இறுதியிலிருந்து, அதாவது அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கியதிலிருந்து அமெரிக்க கப்பற்படைச் சக்திகளுக்கு எதிராக ஜெர்மானிய கப்பற்படையின், குறிப்பாக நீர்மூழ்கிக் கப்பல்களின் வெளிப்படையான போர் துவங்கியது. அமெரிக்க கண்டத்தின் அருகே இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றன. கப்பல் எதிர்ப்பு தற்காப்பு அமெரிக்கர்களிடம் பலவீனமாக இருந்ததால் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அமெரிக்கக் கப்பல்களை வெற்றிகரமாக டர்பேடோ தாக்குதலுக்கு உள்ளாக்கின. உதாரணமாக பிப்ரவரியிலும் மார்ச்சிலும் கரிபியன் கடலில் எண்ணெய் பொருட்களுடன் கூடிய 23 எண்ணெய்க் கப்பல்கள் டர்பேடோ தாக்குதலுக்கு உள்ளாயின. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பனமா கால்வாய் பிரதேசத்தின் உள்ளும் புகுந்து, அங்கிருந்த கப்பல்களை அழித்தன. ஹிட்லரின் நீர்மூழ்கிக் கப்பற்படையில் கணிசமான பகுதி மத்திய தரைக் கடலிலும் பாரென்ட்ஸ் கடலிலும் மற்றும் பிரிட்டனின் கரைகளை நோக்கி அமெரிக்க போக்குவரத்துக் கப்பல்கள் செல்லும் மார்க்கங்களில் வடக்கு அட்லாண்டிக்கிலும் இயங்கியது.

1942ஆம் ஆண்டுதான் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களின் செயல்பாட்டிற்கு மிகப் பயனுள்ள ஆண்டாக இருந்தது. இவை அட்லாண்டிக்கில் 5.5 மில்லியன் டன் எடையுள்ள 1,038 கப்பல்களை மூழ்கடித்தன. ஆனால் ஆண்டு இறுதியில் நிலவரம் கணிசமாக மாறியது. 1942ஆம் ஆண்டின் முதல் பகுதியில் 21 நீர்மூழ்கிக் கப்பல்களை மட்டுமே இழந்த ஜெர்மானியர்கள், நேச நாடுகளின் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு தற்காப்பு மேம்படுத்தப்பட்டதால் 1942ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் 64 நீர்மூழ்கிக் கப்பல்களை இழந்தனர். என்றாலும் அட்லாண்டிக்கின் கடல் மார்க்கங்களில் பிரிட்டன், அமெரிக்காவின் நிலை தொடர்ந்து இக்கட்டானதாக இருந்தது.

யும் தான் ஏற்றுக் கொண்டது. இறுதியாக ஆங்கிலேயர்களே கடல் போக்குவரத்து மார்க்கங்களில் தற்காப்பை வலுப்படுத்தி மேம்படுத்துவது சம்பந்தமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இவையனைத்தும் அட்லாண்டிக்கில் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களால் பிரிட்டிஷ் மற்றும் நடுநிலை நாடுகளின் கப்பல்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்தன. 1941 ஏப்ரலில் இந்த இழப்புகள் 6,53,960 டன்னாக இருந்தன என்றால் 1941 ஜூலையில் இவை 1,20,975 டன்னாகக் குறைந்து அதே ஆண்டு நவம்பரில் 1,04,212 டன்னாக இருந்தன.

1941 இறுதியிலிருந்து, அதாவது அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கியதிலிருந்து அமெரிக்க கப்பற்படைச் சக்திகளுக்கு எதிராக ஜெர்மானிய கப்பற்படையின், குறிப்பாக நீர்மூழ்கிக் கப்பல்களின் வெளிப்படையான போர் துவங்கியது. அமெரிக்க கண்டத்தின் அருகே இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றன. கப்பல் எதிர்ப்பு தற்காப்பு அமெரிக்கர்களிடம் பலவீனமாக இருந்ததால் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அமெரிக்கக் கப்பல்களை வெற்றிகரமாக டர்பேடோ தாக்குதலுக்கு உள்ளாக்கின. உதாரணமாக பிப்ரவரியிலும் மார்ச்சிலும் கரிபியன் கடலில் எண்ணெய் பொருட்களுடன் கூடிய 23 எண்ணெய்க் கப்பல்கள் டர்பேடோ தாக்குதலுக்கு உள்ளாயின. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பனாமா கால்வாய் பிரதேசத்தின் உள்ளும் புகுந்து, அங்கிருந்த கப்பல்களை அழித்தன. ஹிட்லரின் நீர்மூழ்கிக் கப்பற்படையில் கணிசமான பகுதி மத்திய தரைக் கடலிலும் பாரென்ட்ஸ் கடலிலும் மற்றும் பிரிட்டனின் கரைகளை நோக்கி அமெரிக்க போக்குவரத்துக் கப்பல்கள் செல்லும் மார்க்கங்களில் வடக்கு அட்லாண்டிக்கிலும் இயங்கியது.

1942ஆம் ஆண்டுதான் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களின் செயல்பாட்டிற்கு மிகப் பயனுள்ள ஆண்டாக இருந்தது. இவை அட்லாண்டிக்கில் 5.5 மில்லியன் டன் எடையுள்ள 1,038 கப்பல்களை மூழ்கடித்தன. ஆனால் ஆண்டு இறுதியில் நிலவரம் கணிசமாக மாறியது. 1942ஆம் ஆண்டின் முதல் பகுதியில் 21 நீர்மூழ்கிக் கப்பல்களை மட்டுமே இழந்த ஜெர்மானியர்கள், நேச நாடுகளின் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு தற்காப்பு மேம்படுத்தப்பட்டதால் 1942ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் 64 நீர்மூழ்கிக் கப்பல்களை இழந்தனர். என்றாலும் அட்லாண்டிக்கின் கடல் மார்க்கங்களில் பிரிட்டன், அமெரிக்காவின் நிலை தொடர்ந்து இக்கட்டானதாக இருந்தது.



1941—1942இல் பசிபிக் சமுத்திரத்திலும் ஆசியாவிலும் இராணுவ நடவடிக்கைகள்



அத்து தீவு
அலெஊட் தீவுகள் (அ.ஐ.நா.)
பெத்ரபாவ்லவ்ஸ்க் -கம்சாத்ஸ்கி
கிஸ்கா
பரமுஷீர்
க ன டா
வன்குவேர் தீவு
பிரேமர்டன்
அ. ஐ. நா.
முக்கியத் தாக்குதல் விமானந்தாங்கிப் பிரிவு
ப சி பி க் ச மு த் தி ர ம்
சான்-பிரான்சிஸ்கோ
லாஸ்-ஏஞ்ஜெலெஸ்
சான்-டியேகோ
மிடுவேயி தீவுக் கூட்டம்
பேர்ல்-ஹார்பர் குறுங் குடா
ஹோனலூலு
அமெரிக்க பசிபிக் கப்பற்படை
ஹவாய்யி தீவு
23.12.41.
உயேக் தீவுக் கூட்டம்
(அ.ஐ.நா.)
ஜோன்ஸ்டன் தீவுக் கூட்டம்
(அ.ஐ.நா.)
(அ.ஐ.நா.)
வது கப்பற்படை
திரூன் தீவுகள்
17 மற்றும் 18ப.
குவாட்ஜெலீன் தீவுக் கூட்டம்
மக்கின்-மெயாங்க்
2.1942
பல்மீரா தீவு
கிறிஸ்துமஸ் தீவு
அயர்லாந்து
புகென்வீல் தீவு 26.1.42
ஷுவலேல் தீவு 28.1.42
சான்டா-இசபேல் தீவு
3.5.82
குவாடல்கனல் தீவு
சாலமோன் தீவுகள் (பிரிட்.)
அமெரிக்க இறக்குப் படையின் படையிறக்கும்
7.8.42
எஸ்பாட்டே தீவு
பாகோ-பாகோ
(அ.ஐ.நா.)
பிஜித் தீவுகள் (பிரிட்.)
க ா ர ா ல்
க ட ல்

ஹிட்லரிசத்தை விரைவிலேயே முறியடிப்பதற்காக உலகெங்கும் இருந்த பாசிச எதிர்ப்புச் சக்திகளை அணிதிரட்ட வழி கோலிய சோவியத் யூனியனின் வெளிநாட்டு அரசியல் நடவடிக்கை பாசிசக் கூட்டணியை முறியடித்ததில் முக்கியக் காரணியாக விளங்கியது.

''நமது தாயகத்தின் விடுதலைக்கான நம்முடைய 'யுத்தம், தமது விடுதலைக்காகவும் ஜனநாயக சுதந்திரங்களுக்காகவும் போராடும் ஐரோப்பிய, அமெரிக்க மக்களின் போராட்டத்தோடு ஒன்று சேரும். இது ஹிட்லரின் பாசிச இராணுவத்தின் தரப்பிலிருந்து வரும் அடிமைப்படுத்தும் அச்சுறுத்தலுக்கு எதிராக, அடிமைப்படுத்துவதற்கு எதிராக, விடுதலைக்கு ஆதரவாக நிற்கும் மக்களின் ஒரே அணியாக இருக்கும்''* என்று 1941 ஜூன் 29இல் வெளியான மக்கள் கமிசார்களின் கவுன்சில் மற்றும் அகில ருஷ்யக் கம்யூனிஸ்டுக் (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இதேதான் 1941ஆம் ஆண்டு ஜூலை 3இல் அரசு தற்காப்புக் கமிட்டித் தலைவர் ஸ்தாலின் ஆற்றிய உரையிலும் கோடிட்டுக் காட்டப்பட்டது.

சோவியத் யூனியன் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியை உருவாக்குவதற்காக தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் போராடியது. ''ஓர் உடன்பாடு, எங்கு, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படைகளை அரித்தழிக்காமல், அதன் நிலையை வலுப்படுத்தி ஏதேனும் ஓர் ஏகாதிபத்திய வல்லரசின் தாக்குதலை முடமாக்குமோ, அத்தகைய இடங்களில் ஓர் ஏகாதிபத்தியக் கூட்டணிக்கு எதிராக இன்னொன்றுடன் ராணுவ உடன்பாட்டைச்''** செய்து கொள்வதைக் கைவிடலாகாது என்ற லெனினிய ஆணையைக் கம்யூனிஸ்டுக் கட்சி பின்பற்றி நடந்தது.

வெகுஜனங்களின் சக்தி மிக்க இயக்கமும் பிரிட்டிஷ் தீவுகளின் உள்ளும் மேற்கு கோளகர்த்தத்திலும் பாசிசத் துருப்புகள் நுழையும் அபாயமும் சோவியத் யூனியனுடன் இராணுவ கூட்டை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அவசியத்தின் முன் மேலைய வல்லரசுகளின் அரசாங்கங்களை வைத்தன. 1941ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் தேதி பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சிலும் 1941 ஜூன் 24இல் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் பாசிச ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்

---

* மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை, தொகுதி 1, மாஸ்கோ, 1946, பக்கம் 34 (ருஷ்ய மொழியில்).

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 174.

தில் சோவியத் யூனியனை ஆதரிப்பதாக தம் அரசாங்கங்களின் சார்பில் அறிக்கை விடுத்தனர். இவையனைத்தும் உலகின் மிகப் பெரும் அரசுகளாகிய சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகள் பாசிச எதிர்ப்புக் கூட்டணியில் ஒன்று சேருவதற்கான புறவய ரீதியான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன. இவ்வாறாக ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி தோற்றுவிக்கப்பட்டதானது ஒரு புறவய ரீதியான நிகழ்ச்சியாக இருந்தது.

ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியை இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் முறைப்படுத்துவது ஒரு சில கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு 1942ஆம் ஆண்டின் முதல் பகுதியில் நிறைவு பெற்றது. சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் பிரிட்டனின் அரசாங்கங்களால் வெளியிடப்பட்ட பரஸ்பர ஆதரவு குறித்த அறிக்கைகள் இதற்கான ஆரம்பமாக அமைந்தன.

ஜெர்மனிக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளைப் பற்றி சோவியத் யூனியனுக்கும் கிரேட் பிரிட்டனுக்கும் இடையே 1941 ஜூலை 12இல் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பரஸ்பரம் உதவி செய்து கொள்வது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது, எல்லா நேச நாடுகளின் ஒப்புதலின்றி ஜெர்மனியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில்லை, அதனோடு சமரசமோ சமாதானமோ செய்து கொள்வதில்லையென உறுதிமொழி தரப்பட்டது. இதுதான் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் தோற்றத்தின் துவக்கத்திற்குப் பாதையமைத்த முதல் அதிகாரபூர்வமான ஆவணமாக அமைந்தது.

1941 செப்டெம்பரில் லண்டனில் சோவியத் யூனியன், பெல்ஜியம், செக்கோஸ்லொவாக்கியா, கிரீஸ், போலந்து, ஹாலந்து, நார்வே, யுகோஸ்லாவியா, லுக்ஸம்பர்க், சுதந்திர பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மகாநாடு நடைபெற்றது. 1941ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் தேதி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டாலும் பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சிலாலும் கையொப்பமிடப்பட்ட அட்லாண்டிக் சாசனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை (நாஜி கொடுங் கோன்மையை ஒழிப்பது, ஆக்கிரமிப்பாளனை ஆயுதங்களைத்து மக்களை ஆயுதச் சுமையிலிருந்து விடுவிப்பது, பாசிசத்தை முறியடித்த பின் எல்லா நாடுகளுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் அளிப்பது இத்தியாதி) ஒத்துக் கொண்ட சோவியத் அரசாங்கம் தனது அறிக்கையில், ஐரோப்பிய மக்களை இரத்தக் கிளறியான பாசிச ஆட்சிக் கும்பலின் கொடுமையிலிருந்து விரைவாகவும் இறுதியாகவும் விடுவிக்கும் பொருட்டு சுதந்திரத்தை விரும்பும் மக்களின் பொருளாதார மற்றும் இராணுவ மூல ஊற்றுகளை ஒருமுனைப்படுத்தி சரியானபடி இவற்றை வினியோகிக்க வேண்டியதன் இன்றியமையா அவசியத்தை வலியுறுத்தியது. சோவியத்

பரதிநிதி, ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் லட்சியங்கள் மற்றும் கடமைகளைப் பற்றிய சோவியத் அரசாங்கத்தின் பிரகடனத்தை மகாநாட்டில் சமர்ப்பித்தார். இதில் பாசிச கூட்டின் ஆக்கிரமிப்பு நோக்கங்கள் அம்பலப்படுத்தப்பட்டிருந்தன, பாசிச ஜெர்மனியையும் இதன் கூட்டாளிகளையும் விரைவாகவும் உறுதியாகவும் முறியடிப் பதற்காக எல்லாச் சக்திகளையும் சாதனங்களையும் ஒன்றுதிரட்டு மாறு ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் நாடுகளுக்கு அறைகூவல் விடப்பட்டிருந்தது. மேலும் அரசு சுதந்திரத்திற்கும் தன் நாட்டின் பிரதேச அரசுரிமைக்கும் ஒவ்வொரு மக்களினத்திற்கும் உள்ள உரிமையையும் தன் விருப்பப்படி அரசு அமைப்பை நிலைநாட்டிக் கொள்ளும் உரிமையையும் சோவியத் யூனியன் ஆதரிப்பதாக பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.*

செப்டெம்பர் 29 முதல் அக்டோபர் 1 வரை சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய 3 வல்லரசுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாஸ்கோ மகாநாடு நடந்தது. இதில் பரஸ்பர இராணுவப் பொருளாதார உதவியைப் பற்றி தீர்மானிக்கப்பட்டது, சோவியத் யூனியனுக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் அளிக்கும் இராணுவ சப்ளையைப் பற்றிய உடன்பாடு கையெழுத்தானது. ''இந்த முடிவானது எங்கள் நாட்டில் சாந்தப் படுத்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் சர்வாதிகாரிகளுடன் இணக்கமாகப் போகுமாறு அழைக்கும் எல்லா அறைகூவல்களுக்கும் கொடுங்கோன்மையுடனும் ஒடுக்குச் சக்திகளுடனும் சமரசம் செய்து கொள்ளுமாறு கோரும் அறைகூவல்களுக்கும் முடிவு கட்டும்''** என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறினார். இதன் பின் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ரூஸ்வெல்ட் ''யுத்தத்தை தூண்டி விடுவதாக'' பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் சோவியத் யூனியனிலும் மிகப் பெரும்பான்மையான நாடுகளிலும் அமெரிக்க அரசாங்கத்தின் இத்தகைய முடிவு திருப்தியோடு வரவேற்கப்பட்டது.

சோவியத் யூனியனுக்கு உதவி புரியக் கோரும் இயக்கங்கள் மாஸ்கோ அருகே நடந்த சமரின் போது குறிப்பாக வலுத்தன, ''இந்த மாபெரும் சமரில் மனிதகுலத்தின் எதிர்காலமே முன்வைக் கப்பட்டுள்ளது... ஒரு தரப்பில் ஒளியும் முன்னேற்றமும் மறு தரப் பில் இருள், பிற்போக்கு, அடிமைத்தனம், மரணம். தனது சோஷ லிச விடுதலையைக் காத்து நிற்கும் ருஷ்யா அதே நேரத்தில் நமது விடுதலைக்காகவும் போராடுகிறது. மாஸ்கோவைப் பாதுகாப்பதன்

---

* மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை. ஆவணங்கள், தொகுதி 1, மாஸ்கோ, 1946, பக்கங்கள் 163 – 164.

** Edward R. Stettinius, *Lend-Lease Weapon for Victory,* New York, 1944.

மூலம் அது லண்டனைப் பாதுகாக்கிறது''* என்று கேன்டர்பெர்ரி மாதாகோயிலின் மதகுரு ஜான்ஸன் கூறினார்.

தன்னிடம் உள்ளதும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் தேவையானதுமான பண்டங்களையும் மூலப்பொருட்களையும் அமெரிக்காவிற்கு அளிக்கத் தான் தயாரென சோவியத் யூனியன் அறிவித்தது. ஆனால் அமெரிக்கா மற்றும் கிரேட் பிரிட்டனின் தரப்பிலிருந்து அளிக்கப்பட்ட பொருளாதார உதவியின் அளவு பாசிச ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் ஆற்றிய பெரும் பங்கிற்கு ஏற்றதாக இல்லை. 1941 அக்டோபர் — நவம்பரில் அமெரிக்கா லேண்ட் லீஸ் சட்டத்தின் அடிப்படையில் சோவியத் யூனியனுக்கு 5,45,000 டாலர் மதிப்புள்ள ஆயுதங்களையும் பொருட்களையும் அனுப்பியது. மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா அளித்த மொத்த உதவியில் (741 மில்லியன் டாலர்கள் மொத்த மதிப்பு) இது 0.1 சதவிகிதத்திற்கும் குறைவானதாக இருந்தது. பிரிட்டிஷ் சப்ளைகளின் விஷயத்திலும் நிலைமை இப்படிதான் இருந்தது. 1941 அக்டோபர் முதல் டிசம்பர் வரை இது உடன்பாட்டில் உள்ள 800 விமானங்களுக்குப் பதிலாக 669 விமானங்களையும் 1,000 டாங்கிகளுக்குப் பதில் 487 டாங்கிகளையும் 600 டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களுக்குப் பதில் 301 ஆயுதங்களையும் மட்டுமே அனுப்பியது. ஆனால் அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் இந்த அளவு உதவி கூட நல்ல முக்கியத்துவம் உடையதாயிருந்தது, மூன்று மாபெரும் வல்லரசுகள் மேற்கொண்டு கூட்டுச் சீர்சைவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளைத் தோற்றுவித்தது.

ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் வரிசைகளை விரிவுபடுத்தும் முகமாக சோவியத் யூனியன், பொது விரோதிக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தைப் பற்றி லண்டனிலிருந்த செக்கோஸ்லொவாக்கிய, போலந்து அரசாங்கங்களுடன் 1941 ஜூலையில் உடன்படிக்கை செய்து கொண்டது; செப்டெம்பரில் டெ கோல் தலைமையிலிருந்த சுதந்திர பிரான்சின் தேசியக் கமிட்டியோடு தொடர்பு கொண்டு, பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் பிரெஞ்சு மக்களுக்கு பன்முக உதவியை நல்க தயாரென அறிவித்தது.

சோவியத் யூனியனின் விவேகமான வெளிநாட்டுக் கொள்கையின் பயனாய் சோவியத் நாட்டை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்த பாசிசக் கொலைபாதகர்கள் தீட்டிய திட்டங்கள் தவிடு பொடியாக்கப்பட்டன. சோவியத் யூனியனின் முன்முயற்சியின் பேரால் பலம் மிக்க ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி உருவாக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இதில் 26 அரசுகள் அங்கம் வகித்தன. அமெரிக்க ஐக்கிய நாடு அதிகாரபூர்வமாக யுத்தத்தில்

---

* H. Johnson, *Soviet Strength*, London 1943, pp. 153—154.

இறங்கியதும் வாஷிங்டனில் 1942 ஜனவரி 1ஆம் தேதி இந்நாடு கள் ''ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில்'' கையொப்பமிட்டன. பாசிசக் கூட்டிற்கு எதிரான போராட்டத்திற்கு தம்மிடமுள்ள சகலவித இராணுவ மற்றும் பொருளாதார மூல ஊற்றுகளைப் பயன் படுத்துவது என்றும் நேச நாடுகளின் ஒப்புதலின்றி இந்நாடுகளோடு தனி சமரசமோ அல்லது சமாதானமோ செய்து கொள்வதில்லை யென்றும் இந்நாடுகள் உறுதிமொழி தந்தன. பாசிச ஜெர்மனி, இதன் கூட்டாளிகளுக்கு எதிரான யுத்தத்தில் கூட்டைப் பற்றியும் யுத்தம் முடிந்த பிறகு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி பற்றியும் 20 ஆண்டு காலத்திற்கு 1942 மே 26இல் லண்டனில் கையெழுத்தான பிரிட்டிஷ்-சோவியத் ஒப்பந்தமும், ஆக்கிரமிப்பிற்கு எதிரான யுத்தத்தை நடத்துவதில் பரஸ்பர உதவி சம்பந்தமான கோட்பாடுகளைப் பற்றி 1942 மே 11இல் வாஷிங்டனில் கையொப் பமான சோவியத்-அமெரிக்க உடன்படிக்கையும் கூட்டணியைத் தோற்றுவிப்பதன் முடிவு கட்டமாக இருந்தன.

பாசிச எதிர்ப்பு முன்னணியை விரிவுபடுத்தி, வலுப்படுத்தி, உறுதிப்படுத்தவும் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியில் உள்ள ஒவ் வொரு உறுப்பு நாடும் பாசிசத்தை முறியடிக்கும் பொது லட்சியத் தில் மிக அதிகப் பங்காற்றுமாறு செய்யவும் சோவியத் யூனியன் இயன்ற அளவு பாடுபட்டது. சோவியத் யூனியனும் அதன் இராணுவ மும் சோவியத் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து நின்று பாசிச ஜெர்மனியின் முக்கியச் சக்திகளின் தாக்குதலை உறுதியோடு எதிர்த்தன. அதே சமயம் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் நேச நாட்டு கடமைகளை நிறைவேற்றுவதில் சோவியத் யூனியன் தலை சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது.

ஆனால் மேலைய நாடுகளோ யுத்தத்தை நடத்துவதையும் யுத்தத் திற்குப் பிந்தைய உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் தமது ஏகாதிபத்திய நலன்களுக்கு உட்படுத்த முயன்றன. உதாரணமாக மேற்கு ஐரோப்பாவில், பிரான்சின் வடக்கே, பாசிச ஜெர்மனியின் ஜீவாதார மையங்களுக்கு அருகே இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க வேண்டுமென்று ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி தோற்று விக்கப்பட்டதிலிருந்தே சோவியத் யூனியன் முன்மொழிந்தது. 1941 ஜூலை 18ஆம் தேதி சோவியத் யூனியன் இப்பிரச்சினையை முன்வைத்தது. இத்தேதியில் இ. வி. ஸ்தாலின் வி. சர்ச்சிலுக்கு அனுப்பிய செய்தியில் மேற்கே இரண்டாவது போர்முனையை ஆரம் பிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பொதுமக் கள், யுத்தத்தின் காலக்கெடுவைக் குறுக்கி ஆட் சேதத்தையும் மக்களின் துன்பங்களையும் குறைப்பதற்கான உண்மையான வாய்ப்பை

சோவியத் யூனியனின் இந்த முன்மொழிவில் கண்டு இதை ஆமோதித்து ஆதரித்தனர். ஆனால் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஆளும் வட்டங்கள் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதை ஆதரிக்கவில்லை. 1941இலும் சரி, 1942இலும் சரி இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்கும் வாய்ப்பு தன்னிடம் இல்லையென பிரிட்டிஷ் அரசாங்கம் தெரியப்படுத்தியது.

1942ஆம் ஆண்டு மீண்டும் சோவியத் அரசாங்கம் பன்முறை இப்பிரச்சினையை எழுப்பியது. ''1942ஆம் ஆண்டு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஏற்படுத்துவது பற்றிய உடனடி பிரச்சினைகளின் விஷயத்தில் முழு உடன்பாடு அடையப்பட்டுள்ளது'' என்று சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயும் சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவுகளைப் பற்றி 1942 ஜூன் 12இல் வெளியான அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.* ஆனால் இம்முறையும் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் தாம் மேற்கொண்ட கடமைகளை நிறைவேற்றவில்லை. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் சமூக மற்றும் அரசியல் வட்டங்கள், சோவியத் யூனியனின் பாலும் பாசிசக் கூட்டிற்கு எதிரான போராட்டத்தில் இது மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பாலும் தம் நாடுகளிலுள்ள மக்களின் அனுதாபத்தைக் கணக்கில் கொண்டு மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க வேண்டும், சோவியத் யூனியனுடன் அதிகப் பயனுள்ள ஒத்துழைப்பு வேண்டும் என்று போராடி வந்த ஒரு தருணத்தில்தான் இவையெல்லாம் நடந்தன. ''ருஷ்யர்களின் மீதுள்ள சுமைகளைக் குறைப்பதற்காகத்தான் என் நாட்டு மக்களும் உங்கள் நாட்டு மக்களும் போர்முனையை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோருகின்றனர். நம்மிரு நாடுகளும் சேர்ந்து செய்வதை விட அதிகமாக இன்று ருஷ்யர்கள் ஜெர்மானியர்களைக் கொன்று குவிக்கின்றனர், இராணுவத் தளவாடங்களை ஒழித்துக் கட்டுகின்றனர் என்பது இந்த மக்களுக்கு நன்றாகவே தெரியும்''** என்று ரூஸ்வெல்ட் 1942 ஏப்ரல் 3இல் சர்ச்சிலுக்கு எழுதினார்.

ஆனால் ஒரு சில எதிர்மறை அம்சங்கள் நிலவிய போதிலும் சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சிகளால் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி தோற்றுவிக்கப்பட்டதானது, சமாதான காலத்தில் மட்டுமின்றி மிகச் சிக்கலான யுத்த சூழ்நிலைகளிலும் கூட வெவ்வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் இடையேயான ஒத்துழைப்பின் வாய்ப்பிற்கான ஆணித்தரமான எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

* பிராவ்தா, 1942 ஜூன் 12.

** H. Jeis, *Churchill, Roosevelt, Stalin. The War They Waged and the Peace They Sought*, Princeton, 1970, p. 58.

அத்தியாயம் 4

யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்பு முனை

1. ஸ்தாலின்கிராத் அருகேயும் காக்கசஸிலும் அடைந்த மகத்தான வெற்றி (1942 நவம்பர் 19 — 1943 அக்டோபர் 9)

சோவியத் மக்களின் தன்னலங்கருதா உழைப்பின் பயனாய் 1942 இறுதியில் நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட, விரைவாக வளர்ந்து வந்த யுத்தப் பொருளாதாரம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. 1941 டிசம்பரோடு ஒப்பிடுகையில் 1942 டிசம்பரில் விமான உற்பத்தி 3.3 மடங்கு அதிகரித்திருந்தது. 1942ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் சோவியத் விமானப்படை மாதந்தோறும் சராசரியாக 2,260 விமானங்களைப் பெற்றது. மொத்தமாக அந்த ஆண்டில் 25,436 விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. டாங்கி உற்பத்தியும் விரைவாக அதிகரித்து வந்தது. 1942இல் 24,668 டாங்கிகள் (50 சதவிகிதத்திற்கும் கூடுதலாக T-34 நடுத்தர டாங்கிகள் உட்பட) உற்பத்தி செய்யப்பட்டன. அதே ஆண்டு 3,237 ஜெட் மார்டர் பீரங்கிகளும் (''கத்யூஷா'') 76 மி. மீ. மற்றும் அதிக விட்டமுடைய சுமார் 30,000 பீரங்கிகளும் சோவியத் இராணுவத்திற்குக் கிடைத்தன, 120 மி. மீ. மார்டர் பீரங்கிகளின் உற்பத்தி 300 சதவிகிதம் கூடியது.

1942 நவம்பர் மாத வாக்கில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் எண்ணிக்கையிலும், இராணுவத் தளவாடங்களிலும் தமக்கிருந்த மேம்பாட்டு நிலையை இழந்தன. ஆனாலும் எதிரி பலமானவனாக, ஆபத்தானவனாக இருந்தான். சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் எதிரியின் வசம் 62,00,000 ஆட்கள் இருந்தனர், 51,680 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் (விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சேர்க்காது) 5,080 டாங்கிகளும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 3,500 போர் விமானங்களும் இருந்தன. இத்தருணத்தில் சோவியத் தரப்பில் 65,91,000 ஆட்கள் இருந்தனர், 77,851 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7,350 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 4,544 போர் விமானங்களும் இருந்தன.

இராணுவத் தளவாடங்கள் மேன்மேலும் அதிகமாக வந்து கொண்டிருந்ததன் அடிப்படையில் சோவியத் இராணுவ உட்பிரிவு



ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல் திட்டம்
(1942 நவம்பர்)



தோன் சே.
சலோத்சா
தோன் சேனை
வோல்கா
66ப.
16டா. கோ.
கத்லுபான்
ஸ்தாலின்கிராத்
ஸ். சே.
62ப.
ரஸ்ஸோஷ்கா
கார்பவ்கா
64ப.
ஸ்தாலின்கிராத் சேனை
13டா. கோ.
57ப.
51ப.
த்ஸாஸா ஏரி
4 கு. கோ.
பர்மன்த்ஸாக் ஏரி
4 இ. கோ.

களின் வடிவங்கள் மேம்பாடு அடைந்தன. உதாரணமாக பிளந்து கொண்டு செல்லும் பீரங்கிப்படை டிவிஷன்களும் டாங்கி மற்றும் வான் படைகளும் அமைக்கப்பட்டன. உள்நாட்டின் உட்பகுதியில் புதிய சேமப் படைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவையனைத்தும் சோவியத் உயர்மட்ட பிரதான படைத் தலைமை திட்டமிட்டபடி ஸ்தாலின்கிராத் அருகே போர்த்தந்திர தாக்குதல் நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு யதார்த்தமான முன்தேவைகளைத் தோற்று வித்தன.

உயர்மட்ட பிரதான படைத் தலைமையின் எண்ணத்தின்படி, ஜெனரல்கள் வதூதின், ரக்கசோவ்ஸ்கிய், யெரியோமின்கோவின் தலைமையிலிருந்த தென் மேற்கு, தோன் (செப்டெம்பர் 28இல் தோற்றுவிக்கப்பட்டது) மற்றும் ஸ்தாலின்கிராத் சேனைகளின் சக்திகளைக் கொண்டு தோன் ஆற்றுக்கும் வோல்கா ஆற்றுக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் எதிரியின் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டத் திட்டமிடப்பட்டது. தென் மேற்கு சேனையும் ஸ்தாலின்கிராத் சேனையும் எதிரெதிராக பலத்த தாக்கு தல்களைத் தொடுத்து பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பக்கங் களைப் பிடித்து சோவேத்ஸ்கிய்-கலாச் பிரதேசத்தில் முற்றுகை வளையத்தை மூட வேண்டும். தோன் சேனை ஒரு தாக்குதலால் தோன் ஆற்றின் வலது கரையிலிருந்த எதிரியின் தற்காப்பை ஒழிக்க வேண்டும், இன்னொரு தாக்குதலால் தோன் ஆற்றின் சிறுவளைவில் ஜெர்மானியத் துருப்புகளை பிரதான ஸ்தாலின்கிராத் படைத் திரட்டிலிருந்து துண்டிக்க வேண்டும். அக்டோபர் ஆரம்பத்தில் துவங்கிய எதிர்தாக்குதலுக்கான தயாரிப்பின் போது சோவியத் படைத் தலைமை பலம் மிக்க தாக்குதல் படைத் திரட்டுகளைத் தோற்றுவித்தது. சாரம்ச ரீதியாக இரு தரப்புகளின் சக்திகளும் சமமாயின. மூன்று சோவியத் சேனைகளில் 11,06,000 பேர் இருந் தனர், 15,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,463 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 1,350 போர் விமானங்களும் இருந்தன. 3வது ருமேனியப் படை, 6வது போர்க்கள மற்றும் 4வது டாங்கி ஜெர்மானியப் படைகள், 4வது ருமேனியப் படை ஆகியவற்றை உள்ளடக்கிய "B" படைத் தொகுதி (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் வைஹ்ஸ்) இவற்றிற்கு எதிராக நின்றது. இதில் 10,11,000க்கும் கூடுதலான ஆட்கள் இருந்தனர்; 10,290 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 675 டாங்கிகளும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 1,216 போர் விமானங்களும் இருந்தன. இவ்வாறாக சோவியத் துருப்புகள் ஆள் பலத்தில் 1.1 மடங்கும் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 1.5 மடங்கும் டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளில்

2.2 மடங்கும் போர் விமானங்களில் 1.1 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன. முக்கியத் தாக்குதல் திசைகளில் பெருமளவு சக்தி களையும் சாதனங்களையும் குவித்திருந்ததால் எதிரியை விட இரு மடங்கு, ஏன் மும்மடங்கு விஞ்சி நின்ற ஒரு நிலையில் இவை இருந் தன. ஸ்தாலின்கிராத் அருகே எதிர்தாக்குதலுக்கான தயாரிப்பு களும் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகளை கொண்டு வந்து குவிப்பதும் மிக இரகசியமாக, ஒருவரும் அறியாதபடி நடந்ததால் அவை தாக்குதலுக்கு மாறியதானது எதிரித் துருப்புகளுக்கு முற்றி லும் எதிர்பாராததாக இருந்தது. இதற்கு ஒரு வாரம் முன்தான் ஜெர்மானியத் தரைப்படைகளின் பிரதான படைத் தலைமை, தோன் பிரதேசத்தில் பரவலான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிரிக்கு போதுமான சக்தியில்லையென ஹிட்லருக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

இறுதியில் ஜெர்மானியப் பிரதான படைத்தலைமை ஏராளமான தனிப்பட்ட அறிகுறிகளின் அடிப்படையில், ஸ்தாலின்கிராத் திசை யில் தன் படைத் திரட்டின் இடது பக்கவாட்டிற்கு முன் சோவியத் துருப்புகள் கணிசமான அளவு பெருகியுள்ளதைக் கண்டுபிடித்து சோவியத் படைத் தலைமை இங்கே பனிக்காலத் தாக்குதலைத் துவக்க திட்டமிட்டிருப்பதாக முடிவு செய்தது. ஆனால் தரைப்படை பிரதான படைத் தலைமையகத்தின் முன்னால் தலைவன் ஜெனரல் ஸைட்லர் கூறும்படி ஜெர்மானிய இராணுவத் தலைவர்களுக்கு, ''நீண்டு கிடந்த இடது பக்கவாட்டின் எப்பகுதியில்—ஸ்தாலின் கிராத் அருகேயிருந்த ருமேனியப் பகுதியிலா மேற்கேயிருந்த இத்தா லியப் பகுதியிலா அல்லது இறுதியாக இன்னமும் மேற்கே நீண் டிருந்த ஹங்கேரியப் பகுதியிலா—ருஷ்யர்கள் தாக்கப் போகின்றார் கள் என்பது அப்போது தெரிந்திருக்கவில்லை''*. ருமேனியப் படை யின் மீதுதான் அநேகமாக தாக்குதல் தொடுக்கப்படும் என்று கருதினாலும் தன்னால் சோவியத் தாக்குதல் ஆரம்பமாகும் தேதியை நிலைநாட்ட இயலவில்லையென ஸைட்லர் ஒத்துக் கொண்டான். ஸ்தாலின்கிராதிற்கு தெற்கேயிருந்த பிரதேசத்திலிருந்து தொடுக்கப் பட்ட இரண்டாவது தாக்குதலைப் பொறுத்தமட்டில் இது ஜெர் மானியர்களுக்கு முற்றிலும் எதிர்பாராததாக இருந்தது.

1942ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி காலை 7 மணி 30 நிமிடத்திற்கு முழங்கிய பீரங்கி ஒலி, தோன் ஆற்றுக்கும் வோல்கா விற்கும் இடைப்பட்ட மிகப் பெரும் பிரதேசத்தில் மூண்ட பிரம்மாண்டமான சமரின் துவக்கத்தை அறிவித்தது. முதல் நாள்

---

* ஸெ. வெஸ்ட்ஃபால், இதரர், மரணத்துக்கு ஒப்பான முடிவுகள். ஆங்கிலத் திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1958, பக்கம் 165.

தாக்குதலிலேயே தென் மேற்கு சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு எதிரியின் போர்முனையை விரைவாகப் பிளந்து கொண்டு 6வது ஜெர்மானியப் படையின் பின்னணியினுள் 25—35 கி. மீ. வரை ஊடுருவிப் புகுந்தது. இப்படைத் திரட்டை நோக்கி தென் கிழக்கிலிருந்து ஸ்தாலின்கிராத் சேனையின் மொபைல் யூனிட்டுகள் முன்னேறிக் கொண்டிருந்தன. நவம்பர் 23ஆம் தேதி தென் மேற்கு மற்றும் ஸ்தாலின்கிராத் சேனைகளின் மொபைல் யூனிட்டுகள் சோவேத்ஸ்கிய் எனும் குடியிருப்பு பிரதேசத்தில் ஒன் றிணைந்தன. 3,30,000 ஆட்களைக் கொண்ட பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டின் 22 டிவிஷன்களும் 260 தனிப் படைப்பிரிவு களும் சுற்றி வளைக்கப்பட்டன.

டிசம்பர் முழுவதும் நீடித்த வான் முற்றுகையின் பயனாய் சுற்றி வளைக்கப்பட்ட எதிரிக்கு ஜெர்மானிய விமானப்படை மூலம் சப்ளை செய்யும் முயற்சி குலைக்கப்பட்டது. இதில் 700க்கும் அதிகமான எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன.

சுற்றி வளைக்கப்பட்ட துருப்புகளை எப்படியாவது விடுவிக்க முயன்ற பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை அவசர அவசரமாக பீல்ட்மார்ஷல் மன்ஷ்டைன் தலைமையில் 30 டிவிஷன்கள் அடங்கிய ''தோன்'' படைத் தொகுதியைத் தோற்றுவித்தது. சோவியத் போர்முனையைப் பிளந்து சென்று சுற்றி வளைக்கப்பட்ட ஜெர்மா னியத் துருப்புகளை முற்றுகையிலிருந்து விடுவிக்கும் கடமை இதன் முன் வைக்கப்பட்டது. டிசம்பர் 10ஆம் தேதி ''தோன்'' படைத் தொகுதியிலிருந்த கோட் டாங்கிப் பிரிவு கத்தேல்னிக்கவோ வட்டா ரத்திலிருந்து ஸ்தாலின்கிராத் மீது தாக்குதலைத் தொடுத்தது. கடுமையான நான்கு நாள் சண்டைகளில் பேரிழப்பை விலையாகத் தந்துதான் ஜெர்மானியர்களால் முன்னேக்கி நகர முடிந்தது. இவர்கள் சுற்றி வளைக்கப்பட்ட பாவுலுசின் படையிலிருந்து 48 கி. மீ. தொலைவில் இருந்தனர். டிசம்பர் 16ஆம் தேதி படைத் தலைமையகத்தின் கட்டளைப்படி தென் மேற்கு சேனையின் துருப்பு களும் வரோனிஷ் சேனையின் இடப் புறத் துருப்புகளும் மத்திய தோன் பிரதேசத்தில் எதிரி மீது பலத்த தாக்குதலைத் தொடுத்து, சிர் மற்றும் தோன் ஆறுகளில் பாசிஸ்டுகளின் எதிர்ப்பைத் தகர்த் தன, 8வது இத்தாலியப் படையையும் ''தோன்'' படைத் தொகுதி யின் இடப் பிரிவையும் முறியடித்து கோட் படைத் திரட்டின் இடப் பக்கவாட்டிற்கும் பின்னணிக்கும் ஆபத்தை ஏற்படுத்தின. மீஷ்கோவா ஆற்றின் எல்லையில் கோட் படைத் தொகுதி 2வது கார்டு படையாலும் 51வது படையாலும் முன் புறமிருந்து நிறுத் தப்பட்டது. டிசம்பர் இறுதியில் சோவியத் துருப்புகள் இந்த எல்லையிலிருந்து எதிரியின் மீது பலத்த தாக்குதலைத் தொடுத்தன,

எதிரியின் கத்தேல்னிக்கவோ படைத் திரட்டை முறியடித்து கத்தேல் னிக்கவோ நகரைப் பிடித்தன. சுற்றி வளைக்கப்பட்ட துருப்புகளை முற்றுகையிலிருந்து விடுவிக்க ஜெர்மானியப் படைத் தலைமை செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. முற்றுகை போர்முனையின் வெளிக்கோடு பாவுலுஸ் படையிலிருந்து 120—160 கி. மீ. தூரம் தள்ளியிருந்தது.

இப்போது, சுற்றி வளைக்கப்பட்ட எதிரியின் படைத் திரட்டை ஒழிக்கும் கடமை முன்நின்றது. பிரதான படைத் தலைமையகம் இக்கடமையை தோன் சேனையின் துருப்புகளுக்கு அளித்தது. சுற்றி வளைக்கப்பட்ட பாவுலுஸ் துருப்புகளின் எதிர்ப்பு விரயமானது என்பதை கணக்கில் கொண்டு, சரணடையுமாறு சோவியத் படைத் தலைமை முன்மொழிந்த போது பாவுலுஸ் இதை மறுத்தான். 1943ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி சுற்றி வளைக்கப்பட்ட பாசிச ஜெர்ம னியத் துருப்புகளை ஒழிப்பது ஆரம்பமாகியது. முதலில் முற்றுகை வளையத்தின் மேற்கிலும் பின் தென் பகுதியிலும் எதிரியை ஒழிப் பது, பின்னுல் எஞ்சிய படைத் திரட்டை இரு பிரிவுகளாகப் பிளந்து அவற்றை ஒழிப்பது என சோவியத் படைத் தலைமை திட்டமிட்டது. கடும் சண்டைகளுக்குப் பின் சோவியத் துருப்புகள் சுற்றி வளைக் கப்பட்ட பாசிச ஜெர்மானிய டிவிஷன்களை முறியடித்து, பீல்ட் மார்ஷல் ஜெனரல் பாவுலுஸ், அவனுடைய படைத் தலைமை உட்பட 91,000 போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளை சிறை பிடித்தன, ஏராளமான ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங் களையும் கைப்பற்றின. 3,30,000 பேரடங்கிய பாசிஸ்டுகளின் படைத் திரட்டு ஒழிக்கப்பட்டு சோவியத் இராணுவம் வெற்றி வாகை சூடியதுடன் ஸ்தாலின்கிராத் சமர் முடிவடைந்தது.

இந்த வெற்றி சோவியத் அரசின் அழிக்க முடியா வல்லமை யையும் சோவியத் மக்களின் உருக்கனைய உறுதி, பெரும் வீரம் மற்றும் தம் சோஷலிசத் தாயகத்தின் பால் இவர்களுக்குள்ள எல்லை யில்லா நேசத்தையும் உலகிற்குப் பறைசாற்றியது. சோவியத் மக்கள் போர்முனையில் காட்டிய வீரத்தாலும் உள்நாட்டில் வெளிப் படுத்திய தன்னலமற்ற உழைப்பாலும் இவ்வெற்றியை அடைந்தனர்.

ஸ்தாலின்கிராத் அருகே நடந்த சமர் இரண்டாம் உலக யுத்தத் தின் மிகப் பெரும் இராணுவ-அரசியல் நிகழ்ச்சியாகியது. மாபெரும் தேசபக்த யுத்தத்தில் மட்டுமின்றி மொத்தமாக இரண்டாம் உலக யுத்தத்திலேயே ஸ்தாலின்கிராத் சமர் அடிப்படை ரீதியான திரும்பு முனையின் துவக்கமாக அமைந்தது. ஸ்தாலின்கிராத் பாசிச ஜெர்மனி யின் அந்திப் பொழுதைக் குறித்தது. ஸ்தாலின்கிராதிற்குப் பின் பாசிஸ்டுகள் சோவியத் யூனியனிலிருந்து பெருமளவில் விரட்டப் படலாயினர். போர்த்தந்திர முன்முயற்சி உறுதியாக சோவியத்

படைத் தலைமையின் கரங்களுக்கு மாறியது. ஸ்தாலின்கிராத், சோவியத் ஆயுத பலத்திற்கும் வன்மைக்கும் பெருவெற்றியாக விளங்கியது. ஸ்தாலின்கிராத் அருகே அடையப்பட்ட வெற்றி பாசிச ஜெர்மனியில் சாவு மணியாக ஒலித்தது. 6வது பாசிச ஜெர்மானியப் படையின் மரணத்திற்காக அங்கே அதிகாரபூர்வமாக 3 நாள் துக்கம் அறிவிக்கப்பட்டது. ''ஸ்தாலின்கிராத் அருகே அடைந்த தோல்வி ஜெர்மானிய மக்களுக்கும் இராணுவத்திற்கும் பெரும் கிலியை ஏற்படுத்தியது. இதற்கு முன் ஜெர்மானிய வரலாற்றிலேயே இவ்வளவு அதிகமான துருப்புகள் இவ்வளவு பரிதாபகரமாக மாண்டதில்லை''° என்று முன்னுள் பாசிச ஜெனரல் வெஸ்ட்ஃபால் ஒப்புக்கொண்டான்.

200 பகல்களும் இரவுகளும் நீடித்த மாபெரும் சமரின் போது பாசிசக் கூட்டு அச்சமயத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில் இயங்கி வந்த சக்திகளில் கால் பங்கை இழந்தது. ஜெர்மனி மொத்தமாக (இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், சிறை பிடிக்கப்பட்டவர்கள், தொலைந்து போனவர்கள்) 15 லட்சம் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் இழந்தது. ஸ்தாலின்கிராத் அருகில் மட்டும் 1942 நவம்பர் 19 முதல் பிப்ரவரி 2வரை பாசிச ஜெர்மானியத் துருப்புகள் 8,00,000க்கும் கூடுதலான ஆட்களையும் 2,000 வரையிலான டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் 10,000க்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் சுமார் 3,000 போர், சரக்கு விமானங்களையும் 70,000க்கும் கூடுதலான வாகனங்களையும் இழந்தன. வேர்மஹ்ட் 32 டிவிஷன்களையும் 3 பிரிகேடுகளையும் முற்றிலும் இழந்தது, 16 டிவிஷன்கள் கடுந் தோல்வியடைந்தன. ஸ்தாலின்கிராத் அருகே சுற்றி வளைக்கப்பட்ட எதிரியை ஒழிக்கும் போது 22 ஜெர்மானிய டிவிஷன்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இக்காலத்தில் தோன் சேனை 2,500க்கும் கூடுதலான இராணுவ அதிகாரிகள், 24 ஜெனரல்கள் உட்பட 91,000 போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைபிடித்தது. சுற்றி வளைக்கப்பட்ட படைத்திரட்டு ஒழித்துக் கட்டப்பட்ட பின் போர்க்களத்தில் சுமார் 1,40,000 ஜெர்மானியப் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளின் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டு புதைக்கப்பட்டன. எதிரியிடமிருந்து போர்த்தந்திர முன்முயற்சியைப் பிடுங்கிய சோவியத் துருப்புகள் இதை யுத்தம் முடியும் வரை தம் கரங்களிலேயே வைத்திருந்தன.

ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் மக்களும் இராணுவமும்

° ஸெ. வெஸ்ட்ஃபால், வி. கிரேய்ப்ஸ், இதரர், **மரணத்துக்கு ஒப்பான முடிவுகள்**, பக்கம் 210.

அடைந்த மாபெரும் வெற்றி மனிதகுலத்தின் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும். இங்கே, புகழ் மிகு வீரத் திருநகரின் வாயில்களில் அடைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கை ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைச் சேர்ந்த நாடுகளின் மக்களுக்கு ஆதரவாகத் திருப்பியது. ''உலகம் முழுவதுமே வோல்காவில் நடந்த சமரை மூச்சை அடக்கிக் கொண்டு கவனித்தது. வாஷிங்டனிலும் லண்டனிலும் பாரிசிலும் பெல்கிரேடிலும் பெர்லினிலும் ரோமிலும் எல்லா இடங்களிலும் மக்கள், யுத்த்தின் போக்கு இங்கே தீர்மானிக்கப்படுகிறது என்பதை உணர்ந்தனர், புரிந்து கொண்டனர். இது நமது எதிரிகளுக்கும் சரி நமது நேச நாடுகளுக்கும் சரி இருவருக்குமே தெளிவாயிருந்தது...

ஹிட்லர் துருப்புகளில் மிகச் சிறந்தவை இங்கே நொறுக்கித் தள்ளப்பட்டதில் மட்டும் விஷயம் அடங்கியிருக்கவில்லை. இங்கே பாசிசத்தின் தாக்கு வேகம் அடக்கப்பட்டது, தார்மீக பலம் உடைக்கப்பட்டது...

வோல்காவில் நடந்த சமருக்குப் பின் யுத்தம் இரண்டு ஆண்டுகளுக்கும் கூடுதலாக நீடித்தது. இன்னமும் பலவற்றை தாங்க வேண்டியிருந்தது, ஏராளமானவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. ஆனால் நிகழ்ச்சிகளின் போக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பின்னால் நடந்த சமர்கள் ஏகாதிபத்தியத்தின் முக்கிய தாக்குதல் சக்திகளின் முறியடிப்பை முடித்து வைத்தன''* என்று லி. இ. பிரேஷ்னெவ் கூறினார்.

சோவியத் யூனியனில் பொதுமக்களிடையே உற்சாகமும் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி நாடுகளில் ஆனந்தக் களிப்பும் நிலவிய அந்த மறக்கவொண்ணு நாட்களில் பல அரசுகளும் அரசியல் பிரமுகர்களும் சோவியத் யூனியன் அடைந்த மிகச் சிறந்த வெற்றியை உயர்வாக மதிப்பிட்டனர். ரூஸ்வெல்ட் ஸ்தாலினுக்கு அனுப்பிய செய்தியில்—இது 1943 பிப்ரவரி 5இல் பெறப்பட்டது—ஸ்தாலின்கிராத் சமரை மகாகாவிய போராட்டம் என்றும் இதன் தீர்மானகரமான முடிவை எல்லா அமெரிக்கர்களும் கொண்டாடி கொண்டிருக்கின்றனர் என்றும் எழுதினார்**. பின்னால் இவர் ஸ்தாலின்கிராதிற்கு பின்வருமாறு எழுதப்பட்ட நற்சான்றிதழை அனுப்பினார்: ''ஸ்தாலின்கிராத் நகரின் துணிவு மிக்க பாதுகாப்பாளர்களுக்கு எங்களுடைய பாராட்டைத் தெரிவிப்பதற்காக அமெரிக்க

---

* லி. இ. பிரேஷ்னெவ், லெனினியப் பாதையில், தொகுதி 2, பக்கம் 68.

** சோவியத் பிரதமருக்கும் அமெரிக்க ஜனதிபதிகள் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர்களுக்கும் 1941 — 1945ஆம் ஆண்டுகளில் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போது நடைபெற்ற கடிதத் தொடர்பு. (பின்னல் ''சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு''), தொகுதி 2, மாஸ்கோ, 1957, பக்கம் 52 (ருஷ்ய மொழியில்).

ஐக்கிய நாட்டு மக்களின் சார்பில் ஸ்தாலின்கிராத் நகருக்கு இந்த நற்சான்றிதழை வழங்குகிறேன். 1942 செப்டெம்பர் 13 முதல் 1943 ஜனவரி 31 வரை நீடித்த முற்றுகையின் போது அவர்கள் காட்டிய வீரமும் தார்மீக பலமும் செய்த தியாகமும் எல்லா சுதந்திர மக்களின் உள்ளங்களேயும் என்றென்றும் உற்சாகப்படுத்தும். இவர்களது புகழ்மிகு வெற்றி, தாக்குதல் அலேயை தடுத்து நிறுத்தி, ஆக்கிரமிப்பிற்கு எதிரான நேசநாட்டு மக்களின் யுத்தத்தில் திரும்பு முனையாக அமைந்தது.''*

கிரேட் பிரிட்டனின் பிரதமர் வி. சர்ச்சில், ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் இராணுவம் அடைந்த வெற்றியை அற்புதமானது என்று குறிப்பிட்டார். கிரேட் பிரிட்டனின் அரசர் ஸ்தாலின்கிராதிற்கு வாள் ஒன்றை பரிசாக அனுப்பினுர். அதில் ருஷ்ய, ஆங்கில மொழிகளில் பின்வருமாறு பொறிக்கப்பட்டிருந்தது: ''இரும்பைப் போன்ற உறுதி கொண்ட ஸ்தாலின்கிராத் வாசிகளுக்கு—பிரிட்டிஷ் மக்களின் பேருவகையின் அடையாளமாக ஆறும் ஜார்ஜ் மன்னனிடமிருந்து.''** சமரின் போது, குறிப்பாக இது நடைபெற்று முடிந்த பின், பாசிச ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் யூனியனுக்கு அதிக செயல்பூர்வமான உதவியை அளிப்பதற்காக மேலேய நாடுகளில் இருந்த பல்வேறு சமூக நிறுவனங்கள் சுறுசுறுப்பாகச் செயல்படத் துவங்கின. உதாரணமாக நியூயார்க் நகரத் தொழிற்சங்க உறுப்பினர்கள் ஸ்தாலின்கிராதில் மருத்துவ மனையைக் கட்டுவதற்காக 2,50,000 டாலர்களேத் திரட்ட முடிவு செய்தனர். ''மாபெரும் மக்களின் இறவாப் புகழ் பெற்ற வீரத்தின் அடையாளமாக வரலாற்றில் வாழப் போகும் ஸ்தாலின்கிராதுடன் நியூயார்க்கின் தொழிலாளர்கள் உறவை ஏற்படுத்திக் கொள்வது குறித்து நாங்கள் பெருமை கொள்கின்ருேம். இந்நகரின் தற்காப்பு ஒடுக்கு முறைக்கு எதிரான மனிதகுலப் போராட்டத்தில் திரும்பு முனேயாக அமைந்தது... தனது சோவியத் பூமியைப் பாதுகாத்து நிற்கும் ஒவ்வொரு செஞ்சேனே வீரனும் நாஜிப் படையாளேக் கொல்வதன் மூலம் அமெரிக்கப் போர்வீரர்களின் உயிரையும் காப்பாற்றுகிருன். சோவியத் நேச நாட்டிற்கு எங்களது கடனேப் பற்றிக் கணக்கிடும் போது இதைப் பற்றி நினேவு கொள்வோம்''*** என்று தையற்காரர் கூட்டுச் சங்கத் தலேவர் அறிவித்தார்.

முன்னுள் பாசிச ஜெர்மானிய ஜெனரல்கள் கூட ஸ்தாலின்கிராத் அருகே நடந்த சமரின் பெரும் இராணுவ-அரசியல் முக்கியத்துவத்தை ஒப்புக் கொள்கின்றனர். ஹிட்லர் ஜெனரல் டியோர்

* அதே நூல், பக்கம் 288.

** அதே நூல், தொகுதி 1, பக்கம் 90.

*** பிராவ்தா, 1943 ஜூன் 30.

பின்வருமாறு எழுதினான்: ''ஸ்தாலின்கிராத் அருகே நடந்த சமர் ஜெர்மனியின் வரலாற்றில், கடுமையான ஒரு தோல்வியாகவும் ருஷ்யாவிற்கு ஒரு மகத்தான வெற்றியாகவும் அமைந்தது. பல்தாவா அருகே (1709ஆம் ஆண்டு) ருஷ்யா மாபெரும் ஐரோப்பிய வல்லரசு என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை வென்று பெற்றது. உலகின் மாபெரும் இரு வல்லரசுகளில் ஒன்றாக மாறுவதற்கான துவக்கமாக ஸ்தாலின்கிராத் அமைந்தது''*.

''தாக்குதலின் மூலம் கிழக்கே யுத்தத்தை முடிக்கும் வாய்ப்பு இனி கிடையாது''** என்று ஹிட்லரே கருத்து தெரிவித்தான்.

ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் யூனியன் அடைந்த வெற்றி பாசிச ஜெர்மனியை குலுக்கியது. ஹிட்லர் மேல் மட்டத்தில் நெருக்கடிக்கான தீவிர அறிகுறிகள் தோன்றின. ஸ்தாலின்கிராத் பாசிச கூட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது, இதை ஆட்டங்காண வைத்தது. ஸ்தாலின்கிராத் அருகே இத்தாலிய, ஹங்கேரிய, ருமேனியத் துருப்புகளின் இழப்பு இந்நாடுகளின் தலைவர்களை யதார்த்த உலகிற்கு கொண்டு வந்தன. ''ஸ்தாலின்கிராத் அருகே நடந்த சமருக்குப் பின் பாசிச அரசு ஆட்டங்காண ஆரம்பித்தது''*** என்று ருமேனிய சர்வாதிகாரி இ. அன்டனேஸ்கு ஒப்புக் கொள்ள நேரிட்டது. இத்தாலியை இராணுவ-அரசியல் பேரழிவு எதிர்நோக்கியது. ஹங்கேரியிலும் ருமேனியாவிலும் உள்நாட்டு அரசியல் முரண்பாடுகள் கூர்மையடைந்தன. யுத்தத்திலிருந்து வெளியேற பின்லாந்து சாக்குபோக்குகளைத் தேடியது, ஜப்பான் சோவியத் யூனியனைத் தாக்கும் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது.

ஸ்தாலின்கிராத் அருகே அடைந்த வெற்றியானது பாசிஸ்டுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் தேசிய விடுதலை இயக்கத்திற்கு பலம் மிகு உந்து சக்தியை அளித்தது, ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி மக்களிடையே ஆழ்ந்த மதிப்பையும் பேருவகையையும் ஏற்படுத்தியது, நடுநிலை நாடுகள் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்தியது, உதாரணமாக சோவியத் யூனியனுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறு துருக்கியை நிர்ப்பந்தித்தது.

கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் ஸ்தாலின்கிராதைப் பாதுகாத்து நின்ற வீரர்களின் வீரத்திற்கும் துணிவிற்கும்

---

* கெ. டியோர், **ஸ்தாலின்கிராத் மீதான படையெடுப்பு**, மாஸ்கோ, 1957, பக்கம் 15 (ருஷ்ய மொழியில்).

** Hitlers, *Lagebes prechungen. Die Protokollfragmente seiner militärischen Konferenzen 1942—1945*, Stuttgart, 1962, S. 122.

*** பிளேயர், இதரர், **இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனி (1939—1945).** ஜெர்மன் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1971, பக்கம் 231.

தக்கபடி மதிப்பளித்து கௌரவித்தன. ''வீரத்திருநகர்'' எனும் கௌரவப் பட்டம் நகருக்கு வழங்கப்பட்டது. சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு ''ஸ்தாலின்கிராத் தற்காப்பிற் காக'' எனும் பதக்கத்தை ஏற்படுத்தி 7,00,000க்கும் மேற்பட்ட வோல்கா அரண்காப்பின் பாதுகாவலர்களுக்கு வழங்கி கௌரவித்தது. 1967ஆம் ஆண்டு இச்சமரின் 25வது ஆண்டு விழாவின் போது வோல்காவில் அடையப்பட்ட மகத்தான வெற்றியை கௌரவிக்கும் முகமாக இந்த வீரத்திருநகரில் மமாயவ் குர்கான் எனுமிடத்தில் பிரம்மாண்டமானதொரு நினைவாலயம் திறக்கப் பட்டது.

இராணுவ நோக்கிலிருந்து பார்த்தால் ஸ்தாலின்கிராத் அருகே நடந்த எதிர்தாக்குதல்—உலக இராணுவ வரலாற்றில் இதற்கு ஈடு இணையில்லை—சோவியத் போர்க் கலையின் மிகப் பெரும் வெற்றி யாக அமைந்தது, பாசிச ஜெர்மனியின் போர்க் கலையை இது விஞ்சி நிற்பதற்குச் சான்றுகத் திகழ்ந்தது. முதலாவதாக, இரு தரப்புகளின் சக்திகளும் கிட்டத்தட்ட சமமாக இருக்கையில் எதிரியின் பெரும் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து ஒழிப்பதில் சில சேனைகள் மேற்கொண்ட முதல் வெற்றிகர போர்த்தந்திர நடவடிக்கையாக இது விளங்கியது. இரண்டாவதாக, இந்த நட வடிக்கையில், சக்திகளும் சாதனங்களும் குறிப்பாக பீரங்கிகளும் டாங்கிகளும் பெருமளவு குவிக்கப்பட்டன; இது பிரதான தாக்கு தல் திசைகளில் கணிசமான அளவு விஞ்சி நிற்கும் நிலையைத் தோற்றுவிக்க உதவியது. மூன்றுவதாக, எதிர்தாக்குதலில் முதன் முதலாக பீரங்கிப்படை தாக்குதல் (பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதல், இத்தியாதி) முழு அளவில் நடத்தப்பட்டது. நான்்..ா வதாக, விமானப்படைத் தாக்குதலை வெற்றிகரமாக ஏற்பாடு செய் யும் முதல் அனுபவமும் வான் படைகளுக்கும் மொபைல் (டாங்கி) படைகளுக்கும் இடையே இணக்கத்தை உண்டாக்கும் அனுபவமும் நடவடிக்கையின் போக்கில் அடையப்பட்டன, வான் ஆதிக்கம் வெல்லப்பட்டு சுற்றி வளைக்கப்பட்ட எதிரி துருப்புகளின் வான் முற்றுகை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஐந்தாவதாக, திடீ ரெனத் தாக்கும் தன்மையைப் பெற்று, எதிரியைச் சுற்றி வளைப் பதற்காக மொபைல் படைத் தொகுதிகளாக டாங்கி மற்றும் இயந்திரப் படை கோர்பஸ்களை திறமையாகப் பயன்படுததுவது நிறைவேற்றப்பட்டது.

° ° °

ஸ்தாலின்கிராத் அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறி யடிக்கப்பட்டதன் பயனுய் காக்கசஸ் உட்பட எல்லா இடங்களிலும்

சோவியத் துருப்புகளுக்கு ஒரு அனுகூலமான நிலை ஏற்பட்டது. வடக்கு காக்கசஸில் எதிரியின் முக்கியச் சக்திகளை முதலில் தனிமைப் படுத்தி பின்னர் ஒழித்துக் கட்டுவதற்காக 1943ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 8வது, 4வது, 5வது வான் படைகளின் ஆதரவோடும் கருங்கடல் கப்பற்படையின் தீவிர உதவியோடும் தெற்கு (முந்தைய ஸ்தாலின்கிராத்) மற்றும் டிரான்ஸ் காக்கசஸ் சேனைகள் தாக்கு தலைத் தொடுத்தன.

தமது துருப்புகள் சுற்றி வளைக்கப்படுமோ என்று அஞ்சிய ஹிட்லர் படைத் தலைமை தன் படைகளை அவசர அவசரமாக மோஸ்தோக் பிரதேசத்திலிருந்து வட மேற்கு திசையில் அகற்றிச் சென்றது. எதிரியைத் துரத்திச் சென்ற சோவியத் துருப்புகள் எதிரிக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தின. ஜனவரி இறுதியில் இவை கடுமையான சண்டைகளுக்குப் பின் வடக்கு தனேத்ஸ், ரஸ்தோவ் மற்றும் அஸோவ் கடலின் கரையோரம் ஆகியவற்றை அடைந்தன. பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டு இரு பகுதி களாகப் பிளவுண்டு கிடந்தது: பிரதான சக்திகள் தமான் தீபகற் பத்திற்கு செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டன, எதிரித் துருப்பு களின் ஒரு பகுதி ரஸ்தோவ் வழியே தன்பாஸிற்கு நழுவிச் சென்றது. இச்சூழ்நிலையில் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் சக்தி களை மாற்றி மறு சீரமைத்தது. 1943 ஜனவரி 24இல் வடக்கு துருப்புகளின் தொகுதி வடக்கு காக்கசஸ் சேனையாக (தளபதி ஜெனரல் மாஸ்லெனிக்கவ்) மாற்றியமைக்கப்பட்டது. பிப்ரவரி ஆரம்பத்தில் கருங்கடல் துருப்புகளின் தொகுதியும் இதில் சேர்ந்தது.

தாக்குதலைத் தொடர்ந்த இச்சேனையின் முன் எதிரியை குபானி லிருந்தும் தமான் தீபகற்பத்திலிருந்தும் விரட்டியடித்து கிராஸ்ன தாரையும் நவரஸ்ஸீய்ஸ்கையும் விடுவிக்கும் கடமை நின்றது. இப்பிரதேசங்களில் மிகக் கடுமையான சண்டைகள் மூண்டன. சேறும் சகதியான பாதைகள், சாலையின்மை, பின்னணி நீண்டு கிடந்தது இவையெல்லாம் இன்னல்களை அதிகப்படுத்தின. குபானில் எதிரியின் எதிர்ப்பை தகர்த்த சோவியத் துருப்புகள் பிப்ரவரி 12ஆம் தேதி கிராஸ்னதாரை விடுவித்தன. தமானை நோக்கி சோவி யத் துருப்புகள் மேற்கொண்டு முன்னேறுவது தடைபட்டது. முக்கிய போர்த்தந்திரத் தாக்குமுனையும் தனது போர்முனையின் தெற்குப் பக்கவாட்டில் உள்ள மிக முக்கிய பிரதான நிலைகளில் ஒன்றுமாகிய தமான் தீபகற்பத்தை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள ஹிட்லரின் படைத் தலைமை தீர்மானித்தது. இங்கே, குறிப்பாக நவரஸ்ஸீய்ஸ்க் அருகே பலம் மிக்க அரண்கள் அமைக் கப்பட்டன. இதை விடுவிப்பதற்கான சண்டைகள் பிப்ரவரியில் ஆரம்பமாகி உக்கிரமடைந்தன, இழுபறி தன்மையைப் பெற்றன.

பிப்ரவரி 4ஆம் தேதி இரவும் அதற்கடுத்த இரண்டு நாட்களிலும் கருங்கடல் கப்பற்படை நவரஸ்ஸீய்ஸ்கிற்கு தென் மேற்கே மிஸ் ஹாக்கோ பிரதேசத்தில் கடல் இறக்குப் படையை (பீரங்கிகள், டாங்கிகளுடன் 15,000க்கும் மேற்பட்டோர்) இறக்கியது. இப்படை ஒரு சிறு தாக்குமுனையைக் கைப்பற்றியது. இத்தாக்குமுனை நவரஸ் ஸீய்ஸ்கை விடுவிப்பதில் பின்னால் பெரும் பங்காற்றியது. இத் தாக்குமுனை வரலாற்றில் ''மாலய ஸெம்லா'' என்ற பெயரைப் பெற்றது. மேஜர் குனிக்கவ் தலைமையிலான கடல் இறக்குப் படை அணி இங்கே மிகுந்த வீரத்தோடு போரிட்டது. இந்தத் தாக்கு முனையை ஏழு மாதங்களுக்கு வீரத்தோடு பாதுகாத்து நின்றது மாபெரும் தேசபக்த யுத்தத்தின் புகழ் மிக்க நிகழ்ச்சியாகும். இந்த சிறு நிலப்பரப்பில் இருந்த இறக்குப் படையினர் நவரஸ்ஸீய்ஸ்கில் இருந்த ஹிட்லரின் பக்கவாட்டுப் படைகளுக்கு உண்மையான ஆபத்தைத் தோற்றுவித்தனர், இவை த்ஸேமேஸ் குறுங்குடாவைப் பயன்படுத்த இடையூறாக இருந்தன.

தாக்குமுனையைத் திரும்பப் பிடித்து இறக்குப் படையினரைக் கடலில் தள்ள பாசிஸ்டுகள் சகல வித நடவடிக்கைகளையும் மேற் கொண்டனர். தரையிலும் கடலிலும் வானிலும் கடும் சண்டைகள் நடைபெற்றன. சில நாட்களில் பாசிச விமானப்படை நாளொன் றுக்கு 1,000க்கும் மேற்பட்ட தாக்குதல்களைத் தொடுத்தது; எதிரியின் பீரங்கிப்படை 1943 வசந்த காலத்திலும் கோடைகாலத் திலும் இங்கே 11 புகைவண்டிகள் கொண்டுவந்த குண்டுகளை வீசித் தள்ளின. மாலய ஸெம்லாவைப் பாதுகாத்து நின்ற ஒவ்வொரு வருக்காவும் ஐந்து கனரக பீரங்கி குண்டுகளை செலவழித்ததாக பாசிஸ்டுகள் கணக்கிட்டு உரைத்தனர். ஆனால் மாலய ஸெம்லா வாசிகள் தாங்கி நின்றனர்.

வடக்கு காக்கசஸ் சேனையின் துருப்புகள் மேற்கொண்டு தாக்கு தலைத் தொடர்ந்து மே ஆரம்பத்தில் தமான் தீபகற்பத்தை அடைந்தன. இங்கே முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ''நீலக் கோடு'' என்றழைக்கப்பட்ட தற்காப்பு எல்லையில் எதிரியின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1943 வசந்த காலத்தில் இதைப் பிளந்து கொண்டு செல்ல செய்த முயற்சிகள் வெற்றி யடையவில்லை.

எதிரி தன் தரைப்படைகளுக்கு ஆதரவாய் கணிசமான அளவு விமானங்களை அனுப்பினான். குபானில் கிட்டத்தட்ட 2 மாதங்கள் மிகப் பெரும் வான் சண்டை நீடித்தது. வான் பரப்பில் ஆதிக்கத்தை வெல்வதற்கான போராட்டத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தாக விளங்கிய இச்சண்டையில் சோவியத் விமானப்படை வென்றது. இது 35,000 விமானப் பறத்தல்களை நடத்தியது, 1,100க்கும்

அதிகமான எதிரி விமானங்களை அழித்தது; இதில் 800 விமானங்கள் வான் சண்டைகளில் அழிக்கப்பட்டன.

தமான் தீபகற்பத்தையும் நவரஸ்ஸீய்ஸ்கையும் விடுவிப்பது சம்பந்தமான அடுத்த இராணுவ நடவடிக்கைகள் 1943 இலையுதிர்க் காலத்தில் நடந்தன. வடக்கு காக்கசஸ் சேனையின் துருப்புகள் எதிரியின் தமான் படைத் திரட்டை ஒழித்துக் கட்டும் கடமையைப் பெற்றன. இக்கடமையை நிறைவேற்றுவதற்காக நவரஸ்ஸீய்ஸ்க் மீது தரையிலிருந்தும் கடலிலிருந்தும் திடீர் தாக்குதல் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. மேற்கொண்டு ''நீலக் கோட்டை'' காத்து நின்ற எதிரி படைத் திரட்டை தெற்கேயிருந்து சுற்றி வளைக்கும் அபாயத்தை ஏற்படுத்துவதற்காக வெர்ஹ்னேபக்கான்ஸ்கியை நோக்கி தாக்குதலைத் தொடர திட்டம் வழிவகுத்தது. நவரஸ்ஸீய்ஸ்க்—தமான் நடவடிக்கை செப்டெம்பர் 10இல் துவங்கியது. துறைமுகத்தையும் நகரத்தையும் திடீர் தாக்குதலுக்கு ஆளாக்கிய துருப்புகள் மற்றும் இறக்குப் படைக் கப்பல்களின் தாக்குதலோடு கூட அதே நேரத்தில் நகரின் கிழக்கே 18வது படையின் முக்கிய தாக்குதல் பிரிவும் வீரஞ்செறிந்த மாலய ஸெம்லாவின் இறக்குப் படையினரும் தாக்குதலுக்கு மாறினர். தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படையின் கூட்டு முயற்சிகளின் பயனாய் ஜெர்மானியர்களின் ''நீலக் கோடு'' பிளக்கப்பட்டு செப்டெம்பர் 16ஆம் தேதி நவரஸ் ஸீய்ஸ்க் விடுவிக்கப்பட்டது.

தாய் நாட்டின் முன் ஆற்றப்பட்ட மகத்தான சேவைகளை கௌரவிக்கும் முகமாகவும் நகர உழைப்பாளிகளாலும் சோவியத் போர்வீரர்களாலும் காட்டப்பட்ட ஆண்மை, உறுதி, பெரும் வீரத்திற்காகவும் நவரஸ்ஸீய்ஸ்க் நகரத்திற்கு ''வீரத்திருநகர்'' பட்டம் வழங்கப்பட்டது.

தாக்குதலைத் தொடர்ந்த சோவியத் துருப்புகள் அக்டோபர் துவக்கத்தில் குபான் ஆற்றின் கீழ்ப்பகுதிகளிலிருந்து பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்தன, காக்கசஸ் பகுதியிலிருந்த எதிரியின் கடைசி தாக்குமுனையாகிய தமான் தீபகற்பத்தை விடுவித்தன. இவ்வாறாக காக்கசஸிற்கான சமர் மிகப் பெரும் அரசியல் மற்றும் இராணுவப்-போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரும் வெற்றியில் முடிந்தது. காக்கசஸில் தாக்குதல் நடவடிக்கைகளின் போது செஞ்சேனை சுமார் 800 கி. மீ.களை சண்டையின் ஊடே கடந்தது, சுமார் 2,00,000 ச. கி. மீ. பரப்பை விடுவித்தது. எதிரிக்கு பேரிழப்பு ஏற்பட்டது. எதிரி 2,81,000 போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் பறிகொடுத்தான், 1,358 டாங்கிகள், 2,000 விமானங்கள், 7,000க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், சுமார் 22,000 வாகனங்கள்

மற்றும் ஏராளமான ஆயுதத் தளவாடங்கள், சொத்தை இழந் தான்.

காக்கசஸிற்கான சமரில் சோவியத் இராணுவம் அடைந்த வெற்றி, காக்கசஸை கைப்பற்றுவதோடு கூட மத்திய மற்றும் அண்மைக் கிழக்கு நாடுகளின் உள்ளும் புகும் நோக்கோடு தீட்டப் பட்டிருந்த ஆழ்ந்த விளைவுகளை உண்டாக்க வல்ல அதிசாகச ஹிட்லர் திட்டத்தை இறுதியாக சீர்குலைத்தது. சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் பெரும் பொருளாதார மூல ஊற்றுகளை உடைய காக்கசஸ் பரப்பு காப்பாற்றப்பட்டது.

ஸ்தாலின்கிராத் அருகேயும் தோனிலும் காக்கசஸிலும் சோவியத் யூனியன் அடைந்த வெற்றி மத்திய கிழக்கிலும் மத்திய தரைக் கடல் பிரதேசத்திலும் நேச நாடுகளின் நிலையை கணிசமாக பலப் படுத்தியது, வடக்கு ஆப்பிரிக்காவில் ஜெனரல் ரோம்மலின் இராணு வத்தை வெற்றி கொள்ள உதவியது. மத்திய கிழக்கில் செயல்படு வதற்கென விசேஷமாக உருவாக்கப்பட்ட “F” என்ற விசேஷ கோர்பசை ஹிட்லர் படைத் தலைமையால் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையிலிருந்து இறுதி வரை இடம் மாற்றவே முடியவில்லை. மாறாக வடக்கு ஆப்பிரிக்காவிலிருந்து தன் விமானப்படையில் ஒரு பகுதியை சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்கு அனுப்பும்படி இது கட்டாயப்படுத்தப்பட்டது.

காக்கசஸின் மக்களினங்களை ருஷ்ய மக்களுக்கு எதிராக வைக்க பாசிஸ்டுகள் கொண்டிருந்த நம்பிக்கைகள் காக்கசஸிற்கான சமரில் அடியோடு தகர்ந்து வீழ்ந்தன. மாபெரும் ருஷ்ய மக்களோடும் நாட்டின் மற்ற மக்களினங்களோடும் சேர்ந்து காக்கசஸ் மக்களினத் தினர் சோஷலிசத் தாயகத்தை வீரத்தோடு பாதுகாத்து நின்றனர். காக்கசஸ் தேசிய இனங்களைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட 12 தேசிய யூனிட்டுகள் டிரான்ஸ் காக்கசஸ் சேனையில் சண்டையிட்டன என்று கூறுவதே போதுமானது. ஒரே நாட்டுப்பற்று வீச்சில் ஒன் றிணைந்த காக்கசஸ் மக்களினங்கள் எதிரியை வெற்றி கொள்வதற்குத் தேவையான எல்லா பொருளாயத முன்தேவைகளையும் தோற்றுவித் தனர். காக்கசஸில் இயந்திரத் துப்பாக்கிகள், தானியங்கி துப்பாக்கி கள், ஆயுதத் தளவாடங்கள், பீரங்கிகள் ஏன் விமானங்கள் கூட உற்பத்தி செய்யப்பட்டன. சோவியத் இராணுவத்திற்குத் தேவை யான உணவுப் பொருட்களையும் இராணுவச் சீருடைகளையும் தரு வதில் காக்கசஸ் மக்கள் பெரும் பங்காற்றினர். வடக்கு காக்கசஸ் பூராவும் கொரில்லாப் படை அணிகள் தோற்றுவிக்கப்பட்டன. ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், பெலோருஷ்யர்கள், ஜார்ஜியர்கள், அர்மீனியர்கள், ஒஸ்ஸேதீன், சிச்சேன், இன்கூஷ் மற்றும் கபார்தீன் இனத்தவர்கள், சோவியத் யூனியனின் இன்னும் பல மக்களினத்

தவர்கள் ஆகியோர் இவற்றில் பங்கேற்றனர். கிராஸ்னதார் பிராந்தியத்தில் மட்டும் 87 கொரில்லாப் படை அணிகள் இயங்கின. கரச்சாயெவ், செர்கேஸ் சுயாட்சி பிரதேசங்களின் மலைகளில் கொரில்லா வீரர்கள் மிகப் பெரும் வீரத்தை வெளிப்படுத்தினர்.

காக்கசஸிற்கான சமரை ஸ்தாலின்கிராத் சமரிலிருந்து தனியே பிரித்துப் பார்க்கக் கூடாது; போராட்டம் முழுவதும் காக்கசஸில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளுடைய போக்கின் மீது ஸ்தாலின்கிராத் சமர் பெரும் செல்வாக்கு செலுத்தியது. தன் பங்கிற்கு காக்கசஸில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் ஸ்தாலின் கிராத் சமரின் ஆயுதப் போராட்டப் போக்கின் மீது மிக நல்ல செல்வாக்கைச் செலுத்தியது. பரஸ்பரத் தொடர்புடைய இச்சமர்கள் சோவியத் உயர்மட்ட படைத் தலைமையால் திறமையாக வழி நடத்தப்பட்டன. காக்கசஸுக்கான சமரில் சோவியத் துருப்புகள் பல்வேறு வகையான இடங்களில் — சமவெளிகள், மலையடிவாரங்கள், குன்றுகளில் — போரிடுவதில் நல்ல அனுபவத்தைப் பெற்றன, விமானப் படையுடனும் கப்பற்படையுடனும், கொரில்லா வீரர்களுடனும் நெருக்கமாக இணைந்து செயல்பட்டன. இந்தப் பன்முக போர் அனுபவம் பின்னால் கிரீமியா, கர்பாத்து ஆகிய இடங்களுக்காக நடந்த சமர்களிலும் 1944இல் கருங்கடலின் வடக்கு மற்றும் மேற்கு கரைகளை விடுவிக்கும் போதும் வெற்றிகரமாகப் பயன் படுத்தப்பட்டது.

ஹிட்லருடைய கொலைபாதகர்களை நியூரென்பர்க் விசாரணையில் விசாரித்த போது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட வன்முறை, அரக்கத்தனம், இவற்றை வெளிநாட்டுக் கொள்கையில் சேர்த்துக் கொண்டது, பல மக்களினங்களை வேண்டுமென்றே சுட்டு அழித்தது ஆகியவற்றிற்கான மறுக்க முடியாத நிரூபணங்கள் முன்வைக்கப் பட்டன. கிராஸ்னதார் பிராந்தியத்தில் மட்டும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்கள் 61,540 பேர்களை — முக்கியமாக பெண்கள், முதியோர், குழந்தைகளை — சுட்டனர், தூக்கிலிட்டனர், நச்சு வண்டிகளில் சாகடித்தனர், கெஸ்டாப்போ சிறைகளில் சித்திரவதை செய்தனர்; சுமார் 32,000 இளைஞர்களையும் யுவதிகளையும் கடுஞ் சிறைவாசத்திற்காக ஜெர்மனிக்கு அனுப்பினர். மக்களை நச்சு வாயுவால் கொல்லும் விசேஷ உபகரணங்களை கொண்ட வாகனங்களாகிய நச்சு வண்டிகளை ஜெர்மானியர்கள் முதன் முதலாக வடக்கு காக்கசஸில்தான் சோதித்துப் பயன்படுத்தத் துவங்கினர்.

2. லெனின்கிராத் முற்றுகை உடைப்பு (1943 ஜனவரி 12 — 30)

ஸ்தாலின்கிராத் அருகேயும் காக்கசஸிலும் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றி தென் மேற்கு மற்றும் மேற்குத் திசைகளில் மட்டுமின்றி வட மேற்குத் திசையிலும் அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. தமது எல்லா சேமப் படைகளையும் தெற்கே இட்டுச் சென்ற பாசிஸ்டுகளால் இங்கே தமது துருப்புகளைப் பலப்படுத்த இயலவில்லை. லெனின்கிராத் நகரின் முற்றுகையை உடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்நடவடிக்கையை செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையுடனும் தொலைதூர விமானப்படையுடனும் சேர்ந்து நிறைவேற்றுமாறு லெனின்கிராத் சேனைக்கும் (தளபதி ஜெனரல் கோவரவ்) வோல்ஹவ் சேனைக்கும் (தளபதி ஜெனரல் மெரெட்ஸ்கோவ்) உயர் மட்ட பிரதான படைத் தலைமையகம் கட்டளையிட்டது. ஷ்லிஸெல் புர்க்-சின்யாவின் தற்காப்பின் முகப்பின் வழியே எதிரெதிரான திசையில் தாக்குதலைத் தொடுத்து லதோகா ஏரிக்குத் தெற்கே எதிரியின் படைத் திரட்டை முறியடித்து முற்றுகை வளையத்தை உடைத்து, லெனின்கிராத் நகரை நாட்டின் மத்திய பிரதேசங்களுடன் இணைக்கும் தரை மார்க்கங்களை புனரமைப்பதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாகும். லெனின்கிராத் சேனைக்கும் வோல்ஹவ் சேனைக்கும் இடையே 15 கி. மீ. இடைவெளிதான் இருந்தாலும் கடினமான கடமை இவற்றை எதிர்நோக்கியிருந்தது. பாசிஸ்டுகள் லெனின் கிராத் அருகே பெரும் சக்திகளை வைத்திருந்தன. தெற்கிலிருந்தும் தென் கிழக்கிலிருந்தும் நகரை முற்றுகையிட்ட "வடக்கு" படைத் தொகுதியின் 18வது ஜெர்மானியப் படையில் சுமார் 26 டிவிஷன்களும் வடக்கே கரேல்ஸ்கி பூசந்தியில் முற்றுகை வளையத்தை மூடிய பின்லாந்து படையில் 4க்கும் கூடுதலான டிவிஷன்களும் இருந்தன. முதலாவது விமானப்படை ஜெர்மானிய-பின்லாந்துத் துருப்புகளின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தது. எதிரியின் தற்காப்பு, குறிப்பாக ஷ்லிஸெல்புர்க்-சின்யாவின் முகப்பில் மிகப் பலமானதாயிருந்தது. இந்த முகப்பு, விரிந்து கிளைகளுடன் கூடிய பொறியியல் அமைப்புகளையும் டாங்கி எதிர்ப்பு மற்றும் காலாட்படை எதிர்ப்பு தடைகளையும் கொண்ட பலம்மிகு போர்க்கள அரணாக ஜெர்மானியர்களால் மாற்றப்பட்டிருந்தது.

லெனின்கிராத் நகரம் 16 மாதங்கள் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான லெனின்கிராத் வாசிகள் உயிரிழந்தனர். நீரும் மின்சாரமும் இல்லாத ஒரு நிலையிலும் பட்டினியால் வாடிய போதிலும் இந்த வீரத்திருநகர் ஆண்மையோடு எதிர்த்து நின்றது, நாடு

முழுவதன் ஆதரவோடு இவற்றை எல்லாம் தாங்கி வெற்றி வகை சூடியது.

நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்த போது சோவியத் படைத் தலைமை தனது சேமப் படைகளை கொண்டும் மற்ற திசைகளிலிருந்து யூனிட்டுகளை மாற்றியமைத்ததன் மூலமும் பிரதான தாக்குதல் திசைகளில் இயங்கிய 67வது மற்றும் 2வது முக்கிய தாக்குதல் படைகளை கணிசமாக பலப்படுத்தியது. இங்கே சக்திகளின் சமன் நிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. சோவியத் துருப்புகள் ஆட்களின் எண்ணிக்கையில் 4.5 மடங்கும் பீரங்கிகளில் 6 – 7 மடங்கும் டாங்கிகளில் 10 மடங்கும் விமானங்களில் 2 மடங்கும் விஞ்சி நின்றன.

தாக்குதலுக்கு முந்திய இரவு சோவியத் விமானங்கள் எதிரியின் பீரங்கி நிலைகள், நிர்வாக கேந்திரங்கள், இருப்புப் பாதை மையங்கள் உட்பட எதிரியின் தற்காப்பின் மீது பெருமளவு குண்டு வீச்சுகளை நடத்தின. 1943ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி பீரங்கிப் படை மற்றும் விமானப்படைப் பூர்வாங்கத் தாக்குதல்களுக்குப் பின் இரு சேனைகளின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகளும் தாக்குதலில் இறங்கின. நாள் முடிவில் இரு படைத் திரட்டுகளும் எதிரியின் எதிர்ப்பை தகர்த்து எதிரெதிர் திசைகளிலிருந்து தலா 3 கி. மீ. தூரம் முன்னேறின.

எதிரியின் தற்காப்பை உடைப்பதில் கரையோர பீரங்கிப்படை மற்றும் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையின் கப்பல் பீரங்கிப்படை உட்பட பீரங்கிப்படையும் விமானப்படையும் தரைப்படைக்கும் டாங்கிகளுக்கும் கணிசமான உதவி நல்கின. 7 நாள் கடும் சண்டைகளுக்குப் பின் ஷ்லிஸெல்புர்க் நகரம் விடுவிக்கப்பட்டது. ஜனவரி 18ஆம் தேதி இரண்டு சேனைகளின் துருப்புகளும் ஒன்றிணைந்தன. லெனின்கிராத் நகரின் முற்றுகை உடைத்தெறியப்பட்டது. லதோகா ஏரியின் தென் கரையோரமாக 8 – 11 கி. மீ. அகலத்தில் அமைக்கப்பட்ட இடைவழி நாட்டுடன் லெனின்கிராதின் நேரடி தரைத் தொடர்பை புனரமைத்தது.

17 நாட்களில் கரையோரமாக இருப்புப் பாதையும் வாகனங்கள் செல்வதற்கான சாலையும் இடப்பட்டன. பிப்ரவரி 6ஆம் தேதி 36 கி. மீ. நீளமுடைய ஷ்லிஸெல்புர்க்—பல்யானி இருப்புப் பாதை வழியே புகைவண்டிகள் லெனின்கிராத் நகருக்குச் சென்றன. லதோகா ஏரியின் வழியாகச் சென்ற பனிக்கட்டிப் பாதையும் தொடர்ந்து புழக்கத்திலிருந்தது. சண்டை விமானங்கள் இதை மூடி மறைத்து பாதுகாப்பளித்தன. லெனின்கிராத் வாசிகளுக்கும் போர்வீரர்களுக்கும் தேவையான உணவுப் பொருட்கள், இராணுவத்

தளவாடங்கள் மற்றும் ஆயுதங்களின் சப்ளேயை மேம்படுத்த இது உதவியது.

லெனின்கிராத் நகர முற்றுகையைப் பிளந்தது லெனின்கிராத் நகருக்கான சமரில் திரும்பு முனேயாக அமைந்தது. இந்த போர்த் தந்திர திசையில் இராணுவ நடவடிக்கைகளின் முன்முயற்சி சோவியத் துருப்புகளுக்கு வந்தது.

• • •

1943 ஜனவரி 12 முதல் 24 வரை 8வது இத்தாலிய மற்றும் 2வது ஹங்கேரியப் படைகளே சுற்றி வளைத்து முறியடிப்பதற்காக வரோனிஷ் சேனேயால் ஒஸ்த்ராகோஷ்ஸ்க்-ரொஸ்ஸாஷான்ஸ்க் நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தன்பாஸை விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலேகள் ஏற்பட்டன.

1943 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5 வரை பிரியான்ஸ்க் மற்றும் வரோனிஷ் சேனேகளின் பக்கவாட்டுத் துருப்புகள் வரோனிஷ்-கஸ்தோர்னேன்ஸ்க் நடவடிக்கையை மேற்கொண்டு, 40,000 பேரடங்கிய எதிரியின் படைத் திரட்டைச் சுற்றி வளேத்து வரோனிஷ் நகரையும் வரோனிஷ் பிராந்தியத்தையும் விடுவித்தன. பிப்ரவரி 15 முதல் மார்ச் 1 வரை வட மேற்கு சேனேயின் துருப்புகள் ஜெர்மானியர்களின் திமியான்ஸ்க் தாக்குமுனேயை அழித்தன; ஆனல் நடவடிக்கைக்குப் போதுமான அளவு சக்திகளும் சாதனங்களும்—குறிப்பாக விமானங்களும் டாங்கிகளும்—இல்லாததால் எதிரியின் படைத் திரட்டைச் சுற்றி வளேக்க இயலவில்லே.

சில நாட்களுக்குப் பின் (1943 மார்ச் 2—ஏப்ரல் 1) கலீனின் மற்றும் மேற்கு சேனேகள் எதிரியின் ரிஷேவ்-வியாஸ்மா முகப்பை அழித்து 130—160 கி. மீ. முன்னேறி இதன் மூலம் மாஸ்கோ போர்த்தந்திர திசையில் சோவியத் துருப்புகளின் நிலேயை வலுப்படுத்தின.

இதே காலகட்டத்தில் தெற்கே வரோனிஷ் மற்றும் தென் மேற்கு சேனேகள் கடுமையான தற்காப்புச் சண்டைகளில் பல்தாவாவிலிருந்து ஹார்க்கவை நோக்கிய எதிரியின் பலத்த தாக்குதல்களே முறியடித்தன; மார்ச் 13 முதல் 28 வரை மத்திய சேனேயின் துருப்புகள் நோவ்கரத்-சேவெர்ஸ்கிய் பிரதேசத்தில் எதிரியின் பலத்த பதிலடியைத் தோற்கடித்தன. சோவியத் துருப்புகள் சிறிதளவு நெருக்கப்பட்டன. எதிரியின் பதிலடிகளின் விளேவாய் கூர்ஸ்க் அரைவட்டம் தோன்றியது. போர்முனே ஸ்திரமடைந்தது.

ஸ்தாலின்கிராத் அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதும் 1942—1943 பனிக்காலத்தில் செஞ்சேனையின் பரந்த அளவு தாக்குதலும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனை முழுவதிலும் நிலவரத்தை அடியோடு மாற்றின. சோவியத் துருப்புகள் எதிரியை 600—700 கி. மீ. தூரம் மேற்கு நோக்கி பின்தள்ளின, 4,90,000 ச. கி. மீ.களுக்கும் கூடுதலான பரப்பை விடுவித்தன, 100க்கும் மேற்பட்ட எதிரி டிவிஷன்களை முறியடித்தன. கிழக்குப் போர்முனையில் 1942 நவம்பர் முதல் 1943 மார்ச் வரை ஜெர்மானிய இராணுவம் 17,00,000 பேர்களைப் பலிகொடுத்தது, 3,500க்கும் அதிகமான டாங்கிகள், 4,300 விமானங்கள், 24,000 பீரங்கிகளை இழந்தது.

ஜெர்மானிய இராணுவ இயந்திரத்திற்கு செஞ்சேனை தந்த அடிகள் ''மூன்றும் ரைஹின்'' இராணுவ வல்லமையை சீர்குலைத்தன. ஹிட்லர் பேரரசின் செல்வாக்கு குறைவதைக் கண்டு கவலையுற்ற நாஜித் தலைமை போர்த்தந்திர முன்முயற்சியை மீண்டும் கைப்பற்றவும் கூட்டாளிகள் மற்றும் நடு நிலை நாடுகளின் முன் தன் கௌரவத்தை புனர்நாட்டவும் யுத்தத்தின் போக்கை தனக்கு ஆதாயமாகத் திருப்பவும் திட்டமிட்டது.

புதிய, கோடைக்காலத் தாக்குதலுக்குத் தயாரான பாசிச ஜெர்மனி, யுத்தக் கைதிகள் மற்றும் அயல்நாட்டு தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி சுரண்டியதன் விளைவாய் 1943இல் (1942ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில்) டாங்கிகள், சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளின் உற்பத்தியை 2 மடங்கிற்கும் அதிகமாகவும் போர் விமானங்களின் உற்பத்தியை 1.7 மடங்கும் பெருக்கியது. ''டைகர்'', ''பான்தெர்'' என்ற புதிய கனரக டாங்கிகளும் ''பெர்டினண்டு'' என்ற திடீர் தாக்குதல் பீரங்கிகளும் ''ஃபோக்கே-வுல்ஃப்-190'' மற்றும் ''ஹேன்ஷெல்-129'' ரக விமானங்களும் ஜெர்மானிய இராணுவத்திற்குக் கிடைத்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டுதான் கோடைக்கால நடவடிக்கை திட்டமிடப்பட்டது. முற்ற முழுமையாக அணிதிரட்டிய ஹிட்லரின் படைத் தலைமை தனது இராணுவத்தின் எண்ணிக்கையை 103 லட்சம் வரை உயர்த்தியது. இயங்கும் இராணுவத்தில் மட்டும் 66,82,000 பேர்கள் இருந்தனர். இவர்களில் 48,00,000 பேர்கள்—அதாவது 71 சதவிகிதத்திற்கும் அதிகமானோர்—சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில் இருந்தனர்.

கூர்ஸ்க் முகப்பில் தமது துருப்புகளின் அனுகூலமான நிலையைக் கணக்கில் கொண்ட பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை, கூர்ஸ்க்

முகப்பின் அடித்தளத்தை நோக்கி வடக்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல்களைத் தொடுப்பதன் மூலம் மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளை சுற்றி வளைத்து அழிக்கவும் பின்னர் தென் மேற்கு சேனையின் பின்னணி மீது தாக்குதல் தொடுக்கவும் தீர்மானித்தது. இதன் பின் வட கிழக்கு திசையில் தாக்குதலை வளர்க்கத் திட்டமிடப்பட்டது. லெனின்கிராத் மீது தாக்குதல் தொடுக்கும் எண்ணமும் இருந்தது.

''த்ஸித்தாதேல்'' என்ற அடையாளப் பெயரைப் பெற்ற இந் நடவடிக்கையின் நிறைவேற்றத்திற்காக 9,00,000க்கும் மேற்பட்ட ஆட்கள், 10,000 வரையிலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் கிட்டத்தட்ட 2,700 டாங்கிகள், சுமார் 2,050 விமானங்கள் அடங்கிய 50 டிவிஷன்கள் (16 டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட) ஒதுக்கப்பட்டன. மேற்கு ஜெர்மானிய வரலாற்றுசிரியர் ஸைட்லரின் கூற்றுப்படி ஜெர்மானிய தொழிற்துறையாலும் ''அணிதிரட்டப்பட்ட ஐரோப்பாவாலும்'' முடிந்தவை எல்லாம் கூர்ஸ்க் திசையில் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்தன.

சோவியத் இராணுவமும் உறுதியான தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தயாரானது. பாசிச ஜெர்மனியின் நிலைக்கு மாறாக சோவியத் யூனியனின் இராணுவ-அரசியல் நிலை 1943 கோடையில் இன்னமும் வலுவடைந்தது. செஞ்சேனையின் வெற்றிகளால் ஊக்கமடைந்த சோவியத் மக்கள் உள்நாட்டில் வீரத்தோடு உழைத்தனர். பொருளாதாரத் துறையில் புதிய வெற்றிகள் அடையப்பட்டன. 1942ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் மொத்தப் பொருளுற்பத்தி 17 சதவிகிதம் அதிகரித்தது. நாட்டின் கிழக்கத்தியப் பிரதேசங்களில்—உராலில், வோல்கா பிரதேசத்தில், சைபீரியாவில், மத்திய ஆசியாவில்—பொருட்களின் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. 1943ஆம் ஆண்டு சோவியத் தொழிற்துறை மாதந்தோறும் சராசரியாக சுமார் 3,000 விமானங்களையும் 2,000க்கும் கூடுதலான டாங்கிகளையும் தானியங்கி பீரங்கி அமைப்புகளையும் உற்பத்தி செய்தது என்று கூறுவதே போதுமானது. புதிய தானியங்கி பீரங்கி அமைப்புகளாகிய சு-76, சு-122, சு-152, புதிய வகைசுடும் ஆயுதங்களும் துருப்புகளுக்குக் கிடைத்தன. விமானத் தொழிற்துறை யாக்-7, யாக்-9, லா-5 என்ற புதிய சண்டை விமானங்களை கணிசமான அளவு உற்பத்தி செய்தது. உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையிடமிருந்த சேமப் படைகளின் பீரங்கிகள் முற்றிலுமாக இயந்திர இழு விசைக்கு மாற்றப்பட்டன. சோவியத் இராணுவத்திற்குத் தேவையான போர் வாகனங்கள் இராணுவத் தளவாடங்கள், ஆயுதங்கள் ஆகியன இடையறாது கிடைத்து வந்தன, ஆடையணிகளும் உணவுப் பொருட்களும் போதுமான அளவு

சப்ளை செய்யப்பட்டன. சோவியத் படைவீரர்களின் தார்மீக-அரசியல் மனப்பான்மை இன்னமும் அதிகமாக உயர்ந்தது, இவர்களது போர்த் திறமை அதிகரித்தது.

1943 கோடையில் செஞ்சேனை, சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில் இயங்கி வந்த ஹிட்லர் துருப்புகளை டாங்கிகளில் 1.8 மடங்கும் பீரங்கிகளில் கிட்டத்தட்ட இரு மடங்கும் விமானங்களில் 2.8 மடங்கும் விஞ்சி நின்றது. இது பெரும் தாக்குதல் நடவடிக்கைகளைத் துவக்க சோவியத் படைத் தலைமைக்கு வாய்ப்பளித்தது. ஆனால் கூர்ஸ்க் அருகே ஜெர்மனி தாக்குதலுக்குத் தயாராகி வருவதைப் பற்றி விவரங்கள் கிடைத்ததால் உயர்மட்ட பிரதான படைத்தலைமையகம் முதலில் தாக்குவதில்லை என்றும் கூர்ஸ்க் முகப்பு பிரதேசத்தில் ஆழமான, பல படை வரிசைகளையுடைய தற்காப்பை ஏற்படுத்தி தற்காப்புப் போரில் எதிரியை அலைக்கழித்து பலமிழக்கச் செய்வது என்றும் பின்னர் எதிர்தாக்குதலில் இறங்கி எதிரியின் துருப்புகளை முறியடிப்பது என்றும் முடிவு செய்தது. இவ்வாறாக பொது தாக்குதலுக்கு அதிகபட்சம் அனுகூலமான சூழ்நிலைகளை செஞ்சேனைக்கு ஏற்படுத்துவதற்காக அந்த நிலைமைகளில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முக்கியத் தாக்குதல் சக்திகளை முறியடிப்பதற்கான மிக விவேகமான முறையை சோவியத் படைத் தலைமை தேர்ந்தெடுத்தது. பின்னால் நடந்த சம்பவங்களின் போக்கு இம்முடிவு சரியானது என்பதை மெய்ப்பித்தது.

பிரதான படைத் தலைமையகம் ஜெர்மானியத் தாக்குதலை மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளின் தீவிர தற்காப்பைக் கொண்டு சந்திக்க திட்டமிட்டிருந்தது. இச்சேனைகளின் பின்னணியில் பலம் வாய்ந்த போர்த்தந்திர சேமப் படையாக ஸ்டெப்பி சேனை என்ற இன்னொரு சேனை இருந்தது. பாசிச ஜெர்மானிய முக்கியத் த்தாக்குதல் படைத் திரட்டுகள் பலமிழக்கச் செய்யப்பட்ட பின் ஐந்து சேனைகளின் (மேற்கு சேனையின் இடப் பிரிவு, பிரியான்ஸ்க், மத்திய, வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகள்) சக்திகளைக் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுத்து எதிரியை முறியடிக்கத் திட்டமிடப்பட்டது. மேற்கொண்டு கிழக்குக் கரையோர உக்ரேன், தன்பாஸ் மற்றும் கிழக்கு பெலோருஷ்யா, குபான் ஆகிய இடங்களில் தாக்குதலைத் தொடரும் எண்ணம் இருந்தது.

ஏப்ரல் முதல் ஜூன் வரை கூர்ஸ்க் முகப்பில் சோவியத் துருப்புகள் பொறியியல் ரீதியாக பலம் மிக்க தற்காப்பிற்கு ஏற்பாடு செய்தன. இதில் மொத்தம் 250—300 கி.மீ. ஆழமுடைய 8 தற்காப்பு எல்லைகள் அடங்கியிருந்தன. மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் சோவியத் துருப்புகள் இன்னமும் இது போன்ற சிறந்த தற்காப்பை அமைத்ததில்லை. மத்திய சேனையின் மண்டலத்

தில் மட்டும் துருப்புகள் மற்றும் மக்களின் உதவியோடு 5,000 கி. மீ. வரையிலான மறைகுழிகளும் தொடர்பு வழிகளும் தோண்டப் பட்டன. இது மாஸ்கோவிலிருந்து இர்க்கூத்ஸ்க் நகர் வரையில் உள்ள தூரத்திற்குச் சமமானது. இந்தத் தற்காப்பு முக்கியமாக டாங்கி எதிர்ப்பு தற்காப்பாக இருந்தது. டாங்கி எதிர்ப்பு ஆதார மையங்களும் டாங்கி எதிர்ப்பு மண்டலங்களும் இதன் அடிப்படை யாக விளங்கின. டாங்கி எதிர்ப்பு பிரதேசங்கள் நேரடி நடைமுறை மண்டலத்தின் உட்பகுதி முழுவதும் (15 கி. மீ. வரை), முக்கியத் திசைகளில் படைகளின் தற்காப்பின் உட்பகுதி முழுவதும் (35 கி. மீ. வரை) இருந்தன. டாங்கி எதிர்ப்பு ஆதார மையங்களில் பீரங்கிகள், மார்டர் பீரங்கிகள், டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் முதலியவை இருந்தன. கண்ணி வெடித் தடைகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

கூர்ஸ்க், அரியோல், வரோனிஷ், ஹார்க்கவ் மாகாணங்களைச் சேர்ந்த உழைப்பாளிகள் தற்காப்பு எல்லைகளைக் கட்டுவதில் பெரும் பங்காற்றினர். இவர்கள் நூறாயிரக் கணக்கான ஆட்களைத் தற் காப்புப் பணிகளுக்கு அனுப்பினர். உதாரணமாக ஜூன் மாதம் மட்டும் கூர்ஸ்க் மாகாணத்தைச் சேர்ந்த 3,00,000 பேர்கள் தற்காப்புப் பணிகளில் பங்கேற்றனர். அதே நேரத்தில் வசந்த காலத்திலேயே குபானில் துவங்கிய வான் ஆதிக்கத்திற்கான போராட் டம் தீவிரமாக நடந்தது.

எதிரியுடனான சமருக்காக ஆயத்தமான போது துருப்புகள் மத்தியில் பெரும் தயாரிப்புப் பணி நடத்தப்பட்டது. துருப்புகளின் போர் பயிற்சியை அதிகப்படுத்துதல், எதிரியின் புதிய ஆயுதங் களைப் பயின்று இவற்றிற்கு எதிராகப் போரிடும் முறைகளைக் கற்பது ஆகியவை இதில் அடங்கியிருந்தன. எல்லா யூனிட்டுகளிலும் படைப் பிரிவுகளிலும் யுத்த எழுச்சி நிலவியது.

சக்திகளின் சமன்நிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. வரோனிஷ் மற்றும் மத்திய சேனைகளில் (தளபதிகள் ஜெனரல் வதூதின், ஜெனரல் ரக்கசோவ்ஸ்கிய்) 13 லட்சம் பேர்கள் இருந்தனர், 19,100 வரை சாதாரண மற்றும் மார்டர் பீரங்கி களும் 3,444 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்பு களும் 2,170 விமானங்களும் இருந்தன.

நிறைவேற்றப்பட்ட கடமைகளின் தன்மை, இராணுவ நடவடிக் கைகளின் போக்கிற்கேற்ப கூர்ஸ்க் சமரை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (1943 ஜூலை 5—23) மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளின் துருப்புகள் போர்த்தந்திர தற்காப்பு நடவடிக்கையை நிறைவேற்றின. இரண்டாவது கட்டத்தில் (1943 ஜூலை 12—ஆகஸ்டு 23) அரியோல் தாக்குதல் நடவடிக்கையில்

மேற்கு சேனையின் இடதுப் பிரிவு, பிரியான்ஸ்க் மற்றும் மத்திய சேனைகளும் பேல்கரத்-ஹார்க்கவ் நடவடிக்கையில் தென் மேற்கு சேனையோடு ஒன்றிணைந்து வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகளும் எதிர்த்தாக்குதல் தொடுத்தன.

ஜூலை 2ஆம் தேதி சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை வேவு விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, ஜூலை 3 — 6 தேதிகளில் பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டுகள் தாக்குதலுக்கு மாறக் கூடுமென மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளின் தளபதிகளை எச்சரித்து, துருப்புகளை முழு இராணுவ தயார் நிலையில் வைத்திருக்குமாறு கோரியது. ஜூலை 5ஆம் தேதி காலையில் தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சிறைபிடிக்கப்பட்ட போர்க் கைதிகள் தெரிவித்தனர். இவையெல்லாம் எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகள் குவிக்கப்பட்டிருந்த இடங்களை நோக்கிய பீரங்கித் தாக்குதல்களைத் தயார்படுத்துவதற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. பீரங்கிப்படையின் பூர்வாங்க எதிர்தாக்குதல்களின் விளைவாய் எதிரிக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டன, எதிரியின் தாக்குதல் $1^1/_2$ — 2 மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தாக்குதல் ஜூலை 5ஆம் தேதி காலையில் துவங்கியது. அரியோலுக்கு தெற்கேயும் பேல்கரதிற்கு வடக்கேயும் இருந்த பிரதேசங்களில் மிகக் கடுமையான சண்டைகள் மூண்டன. இங்கே ஜெனரல் பூஹவின் 13வது படைத் துருப்புகள் ஹிட்லர் துருப்புகளின் முக்கிய அடியை எதிர் கொண்டன. தாக்கும் படை வரிசையின் முன்னால் ''பெர்டினண்டு'' எனும் திடீர் தாக்குதல் பீரங்கிகளின் ஆதரவோடு ''டைகர்'' என்ற கனரக டாங்கிகள் 10 — 15 டாங்கிகளாகச் சேர்ந்து வந்தன. இவற்றின் பின்னால் நடுத்தர டாங்கிகள் 50 — 100 ஒன்று சேர்ந்து வர இவற்றோடு கவச வாகனங்களில் தரைப்படையினர் வந்தனர். சோவியத் துருப்புகள் பீரங்கிகள் மற்றும் எதிர்ப்பு ஆயுதங்களின் கடும் அக்கினிக் குழம்பாலும் வெடிகுண்டுகள், வெடியாவி பாட்டில்கள் ஆகியவற்றோடும் பாசிஸ்டுகளை எதிர் கொண்டன. சோவியத் டாங்கி வீரர்கள், கண்ணி வெடி வீரர்கள், விமானிகள் ஆகியோர் தீவிரமாகச் செயல்பட்டனர். விமானிகள் முதன் முதலாக எதிரி டாங்கிகளுக்கு எதிராக உயர் சக்தியுள்ள அடுக்கடுக்கு விமானக் குண்டுகளைப் பயன்படுத்தினர்.

உறுதியான தற்காப்பு மற்றும் பலம் மிக்க பதிலடிகளின் பயனாய் சோவியத் துருப்புகள் பாசிச ஜெர்மானிய டாங்கிகளின் வெறித்தனமான தாக்குதலின் வேகத்தைக் குறைத்து எதிரிக்குப் பேரிழப்புகளை ஏற்படுத்தின. மேற்கு ஜெர்மானிய வரலாற்றாசிரியர் கேய்மின்

கூற்றுப்படி தாக்குதலில் ஈடுபட்டிருந்த ஜெர்மானியப் படைத் திரட்டுகள் இறுதி வரை இயன்றதனைத்தையும் செய்தாலும் ஒரு சில நாட்களுக்குப் பின்னரே சந்தேகத்திற்கிடமற்று தோல்வியடையும் நிலையில் இருந்தன. சண்டைகளின் ஊடே, மேன்மேலும் அதிகரித்து வந்த இழப்புகளுடன் சோவியத் துருப்புகளின் ஆழ்ந்த நிலையமைப்புகளின் ஊடாக ஊர்ந்த ஜெர்மானிய யூனிட்டுகள் ஜூலை 7ஆம் தேதியிலிருந்து துவங்கி பெரும் சோவியத் டாங்கிச் சக்திகளால் பின்னுக்குத் தள்ளப்படலாயின.

ஜூலை 9 வாக்கில் 10–12 கி. மீ. தூரம் மட்டுமே முன்னேறியிருந்த ''சென்டர்'' படைத் தொகுதியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு மத்திய சேனையின் துருப்புகளால் தடுத்து நிறுத்தப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டது. எதிரி 42,000 ஆட்களையும் 800 டாங்கிகளையும் இழந்தான். ஈடு இணையற்ற திறமையையும் பெரும் வீரத்தையும் வெளிப்படுத்திய சோவியத் போர்வீரர்கள் எதிரியின் டாங்கிப் படைகளை பின்னுக்குத் தள்ளினர். உதாரணமாக கர்னல் ருக்கசூயெவின் 3வது டாங்கி எதிர்ப்புப் படை பிரிகேட் 300 எதிரி டாங்கிகளை எதிர்த்து நின்றது. கேப்டன் இக்னுஷவின் ஒரு பேட்டரி மட்டும் ஒரே நாளில் 19 டாங்கிகளை ஒழித்தது.

''தெற்கு'' ஜெர்மானியப் படைத் தொகுதி செயல்பட்ட கூர்ஸ்க்கின் தெற்கேயும் கடும் சண்டைகள் மூண்டன. ஜெனரல் சிஸ்த்யாக்கோவ், ஜெனரல் ஷுமீலவின் 6வது, 7வது கார்டு படைகளின் துருப்புகளும் வரோனிஷ் சேனையின் ஜெனரல் கதுக்கோவின் முதல் டாங்கிப் படையின் வீரர்களும் எதிரியோடு உறுதியாகப் போர் புரிந்தனர். முதல் நாளன்றே பிரதான தாக்குதல் திசையில் சோவியத் துருப்புகளின் நிலைகளை நோக்கி 700 டாங்கிகளை விமானப் படையின் ஆதரவோடு எதிரி அனுப்பினான். ஹிட்லர் துருப்புகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்குதலைத் தொடுத்தன. முதலாவது டாங்கிப் படையிலிருந்த பிளட்டோனின் கமான்டர் லெப்டினென்டு பெஸ்ஸராபவ் சண்டையில் சிறப்பாக இயங்கினார். இவரது டாங்கியிலிருந்த வீரர்கள் ஒரே நாளில் எதிரியின் மூன்று ''டைகர்'' டாங்கிகளை அழித்தனர்.

வான் பரப்பில் கடும் சண்டைகள் நடந்தன. 2வது, 16வது, 17வது வான் படைகளின் (தளபதிகள் ஜெனரல்கள் கிரசோவ்ஸ்கி, ருதேன்கோ, சுதேட்ஸ்) விமானிகள் வீரத்தையும் திறமையையும் வெளிப்படுத்தினர். வரலாற்றிலேயே முதல் தடவையாக ஜூலை 6ஆம் தேதி வான் சண்டை ஒன்றில் சண்டை விமான விமானி லெப்டினென்டு கரவேட்ஸ் 9 பாசிச விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார். இன்று மும்முறை சோவியத் யூனியன் வீரர் விருது பெற்ற கர்னல்

ஜெனரல் கஜெதூப் இங்கேதான் முதன் முதலாக எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்திஞர்.

சேமப் படைகளை களத்தில் இறக்கிய பாசிஸ்டுகள் ஜூலை 11 வாக்கில் சோவியத் தற்காப்பின் ஊடே 35 கி. மீ. தூரம் பிளந்து கொண்டு புகுந்து ப்ரோஹரவ்கா கிராமப் பகுதியை அடைந்தனர். இவர்களை நோக்கி ஸ்டெப்பி சேனையைச் சேர்ந்த (தளபதி ஜெனரல். கோனெவ்) 5வது கார்டு படை (தளபதி ஜெனரல் ஜாடவ்) மற்றும் 5வது டாங்கிப் படையின் (தளபதி ஜெனரல் ரோத்மிஸ்த்ரவ்) துருப்புகள் நகர்ந்தன. இவை வரோனிஷ் சேனையைச் சேர்ந்த 6வது கார்டு படை மற்றும் முதலாவது டாங்கிப் படையோடு சேர்ந்து எதிரிக்குப் பலத்த பதிலடி தந்தன. இதன் விளைவாய் ப்ரோஹரவ்கா அருகே பிரம்மாண்டமான டாங்கி சமர் நடந்தது. இரு தரப்புகளிலும் இதில் 1,200 டாங்கிகள் கலந்து கொண்டன. இச்சமரில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் தோற்கடிக்கப்பட்டு தற்காப்பிற்குச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன.

அதே தினத்தில் மேற்கு மற்றும் பிரியான்ஸ்க் சேனைகளின் (தளபதிகள் ஜெனரல் சக்கலோவ்ஸ்கி, ஜெனரல் பபோவ்) துருப்புகள் பலம் மிக்க எதிர்த்தாக்குதலில் இறங்கி, எதிரியின் தற்காப்பை வெற்றிகரமாக பிளந்து கொண்டு ஒரு நாளில் 25 கி. மீ. தூரம் முன்னேறின. கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல் துவங்கியது. ''சென்டர்'' படைத் தொகுதி படைத் தலைமையின் முன்னாள் இராணுவ அதிகாரி காகின்ஹோல்ட்ஸின் கூற்றுப்படி ஜூலை 12ஆம் தேதி ஆரம்பமாகிய ருஷ்ய தாக்குதலின் சக்தி, எல்லாவற்றிற்கும் மேலாக பிளந்து கொண்டு செல்லும் வன்மை ஜெர்மானியர்களுக்கு கடும் அதிர்ச்சியாக இருந்தன.

ப்ரோஹரவ்காவின் அருகே முறியடிக்கப்பட்ட ஹிட்லரின் துருப்புகள் பின்வாங்கத் துவங்கின. வரோனிஷ் சேனையின் துருப்புகளும் ஜூலை 19இலிருந்து ஸ்டெப்பி சேனையின் துருப்புகளும் இவற்றைத் துரத்திச் சென்றன. ஜூலை 23 வாக்கில், கூர்ஸ்க் சமரின் துவக்கத்தில் இருந்த நிலைகளுக்கு எதிரி பின்தள்ளப்பட்டான்.

அரியோலை நோக்கி ஒன்றிணையும் திசைகளில் தாக்கிய மேற்கு, பிரியான்ஸ்க் மற்றும் மத்திய சேனைகளின் துருப்புகள், பிரியான்ஸ்கிற்கு கிழக்கே தற்காப்பு எல்லைகளுக்கு பின்வாங்கிச் செல்லுமாறு எதிரியைக் கட்டாயப்படுத்தின. ஆகஸ்டு 5ஆம் தேதி அரியோல் நகரம் விடுவிக்கப்பட்டது. ஆகஸ்டு 18 வாக்கில் அரியோல் முகப்பு பூராவும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

சோவியத் விமானப்படை தரைப்படைகளுக்கு பெரும் ஆதர



ஜூலை 4 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஜூலை 19 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஆகஸ்டு 5 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஆகஸ்டு 11 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஆகஸ்டு 18 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஆகஸ்டு 23 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஜெர்மானியத் துருப்புகளின் அதிகபட்ச முன்னேற்றம்
சோவியத் துருப்புகளின் தாக்குதல்கள்
ஜெர்மானியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல்கள்
கிரவ்
50ப.
சுஸேல்ஸ்க்
மேற்கு சேனை
11 கார். ப.
துதினவா
பெலேவ்
2 கார். ப.
11ப.
11 கார். ப.
4 டா. ப.
61ப.
பிரியான்ஸ்க் சேனை
வோல்ஹவ்
மித்ஸேன்ஸ்க்
3ப.
பிரியான்ஸ்க்
2 டா. ப.
அரியோல்
நவசில்
63ப.
நாவ்லா
க்ரோமி
3 கார். டா. ப.
9ப.
48ப.
லீவ்னி
ரதகோஷ்
"சென்டர்" படைத் தொகுதி
2, 3 டா.ப.; 2, 4, 9ப.
70ப.
பொனிரி ஸ்டேஷன்
2 டா. ப.
ஒல்ஹவாத்கா
65ப.
13ப.
2ப.
ம த் தி ய



குர்ஸ்க் அருகே நடந்த சமரின் பொது போக்கு (1943 ஜுலை – ஆகஸ்டு)

வளித்தது. இச்சண்டைகளில் சண்டை விமான விமானி மரேஸ் யேவ் உயர்வான தேசபக்தியை வெளிப்படுத்தினார். இரு கால்களின் பாதங்களும் அகற்றப்பட்ட நிலையில் விமானப்படைக்கு திரும்பி வந்த இவர் மூன்று எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார். சோவியத் விமானிகளோடு சேர்ந்து பிரெஞ்சு விமானப்படை ஸ்கு வாட்ரன் ''நார்மான்டியின்'' விமானிகள் வீரத்தோடு போரிட்டனர். இவர்கள் ஜூலை—ஆகஸ்டில் 33 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். 37 நாள் தாக்குதல்களில் சோவியத் துருப்புகள் எதிரிக்கு பேரிழப்புகளை ஏற்படுத்தி 150 கி. மீ. தூரம் முன்னேறின.

வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகளின் எதிர்த்தாக்குதலும் மும்முரமாக வளர்ந்து வந்தது. ஒரு கி. மீ. போர்முனையில் 230—250 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் குவித்து பலம் மிக்க பூர்வாங்க பீரங்கித் தாக்குதலுக்குப் பின் எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்டது. விமானப்படை பீரங்கிப்படையோடு நெருக்க மாக இணைந்து செயல்பட்டது. இடையறா பீரங்கி குண்டு வீச்சும் விமானப்படையின் பெருமளவு தாக்குதலும் உடனிருக்க காலாட் படையும் டாங்கிகளும் எதிரி தற்காப்பின் முக்கிய மண்டலத்தை 4 கி. மீ. ஆழம் வரை ஊடுருவிச் சென்றன. பின்னுல் 1வது, 5வது கார்டு டாங்கிப் படைகளும் தனி டாங்கி மற்றும் இயந்திரப்படை கோர்பஸ்களும் சமரில் ஈடுபடுத்தப்பட்டன. இவை நேரடி நடை முறை மண்டலத்தைப் பிளந்து, இயங்கும் உட்பகுதியை நோக்கிப் பாய்ந்தன.

பேல்கரத்-ஹார்க்கவ் திசையில் மும்முரமான தாக்குதலைத் தொடர்ந்து வளர்த்த சோவியத் துருப்புகள் முன்னேக்கி நகர்ந் தன. ஆகஸ்டு 5இல் இவை பேல்கரதை விடுவித்து, வட கிழக் கிலிருந்தும் தெற்கேயிருந்தும் சுற்றி ஹார்க்கவை நோக்கிச் சென்றன. அரியோல் மற்றும் பேல்கரத் விடுவிக்கப்பட்டதை கொண்டா டும் முகமாக அன்று இரவு மாஸ்கோவில் மாபெரும் தேசபக்த யுத்த வரலாற்றிலேயே முதன் முதலாக பீரங்கி மரியாதை செய்யப் பட்டது.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் நடந்த சம்பவங்கள் உலகம் முழுவதும் பெரும் எதிரொலியை ஏற்படுத்தின. 1943ஆம் ஆண்டு ஜூலை 29இல் அமெரிக்க வானொலியில் பேசிய ரூஸ்வெல்ட் பின்வருமாறு அறிவித்தார்: ''இப்போது மிகத் தீர்மானகரமான சண்டைகள் ருஷ்யாவில் நடைபெறுகின்றன... இக்கோடையில் நடைபெற்ற குறுகிய கால ஜெர்மானியத் தாக்குதல் ஜெர்மானி யர்களின் ஆன்மீக நிலையை உயர்த்துவதற்காக செய்யப்பட்ட வெறிபிடித்த முயற்சியாக அமைந்தது. இத்தாக்குதலை ருஷ்யர்கள் ஒழித்துக் கட்டியதோடு மட்டுமின்றி ஐக்கிய நாடுகளின் மொத்த

தாக்குதல் போர்த்தந்திரத்தோடு ஒத்திசைக்கப்பட்ட தமது சொந்தத் திட்டங்களுக்கேற்ப முன்னேறவும் செய்தனர்... தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ருஷ்யா உலகம் முழுவதையும் நாசிசத் திடமிருந்து காப்பாற்றத் திட்டமிடுகிறது. எதிர்கால உலகில் நல்ல அண்டை நாடாகவும் உண்மையான நண்பனாகவும் இருக்க வல்ல இந்நாட்டிற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்''*.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் அடைந்த வெற்றியானது பாசிச எதிர்ப்பு கூட்டணி நாடுகளிலிருந்த மக்களுக்கு சோவியத் யூனியனின் பாலான ஆழ்ந்த அனுதாபத்தை அதிகரிக்கச் செய்தது, பொது விரோதிக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் மக்களுடன் இவர்களுக்குள்ள ஒருமைப்பாட்டை வலுப்படுத்தியது. அரியோல் நகரம் விடுவிக்கப்பட்ட பின் இந்நகர வாசிகளுக்கும் பிரிட்டிஷ் நகரமாகிய ஹாம்ப்ஸ்டெட் வாசிகளுக்கும் இடையே நட்பு ரீதியான கடிதப் போக்குவரத்து ஆரம்பமாகியது. சோவியத் யூனியனுக்கு உதவும் கமிட்டியின் வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப் பிடப்பட்டிருந்தது: ''அரியோல் நகர வாசிகளே, உங்களுக்கு வாழ்த்துகள். நம்மிரு மாபெரும் நாடுகளின் மக்களும் நடத்தும் கடுமையான யுத்தத்தில் பாசிசத்திற்கு மரண அடி கொடுக்கும் நம் புதல்வர்களின் குருதியால் நம் நட்பு என்றென்றைக்குமாக உறுதிப்பட்டுள்ளது.

இறுதியாக வெற்றிக்கான நம்பிக்கை நம் கண்களின் முன் தெரி கிறது. நாம் யுத்தச் சுமைகளைப் பகிர்ந்து கொள்கிறோம், நாம் இருவரும் வெல்ல முடியாத சுதந்திரப் படைகளைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையோடு சமாதானத்தின் அற்புதமான செல்வங்களை நாம் பகிர்ந்து கொள்கிறோம்''**.

பகதூஹவ், அஹ்தீர்கா பிரதேசங்களில் பலமான எதிர்த் தாக்குதல்களின் மூலம் சோவியத் துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த 11 நாட்கள் பாசிஸ்டுகள் முயன்றனர். ஆனால் இது அவர்களால் முடியவில்லை. கடும் சண்டைகளில் எதிரியின் எதிர்த் தாக்குதல் படைத் திரட்டுகள் வரோனிஷ் சேனையின் துருப்புகளால் முடியடிக்கப்பட்டன. இந்த நேரத்தில் ஸ்டெப்பி சேனையின் யூனிட்டு கள் ஹார்க்கவை நெருக்கமாக அணுகி இரவு நேர திடீர் தாக்கு தலைத் தொடுத்தன. ஆகஸ்டு 23ஆம் தேதி உக்ரேனின் இரண்டா வது பெரிய நகரம் பாசிச ஜெர்மானியத் துருப்புகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

பேல்கரத்-ஹார்க்கவ் நடவடிக்கையின் விளைவாய் எதிரிக்கு

---

* லா ருபேஜோம் என்னும் பத்திரிகை, 1970, № 19, பக்கங்கள் 5, 6.

** மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் அரியோல் மாகாணம். ஆவணங்களின் தொகுப்பு நூல், அரியோல், 1960, பக்கம் 428 (ருஷ்ய மொழியில்).

பேரிழப்பு ஏற்பட்டது. சோவியத் துருப்புகள் 140 கி.மீ. ஆழம் வரை முன்னேறி, கிழக்குக் கரையோர உக்ரேன் மற்றும் தன்பாசை விடுவிக்கும் நோக்கத்தோடு பொது தாக்குதலுக்கு மாறிச் செல்வதற்கு அனுகூலமான நிலையை மேற்கொண்டன. கூர்ஸ்க் சமர் முடிவடைந்தது.

கூர்ஸ்க் அருகே நடந்த சமர் கடந்த யுத்த வரலாற்றில் மிக முக்கியமான, தீர்மானகரமான சம்பவங்களில் ஒன்றாக அமைந்தது. இந்த பிரம்மாண்டமான சமரில் இரு தரப்புகளிலுமாகச் சேர்ந்து 40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இது மாஸ்கோ அருகே நடந்த சமரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட இரு மடங்கும் ஸ்தாலின்கிராத் சமரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட ஒன்றரை மடங்கும் அதிகம். இது தவிர இரு தரப்புகளிலுமாகச் சேர்ந்து 69,000க்கு மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 13,000க்கும் கூடுதலான டாங்கிகள், தானியங்கி பீரங்கிகள், 12,000 வரையிலான சண்டை விமானங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டன. ஜெர்மானிய இராணுவத்தின் தரப்பில் இச்சமரில் 100க்கும் அதிகமான டிவிஷன்கள் கலந்து கொண்டன. இது சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் மொத்தமாக இருந்த துருப்புகளில் 43 சதவிகிதத்திற்கும் அதிகமானதாகும். இச்சமரின் போது செஞ்சேனைக்கு வெற்றிகரமானவையாக அமைந்த டாங்கிச் சண்டைகள் இரண்டாம் உலக யுத்தத்திலேயே மகத்தானவையாக விளங்கின. 50 நாட்களில் சோவியத் துருப்புகள் கூர்ஸ்க் அரைவட்டத்தில் 7 டாங்கி டிவிஷன்கள் உட்பட எதிரியின் 30 டிவிஷன்களை நொறுக்கித் தள்ளின. பாசிச ஜெர்மானியத் துருப்புகள் 5,00,000 ஆட்களையும் 1,500 டாங்கிகள், 3,000 பீரங்கிகள், 3,700க்கும் அதிகமான விமானங்களையும் பறி கொடுத்தன. சோவியத் விமானப் படை இறுதியாக வானில் போர்த்தந்திர ஆதிக்கத்தை வென்றது. இது யுத்தம் முடியும் வரை அப்படியே இருந்தது. ஜெர்மனியின் கவச டாங்கி துருப்புகளின் ஜெனரல் இன்ஸ்பெக்டராக இருந்த கர்னல் ஜெனரல் குடெரியான் கீழ்காணுமாறு ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான்: ''த்ஸித்தாதேல்' தாக்குதல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டதன் பயனாய் நாங்கள் பெரும் தோல்வியடைந்தோம். பெரும் கஷ்டப்பட்டு இட்டு நிரப்பப்பட்ட கவச டாங்கி துருப்புகளுக்கு ஏற்பட்ட பெரும் ஆட் சேதம், பொருட் சேதத்தின் பயனாய் நீண்ட காலத்திற்கு இவை இயங்காத நிலைக்கு மாற்றப்பட்டன. கிழக்குப் போர்முனையில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அடுத்த வசந்தத்தில் நேச நாடுகள் இறக்குப் படைகளைக் கீழிறக்குவதாக அச்சுறுத்தி வந்தபடி நடக்கும் பட்சத்தில் மேற்கே

தற்காப்பை ஏற்பாடு செய்யவும் இத்துருப்புகளை உரிய நேரத்தில் புனரமைப்பது என்பது கேள்விக் குறியாக இருந்தது... கிழக்குப் போர்முனையில் மேற்கொண்டு அமைதியான நாட்களே இருக்கவில்லை. முன்முயற்சி முழுவதுமாக எதிரியின் கரங்களுக்கு மாறியது...''*.

கூர்ஸ்க் அருகே அடையப்பட்ட வெற்றியானது, சோவியத் அரசு மற்றும் இதன் இராணுவத்தின் அதிகரித்துள்ள வல்லமையை உலகம் முழுவதற்கு எடுத்துக் காட்டியது, பூர்ஷ்வா போர்க்கலையை விட சோவியத் போர்க் கலை மேன்மையானது என்று மெய்ப்பித்தது. போர்த்தந்திர முன்முயற்சியை சோவியத் இராணுவ-அரசியல் தலைமையிடமிருந்து பறிக்க பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை செய்த முயற்சி படுதோல்வியடைந்தது. கூர்ஸ்க் அருகே படுதோல்வி அடைந்த பின் ஹிட்லரின் உயர்மட்ட படைத் தலைமை, தாக்குதல் போர்த்தந்திரத்தை என்றென்றைக்குமாக கைவிட்டு சோவியத்-ஜெர்மானியப் போர்முனை முழுவதிலும் தற்காப்பிற்கு மாறிச் செல்லும் கட்டாயத்திற்குள்ளானது. போர்த்தந்திர முன்முயற்சி இறுதியாக சோவியத் இராணுவத்திடம் வந்தது. மேற்கு ஜெர்மானிய வரலாற்றுசிரியர் ஹூபச் பின்வருமாறு எழுதினுர்: ''முன் முயற்சியைக் கைப்பற்றுவதற்கு கிழக்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள் செய்த கடைசி முயற்சிகள் வெற்றி பெறவில்லை. வெற்றி பெருத 'த்ஸித்தாதேல்' நடவடிக்கை ஜெர்மானிய இராணுவ வீழ்ச்சியின் துவக்கமாக அமைந்தது. இதற்குப் பின் கிழக்கே ஜெர்மானியப் போர்முனை மேற்கொண்டு ஸ்திரமடையவே இல்லை''**.

கூர்ஸ்க் சமரின் போது, சோவியத் போர்த்தந்திரத்தின் பருவநிலை தன்மை பற்றி—ஏனெனில் மாஸ்கோ சமரும் ஸ்தாலின்கிராத் சமரும் பனிக்காலத்தில் நடைபெற்றன—ஹிட்லர் பிரச்சாரத்தால் தோற்றுவிக்கப்பட்ட மாயைத் தகர்த்தெறியப்பட்டது. சோவியத் இராணுவம் இப்போது தன்னுல் எதிரியை எந்த ஒரு பருவக் காலத்திலும் முறியடிக்க முடியும் என்றும் தம் வெற்றி, முந்தைய நடவடிக்கைகளோடு ஒப்பிடும் போது அதிக உயர்வான தொழில் நுட்ப அடிப்படையையும் படைத் தலைமையின் கணிசமாக அதிகரித்துள்ள ஸ்தாபனத் திறமைகளையும் ஆதாரமாகக் கொண்டது என்றும் நம்பத்தக்க அளவில் காட்டியது. சோவியத் இராணுவ விஞ்ஞானமும் நடைமுறையும் போர்க் கலை வளர்ச்சியின் முன்னேக்கிய பாதையில் ஒரு புதிய எட்டை எடுத்து வைத்தன.

எதிரி எந்தத் திசைகளில் இருந்து தாக்குதல் தொடுப்பான் என்பதை சோவியத் படைத் தலைமை முன் கூட்டியே நிர்ணயித்து

---

* H. Guderian, *Erinnerungen eines Soldaten*, S. 296.

** W. Hubatsch, *Kriegswende 1943*, S. 144.

தனது சக்திகள் மற்றும் சாதனங்களில் பெரும்பான்மையை அங்கே கொண்டு வந்து குவித்ததானது கூர்ஸ்க் சமரின் போக்கு முழுவதன் மீதும் பெரும் தாக்கம் செலுத்தியது. அதோடு கூட தற்காப்பு கட்டாயமானதாக இல்லாமல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாக இருந்தது. சோவியத் துருப்புகள் முன்கூட்டியே தற்காப்பு நிலையை மேற்கொண்டன. படைகளின் முதல் படை வரிசைகள் தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தின் இரு கோடுகளில் நின்றன. இரண்டாம் படைவரிசைகளும் படைகள் மற்றும் சேனைகளின் சேமப் படைகளும் மூன்றாவது, நான்காவது கோடுகளில் நின்றன. டாங்கிப் படைகள் பதிலடிகளுக்கு மட்டுமின்றி ஜெர்மானியர்களின் பிரதானத் தாக்குதல் திசையில் முக்கிய எல்லைகளை உறுதியாகக் கைவசம் வைத்திருப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. எதிரி டாங்கிகள் முன்னேறி வரும் பாதையில் தடைகளைத் தோற்றுவித்த மொபைல் தடை அணிகள் முதன் முதலாகப் பரவலான அளவில் பயன்படுத்தப்பட்டன.

ஆதார நிலையங்களின் முறை சோவியத் துருப்புகளின் தற்காப்பின் அடிப்படையாக விளங்கியது. டாங்கி எதிர்ப்பு தடைகள் மற்றும் தடையரண்களால் மூடி மறைக்கப்பட்டிருந்த இந்நிலையங்களில் டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளும் தானியங்கி பீரங்கிகளும் இருந்தன.

தற்காப்பு கட்டுமானங்கள் மூடி மறைக்கப்பட்டிருந்ததானது தற்காப்பு மண்டலங்களின் பாதுகாப்பில் பெரும் பங்காற்றியது. பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையால், தற்காப்பு முறையைக் கண்டுபிடித்து கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் துருப்புகள் திரட்டப்படுவதை கண்டுபிடிக்க இயலவில்லை. இவ்வாறு மூடி மறைக்கப்பட்டிருந்தது தற்காப்பு படைப்பிரிவுகள் மற்றும் யூனிட்டுகளின் இழப்புகளைப் பெரிதும் குறைத்தது, ஏனெனில் எதிரியின் தரைப் படையும் விமானங்களும் துருப்புகள் இல்லாத பிரதேசங்கள் மீது தான் பலத்த தாக்குதல்களைத் தொடுத்ததால் தம் நோக்கத்தை இவற்றால் நிறைவேற்ற இயலவில்லை.

ஹிட்லரின் படைத் தலைமை சோவியத் துருப்புகளின் உரு மாற்றத்தைக் கண்டுபிடிக்கவில்லை என்பதற்கு ஜெர்மானிய ஜெனரல்களின் கூற்றுகளே சான்றாக உள்ளன. ''இப்பிரதேசத்தில் (ஒபயான், கரோச்சா. —ஆ-ர்.) ருஷ்யர்களின் அரண்களைப் பற்றி தாக்குதலுக்கு முன் எங்களுக்கு மிகவும் குறைவாகத்தான் தெரிந்திருந்தது. இங்கே சந்திக்க நேர்ந்ததில் நான்கில் ஒரு பங்கை கூட நாங்கள் எதிர்பார்க்கவில்லை'' என்று 19வது டாங்கி டிவிஷன் கமான்டர் ஜெனரல் ஷ்மிட் எழுதினான். ''த்ஸித்தாதேல்'' நடவடிக்கையை பகுப்பாய்வு செய்த ஜெனரல் மெலேன்தின் பின்வரு

மாறு குறிப்பிட்டான்: ''தாக்குதலின் துவக்கத்தில் பலம் வாய்ந்த கண்ணி வெடிகளால் மூடி மறைக்கப்பட்டிருந்த ருஷ்ய நிலைகளைப் பிளந்து கொண்டு செல்வது நாங்கள் எதிர்பார்த்ததை விடக் கடினமானதாக இருந்தது. பெருமளவு ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டு தொடுக்கப்பட்ட பயங்கரமான எதிர்தாக்குதல்கள் எங்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சியாக விளங்கின... ருஷ்யர்கள் மிகச் சிறப்பாக மூடி மறைத்ததைப் பற்றி இன்னுமொரு முறை கோடிட்டுக் காட்ட வேண்டும். முதல் டாங்கி கண்ணி வெடியில் மாட்டிக் கொண்டு வெடிக்கும் வரை, முதல் ருஷ்ய டாங்கி எதிர்ப்பு பீரங்கி சுடத் துவங்கும் வரை ஒரு கண்ணி வெடி களத்தையோ அல்லது டாங்கி எதிர்ப்பு மண்டலத்தையோ கண்டுபிடிக்க இயலவில்லை''°.

கூர்ஸ்க் அருகே சோவியத் துருப்புகளால் மேற்கொள்ளப்பட்ட எதிர்த்தாக்குதல் மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் துருப்புகளின் மூன்றாவது, மிகப் பெரிய எதிர்த்தாக்குதலாகும். இதில் 22 காலாட்படை, 5 டாங்கி, 6 வான் படைகளும் தொலை தூர விமானப்படையின் பெரும் சக்திகளும் கலந்து கொண்டன.

முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட, பல படை வரிசைகளை உள்ளடக்கிய எதிரியின் தற்காப்பை பிளந்து செல்லும் கடமையை செஞ்சேனை முதன் முதலாக நிறைவேற்றியது. முந்தைய நடவடிக்கைகளை விட இம்முறை பரவலான பூர்வாங்கச் சண்டை—அதுவும் பரவலான போர்முனையில் பலப்படுத்தப்பட்ட கம்பெனிகளையும் முன்னணி பட்டாலியன்களையும் கொண்டு—நடத்தப்பட்டது.

குறுகிய பிளவு இடங்களில் பரந்த அளவு சக்திகளையும் சாதனங்களையும் தீர்மானகரமாக ஒன்று திரட்டியது, ஆழத்திலிருந்த துருப்புகளின் இராணுவ வரிசைகளைப் பயன்படுத்தியது, முழு அளவில் நடத்தப்பட்ட பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல்களை அதிகக் கச்சிதமாக ஒழுங்கமைத்தது ஆகியன எதிர்த்தாக்குதலின் புதிய அம்சங்களாகும்.

தரைப்படை மற்றும் டாங்கிகளின் தாக்குதலுக்கு ஆதரவளிக்கும் ஒரு முறையாக 1.5—2 கி. மீ. ஆழத்திற்கு இடையறா பீரங்கிக் குண்டு வீச்சைப் பரவலாகப் பயன்படுத்தியதானது பீரங்கிப் படை பிரயோகத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். அச்சுறுத்தும் திசைகளில் நிறுத்தப்பட்ட பலம் மிக்க டாங்கி எதிர்ப்பு சேம பீரங்கிப்படைகள் எல்லா மட்டங்களிலும் (ரெஜிமென்ட் முதல் சேனை வரை) பரவலாகப் பயன்படுத்தப்படலாயின.

டாங்கிப் படைகளும் தனி டாங்கி மற்றும் இயந்திரப் படைக்

° ஃபி. மெலேன்தின், டாங்கிப் போர்கள். 1939 — 1945, மாஸ்கோ, 1957, பக்கங்கள் 198—199 (ருஷ்ய மொழியில்).

கோர்பஸ்களும் வெற்றிப் பாதையில் முக்கியப் பங்காற்றின. தரைப் படையின் வெகு அருகே ஆதரவாகச் சென்ற டாங்கிகளின் அடர்த்தி, ஸ்டாலின்கிராத் சமரோடு ஒப்பிடுகையில் கூடியிருந்தது; ஒரு கி. மீ. போர்முனையில் 15—20 டாங்கிகளும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் இருந்தன. முதன் முதலாக கூர்ஸ்க் அருகே தானியங்கி பீரங்கிப்படை ரெஜிமெண்டுகள் பயன்படுத்தப்பட்டன. இவை டாங்கிகள் மற்றும் தரைப்படை தாக்குதல்களை நன்கு ஆதரிக்கும் செயல்வன்மை மிக்க சாதனமாகத் திகழ்ந்தன.

எதிர்த்தாக்குதலில் முதன் முதலாக ஒரே மாதிரியான உள்ளடக் கத்தைக் கொண்ட டாங்கிப் படைகள் இயங்கின. அதாவது, 1942—1943 பனிக்கால நடவடிக்கையில் ஸ்டாலின்கிராத் அருகே நடந்ததைப் போல் இவற்றில் துப்பாக்கிப்படை யூனிட்டுகள் இருக்க வில்லை. எதிரியினுடைய தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத் தைப் பிளந்த பின் சமரில் ஈடுபடுத்தப்படும் மொபைல் சேனைப் பிரிவுகளாக இவை பயன்படுத்தப்பட்டன.

நிர்வாக நிலையங்களை இராணுவ வரிசைகளுக்கு அருகே கொண்டு வந்ததன் மூலமும் பெருமளவு வானொலிக் கருவிகளைப் புகுத்தியதன் மூலமும் துருப்புகளை நிர்வகிப்பது மேம்படுத்தப்பட்டது.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் மற்ற பகுதிகளில் சோவியத் துருப்புகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் கூர்ஸ்க் சமரின் வெற்றிக்கு துணை புரிந்தன. ஆகஸ்டு பாதிக்குள் எட்டு சோவியத் சேனைகள் தாக்குதலில் இறங்கின. இவை கொடுத்த பலத்த அடிகள் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் சேமப் படைகளைக் கட்டிப் போட்டு பெரும் சக்திகளை கூர்ஸ்க் அரை வட்டத்திற்கு அனுப்பும் வாய்ப்புகளைப் பறித்தது.

நடந்த சண்டைகளில் சோவியத் படைவீரர்கள் தற்காப்பில் அசாதாரண உறுதியையும் தாக்குதலில் பலத்த வேகத்தையும் காட்டினர். இது வெற்றியின் மிக முக்கியக் காரணியாக இருந்தது.

சோவியத் கொரில்லாப் படைவீரர்கள் கூர்ஸ்க் அருகே அடையப்பட்ட வெற்றியில் பெரும் பங்காற்றினர். பாசிஸ்டுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சோவியத் பரப்பில் இயங்கிய இவர்கள் கட்டவிழ்த்து விட்ட ''தண்டவாள யுத்தம்'' எதிரியின் போக்கு வரத்து மார்க்கங்கள் மீது பெரும் அடியாக விழுந்தது: குறுகிய காலகட்டத்திலேயே பாசிஸ்டுகளின் எல்லா முக்கியப் பாதைகளிலும் இரயில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

கூர்ஸ்க் அருகே அடையப்பட்ட வெற்றியின் சர்வதேச முக்கியத் துவம் மகத்தானது. பாசிச ஜெர்மனியின் வீழ்ச்சி தவிர்க்க இயலா தது, இது வெகு தொலைவில் இல்லை என்பதையும் சோவியத் யூனி யன் தன் சொந்தச் சக்திகளாலேயே பாசிசத்தை முறியடிக்கும்

என்பதையும் இவ்வெற்றி உலகம் முழுவதற்கும் காட்டியது.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தோல்வி ஹிட்லர் கூட்டின் உள்ளிருந்த முரண்பாடுகளை கடுமையாகக் கூர்மையடையச் செய்தது, ஜெர்மனியின் துணை நாடுகளில் சிக்கல்களைத் தோற்றுவித்தது, இத்தாலியிலிருந்த முஸ்ஸோலினி ஆட்சிக்கு இது மரண அடியாக அமைந்தது. யுத்தத்தின் போக்கில் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக அடிப்படை மாற்றம் ஏற்பட்டது.

''ஸ்டாலின்கிராத் அருகே நடந்த சமர் பாசிச ஜெர்மானிய இராணுவத்தின் மறைவை முன்னறிவித்தது என்றால் கூர்ஸ்க் அருகே நடந்த சமர் இதை பேரழிவின் முன் வைத்தது''*.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றி இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கின் மீது பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. 1943 ஜூலை ஆரம்பத்தில் இத்தாலியில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளை இறக்குவதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. சோவியத்-ஜெர்மானியப் போர்முனை எதிரியின் எல்லா சேமப் படைகளையும் உட்கொண்டதால் ஸ்வீடனுள் ஹிட்லர் துருப்புகள் நுழைவதைப் பற்றி முன்னர் தீட்டியிருந்த திட்டம் கைவிடப்பட்டது. ''சோவியத் யூனியனின் இராணுவ வெற்றிகளின் பயனாகத்தான் ஸ்வீடன் இன்னமும் யுத்தத்திற்கு வெளியே இருக்க முடிகிறது என்பது அதற்கு நன்கு புரிகிறது. இதற்காக ஸ்வீடன் சோவியத் யூனியனுக்கு நன்றி சொல்கிறது, இதைப் பற்றி நேரடியாக தெரிவிக்கிறது''** என்று 1943ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் தேதி மாஸ்கோவிலிருந்த ஸ்வீடிஷ் தூதுவர் அறிவித்தார்.

கூர்ஸ்க் அருகே ஹிட்லரின் துருப்புகள் அடைந்த தோல்வி, ஜெர்மனிக்கும் நடுநிலை நாடுகளுக்கும் இடையே இருந்த உறவுகள் மேலும் மோசமடைவதை முன்நிர்ணயித்தது. இவை ''மூன்றும் ரைஹிற்கு'' மூலப் பொருட்களையும் மற்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்வதை நிறுத்தின.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் இராணுவம் அடைந்த வெற்றி, அடிமைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய மக்கள் தமது சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் நடத்திய போராட்டத்தை பலப்படுத்தியது, ஜெர்மனி உட்பட எல்லா நாடுகளிலும் எதிர்ப்பு இயக்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியது.

கூர்ஸ்க் அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்

---

* இ. ஸ்தாலின், சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம், மாஸ்கோ, 1948, பக்கம் 114 (ருஷ்ய மொழியில்).

** மெஷ்துனரோத்னயா ஷிஸ்ன் என்னும் சஞ்சிகை, மாஸ்கோ, 1959, இதழ் 9, பக்கம் 95.

கப்பட்டதானது அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்களின் நிலைகள் மீது பிரதிபலித்தது. உதாரணமாக கூர்ஸ்க் சமர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த தருணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ் வெல்ட் சோவியத் பிரதமருக்கு அனுப்பிய விசேஷ செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ''ஒரு மாதமாக நடைபெறும் பிரம்மாண்டமான சமர்களில் உங்கள் இராணுவ வீரர்கள் தமது திறமையாலும் வீரத்தாலும் தியாகத்தாலும் உறுதியாலும் நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட ஜெர்மானியத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தியதோடு கூட ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்த வல்ல எதிர்த் தாக்குதலையும் வெற்றிகரமாகத் தொடுத்துள்ளனர்... சோவியத் யூனியன் தனது வீரஞ் செறிந்த வெற்றிகளைக் கண்டு நியாயமாகப் பெருமை கொள்ளலாம்''*.

பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சில் ஆகஸ்டு 12ஆம் தேதி சோவியத் பிரதமருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், ''இப்போர்முனையில் ஜெர்மானிய இராணுவத்தின் தோல்விகள் நமது இறுதி வெற்றியை நோக்கிய பாதையில் மைல் கற்களாகும்'' என்று குறிப்பிட்டார். பிரிட்டிஷ் கட்டுரையாளர் அலெக்சாந்தர் வேர்ட் இன்னமும் சரியாகக் கூறினார்: ''கூர்ஸ்க் சமரை வென்றதன் மூலம் நடை முறையில் சோவியத் யூனியன் யுத்தத்தை வென்றது''.

பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் கூர்ஸ்க் சமரின் வரலாற்றை அடிக்கடி திரித்து கூறுகின்றனர். உதாரணமாக கூர்ஸ்க் அரை வட்டத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தாக்குதல் குறுகிய லட்சியங்களைத்தான் நோக்கமாகக் கொண்டிருந்தது, ''த்ஸித் தாதேல்'' நடவடிக்கையின் தோல்வியை போர்த்தந்திர முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதக் கூடாது என்ற ஆய்வு ஆதார மற்றது. இதைப் பற்றி மேற்கத்திய நாடுகளின் புறவய ரீதியான வரலாற்றாசிரியர்கள் என்ன கூறுகிறார்களென பார்ப்போம். அமெரிக்க வரலாற்றாசிரியர் கேய்டின் **''டைகர்கள்'' எரிகின்றன** என்ற தனது நூலில் கூர்ஸ்க் சமரை, ''வரலாற்றில் இது வரை நடைபெற்ற திலேயே மிகப்பெரும் தரைப்படை போர்'' என்று சித்தரித்தார். ''தாங்கள் ஏதோ எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கவில்லை என்ற ஜெர்மானிய கூற்றுகளை வரலாறு பெரிதும் சந்தேகிக்கிறது. எல்லாமே கூர்ஸ்க் அருகே தீர்மானிக்கப்பட்டது. அங்கே நடந்தது சம்பவங்களின் எதிர்காலப் போக்கை நிர்ணயித்தது''** என்று அவர் எழுதினார். இதே சிந்தனைதான் நூலைப் பற்றிய குறிப்புரை யிலும் பிரதிபலிக்கிறது. இதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்

* சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, தொகுதி 2, பக்கம் 76.

** M. Caidin, *The Tigers are Burning*, pp. 3, 8.

டிருந்தது: கூர்ஸ்க் அருகே நடந்த சமர் ''1943ஆம் ஆண்டு ஜெர்மானிய இராணுவத்தின் முதுகெலும்பை உடைத்து, இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கு முழுவதையுமே மாற்றியது... இந்த அதிர்ச்சியூட்டும் மோதலின் பயங்கரம் முழுவதையும் ருஷ்யாவிற்கு வெளியே ஒரு சிலர் மட்டுமே புரிந்து கொண்டனர். கூர்ஸ்க் அருகே அடைந்த ருஷ்ய பெருவெற்றியின் முக்கியத்துவத்தை மேலை நாடுகளின் வரலாற்றாசிரியர்கள் எப்படி குறைத்து மதிப்பிடுகின்றனர் என்பதை சோவியத் நாட்டினர் பார்ப்பதால் இன்று கூட நடைமுறையில் இவர்கள் துயரமடைகின்றனர்''.

கூர்ஸ்க் சமரில் ஜெர்மானிய இராணுவத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை? சோவியத் யூனியனின் மேன்மேலும் வலிமையடைந்து வந்த பொருளாதார, அரசியல், இராணுவ பலம், சோவியத் போர்க் கலையின் மேன்மை, சோவியத் படைவீரர்களின் பெரும் வீரம் மற்றும் ஆண்மை ஆகியவைதான் இக்காரணங்களாகும். சோவியத் யூனியன் மற்றும் இதன் இராணுவத்தின் வாய்ப்புகளை மதிப்பிடாததும் தனது வாய்ப்புகளை மிகைப்படுத்தி மதிப்பிட்டதும் பாசிச ஜெர்மனியின் போர்த்தந்திர அதிசாகசத்தின் சிறந்த வெளிப்பாடாக இருந்தன.

கூர்ஸ்க் அருகே அடையப்பட்ட மகத்தான வெற்றி, சோவியத் மக்களும் சோவியத் இராணுவமும் வெல்ல முடியாத சக்தியாகும் என்பதை இன்னுமொரு முறை மெய்ப்பித்தது. இராணுவத் திறமை, ஆயுதங்கள் மற்றும் போர்த்தந்திர தலைமையில் ஹிட்லரின் வேர்மஹ்டை விட செஞ்சேனை விஞ்சி நிற்பது உலகம் முழுவதற்கும் தெட்டத் தெளிவாயிற்று.

4. தினேப்பருக்கான சமர் (1943 ஆகஸ்டு — டிசம்பர்)

கூர்ஸ்க் அரைவட்டத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் அடைந்த படுதோல்வி சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் சக்திகளின் சமன்நிலையை சோவியத் இராணுவத்திற்கு ஆதரவாக மேலும் மாற்றியது. கூர்ஸ்க் சமரின் போது எதிரிக்கு பேரிழப்பு ஏற்பட்டது.

1943ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதி வாக்கில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் இருந்த 226 எதிரி டிவிஷன்களில் (26 டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட) மிகப் பெரும்பான்மையான டாங்கி டிவிஷன்களும் தரைப்படை டிவிஷன்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான டிவிஷன்களும் முந்தைய சண்டைகளினால் கணிசமான அளவு பலவீனமடைந்திருந்தன. எதிரியின் போக்குவரத்து மார்க்கங்கள் சோவியத் கொரில்லாப் படைவீரர்களின் இடையறாத் தாக்குதல்களுக்கு உள்ளாயின. போர்முனை முழுவதும்

தற்காப்பிற்கு மாறிச் செல்லுமாறு ஹிட்லரின் உயர்மட்ட படைத் தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது. உக்ரேனில், குறிப்பாக தன்பாஸில் எப்படியாவது தங்கியிருக்க பாசிசத் தலைமை முயன்றது. தன்பாஸையும் மத்திய உக்ரேனையும் விட்டுச் செல்வதானது மிக முக்கிய விமானத் தளங்களின் இழப்பிற்கு இட்டுச் செல்லும், உணவுப் பொருட்கள், நிலக்கரி, எரிபொருள், மற்ற மூலப்பொருட்களின் பெரும் பற்றுக்குறையை ஏற்படுத்தும் என்று பீல்ட்மார்ஷல் ஜெனரல் கைடல் குறிப்பிட்டான். வேலிஷ், பிரியான்ஸ்க், சுமி, வடக்கு தனேத்ஸ் ஆறு, மியூஸ் ஆறு ஆகிய எல்லைகளில் உறுதியாக நிற்குமாறு பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. ஆழத்தில் போர்த்தந்திர தற்காப்பு எல்லை—நார்வா ஆறு, ப்ஸ்கோவ், வித்தெப்ஸ்க், ஓர்ஷா, சோஷ், தினேப்பர் ஆற்றின் மத்தியப் பகுதி, மலோச்னயா ஆறு கோட்டில் ''கிழக்கு அரண்''—தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தினேப்பரின் உயரமான மேற்குக் கரையில் பலம் மிக்க அரண்களை அமைப்பதற்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பாசிஸ்டுகளின் கணிப்புகளின்படி இவை சோவியத் துருப்புகளுக்கு கடக்க முடியாத தடையாக மாற வேண்டும்.

ஆனால் சோவியத் இராணுவத்தின் பலத்த தாக்குதலை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. மாஸ்கோ, ஸ்டாலின்கிராத், கூர்ஸ்க் அருகே கிடைத்த வெற்றிகளால் ஊக்கமடைந்து, உள்நாட்டிலிருந்து உழைப்பாளிகள் இடையறாது அனுப்பிக் கொண்டிருந்த இராணுவத் தளவாடங்களைப் பயன்படுத்தி செஞ்சேனை தாக்குதலைத் தொடர்ந்தது, எதிரியை மூச்சுவிடாது மேற்கு நோக்கிப் பின்தள்ளியது.

கூர்ஸ்க் சமரின் போதே சோவியத் உயர்மட்டப் படைத் தலைமை, வெலீக்கியெ லூக்கிலிருந்து அஸோவ் கடல் வரை போர்முனையில் தாக்குதலைத் தொடுக்குமாறு கட்டளை பிறப்பித்தது. பிரதான அடி தென் மேற்குத் திசையில் கொடுக்கப்பட்டது. மத்திய சேனை (தளபதி ஜெனரல் ரக்கசோவ்ஸ்கிய்), வரோனிஷ் சேனை (தளபதி ஜெனரல் வதூதின்) மற்றும் ஸ்டெப்பி சேனை (தளபதி ஜெனரல் கோனெவ்) ஆகிய சேனைகளின் துருப்புகள் தினேப்பரின் மத்திய ஓட்டத்தை வந்தடையும் திசையில் நகர்ந்தன; தென் மேற்கு சேனை (தளபதி ஜெனரல் மலினோவ்ஸ்கிய்) மற்றும் தெற்கு சேனையின் (தளபதி ஜெனரல் தல்பூகின்) துருப்புகள் தினேப்பரின் கீழ் ஓட்டம், கிரீமியாவை நோக்கிச் சென்றன. இதன் பின் துருப்புகள் போகிற போக்கில் தினேப்பரைக் கடந்து இதன் மேற்குக் கரையில் இருந்த தாக்குமுனைகளைக் கைப்பற்ற வேண்டும். சோவியத் துருப்புகளின் படைத் திரட்டில் 2,633,000 ஆட்களிருந்தனர்,

51,200க்கும் கூடுதலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 2,400க்கும் கூடுதலான டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகள், 2,850 போர் விமானங்கள் ஆகியன இருந்தன. அதே நேரத்தில் மேற்கு சேனையும் (தளபதி ஜெனரல் சக்கலோவ்ஸ்கிய்) கலீனின் சேனையின் இடப் பிரிவும் (தளபதி ஜெனரல் யெரியோமின்கோ) ஸ்மலேன்ஸ்க் திசையில் தாக்குதலைத் தொடுத்து இதன் மூலம் போர்முனையின் இந்த இடத்திலிருந்து எதிரி சக்திகளை தெற்கே கொண்டு செல்லாதவாறு செய்ய வேண்டும். அஸோவ் கடலின் வடக்கு கரையோரத்தில் இறக்குப் படையினரை இறக்குவதன் மூலம் அஸோவ் ப்ளீட் தெற்கே தரைப்படைகளின் தாக்குதலுக்கு உதவ வேண்டும். கொரில்லா படைவீரர்கள் எதிரியின் உட்பரப்பில் பரவலாக போராட்டத்தை நடத்தி, எதிரியினுடைய போக்குவரத்து மார்க்கங்களைத் தாக்கி, தம் துருப்புகள் தினேப்பர் ஆற்றைக் கடக்க உதவ வேண்டியிருந்தது.

பிரதான தாக்குதல் திசையில் இயங்கிய சோவியத் துருப்புகளை பாசிஸ்டுகளின் பலத்த படைத் திரட்டு எதிர்த்து நின்றது. இதில் ''சென்டர்'' (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் குளுகே) படைத் தொகுதியைச் சேர்ந்த 2வது பாசிச ஜெர்மானியப் படை, ''தெற்கு'' (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் மன்ஷ்டைன்) படைத் தொகுதியைச் சேர்ந்த 4வது டாங்கி, 8வது, 1வது டாங்கி மற்றும் 6வது படைகள் இருந்தன. இவற்றில் 14 டாங்கி, மோட்டார் டிவிஷன்கள் உட்பட மொத்தம் 62 டிவிஷன்கள் அடங்கியிருந்தன. இந்தப் படைத் திரட்டில் மொத்தமாக 12,40,000 ஆட்களிருந்தனர், 12,600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 2,100 டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகள், 2,100 போர் விமானங்கள் இருந்தன. சோவியத் துருப்புகள் ஆட்களில் 2.1 மடங்கும் பீரங்கிகளில் 4 மடங்கும் டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 1.1 மடங்கும் விமானங்களில் 1.4 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன.

மத்திய சேனையின் துருப்புகள் தொடுத்த தாக்குதலுடன் ஆகஸ்டு 26ஆம் தேதி தினேப்பருக்கான சமர் ஆரம்பமாகியது. சேவ்ஸ்க், நோவ்கரத்-சேவெர்ஸ்கிய் திசையில் முக்கிய அடி கொடுக்கப்பட்டது. சேவ்ஸ்க் பிரதேசத்தில் பெரும் சக்திகளை வைத்திருந்த எதிரியின் பலத்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நான்கு நாட்கள் நீடித்த கடுமையான சண்டைகளுக்குப் பின் சோவியத் துருப்புகளால் எதிரியை 20—25 கி. மீ. தூரம் மட்டுமே பின்னுக்குத் தள்ள முடிந்தது. கனதோப் திசையில் தாக்குதலைத் தொடர்ந்த இவை 60 கி. மீ. தூரம் முன்னேறி பிளந்து செல்லும் போர்முனையை 100 கி. மீ. தூரம் விரிவுபடுத்தின. பாசிச ஜெர்மானியத் துருப்பு

கள் தெஸ்னு மற்றும் தினேப்பர் ஆறுகளுக்குப் பின்னுல் பின்வாங்கத் துவங்கின. போகிற போக்கில் தெஸ்னு ஆற்றைக் கடந்த மத்திய சேனையின் துருப்புகள் செப்டெம்பர் 20 தேதிகள் வாக்கில் கோமெல் — யாஸ்னகரோத்கா பிரதேசத்தில் சோஷ் மற்றும் தினேப்பர் ஆறுகளை அடைந்தன.

வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகளின் மண்டலங்களிலும் சோவியத் துருப்புகளின் தாக்குதல் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. பல்தாவா — கிரெமென்சூக் திசையில் தாக்குதல் தொடுத்த வரோனிஷ் சேனையின் பிரதான சக்திகள் எதிரியின் பலத்த எதிர்ப்பைச் சமாளித்து, இடைவிடாது மேற்கு நோக்கி முன்னேறின. செப்டெம்பர் 2ஆம் தேதி சுமி நகரைக் கைப்பற்றிய இவை கீவ் நகரை நோக்கிய திசையில் தாக்குதலைத் தொடர்ந்தன. அதே நேரத்தில் ஸ்டெப்பி சேனையின் துருப்புகள் கிராஸ்னகிராத், வெர்ஹ்னே-தினெப்ரோவ்ஸ்க் நோக்கி முன்னேறின.

செப்டெம்பர் துவக்கத்தில் வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகளின் முக்கியச் சக்திகள் கீவ், கிரெமென்சூக் திசைகளில் ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தன. வோர்ஸ்க்லா, ப்ஸோல், ஹோரோல் ஆறுகளில் முன்னரே தயாரிக்கப்பட்ட எல்லைகளில் சோவியத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த பாசிச ஜெர்மானியத் துருப்புகள் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன. தாக்குதலைத் தொடர்ந்த ஸ்டெப்பி சேனையின் துருப்புகள் செப்டெம்பர் 23இல் பல்தாவாவைக் கைப்பற்றி கிரெமென்சூக்கிற்கு தென் கிழக்கே தினேப்பர் ஆற்றை அடைந்தன. இதற்கு முன் செப்டெம்பர் 22இல் வரோனிஷ் சேனையின் துருப்புகள் பெரியஸ்லாவ்-ஹ்மேல்நித்ஸ்கிய் பிரதேசத்தில் தினேப்பரை அடைந்தன, செப்டெம்பர் 28இல் இவை தார்னித்ஸா பிரதேசத்தில் (கீவின் புறநகர் பகுதி) தினேப்பர் ஆற்றின் கரையை நெருங்கின.

கிழக்குக் கரையோர உக்ரேனை விடுவித்த அதே நேரத்தில் செஞ்சேனை தன்பாஸில் பரவலான தாக்குதலைத் தொடுத்தது. ஜெர்மனியின் இராணுவப் பொருளாதாரத்திற்கு தேவையான எரிபொருள் கிடைக்கும் பிரதேசம் என்ற வகையில் பாசிசத் தலைமை தன்பாசிற்கு முதல் முக்கியத்துவம் அளித்தது. மியூஸ் ஆற்றில் பல படை வரிசைகளையுடைய தற்காப்பு எல்லை உருவாக்கப்பட்டது; எந்த விலை கொடுத்தாவது இந்த எல்லையைக் காத்து நின்று தன்பாசை ஹிட்லர் ரைஹிற்காக வைத்திருக்குமாறு பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு கட்டளையிடப்பட்டது.

தன்பாசை விடுவிக்கும் கடமையை சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை தென் மேற்கு மற்றும் தெற்கு சேனைகளுக்கு (தளபதிகள் ஜெனரல் மலிநோவ்ஸ்கிய், ஜெனரல் தல்பூ

கின்) அளித்தது. கூர்ஸ்க் சமரின் போதே இரு சேனைகளும் தன் பாசை எதிரியிடமிருந்து மீட்பதில் இறங்கின. தென் மேற்கு சேனை வடக்கு தனேத்சைக் கடந்து, இதன் மேற்குக் கரையில் இஸ்யூம் பிரதேசத்தில் தாக்குமுனையை விரிவுபடுத்தியது; இது எதிரியின் கணிசமான சக்திகளைக் கட்டிப் போட்டு, மியூஸ் எல்லையில் படைத் திரட்டை வலுப்படுத்த எதிரிக்கு வாய்ப்பளிக்காமலிருந்தது. அதே நேரத்தில் ஆகஸ்டு 18ஆம் தேதி உறுதியான தாக்குதலைத் துவங்கிய தெற்கு சேனையின் துருப்புகள் குறுகிய காலகட்டத்திலேயே எதிரியின் தற்காப்பைப் பிளந்து கொண்டு மொபைல் யூனிட்டுகளோடு கூட எதிரியின் பின்னணியை நோக்கிப் பாய்ந்தன. செப்டெம்பர் துவக்கத்திலிருந்து எதிரி தன் துருப்புகளை தன்பாசிலிருந்து வெளியேற்றும் கட்டாயத்திற்கு உள்ளானான். ஆகஸ்டு 30ஆம் தேதி சோவியத் துருப்புகள் தகன்ரோக்கைக் கைப்பற்றின, செப்டெம்பர் 8ஆம் தேதி தன்பாசின் தலை நகரமாகிய ஸ்தாலினோ நகரம் (இப்போது இது தோனெத்ஸ்க் என்றழைக்கப்படுகிறது) விடுவிக்கப்பட்டது.

செப்டெம்பரின் ஆரம்பத்தில் தென் மேற்கு சேனையின் தாக்குதல் மீண்டும் துவங்கியது. இதன் விளைவாய் இத்துருப்புகள் தினெப்ரபெத்ரோவ்ஸ்க் பிரதேசத்தில் தினேப்பரை நோக்கி பிளந்து கொண்டு சென்றன, ஸபரோஷ்யேவை மிகு நெருங்கி வந்தன. மலோச்னயா ஆற்றின் ஓரமாக அஸோவ் கடல் வரை தெற்கு சேனையின் எல்லை நகர்ந்தது.

இவ்வாறாக செப்டெம்பர் இறுதியில் செஞ்சேனை, லோயெவிலிருந்து ஸபரோஷ்யே வரை 750 கி.மீ. நீளமுடைய பெரும் போர்முனையில் தினேப்பரை நெருங்கியது. தினேப்பர் ஆற்றைக் கடந்து மேற்குக் கரையோர உக்ரேனில் எதிரியை முறியடிக்க வேண்டியிருந்தது.

சோவியத் துருப்புகளின் முனைப்பான தாக்குதல், புதிய சேமப் படைகளை கிழக்குப் போர்முனைக்கு அனுப்புமாறு ஹிட்லர் படைத் தலைமையைக் கட்டாயப்படுத்தியது. சேமப் படைகளைத் தேடிய பாசிசத் தலைமை, முதலாவதாக டாங்கி யூனிட்டுகளை சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்கு அனுப்புவதற்காக தெற்கு இத்தாலியிலிருந்து துருப்புகளைத் திருப்பியழைப்பதென முடிவு செய்தது. இவ்வாறாக சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் சோவியத் இராணுவத்தின் தாக்குதல் இத்தாலியில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் வெற்றிகரமாக முன்னேற உதவியது. முஸ்ஸோலீனியின் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின் இவை இத்தாலியில் இறங்கின.

கிழக்குப் போர்முனைக்கு வந்த ஜெர்மானியத் துருப்புகள் உடனே

உக்ரேன் நோக்கிச் சென்றன. இங்கே தினேப்பரின் மேற்கு கரையில் கோமெலுக்கும் ஸபரோஷ்யேவிற்கும் இடையே இரண்டு டாங்கிப் படைகள் உட்பட ஐந்து பாசிச ஜெர்மானியப் படைகள் தற்காத்து நின்றன. மலோச்னுயா ஆற்றில் இரு ஜெர்மானியப் படைகளும் ஒரு ருமேனியப் படையும் தற்காப்பு நிலையில் இருந்தன.

பெரும் கடினமான கடமை சோவியத் துருப்புகளின் முன் நின்றது. தினேப்பர் ஆற்றை அடைந்த யூனிட்டுகளில் பெரும்பாலானவை நீண்டகால சண்டைகளால் அலைக்கழிக்கப்பட்டிருந்தன; பின்னணிகள் பின்தங்கிப் போயிருந்தன, ஆயுதத் தளவாடங்களில் பற்றுக்குறை உணரப்பட்டது. பரந்து கிடந்த நீர் தடையைக் கடந்து தினேப்பரின் உயரமான மேற்குக் கரையில் எதிரியின் பலம் வாய்ந்த தற்காப்பு எல்லையை இவை பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

செப்டெம்பர் 22ஆம் தேதி மினேவோ (கீவ் நகரத்துக்கு வடக்கே) பிரதேசத்தில் கொரில்லாப் படைவீரர்களின் உதவியோடு மத்திய சேனையின் முன்னணிப் பிரிவுகளும் மறு நாள் பிரதான சக்திகளும் தினேப்பரைக் கடந்தன. சோவியத் துருப்புகளை தினேப்பர் ஆற்றில் தள்ளுவதற்காக ஹிட்லர் படைகள் மேற்கொண்ட மூர்க்கத்தனமான எதிர்த்தாக்குதல்கள் வெற்றியடையவில்லை. செப்டெம்பர் இறுதியில் இச்சேனையின் துருப்புகள் ஆற்றின் மேற்குக் கரையில் 90 கி. மீ. நீளமுள்ள தாக்குமுனைகளில் உறுதியாக நின்று, இத்திசையில் மேற்கொண்டு தாக்குதலைத் தொடுப்பதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன. வரோனிஷ் சேனையின் துருப்புகளும் அக்டோபர் 16ஆம் தேதி தினேப்பரைக் கடந்தன. கைவசமிருந்த சாதனங்களை—இவற்றில் பெரும்பகுதி கொரில்லாப் படைவீரர்களால் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டிருந்தது—திறமையாகப் பயன்படுத்திய சோவியத் போர்வீரர்கள், வெலீக்கிய் புக்ரீன் பிரதேசத்தில் கீவ் நகரத்துக்குத் தென் கிழக்கே தாக்குமுனையைக் கைப்பற்றி மாத இறுதியில் கடுமையான சண்டைகளில் இதை 11 கி. மீ. நீளத்திற்கும் 6 கி. மீ. ஆழத்திற்கும் விரிவுபடுத்தினர்.

லியூதெஷ் (கீவ் நகரத்துக்கு வடக்கே) பிரதேசத்தில் இன்னுமொரு தாக்குமுனை செப்டெம்பர் இறுதியில் வரோனிஷ் சேனையின் துருப்புகளால் பிடிக்கப்பட்டது. அக்டோபர் 10 வாக்கில் இது 15 கி. மீ. நீளத்திற்கும் 10 கி. மீ. வரை ஆழத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது.

செப்டெம்பர் 25—30 தேதிகளில் கிரெமென்சூக்-தினெப்ரபெத்ரோவ்ஸ்க் பிரதேசத்தில் ஸ்டெப்பி சேனையின் துருப்புகள் தினேப்பரைக் கடந்தன. முதல் நாளிலேயே ஒரு சில தாக்குமுனைகளைக் கைப்பற்றிய சோவியத் போர்வீரர்கள் கடுமையான குண்டு

மழையின் கீழ், எதிரியின் இடையறு எதிர்த்தாக்குதல்களைப் பொருட் படுத்தாது தாங்கள் கைப்பற்றிய தாக்குமுனைகளை 25 கி. மீ. நீளமும் 15 கி. மீ. வரை ஆழமும் உடைய ஒரே தாக்குமுனையாக ஒன்றிணைத் தனர்.

தென் மேற்கு சேனையின் துருப்புகள் செப்டெம்பர் இறுதியில் தினெப்ரபெத்ரோவ்ஸ்கிற்குத் தெற்கே தினேப்பரைக் கடந்து. ஜெர்மானியர்களின் ஸபரோஷ்யே தாக்குமுனையை ஒழித்துக் கட்டு வதற்காக அங்கே போரிட்டன.

இவ்வாறாக மத்திய, வரோனிஷ், ஸ்டெப்பி மற்றும் தென் மேற்கு சேனைகளின் துருப்புகள் தினேப்பர் ஆற்றை வெற்றிகர மாகக் கடந்ததன் விளைவாய் தினேப்பரில் எதிரியின் தற்காப்பு— ''கிழக்கு அரணின்'' மிகவும் பலப்படுத்தப்பட்ட இப்பிரதேசம்— பிளக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது, தினேப்பரில் தனது தற்காப் பைப் புனரமைப்பதற்காக எதிரி தொடுத்த மூர்க்கத்தனமான பதிலடிகளை (குறிப்பாக கீவ் பிரதேசத்தில்) சோவியத் துருப்புகள் முறியடிக்க வேண்டியிருந்தது. நவம்பர் 6ஆம் தேதி கீவ் நகரம் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட் டது. கரஸ்தேன், ஷித்தாமிர், ஃபாஸ்தவ் ஆகிய இடங்களை நோக்கி தாக்குதலைத் தொடர்ந்த முதலாவது உக்ரேனிய சேனையின் துருப்பு கள் 150 கி. மீ. தூரம் வரை முன்னேறி மேற்குக் கரையோர உக்ரேனில் கீவ் போர்த்தந்திர தாக்குமுனையை ஏற்படுத்தின. இந்தத் தாக்குமுனையை ஒழித்துக் கட்டி மீண்டும் கீவ் நகரத்தைப் பிடிப் பதற்காக 1943ஆம் ஆண்டு நவம்பரின் இரண்டாம் பகுதியிலும் டிசம்பரிலும் பாசிசப் படைத் தலைமை மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. கடுமையான தற்காப்புச் சண்டைகளில் சோவியத் துருப்புகள் எதிரியின் எதிர்த்தாக்குதலை முறியடித்தன.

உக்ரேனின் தெற்கிலும்—கீரவகிராத், கிரிவோய் ரோக் திசை களிலும் தினேப்பர் ஆற்றின் கீழ்ப்பகுதிகளிலும்—கடுமையான சண்டைகள் மூண்டன. 3 மாத சண்டைகளின் போது 2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள் எதிரியின் ஸபரோஷ்யே தலைப்பால தாக்குமுனையை ஒழித்தன, ஸபரோஷ்யே, தினெப்ர பெத்ரோவ்ஸ்க் ஆகிய நகரங்களை விடுவித்தன, தினேப்பருக்குப் பின் 450 கி. மீ. நீளமும் 100 கி. மீ. வரை ஆழமும் உடைய இரண்டாவது பெரிய போர்த்தந்திர தாக்குமுனையை உருவாக்கின.

4வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் இந்நேரத்தில் மலோச் ஞயா ஆற்றில் எதிரியின் தற்காப்பை பிளந்து சென்றன, மெலி தோபலை விடுவித்தன, கிட்டத்தட்ட தினேப்பர் ஆற்றின் கீழ்ப்பகுதி முழுவதிலுமிருந்து எதிரிகளை விரட்டியடித்தன, எதிரியை கிரீமியா

வில் சுற்றி வளைத்தன. தினேப்பர் ஆற்றுக்கான சமரின் போது சோவியத் போர்வீரர்கள் தமது உயர்வான தார்மீக-போர்க் குணங்களை—தைரியம், உறுதி, தாக்கு வேகம் முதலானவற்றை—இன்னுமொரு முறை வெளிப்படுத்தினர். இந்தச் சமர் வரலாற்றில் சோவியத் போர்வீரர்களின் உயர்ந்த திறமை, இவர்கள் காட்டிய பெரும் வீரம் ஆகியவற்றிற்கு பல உதாரணங்களை விட்டுச் சென்றது.

தினேப்பர் ஆற்றிற்கான சமரில் தரைப்படைகளுக்கு விமானப் படை உதவி புரிந்தது. செப்டெம்பரில் மட்டும் இது 90,000க்கும் மேற்பட்ட விமானப் பறத்தல்களை நடத்தி தனது படைகள் தினேப் பரைக் கடக்க உதவியது, எதிரியின் மீது 9,570 டன் விமானக் குண்டுகளை வீசியது, 55,000க்கும் கூடுதலான ஜெட் குண்டுகளை போட்டது. நாட்டின் வான் பாதுகாப்பு துருப்புகள் போர்முனைக் கருகே இருந்த தொடர்பு மார்க்கங்களையும் தினேப்பர் ஆற்றின் மீதான கடக்கும் வழிகளையும் மூடிப் பாதுகாத்தன. அஸோவ் ப்ளீட் அஸோவ் கடலின் வட கரையோரமாக தரையிறக்குப் படையினரை இறக்கியது.

தினேப்பருக்கான சமரின் போது சோவியத் துருப்புகள் எதிரியி னுடைய ''தெற்கு'' படைத் தொகுதியின் பிரதான சக்திகளுக்கும் ''சென்டர்'' படைத் தொகுதியின் ஒரு பகுதிக்கும் பெருந் தோல் வியை ஏற்படுத்தின, 160 நகரங்கள் உட்பட 38,000க்கும் அதிக மான குடியிருப்புப் பகுதிகளை விடுவித்தன.

பாலங்களை அமைத்தல், கடக்கும் வழிகளை ஏற்படுத்துதல் ஆகிய வற்றில் கொரில்லாப் படைவீரர்களும் உக்ரேனிய மக்களும் சோவியத் போர்வீரர்களுக்கு பெரிதும் உதவினர். சோவியத் துருப்புகள் தினேப்பரை நெருங்கிய போது உக்ரேனிய கொரில்லாப் படைவீரர் கள் மட்டும் தினேப்பர் மீதான 12 கடக்கும் வழிகளையும் பிரிபி யாத் மீது 10 கடக்கும் வழிகளையும் தெஸ்னு மீது 3 கடக்கும் வழிகளையும் கைப்பற்றி இத்துருப்புகளுக்காகப் பாதுகாத்து வைத் திருந்தனர்.

தினேப்பருக்கான சமரின் போது செஞ்சேனை தினேப்பர் ஆற்றில் உறுதியான தற்காப்பை ஏற்படுத்தும் ஹிட்லர் படைத் தலைமையின் திட்டத்தைச் சீர்குலைத்தது, எதிரிக்கு பெரும் ஆட்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது, மேற்குக் கரையோர உக் ரேன் முழுவதையும் முற்றிலுமாக விடுவித்து மேற்கு உக்ரேனையும் தெற்கு போலந்தையும் அடைவதற்கான சூழ்நிலைகளைத் தோற்று வித்தது. உக்ரேனின் செல்வங் கொழிக்கும் விவசாயப் பிரதேசங் களும் நாட்டின் மிக முக்கிய தொழிற்துறை, எரிபொருள் மைய மாகிய தன்பாசும் தாயகத்திற்கு திருப்பிப் பெற்றுத்தரப்பட்டன.

யுத்தத்தின் போக்கில் அடிப்படை மாற்றம் முற்றிலுமாக நிறைவேறியது.

தினேப்பருக்கான சமரில் சோவியத் போர்க் கலே மேற்கொண்டு வளர்ச்சியடைந்தது. தாக்குதலேத் தயார்படுத்தி உயர்வான வேகத்தில் இதை நடத்துதல், சேனைகளுக்கு இடையே திட்டவட்டமான பரஸ்பர செயலாக்கத்திற்கு ஏற்பாடு செய்தல், போர்த்தந்திர சேமப் படைகளேப் பயன்படுத்தல், ஆழத்தில் முனேப்பான செயல்களே அதிகப்படுத்தல் ஆகியவை சம்பந்தமான அனுபவத்தால் இது செழுமை அடைந்தது. திட்டமிட்டு தயார்படுத்தியும் போகிற போக்கிலும் சோவியத் இராணுவம் பெரும் நீர் தடைகளேத் திறமையாகக் கடந்தது. பீரங்கிகள், விமானப்படையை பெருமளவில் பயன்படுத்துதல், கண்ணி வெடித் தடைகளே திறமையாக அமைத்தல், இரவு நேர இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து அவற்றை நடத்துதல், ஒரு இயங்கு திசையிலிருந்து இன்னொரு திசைக்கு துருப்புகளே இடம் மாற்றுதல் ஆகியவற்றின் மூலம் எதிரியின் பதிலடிகளே முறியடிப்பதில் நல்ல அனுபவம் அடையப் பட்டது.

அக்டோபர் துவக்கத்தில் சோவியத் துருப்புகள் வித்தெப்ஸ்க், ஓர்ஷா, மொகிலோவ், கோமெல்—பப்ரூய்ஸ்க் திசைகளில் தாக்குதல்களேத் திரும்பவும் துவங்கி ஆண்டு இறுதியில் பெலோருஷ்யாவின் பல கிழக்கத்தியப் பிரதேசங்களே விடுவித்தன.

1943ஆம் ஆண்டு செஞ்சேனேயின் பலம் மிக்க கோடைக்கால—இலேயுதிர்கால நடவடிக்கை கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் நீடித்தது. இது அற்புதமான வெற்றிகளுடன் முடிவடைந்தது.

5. வடக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும் 1942 — 1943இல் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள்

ஏல்-அலாய்மென் நடவடிக்கை (1942 அக்டோபர் 23—நவம்பர் 4)

1942 அக்டோபர் இறுதி வாக்கில் "ஆப்பிரிக்கா" எனும் ஜெர்மானிய-இத்தாலிய டாங்கிப் படையின் யூனிட்டுகள் பீல்ட்மார்ஷல் ஜெனரல் ரோம்மலின் தலேமையின் கீழ் ஏல்-அலாய்மெனுக்கு தென்மேற்கே 60 கி.மீ. நீள தற்காப்பு எல்லேக் கோட்டை உருவாக்கியிருந்தன. இதன் வட கோடி மத்திய தரைக் கடலேயும் தென் கோடி, செல்லக் கடினமான கட்டார் பள்ளத்தையும் தொட்டுக் கொண்டிருந்தன. தற்காப்பு அங்குமிங்குமானதாக இருந்தது. ஆதார நிலேயங்களும் எதிர்ப்பு மையங்களும் இதன் அடிப்படையாக விளங்

கின. இராணுவ பாதுகாப்பு நிலைகள், முக்கிய மற்றும் இரண்டாவது மண்டலங்கள் இதில் அடங்கியிருந்தன. முன்னணி எல்லைக் கருகே கண்ணி வெடிகள் வைக்கப்பட்டிருந்தன, முள் வேலிகள் போடப்பட்டிருந்தன. தயார்படுத்தப்பட்ட தற்காப்பின் மொத்த ஆழம் 15—20 கி.மீ. ஆக இருந்தாலும் துருப்புகள் பிரதான மண்டலத்தில் மட்டுமே இருந்தன.

ரோம்மலிடம் 4 ஜெர்மானிய, 8 இத்தாலிய டிவிஷன்கள் இருந்தன. இவற்றில் சுமாராக 80,000 ஆட்கள் இருந்தனர், 540 டாங்கிகளும் 1,219 பீரங்கிகளும் 350 விமானங்களும் இருந்தன.

எகிப்துப் பிரதேசத்தில் நேச நாடுகளின் துருப்புகள் அனைத்தையும் ஒன்றிணைத்து நின்ற 8வது பிரிட்டிஷ் படையில் (தளபதி ஜெனரல் மொன்ட்கமேரி) 10 டிவிஷன்களும் 4 தனி பிரிகேடுகளும் அடங்கியிருந்தன. இவற்றில் மொத்தமாக 2,30,000 ஆட்கள் இருந்தனர், 1,440 டாங்கிகளும் 2,311 பீரங்கிகளும் 1,500 விமானங்களும் இருந்தன.* எனவே 8வது படை ஆட்களில் 2.8 மடங்கும் டாங்கிகளில் 2.6 மடங்கும் பீரங்கிகளில் 1.9 மடங்கும் விமானங்களில் 4.2 மடங்கும் ஜெர்மானிய-இத்தாலியத் துருப்புகளை விஞ்சி நின்றது. இத்தகையதொரு மேன்மை, தாக்குதல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்த நேச நாடுகளுக்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது.

பாலைநிலப் பள்ளத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் இடது பக்கவாட்டில் எதிரியின் சக்திகளைக் கட்டிப் போட்டு, ஏல்-அலாய் மெனுக்கு தென் மேற்கேயுள்ள பிரதேசத்திலிருந்து சதி-ஹமீத் திசையில் வலப்புறக் கடல் பகுதி மீது பிரதான தாக்குதலைத் தொடுப்பது, தற்காப்பைப் பிளந்து, ஜெர்மானிய-இத்தாலியத் துருப்புகளின் கடற்பகுதி படைத் திரட்டை மத்திய தரைக் கடல் கரையோரமாகத் தள்ளி ஒழித்துக் கட்டுவது என்று திட்டமிடப்பட்டது.

நடவடிக்கையைத் தயார்ப்படுத்தி வரும் போது திடீரென இதை நடத்துவதன் மீது பிரிட்டிஷ் படைத் தலைமை விசேஷக் கவனம் செலுத்தியது. இந்நோக்கத்தோடு இது உருமாற்றம் மற்றும் எதிரிக்குத் தவறான தகவல்களைத் தருவது சம்பந்தமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவற்றின் சாரம் இதுதான்:

பாலைவனப் பரப்பில் தாக்குதலுக்கான துருப்புகளின் தயாரிப்பை மூடி மறைப்பது கடினம் என்பதைக் கவனத்தில் கொண்ட நேச நாடுகளின் படைத் தலைமை, பிரதான தாக்குதலின் திசை மற்றும்

---

* 8வது படையில் பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, இந்திய, நியூஜீலாந்து, தென் ஆப்பிரிக்க, கிரேக்க, பிரெஞ்சு டிவிஷன்களும் பிரிகேடுகளும் அடங்கியிருந்தன.

தாக்குதல் துவங்கும் நேரம் சம்பந்தமாக எதிரியைக் குழப்பத்தில் ஆழ்த்துவதன் மீது தனது முக்கியக் கவனத்தைச் செலுத்தியது. இந்நோக்கத்தோடு பின்னணியில், இரண்டாம் பட்சமான திசையில், 8வது படையின் இடது பக்கவாட்டில் டாங்கி துருப்புகள் குவிக்கப்படுவதைப் போன்று பாவனை செய்யப்பட்டது; எரிபொருள் கிடங்குகளின் மாதிரிகள், குழாய்கள், மற்ற பொய்யான அமைப்புகள் எழுப்பப்பட்டன. இவ்வாறு வேஷம் போட்டது தனது நோக்கத்தை நிறைவேற்றியது. ஜெர்மானிய-இத்தாலிய படைத் தலைமை தனது சேமப் படைகளில் பாதியை—இரண்டு டாங்கி டிவிஷன்களை—இப்போர்முனையின் தென் பிரிவில் கொண்டு வந்து குவித்தது.

அக்டோபர் 20 முதல் 23 வரை பிரிட்டிஷ் விமானங்கள் இத்தாலிய-ஜெர்மானிய துருப்புகள் குவிக்கப்பட்டிருந்த பிரதேசங்கள் மீதும் விமானத் தளங்கள் மீதும் குண்டுகளை வீசி தீவிரப் பூர்வாங்க விமானப்படைத் தாக்குதலை நிறைவேற்றியது.

அக்டோபர் 23ஆம் தேதி இரவு 9 மணி 40 நிமிடத்திற்கு பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதல் துவங்கியது. ஒரு கி. மீ. போர் முனையில் 50 பீரங்கிகள் குவிக்கப்பட்டிருந்தன. இந்தத் தாக்குதல் 20 நிமிடம் நீடித்தது. இதன் பயன் அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை; எதிரியின் பீரங்கிகள் ஒடுக்கப்படவில்லை.

பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதலுக்குப் பின் நேச நாடுகளின் 30வது கோர்பசின் காலாட்படை டிவிஷன்கள் இடையறு பீரங்கி குண்டு வீச்சின் ஆதரவோடு கூட தாக்குதலில் இறங்கின. இரவு நேரத்தில், போதுமான அளவு திசையமைவுகள் இல்லாத பாலைவனப் பிரதேசங்களில் சரியான திசையில் முன் செல்வதற்காக பிரிகேடுகளைப் பிரிக்கும் இடைவெளிகள் வழியே விமான எதிர்ப்பு பீரங்கிகளைக் கொண்டு பீறிட்டுக் கொண்டு செல்லும் புகைத் தடம் ஏற்படுத்தப்பட்டது.

இது தவிர ஸ்பாட்லைட்டுகளால் ஒளிர்விக்கப்படும் நகரும் கோபுரங்கள் திசையமைவுகளாகப் பயன்படுத்தப்பட்டன. கண்ணி வெடி வயல்களின் ஊடேயான வழிகள் எரியும் எண்ணெயுடன் கூடிய குவளைகளால் அடையாளம் இடப்பட்டிருந்தன.

அடுத்த நாள் காலை வாக்கில் நேச நாட்டுத் துருப்புகளால் எதிரியின் தற்காப்பினுள் ஓரளவுதான் புக முடிந்தது. மேற்கொண்டு இந்தப் பிளவு தற்காப்பை மெதுவாக ''அரித்து'' செல்வதாக மாறியது. எனவே அக்டோபர் 24இலேயே 8வது படையின் தளபதி ஜெனரல் மொன்ட்கமேரி, திட்டத்தின்படி வெற்றியைத் தொடருவதற்காக வைக்கப்பட்டிருந்த தனது இரண்டாவது படை வரிசையை (10வது கோர்பஸ்) சமரில் ஈடுபடுத்தினார். ஆனால் இதுவும் எதிர்பார்த்த பயன்களைத் தரவில்லை. அடுத்த மூன்று நாட்களில் 10வது,

30வது கோர்பஸ்களின் படைப்பிரிவுகள் 3—5 கி. மீ. ஆழத்திற்கு மட்டுமே முன்னேறின. மேலும் தெற்குப் பக்கவாட்டில் பிரிட்டிஷ் படைகள் கவனத்தைத் திருப்பும் தாக்குதலில் மட்டுமே ஈடு பட்டுள்ளன என்பதை உணர்ந்து கொண்ட ஜெர்மானிய-இத்தாலிய படைத் தலைமை அங்கிருந்து நேச நாட்டுத் துருப்புகளின் பிரதான தாக்குதல் திசைக்கு தனது டாங்கிப் படைப்பிரிவுகளை மாற்றியது.

தாக்குதலைத் தற்காலிகமாக நிறுத்துவது என்றும் ஆட்களைச் சேர்ப்பதற்காகவும் போர்த் தளவாடங்களை அளிப்பதற்காகவும் 10வது கோர்பசையும் 30வது கோர்பசின் நியூஜீலாந்து காலாட் படை டிவிஷனையும் போர்க்களத்திலிருந்து வெளியே கொண்டு வருவது என்றும் மொன்ட்கமேரி முடிவு செய்தார். அக்டோபர் 27 முதல் நவம்பர் 1 வரை துருப்புகளை பின்னணிக்கு அனுப்பி இட்டு நிரப்புவது பூர்த்தியடைந்தது.

இதனிடையே கடலோரப் பகுதியில் நேச நாட்டுத் துருப்புகள் எதிரியின் ஒரு சில பட்டாலியன்களைச் சுற்றி வளைத்து எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்லும் அபாயத்தை ஏற்படுத்தின. தனது கடைசி சேமப் படையாகிய டாங்கி டிவிஷனை உடனடியாக இங்கே அனுப்புமாறு இது ரோம்மலைக் கட்டாயப்படுத்தியது.

சக்திகளை மறுசீரமைத்த பின் 8வது படையின் துருப்புகள் பிரதான தாக்குதல் திசையில் தாக்குதலை திரும்பவும் துவங்கின. 4 மணி நேர பூர்வாங்கப் பீரங்கிப்படைத் தாக்குதலுக்குப் பின் கடற்படை பீரங்கிகளின் ஆதரவோடு வானில் பிரிட்டிஷ் விமானங் கள் முழு ஆதிக்கம் செலுத்த தாக்குதல் துவங்கியது. ஆனால் 8வது படையால் வெற்றியை அடைய இயலவில்லை. ஜெர்மானியர்கள் டாங்கி எதிர்த்தாக்குதலைத் தொடுத்தனர். இது முறியடிக்கப்பட் டாலும் பிரதானத் தாக்குதல் திசையில் எதிரியின் தற்காப்பை முழுமையாகப் பிளக்க ஆங்கிலேயர்களால் இயலவில்லை. தெற்கே தான்—அதாவது 4வது இந்திய காலாட்படை டிவிஷனின் (இது நவம்பர் 4 காலை வாக்கில் 8 கி. மீ. தூரம் முன்னேறியிருந்தது) தாக்குதல் மண்டலத்தில்—எதிரியின் தற்காப்பில் பிளவு ஒன்று ஏற்பட்டது. நேசநாட்டுத் துருப்புகளின் பிரதான சக்திகள் இதைப் பயன்படுத்திக் கொண்டன. இவை ஜெர்மானியத் துருப்புகளின் கடலோரப் படைத் திரட்டின் வலப் புறத்தை சுற்றிச் சென்று இப்பிளவை நோக்கி முனைப்போடு சென்றன. தனது துருப்புகளைக் காப்பாற்றுவதற்காக ரோம்மல் எகிப்திலிருந்து பின்வாங்குமாறு கட்டளையிட்டான்; இதற்காக அவன் இத்தாலியர்களிடமிருந்த வாகனப் போக்குவரத்து அனைத்தையும் பறித்தான். ஜெர்மானி யர்களால் விதியின் கரங்களில் தூக்கியெறியப்பட்ட நான்கு இத் தாலிய டிவிஷன்கள் சரணடைந்தன. ரோம்மல் தனது கூட்டாளி



1942 இலையுதிர்க் காலத்திலும் 1943 வசந்த காலத்திலும் வட ஆப்பிரிக்காவில் இராணுவ நடவடிக்கைகள்



ஏல்-அலாய்மென் அருகே துருப்புகளின் இராணுவ நடவடிக்கைக்கு முந்திய நிலை

சமர் (1942 அக்டோபர் – நவம்பர்)



இத்தாலிய-ஜெர்மானியத் துருப்புகளின் பாதுகாக்கப்படாத சந்திப்பிடத்தினுள் 1942 நவம்பர் 2இல் பிரிட்டிஷ் இராணுவ யூனிட்டுகள் சண்டையில் நுழைந்தது

யின் யூனிட்டுகளைத் தாக்குதலிலிருந்து வெளியே கொண்டுவர எந்த ஒரு முயற்சியையும் செய்யாது இத்தாலியக் காலாட்படை டிவிஷன்களைப் பாலைவனத்தின் நடுவில் விட்டுச் சென்றான் என்று பாசிச இத்தாலியின் வெளிவிவகாரத் துறையமைச்சர் சியானோ தன் நாட்குறிப்பில் எழுதினான். இதன் விளைவாய் 30,000 வரையிலான இத்தாலியப் போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்டனர்.

ஏல்-அலாய்மெனுக்கு அருகே 8வது பிரிட்டிஷ் படை அடைந்த வெற்றி மேற்கத்திய நேச நாடுகளுக்கு முதல் பெரும் வெற்றியாக அமைந்தது. இது 1940—1943ஆம் ஆண்டுகளின் வட ஆப்பிரிக்க நடவடிக்கையில் இவற்றிற்கு ஆதரவான அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஏல்-அலாய்மென் நடவடிக்கையின் போது ஜெர்மானிய-இத்தாலியத் துருப்புகளில் 70 சதவிகிதத்தினர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், சிறைபிடிக்கப்பட்டனர்; இவை தனது டாங்கிகள், பீரங்கிகளில் பெரும் பகுதியை இழந்தன.

பூர்ஷ்வா வரலாற்றியல் ஏல்-அலாய்மென் நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வெளிப்படையாக மிகைப்படுத்துகிறது. உதாரணமாக வி. சர்ச்சில் இதை யுத்தத்தில் ''விதியின் திருப்பம்'' என்று சித்தரித்தார். பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஃபூல்லர், இது தான் நேச நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு நடத்தப்பட்ட மிகத் தீர்மானகரமான தரைப்படைச் சமர் என்று கருதினார்.*

ஆனால் உண்மைகளும் ஆவணங்களும் வேறு விதமாகக் கூறுகின்றன. ஏல்-அலாய்மெனுக்கு அருகே நடந்த சமர் சந்தேகத்திற்கிடமின்றி வட ஆப்பிரிக்காவில் மட்டுமின்றி மத்திய தரைக் கடல் பிரதேசம் முழுவதும் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போக்கு மீது தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் பாசிச ஜேர்மானியத் துருப்புகளின் முக்கியச் சக்திகள் குவிக்கப்பட்டிருந்த சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில்தான் யுத்தத்தின் விதி தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. உதாரணமாய் ஏல்-அலாய்மென் அருகே 80,000 ஆட்களைக் கொண்டிருந்த ரோம்மல் படை சண்டைகளின் போது 55,000 பேர்களையும் (கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், சிறைபிடிக்கப்பட்டவர்கள்) 320 டாங்கிகளையும் சுமார் 1,000 பீரங்கிகளையும் இழந்தது என்றால் ஸ்தாலின்கிராத் அருகே

---

* ஜா. ஃபூல்லர், **1939 — 1945ஆம் ஆண்டுகளின் இரண்டாவது உலக யுத்தம்.** போர்த்தந்திர, நடைமுறைத் தந்திரச் சுருக்கம். ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1956, பக்கம் 313.

எதிர்த்தாக்குதலின் போது மட்டும் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட படி ஜெர்மானிய இராணுவம் 8,00,000க்கும் மேற்பட்டோரையும் 2,000 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் 10,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் 3,000 போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்களையும் பறிகொடுத்தது.

ஏல்-அலாய்மென் அருகே நடந்த சமர் கணிசமான அளவு ஆழத்தில் நடைபெற்ருலும் போர்முனையின் நீளம் சிறியதாகத்தான் (60 கி. மீ.) இருந்தது, இதுவும் ஒரு படையின் சக்திகளால் நடத்தப்பட்டது. எதிரியின் தற்காப்பைப் பிளக்கும் நோக்கத்தோடு ஒரு இடத்தில் முன்னிருந்து தாக்கி, மேற்கொண்டு இதை ஆழத்தில் வளர்ப்பதுதான் 8வது பிரிட்டிஷ் படையின் இராணுவ நடவடிக்கைகளின் முக்கிய வடிவமாக இருந்தது.

போர்க் கலைக்கு இந்நடவடிக்கை புதிதாக எதைத் தந்தது? இதன் சிறப்பு அம்சங்கள் யாவை? முதலாவதாக, மணலும் கடுமையான வெப்பமும் நவீன யுத்தத்தில் கவச டாங்கி மற்றும் இயந்திரப்படைத் துருப்புகளுக்கும் தடையாக இல்லை என்று முடிவு செய்ய இது உதவியது. இவை இத்தகையச் சூழ்நிலைகளில் பெரும் தொலைவுகளைக் கடக்க வல்லவை. இந்நடவடிக்கையின் போது நேரடி நடைமுறைக் கடமைகளைத் தீர்ப்பதற்காக பிரிட்டிஷ் விமானப்படை பரவலாகப் பயன்படுத்தப்பட்டது; விமானப்படையானது நேரடி நடைமுறைப் பிரிவு, போர்த்தந்திரப் பிரிவு என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவை ஒவ்வொன்றும் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தால் ஒன்றிணைக்கப்பட்டது.

மொத்தத்தில் ரோம்மலின் ஜெர்மானிய ஆப்பிரிக்க கோர்பஸைச் சுற்றி வளைத்து ஒழிப்பதற்கான சூழ்நிலைகள் நிலவிய போதிலும் பிரிட்டிஷ் படைத் தலைமையால் இதைச் செய்ய இயலவில்லை. நடவடிக்கையில் கலந்து கொண்ட பல்வேறு வகையான படைகளுக்கு இடையே பரஸ்பர செயலாக்கம் போதுமான அளவு சரியாக ஒழுங்கமைக்கப்படவில்லை; தாக்குதலுக்கு முன்னுல் பூர்வாங்கச் சண்டை நடைபெறவில்லை; பிரிட்டிஷ் கவச கோர்பசை அவசர அவசரமாக சண்டையில் ஈடுபடுத்தியதானது நேரடி நடைமுறை வெற்றியைக் கூட அடையவில்லை. இக்காரணங்களாலும் இன்னும் சில வேறு காரணங்களாலும் சக்திகளிலும் சாதனங்களிலும் பெரும் மேன்மை இருந்தும் கூட தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தைப் பிளக்கும் வேகம் நாளொன்றுக்கு 1 – 2 கி. மீ.களுக்குக் குறைவாகத்தான் இருந்தது, நடவடிக்கை மொத்தத்தில் மெதுவாக வளர்ந்தது.

சிசிலி படையிறக்கு நடவடிக்கை
(1943 ஜூலை 10 — ஆகஸ்டு 17)

1943ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இரண்டாம் பகுதியில் கசபிளான்காவில் நடைபெற்ற அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிகளின் கூட்டத்தில், மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையைத் துவக்குவதை 1944ஆம் ஆண்டிற்கு மீண்டும் ஒத்திப் போடுவது என்றும் 1943 கோடையில் சிசிலி படையிறக்கு நடவடிக்கையை மேற்கொண்டு, பின்னால் நேச நாட்டுத் துருப்புகள் நேரடியாக இத்தாலியப் பரப்பிற்குள் நுழைவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் சிசிலியில் இரண்டு ஜெர்மானிய டிவிஷன்களும் (டாங்கி டிவிஷனும் இயந்திரப்படை டிவிஷனும்) 6வது இத்தாலியப் படையைச் சேர்ந்த 9 இத்தாலிய டிவிஷன்களும் இருந்தன. மொத்தமாக இவற்றில் 2,55,000 பேர்கள் இருந்தனர், இது தவிர சிசிலி விமானத் தளங்களில் 600 விமானங்கள் நின்று கொண்டிருந்தன. இவற்றில் இரண்டு இத்தாலிய டிவிஷன்கள் பரவலான போர்முனையில்—தென் கரையோரமாக 250 கி. மீ. நீளத்திற்கு—தற்காப்பு நிலையில் இருந்தன. இந்த இடத்தில்தான் கடல் இறக்குப்படையை இறக்க நேச நாடுகளின் படைத் தலைமை முடிவு செய்தது.

தீவிலிருந்த இறக்குப்படை எதிர்ப்பு தற்காப்பு பலவீனமானதாயிருந்தது. மிக முக்கிய துறைமுகங்களுக்கான வாயில்களைப் பாதுகாத்த கரையோர பேட்டரிகள்தான் இதன் அடிப்படையாக விளங்கின. இத்தாலிய கடற்படைச் சக்திகள் தீவின் தற்காப்பில் பங்கேற்கவில்லை.

சிசிலியைக் கைப்பற்றுவதற்காக நேச நாடுகளின் படைத் தலைமை 15வது படைத் தொகுதியை (தளபதி பிரிட்டிஷ் ஜெனரல் அலெக்சாந்தர்) ஒதுக்கியது. 7வது அமெரிக்க, 8வது பிரிட்டிஷ் படைகளை உள்ளடக்கியிருந்த இதில் 4,78,000 ஆட்களை உடைய 13 பலப்படுத்தப்பட்ட டிவிஷன்களும் 4,000க்கும் மேற்பட்ட போர் விமானங்களும் 900 போக்குவரத்து விமானங்களும் இருந்தன. இறக்குப்படை நடவடிக்கை கடற்படையின் பெரும் சக்திகளால்—6 பெரிய போர்க் கப்பல்கள், 26 குரூசர்கள், 100க்கும் மேற்பட்ட நாசகாரிக் கப்பல்கள் உட்பட 1,380 போர்க் கப்பல்கள் மற்றும் சரக்குக் கப்பல்கள் 1,800க்கும் கூடுதலான தரையிறக்கு சாதனங்கள் — நடத்தப்பட்டது.

எனவே நேச நாட்டுத் துருப்புகள் எதிரியை பலத்தில் கணிசமான அளவு விஞ்சியிருந்தன. ''சிசிலி ஒரு வெற்றுக் கோட்டையாக இருந்தது. அங்கே தற்காப்பு மோசமாக அமைக்கப்பட்டிருந்த

தும் போதுமான அளவு ஆழமின்றி இதன் படை வரிசைகள் அமைந்திருந்ததும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். முக்கியக் குறை என்னவெனில் இத்தாலியர்களின் தாழ்வான ஆன்மீக பலமாகும்... அவர்கள் நாட்டின் இராணுவ நிலையை நம்பிக்கை யற்றதாகக் கருதினர், பிரிட்டிஷ்-அமெரிக்க துருப்புகள் நாட்டை யுத்த நிலையிலிருந்து விடுவித்து வெறுப்புக்குகந்த ஜெர்மானியர் களை இத்தாலியிலிருந்து வெளியேற்றும் என்ற நம்பிக்கையில் இவை இத்தாலியினுள் நுழைவதைக் கூட வரவேற்றனர்''* என்று பின்னால் அமெரிக்க ஆசிரியர்கள் நிமிட்சும் போட்டரும் எழுதி னார்கள்.

சிசிலியைக் கைப்பற்றி கண்டப் பரப்பிலுள்ள இத்தாலியினுள் நுழைவதற்கான தாக்குமுனையை ஏற்படுத்துவதுதான் நடவடிக்கை யின் நோக்கமாக இருந்தது. இதன்படி சிசிலியின் தென் கிழக்கு கரையில் கடல் மற்றும் வான் இறக்குப்படையினரை இறக்கவும் பின் முனைப்போடு வடக்கு நோக்கி முன்னேறி மெஸ்ஸினா துறை முகத்தைக் கைப்பற்றவும் எதிரித் துருப்புகளை அப்பெனின் தீபகற் பத்திலிருந்து துண்டித்து அவற்றை ஒழிக்கவும் திட்டமிடப் பட்டது.

நேச நாட்டுத் துருப்புகளுக்கு பின்வரும் கட்டளைகள் பிறப்பிக் கப்பட்டன: 7வது அமெரிக்கப் படை (தளபதி ஜெனரல் பாட்டன்) ஜேலா, லிக்காடா, ஸ்கோக்மெட்டி பிரதேசங்களில் போர்முனையின் 115வது கி. மீ.இல் இறங்க வேண்டும். 8வது பிரிட்டிஷ் படைக்கு (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் மொன்ட்கமேரி) சிரகூஸிக்குத் தெற்கே போர்முனையின் 70வது கி. மீ.இல் இறங்குமாறு கட்டளை யிடப்பட்டது. ஜேலா பிரதேசத்தில் 82வது அமெரிக்க வான் இறக்குப்படை டிவிஷனைக் கொண்டும் சிரகூஸி பிரதேசத்தில் முதலாவது பிரிட்டிஷ் வான் இறக்குப்படை டிவிஷனைக் கொண்டும் படையிறக்கத்திற்கான பிரதேசத்தின் பக்கவாட்டுப் பகுதிகளுக்கு வகை செய்யும் கடமை வான் இறக்குப்படை டிவிஷன்களுக்கு அளிக்கப்பட்டது.

நேச நாட்டினரின் கடற்படை இரண்டு யூனிட்டுகளாக—அமெ ரிக்க துருப்புகளை இறக்க வகை செய்வதற்காக மேற்கு யூனிட் டாகவும் பிரிட்டிஷ் துருப்புகளின் இறக்கத்திற்காக கிழக்கு யூனிட் டாகவும்—உருவமைக்கப்பட்டது.

மத்திய தரைக் கடலில் நேச நாட்டு இராணுவங்களின் பொதுத் தலைமை ஜெனரல் ஐசன்ஹோவர் கையிலிருந்தது. தரைப் படை

---

* சா. நிமிட்ஸ், ஏ. போட்டர், சமுத்திர யுத்தம் (1939—1945). ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1965, பக்கம் 183.

களுக்கு ஜெனரல் அலெக்சாந்தரும் வான் படைகளுக்கு பிரதான விமானப்படை மார்ஷல் தேட்டரும் கடற்படைகளுக்கு கடற்படை அட்மிரல் கேனிங்கமும் இவரது துணைவர்களாக இருந்தனர்.

படையிறக்க நடவடிக்கைக்கான தயாரிப்புகள் 1943 ஜனவரி முதல் ஜூலை வரை 6 மாதங்களுக்கு வட ஆப்பிரிக்கத் துறைமுகங்களில் நடைபெற்றன. 7வது அமெரிக்கப் படையின் பிரிவுகள் ஓரான், அல்ஜீரியா, பிஸேர்டா ஆகிய துறைமுகங்களிலும் 8வது பிரிட்டிஷ் படையின் பிரிவுகள் பென்காசி, அலெக்சாந்திரியா, போர்ட்-சயீத், ஹாய்பா, பெய்ருட் ஆகிய துறைமுகங்களிலும் இறக்கப்பட்டன.

தயார்படுத்திக் கொண்டிருந்த நடவடிக்கையை இரகசியமாக வைத்திருக்க நேச நாடுகள் முயன்றன. இத்தாலிய-ஜெர்மானிய படைத் தலைமைக்குத் தவறான விவரத்தை அளிப்பதற்காக படையிறக்கு நடவடிக்கைக்கான தயாரிப்பு சர்டினியா தீவில் நுழையும் போர்வையின் கீழ் நடைபெற்றது. பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையைக் குழப்புவதற்காக 1943 ஏப்ரல் 30ஆம் தேதி ஸ்பெயின் அருகே கடலில் பிணம் ஒன்று வீசப்பட்டது. இப்பிணத்தின் வசம் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரி மேஜர் மார்ட்டினின் அத்தாட்சி பத்திரங்கள் இருந்தன. இந்த அதிகாரி ஏதோ முக்கியக் கடிதங்கள் அடங்கிய கைப்பையுடன் பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வட ஆப்பிரிக்காவிற்கு சென்றது மாதிரி ஜோடிக்கப்பட்டிருந்தது. இந்தக் காகிதங்களில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையின் மாதிரிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் பெலோபோனேஸ் கரையோரத்தில் இரண்டு பிரதேசங்களில் இறக்குதல்; மேற்குப் பகுதியில், சிசிலி திசையில் கவனத்தைத் திருப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சர்டினியாவில் உள்ள எதிரி துருப்புகளின் மீது பிரதானத் தாக்குதலைத் தொடுப்பது என்று திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரியும்படி செய்யப்பட்டது.

ஸ்பெயின் ஆட்சியாளர்கள் மே 7ஆம் தேதி பிணத்தைக் கண்டு பிடித்த உடனேயே ஹிட்லர் படைத் தலைமைக்குத் தெரிவித்தனர்; அது பொய் ஆவணங்களை உண்மையென கருதி நேச நாடுகளின் தவறான செய்தியை நம்பியது.* ஜூலை 9ஆம் தேதி, அதாவது நேச நாடுகளின் சிசிலி நடவடிக்கையின் முன்னணைப் பொழுதில் பீல்ட்மார்ஷல் ஜெனரல் கைடல், சர்டினியா மற்றும் சிசிலிக்குள் நுழைவதற்கென வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ்-அமெரிக்க துருப்புகளில் ஒரு பகுதி கிரீஸினுள் படையிறக்கத்திற்குத் தயாராகி, நிறைவேற்றும் பொருட்டு மத்திய தரைக் கடலின் கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ''தெற்கு'' மற்றும்

---

* I. Schröder, *Italiens Kriegsanstrit 1943*, S. 113, 114.

''தென் கிழக்கு'' படைத் தொகுதிகளின் தளபதிகளுக்கு அறிவித்தான்.*

நேச நாடுகளின் படையிறக்கம் துவங்குவதற்கு ஒரு வாரம் முன் விமானப்படை ஆயத்தம் ஆரம்பமாகியது. சிசிலி, சர்டினியா விமானத் தளங்களும் உருமாற்றத்திற்காக தென் இத்தாலியத் துறைமுகங்களும் கடும் குண்டு வீச்சிற்கு ஆளாக்கப்பட்டன. இதன் விளைவாய் லிவோர்னு, ஸ்பெத்சியா, ஃபோத்ஜா, சிவீத்தவேக்கியா, நேபிள்ஸ் போன்ற துறைமுகங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன, ஏராளமான பாமர மக்கள் கொல்லப்பட்டனர்.

கடல் வழியாக ஆபத்தின்றி கடப்பதற்கு வகை செய்யும் பொருட்டு எதிரியின் எந்த வித எதிர்ப்புமின்றியே நேச நாடுகள் துனீஷிய ஜலசந்தியில் உள்ள பன்டேலேரியா, லாம்பெடூஸா தீவுகளைக் கைப் பற்றின.

துருப்புகளுக்கு விசேஷப் பயிற்சியளிப்பதன் மீது நேச நாடுகளின் படைத் தலைமை பெரும் கவனம் செலுத்தியது. கப்பல்களில் ஏறி கடலுக்குச் சென்றும், பின் கரையில் இறக்கியும் இவற்றுடன் பன்முறை பயிற்சிகள் நடத்தப்பட்டன. இரவு நேரத்தில் விமானங்களிலிருந்து குதிப்பதில் பாராசூட் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக நிறைய நேரம் செலவிடப்பட்டது. ஜூலை 9 இரவு 10 அதிகாலையில் 15 நிமிட பீரங்கிப்படை ஆயத்தத்திற்குப் பின் கடலிலிருந்தும் வானிலிருந்தும் படையிறக்கத்தைத் துவக்க திட்டமிடப்பட்டது.

உருமாற்றத்திற்காக எல்லா இறக்குப்படை அணிகளும் முதலில் வட ஆப்பிரிக்க கரையோரமாக ட்ரிபோலிக்குச் சென்று பின்னர் தான் தெற்கு நோக்கித் திரும்பி மால்டா தீவைச் சுற்றிக் கொண்டு சிசிலி நோக்கிச் சென்றன.

நள்ளிரவு 2 மணிக்கு நேச நாடுகளின் இரண்டு வான் இறக்குப் படை டிவிஷன்கள் இறக்கப்பட்டன. பலத்த காற்று வீசியதாலும் படையிறக்கம் மோசமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாலும் அமெரிக்க பாராசூட் வீரர்கள் நுழையும் பகுதி பூராவும் 100 கி. மீ.களுக்கு சிதறிக் கிடந்தனர், ஜேலாவுக்கு வடக்கே இருந்த இத்தாலிய விமான தளத்தைக் கைப்பற்றுவது என்ற தமது கடமையை நிறைவேற்ற இயலவில்லை. பிரிட்டிஷ் வான் இறக்குப்படையின் படையிறக்கமும் இதே போல் மோசமாகத்தான் அமைந்திருந்தது. ஆட்களையும் ஆயுதங்களையும் ஏற்றி வந்த 133 கிளைடர் விமானங்களில் 12 மட்டுமே குறிப்பிட்ட இடத்தில்—சிரகூஸிக்கு தெற்கே கால்வாய் மீதான பாலத்தின் அருகே—இறங்கி, கடல் படையிறக்கத்திற்கு உதவின. 47 கிளைடர் விமானங்கள்

* KTB/OKW, Bd. III, S. 763.

கடலில் வீழ்ந்தன, எஞ்சியவை தீவின் பல்வேறு பிரதேசங்களில் தரையிறங்கின.[*]

8வது பிரிட்டிஷ் படையின் பிரிவுகள் (6வது காலாட்படை டிவிஷன், 1வது வான் இறக்குப்படை டிவிஷன், 2வது கவச டாங்கி டிவிஷன், 1வது காலாட்படை பிரிகேட்) ஜூலை 10ஆம் தேதி வெற்றி கரமாக, கிட்டத்தட்ட எதிரியின் எதிர்ப்பின்றியே சிசிலியின் தென் கிழக்குக் கரையிலும் வான் இறக்குப்படைப் பிரிவுகளால் முன்கூட்டியே கைப்பற்றப்பட்ட சிரகூஸி, பக்கீனே பகுதியிலும் இறங்கின.

முதல் நாளன்றே ஆங்கிலேயர்கள் 100 கி.மீ. நீளமும் 10—15 கி.மீ. ஆழமும் உடைய தாக்குமுனையை ஏற்படுத்தினர். ''எங்களது இறக்குப்படையின் முதல் படை வரிசைகளை இறக்கிய தானது முற்றிலும் எதிர்பாராததாக இருந்ததால் இது எதிரியை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது, எதிரியால் எவ்வித முறை யமைக்கப்பட்ட எதிர்ப்பையும் காட்ட இயலவில்லை'' என்று மொன்ட் கமேரி எழுதினார். தீவின் மேற்கு கோடி வட ஆப்பிரிக்கத் துறை முகங்களுக்கு அருகே உள்ளதால் நேச நாடுகள் இங்கேதான் தம் துருப்புகளை இறக்கும் என்று ஜெர்மானியர்கள் எண்ணியதால் சிறந்த ஜெர்மானிய யூனிட்டுகள் பெரும்பாலும் தீவின் மேற்குக் கோடியில் இருந்தன.

8வது பிரிட்டிஷ் படை இறக்கப்பட்ட அதே நேரத்தில் சிசிலியின் தென் மேற்கு கரையில் 7வது அமெரிக்கப் படை (4வது காலாட் படை டிவிஷன், முதலாவது வான் இறக்குப் படை டிவிஷன், முதலா வது கவச டாங்கி டிவிஷன்) இறக்கப்பட்டது. அந்நாளின் முடிவில் இதன் படைப்பிரிவுகள் ஜேலாவையும் லிக்காடாவையும் அடைந் தன.

ஜேலா பிரதேசத்தில் விமானத் தளத்தைப் பிடிக்கும் நோக்கத் தோடு அமெரிக்கர்கள் ஜூலை 11ஆம் தேதி மாலை 2,000 பாராசூட் வீரர்கள் அடங்கிய வான் இறக்குப் படையை இறக்க ஆரம்பித் தனர். இம்முறையும் நேச நாட்டினரை துரதிர்ஷ்டம் எதிர்நோக் கியது. சிசிலிக் கரையோரத்தில் தமது விமான எதிர்ப்பு பீரங்கி களாலேயே இவை சுடப்பட்டன, தமது சண்டை விமானங்களா லேயே தாக்கப்பட்டன. 144 விமானங்களில் 23 சுட்டு வீழ்த்தப் பட்டன, தப்பிய விமானங்களில் பாதி சேதமடைந்து டியூனிஷியா விலிருந்த தமது விமானத் தளத்தை மிகுந்த சிரமத்துடன்தான்

---

[*] ஓ. பிரேட்லி, போர்வீரனின் குறிப்புகள், மாஸ்கோ, அந்நிய இலக்கியப் பதிப் பகம், 1957, பக்கம் 148 (ருஷ்ய மொழியில்).



இராணுவ சக்திகள்	நேச நாடுகள்	இத்.-ஜெர்.	விகிதம்
படைகள்	700 000	225 000	3:1
விமானங்கள்	2 000	240	8:1
கப்பல்களும் படகுகளும்	3200	300	11:1

சிசிலி படையிறக்க நடவடிக்கை (1943 ஜூலை 10—ஆகஸ்டு 17)

அடைந்தன*. இறக்குப் படையினருக்கு பெரும் ஆட்சேதமேற்பட்டது.

ஜூலை 12ஆம் தேதி காலை 7வது அமெரிக்க மற்றும் 8வது பிரிட்டிஷ் படைகளின் முதல் படை வரிசைகள் முற்றிலுமாக இறக்கப்பட்டன. தீவின் உள்ளே தாக்குதலைத் தொடுப்பதற்கான வாய்ப்பு நேச நாட்டுத் துருப்புகளுக்கு கிட்டியது. ''அந்நிய நலன்களுக்காகத்தான் தாம் போரிடுகிறோம், பாசிச அரசாங்கம் நிலவுவதை இன்னும் சிறிது காலம் நீட்டிப்பதற்காக மட்டுமே தாம் போரிடுகிறோம் என்பதை நன்கு உணர்ந்த இத்தாலிய இராணுவத்தினர் — ஏனெனில் யாருக்குமே வெற்றியில் நம்பிக்கை இருக்கவில்லை — கலகம் செய்தனர். முழு படைபிரிவுகள் சரணடைந்தன, எதிரியின் தரப்பிற்கு மாறின, தங்களுக்கு மேலிருந்த ஜெர்மானிய

---

* W. Craven, Y. Cate, *The Army Air Forces in World War II*, Vol. II, pp. 453—454.

இராணுவ அதிகாரிகளைக் கொன்றன''* என்று இந்நிகழ்ச்சிகளைப் பற்றி இத்தாலியக் கம்யூனிஸ்டுகளின் தலைவரான பல்மீரோ தல்யாத்தி எழுதினர்.

அடுத்த நாளன்று அமெரிக்க துருப்புகளும் பிரிட்டிஷ் துருப்புகளும் இணைந்து மெஸ்ஸினா துறைமுகத் திசையில் வடக்கே இரண்டு வரிசைகளாகச் சென்றன. இத்தாலிய-ஜெர்மானியத் துருப்புகளுக்கான சப்ளை முழுவதும் இதன் வழியாகத்தான் சென்றது. தாக்குதல் மெதுவாகத்தான் நடந்தது, எதிரியை வெளியே பிடித்துத் தள்ளுவதுதான் இதன் நோக்கமாக இருந்தது. இத்தாலியத் துருப்புகள் சரணடைந்தன, ஜெர்மானியத் துருப்புகள் இராணுவத் தளவாடங்களோடு கூட மெஸ்ஸினா ஜலசந்திக்குப் பின்வாங்கிச் சென்றன. நேசநாடுகளின் தரைப்படை மெதுவாக இயங்கியதும் வானில் முழு ஆதிக்கம் செலுத்திய இவற்றின் விமானப்படை செயலற்று இருந்ததும் 50,000க்கும் மேற்பட்டோர் அடங்கிய தன் துருப்புகளை அப்பெனீன் தீபகற்பத்திற்கு திட்டமிட்ட வழியில் எடுத்துச் செல்ல ஜெர்மானியப் படைத்தலைமைக்கு வாய்ப்பளித்தன.

ஆகஸ்டு 17ஆம் தேதி காலை, அதாவது சிசிலியில் இறக்குப்படை இறக்கப்பட்டு 39 நாட்களுக்குப் பின் நேச நாட்டினர் நாளொன்றுக்கு 5 கி. மீ. வேகத்தில் 220 கி. மீ.களைக் கடந்து முன்னேறி மெஸ்ஸினாவிற்குள் நுழைந்தனர். ஜெர்மானியர்களின் தரப்பில் ஒரு சில ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர், 13,500 பேர் காயமடைந்தனர், 5,500 பேர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்; இத்தாலியத் துருப்புகளில் பெரும் பகுதி சிறைபிடிக்கப்பட்டது. நேச நாட்டினரின் தரப்பில் 5,530 பேர்கள் கொல்லப்பட்டனர், 14,400 பேர்கள் காயமடைந்தனர், 2,870 பேர்கள் தொலைந்து போயினர்.

இவ்வாறாக பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளின் சிசிலி நடவடிக்கை தரைப்படை, கடற்படை, வான் படைகளின் கூட்டு முயற்சிகளால் நடத்தப்பட்டது. இது விசேஷ இறக்குப் படை சாதனங்களைப் பெருமளவில் பயன்படுத்தி நடத்திய முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, பசிபிக் சமுத்திரப் பிரதேச படையிறக்க நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் பெரியதாக இருந்தது. இதில் 13 டிவிஷன்களும் 3 பிரிகேடுகளும் பங்கேற்றன. வான் இறக்குப்படை துருப்புகளைப் பயன்படுத்தியதானது (படையிறக்க ஏற்பாடுகளில் குறைகள் இருப்பினும், பெரும் சேதங்கள் ஏற்பட்டாலும்) கடல் இறக்குப்

---

* எம். ஏர்கலி, **ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் இத்தாலி**. இத்தாலிய மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1944, பக்கம் 14.

படையினரை இறக்குவதைக் கணிசமாக சுலபமாக்கியது. சிசிலி படையிறக்க நடவடிக்கையின் போக்கில் நேச நாடுகள், முப்படைகளின் கூட்டுச் செயல்களுக்கு ஏற்பாடு செய்வதில் அனுபவம் பெற்றன. இந்த அனுபவம் இதை விடப் பெரிய நார்மான்டி நடவடிக்கையில் இவற்ருல் பயன்படுத்தப்பட்டது.

ஒரு சில பூர்ஷ்வா வரலாற்ருசிரியர்கள் சிசிலி நடவடிக்கையின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி, சிசிலியில் நேச நாட்டுத் துருப்புகள் இறங்கியதால்தான் ஹிட்லர் கூர்ஸ்கில் தாக்குதலை நிறுத்த முடிவு செய்தான் என்றும் சோவியத் துருப்புகளின் பலத்த தற்காப்பை மீற முடியாததால் அல்ல என்றும் கூறுகின்றனர். ஆனுல் உண்மை வேறு. இரண்டே இரண்டு ஜெர்மானிய டிவிஷன்கள் மட்டும் இருந்த சிசிலியில் நேச நாட்டுத் துருப்புகளை இறக்கியதானது பாசிச ஜெர்மனிக்கு எவ்வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை. இதனுல் கிழக்கே நிலவிய போர்த்தந்திர சூழ்நிலையை மாற்றவும் முடியவில்லை. ஜெர்மானியத் துருப்புகள் இடம் மாற்றப்பட்டதை எடுத்துக் கொண்டால் இப்பிரச்சினை சோவியத்-ஜெர்மானிய போர்முனைக்கு ஆதரவாகத் தீர்க்கப்பட்டதேயன்றி இத்தாலிக்கு ஆதரவாக அல்ல. 1943 செப்டெம்பர் முதல் 1944 ஜனவரி வரை பாசிஸ்டுகள் மேற்கு ஐரோப்பாவிலிருந்து 28 டிவிஷன்களையும் 5 பிரிகேடுகளையும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்கு அனுப்பினர்.

சிசிலி நடவடிக்கை முடிவடைந்த பின் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்திருந்தன. செப்டெம்பர் 3ஆம் தேதி பலத்த விமானப்படையின் பூர்வாங்கக் குண்டு வீச்சுக்குப் பின் இரண்டு பிரிட்டிஷ் டிவிஷன்கள் இத்தாலியின் தெற்கில் மெஸ்ஸின ஜலசந்தி பகுதியில் இறங்கின. நேச நாட்டு வல்லரசுகளுக்கு எதிராக யுத்தத்தை தொடருவதில் பயனேதுமில்லை என்பதைக் கண்ட இத்தாலிய ஏகாதிபத்தியவாதிகள் நாட்டில் தமது ஆதிக்க நிலையைத் தக்க வைக்கும் பொருட்டு முஸ்ஸோலீனியை ஆட்சியிலிருந்து அகற்றி கைது செய்தனர். பாசிசக் கட்சி கலைக்கப்பட்டது. செப்டெம்பர் 3ஆம் தேதி, இத்தாலி சரணடைவதாயும் இத்தாலியக் கடற்படையும் விமானப்படையும் நேச நாட்டு படைத் தலைமையின் கரங்களில் ஒப்படைக்கப்படுவதாயும் மார்ஷல் படோல்யோவிற்கும் ஐசன்ஹோவருக்கும் இடையே உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

ஒரு சில நாட்களுக்குப் பின், இத்தாலிக்கும் நேச நாடுகளுக்கும் இடையிலான சமரச வாசகம் வெளியான அன்று, பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பிரான்சிலிருந்து வடக்கு இத்தாலியினுள் நுழைந்தன. இத்தாலி யுத்தத்திலிருந்து வெளியேறியதற்குப் பதில்

அளிக்கும் முகமாக ஹிட்லர் படையினர் இத்தாலிய இராணுவத்திட மிருந்து ஆயுதங்களைப் பறித்தனர்.

நேச நாடுகள் மந்தமாகச் செயல்பட்டதால் ஜெர்மானியர்கள் வடக்கு, மத்திய இத்தாலியையும் ரோமையும் விரைவில் நேபிள் சையும் கைப்பற்ற முடிந்தது. 1943 செப்டெம்பர் 9ஆம் தேதி தான் 6வது அமெரிக்க கோர்பசும் (4 காலாட்படை டிவிஷன்கள்) 10வது பிரிட்டிஷ் கோர்பசும் (இரண்டு காலாட்படை டிவிஷன்களும் ஒரு கவச டிவிஷனும்) அடங்கிய ஜெனரல் கிலார்க்கின் 5வது அமெரிக்கப் படை சலேர்னோ பிரதேசத்தில் இறங்கியது. கடலி லிருந்து படையிறக்கத்திற்கு 6 போர்க் கப்பல்களும் 7 விமானந் தாங்கிக் கப்பல்களும் 15 குரூசர்களும் ஆதரவளித்தன. நேச நாட்டுத் துருப்புகள் நுழைந்த இடத்தில் 16வது ஜெர்மானிய டாங்கி டிவிஷன் தற்காப்பு நிலையிலிருந்தது.

கடலிலும் வானிலும் அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் முழு ஆதிக்கம் செலுத்திய போதிலும் நேச நாடுகளின் படையிறக்கம் மிக மெதுவாக நடைபெற்றது. இது சலேர்னோ பிரதேசத்திற்கு இரண்டு டாங்கி டிவிஷன்களையும் ஒரு மோட்டார் டிவிஷனையும் அனுப்ப பாசிச ஜெர்மானியப் படைத் தலைமைக்கு வாய்ப்பளித் தது. இது சலேர்னோ பிரதேசத்தில் இழுபறிச் சண்டைகளுக்கு (செப்டெம்பர் 22 வரை) இட்டுச் சென்றது, ஜெர்மானிய படைத் தலைமை தனது துருப்புகளை இத்தாலியின் தெற்கேயிருந்து, சான்க்ரோ மற்றும் கரில்யானோ (நேபிள்சுக்கு வடக்கே) ஆறுகளின் ஓரமாக முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எல்லைகளுக்கு அகற்ற வாய்ப்பளித் தது.

செப்டெம்பர் 23 முதல் நேச நாட்டுத் துருப்புகள் எதிரியை மெதுவாக வடக்கு நோக்கி நெருக்க ஆரம்பித்தன. நவம்பர் 5ஆம் தேதி 8வது பிரிட்டிஷ் படையும் 5வது அமெரிக்கப் படையும் இந்த எல்லைகளை அடைந்தன. நவம்பர்—டிசம்பரில் நேச நாட்டுத் துருப்பு கள், ஜெர்மானியர்களின் தற்காப்பை பிளந்து, ரோம் நகரை நோக்கி முன்னேற ஒரு சில முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் பலத்தில் எதிரியை விஞ்சியிருந்த போதிலும் இவற்றால் தம் நோக் கத்தை நிறைவேற்ற இயலவில்லை, டிசம்பர் இறுதியில் இவை தற் காப்பிற்கு மாறின. இத்துடன் 1943ஆம் ஆண்டில் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகளின் தாக்குதல் நடவடிக்கைகள் முடிவடைந் தன.

நேச நாடுகள் திட்டமிட்ட லட்சியங்களை அடையவில்லை. ரோம் வரை செல்ல நீண்ட தூரம் இருந்தது. இத்தாலியில் இழுபறிச் சண்டைகளுக்கான வாய்ப்பு எதார்த்தமாகியது. ஆனால் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை உறுதியோடு நடவடிக்கையில் ஈடுபட்

டிருந்தால் நிலவரம் வேறுமாதிரியாக இருந்திருக்கும். யுத்தத்திற்குப் பின் ஹிட்லரின் ஜெனரல் கேஸ்ஸல்ரிங் கூறியதை பிரிட்டிஷ் வரலாற்றாசிரியரும் இராணுவ தத்துவவாதியுமாகிய லிடல் கார்ட் மேற்கோள் காட்டுகிறார்: ''சலேர்னோ நடவடிக்கைக்குப் பதில் ரோமில் நேச நாடுகளின் வான் இறக்குப்படையும் கடல் இறக்குப் படையும் இறக்கப்பட்டிருந்தால் நாங்கள் இத்தாலியின் தென் பாதி முழுவதையும் விட்டு வெளியேறும் கட்டாயத்திற்குள்ளாகியிருப் போம்''*.

1943 இலையுதிர் காலத்தில் பிரிட்டிஷ் துருப்புகள், ஏஜியன் கடலில் பல சிறு தீவுகளைக் கைப்பற்றின; இதையடுத்து பால்கன் மீது தொடுக்கப்பட்ட அதிகப் பரவலான தாக்குதலுக்கு இது முன்னுரையாக அமைந்திருக்க வேண்டும். ''இத்தாலியும் பால்கன் தீபகற்பமும் இராணுவ மற்றும் அரசியல் விஷயங்களில் ஒரே முழுமையாக உள்ளன என்று நான் கருதுகிறேன். இப்பிரதேசத்தில்தான் நாம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று 1943 அக்டோபர் துவக்கத்தில் சர்ச்சில் ரூஸ்வெல்டிற்கு எழுதினார். அமெரிக்க வரலாற்றாசிரியர் மேட்லஃப் குறிப்பிட்டபடி ''ரோதோஸ் தீவைக் கைப்பற்றுவதை, மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியிலும் பின் பால்கனிலும் தொடர் நடவடிக்கைகளின் துவக்கத்திற்கான பூர்வாங்க அடியாகக் கருதலாம்''***.

நேபிள்சுக்கு தெற்கே, பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளை ஆதாரமாகக் கொண்டு மார்ஷல் படோல்யோவின் ஆட்சி இருந்தது. தன் புடை சூழ அரசனும் இத்தாலிய அரசாங்கத்தின் உறுப்பினர்களும் ரோமிலிருந்து இங்கு ஓடி வந்தனர். வடக்கு மற்றும் மத்திய இத்தாலி முழுவதும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் வசமிருந்தது. நவீன பாசிச கைப்பொம்மை ஆட்சி இங்கே தோற்றுவிக்கப்பட்டது. கிரான் சாஸ்ஸோ (அப்ரூட்ஸோ பிரதேசம்) மலைகளில் சிறையிலிருந்த முஸ்ஸோலீனி ஹிட்லரின் எஸ். எஸ். படையைச் சேர்ந்த ஒத்தோ ஸ்கார்ட்ஸேனியின் பாரசூட் வீரர்களால் விடுவிக்கப்பட்டு முதலில் வியென்னாவிற்கும் பின் ஹிட்லரின் படைத் தலைமையகத்திற்கும் கொண்டு செல்லப்பட்டான். பின்னால் வடக்கு இத்தாலிக்கு (சாலோ நகருக்கு) அனுப்பப்பட்ட முஸ்ஸோலீனி அங்கே நாஜிகளின் கட்டளைக்கேற்ப பாசிச ''சமூக குடியரசின்'' தோற்றத்தைப் பிரகடனப்படுத்தினான். புனரமைக்கப்பட்ட பாசிசக் கட்சியும்

---

* B. Liddel Hart, *History of the Second World War*, p. 445.

** எம். மேட்லஃப், கசபிளான்காவிலிருந்து ''ஒவெர்லோர்ட்'' வரை, மாஸ்கோ, இராணுவப் பதிப்பகம், *1964*, பக்கம் *322* (ருஷ்ய மொழியில்).

*** அதே நூல், பக்கம் *324*.

''குடியரசுக் கட்சி'' என்றழைக்கப்பட்டது. இந்த வேஷக் கூத்து முழுவதாலும், மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட பாசிச அரசானது (''சாலோ குடியரசு'') ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிச் சனியன்களின் மீதுதான் நின்று கொண்டிருந்தது எனும் தெட்டத் தெளிவான உண்மையை நிச்சயமாக மூடி மறைக்க இயலவில்லை.

முஸ்ஸோலீனியோ தனக்கு ஹிட்லர் ஆதரவு அளிப்பதை நியாயப்படுத்த முயன்முன். முஸ்ஸோலீனியின் தீவிர ஆதரிப்போடு கூட ''சமூகக் குடியரசின்'' எல்லா ஆட்பலமும் ஆயுத பலமும் பாசிஸ்டுகளின் கரங்களில் இருந்தன. ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு தருவதற்காக எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் விரோத ஆட்சிக் கும்பலைப் பாதுகாக்கும் பொருட்டு கட்டுபாடற்ற பாசிசப் பிரச்சாரம் நடந்தது. இது யுத்தத்திற்குப் பின் அடிப்படை சமூக மாற்றங்களைச் செய்வதாயும் அரசியல் வாழ்வை ஜனநாயகமயமாக்குவதாயும் தம்பட்டம் அடித்தது. அதே நேரத்தில் இத்தாலிய நவீன பாசிஸ்டுகள் அதிருப்தி காட்டியவர்களை மிருகத்தனமாகப் பலிவாங்கினுர்கள்; அசாதாரண கால ட்ரிப்யூனல் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டது. ஜூலை மாதம் பெரும் பாசிசக் கவுன்சிலில் தனக்கு எதிராகப் பேசிய பாசிசத் தலைவர்களையும் பழிவாங்க முஸ்ஸோலீனி மறக்கவில்லை. வெரோனுவில் நடத்தப்பட்ட நீதிவிசாரணை ''துரோகிகளுக்கு'' தக்க தண்டனை வழங்கியது. முன்னுள் வெளிவிவகாரத் துறை அமைச்சர் சியானே (முஸ்ஸோலீனியின் மருமகன்) உட்பட குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இத்தாலிய தேசபக்தர்கள் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராயும் முஸ்ஸோலீனியின் நவீன பாசிஸ்டுகளுக்கு எதிராயும் ஆயுதப் போராட்டம் நடத்தினர். எல்லா பாசிச எதிர்ப்பு எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் தேசிய விடுதலை கமிட்டி செப்டெம்பர் 9ஆம் தேதி ரோமில் தோற்றுவிக்கப்பட்டது. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிச எதிர்ப்பு இயக்கத்தை ஒழுங்கமைத்து, ஊக்கப்படுத்தும் முக்கியச் சக்தியாக விளங்கியது. ஐக்கிய நாடுகளுடன் ஓரணியில் நின்று பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பொது மக்களின் போராட்டத்தை நடத்துமாறு இது அறைகூவல் விடுத்தது. ஹிட்லர் துருப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் ஸ்தல தேசிய விடுதலை கமிட்டிகளைப் பரவலாக அமைக்கவும் ஆயுதந்தரித்த கொரில்லாப் படை அணிகளைத் தோற்றுவிக்கவும் கம்யூனிஸ்டுக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வடக்கு மற்றும் மத்திய இத்தாலியில் கரிபால்டி கொரில்லாப் படை பிரிகேடுகள் தோற்றுவிக்கப்படலாயின. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையின் உறுப்பினர் லுயீஜி லோங்கோ இதன் தளபதியாக இருந்தார், கம்யூனிஸ்டு சேக்கியா கமிசாரராக இருந்தார். ''நியாயமும் விடுதலையும்'' என்ற கொரில்லாப் படை அணிகளின் நடவடிக்கைகளைக் கட்சி வழிநடத்தியது, இவற்றிற்கு பார்ரி தலைமை தாங்கினர். எல்லா கொரில்லாப் படை அணிகளின் நடவடிக்கையும் வடக்கு இத்தாலி தேசிய விடுதலைக் கமிட்டியால் ஒருங்கிசைவிக்கப்பட்டது. இக்கமிட்டியில் ஐந்து பாசிச எதிர்ப்புக் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.

நேபிள்சில் நடந்த செப்டெம்பர் எழுச்சி தென் இத்தாலியில் மிக முக்கியமான எதிர்ப்பு இயக்கமாக அமைந்தது. முன்னுள் இராணுவத்தினர், தொழிலாளிகள், அறிவுஜீவிகள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். ''நான்கு நாள்'' கடும் தெருச் சண்டைகளுக்குப் பின் இவர்கள் ஜெர்மானியப் பாதுகாப்புச் சக்திகளைச் சரணடைய வைத்து, நகரை விட்டு வெளியேறுமாறு செய்தனர்.

இத்தாலியில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளுக்கும் பாசிசத் துருப்புகளுக்கும் இடையே ஆயுதப் போராட்டம் மூண்டது. ஆனால் பலத்தில் விஞ்சி நின்ற நேச நாட்டுத் துருப்புகள் மெதுவாகச் செயல்பட்டன. ''நேச நாட்டினர் விரைவாகவும் தீர்மானகரமாகவும் இயங்குவார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்கையில் அவர்கள் மெதுவாகத்தான் செயல்படுகிறார்கள். இத்தாலி யுத்தத்திலிருந்து வெளியேறியதுடனும் மிகப் பெரும்பாலான இராணுவ மற்றும் வர்த்தகக் கப்பல்களைக் கைப்பற்றியதுடனும் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை திருப்தி அடைந்துவிட்டதைப் போல் தோன்றுகிறது''[*].

இத்தாலியப் போர்முனையில் நடவடிக்கைகள் இழுபறித் தன்மையை உடையவையாக இருந்தன. பாசிஸ்டுகள் 21 டிவிஷன்களையும் 370 விமானங்களையும் வைத்துக் கொண்டு வடக்கு மற்றும் மத்திய இத்தாலியைத் தொடர்ந்து தம் வசம் வைத்திருந்தனர்.

இறுதியாக அக்டோபர் 13ஆம் தேதி படோல்யோ அரசாங்கம் ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது. இந்தத் தொடர்பில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இத்தாலியை போரிடும் தரப்பாக அங்கீகரித்தன. இத்தாலி பாசிசக் கூட்டிலிருந்து வெளியேறி ஐக்கிய நாடுகளுடன் ஒன்றுசேர்ந்ததானது

---

[*] ஏ. கர்ஷாயி, பெர்ஹ்டேஸ்காடனில் இருந்த குகையிலிருந்து பெர்லினில் இருந்த சுரங்க அறை வரையில், மாஸ்கோ, 1968, பக்கம் 223.

பாசிச ஜெர்மனியை சர்வதேச அரங்கில் மேலும் தனிமைப்படுத்தியது. மூன்றாவது ரைஹ் தனது பிரதான கூட்டாளியை இழந்தது. பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் ஜெர்மனியின் மீது உறுதியோடு தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன, என்றாலும் முன்போன்றே நேச நாடுகள் இரண்டாவது போர்முனையைத் துவக்குவதில் அவசரம் காட்டவில்லை.

6. 1943இல் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள்

1943ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சோவியத் அரசாங்கத்திற்குப் பின்வருமாறு தெரியப்படுத்தினார்கள்: ''அடுத்த ஒரு சில மாதங்களில் ராபவூலிலிருந்து ஜப்பானியர்களை விரட்டியடித்து பின் ஜப்பானை நோக்கிய பொதுவான திசையில் தாக்குதலை வளர்ப்பதுதான் பசிபிக் சமுத்திரத்தில் எமது நோக்கமாகும்''[9].

1943இல் ஜப்பானிய படைத் தலைமை ஆசியா கண்டத்தில் தன் நிலைகளைப் பலப்படுத்தவும் பசிபிக் சமுத்திரத்தில் குறிப்பாக வெளி எல்லைகளில் தற்காப்பை வலுப்படுத்தவும் திட்டமிட்டது. தொலைக் கிழக்கு நீர்ப்பரப்புகளில் ஜப்பானிய கடற்படைச் சக்திகள் சோவியத் கப்பல்களுக்கு எதிரான ஆத்திரமூட்டலை நிறுத்தவில்லை, குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. 1942ஆம் ஆண்டைப் போன்றே ஜப்பானிய இராணுவ வெறியர்கள் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயாராகி வந்தனர், எதிர்பார்க்கப்பட்ட பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பெரும் வெற்றிகளோடு படையெடுப்பின் நேரத்தைப் பொருந்த வைக்க முயன்றனர்.

டோக்கியோ வழக்கின் விவரங்கள், 1943 கோடையில் சோவியத் யூனியன் மீது தாக்குதலைத் தொடுக்க ஜப்பான் தயாராகி வந்ததற்கு சான்று பகர்கின்றன. உதாரணமாக, குவாண்டுங் இராணுவத்தின் படைத் தலைமையகத்தின் சங்கேதக் குறிப் பிரிவில் பணி புரிந்த மேஜர் மட்சுமூரா குசுவோ தனது சாட்சியில், சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பிற்காக குவாண்டுங் இராணுவம் எப்படி தயாராகி வந்தது என்பதை பின்வருமாறு விவரித்தான்: ''சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் துவங்கினால்

---

[9] சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, *தொகுதி 2, மாஸ்கோ, 1957.*

சங்கேதக் குறிகளை விரைவாக மாற்றத் தயாராக இருக்க வேண்டு மென என்னையும் சங்கேதக் குறிப் பிரிவின் தலைவன் மேஜர் கபயாசி யையும் குவாண்டுங் இராணுவத்தின் தகவல் தொடர்பு பிரிவின் தலைவன் லெப்டினன்ட் கர்னல் தமுரா மோரியோ எச்சரித்தான். முன்முயற்சியைப் பயன்படுத்தி சோவியத் இராணுவத்தின் பலத்தை உடைப்பதற்காக குவாண்டுங் இராணுவத்தின் படைத் தலைமை மேல்மட்டத்தின் கட்டளைக்கேற்ப சோவியத் இராணுவத்திற்கு எதிராகத் திடீர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று லெப்டினன்ட் கர்னல் தமுரா எங்களுக்குச் சொன்னான்''*.

கூர்ஸ்க் அருகே நடந்த சமரில் சோவியத் இராணுவத்தின் அற்புதமான வெற்றி சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தைத் துவங்கும் எண்ணத்தைக் கைவிடுமாறு ஜப்பானிய படைத் தலைமை யைக் கட்டாயப்படுத்தியது. ஆனால் ஜப்பானியத் தரப்பிலிருந்து இன்னமும் மறைமுகமான அபாயம் நிலவியதால் சோவியத் தலைமை, தொலைக் கிழக்கில் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட போர்வீரர்களையும் 13,000க்கும் கூடுதலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கி களையும் சுமாராக 2,500 டாங்கிகளையும் 3,000க்கும் கூடுதலான விமானங்களையும் வைத்திருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது.

பசிபிக் சமுத்திரத்தில், ஜப்பானியர்கள் 1943 வசந்த காலத் தில் ஏற்கப்பட்ட "Z" மற்றும் "V" என்ற சங்கேத மொழியில் குறிப்பிடப்பட்ட திட்டத்திற்கேற்ப போர்த்தந்திரத் தற்காப்பிற்கு மாறி அலெவூட் தீவுகள், வேய்க், மார்ஷால் தீவுகள், கில்பெர்ட் தீவுகள், பிஸ்மார்க் தீவுக் கூட்டம், திமோர் தீவு, ஜாவா, சுமாத்ரா, நிக்கோபார் மற்றும் அந்தமான் தீவுகள் வரிசையில் தாங்கள் பிடித்து வைத்துள்ள நிலைகளைத் தக்க வைக்க திட்டமிட்டனர். தென் கடல்களின் மண்டலம் மற்றும் குரீல், மரியான், கரோலின தீவுகளைத் தக்க வைப்பதன் மீது விசேஷக் கவனம் செலுத்தப் பட்டது.

1942 இறுதியில் தென் கிழக்கு ஆசியாவிலும் பசிபிக் சமுத்திரத் தீவுகளிலும் இருந்த ஜப்பானிய இராணுவத்தில் 60 டிவிஷன்கள், 6 விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட சுமார் 210 கப்பல்கள், 4,600 விமானங்கள் முதலியன இருந்தன. இப்பிரதேசத்தில் நேச நாடுகளிடம்—அமெரிக்கா மற்றும் பிரிட்டனிடம் மட்டும்—35 டிவிஷன்களும் 10 விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட சுமார் 170 கப்பல்களும் கிட்டத்தட்ட 3,500 விமானங்களும் இருந்தன.

கிரேட் பிரிட்டன் இப்பிரதேசத்தில் பெரும்பாலும் தனது

---

* அக்டோபர் புரட்சியின் பெயர் தாங்கிய அரசு மத்திய ஆவணக் காப்பகம், தொகுப்பு 7867, பட்டியல் 1, பத்திரம் 197, தாள்கள் 9–10.

டொமினியன்களிலும் காலனிகளிலும் இருந்த துருப்புகளைக் கொண்டு போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. உதாரணமாக ஆஸ்திரேலியா ஐந்து லட்சம் பேரடங்கிய இரணுவத்தைத் திரட்டியிருந்தது, இந்திய துருப்புகளின் எண்ணிக்கை 20 லட்சத்தை எட்டியது. இவர்களில் 2,50,000 பேர்கள் ஆப்பிரிக்காவிலும் மத்தியக் கிழக்கிலும் இருந்தனர், 5 இந்திய டிவிஷன்கள் பர்மாவில் ஜப்பானியர்களுக்கு எதிராக இயங்கின, எஞ்சியவை பயிற்சி பெற்று வந்தன.

1943இல் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் குறுகிய நோக்கங்களைக் கொண்ட தனிப்பட்ட நடவடிக்கைகள் நடந்தன. இதன் வட பகுதியில் அலெவூட் தீவுகளை—அத்து மற்றும் கீஸ்கா தீவுகளை—கைப்பற்ற நேச நாடுகள் முடிவு செய்தன. முதலில் அத்து தீவைக் கைப்பற்றி இதன் மூலம் கீஸ்கா தீவிலிருந்த பாதுகாப்புச் சக்திகளை சப்ளை தளத்திலிருந்து துண்டிக்க இவை திட்டமிட்டன.

அத்து தீவைக் கைப்பற்றுவதற்காக 7வது அமெரிக்க டிவிஷனும் (இதில் 11,000 போர்வீரர்கள் வரை இருந்தனர்) 8வது கடற்படை யூனிட்டும் ஒதுக்கப்பட்டன. இதில் 3 பழைய போர்க் கப்பல்கள், பாதுகாப்பு விமானந்தாங்கிக் கப்பல், 6 குரூசர்கள், 19 நாசகாரிக் கப்பல்கள், 5 சரக்கு கப்பல்கள் ஆகியன இருந்தன. இது தவிர 263 விமானங்களை உடைய 11வது வான் படையும் ஒதுக்கப்பட்டிருந்தது. முதலில் மார்ச் 1ஆம் தேதி நடத்துவதாகத் திட்டமிடப்பட்டிருந்த இந்நடவடிக்கை மே 7ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது. மே 11ஆம் தேதி வரை கப்பல்கள் அத்து பிரதேசத்தில் அங்கும் இங்கும் போய் கொண்டிருந்தன. மோசமான பருவநிலை காரணமாக நேச நாடுகளின் இறக்குப்படைச் சக்திகளுக்கு எதிராக ஜப்பானியர்களால் விமானப்படையை பயன்படுத்த இயலவில்லை. பீரங்கிப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் இறக்குப் படையினர் இரண்டு இடங்களில் தரையிறங்கினர். 2,576 பேரடங்கிய தீவின் பாதுகாப்புச் சக்திகள் அமெரிக்கர்களுக்கு கடும் எதிர்ப்பை அளித்தாலும் கிட்டத்தட்ட முற்றிலுமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டன. மே 30ஆம் தேதி வாக்கில் தீவில் சண்டைகள் முடிவடைந்தன. நேச நாடுகளின் தரப்பில் 3,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், நோய்வாய்ப்பட்டனர்[*].

அத்து தீவை தவிர்க்க இயலாதவாறு இழப்பதானது கீஸ்கா தீவைப் பாதுகாத்து நிற்பவர்களை நம்பிக்கையற்ற ஒரு நிலைக்குத் தள்ளி விடும் என்பதைப் புரிந்து கொண்ட ஜப்பானியப் படைத்

---

[*] எஃப். ஷேர்மன், **பசிபிக் சமுத்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள்.** ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1956, பக்கங்கள் 113, 115.

தலைமை, இத்தீவின் பாதுகாப்புச் சக்திகளுக்கு தீவை விட்டு வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்தது. ஜூலை 29ஆம் தேதி 2 ஜப்பானிய குரூசர்களும் 10 நாசகாரிக் கப்பல்களும் பனிமூட்டப் போர்வையினுள் கீஸ்கா குறுங்குடாவினுள் நுழைந்து, 45 நிமிடத்தில் தீவின் பாதுகாப்புச் சக்திகளை (5,100 பேர்கள்) கப்பல்களில் ஏற்றி அரவமின்றி, சேதமின்றி பரமுஷீர் தீவிற்கு (குரீல் தீவுகள்) வந்தன.

பல தினங்களாக பீரங்கிப்படை மற்றும் பூர்வாங்க விமானப் படை தாக்குதலுக்குப் பின் ஆகஸ்டு 16ஆம் தேதிதான் அமெரிக்கர்கள் கீஸ்கா தீவில் 34,000 பேரடங்கிய படையை இறக்கினர். அப்போதுதான் ஜப்பானியர்கள் தீவை விட்டு வெளியேறியது தெரிய வந்தது. இத்துடன் 1943இல் பசிபிக் சமுத்திரத்தின் வட பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்தன. அலெவூட் நடவடிக்கையின் போது ஜப்பானியர்கள் 3 நீர்மூழ்கிக் கப்பல்களை இழந்தனர், அமெரிக்கர்களின் தரப்பில் நாசகாரிக் கப்பலும் சரக்கு கப்பலும் சேதமடைந்தன.

பசிபிக் சமுத்திரத்தின் தெற்கு மற்றும் மத்தியப் பிரதேசங்களிலும் நேச நாட்டினரின் நடவடிக்கைகள் மட்டானவையாக இருந்தன. இவை தனிப்பட்ட தீவுகளுக்கான ஸ்தல இழுபறிச் சண்டைகளாகவும் ஜப்பானியப் பாதுகாப்புச் சக்திகளுக்குச் சப்ளை செய்த போக்குவரத்து மார்க்கங்களில் கடற்படையினரின் தற்செயலான மோதல்களாகவும் இருந்தன. நேச நாட்டினரால் சலமோன் தீவுகள், நியூ கினியின் தென் கிழக்குப் பகுதி, நியூ பிரிட்டனின் மேற்குப் பகுதி, கில்பெர்ட் தீவுகள் ஆகியவற்றைப் பிடிக்க முடிந்தது. பசிபிக் சமுத்திரத்தில் தான் கைப்பற்றிய நிலைகளை இழக்கும் அபாயம் முதன்முதலாக ஜப்பானின் முன் தோன்றியது.

ஜப்பானிய போக்குவரத்து மார்க்கங்களில் போராடுவதற்காக நேச நாடுகள் விமானப்படையையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் பயன்படுத்தினர். ஆனால் விமானப்படை குறைவாகத்தான் பயன்படுத்தப்பட்டது, இதன் பயன்களும் குறைவானவையாகத்தான் இருந்தன. ஜப்பானியர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் பயணம் செய்ததால் அமெரிக்கர்கள் தமது B-24 குண்டு வீச்சு விமானங்களிலும் ''கத்தலினு'' எனும் தமது பறக்கும் கப்பல்களிலும் ராடார்களை அமைக்கத் துவங்கினர். 1943 இறுதியில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களும் போக்குவரத்து மார்க்கங்களில் நடைபெற்ற போராட்டத்தில் அவ்வப்போது கலந்து கொள்ளலாயின.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல்கள் (1943 இறுதியில் பசிபிக் சமுத்திரத்தில் இவற்றின் எண்ணிக்கை 123 ஆக இருந்தது) தமது இராணுவ நடவடிக்கைகளின் மண்டலங்களை படிப்படியாக விரிவுபடுத்தின: பிப்ரவரியில் இவை மஞ்சள் கடலில்

தோன்றின, ஜூலையிலிருந்து ஜப்பானியக் கடலில் தென்பட்டன. மாதந்தோறும் ஜப்பானியக் கடல் மார்க்கங்களில் சராசரியாக ஒரே நேரத்தில் 20 முதல் 30 வரையிலான அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் இயங்கின. 1943 செப்டெம்பர் வரை இவை தனித்தனியாக கடமைகளை நிறைவேற்றின, அக்டோபர் முதல் இவை குழுக்களாகச் செயல்பட்டன: 3 கப்பல்கள் அடங்கிய 2 அணிகளாக இவை கட்டளையை நிறைவேற்றச் சென்றன.

1943இல் ஜப்பானிய வர்த்தக கப்பல் துறை 18,03,000 டன் எடையை இழந்தது. ஏப்ரல்—டிசம்பரில் நீர்மூழ்கிக் கப்பல்களால் ஏற்பட்ட 11,32,000 டன் எடை இழப்பும் இதில் அடங்கும்.

இவ்வாறாக இராணுவ நடவடிக்கைகள் குறுகிய நோக்கமுடையவையாக இருந்தாலும் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் நேச நாடுகளுக்கு ஆதரவாக குறிப்பிட்ட மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதன் விளைவாய் 1943 இலையுதிர்காலத்தில் ஜப்பானிய அரசாங்கம் இறுதியாக போர்த்தந்திர தற்காப்பு நிலையை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

சீனாவிலும் பர்மாவிலும் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளும் குறுகிய நோக்கமுடையவையாக இருந்தன. சீனப் போர்முனையில் ஜப்பானியத் துருப்புகளின் நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை. ஓராண்டில் ஜப்பானியர்கள், விடுவிக்கப்பட்ட சீன பிரதேசங்களுக்கு எதிராக 150 தண்டனைப் படைகளை அனுப்பினாலும் திட்டமிட்ட லட்சியத்தை அடைய முடியவில்லை. பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்கள் மீது சோவியத் இராணுவம் அடைந்த வெற்றியால் ஊக்குவிக்கப்பட்ட சீன மக்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான தமது போராட்டத்தை விரிவுபடுத்த முனைந்தனர். சீன மக்கள் புரட்சிப் படைகள் (8வது, 4வது) கொரில்லாப் படை அணிகளோடு சேர்ந்து 80 மில்லியன் பேர்கள் வாழ்ந்த பிரதேசத்தை விடுவித்தன.

பர்மாவில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் இன்னும் குறுகியவையாக இருந்தன. ''ஒன்றிடமிருந்து ஒன்று மிகவும் மாறுபட்ட லட்சியங்களை அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் பின்பற்றியதால் 1944 ஜூன் வரையிலான பர்மிய யுத்தத்தின் வரலாறு கணிசமான அளவு, போர்த்தந்திரத் திட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மாறியதை சொல்லுவதாக மட்டுமே இருந்தது... இந்தியாவின் நலன்களை எங்குமே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை, பர்மாவின் விருப்பத்தை கவனத்தில் கொள்ளவில்லை''* என்று

---

* S. Prasad and others, *The Reconquest of Burma*, Vol. I, Calcutta, 1958, p. XXV.

இரண்டாம் உலக யுத்தத்தில் இந்திய இராணுவத்தின் வரலாற்றில் நியாயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1943 துவக்கத்தில் ஆங்கிலேயர்கள் இரண்டு சிறிய நடவடிக் கைகளை மட்டுமே — ஜனவரி — மேயில் பலப்படுத்தப்பட்ட டிவிஷனைக் கொண்டு அரக்கான் கரையிலும் பிப்ரவரி — ஏப்ரலில் பிரிகேடைக் கொண்டு மத்திய பர்மாவிலும் — நடத்தினர். அரக்கான் நட வடிக்கை தன் லட்சியத்தை நிறைவேற்றவில்லை. 77வது இந்திய பிரிகேடு மத்திய பர்மாவில் ஜப்பானியர்களின் பின்னணியில் படை யெடுத்து பல சீர்குலைவு நடவடிக்கைகளை நிறைவேற்றியது. ஆனால் படைவீரர்களில் மூன்றில் ஒரு பங்கினரைப் பறிகொடுத்த பின் இந்தியாவிற்குத் திரும்பியது. 1943 மேயில் பர்மாவில் மழைக் காலம் துவங்கியது. போர்முனையில் முழு அமைதி துவங்கியது. 1943ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் பெரும்பாலும் விமானப் படை இயங்கியது. வானில் ஆதிக்கத்தை வெல்லுவதற்காக ஜப்பா னியர்கள் போராடினர். இது வறண்ட காலம் முழுவதும் தொடர்ந் தது. ஆனால் பர்மாவில் பெரும் இராணுவ நடவடிக்கைகள் இல்லா திருந்தாலும் ஜப்பானிய படைத் தலைமையால் இந்நாட்டில் தனது நிலைகளை வலுப்படுத்த இயலவில்லை. பர்மியப் போர்முனையில் நடை பெற்ற நடவடிக்கைகள் தென் கிழக்கு ஆசியாவில் நிலவரம் மாறு வதன் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்தவில்லை.

அத்தியாயம் 5

தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

யுத்தத்தின் முதல் இரண்டரை ஆண்டுகளில் செஞ்சேனையின் தன்னல மற்ற போராட்டம் சோவியத் யூனியனின் பலத்தைக் காட்டியது, சர்வதேச அரங்கில் இதன் நிலைகளை பலப்படுத்தியது. ''யுத்தத்தின் முடிவை விரைவாக்குவதைப் பற்றி'' சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் வெளிவிவகாரத் துறை அமைச்சர்களின் மாஸ்கோ மகாநாடு (1943, அக்டோபர் 19–30) செய்த முடிவும் ''பாசிச ஜெர்மனிக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதைப் பற்றி'' மற்றும் ''1944 மேயில் மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதைப் பற்றிய'' டெஹ்ரான் மகாநாட்டின் முடிவுகளும் பாசிசத்திற்கு எதிரான பொதுப் போராட்டத்தில் சோவியத் யூனியனின் பங்கைப் பற்றிய அங்கீகாரத்தின் வெளிப்பாடாக அமைந்தன. மாஸ்கோ மகாநாட்டின், குறிப்பாக டெஹ்ரான் மகாநாட்டின் (1943, நவம்பர் 28–டிசம்பர் 1) முடிவுகள், ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியை பிளப்பதை நோக்கமாகக் கொண்ட பாசிசத் திட்டங்களின் முழுத் தோல்விக்கு சான்று பகர்ந்தன.

பாசிசக் கூட்டணி முகாமிலோ நிலவரம் வேறு விதமானதாக இருந்தது. நடுநிலை நாடுகளில் பாசிச ஜெர்மனியின் செல்வாக்கு கடுமையாகச் சீர்கேடடைந்தது. 1943 செப்டெம்பரில் இத்தாலி ஹிட்லர் கூட்டணியிலிருந்து வெளியேறியது. துணை நாடுகளில்—பின்லாந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரியில்—உள்நாட்டு அரசியல் நிலவரம் பெரிதும் கூர்மையடைந்தது. இந்நாடுகளிலிருந்த பரவலான உழைப்பாளி மக்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமையில் இந்நாடுகள் பாசிச ஜெர்மனிக்கு ஆதரவான யுத்தத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்கான போராட்டத்தைத் தீவிரப் படுத்தினர்.

பொருளாதாரத் துறையிலும் நிலவரம் பாசிச ஜெர்மனிக்கு ஆதரவாயில்லை. 1944இல் மொத்தத்தில் இதன் தொழிற்துறை எல்லா முக்கிய இராணுவப் பொருட்களின் உற்பத்தியிலும் உயர்

வான குறியீடுகளைக் கொண்டிருந்த போதிலும் இது இவ்வாறு இருந்தது. 1943 டிசம்பரோடு ஒப்பிடுகையில் 1944 ஜூலையில் இதன் இராணுவ உற்பத்தியின் அளவு 45 சதவிகிதம் அதிகரித்தது. இத்தகையதொரு அதிகரிப்பு, ஜெர்மானியப் பொருளாதாரம் முழுவதையும் அசாதாரணமான முறையில் முடுக்கி விட்டது, ஜெர்மனிக்கு பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்ட அயல் நாட்டுத் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றிச் சுரண்டியது, ஆக்கிரமித்த நாடுகளை வெட்கங்கெட்ட வகையில் கொள்ளையடித்தது ஆகியவற்றின் பயனாக இருந்தது.

ஆனாலும் பாசிச ஜெர்மனியில் உற்பத்தி அதிகரிப்பின் வேகங்கள் (முழு முதல் அளவுகளில்) சோவியத் யூனியனின் உற்பத்தி அதிகரிப்பு வேகங்களை விடக் குறைவாக இருந்தன. உதாரணமாக 1942—1944இல் சோவியத் டாங்கி தொழிற்துறை 77,708 டாங்கிகளையும் தானியங்கி பீரங்கி அமைப்புகளையும் உற்பத்தி செய்தது. இதே காலகட்டத்தில் ஹிட்லர் ஜெர்மனியில் 46,000 டாங்கிகளும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1942—1944இல் ஜெர்மனியில் 77,970 விமானங்கள் செய்யப்பட்டன. இதே காலகட்டத்தில் சோவியத் யூனியனில் 92,775 விமானங்கள் செய்யப்பட்டன. மற்ற வகையான ஆயுதங்களின் உற்பத்தியிலும் பாசிச ஜெர்மனி சோவியத் யூனியனிடமிருந்து கணிசமான அளவு பின்தங்கியிருந்தது. எனவே 1944இல், தனது பொருளாயத சக்திகளையும் ஆட்களையும் அணி திரட்டுவதில் பாசிச ஜெர்மனி உயர் மட்டத்தை அடைந்திருந்தாலும் யுத்த முறைகளில் சோவியத் யூனியன் இறுதியாகவும் உறுதியுடனும் விஞ்சி நின்றது. செஞ்சேனையின் வெற்றிகளுக்கான மிக முக்கியக் காரணிகளில் இதுவும் ஒன்றாகும்.

சோவியத் இராணுவம் இன்னமும் பலமடைந்தது. 1944 ஜனவரி 1ஆம் தேதி இதில் (உள்நாட்டு இராணுவ வட்டங்களைச் சேர்க்காது) 85,62,000 பேர் இருந்தனர். தரைப்படையில் 73,37,000 பேர், வான் படையில் 5,36,000 பேர், கடற்படையில் 3,91,000 பேர், வான் எதிர்ப்பு பாதுகாப்புப் படையில் 2,98,000 பேர் இருந்தனர். நிரந்தர இராணுவத்தில் 63,54,000 பேரும் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையின் சேம இருப்பில் சுமார் 4,88,000 பேரும் இருந்தனர். கணிசமான அளவு துருப்புகள் தொலைக் கிழக்கிலும் டிரான்ஸ் பைக்காலிலும் டிரான்ஸ் காக்கசஸிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

1943 டிசம்பர் 1ஆம் தேதி பாசிச ஜெர்மானிய இராணுவத்தில் 1,01,69,000 பேர் (அதாவது தரைப்படையில் 70,90,000 பேர், வான் படையில் 19,19,000 பேர், கடற்படையில் 7,26,000

பேர், எஸ். எஸ். படையில் 4,34,000 பேர்) இருந்தனர். இவர்களில் 66,82,000 பேர் நிரந்தர இராணுவத்திலும் சேமப் படையில் 34,87,000 பேரும் இருந்தனர். தரைப்படை நிரந்தர இராணுவத்தில் மூன்றில் இரண்டு பகுதி—63 சதவிகித டிவிஷன்கள் (198 டிவிஷன்களும் 6 பிரிகேடுகளும்), 71 சதவிகித சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 73 சதவிகித டாங்கிகளும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும்—1944ஆம் ஆண்டின் துவக்கத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் குவிக்கப்பட்டிருந்தது. ஜெர்மனியினுடைய கூட்டாளிகளின் எல்லா நிரந்தரத் துருப்புகளும்—38 டிவிஷன்களும் 12 பிரிகேடுகளும்—இப்போர்முனையில்தான் இருந்தன. எஞ்சிய 116 ஜெர்மானிய டிவிஷன்களும் 2 பிரிகேடுகளும் பின்வருமாறு நிறுத்தப்பட்டிருந்தன: நார்வேயில் 13, டென்மார்க்கில் 6, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சில் 47, இத்தாலியில் 21, ஆல்பானியா, யுகோஸ்லாவியா, கிரீசில் 21 டிவிஷன்களும் 1 பிரிகேடும், OKWஇன் சேம இருப்பில் (ஜெர்மனி, ஆஸ்திரியா, செக்கோஸ்லொவாக்கியா, போலந்தில்) 8 டிவிஷன்களும் 1 பிரிகேடும்.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்லா நாடுகளுடனும் ஒப்பிடுகையில் மிக அனுகூலமான சூழ்நிலைகளில் இருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதாரம் உயர்வான வளர்ச்சியை அடைந்தது. 1943இல் அமெரிக்க இராணுவத் தொழிற்துறை 85,900 விமானங்கள், 38,500 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கிகள், 2,20,900 பல்வேறு வித பீரங்கிகள், 26,800 மார்டர் பீரங்கிகளை உற்பத்தி செய்தது, 262 பிரதான ரகச் சண்டைக் கப்பல்களைக் கட்டியது. 1943 இறுதியில் அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கை 1,04,40,000ஆக இருந்தது. இவர்களில் 74,82,000 பேர் தரைப்படை மற்றும் விமானப்படையிலும் 29,58,000 பேர் கடற்படையிலும் கடற்காலாட்படையிலும் இருந்தனர். அமெரிக்க இராணுவத்தில் மூன்றில் இரண்டு பகுதி நாட்டின் உள்ளேயே இருந்தது. அமெரிக்க இராணுவத்தில் இருந்த 90 டிவிஷன்களில் 31 டிவிஷன்கள் (ஐரோப்பாவில்—16, வட ஆப்பிரிக்காவில்—2, பசிபிக் சமுத்திரத்திலும் ஆசியாவிலும்—13) போர்க்களத்தில் இருந்தன.

இதே ஆண்டில் பிரிட்டனின் இராணுவ தொழிற்துறை 26,300 விமானங்கள், 7,500 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கிகள், 1,18,200 பல்வேறுவித பீரங்கிகள், 17,100 மார்டர் பீரங்கிகள், 85 பிரதான ரகச் சண்டைக் கப்பல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தது. 1943 இறுதியில் பிரிட்டிஷ் இராணுவத்தில் 44,35,000 பேர் (தரைப்படையில் 26,80,000 பேர், விமானப்படையில் 9,99,000 பேர், கடற்படையில் 7,56,000 பேர்) இருந்தனர். கிரேட் பிரிட்டனின் டொமினியன்களிலும் காலனிகளிலும் இருந்த

இராணுவங்களும் பிரிட்டிஷ் படைத் தலைமைக்கு உட்பட்டிருந்தன. இந்நேரத்தில் இவற்றின் எண்ணிக்கை 40 லட்சத்திற்கும் அதிகமானதாக இருந்தது (கானடாவில் 6,80,000 பேர், ஆஸ்திரேலியாவில் 6,95,000 பேர், நியூ ஜீலாந்தில் 1,30,000 பேர், தென்னாப்பிரிக்க ஐக்கியத்தில் சுமார் 3,00,000 பேர், இந்தியாவில் 20,23,000 பேர். ஆப்பிரிக்க காலனி துருப்புகளில் 3,50,000க்கும் மேற்பட்டோர் இருந்தனர்).

பிரிட்டிஷ் இராணுவத்தில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி தலைநாடுகளில் இருந்தது. தரைப்படையிலிருந்த 37 டிவிஷன்கள், 21 தனி பிரிகேடுகளில் 24 டிவிஷன்கள் மற்றும் 6 பிரிகேடுகள் பிரிட்டிஷ் தீவுகளிலும், 12 டிவிஷன்கள் மற்றும் 12 பிரிகேடுகள் மத்திய தரைக் கடல் போர்க்களத்திலும் 1 டிவிஷன் மற்றும் 3 பிரிகேடுகள் இந்தியாவிலும் இருந்தன. டொமினியன்கள் மற்றும் காலனிகளின் துருப்புகளில் பெரும் பகுதியை கிரேட் பிரிட்டனின் அரசாங்கம் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்த தன் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுத்தியிருந்தது.

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை தனது முக்கியச் சக்திகளை சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் குவித்தது. இப்போர்முனைதான் ஜெர்மனிக்குப் பிரதானமாக இருந்தது என்பதை இது காட்டுகிறது. அதே நேரத்தில் ஐரோப்பாவில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளின் நடவடிக்கைகள் மட்டானவையாக இருந்தன. உதாரணமாக 1944 துவக்கத்தில் இத்தாலியப் போர்முனையில் ஹிட்லரின் 20 டிவிஷன்களுக்கு எதிராக நேச நாடுகளின் (பிரிட்டன், அமெரிக்கா) 13.5 மில்லியன் பேரடங்கிய படையில் 16 பிரிட்டிஷ் டிவிஷன்களும் 9 அமெரிக்க டிவிஷன்களும் மட்டுமே செயல்பட்டன. இவ்வாறாக மேலைய நேச நாடுகளின் இராணுவத்தில் சிறிய பகுதி மட்டுமே பாசிசக் கூட்டணியின் படைகளுக்கு எதிராகப் போரிட்டது.

1943ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் உருவாகிய அனுகூலமான நிலவரம், 1944ஆம் ஆண்டு தன் நாடு முழுவதையும் பாசிச ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கவும் இராணுவ நடவடிக்கைகளை எதிரியின் பரப்பிற்கு மாற்றவும் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஐரோப்பிய மக்களை ஹிட்லர் கொடுமையிலிருந்து விடுவிக்கத் துவங்கவும் சோவியத் இராணுவத்திற்கு வாய்ப்பளித்தது. செஞ்சேனையின் நடவடிக்கைகளுக்கு எது அனுகூலமாயிருந்தது?

1941—1943ஆம் ஆண்டுகளின் நடவடிக்கைகளில் போர்த்தந்திர முன்முயற்சிக்காகப் போராட்டம் நடந்தது என்றால் 1944ஆம் ஆண்டின் நடவடிக்கைகளில் போர்த்தந்திர முன்முயற்சி செஞ்சேனை

யின் கரங்களில் உறுதியாக இருந்தது, பரவலான போர்முனையில் பல்வேறு திசைகளில் பல தொடர்ச்சியான, பரஸ்பரத் தொடர்புடைய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இது செஞ்சேனைக்கு வழிவகுத்தது. இந்நடவடிக்கைகளின் விளைவாய் ஜெர்மானியப் படைத் தலைமை தனது சக்திகளையும் சாதனங்களையும் தனித்தனியே பிரித்து பகுதி பகுதிகளாகச் சண்டையில் ஈடுபடுத்துமாறு செய்தது, எனவே இதனால் தாக்கி வந்த சோவியத் துருப்புகளுக்கு பெரிய பதில் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய இயலவில்லை.

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை மேற்கொண்டு யுத்தத்தை நடத்தும் தனது திட்டங்களில், ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியில் பிளவு ஏற்படும் என்பதன் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தது. 1943ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர்காலத்திலும் கடும் தோல்விகள் ஏற்பட்ட போதிலும், இப்பிளவு ஏற்படும் வரை ஜெர்மானிய இராணுவத்தால் சோவியத் இராணுவத்திற்கு எதிராக இழுபறியான தற்காப்பு யுத்தத்தை நடத்த முடியுமென ஹிட்லர் படைத் தலைமை கருதியது. இதற்கேற்ப பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை 1944ஆம் ஆண்டு சோவியத்-ஜெர்மானியப் போர்முனை பூராவும் உறுதியாகத் தற்காப்பு நிலையை மேற்கொள்வது என்றும் ஆழ் படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பையும் இயற்கையான எல்லைகளையும் ஆதாரமாகக் கொண்டு தன் நிலைகளைத் தக்க வைப்பது என்றும் திட்டமிட்டது. இதோடு கூட தினேப்பர் ஆற்றின் மேற்கு கரையிலிருந்த சோவியத் துருப்புகளின் தாக்குமுனைகளை அழிப்பது என்றும் கிரீமியாவில் துண்டிக்கப்பட்டதன் படைத் திரட்டுடன் இணைவது என்றும் இதன் மூலம் ''கிழக்கு அரணில்'' தற்காப்பைப் புனரமைப்பது என்றும் திட்டமிட்டது. ஆனால் யுத்தத்தின் போக்கில் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியில் பிளவு ஏற்படும் என்று ஹிட்லர் நம்பிக்கை கொண்டிருந்ததானது பாசிச ஜெர்மானியத் தலைமையின் அதிசாகசத் தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறது. விடுதலை நாட்டமுள்ள மக்களுடைய அடிப்படை நலன்களின் பொதுமையும் சோவியத் யூனியனின் விவேகமான வெளிநாட்டுக் கொள்கையும் யுத்தம் தொடரும் வரை கூட்டணி நீடித்திருக்க வகை செய்தன என்பதை இது கவனத்தில் கொள்ளவில்லை. பாசிஸ்டுகள் சோவியத் இராணுவத்தையும் சோவியத் போர்க் கலையையும் முன்போன்றே சரிவர மதிப்பிடாததும் மாறாக தமது சக்திகளை, குறிப்பாக ஜெர்மானியப் போர்க் கலையை மிகைப்படுத்தி மதிப்பிட்டதும் ஹிட்லரின் திட்டங்கள் தவிடு பொடியான தற்குக் காரணங்களாகும்.

சோவியத் இராணுவத்தின் வெற்றிகள், ஐரோப்பிய மக்களின் மேன்மேலும் வலுத்து வந்த விடுதலைப் போராட்டம் ஆகியவற்றின்

தாக்கத்தினுல் அமெரிக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் எதிர்பார்ப்பு கொள்கையை கைவிட்டு, இரண்டாம் பட்சமான போர்க்களங்களில் சிறு சக்திகளைக் கொண்டு இயங்குவதிலிருந்து ஐரோப்பா, ஆசியா, பசிபிக் சமுத்திரத்தில் தம் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் கட்டாயத்திற்குள்ளாயின.

1. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் பக்கவாட்டுப் பகுதிகளில் பாசிச ஜெர்மானியத் துருப்புக்களின் முறியடிப்பு

லெனின்கிராத்-நோவ்கரத் நடவடிக்கை (1944 ஜனவரி 14 — மார்ச் 1)

கூர்ஸ்க் சமரிலும் தினேப்பர் ஆற்றுக்காக நடந்த சமரிலும் பாசிச ஜெர்மனித் துருப்புகள் முறியடிக்கப்பட்டதன் பயனுய் 1944ஆம் ஆண்டின் துவக்கத்தில் எதிரியின் ''வடக்கு'' படைத் தொகுதியை (16வது, 18வது படைகள்) முறியடித்து, லெனின்கிராத் நகரத்தின் முற்றுகையை முற்றிலுமாக அகற்றி லெனின்கிராத் பிராந்தியத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கும் நோக்கோடு லெனின் கிராத் மற்றும் நோவ்கரத் அருகே தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாகின.

உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் இந்நடவடிக்கையில் லெனின்கிராத் சேனையின் (தளபதி ஜெனரல் கோவரவ்) 42வது, 47வது படைகள், 2வது முக்கியத் தாக்குதல் படை, வோல்ஹவ் சேனையின் (தளபதி ஜெனரல் மெரெட்ஸ்கோவ்) 8வது, 54வது, 59வது படைகள், 2வது பால்டிக் சேனையின் (தளபதி ஜெனரல் பபோவ்) 1வது முக்கியத் தாக்குதல் படை, 22வது படை, செம் பதாகை பட்டம் பெற்ற பால்டிக் கப்பற்படை, லதோகா மற்றும் ஒனீகா இராணுவ ப்ளீட்டுகள், தொலை தூர விமானப்படை ஆகிய வற்றையும் கொரில்லாப் படைவீரர்களையும் ஈடுபடுத்தியது. சோவியத் தரப்பில் 12,52,000 போர்வீரர்கள் இருந்தனர், 20,183 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,580 டாங்கிகளும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 1,386 போர் விமானங்களும் இருந்தன.

அரை முற்றுகை நிலையிலிருந்த லெனின்கிராத், நோவ்கரத் பிரதேசங்களிலிருந்து லெனின்கிராத் மற்றும் வோல்ஹவ் சேனை களின் இரண்டு பலம் மிக்கப் படைத் திரட்டுகளைக் கொண்டு ஒரே நேரத்தில் தாக்கி 18வது ஜெர்மானியப் படையின் பக்கவாட்டு படைத் திரட்டுகளை முறியடிப்பது, பின் கின்கிசேப், லூகா திசை களில் தாக்குதலைத் தொடர்ந்து இப்படையின் முக்கியச் சக்திகளை முற்றிலுமாகத் தோற்கடித்து லூகா ஆற்றின் எல்லைகளை அடைவது

என்பதுதான் உயர்மட்ட பிரதானப் படைத்தலைமையின் திட்டமாக இருந்தது. மேற்கொண்டு இரண்டாவது பால்டிக் சேனையுடன் சேர்ந்து நார்வா, ப்ஸ்கோவ் திசைகளில் முன்னேறும்படியும் எதிரியின் 16வது படையைத் தோற்கடித்து லெனின்கிராத் பிராந்தியத்திலிருந்து முற்றிலுமாக விரட்டியடிக்குமாறும் இச்சேனைகளின் துருப்புகளுக்குக் கட்டளையிடப்பட்டது.

பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தற்காப்பு மிகப் பலமானதாக இருந்தது; கண்ணிவெடிகளாலும் முள்வேலிகளாலும் மூடி மறைக்கப்பட்ட கான்கிரீட் மற்றும் மரத் தடுப்புகளால் ஆன பீரங்கி சுடுமிடங்கள் இதில் அடங்கியிருந்தன. பெரிய விட்டமுடைய பீரங்கிகளும் பாசிஸ்டுகளிடம் ஏராளமாக இருந்தன, இவற்றைக் கொண்டுதான் அவர்கள் லெனின்கிராத் நகரத்தைச் சுட்டனர். ''வடக்கு'' படைத் தொகுதியில் (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் கூஹ்லர், ஜனவரி இறுதியிலிருந்து கர்னல் ஜெனரல் லின்டெமன்) 7,41,000 ஆட்கள் இருந்தனர், 10,070 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 385 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 370 விமானங்களும் இருந்தன. சோவியத் துருப்புகள் ஆட்சக்தியில் 1.7 மடங்கும் பீரங்கிகளில் 2 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 4.1 மடங்கும் போர் விமானங்களில் 3.7 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன.

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின் போது சோவியத் படைத்தலைமை சேனைகளின் உள்ளேயே படைகளை மாற்றியமைத்தது. 1943 நவம்பர் முதல் 1944 ஜனவரி வரை செம்பதாகை பட்டம் பெற்ற பால்டிக் கப்பற்படை 2வது முக்கியத் தாக்குதல் படையையும் ஏராளமான ஆயுத, இராணுவத் தளவாடங்களையும் ஓரனியென்பாவும் தாக்குமுனைக்கு கொண்டு வந்தது.

இராணுவ நடவடிக்கைகளின் போக்கிற்கேற்ப லெனின்கிராத்-நோவ்கரத் நடவடிக்கையை 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (ஜனவரி 14—30) லெனின்கிராத் சேனையின் துருப்புகள் பால்டிக் கடற்படையின் உதவியோடு எதிரியின் நீண்ட கால தற்காப்பைப் பிளந்து, எதிரியின் கிராஸ்னசேல்ஸ்க்-ரோப்ஷின்ஜே படைத் திரட்டை முறியடித்து, ஜனவரி 30 இறுதியில் லூகா ஆற்றிலிருந்த முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எதிரியின் தற்காப்பு எல்லையை அடைந்தன. இதே கட்டத்தில் வோல்ஹவ் சேனையின் துருப்புகள் எதிரியின் நோவ்கரத் படைத் திரட்டை முறியடித்து, நோவ்கரத் நகரைக் கைப்பற்றி லூகாவை நோக்கி தாக்குதலைத் துவங்கின. இரு சேனைகளின் முயற்சிகளால் லெனின்கிராத் நகரத்தை மாஸ்கோவுடன் இணைக்கும் இருப்புப் பாதை எதிரியிடமிருந்து விடுவிக்கப்படுத்தப்பட்டது. 2வது பால்டிக் சேனை தனது தீவிர

நடவடிக்கைகளால் எதிரியின் 16வது படையைக் கட்டிப் போட்டு இதை லெனின்கிராத், நோவ்கரத் அருகே அனுப்ப முடியாதபடி செய்தது.

நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தில் (ஜனவரி 31— பிப்ரவரி 15) லெனின்கிராத் சேனை தன் முயற்சிகளை கின்கிசேப் திசையில் மேற்கு நோக்கி செலுத்தியது, வேறொரு பகுதியைக் கொண்டு லூகாவைத் தாக்கியது. வோல்ஹவ் சேனை தனது பிரதானத் தாக்குதலை லூகா நகரைச் சுற்றி வளைத்து தென் கிழக்கிலிருந்து தொடுத்தது. பிப்ரவரி 16 வாக்கில் சோவியத் துருப்புகள் லூகா எதிர்ப்பு மையத்தைக் கைப்பற்றி, எஸ்தோனியக் குடியரசினுள் நுழைந்து ப்ஸ்கோவை நோக்கி முன்னேறின.

மூன்றாவது கட்டத்தில் (பிப்ரவரி 16—மார்ச் 1) லெனின்கிராத் சேனையின் துருப்புகள் 2வது பால்டிக் சேனையுடன் (தாக்குதல் மண்டலம் குறுகியதையடுத்து வோல்ஹவ் சேனை பிப்ரவரி 15ஆம் தேதி கலைக்கப்பட்டு இதன் துருப்புகள் லெனின்கிராத் சேனைக்கும் 2வது பால்டிக் சேனைக்கும் அளிக்கப்பட்டன) நெருக்கமாகத் தொடர்பு கொண்டு தாக்குதலைத் தொடர்ந்து 18வது படையையும் 16வது படையின் கணிசமான பகுதியையும் முறியடிப்பதை முடித்து பலப்படுத்தப்பட்ட ப்ஸ்கோவ்-ஒஸ்த்ரோவ் பிரதேசத்தையும் இதன் தெற்கேயிருந்த நோவரிஷேவ் மற்றும் புஸ்தோஷ்கா எல்லைகளையும் அடைந்தன. எதிரி லெனின்கிராதிலிருந்து 220—280 கி. மீ. தூரம் அப்பால் தள்ளப்பட்டான்.

லெனின்கிராத்-நோவ்கரத் நடவடிக்கையின் பயனாய் 20க்கும் மேற்பட்ட எதிரி டிவிஷன்கள் முறியடிக்கப்பட்டன, லெனின்கிராத் நகரத்தின் முற்றுகை முற்றிலுமாக உடைக்கப்பட்டது, கிட்டத்தட்ட லெனின்கிராத் பிராந்தியம் முழுவதும் கலீனின் பிராந்தியத்தின் பகுதியும் விடுவிக்கப்பட்டன. கரேலியா பூசந்தியிலும் பால்டிக் குடியரசுகளிலும் எதிரியை முறியடிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. லெனின்கிராத் அருகே சோவியத் துருப்புகளின் வெற்றி லெனின்கிராதிற்கு மட்டுமின்றி ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்தின் போக்கு முழுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

இவ்வெற்றி அயல்நாடுகளிலும் எதிரொலியை ஏற்படுத்தியது. ''ஸ்டார்'' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை அந்நாட்களில் பின்வருமாறு எழுதியது: ''லெனின்கிராத் அருகே ஜெர்மானியர்கள் முறியடிக்கப்பட்டதானது பாசிசப் பலத்தைக் குன்றச் செய்வதில் எத்தகைய பங்காற்றியுள்ளது என்பது எல்லா சுதந்திர மக்களுக்கும் பாசிஸ்டுகளால் அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கும் புரிகிறது.

லெனின்கிராத் இன்றைய யுத்தத்தின் வீரத் திருநகர்களில் ஒன்ருக எப்போதோ ஆகிவிட்டது. லெனின்கிராத் அருகே நடந்த சமர் ஜெர்மானியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது பாரிஸ், பிரஸ்ஸல்ஸ், ஆம்ஸ்டர்டாம், வார்ஸா, ஓஸ்லோ ஆகிய இடங்களில் தாங்கள் தற்காலிக எஜமானர்கள் மட்டுமே என்று ஜெர்மானியர்கள் உணருமாறு செய்தது.''

''ஆக்கிரமிப்பாளர்களால் நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலும் தமது நேசத்திற்குரிய நகரத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்து... இதன் மூலம் சோவியத் யூனியனுடைய மக்களின் அச்சமற்ற மனத்திடத்தை வெளிப்படுத்திய நகரத்தின் வீரஞ் செறிந்த போர்வீரர்கள், அதன் விசுவாசம் மிக்க ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் நினைவாய்''* அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 1944 மே மாதம் தன் மக்கள் சார்பாய் லெனின்கிராத் நகரத்துக்கு விசேஷ நற்சான்றிதழை அனுப்பினுர்.

லெனின்கிராத் நகரத்தின், வீர காவியம் 900 பகல்களும் இரவுகளும் நீடித்தது. பட்டினி, மிருகத்தனமான விமான குண்டு வீச்சுகள், பீரங்கித் தாக்குதல்கள் ஆகியவற்ருல் லெனின்கிராதை நசுக்க பாசிஸ்டுகள் முயன்றனர். இவர்கள் 1,07,000க்கும் அதிகமான கனவெடி குண்டுகள், எரிகுண்டுகளையும் 1,50,000 பீரங்கி குண்டுகளையும் வீசினர். ஆனுல் நாடு முழுவதன் உதவியோடு கூட லெனின்கிராத் வாசிகள் எதிர்த்து நின்று வெற்றி பெற்றனர். இவர்கள் காட்டிய உறுதியும் வீரமும் சோவியத் மக்கள், போர்வீரர்களின் உயர்வான தார்மீக மனப்பாங்கிற்கும் சோஷலிசத் தாயகத்தின் பால் இவர்களுக்குள்ள விசுவாசத்திற்கும் மிகச் சிறப்பான எடுத்துக் காட்டாகும். பட்டினி, குண்டுகளால் நூருயிரக் கணக்கான லெனின்கிராத் வாசிகள் இறந்து போனதானது என்றென்றும் பாசிசத்தின் மிகக் கொடுமையான குற்றங்களில் ஒன்ருக இருக்கும்.

லெனின்கிராத்-நோவ்கரத் நடவடிக்கையின் சிறப்பு அம்சம் என்னவெனில் காடுகளும் சதுப்பு நிலமும் இருந்த இடங்களில் மிதமான பனிக்காலத்தில் எதிரியின் பலம் மிக்க, நீண்டகால, பல படை வரிசைகளை அடக்கிய தற்காப்பை பிளந்து கொண்டு சென்றதாகும். அரை முற்றுகையிலிருந்த நகரத்திலிருந்தும் கடலோர தாக்குமுனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. பொதுவான போர்த்தந்திர கடமையை நிறைவேற்றிய சேனைகள், கடற்படை மற்றும் கொரில்லாப் படைவீரர்களின் கச்சிதமான பரஸ்பர செயலாக்கம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது இந்நடவடிக்கையின் விசேஷ அம்சமாகும். கடற்படை துருப்புகளையும் ஆயுதத்

* இரு முறை விருது பெற்ற லெனின்கிராத், லெனின்கிராத், 1945, பக்கம் 39 (ருஷ்ய மொழியில்).

தளவாடங்களேயும் ஏற்றிச் சென்றது, இராணுவத் தாக்குதலுக்கு பீரங்கிகளேக் கொண்டு ஆதரவளித்தது. கொரில்லாப் படைவீரர் கள் காலாட்படைத் துருப்புகளின் தலைமையகத் திட்டத்திற்கேற்ப எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை அழித்தல், எதிரியின் நிர்வாக உறுப்புகள், கிடங்குகள் போன்றவற்றை ஒழித்துக் கட்டு தல் ஆகியவை சம்பந்தமான நடவடிக்கைகளே மேற்கொண்டனர். சேனைகளின் பிரதானத் தாக்குதல் திசைகளில் பலம் மிக்க படைத் திரட்டுகளே அமைத்தது, துருப்புகள் பல வரிசைகளில் நிறுத்தப்பட் டிருந்தது, இரண்டாவது படை வரிசைகளேத் திறமையாகப் பயன் படுத்தியது, துருப்புகளே இடையறாது வழிநடத்தியது ஆகியவை நடவடிக்கையின் வெற்றிக்கு உதவின.

மேற்குக் கரையோர உக்ரேனில்
பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு
(1943 டிசம்பர் 24 — 1944 ஏப்ரல் 17)

இந்த போர்த்தந்திர தாக்குதல் நடவடிக்கை 1வது, 2வது, 3வது, 4வது உக்ரேனிய சேனைகள் மற்றும் 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது. பாசிச ஜெர்மானிய இராணுவத் தின் தென் பகுதியை (100 டிவிஷன்கள் வரை வைத்திருந்த ''தெற்கு'' மற்றும் "A" படைத் தொகுதிகளே) முறியடிப்பது, மேற்குக் கரையோர உக்ரேனே விடுவிப்பது, பால்கனிலும் போலந் திலும் தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளே ஏற்படுத்துவது ஆகியவைதான் இந்நடவடிக்கையின் லட்சியமாக இருந்தன.

முதலில் எதிரியை பக்கவாட்டுப் பகுதிகளிலும் மையத் திலும் (லுட்ஸ்க், ரோவ்னு, கர்சுன்-ஷிவ்சென்க்கவ்ஸ்கி, கிரிவோய் ரோக், நீக்கபல் பிரதேசங்களில்) முறியடித்து, சோவியத் இராணு வத்தை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கும் முகப்புகளே ஒழிப்பது, பின் மேற்குக் கரையோர உக்ரேனில் பாசிச ஜெர்மானியத் துருப்பு களின் தற்காப்பு போர்முனே முழுவதையும் பலத்த தாக்குதல்களால் பிளந்து இவற்றை பகுதி பகுதிகளாக ஒழிப்பது என்று சோவியத் படைத் தலைமை திட்டமிட்டது.

மேற்குக் கரையோர உக்ரேனில் இயங்கிய எதிரி துருப்புகளில் 18 லட்சம் பேர் இருந்தனர். இவர்களிடம் 16,800 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 2,200 டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகள், 1,460 விமானங்கள் இருந்தன. சோவியத் தரப்பில் 2.2 லட்சம் போர்வீரர்கள் இருந்தனர், 28,654 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 2,015 டாங்கிகள், தானியங்கி

பீரங்கி அமைப்புகளும் 2,600 போர் விமானங்களும் இருந்தன. இவ்வாறாக சோவியத் துருப்புகள் ஆட்பலத்தில் 1.3 மடங்கும் பீரங்கிகளில் 1.7 மடங்கும் விமானங்களில் 1.8 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன. டாங்கிகளில் மட்டுமே சோவியத் துருப்புகள் எதிரிக்குச் சிறிது விட்டுக் கொடுத்தன.

இந்தப் போர்த்தந்திர திசையில் சோவியத் துருப்புகளின் தயாரிப்பிற்குப் பல சிறப்பு அம்சங்கள் இருந்தன. முதலாவதாக இது மிகக் கடினமானதொரு சூழ்நிலையில் — சோவியத் படைப்பிரிவுகளும் யூனிட்டுகளும் தினேப்பரில் தாம் கைப்பற்றிய தாக்குமுனைகளை விரிவுபடுத்துவதற்காக உக்கிரமமாக போரிட்டுக் கொண்டிருந்தன, 1வது உக்ரேனிய சேனையின் பிரதான சக்திகள் கீவ் திசையில் எதிரியின் பலத்த பதிலடியை தகர்த்துக் கொண்டிருந்தன — நிறைவேற்றப்பட்டது. இரண்டாவதாகத் துருப்புகளின் ஆயத்தம் வசந்த கால ஆரம்பத்தில் சாலைகள் இல்லாத சேறும் சகதியுமான சூழ்நிலைகளில் நடந்தது. பீரங்கிப்படைக்கு உதவுவதற்காக யூனிட்டுகளிலும் படைப்பிரிவுகளிலும் துப்பாக்கிச் சுடும், கண்ணி வெடி அகற்றும் துணைப் பிரிவுகளைக் கொண்ட விசேஷக் குழுக்கள் அமைக்கப்பட்டன. படைக் கிடங்குகளின் கிளைகள் மற்றும் டிவிஷன் கிடங்குகள் இயன்ற வரை துருப்புகளுக்கு அருகே கொண்டுவரப்பட்டன.

மூன்றாவதாக, துருப்புகளை இடம் மாற்றுதல், தீர்மானங்களை எடுத்து, வடிவமைத்து, உரிய இடத்திற்குத் தெரியப்படுத்துதல், துவங்கும் பிரதேசத்தில் முன்கூட்டியே பொறியியல் உபகரணங்களை அமைத்தல் மற்றும் நிர்வாக மையங்களை துருப்புகளுக்கு அருகே கொண்டு வருதல் ஆகிவற்றிற்கு அவசியமான நேரத்தை குறைத்ததன் மூலம் இந்நடவடிக்கைகளுக்கான தயாரிப்புகள் குறைவான காலகட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

1943 கோடையிலிருந்து சேனைகள் கிட்டத்தட்ட இடையறாது கடும் சண்டைகளில் ஈடுபட்டதால் போர்வீரர்களை தார்மீக-மனநிலை ரீதியாகத் தயார்படுத்துவதன் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இராணுவத்திற்கு பெருமளவில் வந்தவர்களுக்கு அரசியல் கல்வி, மற்றும் பயிற்சி அளிப்பதன் மீதும் பெருங் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்குக் கரையோர உக்ரேனில் போர்த்தந்திர நடவடிக்கை இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. முதல் கட்டமாகிய பனிக்கால கட்டத்தில் (1943 டிசம்பர் 24 முதல் 1944 பிப்ரவரி இறுதி வரை) ஆரம்பத்தில் 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் (தளபதி ஜெனரல் வதூதின்) ஷித்தாமிர் அருகே எதிர்த்தாக்குதலை நிறைவேற்றின. இதன் பயனாய் கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி முகப்

பில் ஹிட்லர் படைகளைச் சுற்றி வளைப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. பின் ஜனவரி 5 முதல் 16 வரை 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் (தளபதி ஜெனரல் கோனெவ்) கீரவகிராத் நடவடிக்கையை மேற்கொண்டு கீரவகிராத் நகரை விடுவித்தன.

ஜனவரி 24 முதல் பிப்ரவரி 17 வரை 1வது, 2வது உக்ரேனிய சேனைகள் கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி பிரதேசத்தில் எதிரியின் பெரும் படைத் திரட்டை சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டும் நடவடிக்கையை நிறைவேற்றின. இங்கே எதிரி 10 டிவிஷன்களையும் 1 மோட்டார் பிரிகேடையும் வைத்திருந்தான். இத்துருப்புகளுக்கு அருகே உமான் மற்றும் கீரவகிராத் பிரதேசங்களில் இன்னும் 8 எதிரி டாங்கி டிவிஷன்கள் இருந்தன.

ஹிட்லர் படைகளின் தற்காப்பை முனைப்போடு பிளந்த சோவியத் துருப்புகள் ஜனவரி 28 முடிவில் எதிரியின் 90,000 படைத் திரட்டைச் சுற்றி வளைத்தன. சுற்றி வளைக்கப்பட்ட படைத் திரட்டை எப்படியாவது முற்றுகையிலிருந்து விடுவிக்க ஹிட்லர் படைத் தலைமை முடிவு செய்தது. பிப்ரவரி ஆரம்பத்தில் முற்றுகையின் வெளி வளையத்தில் கடுமையான சண்டைகள் மூண்டன. பிப்ரவரி 12க்குள்ளாக சோவியத் டாங்கிப் படைகளும் காலாட்படைகளும் பாசிஸ்டுகளின் பெரும் டாங்கிப் படைகளின் பலத்த பதிலடிகளை முறியடித்து, எதிரியின் டாங்கிப் படைத் திரட்டை அலைக்கழித்து, பலமிழக்கச் செய்து, ஆரம்ப நிலைக்குப் பின்வாங்கிச் செல்லுமாறும் தற்காப்பிற்கு மாறுமாறும் கட்டாயப்படுத்தின.

முற்றுகையின் உள் வளையத்தில் சோவியத் துருப்புகள் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிரியின் சக்திகளைத் துண்டித்து, இவற்றை பகுதி பகுதிகளாக அழித்தன. பிப்ரவரி 14ஆம் தேதி கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி விடுவிக்கப்பட்டது, பிப்ரவரி 17இல் சுற்றி வளைக்கப்பட்ட ஹிட்லர் படைத் திரட்டு முழுவதும் கிட்டத்தட்ட ஒழித்துக் கட்டப்பட்டது. மொத்தமாக கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி ''கொதிகலத்தில்'' எதிரியின் தரப்பில் 55,000 பேர் கொல்லப்பட்டனர், 18,000க்கும் அதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டனர், பெருமளவு ஆயுதங்களையும் போர் வாகனங்களையும் எதிரி இழந்தான். இன்னும் 8 டாங்கி டிவிஷன்கள் உட்பட 15 எதிரி டிவிஷன்களையும் சோவியத் துருப்புகள் தோல்வியுறச் செய்தன. இது தினேப்பரில் நடந்த உண்மையான ஸ்தாலின்கிராத் சமராக இருந்தது. தனது துருப்புகளின் போர்த்திறமை இழப்பைப் பற்றிக் குறிப்பிட்ட 1வது பாசிச ஜெர்மானிய டாங்கிப் படையின் படைத் தலைமை பின்வருமாறு செய்தி அனுப்பியது: ''ஜனவரி 28ஆம் தேதியிலிருந்து சுற்றி வளைக்கப்பட்ட இந்த துருப்புகள் அறிந்தோ

அறியாமலோ தம்முன் ஸ்தாலின்கிராதின் கதியைப் பார்த்தன என்பதை நினைவில் கொள்ள... வேண்டும்''. ''இப்படிப்பட்ட சோதனையை ஒரு சிலரால் மட்டுமே ஒரு தடவைக்கு மேல் தாங்க முடியும்''* என்று அச்செய்தி இறுதியாகக் குறிப்பிட்டது.

கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி நடவடிக்கையின் போது, குறுகிய காலகட்டத்திலும் வசந்தகால சேறும் சகதியுமான கடினமான சூழ்நிலைகளிலும் எதிரியின் பெரும் படைத் திரட்டை சுற்றி வளைப் பதில் தந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சோவியத் துருப்புகள் உயர்வான கலையை வெளிப்படுத்தின. எதிரியின் பலத்த பதிலடிகளை முறியடிப்பதற்காக முற்றுகையின் வெளி வளையத்தில் துப்பாக்கிப்படை கோர்பஸ்களால் பலப்படுத்தப்பட்ட டாங்கிப் படைகளைப் பயன்படுத்தியது இராணுவ கலையில் புதிய அம்சமாக அமைந்தது.

கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி நடவடிக்கையோடு சேர்ந்து ஒரே நேரத்தில் லுட்ஸ்க்-ரோவ்னு நடவடிக்கையும் நீக்கபல்-கிரிவோய் ரோக் நடவடிக்கையும் நடத்தப்பட்டன.

லுட்ஸ்க்-ரோவ்னு நடவடிக்கை 1வது உக்ரேனிய சேனையின் வலது புற துருப்புகளால் ஜனவரி 27 முதல் பிப்ரவரி 11 வரை நடத்தப்பட்டது. தென் பலேஸ்யே பிரதேசத்தில் காடுகளும் சதுப்பு நிலங்களும் இருந்ததும் எதிரியிடம் தொடர்ச்சியான தற்காப்பு போர்முனை இல்லாதிருந்ததும் சோவியத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகளின் தயாரிப்பு மற்றும் போக்கு மீது தாக்கம் செலுத்தின. நடவடிக்கைக்கான ஆயத்தம் மிகவும் குறுகிய காலகட்டத்தில் (3 நாட்களில்) நடந்தது. விமானப்படையின் ஆதரவின்றி, குறைவான அளவு பீரங்கிப்படையைக் கொண்டே—1 கி. மீ. போர் முனையில் சுமார் 20 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும்தான் இருந்தன—எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்டது. 1வது, 6வது குதிரைப்படை கோர்பஸ்கள் இந்நடவடிக்கையில் பெரும் பங்காற்றின. இவை சுற்றிச் செல்லும் தந்திரத்தின் மூலம் சார்னி பிரதேசத்திலிருந்து எதிர்பாரா விதமாக லுட்ஸ்கை அடைந்தன, இதைக் கைப்பற்றி கோவெலை நோக்கிய மார்க்கத்தைத் துண்டித்தன. லுட்ஸ்க்-ரோவ்னு நடவடிக்கையின் விளைவாய் 1வது உக்ரேனிய சேனையின் வலது புறத் துருப்புகள் லுட்ஸ்க், தூப்னு, யாம்பொல், ஷெப்பெதோவ்கா ஆகியவற்றின் எல்லைகளை அடைந்து மேற்கு உக்ரேனில் ஜெர்மானியர்களின் படைத்திரட்டு முழுவதோடும் ஒப்பிடுகையில் ஆழ்ந்த சுற்றி வளைக்கும் நிலையை மேற்கொண்டன. கொரில்லாப் படைவீரர்கள் சோவியத் துருப்புகளுக்கு பெரும் உதவி செய்தனர். ஜனவரி 15 முதல் பிப்ரவர் 3 வரை மட்டும் இவர்கள் 7,000க்கும்

---

* E. Ziemke, *Stalingrad to Berlin*, p. 238.

மேற்பட்ட எதிரி போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் கொன்று குவித்தனர், 9 விமானங்கள், 62 டாங்கிகள் இன்னும் ஏராளமான இராணுவத் தளவாடங்களை அழித்தனர். லுட்ஸ்க்-ரோவ்னு நடவடிக்கையின் நிறைவேற்றம், ஹிட்லர் படைத் தலைமை கர்சுன்-ஷில்சேன்க்கவ்ஸ்கி படைத் திரட்டைப் பலப்படுத்த தனது 4வது டாங்கிப் படையைப் பயன்படுத்தாதவாறு செய்தது, இது பிந்தையது முறியடிக்கப்படுவதில் கணிசமான பங்காற்றியது.

நீக்கபல்-கிரிவோய் ரோக் நடவடிக்கை 4வது உக்ரேனிய சேனையின் உதவியோடு 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் ஜனவரி 30 முதல் பிப்ரவரி 29 வரை நடத்தப்பட்டது. எதிரியை பிளவுபடுத்தி, பின் 4வது உக்ரேனிய சேனையோடு சேர்ந்து எதிரியின் நீக்கபல் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து அழிக்கும் நோக்கத்தோடு அபோஸ்தலவோ திசையில் அருகருகேயிருந்த 46வது, 8வது கார்டு படைகளின் பக்கவாட்டுப் பகுதிகளால் பிரதான தாக்குதல் தொடுக்கப்பட்டது. நடவடிக்கையின் போது ஒரே நேரத்தில் ஆறு இடங்களில் துருப்புகள் தாக்குதலைத் தொடுத்ததால், இது பரவலான போர்முனையில் எதிரியைக் கட்டிப் போட்டு, பிரதான தாக்குதல் சம்பந்தமாக அவனைக் குழப்பியது. ஆனால் சேறும் சகதியும் நிறைந்து சாலைகள் இல்லாத சூழ்நிலைகளில் செயல்பட துருப்புகள் போதுமான அளவு தயாராக இல்லாததால் தாக்குதலின் வேகம் குறைந்தது (நாளொன்றுக்கு 4 கி. மீ.), பீரங்கிப்படையும் பின்னணியும் பின்தங்கி விட்டன. எதிரியின் நீக்கபல் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து ஒழிக்க முடியாததற்கு முக்கியக் காரணம் இது தான். என்றாலும் சோவியத் துருப்புகளால் தினேப்பரில் எதிரியின் தாக்கு முனையை அழித்து உக்ரேனின் முக்கியத் தொழிற்துறைப் பிரதேசங்களாகிய கிரிவோய் ரோகையும் நீக்கபலையும் விடுவிக்க முடிந்தது.

மேற்குக் கரையோர உக்ரேனுக்காக நடந்த சமரின் முதல் கட்டத்தில் செஞ்சேனை அடைந்த வெற்றிகளின் பயனாய் தெற்கே எதிரியை முடிவாக ஒழித்துக் கட்டி மேற்குக் கரையோர உக்ரேனை முற்றிலுமாக விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு பேரிழப்புகள் ஏற்பட்டன, இவை பெரிதும் பலம் குன்றிப் போயின: 40க்கும் மேற்பட்ட டிவிஷன்கள் பெரும் சேதமடைந்தன, 16 — 17 டிவிஷன்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டன.

வசந்தகால கட்டமாகிய இரண்டாவது கட்டத்தில் (1944 மார்ச் 4 — ஏப்ரல் 17) சோவியத் துருப்புகளின் தாக்குதல் மேற்குக் கரையோர உக்ரேன் பூராவும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் துவங்கியது. 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் (ஜெனரல் வதூதின் மரணமடைந்ததால் மார்ச் 1 முதல் இதன் தளபதி

யாக சோவியத் யூனியனின் மார்ஷல் ஜூக்கவ் நியமிக்கப் பட்டார்) மார்ச் 4 முதல் ஏப்ரல் 17 வரை ப்ரஸ்கூரவ்-செர்னவ்த்ஸி நடவடிக்கையை நிறைவேற்றின. முதல் நாளன்றே இவை எதிரியின் தற்காப்பை பிளந்தன, மார்ச் 7—11இல் தார்னப்பல்-ப்ரஸ்கூரவ் எல்லையை அடைந்தன, எதிரியின் பலத்த பதிலடியை முறியடித்து, மார்ச் இறுதியில் 2வது உக்ரேனிய சேனையின் உதவியோடு கமெனெட்ஸ்-பதோல்ஸ்க் பிரதேசத்திற்கு வடக்கே 20 டிவிஷன்கள் வரை அடங்கியிருந்த எதிரியின் பெரிய படைத் திரட்டைச் சுற்றி வளைத்தன. ஆனால் வசந்த கால சேறும் சகதியுமான மிகக் கடின மான சூழ்நிலைகள் உரிய நேரத்தில் முற்றுகையின் உறுதியான உள், வெளி வளையங்களை அமைக்க துருப்புகளுக்கு வாய்ப்பளிக்காத தால் எதிரியின் துருப்புகளில் கணிசமான பகுதியினரால் முற்றுகை யிலிருந்து வெளியேற முடிந்தது. ஏப்ரல் 17இல் 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஹிட்லர் படைகளின் போர்த்தந்திரப் போர் முனையை இரண்டாகப் பிளந்து கர்பாத்து மலையடிவாரங்களை அடைந்தன.

2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் மார்ச் 5 முதல் ஏப்ரல் 6 வரை உமான்-பதஷான் நடவடிக்கையை மேற்கொண்டன. முதல் நாளன்றே எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்டது. மேற் கொண்டு தென் மேற்கு திசையில் முன்னேறிய சோவியத் துருப்பு கள் தினேஸ்தர் ஆற்றைக் கடந்து, பரவலான போர்முனையில் எல்லைப்புற ஆருகிய புருத்தை அடைந்தன, பின் போகிற போக்கில் இதைக் கடந்து ருமேனியப் பரப்பினுள் நுழைந்தன.

3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்ட பெரெஸ் னிகோவாத்தயெ-ஸ்னிகிரீ நடவடிக்கையின் போது (மார்ச் 6—18) 6வது பாசிச ஜெர்மானியப் படையின் கணிசமான அளவு சக்திகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஆனால் இந்நடவடிக்கையின் போது இப்படையைச் சுற்றி வளைத்து ஒழிக்கும் வாய்ப்பு நழுவ விடப் பட்டது. ஜெனரல் பிளீயெவின் குதிரைப்படை-இயந்திரப்படைத் தொகுதி பஷ்தான்கா பிரதேசத்திலிருந்து விரைவாக தெற்கு நோக்கி சென்று நிக்கலாயெவைக் கைப்பற்றுவதற்குப் பதில் ஜெர் மானியர்களின் 79 காலாட்படை டிவிஷனுடன் இழுபறிச் சண்டை யில் ஈடுபட்டதுதான் இதற்குக் காரணமாகும். இதன் விளை வாய் கால தாமதம் ஏற்பட்டு, திட்டமிட்ட முற்றுகையிலிருந்து எதிரி தனது பிரதான சக்திகளை வெளியேற்ற முடிந்தது.

ஒதேஸ்ஸா நடவடிக்கையில் (மார்ச் 18—ஏப்ரல் 12) 3வது உக்ரேனிய சேனையின் குதிரைப்படை மற்றும் டாங்கி யூனிட்டுகளின் முனைப்பான நடவடிக்கைகள் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும். இவை ரஸ்தேல்னயாவைக் கைப்பற்றி, ஒதேஸ்ஸா படைத் திரட்டை

இரண்டாகப் பிளந்து, பின் தெற்கே திரும்பி, கரையோரமாக ஒதேஸ்ஸாவிற்குப் பின்வாங்கிக் கொண்டிருந்த எதிரிப் படைத் திரட்டின் பின்னணியை அடைந்து, முன்னிருந்து இயங்கிய பொது இராணுவ யூனிட்டுகளுடன் ஒன்றாகச் சேர்ந்து ஏப்ரல் 10ஆம் தேதி நகரத்தைக் கைப்பற்றின.

இந்நடவடிக்கையின் பயனாய் கருங்கடலிலிருந்த பெரிய துறை . முகமாகிய ஒதேஸ்ஸா விடுவிக்கப்பட்டது, சோவியத் துருப்புகள் தினேஸ்தர் ஆற்றை அடைந்து பென்தேரி நகருக்குத் தெற்கேயிருந்த முக்கிய தாக்குமுனையைக் கைப்பற்றின.

மேற்குக் கரையோர உக்ரேனில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றி பெரும் அரசியல், போர்த்தந்திர முக்கியத்துவம் உடைய தாக இருந்தது. வளமான உலோகத் தொழிற்துறை, கிரிவோய் ரோகின் இரும்புத் தாது, நீக்கபலின் மார்கனீஸ் தாது, தினேப் பருக்கும் புரூத் ஆற்றுக்கும் இடையிலுள்ள செல்வங்கொழிக்கும் விவசாய நிலங்கள் ஆகியவற்றைக் கொண்ட மேற்குக் கரையோர உக்ரேனை சோவியத் இராணுவம் முற்றிலுமாக விடுவித்தது. சோவி யத் மல்தாவியாவின் கணிசமான பகுதியும் விடுவிக்கப்பட்டது.

தினேஸ்தரையும் வடக்கு ருமேனியாவையும் அடைந்ததன் விளைவாய் கிரீமியா, மல்தாவியா, மேற்கு உக்ரேன் மற்றும் பெலோ ருஷ்யாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடிக்கவும் பால் கன் திசையில் சோவியத் துருப்புகள் முன்னேறவும் அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

மேற்குக் கரையோர உக்ரேனில் மேற்கொள்ளப்பட்ட போர்த் தந்திர நடவடிக்கை இரண்டாம் உலக யுத்தத்திலேயே மிகப் பெரிய நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்தது. 1,300–1,400 கி. மீ. நீளமும் 250–450 கி. மீ. ஆழமும் உடைய போர்முனையில் நடந்த இச்சமர் கிட்டத்தட்ட 4 மாத காலம் நீடித்தது. இதில் இரு தரப்புகளிலுமாகச் சேர்த்து சுமார் 40 லட்சம் பேர்கள் கலந்து கொண்டனர், 45,400 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 4,200 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகள், 4,000க்கும் கூடுதலான விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. சோவியத் இராணுவத்தின் தரப்பில் எல்லா 6 டாங்கிப் படைகளும் இயங்கிய ஒரே நடவடிக்கை இதுதான்.

இந்நடவடிக்கையில் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் வசந்த கால ஆற்றுப் பெருக்கும் உருகிக் கொண் டிருந்த பனிக்கட்டிகளும் இருந்த சூழ்நிலைகளில் சோவியத் துருப்பு கள் இன்குலேத்ஸ், தெற்கு பூக், தினேஸ்தர், புரூத் உட்பட ஏராள மான ஆறுகளைக் கடந்ததாகும். சோவியத் விமானப்படை மோச மான பருவநிலைகளைப் பொருட்படுத்தாது 1944 பனிக் காலத்திலும்

வசந்த காலத்திலும் 66,000க்கும் மேற்பட்ட பறத்தல்களை நடத்தியது—இது எதிரியின் விமானப்படைப் பறத்தல்களை விட இரு மடங்கு அதிகமாகும்—வான சண்டைகளிலும் விமானத் தளங்களிலும் 1,400க்கும் அதிகமான எதிரி விமானங்களை ஒழித்தது.

இராணுவ-சரக்கு விமானங்கள் தரைப்படைகளுக்கு பெரிதும் உதவின. ஏப்ரல் மாதம் 17 நாட்களில் இவை 4,817 முறை பறந்து துருப்புகளுக்குத் தேவையான 670 டன் எரிபொருள் மற்றும் ஆயுதத் தளவாடங்களையும் 5,000க்கும் அதிகமான ஆட்களையும்—கூடுதல் படையினர், காயமடைந்தோர்—ஏற்றிச் சென்றன.

கிரீமியாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளாலும் (தளபதி ஜெனரல் தல்பூகின்) விசேஷ பிரிமோர் படையாலும் (தளபதி ஜெனரல் யெரியோமின்கோ) கருங்கடல் கப்பற்படையுடனான நெருங்கியத் தொடர்பில் 1944ஆம் ஆண்டு ஏப்ரல் 8 முதல் மே 12 வரை நிறைவேற்றப்பட்டது.

எதிரியின் 17வது படையை முறியடித்து கிரீமியாவை விடுவிப்பதுதான நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது.

சோவியத் தரப்பில் 4,70,000 போர்வீரர்கள் இருந்தனர், 5,982 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 559 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 1,250 விமானங்களும் இருந்தன.

கிரீமியாவை தற்காத்து நின்ற 17வது படையில் (தளபதி ஜெனரல் ஏனக்ஸ்) 12 டிவிஷன்கள் (7 ருமேனிய டிவிஷன்கள் உட்பட), 2 திடீர் தாக்குதல் பீரங்கி பிரிகேடுகள், பல்வேறு பலப்படுத்தும் படைப்பிரிவுகள் முதலியன இருந்தன. இவற்றில் 1,95,000 பேர்கள் இருந்தனர், சுமார் 3,600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 215 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும், 148 விமானங்களும் இருந்தன.

செவஸ்தோப்பலை நோக்கிய பொதுவான திசையில் ஒன்றிணையும் திசைகளில் தொடுக்கப்பட்ட ஒத்திசைவான தாக்குதல்களின் பயனாய் (வடக்கேயிருந்து 4வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள், கிழக்கேயிருந்து விசேஷ பிரிமோர் படை) 17வது ஜெர்மானிய-ருமேனியப் படை முற்றிலுமாக முறியடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டது. எதிரி 1,00,000 பேர்களை இழந்தான்; இவர்களில் 61,587 பேர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். இது தவிர பெருமளவு ஜெர்மானிய, ருமேனியப் போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் வெளியேற்றப்படும் போது கடலில் மாண்டனர். 1941—1942இல் செவஸ்தோப்பலைக் கைப்பற்ற பாசிச துருப்புகளுக்கு 250 நாட்கள்



மேற்குக் கரையோர உக்ரேன் மற்றும் கிரீமியாவின் விடுதலை (1944 ஜனவரி—மே)

தேவைப்பட்டன என்றால் 1944இல் சோவியத் துருப்புகள் இதை 5 நாட்களில் செய்தன, கிரீமியா முழுவதையும் 35 நாட்களில் விடுவித்தன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

கிரீமியா விடுவிக்கப்பட்டதானது கருங்கடல் கரையோரத்தில் நிலவரத்தைக் கணிசமாக மாற்றியது. சோவியத் கடற்படை இப்போது கிரீமியாவில் தனது தளங்களை மீண்டும் பெற்றது, ருமேனியாவிலும் பல்கேரியாவிலும் இப்போது எதிரியின் கடற்படைக்கு எதிராக செயல் வன்மையோடு இதனால் இயங்க முடிந்தது.

விபொர்க்-பெத்ரொஸவோத்ஸ்க் நடவடிக்கை (ஜூன் 10—ஆகஸ்டு 9).

இந்நடவடிக்கை கரேலிய சேனையின் இடப் பிரிவு, லெனின்கிராத் சேனையின் வலது பிரிவு ஆகியவற்றால் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கடற்படை, லதோகா மற்றும் ஒனீகா இராணுவ ப்ளீட்டுகள் முதலியவற்றின் உதவியோடு நடத்தப்பட்டது. பின்லாந்து துருப்புகளின் பெரும் படைத் திரட்டை முறியடிப்பது, லெனின்கிராத் நகரத்தை நோக்கியுள்ள அபாயத்தை அகற்றி கரேலிய-பின்லாந்து சுயாட்சிக் குடியரசை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பது முதலியவைதான் இந்நடவடிக்கையின் நோக்கங்களாக இருந்தன.

தென் கரேலியாவிலும் கரேலிய பூசந்தியிலும் 15 டிவிஷன்கள், 8 காலாட்படை மற்றும் 1 குதிரைப்படை பிரிகேடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பின்லாந்து இராணுவத்தின் முக்கியச் சக்திகள் தற்காப்பில் நின்றன. இவற்றில் 2,68,000 பேர்கள் இருந்தனர், 1,930 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 110 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 248 போர் விமானங்களும் இருந்தன.

இந்நடவடிக்கையில் பங்கேற்பதற்காக சோவியத் தரப்பில் 41 டிவிஷன்கள், 5 துப்பாக்கிப்படை பிரிகேடுகள், 4 பலப்படுத்தப்பட்ட மண்டலங்களைச் சேர்ந்த துருப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவற்றில் சுமார் 4,50,000 போர்வீரர்கள் இருந்தனர், சுமார் 10,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 800க்கும் அதிகமான டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 1,547 விமானங்களும் இருந்தன. இவ்வாறாக சோவியத் துருப்புகள் ஆட்பலத்தில் 1.7 மடங்கும் பீரங்கிகளின் எண்ணிக்கையில் 5.2 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 7.3 மடங்கும் விமானங்களில் 6.2 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன.

முதலில் ஜூன் மாதம் லெனின்கிராத் சேனையின் வலப் பிரிவு துருப்புகள் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கடற்படையோடு சேர்ந்து கரேலிய பூசந்தியில் எதிரியின் படைத்திரட்டை முறியடித்தன. பின் ஆகஸ்டு இறுதியில் கரேலிய சேனையின் இடப் பிரிவு

துருப்புகள் லதோகா மற்றும் ஒனீகா இராணுவ ப்ளீட்டுகளுடன் சேர்ந்து கரேலியாவில் எதிரியை முறியடித்தன.

எதிரியின் நீண்டகால தற்காப்பைப் பிளப்பதோடு தொடர்புடைய விபொர்க்-பெத்ரொாஸவோத்ஸ்க் நடவடிக்கை காடுகளும் சதுப்பு நிலங்களும் ஏரிகளும் நிறைந்திருந்த கடினமான சூழ்நிலைகளில் நடத்தப்பட்டது. இந்நடவடிக்கையில் எதிரியின் ஆதார நிலையங்கள் மற்றும் எதிர்ப்பு மையங்களை சுற்றி செல்வதும் வளைப்பதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன, பிளந்து செல்லும் இடங்களில் பீரங்கிப்படையின் அடர்த்தி அதிகமாக இருந்தது, நீண்டகால பீரங்கிச் சுடுமிடங்களும் மரத்தாலான பீரங்கிச் சுடுமிடங்களும் முன்கூட்டியே அழிக்கப்பட்டன, நேரடியாகக் குறிபார்த்து சுடும் ஆயுதங்கள் துருப்புகளிடம் அதிக அளவு அளிக்கப்பட்டன, எதிரியின் பலப்படுத்தப்பட்ட இடங்கள் மீது விமானப்படையைக் கொண்டு பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது.

விபொர்க்-பெத்ரொாஸவோத்ஸ்க் நடவடிக்கையின் பயனாய் செஞ்சேனை, எதிரியின் பெரும் சக்திகளை முறியடித்தது, விபொர்கையும் பெத்ரொாஸவோத்ஸ்கையும் விடுவித்து எதிரித் துருப்புகளை பின்லாந்தின் ஆழத்தினுள் தள்ளியது, இவ்வாறாக கரேலிய-பின்லாந்து சுயாட்சிக் குடியரசின் பெரும் பகுதியை விடுவித்தது.

வடக்கேயிருந்து லெனின்கிராதை எதிர்நோக்கிய அபாயம் அகற்றப்பட்டது. கீரவ் இருப்புப் பாதையையும் பால்டிக் கடலையும் வெண் கடலையும் இணைக்கும் பெலமோர்-பால்டிக் கால்வாயையும் மீண்டும் பயன்படுத்தும் வாய்ப்பு சோவியத் யூனியனுக்கு கிடைத்தது.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் வடப் பகுதியில் போர்த்தந்திர நிலவரம் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக உறுதியாக மாறியது. யுத்தத்திலிருந்து வெளியேறும்படி பின்லாந்து நிர்ப்பந்திக்கப்பட்டது. 1944 செப்டெம்பர் 4ஆம் தேதி பின்லாந்து இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தியது, செப்டெம்பர் 19இல் ஹிட்லர் கூட்டிலிருந்து வெளியேறி சோவியத் யூனியனுடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையை "சுதந்திர பின்லாந்தின் வரலாற்றில் திருப்பு முனையாகக் கருதலாம். இது முற்றிலும் புதிய ஒரு சகாப்தத்திற்கு வழி கோலியது; இதில் எமது நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை அடிப்படை மாற்றங்களை அடைந்தது"° என்று 1974இல் பின்லாந்து ஜனாதிபதி ஊர்ஹோ-கேக்கனேன் கூறினார்.

° ஊ. கேக்கனேன், **பின்லாந்தும் சோவியத் யூனியனும்.** சொற்பொழிவுகள், கட்டுரைகள், பேட்டிகள். 1952—1975. பின்னிஷ் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1975, பக்கம் 217.

1944 நவம்பரில் பின்லாந்தில் புதிய அரசாங்கம் அமைக்கப் பட்டது, இதில் முதன் முதலாக கம்யூனிஸ்டுகள் பங்கேற்றனர். பெரும் முற்போக்கு அரசியல், அரசு பிரமுகராகிய பாசிக்கிவி இந்த அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினர். தனது அரசாங் கத்தின் உடனடிக் கடமைகளை நிர்ணயித்த அவர் சுதந்திர தினமா கிய 1944 டிசம்பர் 6இல் பின்வருமாறு கூறினர்: ''எனது நம்பிக் கையின்படி, சோவியத் யூனியனுக்கு எதிராக இல்லாதபடி வெளி நாட்டுக் கொள்கையை நடத்துவது என்பது நமது மக்களின் அடிப் படை நலன்களுக்கு உகந்ததாகும். சமாதானம், ஒத்துழைப்பு மற்றும் முழு நம்பிக்கையின் அடிப்படையில் சோவியத் யூனியனுடன் நல்லண்டை உறவுகள் ஆகியவைதான் நமது அரசு நடவடிக்கையில் பின்பற்றி நடக்க வேண்டிய முதல் கோட்பாடாகும்''°.

பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பின்லாந்திலிருந்து வெளி யேறிய போது பல குடியிருப்புப் பகுதிகளை அழித்தன, ஆயிரக் கணக்கான மக்களின் வீடு வாசல்களைப் பறித்தன, சுமார் 16,000 வீடுகள், 125 பள்ளிகள், 165 மாதா கோவில்கள், மற்ற சமூக கட்டிடங்கள் முதலியவற்றைக் கொளுத்தின, 700 பெரிய பாலங் களைத் தகர்த்தன. பின்லாந்திற்கு ஏற்பட்ட இழப்பு 120 மில்லியன் டாலர்களுக்கும் கூடுதலாக இருந்தது. பாசிச ஜெர்மனி தனது முந்தைய கூட்டாளியை இப்படித்தான் நடத்தியது.

சுதந்திரத்தை மதித்து நடத்தல், பின்லாந்துடன் நல்லண்டை உறவுகளை ஏற்படுத்துதல் எனும் தனது கொள்கைக்கு ஏற்ப சோவியத் யூனியன் பின்லாந்திற்கு அரசியல் உதவியோடு கூட பொருளாதார உதவியையும் நல்கியது. பின்லாந்து பரப்பினுள் சோவியத் துருப்புகள் அனுப்பப்படவில்லை. பின்லாந்து இராணுவம் சோவியத் யூனியனிற்கு ஏற்படுத்திய இழப்பின் ஒரு பகுதியை மட்டுமே ஈடு செய்த போர் நஷ்ட ஈடு பின்லாந்திற்குக் குறைக்கப் பட்டது.

2. ''சென்டர்'' மற்றும் ''வடக்கு உக்ரேன்'' ஆகிய ஹிட்லர் படைத் தொகுதிகளின் முறியடிப்பு பெலோருஷ்ய நடவடிக்கை (1944 ஜூன் 22 — ஆகஸ்டு 29).

1944ஆம் ஆண்டின் பனிக்கால நடவடிக்கையில் கடும் தோல்வி யடைந்த பின் ஜெர்மானிய உயர்மட்ட படைத் தலைமை தனது

° **பாசிக்கிவியின் கொள்கை.** யூஹோ கூஸ்தி பாசிக்கிவியின் கட்டுரைகளும் சொற் பொழிவுகளும், 1944—1956. பின்னிஷ் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1958, பக்கம் 16.

துருப்புகளை பெரிதும் மாற்றியமைத்தது, மீண்டும் முழு அணி திரட்டலை நடத்தி, தனது இராணுவத்தின் அளவை (டிவிஷன்களின் எண்ணிக்கை) ஆண்டின் ஆரம்பத்தில் எந்த மட்டத்தில் இருந்ததோ அதே மட்டத்திற்கு கிட்டத்தட்ட புனர்நாட்டியது.

பாசிசக் கூட்டின் வசமிருந்த 326 டிவிஷன்களில் 239 டிவிஷன்கள் (23 டாங்கி, 7 இயந்திரப்படை டிவிஷன்கள் உட்பட) 1944 ஜூலை வாக்கில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் இருந்தன. இவற்றில் 181 டிவிஷன்கள் பாசிச ஜெர்மனிக்குச் சொந்தமானவை, 58 டிவிஷன்கள் இதன் துணை நாடுகளுக்கு உரித்தானவை. 20வது ஜெர்மானிய மலைப் படையின் ஒரு பகுதி, 3 விமானப்படைகள், வடக்கிலும் பால்டிக், கருங் கடல்களிலும் இருந்த கடற்படைச் சக்திகளின் படைத் திரட்டு ஆகியன இதே போர்முனையில் இயங்கின. இவற்றில் 43 லட்சம் பேர்கள் இருந்தனர், 59,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7,800 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 3,200 போர் விமானங்களும் இருந்தன.

முக்கிய சக்திகளை, குறிப்பாக டாங்கி டிவிஷன்களைப் பாசிஸ்டுகள் பிரிபியாத் ஆற்றின் தெற்கே நிறுத்தியிருந்தன. 1944 கோடை வாக்கில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை சோவியத் துருப்புகளின் அடுத்த தாக்குதலைத் தெற்கே எதிர்பார்த்ததுதான் இதற்குக் காரணமாகும். உண்மையில் சோவியத் படைத் தலைமை பெலோருஷ்யாவில் தனது அடுத்த தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டது.

4,500 கி. மீ. நீளமுள்ள பெரும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் சோவியத் தரப்பிலிருந்து 11 சேனை கூட்டமைப்புகள், 3 கடற்படைகள், 2 ப்ளீட்டுகள் மற்றும் வான் எதிர்ப்புப் பாதுகாப்பின் 2 சேனைகள் ஆகியவற்றைச் சேர்ந்த துருப்புகள் இயங்கின. சோவியத் துருப்புகளில் 461 துப்பாக்கிப்படை, வான் இறக்குப்படை மற்றும் குதிரைப்படை டிவிஷன்களும் 21 டாங்கி, இயந்திரப்படை கோர்பஸ்களும் இன்னும் பல யூனிட்டுகளும் பலப் படுத்தும் படைப்பிரிவுகளும் இருந்தன. இவற்றில் 66 லட்சம் போர்வீரர்கள் இருந்தனர், 98,100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7,100 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 12,900 போர் விமானங்களும் இருந்தன.

சோவியத் யூனியனின் பரப்பிலிருந்து எதிரியை முற்றிலுமாக விரட்டி, ஹிட்லரின் கொடுமையிலிருந்து கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஐரோப்பிய மக்களை விடுவிக்கத் துவங்குவது, யுத்தத்தை பாசிச ஜெர்மனியின் பரப்பிற்கு மாற்றுவது என்பதுதான் 1944ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர்காலத்திலும் இராணுவ நடவடிக்கைகளின் அரசியல் நோக்கமாக இருந்தது.

ஜெர்மனிக்கான வாயில்களை மூடி பாதுகாக்கும் நுழைவாயில்களாகிய பெலோருஷ்யாவில்—போர்த்தந்திர போர்முனையின் மத்தியில்—பிரதான தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. எதிரியின் பெரும் சக்திகள்—''சென்டர்'' படைத் தொகுதி—இங்கேயிருந்தன. மேற்கு உக்ரேனில் சோவியத் துருப்புகளின் தாக்குதல் இத்தாக்குதலுடன் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறாக சோவியத் துருப்புகளின் பிரதான படைத் திரட்டை கிழக்கு பிரஷ்யா மற்றும் போலந்தின் எல்லைகளுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டது. பெலோருஷ்யாவிலும் மேற்கு உக்ரேனிலும் நடைபெற்ற தாக்குதல்களுக்கு ஆதரவாக பால்டிக் குடியரசுகளில் இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்படவிருந்தன.

முந்தைய நடவடிக்கைகளின் விளைவுகளையும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் உருவாகியுள்ள திட்டவட்டமான போர்த்தந்திர நிலவரத்தையும் கணக்கில் கொண்டு அடுத்த நடவடிக்கைகளை (யாஸ்ஸி-கிஷினேவ், புடாபெஸ்ட், பெட்சாமோ-கிர்கேனெஸ் நடவடிக்கைகள் மற்றும் பால்டிக் குடியரசுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை) நடத்த திட்டமிடப்பட்டது.

1944ஆம் ஆண்டு கோடை காலத்திற்கான பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டம் அந்த ஆண்டு பனிக்கால திட்டத்தைப் போன்றே எதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒரு புறம் அமெரிக்கா, பிரிட்டனுக்கும் மறு புறம் இவற்றிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான உறவுகளில் பிளவு ஏற்படும் வரை ஜெர்மனிக்கு தொலைவில் உள்ள இடங்களில் செஞ்சேனைக்கு எதிராக இழுபறி யுத்தத்தை நடத்துவது என்பதுதான் அக்கணிப்பாகும். பல படை வரிசைகளையுடைய தற்காப்பை ஆதாரமாகக் கொண்டு தம் கைவசமுள்ள எல்லைகளில் உறுதியாக நிற்கும் கடமை ஹிட்லர் துருப்புகளின் முன் வைக்கப்பட்டது.

1944 கோடை வாக்கில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை பெலோருஷ்யாவில் பலமான, பல மண்டலங்களையுடைய, பல படை வரிசைகளை உள்ளடக்கிய தற்காப்பைத் தோற்றுவித்தது. நேரடி நடைமுறை தற்காப்பு மண்டலம் 8—12 கி. மீ. மொத்த ஆழத்தையுடைய இரண்டு மண்டலங்களால் ஆனதாக இருந்தது. இதன் பின்னால், பெரும்பாலும் தினேப்பர், துரூத், பெரெஸினா ஆறுகளின் ஊடாகச் செல்லும் 4 பிரதான மற்றும் ஒரு சில இடை தற்காப்பு மண்டலங்கள் இருந்தன. வித்தெப்ஸ்க், ஓர்ஷா, மொகிலோவ், ஷ்லோபின், பரீசவ், பப்ருய்ஸ்க் நகரங்கள் பெரிதும் பலப்படுத்தப்பட்டிருந்தன. பெலோருஷ்யாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தற்காப்பின் மொத்த ஆழம் 250—270 கி. மீ.களாக

இருந்தது.

1,100 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் 1வது பால்டிக் சேனை, 3வது, 2வது, 1வது பெலோருஷ்ய சேனைகளின் முன் எதிரியின் பெரும் படைத் திரட்டு தற்காப்பில் நின்றது. ''வடக்கு'' படைத் தொகுதியின் 16வது படையின் வலது பக்கவாட்டு யூனிட்டுகளும், 3வது டாங்கி, 4வது, 9வது மற்றும் 2வது படைகளை உள்ளடக்கிய ''சென்டர்'' படைத் தொகுதியும் (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் பூஷ்), ''வடக்கு உக்ரேன்'' படைத் தொகுதியின் 4வது டாங்கிப் படையின் இடது பக்கவாட்டு யூனிட்டுகளும்—மொத்தமாக 63 டிவிஷன்களும் 6 பிரிகேடுகளும்—இப்படைத் திரட்டில் அடங்கியிருந்தன. இவற்றில் 12 லட்சம் பேர்கள் இருந்தனர், 9,500க்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 900 டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. 6வது வான் படையையும் 1வது, 4வது வான் படைகளின் பிரிவுகளையும் சேர்ந்த சுமார் 1,350 விமானங்கள் தரைப்படைகளுக்கு வானிலிருந்து ஆதரவு அளித்தன.

4 மத்திய சேனைகளின் சக்திகளைக் கொண்டு ஒரே நேரத்தில் ஆறு திசைகளில் எதிரியின் தற்காப்பைப் பிளப்பது, முதலில் வித்தெப்ஸ்க், பப்ருய்ஸ்க் பிரதேசங்களில் எதிரியின் பெரும் சக்திகளை சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டுவது, தாக்குதலைத் தொடர்ந்து மீன்ஸ்கிற்கு கிழக்கேயுள்ள பிரதேசத்தில் 4வது ஜெர்மானியப் படையின் பிரதான சக்திகளைச் சுற்றி வளைத்து தோற்கடிக்கச் செய்வது, பின் சோவியத் யூனியனின் மேற்கு எல்லைகளை நோக்கி முன்னேறுவது என்று உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் திட்டமிட்டது.

1வது பால்டிக் சேனைக்கு ஜெனரல் பாக்ரமியானும் 3வது பெலோருஷ்ய சேனைக்கு ஜெனரல் செர்னியாஹோவ்ஸ்கியும் 2வது பெலோருஷ்ய சேனைக்கு ஜெனரல் ஸஹாரவும் 1வது பெலோருஷ்ய சேனைக்கு ஜெனரல் ரக்கசோவ்ஸ்கியும் தலைமை தாங்கினர். 1வது பெலோருஷ்ய சேனையில் அடங்கியிருந்த, மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட போலந்து இராணுவத்தின் 1வது படைக்கு ஜெனரல் பப்லாவ்ஸ்கிய் தலைமை தாங்கினார். இதோடு கூட எதிரியின் பின்னணிகள் மற்றும் போக்குவரத்து மார்க்கங்களின் மீதான தாக்குதல்களை அதிகப்படுத்தி, எதிரியின் சேமப் படைகளைக் கட்டிப்போட்டு, தமது துருப்புகளின் தாக்குதலுக்கு உதவும் கடமை பெலோருஷ்யாவின் கொரில்லாப் படை யூனிட்டுகளின் முன் வைக்கப்பட்டது. 1944ஆம் ஆண்டு கோடையில் பெலோருஷ்யாவில் 143,000 கொரில்லாப் படைவீரர்கள் போரிட்டனர்.

4 சோவியத் சேனைகளில் 14 லட்சத்திற்கும் கூடுதலான போர்

வீரர்கள் இருந்தனர், 31,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 5,200 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் இருந்தன. மேற்கூறிய சேனைகளை முறையே 3வது, 1வது, 4வது, 6வது மற்றும் 16வது வான் படைகளின் விமானங்கள் — மொத்தமாக 5,000க்கும் அதிகமான போர் விமானங்கள் — ஆதரித்தன. தொலைதூர விமானப்படையும் (தளபதி விமானப்படை மார்ஷல் கலவானவ்) வான் எதிர்ப்பு பாதுகாப்பு விமானப்படையும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. கொரில்லாப் படைவீரர்கள் துருப்புகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டனர். உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் பிரதிநிதிகளாகிய மார்ஷல் ஜூக்கவும் மார்ஷல் வசிலேவ்ஸ்கியும் சேனைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிசைவித்தனர்.

சோவியத் படைத் தலைமையால் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட இவ்வளவு பெரும் சக்திகளும் சாதனங்களும், ஆள் பலத்தில் 2 மடங்கும் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 3.8 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 5.8 மடங்கும் விமானங்களில் 3.9 மடங்கும் எதிரியை விஞ்சி நிற்க உதவின.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் மத்தியப் பகுதியில் பெரும் படைத் திரட்டை ஏற்படுத்தி, அதை எதிரியிடமிருந்து மறைப்பது என்பது சிக்கலானதொரு காரியமாக இருந்தது, இதற்குப் பெரும் முயற்சிகள் தேவைப்பட்டன. "நடைபெறவிருந்த படை மாற்றத்திற்கும் பெலோருஷ்ய நடவடிக்கைக்கு அவசியமான அனைத்தையும் நாட்டின் உட்பகுதியிலிருந்து கொண்டு வருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்சியின் மத்தியக் கமிட்டி, பிரதான படைத் தலைமையகம், தற்காப்பு மற்றும் தகவல் தொடர்பு மக்கள் கமிசாரகங்களின் மத்திய நிர்வாகங்கள் ஆகியவற்றின் பெரும் உழைப்பும் கவனமும் தேவைப்பட்டன. நடைபெறவிருந்த கோடைகால நடவடிக்கைக்கான இந்தப் பெரும் தயாரிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் எதிரியிடமிருந்து மறைப்பதற்காக இந்த பிரம்மாண்டமான பணி முழுவதையும் மிக இரகசியமான சூழ்நிலைகளில் செய்ய வேண்டியிருந்தது"° என்று சோவியத் யூனியனின் மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதுகிறார்.

1944 கோடையில் செஞ்சேனையின் பிரதான தாக்குதல்கள் தெற்கேயும் பால்டிக் குடியரசுகளிலும் தொடுக்கப்படும் என்று

° அ. மி. வசிலேவ்ஸ்கிய், வாழ்க்கை லட்சியம், மாஸ்கோ, 1975, பக்கம் 415 (ருஷ்ய மொழியில்).

ஹிட்லரின் படைத் தலைமையை நம்பச் செய்வதற்காக பிரதான படைத் தலைமையகம் மே 3ஆம் தேதியே 3வது உக்ரேனிய சேனையின் தளபதிக்கு பின்வரும் கட்டளையைப் பிறப்பித்தது: ''எதிரிக்குத் தவறான தகவலை அளிக்கும் நோக்கத்தோடு உருமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உங்களுக்கு அளிக்கப்படுகிறது. போர்முனையின் வலது பக்கவாட்டில் டாங்கிகளாலும் பீரங்கிப்படையாலும் பலப்படுத்தப்பட்ட 8—9 துப்பாக்கிப்படை டிவிஷன்களை குவிப்பது போல் காட்ட வேண்டும்...''

இதே போன்ற கட்டளை 3வது பால்டிக் சேனையின் தளபதிக்கும் அனுப்பப்பட்டது. இதன்படி இச்சேனை சேரெஹ் ஆற்றின் கிழக்கே உருமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இரண்டு சேனைகளிலுமே உருமாற்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. சோவியத் படைத்தலைமையால் எதிரியை ஏமாற்ற முடிந்தது. சோவியத் துருப்புகள் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் தென் பகுதியில்தான் பிரதான தாக்குதலைத் தொடுக்கப் போகின்றன என்று பெலோருஷ்ய நடவடிக்கை துவங்குவதற்கு ஒரு சில நாள் முன்னராகக் கூட பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை நம்பியது. இது தன்னிடம் அப்போதிருந்த 30 டாங்கி, மோட்டார் டிவிஷன்களில் 24 டிவிஷன்களை பிரிபியாத் ஆற்றுக்கு தெற்கே நிறுத்தியிருந்தது. 1944ஆம் ஆண்டு ஜூன் 19இல் ஸோன் ஹோஃபெனில் நடந்த பயிற்சி அணி வகுப்பில் பீல்ட்மார்ஷல் கைடல், போர்முனையின் மத்தியப் பகுதியில் ருஷ்யர்களின் கணிசமான தாக்குதலை தான் நம்பவில்லை என்று கூறினான்.

இவ்வாறாக பெலோருஷ்ய நடவடிக்கையில் உருமாற்றம் தன் நோக்கத்தை நிறைவேற்றியது. இது செஞ்சேனையின் வெற்றிகளை பெரிதும் முன்நிர்ணயித்தது.

பொது தாக்குதலுக்கு ஒரு நாள் முன்னதாக பூர்வாங்கச் சண்டை நடத்தப்பட்டது. 450 கி. மீ. நீள போர்முனையில் ஒரே நேரத்தில் 45 வேவு துணைப் பிரிவுகள் இயங்கின. 11வது கார்டு படை மற்றும் 31வது படையின் மண்டலங்களில் (வடக்கேயும் தெற்கேயும் மின்ஸ்க் நெடுஞ்சாலை பிரதேசம்) பூர்வாங்கச் சண்டை வெற்றி அடையாவிட்டாலும் மொத்தத்தில் இது தன் நோக்கங்களை நிறைவேற்றியது: தற்காப்பின் முன்னணி, சுடும் முறை, எதிரி படைத் திரட்டு முதலியன சரிவர முடிவு செய்யப்பட்டன. மேலும் முன்னணி பட்டாலியன்களின் இயக்கத்தை பொது தாக்குதலின் துவக்கமாகக் கருதிய எதிரி தனது டிவிஷன், ஏன் கோர்பஸ் சேம இருப்புகளின் கணிசமான பகுதியை செலவிட்டான்.

ஜூன் 23ஆம் தேதி காலை, பீரங்கிப்படை மற்றும் விமானப் படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் 1வது பால்டிக் சேனை

யும் 2வது, 3வது பெலோருஷ்ய சேனைகளும் தாக்குதலில் இறங் கின.

நடவடிக்கையின் முதல் இரண்டு நாட்களில் 1வது பால்டிக் சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு மற்றும் 3வது பெலோருஷ்ய சேனையின் வடக்கு முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு ஆகியவற்றின் யூனிட்டுகள் எதிரியின் நேரடி நடைமுறைத் தற்காப்பு மண்டலத்தை 25—30 கி. மீ. ஆழத்திற்குப் பிளந்து எதிரிக்குக் கணிசமான இழப்புகளை ஏற்படுத்தின. 1வது பால்டிக் சேனையின் துருப்புகள் மேற்கு த்வினு ஆற்றைக் கடந்தன. வித் தெப்ஸ்க் பிரதேசத்தில் எதிரியைச் சுற்றி வளைப்பதற்கு அனுகூல மான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

1வது பால்டிக் சேனையின் 43வது படையும் 3வது பெலோருஷ்ய சேனையின் 39வது படையும் தாக்குதலைத் தொடர்ந்து, நடவடிக் கையின் மூன்றாவது நாளாகிய ஜூன் 25ஆம் தேதி எதிரியின் வித்தெப்ஸ்க் படைத் திரட்டை முற்றிலுமாகச் சுற்றி வளைத்தன. அதே நாளின் பிற்பகுதியில் 5வது படையின் மண்டலத்தில் 20—25 கி. மீ. ஆழத்தில் 5வது கார்டு டாங்கிப் படை பிளவின் ஊடே அனுப்பப்பட்டது.

இதற்குப் பின் இரண்டு சேனைகளும் ஒரு பகுதி சக்திகளைக் கொண்டு, சுற்றி வளைக்கப்பட்ட ஜெர்மானியர்களின் வித்தெப்ஸ்க் படைத் திரட்டை ஒழித்துக் கட்டின, பிரதான சக்திகளைக் கொண்டு போலத்ஸ்க், லேப்பேல், பரீசவ் திசைகளில் முன் னேறின.

வித்தெப்ஸ்க் அருகே எதிரியின் 5 டிவிஷன்கள் சுற்றி வளைக்கப் பட்டு ஒழிக்கப்பட்டன, இரண்டு டிவிஷன்கள் முறியடிக்கப்பட்டன. எதிரியின் தரப்பில் 20,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், 10,000க்கும் கூடுதலானோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் ஜூன் 24இல் தாக்கு தலில் இறங்கின. நடவடிக்கையின் முதல் நாளன்று இவை தற்காப் பின் பிரதான மண்டலத்தையும் இரண்டாம் நாளன்று இரண்டா வது மண்டலத்தையும் பிளந்தன.

காலாட்படைக்கு முன் பாய்ந்து சென்ற இரண்டு டாங்கி கோர் பஸ்களின் (9வது, 1வது கார்டு கோர்பஸ்கள்) யூனிட்டுகள் தாக்கு தலைத் தொடர்ந்து, தாக்குதலின் நான்காவது நாளன்று பப்ரூய்ஸ்க் பிரதேசத்தில் எதிரியின் 40,000 படைத் திரட்டைச் சுற்றி வளைத் தன. சுற்றி வளைக்கப்பட்ட பாசிஸ்டுகள் வடக்கே பிளந்து கொண்டு செல்லும் கட்டளையைப் பெற்றனர். இதற்குத் தயாரான அவர்கள் ஜூன் 27இல் கிடங்குகளையும் தமது இராணுவத் தளவாடங்களில் ஒரு பகுதியையும் அழிக்கத் துவங்கினர். போர்முனையின் குறுகிய

இடத்தில் 150 டாங்கிகள் வரை குவித்த பாசிஸ்டுகள் தித்தோவ்கா மீது தாக்குதல் தொடுத்து 9வது டாங்கி கோர்பசின் போர் வரிசைகளின் ஊடே—இவை அடர்த்தியாக இல்லாதிருந்தது இயற்கையே—பிளந்து செல்ல முடிவெடுத்தனர். எதிரி முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லும் உண்மையான அபாயம் தோன்றியது.

சுற்றி வளைக்கப்பட்ட எதிரி துருப்புகளின் மீது விமானப்படையின் மூலம் ஒருமுனைப்படுத்தப்பட்ட தாக்குதலைத் தொடுக்க சேனையின் தளபதி முடிவு செய்தார். ஜூன் 27ஆம் தேதி மாலை 7 மணி முதல் 8 மணி வரை 526 விமானங்கள் எதிரியின் மீது பெரும் குண்டு மழை பொழிந்தன. எதிரிக்கு பெருத்த சேதம் ஏற்பட்டு சிதறிப் போனான். தாக்குதலில் இறங்கிய தரைப்படைகள் ஜூன் 29இல் எதிரியை அழித்தன.

பப்ரூய்ஸ்க் அருகே எதிரியின் தரப்பில் 73,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், சிறைபிடிக்கப்பட்டனர். 9வது ஜெர்மானியப் படையின் முக்கியச் சக்திகள் அடித்து நொறுக்கப்பட்டன. 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் தெற்கேயிருந்து 4வது பாசிச ஜெர்மானியப் படையை ஆழமாகச் சுற்றி வளைத்தன.

மொகிலேவ் திசையில் செயல்பட்ட 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் ஜூன் 29 முடிவில் 90 கி. மீ. ஆழத்திற்கு முன்னேறி, தினேப்பர் ஆற்றைக் கடந்து, மொகிலேவ் நகரை விடுவித்தன. இத்துடன் நடவடிக்கையின் முதல் கட்டம் முடிவடைந்தது. 6 நாட்களில் சோவியத் துருப்புகள் தினேப்பர் போன்ற பெரிய ஆறு உட்பட 6 ஆறுகளைக் கடந்தன.

ஹிட்லர் கொதித்துக் கொண்டிருந்தான். ஜூன் 28ஆம் தேதி அவன் பீல்ட்மார்ஷல் ஜெனரல் பூஷை ''சென்டர்'' படைத் தொகுதியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கினான். பீல்ட்மார்ஷல் ஜெனரல் மோடெல் இந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டான்.

எதிரியின் வித்தெப்ஸ்க்-ஓர்ஷா, மொகிலேவ் மற்றும் பப்ரூய்ஸ்க் படைத் திரட்டுகள் முறியடிக்கப்பட்ட பின் மீன்ஸ்க் நகருக்குக் கிழக்கே 4வது பாசிச ஜெர்மானியப் படையின் முக்கியச் சக்திகளை சுற்றி வளைப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாயின. பெரெஸினா ஆறு (பரீசவிற்கு வடக்கே), மொகிலேவிற்கு மேற்கேயுள்ள பிரதேசம் மற்றும் ஸ்வீஸ்லச், ஒஸிப்பவிச்சி பிரதேசம் ஆகியவற்றின் எல்லைகளையடைந்த சோவியத் துருப்புகள் பின் வாங்கிக் கொண்டிருந்த ஹிட்லர் துருப்புகளை மூன்று பக்கங்களில் இருந்தும் சுற்றி வளைத்தன. 4வது பாசிச ஜெர்மானியப் படையின் பிரதானச் சக்திகள் மீன்ஸ்க் நகரிலிருந்து கிழக்கே 130—150 கி. மீ. தூரத்தில் இருந்த போது சோவியத் சேனைகளின் மொபைல் யூனிட்டுகள் 100 கி. மீ. தூரத்தில் இருந்தன. இத்தகைய நிலையில்

பின்வாங்கிக் கொண்டிருந்த எதிரியைத் துரத்திச் செல்லும் வேகங்கள் தீர்மானகரமான முக்கியத்துவம் உடையனவாக இருந்தன. நிலவரத்தை மதிப்பிட்ட உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் ஜூன் 28ஆம் தேதி 4 சேனைகளுக்கும் கட்டளைகளை அனுப்பியது. இவற்றின் படி 3வது, 1வது பெலோருஷ்ய சேனைகளின் துருப்புகள் ஒன்றிணையும் திசைகளில் மீன்ஸ்க் நகர் மீது தாக்குதல் தொடுத்து, இதை விடுவிக்கும் அதே நேரத்தில் மீன்ஸ்க்கை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருந்த 4வது பாசிச ஜெர்மானியப் படையின் பிரதான சக்திகளைச் சுற்றி வளைப்பதையும் முடிக்க வேண்டும். 1வது பால்டிக் சேனை மேற்கு நோக்கி முன்னேறி, போலத்ஸ்கைப் பிடித்து, இதன் மூலம் வடக்கேயிருந்து பெலோருஷ்ய சேனைகள் இயங்க வழிகோல வேண்டும். 2வது பெலோருஷ்ய சேனை மீன்ஸ்க்கை நோக்கிய பொதுவான திசையில் துரத்திச் சென்று எதிரி பிரிந்து போகாதவாறும் முறையாகப் பின்வாங்காதவாறும் செய்து எதிரி துருப்புகளின் அணி வரிசைகளின் இடையில் புகுந்து அவற்றைப் பிளந்து, பகுதி பகுதியாக ஒழிக்க வேண்டும்.

உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் முகமாக 4 சேனைகளும் சிறிதும் குறையாத பலத்துடன் தொடர்ந்து தாக்கின.

ஜூலை மாத ஆரம்பத்தில் 3வது, 1வது பெலோருஷ்ய சேனைகளின் துருப்புகள் மீன்ஸ்க் நகருக்கு கிழக்கே 105,000 பேரடங்கிய பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டை முற்றிலுமாகச் சுற்றி வளைத்தன. பல்வேறு பக்கங்களிலிருந்து எதிரியைத் தாக்கி துருப்புகளைப் பிளந்து அதே நேரத்தில் முற்றுகையின் உள்வளையத்தை நெருக்குவதன் மூலம் இப்படை திரட்டு ஒழித்துக் கட்டப்பட்டது. இது ஒரு வாரம் நீடித்தது. இச்சண்டைகளில் கொரில்லாப் படை வீரர்கள் நிரந்தர இராணுவத்திற்கு பெரிதும் உதவினர். மேற்கு நோக்கி தப்பிச் செல்ல முயன்ற எதிரியின் தனித் தனி குழுக்களுடனான போராட்டத்தின் பெரும் பகுதியை இவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஜூலை இறுதியில், ஆகஸ்டில் ரீகா வளைகுடாவை நோக்கி முன்னேறிய 1வது பால்டிக் சேனை எல்காவா, தோபெலே எல்லைக் கோட்டில் உறுதியாக நின்றது.

மேற்கு திசையில் தாக்குதலைத் தொடர்ந்த 3வது பெலோருஷ்ய சேனை 5வது படை மற்றும் 3வது கார்டு இயந்திரப்படை கோர்பஸின் துணை கொண்டு லித்துவேனியாவின் தலைநகராகிய வில்னியூசை விடுவித்தது. ஆகஸ்டு முதல் தேதி 5வது படை, 39வது, 33வது படைகளின் உதவியோடு கிழக்கு பிரஷ்ய திசையில் எதிரியின் மிக முக்கிய தற்காப்பு மையமாகிய கௌனசில் நுழைந்தது.



பெலோருஷ்ய இராணுவ நடவடிக்கை (1944 ஜூன்—ஆகஸ்டு)

இதே நாட்களில் இச்சேனையின் துருப்புகள் ஜெர்மனியின் எல்லைகளைக் கிழக்கேயிருந்து அணுகின; ஆகஸ்டு இறுதிக்குள் தனது நிலையை மேம்படுத்துவதற்காகப் போரிட்ட இத்துருப்புகள் அதே நேரத்தில் கிழக்குப் பிரஷ்யாவில் பாசிஸ்டுகளை முறியடிப்பதற்கான புதிய தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராயின.

2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் கடும் சண்டைகளுக்குப் பின் பெலஸ்தோக் நகரை எதிரியிடமிருந்து மீட்டு, தென் கிழக்கேயிருந்து கிழக்கு பிரஷ்யாவின் அருகேயிருந்த வாயில்களை அடைந்தன.

1வது பெலோருஷ்ய சேனையின் யூனிட்டுகள் ஜூலையின் இரண்டாம் பாதியில் லியூப்லின்-பிரேஸ்த் நடவடிக்கையை மேற்கொண்டன. இதன் விளைவாய் முக்கிய இருப்புப் பாதை மையமும் வார்ஸா திசையில் ஜெர்மானியர்களின் நன்கு பலப்படுத்தப்பட்ட தற்காப்பு பிரதேசமுமாகிய பிரெஸ்த் விடுவிக்கப்பட்டது.

போலந்தை விடுவிப்பது துவங்கியது. போலந்தின் தலைமறைவு தேசியக் கவுன்சில் — கிரையோவா ராதா நரோதவா — போலந்து தேசிய விடுதலைக் கமிட்டியின் வடிவத்தில் தற்காலிக நிர்வாக ஆட்சியைத் தோற்றுவிக்கும் ஆணையை பிறப்பித்தது. ஜூலை 23ஆம் தேதி ஹேல்ம் நகரில் இக்கமிட்டி போலந்து மக்களுக்கு அறிக்கை விடுத்தது. ''செஞ்சேனையுடன் மிக நெருக்கமாக ஒத்துழைக்குமாறும் இதற்கு மிகப் பயனுள்ள உதவியை அளிக்குமாறும்'' இது தன் அதிகாரத்திற்குட்பட்ட உறுப்புகளுக்கும் மக்களுக்கும் அறைகூவல் விடுத்தது. இந்த அறிக்கை புதிய ஜனநாயக போலந்தை புனரமைத்து வளர்க்கும் வழிகளைச் சுட்டிக் காட்டியது, இதன் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகளை பிரகடனப்படுத்தியது.

1வது பெலோருஷ்ய சேனையில் சோவியத் துருப்புகளோடு இணைந்து 1வது போலந்து படையும் தாக்குதலில் இறங்கியது. சோவியத் மற்றும் போலந்து துருப்புகளின் கூட்டு நடவடிக்கைகள் ஜெர்மானியப் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திலும் போலந்தின் தேசிய சுதந்திரத்தைப் புனர்நாட்டுவதில் உள்ள நாட்டத்திலும் இரு நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு அடையாளமாகத் திகழ்ந்தன.

சோவியத் துருப்புகள் வீஸ்லாவை நெருங்கி வந்த போது, லண்டனில் பதுங்கியிருந்த போலந்து பிற்போக்காளர்கள் தமது குறுகிய தன்னல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டவட்டமான நிலவரத்தைக் கவனத்தில் கொள்ளாது, சோவியத் படைத் தலைமைக்கு தெரிவிக்காமல் லுயூதோவா இராணுவத் தலைமையோடு பிரச்சினையைக் கலந்தாலோசிக்காது ஆகஸ்டு 1ஆம் தேதி வார்ஸாவில் எழுச்சியை மூட்டி விட்டனர்.

இந்நேரத்தில் சோவியத் துருப்புகள் வார்ஸாவின் வலது கரைப் பகுதியின் — பிராக் — வாயில்களில் வீஸ்லாவில் இருந்த தாக்குமுனைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகக் கடும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. முந்தைய சண்டைகளில் பெரும் ஆட்சேதத்தையும் ஆயுத சேதத்தையும் தாங்கியிருந்த இவை பன்முறை முயன்றும் எதிரியின் போர்முனையைப் பிளந்து கொண்டு கிளர்ந்

தெழுந்தவர்களுக்கு உதவுவதற்காக வர முடியவில்லை. சோவியத் விமானப்படை வான் மூலம் வீசிய ஆயுதத் தளவாடங்களும் மருந்துகளும் அடக்குமுறையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கிளர்ச்சியாளர்களுக்கு சிறிதளவு மட்டுமே உதவின. ஆனால் பலத்தில் விஞ்சி நின்ற பாசிஸ்டுகள் எழுச்சியை கொடுங்கரம் கொண்டு ஒடுக்கினர் (2,00,000 பேர்கள் கொல்லப்பட்டனர்), நகரம் கிட்டத் தட்ட முழுமையாக அழிக்கப்பட்டது.

ஆகஸ்டில் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் வீஸ்லாவை அடைந்து எதிர்க்கரையிலிருந்த மாக்னுஷெவ் மற்றும் புலாவா பிரதேசங்களில் இரண்டு பெரிய தாக்குமுனைகளைக் கைப்பற்றின. எதிரிக்குக் கணிசமான இழப்புகள் ஏற்பட்டன. பின்னால் வீஸ்லா-ஓதெர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

எதிரியின் ''சென்டர்'' படைத் தொகுதி முறியடிக்கப்பட்டதற்கு பெரும் இராணுவ-அரசியல் மற்றும் போர்த்தந்திர முக்கியத்துவம் இருந்தது. பெலோருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசு, லித்துவேனிய சோவியத் சோஷலிசக் குடியரசின் பெரும் பகுதி, நேச நாடாகிய போலந்தின் கிழக்குப் பகுதி முதலியன விடுவிக்கப்பட்டதானது இந்நடவடிக்கையின் முக்கிய விளைவுகளாகும். சோவியத் துருப்புகள் நேமன் ஆற்றைக் கடந்து பாசிச ஜெர்மனியின் எல்லைகளை அணுகின.

ஹிட்லர் துருப்புகளின் தற்காப்பில் பெரும் பிளவு தோன்றியது. பாசிஸ்டுகள் மேற்கேயிருந்து உடனடியாக பெரும் சக்திகளை (46 டிவிஷன்களையும் 4 பிரிகேடுகளையும்) இங்கே கொண்டு வரத் துவங்கினர். இது பிரான்சில் நேச நாட்டவரின் தாக்குதலுக்கு உதவியது.

எதிரிக்கு பேரிழப்பு ஏற்பட்டது. பல நேரங்களில் சண்டைகளில் கலந்து கொண்ட 97 டிவிஷன்கள், 13 பிரிகேடுகளில் 17 டிவிஷன்களும் 3 பிரிகேடுகளும் முற்றிலுமாக அழிக்கப்பட்டன, 50 டிவிஷன்கள் தம்மிடமிருந்தோரில் பாதிக்கும் மேற்பட்டோரை இழந்தன. சுமார் 2,000 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

பெலோருஷ்ய போர்த்தந்திர நடவடிக்கை அளவில் மிகப் பெரியதாக இருந்தது. இதில் 4 சேனைகள் பங்கேற்றன. 1,100 கி. மீ. நீளமும் 600 கி. மீ. வரை ஆழமும் உடைய போர்முனையில் தாக்குதல் நடைபெற்றது.

பெலோருஷ்யாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது மேற்கொண்டு யுத்தத்தின் போக்கில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்த வல்லதாக அமைந்தது. பெலோருஷ்யாவில் செஞ்சேனை அடைந்த வெற்றி பாசிச ஜெர்மனியின் நிலை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென மதிப்பீடு செய்த

பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சில், ''பொதுத் தோல்வி விரைவிலேயே வரும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் இருக்கவில்லை''* என குறிப்பிட்டார்.

மேற்கு நோக்கி முன்னேற முன்னேற சோவியத் போர்வீரர்கள், ஹிட்லர் பாசிஸ்டுகளின் இரத்தக் களறியான குற்றங்களைப் பற்றி மேன்மேலும் புதிய விவரங்களை அறிந்தனர். ஜெர்மானிய பாசிசத்தின் மிருகத்தனம் இதில் மேன்மேலும் வெளிப்பட்டது. ஜூலை 23ஆம் தேதி 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் லியூப்ளினுக்கு 2 கி. மீ. அருகே இருந்த மைதானெக் எனும் மரண முகாமை விடுவித்தனர். இங்கே ஹிட்லரின் கொடுங்கோலர்கள் தாம் தோற்றுவித்த மரண தொழிற்சாலையில் முதியோர், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 15 லட்சம் பேர்களைக் கொன்றனர். மத்தியக் கால சமயத் தண்டனையின் பயங்கரங்கள் கூட இந்த ராட்சஸத்தனமான கோரத்தோடு ஒப்பிடும் போது பரவாயில்லை போலத் தோன்றும்.

பெரும் படைத் திரட்டுகளைச் சுற்றி வளைத்து, பின் இவற்றை ஒழித்துக் கட்டும் இராணுவ நடவடிக்கை முறை முந்தைய நடவடிக்கைகளை விட பெலோருஷ்ய நடவடிக்கையில் அதிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, நடவடிக்கையின் ஆரம்பத்தில் பெலோருஷ்யாவில் இருந்த 63 பாசிச ஜெர்மானிய டிவிஷன்களில் 40க்கும் மேற்பட்ட டிவிஷன்கள் சுற்றி வளைக்கப்பட்டன, இவற்றில் கணிசமான பகுதி அழிக்கப்பட்டது, முறியடிக்கப்பட்டது. புதிய அம்சம் என்னவெனில், 3 பெலோருஷ்ய சேனைகள் எதிரியை தீவிரமாக துரத்திச் சென்றதன் பயனாய், முன்னணியிலிருந்து 200 கி. மீ. ஆழத்தில் தள்ளியிருந்த 1,05,000 பேரடங்கிய பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டை மீன்ஸ்க் நகருக்கு கிழக்கே சுற்றி வளைக்க முடிந்தது ஆகும். பெலோருஷ்ய நடவடிக்கையின் போது முந்தைய நடவடிக்கைகளில் நடைபெற்றதை விட குறுகிய காலகட்டத்திலேயே சுற்றி வளைக்கப்பட்ட எதிரியின் படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்ட முடிந்தது (வித்தெப்ஸ்க் அருகே 2 நாட்களிலும் பப்ருய்ஸ்க் அருகே 3 நாட்களிலும் மீன்ஸ்க் அருகே 7 நாட்களிலும் இவை ஒழிக்கப்பட்டன). சுற்றி வளைத்த அதே நேரத்தில் எதிரியை பிளவுபடுத்தியதால் எதிரியால் தன்னிச்சையாக இயங்க முடியாமல் போனதும் இதனால் எதிர்ப்புச் சக்தி பெரிதும் குறைந்ததும் இதற்குக் காரணமாகும். மொத்தத்தில், பெலோருஷ்ய நடவடிக்கை எதிரியின் போர்முனையை ஒன்றிலிருந்து ஒன்று நெடுந்தொலைவில் தள்ளியுள்ள இடங்

* Winston S. Churchill, *The Second World War*, Vol. VI, London, 1954, p. 114.

களில் ஒரே நேரத்தில் பிளந்து கொண்டு சென்றதற்கு எடுத்துக் காட்டாக அமைந்தது. இது எதிரியின் தற்காப்பை சிறு பகுதி களாகத் துண்டித்தது, பரந்த போர்முனையில் முயற்சிகளைச் சிதற அடித்தது, சோவியத் துருப்புகளின் தாக்குதலைக் குலைப்பதற்கான பெரும் எதிர் நடவடிக்கைகளுக்கு பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை ஏற்பாடு செய்து நிறைவேற்றுதவாறு செய்தது.

லிவோவ்-சன்டமீர் நடவடிக்கை (1944 ஜூலை 13—ஆகஸ்டு 29). எதிரியின் ''வடக்கு உக்ரேன்'' படைத் தொகுதியை (தளபதி கர்னல் ஜெனரல் ஹார்பெ) முறியடித்து, மேற்கு உக்ரேனையும் போலந்தின் தென் கிழக்குப் பகுதியையும் விடுவிக்கும் நோக்கத் தோடு இந்நடவடிக்கை சோவியத் யூனியனின் மார்ஷல் கோனெ வின் தலைமையிலிருந்த 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது.

சோவியத் துருப்புகள் தாக்குதலைத் துவக்கிய போது எதிரியிடம் 34 காலாட்படை, 5 டாங்கி, 1 மோட்டார் டிவிஷன்களும் 2 காலாட்படை பிரிகேடுகளும் இருந்தன. எதிரி தரப்பில் 6,00,000க்கும் மேற்பட்டோர் (பின்னணிப் படைப்பிரிவுகளைச் சேர்த்து 9,00,000 பேர்) இருந்தனர். எதிரித் துருப்புகளிடம் 6,300 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 900 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கி களும் 700 விமானங்களும் இருந்தன.

1வது உக்ரேனிய சேனையில் 80 துப்பாக்கிப்படை டிவிஷன்கள், 10 டாங்கி, இயந்திரப்படைக் கோர்பஸ்கள், 4 விசேஷ டாங்கி, இயந்திரப்படை பிரிகேடுகள் முதலியன இருந்தன. இவற்றில் மொத்தமாக 10 லட்சம் போர்வீரர்கள் இருந்தனர், 16,100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 2,050 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 3,250க்கும் கூடுதலான விமானங் களும் இருந்தன. எனவே ஆள் பலத்தில் 1.2 மடங்கும், பீரங்கி களில் 2.6 மடங்கும் டாங்கிகளில் 2.3 மடங்கும் விமானங்களில் 4.6 மடங்கும் செஞ்சேனை எதிரியை விஞ்சி நின்றது.

நடவடிக்கை இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. முதல் கட்டத்தில் (ஜூலை 13—27) சோவியத் துருப்புகள் ராவா-ரூஸ்கயா மற்றும் லிவோவ் திசைகளில் எதிரியின் தற்காப்பைப் பிளந்து பிரோது எனுமிடத்திற்கு தென் மேற்கே உள்ள பிரதேசத்தில் 8 டிவிஷன்கள் அடங்கிய எதிரியின் படைத் திரட்டை சுற்றி வளைத்து, அழித்தன, சான் ஆற்றைக் கடந்து ராவா-ரூஸ்கயா, பெரெமீஷ்ல், லிவோவ் மற்றும் ஸ்தனீஸ்லவ் (இவானோ-ஃபிரான்கோவ்ஸ்க்) ஆகிய நகரங்களை விடுவித்தன.

இரண்டாவது கட்டத்தில் (ஜூலை 28—ஆகஸ்டு 29) சோவியத் துருப்புகள் முக்கியச் சக்திகளை லிவோவ்-பெரெமீஷ்ல் திசையிலிருந்து

சன்டமீர் திசைக்கு மாற்றி, எதிரியைத் துரத்திச் சென்று, வீஸ்லா ஆற்றை அடைந்து, அதைக் கடந்து சன்டமீர் பிரதேசத்தில் பெரும் தாக்குமுனையைக் கைப்பற்றின.

லிவோவ்-சன்டமீர் நடவடிக்கையின் பயனுல் ''வடக்கு உக்ரேன்'' எதிரி படைத் தொகுதி முறியடிக்கப்பட்டது, மேற்கு உக்ரேனும் போலந்தின் கணிசமான பகுதியும் விடுவிக்கப்பட்டன. போலந்து நாடு முழுவதையும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கும் நோக்கத்தோடு அடுத்த, வீஸ்லா-ஓதெர் நடவடிக்கையை நடத்துவதற்கு அனுகூலமான சூழ்நிலேகள் தோற்றுவிக்கப்பட்டன.

மேற்கு உக்ரேன் விடுவிக்கப்பட்டதானது உக்ரேன் மக்களுக்கும் சோவியத் யூனியனின் மற்ற மக்களினத்தவருக்கும் ஒரு மாபெரும் வைபவமாக அமைந்தது. இதையொட்டி அந்நாட்களில் உக்ரேனில் நடைபெற்ற விழாக்களிலும் கூட்டங்களிலும், பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தில் தாராள உதவியும் ஆதரவும் அளித்ததற்காக புகழ் மிக்க சோவியத் போர்வீரர்களுக்கும் சோதரக் குடியரசுகளின் மக்களுக்கும் ஒருமனதாக நன்றி தெரி விக்கப்பட்டது.

லிவோவ்-சன்டமீர் நடவடிக்கை அளவில் பெரியதாக இருந்தது, பிரதான தாக்குதலின் திசை மிகத் திறமையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது, இத்திசையில் சக்திகள் பெருமளவில் குவிக்கப்பட்டன, நன்கு பிளந்து சென்று, தொடர்ந்து முன்னேறுவதற்காக லிவோவ் திசையில் டாங்கிப் படைகள் குறுகலான இடைவெளியில் (4—6 கி. மீ. அகலம்) அனுப்பப்பட்டன. இந்நடவடிக்கையின் இன்னு மொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், எதிரியை முனேப் போடு சுற்றி வளேத்து, நடவடிக்கையின் போக்கில் முயற்சிகளே வேறு திசைக்கு மாற்றியதும், போகிற போக்கில் பரந்த போர் முனேயில் ஆறுகளேக் கடந்ததும் வீஸ்லா ஆற்றில் பெரும் தாக்கு முனேயைப் பிடித்து கைவசம் வைத்திருந்ததும் ஆகும். வேவு பார்த்தல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விதம் குறிப்பிடத் தக்க தாகும் எதிரி ராவா-ரூஸ்கயா திசையில் பின்வாங்கி செல்வதை உரிய நேரத்தில் இது கண்டு பிடித்ததால் சோவியத் துருப்புகளால் விரைவாக, பீரங்கிப்படையின் பூர்வாங்கத் தாக்குதலின்றியே எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத்தைக் கடக்க முடிந்தது.

நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதில் விமானப் படை பெரும் பங்காற்றியது. எதிரியின் தற்காப்பை பிளப்பதில் இது துருப்புகளுக்குப் பெரிதும் உதவியது, பிளவினுள் மொபைல் யூனிட்டுகளே அனுப்ப வகை செய்தது, எதிரியை துரத்திச் செல் கையில் இது கூடச் சென்றது, சன்டமீர் தாக்குமுனேக்காக நடந்த போராட்டத்தில் தரைப்படைகளுக்கு ஆதரவளித்தது.

3. தென் கிழக்கு ஐரோப்பாவில் பாசிசக் கூட்டின் தோல்வி

1944 வசந்த காலத்தில் சோவியத் துருப்புகள் தெற்கே பாசிச ஜெர்மானிய இராணுவத்தைத் தோற்கடித்து பெரும் வெற்றி அடைந்தன, மேற்குக் கரையோர உக்ரேனை விடுவித்தன, வடக்கு ருமேனியாவினுள் நுழைந்தன. இராணுவ நடவடிக்கைகள் ருமேனியப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து 1944ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி சோவியத் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில், ''ருமேனியாவின் ஏதாவதொரு பகுதியைப் பிடிக்கும் நோக்கமோ அல்லது ருமேனியாவில் நிலவும் சமூக அமைப்பை மாற்றும் நோக்கமோ தனக்கு இல்லையென்றும் சோவியத் துருப்புகள் ருமேனியாவினுள் நுழைந்ததை முற்றிலும் யுத்த அவசியமும் எதிரி தொடர்ந்து காட்டிவரும் எதிர்ப்பும்தான் கட்டளையிடுகின்றன''[*] *என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.*

சோவியத் துருப்புகள் ருமேனியப் பரப்பினுள் காலடி எடுத்து வைத்ததும் சோவியத் அரசாங்கத்தின் அறிக்கையும் ருமேனிய மக்கள் மற்றும் இராணுவத்தின் யுத்த எதிர்ப்பும் பாசிச எதிர்ப்பு மனநிலைகளும் வலுவடைவதன் மீது பெரும் செல்வாக்கு செலுத்தின, நாட்டில் தேசிய விடுதலை இயக்கம் எழுச்சி பெற புதிய உந்து சக்தியாக அமைந்தது. ரோமினியா லிபெரேயே *என்ற தலைமறைவுப் பத்திரிகை சோவியத் அறிக்கையைப் பற்றி பின்வருமாறு எழுதியது: ''தீர்மானகரமான தருணம் வந்து விட்டது, இனி காத்திருக்க கூடாது. ருமேனிய மக்கள் தமது எதிர்காலத்தை தம் கரங்களில் எடுத்துக் கொண்டு யுத்தத்திலிருந்து வெளியேறுவதற்காகப் போராட வேண்டும்''.*

ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி, பாசிசத்திற்கு எதிராகவும் சோவியத் எதிர்ப்பு யுத்தத்தை நிறுத்தக் கோரியும் உறுதியாகப் போராடுமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தது; இதன் முன்முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய தொழிலாளர் முன்னணி, நாட்டின் தேசபக்தச் சக்திகள் அனைத்தையும் மேற்கொண்டு ஒரு முனைப்படுத்துவதற்கான அடிப்படையாக விளங்கியது.

இதனிடையே ஆட்சியிலிருந்த பாசிச சர்வாதிகாரி அன்டனேஸ்கு—இவன்தான் ருமேனிய மக்களை இரத்தக் களறியான, அநியாயமான யுத்தப் பாதாளத்தில் தள்ளினான்—1944 வசந்த காலத்தில் புதிய வெகுஜன அணிதிரட்டலை நடத்தினான். ருமேனிய

---

[*] **மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை. ஆவணங்கள்,** *தொகுதி 2, மாஸ்கோ,* ***1960,*** *பக்கம்* ***105.***

மக்களின் எதிரிகள் ஹிட்லருக்கு முன்போன்றே பலியாடுகளாகப் போர்வீரர்களையும் பல்வேறு போர்த்தந்திர சாதனங்களையும் அனுப்ப முடிவு செய்தனர்.

ருமேனிய மக்கள் யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஏற்கெனவே கூறப்பட்டபடி ஸ்தாலின்கிராத் அருகேயும் கிரீமியாவிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் விதியை ருமேனிய இராணுவமும் பகிர்ந்து கொண்டது. ருமேனியாவின் தேசியப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இவையனைத்தும் நாட்டில் பாசிச எதிர்ப்பு இயக்கம் வளர்ச்சியடைய பெரும் உந்து சக்தியை அளித்தன.

இதனிடையே வெகுஜனங்களின் இரத்தத்திலிருந்து பிழிந்தெடுத்த பெரும் மூலதனத்தால் ஆதாயம் பெற்ற முதலாளிகளும் நிலச்சுவாந்தர்களும் புதிய எஜமானனாகிய அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இணங்கிப் போக முடிவு செய்தனர். மணியு தேசிய-த்சரான் கட்சியும் பிரத்தியானு தேசிய-லிபரல் கட்சியும் ருமேனிய முதலாளிகள், நிலச்சுவாந்தர்களின் நலன்களைப் பிரதிபலித்தன. இக்கட்சிகள் அன்டனேஸ்குவின் பாசிச அரசாங்கத்தின் ஒப்புதலோடு, அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுடன் தனி சமாதான உடன்படிக்கை செய்து கொள்வது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக கெய்ரோவிற்கு தம் பிரதிநிதியை அனுப்பின. பாசிச ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் ருமேனியா கலந்து கொள்ள வேண்டும் என்று கோராமல், ஆட்சியை அன்டனேஸ்குவிடமே விட்டு வைத்த வோல்-ஸ்ட்ரீட், சிட்டி பணமுதலைகள் ருமேனியாவுடனான இத்தகைய சமரசத்திற்கு ஒப்புதல் அளித்தனர்.

சோவியத் துருப்புகளின் முனைப்பான தாக்குதல் இந்தத் திட்டங்களைத் தவிடு பொடியாக்கியது. சோவியத் இராணுவம் ருமேனியாவினுள் காலடி எடுத்து வைத்ததையடுத்து, ருமேனியா உடனடியாகச் சரணடைய வேண்டுமென்றும் அது பாசிசக் கூட்டிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் பாசிச ஜெர்மனிக்கு எதிராக ருமேனியா யுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்றும் சோவியத் அரசாங்கம் கோரியது.

பிற்போக்கு ருமேனிய அரசாங்கமும் மக்கள் விரோதக் கட்சிகளும் யுத்தத்தை நிறுத்துவதை சகல விதங்களிலும் இழுத்தடித்தன, யுத்தத்திலிருந்து நாடு விரைவில் வெளியேறுவதற்காக கூட்டுப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியும் பன்முறை விடுத்த முன்மொழிவுகளை சீர்குலைத்தன. 1944ஆம் ஆண்டு ஜூனில், ருமேனியப் பரப்பில் இருந்த ஹிட்லர் இராணு

வம் முறியடிக்கப்படுவது தவிர்க்க இயலாதது என்பது தெட்டத் தெளிவான பின்தான் பிற்போக்குத் தலைவர்கள், கம்யூனிஸ்டுக் கட்சி, சமூக-ஜனநாயகக் கட்சி, தேசிய-த்சரான் கட்சி, தேசிய-லிபரல் கட்சி ஆகிய நான்கு கட்சிகளைக் கொண்டு தேசிய-ஜனநாயகக் கூட்டை ஏற்படுத்த ஒப்புக் கொண்டனர். கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் ஜனநாயக மற்றும் பாசிச எதிர்ப்பு ஸ்தாபனங்கள் நாட்டில் பாசிச ஆட்சிக்கு எதிராயும் யுத்தத்திற்கு எதிராயும் போராட்டத்தை வலுப்படுத்தின.

ஜாரிச பல்கேரியாவிலும் அரசியல் ஸ்திரமின்மை கோலோச்சியது. சோவியத் இராணுவம் தினேஸ்தர் ஆற்றையும் வடக்கு ருமேனியாவையும் அடைந்ததானது ஆளும் பல்கேரிய உயர்மட்டத்தில் குழப்பத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

பாசிச ஜெர்மனியுடன் நெருக்கமான பொருளாதார, அரசியல் உறவுகளைக் கொண்டிருந்த பல்கேரிய முதலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியினர் ஃபீலவின்* தலைமையில், அமெரிக்காவும் பிரிட்டனும் ஹிட்லரிசம் இறுதியாக முறியடிக்கப்படுமாறு விட்டு விடாது என்று கருதி ஹிட்லர் ஜெர்மனியுடன் உள்ள கூட்டை அப்படியே வைத்திருக்க வேண்டுமெனக் கோரினர். பாக்ரியானவ்** தலைமையிலிருந்த இன்னொரு பகுதியினர் நாட்டை அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் கைப்பற்றினால் தன்னையும் பல்கேரியாவிலுள்ள பாசிச ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று எண்ணியது. பாக்ரியானவ் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இவனது திட்டத்தை ஆதரித்தனர். அதே நேரத்தில், அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் பல்கேரியாவினுள் நுழையும் வரை சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் தென் பகுதியில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் நிலைத்து நிற்க இந்த பிற்போக்கு அரசாங்கம் இயன்றதையெல்லாம் செய்தது.

எனவேதான் பல்கேரியாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் நிலவினாலும் கிரீமியாவிலிருந்தும் உக்ரேனிலிருந்தும் ஓடிய ஹிட்லர் போர்வீரர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் பல்கேரியாவின் பாசிச ஆதரவு அரசாங்கம் புகலிடம் அளித்தது. மேலும் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை முறியடிக்கப்பட்ட தன் துருப்புகளை சோவியத் பரப்பிலிருந்து வெளியேற்ற பல்கேரியப் போக்குவரத்து சாதனங்களையும், சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்கேரியத்

---

* ஃபீலவ்—1943 செப்டெம்பர் 14 வரை பல்கேரிய பிரதமர், 1943 பிப்ரவரி 2 முதல் 1944 செப்டெம்பர் 9 வரை ரீகென்ட்ஸ் கவுன்சில் உறுப்பினர்.

** பாக்ரியானவ்—1944 ஜூன் 1 முதல் 1944 செப்டெம்பர் 1 வரை பல்கேரியாவின் பிரதமர்.

துறைமுகங்கள், விமானத் தளங்களேயும் பரவலாகப் பயன்படுத்தியது. 1944ஆம் ஆண்டு ஜூனில் வார்ஞ துறைமுகத்தில் 2,000க்கும் மேற்பட்ட ஜெர்மானியப் போர்வீரர்கள் இருந்தனர், நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட 50 – 60 ஜெர்மானிய இராணுவக் கப்பல்களும் நீர் மீது செல்லும் விமானங்களும் இருந்தன.

சோவியத் யூனியனின் பால் ஜாரிச பல்கேரியா மேற்கொண்ட விரோத நடவடிக்கைகளேயடுத்து சோவியத் அரசாங்கம், பல்கேரிய அரசாங்கத்திற்குப் பன்முறை உறுதியான எதிர்ப்புகளேத் தெரிவித்தது, ஜெர்மனிக்கு அளிக்கப்படும் இராணுவ உதவியை உடனடியாக நிறுத்துமாறு கோரியது. ஆனுல் பல்கேரிய அரசாங்கம் முன் போன்றே தொடர்ந்து தேசிய விரோத, ஹிட்லர் ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றியது.

1944 கோடை வாக்கில் பல்கேரியாவின் பொருளாதார நிலே கணிசமாக மோசமடைந்தது. அத்தியாவசியப் பண்டங்களின் பங்கீட்டு விலேகள் மும்மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன. தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களின் வருமானங்கள் பெரிதும் குறைந்தன. எண்ணற்ற தடவை விவசாயப் பொருட்களேப் பறித்ததாலும், ஜப்திகளாலும் விவசாயிகள் வாடி வதங்கினர்.

பல்கேரிய ஆளும் வட்டங்களின் மக்கள் விரோதக் கொள்கையும் கடுமையான பொருளாதார நிலவரமும் நாட்டில் வெகுஜனங்களிடையே பெரும் ஆத்திரத்தைக் கிளப்பின. பல்கேரியாவில் பரவலான பாசிச எதிர்ப்பு இயக்கம் வெடித்தது: பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் கொரில்லாப் படை அணிகளுக்குச் சென்றனர். 1944 கோடையில் பல்கேரியாவில் 18,300 பேரடங்கிய 11 கொரில்லாப் படை பிரிகேடுகளும் 37 அணிகளும் இயங்கின.

சோபியா போலீஸ் நிர்வாகம் மிகவும் குறைத்து தரும் விவரங்களின்படியே 1944 ஜூனில் கொரில்லாப் படைவீரர்கள் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் மீது 415 ஆயுதத் தாக்குதல்களேத் தொடுத்து 989 ஜெர்மானிய, பல்கேரிய பாசிஸ்டுகளேக் கொன்றனர்.

1,00,000க்கும் அதிகமானேரை கொண்டிருந்த பல்கேரிய இராணுவம் கொரில்லாப் படைவீரர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனுல் நாட்டில் கொரில்லாப் படை இயக்கத்தை ஒடுக்க பாசிச ஆதரவு அரசாங்கம் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. நாட்டில் நிலவிய பாசிச ஆட்சிக்கு எதிராயும் சோவியத் யூனியனுடன் சமாதானமும் நட்புறவும் வேண்டுமெனக் கோரியும் பல்கேரிய மக்கள் வெற்றிகரமாகத் தொடர்ந்து போராடினுர்கள்.

இவ்வாறாக 1944 ஆண்டு கோடை இறுதியில் ருமேனியாவிலும் பல்கேரியாவிலும் இராணுவ-அரசியல் நிலவரம் மிகவும் பதட்ட மானதாக இருந்தது. இந்நாடுகளில் வளர்ந்து வரும் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை நசுக்குவதற்காக பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை மேற்கொண்ட எல்லா நடவடிக்கைகளும் தோல்வி அடைந்தன. பரவலான மக்கள் திரளினர் பாசிச ஆட்சிக்கும் யுத்தத்திற்கும் எதிராக மேன்மேலும் பரவலாகப் போராட்டத்தில் இறங்கினர். சோவியத் இராணுவம் விரைவிலேயே தமது நாடுகளை பாசிச ஆட்சியிலிருந்தும் ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் விடு விக்கும் என்று இவர்கள் உறுதியாக நம்பினர்.

பால்கனை தம் வசம் வைத்திருக்கும் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டங்களில் கைப்பற்றப்பட்ட சோவியத் மல்தாவியாவிற்கு பெரும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இது பால் கனை மூடிப் பாதுகாத்த ஜெர்மனியின் பிரதான சக்திகள் நிறுத்தப் பட்டிருந்த ஒரு நிலப்பரப்பாக மட்டுமின்றி உணவுப் பொருளை அளிக்கும் பிரதேசமாகவும் இருந்தது.

சோவியத் மல்தாவியாவை ஆக்கிரமித்த ஜெர்மானிய-ருமே னியத் துருப்புகள் அங்கே இரத்தக் களறியான பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டன. மூன்று ஆண்டுகள் நடத்திய ''இரா ஜாங்கத்தின்'' போது பாசிசக் கொலைபாதகர்கள் வழக்கோ விசாரணையோ இல்லாமல் 65,000க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்தனர், சித்திரவதை செய்தனர், 49,000க்கும் மேற்பட் டோரை கொடுஞ்சிறைகளுக்கு அனுப்பினர்.

ஆக்கிரமிப்பு ஆண்டுகளில் மல்தாவிய-ருமேனிய தேசிய வெறியர் களின் உதவியோடு பாசிச ஆக்கிரமிப்பாளர்கள் மல்தாவியா விலிருந்து பல மில்லியன் பவுண்டு விவசாயப் பொருட்களை எடுத்துச் சென்றனர், நூறாயிரக் கணக்கான கால்நடைகளைத் திருடிச் சென்ற னர், எல்லா டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்களையும் ஓட்டிச் சென்றனர், ஆலைகள், தொழிற்சாலைகளின் உபகரணங்களை அபகரித் தனர். மல்தாவியாவின் பல நகரங்களைப் பாசிஸ்டுகள் இடிபாடு களில் மூழ்கடித்தனர். ஜெர்மானிய-ருமேனிய ஆக்கிரமிப்பாளர்கள் சோவியத் மல்தாவியாவிற்கு ஏற்படுத்திய பொருட் சேதம் 16 பில்லியன் ரூபிள்களுக்கும் அதிகமாகும்.

பாசிச ஆக்கிரமிப்பாளர்களின் தான்தோன்றித்தனம் மல்தா விய மக்களிடையே பலத்த ஆத்திர அலையை ஏற்படுத்தியது. சோவியத் யூனியனின் எல்லா மக்களினங்களுடனும் சேர்ந்து மல்தாவிய மக்களும் தமது விடுதலை, சுதந்திரத்திற்காகப் போராட எழுந்தனர். ஆயிரக்கணக்கான தேசபக்தர்கள் யுத்தத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே தாமாகவே முன்வந்து செஞ்சேனையில் சேர்ந்த

னர். சோவியத் மல்தாவியாவின் ஆக்கிரமிப்பு துவங்கியதிலிருந்தே கொரில்லாப் படை இயக்கம் வளர்ந்தது, மல்தாவியாவின் கிட்டத் தட்ட எல்லா நகரங்களிலும் தலைமறைவு கட்சிக் குழுக்கள் அமைக்கப் பட்டன.

தலைமறைவாளர்களும் கொரில்லாப் படைவீரர்களும் எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தினர். இவர்கள் இருப்புப் பாதைகளில் பெரும் நாசவேலைகளில் ஈடுபட்டனர், இராணுவ புகை வண்டி களைக் கவிழ்த்தனர், பாலங்களைத் தகர்த்தனர், கிடங்குகளை எரித் தனர். இதோடு கூட இவர்கள் பாசிஸ்டுகளின் பொய் பிரச்சாரத் தைத் தோலுரித்துக் காட்டினர், எதிரியை தோற்கடித்து வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை மல்தாவிய மக்களுக்கு ஊட்டி வளர்த்தனர், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்திற்குப் பரவலான மக்கட் திரளினரைத் தட்டியெழுப்பினர். முதலில் 5 கொரில்லாப் படை அணிகள் அமைக்கப்பட்டன, பின் இந்த அணிகள் பெருகியதும் இவற்றைக் கொண்டு 2 கொரில்லாப் படை யூனிட்டுகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த யூனிட்டுகள் 1943—1944ஆம் ஆண்டுகளில் 26,000க்கும் அதிகமான எதிரி போர்வீரர் கள், இராணுவ அதிகாரிகளைக் கொன்று குவித்தன, 300க்கும் மேற்பட்ட எதிரியின் இராணுவப் புகை வண்டிகளைக் கவிழ்த்தன, டஜன் கணக்கான கிடங்குகளை எரித்தன, பாலங்களைத் தகர்த்தன, ஏராளமான எதிரிப் போர்த் தளவாடங்களை அழித்தன.

மல்தாவியாவின் உழைப்பாளிகள் தலைமறைவாளர்களுக்கும் கொரில்லாப் படைவீரர்களுக்கும் பரவலான ஆதரவு தந்தனர். முன்னேறிக் கொண்டிருந்த செஞ்சேனையின் துருப்புகளுக்குக் கொரில் லாப் படைவீரர்கள் பெரும் உதவி நல்கினர்.

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை கொரில்லாப் படை வீரர்களுக்கு எதிராக ஒரு சில தனிப்பட்ட அடக்குமுறை நடவடிக்கை களை மேற்கொண்டன, ஆனால் இவை வெற்றி பெறவில்லை. அப் போது அது மல்தாவியப் பரப்பு முழுவதையும் ஆர்மி கோர்பஸ் களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தனித்தனிப் வட்டங்களாகப் பிரிக்க முடிவு செய்தது. ஒவ்வொரு வட்டத்திலும் கொரில்லாப் படை வீரர்களுக்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் விசேஷத் தலைமையகம் தோற்றுவிக்கப்பட்டது. இவற்றின் வசம் ரெஜிமென்டுகளும் இதற்கும் பெரிய விசேஷ படைப்பிரிவுகளும் ஒப்படைக்கப்பட்டன. ''துமித்ரேஸ்கு'' ஆர்மித் தொகுதியினு டைய தளபதியின் கட்டளைப்படி 153வது பயிற்சி-படைக்கள டிவிஷனும் 62வது விசேஷ ஆர்மி கோர்பசும் கொரில்லாப் படை வீரர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டன. மல்தாவியாவின் பல பிரதேசங்களில், குறிப்பாக கிஷினேவிற்கு

மேற்கேயும் தென் மேற்கேயும் இருந்த காடுகளில் கடும் சண்டைகள் நடந்தன. ஆனாலும் பாசிஸ்டுகளால் கொரில்லாப் படைவீரர்களின் இயக்கத்தை முறியடிக்க இறுதி வரை இயலவேயில்லை.

பாசிச ஜெர்மனிக்கு எரிபொருளையும் உணவுப் பொருளையும் அளித்த ருமேனியா, பல்கேரியா மற்ற பால்கன் தீபகற்ப நாடுகள் ஆகியவற்றை எப்படியாவது தன்வசம் வைத்திருக்க ஹிட்லர் படைத் தலைமை முயன்றது. ''ருமேனியாவின் எண்ணெயை விட பெலோருஷ்யக் காடுகளை இழக்க நான் தயார்'' என்று ஹிட்லர் ஒரு கூட்டத்தில் அறிவித்தான். ''பீரங்கிக்கு தீனி போடும்'' நாடு என்ற வகையிலும் ருமேனியா ஜெர்மனிக்குத் தேவைப்பட்டது. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் ருமேனியத் துருப்புகள் பெரும் அளவில் நின்றன.

அமெரிக்க, குறிப்பாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் ருமேனியா மற்றும் பால்கன் நாடுகளின் விஷயமாக தமது விசேஷத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். இங்கே செஞ்சேனை வருவதற்கு முன் பால்கனைக் கைப்பற்றி இப்பிரதேசத்தில் ஜனநாயகச் சக்திகளின் வெற்றிக்கு இடையூறு விளைவிக்க அவர்கள் முயன்றனர்.

''1943 கோடையில் நாங்கள் சிசிலியின் உள்ளும் இத்தாலியின் உள்ளும் புகுந்த பின் பால்கன் நாடுகளை, குறிப்பாக யுகோஸ்லாவியாவைப் பற்றிய சிந்தனை ஒரு நிமிடம் கூட என்னை விட்டு அகலவில்லை''* என்று பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சில் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினார். அமெரிக்கப் பத்திரிகையாளர் இன்கெர்சோல் அடையாளச் சிறப்போடு குறிப்பிட்டபடி ''காம்பசை எப்படிக் குலுக்கினாலும் அதன் முள் வட திசையைக் காட்டுவது போல பிரிட்டிஷ் போர்த்தந்திர முள் எப்போதும் பால்கனை நோக்கி இருந்தது''**. தனது ''பால்கன் திட்டத்தை'' நிறைவேற்ற வி. சர்ச்சில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் துருப்புகளை மட்டுமின்றி துருக்கியத் துருப்புகளையும் பயன்படுத்த எண்ணினார். பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இத்திட்டங்களில் பால்கன் நாடுகளின் மக்களுக்கு பெரும் அபாயம் அடங்கியிருந்தது.

தனது தென் பக்கவாட்டில் தற்காப்பிற்கு ஏற்பாடு செய்த பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை பால்கனை நோக்கிய பாதையை மூடி பாதுகாத்த யாஸ்ஸி-கிஷினேவ் திசைக்குப் பெரும் முக்கியத்துவம் அளித்து இங்கே பெரும் படைத் திரட்டைக் குவித்தது.

---

* W. Churchill, *The Second World War*, Vol. V, London, 1952, p. 410.

** ரா. இன்கெர்சோல், முற்றிலும் இரகசியமானது. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1947, பக்கம் 94.

ஸ்டிராஜா, பஷ்கானி எல்லையிலும் தினேஸ்தர் ஆறு வழியே கருங்கடல் வரையிலும் தற்காப்பில் இருந்த 2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகளின் முன் ஜெர்மானியர்கள் 3 மண்டலங்கள் அடங்கிய, உறுதியான, பல படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பைத் தோற்றுவித்தனர். தீர்கு-நியாமு, தீர்கு-ஃப்ரூமொஸ், யாஸ்ஸி, ஃபாக்ஷானி நகரங்கள் பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இவர்களால் மாற்றப்பட்டன. பென்தேரி மற்றும் அக்கெர்மான் நகரங்கள் கோட்டைகளாக்கப்பட்டன. தினேஸ்தர், புரூட் மற்றும் சேரெத் ஆறுகளின் மேற்குக் கரைகளில் எதிரி உறுதியான தற்காப்பு நிலைகளை அமைத்தான்.

2வது, 3வது உக்ரேனிய சேனைகளுக்கு எதிராக ''தெற்கு உக்ரேன்'' என்ற பாசிசப் படைத் தொகுதி தற்காப்பில் நின்றது. இதில் ''வேலெர்'' ஆர்மித் தொகுதியும் (8வது ஜெர்மானிய, 4வது ருமேனியப் படைகள், 17வது தனி ஜெர்மானியக் கோர்பஸ்) ''துமித்ரேஸ்கு'' ஆர்மித் தொகுதியும் (6வது ஜெர்மானிய, 3வது ருமேனியப் படைகள்) அடங்கியிருந்தன. மொத்தமாக ''தெற்கு உக்ரேன்'' படைத் தொகுதியில் 47 டிவிஷன்களும் (இவற்றில் 25 ஜெர்மானிய டிவிஷன்கள், 22 ருமேனிய டிவிஷன்கள்) 5 பிரிகேடுகளும் 7,600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 404 டாங்கிகளும் 810 விமானங்களும் இருந்தன. மொத்தமாக எதிரியின் தரப்பில் இருந்த ஆட்களின் எண்ணிக்கை 9,00,000க்கும் அதிகம் ஆகும்.

2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் (தளபதிகள் மலினோவ்ஸ்கியும் தல்பூகினும்) துருப்புகள் நன்கு சாதனப்படுத்தப்பட்ட நிலைகளில் நின்றன. இரு சேனைகளிலும் 90 டிவிஷன்கள், 6 டாங்கி மற்றும் இயந்திரப்படைக் கோர்பஸ்கள், ஏராளமான பீரங்கிப் படை, பொறியியல் மற்ற விசேஷ யூனிட்டுகள், படைப்பிரிவுகள் ஆகியன இருந்தன. சேனைகளின் வசம் 76 மி.மீ. விட்டமும் இதற்கும் கூடுதலான விட்டமும் உடைய 16,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் (விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சேர்க்காது), 1,870க்கும் கூடுதலான டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் சுமார் 2,200 விமானங்களும் (கருங்கடல் கப்பற்படையின் விமானங்களையும் சேர்த்து) இருந்தன. மொத்த படைவீரர்களின் எண்ணிக்கை 12,50,000க்கும் கூடுதலாயிருந்தது.

சோவியத் துருப்புகள் ஆள்பலத்தில் 1.4 மடங்கும் பீரங்கிகளில் 2.1 மடங்கும் டாங்கிகளில் 4.7 மடங்கும் விமானங்களில் 2.7 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன.

எதிரியின் யாஸ்ஸி-கிஷினேவ் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து ஒழிக்கும் நோக்கத்தோடு யாஸ்ஸிக்கு வட மேற்கிலும் பென்

தேரிக்கு தெற்கேயும் உள்ள பிரதேசங்களிலிருந்து, 2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் சக்திகளைக் கொண்டு ஒன்றிணையும் திசைகளில் இரண்டு பலத்த தாக்குதல்களைத் தொடுப்பது என்பதுதான் யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கையில் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் திட்டமாயிருந்தது. இதையடுத்து இரண்டு சேனைகளும் ஃபாக்ஷானி, காலாத்ஸ், இஸ்மயீலை நோக்கி முன்னேற வேண்டும்.

இத்திட்டம் செயல் முனைப்பானதாயும் உறுதியானதாயுமிருந்தது. பிரதான தாக்குதல்களின் திசையை தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானதாயிருந்தது. சோவியத் துருப்புகள் வெற்றி அடையும் போது இவை, ''தெற்கு உக்ரேன்'' படைத் தொகுதியின் பிரதான சக்தியாகிய 6வது ஜெர்மானியப் படையை சுற்றி வளைத்து, 3வது, 4வது ருமேனியப் படைகளை இதிலிருந்து தனிமைப்படுத்தி அவற்றை தனித் தனியே ஒழித்துக் கட்ட வழிகோல வேண்டும். முக்கிய அடிகள் எதிரியின் தற்காப்பு மற்றும் படைத் திரட்டின் மிகவும் புண்படத்தக்க இடங்களின் மீது—2வது உக்ரேனிய சேனையின் மண்டலத்தில் பலப்படுத்தப்பட்ட தீர்கு-ஃப்ருமொஸ் மற்றும் யாஸ்ஸி பிரதேசங்களுக்கு இடையிலும், 3வது உக்ரேனிய சேனையின் மண்டலத்தில் பாசிச ஜெர்மானிய மற்றும் ருமேனியத் துருப்புகளின் (6வது ஜெர்மானிய, 3வது ருமேனியப் படைகளின்) இணைப்பு இடத்திலும்—திட்டமிடப்பட்டன. முற்றுகை முழுமை பெறும் எல்லையாக புருட் ஆறு தேர்ந்தெடுக்கப் பட்டதானது எதிரியின் கிஷினேவ் படைத் திரட்டு பின்வாங்கிச் செல்லும் பாதையைத் தடுக்கும் கடமையை நிறைவேற்றுவதை எளிதாக்கியது.

இரண்டு சேனைகளிலும் பீரங்கிப்படைத் தாக்குதலை மூன்று காலகட்டங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. 2வது உக்ரேனிய சேனையில் பூர்வாங்கப் பீரங்கிப்படைத் தாக்குதலை 90 நிமிடங்களும் 3வது உக்ரேனிய சேனையில் 105 நிமிடங்களும் தொடர முடிவு செய்யப்பட்டது. தாக்குதலுக்கான பீரங்கிப் படை ஆதரவு 2வது உக்ரேனிய சேனையில் 2 கி. மீ. ஆழத்திற்கு இரட்டை பீரங்கித் தாக்குதல் அலை மூலமாயும், 3வது உக்ரேனிய சேனையில் 2.5—5 கி. மீ. ஆழத்திற்கு ஒரே பீரங்கித் தாக்குதல் அலை மூலமாயும் நிறைவேற்றப்பட வேண்டும். தற்காப்பின் ஆழத்தில் சண்டை நடைபெறும் போது இரண்டு சேனைகளிலுமே எதிரியின் ஆதார நிலையங்கள் மீது தொடர்ச்சியாக குண்டு மழை பொழிந்து கொண்டே துருப்புகளுடன் பீரங்கிப்படை செல்வதென திட்டமிடப்பட்டது.

சோவியத் பீரங்கிப்படை இயக்கத்தின் ஒரு சிறப்பு அம்சத்தை

தனியாகக் குறிப்பிட வேண்டும். 3வது உக்ரேனிய சேனையில் பூர் வாங்கப் பீரங்கிப்படைத் தாக்குதலின் போது குண்டு வீச்சு பொய் யாக எதிரியின் தற்காப்பின் ஆழத்திற்கு மாற்றப்பட்டது. இதே நேரத்தில் முதல் படை வரிசைத் துருப்புகள் ''உர்ரா'' என்ற முழக்கங்களுடனும் பலத்த ஆயுத-பீரங்கி முழக்கங்களுடனும் முன்னேறித் தாக்குவதைப் போன்று நடித்ததால் எதிரி மறை விடங்களை விட்டு வெளியேறி ''துவங்கிய'' தாக்குதலை முறியடிப் பதற்காக பதுங்கி குழிகளுக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப் பட்டான். அப்போது பீரங்கிப்படை, குண்டு வீச்சை மீண்டும் முதல் பதுங்கு குழிகளுக்கு மாற்றி எதிரிக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

நடவடிக்கையின் முதல் இரண்டு, மூன்று தினங்களுக்கு எதிரி யின் தற்காப்பைப் பிளந்து செல்ல தரைப்படைகளுக்கு உதவி இப்பிளவினுள் மொபைல் துருப்புகளை அனுப்ப வகை செய்யும் கடமை இரண்டு சேனைகளின் விமானப்படைக்கும் அளிக்கப்பட்டது. அடுத்து வந்த நாட்களில் செயல்முறை ஆழத்தில் மொபைல் யூனிட்டு களின் இயக்கத்திற்கு உதவுமாறும் எதிர்ப்பு மையங்கள், பின் வாங்கிச் செல்லும் துருப்புகள், இருப்புப் பாதை மையங்கள், ஆறுகளை எதிரி கடக்குமிடங்கள் ஆகியவற்றைத் தாக்குமாறும் இதற்குக் கட்டளையிடப்பட்டது.

நடவடிக்கையின் தயாரிப்பிற்கான சிறப்பு அம்சங்களில், தாக்கு தலுக்கான தயாரிப்புகளை மூடி மறைக்கும் பொருட்டு படைத் தலைமை மேற்கொண்ட செயல்முறை உருமாற்ற நடவடிக்கை களையும், சோவியத் துருப்புகளின் பிரதான தாக்குதலின் திசை சம்பந்தமாக எதிரிக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியதையும் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, 2வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமை வலது பிரிவிற்கு அருகே, முக்கிய நெடுஞ்சாலையும் இருப்புப் பாதையும் சென்ற ரொமான் திசையில் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டைக் குவிப்பதாகப் பாவனை செய்தது. இங்கே 60 டாங்கி அட்டை மாதிரிகளும் 400 பீரங்கி அட்டை மாதிரிகளும் தயாரிக்கப் பட்டு நிறுத்தப்பட்டன, தீவிரமாக வேவு பார்ப்பது நடத்தப் பட்டது, பலப்படுத்தப்பட்ட தீர்கு-ஃப்ரூமொஸ் வட்டத்தின் நீண்ட கால பீரங்கிச் சுடுமிடங்கள் மீது முறையாகச் சுடப்பட்டது. போர்முனையின் இடப் பிரிவிலும் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டைக் குவிப்பதாகப் பாவனை செய்யப்பட்டது. இவையனைத் தும் எதிரியின் கவனத்தைச் சிதறடித்தது. நடவடிக்கை துவங்கு வதற்கு ஒரு நாள் முன்னராகத்தான் எதிரியால் பிரதான தாக்கு தல் திசையைக் கண்டுபிடிக்க முடிந்ததால் எந்தவித கணிசமான எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இயலவில்லை.

3வது உக்ரேனிய சேனையிலும் துணை திசையில், 5வது முக்கியத் தாக்குதல் படையின் மண்டலத்தில் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டைக் குவிப்பது போல் நடிக்கப்பட்டது. இங்கும் தீவிர பூர்வாங்கச் சண்டை நடந்தது, 17வது வான் படையின் விமானங் கள் எதிரி தற்காப்பின் மீது முறையாக குண்டு வீசின. 5வது முக்கியத் தாக்குதல் படைக்கு எதிராக எதிரி தொடர்ந்து 6வது ஜெர்மானியப் படையின் பெரும் சக்திகளை நிறுத்தி வைத்திருக் கும் அளவுக்கு இந்நடவடிக்கைகள் பயன் மிக்கவையாக இருந்தன. இது பென்தேரிக்குத் தெற்கே இருந்த தாக்குமுனையிலிருந்து— இங்கேதான் சேனையின் பிரதானத் தாக்குதல் தொடுக்கப்பட்டது— எதிரியின் தற்காப்பைப் பிளந்து சென்ற போது சோவியத் துருப்பு கள் வெற்றி பெற பெரும் முக்கியத்துவம் உடையதாயிருந்தது.

3வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமையகத்தின் முன்னாள் தலைவர் கர்னல் ஜெனரல் பிருஸோவ் நினைவு கூறும்படி ''எல்லாமே மிகத் துல்லியமாகச் செய்யப்பட்டது... இந்தச் செயல்முறை உரு மாற்ற நடவடிக்கைகள் அனைத்தும் முழுவதுமாக தம்மை நியாயப் படுத்தின என்பதைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்ட தருணத்தில் மட்டுமின்றி எங் களது தாக்குதலின் இரண்டாம் நாளன்று கூட எங்களுடைய பிரதானத் தாக்குதலை எதிரி கிஷினேவ் திசையில் தொடர்ந்து எதிர்பார்த்தான்... கடும் சண்டைகள் நடைபெற்ற இரண்டாம் நாளின் இறுதியில்தான் எதிரி தனது நிலையின் சோகத்தன்மை முழுவதையும் புரிந்து கொண்டான்''*.

தாக்குதலுக்கு முன்னதாக, ருமேனியாவின் பால் சோவியத் அரசின் கொள்கையைப் போர்வீரர்கள் நன்கு அறிந்து கொள்வதற் காகத் துருப்புகளில் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. ருமே னிய இராணுவம் சோவியத் பூமியில் இழைத்த கொடுமைகளுக்குப் பழிவாங்கும் உணர்வோடு சோவியத் அரசாங்கம் செயல்படவில்லை, மாறாக ஜெர்மானிய பாசிசத்தை முறியடிப்பது என்ற திட்ட வட்டமான கடமையை நிறைவேற்றும் அவசியத்தின் காரணமாக இயங்குகிறது என்றும் ருமேனியப் போர்வீரர்களை சோவியத் மக் களுக்கு எதிராக அனுப்பிய யுத்தக் குற்றவாளிகளிடமிருந்து உழைப் பாளிகளை நன்கு வேறுபடுத்திப் பார்க்க வேண்டுமென்றும் போர் வீரர்களுக்கு விளக்கப்பட்டது. சோவியத் இராணுவம் ஆக்கிரமிப் பாளனாக அல்லாமல் பாசிசக் கொடுமையிலிருந்து ருமேனிய மக்களை விடுவிப்பவனாக, உழைக்கும் மக்களின் பாதுகாவலனாக ருமேனியா

---

* எஸ். பிருஸோவ், **பால்கனில் சோவியத் போர்வீரன்**, மாஸ்கோ, 1963, பக்கங்கள் 81—82 (ருஷ்ய மொழியில்).

வினுள் நுழைகிறது என்று கோடிட்டுக் காட்டப்பட்டது.

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின் போது மல்தாவியக் குடியரசின் உழைப்பாளிகள் 2வது 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு பெரிதும் உதவினர். இவர்கள் 58 இருப்புப் பாதைப் பாலங்களை புனரமைத்தனர், 700 கி. மீ.க்கும் அதிகமான இருப்புப் பாதையையும் 2,300க்கும் அதிகமான வாகனங்களையும் டஜன் கணக்கான பீரங்கிகள், டாங்கிகளையும் பழுது பார்த்தனர். தற்காப்பு அரண்கள், விமானத் தளங்களின் கட்டுமானம், போர்முனை நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களை புனரமைத்தல் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நூறாயிரக் கணக்கான பவுண்ட் ரொட்டியும் மற்ற பொருட்களும் துருப்புகளுக்கு அனுப்பப்பட்டன.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் இரு சேனைகளின் துருப்புகளுக்கும் 2 முதல் 4 வரை ஆயுதத் தளவாட ரேஷன்களும் 8 — 9 முறை எரிபொருள் சப்ளையும் இருந்தன, 4 — 7 நாட்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த அளவு உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் ஆயுதத் தளவாடங்கள் இருந்ததால் நடவடிக்கையை பெரும் ஆழத்தில் வெற்றிகரமாக நடத்த முடிந்தது.

ஆகஸ்டு 20ஆம் தேதி காலையில் பலத்த பூர்வாங்கப் பீரங்கிப் படை, விமானப்படையின் தாக்குதலுக்குப் பின் 2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின[1].

2வது உக்ரேனிய சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் யூனிட்டுகள் முற்பகலில் எதிரி தற்காப்பின் இரண்டு மண்டலங்களைப் பிளந்தன. இப்பிளவினுள் அனுப்பப்பட்ட 6வது டாங்கிப் படை நாளின் இறுதியில் மாரே மலைத்தொடர் அருகேயிருந்த எதிரியின் 3வது தற்காப்பு மண்டலத்தை அடைந்தது; அங்கே காலாட்படை, டாங்கிகளின் உறுதியான எதிர்ப்பைச் சந்தித்தது.

3வது உக்ரேனிய சேனையின் இராணுவ நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நடந்தன. எதிரி தனது முதல் பதுங்கு குழிகளில் பலத்த எதிர்ப்பைக் காட்டாது குழம்பிப் போகும் அளவிற்கு துருப்புகளின் தாக்குதல் ஒற்றுமையானதாயும் முனைப்பானதாயும் இருந்தது. நாளின் இறுதியில் துருப்புகள் தற்காப்பின் பிரதான மண்டலத்தை முற்றிலுமாகப் பிளந்து ஆங்காங்கே எதிரியின் இரண்டாவது தற்காப்பு மண்டலத்தின் ஊடேப் புகுந்தன.

நடவடிக்கையின் இரண்டாம் நாளாகிய ஆகஸ்டு 21ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ருமேனியாவின் பெரும்

---

[1] 2வது உக்ரேனிய சேனையில் பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் நடைபெறவில்லை.

நிர்வாக, பொருளாதார மையமாகிய யாஸ்ஸி என்னுமிடத்தைக் கைப்பற்றின, எதிரியின் மூன்று தற்காப்பு மண்டலங்களையும் கடந்து செயல்முறை இடத்திற்கு வந்து சேர்ந்தன. அதே நாளன்று இயந் திரமயப்படுத்தப்பட்ட குதிரைப்படைத் தொகுதியும் 18வது டாங்கி கோர்பசும் பிளவினுள் அனுப்பப்பட்டன.

அதே நாளன்று 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 7வது மற்றும் 4வது கார்டு இயந்திரப்படைக் கோர்பஸ்களை பிளவினுள் அனுப்பி எதிரியின் 13வது டாங்கி டிவிஷனை முறியடித்து, 30 கி. மீ. ஆழம் வரை பிளந்து சென்று, 6வது ஜெர்மானியப் படை 3வது ருமேனியப் படையிலிருந்து துண்டிக்கப்படும் உண்மையான அபாயத்தை ஏற்படுத்தின.

அடுத்து வந்த நாட்களில் இரண்டு சேனைகளும் சற்றும் குன்றாத சக்தியுடன் தொடர்ந்து முன்னேறின. 2வது உக்ரேனிய சேனையின் 18வது டாங்கிக் கோர்பஸ் ஆகஸ்டு 23ஆம் தேதியன்று ஹூஷி பிரதேசத்தில் புரூட் ஆற்றை அடைந்தது. 3வது உக்ரேனிய சேனை யின் இயந்திரப்படை கோர்பஸ்கள் முனைப்போடு முன்னேறி லியோ வோவிற்கு வடக்கேயிருந்த பிரதேசத்தில் புரூட் ஆற்றை அடைந்து வட கிழக்கை நோக்கிய திசையில் தற்காப்பை மேற்கொண்டன. புரூட் ஆற்றின் பின் எதிரியின் கிஷினேவ் படைத் திரட்டு பின் வாங்கிச் செல்வது தடுக்கப்பட்டது. அடுத்த நாளன்று ஒன்றை யொன்று சந்தித்த சேனைகளின் மொபைல் துருப்புகள் ஹூஷி, ஃபேல்ச்சியு பகுதியில் ஆற்றைக் கடக்குமிடத்தைக் கூட்டாகக் கைப்பற்றின. இதன் மூலம் எதிரியின் கிஷினேவ் படைத் திரட் டைச் சுற்றி வளைப்பது நிறைவேற்றப்பட்டது. 18 ஜெர்மானிய டிவிஷன்கள் ''வலையில்'' வீழ்ந்தன.

64வது இயந்திரப்படை பிரிகேடின் (7வது இயந்திரப்படை கோர்பஸ்) 2வது மோட்டார் துப்பாக்கிப்படை பட்டாலியனின் கம்சமோல் செயலாளர் சீனியர் சார்ஜென்ட் யக்கீமவ் செம்பதா கையை உயரே தூக்கிப் பிடித்து அதை சோவியத்-ருமேனிய எல்லையில் ஏற்றிய பின் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் நோக்கிப் பேசும் போது பின்வருமாறு கூறினர்:

''இந்த சிவப்பு லெனினியக் கொடியை நமது சோவியத் எல்லையில் பறக்க விடுகிறேன். இக்கொடி நமது புகழ்மிகு செஞ்சேனை யின் வெற்றிகளுக்கு அடையாளமாக நின்று, புதிய வீர சாதனை களைப் புரிய நம்மை ஊக்குவிக்கும். போர்வீரத் தோழர்களே, இராணுவ அதிகாரிகளே, நம்முன் வைக்கப்பட்ட கடமையை நாம் நிறைவேற்றி விட்டோம், ஆனலும் எதிரியை விடாது துரத்திச் சென்று அவனுடைய குகையிலேயே சந்தித்து முறியடிக்க வேண்டும் என்று உயர்மட்ட பிரதானப் படைத் தலைவர் நம்முன்

வைத்துள்ள கடமையை நம்மால் மறக்க முடியாது. அதோ பாருங்கள், எதிரியின் குகை புரூட் ஆற்றின் அந்தப் பக்கத்திலிருந்து ஆரம்பமாகிறது. சோவியத் போர்வீரர்களே, எதிரியை முற்றிலுமாக முறியடிக்க புரூட் ஆற்றுக்கு அப்பால் செல்லுவோம், வாருங்கள்''. இந்த வார்த்தைகளோடு 2வது மோட்டார் துப்பாக்கிப்படை பட்டாலியனின் போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் புரூட் ஆற்றைக் கடக்க ஆரம்பித்து 30 நிமிடங்களில் இதைக் கடந்தனர்.

ஆகஸ்டு 24ஆம் தேதி ஜெனரல் பெர்ஸாரினின் 5வது முக்கியத் தாக்குதல் படை மல்தாவிய சோவியத் சோஷலிசக் குடியரசின் தலைநகராகிய கிஷினேவை விடுவித்தது. ருமேனிய, ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமையில் வாடித் தவித்த மக்கள் தம்மை விடுவித்தவர்களை மகிழ்வோடு வரவேற்றனர்.

3வது உக்ரேனிய சேனையின் இடது பிரிவில் 46வது படையின் துருப்புகள் கருங்கடல் கப்பற்படை மற்றும் துணைய் இராணுவ ப்ளீட்டைச் சேர்ந்து ஆகஸ்டு 23ஆம் தேதி அக்கெர்மான் பிரதேசத்தில் 3வது ருமேனியப் படையைச் சுற்றி வளைத்து, அடுத்த நாளன்று சிறைபிடித்தன.

இதற்குப் பின் இரு சேனைகளின் துருப்புகளும் எதிரியின் கிஷினேவ் படைத் திரட்டை ஒழித்துக் கட்டின, அதே நேரத்தில் புகாரேஸ்ட் மற்றும் இஸ்மயீல் திசைகளில் தொடர்ந்து முன்னேறின.

புரூட் ஆற்றின் இடது கரையில் சுற்றி வளைக்கப்பட்ட எதிரியை ஒழித்துக் கட்டும் கடமையை பிரதான படைத் தலைமையகம் 3வது உக்ரேனிய சேனைக்கும் வலது கரையில் இதே கடமையை 2வது உக்ரேனிய சேனையின் 52வது படைக்கும் தர முடிவு செய்தது.

கடுமையான சண்டைகளின் பயனாய் சுற்றி வளைக்கப்பட்ட எதிரித் துருப்புகள் அழிக்கப்பட்டன அல்லது சிறைபிடிக்கப்பட்டன. எதிரி போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் அடங்கிய ஒரு சிறு குழுவால் மட்டுமே முற்றுகையிலிருந்து தப்பிக்க முடிந்தது, ஆனால் இதுவும் விரைவிலேயே ஒழித்துக் கட்டப்பட்டது.

எதிரியை சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டுவதில் தரைப்படைகளுக்கு விமானப்படையினர் பெரும் உதவி நல்கினர். இவர்கள் எதிரி படையணிகள், பாலங்கள், கடக்கும் இடங்கள் ஆகியவற்றை பலமாகத் தாக்கி, எதிரி புரூட் மற்றும் சேரெத் ஆறுகளுக்கு அப்பால் பின்வாங்கிச் செல்வதை கடினமாக்கினர்.

புகாரேஸ்டு மற்றும் இஸ்மயீல் திசைகளில் ஒரே நேரத்தில் முன்னேறிய சோவியத் துருப்புகள் பலப்படுத்தப்பட்ட ஃபாக்ஷானி பிரதேசத்தைப் பிளந்து ஆகஸ்டு 27ஆம் தேதி ஃபாக்ஷானி நகரைக் கைப்பற்றின. அடுத்த நாளன்று இவை துணைய் கப்பற்படையோடு சேர்ந்து பிரயீலவையும் சுலீனு துறைமுகத்தையும்

பிடித்தன, ஆகஸ்டு 29ஆம் தேதி கருங்கடல் கப்பற்படையோடு சேர்ந்து கன்ஸ்தான்த்ஸா எனும் துறைமுக நகரைக் கைப்பற்றின.

இவ்வாறுக பத்து நாட்களாக நடந்த சண்டைகளில் ''தெற்கு உக்ரேன்'' படைத் தொகுதிக்கு செஞ்சேனை கடும் தோல்வியை உண்டாக்கியது. யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கையில் எதிரி 2,50,000க்கும் மேற்பட்டோரை இழந்தான். 2,08,600 எதிரி போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சோவியத் துருப்பு கள் சிறைபிடித்தன.

யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கை அளவில் பெரியதாக இருந்தது. இதில் 89 துப்பாக்கிப்படை டிவிஷன்களும் 3 குதிரைப்படை டிவிஷன்களும் கலந்து கொண்டன. 540 கி. மீ. நீளப் போர் முனையில் நாளொன்றுக்கு 30 கி. மீ. வேகத்தில் 300 கி. மீ. ஆழத் திற்கு துருப்புகள் முன்னேறித் தாக்கின. 1944ஆம் ஆண்டு மேற்குக் கரையோர உக்ரேன், பெலோருஷ்யா மற்றும் பால்டிக் குடியரசு களில் எதிரியைச் சுற்றி வளைப்பதற்காக மட்டும் பெருமளவு துருப்பு கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக் கைக்கு மாறுக இந்நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் 2 சேனைகளால் அல்லாது 4 சேனைகளால் நிறைவேற்றப்பட்டன.

யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கையின் போர்த்தந்திர விளைவு காலத்திலும் இடத்திலும் மிகவும் அடையாளச் சிறப்புடையது. இது மிக உயர்பட்சமான ஆற்றல் திற குணகத்துடன்—இப்படிச் சொல்லலாமெனில்—நடத்தப்பட்டது. திட்டமிட்டபடியே, பெரும் அரசியல், போர்த்தந்திர விளைவுகள் குறுகிய காலகட்டத்திலேயே அடையப்பட்டன; முந்தைய நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது குறைவான சக்திகளும் சாதனங்களும் செலவிடப்பட்டன. இந்த யுத்தத்தில் ஒப்பீட்டளவில் குறைவான சேதங்களுடன் எதிரி தோற் கடிக்கப்பட்ட ஒரு சில பெரிய போர்த்தந்திர நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று கூறலாம். எதிரி 18 டிவிஷன்களை பறிகொடுத்த போது 2வது, 3வது உக்ரேனிய சேனைகள் 12,500 பேர்களை இழந்தன.

திடீரென தாக்குதலைத் தொடுத்தது, முதல் அடியின் பெரும் பிளவுச் சக்தி, தாக்குதலின் உயர்வான வேகங்கள், மொபைல் சாதனங்களைப் பரவலாகப் பயன்படுத்தியது, முப்படைகள் மற்றும் படை வகைகளின் பரஸ்பர இணக்கத்தைத் திட்டவட்டமாக ஒழுங் கமைத்தது ஆகியன யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கையின் சிறப்பு அம்சங்களாகும். இது சோவியத் போர்க் கலையின் வரலாற்றில் எதிரியை விரைவாகச் சுற்றி வளைத்து, அதே அளவு விரைவாக முறியடித்ததற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இடம் பெற்றது.

பாசிச ஜெர்மானியத் ''தெற்கு உக்ரேன்'' படைத் தொகுதி சோவியத் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டதானது, ருமேனியா வில் அன்டனேஸ்கு பாசிச ஆட்சி தூக்கியெறியப்படுவதற்கும் ஹிட்லர் ஜெர்மனிக்கு ஆதரவான யுத்தத்திலிருந்து நாட்டை வெளியேற்றவும் அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. ஆகஸ்டு 23ஆம் தேதி மீஹாய் அரசனின் கட்டளைக்கேற்ப இ. அன்ட னேஸ்குவும் இவனுடைய உதவியாளனுகிய ம. அன்டனேஸ்குவும் கைது செய்யப்பட்டனர். விரைவிலேயே இன்னும் சில அமைச்சர் களும் கைது செய்யப்பட்டனர்.

அன்டனேஸ்கு அரசாங்கத்தைத் தூக்கியெறிவதில் மீஹாய் அரசனும் அரசவையினரும் பங்கேற்றது கட்டாயப்படுத்தப்பட்ட தொரு நடவடிக்கையாக இருந்தது. யாஸ்ஸி மற்றும் கிஷினேவ் அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்படுவதைப் பார்த்ததும் செஞ்சேனையின் விடுதலைப் பணிக்கு மக்களின் ஆதர வைக் கண்டதும்தான் இவர்கள் சர்வாதிகாரியைக் கைது செய்ய ஒப்புக் கொண்டனர். அதே நாளன்று மக்கள் எழுச்சி வெடித்தது. தேசபக்தச் சக்திகளின் தாக்குதலைத் தாங்க முடியாது ருமேனியா வில் பாசிச ஆட்சி தகர்ந்து வீழ்ந்தது.

''1944ஆம் ஆண்டு ஆகஸ்டு 23ஆம் தேதி, வெற்றி நடை போட்ட சோவியத் இராணுவம் ருமேனியாவை விடுவித்து, ருமே னியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் தேசபக்தச் சக்திகள் அன்டனேஸ்குவின் சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்த இந்த நாள் ருமேனிய மக்களின் மாபெரும் தேசிய விழா நாளாக ஆனது. சோவியத் இராணுவம் எங்கள் நாட்டை விடுவித்ததால் ஜனநாயக, சுதந்திர ருமேனியாவைக் கட்டுவதற்கான பாதை உழைப்பாளி களின் முன் திறந்து விடப்பட்டது''* என்று ருமேனியக் கம்யூ னிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் கியோர்கியூ-தேஷ் எழுதினுர்.

ஆகஸ்டு 23ஆம் தேதி இரவு 11-30க்கு புகாரேஸ்டில், அன்ட னேஸ்கு அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதைக் குறித்தும் ''தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம்'' அமைக்கப்பட்டதைக் குறித்தும் ஐக்கிய நாடுகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்து வது பற்றியும் சமரச நிபந்தனைகளை ருமேனியா ஏற்றுக் கொள் வதைப் பற்றியும் வானெலியில் அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளன்று ஜெர்மனிக்கு எதிராக ருமேனியா யுத்தத்தை அறிவித்தது.

ஆகஸ்டு 25ஆம் தேதி இரவில் சோவியத் யூனியனின் அயல் விவகாரத்துறை மக்கள் கமிசாரகத்தின் அறிக்கை வானெலி மூலம் ஒலிபரப்பப்பட்டது: ''ருமேனியப் பிரதேசத்தின் ஏதாவது

* கியோர்கியூ-தேஷ், ''போராட்டமும் வெற்றிகளும்'' (ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 30வது ஆண்டு விழாவை ஒட்டி), பிராவ்தா, 1944 மே 8.

ஒரு பகுதியைக் கைப்பற்றும் நோக்கமோ அல்லது ருமேனியாவில் நிலவும் சமூக அமைப்பை மாற்றும் எண்ணமோ அல்லது ருமேனியா வின் சுதந்திரத்திற்கு ஏதாவது ஒரு வகையில் பங்கம் ஏற்படுத் தும் விருப்பமோ தனக்குக் கிடையாது என்று இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் தான் விடுத்த அறிக்கையை இன்னுமொரு முறை ஊர்ஜிதப்படுத்துவது தகும் என்று ருமேனிய சம்பவங்களின் தொடர்பாக சோவியத் அரசாங்கம் கருதுகிறது. ருமேனியர் களுடன் ஒன்றுகச் சேர்ந்து பாசிச ஜெர்மானியக் கொடுமை யிலிருந்து ருமேனியாவை விடுவித்து சுதந்திரத்தைப் புனரமைப்பது அவசியமெனச் சோவியத் அரசாங்கம் கருதுகிறது''.

ருமேனியத் துருப்புகள் செஞ்சேனைக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, ஜெர்மானியர்களுக்கு எதிராக ருமேனிய சுதந்திரத்திற்காகவும் அல்லது ஹங்கேரியர்களுக்கு எதிராக டிரான் சில்வானியாவின் விடுதலைக்காகவும் செஞ்சேனையோடு கரம் கோர்த்து போரிடுவதாக உறுதிமொழி தந்தால் செஞ்சேனை ருமேனியத் துருப்பு களைப் படைக்கலைப்பிற்கு உள்ளாக்காது, எல்லா ஆயுதங்களையும் இவற்றிடமே விட்டு வைக்கும், இந்தக் கௌரவக் கடமையை நிறைவேற்ற சகல விதங்களிலும் உதவி செய்யும் என்று சோவியத் உயர்மட்டப் படைத் தலைமை கருதுகிறது.

ஆனால் ருமேனிய மக்களை ஒடுக்கி, அடிமைப்படுத்தும் சாதன மாக உள்ள ஜெர்மானியத் துருப்புகள் ருமேனியாவில் ஒழித்துக் கட்டப்பட்ட பின்தான் செஞ்சேனை ருமேனியப் பரப்பில் தன் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்.

ஜெர்மானியத் துருப்புகளை ஒழித்துக் கட்டுவதில் செஞ்சேனைக்கு ருமேனியத் துருப்புகள் உதவுவதுதான் ருமேனியாவில் இராணுவ நடவடிக்கைகளை விரைவாக நிறுத்தவும் நேச நாடுகளின் கூட்டணி யுடன் ருமேனியா சமரசம் செய்து கொள்ளவும் உள்ள ஒரே சாதன மாகும்''*.

சோவியத் அரசாங்கத்தின் புதிய அறிக்கையை ருமேனிய மக்கள் பெரும் திருப்தியுடன் எதிர்கொண்டனர்.

வெகுஜனங்களின் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய ருமே னியக் கம்யூனிஸ்டுக் கட்சி, எழுச்சிக்கு வெகுஜன ஸ்தாபன அமைப்புத் தன்மையை அளித்து அதன் வெற்றிக்கு வழிகோலியது.

புகாரேஸ்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்தியறிந்த ஹிட்லர், எழுச்சியை நசுக்கி ஒடுக்குமாறும் அரசனைக் கைது செய்து, ஜெர்ம னியுடன் நட்பு மனப்பாங்குள்ள ஒரு ஜெனரலின் தலைமையில்

---

* மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை, தொகுதி 2, பக்கம் 172.

அரசாங்கத்தை அமைக்குமாறும் கட்டளையிட்டான். பீல்ட்மார்ஷல் கைடலும் ஜெனரல் குடெரியானும் ஹிட்லருக்குச் சமர்ப்பித்த அறிக்கையில், ''ஐரோப்பிய தேசப்படத்திலிருந்து ருமேனியா மறைந்து போகவும் ருமேனிய மக்கள் இனமே இல்லாது போகு மாறு செய்யவும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு''* முன்மொழிந்தனர்.

ஆகஸ்டு 24ஆம் தேதி பாசிஸ்டுகள் புகாரேஸ்டு நகரை மிருகத் தனமான குண்டு வீச்சிற்கு உள்ளாக்கி எழுச்சியை குருதி வெள்ளத் தில் மூழ்கடிக்கும் பொருட்டு தாக்குதலில் இறங்கினர். பாசிஸ்டு களால் ருமேனியத் தலைநகர் முற்றிலுமாக அழிக்கப்படும் அபாயத் திலிருந்தது. ஆனால் ருமேனிய மக்களின் பலத்த எதிர்ப்பின் காரண மாய் இவர்கள் தோல்வியடைந்தனர். அதே நாளன்று ருமேனிய இராணுவம் சோவியத் துருப்புகளுடன் கூட்டாகச் சேர்ந்து பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை களைத் துவக்கியது.

இவ்வாறாக சோவியத் இராணுவம் தனது வெற்றிகளின் மூலம் ருமேனிய அரசின் தேசிய சுதந்திரத்தைப் புனர் நாட்டுவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. பால்கனுக்கான ''ருமேனியக் கதவுகள்'' திறந்து சோவியத் துருப்புகளுக்கு வழி விட்டன. ஆனால் ருமேனியாவை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து முற்றிலும் விடுவிப்பதற்காக இவை ருமேனியப் பரப்பில் இன்னும் கடுமையாகப் போரிட வேண்டியிருந்தது.

ருமேனியாவின் முழு விடுதலை

1944ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் தேதி உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம், புளொயேஷ்தி, ஸ்லாத்தினு, தூர்னு-சேவெரின் ஆகியவற்றை நோக்கிய பொதுவான திசையில் முக்கியச் சக்திகளைக் கொண்டு தாக்குதலைத் தொடருமாறும் புளொயேஷ்தி எண்ணெய் பிரதேசத்தை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர் களிடமிருந்து விடுவித்து, புகாரேஸ்ட் நகரை எஞ்சிய ஹிட்லர் துருப்புகளிடமிருந்து விடுவிக்குமாறும் 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்குக் கட்டளையிட்டது. மேற்கொண்டு இத்துருப்புகள் தாக்குதலைத் தொடர்ந்து, தூர்னு-சேவெரின் பிரதேசத்திலும் இதற்குத் தென் கிழக்கிலும் துனுய் ஆற்றை அடைய வேண்டும்.

சேனையின் வலப் பிரிவுத் துருப்புகளுக்கு, கிழக்கு கர்பாத்து

---

* *Comunicările prezentate la sesiunea Stiintifică cousacrată a 25de ám de la victoria asupra fascimului Bucuresti,* 1970, p. 126.

வழியேயான கணவாய்களைக் கைப்பற்றி, செப்டெம்பர் 15 வாக்கில் பீஸ்த்ரித்ஸா, க்ளூஜ், ஐயுத், சிபீயூ எல்லைகளை வந்தடையுமாறு கட்டளையிடப்பட்டது; மேற்கொண்டு 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் கர்பாத்தைக் கடந்து ஊஷ்கரத், மூக்கச்சேவா பிரதேசத்திற்கு வர உதவும் பொருட்டு மேற்கிலிருந்து மூடி மறைந்து சாத்து-மாரேயை நோக்கிய பொதுவான திசையில் தாக்குதல் தொடுக்க வேண்டும்.

ருமேனிய-பல்கேரிய எல்லையை நோக்கி முனைப்போடு நடை போட்டுச் செல்லுமாறு 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்குக் கட்டளையிடப்பட்டது.

2வது உக்ரேனிய சேனையின் வலப் பிரிவுத் துருப்புகள் கிழக்கு கர்பாத்தைக் கடக்கும் போது குறிப்பாக கடும் சண்டைகள் மூண்டன. ''தெற்கு உக்ரேன்'' படைத் தொகுதியின் ஒரு சில நைந்து போன யூனிட்டுகளும் அப்போதுதான் வந்திறங்கிய பாசிச ஜெர்மானிய மற்றும் ஹங்கேரியப் படைப்பிரிவுகளும் இங்கே இயங்கின.

துருப்புகள் வெற்றிகரமாக மலைகளைக் கடப்பதற்காக சேனை, படை, கோர்பஸ் மற்றும் டிவிஷன்களின் படைத் தலைமை எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. மலைப்பாங்கான பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளை நடத்துவதற்கு அவசியமான அனைத்தையும் துருப்புகள் பெற்றன.

சோவியத் போர்வீரர்கள் எதிரியை மலைகளின் உள் எவ்வளவுக்கெவ்வளவு நெருக்கித் தள்ளினார்களோ அவ்வளவுக்கவ்வளவு எதிரி மூர்க்கத்தனமாகவும் கடுமையாகவும் எதிர்ப்பைக் காட்டினான். ஹிட்லர் படைகள் மலைகளின் ஊடே செல்லும் வழிகளிலும் கணவாய்களிலும் கண்ணிவெடிகளை வைத்தும் செங்குத்தான இடங்களில் செயற்கையான தடைகளை எழுப்பியும் அவ்வப்போது எதிர் தாக்குதலில் இறங்கின. ஆனால் சோவியத் துருப்புகளின் முன்னேற்றத்தை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. எதிரியிடமிருந்து ஒவ்வொரு மீட்டர் பிரதேசத்தையும் பிடித்து சோவியத் படை வீரர்கள் தொடர்ந்து முன்னேறினர்.

செப்டெம்பர் 8ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனையின் வலப் பிரிவுத் துருப்புகள் ஐதோஸ்கி மலைத்தொடரில் எதிரியின் தற்காப்பை முற்றிலுமாகப் பிளந்து ஹிட்லர் படைகளின் முக்கிய ஆதார நிலையமாகிய பிரேத்ஸ்குவைக் கைப்பற்றின. இதற்குப் பின் இத்துருப்புகள் வட மேற்குத் திசையில் எதிரியைத் துரத்திச் சென்றன.

இதே நேரத்தில் 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளும் 2வது உக்ரேனிய சேனையின் முக்கியச் சக்திகளும் ருமேனியப் பரப்பில் தாக்குதலைத் தொடர்ந்தன. இவற்றோடு தோளோடு தோள்

நின்று ருமேனியப் படைப்பிரிவுகளும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப் பாளர்களை எதிர்த்துப் போரிட்டன. இவற்றில் சோவியத் யூனி யனில் அமைக்கப்பட்ட துதோர் விளதீமிரேஸ்கு வாலன்டரி ருமே னிய டிவிஷன் சிறப்பாக இயங்கியது.

ஆகஸ்டு 30ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனையின் மையத் துருப்புகள் சண்டையிட்டு ருமேனிய எண்ணெய் தொழிற்துறையின் பிரதான கேந்திரமாகிய புளொயேஷ்தியை விடுவித்தன. இதற்கு முதல் நாள் மாலையில் சோவியத் டாங்கிகள் முற்றிலுமாக புளொ யேஷ்தியை நெருங்கி வந்த போது பாசிஸ்டுகள் எண்ணெய் வயல் களுக்கு தீ மூட்டினர். இரவு பூராவும் புளொயேஷ்தி நகரத் தெருக் களில் நடைபெற்ற கடுமையான சண்டைகளுக்குப் பின் நகரம் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப் பட்டது. சோவியத் இராணுவம் ருமேனியாவிற்கு அதன் முக்கிய தொழிற்துறை, எண்ணெய் பிரதேசத்தை மீட்டுத் தந்தது.

பிளொயேஷ்தி எண்ணெய் பிரதேசத்தை இழந்ததானது பாசிச ஜெர்மனியின் பொருளாதாரத்தின் மீது பெரும் அடியாக விழுந்தது. இப்போது ஹிட்லர் படைகள் தனது சொந்த செயற்கை எரி பொருள் உற்பத்தியை மட்டுமே—குறைவான அளவு ஜெர்மானிய, ஹங்கேரிய எண்ணெய் இருப்புகளைத் தவிர்த்து—நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆனால் செயற்கை எரிபொருளைக் கொண்டு ஜெர்மானிய இராணுவத்தின் எரிபொருள் தேவையை ஈடுகட்டு வது மிகக் கடினமாயிருந்தது.

ஆகஸ்டு 31ஆம் தேதி சோவியத் இராணுவம் ருமேனியாவின் தலைநகராகிய புகாரேஸ்டினுள் நுழைந்தது. ருமேனியத் தலைநகர மக்கள் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டனர். தம்மை விடுவித்த சோவியத் போர்வீரர்களை அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றனர். ''செஞ்சேனை வாழ்க'' என்ற வாழ்த்து முழக்கம் எங்கும் ஒலித் தது. சோவியத் போர்வீரர்களின் மீது மலர் மழை பொழிந்தனர், பலத்த கர ஒலி எழுப்பி வாழ்த்தினர்.

ருமேனிய மக்களுடைய பாதுகாப்பின் ஆதாரத்தையும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களை ருமேனியாவிலிருந்து விரட்டி யடிக்க வல்ல உண்மையான சக்தியையும் புகாரேஸ்டு வாசிகள் சோவியத் துருப்புகளின் மகத்தான வெற்றியில் கண்டனர்.

புகாரேஸ்டை விடுவித்த பின் 2வது உக்ரேனிய சேனையின் துருப்பு கள் யுகோஸ்லாவிய எல்லையை நோக்கி தூர்னு-சேவெரின் திசை யிலும் வடமேற்கே ருமேனிய-ஹங்கேரிய எல்லையிலிருந்த டிரான் சில்வானியாவை நோக்கியும் முன்னேறி சென்றன.

எதிரி பலத்த எதிர்ப்பைக் காட்டினான். ஆனால் சோவியத் துருப்பு களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

ருமேனிய நாட்டின் பெரும் பகுதியை பாசிச ஜெர்மானியத் துருப்புகளிடமிருந்து விடுவித்த 2வது உக்ரேனிய சேனையின் துருப்பு கள் செப்டெம்பர் 27இல் ருமேனிய-ஹங்கேரிய எல்லையையும் ருமேனிய-யுகோஸ்லாவிய எல்லையையும் அடைந்தன.

அக்டோபர் இறுதியில் சோவியத் துருப்புகள் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களை ருமேனியாவிலிருந்து முற்றிலுமாக விரட்டி யடித்தன. இதற்கு பெரும் முயற்சிகள் தேவைப்பட்டன, ஏராள மான இரத்தம் சிந்தப்பட்டது. 1944 மார்ச் முதல் அக்டோபர் வரை ருமேனியாவை விடுவிப்பதற்காக நடந்த சண்டைகளில் சோவியத் இராணுவம் 2,86,000க்கும் அதிகமானோரை இழந்தது; இவர்களில் 69,000 பேர்கள் கொல்லப்பட்டனர். ஆகஸ்டு 23முதல் அக்டோபர் 30 வரை பாசிஸ்டுகளுக்கு எதிராக நடந்த போராட் டத்தில் 58,300 பேர்களுக்கும் அதிகமான ருமேனியப் போர்வீரர் கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், தொலைந்து போயினர்.

''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் மிகப் பெரும் வீரத்தை வெளிப்படுத்தி, ஏராளமான இழப்பு களை விலையாகக் கொடுத்து, யுத்தத்தின் முக்கியச் சுமையைத் தோள் களில் தாங்கி, பாசிச ஜெர்மனியை முறியடிப்பதில் தீர்மானகர மான பங்காற்றி, ருமேனியாவையும் இன்னும் பிற நாடுகளையும் மக்களையும் ஹிட்லரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க விலை மதிப்பற்ற உதவி நல்கிய சோவியத் மக்களின் பாலும் இவர்களுடைய புகழ் மிகு இராணுவத்தின் பாலும் ருமேனிய மக்கள் ஆழ்ந்த நன்றி பாராட்டுகின்றனர்''° என்று பாசிசத்தின் மீது அடையப்பட்ட வெற்றியின் 30 ஆண்டு நிறைவை ஒட்டி ருமேனிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும் ருமேனிய அரசாங்கமும் விடுத் துள்ள வாழ்த்துச் செய்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

பல்கேரியாவின் விடுதலை

3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் கேலேராஷ் நகர (துனூய் ஆற்றின் கரையில்) பிரதேசத்தில் பின்வாங்கிச் சென்று கொண் டிருந்த எதிரியைத் துரத்திச் சென்று 6,000 வரையிலான பாசிச ஜெர்மானியப் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறை பிடித்தன. இவர்களில் பெரும்பாலோர் புகாரேஸ்டைத் தாக்குவதற் காக பல்கேரியாவிலிருந்து ருமேனியாவிற்குள் அனுப்பப்பட்டவர் கள். இதற்குப் பின் இத்துருப்புகள் தப்ருஜா வழியே சென்று எஞ்சி யிருந்த ஹிட்லர் துருப்புகளை நொறுக்கித் தள்ளின. தப்ருஜா

° பிராவ்தா, 1975 மே 11.

மக்கள் சோவியத் போர்வீரர்களை பெரும் மகிழ்வோடு வரவேற்றனர். செஞ்சேனையின் வெற்றிச் செய்திகளால் உள்ளூர் பத்திரிகைகள் நிரம்பி வழிந்தன.

ஹிட்லர் துருப்புகளை முறியடித்து சோவியத் இராணுவம் 1944 கோடை இறுதியில் பல்கேரிய எல்லைகளை நெருங்கிய போது நாட்டில் தேசிய விடுதலை இயக்கம் தனது வளர்ச்சிக் கட்டத்தில் தீர்மானகரமான கட்டத்தை அடைந்திருந்தது. இத்தருணத்தில் நாட்டில் தாய்நாட்டு முன்னணி கமிட்டிகளின் எண்ணிக்கை பெரிதும் கூடுதலாகி ஆகஸ்டு இறுதியில் இது 670ஆக இருந்தது. எல்லா இடங்களிலும் மக்கள் பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அறைகூவலுக்குச் செவி மடுத்து ஆயுதங்களை ஏந்தினர். பல இடங்களில் போலீசுடனும் துருப்புகளுடனும் ஆயுத மோதல்கள் நடைபெற்றன. அரசாங்கத் துருப்புகளில் பல போர்வீரர்கள் பாசிசப் படைத் தலைமைக்கு கீழ்ப்படிய மறுத்தனர். பல சமயங்களில் முழு படைப் பிரிவுகளே கொரில்லாப் படைவீரர்களின் தரப்பிற்கு மாறின. பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களை நாட்டை விட்டுத் துரத்த வல்ல ஒரே சக்தியான சோவியத் இராணுவத்தின் வருகையை பல்கேரிய மக்கள் ஆவலோடு எதிர்நோக்கினர்.

1944 செப்டெம்பர் 3ஆம் தேதி 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ருமேனிய-பல்கேரிய எல்லையை அடைந்தன. செப்டெம்பர் 5ஆம் தேதி சோவியத் அரசாங்கம் பல்கேரிய அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பை அனுப்பியது. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் பல்கேரியா நடைமுறையில் ஜெர்மனிக்கு உதவி வந்ததை'' சோவியத் அரசாங்கம் 3 வருடங்களுக்கும் மேலாகப் பொறுத்துக் கொண்டது. ''... பல்கேரியா அனுகூலமான தருணத்தைப் பயன்படுத்தி ருமேனியாவையும் பின்லாந்தையும் பின்பற்றி ஜெர்மனிக்கு ஆதரவான கொள்கையைக் கைவிடும், ஜெர்மனியுடன் உள்ள உறவுகளை அறுத்துக் கொண்டு ஜனநாயக நாடுகளின் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் சேரும் என்று எதிர்பார்த்திருக்கலாம். ...என்றாலும் இப்போதும் கூட ஜெர்மனியுடன் துண்டித்துக் கொள்ள பல்கேரிய அரசாங்கம் மறுக்கிறது, நடுநிலை என்றழைக்கப்படும் கொள்கையைப் பின்பற்றுகிறது; இதன் பயனாய் அது சோவியத் யூனியனுக்கு எதிராக ஜெர்மனிக்குத் தொடர்ந்து நேரடியாக உதவி வருகிறது.

இதனால் பல்கேரியாவுடன் உறவுகளை மேற்கொண்டு தொடருவது சாத்தியமில்லையென சோவியத் அரசாங்கம் கருதி, பல்கேரியாவுடன் உள்ள எல்லா உறவுகளையும் முறித்துக் கொள்கிறது; சோவியத் யூனியனுக்கு எதிராக பல்கேரியா யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதோடு கூட பல்கேரியாவிற்கு எதிராக சோவியத் யூனியனும் யுத்த நிலையில்

இருக்கும் என்று அறிவிக்கிறது''* என்று மேற்கொண்டு அக்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

சோவியத் யூனியன் யுத்தத்தை அறிவித்தாலும் கூட, ஹிட்லர் ஜெர்மனியுடன் உள்ள தொடர்பை முறித்துக் கொள்ள அப்போதைய பல்கேரிய அரசாங்கத்திற்கு வாய்ப்பளிக்கும் முகமாக பல்கேரியாவிற்கு எதிராக உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

ஆனால் பல்கேரிய அரசாங்கம் அதற்களிக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை. செப்டெம்பர் 6ஆம் தேதி அது 2 முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டது. முதல் அறிக்கையில் அது பாசிச ஜெர்மனியுடன் உள்ள உறவுகளை முறித்துக் கொள்ளும் முடிவை தெரிவித்து சமரசத்திற்கு வருமாறு சோவியத் யூனியனிடம் வேண்டியது. இரண்டாவது அறிக்கையில், சமரசத்திற்கு வருமாறு சோவியத் அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக மட்டும் அறிவித்து, பாசிச ஜெர்மனியுடன் உள்ள தொடர்புகளை முறித்துக் கொள்ளும் பிரச்சினை குறித்து பரிபூரண மௌனம் சாதித்தது. ஹிட்லர் படைகளுக்கு பல்கேரியாவில் புகலிடம் அளித்து முன்போன்றே பாசிச ஜெர்மனிக்கு ஆதரவு தர பல்கேரிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்பதற்கு இது சான்றாக அமைந்தது.

ஆனும் பாசிச பல்கேரிய கும்பலுக்கு எதிராக சோவியத் யூனியன் யுத்தம் பிரகடனம் செய்ததை பல்கேரிய மக்கள் திருப்தியோடு வரவேற்றனர். பல்கேரிய பாசிஸ்டுகளும் ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களும் நாட்டில் தலைவிரித்தாடியதற்கு இது முடிவு கட்டும் என்று அவர்கள் நம்பினர்.

செப்டெம்பர் 5ஆம் தேதி பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொலிட்பீரோ கூட்டத்தில் எழுச்சியைப் பற்றிய முடிவான திட்டம் தீட்டப்பட்டது. அடுத்த நாள் பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியும் தாய்நாட்டு முன்னணியின் தேசியக் கமிட்டியும், பாசிச ஆதரவு முராவ்லெவ் அரசாங்கத்தைத் தூக்கியெறியும் போராட்டத்திற்கும் தாய்நாட்டு முன்னணி அரசாங்கத்தை அமைக்கவும் மக்களுக்கு அறைகூவல் விடுத்தன. நாடு முழுவதும் வெகுஜன வேலை நிறுத்தங்களும் ஆர்பாட்டங்களும் வெடித்தன. பல நகரங்களில் இவை மக்களுக்கும் போலீசுக்கும் இடையிலான ஆயுத மோதல்களாக மாறின. பல்கேரிய போர்வீரர்கள் தாய்நாட்டு முன்னணியின் தரப்பிற்கு மாறி வருவது, குறிப்பாக சோவியத் இராணுவம் பல்கேரியாவினுள் நுழைந்ததையடுத்து பெருமளவில் நடைபெற்றது.

---

* இஸ்வேஸ்திய என்னும் பத்திரிகை, 1944 செப்டெம்பர் 6.

பல்கேரிய மக்கள் விடுதலை இராணுவத்தின் கொரில்லாப் படை பிரிகேடுகள் பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு எதிரான தாக்கு தலில் இறங்கின. இவை முழு பிரதேசங்களேயே கைப்பற்றி அங்கே தாய்நாட்டு முன்னணியின் ஆட்சியை நிலைநாட்டின.

செப்டெம்பர் 8ஆம் தேதி 3வது உக்ரேனிய சேனையின் துருப்பு கள் ஜூர்ஜு-மன்காலிய பகுதியில் ருமேனிய-பல்கேரிய எல்லையைக் கடந்து நாளின் இறுதியில் ரூஸ் (ருஷுக்), துர்துகாய், சிலீஸ்திரியா, தோப்ரிச் மற்றும் கருங்கடலோர துறைமுக நகராகிய வார்ளு ஆகியவற்றை விடுவித்தன.

சோவியத் இராணுவத்தின் விடுதலைப் பணியில் சந்தேகம் கொள் ளாத பல்கேரிய போர்வீரர்கள் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை, பல்கேரிய மக்கள் தம்மை விடுவிக்க வந்தவர்களை உற்சாகமாக, மலர்களோடும் செம்பதாகைகளோடும் வரவேற்றனர். இரண்டா வது முறையாக (1778இல் துருக்கிய ஆதிக்கத்திலிருந்தும் 1944இல் ஹிட்லர் கொடுமையிலிருந்தும்) ருஷ்யப் போர்வீரர்கள் பல்கேரி யாவை அந்நிய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தனர்.

செப்டெம்பர் 9ஆம் தேதி பல்கேரிய மக்கள் நாட்டில் கோலோச் சிய பாசிச ஆட்சியைத் தூக்கியெறிந்து தாய்நாட்டு முன்னணி அரசாங்கத்தை ஏற்படுத்தினர். இது பாசிச ஜெர்மனியுடனுன தொடர்புகளை அறுத்து அதற்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது.

அதே நாளன்று 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ரஸ் கிராத் நகரைப் பிடித்தன. இங்கே 4,000 பாசிச ஜெர்மானியப் போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறை பிடிக்கப்பட்ட னர். இத்துருப்புகள் கருங்கடல் கப்பற்படையுடன் சேர்ந்து கருங்கடலில் உள்ள பெரிய துறைமுக நகராகிய புர்காசைக் கைப் பற்றின. இப்போது துருக்கிய எல்லை வரை கருங்கடலின் கரைப் பகுதி பூராவும் கருங்கடல் கப்பற்படையின் கட்டுப்பாட்டிற்குக் கீழிருந்தது.

செப்டெம்பர் 16ஆம் தேதி சோவியத் இராணுவம் பல்கேரியத் தலைநகராகிய சோபியாவின் உள் காலடி எடுத்து வைத்தது. ''சோவியத் யூனியன் உறுதியான உதவியால் பல்கேரியாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றது. இதன் இடையறாத, தாராளமான, தன்னலமற்ற சோதர உதவியின் பயனாய் சுதந்திர பல்கேரியா, நூற்றாண்டு களாக தான் பின்னடைந்து இருந்த நிலைக்கு முடிவு கட்டி செழுமை யான தொழிற்துறை-விவசாய சோஷலிச நாடாக மலர்ந்தது''* என்று பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் தோதர் ஜிவ்கவ் கூறினார்.

---

* பிராவ்தா, 1972 செப்டெம்பர் 23.

செப்டெம்பர் இறுதியில் சோவியத் துருப்புகள் ருமேனிய-ஹங்கேரிய, ருமேனிய-யுகோஸ்லாவிய, பல்கேரிய-யுகோஸ்லாவிய, பல்கேரிய-கிரீஸ் மற்றும் பல்கேரிய-துருக்கிய எல்லைகளை அடைந்தன. ருமேனியாவின் பெரும் பகுதியும் பல்கேரியா முழுவதும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டன. ஹங்கேரியிலும் யுகோஸ்லாவியாவிலும் பாசிஸ்டுகளை முறியடிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

கருங்கடல் கப்பற்படையும் துனைய் ப்ளீட்டும் 3வது உக்ரேனிய சேனை துருப்புகளுடன் சேர்ந்து ருமேனியாவிலும் பல்கேரியாவிலுமிருந்த எதிரியின் எல்லா இராணுவ கடற்படைத் தளங்களையும் கைப்பற்றின.

ருமேனிய, பல்கேரிய மக்களை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்ததானது 1944ஆம் ஆண்டு நடைபெற்ற செப்டெம்பர் சண்டைகளின் பெரும் முடிவாக அமைந்தது. ருமேனிய, பல்கேரிய மக்கள் தமது நாடுகளில் ஆட்சியைத் தாங்களே எடுத்துக் கொண்டு ஜனநாயக வளர்ச்சிப் பாதையில் உறுதியாக நின்றனர்.

ஹங்கேரியின் விடுதலை

ருமேனியா விடுவிக்கப்பட்ட பின்னும் ஹங்கேரி தொடர்ந்து பாசிச ஜெர்மனியின் கூட்டாளியாக இருந்தது. ஆனால் நாட்டின் உள்நாட்டு அரசியல் நிலவரம் மேன்மேலும் சிக்கலாகி வந்தது. 1944 ஆகஸ்டு 29இல் ஜெனரல் லகடோஷ் தலைமையில் இங்கே ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தின் கொள்கையில் பெரும் ஊசலாட்டங்கள் இருந்தன. ஒரு புறம் இது, செப்டெம்பர் 8ஆம் தேதி நடைபெற்ற தனது கூட்டத்தில் முந்தைய அரசாங்கத்தின் ஜெர்மானிய ஆதரவு நிலையை ஊர்ஜிதப்படுத்தியது, மறு புறம் ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்களுடனும் சோவியத் யூனியனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது அவசியம் என்று கருதியது. அந்நாட்களில் ரிபென்ட்ரோப் எழுதிய கடிதம் இந்த அரசாங்கத்தின் நிலை மீது பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. இக்கடிதத்தில் ஹங்கேரியைப் பாதுகாப்பதாக உறுதியளித்த ஜெர்மனி சாத்தியமான மக்களுடைய போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியது. ஹங்கேரிய சர்வாதிகாரி ஹோர்டி அனுப்பிய பதிலில் முழுவதுமாக ஜெர்மனியின் தரப்பில் தான் இருப்பதாக ஹிட்லருக்கு வாக்களித்தான். ஜெர்மானியத் தரைப்படைகளின் பிரதான தலைமையகத் தலைவன் குடெரியானின் கட்டளைப்படி இன்னும் சில ஜெர்மானிய டிவிஷன்கள் ஹங்கேரி

யினுள் அனுப்பப்பட்டன. சர்வாதிகாரி ஹோர்ட்டி நடத்திய இரகசியக் கூட்டத்தில், நேசநாடுகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய கருத்து அரசாங்க உறுப்பினர்களிடையே மேலோங்கி நின்றாலும் செப்டெம்பர் 11இல் நடந்த கூட்டத்தில் லகடோஷ் அமைச்சரவை, ஹங்கேரி யுத்தத்திலிருந்து வெளியேறும் யோசனையை பெரும்பான்மையான வாக்குகளால் நிராகரித்தது. ஹங்கேரிய பிரதான படைத்தலைமையகத்தின் தளபதி கர்னல் ஜெனரல் வேரெஷ் கூடுதல் துருப்புகளை கேட்டுப் பெறுவதற்காக ஹிட்லரின் படைத் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டான்.

ஆனால் செஞ்சேனை ஹங்கேரிய எல்லைகளை நெருங்கி வந்த போது ஜெர்மனியால் இதன் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாது என்பதை ஹங்கேரிய ஆளும் வட்டங்கள் இறுதியாகப் புரிந்து கொண்டன. சோவியத் துருப்புகள் ஹங்கேரியினுள் நுழைவதைத் தடுக்கும் முகமாக ஹோர்ட்டி தனியான சமரசம் செய்து கொள்ளும் முன்மொழிவுடன் அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்களை நாடினான். ஆனால் இந்த முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஃபராகோவின் தலைமையில் தனது தூதுக்குழுவைப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக சோவியத் யூனியனுக்கு அனுப்புவதென ஹோர்ட்டிஸ்டுகள் முடிவு செய்தனர். 1944 அக்டோபர் 1ஆம் தேதி இத்தூதுக் குழு மாஸ்கோவிற்கு வந்தது. ஸ்தாலினிடம் தருவதற்காக ஹோர்ட்டி தன் பிரதிநிதிகளிடம் ஒரு கடிதத்தைத் தந்திருந்தான். இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறும் ஜெர்மானியத் துருப்புகள் ஹங்கேரியிலிருந்து தங்கு தடையின்றி வெளியேற இடையூறு விளைவிக்க வேண்டாமென்றும் ஹங்கேரியை பிடிப்பதில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் பங்கேற்கச் சம்மதிக்குமாறும் இக்கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. சமரச உடன்படிக்கையில் கையெழுத்திட இத்தூதுக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இதற்கான நிபந்தனைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்ய மட்டுமே இதற்கு உரிமையிருந்தது.

ஹங்கேரியத் தரப்பிலிருந்து வந்த இத்தகைய முன்மொழிவு ஏற்கப்பட முடியாதது என்பதும் ஹங்கேரி சரணடைவதைப் பற்றிய பிரச்சினையைக் குறித்துதான் பேச வேண்டும் என்பதும் முற்றிலும் புரிந்ததே. நிச்சயமாக இது ஹோர்ட்டிக்கும் அவனைச் சுற்றியிருந்தோருக்கும் புரிந்தது. ஆனால் இந்த விளையாட்டில் ஆங்கிலேயர்களையும் அமெரிக்கர்களையும் ஈடுபடுத்தவும் அதிக அனுகூலமான சமரச நிபந்தனைகளைத் தாம் பெறவும் அவர்கள் காலத்தை இழுத்தடிக்க முயன்றனர். குறிப்பாக ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தை

அறிவிக்க வேண்டியிராத ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க அவர்கள் விருப்பப்பட்டனர்.

மேலும் தாங்கள் இழைத்த கொடுமைகளுக்குத் தண்டனையை அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியுமென்றும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் உதவியால் ஆட்சியில் நிலைத்திருக்கலாம் என்றும் ஹோர்டிஸ்டுகள் கணக்கிட்டனர். அதோடு கூட பேச்சுவார்த்தை களை இழுத்தடிப்பதை நோக்கமாகக் கொண்டு தந்திர நடவடிக்கை களில் ஈடுபட்ட ஹங்கேரிய சர்வாதிகாரியின் மனதில், ஹிட்லர் படைகளால் சோவியத் துருப்புகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி அவற்றைக் கர்பாத்து மலைத்தொடருக்குப் பின்னால் தள்ள இயலும் என்று ஒரு நம்பிக்கையிருந்தது. ஹங்கேரிய பரப்பில் சண்டைகள் மூண்ட போது கூட இந்த நம்பிக்கை ஹோர்டியின் மனதை விட்டு அகலவில்லை. ஆனால் செஞ்சேனையின் வெற்றிகரமான முன்னேற்றம் ஹோர்டியின் எல்லா கணிப்புகளையும் தவிடு பொடியாக்கியதால், ''சமரசம் செய்து கொள்வது நல்லது'' என்று மாஸ்கோவிலிருந்த தன் தூதுக் குழுவிற்குக் கூறும்படி அவன் நிர்ப்பந்திக்கப்பட்டான். நேச நாடுகளின் சமரச நிபந்தனைகளை ஹங்கேரி ஏற்றுக் கொள்கிறது என்று ஃபராகோ விடுத்த அறிக்கையை சோவியத் அரசாங்கம் கவனத்தில் கொண்டது. ஆனால் ஹங்கேரி பாசிச ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் இறங்குவதை விரும்பாத ஹோர்டி தான் முன்னர் ஒப்புக்கொண்ட சமரச நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத் தது விரைவிலேயே தெளிவாயிற்று. இதன் தொடர்பாய் செஞ் சேனை பிரதான படைத் தலைமையக துணைத் தலைவர் ஜெனரல் அன்தோனவ் ஜெனரல் ஃபராகோவிற்கு ஒரு செய்தி அனுப்பினார்; அந்தச் செய்தி கிடைத்த 48 மணி நேரத்திற்குள் ஹங்கேரிய அரசாங்கம் சமரசத்தின் பூர்வாங்க நிபந்தனைகள் சம்பந்தமாக தான் ஏற்றுக் கொண்ட உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அதில் கோரப்பட்டிருந்தது. முதலாவதாக இது ஜெர்மனி யுடன் உள்ள எல்லாத் தொடர்புகளையும் முறித்து அதற்கெதிராக இராணுவ நடவடிக்கைகளைத் துவக்க வேண்டும், ருமேனியா, யுகோஸ் லாவியா, செக்கோஸ்லொவாக்கியா பரப்புகளிலிருந்து தனது துருப்புகளை வெளியேற்றத் துவங்க வேண்டும், அக்டோபர் 16ஆம் தேதி 8 மணி வாக்கில் ஜெர்மானிய மற்றும் ஹங்கேரியப் படைப் பிரிவுகளின் இடப்பெயர்வைப் பற்றிய முழு விவரங்களையும் சோவியத் படைத் தலைமைக்கு அளிக்க வேண்டும்.

சமரச நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட ஹோர்டி ஹிட்லர் துருப்புகளுக்கு எதிராக எவ்வித இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்ட ஜெர்மானியப் படைத் தலைமை பிற்போக்கு ஹங்கேரிய இராணுவ அதிகாரிகள்

மற்றும் ''குறுக்காக வைக்கப்பட்ட அம்புகள்'' என்ற சலாஷிஸ்டு களின் கட்சியின் ஆதரவோடு அக்டோபர் 15—16இல் ஹங்கேரியில் அரசுக் கவிழ்ப்பிற்கு ஏற்பாடு செய்தது. ஆட்சிக்கு வந்த ஹங் கேரிய பாசிஸ்டுகளின் தலைவன் சலாஷி சோவியத் இராணுவத்திற்கு எதிரான போராட்டத்தைத் தொடருமாறு துருப்புகளுக்கு கட்டளை யிட்டான். இது ஹங்கேரிய முற்போக்குச் சக்திகளின் எதிர்ப்பு அலையை தோற்றுவித்தது. ஆழ்ந்த தலைமறைவில் இயங்கிய கம்யூ னிஸ்டுக் கட்சியின் அறைகூவலுக்கு இணங்கி உழைப்பாளிகள் மேன் மேலும் தீவிரமாக பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினர். தொழிற்சாலைகளிலும் இருப்புப் பாதைகளிலும் நாசவேலை கள் நடந்தன, வேலை நிறுத்தங்களும் ஆர்பாட்டங்களும் நடைபெற் றன, பாசிச ஆட்சியாளர்களின் கட்டளைகள் மீறப்பட்டன. ஜெர்ம னிக்கும் இதன் இராணுவத்திற்கும் விவசாயப் பொருட்களை அளிக்க விவசாயிகள் மறுத்தனர்.

நாட்டில் சலாஷி-பாசிச ஆட்சிக் கும்பலுக்கு எதிரான இயக்கம் தீவிரமடைந்தது. குறிப்பாக ஹங்கேரிய பரப்பினுள் செஞ்சேனை இராணுவ நடவடிக்கைகளைத் துவக்கியதையடுத்து இது மேலும் பலமடைந்தது. சோவியத் யூனியனிலிருந்து 10 கொரில்லாப் படை அணிகள் வந்து சேர்ந்தது இதற்கு உதவியது. இவற்றில் 250 ஹங்கேரிய, 30 சோவியத் கொரில்லாப் படைவீரர்கள் போரிட்ட னர். நன்கு பயிற்சி பெற்றிருந்த இந்த அணிகள் தமது போர் நடவடிக்கையாலும் எடுத்துக் காட்டாலும் இன்னும் 1,500 பேர்களை எதிரிக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ளச் செய்தனர்.

1944 அக்டோபர்—நவம்பரில் ஆயிரக்கணக்கான கொரில்லாப் படைவீரர்கள் ஹங்கேரியில் போரிட்டனர். கொரில்லாப் படைவீரர் கள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதோடு கூட ஸ்தல மக் களின் மத்தியில் நிலைமையை விளக்கிப் பேசினர், உழைப்பாளிகளின் கூட்டங்களை நடத்தினர், பிரச்சார இலக்கியங்களை விநியோகித்தனர், எதிரியின் அடக்குமுறை பயங்கரத்திலிருந்து மக்களைக் காப்பாற்றி னர். தம் பங்கிற்கு ஸ்தல மக்கள் இந்தக் கொரில்லாப் படை வீரர்களுக்குச் சகலவிதங்களிலும் உதவினர்.

நாட்டு விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படையாக ஹங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி நடை போட்டது. செப்டெம்பர் இறுதியில் கட்சி விடுத்த அறிக்கையிலேயே சுதந்திரமான ஹங்கேரிக்காகவும் ஜனநாயகக் குடியரசைத் தோற்றுவிப்பதற்காகவும் பாசிஸ்டுகளை விரட்டியடித்து பாசிச ஆட்சிக் கும்பலை முறியடிப்பதற்காகவும் நடைபெறும் போராட்டத்தை தீவிரப்படுத்துமாறு இது உழைப் பாளிகளை அறைகூவியழைத்தது. ஹங்கேரிய மக்களின் அரசு

உரிமையையும் நாட்டின் பொருளாதார, சமூக அமைப்பு பிரச்சினை களைத் தானே தீர்த்துக் கொள்ளும் உரிமையையும் சோவியத் யூனியன் மீறுது என்று கம்யூனிஸ்டுக் கட்சி விளக்கியது. கம்யூ னிஸ்டுகள் தொழிலாளர், விவசாயிகளின் கூட்டிற்கு முக்கியத்துவம் அளித்தனர், நான்கு கட்சிகள் (கம்யூனிஸ்டுக் கட்சி, சமூக-ஜன நாயகக் கட்சி, சிறு நிலவுடைமையாளர் கட்சி மற்றும் தேசிய விவசாயக் கட்சி) சேர்ந்த ஹங்கேரிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்றுவிப்பதற்காகப் போராடினர். செப்டெம்பர் மாதத்திலேயே இதன் நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்கமிட்டி ஸ்தலக் கமிட்டிகளை ஏற்படுத்தத் துவங்கியது.

நாட்டில் கொரில்லாப் படை இயக்கத்தை வளர்க்க ஹங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அயல்நாட்டுக் காரியாலயம் பெரும் பணி யாற்றியது. என்றுலும் ஹங்கேரிய தேசபக்தர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடைவில்லை. பாசிச சர்வாதிகாரத்தின் கொடூரமான அடக்குமுறை, வெகுஜனங்களை ஏமாற்றிய குறுகிய தேசிய வெறிப் பிரச்சாரம், யுத்த ஆண்டுகளில் ஜனநாயகச் சக்தி கள் பலவீனமடைந்தது, கம்யூனிஸ்டுக் கட்சி செயல்பட வேண்டி யிருந்த கடுமையான தலைமறைவுச் சூழ்நிலைகள் ஆகியவையே இதற்குக் காரணம்.

ஹங்கேரியப் பரப்பில் எதிரியை முறியடித்து ஹங்கேரிய மக்களை விடுவிக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் நாட்டில் இராணுவ-அரசியல் நிலவரம் கூர்மையடைந்ததானது சோவியத் படைத் தலைமையால் பரிபூரணமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கணக்கில் கொள்ளப்பட்டது.

1944 அக்டோபர் துவக்கத்தில் ஹங்கேரி மற்றும் யுகோஸ்லா வியாவுடனுன எல்லையில் பிரிஸ்லோப் கணவாயிலிருந்து துனுயின் பெரும் வளைவு வரையிருந்த 800 கி. மீ. நீளமுடைய இடத்தை 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் அடைந்தன. வலப்புறத் தில், அதாவது தூக்லின் கணவாய்க்கு கிழக்கே ருமேனிய எல்லை வரை 4வது உக்ரேனிய சேனை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட் டிருந்தது. இடப்புறம், யுகோஸ்லாவியாவில் 3வது உக்ரேனிய சேனை யின் துருப்புகள் இயங்கின. 2வது உக்ரேனிய சேனை ஹங்கேரிய எல்லைகளை அடைந்ததானது, கர்பாத்து மலைகளில் இருந்த ஜெர்மா னிய-ஹங்கேரிய படைத் திரட்டு முழுவதையும் பலத்த பக்கவாட்டு தாக்குதலின் அபாயத்திற்கு உள்ளாக்கி 4வது உக்ரேனிய சேனையின் இயக்கத்திற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது.

ஹங்கேரி நாட்டின் பரப்பில் எதிரியின் துருப்புகளை முறியடிப் பதில் முக்கியப் பங்கு 2வது உக்ரேனிய சேனைக்கு ஒதுக்கப்பட்டிருந் தது. க்ளூஜ், ஓர்தியா, தெப்ரேத்சன் பிரதேசங்களில் எதிரியின்

படைத் திரட்டை முறியடித்து, நியிரெத்ஹாஸா-சோப் நோக்கி வடக்கு திசையில் முன்னேறி ஊஷ்கரத், மூக்கச்சேவா பிரதேசங்களை பாசிஸ்டுகளிடமிருந்து விடுவிக்க 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு உதவுமாறு இதற்குக் கட்டளையிடப்பட்டது.

1944 அக்டோபர் துவக்கத்தில் 2வது உக்ரேனிய சேனையில் 40 டிவிஷன்கள், 2 பலப்படுத்தப்பட்ட வட்டங்கள், 3 டாங்கி, 2 இயந்திரப்படை, 3 குதிரைப்படை கோர்பஸ்கள் இன்ன பிற யூனிட்டுகள், படைப்பிரிவுகள், 10,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 750 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், 1,100 விமானங்கள் முதலானவை இருந்தன. இது தவிர 1வது மற்றும் 4வது ருமேனியப் படைகள் (நடவடிக்கையின் ஆரம்பத்தில் இவற்றில் 22 டிவிஷன்களும் பின்னர் 17 டிவிஷன்களும் இருந்தன) 2வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமையின் கட்டுப்பாட்டின் கீழிருந்தன. ஆனால் இந்த ருமேனியப் படை யூனிட்டுகளின் முழுப் பலம் குறைவானதாகத்தான் இருந்தது. உதாரணமாக 1944 அக்டோபர் 10ஆம் தேதி 1வது ருமேனியப் படையில் 30,151 பேர் இருந்தனர், இவர்களிடம் 25,571 சாதாரண துப்பாக்கிகள், 198 இயந்திரத் துப்பாக்கிகள், 276 மார்டர் பீரங்கிகள், 82 போர்க்கள பீரங்கிகள், 87 டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், 30 விமான எதிர்ப்பு பீரங்கிகள் முதலானவை இருந்தன.

ஜெனரல் பிரீஸ்னெர் தலைமையிலிருந்த ''தெற்கு'' படைத் தொகுதியின் துருப்புகள் 2வது உக்ரேனிய சேனையை எதிர்த்து நின்றன. இதில் 8வது மற்றும் 6வது ஜெர்மானியப் படைகளும் 2வது மற்றும் 3வது ஹங்கேரியப் படைகளும்—மொத்தமாக 29 டிவிஷன்கள், 5 பிரிகேடுகள், "F" படைத் தொகுதியின் 3 டிவிஷன்கள் ஆகியவை—அடங்கியிருந்தன. இதில் 3,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 300 டாங்கிகளும் 4வது வான் படையைச் சேர்ந்த சுமார் 550 விமானங்களும் இருந்தன.

அக்டோபர் 6ஆம் தேதி காலை குறுகிய பீரங்கிப்படை மற்றும் விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் 2வது உக்ரேனிய சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு பிரதான திசையில் தாக்குதலில் இறங்கியது. கடுமையான சண்டைகள் மூண்டன. இவற்றில் சோவியத்-ருமேனியத் துருப்புகள் எதிரியின் பலத்த பதிலடிகளையும் எதிர்தாக்குதல்களையும் முறியடித்து போர்க்களத்தில் பரந்த அளவு தந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டன. பிரதான திசையில் எதிரி பெரும் சக்திகளை சமரில் ஈடுபடுத்தியதைப் பொருட்படுத்தாமல் அக்டோபர் 20ஆம் தேதி 6வது கார்டு டாங்கிப் படை ஜெனரல் பிளீயெவ் மற்றும் கர்ஷ்க்கோவின் இயந்திர-குதிரைப் படைப் பிரிவுகளுடன் கூட்டாகச் சேர்ந்து ஒன்றிணையும் திசை

களில் தாக்குதல் தொடுத்து எதிரி தற்காப்பின் முக்கிய மையமாயிருந்த தெப்ரேத்சனை கைப்பற்றியது.

தீஸ்ஸா ஆற்றைக் கடந்ததுடன் தெப்ரேத்சன் நடவடிக்கை முடிந்தது. ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற இந்த முதல் பெரும் நடவடிக்கையில் செஞ்சேனை ருமேனியத் துருப்புகளுடன் சேர்ந்து டிரான்சில்வானியாவின் வடக்குப் பகுதியையும் ஹங்கேரியின் கணிசமான பகுதியையும் (அங்கே நாட்டின் மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வசித்தனர்) விடுவித்தது. 23 நாட்களில் 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 130—275 கி. மீ. தூரம் முன்னேறி ஹங்கேரியத் தலைநகரமாகிய புடாபெஸ்டின் மீது அடுத்த தாக்குதலைத் தொடுப்பதற்கான முன்தேவைகளை ஏற்படுத்தின. இத்துருப்புகள் நாளொன்றிற்கு 5 முதல் 12 கி. மீ. தூரம் வரை முன்னேறின.

கடுமையான சண்டைகளில் எதிரிக்கு பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. சோவியத் துருப்புகள் எதிரியின் 10 டிவிஷன்களை முறியடித்தன, 42,000க்கும் மேற்பட்ட போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைபிடித்தன, 915 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 793 மார்டர் பீரங்கிகள், 428 கவச வண்டிகள் மற்றும் கவச வாகனங்கள், 416 விமானங்கள், 8 கவச புகை வண்டிகள், 3,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆகியவற்றை அழித்தன; 138 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 856 பீரங்கிகள், 681 மார்டர் பீரங்கிகள், 386 விமானங்கள், 16,000 சாதாரண மற்றும் தானியங்கி துப்பாக்கிகள் முதலியவற்றைக் கைப்பற்றின.

2வது உக்ரேனிய சேனையின் யூனிட்டுகள் தெப்ரேத்சன் பிரதேசத்தை அடைந்ததானது எதிரியின் கர்பாத்து படைத் திரட்டின் பின்னணிகளுக்கு தீவிர அபாயத்தை ஏற்படுத்தியது. இது மத்தியப் பகுதியின் முன்னுலும் 4வது உக்ரேனிய சேனையின் இடது பிரிவின் முன்னுலும் இருந்து தனது துருப்புகளை வெளியேற்றுமாறு ஹிட்லரின் படைத் தலைமையைக் கட்டாயப்படுத்தியது. 1வது ஹங்கேரியப் படையின் (ஜெர்மானியர்களின் தரப்பில் இது சண்டையிட்டு வந்தது) தளபதி ஜெனரல் மீக்லஷ் மேற்கொண்டு எதிர்ப்பைக் காட்டுவதில் பயனில்லை என்று கண்டு, பாசிச அரசாங்கத்தின் கொள்கை மீதும் ஹங்கேரியில் ஹிட்லரின் நடவடிக்கைகள் மீதும் அதிருப்தி கொண்டு தனது படைத் தலைமையில் ஒரு பிரிவினரோடு சேர்ந்து சோவியத் துருப்புகளின் தரப்பிற்கு மாறினுன். ஹோர்டி இராணுவத்தை ஆட்கொண்ட நெருக்கடி மேற்கொண்டு தீவிரமடைந்தது இதில் பிரதிபலித்தது.

சோவியத் இராணுவம் ஹங்கேரியினுள் காலடி எடுத்து வைத்

தையடுத்து சோவியத் யூனியனின் அரசுத் தற்காப்புக் கமிட்டியின் கட்டளைக்கேற்ப 2வது உக்ரேனிய சேனையின் இராணுவக் கவுன் சில், சோவியத் துருப்புகளின் விடுதலைப் பணியில் அவற்றிற்கு சகல விதங்களிலும் உதவி புரியுமாறு ஹங்கேரிய மக்களுக்கு அறை கூவல் விடுத்தது. ஹங்கேரியின் நிலப்பரப்பில் ஏதாவது ஒரு பகுதி யைப் பிடிக்கும் நோக்கத்தோடு சோவியத் இராணுவம் ஹங்கேரி யினுள் நுழையவில்லை, மாறுக இராணுவத் தேவையின் காரண மாக, ''நாடுபிடிப்பாளஞக இல்லாமல் ஹங்கேரிய மக்களை பாசிச-ஜெர்மானியக் கொடுமையிலிருந்து விடுவிக்கும் சக்தியாகத்தான்'' சோவியத் இராணுவம் ஹங்கேரியின் உள்ளே காலடி எடுத்து வைத் துள்ளது என்று இந்த அறைகூவலில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந் தது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் ஹங்கேரிய ஆட்சி உறுப்பு களும் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பு முறையும் நிலவக் கூடிய பழக்க வழக்கங்களும் அப்படியே இருக்குமென்றும் குடிமக் களின் எல்லா உரிமைகள் மற்றும் உடைமைகளையும் சோவியத் இராணுவ ஆட்சியாளர்கள் பாதுகாப்பார்கள் என்றும் இந்த ஆவணத்தில் விளக்கிக் கூறப்பட்டிருந்தது. இதோடு கூட விடுவிக்கப் பட்ட பிரதேசங்களில் சோவியத் இராணுவ நிர்வாக உறுப்புகள் தோற்றுவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சோவியத் துருப்புகளுக்கும் ஸ்தல ஹங்கேரிய மக்களுக்கும் இடையில் நல் உறவுகளை நிலைநாட்டுவதற்கு இந்த அறைகூவல் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. ஹங்கேரியில் இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்ற காலம் முழுவதும் சோவி யத் இராணுவ உறுப்புகள் மற்றும் இராணுவ நிர்வாக உறுப்பு களின் நடவடிக்கை முழுவதன் அடிப்படையாக விளங்கிய முக்கிய ஆவணமாக இது திகழ்ந்தது. இப்பெரும் பணியின் பயனுய் சோவி யத் துருப்புகளுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லண்டை உறவுகள் நிலவின. கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தல குழுக்கள் மற்ற முற்போக்குக் கட்சிகள், ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் சுறுசுறுப்பாயின, தொழிற்சங்கங்கள் புத்துயிர்ப்பு பெற்றன. அரசியல் காரணங் களுக்காக நாடு துறந்து சென்றவர்களும் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி அயல்நாட்டுக் காரியாலய உறுப்பினர்களும் அக்டோபரில் திரும்பி வரத் துவங்கினுர்கள். நவம்பரில் சேகேத் நகரில் இவர்கள் ஒரு மையத்தை உருவாக்கினுர்கள். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் கட்சி ஸ்தாபனங்களுக்குத் தலைமை தாங்கும் தற்காலிக மத்தியக் கமிட்டியாக இது இயங்கியது. சேகேத் மையம் புடாபெஸ்டில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமறைவு மத்தியக் கமிட்டியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இதில்தான் அ. அப்ரோ, யானஷ் காடர் மற்ற கம்யூனிஸ்டு பிரமுகர்கள் இருந்தனர். சோவி

யத் துருப்புகள் ஹங்கேரியப் பரப்பினுள் காலடி எடுத்து வைத்த முதல் நாட்களில் இருந்தே ஹங்கேரியாவின் முற்போக்குச் சக்திகள் நாட்டு வாழ்வை ஜனநாயகமயப்படுத்துவதில் இறங்கின. தெப்ரேத் சன் திசையில் எதிரி முறியடிக்கப்பட்டதன் மிக முக்கிய அரசியல் விளைவு இதில்தான் அடங்கியிருந்தது.

சோவியத் துருப்புகளின் தெப்ரேத்சன் நடவடிக்கையில் மொபைல் துருப்புகள் திறமையாகப் பயன்படுத்தப்பட்டன. வலுவான தற் காப்பை ஏற்படுத்த முடியாமலிருந்த எதிரியின் மீது விரைவாக பலத்த தாக்குதலைத் தொடுக்கும் அவசியத்தால் சேனையின் முதல் படை வரிசையில் டாங்கிப் படை பயன்படுத்தப்பட்டது. மாறி வந்த நிலவரத்தை சரியாகவும் உரிய நேரத்திலும் மதிப்பிட்டது, நன்கு இயங்கும் சக்தியுள்ள மொபைல் பிரிவுகளைத் திறமையாகப் பயன்படுத்தியது, சக்திகளை விரைவாக புதிய திசைக்கு மாற்றியது ஆகியவற்றில் சோவியத் படைத் தலைமையின் உயர்வான போர்த் தந்திரக் கலை நன்கு வெளிப்பட்டது.

மேலும் தெப்ரேத்சன் நடவடிக்கையில் ஒரே ஒரு படை வரி சையை மட்டுமே உடைய போர்முனை இருந்தது, துருப்புகள் கணிச மான அளவு படைமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டன (இவை எதிரியின் தற்காப்பின் மீது பலத்த முதல் தாக்குதலைத் தொடுக்க அனுமதித்தன), போர்முனை முழுவதும் இடையறா தாக்குதல் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கடைசியாகக் கூறப்பட்ட அம்சம் ஹிட்லர் துருப்புகளின் சக்திகளைக் கட்டிப் போட்டு, சோவி யத் துருப்புகளின் பிரதான தாக்குதல்களின் திசை சம்பந்தமாக எதிரியின் படைத் தலைமையைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியது.

சோவியத் படைத் தலைமை, தெப்ரேத்சன் நடவடிக்கைக்குப் பின் இடைவெளியின்றி உடனடியாக புடாபெஸ்டு நடவடிக்கையைத் துவக்குவதென முடிவு செய்தது. இவ்வாறு முடிவெடுத்த போது ஐரோப்பாவில் பாசிச ஜெர்மனியின் கடைசி கூட்டு நாட்டின் தலை நகருக்கு இருந்த விசேஷ முக்கியத்துவம் கவனத்தில் கொள்ளப்பட் டது. ஹங்கேரிய தொழிற்துறை நிலையங்களில் 50 சதவிகிதத்திற் கும் மேலாக இங்கே குவிக்கப்பட்டிருந்தது, கிட்டத்தட்ட இவை யெல்லாமே வேர்மஹ்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கின.

அனுகூலமான போர்த்தந்திர-நேரடி நடைமுறை நிலைமைகளும் புடாபெஸ்டின் மீது உடனடியாகத் தாக்குதலைத் தொடுக்கக் கட்டளையிட்டன. பாசிச ஜெர்மானியப் படைத் தொகுதி ''தெற் கின்'' முக்கியச் சக்திகள் நியிரெத்ஹாஸா-மிஷ்கோல்த்ஸ் திசையில் இயங்கின. புடாபெஸ்டின் வட கிழக்கு நுழைவாயில்களை மூடி பாதுகாக்க இவற்றைப் பயன்படுத்தவும் தென் கிழக்கு நுழை

வாயில்களை சண்டைகளில் பலம் குன்றியிருந்த 3 வது ஹங்கேரியப் படையின் துருப்புகளையும் ஜெர்மானிய டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்களையும் கொண்டு பாதுகாக்கவும் ஹிட்லரின் படைத் தலைமை முடிவெடுத்தது. புடாபெஸ்ட் திசையில் தற்காப்பில் பாசிசத் துருப்புகளின் அடர்த்தி தெப்ரேத்சன் திசையிலிருந்ததை விட 2.1 மடங்கு குறைவாக இருந்தது. 2வது உக்ரேனிய சேனையின் பிரதான சக்திகள் இதன் மத்தியப் பகுதியிலும் வலப் பிரிவிலும் குவிக்கப்பட்டிருந்தன. 35 டிவிஷன்களையும் (9 டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட) 3 பிரிகேடுகளையும் கொண்ட ''தெற்கு'' படைத் தொகுதியின் சக்திகள் இவற்றிற்கு எதிராக நின்றன.

இத்தருணத்தில் 2வது உக்ரேனிய சேனையில் 7 காலாட்படைகள் (2 ருமேனியப் படைகள் உட்பட), 1 டாங்கிப் படை, 1 வான் படை, 3 டாங்கி கோர்பஸ்கள் (டாங்கிப் படை கோர்பஸ்களைச் சேர்த்து), 3 இயந்திரப்படை கோர்பஸ்கள், 58 துப்பாக்கிப்படை மற்றும் குதிரைப்படை டிவிஷன்கள் (இவற்றில் 13 ருமேனிய டிவிஷன்கள்) ஆகியவை இருந்தன. 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் காலாட்படையில் 2 மடங்கும் சாதாரண (டாங்கி எதிர்ப்பு, விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சேர்க்காது) மற்றும் மார்டர் பீரங்கிகளில் 4—4,5 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 1.9 மடங்கும் விமானங்களில் 2.6 மடங்கும் ''தெற்கு'' படைத் தொகுதியை விஞ்சி நின்றன.

சோவியத் துருப்புகள் ஹங்கேரியின் உள்ளே மேற்கொண்டு முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு பாசிஸ்டுகள் ஹங்கேரியின் நுழைவாயில்களின் அருகே லாட வடிவிலான மூன்று அமைப்புகள் அடங்கிய போதுமான அளவு வலிமையான, ஆழ்ந்த தற்காப்பைத் தோற்றுவித்தனர்; இவை தமது பக்கங்களினால் நகரின் வடக்கேயும் தெற்கேயும் துனாய் ஆற்றைத் தொட்டுக் கொண்டிருந்தன.

தெற்கே இயங்கிய "F" படைத் தொகுதிக்கு, மேற்கு நோக்கி சோவியத் துருப்புகள் செல்லாதபடி தடுக்குமாறும் அதே நேரத்தில் போக்குவரத்து மார்க்கங்களை (இவற்றின் வழியாகத்தான் கிரீஸ், யுகோஸ்லாவியா, ஆல்பானியாவிலிருந்து பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பின்வாங்கின) யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் தாக்குதல்களிலிருந்து மூடி பாதுகாக்குமாறும் கட்டளையிடப்பட்டது.

புடாபெஸ்டின் தென் கிழக்கு நுழைவாயில்களில் எதிரியின் தற்காப்பு ஒப்பீட்டளவில் பலவீனமாயிருந்ததைக் கணக்கில் கொண்ட உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம், தீஸ்ஸா ஆற்றின்

மேற்குக் கரையில் எதிரியை முறியடித்து 7வது கார்டுப் படை இந்த ஆற்றைத் தாண்டிச் செல்ல வகை செய்யும் பொருட்டு தீஸ்ஸா, துஜுய் ஆறுகளுக்கு இடையில் 46வது படை மற்றும் 2வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ் ஆகியவற்றை மட்டும் கொண்டு தாக்குமாறு 2வது உக்ரேனிய சேனைக்கு கட்டளையிட்டது; மேற்கொண்டு 4 வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ் வந்ததும் இது புடாபெஸ்டின் மீது தீவிர தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

அக்டோபர் 29ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனையின் இடப் பிரிவுத் துருப்புகள் எதிரியின் தற்காப்பைப் பிளந்தன; 2வது, 4வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ்களை சமரில் இறக்கிய பின் இத்துருப்புகள் முனைப்போடு முன்னேறின. 5 நாட்களுக்குப் பின் இரண்டு கோர்பஸ்களும் தெற்கேயிருந்து புடாபெஸ்டின் நுழை வாயில்களுக்கு வந்தன, ஆனால் அந்த வேகத்திலேயே நகரத்தில் நுழைய அவற்றால் முடியவில்லை. உடனடியாக மிஷ்கோல்த்ஸ் பிரதேசத்திலிருந்து பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையால் இங்கு அனுப்பப்பட்ட 3 டாங்கி டிவிஷன்களும் 1 இயந்திரப்படை டிவிஷனும் உறுதியாக எதிர்த்து நின்றன. இதையடுத்து பிரதானப் படைத் தலைமையகம் சோவியத் துருப்புகளின் மேற்கொண்ட நடவடிக்கைகளில் முக்கியத் திருத்தங்களைச் செய்தது. குறைந்த அளவு காலாட்படையையுடைய இரண்டு இயந்திரப்படை கோர்பஸ் களின் சக்திகளை மட்டும் கொண்டு குறுகலான இடத்தில் புடா பெஸ்டை தாக்குவதானது தேவையற்ற இழப்புகளை ஏற்படுத் தும் என்றும் இத்திசையில் செயல்படும் துருப்புகளை வட கிழக்கி லிருந்து பாசிச சக்திகளின் பக்கவாட்டுத் தாக்குதலுக்கு உட்படுத் தும் என்றும் பிரதானப் படைத் தலைமையகம் நவம்பர் 4ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனையின் தளபதிக்குச் சுட்டிக் காட்டி யது. எனவே பரந்த போர்முனையில் தாக்குதலைத் தொடுத்து, வடக்கேயிருந்தும் வட கிழக்கேயிருந்தும் சேனையின் வலப் பிரி வாலும், தெற்கேயிருந்து இடதுப் பிரிவாலும் (46வது படை, 2வது, 4வது கார்டு இய்ந்திரப்படை கோர்பஸ்கள்) தாக்கி எதிரி யின் புடாபெஸ்டு படைத் திரட்டை முறியடிப்பதற்காக 27வது, 40வது, 53வது மற்றும் 7வது கார்டுப் படைகளை இயன்ற அளவு விரைவாக தீஸ்ஸா ஆற்றிற்கு மேற்கே கொண்டு செல்லும்படி சேனைக்கு கட்டளையிடப்பட்டது. தீஸ்ஸா ஆற்றின் மேற்கு கரையில் எதிரியின் தற்காப்பை விரைவாகப் பிளக்கும் பொருட்டு ஜெனரல் பிளீயெவின் குதிரைப்படை-இயந்திரப்படைப் பிரிவைக் கொண்டு நவம்பர் 7ஆம் தேதிக்கு முன் சோல்னக் பிரதேசத்திலிருந்து வட திசை நோக்கி தாக்கி தனது வலப் பிரிவை தீஸ்ஸா ஆற்றின்

மேற்குக் கரைக்குக் கொண்டு வருமாறு சேனைக்கு ஆலோசனை கூறப் பட்டது.

டிசம்பர் ஆரம்பத்தில் தாக்குதலில் இறங்கிய இச்சேனையின் துருப்புகள், எதிரி வடக்கு நோக்கி பின்வாங்கி செல்லும் பாதையைத் துண்டித்து புடாபெஸ்டிற்கு வடக்கேயும் வட மேற்கேயும் துனையை அடைந்தன. கடும் சண்டைகளின் விளைவாய், துனைய் இராணுவ ப்ளீட்டின் பங்கேற்போடு 46வது படை டிசம்பர் 5ஆம் தேதி துனைய் ஆற்றைக் கடந்து எதிர்க்கரையில் இருந்த சிறு தாக்கு முனையைக் கைப்பற்றியது.

3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளும் தமது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றின. 57வது படை துனைய் இராணுவ ப்ளீட்டின் ஆதரவோடு பத்தீனு, அப்பதீனு எனும் யுகோஸ்லாவியக் குடியிருப்புகளுக்கு அருகே துனைய் ஆற்றைக் கடந்து எதிர்க் கரையிலிருந்த தாக்குமுனையைப் பிடித்தது.

டிசம்பர் நடுவில் இத்துருப்புகள் வெலேன்ட்ஸே மற்றும் பலட் டோன் ஏரிகளை அடைந்து புடாபெஸ்டிற்குத் மேற்கேயிருந்த எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களைத் துண்டித்தன. இதன் பயனாய் புடாபெஸ்ட் பிரதேசத்தில் தற்காப்பிலிருந்த ஹிட்லர் துருப்புகளைச் சுற்றி வளைப்பதற்கான முன்தேவைகள் தோன்றின. இதைக் கணக்கில் கொண்ட உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் சுற்றி வளைக்கும் தாக்குதல்களால் புடாபெஸ்ட் படைத் திரட்டை முறியடித்து ஹங்கேரியத் தலைநகரைக் கைப்பற்றும்படி 2வது, 3வது உக்ரேனிய சேனைகளுக்கு டிசம்பர் 12ஆம் தேதி கட்டளை பிறப்பித்தது.

இத்தருணத்தில் 2வது, 3வது உக்ரேனிய சேனைகளில் 84 டிவிஷன்களும் (14 ருமேனிய டிவிஷன்கள் உட்பட) 3 குதிரைப்படை கோர்பஸ்கள், 3 டாங்கி கோர்பஸ்கள் மற்றும் 4 இயந்திரப்படை கோர்பஸ்களும் இருந்தன. யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத் துருப்புகள் 3வது உக்ரேனிய சேனையுடன் சேர்ந்து இயங்கின. 3வது உக்ரேனிய சேனையின் கட்டுப்பாட்டின் கீழிருந்த 1வது பல்கேரியப் படை போர்முனையின் எல்லைக்கோட்டிற்கு நகர்த்தப் பட்டது. தரைப்படைகளுக்கு 5 வது, 17வது வான் படைகள் விண்ணிலிருந்து ஆதரவளித்தன.

பாசிச ஜெர்மானிய மற்றும் ஹங்கேரியத் துருப்புகளின் படைத் திரட்டில் 9 டாங்கி டிவிஷன்கள், 2 பிரிகேடுகள் உட்பட 51 டிவிஷன்கள் இருந்தன. 3வது உக்ரேனிய சேனையின் முன்னால், துனைய் ஆற்றிற்கும் பலட்டோன் ஏரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில்— இங்கேதான் ''மர்கரீத்தா'' கோடு சென்றது—எதிரி பொறியியல் ரீதியாகப் பலமான, வளர்ச்சியடைந்த, 3 தற்காப்பு மண்டலங்களை

உள்ளடக்கிய தற்காப்பை ஏற்படுத்தியிருந்தான்.

தீர்மானகரமான திசைகளில் முக்கியச் சக்திகளையும் சாதனங்களையும் கொண்டு வந்து குவித்திருந்ததானது, பிளந்து செல்லும் இடங்களில் எதிரியைக் கணிசமான அளவு விஞ்சி நிற்க சோவியத் படைத் தலைமைக்கு வாய்ப்பளித்தது. உதாரணமாக, 3வது உக்ரேனிய சேனையில் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு ஆள்பலத்தில் 3.3 மடங்கும் பீரங்கிகளில் 4.8 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 3.5 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றது.

தாக்குதல் டிசம்பர் 20ஆம் தேதி ஆரம்பமாகியது.

2வது உக்ரேனிய சேனையின் இடதுப் புறத் துருப்புகள் (7வது கார்டுப் படையின் 30வது துப்பாக்கிப்படை கோர்பஸ், 7வது ருமேனிய கோர்பஸ், 18வது விசேஷ கார்டுத் துப்பாக்கிப்படை கோர்பஸ் ஆகியவற்றை அடக்கிய புடாபெஸ்டுத் தொகுதி) எதிரியின் உறுதியான எதிர்ப்பைத் தகர்த்து டிசம்பர் இறுதியில் கிழக்கேயிருந்து புடாபெஸ்டை நெருங்கின. 40வது, 27வது, 53வது படைகள், ஜெனரல் பிளீயெவின் இயந்திர-குதிரைப்படை பிரிவு மற்றும் சேனையின் வலப் புறத்தில் இயங்கிய ருமேனியப் படை யூனிட்டுகள் முதலியன செக்கோஸ்லொவாக்கியப் பரப்பினுள் நுழைந்தன.

3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் தற்காப்பின் பிரதான மண்டலத்தைப் பிளந்து தாக்குதலின் முதல் நாளன்று 5—7 கி. மீ. தூரம் முன்னேறின. எதிரி காலாட்படை, டாங்கிகளைக் கொண்டு பலத்த எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டான்.

நான்காவது நாளன்றுதான் மூன்று தற்காப்பு மண்டலங்களையும் இத்துருப்புகளால் பிளந்து செல்ல முடிந்தது. தாக்குதலின் ஆரம்பத்திலிருந்து 27 கி. மீ. தூரம் முன்னேறிய இவை கடுமையான சண்டையை அடுத்து சேகெஷ்பேஹெர்வார் நகரைப் பிடித்து வடக்கு நோக்கி முன்னேறின. டிசம்பர் 24ஆம் தேதி இத்துருப்புகள் பிச்கெ நகரிலிருந்து பாசிச படைப்பிரிவுகளைத் துரத்தியடித்தன; இரண்டு நாட்களுக்குப் பின் துஞையை அடைந்த இவை எஸ்தெர்கோம் நகரைப் பிடித்து 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகளோடு இணைந்தன. இதன் பயனாய் எஸ். எஸ். பிரிவு ஓபெர்குரூப்பன் பியூரர் பிஃபேஃபர்-வில்டன்புருக் தலைமையிலிருந்த 1,88,000 பேரடங்கிய எதிரியின் புடாபெஸ்ட் படைத் திரட்டு சுற்றி வளைக்கப் பட்டது. அதே நேரத்தில் 46வது படை 2வது கார்டு இயந்திரப் படைக் கோர்பசோடு சேர்ந்து புடாவினுள் (புடாபெஸ்ட் நகரின் வலக்கரைப் பகுதி) நுழைந்து தெருச் சண்டைகளை மூட்டியது. 4வது கார்டுப் படை மற்றும் 5வது கார்டுக் குதிரைப்படைக்

கோர்பஸின் யூனிட்டுகள் முற்றுகையின் வெளி வட்டத்தை ஏற் படுத்தி சேகெஷ்பேஹெர்வாரின் தென் மேற்கு எல்லையை அடைந் தன.

சேனைத் தளபதிகளாகிய மார்ஷல் மலினோவ்ஸ்கியும் தல்பூகினும் மேற்கொண்டு இரத்தம் சிந்துவதைத் தவிர்க்கும் நோக்கோடும் புடாபெஸ்டை அழிவிலிருந்து காத்து நகரின் வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கோடும் சுற்றி வளைக்கப்பட்ட படைத் திரட்டின் படைத் தலைமைக்கு காலக்கெடு அளித்தனர். இதில் இது சரணடைவது பற்றிய மனிதாபிமான நிபந்தனைகள் அடங்கியிருந்தன. டிசம்பர் 29ஆம் தேதி இரவும் அடுத்த நாள் காலையிலும் வலிமை மிக்க ஒலிபரப்பு நிலையங்கள் போர்முனையின் முன்னணிப் பகுதியிலிருந்து, காலக்கெடுவை அளிப்பதற்காக சோவியத் சமாதானத் தூதுக் குழுவினர் வரவிருப்பதைப் பற்றியும் இவர்கள் வரும் நேரம் மற்றும் மார்க்கத்தைப் பற்றியும் புடா பெஸ்ட் பிரதேசத்தில் சுற்றி வளைக்கப்பட்ட எதிரி துருப்புகளுக் கும் படைத் தலைமைக்கும் இடைவிடாது செய்திகளை ஒலிபரப்பிய வண்ணமிருந்தன. மாஸ்கோ நேரப்படி பகல் 11 மணிக்கு துனைய் ஆற்றின் இடது கரையிலிருந்த ஒரு இடத்திலிருந்து சோவியத் இராணுவ அதிகாரி கேப்டன் ஷ்தேய்மெட்ஸ் சமாதானத் தூது வராக பெரும் வெள்ளைக் கொடி கட்டிய காரில் எதிரியிருந்த இடம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். கீஷ்பெஷ்தின் (புடாபெஸ்டின் புறநகரப் பகுதி) தென் கிழக்கு கோடியிலிருந்த எதிரியின் முன்னணி நிலைகளை இவர் நெருங்கியதும் காரில் வெண்கொடி பறந்ததையும் பொருட்படுத்தாது பாசிஸ்டுகள் சுட்டதில் கேப்டன் ஷ்டைமெட்ஸ் கொல்லப்பட்டார்.

இரண்டாவது சமாதானத் தூதுவர் கேப்டன் ஒஸ்தாபென்கோ துனைய் ஆற்றின் வலது கரையிலிருந்த ஓரிடத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். புடாயோர்ஷ் எனும் குடியிருப்பு இடத்திற்கு 4 கி. மீ. கிழக்கே சாலைகள் சந்திக்கும் பிரதேசத்தில் இவர் பெரிய வெண் கொடியுடன் போர்முனை எல்லைக் கோட்டைக் கடந்தார். சுற்றி வளைக்கப்பட்ட ஜெர்மானியத் துருப்புகளின் படைத் தலைமை யகத்தில் காலக்கெடுவை ஏற்கவோ எவ்விதப் பேச்சுவார்த்தைகளை நடத்தவோ முடியாதென சமாதானத் தூதுவரிடம் மறுத்துரைக் கப்பட்டது. போர்முனை எல்லைக் கோட்டிற்குத் திரும்பி வரும் போது ஒஸ்தாபென்கோவும் கொல்லப்பட்டார்.

பாசிஸ்டுகள் சரணடைய மறுத்ததால் சுற்றி வளைக்கப்பட்ட படைத் திரட்டை ஒழித்துக் கட்டும் இராணுவ நடவடிக்கைகளில் சோவியத் படைத்தலைமை இறங்க வேண்டி வந்தது. புதிய பலத் துடன் கடுமையான சண்டைகள் மூண்டன. இரவும் பகலும் இடை

விடாது மோசமான பருவநிலைச் சூழ்நிலைகளில் சண்டைகள் நடை பெற்றன. பாசிசத் துருப்புகளுக்குப் பேரிழப்புகள் ஏற்பட்டன.

ஹங்கேரியப் பரப்பில் சோவியத் இராணுவத்தின் வெற்றிகர மான நடவடிக்கைகள் தேசபக்தச் சக்திகளை கணிசமான அளவு சுறுசுறுப்பாக்கின. 1944 டிசம்பர் 2ஆம் தேதி கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியின் பேரில் சேகேத் நகரில் ஹங்கேரிய சுதந்திர தேசிய முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. இதில் ஹங்கேரிய முன்னணியில் ஏற்கெனவேயிருந்த 4 கட்சிகளைத் தவிர பூர்ஷ்வா-ஜனநாயகக் கட்சியும் தொழிற்சங்கங்களும் இடம் பெற்றிருந்தன. ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியால் தீட்டப்பட்ட இதன் வேலைத் திட்டத்தில், தேசிய மறுமலர்ச்சி, பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்பதில் சோவியத் துருப்புகளுக்கு உதவி புரிதல், மக்கள் விரோத ஸ்தாபனங்களைக் கலைப்பது, ஜனநாயக சுதந்திரங்களை நிலைநாட்டுவது, நிலப்பிரபுத்துவ நிலவுடைமை முறையை ஒழிப்பது, அரசு இயந்திரத்தை பாசிச ஆதரவுச் சக்திகளிடமிருந்து தூய்மைப் படுத்துவது, சோவியத் யூனியனுடன் நட்புறவையும் பாசிச எதிர்ப்புக் கூட்டணியின் மற்ற நாடுகளுடன் உறவுகளையும் ஏற் படுத்துவது ஆகிய அம்சங்கள் அடங்கியிருந்தன.

டிசம்பர் 21ஆம் தேதி தெப்ரேத்சனில் ஆரம்பமான இடைக் காலத் தேசிய அசெம்பிளியின் தீர்மானங்கள் ஹங்கேரியின் அரசியல் வாழ்வில் பெரும் பங்காற்றின. இந்த அசெம்பிளி அரசுத் தலைவரின் பணிகளை நிறைவேற்றிய அரசியல் கவுன்சிலைத் தேர்ந்தெடுத்தது. விரைவிலேயே இது 1வது ஹங்கேரியப் படையின் முன்னாள் தள பதியாகிய மீக்லஷின் தலைமையில் இடைக்காலக் கூட்டு அரசாங் கத்தை அமைத்தது. டிசம்பர் 28ஆம் தேதி ஹங்கேரியின் இடைக் கால அரசாங்கம் ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது.

இடைக்காலத் தேசிய அசெம்பிளியின் முதல் அமர்வு ஹங்கேரிய மக்களுக்கான அறைகூவலை நிறைவேற்றியது. இதில் புதிய, ஜன நாயக ஆட்சியின் முக்கியத்துவமும் மக்கள்-ஜனநாயக ஹங்கேரியக் கட்டுமானத்தில் உடனடிக் கடமைகளும் விளக்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தேசிய அசெம்பிளி மற்றும் அரசாங்கத்தின் தீர் மானங்கள் ஹங்கேரிய மக்களால் உற்சாகத்தோடு வரவேற்கப்பட் டன.

இன்னமும் பாசிஸ்டுகளின் தரப்பிலிருந்த ஹங்கேரியப் போர் வீரர்களை நோக்கி இடைக்காலத் தேசிய அசெம்பிளி விடுத்த அறிக் கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''உங்களைப் பொறுத்த மட்டில் தேசிய இனத்தின் கட்டளையைத் தவிர வேறு கட்டளை இல்லை''. ''தமது ஆயுதங்களை ஜெர்மானிய ஒடுக்குமுறையாளர் களுக்கு எதிராகத் திருப்புமாறும் விடுவிக்க வந்த சோவியத் இராணு

வத்திற்கு ஆதரவு தருமாறும் விடுதலைக்காகப் போராடும் ஹங்கேரிய போராட்ட வீரர்களுடன் இணையுமாறும் தோற்றுவிக்கப் பட்டுக் கொண்டிருந்த புதிய ஹங்கேரிய இராணுவத்தில் சேருமாறும் இடைக்காலத் தேசிய அசெம்பிளி தேசிய இனத்தின் சார்பில் இவர்களுக்கு அறைகூவல் விடுத்தது''.*

''ஏராளமான சோவியத் போர்வீரர்கள் ஹங்கேரிய பூமியில் இரத்தம் சிந்தினர், நமது மக்களின் விடுதலைக்காக இன்னுயிர் ஈந்தனர். சோவியத் மக்களின் இந்த எண்ணற்ற தியாகங்களுக்காக எங்களுடைய ஆழ்ந்த நன்றி என்றென்றைக்கும் இருக்கும். சோவியத் யூனியன்தான் எங்களை விடுவித்தது என்பதை நாங்கள் என்றென்றும் மறக்க மாட்டோம்''** என்று ஹங்கேரிய மக்கள் குடியரசின் 25வது ஆண்டு நிறைவையொட்டி நடந்த விழாக் கூட்டத்தில் ஹங்கேரிய சோஷலிஸ்டுக் கட்சியின் முதல் செயலாளர் யானஷ் காடர் குறிப்பிட்டார்.

முற்றுகையின் வெளி வளையத்தில் நடைபெற்ற சம்பவங்களின் காரணமாக சுற்றி வளைக்கப்பட்ட புடாபெஸ்ட் படைத் திரட்டை ஒழித்துக் கட்டுவது இழுத்துக் கொண்டே போனது. முற்றுகையை உடைத்து துணையில் தற்காப்பைப் புனர்நாட்டும் பொருட்டு பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை 1945 ஜனவரியில் மூன்று பலத்த பதிலடிகளைத் தொடுத்தது. இந்நோக்கத்தோடு அது வெளி வளையத்தில் செயல்பட்ட 4வது கார்டு படைக்கு எதிராக கணிசமான சக்திகளைக் கொண்டு வந்து குவித்தது. இதற்குப் பின் எதிரி இச்சக்திகளை, குறிப்பாக டாங்கி யூனிட்டுகளை இடையறாது பெருக்கினான்.

சோவியத் துருப்புகளுக்கு முதலாவது (ஜனவரி 2—6), மூன்றாவது (ஜனவரி 18—26) பதிலடிகள் குறிப்பாக கடுமையானவையாக இருந்தன. கொமார்னோ பிரதேசத்திலிருந்து தொடுக்கப்பட்ட முதல் அடியின் பயனாய் பாசிஸ்டுகளால் பெரும் இழப்புகளை விலையாகக் கொடுத்து துனாய் ஆற்றின் வலது கரையோரமாக 25—37 கி. மீ. தூரம் முன்னேறி எஸ்தெர்கோமிற்கு கிழக்கே, பிச்கெ-பன்ஹிடாவிற்கு வடக்கேயிருந்த எல்லையை அடைய முடிந்தது. ஆனால் சோவியத் போர்வீரர்களின் வீரம், அவர்கள் தற்காப்பில் காட்டிய உறுதி, சேம படைகளை, குறிப்பாக டாங்கிகளையும் பீரங்கிப்படையையும் திறமையாக பிளவிடத்தில் மாற்றியமைத்தது ஆகியவற்றின் பயனாய் எதிரி தடுத்து நிறுத்தப்பட்டான். பிரதான படைத் தலைமையகத்தின் கட்டளையின்படி துனாய் ஆற்றின் வடக்கு கரையோரமாக 2வது உக்ரேனிய சேனையின் 6வது கார்டு டாங்கிப்

---

* **1945—1948ஆம் ஆண்டுகளில் சோவியத்-ஹங்கேரிய உறவுகள். ஆவணங்கள்,** மாஸ்கோ, 1969, பக்கம் 25.

** பிராவ்தா, 1970 ஏப்ரல் 4.

படை மற்றும் 7வது கார்டு படையால் தொடுக்கப்பட்ட தாக்குதல் எதிரியின் முதல் பதிலடியை முறியடிப்பதில் பெரும் பங்காற்றியது. இத்துருப்புகள் கொமார்னோ பிரதேசத்திற்கு, அதாவது எதிரியின் பக்கவாட்டிற்கும் பின்னணிக்கும் வந்ததானது தாக்குதலை நிறுத்துமாறு எதிரியை நிர்ப்பந்தித்தது.

சிறிது தெற்கே தள்ளி தொடுக்கப்பட்ட இரண்டாவது பதிலடியும் (ஜனவரி 7 – 11) பாசிஸ்டுகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. 5 நாள் தாக்குதலில் இவர்களால் 6 – 7 கி. மீ. தூரம் மட்டுமே முன்னேற முடிந்தது. மூன்று டாங்கி டிவிஷன்களின் தாக்குதலை 20வது கார்டு துப்பாக்கிப்படை கோர்பஸ் 7வது இயந்திரப்படைக் கோர்ப்சோடு கூட்டாகச் சேர்ந்து முறியடித்தது, எதிரி தற்காப்பிற்கு மாறிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டான்.

ஒரு வாரம் கழித்து பலட்டோன் ஏரிக்கு வடக்கே இருந்த பிரதேசத்திலிருந்து தொடுக்கப்பட்ட மூன்றாவது பதிலடி மிகப் பலமானதாயும் ஆபத்தானதாயுமிருந்தது. எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டில் 560 டாங்கிகளும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. குறுகிய காலகட்டத்தில் (3 நாட்களில்) பாசிச ஜெர்மானியத் துருப்புகள் துனுபேன்தெலே பிரதேசத்தில் துனையை அடைந்து ஆற்றின் மேற்கு கரையிலிருந்த 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை இரண்டு பகுதிகளாகப் பிளந்தன. துருப்புகளை வழிநடத்துவது மிகச் சிக்கலானது.

பிரதான படைத் தலைமையகம் ஜனவரி 22ஆம் தேதி விடுத்த கட்டளையின் படி, தோன்றிய கடினமான நிலையை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2வது உக்ரேனிய சேனையிலிருந்து பெரும் சக்திகள் 3வது உக்ரேனிய சேனைக்கு அளிக்கப்பட்டன. பிளவு மண்டலத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் இரண்டு முக்கியத் தாக்குதல் பிரிவுகள் அமைக்கப்பட்டன. ஜனவரி 27ஆம் தேதி தாக்குதலைத் துவக்கிய இவை பிப்ரவரி 7ஆம் தேதி எதிரியின் கடும் எதிர்ப்பைச் சமாளித்து வெளிப் போர்முனையில் பதிலடிகளுக்கு முன்னிருந்த அதே எல்லையைப் புனர் நாட்டின.

இவ்வாறாக முற்றுகையை உடைத்து துனையில் தற்காப்பை புனர் நாட்ட எதிரி மேற்கொண்ட முயற்சிகள் குலைக்கப்பட்டன.

சோவியத் துருப்புகளின் நன்கு இயங்கும் திறன், சேமப் படைகளை (குறிப்பாக டாங்கி, பீரங்கி-டாங்கி எதிர்ப்பு யூனிட்டுகளையும் படைப்பிரிவுகளையும்) ஆபத்தான இடங்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பியது, எதிரி தாக்கக் கூடிய திசைகளில் விரைவாக தற்காப்பு எல்லைகளை அமைத்தது, இரண்டு சேனைகளின் வான் படைகளும் பரஸ்பரம் இணைந்து செயல்பட்டது மற்றும் சோவியத் போர்வீரர்

கள் காட்டிய வீரம் ஆகியவைதான் சோவியத் துருப்புகளின் வெற்றிகரமான தற்காப்பு நடவடிக்கைகளுக்கான காரணங்களாகும்.

வெளிப் போர்முனையில் 3வது உக்ரேனிய சேனையின் உக்கிரமமான இராணுவ நடவடிக்கைகளோடு சேர்ந்து அதே சமயம் புடாபெஸ்டில் சுற்றி வளைக்கப்பட்ட எதிரி படைத் திரட்டை ஒழித்துக் கட்டுவதற்கான சண்டைகளும் தொடர்ந்தன. இச்சண்டைகள் சிக்கலான சூழ்நிலைகளில் நடைபெற்றன. ஆஸ்திரியாவிற்கும் ஜெர்மனியின் தென் பிரதேசங்களுக்கும் இருந்த குறுகிய வழிகளையும் நுழைவாயில்களையும் மூடி பாதுகாத்த புடாபெஸ்ட்—இதனால் இது பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது—எதிரியால் பலத்த தற்காப்பு பிரதேசமாக மாற்றப்பட்டது. நகரத்தில் 110 எதிர்ப்பு மையங்களும் 200க்கும் மேற்பட்ட ஆதார நிலையங்களும் தோற்றுவிக்கப்பட்டன. சாதாரணமாக எதிர்ப்பு மையங்கள் தொழிற்சாலைகள், ஆலைகள், இருப்புப் பாதை நிலையங்கள், புகை வண்டி நிலையங்கள், பெரும் கட்டிடங்கள் உட்பட்ட ஒரு அல்லது ஒரு சில வட்டங்களை உள்ளடக்கியிருந்தன. ஒன்று, இரண்டு வீடுகளை உள்ளடக்கிய ஆதார நிலையங்கள் எதிர்ப்பு மையங்களுக்கு இடையிலிருந்தன. சக்திகளையும் சாதனங்களையும் கொண்டு செல்வதற்காக பாதாள இரயில், பூமியடி குழாய் அமைப்புகள், பாதாள சேம நிலவறை போன்ற பூமியடி அமைப்புகளை எதிரி பரவலாகப் பயன்படுத்தினான். ஒவ்வொரு தெருவையும் ஒவ்வொரு நகரப் பகுதியையும் பல வீடுகளையும் பாசிஸ்டுகள் நீண்ட காலத் தற்காப்பிற்கு மாற்றியிருந்தனர்.

சுற்றி வளைக்கப்பட்ட எதிரியை ஒழித்துக் கட்டுவது 4—5 துப்பாக்கிப்படை கோர்பஸ்கள் அடங்கிய 2வது உக்ரேனிய சேனையின் புடாபெஸ்ட் துருப்புத் தொகுதியால் நிறைவேற்றப்பட்டது. சோவியத் துருப்புகள் தொடர்ந்தாற்போல் எதிரியின் ஆதார நிலையங்களை ஒழித்தன, தெருக்களையும் நகரப் பகுதிகளையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றின. ஜனவரி 18ஆம் தேதி நகரத்தின் கிழக்குப் பகுதியாகிய பெஸ்டும் பிப்ரவரி 13ஆம் தேதி மேற்குப் பகுதியாகிய புடாவும் முற்றிலுமாக விடுவிக்கப்பட்டன. 1,38,000ற்கும் அதிகமான பாசிஸ்டுகள் சிறைபிடிக்கப்பட்டனர். புடாபெஸ்டை விடுவிப்பதற்கான சண்டைகளில் ருமேனிய யூனிட்டுகளும் புடாபெஸ்ட் ஹங்கேரிய வாலன்டரி ரெஜிமென்டும் போரிட்டன. இது பெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

புடாபெஸ்ட் போர்த்தந்திர திசையில் சோவியத் துருப்புகளின் தீவிர நடவடிக்கைகள், பெருமளவு துருப்புகளை, குறிப்பாக டாங்கி மற்றும் மோட்டார் துருப்புகளை தென் மேற்குப் போர்க்களத்திற்கு அனுப்புமாறு ஹிட்லரின் படைத் தலைமையை நிர்ப்பந்தித்தன.

இது புடாபெஸ்ட் நடவடிக்கையின் முக்கியமான ஒரு முடிவாகும். இதன் விளைவாய் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் இயங்கிய ஜெர்மானிய டாங்கி, மோட்டார் டிவிஷன்களின் பாதிப் பகுதி கர்பாத்திற்குத் தெற்கே விடப்பட்டது. கர்பாத்திற்கு வடக்கே, பிரதான வார்ஸா-பெர்லின் திசையில் செஞ்சேனை தாக்குதலில் இறங்கிய தருணத்தில் இது நடந்தது.

முன்னேறித் தாக்கிய சோவியத் துருப்புகளை தடுத்து நிறுத்த முடியும் அல்லது இவற்றை துனாய் ஆற்றின் பின்னால் தள்ளக் கூட முடியும் என்று கருதி புடாபெஸ்ட் பிரதேசத்தில் டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்களைக் குவிப்பதற்கு பெரும் முக்கியத்துவம் அளித்த ஜெர்மானியப் படைத் தலைமை இது நடைபெறாத போது பெரும் வியப்படைந்தது. ''கிழக்கத்தியப் போர்முனையில் இதுவரை எங்குமே காணப்படாத அளவிற்கு ஹங்கேரியில் திரட்டப்பட்டிருந்த 'கவசடாங்கிப் படையின்' உதவியால் எதிரியை ஏன் தடுத்து நிறுத்த இயலவில்லை என்பது எனக்குப் புரியவில்லையென''* தரைப் படைகளின் பிரதான படைத் தலைமையகத் தளபதி குடெரியான் புடாபெஸ்ட் அருகே நடந்த சண்டைகளின் போது தனக்கு கூறியதாக ''தெற்கு'' படைத் தொகுதியின் தளபதி பிரீஸ்னெர் 1944இலும் 1945 துவக்கத்திலும் ருமேனியாவிலும் ஹங்கேரியிலும் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து தான் எழுதிய நூலில் குறிப்பிட்டான்.

புடாபெஸ்ட் நடவடிக்கைக்கு, இரண்டு சேனைகளிலும் இருந்த போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகள், ஜெனரல்களின் பெரும் உடற் பலமும் தார்மீகச் சக்தியும் தேவைப்பட்டன. 1944ஆம் ஆண்டின் தாக்குதல் நடவடிக்கை எதிலுமே சோவியத் துருப்புகள் புடாபெஸ்ட் நடவடிக்கையில் சண்டையிட்டதைப் போல் கடுமையான தற்காப்புச் சண்டைகளை இட்டதில்லை, பெரும் எதிரியின் படைத் திரட்டை சுற்றி வளைத்து அதை ஒழித்துக் கட்டுவதற்கு ஆன நேரத்தைப் போல் இவ்வளவு நேரம் எதற்கும் ஆனதில்லை என்று கூறுவதே போதுமானது.

ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற சண்டைகளில் பல்வேறு விதமான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சோவியத் துருப்புகள் பலத்த தற்காப்பைப் (''மார்கரீத்தா'' கோடு) பிளந்து சென்றன, பெரும் ஆறுகளை (தீஸ்ஸா, துனாய்) போகிற போக்கில் கடந்தன, நீண்ட தூரத்திற்கு எதிரியைத் துரத்திச் சென்றன, மலைகளிலும் பெரும் குடியிருப்பு மையங்களிலும் சண்டையிட்டன. சாதாரணமாக துருப்புகள் பரவலான தாக்குதல்

---

* Hans Friessner, *Verratens Schlachten*, Hamburg, 1956, S. 205.

மண்டலங்களையும் ஒப்பீட்டளவில் சக்திகள் மற்றும் சாதனங்களையும் குறைவான அடர்த்தியையும் பெற்றிருந்த போதிலும் இத்தகையச் சூழ்நிலைகளில் இவை உயர்வான போர்த் திறமை, ஆண்மை, வீரத்தை வெளிப்படுத்தி பெரும் வெற்றிகளை அடைந்தன.

துப்பாக்கிப்படை டிவிஷனுக்கும் துனுய் இராணுவ ப்ளீட்டுக்கும் இடையே திட்டவட்டமாக பரஸ்பர செயலாக்கம், துருப்புகளை தொடர்ச்சியாக வழிநடத்தியது, இடையறாது இராணுவ சப்ளைகளை அனுப்பியது ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தது கவனிக்கத் தக்கது.

ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற சண்டைகளில் கணிசமான அளவு டாங்கி மற்றும் இயந்திரப்படைத் துருப்புகள் பங்கேற்றன. தெப்ரேத்சன் மற்றும் புடாபெஸ்ட் நடவடிக்கைகளில் 6வது கார்டு டாங்கிப் படை தனி மண்டலத்தில் முதல் படை வரிசையில் நின்று தாக்கியது. எதிரியின் தற்காப்பிலிருந்த பலவீனமும் இடத்தின் விசேஷத் தன்மையும்தான் இதற்கான முக்கியக் காரணங்களாகும். பெரிய தொழில்துறை நகரில் போரிடுவதில், குறிப்பாக திடீர்த் தாக்குதல் பிரிவுகளைப் பயன்படுத்துவதில் சோவியத் துருப்புகளுக்கு நல்ல அனுபவம் கிடைத்தது.

புடாபெஸ்ட் நடவடிக்கையை முடித்த 2வது, 3வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள் வியென்னு திசையில் தாக்குதலுக்கான தயாரிப்பில் இறங்கின. ஆனல் இப்பிரதேசத்தில் நிலவரம் மீண்டும் கூர்மையடைந்தது. பிப்ரவரி நடுவில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை எதிர்த்தாக்குதலைத் தொடுப்பதற்காகப் பெரும் சக்திகளைக் குவித்தது. டாங்கிகள் மற்றும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளில் எதிரி 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை 2.1 மடங்கு விஞ்சி நின்றான். பலட்டோன் ஏரி பிரதேசத்தில் சோவியத் துருப்புகளை முறியடித்து துனுய் ஆற்றோரமாக தற்காப்பைப் புனரமைத்து ஹங்கேரிய எண்ணெய் ஊற்றுகளைத் தன் வசம் தக்க வைத்து ஆஸ்திரியா மற்றும் தெற்கு ஜெர்மனியின் தொழிற்துறைப் பிரதேசங்களை எதிர்நோக்கிய அபாயத்தை அகற்றுவது என்று பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை திட்டம் தீட்டியது. இந்த எதிர்த்தாக்குதலில் பாசிஸ்டுகளுக்கு அரசியல் நோக்கமும்—பால்கனை சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ''பகடைக் காயாகப்'' பயன்படுத்துவது—இருந்தது. வியென்னுவை நோக்கிய திசையில் தாக்குதலுக்கான தயாரிப்புகளை நிறுத்தாமலேயே தற்காலிகமாகத் தற்காப்பிற்கு மாறி, எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டை அலைக்கழித்து பலவீனப்படுத்துமாறு உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்குக் கட்டளையிட்டது.

1945 மார்ச் 6ஆம் தேதி பாசிஸ்டுகள் எதிர்த்தாக்குதலில் இறங்

கினர். 10 நாட்களுக்குக் கடுமையான சண்டைகள் நடைபெற்றன. பலத்த, 25—30 கி.மீ. ஆழத்திற்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த தற்காப்பை (டாங்கி எதிர்ப்பு தற்காப்பு உட்பட) சந்தித்த எதிரிக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டன (40,000 நபர்களை எதிரி பறிகொடுத்தான், சுமார் 500 டாங்கிகள், திடீர்த் தாக்குதல் பீரங்கிகளை இழந்தான்). எனவே மார்ச் 15ஆம் தேதி தாக்குதலைக் கைவிட்டு தற்காப்பிற்கு மாறிச் செல்லும்படி எதிரி நிர்ப்பந்திக்கப்பட்டான். எதிரி துருப்புகளின் மனநிலை மிகவும் மோசமடைந்தது.

1945ஆம் ஆண்டு மார்ச்சில் பலட்டோன் ஏரி பிரதேசத்தில் எதிரியின் எதிர்த்தாக்குதலை முறியடித்ததானது யுத்தத்தின் போக்கில் சோவியத் இராணுவத்தின் கடைசி பெரும் தற்காப்பு நடவடிக்கையாக இருந்தது.

எதிரி தனது துருப்புகளை ஒழுங்குபடுத்தி வலிமையடையும் வாய்ப்பைத் தராமல் 3வது, 2வது உக்ரேனிய சேனைகள் மறு நாளன்றே வியென்னு திசையில் தாக்குதலில் இறங்கி ஏப்ரல் 4ஆம் தேதி ஹங்கேரியை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து முழுமையாக விடுவித்தன.

பெல்கிரேட் நடவடிக்கை
(1944 செப்டெம்பர் 28 — நவம்பர் 20)

ருமேனியாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டு பல்கேரியா விடுவிக்கப்பட்ட பின், யுகோஸ்லாவியாவில் ஹிட்லர் துருப்புகளை முறியடித்து அதன் தலைநகராகிய பெல்கிரேடை விடுவிக்கும் நோக்கத்தோடு செஞ்சேனை பெல்கிரேட் நடவடிக்கையை நடத்துவதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாயின.

இதன் நிறைவேற்றத்தில் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை 3வது உக்ரேனிய சேனையிலிருந்து 57வது காலாட்படை, 17வது வான் படை, 4வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ், 236 துப்பாக்கிப்படை டிவிஷன், 5வது விசேஷ மோட்டார் துப்பாக்கிப்படை பிரிகேடு மற்றும் துணுய் இராணுவ ப்ளீட் ஆகியவற்றை ஈடுபடுத்தியது. இத்துருப்புகளின் வசம் 2,350 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், ஜெட் அமைப்புகள், 358 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், 1,290 விமானங்கள், சுமார் 80 சண்டைக் கப்பல்கள் (பெரும்பாலும் கவசப் படகுகள்) முதலியன இருந்தன.

இது தவிர 1வது ஆர்மித் தொகுதியும் (1வது புரோலித்தார்ஸ்கி மற்றும் 12வது கோர்பஸ்கள், டிவிஷன் தொகுதி) யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் 13வது, 14வது, 15வது, 16வது கோர்பஸ்கள் மற்றும் 1வது, 2வது, 4வது பல்கேரியப் படைகள்

ஆகியவையும் நடவடிக்கையில் பங்கேற்க வேண்டியிருந்தது.

சோவியத், யுகோஸ்லாவிய, பல்கேரியத் துருப்புகளில் 6,60,000 நபர்கள் இருந்தனர், இவர்களிடம் 4,477 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 421 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்பு களும் 1,250 விமானங்களும் இருந்தன. இத்துருப்புகளை எதிர்த்து நின்ற பாசிச ஜெர்மானியத் துருப்புகளில் 1,50,000 நபர்கள் இருந்தனர், இவர்கள் வசம் 2,130 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 125 டாங்கிகள், திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும் 352 விமானங்களும் இருந்தன. இவ்வாறாக மக்கள் இராணுவங்கள்* ஆள்பலத்தில் 4.4 மடங்கும் பீரங்கிகளில் 2.1 மடங்கும் டாங்கிகள் தானியங்கி பீரங்கிகளில் 3.4 மடங்கும் விமானங்களில் 3.6 மடங் கும் எதிரியை விஞ்சி நின்றன.

சோவியத், யுகோஸ்லாவிய, பல்கேரியத் துருப்புகளின் கூட்டு முயற்சிகளால் எதிரியின் ''சேர்பியா'' ஆர்மித் தொகுதியை முறி யடித்து, கிரீஸில் இருந்த "E" பாசிச ஜெர்மானியப் படைத் தொகுதியின் போக்குவரத்து மார்க்கங்களை அடைந்து, இது பால்கன் தீபகற்பத்தின் தெற்கேயிருந்து பின்வாங்கிச் செல்ல விடாமலிருப் பது என்று இந்நடவடிக்கையில் திட்டமிடப்பட்டது. பல்கேரியத் துருப்புகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு 3வது உக்ரே னிய சேனையின் துருப்புகள் கிழக்கேயிருந்து பெல்கிரேடு மீது பிர தான தாக்குதலைத் தொடுத்தன. யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் யூனிட்டுகளும் படைப்பிரிவுகளும் மேற்கு, தெற்கு, கிழக்குத் திசைகளிலிருந்து எதிரியைத் தாக்கின.

பி. டிட்டோவின் வேண்டுகோளுக்கிணங்க யுகோஸ்லாவியப் பரப் பில் சோவியத் மற்றும் பல்கேரியத் துருப்புகளின் நடவடிக்கைகள் யுகோஸ்லாவிய மக்கள் படைத் தலைமையுடன் ஒத்திசைவிக்கப் பட்டன. 1944 ஜூலை 15ஆம் தேதி அவர் ஸ்தாலினுக்குப் பின்வரு மாறு எழுதினார்: ''சேர்பியா விஷயத்தில் ஆங்கிலேயர்களின் கொள்கை காரணமாக—இங்கே அவர்கள் ராஜாவின் ஆதரவாளர் களின் அதாவது சேட்னிக்குகளின் நிலையை சாத்தியமான சகல விதங்களிலும் பலப்படுத்தி எங்கள் நிலையைப் பலவீனப்படுத்த முயலுகின்றனர் — நேச நாடுகளின் எந்த ஒரு உருப்படியான உதவி யையும் நாங்கள் எதிர்பார்க்க முடியாது... எங்களுக்கு உங்களின் மிக அதிகமான உதவி தேவை.'' இந்த உதவி அளிக்கப்பட்டது. சோவியத் இராணுவம் யுகோஸ்லாவியப் பரப்பினுள் நுழைவதைப் பற்றிய உடன்படிக்கை 1944 செப்டெம்பர் நடுவில் மாஸ்கோவில் கையெழுத்தானது. பின்னர் கிராய்யோவாவில் கூட்டு நடவடிக்கை

* சோவியத், யுகோஸ்லாவிய, பல்கேரியத் துருப்புகள். — ப-ர்.

களைப் பற்றிய திட்டம் முடிவாகத் தீட்டப்பட்டது. யுத்தம் முடிந்த கையோடு நடைபெற்ற யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை பாசிச எதிர்ப்பு அசெம்பிளியின் 3வது அமர்வில் பி. டிட்டோ இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''நமது நாட்டிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை விரைவாக விரட்டியடிக்கும் பொருட்டு உதவி கேட்பதற்காக நான் 1944 செப்டெம்பரில் மாஸ்கோ சென்றேன். செஞ்சேனை கிட்டத்தட்ட நமது நாட்டின் எல்லைகளை நெருங்கி வந்ததால் இராணுவ நடவடிக்கைகளை ஒத்திசைவதைக் குறித்து ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமாக இருந்தது''*.

செப்டெம்பர் 23ஆம் தேதி மசிடோனியாவில் யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதான படைத் தலைமையகத்தில் யுகோஸ்லாவிய, பல்கேரிய படைத் தலைமையின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட சந்திப்பு நடந்தது. இவர்கள் மசிடோனியா பரப்பில் பாசிஸ்டுகளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளின் சாத்தியப்பாட்டைப் பற்றி உடன்பாடு செய்து கொண்டனர்.

செப்டெம்பர் 28ஆம் தேதி 57வது படையின் துருப்புகள் (தளபதி ஜெனரல் காகேன்) தாக்குதலில் இறங்கி, விமானப்படையின் ஆதரவோடு எதிரியின் தற்காப்பைப் பிளந்து கிழக்கு சேர்பிய மலைகளைக் கடந்து பிப்ரவரி 10ஆம் தேதி வாக்கில் வெலிக்கா-பிலாறு பிரதேசத்தில் மொராவா ஆற்றில் கடக்கும் வழிகளைக் கைப்பற்றின. துருப்புகள் மொத்தம் 130 கி. மீ. தூரம் முன்னேறின.

அக்டோபர் 12ஆம் தேதி மொராவா ஆற்றின் எல்லையிலிருந்து 4வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ் பிளவின் உள்ளே அனுப்பப்பட்டது; வெற்றிகரமாக முன்னேறிய இக்கோர்பஸ் அக்டோபர் 14ஆம் தேதி பெல்கிரேடின் எல்லைப் பகுதிகளை அடைந்து அதைப் பிடிப்பதற்கான சண்டைகளில் இறங்கியது.

அக்டோபர் 20ஆம் தேதி பெல்கிரேட் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது. இதற்காக நடந்த சண்டைகளில் சோவியத் துருப்புகளைத் தவிர 1வது புரோலித்தார்ஸ்கி மற்றும் 12வது கோர்பஸ்களைச் சேர்ந்த 8 யுகோஸ்லாவிய டிவிஷன்களும் கலந்து கொண்டன.

பெல்கிரேட் நடவடிக்கையில் சோவியத் துருப்புகள் ஆற்றிய பங்கை யுகோஸ்லாவிய மக்கள் உயர்வாக மதிப்பிட்டனர். 1944ஆம் ஆண்டு அக்டோபர் 21ஆம் தேதி மார்ஷல் பி. டிட்டோ 3வது உக்ரேனிய சேனையின் தளபதிக்குப் பின்வருமாறு எழுதினார்: ''பெல்கிரேட் திசையில் இயங்கும், உங்கள் பொறுப்பிலுள்ள துருப்பு

---

* பி. டிட்டோ, தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும், மாஸ்கோ, 1973, பக்கம் 148 (ருஷ்ய மொழியில்).

களுக்கு எங்கள் சார்பாகச் சொல்லுங்கள்: யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவப் படைப்பிரிவுகளோடு கூட்டாகச் சேர்ந்து எங்களுடைய தலைநகரமாகிய பெல்கிரேடை விடுவித்த செஞ்சேனை யின் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகள், ஜெனரல்களுக்கு எங்கள் நன்றி.

பெல்கிரேடை விடுவிப்பதற்காக நடைபெற்ற கடும் சண்டை களில் நீங்கள் வெளிப்படுத்திய வீரத்தையும் உறுதியையும் யுகோஸ் லாவிய மக்கள் செஞ்சேனைத் துருப்புகளின் மறக்கவியலா வீரமாக என்றென்றும் நினைவில் வைத்திருப்பார்கள். பொது விரோதிக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தில் சிந்தப்பட்ட உங்களுடைய இரத்தமும் யுகோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவ வீரர்களின் இரத்தமும் யுகோஸ்லாவிய மக்களுக்கு சோவியத் மக்களுடன் உள்ள சோதர பந்தத்தை ஆண்டாண்டுகளுக்குமாக உறுதிப்படுத்தும்''*.

பெல்கிரேடை விடுவித்த பின் சோவியத் துருப்புகள் தொடர்ந்து முன்னேறி அக்டோபர் இறுதியில் கிரால்யெவா, குருஷேவிட்ஸ் எல்லையை அடைந்தன; பல்கேரியத் துருப்புகள் அக்டோபர் 14ஆம் தேதி நீஷ் நகரைத் கைப்பற்றி தெற்கு மொராவா ஆற்றுப் படு கையை அடைந்தன.

பெல்கிரேட் நடவடிக்கையின் பயனாய் ''சேர்பியா'' ஆர்மித் தொகுதி முறியடிக்கப்பட்டது, "E" படைத் தொகுதிக்கு பெருத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது, யுகோஸ்லாவியாவின் தலைநகரமாகிய பெல்கிரேட் விடுவிக்கப்பட்டது, நாடு முழுவதையும் பாசிச ஜெர்மா னிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்து நிலவரத்தை மேற் கொண்டு ஜனநாயகச் சக்திகளுக்கு ஆதரவாக மாற்ற அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

சோவியத் துருப்புகள் யுகோஸ்லாவியப் பூமியில் சுமார் 8,000 போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் பறிகொடுத்தன.

யுகோஸ்லாவியாவை விடுவிப்பதில் சோவியத் மற்றும் பல் கேரியத் துருப்புகள் பங்கேற்றதை யுகோஸ்லாவிய மக்கள் உயர் வாக மதிப்பிட்டனர். ''செஞ்சேனையின் உதவியோடு பெல்கிரேடும் சேர்பியாவும் விரைவாக விடுவிக்கப்பட்டன, பல்கேரிய இராணு வத்தின் உதவியோடு மசிடோனியா விடுவிக்கப்பட்டது''** என்று பி. டிட்டோ குறிப்பிட்டார்.

பெல்கிரேட் நடவடிக்கை இரண்டாவது உலக யுத்த ஆண்டு

---

* ஷ்திமேன்கோ, **யுத்த ஆண்டுகளில் பிரதான படைத் தலைமையகம்**, மாஸ்கோ, 1973, பாகம் 2, பக்கம் 218 (ருஷ்ய மொழியில்).

** பி. டிட்டோ, **தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்**, பக்கம் 149.

களில் 3 மக்கள் இராணுவங்களின் வீரஞ்செறிந்த சோதர ஒத்துழைப்பிற்கும் நெருங்கிய பரஸ்பர செயலாக்கத்திற்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் சிறப்பு அம்சம் என்னவெனில் மலைப்பாங்கான பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகள் தனித்தனி திசைகளில் யூனிட்டுகளால் நடத்தப்பட்டதாகும். சோவியத் விமானப்படை தரைப்படைத் துருப்புகளுக்கு பெரும் ஆதரவளித்தது. இது 4,678 விமானப் பறத்தல்களை நடத்தி எதிரிக்குப் பேரிழப்புகளை ஏற்படுத்தியது. துனைய் இராணுவ ப்ளீட் தரையிறக்குப் படையினரை இறக்கியும் பீரங்கிகளால் சுட்டும் 200க்கும் மேற்பட்ட போக்குவரத்துக் கப்பல்களை துனைய் ஆற்றின் வழியாக இட்டுச் சென்றும் தரைப்படைகளுக்கு உதவியது, 70,000க்கும் கூடுதலான சோவியத் போர்வீரர்கள், ஏராளமான டாங்கிகள், பீரங்கிகள், வாகனங்கள் சுமார் 8,000 டன் எடையுள்ள பல்வேறு விதமான சரக்குகள் ஆகியவற்றை ஏற்றிச் சென்றது.

° ° °

பால்கனில் சோவியத் இராணுவம் அடைந்த அற்புதமான வெற்றிகளின் பயனாப் ஆல்பானிய தேசிய விடுதலை இராணுவத்தின் தாக்குதலுக்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. அக்டோபர் இறுதியில் இது திரானாவில் சுமார் 3,000 பாசிஸ்டுகளைச் சுற்றி வளைத்து நவம்பர் 17இல் ஆல்பானியாவின் தலைநகரத்தை விடுவித்தது. நவம்பர் இறுதி வாக்கில் நாடு முழுவதிலுமிருந்த பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஆல்பானியவை ஹிட்லரிச ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதில் சோவியத் யூனியன் ஆற்றிய தீர்மானகரமான பங்கை ஆல்பானிய மக்கள் உயர்வாக மதிப்பிட்டனர். ஆல்பானிய உழைப்புக் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் ஹோஜா 1950இல் பின்வருமாறு எழுதினார்: ''தான் வாழ்ந்து வருவதற்கு ஆல்பானிய மக்கள் குடியரசு சோவியத் யூனியனுக்கும் சோவியத் இராணுவத்திற்கும் கடமைப்பட்டுள்ளது. இவை ஹிட்லரிச பாசிசத்தின் மீது அடைந்த மிகப் பெரும் வெற்றியின் பயனாய் பல்வேறு நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளாலும் இரத்த வெறி பிடித்த நிலப்பிரபுக்களாலும் சுமத்தப்பட்ட கடுமையான அடிமைத்தனத்திலிருந்தும் ஜெர்மானிய நாஜிசம் மற்றும் இத்தாலியப் பாசிசத்தின் கொடுங்கோன்மையிலிருந்தும் ஆல்பானிய மக்களை என்றென்றைக்குமாக விடுவித்தன''*.

---

* உறுதியான அமைதி மற்றும் மக்கள் ஜனநாயகத்திற்காக, 1959 ஆகஸ்டு 11.

செக்கோஸ்லொவாக்கியாவை விடுவிப்பதற்காக சோவியத் இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (1944 செப்டெம்பர்—டிசம்பர்) ஸ்லாவிய தேசிய எழுச்சிக்கு உதவி புரியும் நடவடிக்கையும் ஸ்லொவாக்கியாவின் கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பிரதேசங்களை விடுவிக்கும் நடவடிக்கையும் நடைபெற்றன. இரண்டாம் கட்டத்தில் (1945 ஜனவரி—ஏப்ரல்) செக்கோஸ்லொவாக்கியாவின் மத்தியப் பிரதேசங்களிலிருந்து பாசிஸ்டுகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்றன. மூன்றுவது கட்டத்தில் (1945 மே) செக்கோஸ்லொவாக்கியாவை முழுமையாக விடுவித்த பிரேக் தாக்குதல் நடவடிக்கை நடைபெற்றது.

சோவியத் துருப்புகளின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அதற்கே உரித்தான சிறப்பு அம்சங்கள் இருந்தன. சோவியத் யூனியனின் மார்ஷல் கோனெவின் தலைமையிலிருந்த 1வது உக்ரேனிய சேனையின் இடப் புறத் துருப்புகளாலும் ஜெனரல் பெத்ரோவின் தலைமையிலிருந்த 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளாலும் நடத்தப்பட்ட கிழக்கு-கர்பாத்து நடவடிக்கை மிகக் கடினமான நடவடிக்கைகளில் ஒன்றுக இருந்தது. இது கர்பாத்து-தூக்லின் நடவடிக்கை என்றும் கர்பாத்து-ஊஷ்கரத் நடவடிக்கை என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவற்றிற்கு ஒரே திட்டமும் லட்சியமும்தான் இருந்தன.

கர்பாத்து-தூக்லின் நடவடிக்கை *1944 செப்டெம்பர் 8 முதல் அக்டோபர் 28 வரை ஸ்லாவிய தேசிய எழுச்சிக்கு உதவி புரியும் பொருட்டு நடத்தப்பட்டது.*

1வது, 4வது உக்ரேனிய சேனைகளின் 38வது மற்றும் 1வது கார்டு படைகளும் 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசும் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. 2வது, 8வது வான் படைகள் விண்ணிலிருந்து இத்துருப்புகளை ஆதரித்தன.

கர்பாத்து மலையடிவாரங்களில் எதிரியை முறியடித்து, பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் சோதர ஸ்லாவிய மக்களுக்கு உதவும் பொருட்டு கர்பாத்து மலைத் தொடர் வழியே தொடர்ந்து முன்னேறுவதற்காக தூக்லின் கணவாய் திசையில் சோவியத் துருப்புகள் பிரதானத் தாக்குதலைத் தொடுத்தன.

துருப்புகள் கடினமான மலைப்பாங்கான, காட்டுப் பிரதேசத்தில் இயங்க வேண்டியிருந்தது, மலைகளில் 50 கி. மீ. ஆழம் வரையில் எதிரியின் தற்காப்பை—இதில் பொறியியல் ரீதியாக நன்கு

பலப்படுத்தப்பட்ட கணவாய்கள், குறிப்பாக தூக்லின் கணவாயும் மலை ஆறுகளைக் கடக்குமிடங்களும் அடங்கியிருந்தன — பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

நடவடிக்கைக்கான தயாரிப்பிற்கு 4 நாட்கள் மட்டுமே ஒதுக்கப் பட்டிருந்தன; இதிலும் கணிசமான இன்னல்கள் இருந்தன. ஆகஸ்டு மாதத்தின் இரண்டாம் பாதியில் நடத்திய நீண்ட காலத் தாக்குதல் நடவடிக்கைக்குப் பின் 1வது, 4வது உக்ரேனிய சேனை கள் பெரிதும் முழுமையற்று இருந்தன, துருப்புகளுக்கு ஓய்வு தேவைப்பட்டது, யூனிட்டுகளுக்கும் படைப்பிரிவுகளுக்கும் குறைந்த அளவு பொருளாயத சாதனங்கள்தான் இருந்தன. மலைப்பாங்கான, காட்டுப் பிரதேசங்களில் போர் புரிந்த அனுபவம் போர்வீரர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் உண்மையான நட்புணர்வும் பாசிச ஜெர்மனி யின் ஆக்கிரமிப்பிற்குப் பலியான செக்கோஸ்லொவாக்கிய மக் களுக்கு உதவி புரிய வேண்டும் என்ற விருப்பமும் கர்பாத்தில் தாக்குதலை நடத்துவது — இது போர்த்தந்திர ரீதியாக விவேகமற்ற தாயிருந்தாலும் — என்று முடிவெடுக்க சோவியத் படைத் தலைமை யைத் தூண்டியது. ''நமது சகோதரர்களாகிய ஸ்லாவிய மக் களுக்கு உதவுவதற்காக முன்னேறிச் செல்வது'' என்பதுதான் அந்நாட்களில் சோவியத் போர்வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரி களின் முக்கியக் கோஷமாக இருந்தது.

செப்டெம்பர் 8ஆம் தேதி 33வது படையின் துருப்புகள் விமானப் படையின் உதவியோடு தாக்குதலில் இறங்கி முதல் நாளன்றே எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத்தை 6 — 10 கி. மீ. ஆழத் திற்கும் பிளந்து சென்றன. வெற்றியைத் தொடருவதற்காக மொபைல் யூனிட்டுகளும் 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசும் சண்டையில் ஈடுபடுத்தப்பட்டன.

உறுதியான எதிர்ப்பைச் சமாளித்து, எதிரியின் பல பதிலடிகளை முறியடித்து செக்கோஸ்லொவாக்கியப் படைப்பிரிவுகளோடு சேர்ந்து சோவியத் துருப்புகள் கடுமையாகப் போரிட்டு முன்னேறின.

செப்டெம்பர் இறுதியில் தூக்லின் கணவாய்க்காக கடுமையான, இரத்தக் களரியான சண்டைகள் மூண்டன. சோவியத் மற்றும் செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்கள் பெரும் இழப்புகளையும் பொருட்படுத்தாது உறுதியோடு எழுச்சியாளர்களை நோக்கி முன் னேறினர். அக்டோபர் 6ஆம் தேதி கணவாய் கைப்பற்றப்பட்டது. 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசின் போர்வீரர்கள் சொந்த பூமியில் காலடி எடுத்து வைத்தனர், சோவியத் போர் வீரர்களோ பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாலுள்ள தமது விசுவாசத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தினர்.

இவ்வாறாக மலைப்பாங்கான, காட்டுப் பிரதேசத்தின் கடினமான

சூழ்நிலைகள், அடர்த்தியான இலையுதிர்க்கால மேகமூட்டங்கள், எதிரியின் உறுதியான எதிர்ப்பு முதலியவற்றை எல்லாம் மீறி சோவியத் துருப்புகள் போர்க் கலை, திறமை, வீரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி கர்பாத்து மலைகளைக் கடந்தன. சோவியத், செக் கோஸ்லொவாக்கியத் துருப்புகளால் ஸ்லாவிய எழுச்சியாளர்களுடன் சேர்ந்து கொள்ள முடியாது போனாலும் கர்பாத்து மலைகளில் 1வது, 4வது உக்ரேனிய சேனைகளுடைய யூனிட்டுகளின் முன் னேற்றம் எழுச்சியாளர்களின் நிலையைக் கணிசமாக இலகுவாக்கி அவர்களுடைய உறுதியான போராட்டம் தொடர துணை செய்தது.

கர்பாத்து-தூக்லின் நடவடிக்கைக்குப் பெரும் இராணுவ-அரசியல் முக்கியத்துவமிருந்தது. இது செக்கோஸ்லொவாக்கிய விடுதலையின் துவக்கமாக அமைந்தது, இந்நாட்டு விடுதலை மற்றும் சுதந்திரத்திற்கான கூட்டுப் போராட்டத்தில் சோவியத் மற்றும் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் நட்பு உறுதியடைய உதவியது. சண்டைகளின் போது சோவியத், செக்கோஸ்லொவாக்கியப் போர் வீரர்களுக்கு இடையிலான போர் ஒற்றுமை வளர்ந்து வலுப்பட்டது.

நடவடிக்கையின் விளைவாய் பாசிச ஜெர்மானியத் துருப்பு களுக்குப் பேரிழப்புகள் ஏற்பட்டன: போர்க்களத்தில் 52,000 நபர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர்; 837 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் 185 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் பெருமளவு மற்ற ஆயுதங்களையும் எதிரி பறிகொடுத் தான். சோவியத் தரப்பில் 1,00,000க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர், காயமடைந்தனர், 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ் 6,500 நபர்களை இழந்தது.

செஞ்சேனை தன்னலமின்றி சர்வதேசியக் கடமையை நிறைவேற்றி யதைப் பற்றிக் குறிப்பிடும் போது கூஸ்டவ் கூசக் பின்வருமாறு எழுதினார்: ''ஸ்லாவிய தேசிய எழுச்சியில் பங்கேற்றவர்களில் ஒருவனாயிருந்த நான் இதன் தொடர்பாக மிக ஆபத்தான, மிகக் கடினமான நடவடிக்கைகளை உணர்ச்சி ததும்ப எண்ணிப் பார்க் கிறேன். இந்நடவடிக்கைகளின் போது செஞ்சேனை ஸ்லொவாக் கியாவின் மையத்திலிருந்த எதிர்ப்புச் சக்திகளுக்கு உதவ விரைந்த போது கர்பாத்து மலைகளின் ஊடே பிளந்து செல்ல முயன்றது''[*]

தூக்லா செக்கோஸ்லொவாக்கிய, சோவியத் மக்களின் வர லாற்று விதிகளை நெருங்கி வரச் செய்தது, இவர்களுடைய புதிய புரட்சி மற்றும் போர்ப் பாரம்பரியங்களை ஏற்படுத்தியது. ''எங் களுடைய மக்களின் நெஞ்சிலும் சுய உணர்விலும் உறுதியாக

---

[*] கூஸ்டவ் கூசக், **தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்,** மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1969, பக்கங்கள் 56—57 (ருஷ்ய மொழியில்).

நுழைந்த கோஷம் தூக்லாவில் பிறந்தது. சோவியத் யூனியனோடு என்றென்றும் சேர்ந்து நிற்போம்! சோவியத் யூனியனோடு மட்டுமே தவிர வேறெப்போதும் எம்மாதிரியும் இல்லை''* என்று 1949ம் ஆண்டில் செக்கோஸ்லொவாக்கியத் தலைவர் கிளேமன்ட் கோட் வல்ட் எழுதினார்.

தூக்லின் கணவாய் விடுவிக்கப்பட்ட நாளாகிய 1944 அக்டோபர் 6 செக்கோஸ்லொவாக்கிய இராணுவ தினமாக அறிவிக்கப்பட்டு செக்கோஸ்லொவாக்கியாவில் பெரும் தேசிய விழாவாகக் கொண் டாடப்படுகிறது.

4. பால்டிக் குடியரசுகள் மற்றும் ஸபல்யார்யேவின் விடுதலை

பால்டிக் நடவடிக்கை (1944 செப்டெம்பர் 14 — அக்டோபர் 22)

1944 கோடைகாலத் தாக்குதல் நடவடிக்கைகளின் பயனாய் சோவி யத் துருப்புகள் பால்டிக் குடியரசுகளினுள் நுழைந்தன. லித்து வேனியாவை முழுமையாக விடுவித்து லாத்வியா மற்றும் எஸ் தோனியாவிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்பதற்காகப் புதிய போர்த்தந்திர நடவடிக்கை முன்னிருந்தது. பால்டிக் குடி யரசுகளைத் தன் வசம் வைத்திருக்க முயலும் முகமாக பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை இங்கே பெரும் சக்திகளைக் குவித்து பல படை வரிசைகளுடைய தற்காப்பைத் தயார்படுத்தியது. நட வடிக்கையின் துவக்கத்தில் சுமார் 1,000 கி. மீ. நீளமுடைய போர்முனையில் (பின்லாந்து வளைகுடாவில் இருந்து நேமன் ஆறு வரை) ''நார்வா'' இயங்குப் பிரிவு, 16வது, 18வது போர்க் களப் படைகள், ''சென்டர்'' படைத் தொகுதியிலிருந்து அழைக் கப்பட்ட 3வது டாங்கிப் படை** ஆகியவற்றை உள்ளடக்கிய ''வடக்கு'' படைத் தொகுதி தற்காத்து நின்றது. எதிரியிடம் மொத்தமாக 56 டிவிஷன்களும் (5 டாங்கி மற்றும் 2 மோட்டார் டிவிஷன்கள் உட்பட) 3 மோட்டார் பிரிகேடுகளும் இருந்தன. எதிரியின் பால்டிக் படைத் திரட்டில் 7,00,000க்கும் மேற்பட்ட போர்வீரர்கள் இருந்தனர், 1,216 டாங்கிகள், திடீர்தாக்குதல் பீரங்கிகளும் சுமார் 7,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கி

* K. Gottwald, **1949—1950**, Praha, 1951, str. 13.

** 1944 செப்டெம்பர் 21இலிருந்து 3வது டாங்கிப் படை ''வடக்கு'' படைத் தொகுதியில் அடங்கியிருந்தது.

களும் 400 விமானங்களும் இருந்தன.

தால்லின் திசையில் லெனின்கிராத் சேனையின் தாக்குதல் மண்டலத்தில் எதிரியின் தற்காப்பு 25—30 கி. மீ. ஆழமுள்ள மூன்று தற்காப்பு வரிசைகளை அடக்கியிருந்தது; ரீகா திசையில் பால்டிக் சேனைகளின் மண்டலத்தில் மூன்று தற்காப்பு எல்லைகள் இருந்தன. ''வால்கா'' என்ற முதலாவது எல்லை சோவியத் துருப்புகள் இருந்த இடத்திலிருந்து 150—200 கி. மீ. தூரத்தில் சென்றது, இதில் 10—12 கி. மீ. ஆழமுள்ள இரண்டு தற்காப்பு வரிசைகள் இருந்தன; ''த்சேசிஸ்'' என்ற இரண்டாவது எல்லை முன்னணி எல்லையிலிருந்து 80 கி. மீ. தூரத்திலிருந்தது, ஒரு தொடர்ச்சியான பதுங்கு குழியும் ஆயுதங்களை உடைய சுடும் இடங்களும் இதில் அடங்கியிருந்தன; இரண்டாவது எல்லையிலிருந்து 25—40 கி. மீ. தூரத்தில் சென்ற ''சீகுல்தா'' என்ற மூன்றுவது எல்லை இரண்டு தற்காப்பு வரிசைகளையும் மூன்று இடைநிலைகளையும் உள்ளடக்கியிருந்தது. ரீகா வட்டத்தில் தற்காப்பு வளையங்கள் அமைக்கப்பட்டன. வெளி எல்லை இரண்டு தற்காப்பு வரிசைகளைக் கொண்டு நகரத்திலிருந்து 10—15 கி. மீ. தூரத்திலிருந்தது, உள் எல்லை நகரின் எல்லைப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தது.

ஜெர்மானியத் துருப்புகளின் பால்டிக் படைத் திரட்டை முறியடிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த சோவியத் சேனைகளின் வசம் (லெனின்கிராத் சேனை, 1வது, 2வது 3வது பால்டிக் சேனைகள்) 125 துப்பாக்கிப்படை டிவிஷன்கள், 7 பலப்படுத்தப் பட்ட வட்டங்கள், 7 டாங்கி மற்றும் இயந்திரப்படை கோர் பஸ்கள் முதலியன இருந்தன. இவற்றில் 9,00,000 போர் வீரர்கள் இருந்தனர். இவர்களிடம் சுமார் 17,500 சாதாரண மற்றும் மார்டர் (76 மி. மீ. விட்டமும் அதற்கு அதிகமாகவும்) பீரங்கிகளும் 3,080 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 2,640 போர் விமானங்களும் இருந்தன. இது தவிர பால்டிக் கப்பற்படையும் தொலை தூர விமானப்படையும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. மொத்தத்தில் சோவியத் துருப்புகள் ஆள் பலத்தில் 1.3 மடங்கும் பீரங்கிகள், டாங்கிகளில் 2.5 மடங்கும் விமானங்களில் 6 மடங்கிற்கு அதிகமாயும் எதிரியை விஞ்சி நின்றன.

பால்டிக் குடியரசுகளில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடித்து, சோவியத் எஸ்தோனிய, லாத்விய, லித்துவேனியக் குடியரசுகளின் மக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்குமாறு உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை சேனைகளுக்குக் கட்டளையிட்டது. ரீகா வட்டத்தில் ரீகா வளைகுடாவின் கரைப் பகுதிக்கு செஞ்சேனைத் துருப்புகளை அனுப்புவதன் மூலம் எதிரியின் பால்டிக் படைத் திரட்டை வேர்மஹ்டின் எஞ்சிய சக்திகளிடமிருந்து

துண்டிப்பது என்று சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை திட்டம் தீட்டியது.

சோவியத் சேனைகளின் முயற்சிகள் பெரும்பாலும் 16வது, 18வது பாசிச ஜெர்மானியப் படைகளின் முக்கியச் சக்திகளாகிய ரீகா படைத் திரட்டை முறியடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந் தன. மூன்று பால்டிக் சேனைகளும் ஒன்றிணையும் திசைகளில் ரீகா மீது தாக்குதல் தொடுக்க வேண்டியிருந்தது. ''நார்வா'' இயங்குப் பிரிவை ஒழித்துக் கட்டி எஸ்தோனியாவை விடுவிக்கும் பொறுப்பு லெனின்கிராத் சேனைக்கு (தளபதி ஜெனரல் கோவரவ்) அளிக்கப் பட்டது. இது செம்பதாகை பெற்ற பால்டிக் கப்பற்படையோடு சேர்ந்து இக்கடமையை நிறைவேற்றியது. பால்டிக் சேனைகளின் இயக்கங்களை சீரிசைக்கும் கடமை உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகப் பிரதிநிதி சோவியத் யூனியனின் மார்ஷல் வசிலேவ்ஸ் கிக்கு அளிக்கப்பட்டது.

சோவியத் பால்டிக் குடியரசுகளை விடுவிக்கும் நடவடிக்கை இரண்டு கட்டங்களில் நடத்தப்பட்டது. முதல் கட்டத்தில் (செப் டெம்பர் 14 — 27) எஸ்தோனியாவின் நிலப்பரப்பு முழுவதும் சோவியத் துருப்புகளால் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர் களிடமிருந்து விடுவிக்கப்பட்டது. 8வது படையின் துருப்புகள் ஜெனரல் ஸ்தாரிக்கவின் தலைமையில் செப்டெம்பர் 22ஆம் தேதி எஸ்தோனிய சோவியத் குடியரசின் தலைநகரத்தினுள் காலடி எடுத்து வைத்து பால்டிக்கிலிருந்த மிக முக்கிய கடற்படைத் தளமாகிய தால்லினைக் கைப்பற்றின.

''நார்வா'' இயங்குப் பிரிவு முற்றிலுமாக முறியடிக்கப்பட்டது; இதன் மிச்சசொச்சங்களால் மட்டுமே மோன்சூன்ட் தீவுக் கூட்டத் திலிருந்து ரீகா தாக்குமுனை வட்டத்திற்குத் தப்பிச் செல்ல முடிந் தது.

லாத்விய சோவியத் சோஷலிசக் குடியரசின் கணிசமான பரப் பையும் சோவியத் துருப்புகள் விடுவித்தன. போர்த்தந்திர நடவடிக் கையின் முதல் கட்டத்திலேயே எதிரிக்கு பேரிழப்புகள் ஏற்பட்டன. எதிரியின் 35 டிவிஷன்கள் சராசரியாக 40 சதவிகிதத்தை பறி கொடுத்தன. 2வது, 3வது பால்டிக் சேனைகளின் துருப்புகள் ''சீகுல்தா'' எல்லையை அடைந்து ரீகாவிலிருந்து 50 — 60 கி. மீ. தூரத் திலும் 1வது பால்டிக் சேனையின் யூனிட்டுகள் 25 கி. மீ. தூரத்தி லும் இருந்தன. ஆனால் முன்னர் திட்டமிட்டபடி எதிரியின் ரீகா படைத் திரட்டை சோவியத் துருப்புகளால் சுற்றி வளைக்க இயல வில்லை. தற்காப்பிற்கு வசதியான காடுகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்த பிரதேசத்தையும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட நிலை களையும் பயன்படுத்தி பாசிஸ்டுகள் தமது சக்திகளில் கணிசமான

பங்கை ரீகாவிற்கு இட்டுச் சென்றனர். ''சீகுல்தா'' தற்காப்பு எல்லே அவர்களுக்குப் பாதுகாப்பு போர்வையாக விளங்கியது. உருவாகிய நிலவரம், பிரதான முயற்சிகளே ரீகா திசையிலிருந்து மேமெல் திசைக்கு மாற்றும்படி சோவியத் படைத் தலைமையைக் கட்டாயப்படுத்தியது.

பால்டிக் போர்த்தந்திர நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தில் (செப்டெம்பர் 28—அக்டோபர் 22) தீர்மானகரமான பாத்திரம் 1வது பால்டிக் சேனைக்கு அளிக்கப்பட்டிருந்தது. மேமெல் (கிளேபெதா) மீது தாக்கி எதிரியின் பால்டிக் படைத் திரட்டு முழுவதையும் கிழக்கு பிரஷ்யாவிலிருந்து துண்டிக்கும் கடமை இதன் முன் நின்றது.

பாசிச ஜெர்மானியத் துருப்புகள் இன்னமும் ரீகா திசையில் இருக்கும் போதே திடீர்தாக்குதலைத் தொடுக்கும் பொருட்டு மேமெல் நடவடிக்கையைக் குறுகிய காலகட்டத்திலேயே தயாரிக்குமாறு படைத் தலைமையகம் கட்டளையிட்டது.

ஆறு நாட்களில், எதிரி கவனிக்காதவாறு, ஷவுலாய் பிரதேசத்தில் 80—240 கி. மீ. தூரத்தில் 3 காலாட்படைகள் (4வது முக்கியத் தாக்குதல், 43வது, 51வது படைகள்), 1 டாங்கி (5வது கார்டு) படை, ஒரு சில தனி யூனிட்டுகள், பெருமளவு பீரங்கிகள், மற்ற பலப்படுத்தும் சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து நிறுத்த முடிந்தது. இவையெல்லாம் எதிரி அருகில் இருக்கும் போதே செய்யப்பட்டன. மொத்தமாக சுமார் 5 லட்சம் போர்வீரர்கள் இடம் மாற்றப்பட்டனர், 9,300 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,340 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகள் இடம் மாற்றப்பட்டன.

அதே நேரத்தில் 1வது பால்டிக் சேனையின் படைத் தலைமையால் உருமாற்ற நடவடிக்கைகளின் உதவியால் ஏதோ ரீகா, தூகும்ஸ் திசைகளில் பெரும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள சேனே தயாராகி வருவதாக பாசிஸ்டுகளை நம்ப வைக்க முடிந்தது. மேமெல் திசையிலோ தற்காப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன: இரண்டாவது, மூன்ருவது பதுங்கு குழிகள் தோண்டப்பட்டன, முன்னணியில் கண்ணி வெடிகள் வைக்கப்படுவதைப் போல் பாசாங்கு செய்யப்பட்டது. பீரங்கிகள் இருந்த இடங்கள் பூராவும் முற்றிலுமாக நன்கு மூடி மறைக்கப்பட்டிருந்தன.

துருப்புகளின் இடமாற்றமும் இவற்றை மேமெல் நடவடிக்கைக்குத் தயார்படுத்துவதும் இரகசியமாகச் செய்யப்பட்டன என்பதை ஜெர்மானிய ஆவணங்களும் மெய்ப்பிக்கின்றன. தோபெலே, எல்காவா (மிட்டாவா) இடங்களில்தான் சோவியத் துருப்புகளின்

தாக்குதலை பாசிஸ்டுகள் எதிர்பார்த்தனர் என்பது 1944 செப்டெம்பர்—அக்டோபருக்கான இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிய ''வடக்கு'' படைத் தொகுதியின் பதிவேட்டிலிருந்து தெரிகிறது. ''கூடிய விரைவில் பொதுத் தாக்குதலுக்கு மாறிச் செல்லும் பொருட்டு எல்காவாவிற்கு (மிட்டாவா) மேற்கே தனது டாங்கி யூனிட்டுகளின் தாக்குதல் இடங்களை காலாட்படையைக் கொண்டு பலப்படுத்துவதற்காக எதிரி தனிப்பட்ட திசைகளிலிருந்து துருப்புகளை விலக்குகிறான்''° என்று ''வடக்கு'' படைத் தொகுதியின் தளபதி கர்னல் ஜெனரல் ஷேர்னர் செப்டெம்பர் 26ஆம் தேதி ஹிட்லரிடம் அறிவித்தான்.

அக்டோபர் 5ஆம் தேதி 1வது பால்டிக் சேனையின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. சண்டையின் போக்கில்தான் பாசிச படைத் தலைமையால் சோவியத் துருப்புகளுடைய தாக்குதல் நடவடிக்கையின் அளவையும் பிரதான தாக்குதல் திசையையும் நிர்ணயிக்க முடிந்தது. அடுத்த நாளே- பாசிஸ்டுகள் ரீகா பிரதேசத்திலிருந்து 39வது டாங்கி கோர்பஸ் பிரிவுகளை மேமெல் திசைக்கு உடனடியாக அனுப்பினர். ஆனால் இது காலம் கடந்ததாயிருந்தது. சோவியத் துருப்புகளின் பலத்த, திடீர் தாக்குதலால் ஜெர்மானியர்களுடைய 3வது டாங்கிப் படையின் தற்காப்பு தகர்ந்து வீழ்ந்தது. அக்டோபர் 10ஆம் தேதி 1வது பால்டிக் சேனையின் துருப்புகள் மேமெலுக்கு (கிளைபெதா) வடக்கேயும் தெற்கேயும் பால்டிக் கடலின் கரையோரத்தை அடைந்தன.

2வது பால்டிக் சேனையின் துருப்புகளும் தைரியம், சமயோசித புத்தி, பெரும் வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தி வெற்றிகரமாக இயங்கின.

இவ்வாறாக ரீகா திசையில் எதிரியின் பால்டிக் படைத் திரட்டைத் துண்டிக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த பின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் மேமெல் திசையில் வெற்றிகரமாகத் தன் திட்டத்தை நிறைவேற்றியது.

சோவியத் விமானப்படை மேமெல் நடவடிக்கையில் பெரும் பங்காற்றியது. உதாரணமாக வானில் ஆதிக்கம் செலுத்திய 3வது வான் படை சண்டைகளின் போது 5,916 பறத்தல்களை நடத்தியது, எதிரியின் மீது 1,28,548 குண்டுகளை வீசியது, 2,16,289 ஜெட் மற்றும் விமான குண்டுகளை எறிந்தது.

ரீகா திசையில் ''சிகுல்தா'' எல்லையில் எதிரியின் தற்காப்பை போகின்ற போக்கில் பிளக்க 3வது, 2வது பால்டிக் சேனைகள்

° பாதுகாப்பு அமைச்சகத்தின் மத்திய ஆவணக் காப்பகம், தொகுப்பு 235, பட்டியல் 270431, பத்திரம் 3, தாள் 33.

மேற்கொண்ட ஒரு சில முயற்சிகள் தோல்வியடைந்த பின் இவை தாக்குதலுக்கான திட்டமிட்ட தயாரிப்பில் இறங்கின.

பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை மேற்கு த்வினுவிற்கு வடக்கே தனது படைத் திரட்டிற்கு ஏற்பட்ட நம்பிக்கையற்ற நிலையை உணர்ந்து இந்த எல்லையிலிருந்து தன் துருப்புகளைப் பின்வாங்கு வதென முடிவு செய்தது. அக்டோபர் 6ஆம் தேதி இரவு 3வது, 2வது பால்டிக் சேனைகளின் மண்டலத்தில் எதிரி பின்வாங்குவது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் எதிரியைத் துரத்திச் சென்று முறி யடித்து ரீகாவைப் பிடிக்கும்படி சேனைகளுக்கு கட்டளையிடப்பட்டது.

காலையிலிருந்து 3வது, 2வது பால்டிக் சேனைகளின் துருப்புகள் பின்வாங்கிக் கொண்டிருந்த எதிரியைத் துரத்திச் சென்று நாளின் இறுதியில் ''சீகுல்தா'' தற்காப்பு எல்லையின் 2வது வரிசையை அடைந்தன, சில தனிப்பட்ட இடங்களில் அதனுள் புகுந்தன. அதற் கடுத்த நாட்களில் இவை சீகுல்தா தற்காப்பு எல்லையை முழுவது மாகப் பிளந்து கொண்டு அக்டோபர் 10 வாக்கில் ரீகா நகர வட்டத்தை அடைந்தன. இது மேமெல் திசையில் தனது துருப்பு களை உரிய நேரத்தில் மாற்றியமைக்க எதிரிக்கு வாய்ப்பளிக்கவில்லை. இங்கே 1வது பால்டிக் சேனையின் யூனிட்டுகள் பால்டிக் கடலை அடைந்து எதிரியின் பால்டிக் படைத் திரட்டு முழுவதும் கிழக்கு பிரஷ்யாவிற்குப் பின்வாங்கிச் செல்லும் வழியைத் துண்டித்தன. எனவே ரீகா பிரதேசத்தில் பாசிஸ்டுகள் கடுமையான தற்காப் பிற்கு மாறினர். ஆனால் இதுவும் அவர்களைக் காப்பாற்றவில்லை. இவர்களால் சோவியத் துருப்புகளின் தாக்குதலை எதிர்த்து நிற்க இயலவில்லை. அக்டோபர் 13ஆம் தேதி நகரம் விடுவிக்கப்பட்டது. எதிரி லியெலூப்பெ ஆற்றின் எல்லைக்கும் மேற்கொண்டு தூகும்ஸ் தற்காப்பு எல்லைக்கும் பின்வாங்கத் துவங்கினான். சோவியத் துருப்பு கள் துரத்திச் செல்லத் துவங்கின.

செப்டெம்பர் 29 முதல் நவம்பர் 24 வரையான காலகட்டத் தில் லெனின்கிராத் சேனை செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையோடு சேர்ந்து மோன்சூன்ட் தீவுகளை பாசிச ஜெர்மா னிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தது.

பால்டிக் குடியரசுகளில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றிக்கு பெரும் இராணுவ-அரசியல் முக்கியத்துவம் இருந்தது. இதன் பயனாய் லாத்விய மற்றும் லித்துவேனிய சோவியத் சோஷ லிசக் குடியரசுகளின் சிறு பகுதிகளைத் தவிர பால்டிக் குடியரசு களின் கிட்டத்தட்ட முழுப் பகுதியும் விடுவிக்கப்பட்டது. 30க்கும் மேற்பட்ட பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் தூகும்ஸிற்கும் லிபா வாவிற்கும் (லியபாயா) இடையே மாட்டிக் கொண்டன. இவை இங்கே யுத்தத்தின் இறுதியில் சரணடைந்தன. எந்த ஒரு அனுகூல

மான தாக்குமுனையிலிருந்து, கிழக்கு பிரஷ்யத் திசையில் இயங்கிய சோவியத் துருப்புகளை பாசிச ஜெர்மனி அச்சுறுத்தி வந்ததோ அந்த தாக்குமுனையை அது இழந்தது. பால்டிக் குடியரசுகள் விடு விக்கப்பட்டதானது செம்பதாகை பெற்ற பால்டிக் கப்பற்படை நன்கு இயங்குவதற்கான சூழ்நிலைகளைக் கணிசமாக மேம்படுத்தியது. இதன் நீர்மூழ்கிச் சக்திகளும் நீர்மட்டச் சக்திகளும் பின்லாந்து வளைகுடாவிலிருந்து திறந்த கடல் பரப்பிற்குச் செல்லும் வாய்ப் பைப் பெற்றன.

எல்லா இடங்களிலும் பால்டிக் குடியரசுகளின் மக்கள் சோவியத் போர்வீரர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கொரில்லாப் படைவீரர்கள் துருப்புகளுக்கு பெரிதும் உதவினர். லாத்வியாவில் சுமார் 20,000 கொரில்லாப் படைவீரர்கள் இருந்தனர். இவர்கள் 350 எதிரி இராணுவ புகைவண்டிகளைக் கவிழ்த்தனர், 87 டாங்கி கள், கவச மோட்டார்களை பழுதடையச் செய்தனர், 45,000 பாசிஸ்டுகளை கொன்றனர், காயப்படுத்தினர். 1945 மே மாதம் லாத்வியப் பரப்பு முழுவதும் பாசிஸ்டுகளிடமிருந்து தூய்மைப் படுத்தப்பட்டது.

லித்துவேனியாவில் சுமார் 10,000 கொரில்லாப் படைவீரர்கள் செயல்பட்டனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடந்த ஆண்டுகளில் இவர்கள் 577 எதிரி இராணுவப் புகைவண்டி களைக் கவிழ்த்தனர். 377 என்ஜின்களையும் 3,000க்கும் அதிக மான இரயில் பெட்டிகளையும் பழுதடையச் செய்தனர், 18 எதிரி படையிருப்புகளை நொறுக்கித் தள்ளினர், 14,000க்கும் கூடுதலான பாசிஸ்டுகளையும் அவர்களின் கூட்டாளிகளையும் கொன்றனர், காயப்படுத்தினர். 1945 ஜனவரி 28இல் சோவியத் இராணுவம் மேமெலைக் (கிளைபெதா) கைப்பற்றி லித்துவேனிய சோவியத் சோஷ லிசக் குடியரசை முழுமையாக விடுவித்தது.

எஸ்தோனிய கொரில்லாப் படைவீரர்களும் வெற்றிகரமாக இயங்கினர். இவர்கள் வேவு பார்த்தனர், ஜெர்மானியப் போக்கு வரத்து மார்க்கங்களைத் தாக்கினர், பாலங்களைத் தகர்த்தனர், எதிரியின் இராணுவ புகைவண்டிகளைக் கவிழ்த்தனர், எதிரியின் படையிருப்பிடங்களைச் அடித்து நொறுக்கினர்.

சோவியத் பால்டிக் குடியரசுகளை விடுவிக்கும் போர்த்தந்திர நடவடிக்கை அளவில் பெரிதாக இருந்தது. இதில் 5 சேனைகளின் துருப்புகளும் (இரண்டாம் கட்டத்தில் 3வது பெலோருஷ்ய சேனை யின் 39வது, 5வது படைகள் ஈடுபடுத்தப்பட்டன) செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையும் பங்கேற்றன. இவை 1,000 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் இயங்கின. தாக்குதலின் போது

சேனைகள் மற்றும் சேனைத் தொகுதிகளின் ஒரே நேர, தொடர்ச்சி யான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

போர்த்தந்திரத் தாக்குதலின் போது ரீகா திசையிலிருந்து மேமெல் திசைக்கு பெருமளவு துருப்புகளை இடமாற்றம் செய்த தானது சோவியத் போர்க் கலையின் பெரும் சாதனையாக அமைந் தது. இத்திசையில் குறுகிய காலகட்டத்தில் 4 படைகள், இரண்டு தனி டாங்கி கோர்பஸ்கள், 1 இயந்திரப்படை கோர்பஸ், ஏராள மான பலப்படுத்தும் சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து குவித்ததானது சோவியத் துருப்புகள் வெற்றிகரமாகத் திடீர்தாக் குதல் தொடுக்க வகை செய்தது.

கடலோரத் திசையில் எதிரியின் பெரும் போர்த்தந்திரப் படைத் திரட்டை சுற்றி வளைத்ததும் சோவியத் போர்க் கலையின் சற்றும் குறையா முக்கியத்துவமுடைய சாதனையாகத் திகழ்ந்தது. இது ஒரே நேரத்தில் மேமெல் திசையில் 1வது பால்டிக் சேனையின் எல்லாச் சக்திகளாலும் வெற்றிகரமாகப் பிளந்து கொண்டு சென்று சுற்றி வளைத்துச் சென்றதன் மூலமாயும் எதிரி படைத் திரட்டின் இன்னொரு பக்கவாட்டில் 3வது, 2வது பால்டிக் சேனைகளின் நட வடிக்கைகளாலும் அடையப்பட்டது. கடலோரத் திசையில் சுற்றி வளைக்கப்பட்ட துருப்புகளை வெற்றிகரமாக ஒழித்துக் கட்ட எதிரி யைத் தரையிலும் வானிலும் தனிமைப்படுத்துவதோடு கூட கடலி லிருந்தும் முற்றிலுமாக முற்றுகையிட வேண்டுமென இந்நடவடிக்கை அனுபவம் காட்டியது.

நடவடிக்கையில் ஒரு சில குறைபாடுகளும் இருந்தன. இதனால் ''வடக்கு'' படைத் தொகுதியை முற்றிலுமாக முறியடிக்க இயல வில்லை. உதாரணமாக தாக்குதலுக்கான திட்டம் தீட்டும் போது எதிரி படைத் திரட்டைப் பிளந்து பகுதி பகுதியாக அதை ஒழித்துக் கட்டும் பொருட்டு ஆழ்ந்த நேரடித் தாக்குதல்கள் திட்டமிடப் படவில்லை. நடவடிக்கையின் ஆரம்பத்தில் தாக்கும் துருப்புகளால் நேரடி நடைமுறை மண்டலத்திலும் அருகேயிருந்த உட்பகுதிகளிலும் எதிரிக்குப் பெருத்த தோல்வியை ஏற்படுத்த முடியவில்லை. தற் காப்பின் உட்பகுதியில் தயாரிக்கப்பட்ட எல்லைகளைப் பிளந்து செல்லும் போது 2வது, 3வது பால்டிக் சேனைகளின் இராணுவ நடவடிக்கைகள் இந்த எல்லைகளைத் தொடர்ச்சியாக ''குதறும்'' வடிவத்தில் நடத்தப்பட்டதேயன்றி உட்பகுதி முழுவதும் ஒரே நேரத்தில் தாக்குவதன் மூலம் நடத்தப்படவில்லை.

பால்டிக் குடியரசுகளை விடுவிப்பதில் சோவியத் இராணுவம் பெற்ற போர் அனுபவம் யுத்தத்தின் இறுதி நடவடிக்கைகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது.



ால்டிக் குடியரசுகளில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு (1944 ாப்டெம்பர் —அக்டோபர்)

பெட்சாமோ-கீர்கெனெஸ் நடவடிக்கை
(1944 அக்டோபர் 7 — 29)

எதிரியின் ''நார்வே'' படைத் திரட்டை முறியடித்து வடக்கே சோவியத் யூனியனின் எல்லைகளைப் புனர் நாட்டுவதுதான் இந்நடவடிக்கையின் லட்சியமாகும்.

போர்த்தந்திர மூலப் பொருட்கள் நிறைந்திருந்த பிரதேசங்களை எப்படியாவது தம் கைவசம் வைத்திருக்க ஹிட்லரின் படைத் தலைமை முயன்றது. பனிக் காலத்திலும் கூட உறையாத வடக்கு கடல் துறைமுகங்கள் இங்கேதான் இருந்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பாசிச ஜெர்மானியக் கப்பற்படையால் வடக்குப் போக்குவரத்து மார்க்கங்களில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

மலைப்பாங்கான, காடுகளடர்ந்த, ஏரிகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்திருந்த கடினமான சூழ்நிலைகளில் எதிரி மூன்று ஆண்டுகளில் பெருமளவு நீண்டகால பீரங்கி சுடுமிடங்கள், மரத்தாலான பீரங்கி சுடுமிடங்களோடு கூடிய பலத்த, பல படை வரிசைகளை உடைய தற்காப்பை (150 கி. மீ. நீளத்தில்) ஏற்படுத்தியிருந்தான். 20வது ஜெர்மானிய மலையேற்றப் படையின் 19வது மலையேற்ற கோர்பஸ் தற்காப்பில் நின்றது. வடக்கு நார்வே துறைமுகங்களில் ஜெர்மானியர்களின் பெரும் கடற்படைச் சக்திகள் (1 போர்க் கப்பல், 14 நாசகாரிக் கப்பல்கள், 30க்கும் அதிகமான நீர்மூழ்கிக் கப்பல்கள்) நின்றன.

சோவியத் ஸபல்யார்யேவை விடுவிக்கும் பொருட்டு 14வது காலாட்படை மற்றும் 7வது வான் படையின் சக்திகளைக் கொண்டு வடக்கு கடற்படையின் உதவியோடு (தளபதி அட்மிரல் கலவ்கோ) எதிரியை முறியடித்து, பெட்சாமோ (பெச்சேன்கா) பிரதேசத்தை விடுவித்து, சோவியத்-நார்வே எல்லையை நோக்கி முன்னேறுமாறு கரேலிய சேனைக்கு (தளபதி மெரெட்ஸ்கோவ்) உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை கட்டளையிட்டது. நடவடிக்கையின் ஆரம்பத்தில் சோவியத் துருப்புகள் ஆள்பலத்தில் 1.8 மடங்கும் பீரங்கிகளில் 2.8 மடங்கும் டாங்கிகளில் 2.5 மடங்கும் விமானங்களில் 6.3 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன. வடக்குக் கப்பற்படை எதிரியின் பின்னணியில் இறக்குப் படையினரை தரையிறக்கி, எதிரியின் கடல் போக்குவரத்துகளைக் குலைத்து, தமது போக்குவரத்து மார்க்கங்களுக்கு வழியமைக்க வேண்டியிருந்தது.

நடவடிக்கைகளுக்கான தயாரிப்புகளின் போது மலைப்பாங்கான, காடுகளடர்ந்த, ஏரிகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்த கடினமான ஸபல்யார்யே சூழ்நிலைகளில் இயங்க வேண்டியதை கவனத்தில்

கொண்டு துருப்புகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

அக்டோபர் 7ஆம் தேதி பலத்த பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதலுக்குப் பின் சோவியத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. மூன்று நாள் சண்டைகளில் இவை 16 கி.மீ. ஆழத்திற்கு எதிரியின் தற்காப்பைப் பிளந்தன. எதிரி பின்வாங்க ஆரம்பித்தான்.

அக்டோபர் 10ஆம் தேதி இரவு மாலய வலோக்கவயா நீள்குடா பிரதேசத்தில் கடல் காலாட்படையின் 63வது பிரிகேட் அடங்கிய தரையிறக்குப் படை 30 படகுகள் மூலமாக இறக்கப்பட்டது; காலையில் சிரேத்னி தீபகற்பத்திலிருந்து கடல் காலாட்படையின் 12வது பிரிகேட் தாக்குதலில் இறங்கியது. அக்டோபர் 12 மாலையில் லிஞ்ஹமோரி துறைமுகத்தில் கடல் இறக்குப்படை தரையிறக்கப்பட்டது. இவையனைத்தும் பெட்சாமோ மீதான சோவியத் துருப்புகளின் வெற்றிகரமான தாக்குதலுக்கு துணை புரிந்தன. பெட்சாமோ அக்டோபர் 15ஆம் தேதி எதிரியிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

சோவியத் படைப்பிரிவுகள் தொடர்ந்து முன்னேறி நீக்செல் எனுமிடத்தை விடுவித்தன, அதே நேரத்தில் நார்வே பரப்பில் ஹார்னெட் எனும் குடியிருப்பு இடத்தை விடுவித்தன. அக்டோபர் 25ஆம் தேதி கடுமையான சண்டைக்குப் பின் கீர்கெனெஸ் நகரில் நுழைந்தன. நார்வே தேசியக் கொடி ஏற்றப்பட்டு இந்நகரின் சதுக்கத்தில் ஒரு பெரும் பொதுக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவரும் 10வது கார்டு துப்பாக்கிப் படை டிவிஷனின் முன்னாள் கமாண்டருமாகிய ஜெனரல் ஹுதாலவ் இதைப் பற்றி பின்வருமாறு நினைவு கூறுகிறார்: ''அங்கே கூடியிருந்த மக்கள் சோவியத் துருப்புகளை மனதார வரவேற்றனர். எங்களுடைய டிவிஷனின் சார்பாக அரசியல் பிரிவு தலைவர் கர்னல் திரகூனவ் உரையாற்றினார். அவருடைய உரை எனக்கு நன்கு நினைவில் உள்ளது.

'மதிப்பிற்குரிய கனவான்களே, எங்கள் அன்பு அண்டை நாட்டு நார்வே மக்களே! கீர்கெனெஸ் நகரமும் பின்மார்க்கின் வடக்குப் பிரதேசம் முழுவதும் விடுவிக்கப்பட்டதையொட்டி உங்களுக்கும் உங்கள் மூலம் நார்வே மக்கள் அனைவருக்கும் செஞ்சேனை தன் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இங்கிருந்துதான் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை செஞ்சேனைத் துருப்புகளையும் சோவியத் கப்பல்களையும் மூர்மன்ஸ்கையும் தாக்கி வந்தது. இன்று அதற்கு முடிவு கட்டப்பட்டு விட்டது, இன்று முதல் என்றென்றைக்குமாக கீர்கெனெஸ் வாசிகள் அமைதியாக, பாசிஸ்டுகளிடமிருந்து ஓடி ஒளியாமல், மலைகளுக்கு தப்பிச் செல்லாமல் வாழுவார்கள். ஆயிரக் கணக்கான நார்வே வாசிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர், மரண

அபாயத்திலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்...'

இவ்வுரையை மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்துச் சொன்னதுமே பல பெண்கள் 'நீங்கள் காப்பாற்றியது எங்களைத்தான்' என்று கூவிக் கொண்டே முன்னுக்கு ஓடி வந்தனர்.

உடனே கர ஒலி எழுந்தது, நன்றி தெரிவிக்கும் குரலோசைகள் கேட்டன. இதையடுத்து பாசிச எதிர்ப்பாளரகிய நகர மேயர் பதிலுரை ஆற்ற வேண்டியிருந்தது. இது அனேகமாக ஒரு கடினமான காரியமாக இருந்திருக்க வேண்டும். கடந்த கால நினைவுகளினுல் அவர் உணர்ச்சி ததும்பிய நிலையிலிருந்தார். பல்லாண்டு ஹிட்லரிச ஆக்கிரமிப்பிற்குப் பின் சதுக்கத்தில் ஏற்றப்படவிருந்த அரசுக் கொடிக் கயிற்றைத் தன் இடது கையால் பிடித்தபடி நின்றிருந்த அவரால் தன் உணர்ச்சிகளை உடனடியாகக் கட்டுப்படுத்த இயலவில்லை. இறுதியாக மேயர், நகரத்திற்காகவும் நார்வேயை விடுவிப்பதற்காகவும் தன் தாய்நாட்டு மக்களுக்கு அளித்த தன்னலங்கருதா உதவிக்காகவும் செஞ்சேனைக்கு நன்றி தெரிவித்தார். 'எம்மை விடுவித்த செஞ்சேனை வீரர்களாகிய உங்களை நார்வே வாசிகள் என்றென்றும் மறக்க மாட்டார்கள்' என்ற வாக்கியத்துடன் அவர் தன் உரையை முடித்தார். சதுக்கத்தில் கூடியிருந்தோரின் வாழ்த்து முழக்கங்களுக்கிடையே நாட்டின் கொடி மெதுவாக ஏற்றப்பட்டு, பட்டொளி வீசிப் பறந்தது. சோவியத் இசைக்குழு நார்வே தேசிய கீதத்தை இசைக்க, நகர வாசிகள் பாடினர். மும்முறை பீரங்கி ஒலித்தது...''

சோவியத் போர்வீரர்கள் வடக்கு நார்வேயின் மக்களை விடுவித்ததோடு மட்டுமின்றி ஆக்கிரமிப்பாளர்களின் எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளான நார்வே வாசிகளின் நிலையை இலகுவாக்கவும் முயன்றனர். இவர்கள் நகரங்களிலும் மற்ற குடியிருப்புப் பகுதிகளிலுமிருந்த கண்ணி வெடிகளை அகற்றினர், மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள்களை அளித்து உதவினர். செஞ்சேனையால் அப்போதுதான் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்த நார்வே சட்ட அமைச்சர் வோல்ட், ''மாலை நேரங்களில் நூற்றுக் கணக்கான சிறு நெருப்புத் தணல்களைச் சுற்றி அமர்ந்து பாடிக் கொண்டிருக்கும் போர்வீரர்களைக் காணலாம்'' என்றும் ''சர்வபொது நாசத்திலிருந்து தப்பிய ஒரு சில வீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை சோவியத் துருப்புகள் நார்வே வாசிகளுக்கு அளித்துள்ளன''[°] என்றும் லண்டனிலிருந்த தன் அரசாங்கத்திற்கு அறிவித்தார்.

1945 ஜூன் 30இல் ஒஸ்லோவில் ''நேச நாட்டவரின் தினம்''

° வெளிநாட்டுக் கொள்கை ஆவணக் காப்பகம், தொகுப்பு 116; பட்டியல் 27, பத்திரம் 19, தாள்கள் 68—69.

கொண்டாடப்பட்ட போது நார்வே அரசர் ஏழாவது ஹோக்கன் பின்வருமாறு கூறினர்: ''செஞ்சேனையின் வீரத்தையும் தைரியத்தையும் இது ஜெர்மானியர்களின் மீது தொடுத்த பலத்த தாக்குதல்களையும் நார்வே மக்கள் உற்சாகத்தோடு கவனித்து வந்தனர்... கிழக்குப் போர்முனையில் செஞ்சேனை யுத்தத்தை வென்றது. இவ்வெற்றிதான் வடக்கே நார்வேயின் பரப்பை செஞ்சேனை விடுவிப்பதற்கு இட்டுச் சென்றது... நார்வே மக்கள் செஞ்சேனையைத் தமது விடுதலையாளனாக ஏற்றுக் கொண்டுள்ளனர்''[*].

வடக்கு நார்வேயினுள் காலடி எடுத்து வைத்த சோவியத் துருப்புகளின் நல்லெண்ணத்தைப் பற்றி அந்நாட்களில் அயல் நாட்டுப் பத்திரிகைகளும் எழுதின. இதோ உதாரணமாக ''கேட்டெபோர்க்ஸ்—போஸ்தென்'' என்ற ஸ்வீடன் பத்திரிகை 1944 டிசம்பர் 6ஆம் தேதி பின்வருமாறு எழுதியது: ''ருஷ்யர்கள், வடக்கு நார்வே மக்களுடன் மிக அன்பாக பழகுகின்றனர் என்று சமீபத்தில் ஸ்வீடனுக்கு வந்தவரும் பாசிச எதிர்ப்பு இயக்கத்தில் முக்கியப் பங்கு வகிப்பவருமான ஒரு நார்வே வாசி கூறுகிறார். சப்ளைகள் சீரமைக்கப்படாத ஆரம்ப நாட்களில் ருஷ்யத் துருப்புகள் தமது கையிருப்புகளிலிருந்து மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கின, பொதுவாக இயன்ற வகையில் எல்லாம் உதவின. கீர்கெனெஸில் பெரும்பாலான கட்டிடங்கள் ஜெர்மானியர்களால் அழிக்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த வீடுகளை ருஷ்யர்கள் மக்களுக்கு அளித்தனர். ருஷ்யர்களுக்கும் நார்வே வாசிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் விசேஷ அன்பு தென்படுகிறது. ருஷ்யர்கள் உண்மையான விடுதலை வீரர்களாக வந்துள்ளனர், இவர்களை பெரும் உற்சாகத்துடன் சந்திக்கின்றனர்''.

பெட்சாமோ-கீர்கெனெஸ் நடவடிக்கையின் விளைவால் எதிரியின் தரப்பில் 30,000 பேர்கள் கொல்லப்பட்டனர். வடக்குக் கப்பற்படை 156 எதிரிக் கப்பல்களையும் படகுகளையும் மூழ்கடித்தது. பருவநிலை மோசமாயிருந்தும் கூட சோவியத் விமானப்படை 10,600க்கும் கூடுதலான பறத்தல்களை நடத்தி 125 பாசிச ஜெர்மானிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. சோவியத் தரப்பில் 15,773 நபர்கள் (நார்வே பரப்பில் 2,122 பேர்கள்) கொல்லப்பட்டனர், காயமடைந்தனர். தாக்கியத் துருப்புகளின் தைரியமான, உறுதியான நடவடிக்கைகள், தரைப்படைக்கும் விமானப்படை, கப்பற்படைக்கும் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பு மற்றும் பாதைகள் இல்லா சூழ்நிலைகளில் திறமையாக முன்னேறும் தன்மை ஆகியன இந்நடவடிக்கையின் சிறப்பு அம்சங்களாகும். இராணுவ

[*] இஸ்வேஸ்தியா, 1945 ஜூலை 5.

நடவடிக்கை நடைபெற்ற இடத்தின் விசேஷ அம்சம் இறக்குப் படையினரை பயன்படுத்துவதை அவசியமாக்கியது. இப்படையிறக்க மானது தாக்குதல் வேகங்களை அதிகப்படுத்தவும் எதிரியை விரைவாக முறியடிக்கவும் உதவியது.

5. மேற்கு ஐரோப்பாவிலும் இத்தாலியிலும் நேச நாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள்

நார்மான்டி படையிறக்க நடவடிக்கை

யுத்தத்தின் முதல் ஆண்டுகளிலேயே ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது பெரும் இராணுவ-அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும். ஆனால் 1941ஆம் ஆண்டிலேயோ, 1942ஆம் ஆண்டிலேயோ அல்லது சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் ஜெர்மனி தனது அனுகூலமான நிலையை இழந்து விட்ட 1943ஆம் ஆண்டிலேயோ கூட நேச நாடுகள் இரண்டாம் போர்முனையை ஆரம்பிக்கவில்லை. யுத்தம் இறுதிக் கட்டத்தில் நுழைந்த பின்தான் லா மான்ஷ் ஜலசந்தியைக் கடந்து வடக்கு பிரான்சின் கரையில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் துருப்புகள் இறக்கப்பட்டன. இது 1944 ஜூன் 6ஆம் தேதி நடந்தது.

இந்நடவடிக்கை நீண்ட காலமாகத் தயாரிக்கப்பட்டு நேச நாடுகளுக்கு அனுகூலமான சூழ்நிலைகளில் நடத்தப்பட்டது, ஏனெனில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பிரதான சக்திகள் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் இருந்ததால் பாசிச படைத் தலைமையால் நேச நாட்டுத் துருப்புகளுக்கு எதிராக குறைவான சக்திகளை மட்டுமே நிறுத்த முடிந்தது.

1944ஆம் ஆண்டின் துவக்கத்தில் பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் 42 காலாட்படை, 9 டாங்கி மற்றும் 4 விமான டிவிஷன்கள் உட்பட 58 பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் இருந்தன. இவை "B", "G" படைத் தொகுதிகளாக ஒன்றிணைந்து "மேற்கு" படைத் தலைமையின் கீழிருந்தன. இது தவிர "மேற்கு" படைத் தலைமையின் வசம் 4 டிவிஷன்கள் சேம இருப்பாக இருந்தன. இத்துருப்புகளின் போர் வன்மை குறைவானதாகத்தான் இருந்தது. பல யூனிட்டுகள் உருவாகும் நிலையில் அல்லது முழுமையடையும் நிலையிலிருந்தன; இவற்றில் பாதிப் பகுதியிடம் (33 டிவிஷன்கள்) குறைவான போக்குவரத்து சாதனங்கள் இருந்ததால் இவை "நிலையானவையாக" கருதப்பட்டன. டிவிஷன்களின் முழுமையின்மை 20—30 சதவிகிதமாக இருந்தது. பெரும்பாலான டாங்கி டிவிஷன்களில் சாதாரணமாக இருக்க வேண்டிய 200

டாங்கிகளுக்குப் பதில் 90—130 டாங்கிகள்தான் இருந்தன. பாசிஸ்டு ஜெனரல்களே மேற்கே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் இந்நிலையிலிருந்ததை ஊர்ஜிதப்படுத்துகின்றனர். உதாரணமாய் ''மேற்கு'' படைத் தலைமையகத் தலைவன் ஜெனரல் வெஸ்ட்ஃபால் பின்வருமாறு எழுதினான்: ''படைகள் இறக்கப்பட்டத் தருணத்திலேயே மேற்கேயிருந்த ஜெர்மானியத் துருப்புகளின் போர் வன்மை, கிழக்கேயும் இத்தாலியிலும் இயங்கியத் துருப்புகளின் போர் வன்மையைக் காட்டிலும் பன்மடங்கு குறைவானதாக இருந்தது என்பது எல்லோரும் அறிந்ததாக இருந்தது... பிரான்சிலிருந்த தரைப்படை யூனிட்டுகளில் கணிசமான பகுதிக்கு—இவைதான் ''நிலையான டிவிஷன்கள்'' என்றழைக்கப்பட்டன—போதுமான அளவு ஆயுதத் தளவாடங்களும் போக்குவரத்து சாதனங்களும் இருக்கவில்லை, இவற்றிலிருந்த போர்வீரர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருந்தனர்''*.

மேற்கில் இருந்த 3வது ஜெர்மானிய வான் படையில் சுமாராய் 500 விமானங்களிருந்த போதிலும் இவற்றில் 160 விமானங்கள் மட்டுமே போரிடும் நிலையிலிருந்தன**.

''மேற்கு'' படைத் தொகுதியின் கடற்படைச் சக்திகள் ஜூன் 6 வாக்கில் பெரிதும் அட்லாண்டிக் கரையோரத்தில் (49 நீர்மூழ்கிக் கப்பல்கள், 5 நாசகாரிக் கப்பல்கள், கண்ணி வெடிக் கப்பல், 59 ரோந்துக் கப்பல்கள், 146 இழுவைப் படகுகள்) நின்றன. லா மான்ஷ் மற்றும் பா டெ காலே ஜலசந்திகளில் இந்நேரத்தில் பாசிச படைத் தலைமையிடம் 5 கண்ணி வெடிக் கப்பல்கள், 34 டார்பேடோ படகுகள், 163 இழுவைப் படகுகள், 57 ரோந்துக் கப்பல்கள் மற்றும் 42 பீரங்கித் தோணிகள் ஆகியன இருந்தன.

வடக்கு பிரான்ஸ் கரையோரத்தின் படையிறக்கு எதிர்ப்பு தற்காப்பு பலவீனமானதாயிருந்தது. இது ஆதார நிலைய முறையை உள்ளடக்கியிருந்தது; இந்நிலையங்களுக்கிடையில் பீரங்கித் தொடர்பு இருக்கவில்லை. படையிறக்கத்திற்கு ஏற்ற இடங்களில் கண்ணி வெடிகளும் முள் கம்பிகளும் பொறி வளைகளும் பூமியடி குண்டுகளும் அமைக்கப்பட்டன. நீண்ட கால பீரங்கி சுடுமிடங்கள் ஒரு சில திசைகளில் மட்டுமே இருந்தன. எனவே தாண்டிச் செல்ல முடியாத எவ்வித ''அட்லாண்டிக் மதிலும்'' நிலவவில்லை. தன்னுடைய தற்காப்பின் பலவீனத்தை மூடிமறைப்பதற்காகத்தான் இதைப்

---

* S. Westphal, *Heer in Fesseln. Aus den Papieren des Stabschefs von Rommel, Kesselring und Rundstedt*, Bonn, 1952, S. 264.

** *Der Große Atlas zum II.*, Weltkrieg, S. 264. மற்ற விவரங்களின் படி 3வது வான் படையில் சண்டையில் இறங்கத் தயாரான 350 விமானங்கள் இருந்தன.

பற்றிய கட்டுக்கதை பாசிஸ்டுகளால் ஏற்படுத்தப்பட்டது, மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதை இழுத்தடிக்கும் கொள்கையை நியாயப்படுத்துவதற்காகவே இது அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பரப்பப்பட்டது.

மேற்கிலிருந்த பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பிரதான தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் ருண்டிஷ்டேட் படையிறக்கத்திற்கு எதிரான தன்னுடைய தற்காப்பை பின்வருமாறு மதிப்பிட்டான்: '' 'அட்லாண்டிக் மதில்' என்பது ஜெர்மானியர்களையும் எதிரியையும் குழப்புவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு மாயை... தாண்டிச் செல்ல முடியாத தற்காப்பைப் பற்றிய கட்டுக் கதைகளைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு கோபம் வரும். இதை மதில் என்றழைப்பது முட்டாள்தனமாயிருந்தது. இங்கே ஹிட்லர் வந்ததே கிடையாது, உண்மையில் இது எப்படிப்பட்டது என்பது ஹிட்லருக்குத் தெரியவே தெரியாது''*.

டெஹ்ரான் மகாநாடு முடிவடைந்ததுமே 1943ஆம் ஆண்டு இறுதியிலிருந்து நார்மான்டியினுள் புகவிருந்த பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளின் தயாரிப்பு ஆரம்பமாகியது. வேர்மஹ்டின் பிரதானச் சக்திகள் குவிக்கப்பட்டிருந்த சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் முக்கியக் கவனம் திரும்பியிருந்த சூழ்நிலைகளில் இத்தயாரிப்பு நடந்தது. இரண்டாவது உலக யுத்தத்தைப் பற்றிய பல் தொகுதி பிரிட்டிஷ் வரலாற்று நூலில் இது குறித்து பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: ''சாதாரணமாக ஆக்கிரமிப்பு அரசிற்கு மட்டுமே கிடைக்கக் கூடிய ஒரு மேம்பாடான நிலை நேச நாடுகளுக்கு இருந்தது. நடவடிக்கையின் சிக்கலான தன்மைக்கு ஏற்றபடி பரிபூரணமாயும் நன்கு சிந்தித்தும் நடவடிக்கைக்குத் தயாராவதற்குப் போதுமான நேரம் நேச நாடுகளுக்கு இருந்தது. முன்முயற்சியும் படையிறக்கத் திற்கான நேரத்தையும் இடத்தையும் சுதந்திரமாகத் நேர்ந்தெடுக் கும் வாய்ப்பும் நேச நாடுகளின் தரப்பிலிருந்தன''**.

நார்மான்டிக் கரையில் படைகளை இறக்கி, தாக்குமுனையைக் கைப்பற்றி, அவசியமான சக்திகளையும் பொருளாயதச் சாதனங் களையும் சேர்த்து பின் வட கிழக்கு பிரான்சைப் பிடிப்பதற்காகப் தாக்குதலைத் தொடுப்பது என்று ''ஓவெர்லோட்'' (இதுதான் நடவடிக்கையின் அடையாளப் பெயராகும்) திட்டமிட்டது. இத் தகையதொரு திட்டம் திடீரென இதைச் செய்யும் வாய்ப்பை அளித்தது, ஏனெனில் நார்மான்டியில் பெரும் சக்திகளை இறக்குவது

---

* B. Liddel Hart, *The Other Side of the Hill*, London, 1973, p. 393.

** L. Ellis, *Victory in the West*, Vol. I, London, 1948.

சாத்தியமில்லையென பாசிசப் படைத் தலைமை கருதியது. பா டெ காலேயின் குறுக்களவு 32 கி. மீ. மட்டுமே இருந்ததால் நேச நாட்டினர் இங்கேதான் படையிறக்கத்தை நிறைவேற்றுவார்களென அது நம்பியது. எனவே இங்கே பாசிஸ்டுகள் பெரும் சக்திகளை நிறுத்தியிருந்தனர், பொறியியல் ரீதியாகத் தற்காப்பைச் சிறப்பாக அமைத்திருந்தனர்.

லா மான்ஷ் கரையோரத்தில் படையிறக்கத்திற்கு திட்டமிட்ட நேச நாட்டுப் படைத் தலைமை, அனுகூலமான அம்சங்களோடு (ஸேனு குறுங்குடாவின் மணற்பாங்கான சமப்பரப்பு, கரையோரத்தை பாரிசுடன் இணைக்கும் ஏராளமான சாலைகள், இருப்புப் பாதைகள்) கூட எதிர்மறையான அம்சங்களையும் (வளைகுடாவின் கணிசமான குறுக்களவு—180 கி. மீ.—வசதிகளற்ற கரை, 7.5 மீ. வரையிலான ஊசலாட்டமுடைய நீர்ப்பெருக்கு, 3 முடிச்சு வரை வேகமுடைய நீர் ஏற்ற வடிப்பு போக்குகள்) கணக்கில் கொண்டது.

நார்மான்டியில் படையிறக்கத்திற்காக நேச நாடுகள் பிரிட்டனில் 39 டிவிஷன்கள், 12 தனி பிரிகேடுகள், ''கமான்டொஸ்'' மற்றும் ''ரேய்ன்ஜெர்ஸ்'' எனும் 10 படையணிகள் முதலியவற்றைக் குவித்திருந்தன. விண்ணிலிருந்து 10,859 போர் விமானங்களும் 2,316 போக்குவரத்து விமானங்களும் 2,591 கிளைடர் விமானங்களும் படையிறக்கத்திற்கு வகை செய்ய வேண்டும்*. கடலிலிருந்து 1,213 போர்க் கப்பல்களும் 4,126 படையிறக்குக் கப்பல்களும் சாதனங்களும் 736 துணைக் கப்பல்களும் 864 வர்த்தகக் கப்பல்களும் இதில் பங்கேற்க வேண்டும்**. இந்நடவடிக்கையில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் துருப்புகளைத் தவிர கானடா, பிரான்ஸ், செக்கோஸ்லொவாக்கியா மற்றும் போலந்து நாடுகளின் யூனிட்டுகளும் கலந்து கொண்டன. மொத்தமாக நேச நாடுகளின் பயணத் துருப்புகளில் 28,76,439 நபர்கள் இருந்தனர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் (15,33,000 நபர்கள்) அமெரிக்கர்கள். எல்லாத் துருப்புகளும் தேவையான ஆட்பலத்தையும் முழுமையான ஆயுதத் தளவாடங்களையும் பெற்றிருந்தன***. பல படைப் பிரிவுகளுக்கும் யூனிட்டுகளுக்கும் வட ஆப்பிரிக்காவிலும் இத்தாலியிலும் போரிட்ட அனுபவம் இருந்தது. பயணப் படைச் சக்திகளுக்கு

---

* D. Eisenhower, *Crusade in Europe*, New York, 1948, p. 53.

** W. Tute and others, *D.-Day*, London, 1974, p. 100.

L. Ellis, *Victory in the West*, Vol. I, p. 507.

*** அமெரிக்க காலாட்படை டிவிஷனில் 14,200—16,700 நபர்களும், பிரிட்டிஷ் காலாட்படையில் 19,000—21,000 நபர்களும், கானடா காலாட்படையில் 14,800—18,900 நபர்களும் இருந்தனர். (Public Record Office (பின்பு PRO), Premier S/54, p. 509).

வலிமையூட்டுவதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டில் இன்னமும் 41 டிவிஷன்கள் இருந்தன.

நேச நாட்டு பயணப் படைகளின் பிரதான படைத் தளபதியாக ஜெனரல் ஐசன்ஹோவர் இருந்தார்; இவரது துணைவர்களாக தரைப்படைக்கு ஜெனரல் மொன்ட்கமேரியும் கடற்படைச் சக்திகளுக்கு அட்மிரல் ராம்ஸேயும் வான்படைக்கு மார்ஷல் தேட்டரும் இருந்தனர்.

80 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் ஸேனு குறுங்குடாவின் கரையோரத்தில் கடல் மற்றும் வான் இறக்குப்படையினரை இறக்கி, 20வது நாளன்று 100 கி. மீ. நீளமும் 100 – 110 கி. மீ. ஆழமும் உள்ள தாக்குமுனையைக் கைப்பற்ற திட்டமிடப் பட்டது.

படையிறக்குப் பிரதேசமானது மேற்கு (அமெரிக்க) மண்டலம் என்றும் கிழக்கு (பிரிட்டிஷ்) மண்டலம் என்றும் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு மண்டலம் இரு பகுதிகளையும் கிழக்கு மண்டலம் மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரே நேரத்தில் பலப்படுத்தப்பட்ட ஒரு காலாட்படை டிவிஷன் இறக்கப்பட்டது.

நடவடிக்கைக்கான துருப்புகளின் அணிவகுப்பு இரண்டு படை வரிசைகளை உள்ளடக்கியிருந்தது. முதல் படை வரிசையில் 1வது அமெரிக்க, 2வது பிரிட்டிஷ் படைகளும் இரண்டாவது படை வரிசையில் 1வது கானடா படையும் நின்றன.

கடல் படையிறக்கத்திற்கு முன் படையிறக்குப் பிரதேசத்தின் பக்கவாட்டுப் பகுதிகளில் கரையிலிருந்து 10 – 16 கி. மீ. ஆழத்திற்கு வான் இறக்குப்படை டிவிஷன்களை (2 அமெரிக்க, 1 பிரிட்டிஷ் டிவிஷன்கள்) தரையிறக்க வேண்டியிருந்தது. சாலை மையங்கள், பாலங்கள், ஆறுகளைக் கடக்கும் இடங்களைக் கைப்பற்றி எதிரியின் சேமப் படைகள் கரையை அணுகாதவாறு தடுப்பதும்தான் இதன் நோக்கமாயிருந்தது.

கடற்படைச் சக்திகள் இரண்டு ஸ்குவாட்ரன்களாக இருந்தன. இவற்றில் ஒவ்வொன்றும் தன்னுடைய மண்டலத்தில் படையிறக்கத்திற்கு ஆதரவளித்தது. ஒவ்வொரு டிவிஷனையும் இறக்குவதற்காகத் தனியான கடற்படை யூனிட்டுகள் தோற்றுவிக்கப்பட்டன.

பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் படையிறக்கத்திற்கு 90 நாட்கள் முன்னதாக துவங்கியது. வடக்கு பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்திலிருந்த தொழிற்துறை மற்றும் தற்காப்பு அமைப்புகள் விண்ணிலிருந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன. படையிறக்க நாள் நெருங்க நெருங்க நேச நாட்டு விமானப்படை

யின் குண்டு வீச்சுகள் அதிகமாயின, வலுத்தன. மே இறுதியில் வடக்கு பிரான்சில் இருப்புப் பாதை போக்குவரத்து முழுவதும் சீர்குலைக்கப்பட்டது, ஸேஞ ஆற்று முகத்துவாரத்திலிருந்து பாரிஸ் வரை ஆற்றுப் பாலங்கள் எல்லாம் தகர்க்கப்பட்டன, ஜெர்மானியர் களின் விமானத் தளங்களுக்கும் ராடார் சாதனங்களுக்கும் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. இவையனைத்தும் நேச நாட்டுப் படை யிறக்கத்தை முறியடிக்கையில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளைப் பெரிதும் பாதித்தன.

திடீரென தாக்குதலைத் தொடுக்கும் பொருட்டு நேச நாட்டுப் படைத் தலைமை உருமாற்றத்திற்காகவும் எதிரிக்குத் தவறான தகவலை அளிக்கும் பொருட்டும் பரவலாகப் பல்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. உதாரணமாக திட்டவட்டமான எண்ணிக்கையில் மட்டுமே ஆட்கள் நடவடிக்கையைத் திட்டமிடு வதில் ஈடுபடுத்தப்பட்டனர், உண்மையான படையிறக்கப் பிரதேசம் குறித்து எதிரியைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்காக பா டெ காலே வழியாகப் புகுவது மாதிரி படையிறக்க ஏற்பாடு நடந்தது. இந் நோக்கத்தோடு படையிறக்கம் நடைபெறவிருந்த நார்மான்டி கரையை விட அதிகமாக பா டெ காலேயின் கரையில் நேச நாட்டு விமானப்படை தாக்குதல்களை நடத்தியது, பிரிட்டனின் தென் கிழக்குத் துறைமுகங்களில் படையிறக்கக் கப்பல்களின் மாதிரிகள் கட்டப்பட்டன, பிரெஞ்சுக் கரையிலிருந்து பார்க்கத்தக்கப் பொய் யான படைக் குவிப்பு வட்டங்கள் அமைக்கப்பட்டன.

பிரிட்டனில் இருந்த ராஜதந்திர பிரதிநிதிகள் (அமெரிக்க, சோவியத் பிரதிநிதிகளைத் தவிர) தம் நாட்டுடன் கண்காணிப்பற்ற கடிதத் தொடர்பு கொள்வதும் இவர்கள் பிரிட்டனை விட்டு வெளி யேறுவதும் தடை செய்யப்பட்டிருந்தன.

படையிறக்கத்திற்கு முந்திய நாளன்று இரவு பிரிட்டிஷ் கடற் படையின் 18 கப்பல்கள் குண்டு வீச்சு விமானங்களின் ஆதரவோடு காவ்ர், புலோன், ஷெர்பூர் ஆகியவற்றிற்கு வட கிழக்கே ஏமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டன. கரையோரமாக கப்பல்கள் நடமாடிக் கொண்டிருந்த போது விமானங்கள் உலோகத் தகடுகளை வீசிக் கொண்டிருந்தன; பா டெ காலே ஜலசந்தி பிரதேசத்தில் புகுவதற்காக நேச நாட்டுத் துருப்புகள் பெருமளவில் குவிக்கப் படுவதாக ஜெர்மானிய ராடார் நிலையங்கள் இதைப் பதிவு செய் தன.

பரிபூரண பொருளாயத-தொழில்நுட்ப சப்ளைக்கு வகை செய்தது ''ஓவெர்லோட்'' நடவடிக்கைத் தயாரிப்பின் சிறப்பு அம்சமாகும். உதாரணமாக இரண்டு செயற்கைத் துறைமுகங்கள் தோற்று விக்கப்பட்டு, ஜலசந்தி, வழியாக எடுத்துச் செல்லப்பட்டு பின்னல்

ஸேனு குறுங்குடா கரையில் ஒன்றுசேர்க்கப்பட்டன. இது தவிர 70க்கும் மேற்பட்ட பழைய கப்பல்கள், படகுகளை மூழ்கடித்து 5 செயற்கை கப்பற்துறைகளை ஏற்படுத்தவும் ஜலசந்தியின் அடிப் பகுதி மூலம் எண்ணெய் குழாய்களை அமைக்கவும் திட்டமிடப் பட்டது.

எல்லாச் சரக்குகளும் கப்பல்களில் ஏற்றுவதற்கு முற்றிலுமாகத் தயார்படுத்தப்பட்டு காற்று புகாதவாறு அடைக்கப்பட்டிருந்தன.

படையிறக்கத்திற்காகத் துருப்புகள் விசேஷ முகாம்களில் தயார் படுத்தப்பட்டன. ஏராளமான பயிற்சிகளின் போது கப்பல்களில் ஏறுவதற்கும் வசதிகளற்ற கரையில் இறங்கவும், ஆதார நிலையங் களின் மீது திடீர் தாக்குதலைத் தொடுக்கவும் மற்ற வகைப் படை பிரிவுகளுடன் ஒத்திசைந்து செயல்படவும் பயிற்சியளிக்கப்பட்டது.

நார்மான்டி நடவடிக்கையின் ஆரம்பத்தில் சக்திகளின் சமன்நிலை பின்வரும் பட்டியலில் காட்டப்பட்டுள்ளது. °

சாதனங்களும் சக்திகளும்	நேச நாட்டு பயணப் படைச் சக்திகள்	பாசிச ஜெர் மானியத் துருப்புகள்	விகிதம்
1. காலாட்படையின் எண்ணிக்கை	16,00,000	5,26,000	3.0:1
2. டாங்கிகளும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் (திடீர் தாக்குதல் பீரங்கிகள்)	6,000	2,000	3.0:1
3. சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள்	15,000	6,700	2.2:1
4. போர் விமானங்கள்	10,859	160	61.4:1
5. பிரதான ரக போர்க் கப்பல்கள்	114	54	2.1:1

நேச நாட்டு பயணப் படைச் சக்திகளில் நார்மான்டியில் இறக்குவதற்காக பிரிட்டனிலிருந்த துருப்புகள் அடங்கும். பாசிச ஜெர்மானியச் சக்திகளில் "B" படைத் தொகுதி, "மேற்கு" படைத் தலைமையின் சேமப் படைகள், 1வது படை மற்றும் "G" படைத் தொகுதியின் டாங்கி டிவிஷன்கள் முதலியன அடங்கும்.

பட்டியல் பின்வரும் நூல்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது: *The Army Almanac*, Washington, 1950, pp. 268, 276, 279; D. Eisenhower, *Crusade in Europe*, p. 53; L. Ellis, *Victory in the West*, Vol. I, S. 501—566; S. Roskill, *The War at Sea. 1939—1945*, Vol. III, pt. II, London, 1961, pp. 16, 18, 19.

1944 ஜூன் 5ஆம் தேதி பிரிட்டனின் தென் கரையோரத்தில் நேச நாட்டு பயணச் சக்திகளைச் சேர்ந்த 2,87,000 நபர்கள் இருந்தனர். காலையில் ஏறிய இடங்களிலிருந்து புறப்பட்ட இவர்கள் நாள் முடிவில் பிரிட்டனின் தென் கரையிலிருந்து 50—60 கி. மீ. தொலைவிலிருந்த ஆரம்ப வட்டத்திற்கு வந்தனர். இங்கிருந்து இறக்குப்படை அணிகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட பத்து மார்க்கங்களில் ஸேனு குறுங்குடாவை நோக்கிச் சென்றன. இறக்குப்படையினரோடு கப்பல்கள் செல்ல இழுவைப் படகுகளும் காவல் கப்பல்களும் பாதுகாத்து வகை செய்தன. ஜூன் 6ஆம் தேதி பொழுது புலர்ந்ததிலிருந்து விண்ணில் சண்டை விமானங்களும் பக்கவாட்டுப் பகுதிகளில் கப்பல் எதிர்ப்பு தற்காப்பின் பெரும் சக்திகளும் இறக்குப்படை அணிகளை மூடிப் பாதுகாத்தன. பாசிஸ்டுகளிடம் போதுமான அக்கறை இல்லாமையும் அவர்களின் திருப்தியற்ற வேவு பார்த்தலும் இறக்குப்படையினர் தங்கு தடையின்றி ஜலசந்தியைக் கடக்க உதவின. லா மான்ஷ் வழியாக வடக்கு பிரான்சிலிருந்த படையிறக்கப் பிரதேசத்திற்கு 5,000 நேச நாட்டுக் கப்பல்கள் கடக்கவிருப்பதைப் பற்றி ஜெர்மானிய உயர்மட்ட படைத் தலைமைக்கோ, ''மேற்கு'' படைத் தலைமையகத்திற்கோ அல்லது ரோம்மலுக்கோ, ருன்டிஷ்டேட்டுக்கோ ஒருவருக்குமே தெரியாது* என்று வேர்மஹ்ட் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையின் நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கான தலைமையகத்தின் துணைத் தலைவன் வர்லிமோன்ட் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினன்.

ஜூன் 6ஆம் தேதி இரவு சுமார் 2 மணிக்கு, படையிறக்கத்தின் முன்னணைப் பொழுதில் வான் இறக்குப்படையினரின் படையிறக்கம் துவங்கியது. இதில் அமெரிக்க வான் படையைச் சேர்ந்த 1,662 விமானங்களும் 512 கிளைடர் விமானங்களும் பிரிட்டிஷ் வான் படையைச் சேர்ந்த 733 விமானங்களும் 335 கிளைடர் விமானங்களும் பங்கேற்றன. எதிரி எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தாலும் கூட வான் படையிறக்கம் முற்றிலும் ஒழுங்காக நடைபெறவில்லை. 101வது அமெரிக்க வான் இறக்குப்படை டிவிஷன், குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து 40 கி. மீ. வரை சிதறிப் போயிருந்தது, தரையிறங்கும் போது தன் இராணுவ மற்றும் ஆயுத தளவாடங்களில் பாதிக்கும் மேற்பட்டதை இழந்தது. 6வது பிரிட்டிஷ் வான் இறக்குப்படை டிவிஷன் இறங்கி மூன்று மணி நேரங்கழித்து பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தாக்குதலுக்கு

* W. Warlinmont, *Im Hauptgucortier der Deutschen Wermacht. 1939—1945*, Bonn, 1962, S. 452.

உள்ளானது. மொத்தத்தில் வான் இறக்குப்படையின் துருப்புகள் திட்டமிட்ட கடமைகளை நிறைவேற்றி, கடல் இறக்குப்படை இறங்கவும் தாக்குமுனையைக் கைப்பற்றவும் கணிசமான உதவியளித்தன.

ஜூன் 6ஆம் தேதி காலை பீரங்கிப்படை மற்றும் விமானப் படையின் பலத்த பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின்—இதில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தற்காப்பு அடக்கப்பட்டது—கடல் இறக்குப்படையின் முதல் படை வரிசைப் படையிறக்கம் ஆரம்பமாகியது. இக்கட்டத்திலும் எல்லாமே சுமூகமாக இருக்கவில்லை: இறக்குப்படைக் கப்பல்கள் நிலைநாட்டப்பட்ட இராணுவ ஒழுங்கு முறையை கடைபிடிக்கவில்லை, படகுகளும் தானியங்கித் தோணிகளும் ஒன்றோடொன்று மோதின, இவற்றில் சில கண்ணிவெடிகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட மார்க்கங்களிலிருந்து விலகி கண்ணி வெடிகளில் பட்டு வெடித்தன, கண்ணி வெடி அகற்றும் குழுக்களால் படையிறக்க இடங்களில் இருந்த தடைகளை முற்றிலுமாக ஒழித்துக் கட்ட இயலவில்லை. மேற்கூறிய தடைகளும் மற்ற பல இடர்ப்பாடுகளும் இருந்த போதிலும் திடீர் தாக்குதலும் விண்ணிலிருந்த ஆதிக்கமும் எண்ணிக்கை ரீதியாக விஞ்சியிருந்ததும் கிட்டத்தட்ட தடையின்றி கரையிறங்க நேச நாடுகளுக்கு உதவின.

நாளின் இறுதியில் நார்மான்டி கரையில் 1,56,000க்கும் அதிகமானோர் இறக்கப்பட்டனர், 900 டாங்கிகள், கவச மோட்டார்கள், 600 பீரங்கிகள் ஏராளமான போக்குவரத்து சாதனங்கள் கொண்டு செல்லப்பட்டன.

ஜூன் 12ஆம் தேதி வாக்கில் நேச நாட்டுத் துருப்புகள் 80 கி. மீ. அகலமும் 13—18 கி. மீ. நீளமும் உடைய தாக்குமுனையைக் கைப்பற்றின. ஜூன் 30ஆம் தேதி வாக்கில் இதன் நீளம் 100 கி. மீ. ஆகவும் ஆழம் 20—40 கி. மீ. ஆகவும் அதிகப்படுத்தப்பட்டது. நார்மான்டியில் இருந்த பயணப் படைகளின் மொத்த எண்ணிக்கை 8,75,000க்கும் அதிகமாயிருந்தது. இவற்றிற்காக 1,48,803 போக்குவரத்து வாகனங்களும் 5,70,505 டன் சரக்குகளும் அனுப்பப்பட்டன. தாக்குமுனையில் போடப்பட்ட 23 விமானத் தளங்களில் நேச நாட்டவரின் விமானப்படையின் கணிசமான பகுதி இறங்கியது.

இத்தருணத்தில் 18 பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் நேச நாட்டவரை எதிர்த்து நின்றன. இந்த டிவிஷன்கள் முந்தைய சண்டைகளில் பேரிழப்பைச் சந்தித்திருந்தன. நேச நாட்டவருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கேற்ப 1944ஆம் ஆண்டு ஜூனில் சோவியத் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரம்மாண்டமான பெலோருஷ்ய நடவடிக்கைதான், ஹிட்லர் மேற்கே



நார்மான்டி படையிறக்க நடவடிக்கை (1944 ஜூன் 6-30)

தன் துருப்புகளைப் பலப்படுத்த இடையூறாக இருந்த முக்கியக் காரணமாகும். இந்நேரத்தில் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையால் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையிலிருந்து எவ்வித யூனிட்டுகளையும் எடுக்க முடியாது போனது மட்டுமல்ல, மற்ற போர்முனைகளிலிருந்து தனது துருப்புகளைக் கூடுதலாக அங்கே அனுப்பும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரபல அமெரிக்க இராஜ தந்திரியும் **அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் மாற்றம்** என்ற நூலின் ஆசிரியருமான சா. போலன், சோவியத் யூனியன் தன் உறுதிமொழியை சரிவர நிறைவேற்றியது என்று குறிப்பிட்டார். ''சோவியத் நாடு ஒப்பந்தத்திற்கேற்ப தனது உறுதிமொழிகளை நேர்மையாக நிறைவேற்றி, நேச நாட்டவருக்கு உண்மையான உதவியளித்த தருணத்தில் தாக்குதலைத் துவக்கியது''* என்று அவர் எழுதினார்.

கடன்டன் தீபகற்பத்தில் அமெரிக்கத் துருப்புகள் போரிட்டுக்

* Ch. Bohlen, *The Transformation of American Foreign Policy,* New York, 1969, p. 26.

கொண்டிருந்த போது பிரிட்டிஷ் துருப்புகள் கான் நகரைக் கைப் பற்ற முயன்று தோல்வியுற்றன. ஜூலை 21ஆம் தேதிதான் விமானப் படை, பீரங்கிப்படையின் உதவியோடு இவற்றால் நகரைப் பிடிக்க முடிந்தது.

ஜூலை 25 வாக்கில் நேச நாட்டு பயணப் படைகள் சான்-லோ, கமோன், கான் ஆகியவற்றிற்கு தெற்கேயிருந்த எல்லையை அடைந் தன. நார்மான்டிப் படையிறக்க நடவடிக்கை நிறைவு பெற்றது. ஐரோப்பியக் கண்டத்தில் மேற்கொண்டு சமர்கள் நடக்க இருந் தன.

இதுதான் இரண்டாவது உலக யுத்தத்தின் மிகப் பெரும் படையிறக்க நடவடிக்கையாக விளங்கியது. இதில் திடீர் படை யிறக்கம், முப்படைகளின் திட்டவட்டமான பரஸ்பர செயலாக்கம், ஏராளமான துருப்புகள், இராணுவத் தளவாடங்கள், பல்வேறு சரக்குகள் ஆகியவற்றை விரைவாகக் கடல் மூலம் அனுப்புவது போன்ற சிக்கலான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

''பிரம்மாண்டமான அளவுகளில் சிந்திக்கப்பட்ட படையிறக்கம் முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டுள்ளது தெரிகிறது. அளவு, பரவ லான திட்டம், நிறைவேற்றத் திறமை ஆகியவற்றின் நோக்கிலிருந்து பார்க்கும் போது இதைப் போன்ற இன்னொரு நடவடிக்கையை யுத்த வரலாறு கண்டதில்லையென்பதை நானும் எனது சகாக்களும் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது''[a] என்று ஸ்தாலின் வி. சர்ச் சிலுக்கு 1944 ஜூன் 11இல் எழுதினார்.

நேச நாடுகள் சக்தியிலும் சாதனங்களிலும் எதிரியை மிகவும் விஞ்சி நின்ற சூழ்நிலையில் கடல் மற்றும் வான் படையிறக்கம் நிறைவேற்றப்பட்டது. படையிறக்கத் தருணத்தில் பாசிஸ்டுகள் கரையில் குறைவான எதிர்ப்பைதான் காட்டினர், விண்ணிலும் கடலிலுமோ கிட்டத்தட்ட எவ்வித எதிர் நடவடிக்கையும் இருக்க வில்லை.

1944ஆம் ஆண்டு கோடையில் சோவியத் துருப்புகளின் பலத்த தாக்குதல் படையிறக்க நடவடிக்கை வெற்றிகரமாக நடைபெற உதவியது. இது பாசிச இராணுவத்தின் பிரதானச் சக்திகளைத் தன் பக்கம் இழுத்து கட்டிப்போட்டதோடு கூட பாசிச ஜெர்மா னியப் படைத் தலைமை தனது முக்கியச் சேமப் படைகளை சோவி யத் ஜெர்மானியப் போர்முனைக்கு அனுப்புமாறும் கட்டாயப்படுத் தியது.

ஜூன் 6க்கும் ஜூன் 24க்கும் இடைப்பட்ட கட்டத்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் தரப்பில் 1,13,000 பேர்கள்

---

[a] சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, தொகுதி 1, பக்கம் 271.

கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், சிறைபிடிக்கப்பட்டனர், 2,117 டாங்கிகளும் 345 விமானங்களும் இழக்கப்பட்டன*. இதே காலகட்டத்தில் நேச நாட்டினர் 1,22,000 பேர்களை (49,000 பேர்கள் ஆங்கிலேயர்கள், கானடா நாட்டினர், சுமார் 73,000 பேர்கள் அமெரிக்கர்கள்) இழந்தனர்**.

பிரெஞ்சு தேசபக்தர்களின் தீவிர நடவடிக்கைகளும் வடக்கு பிரான்சில் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகளின் வெற்றிகரமான படையிறக்கத்திற்கு உதவின. இவர்கள் ஐசன்ஹோவரின் கண்டிப்பான கட்டளையையும் பொருட்படுத்தாது (ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு இவர் பிரெஞ்சு மக்களிடம் கோரினார்) பாசிஸ்டுகளுக்கு எதிராகத் தீவிரப் போராட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். நேச நாட்டினரின் துருப்புகள் இறங்கிய பிரதேசத்தில் கூட வாலண்டியர்களும் கொரில்லாப் படைவீரர்களும் இயங்கி 42 நகரங்களையும் நூற்றுக் கணக்கான கிராமங்களையும் விடுவித்தனர், இது தாங்கள் கைப்பற்றிய தாக்குமுனைகளை உறுதிப்படுத்தி, பலப்படுத்துவதை இறக்குப்படையினருக்கு எளிதாக்கியது.

ஐசன்ஹோவரே பிரெஞ்சு தேசபக்தர்களின் சேவைகளை ஒப்புக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். ''பிரான்ஸ் பூராவும் இச் சக்திகள் நடவடிக்கையின் போது எங்களுக்கு விலைமதிப்பற்ற உதவி நல்கினர். குறிப்பாக பிரெட்டானில் இவர்கள் சுறுசுறுப்பாக இயங்கினர்... இவர்களின் மகத்தான உதவியின்றி பிரான்சை விடுவிக்கவும் மேற்கு ஐரோப்பாவில் எதிரியை முறியடிக்கவும் நிறைய நேரமும் பெரும் பலியும் தேவைப்பட்டிருக்கும்''*** என்று அவர் எழுதினார்.

பிரான்சின் தெற்கே நேச நாட்டவரின் படையிறக்கம் (1944 ஆகஸ்டு 15 — செப்டெம்பர் 3)

ஆகஸ்டு நடுவில் நேச நாட்டுத் துருப்புகள் பிரான்சின் தெற்கே இறங்கின. 90 கி. மீ. வரை நீளமும் 25 கி. மீ. வரை அகலமும் உடைய தாக்குமுனையை பிரான்சின் தென் கரையில் கைப்பற்றி, துலோன் மற்றும் மர்சேல் துறைமுகங்களைக் கைப்பற்றி மேற்கொண்டு லியோனை நோக்கி முன்னேறுவது என்பதுதான் தெற்கு பிரான்ஸ் நடவடிக்கையின் திட்டமாக இருந்தது.

---

* *KTB/OKW*, Bd. IV, S. 326.

** ஃபெ. போக்யூ, உயர்மட்ட படைத் தலைமை. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1959, பக்கம் 208.

*** Eisenhower, *Crusade in Europe*, New York, 1948, p. 296.

இந்நடவடிக்கையை நிறைவேற்றுவதற்காக 6வது அமெரிக்க கோர்பசும் 1வது, 2வது பிரெஞ்சு கோர்பஸ்களும் (7 காலாட் படை, 2 கவச டாங்கி மற்றும் 1 மலையேற்ற டிவிஷன்கள்) அடங்கிய 7வது அமெரிக்கப் படையும் (தளபதி ஜெனரல் பேட்ச்) ''ரெக்பி'' எனும் பிரிட்டிஷ்-அமெரிக்க வான் இறக்குப்படை சண்டைப் பிரிவும் ஒதுக்கப்பட்டன. படையிறக்கத்திற்காக 817 போர்க் கப்பல்கள், 63 போக்குவரத்து கப்பல்கள் சுமார் 1,370 இறக்குப்படை கப்பல்கள் மற்றும் படையிறக்கச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. கடலிலிருந்து 5 போர்க் கப்பல்கள், 9 பாதுகாப்பு விமானந்தாங்கிக் கப்பல்கள், 24 குரூசர்கள், வான் எதிர்ப்பு பாதுகாப்பின் குரூசர்கள் மற்றும் பிற வகையான கப்பல்கள் ஆகியன படையிறக்கத்திற்கு பாதுகாப்பை அளித்தன. இச்சக்திகள் வைஸ் அட்மிரல் ஹியூயிட் தலைமையின் கீழிருந்தன. விண்ணிலிருந்து 5,000 விமானங்கள் அடங்கிய விமானப்படை படையிறக்கத்திற்கு வகை செய்தது.

19வது ஜெர்மானியப் படை நேச நாட்டவரை எதிர்த்து நின்றது. இது போதுமான அளவு ஆள் பலத்தைப் பெற்றிருக்கவில்லை, இதற்கு ஆயுத பலம் போதுமானதாக இருக்கவில்லை, அதன் போர் வன்மையும் குறைவானதாகவே இருந்தது. கான் நகருக்கு மேற்கே நேச நாட்டவரின் படையிறக்கத்தின் 80வது கி. மீ. இடத்தில் 242வது காலாட்படை மற்றும் 148வது சேம இருப்பு ஜெர்மானிய டிவிஷன்களைச் சேர்ந்த 5 பட்டாலியன்கள் மட்டுமே தற்காப்பில் இருந்தன.

அமெரிக்க-பிரெஞ்சுத் துருப்புகள் வட ஆப்பிரிக்கா, இத்தாலி, கோர்ஸிக்காவில் நீண்ட கால, பரிபூரண பயிற்சியைப் பெற்றிருந்தன.

படையிறக்கத்தைத் திடீரென நிறைவேற்றும் பொருட்டு நேச நாட்டுப் படைத் தலைமை எதிரியைக் குழப்புவதற்காக உருமாற்ற நடவடிக்கையை மேற்கொண்டது. ஆகஸ்டு 14ஆம் தேதி மாலையில், மர்சேலுக்கும் துலோனுக்கும் இடையே எவ்வித நடவடிக்கையும் திட்டமிடப்படாத இடத்தில் இரு கப்பல் தொகுதிகள் கடல் இறக்குப்படையை இறக்குவதைப் போல் செய்து காட்டின.

ஆகஸ்டு 15 காலையில் நேச நாட்டினர் பிரான்சின் தென் கரையில் 9,732 பேரடங்கிய வான் இறக்குப்படைப் பிரிவை இறக்கினர். 532 விமானங்களும் 465 கிளைடர் விமானங்களும் இப்படையிறக்கத்தில் பங்கேற்றன. பாசிஸ்டுகளின் விசேஷ எதிர்ப்பு எதுவும் இல்லாததால் இறக்குப் படையினர் ஒரு சில குடியிருப்பு மையங்களைப் பிடித்தனர். கடல் படையிறக்கத்திற்கு முன் விமானப்படை, பீரங்கிப்படையின் பலத்த பூர்வாங்கத் தாக்குதல் இருந்தது. 1,300 விமானங்கள் அடங்கிய நேச நாட்டு விமானப்படைப்

படையிறக்க இடத்தில் (துலோன் நகருக்கும் கான் நகருக்கும் இடையில்) 12,500 டன் குண்டுகளை வீசியது. நாள் முடிவில் நேச நாட்டினர் 3 தாக்குமுனைகளைக் கைப்பற்றினர். ஆகஸ்டு 19 வாக்கில் இவை மூன்றும் 90 கி. மீ. நீளமும் 60 கி. மீ. அகலமும் உடைய ஒரு பொது தாக்குமுனையாக ஒன்றிணைக்கப்பட்டன. இதில் நேச நாட்டவரின் கணிசமான சக்திகள் — 1,60,000 வரை யிலான நபர்கள், 2,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 600 டாங்கிகள், சுமார் 21,500 கார்கள் — குவிக்கப்பட்டிருந்தன.

பாசிஸ்டுகளின் நிலை பெரிதும் மோசமாகியது. ஒரு புறம் பிரான்சின் தெற்கே பெரும் இறக்குப்படை இறக்கப்பட்டிருந்தது, மறு புறம் இந்நேரத்தில், வட கிழக்கு பிரான்சில் இயங்கிய பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் ஸேனு ஆற்றின் எல்லையை அடைந்தன, எதிர்ப்பு இயக்கத்தின் அளவு மிகப் பரவலானதாக இருந்தது. நேச நாட்டுத் துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் மர்சேல், துலோன், மற்ற சில நகரங்களில் குறைந்த அளவு பாதுகாப்புச் சக்திகளை விட்டு விட்டு தனது 19 வது படையை ஜெர்மனியின் மேற்கு எல்லைகளுக்குப் பின்னுக்கு இட்டுச் செல்லுமாறு பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆகஸ்டு 22இல் நேச நாட்டினர் கிரெனோபிலலை விடுவித்தனர், ஒரு வாரம் கழித்து கிளர்ந்தெழுந்த குடிமக்களின் உதவியோடு துலோனும் மர்சேலும் விடுவிக்கப்பட்டன, பிரெஞ்சு தேசபக்தர் களால் விடுவிக்கப்பட்ட லியோனில் செப்டெம்பர் 2ஆம் தேதி நேச நாட்டினர் காலடி எடுத்து வைத்தனர். எதிரியின் எதிர்ப்பைச் சந்திக்காத அமெரிக்க-பிரெஞ்சுத் துருப்புகள் மேற்கொண்டு வடக்கு நோக்கி முன்னேறி செப்டெம்பர் 10ஆம் தேதி டிஷோனுக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தில் 3வது அமெரிக்கப் படையின் முன்னணி அணிகளுடன் இணைந்தன. இதன் மூலம் பா டெ காலே கரையிலிருந்து மத்திய தரைக் கடல் வரையில் நேச நாட்டுத் துருப்புகளின் ஒரே தொடர்ச்சியான போர்முனை உருவாக்கப்பட்டது. நேச நாட்டவரின் தீர்மானமற்ற நடவடிக்கைகளும் இவர்களின் மெதுவான முன்னேற்றமும்தான் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் தோல்வியைத் தவிர்க்க உதவின. ''19வது படையின் பிரதானச் சக்திகள் பின்வாங்க, பிரதானப் போர்முனையில் எதிரி ஆபத்தாயிருந்ததை விட பின்னணியிலிருந்து பிரெஞ்சு கொரில்லாப் படைவீரர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அதிக ஆபத்தாயிருந்தன என்று OKW நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது''*.

---

* *KTB/OKW*, Bd. IV, S. 354.

பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்தில் நேச நாட்டவரின் முன்னேற்றம்

நார்மான்டி நடவடிக்கையை முடித்த நேச நாட்டுத் துருப்புகள் ஜூலை 25ஆம் தேதி வட மேற்கு பிரான்சில் தாக்குதலைத் துவக்கின. படைத் தலைமையின் திட்டப்படி பிரிட்டிஷ் மற்றும் கானடா துருப்புகள் கான் நகருக்கு தென் மேற்கே ஜெர்மானியர்களின் பிரதானச் சக்திகளைக் கட்டிப் போட வேண்டும், அமெரிக்கத் துருப்புகள் சான்-லோவிற்கு மேற்கேயுள்ள பிரதேசத்திலிருந்து தெற்குத் திசையில் பிரதானத் தாக்குதலைத் தொடுத்து பிரெட்டான் தீபகற்பத்தைக் கைப்பற்ற வேண்டும். மேற்கொண்டு லெமான், அலன்சோன் வழியாக கிழக்கு நோக்கி பிரதானச் சக்திகளைத் திருப்பி எதிரியை ஸேனு ஆற்றுக்குப் பின்தள்ளி, ஸேனு, லுவாரா ஆறுகளின் கோடு வரை வட மேற்கு பிரான்சின் பரப்பை எதிரியிடமிருந்து விடுவிக்க வேண்டும்.

ஜூலை 25ஆம் தேதி 3,000 விமானங்கள் வரை பங்கேற்ற பலத்த பூர்வாங்க விமான குண்டு வீச்சுக்குப் பின் அமெரிக்கத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. மூன்றாவது நாளின் முடிவில் இவை ஜெர்மானியர்களின் நேரடி நடைமுறைத் தற்காப்பு மண்லத்தை 15—20 கி.மீ. ஆழத்தில் பிளந்து, பின்வாங்கிய எதிரியைத் துரத்திச் சென்றன, ஜூலை 31ஆம் தேதி ஸேமோன் ஆற்றை அடைந்து அவ்ரான்ஷ் நகரைக் கைப்பற்றின.

ஆகஸ்டு ஆரம்பத்தில் நேச நாட்டுத் துருப்புகள் பிரெட்டானை நோக்கி தென் மேற்கு திசையில் முன்னேறின. ஆனால் இந்நேரத்தில் வீரஞ்செறிந்த பிரெஞ்சு தேசபக்தர்கள் தீபகற்பத்தின் கணிசமான பகுதியை ஏற்கெனவே விடுவித்திருந்தனர். எனவே இத்திசையில் ஓரே ஒரு கோர்பசை மட்டும் விட்டு விட்டு 3வது அமெரிக்கப் படையின் பிரதான சக்திகளைக் கிழக்கு நோக்கித் திருப்புவதென நேச நாட்டுப் படைத் தலைமை முடிவு செய்தது.

கிட்டத்தட்ட பிரெட்டானிலிருந்து முற்றிலுமாகத் திரும்புவதென முடிவு செய்யப்பட்டது என்று ஐசன்ஹோவர் எழுதினார். ஆகஸ்டு 6ஆம் தேதி அமெரிக்கத் துருப்புகள் லவால், மாய்யேன் நகரங்களைப் பிடித்து 7வது ஜெர்மானியப் படையின் இடது பகுதிக்கு அபாயத்தை ஏற்படுத்தின.

போர்முனையின் வட பகுதியில் 2வது பிரிட்டிஷ் படையும் பலத்த பூர்வாங்க விமானப்படைத் தாக்குதலுக்குப் பின்—இதில் 1,200 விமானங்கள் பங்கேற்றன—எதிரியின் தற்காப்பைப் பிளந்து கொண்டு ஆகஸ்டு 10ஆம் தேதி வாக்கில் 20 கி.மீ. ஆழத்திற்கு தென் திசையில் முன்னேறியது. பாசிச ஜெர்மானியத் துருப்புகள்

சுற்றி வளைக்கப்படும் அபாயம் தோன்றியது. ஆகஸ்டு 8ஆம் தேதி இரவு மொர்தேன் பிரதேசத்தில் பாசிஸ்டுகள் தொடுத்த பதிலடி வெற்றி பெறவில்லை. விண்ணில் நிலவிய முழு ஆதிக்கத்தைப் பயன்படுத்திய அமெரிக்க விமானப்படை எதிரி டாங்கிகளின் மீது பலத்த தாக்குதலைத் தொடுத்தது. இது தவிர அபாயமான பிரதேசத்திற்கு அமெரிக்கர்கள் கூடுதல் காலாட்படைச் சக்திகளையும் டாங்கிகளையும் அனுப்பினர்.

அதே நாளன்று 3வது அமெரிக்கப் படை லெ-மான் நகரைக் கைப்பற்றி 7வது ஜெர்மானியப் படையை தென் கிழக்கேயிருந்து சுற்றி வளைத்துச் செல்ல ஆரம்பித்தது. 3வது அமெரிக்கப் படையின் 15வது கோர்பஸ் லெ-மான் பிரதேசத்திலிருந்து வடக்கு நோக்கி முனைப்போடு முன்னேறியது. 1வது கானடா படையின் 2வது கோர்பஸ் வடக்கிலிருந்து தெற்கு நோக்கித் தாக்கியது. பாசிச ஜெர்மானியத் துருப்புகளைச் சுற்றி வளைக்கும் உண்மையான அபாயம் தோன்றியது. ஆனால் நேச நாட்டுப் படைத் தலைமை இதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 12வது, 21வது படைத் தொகுதிகளுக்கு இடையிலுள்ள எல்லைக் கோடுகள் தாண்டப்படும் என்ற அச்சத்தினால்—ஐசன்ஹோவரின் கருத்துப்படி இது ''போர்முனையில் குழப்பத்தை'' ஏற்படுத்துவதோடு கூட ஒரு வேளை கானடா, பிரிட்டிஷ் போர்வீரர்களுடன் மோதலை உண்டாக்கியிருக்கக் கூடும், இவர்கள் அமெரிக்கர்களை ஜெர்மானியர்களாகக் கருதியிருக்கலாம்—ஜெனரல் பிரேட்லியின் கட்டளைப்படி 15வது கோர்பஸ் அர்ஜன்தான் நகர பிரதேசத்தில், திடீரென நிறுத்தப்பட்டது. துருப்புகளை நிறுத்தியதால் ஜெர்மானியர்களில் ஒரு பகுதியினர் காப்பாற்றப்படுவார்கள் என்பதை ஐசன்ஹோவர் ஒத்துக் கொண்டார். ஆனால் ஃபாலேஸ் சாக்கு என்றழைக்கப்பட்ட பொறியில் சிக்கிய ஜெர்மானியர்களை விமானப்படை ஒழித்துக் கட்டுமென அவர் உறுதியாக நம்பினார்*.

சம்பவங்களோ பின்வருமாறு நடந்தேறின. ஃபாலேஸ் சாக்கின் வாயிலிலிருந்த நேச நாட்டுத் துருப்புகள் ஒரு சில நாட்கள் கிட்டத்தட்ட செயலின்றி நின்றன. இதைப் பயன்படுத்திக் கொண்ட பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை தனது டிவிஷன்களில் கணிசமான பகுதியை வாயில் வழியே வெளியே இட்டுச் சென்றது. ஆகஸ்டு 18ஆம் தேதிதான் நேச நாட்டுத் துருப்புகளால் இவ்வழியை அடைக்க முடிந்தது. 7வது ஜெர்மானிய டாங்கிப் படையின் 6 டிவிஷன்களும் 5வது டாங்கிப் படையின் 2 டிவிஷன்களும்

---

* D. Eisenhower, *Crusade in Europe*, p. 278.

பிடியில் சிக்கின. ஆகஸ்டு 20ஆம் தேதி முற்றுகையிடப்பட்டிருந்த ஜெர்மானியத் துருப்புகளும் வளையத்திற்கு வெளியேயிருந்த துருப்புகளும் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டு நேச நாட்டவரின் தற்காப்பைப் பிளந்து தமது பிரதானச் சக்திகளுடன் இணைந்தன.

''சுற்றி வளைக்கப்பட்டத் துருப்புகளின் இராணுவத்தளவாடங்களில் பெரும் பகுதியை அவை பிளந்து செல்லும் முன்னதாகவே இழந்தன, எஞ்சியவற்றை முற்றுகையிலிருந்து வெளியேறும் போது இழந்தன. துருப்புகளுக்குப் பெரும் ஆட்சேதம் ஏற்பட்ட போதிலும் இவற்றில் பெரும் பகுதி காப்பாற்றப்பட்டது''* என்று OKWயின் நாட்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

ஃபாலேஸ் சாக்கு வட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை முடித்த பின் எதிரியின் எதிர்ப்பைச் சந்திக்காத நேச நாட்டுத் துருப்புகள் கிழக்கு நோக்கி முன்னேறின. பிரெஞ்சு தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட பாரிசினுள் இவை ஆகஸ்டு 25ஆம் தேதி நுழைந்தன. ஆகஸ்டு 30ஆம் தேதி ஜெனரல் டெ கோல் பாரிசில் பிரெஞ்சுக் குடியரசின் தற்காலிக அரசாங்கத்தின் நடவடிக்கையின் ஆரம்பத்தைப் பற்றி அறிவித்தார்.

1944 செப்டெம்பர் ஆரம்பத்தில் நேச நாட்டுத் துருப்புகள் பரவலான போர்முனையில் முன்னேறி 1வது அமெரிக்கப் படையின் ஆதரவோடு பா டெ காலே கரையோரமாக அன்த்வேர்பன், ஆஹென் ஆகியவற்றை நோக்கிய பொதுவான திசையில் 22வது படைத் தொகுதியைக் கொண்டு பிரதானத் தாக்குதலைத் தொடுத்தன. 12வது படைத் தொகுதி ரூர், சவாரா திசைகளில் முன்னேறியது.

செப்டெம்பர் மாதத்தின் ஆரம்பத்தில், பெல்ஜியத்தில் நேச நாட்டுத் துருப்புகள் வருவதற்கு முன்னரே பல நகரங்களையும் பிராந்தியங்களையும் விடுவித்த தேசபக்தர்களின் ஆயுத எழுச்சிகள் துவங்கின. செப்டெம்பர் 3ஆம் தேதி 2வது பிரிட்டிஷ் படை பிரஸ்ஸெல்சிலும் அடுத்த நாளன்று தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட அன்த்வேர்பனிலும் நுழைந்தது.

1944ஆம் ஆண்டு செப்டெம்பர் நடுவில் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் கிட்டத்தட்ட பெல்ஜியப் பரப்பு முழுவதையும் பிடித்து ஹாலந்தின் எல்லைகளையும் ஜெர்மானியர்களின் பலப்படுத்தப்பட்ட கோடாகிய ''ஸிக்பிரிட் நிலையின்'' வாயில்களையும் அணுகின. இதில் எதிரியின் எதிர்ப்பைச் சந்தித்த நேச நாட்டுப் படைத்

---

* *KTB/OKW*, Bd. IV, S. 357.

தலைமை, ரைனில் உள்ள தாக்குமுனையைக் கைப்பற்றி, ஷெல்தா ஆற்று முகப்பை ஜெர்மானியர்களிடமிருந்து விடுவித்து ஜெர்மனி யின் ஆழத்தினுள் மேற்கொண்டு முன்னேறுவதற்குத் தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு ஹாலந்தின் வழியாக இதன் வடக்குத் திசையில் செல்வதென முடிவு செய்தது.

ஹாலந்து நடவடிக்கை (செப்டெம்பர் 17—26) என்று வர லாற்றில் அறியப்பட்ட இந்நடவடிக்கையின் நிறைவேற்றத்திற் காக 2வது பிரிட்டிஷ் மற்றும் 1வது கானடா படைகள் (5 கவச டாங்கி டிவிஷன்கள் உட்பட 16 டிவிஷன்கள்) அடங்கிய 21வது ஆர்மித் தொகுதி மொன்ட்கமேரியின் தலைமையின் கீழ் ஒதுக்கப் பட்டது.

3.2 கி. மீ. அகலமுள்ள இடத்தில் ஜெர்மானியர்களின் தற்காப் பைப் பிளக்கும் பொருட்டு 30வது பிரிட்டிஷ் கோர்பசின் சக்திகளைக் கொண்டு (2 காலாட்படை, 1 கவச டாங்கி டிவிஷன்கள், தனி பிரிகேடு) பிரதானத் தாக்குதலைத் தொடுக்கவும் வான் இறக்குப் படையின் (3 வான் இறக்குப்படை டிவிஷன்கள்) பரஸ்பர செய லாக்கத்துடன் அர்னேம் திசையில் தாக்கவும் திட்டமிடப்பட்டது. 101வது அமெரிக்க வான் இறக்குப்படை டிவிஷனை எய்ன்ட் ஹோவென் பிரதேசத்திலும் 82வது டிவிஷனை நேய்மெஹெனிலும் 1வது பிரிட்டிஷ் வான் இறக்குப்படை டிவிஷனையும் போலந்து பாராசூட் பிரிகேடையும் அர்னேமிற்கு வடக்கேயும் இறக்கத் திட்டமிடப்பட்டது. இவை மாஸ், வால், ரைன் ஆகிய நதிகளின் ஊடேயான கடக்கும் வழிகளைப் பிடித்து, ''மொன்ட்கமேரி கம்பளம்'' என்றழைக்கப்பட்டதை ஏற்படுத்தி இப்பிரதேசங் களுக்கு தரைப்படைகள் வரும் வரை இவற்றை வைத்திருக்க வேண்டும்.

மற்ற இரண்டு பிரிட்டிஷ் கோர்பஸ்களுக்கும் (8வது, 12வது) பிளந்து செல்லும் போர்முனையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் பக்கவாட்டுப் பகுதிகளில் இயங்குமாறு கட்டளையிடப்பட்டது.

1வது கானடா படைக்கு, புலோன், காலே மற்றும் டியூன் கெர்க் ஆகிய இடங்களில் சுற்றி வளைக்கப்பட்ட எதிரியின் படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்டி, ஷெல்தா ஆற்று முகப்பை பாசிசத் துருப்புகளிடமிருந்து விடுவித்து மேற்கொண்டு ரோட்டர்டாம், ஆம்ஸ்டர்டாம் நோக்கி முன்னேறுமாறு கட்டளை பிறப்பிக்கப் பட்டது.

விண்ணிலிருந்து 2வது பிரிட்டிஷ் படைக்கு ஆதரவளிப்பதற்காக 650 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

9 டிவிஷன்களையும் 2 சண்டைப் பிரிவுகளையும் உள்ளடக்கி

யிருந்த ஜெர்மனியின் 15வது போர்க்களப் படையும் 1வது பாராசூட் படையும் நேச நாட்டுத் துருப்புகளை எதிர்த்து நின்றன. இந்த யூனிட்டுகள் எல்லாம் ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் 55 – 60 சதவிகிதம்தான் முழுமை பெற்றிருந்தன. அர்னேம் திசையில் 85 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் எதிரியின் 4 டிவிஷன்களின் படைப்பிரிவுகள் மட்டுமே தற்காப்பில் நின்றன.

2வது பிரிட்டிஷ் படையின் மண்டலத்தில் நேச நாட்டினர் காலாட்படை மற்றும் பீரங்கிகளில் 2 மடங்கும் (பிரதான தாக்குதல் திசையில் 4 மடங்கு) விமானப்படை, டாங்கிகளில் முற்ற முழுமையாகவும் எதிரியை விஞ்சி நின்றனர்.

செப்டெம்பர் 17ஆம் தேதி குறுகிய பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் மற்றும் 10 நிமிட பீரங்கித் தாக்குதலுக்குப் பின் நேச நாட்டுத் துருப்புகள் தாக்குதலில் இறங்கி நாளின் முடிவில் 10 கி. மீ. ஆழத்திற்கு முன்னேறின.

இதே நாளன்றும் அதற்கடுத்த நாளும் வேகெல், கிராவே, அர்னேம் பிரதேசங்களில் திடீர் குண்டு தாக்குதல்களைத் தொடுத்த பின் வான் இறக்குப்படைகள் இறக்கப்பட்டன.

முன்னணியிலிருந்து தாக்கிய 30வது ஆர்மி கோர்பஸ் எய்ன்ட் ஹோவெனைச் சுற்றிச் சென்று 101வது வான் இறக்குப்படை டிவிஷனுடன் இணைந்தது. செப்டெம்பர் 20ஆம் தேதி இக்கோர்பஸ் குறுகலான இடத்தில் நேய்மெஹெனை அடைந்து 82வது வான் இறக்குப்படை டிவிஷனுடன் இணைந்தது. முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் பக்கவாட்டுப் பகுதிகளில் முன்னேறிய 8வது, 12வது ஆர்மி கோர்ப்ஸகள் மெதுவாக முன்னேறின.

அர்னேம் பிரதேசத்தில் ஜெர்மானிய டாங்கி டிவிஷனுக்கு அருகே இறக்கப்பட்டு, முன்னிருந்து தாக்கியத் துருப்புகளால் ஆதரிக்கப் படாத 1வது பிரிட்டிஷ் வான் இறக்குப் படையும் போலந்து பாராசூட் பிரிகேடும் முறியடிக்கப்பட்டன. வான் இறக்குப்படைப் பிரிவுகளின் மிச்சசொச்சங்கள் மட்டுமே தெற்கு நோக்கிப் பிளந்து சென்று தம் துருப்புகளுடன் இணைந்தன. செப்டெம்பர் இறுதியில் 2வது பிரிட்டிஷ் படை அர்னேமிற்கு மேற்கே கீழ் ரைன் ஆற்றின் தென் கரையில் தற்காப்பிற்கு மாறியது.

10 நாட்களில் நேச நாட்டுத் துருப்புகள் 80 கி. மீ. ஆழத்திற்கு முன்னேறி 25 முதல் 40 கி. மீ. வரை பிளவை விரிவுபடுத்தின. ஆனால் நடவடிக்கையின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை, ஹாலந்தில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்படவில்லை. அதே பொழுது வடக்கேயிருந்து ''ஸிக்பிரிட் கோட்டைச்'' சுற்றிக் கொண்டு மியூன்ஸ்தெர் திசையில் தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளும் தோற்றுவிக்கப்படவில்லை.

2வது கானடா படை பா டெ காலெ ஜலசந்தியின் தென் கரையோரமாகத் தாக்கி புலோன், காலே துறைமுகங்களைப் பிடித்தது, டியூன்கெர்கை முற்றுகையிட்டது, செம்டெம்பர் இறுதியில் ஷெல்தா ஆற்று முகப்பை அடைந்தது. ஹாலந்து நடவடிக்கையில் ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில், அக்காலகட்டத்திலேயே மிகப் பெரும் வான் இறக்குப்படை இதில் பயன்படுத்தப்பட்டதாகும். ஆனால் இதன் தயாரிப்பின் போது பெரும் தவறு ஒன்று செய்யப் பட்டது: அர்னேம் பிரதேசத்தில் டாங்கிப் படைப்பிரிவுகள் இருப் பதை நேச நாட்டவரின் வேவுத்துறையால் கண்டுபிடிக்க இயல வில்லை. அதோடு கூட படையிறக்கம் மிகவும் முன்கூட்டியே நடந் தது, சக்திகள் சிதறிக் கிடந்தன, பிரதான திசையில் குறைவான வேகத்தில் முன்னேறியதாலும் முக்கியத் தாக்குதல் படைத் திரட் டின் பக்கவாட்டுப் பகுதிகளில் சுறுசுறுப்பாகச் செயல்படாததாலும் தரைப்படைத் துருப்புகளால் உரிய நேரத்தில் இறக்குப்படைக்கு உதவ முடியவில்லை.

அர்டேன்னியில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல்

பரவலான, தீர்மானகரமான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அனு கூலமான சூழ்நிலைகள் நிலவியபோதும் நேச நாட்டினர் மேற் கொண்டு தாக்குதல் தொடுப்பதை இழுத்தடித்தனர், தனிப்பட்ட நடவடிக்கைகளுடனும் முடிவற்ற படை மாற்றங்களுடனும் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டனர். இந்த யுத்தத்தில் சோவியத் யூனி யனை அதிக பட்சம் பலவீனப்படுத்த வேண்டும் என்பதை நோக்க மாகக் கொண்ட பிற்போக்குத்தனமான பிரிட்டிஷ் மற்றும் அமெ ரிக்க கொள்கைதான் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை இப்படி நடந்து கொள்ளக் காரணமாகும். நிலவரத்தைக் கணக்கில் கொண்ட ஜெர்மானியப் படைத் தலைமை லியேஸ், அன்த்வேர்பனை நோக்கிய பொதுவான திசையில் அர்டேன்னியில் தாக்குதல் தொடுக்க முடிவு செய்தது.

பெரும் டாங்கிச் சக்திகளைப் பயன்படுத்தி பலத்த திடீர் தாக் குதல் தொடுத்து பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளை முறியடித்து, பாசிச ஜெர்மனிக்கு கௌரவமான தனி சமாதானத்திற்கு அமெரிக் காவையும் பிரிட்டனையும் தள்ளுவதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாயிருந்தது. பாசிச ஜெர்மனியின் எதிர்த்தாக்குதலைப் பற்றிய 1944ஆம் ஆண்டு நவம்பர் 10 OKW கட்டளையில் பின் வருமாறு கூறப்பட்டிருந்தது: ''அன்த்வேர்பன் — பிரஸ்ஸெல்ஸ் — லுக்ஸம்பர்க் கோட்டிற்கு வடக்கே எதிரியின் சக்திகளை ஒழித்துக்

மேற்கு ஐரோப்பாவில் இராணுவ நடவடிக்கைகள் (1944 ஜூன் – டிசம்பர்)


மே 28 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஜூலை 25 முடிவில் போர்முனை எல்லைக்கோடு
ஆகஸ்டு இறுதியில் போர்முனை எல்லைக்கோடு
டிசம்பர் நடுவில் போர்முனை எல்லைக்கோடு
1945 ஜனவரி ஆரம்பத்தில் போர்முனை எல்லைக்கோடு
நேச நாட்டுத் துருப்புகளின் தாக்குதல் திசைகள்
பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல் திசைகள்
ஆகஸ்டு 15-19இல் நேச நாட்டுத் துருப்புகளால் கைப்பற்றப்பட்ட தாக்குமுனை
நேச நாட்டுத் துருப்புகள் குவிக்கப்பட்ட பிரதேசங்கள்
நேச நாட்டுத் துருப்புகள் இறக்கப்பட்ட பாதைகள்
2ப. (இங்.)
ஆஹென்
பான்
15ப.
6டா.ப.SS
5டா.ப.
மோசெல்
லக்ஸம்பர்க்
சார்பிரூக்கென்
மெட்ஸ்
கார்ல்ஸ்ரூவே
ஸ்டிராஸ்புர்க்
நான்ஸி
தொகுதி (அமெ.)
19 தனி ப.
டினூப்
7ப. (அமெ.)
1ப. (பிரா.
பாஸெல்
இன்ஸ்பிருக்
வாதுட்ஸ்
பெர்ன்
ரைன்
ரோனு
ஜினீவா
8ப. (இங்.)
பிரெஞ்சு இராணுவம்
மிலான்
"C" படைத் தொகுதி
வெனிஸ்
டிரியெஸ்ட்
கிரெனோபில்
துரின்
10ப.
பலோன்யா
ஜெனோவா
14ப.

கட்டுவதன் மூலம் மேற்கிலும் இதன் மூலம் சாத்தியமானல் மொத்தத்திலும் யுத்தத்தில் தீர்மானகரமான திருப்புமுனையை அடைவது தான் நடவடிக்கையின் நோக்கமாகும்''.

அன்த்வேர்பன் பிரதேசத்தில் பிரிட்டிஷ் படைத் தொகுதி முழுவதையும் துண்டிக்கும் நோக்கத்தோடும் ஆஹெனில் இருந்த அமெரிக்கத் துருப்புகளை பிரான்சில் இயங்கிய நேச நாட்டுத் துருப்புகளிடமிருந்து துண்டிக்கும் நோக்கத்தோடும் அர்டேன்னி வழியாக லியேஸ், அன்த்வேர்பன் திசையில் பிரதான தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. பிரிட்டிஷ் துருப்புகளைக் கடலோரமாக நெருக்கி இரண்டாவது டியூன்கெர்கை ஏற்படுத்தும் எண்ணமிருந்தது. பிரதானத் தாக்குதலோடு கூட அர்டேன்னிக்கு வடக்கிலும் அல்சாஸிலும் இரண்டு துணைத் தாக்குதல்களைத் தொடுக்கவும் திட்டமிடப்பட்டது.

எதிர்த்தாக்குதல் துவங்கவிருந்த சமயத்தில் ஹிட்லர் துருப்புகளின் வசம் 73 டிவிஷன்களும் (11 டாங்கி டிவிஷன்கள் உட்பட) 3 பிரிகேடுகளும் இருந்தன. ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் இவை நேச நாட்டு டிவிஷன்களை விட பலவீனமானவையாக இருந்தன. பல ஜெர்மானிய டிவிஷன்களின் முழுமையின்மை 30—40 சதவிகிதம் வரை இருந்தது. நேச நாட்டவரின் மதிப்பீட்டின்படி பாசிச யூனிட்டுகள் அனைத்தையும் சேர்த்தால் அவை 39 பிரிட்டிஷ்-அமெரிக்க டிவிஷன்களின் போர் வன்மைக்குச் சமமானவையாக இருந்தன.

எதிர்த்தாக்குதலுக்காக பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை 6வது எஸ். எஸ். டாங்கிப் படை (9 டிவிஷன்கள்), 5வது டாங்கிப் படை (7 டிவிஷன்கள்) மற்றும் 7வது படை (4 டிவிஷன்கள்) அடங்கிய படைத் திரட்டை ஏற்படுத்தியது. ஒரு டிவிஷன் சேம இருப்பில் இருந்தது. முக்கியப் படைத் திரட்டில் 21 டிவிஷன்களும் சுமார் 900 டாங்கிகள், திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. 800 விமானங்கள் விண்ணிலிருந்து ஆதரவளித்தன. ''அர்டேன்னியில் பயன்படுத்தப்பட்ட சக்திகள் ஏழையாகிப் போன மனிதனின் கடைசி சல்லிகளாகும்... எது எப்படியிருந்தாலும், போதுமான அளவு எரிபொருள் இல்லாத, குறைந்த அளவு ஆயுதத் தளவாடங்களைக் கொண்டிருந்த, விமான ஆதரவைப் பெருத ஒரு சில டிவிஷன்களைக் கொண்டு அர்டேன்னிலிருந்து அன்த்வேர்பன் வரை பிளந்து செல்லும் கடமையை முன் வைப்பது அனுமதிக்கத் தகாததாகும்''* என்று வேர்மஹ்டின் தரைப்படைத் தலைமையகத்தின் முன்னுள் தலைவன் ஜெனரல் கால்டர் பின்னுல் எழுதினுன்.

---

* F. Halder, *Hitler als Feldherr*, München, 1949, S. 59—60.

1944 டிசம்பர் நடுவில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் தரப்பில் 640 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் 63 டிவிஷன்கள் (15 கவச டாங்கி டிவிஷன்கள் உட்பட) இருந்தன; இவற்றில் 40 அமெரிக்க டிவிஷன்களாகும்; சுமார் 10,000 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், சுமார் 8,000 விமானங்கள் (போக்குவரத்து விமானங்களைச் சேர்க்காது) முதலியனவும் இருந்தன. ஐசன்ஹோவரிடம் 4 வான் இறக்குப் படைகள் சேம இருப்பில் இருந்தன.

அர்டேன்னியில் நேச நாட்டவரின் தற்காப்பு பலவீனமானதாக இருந்தது. பாசிச ஜெர்மானியத் துருப்புகள் மிகவும் பலங்குன்றியுள்ளன, எனவே அவற்றால் எதிர்த்தாக்குதல் தொடுக்க முடியாது என்று கருதிய நேச நாட்டினர், தம் துருப்புகளைத் தற்காப்பிற்குத் தயார்படுத்தவில்லை. ''இவ்வளவு வியத்தகு முறையில் விரைவாக ஜெர்மானியர்களால் தம் சக்திகளைத் திரட்ட முடியுமென நான் நினைக்கவில்லை, எதிரியின் தாக்குதல் வாய்ப்புகளை நான் சரிவர மதிப்பிடவில்லை''* என்று 12வது படைத் தொகுதியின் முன்னாள் தளபதி ஜெனரல் பிரேட்லி எழுதினார்.

ஜெர்மானியர்கள் 1940 மாதிரியில் தாக்குதலைத் திரும்ப நடத்த மாட்டார்களென்ற கருத்து அமெரிக்கர்களிடம் மேலோங்கியிருந்தது. 115வது கி. மீ. நீளமுள்ள போர்முனையில் அர்டேன்னியில் தற்காப்பில் இருந்த 8வது அமெரிக்க கோர்பஸ், பரவலான போர்முனையில் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த ஆதார நிலையங்களால் ஆன பிரதானத் தாற்காப்பு மண்டலத்தை மட்டுமே ஏற்படுத்தியிருந்தது. இவற்றிற்கு இடையே பீரங்கித் தொடர்பு இருக்கவில்லை, பொறியியல் ரீதியாக இவை போதுமான அளவு ஆயத்தமாயிருக்கவில்லை. எதிரியை வேவு பார்ப்பது சரிவர அமைக்கப்படவில்லை. அர்டேன்னி திசையில் நேச நாட்டவருக்கு நேரடி நடைமுறைச் சேம இருப்போ அல்லது போர்த்தந்திரச் சேம இருப்போ இருக்கவில்லை.

அர்டேன்னிக்கு வடக்கேயும் தெற்கேயும் அமெரிக்கர்களின் பெருமளவுச் சக்திகள் ஏராளமான கவச டாங்கி யூனிட்டுகளுடன் இயங்கின.

நேச நாட்டவரின் படைத் தலைமையகங்களிலும் துருப்புகளிலும் ஜெர்மானியர்களின் எதிர்த்தாக்குதலைப் பற்றி சந்தேகிக்கக் கூட இல்லை. ''ஏஹ்டெர்னஹிலிருந்து மொன்ஷாவு வரையிலிருந்த போர்முனையில் 75,000 போர்வீரர்கள் டிசம்பர் 16ஆம் தேதி இரவு வழக்கம் போல் தூங்கச் சென்றனர்... அன்று மாலை அமெ

* ஓ. பிரேட்லி, போர்வீரனின் குறிப்புகள். ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, பக்கம் 492.

ரிக்கத் தளபதிகளில் ஒருவர் கூட பெரும் ஜெர்மானியத் தாக்குதலைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்கவில்லை''* என்று அர்டேன்னி நடவடிக்கையைப் பற்றிய நூலின் ஆசிரியர் தோலண்ட் எழுதினார்.

1944ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி அதிகாலையில் ஜெர்மானியர்களின் டாங்கிப் படைத் திரட்டு எதிர்த்தாக்குதலில் இறங்கியது. திடீரெனத் தாக்கியதால் இதனால் உடனேயே பெரும் வெற்றிகளை அடைய முடிந்தது. குழம்பிப் போன அமெரிக்கத் துருப்புகள் முழு கலக்கமடைந்தன, முதல் நாட்களில் இவற்றால் ஜெர்மானியர்களுக்குக் கணிசமான எதிர்ப்பைக் காட்ட முடியவில்லை. தாறுமாறாகப் பின்வாங்குவது ஆரம்பமானது, இது ஒரு சில இடங்களில் பீதியடைந்த ஓட்டமாக மாறியது. ஜெர்மானியத் துருப்புகள் ஐம்பது மைல்கள் நீளமுள்ள ''போர்முனையில் எங்களுடைய தற்காப்புக் கோட்டைப் பிளந்து கொண்டு, உடைந்து போன அணையின் வழியே தண்ணீர் பீறிக்கொண்டு வருவதைப் போல பாய்ந்து வந்தன. அமெரிக்கர்களோ தலையைப் பிய்த்துக் கொண்டு இவர்களிடமிருந்து எல்லாப் பாதைகளிலும் மேற்கு நோக்கி ஓடினர்''** என்று அமெரிக்கப் பத்திரிகையாசிரியர் இன்கெர்சோல் எழுதினார்.

விமானப் பறத்தலுக்குச் சாதகமில்லாத பருவநிலை ஜெர்மானியர்களின் வெற்றிக்கு உதவியது. அமெரிக்க விமானப் படையின் பெரிதும் மேன்மையான நிலையை கணக்கில் கொண்ட இவர்கள் தமது எதிர்த்தாக்குதலை மோசமான, மேகமூட்டமான பருவநிலையில் துவக்கினர். ஹிட்லரின் படைத் தலைமையானது, அமெரிக்க உடையணிந்த, ஆங்கிலத்தில் பேசக் கூடிய வான் இறக்குப்படையினரையும் நாசவேலைக் குழுக்களையும் நேச நாட்டுத் துருப்புகளின் பின்னணியில் இறக்கியது. இவர்கள் அமெரிக்கப் போர்வீரர்களின் மத்தியில் பீதி மனநிலை தோன்றுவதன் மீது குறிப்பிட்ட தாக்கம் செலுத்தினர். எல்லா படை வகைகள், எஸ். எஸ். இன் படைபிரிவுகளிலிருந்து தாமாகவே முன்வந்த இந்த நாசவேலையாளர்கள் ஸ்கர்ட்ஸேனியின் தலைமையின் கீழ் விசேஷ 150வது டாங்கிப் பிரிகேடாக ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் எண்ணிக்கை 2,000ஆக இருந்தது, இவர்களில் 150 பேருக்கு ஆங்கிலம் தெரியும். இவர்களுக்கு விசேஷப் பயிற்சியளிக்கப்பட்டது, அமெரிக்க, பிரிட்டிஷ் ஆடையணிவிக்கப்பட்டது, அமெரிக்க, பிரிட்டிஷ் ஆயுதங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நேச நாட்டவரின் பின்னணியில்

---

* S. Toland, *Battle. The Story of the Bulge*, New York, 1959, pp. 8, 10.

** ரி. இன்கெர்சோல், முற்றிலும் இரகசியமானது. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1947, பக்கம் 329.

பீதியை ஏற்படுத்துவது, அவர்களின் ஜெனரல்களையும் இராணுவ அதிகாரிகளையும் கொல்வது, தகவல் தொடர்பைக் குலைப்பது, சாலைக் குறிகளை அழிப்பது, மாற்றியமைப்பது, சாலைகளில் தடைகளை எழுப்புவது, இருப்புப் பாதைகளிலும் நெடுஞ்சாலைகளிலும் கண்ணி வெடிகளை வைப்பது, ஆயுதத் தளவாடங்கள் மற்றும் எரிபொருள் கிடங்குகளை வெடி வைத்து தகர்ப்பது ஆகியன இவர்களுடைய கடமையாக இருந்தன. ஆனால் நாசவேலைக் குழுக்களைப் பற்றிய ஹிட்லர் படைத் தலைமையின் கணிப்புகள் பலிக்கவில்லை. அமெரிக்கப் படைத் தலைமை விரைவிலேயே இவற்றின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தியது. சிறை பிடிக்கப்பட்ட நாசவேலையாளர்களிடமிருந்து அவர்களின் நடவடிக்கையின் தன்மை மற்றும் அவர்கள் செயல்படும் இடங்களைப் பற்றிய விவரங்களைப் பெற்ற நேச நாட்டினர் இவர்களை நன்கு ''வேட்டையாடினர்.'' இதன் பயனாய் ஒரு சில நாட்களிலேயே 130க்கும் அதிகமான பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு, இராணுவ ட்ரிப்யூனல் விசாரணைக்குப் பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்*.

எதிர்த்தாக்குதலின் ஆரம்ப நாட்களில் ஜெர்மானியத் துருப்புகளால் அமெரிக்கர்களின் நேரடி நடைமுறைத் தற்காப்பு மண்டலத்தைப் பிளந்து கொண்டு செயல்முறை ஆழத்தை அடைய முடிந்தது. டிசம்பர் 19ஆம் தேதி இவர்களின் முன்னணி டாங்கிப் படைப்பிரிவுகள் லியேஸுக்கு 25 கி. மீ. தெற்கேயிருந்தன, 5வது டாங்கிப் படையின் பிரதான சக்திகள் மாஸை நோக்கி முனைப்போடு முன்னேறி டிசம்பர் 24ஆம் தேதி இதன் வாயில்களை அடைந்தன. ஆனால் அவற்றால் மேற்கொண்டு முன்னேற முடியவில்லை. டாங்கிகளுக்கு எரிபொருள் இருக்கவில்லை. முன்னுக்குச் சென்ற 5வது டாங்கிப் படையின் சக்திகள் பஸ்தோனுக்காக நடைபெற்ற கடுமையான சண்டைகளினால் அலைக்கழிக்கப்பட்டிருந்தன என்றாலும் 1வது அமெரிக்கப் படையின் 8வது கோர்பசிற்கு கணிசமான இழப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

அர்டேன்னியில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் 76,890 பேர்களை இழந்தன; இவர்களில் 8,607 பேர்கள் கொல்லப்பட்டனர், 47,129 பேர்கள் காயமடைந்தனர், 21,144 பேர்கள் தொலைந்து போயினர். ஜெர்மானியர்கள் 81,834 பேர்களை இழந்தனர் — 19,652 பேர்கள் கொல்லப்பட்டனர், 38,600 பேர்கள் காயமடைந்தனர், 30,582 பேர்கள் தொலைந்து போயினர்.

டிசம்பர் 28ஆம் தேதி ஹிட்லர் பிரதானப் படைத் தலைமை

---

* *Geheime Kommandosache Hinter den Kulissen des zweiten Weltkrieges,* Bd. II, Stuttgart — Zürich — Wien, 1965, S. 556 — 558.

யகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அர்டேன்னி நடவடிக்கையைப் பற்றி விவாதிக்கும் போது இதன் தோல்வியை ஒப்புக் கொண்டு, அங்கிருந்த அமெரிக்கத் துருப்புகளை ஒழித்துக் கட்டும் பொருட்டு அர்டேன்னியிலிருந்து தெற்காக புதிய தாக்குதல்களைத் தொடுக்க முடிவு செய்தான்.

வடக்கு அல்சாஸில் 7வது அமெரிக்கப் படையை சுற்றி வளைத்து அழிக்கும் நோக்கத்துடன் அர்டேன்னிக்குத் தெற்கே பாசிச ஜெர்மானியத் துருப்புகள் எதிர்த்தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டன. பித்செ, ஸ்டிராஸ்புர்க், கோல்மார் தாக்குமுனை ஆகிய இடங்களிலிருந்து 1வது, 19வது படைகளைக் கொண்டு தாக்குதல் தொடுப்பதன் மூலம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டது.

1945 ஜனவரி ஆரம்பத்தில் மேற்கு ஐரோப்பாவில் நேச நாட்டவரின் நிலை சிக்கலானதாக இருந்தது. வடக்கு அல்சாஸில் 7வது அமெரிக்கப் படை பாசிஸ்டுகளின் தாக்குதல்களின் கீழ் இழப்புகளைச் சந்தித்து, பின்வாங்கியது. ஐசன்ஹோவரின் எல்லாச் சேம இருப்புகளும் செலவாயின. இது பெரும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு இதன் மூலம் கடுமையான நிலையிலுள்ள நேச நாட்டுத் துருப்புகளுக்கு உதவுமாறு சோவியத் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்குமாறு ரூஸ்வெல்ட்டையும் சர்ச்சிலையும் நிர்ப்பந்தித்தது. ''மேற்கே மிகக் கடுமையான சண்டைகள் நடைபெறுகின்றன, எத்தருணத்தில் வேண்டுமானாலும் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை பெரும் முடிவுகளை எடுக்க நேரலாம். முன்முயற்சியைத் தற்காலிகமாக இழந்த பின் மிகப் பரந்த போர் முனையைப் பாதுகாக்கும் ஒரு நிலை எவ்வளவு கவலையூட்டுவது என்பது உங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து உங்களுக்கு நன்றாகத் தெரியும்... வீஸ்லா போர்முனையிலோ அல்லது வேறு ஏதாவது இடத்திலோ ஜனவரி மாதமோ அல்லது வேறு எத்தருணத்திலோ—இவற்றைப் பற்றி நினைவூட்ட அனேகமாக நீங்கள் விரும்பக் கூடும்—பெரும் ருஷ்யத் தாக்குதலை நாங்கள் எதிர்பார்க்கலாமா என்பதைப் பற்றி நீங்கள் தெரியப்படுத்தினால் நான் நன்றியுடையவனாயிருப்பேன்''* என்று சர்ச்சில் ஸ்தாலினுக்கு எழுதினார்.

தனது நேச நாட்டு கடமைக்கு விசுவாசமான சோவியத் யூனியன் இவ்வேண்டுகோளுக்குச் செவிமடுத்தது. சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் சோவியத் துருப்புகள் தாக்குதலைத் துவங்கும் நேரத்தை ஜனவரியின் இரண்டாவது பாதியிலிருந்து முதல் பாதிக்கு மாற்றியது. பால்டிக் கடலிலிருந்து கர்பாத்து

---

* சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, தொகுதி 1, பக்கம் 298.



அர்டேன்னி இராணுவ நடவடிக்கை (1944 டிசம்பர் 16–1945 ஜனவரி 25).
அல்சாஸ் இராணுவ நடவடிக்கை (1945 ஜனவரி 1-27)

மலைகள் வரை ஜனவரி 12இல் துவங்கிய சோவியத் இராணுவத்தின் பொதுத் தாக்குதல், மேற்கே தனது தாக்குதல் திட்டங்களைக் கைவிடும்படி பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையைக் கட்டாயப் படுத்தியது. மேலும் அர்டேன்னி முகப்பிலிருந்த ஜெர்மானியப் படைத் திரட்டின் முக்கியத் தாக்குதல் சக்தியாகிய எஸ். எஸ். 6வது டாங்கிப் படையையும் மற்ற சில யூனிட்டுகளையும் அவசர அவசரமாக சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்கு மாற்றும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது 1945 ஜனவரி 25ஆம் தேதி வாக்கில் அர்டேன்னியில் நிலவரத்தைப் புனர்நாட்ட அமெரிக்கத் துருப்புகளுக்கு உதவியது. ஜனவரி 27 வாக்கில் ஹிட்லர் துருப்புகள் வடக்கு அல்சாஸில் ஆரம்ப நிலைக்குப் பின்வாங்கிச் சென்றன.

இவ்வாறாக 1944ஆம் ஆண்டு பெரும் வெற்றிகளோடு கூட நேச நாட்டுத் துருப்புகள் தமது நடவடிக்கைகளில் கணிசமான தவறுகளையும் இழைத்தன. உதாரணமாக, எதிரியைப் பெரிதும் விஞ்சி நின்ற நேச நாட்டுத் துருப்புகள் நார்மாண்டியில் தாக்கு முனையை விரிவாக்குவதற்காகப் போதுமான அளவு தீவிரமாகப் போராடவில்லை. இவற்றால் பிரான்சிலும் பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் ஒரு பெரிய படைத் திரட்டைக் கூடச் சுற்றி வளைத்து முறியடிக்க இயலவில்லை. ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் எதிரியைப் பெரிதும் விஞ்சி நின்ற போதிலும் அர்னேம் நடவடிக்கையில் நேச நாட்டினர் பெரும் தப்புக் கணக்குகளைப் போட்டனர், முன்வைக்கப்பட்ட லட்சியம் அடையப்படவில்லை. நேச நாட்டுப் படைத் தலைமை, அர்டேன்னியில் ஜெர்மானியர்களின் எதிர்த்தாக்குதல் திட்டத்தை உரிய நேரத்தில் கண்டுபிடிக்கவில்லை, எதிரியின் தாக்குதல் வாய்ப்புகளைக் குறைத்து மதிப்பிட்டது. இவை பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளுக்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியது.

1944ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள்

1943ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தென் இத்தாலியிலிருந்து பின்வாங்கியதும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் ரோம் நகரத்துக்குத் தெற்கே 120 கி. மீ. தூரத்தில் சான்க்ரோ, கரில்யானோ ஆறுகளின் வழியே சென்ற, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பு எல்லையில் 1944ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலையாக நின்றன. மத்திய இத்தாலியைத் தன்வசம் வைத்திருப்பதுதான் ஹிட்லர் படைத் தலைமையின் நோக்கமாயிருந்தது.

இத்தாலியிலிருந்த அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் பிரிட்டிஷ்

ஜெனரல் அலெக்சாந்தேரின் தலைமையின் கீழ் 15வது படைத் தொகுதியாக இணைந்திருந்தன. இதில் 5வது அமெரிக்க மற்றும் 8வது பிரிட்டிஷ் படைகள்—மொத்தமாக 16 காலாட்படை, 2 கவச டாங்கி, 1 வான் இறக்குப்படை டிவிஷன்களும் 4வது விசேஷ டாங்கிப் பிரிகேடுகளும் அடங்கியிருந்தன.

4,000 விமானங்களையுடைய வான் படையும் 130 பிரதான ரகப் போர்க் கப்பல்கள் மற்றும் இறக்குப்படைக் கப்பல்கள் உள்ளிட்ட ஏராளமான மற்ற கப்பல்கள் அடங்கிய கடற்படையும் 15வது படைத் தொகுதிக்கு ஆதரவளித்தன.

பீல்ட்மார்ஷல் ஜெனரல் கேஸ்ஸல்ரிங் தலைமையிலிருந்த ''சென்டர்'' எனும் ஜெர்மானியப் படைத் தொகுதி நேச நாட்டுத் துருப்புகளை எதிர்த்து நின்றது. 10வது மற்றும் 14வது படைகள்* —2 டாங்கி டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 21 டிவிஷன்கள் இதிலிருந்தன. இத்தாலியிலிருந்த ஜெர்மானிய விமானப்படையில் சுமார் 370 விமானங்கள் இருந்தன. மத்திய தரைக் கடலிலிருந்த ஜெர்மானியக் கடற்படையோ மிகப் பலவீனமானதாக இருந்தது—பிரதான ரகக் கப்பல்களில் 13 நீர்மூழ்கிக் கப்பல்கள் மட்டுமே இருந்தன.

இத்தாலியப் போர்முனையில் சக்திகளின் சமன்நிலையை மதிப்பிட்ட பாசிச ஜெனரல் யோடல் 1943 நவம்பரில் பின்வருமாறு ஒப்புக் கொண்டான்: ''தரையிலும் வானிலும் கடலிலும் எதிரியின் ஆதிக்கம் இத்தாலியில் இராணுவ நடவடிக்கைகளின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது. நம்மிடம் மிகக் குறைவான கடற்படை, வான் படைச் சக்திகள் மட்டுமே இருப்பதால் எதிரியின் பின்னணி கடல் போக்குவரத்து மார்க்கங்களை கிட்டத்தட்ட எதுவுமே அச்சுறுத்தவில்லை''**.

பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடித்து, 5—6 மாதங்களுக்குப் பின் பீஸா, ரீமினி கோட்டிற்கு வருவதென நேச நாட்டுப் படைத் தலைமை திட்டமிட்டது. உடனடி லட்சியம் 1944 ஜனவரியில் ரோமைக் கைப்பற்றுவதாகும். ஒரே நேரத்தில் முன்னிருந்து பிரதான படைத் திரட்டலைக் கொண்டும், பின்னுலிருந்து ஆன்ட்ஸியோ பிரதேசத்தில் (ரோமிலிருந்து 30 கி. மீ. தென் கிழக்கிலும் போர்முனையிலிருந்து சுமார் 100 கி. மீ. தொலைவிலும்) கடல் இறக்குப்படையை இறக்குவதன் மூலமும் இந்த லட்சியத்தை

---

* 10வது படை முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பு எல்லையைத் தற்காத்து நின்றது; 14வது படை கரையோரத்தைப் பாதுகாத்து, வடக்கு இத்தாலியில் கொரில்லாப் படைவீரர்களுக்கு எதிராகப் போரிட்டது.

** முற்றிலும் இரகசியமானது! படைத் தலைமைக்கு மட்டும்!, மாஸ்கோ, பக்கம் 543.

நிறைவேற்ற பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை திட்டமிட்டது.

5வது அமெரிக்கப் படையின் 6வது கோர்பஸ் ஆன்ட்ஸியோவின் அருகே படையிறக்கி, தாக்குமுனையைக் கைப்பற்றுவதை நிறைவேற்ற வேண்டும். இதில் 1 பிரிட்டிஷ், 1 அமெரிக்க காலாட் படை டிவிஷன்களும் 1 பாராசூட் ரெஜிமென்ட்டும் 1 டாங்கி ரெஜிமென்ட்டும் இரண்டு ''கமான்டொஸ்'' அணிகளும் ஒரு ''ரேய்ன்ஜெர்ஸ்'' பட்டாலியனும் — மொத்தம் சுமார் 50,000 நபர்கள் — இருந்தன. இறக்குப்படைக்கு, தாக்குமுனையைக் கைப்பற்றிய பின் 10வது ஜெர்மானியப் படையின் பின்னணியைத் தாக்கி, இது வடக்கு நோக்கி பின்வாங்கும் வழியைத் துண்டிக்குமாறு கட்டளையிடப்பட்டது. ஏழாவது நாளன்று இறக்குப்படை, முன்னுலிருந்து இயங்கிய 5வது அமெரிக்கப் படையின் பிரதான சக்திகளுடன் இணைந்து மேற்கொண்டு கூட்டு முயற்சிகளால் வட மேற்கு திசையில் தாக்குதலைத் தொடர்ந்து ரோமைக் கைப்பற்ற வேண்டும்.

அமெரிக்கப் படைப்பிரிவுகள் ஆன்ட்ஸியோ நகரத்துக்குக் கிழக்கேயும் பிரிட்டிஷ் பகுதிகள் மேற்கேயும் கலப்பு பிரிட்டிஷ்-அமெரிக்க கடல் காலாட்படைப் பிரிவுகள் நேரடியாக நகரத்திலுமாக ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் இறக்குப்படை இறக்கப்பட வேண்டும். கடல் வழியாகத் துருப்புகளை இறக்குவது 250 போக்குவரத்துக் கப்பல்களில் நிறைவேற்றப்பட்டது. 126 போர்க் கப்பல்கள் கடலிலிருந்து மூடி பாதுகாப்பளித்தன.

ஜனவரி 22ஆம் தேதி இரவு ஆன்ட்ஸியோ பிரதேசத்தில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளை இறக்குவது ஆரம்பமானது. இரண்டு ஜெர்மானிய பட்டாலியன்களும் ஒரு சில கரையோர பீரங்கிப்படை பேட்டரிகளும் இவற்றை எதிர்த்து நின்றன. படையிறக்கத்தின் முதல் நாளன்று இறக்குப்படைக்கு நேரடி ஆதரவு அளிப்பதற்காக நேச நாட்டு விமானப்படை 1,200க்கும் கூடுதலான விமானப் பறத்தல்களை நடத்தியது. இரண்டு நாட்களுக்கு துருப்புகள் கிட்டத்தட்ட தடையின்றி கரையில் இறக்கப்பட்டன. ஆனுல் இவை மேற்கொண்டு முன்னேறி தாக்காமல், கைப்பற்றிய தாக்குமுனையை உறுதியாகத் தம்வசம் வைத்திருப்பதில் ஈடுபட்டன. ஜனவரி இறுதி வாக்கில் தாக்குமுனையில் 1,00,000 நபர்கள் வரை குவிக்கப்பட்டிருந்தனர். இறங்கிய நேச நாட்டுத் துருப்புகளின் தீர்மானகரமற்ற நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்ட பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை ரோமிலிருந்தும் வட இத்தாலியிலிருந்தும் தாக்குமுனைக்கு தனது சேம படைகளை இழுத்து வந்து இதற்கெதிராக ஒரே தொடர்ச்சியான போர்முனையைத் தோற்றுவித்தது. தாக்குமுனையை ஒழித்துக் கட்ட பாசிஸ்டுகள் பன்முறை முயற்சி செய்தும் — பிப்ரவரி நடுவில் 3 டிவிஷன்களைக் கொண்டு

பதிலடி தந்த போது லட்சியத்திற்கு வெகு அருகே இருந்தாலும்— இம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை. வானில் முழு ஆதிக்கம் இருந்த தால்தான் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளால் தாக்குமுனையில் நிலைத்து நிற்க முடிந்தது. இதன் பின் 1944 மே நடுப்பகுதி வரை ஆன்ட்ஸியோ பிரதேசத்தில் நிலவரம் ஸ்திரமடைந்தது.

கஸ்ஸீனோ பிரதேசத்தில் ஜெர்மானியர்களின் தற்காப்பைப் பிளந்து ஆன்ட்ஸியோவில் இறக்குப்படையுடன் இணையும் நோக்கத்தோடு 1944 ஜனவரியில் தாக்குதலைத் தொடுக்க நேச நாட்டவரின் 5வது மற்றும் 8வது படைகளின் பிரதானச் சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. பிப்ரவரி—மார்ச்சிலும் இவை வெற்றி பெறவில்லை.

நேச நாட்டவரின் நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருந்த போதிலும் ஆன்ட்ஸியோவில் இறக்கப்பட்ட கடல் இறக்குப்படை தன் பங்கை ஆற்றியது. இது எதிரியின் ஆழ்ந்த பின்னணியில் தொடுக்கப்பட்ட பெரும் இறக்குப்படை நடவடிக்கையாக அமைந்தது. ரோம் மீது தொடுக்கப்பட்ட முதலாவது, இரண்டாவது தாக்குதல்களின் போது 5 ஜெர்மானிய டிவிஷன்களையும் மூன்றாவது தாக்குதலின் போது 9 டிவிஷன்களையும் இறக்குப்படை தன் பக்கம் இழுத்தது. ஆனால் மூன்று சந்தர்ப்பங்களிலுமே 5வது அமெரிக்கப் படையின் துருப்புகளால் ஜெர்மானியர்களின் தற்காப்பைப் பிளந்து சென்று இறக்குப்படையுடன் இணைய முடியவில்லை.

இவ்வாறாக நேச நாட்டினர் கணிசமான அளவு விஞ்சிய நிலையிலிருந்தும் கூட ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சில் ரோமைக் கைப்பற்ற இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஜூன் 4ஆம் தேதிதான் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள், அந்நேரத்தில் இத்தாலிய தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட இத்தாலியத் தலைநகரினுள் நுழைந்தன.

ஆகஸ்டு நடுவில் கோத்தா தற்காப்புக் கோட்டையை நேச நாட்டுத் துருப்புகள் அடைந்த போது அவை பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் உறுதியான எதிர்ப்பைச் சந்தித்தன. 1944ஆம் ஆண்டு இறுதியில்தான் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளால் எதிரியின் இந்தத் தற்காப்பு எல்லையை மீறி, 40—100 கி. மீ. தூரம் முன்னேறி, ராவேன்னு, பியேத்ரஸான்டா கோட்டையை அடைய முடிந்தது. குளிர்காலம் பூராவும் இந்த எல்லையில் நேச நாட்டவரின் தாக்குதல் நிறுத்தப்பட்டது.

1944 வசந்த காலத்தில் எதிர்ப்பு இயக்கம் இத்தாலியில் விரிந்து பரந்தது. கொரில்லாப் படைவீரர்கள் பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி, நேச நாட்டுத் துருப்புகளின் தாக்குதலுக்கு உதவினர். இவர்கள் பாலங்களைத் தகர்த்தனர்,

சாலைகளில் வலை விரித்தனர், போக்குவரத்து வாகனங்களைத் தாக்கினர், போர்த் தளவாடங்கள், துருப்புகளை ஏற்றிச் சென்ற இராணுவப் புகை வண்டிகளைக் கவிழ்த்தனர், எதிரியின் மத்தியில் பீதியை ஏற்படுத்தினர்.

1944 ஜூன் முதல் 1945 மார்ச் வரை கொரில்லாப் படைவீரர் கள் 6,449 ஆயுத நடவடிக்கைகளை மேற்கொண்டனர், 5,570 சீர்குலைவு நடவடிக்கைகளை நடத்தினர், 16,000க்கு குறையாத பாசிஸ்டுகளை அழித்தனர், பெருமளவு எதிரியின் ஆயுதங்களைக் கைப்பற்றினர்*.

ஹிட்லரின் படைத் தலைமை பெரும் சக்திகளை ஈடுபடுத்தி கொரில்லாப் படைவீரர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக் கைகளை மேற்கொண்டது. உதாரணமாய் 1944—1945 குளிர் காலம் இதற்காக அது 10 ஜெர்மானிய டிவிஷன்கள் உட்பட 15 டிவிஷன்களை ஈடுபடுத்தியது. 1944 இறுதி வாக்கில் ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கொரில்லாப் படைவீரர் களுக்குக் கடுமையான இழப்புகள் ஏற்பட்டன. என்றாலும் அவற் றைப் பொருட்படுத்தாது கொரில்லாப் படைவீரர்கள் தொடர்ந்து இயங்கினர்.

நேச நாட்டுச் சக்திகளின் (ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள், அல்ஜீரியர்கள், பிரேசிலியர்கள், கிரேக்கர்கள், இந்தியர்கள், இத்தா லியர்கள், கானடா நாட்டவர்கள், போலந்து நாட்டினர், பிரெஞ்சு நாட்டவர் இன்னும் பிறர் இவற்றில் அடங்குவார்கள்) இராணுவ நடவடிக்கைகளில் 1 டாங்கி டிவிஷன், 1 மோட்டார் டிவிஷன் உட்பட 15 பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் முறியடிக்கப்பட்டன. 1944 ஜூன்—டிசம்பரில் வேர்மஹ்டின் துருப்புகளின் தரப்பில் மொத்தம் 19,000 நபர்கள் கொல்லப்பட்டனர், 65,000 நபர்கள் காயமடைந்தனர், 65,000 நபர்கள் தொலைந்து போனார்கள்**. விமானத் தாக்குதல்கள்தான் ஜெர்மானியர்களின் கணிசமான இழப்புகளுக்குக் காரணம். நேச நாட்டவரின் தரப்பில் 32,000 நபர்கள் கொல்லப்பட்டனர், 1,34,000க்கும் அதிகமானோர் காய மடைந்தனர், சுமார் 23,000 பேர்கள் தொலைந்து போனார்கள்***.

1944ஆம் ஆண்டின் இறுதியில் நேச நாட்டுத் துருப்புகள் மத்திய இத்தாலியைக் கைப்பற்றின. ரோம், பிளாரென்ஸ் பிரதேசங்களில் வான் படைத் தளங்களைக் கைப்பற்றி தம் விமானப்படையின்

---

* ரா. பாட்டாலியா, இத்தாலிய எதிர்ப்பு இயக்கத்தின் வரலாறு (1943 செப் டெம்பர் 8—1945 ஏப்ரல் 25), பக்கம் 571.

** *Naus*, T. 78, R. 414, f. 383234—383236, 383246—383247.

*** *From Salerno to the Alps*, p. 452.

பெரும் சக்திகளை இங்கு கொண்டு வந்த பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை தெற்கேயிருந்து ஜெர்மனியின் மீது பலத்த விமானத் தாக்குதல்களைத் தொடுப்பதற்கான பெரும் வாய்ப்புகளைப் பெற்றது.

ஆனால் 1944ஆம் ஆண்டு நேச நாட்டினர் இத்தாலியில் தமது நடவடிக்கையின் லட்சியத்தை அடையவில்லை. இவர்கள் கோத்தா கோட்டைப் பிளந்தாலும் போ ஆற்றுப் படுகையை அடைய முடிய வில்லை. பின்வாங்கிய எதிரியை மெதுவாகவே துரத்திச் சென்றனர், ஜெர்மானியத் துருப்புகள் பின்வாங்கும் வழியைத் துண்டிக்கும் வாய்ப்புகளை நேச நாட்டினர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால் ஹிட்லரின் படைத் தலைமை கிட்டத்தட்ட தங்கு தடை ஏதுமின்றி தம் துருப்புகளை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தற்காப்பு எல்லைகளுக்கு இட்டுச் சென்றது.

இத்தாலியில் நேச நாட்டினர் தமது நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாததற்கு அவர்களுடைய படைத் தலைமையின் உறுதியற்ற நிலைதான் பெரிதும் காரணமாகும். முன்னாள் பாசிச ஜெனரல் வெஸ்ட்ஃபால் இது பற்றி பின்வருமாறு எழுதினான்: "...போர்த் தந்திரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மேற்கத்திய நேச நாட்டினர் அதிகத் துணிவை மட்டும் வெளிப்படுத்தியிருந்தால் அவர்களால் பெரிதும் முன்னராகவே, தமக்கும் மற்றவர்களுக்கும் கணிசமான அளவு குறைந்த இழப்புகளுடனேயே அப்பெனீன் தீபகற்பத்தில் நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்திருக்க முடியும்"[*].

6. பசிபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் ஆசியாவிலும் நேச நாட்டவரின் தாக்குதல்

1943ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பெரும் படைத் திரட்டுகள் முறி யடிக்கப்பட்டதானது பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் நேச நாட்ட வரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுகூலமான சூழ்நிலை களைத் தோற்றுவித்தது. 1944ஆம் ஆண்டின் துவக்கத்தில் அலெவூட் தீவுகள், ஹவாய்த் தீவுகள், கில்பெர்ட் தீவுகள் மற்றும் ஏலிஸ் தீவுகளிலிருந்து நேச நாட்டினர் சலமோன் தீவுகளிலும் நியூ கினி யின் கிழக்குப் பகுதியிலும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந் தனர். பசிபிக் சமுத்திர போர்முனையில் இவர்களிடம் 13 தரைப் படை டிவிஷன்கள், 3 கடல் காலாட்படை டிவிஷன்கள், தரைப் படை விமானப்படையின் 32 விமானப் பிரிவுகள், பெரும் கடற்

[*] உலக யுத்தம். 1939 — 1945. கட்டுரைத் தொகுப்பு, மாஸ்கோ, அன்னிய இலக்கியப் பதிப்பகம், 1957, பக்கம் 121 (ருஷ்ய மொழியில்).

படை ஆகியன இருந்தன. கடற்படையில் 12 போர்க் கப்பல்கள், 28 விமானந் தாங்கிக் கப்பல்கள், 32 குரூசர்கள், 123 நீர்மூழ்கிக் கப்பல்கள், 188 நாசகாரிக் கப்பல்கள், 57 பாதுகாப்பு கண்ணி வெடிக் கப்பல்கள், ஏராளமான இன்னும் பிற கப்பல்கள் ஆகியன இருந்தன. தரைப்படை மற்றும் கடற்படையின் விமான யூனிட்டு களில் 6,676 விமானங்கள் இருந்தன. மொத்தம் பசிபிக் சமுத்திரப் பகுதியில் 16,00,000க்குக் கூடுதலான போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் இருந்தனர். ஒரு சில நூறு ஆயிரம் நபர்களைக் கொண்ட இந்திய, ஆஸ்திரேலிய, நியூ ஜீலாந்து துருப்புகளும் நேச நாட்டுப் படைத் தலைமையின் கீழிருந்தன.

பசிபிக் சமுத்திரப் போர்முனையில் நேச நாடுகளின் துருப்புகள் இரண்டு போர்த்தந்திரப் படைத் திரட்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந் தன. பசிபிக் சமுத்திரத்தின் மையப் பகுதியிலிருந்த படைத் திரட் டிற்கு அட்மிரல் நிமிட்சும் தென் மேற்குப் பகுதியிலிருந்த படைத் திரட்டிற்கு ஜெனரல் மாக்கார்துரும் தலைமை தாங்கினர்கள்.

8வது, 2வது மற்றும் 7வது ஜப்பானிய சேனைகளும் (சுமார் 6,00,000 நபர்கள்), 9 போர்க் கப்பல்கள் 13 விமானந் தாங்கிக் கப்பல்கள், 31 குரூசர்கள், 78 ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல் கள், 72 நீர்மூழ்கிக் கப்பல்கள் முதலியவை அடங்கிய ஜப்பானியக் கடற்படையும் 3,000க்கும் மேற்பட்ட விமானங்களும் நேச நாட்ட வருக்கு எதிராக நின்றன. இவ்வாறாக நேச நாட்டினர் எதிரியைக் கணிசமான அளவு விஞ்சி நின்றனர்.

1944ஆம் ஆண்டு நடவடிக்கையை நேச நாட்டினர் பின்வரு மாறு நிறைவேற்றத் திட்டமிட்டனர். ஜப்பானின் முக்கிய இடங் களை ''முறையாக நெருங்கிவரும்'' போர்த்தந்திரத்தை முன்போன்றே நிறைவேற்றி, ஜப்பானியர்களை தீவுப் பிரதேசங்களிலிருந்து வெளி தள்ளுவதுடன் மட்டுப்படுத்திக் கொண்டு இவர்கள் இரண்டு திசை களில் தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டனர். மார்ஷால் தீவுகள், கரோலிஞ தீவுகள், மரியான் தீவுகளைக் கைப்பற்றி, ஜப்பானையும் இந்தோனீஷியாவுடன் இதை இணைக்கும் மிக முக்கிய போக்கு வரத்து மார்க்கங்களையும் குறுகிய பாதையில் அடையும் உடனடி நோக்கத்துடன் பசிபிக் சமுத்திரத்தின் மத்தியப் பகுதியில் பிலிப் பீன் அல்லது ஃபார்மோஸா (தைவான்) திசையில் செயல்படும் எண்ணமிருந்தது. பசிபிக் சமுத்திரத்தின் தென் மேற்குப் பகுதியில், பிஸ்மார்க் தீவுக் கூட்டத்திலிருந்தும் நியூ கினி தீவிலிருந்தும் ஜப் பானியர்களை விரட்டியடிக்கும் நோக்கத்தோடு நியூ கினியின் வடக்கு கரை வழியாக பிலிப்பீன் மீது தாக்கத் திட்டமிடப்பட்டது.

பசிபிக் சமுத்திரத்தின் மத்தியப் பகுதியிலுள்ள தீவுக் கூட்டங் கள் மற்றும் பிலிப்பீன் தீவுகளைப் பாதுகாத்து, பலப்பல தீவுகளுக்

கான நீண்டகால போராட்டத்தினுள் அமெரிக்கர்களை இழுத்து, அவர்களுக்குக் கணிசமான இழப்புகளை ஏற்படுத்தி, தலைநாட்டை நோக்கி மேற்கொண்டு முன்னேறுவதைத் தடை செய்வது என்பது ஜப்பானியப் படைத் தலைமையின் திட்டமாக இருந்தது.

ஜனவரி 30ஆம் தேதி நேச நாட்டினர் மார்ஷால் தீவுகளின் மீது படையிறக்க நடவடிக்கையை மேற்கொண்டனர். இத்தீவுகள் பசிபிக் சமுத்திரத்தின் மத்தியப் பகுதியில் ஜப்பானியக் கடற் படையின் மிகப் பெரும் முன்னணித் தளங்களில் ஒன்றாக விளங்கியவை, இவற்றிற்குப் பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் இருந்தது. இத்தளத்திலிருந்துதான் இக்கப்பற்படை, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூ ஜீலாந்திற்கு இடையே நேச நாட்ட வரின் போக்குவரத்து மார்க்கங்களைத் தாக்கியது.

மார்ஷால் தீவுகளில் இருந்த ஜப்பானிய படையிருப்பிடத்தில் மொத்தம் 28,000 நபர்கள் இருந்தனர். அமெரிக்கத் துருப்பு களின் இறக்குப்படைத் திரட்டின் எண்ணிக்கையோ 63,000ஆக இருந்தது. ஆயுத பலத்திலோ நேச நாட்டினர் இன்னமும் விஞ்சி நின்றனர்.

குவாட்ஜெலேன் மற்றும் ரோயி தீவுகளில் இருந்த ஜப்பானியர் களின் கடற்படை, விமானப்படை தளங்களின் மீதுதான் அமெரிக் கர்கள் பிரதான தாக்குதலைத் தொடுத்தனர். படையிறக்கத்திற்கு முன் 28 மணி நேர பூர்வாங்க பீரங்கி மற்றும் விமானப்படைத் தாக்குதல் நடந்தது. இதில் 28 போர்க் கப்பல்கள் மற்றும் குரூசர் களும் 12 விமானந் தாங்கிக் கப்பல்களில் இருந்த 700 விமானங் களும் பங்கேற்றன.

1944 பிப்ரவரி 1இல் மார்ஷால் தீவுகளில் கடல் இறக்குப்படை யின் படையிறக்கம் ஆரம்பமாகியது. குவாட்ஜெலேன் தீவைக் கைப்பற்ற 63,000 பேரடங்கிய படைத் திரட்டிற்கு 4 நாட்கள் தேவைப்பட்டன. பிப்ரவரி 23 வாக்கில் மார்ஷால் தீவுக் கூட்டத் தின் முக்கியத் தீவுகள் பிடிக்கப்பட்டன.

மார்ஷால் தீவுகளை நேச நாட்டுத் துருப்புகள் உறுதியாகத் தம்வசம் வைத்துக் கொண்ட பின் நேச நாட்டுப் படைத் தலைமை சாய்பான் தீவில் (மரியான் தீவுகளின் தொகுதி) படையிறக்கத்தை ஆரம்பித்தது. இதைக் கைப்பற்றியதையடுத்து ''பறக்கும் கோட் டைகள்'' என்றழைக்கப்பட்ட குண்டுவீச்சு விமானங்கள் ஜப்பானியத் தளங்களின் மீதும் தலைநாட்டின் தொழிற்துறை மையங்களின் மீதும் குண்டுவீசும் வாய்ப்புகளைப் பெற்றதால் இத்தீவு பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது[*]. மேலும்

---

[*] சாய்பான் தீவிலிருந்து டோக்கியோ வரையிலான தூரம் சுமார் 2,500 கி. மீ.; கனரக குண்டுவீச்சு விமானம் 5.5 மணி நேரப் பறத்தலில் இதைக் கடக்கும்.

சாய்பான் தீவைக் கைப்பற்றியதானது, இந்தோனீஷியாவிலும் பிலிப்பீன் தீவுகளிலும் ஜப்பானிய நிலேகளின் மீது பக்கவாட்டுத் தாக்குதலேத் தொடுக்கும் வாய்ப்பை அமெரிக்கப் படைத் தலைமைக்கு அளித்தது. எனவேதான் 10,000 பேர்களடங்கிய பாதுகாப்புச் சக்திகளைக் கொண்டிருந்த தீவிற்கான போராட்டம் கடுமையானதாயிருந்தது, சுமார் 1 மாத காலம் (1944 ஜூலே 9 வரை) நீடித்தது.

சாய்பான் தீவில் படையிறக்கத்தின் போது அமெரிக்க விமானப் படை முதன் முதலாக நப்பாம் குண்டுகளைப் பயன்படுத்தியது. இராணுவ நடவடிக்கைகளின் நான்காம் நாளாகிய ஜூன் 18ஆம் தேதி ஜப்பானிய விமானப்படை அமெரிக்க கடற்படைச் சக்திகளைத் தாக்கி 1 போர்க் கப்பல், 5 விமானந் தாங்கிக் கப்பல்கள், 100 விமானங்களைப் பழுதுபடுத்தியது. ஜப்பானிய விமானப்படை 300 விமானங்களை இழந்தது.

ஜூலே 21ஆம் தேதி அமெரிக்கர்கள் குவாம் தீவில் (மரியான் தீவுக் கூட்டம்) படையை இறக்கி ஆகஸ்டு 10 வாக்கில் அதைப் பிடித்தனர். கைப்பற்றிய மரியான் தீவுகளில் நேச நாட்டினர் தமது வான்படை, கடற்படைத் தளங்களை ஏற்படுத்தி தலைநாட்டின் நுழைவாயில்களாகிய வோல்கனோ மற்றும் பனீன் தீவுகளிலும் பிலிப்பீன் தீவுகளிலும் இருந்த ஜப்பானியத் தளங்களின் மீது குண்டுவீச்சை ஆரம்பித்தனர்.

பசிபிக் சமுத்திரத்தின் தென் மேற்குப் பகுதியில் நேச நாட்டினர் 1944 பிப்ரவரி—மார்ச் காலகட்டத்தில் அட்மிரல்டி தீவுகளைப் பிடித்து, ஏப்ரலில் நியூ கினி தீவின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். நேச நாட்டுத் துருப்புகள் நியூ கினி தீவின் மேற்கு கரையை அடைந்து செப்டெம்பர் 15இல் மொரத்தாய் தீவைக் கைப்பற்றியதையடுத்து ஆசிய நிலப்பரப்பிற்கான வழிகளையும் ஜப்பானுக்கும் தென் கடல்களுக்கும் இடையிலான போக்குவரத்து மார்க்கங்களையும் மூடி பாதுகாக்கும் கடைசி தடையாக இருந்த பிலிப்பீன் தீவுக் கூட்டத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலேகள் தோற்றுவிக்கப்பட்டன. பிலிப்பீன் தீவுகளைக் கைப்பற்றுவதற்காக 14 டிவிஷன்கள் (2,00,000 நபர்கள்) உள்ளடக்கிய 6வது அமெரிக்கப் படையும் 885 கப்பல்களைக் கொண்ட 3வது, 7வது கடற்படைகளும் ஒதுக்கப்பட்டன. அக்டோபர் 20ஆம் தேதி நேச நாட்டினர் பிலிப்பீன் தீவுக் கூட்டத்தின் முக்கியத் தீவுகளில் ஒன்ருன லேய்தேயில் படையிறக்கத்தை ஆரம்பித்தனர்.

அக்டோபர் 23—24இல் லேய்தே தீவின் அருகே இரண்டாவது உலக யுத்த காலத்திலேயே மூன்ருவது பெரிய கடல் சமர் (முதலி

ரண்டு சமர்களும் 1942 மே, நவம்பரில் கொரால் கடலில் நடந்தன) நடைபெற்றது. அமெரிக்கர்கள் பலத்தில் விஞ்சி நின்றனர். பிலிப்பீன் தீவுகளின் மத்தியப் பகுதியில் இவர்களிடம் 30 விமானந் தாங்கிக் கப்பல்களும் 12 போர்க் கப்பல்களும் 20 குரூசர்களும் 104 நாசகாரி மற்றும் கண்ணிவெடிக் கப்பல்களும் இருந்தன. ஜப்பானியத் தரப்பிலோ 6 விமானந் தாங்கிக் கப்பல்கள், 7 போர்க் கப்பல்கள், 19 குரூசர்கள், 33 நாசகாரிக் கப்பல்கள் மட்டுமே இருந்தன.

இச்சமரில் ஜப்பானியப் படைத் தலைமை தனது கடற்படை அமெரிக்கர்களைக் காட்டிலும் குறைவான விமானந் தாங்கிக் கப்பல்களை வைத்திருப்பதைக் கவனத்தில் கொண்டு போர்க் கப்பல்கள் மற்றும் குரூசர்களின் பீரங்கிப் பலத்தை அதிகபட்சம் பயன்படுத்துவது என்று முடிவு செய்தது. அமெரிக்கப் படைத் தலைமையோ, விமானத் தாங்கிக் கப்பல்களைப் பொறுத்த மட்டில் தான் விஞ்சி நிற்பதைக் கணக்கில் கொண்டு ஜப்பானியக் கப்பல்களை நெருங்குவதற்கு நெடுநேரம் முன்னராகவே அவற்றின் மீது விமானந் தாங்கிக் கப்பல்களின் விமானங்களைக் கொண்டு பெரும் தாக்குதலைத் தொடுப்பது என்று கணக்கிட்டது. மேலும் ராடார் நுணுக்கத்தில் விஞ்சி நின்றதும் வேவு பார்த்தலையும் நிர்வகிப்பையும் அதிகத் திட்டவட்டமாக ஒழுங்கமைக்கவும் இரவு நேரங்களில் நன்ருகப் போரிடவும் நேச நாட்டினருக்கு உதவியது. ஜப்பானியர்களோ அமெரிக்க கப்பல்களைக் கண்டுபிடிப்பதற்காக இரவு நேரங்களில் ஒளிபாய்ச்சிக் கருவிகளைப் பரவலாகப் பயன்படுத்தும்படி கட்டாயப் படுத்தப்பட்டதால் இதன் மூலம் தமது கப்பல்களை காட்டிக் கொடுக்கும் நிலைக்கு ஆளாயினர்.

நிலவிய ஆதாயங்களைப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்க கப்பற்படை ஜப்பானியர்களை முறியடித்தது. மூன்று நாட்களில் இவர்கள் 4 விமானந் தாங்கிக் கப்பல்கள், 3 போர்க் கப்பல்கள், 10 குரூசர்கள், 11 நாசகாரிக் கப்பல்கள் ஆகியவற்றை இழந்தனர். டிசம்பர் 22ஆம் தேதி லேய்தே தீவின் ஜப்பானியப் பாதுகாப்புச் சக்திகள் சரணடைந்தன.

1944ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்கர்கள் பிலிப்பீன் தீவுகளின் கணிசமான பகுதியைக் கைப்பற்றினர். 1945ஆம் ஆண்டு வசந்த காலத்தில்தான் இவை ஜப்பானியர்களிடமிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்டன. அமெரிக்கர்கள் குறைவான எண்ணிக்கையை உடைய ஜப்பானிய பாதுகாப்புச் சக்திகளுக்கு எதிராகப் போரிட்டதை விட வலுத்து வந்த தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்காக பிலிப்பீன் கொரில்லாப் படைவீரர்களின் அணிகளை ஒழித்துக் கட்டுவதில் முனைந்தது தான் பிலிப்பீன் தீவுகளுக்

கான இராணுவ நடவடிக்கைகளின் இழுபறி தன்மைக்குக் காரணம் ஆகும்.

1944ஆம் ஆண்டின் இறுதியில் நேச நாட்டுத் துருப்புகள் பசிபிக் சமுத்திரத்தின் தென் மேற்கு மற்றும் மத்தியப் பகுதிகளின் தீவு களிலிருந்து பலவீனமான ஜப்பானியப் பாதுகாப்புச் சக்திகளை வெளி யேற்றி ஜப்பானை நோக்கி 2,000—2,500 கி. மீ. தூரத்திற்கு நெருங்கின.

ஆசியா கண்டத்தில் 1944ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை குவோமிந்தான் ஜப்பானியர்களுக்கு எதிராக நடந்த சண்டை களில் 1 மில்லியன் போர்வீரர்களை இழந்தது, 60 மில்லியன் ஜனத்தொகையுடைய நிலப்பரப்பைப் பறிகொடுத்தது. ஆனாலும் மத்திய மற்றும் தெற்கு சீனவை ஆக்கிரமிக்கும் திட்டங்களை ஜப்பா னியர்களால் முற்றிலுமாக நிறைவேற்ற இயலவில்லை. பரவலாக நடைபெற்ற தேசபக்த இயக்கமும் மக்கள் விடுதலை இராணுவங் களின் தீவிர நடவடிக்கைகளும்தான் இதற்குக் காரணமாகும். பர்மாவில் நேச நாட்டுத் துருப்புகள் பர்மிய கொரில்லாப் படை வீரர்களோடு சேர்ந்து நாட்டின் வட பகுதியை விடுவித்தன.

வானிலும் கடலிலும் ஆள் பலத்தில் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் எதிரியை விஞ்சி நின்றதானது நடவடிக்கைகளின் விசேஷ அம்சமாகும். ஜப்பானின் பிரதான சக்திகள் மஞ்சூரியாவிலும் சீன வின் வட பிரதேசங்களிலும் குவிக்கப்பட்டிருந்ததுதான் இதற்கு முக்கியக் காரணமாகும்.

ஒரு தீவுக் கூட்டத்திலிருந்து இன்னொரு தீவுக் கூட்டத்திற்கு ''பாயும்'' முறையின் மூலம் தொடர்ச்சியான படையிறக்க நட வடிக்கைகளை நடத்தி, தரைப்படை, வான் படை, கடற்படையின் பெரும் சக்திகளைக் கொண்டு நேச நாட்டினர் தாக்குதலைத் தொடுத் தனர்.

அமெரிக்கப் படைத் தலைமை படையிறக்க நடவடிக்கையைப் பின்வரும் முறையில் நடத்தியது. முதலில், கைப்பற்றத் திட்டமிட்ட தீவை, குறிப்பாக அதிலுள்ள வான் தளங்களை மற்றும் அருகி லுள்ள தீவுகளின் வான் தளங்களை நீண்டகால, பூர்வாங்க வான் குண்டு வீச்சிற்கு ஆளாக்கி வானில் ஆதிக்கத்தை வெல்லுவது.

வானில் ஆதிக்கம் வெல்லப்பட்ட பின் நேச நாட்டவரின் கடற் படைச் சக்திகள் எல்லா ரகக் கப்பல்களோடும் கரையை நெருங்கி இறக்குப்படையை இறக்கின. சாதாரணமாக இறக்குப்படையின் முதல் வரிசை கடல் காலாட்படைப் பிரிவுகளால் ஆனதாயிருந் தது; இது கப்பல் பீரங்கிகள் மற்றும் விமானப்படையின் மூடு பாதுகாப்போடு இறக்கப்பட்டது. முதல் அணிகளில் நீரில் செல்லவல்ல டாங்கிகளும் கவச வாகனங்களும் இயங்கின. நேரடி

நடைமுறை தாக்குமுனையைக் கைப்பற்றி அதில் உறுதியாக நிற்பது தான் முதல் படை வரிசையின் கடமையாக இருந்தது. இதன் பின்னர்தான் இறக்குப்படையின் அடுத்த வரிசைகளை இறக்குவது ஆரம்பமானது.

படையிறக்கத்தின் போது கடற்படையின் அணிவகுப்பு சாதாரண மாகப் பின்வருமாறு இருந்தது:

—துருப்புகளைக் கொண்ட போக்குவரத்து வாகனங்கள் உள்ளிட்ட இறக்குப்படைப் பிரிவு, விசேஷ இறக்குப்படைக் கப்பல்கள், இறக்குப் படைத் தோணிகள்—நீரில் செல்ல வல்ல கவச வாகனங்கள் மற்றும் டாங்கிகளோடு கூடிய டாங்கி ஏந்திகள்;

—பீரங்கி ஆதரவுப் பிரிவு—போர்க் கப்பல்கள், குரூசர்கள், நாசகாரிக் கப்பல்கள்;

—வான் ஆதரவுப் பிரிவு—விமானந் தாங்கிக் கப்பல்களும் இவற் றைப் பாதுகாக்கும் நாசகாரிக் கப்பல்களும்;

—கண்ணி வெடியகற்றும் பிரிவு—கரையோரத் நீர் பரப்பில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான இழுவைப் படகுகள்.

நடைமுறை தந்திரத்தைப் பொறுத்த மட்டில் இறக்குப்படையின் முதல் அணி இறக்கத்திற்கு ஏற்பாடு செய்தது கவனத்தைக் கவரும் ஒன்றாகும். சாதாரணமாக படையிறக்கத்திற்கு முதல் நாள் இரவு துருப்புகளையும் படையிறக்கு சாதனங்களையும் கொண்ட போக்கு வரத்து கப்பல்கள் கடற்படையின் பாதுகாப்போடு 15—20 கி. மீ. கரையை நெருங்கி படையிறக்கத் தோணிகளைத் தண்ணீரில் இறக்கின. இவை இறக்குப்படையின் முதல் அணியின் துணைப் பிரிவுகளை ஏற்றிக் கொண்டதும் கரையிலிருந்து 4—5 கி. மீ. தள்ளி யிருந்த கூடும் பிரதேசத்தை நோக்கி நகர்ந்தன. அங்கே இறக்குப் படை முதல் அணியின் பட்டாலியன்கள், விசேஷ டாங்கி ஏந்திக் கப்பல்களில் இங்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட நீரில் செல்ல வல்ல கவச வாகனங்களுக்கு மாற்றப்பட்டன. விடியற்காலை இருட் டில், கண்காணிப்பு படகுகள் விசேஷ அடையாள சமிக்ஞையை அளித்ததும் நீரில் செல்ல வல்ல கவச வாகனங்கள் நீரில் செல்ல வல்ல டாங்கிகளோடு கூட்டாகச் சேர்ந்து, விமானப்படையும் கப்பல் பீரங்கிகளும் மூடிப் பாதுகாப்பளிக்க, இறங்க வேண்டிய இடத்தை நோக்கி நகர்ந்தன. இதையடுத்து இறக்குப்படை முதல் வரிசையின் துணைப் பிரிவுகள் இறக்கப்பட்டன. இவ்வாறு இறக் கியது சரியானதாக இருந்தது.

பசிபிக் சமுத்திரத்தில் இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்ற நேரத்தில் விமானந் தாங்கிக் கப்பல்களைப் பயன்படுத்தும் முறை யில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதைக் குறிப்பிட வேண்டும். யுத்தத்தின் முதல் ஆண்டுகளில் விமானந் தாங்கிக்

கப்பல்கள் சாதாரணமாக எதிரியிடமிருந்து கணிசமான தூரம் தள்ளியே இருந்தன, இவற்றின் விமானங்களும் எதிரி போர்க் கப்பல்களின் மீது அவ்வப்போது மட்டும்தான் தாக்குதலைத் தொடுத் தன. 1944இலிருந்து விமானந் தாங்கிக் கப்பல்கள் படையிறக்கத் திற்கு நேரடியாக ஆதரவளிக்கவும் கடற்படைக்கு ஒரு வான் திரை யாக இருந்து மூடி மறைக்கவும் பயன்படுத்தப்படலாயின.

7. எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சி

சோவியத் ஜெர்மானியப் போர்முனையில் சோவியத் இராணுவத் தின் வெற்றிகள் மற்றும் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தது ஆகியவற்றின் தாக்கத்தினால் 1944ஆம் ஆண்டு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் எதிர்ப்பு இயக்கம் உச்ச கட்டத்தை அடைந்தது. உதாரணமாக யுகோஸ்லாவிய, கிரேக்க மற்றும் ஆல்பானிய மக்கள் விடுதலை இராணுவங்கள் (1944இல் இவற்றில் 4,50,000 ஆட்கள் வரை இருந்தனர்) தமது தீவிர நடவடிக்கைகளால் 19 எதிரி டிவிஷன்களைக் கட்டிப் போட் டன. பிரான்சில் எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் பேர்கள் 7—8 பாசிச டிவிஷன்களைக் கட்டிப் போட்டனர். போலந்து, செக்கோஸ்லொவாக்கியா மற்றும் பாசிச ஜெர்மானியத் துருப்பு களால் ஆக்கிரமிக்கப்பட்ட மற்ற ஐரோப்பிய நாடுகள் ஆகிய வற்றில் கொரில்லாப் படை இயக்கம் வளர்ந்து பரந்தது. மொத்த மாக ஐரோப்பிய நாடுகளில் சுமார் 20 லட்சம் தேசபக்தர்கள் ஆயுதமேந்திப் போரிட்டனர்.

விடுதலை இயக்கத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் இராணுவ நடவடிக்கைகள் அதிகப் பெரிய அணிகளாலும் யூனிட்டுகளாலும் நடத்தப்பட்டதாகும். பல நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நிரந்தர துருப்புகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிக நெருக்கமானதாகவும் நேரடியானதாகவும் மாறியது. போராட்டப் போக்கில் மக்களாட்சியின் தலைமறைவு உறுப்புகள் தோன்றி வளர்ந்தன.

சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் சோவியத் துருப்பு கள் வெற்றிகரமாகத் தாக்கி வந்த சூழ்நிலைகளில் பல நாடுகளில் பாசிச எதிர்ப்பு இயக்கம் தன் உயர் வடிவமாகிய பொது மக்களின் ஆயுத எழுச்சிகளாக வளர்ச்சியடைந்தது. ருமேனியாவில் 1944 ஆகஸ்டு 23இல் மக்கள் ஆயுத எழுச்சியும் பல்கேரியாவில் 1944ஆம் ஆண்டு செப்டெம்பர் ஆயுத எழுச்சியும் 1944ஆம் ஆண்டு இலை யுதிர்காலத்தில் ஸ்லவாக்கிய தேசிய எழுச்சியும் வெடித்தன.

பல்வேறு ஜனநாயகக் கட்சிகள், ஸ்தாபனங்களுடன் கூட்டாக

இயங்கிய கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள்தான் எதிர்ப்பு இயக்கத்திற்கு ஊக்கமூட்டி, ஒழுங்கமைத்து அதில் தீவிரப் பங்கேற்றன. உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களைப் பாதுகாப்பதிலும் ஏகாதிபத்தியம் மற்றும் இதனால் தோற்றுவிக்கப்பட்ட பாசிசம் ஆகியவற்றின் பிற்போக்குச் சாரத்தை அம்பலப்படுத்துவதிலும் விடுதலை இயக்கத்தை வளர்ப்பதிலும் இவைதான் மிக உறுதியானவையாக இருந்தன. பாசிசத்தை வேரோடு அறுத்தெரியவும் தம் நாடுகளின் சமூக வாழ்வை ஜனநாயகமயமாக்கவும் பாசிச ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தில் இந்நாடுகள் தீவிரப் பங்கேற்பதற்காகவும் கம்யூனிஸ்டுகள் உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் போராடினர்.

1944ஆம் ஆண்டு பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், மற்ற நாடுகளில் எதிர்ப்புச் சக்திகள் மேற்கொண்டு உறுதியடைந்தன.

பிரான்சில் 1943 மேயில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய எதிர்ப்புக் கவுன்சில், 1944 மார்ச் 15இல் எதிர்ப்பு இயக்க செயல்திட்டத்தை நிறைவேற்றியது. இது பிரான்சை விடுவிப்பதற்கான போராட்டத்தின் உடனடிக் கடமைகளைச் சுட்டிக் காட்டியது, நாடு விடுதலையடைந்த பின் நாட்டுப் பொருளாதார, ஜனநாயக வளர்ச்சியின் வாய்ப்புகளை முன்னறிவித்தது. 1944 வசந்த காலத்தில் எதிர்ப்பு இயக்கத்தின் போராட்ட ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து ''பிரெஞ்சு உள்நாட்டுச் சக்திகளின்'' ஐக்கியப் படை ஒன்றை உருவாக்கின. இதில் தலைமைப் பாத்திரம் கம்யூனிஸ்டுகளின் கரங்களில் இருந்தது. பிரெஞ்சு தேசபக்தர்கள் பாரிஸ், லியோன், கிரெனேபில், இன்னும் சில பெரிய நகரங்கள் உட்பட பிரான்ஸ் நாட்டின் பரப்பில் பெரும் பகுதியை விடுவித்தனர்.

இத்தாலியில் 1944 கோடையில் 1,00,000க்கும் அதிகமானோர் அடங்கிய ''விடுதலைப் போராட்டத்தின் வாலண்டியர் கோர்பஸ்'' என்ற தேசபக்தர்களின் படை தோன்றியது. இத்தாலிய தேசபக்தர்கள் வட இத்தாலியின் பரவலான பிரதேசங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தனர். நகரங்களிலும் கிராமங்களிலும் தேசபக்த இயக்கக் குழுக்கள் உருவாயின. 1944—1945 குளிர்காலத்தில் வடக்கு இத்தாலியின் தொழிற்துறை மையங்களில் வெகுஜன வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன, 1945 ஏப்ரல் சர்வபொது வேலை நிறுத்தம் துவங்கி, இது பொது மக்கள் எழுச்சியாக வளர்ந்தது. இது இங்கே பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் வரும் முன்னராகவே வடக்கு மற்றும் மத்திய இத்தாலி பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்படுவதில் முடிந்தது.

பெல்ஜியத்தில் 1944 கோடை வாக்கில் 50,000 வரையிலான கொரில்லாப் படைவீரர்கள் இயங்கினர். இவர்களின் ஆயுதப்

போராட்டம் பொது தேசிய எழுச்சியில் முடிந்தது. இந்த எழுச்சி செப்டெம்பரில் நாடு முழுவதும் பரவியது.

கிரீஸில் 1941 செப்டெம்பரில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய விடுதலை முன்னணி விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியது. தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்த முன்னணியின் உட்கருவாக இருந்தனர். 1941ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தோன்றிய கொரில்லாப் படை அணிகள் தேசிய விடுதலை இராணுவமாக ஒன்றிணைந்தன. இது விடுதலைக்காகவும் நாட்டின் சுதந்திரத்திற்காகவும் தன்னலமின்றி போரிட்டது. இந்த இரண்டு அமைப்புகளிலும் தலைமைப் பாத்திரம் கிரீஸ் கம்யூனிஸ்டுக் கட்சியிடமிருந்தது.

சோவியத் இராணுவம் பால்கனில் விரைவாக முன்னேறியதால் தோன்றிய அனுகூலமான நிலவரத்தைப் பயன்படுத்திக் கொண்ட கிரேக்க தேசபக்தர்கள் 1944 அக்டோபர் இறுதியில் கிரீஸ் நாட்டின் நிலப்பரப்பை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதில் வெற்றி கண்டனர், இதன் மூலம் பாசிசத்தை முறியடிக்கும் பொது லட்சியத்திற்கு தம் பங்கை ஆற்றினர்.

மற்ற நாடுகளிலும் ''உள்நாட்டுப் போர்முனை'' நிலவியது. ஆசியாவிலும் எதிர்ப்பு இயக்கம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. உதாரணமாக 1944ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 8வது மற்றும் புதிய 4வது சீனப் படைகள் சீனாவிலிருந்த ஜப்பானிய மற்றும் கோமிந்தான் துருப்புகளின் கணிசமான சக்திகளைக் கட்டிப் போட்டன. வியட்நாமில் 1944ஆம் ஆண்டு ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. இது வெளியிட்ட அரசியல் வேலைதிட்டத்தில், இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் மீது வெற்றி அடையப்பட்டதும் இடைக்கால அரசாங்கம் தோற்றுவிக்கப்படுமென்றும் இது வியட்நாமின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

1944ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்தோனீஷியாவில் ''சுதந்திர இந்தோனீஷிய இயக்கம்'' என்ற தலைமறைவு ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. பர்மாவில் பொது தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி உருவாகி வந்தது. பிலிப்பீன் தீவுகளில் எதிர்ப்புச் சக்திகள் தீவிரமாக இயங்கின. உதாரணமாக 1944ஆம் ஆண்டு ஹுக்பலாஹா மக்கள் இராணுவம் குடிமக்களின் தீவிரப் பங்கேற்போடு கூட லுசோன் தீவின் பல பிரதேசங்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தது, இங்கே ஜனநாயக மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் இவற்றை உறுதிப்படுத்த இயலவில்லை. அமெரிக்கத் துருப்புகள் தீவில் இறங்கிய பின் மாக்கார்தூர் படைத் தலைமையகம் மேற்கொண்ட முதல் நடவடிக்கை எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்களைக் கைது செய்ததாகும்.

சோவியத் யூனியன் செய்ததைப் போல் அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்களும் இவற்றின் படைத் தலைமையும் எதிர்ப்பு இயக்கத்திற்குத் தேவையான ஆதரவு அளித்திருந்தால் இந்த இயக்கம் மிகப் பெரும் பயன்களை அளித்திருக்கக் கூடும்.

பொது மக்களின் போராட்டம் விரிவடையக் கூடும் என்றும் இந்நாடுகளில் ஆழ்ந்த சமூக ஜனநாயக மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்றும் அஞ்சிய அமெரிக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் எதிர்ப்பு இயக்கத்தை முடிந்த வழிகளில் எல்லாம் கட்டுப்படுத்தின, வலது சாரி அரசியல் குழுக்களின் தலைமையின் கீழிருந்த பிரிவினருக்குப் பெரிதும் உதவி செய்தன.

அதே நேரத்தில் சோவியத் யூனியனோ, தமது தேசிய மற்றும் சமூக விடுதலைக்காகப் போராடிய மக்களின் அபிலாஷைகளை எப்போதும் பூர்த்தி செய்ய முயன்றது, இயன்ற வரை அவர்களுக்கு உதவி செய்யப் பாடுபட்டது. 1944ஆம் ஆண்டு வசந்த காலத்தில் சோவியத் யூனியனின் பரப்பில் 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ், 1வது போலந்து படை மற்றும் யுகோஸ்லாவிய காலாட்படை பிரிகேடு ஆகியவை தோற்றுவிக்கப்பட்டதிலும், போலந்து, செக்கோஸ்லொவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் கொரில்லாப் படை இயக்கத்தின் வளர்ச்சிக்காக தொண்டர்கள், ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள் மற்ற இராணுவப் பொருட்களை வழங்கி நடைமுறை ரீதியாகப் பெரும் உதவி செய்ததிலும் இது திட்டவட்டமாக வெளிப்பட்டது. சோவியத் யூனியனின் பரப்பில் இயங்கிய 7 கொரில்லாப் படை யூனிட்டுகளும் 26 கொரில்லாப் படை அணிகளும் 1944ஆம் ஆண்டு வசந்த காலத்தில் போலந்திற்கு அனுப்பப்பட்டன.

பல ஐரோப்பிய நாடுகளில், பாசிச கொடுஞ்சிறை முகாம்களிலிருந்து தப்பிய சோவியத் மக்களும் எதிர்ப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு போரிட்டனர். பல சோவியத் தேசபக்தர்கள் பாசிச எதிர்ப்புக் குழுக்களின் தலைவர்களாகவும் கொரில்லாப் படை அணிகளின் கமான்டர்களாகவும் இருந்தனர்.

ஐரோப்பிய நாடுகளில் கொரில்லா இயக்கத்திற்கு சோவியத் யூனியன் அளித்த உதவி பெரும் இராணுவ, தார்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சோவியத் துருப்புகளின் வெற்றிகளோடு சேர்ந்து இது பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் லட்சோப லட்சம் மக்களுக்கு உற்சாகமூட்டியது, அவர்களிடம் சக்தியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

எதிர்ப்பு இயக்கம் கடுமையான இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. போர்க்களங்களிலும் பாசிச சிறைகளிலும் நூறாயிரக் கணக்கான தேசபக்தர்கள் மாண்டனர். பாசிசத்திற்கு எதிரான

போராட்டத்தின் முன்னணிப் படையாக இருந்த கம்யூனிஸ்டு களுக்குக் குறிப்பாக பேரிழப்பு ஏற்பட்டது.

எதிர்ப்பு இயக்கம் பெரும் அரசியல், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது பாசிசத்தை முறியடிப்பதில் கணிச மான பங்காற்றியதோடு கூட யுத்தத்திற்குப் பிந்தைய உலக வளர்ச்சியின் மீதும் கணிசமான தாக்கத்தைச் செலுத்தியது. எதிர்ப்பு இயக்கம், கொரில்லாப் படைவீரர்கள், ஆயுத எழுச்சியில் பங்கேற்றவர்கள் ஆகியோர் பாசிசத்திற்கு எதிரான போராட்டத் தில் ஆற்றிய முக்கியப் பங்கைக் குறிப்பிட்ட லி. இ. பிரேஷ்னெவ், கடந்த யுத்தத்தில் சோவியத் மக்கள் அடைந்த மகத்தான வெற்றி யின் 30ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிஞர்:

''கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கி நடத்தப்பட்ட யுகோஸ் லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் வீரஞ் செறிந்த போராட் டம், போலந்து, செக்கோஸ்லொவாக்கிய தேசபக்த வீரர்களால் உருவாக்கப்பட்ட படைகள், யூனிட்டுகளின் வீரச் செயல்கள் ஸ்லொவாக்கியா, ருமேனியா, பல்கேரியாவில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகள், ஆல்பானிய மக்களின் விடுதலைப் போராட்டம், எதிர்ப்பு இயக்கம், பிரான்ஸ், இத்தாலி, மற்ற நாடுகளில் கொரில்லாப் படை அணிகளின் நடவடிக்கைகள், எதிரியின் நாட்டினுள்ளே நடைபெற்ற பாசிச எதிர்ப்புத் தலைமறைவுக் குழுக்களின் போராட் டம் இவையனைத்தும் இறுதியில் சோவியத் மக்களின் போராட்டத் தோடு ஒன்றிணைந்து ஐரோப்பாவிலிருந்து பாசிசத்தைக் கழுவித் தள்ளிய ஒரு மகத்தான பெருக்காக மாறின''[*].

8. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி பலமடைதல்

1944ஆம் ஆண்டு ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி தொடர்ந்து வளர்ந்து, வலுவடைந்து வந்தது. இதில் சோவியத் யூனியனின் பெரும் பங்கு இருந்தது. முற்போக்கு மனித குலம் அனைத்தின் அபிலாஷைகளையும் நாட்டங்களையும் வெளிப்படுத்திய இது மக்களின் பாசிச எதிர்ப்பு கூட்டணியை விரிவுபடுத்தி, உறுதிப்படுத்துவதன் மீது தன் முயற்சிகளைச் செலுத்தியது. 1943 டிசம்பர் 12ஆம் தேதி நட்புறவு, பரஸ்பர உதவி மற்றும் யுத்தத்திற்குப் பிந்தைய ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பற்றி சோவியத்-செக்கோஸ்லொ வாக்கிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. யுகோஸ்லாவிய மக்களின் பாசிச எதிர்ப்பு சபை இந்நாட்டின் உயர்மட்ட சட்டமி யற்றும் மற்றும் நிர்வாக உறுப்பாக மாற்றப்பட்டதையும் யுகோஸ்

---

[*] லி. இ. பிரேஷ்னெவ், சமாதானம், சோஷலிசத்தின் பாதுகாப்பில், மாஸ்கோ, 1979, பக்கம் 377 (ருஷ்ய மொழியில்).

லாவிய தற்காலிக அரசாங்கமாக தேசிய விடுதலைக் கமிட்டி தோற்றுவிக்கப்பட்டதையும் சோவியத் அரசாங்கம் 1943ஆம் ஆண்டு டிசம்பர் 14இல் வெளியிட்ட ஒரு விசேஷ அறிக்கையில் வரவேற்றது. சோவியத் துருப்புகள் போலந்து பரப்பிற்குள் வந்த பின் சோவியத் பிரதானப் படைத் தலைமைக்கும் போலந்து நிர்வாகத்திற்கும் இடையேயான உறவுகளைப் பற்றி 1944 ஜூலை 21இல் தோற்றுவிக்கப்பட்ட போலந்து தேசிய விடுதலைக் கமிட்டிக்கும் சோவியத் அரசாங்கத்திற்கும் இடையே 1944 ஜூலை 26இல் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி விடுவிக்கப்பட்ட போலந்தின் பரப்பில் போலந்து தேசிய விடுதலைக் கமிட்டியின் ஆட்சி அங்கீகரிக்கப்பட்டது. 1944 டிசம்பர் 10ஆம் தேதி சோவியத் யூனியனுக்கும் பிரான்சிற்கும் இடையே ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இதுதான் தற்காலிக பிரெஞ்சு அரசாங்கம் முழு சமத்துவத்தின் அடிப்படையில் இன்னொரு வல்லரசுடன் செய்து கொண்ட முதல் ஒப்பந்தமாகும்.

ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி உருவாகி, வலுவடைந்தது எப்போதுமே சுமுகமாகவும் சச்சரவின்றியும் நடைபெறவில்லை. இந்தக் கூட்டணி தோன்றியதிலிருந்தே சோவியத் யூனியன் ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதைப் பற்றிய பிரச்சினையை முன்வைத்தது. இது 1941ஆம் ஆண்டு ஜூலை 18இல் சோவியத் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. அன்றைய தினம் ஸ்தாலின் சர்ச்சிலுக்கு அனுப்பிய செய்தியில் மேற்கே இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுமிருந்த பொது மக்கள், யுத்தத்தின் காலக்கெடுவைக் குறைக்கவும் மக்களின் இழப்புகளையும் இன்னல்களையும் குறைக்கவும் உண்மையான வாய்ப்பு சோவியத் முன்மொழிவில் உள்ளதைக் கண்டு இதை மகிழ்வோடு வரவேற்று ஆதரித்தனர். ஆனால் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஆளும் வட்டங்களோ பல்வேறு சாக்கு போக்குகளைக் கூறி இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதற்கு எதிராகக் கருத்துரைத்து வந்தன. ஸ்தாலின்கிராத் அருகேயும் கூர்ஸ்க் அரைவட்டத்திலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்த போதிலும் 1942இலும் 1943இலும் இது ஆரம்பிக்கப்படவில்லை. மூன்று வல்லரசுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொண்ட டெஹ்ரான் மகாநாட்டில்தான் (1943 நவம்பர் 28—டிசம்பர் 1) இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது பற்றிய திட்டவட்டமான காலக்கெடுவும் இடமும் (1944 மே,

வடக்கு பிரான்ஸ்) இறுதியாக முடிவு செய்யப்பட்டன.

அமெரிக்காவும் பிரிட்டனும் பரஸ்பர ஒப்பந்தத்தின்படி நிலை நாட்டப்பட்ட இராணுவ சப்ளைகளை சோவியத் யூனியனுக்கு அடிக்கடி அளிக்கவில்லை. மாஸ்கோ அருகே சமர் நடந்த போதும் ஸ்தாலின் கிராத் சமரின் போதும் இவ்வாறு நடந்தது. சோவியத் யூனிய னுக்கு கடல் வழியாக இராணுவ சப்ளைகளை அனுப்புவதில் பெரிய இடைவெளி (சுமார் 8 மாதங்கள்) 1943இல் இருந்தது.

போலந்து, யுகோஸ்லாவியப் பிரச்சினைகள், பிரான்ஸ், இத்தாலி மற்றும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடு விக்கப்பட்ட நாடுகள் சம்பந்தமான விஷயங்கள் ஆகியவற்றில் சோவியத் யூனியனுக்கும் இதன் மேற்கத்திய நேச நாட்டினருக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. அமெரிக்கா வும் பிரிட்டனும் போலந்திலும் யுகோஸ்லாவியாவிலும் யுத்தத் திற்கு முந்தைய ஆட்சிகளைப் பதவியிலமர்த்த விழைந்தன. ஆனால் சோவியத் யூனியன் இந்நாடுகளின் மக்கள் ஜனநாயக ஆட்சியை அங்கீகரித்து, ஆதரித்தது, இவற்றின் உள்விவகாரங்களில் பிரிட் டிஷ்-அமெரிக்கத் தலையீட்டைத் தடுத்தது. பிரான்சின் விஷயத்தில் சோவியத் யூனியன் கோட்பாடு வழிப்பட்ட நிலையை மேற்கொண்டு பிரெஞ்சு தேசிய விடுதலைக் கமிட்டியை ஆதரித்தது, பின் இதை பிரான்சின் தற்காலிக அரசாங்கமாக அங்கீகரித்தது. இத்தாலியின் தேசிய சுதந்திரத்தைப் புனரமைத்து, நாட்டு மக்களுக்கு ஜன நாயகச் சுதந்திரங்களை அளிப்பதை முன்னறிவித்த இத்தாலியப் பிர கடனம் ஏற்கப்படுவதை சோவியத் யூனியன் முன்மொழிந்தது.

சோவியத் அரசாங்கத்தின் முன்மொழிவால் யுத்தத்தின் போக் கிலேயே யுத்தத்திற்குப் பிந்தைய உலகின் மறுசீரமைப்பிற்கான முன்தேவைகளுக்கு அடித்தளமிடப்பட்டது. மாஸ்கோ, டெஹ் ரான், யால்தா மற்றும் பாட்ஸ்டாம் ஆகிய இடங்களில் நடை பெற்ற மகாநாடுகளில் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் நேச நாட்டு வல்லரசுகள் மேற்கொண்ட தீர்மானங்கள் இதற்கு நல்ல சான்றாகும்.

1943 அக்டோபரில் மாஸ்கோவில் நடைபெற்ற சோவியத் யூனி யன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் அயல் விவகாரத் துறை அமைச்சர்களின் மகாநாடு யுத்தத்தின் காலக் கெடுக்களை குறைப்பதைப் பற்றிய பிரச்சினையை விவாதித்தது. ஆனால் அமெரிக்காவும் பிரிட்டனும் 1944இல் மேற்கு ஐரோப் பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது சம்பந்தமாக திடமான உறுதிமொழிகளை அளிக்கவில்லை. ஜெர்மனியைப் பிரித்து, மத்திய மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அரசுகளின் சமஷ்டி ஒன்றிணைப்புகளை ஏற்படுத்த வேண்டு

மென அவர்கள் வற்புறுத்தினர். சோவியத் யூனியன் இத்திட்டங் களைத் திடமாக எதிர்த்து, மக்கள் தமது எதிர்காலத்தைத் தாமே முடிவு செய்து கொள்ளும்படி விட்டு விட வேண்டும் என்றது. இது அவர்களின் நலன்களுக்கும் மற்றும் சோவியத் யூனியன், மற்ற நாடுகளுக்கு யுத்தத்திற்குப் பிந்தைய பாதுகாப்பை அளிக்கும் லட்சியங்களுக்கும் முற்றிலும் உகந்ததாயிருந்தது.

மூன்று வல்லரசுகளின் தலைவர்களாகிய ஸ்தாலின், ரூஸ்வெல்ட் மற்றும் சர்ச்சில் ஆகியோர் கலந்து கொண்ட டெஹ்ரான் மகா நாட்டில் (1943 நவம்பர் 28—டிசம்பர் 1) பாசிச ஜெர்மனியை முறியடிப்பதை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளைப் பற்றிய பிரச் சினை முக்கியப் பிரச்சினையாக இருந்தது. 10 லட்சம் பேர்களடங்கிய பிரிட்டிஷ்-அமெரிக்க இறக்குப்படைத் துருப்புகளுடன் மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சோவியத் யூனியனின் வற்புறுத்தலுக்கு ஏற்ப பால்கனில் நேச நாட்டுத் துருப்புகள் நுழைவதைப் பற்றிய பிரிட்டிஷ் திட்டம் கைவிடப்பட்டது.

டெஹ்ரான் மகாநாட்டிற்குப் பின் வெளியிடப்பட்ட பிரகடனத் தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: மூன்று வல்லரசுகளின் தலைவர்களும் ''கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் மேற்கொள்ளப் பட இருக்கும் நடவடிக்கைகளின் அளவுகள் மற்றும் நேரங்கள் சம்பந்தமாக முழு உடன்பாட்டிற்கு வந்துள்ளனர்... தரையில் ஜெர்மானியப் படைகளையும் கடலில் இவற்றின் நீர்மூழ்கிக் கப்பல் களையும் ஒழித்துக் கட்டவும் வானிலிருந்து ஜெர்மானிய இராணுவத் தொழிற்சாலைகளை அழிக்கவும் உலகிலுள்ள எந்தச் சக்தியும் நமக்குத் தடையாக இருக்காது''*. யுத்தத்திற்குப் பிந்தைய ஒத்து ழைப்பு, நிரந்தர சமாதானத்திற்கு ஏற்பாடு செய்வது, ஜெர்மனி யின் எதிர்காலம், கேர்சன் கோடு என்றழைக்கப்படுவதிலிருந்து ஓதெர் ஆற்றின் கோடு வரையிலான போலந்தின் எல்லைகள், கேனிக்ஸ் பெர்கை சோவியத் யூனியனுக்கு அளிப்பது ஆகியவை சம்பந்த மான பிரச்சினைகளும் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியை மேற்கொண்டு பலப்படுத்துவதில் டெஹ் ரான் மகாநாடு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. இதன் முடிவுகள் சமாதான நாட்டமுள்ள சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் புதிய வெற்றியாகத் திகழ்ந்தன.

1945 பிப்ரவரியில் நடைபெற்ற மூன்று வல்லரசுத் தலைவர் களின் யால்தா (கிரீமிய) மகாநாடும் முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றியது: பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் மீது நேச

* **மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை.** ஆவணங்கள், தொகுதி 1, மாஸ்கோ, 1946.

நாட்டு இராணுவங்கள் தாக்குதல் தொடுக்கும் காலக்கெடுகள் ஒப்புக் கொள்ளப்பட்டன, ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைந்த தும்தான் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது என்றும் பாசிசத் தையும் நாசிசத்தையும் ஒழித்துக் கட்டுவது என்றும் போர்க் குற்ற வாளிகளைத் தண்டிப்பது என்றும் ஜெர்மனியின் இராணுவ-தொழிற் துறை உள்ளாற்றலை அழிப்பது என்றும் இது ஐரோப்பிய மக்களுக்கு ஏற்படுத்திய இழப்புகளை ஈடுகட்டுவது என்றும் சுதந்திரமான ஜன நாயக ஜெர்மனியை ஏற்படுத்துவது என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சோவியத் யூனியனின் முன்முயற்சியின் பேரால் கிரீமிய மகாநாட்டு அறிக்கையில் பின்வருமாறு எழுதப்பட்டது: ''ஜெர்மானிய இராணுவ வெறியையும் நாசிசத்தையும் ஒழித்துக் கட்டுவதும் உலகின் அமைதியை ஜெர்மனி இனிமேல் என்றுமே குலைக்காதிருப்பதற்கானதொரு உத்திரவாதத்தை ஏற்படுத்துவதும் தான் நமது உறுதியான லட்சியமாகும்... ஜெர்மானிய மக்களை அழிப்பது நமது நோக்கமல்ல''[9].

மகாநாட்டில் உருவாக்கப்பட்ட ''விடுவிக்கப்பட்ட ஐரோப் பாவைப் பற்றிய பிரகடனம்'', விடுதலை செய்யப்பட்ட நாடுகளின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை ஜனநாயகக் கோட்பாடு களின் அடிப்படையில் தீர்க்கும் போது சோவியத் யூனியன், அமெ ரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஒத்துழைக்க வேண்டு மென முன்னறிவித்தது. ஜெர்மனியிடமிருந்து நஷ்ட ஈடு பெறுதல், போலந்திலும் வெளிநாட்டிலும் உள்ள ஜனநாயகப் பிரமுகர்களின் பங்கேற்புடன் அப்போதிருந்த போலந்தின் தற்காலிக அரசாங் கத்தை மாற்றியமைத்தல் ஆகியவை பற்றிய சோவியத் யூனியனின் முன்மொழிவுகளை அமெரிக்காவும் பிரிட்டனும் ஒப்புக் கொண்டன. பாசிச ஜெர்மனி சரணடைந்து 2—3 மாதங்களுக்குப் பின் ஜப்பா னுக்கு எதிராக யுத்தம் தொடுக்க சோவியத் யூனியன் ஒப்புக் கொண்ட ஒரு உடன்படிக்கை மகாநாட்டில் ஏற்கப்பட்டது.

இம்மகாநாடுகள் எல்லாம் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைப் பலப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றின. இவை சர்வதேச ஒத்து ழைப்பின் நடைமுறை ரீதியான நிறைவேற்றமாயும் இதன் வாய்ப்பு மற்றும் முக்கியத்துவத்தின் தெட்டத் தெளிவான மெய்ப்பாடாக வும் அமைந்தன. இவற்றின் தீர்மானங்கள் பிரிட்டிஷ்-அமெரிக்க-சோவியத் கூட்டணி வலுவடைய உதவின, அதன் எதிரியின் மீது பேரிடிகளாக விழுந்தன. இவை அனைத்திலும் முக்கியப் பங்கு சோவியத் யூனியனைத்தான் சாரும்.

---

[9] சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று நேச வல்லரசுத் தலைவர்களின் கிரீமிய மகாநாடு, *மாஸ்கோ, 1945, பக்கங்கள் 14—15 (ருஷ்ய மொழியில்).*

அத்தியாயம் 6

பாசிச ஜெர்மனியின் முறியடிப்பு முற்று பெறுதல்

1945ஆம் ஆண்டு பாசிச ஜெர்மானிய இராணுவத்தின் மீது சோவியத் இராணுவம் முடிவான வெற்றிகளை அடைந்த ஆண்டாக வரலாற்றில் விளங்குகிறது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இராணுவ-அரசியல் நிலவரம் சோவியத் மக்களின், சோவியத் இராணுவத்தின் பிரம்மாண்டமான வெற்றிகளால் நிர்ணயிக்கப்பட்டது. சோவியத் மக்களின் தன்னலங்கருதா உழைப்பின் பயனாய் சோவியத் இராணுவப் பொருளாதாரம் எதிரியை முறியடிப்பதற்காக இராணுவத்திற்கும் கடற்படைக்கும் தேவையான எல்லாவற்றையும் மேன்மேலும் அதிகமான அளவுகளில் அளித்தது. சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் செல்வாக்கு கணிசமான அளவு அதிகரித்தது. மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனுக்கு 17 நாடுகளுடன் ராஜதந்திர உறவுகள் இருந்தன என்றால் 1944ஆம் ஆண்டின் இறுதியில் இந்த எண்ணிக்கை 41 வரை உயர்ந்தது.

சோவியத் இராணுவம் கடுமையான சமர்களில் பெரும் போர் அனுபவத்தைப் பெற்றது. 1944ஆம் ஆண்டு சோவியத் துருப்புகள் வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுத்து சோவியத் யூனியனின் பரப்பை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தன, இராணுவ நடவடிக்கைகளை ஒரு சில மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பரப்பிற்கு மாற்றின. இந்த வெற்றிகளின் நேரடி விளைவாக பாசிச ஜெர்மனி மேற்கொண்டு பலவீனமடைந்தது. இதன் பொருளாதாரம் ஆட்டங் கண்டது. 1945 ஜனவரி வாக்கில் பாசிஸ்டுகள் ஜெர்மானியத் தொழிற்துறையின் பலம் முழுவதிலும் 15 சதவிகிதத்தை இழந்தனர். ஜெர்மனியின் சர்வதேச நிலைகளும் பலவீனமடைந்தன. சோவியத் இராணுவத்தின் பலத்த தாக்குதல்களின் விளைவாக ஐரோப்பாவில் பாசிசக் கூட்டு முற்றிலுமாகத் தகர்ந்து விழுந்தது;

1945ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சோவியத் யூனியனிடம் உயர் போர் வன்மையுள்ள பெரும் இராணுவம் இருந்தது. நிரந்தர இராணுவம், உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின்

சேம இருப்பு, சோவியத் யூனியனின் மேற்கு, தெற்கு, தொலைக் கிழக்கு எல்லைகள் ஆகியவற்றில் 94,12,000 நபர்கள் இருந்தனர், 1,44,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 15,700 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 22,600 போர் விமானங்களும் இருந்தன. தரைப்படையில் 81,18,000 நபர்களும் விமானப் படையில் 6,33,000 நபர்களும் கடற்படையில் 4,52,000 நபர்களும் வான் எதிர்ப்பு பாதுகாப்பு படையில் 2,09,000 நபர்களும் இருந்தனர்.

இதே நேரத்தில் பாசிச ஜெர்மனியில் வேர்மஹ்டில் 94,20,000 நபர்கள் (பிற தேசிய அமைப்புகளில் இருந்த 3,50,000 நபர்களைச் சேர்க்காது) இருந்தனர். இவர்களில் 75.5 சதவிகிதத்தினர் தரைப் படையிலும் 15.9 சதவிகிதத்தினர் விமானப்படையிலும் 8.6 சதவிகிதத்தினர் கடற்படையிலும் இருந்தனர். இராணுவத்திடம் 1,10,100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 13,200 வரையிலான டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 7,000க்கும் அதிகமான போர் விமானங்களும் 434 பிரதான ரக போர்க் கப்பல்களும் இருந்தன. நிரந்தர இராணுவத்தின் எண்ணிக்கை 5.4 மில்லியனை எட்டியது. மொத்தமாக ஜெர்மனியிடம் 314.5 டிவிஷன்கள் இருந்தன.

வேர்மஹ்டின் பிரதான சக்திகள் முன்போன்றே சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் குவிக்கப்பட்டிருந்தன. இவற்றின் தரப்பில் (சலாஷிஸ்டுகளின் ஹங்கேரிய டிவிஷன்களையும் சேர்த்து) சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் 185 டிவிஷன்களும் 21 பிரிகேடுகளும் இருந்தன. இங்கே 37,00,000 நபர்களிருந்தனர். இவர்கள் 56,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 8,100 டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கிகள், 4,100 போர்க் கப்பல்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தனர். இது தவிர தம் வசமிருந்த பல்வேறு வகையான சேம இருப்புகளையும் பின்னணி அமைப்புகளையும் பாசிசப் படைத் தலைமை பெரும்பாலும் சோவியத் இராணுவத்திற்கு எதிரான சண்டைகளுக்குப் பயன்படுத்தியது. மற்ற போர்முனைகளில் 119 டிவிஷன்கள் அல்லது 38 சதவிகிதம் இருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும் ஜெர்மனியிலும் 16.5 டிவிஷன்கள் அல்லது 5 சதவிகிதம் இருந்தது. எனவே 1945ஆம் ஆண்டிலும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனைதான் இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கிய, தீர்மானகரமான போர்முனையாக விளங்கியது.

1945ஆம் ஆண்டு ஆரம்ப வாக்கில் அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவங்களில் 16.4 மில்லியன் நபர்கள் இருந்தனர், 83,400 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 18,200 டாங்கிகள்

மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 76,100 போர் விமானங்களும் 1,666 பிரதான ரகப் போர்க் கப்பல்களும் இருந்தன. இதில் நிரந்தர சேனைகளிலும் கடற்படையிலும் 8.3 மில்லியன் நபர்கள் இருந்தனர், 57,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 16,200 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 26,000 போர் விமானங்களும் 1,159 பிரதான ரகப் போர்க் கப்பல்களும் இருந்தன.

இவ்வாறாக சக்திகளின் சமன்நிலை ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணிக்கு ஆதாயமானதாக இருந்தது. ஆனால் பாசிச ஜெர்மனியிடம் இன்னமும் போர் வன்மையுள்ள கணிசமான அளவு இராணுவம் இருந்தது. சோவியத் இராணுவத்திற்கு எதிராக பிரதான சக்திகளைக் குவிப்பதன் மூலமும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் உறுதியான தற்காப்பை மேற்கொள்வதன் மூலமும் சோவியத் இராணுவத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி யுத்தத்தை இழுத்தடிக்கலாம் என்றும் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் தனி சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்றும் பாசிச ஜெர்மானியத் தலைமை கணக்குப் போட்டது. ''நேச நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் பதட்டநிலை அதிகமாகி, அவற்றின் பிளவு தவிர்க்க இயலாததாக மாறும் ஒரு நேரம் வரும். எல்லா கூட்டணிகளுமே என்றாவது ஒரு நாள் கண்டிப்பாக உடையும் என்று வரலாறு காட்டுகிறது''* என 1944ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதியிலேயே ஹிட்லர் கூறினான். மேற்குப் போர்முனையில் அல்சாஸ் பிரதேசத்தில் முன்முயற்சியை எப்படியாவது தக்க வைக்க பாசிஸ்டுகள் முயன்றனர். இது நிலவரத்தை ஜெர்மனிக்கு ஆதரவாக மாற்றியிருக்கும். பாசிச ஜெர்மானியப் படைத் தலைமையின் திட்டம் முன்போன்றே எதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இது தன் வாய்ப்புகளை அதிகமாக மதிப்பிட்டு சோவியத் யூனியனின் பெரும் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டது. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி முறியும் என்ற கணிப்பிற்கும் ஆதாரம் இருக்கவில்லை. தம்மிடையே முரண்பாடுகள் நிலவிய போதிலும் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் பிரிட்டனும் பாசிச ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடையுமாறு செய்ய முயன்றன.

சோவியத் இராணுவத்தின் அற்புதமான வெற்றிகளையும் ஐரோப்பாவில் விடுதலை இயக்கத்தின் வெற்றிகளையும் கணக்கில் கொண்ட நேச நாட்டுப் படைத் தலைமை சோவியத் துருப்புகளுக்கு முன்னதாகவே பெர்லினைக் கைப்பற்றுவதற்காக கிழக்கு நோக்கி ஜெர்மனி

---

* *Hitlers Lagebesprechungen. Die Protokollfragmente seiner militärischen Konferenzen 1942—1945,* Stuttgart, 1962, S. 615.

யின் ஆழத்தினுள் முனேப்போடு முன்னேறுவதென திட்டமிட்டது. ஆனுல் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் முறைகளில் அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் இடையே தீவிர வேறுபாடுகள் இருந்தன. பிரிட்டிஷ் படைத் தலைமை ''குறுகிய போர்முனை'' போர்த்தந்திரத்தை ஆதரித்தது; வடக்குத் திசையில் பிரதான தாக்குதலைத் தொடுப்பதற்காக எல்லா நேச நாட்டுச் சக்திகளையும் குவிக்க வேண்டுமென வற்புறுத்தியது. வடக்கிலிருந்து ரூர் பிரதேசத்தை அடைவதற்காக அர்டேன்னிக்கு வடக்கே பிரிட்டிஷ் துருப்புகளைக் கொண்டு பிரதான தாக்குதலைத் தொடுக்கவும் ஹாம்பர்கை நோக்கி விரைவாக முன்னேறவும் அங்கிருந்து பெர்லினுக்குச் செல்லவும் பிரிட்டிஷ் படைத் தலைமை திட்டமிட்டது.

அமெரிக்கப் படைத் தலைமையோ மாருக ''பரவலான போர் முனை'' போர்த்தந்திரத்தை ஆதரித்தது. இது ''ஒன்றிணைந்த அமெரிக்க-பிரிட்டிஷ் சக்திகளைக் கொண்டும் இவற்றிற்கு ஆதரவான மற்ற சக்திகளைக் கொண்டும் முக்கிய மையங்களின் வழியாகச் சென்று, பக்கவாட்டுப் பகுதிகளில் போர்த்தந்திரப் பிரதேசங்களைக் கைப்பற்றி மிக நேரடியான, விரைவான வழியில்...''* பெர்லினைப் பிடிக்கத் திட்டமிட்டது. மேற்குப் போர்முனையில் நேச நாட்டுத் துருப்புகளின் தளபதி ஜெனரல் ஐசன்ஹோவர் நடவடிக்கையை இரண்டு கட்டங்களில் நிறைவேற்றத் திட்டமிட்டார். முதல் கட்டத்தில் 21வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டு தனது வலப் பகுதியில் போர்முனைக் கோட்டை நேர்படுத்திய பின் போனிலிருந்து தெற்கே ரைனை அடைவது. அதே நேரத்தில் 3வது அமெரிக்கப் படை வட கிழக்கு திசையில் மைன்ட்ஸ் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில் மே மாத இறுதியில் ரைன் ஆற்றைக் கடந்து ஜெர்மனியின் ஆழத்தினுள் முன்னேறுவது என்று திட்டமிடப்பட்டது**. 1944 நவம்பர் 1ஆம் தேதி கட்டளையின்படி போர்த்தந்திர விமானப்படையின் நடவடிக்கைகளை இரண்டு திசைகளில், அதாவது எதிரியின் தொழிற்சாலைகள் மற்றும் எரிபொருள் கிடங்குகளின் மீதும் மற்றும் எதிரியின் போக்குவரத்து மையங்கள் மீதும்*** நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. அட்லாண்டிக்கில் இருந்த நேச நாட்டவரின் கடற்

---

* எஃப். போக்யூ, உயர்மட்ட படைத் தலைமை. ஆங்கிலத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1959, பக்கம் 312.

** R. Parkinson, *A. Day's March Nearer Home. The War History from Alamein to V-Day Basen on the War Cabinet Papers of 1942 to 1945*, London, 1974, p. 412.

*** ஜா. ஏர்மன், பெரும் போர்த்தந்திரம். 1944 அக்டோபர் — 1945 ஆகஸ்டு. ஆங்கிலத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1958, பக்கங்கள் 24, 28.

படைச் சக்திகளுக்குத் தம் கடல் போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாக்கும் கடமை அளிக்கப்பட்டது.

பாசிஸ்டுகளின் திட்டத்திற்கு மாறாக சோவியத் படைத் தலைமையின் திட்டம் இராணுவ-அரசியல் மற்றும் போர்த்தந்திர நிலவரத்தைப் பற்றிய பரிபூரண மதிப்பீடு, சோவியத் பொருளாதாரத்தின் உண்மையான வாய்ப்புகள், சோவியத் இராணுவம் மற்றும் கடற்படையின் பலம், போர் வன்மை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டிருந்தது.

பால்டிக் முதல் கர்பாத்து மலைகள் வரையில் 1,200 கி. மீ. நீள போர்முனையில் ஒரே நேரத்தில் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாசிச ஜெர்மனியின் முறியடிப்பை முடிப்பது, நேச நாட்டவரோடு சேர்ந்து அது நிபந்தனையின்றி சரணடையுமாறு நிர்ப்பந்திப்பது என்பதுதான் சோவியத் படைத் தலைமையின் திட்டமாக இருந்தது. சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் மையத்தில், போலந்தில், பெர்லின் போர்த்தந்திர திசையில் பிரதான தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. வீஸ்லா-ஓதெர் நடவடிக்கை, கிழக்கு பிரஷ்ய, கிழக்கு பொமெரானிய நடவடிக்கைகள், ஹங்கேரி, செக்கோஸ்லொவாக்கியா, ஆஸ்திரியாவை விடுவிக்கும் நடவடிக்கைகள், ஜெர்மனியை முழுவதுமாக முறியடிக்கும் நடவடிக்கை போன்றவற்றை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

1. போலந்தின் விடுதலை (1945 ஜனவரி 12 — பிப்ரவரி 2)

போலந்தை விடுவிப்பதில் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை, வார்ஸா-பெர்லின் திசையில் முன்னேறிய 1வது பெலோருஷ்ய, 1வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகளுக்கு முக்கியப் பங்களித்தது. வீஸ்லா மற்றும் சன்டமீர் தாக்குமுனைகளிலிருந்து பலத்த தாக்குதலைத் தொடுத்து வீஸ்லாவிற்கும் ஓதெருக்கும் இடையில் ஜெர்மானியர்களின் பெரும் படைத் திரட்டை முறியடித்து போலந்தை விடுவிக்குமாறு இத்துருப்புகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இந்த இரு சேனைகளின் துருப்புகளுக்கும் வடக்கேயிருந்து 2வது பெலோருஷ்ய சேனையின் இடப் புறப் படைப்பிரிவுகளும் யூனிட்டுகளும் தெற்கேயிருந்து 4வது உக்ரேனிய சேனையின் வலப் புறப் படைப்பிரிவுகளும் யூனிட்டுகளும் உதவியளிக்க வேண்டியிருந்தது.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் 1வது பெலோருஷ்ய சேனையிலும் (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல் ஜூக்கவ்) 1வது உக்ரேனிய சேனையிலும் (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல் கோனெவ்)

மட்டும் 16 காலாட்படை, 4 டாங்கி, 2 வான் படைகளும் ஒரு சில தனி டாங்கி, இயந்திரப்படை, குதிரைப்படை கோர்பஸ்களும் சேனைக்குக் கட்டுப்பட்ட ஏராளமான படைப்பிரிவுகளும் இருந்தன. இவற்றில் 2.2 மில்லியன் நபர்கள் இருந்தனர், 33,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7,000 டாங்கிகள் மற்றும் தானி யங்கி பீரங்கி அமைப்புகளும் 5,000 விமானங்களும் இருந்தன. ஒரு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக இதுவரை குவிக்கப்பட்ட சோவியத் துருப்புகளின் போர்த்தந்திர படைத் திரட்டுகளிலேயே இதுதான் மிகப் பெரியதாகும். சேனைகள் 500 கி. மீ. மண்டலத்தில் வீஸ்லாவின் இடது கரையில் மாக்னுஷேவ், புலாவா, சன்டமீர் பிரதேசங்களில் 3 தாக்குமுனைகளைத் தம் வசம் வைத்துக் கொண்டு இயங்கின. இவற்றிற்கு எதிராக 5,60,000 வரையிலான போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளையும் சுமார் 5,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் 1,200க்கும் கூடுதலான டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் 600க்கும் அதிகமான விமானங்களையும் கொண்ட பாசிச ஜெர்மனியின் "A" படைத் தொகுதியின் பிரதான சக்திகள் (ஜனவரி 26இலிருந்து "சென்டர்", தளபதி கர்னல் ஜெனரல் ஹார்பெ) தற்காப்பில் நின்றன. மேலும் சமர் நடந்து கொண்டிருந்த போது தற்காப் பைப் புனர்நாட்டுவதற்காக எதிரி மேற்குப் போர்முனையிலிருந்தும் ஜெர்மனியின் ஆழத்திலிருந்தும் ஓரளவிற்கு சோவியத்-ஜெர்மா னியப் போர்முனையின் மற்ற பகுதிகளிலிருந்தும் சுமார் 40 டிவிஷன் களை போலந்திற்கு அனுப்பினான்.

சோவியத் துருப்புகளின் தாக்குதலை முறியடிக்கத் தயாரான பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை போலந்தின் பரப்பில் வீஸ்லா விற்கும் ஓதெருக்கும் இடையில் 7 தற்காப்பு எல்லைகளை உள்ளடக் கிய, 500 கி. மீ. ஆழம் வரை படை வரிசைகளைக் கொண்ட, சிக்கலான தற்காப்பு முறையை முன்கூட்டியே ஏற்படுத்தியது. இதன் உறுதியை குறிப்பாக டாங்கி எதிர்ப்பு விஷயத்தில் பெருக் குவதற்காக வீஸ்லா, வார்டா, ஓதெர் (ஓத்ரா) ஆறுகள் பரவ லாகப் பயன்படுத்தப்பட்டன. தற்காப்பு எல்லைகளின் அமைப்பில் நீண்டகாலத் தற்காப்பிற்காகத் தயாரிக்கப்பட்ட மோட்லின், வார்ஸா, லோட்ஸ், ரதோம், கேல்ட்ஸே, கிராக்கவ், பிரோம் பெர்க் (பீட்கஷ்), போஸ்னன், பிரெஸ்லாவு (விரோத்ஸ்லாவ்), ஓப்பெல்ன் (ஓப்பொலே), ஷ்னைதெமியூல் (பீலா), குஸ்ட்ரின் (கோஸ்த்ஷின்), கிளோகாவு (கிளோகுவ்) போன்ற நகரங்களும் கோட்டைகளும் சேர்க்கப்பட்டன. 30 — 70 கி. மீ. பொது ஆழ முடைய 4 மண்டலங்களை அடக்கிய வீஸ்லா எல்லையும், குரோ யித்ஸ் (கிஷிஜ்) எல்லையும், பொமெரானியா, மெஸெரித்ஸ், கிளோ

காவு-பிரெஸ்லாவல் ஆகிய பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய உன்ருஸ்தாத் (கார்கோவா) எல்லையும் அதிகபட்சம் உறுதியாக பலப்படுத்தப்பட்டிருந்தன. தயார்படுத்தப்பட்ட எல்லை களின் உறுதியான தற்காப்பால் சோவியத் துருப்புகளின் தாக்குதல் வாய்ப்புகளை பலவீனப்படுத்தவும் இதன் மூலம் யுத்தத்தை இழுத் தடிக்கவும் பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை திட்டமிட்டது.

சோவியத் படைத் தலைமை, தாக்கு முனைகளிலிருந்து ஒரே நேரத்தில் பலத்த பிளவுபடுத்தும் தாக்குதல்களைத் தொடுத்து எதிரியின் தற்காப்பை உடைக்கவும் பெரும் வேகங்களில் முனைப் பாகத் தாக்குதலை வளர்க்கவும் பின்வாங்கும் துருப்புகளும் எதிரியின் சேமப் படைகளும் நிலைப் பெறும் முன் இடைநிலை தற்காப்பு எல்லைகளைக் கைப்பற்றவும் திட்டமிட்டது. நடவடிக்கையின் பொது ஆழம் 1வது பெலோருஷ்ய சேனைக்கு 300—350 கி. மீ.களாகவும் 1வது உக்ரேனிய சேனைக்கு 280—300 கி. மீ.களாகவும் நிலை நாட்டப்பட்டது.

இத்தருணத்தில் போலந்தில் தற்காலிக போலந்து குடியரசு அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. சோவியத் யூனியன் முதலா வதாக இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தது. இது போலந்தின் கிழக்குப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மக்களாட்சியின் செல்வாக்கை பலப்படுத்தும் பாதையில் முக்கிய அம்சமாயும் நாடுதுறந்த பிற் போக்குக் குழுவிற்கும் அதன் பிரிட்டிஷ்-அமெரிக்க ஆதரவாளர் களுக்கும் ஒரு பெரும் அடியாகவும் அமைந்தது.

பாசிச ஆக்கிரமிப்பின் விளைவுகளை இயன்றவரை விரைவாக அகற்றுவதற்காக புதிய போலந்து அரசாங்கம் எல்லா நடவடிக்கை களையும் மேற்கொண்டது. இது ஜனநாயக மாற்றங்களை உறுதி யோடு நிறைவேற்றியது, மக்கள் இராணுவமாகிய போலந்து இரா ணுவத்தைப் பலப்படுத்தியது.

தற்காலிக அரசாங்கத்தின் நடவடிக்கைகளை போலந்து மக்கள் ஆதரித்தனர், சோவியத் இராணுவத்தின் பால் நட்புறவைக் காட் டினர். அவர்கள் பாசிஸ்டுகளை முறியடித்து போலந்திற்கு விடுதலை யைப் பெற்றுத் தரவல்ல உண்மையான சக்தியை சோவியத் இரா ணுவத்திடம் கண்டனர். சோவியத் இராணுவம் தனது தேசபக்த, சர்வதேசியக் கடமையைப் பெருமையோடு நிறைவேற்றி பாசிஸ்டு களை மேற்கே விரட்டியடித்தது. துருப்புகளின் மத்தியில் நடத்தப் பட்ட அரசியல் போதனைப் பணி இதற்குத் துணை புரிந்தது. பாசிச மிருகத்தை அதன் குகையிலேயே சந்தித்து சாகடித்து, பெர்லினின் மீது வெற்றிக் கொடியைப் பறக்க விட வேண்டும் என்ற யுத்தத் தின் இறுதி லட்சியத்தை அடைவதை இப்பணி நோக்கமாகக் கொண்டிருந்தது.

பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து போலந்து மக்களை முழுவதுமாக விடுவிப்பதற்கான போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் கமாண்டர்களும் அரசியல் போதகர்களும் போர்வீரர்களுக்கு எடுத்துரைத்தனர், சோஷலிச அரசின் குடிமகனுக்குரிய பெருமையையும் கௌரவத்தையும் போலந்தின் பரப்பில் புனிதத்தோடு பேணிப் பாதுகாக்குமாறு அறைகூவல் விடுத்தனர். பல படைப்பிரிவுகளில் சோவியத் போர்வீரர்களுக்கும் போலந்து மக்களுக்கும் இடையே அன்பான சந்திப்புகள் நடைபெற்றன. இச்சந்திப்புகளின் போது, போலந்து பூமியை பாசிஸ்டுகளிடமிருந்து விடுவித்ததற்காக போலந்து மக்கள் சோவியத் இராணுவத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

போலந்து இராணுவத்திலும் பெரும் அரசியல் பணி நடைபெற்றது. நாடுதுறந்த அரசாங்கத்தினுடைய பிற்போக்குக் கொள்கையையும் போலந்தினுள் இதன் ஏஜண்டுகளின் விரோத நடவடிக்கையையும் அம்பலப்படுத்தியது இதில் முக்கியப் பங்கு வகித்தது. போலந்து போர்வீரர்கள் அடிக்கடி சோவியத் போர்வீரர்களைச் சந்தித்தனர். இச்சந்திப்புகளில் இரு தரப்பாரும் போர் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர், ஒருவருக்கு ஒருவர் போர்முனை வாழ்க்கையைப் பற்றிக் கூறினர். இவை அனைத்தும் சோவியத் இராணுவத்திற்கும் போலந்து இராணுவத்திற்கும் இடையே இராணுவ ஒத்துழைப்பு பலமடைய உதவின.

° ° °

1945ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி காலையில் 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் பலத்த பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதலுக்குப் பின் தாக்குதலில் இறங்கின. காலாட்படையும் டாங்கிகளும் இரட்டை பீரங்கித் தாக்குதல் அலையின் உதவியோடு இரண்டு மணி நேரத்தில் எதிரியினுடைய தற்காப்பின் இரண்டு நிலைகளைப் பிளந்தன. பாசிஸ்டுகளின் உறுதியான எதிர்ப்பை முறித்த சோவியத் துருப்புகள் அடுத்த நாள் காலைவாக்கில் 35 கி. மீ. நீளத்திற்கும் 20—25 கி. மீ. ஆழத்திற்கும் எதிரி தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தை முற்றிலுமாகப் பிளந்தன. ஜனவரி 15ஆம் தேதி கேல்ட்ஸே பிரதேசத்தில் எதிரியின் டாங்கிப் படைத் திரட்டு முறியடிக்கப்பட்டது. எதிரியை முறியடிப்பதில் 2வது வான் படை தரைப்படையினருக்குப் பெரிதும் உதவியது. இந்த வான் படை விமானிகள் நாளொன்றிற்கு சுமார் 700 பறத்தல்களை நடத்தினர். இவற்றில் 400 பறத்தல்கள் கேல்ட்ஸே மற்றும் ஹிமேல்னிக் பிரதேசங்களில் இருந்த பாசிச டாங்கிப் படை வரிசைகளின் மீது

நடத்தப்பட்டன. ஜனவரி 17ஆம் தேதி போலந்தின் பெரிய இராணுவ-தொழிற்துறை மையமாகிய சென்ஸ்டகவ் விடுவிக்கப்பட்டது. கிராக்கவ் திசையில் சேனையின் இடப் புறத் துருப்புகள் வெற்றிகரமாகத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டன. 59வது, 60வது படைகளின் துருப்புகள் தாக்குதலின் முதல் இரண்டு நாட்களில் தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தைப் பிளந்து கொண்டு ஜனவரி 18 வாக்கில் கிராக்கவ் நகரின் நுழைவாயில்களை அடைந்தன.

சென்ஸ்டகவ்-கிராக்கவ் கோட்டை அதாவது 120 – 140 கி. மீ. ஆழத்தை அடைந்ததன் மூலம் 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே தமது உடனடிக் கடமையை நிறைவேற்றின. பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பின்வாங்கத் துவங்கின.

1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகளும் வெற்றிகரமாகத் தாக்குதலைத் துவங்கின. ஜனவரி 14ஆம் தேதி விடியற்காலையில் 25 நிமிட நேர பீரங்கி மழைக்குப் பின் பலப்படுத்தப்பட்ட முன்னணி பட்டாலியன்கள் எதிரியைத் தாக்கின. பீரங்கித் தாக்குதல் அலை இவற்றின் நடவடிக்கைக்கு ஆதரவளித்தது. காலை 10 மணி வாக்கிலேயே இவை பாசிஸ்டுகளின் முதல் நிலையைப் பிளந்தன. முன்னணி பட்டாலியன்களின் நடவடிக்கைகள் பொது தாக்குதலாக வளர்ந்தன. நாளின் முடிவில் ஜெர்மானியர்களின் தற்காப்பு 12 – 22 கி. மீ. ஆழத்திற்குப் பிளக்கப்பட்டது.

அடுத்த இரண்டு நாட்களில் 1வது, 2வது கார்டு டாங்கிப் படைகள் பிளவிற்குள் அனுப்பப்பட்டன. சேனையின் விமானப்படையும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. ஜனவரி 16ஆம் தேதி மட்டும் இது 3,470 விமானத் தாக்குதல்களைத் தொடுத்து எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

ஜனவரி 17ஆம் தேதி சுற்றி வளைந்து செல்லும் தந்திரத்தின் மூலம் சோவியத் துருப்புகள் போலந்து இராணுவத்தின் 1வது படையோடு சேர்ந்து போலந்தின் தலைநகரமாகிய வார்ஸாவை விடுவித்தன.

விடுவிக்கப்பட்ட நகரம் உயிரிழந்த நிலையிலிருந்தது. வார்ஸாவின் அழகு மிருகத்தனமாக பாசிஸ்டுகளால் அழிக்கப்பட்டிருந்தது துக்கத்தை ஏற்படுத்தியது. நகரத்தின் வளம் கொழிக்கும் வரலாற்று, கட்டிடக் கலை நினைவுச் சின்னங்களையும் விஞ்ஞான செல்வங்களையும் ஆக்கிரமிப்பாளர்கள் கொள்ளையடித்து, அழித்து ஒழித்திருந்தனர். இக்கொடுங்கோலர்கள் தலைநகரத்தின் மிகப்பெரும் புனிதமான யான் மாதா கோயிலை வெடி வைத்து தகர்த்திருந்தனர், அரண்மனையையும் ஒப்பேரா மற்றும் பாலே நாடக மன்றத்

தையும் அழித்திருந்தனர், ஆயிரக்கணக்கான போலந்து மற்றும் வெளிநாட்டு கையெழுத்துப் பிரதிகள், பழைய அச்சேடுகள், வரை படங்கள், தேசப் படங்கள் அடங்கிய நூலகங்களை எரித்திருந்தனர். 1939ஆம் ஆண்டின் இறுதியில் நகரத்தில் 13,10,000 நபர்கள் வாழ்ந்தார்கள் என்றால் நகரம் விடுவிக்கப்பட்ட போது அதில் 1,62,000 நபர்கள் மட்டுமே இருந்தனர்.

வார்ஸா விடுவிக்கப்பட்ட செய்தி மின்னல் வேகத்தில் பரவியது. அடுத்த நாளே நகர வாசிகள் சொந்த நகரத்திற்குத் திரும்பி வர ஆரம்பித்தனர். போலந்து மக்கள் தம்மை விடுவித்தவர்களை மகிழ் வோடு வரவேற்றனர். எல்லா இடங்களிலும் தானாகவே கூட்டங் களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. ஒவ்வொரு போலந்து குடிமகனும் செஞ்சேனை மற்றும் போலந்து இராணுவ வீரர் களுக்கு நன்றி சொல்லவும் மகிழ்வோடு இவர்களுக்கு வரவேற் பளித்து, இயன்ற உதவி புரியவும் முயன்றான்.

தற்காலிக போலந்து அரசாங்கம் சோவியத் அரசாங்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''கொடு மைக்கு ஆளாக்கப்பட்ட எங்களுடைய தலைநகரமாகிய வார்ஸா விடுவிக்கப்பட்டதாலும் லட்சக்கணக்கான எங்களுடைய சகோதர, சகோதரிகளும் ஆயிரக்கணக்கான நகரங்களும் கிராமங்களும் விடு விக்கப்பட்டதாலும் மகிழ்ச்சியோடு நெகிழ்ந்துள்ள நாங்கள் போலந்து மக்கள் அனைவரின் சார்பிலும் புகழ்மிகு செஞ்சேனைக்கும் சோவியத் மக்கள் அனைவருக்கும் ஆழ்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம்''.

பாதிக்கப்பட்டிருந்த வார்ஸாவிற்கு சோவியத் அரசாங்கம் பெரும் உதவி அளித்தது. 60,000 டன் ரொட்டியும் ஏராளமான மருந்துகளும் இலவசமாக வார்ஸா மக்களுக்கு அனுப்பப்பட்டன.

சேனையின் இடப் புறத்தில் லோட்ஸ் நகரை நோக்கியும் பகுதி யளவு சக்திகளைக் கொண்டு ஷித்லோவெட்ஸ் நகரை நோக்கியும் தாக்குதல் தொடர்ந்தது. இங்குதான் சேனையின் படைப்பிரிவுகள் 1வது உக்ரேனிய சேனையுடன் இணைந்தன.

இவ்வாறாக நான்கு நாள் நடவடிக்கையில் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் 100—130 கி.மீ. ஆழத்திற்கு முன்னேறின. செஞ்சேனையின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு பாசிசப் படைத் தலைமை சேம இருப்பிலிருந்தும் மற்ற இடங் களிலிருந்தும் புதிய சக்திகளை உடனடியாகக் கொண்டு வர ஆரம் பித்தது. ஜனவரி 19 முதல் பிப்ரவரி 3வரை இரண்டு சேனைகளின் மண்டலத்திலும் இவ்வாறாக 40க்கும் அதிகமான டிவிஷன்கள் கொண்டு வரப்பட்டன.

நிலவரத்தை மதிப்பிட்ட உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை,

முன்வந்து கொண்டிருந்த எதிரியின் சேமப் படைகளை முறியடிக்கும் பொருட்டு முனைப்போடு எதிரியைப் பின்தொடர்ந்து செல்லுமாறும் போகும் போக்கில் தற்காப்பு எல்லைகளைக் கடந்து ஓதெர் ஆற்றை அடையுமாறும் 1வது பெலோருஷ்ய சேனையின் தளபதி மார்ஷல் ஜூக்கவிற்கும் 1வது உக்ரேனிய சேனையின் தளபதி மார்ஷல் கோனெவிற்கும் கட்டளையிட்டது.

இதுவரை எங்குமே காணப்படாத அளவிற்கு எதிரியைப் பின் தொடர்வது தொடங்கியது, இது இரவும் பகலுமாகத் தொடர்ந் தது. உரிய முறையில் துருப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது இதன் வெற்றிக்கு உதவியது. காலாட்படைகளுக்கு முன்னுல் 30—100 கி. மீ. தூரம் தள்ளி டாங்கிப் படைகள் சென்றன. இவை நாளொன் றுக்கு 40—70 கி. மீ. தூரம் முன்னேறின. இவற்றின் முதல் படை வரிசையின் டாங்கி கோர்பஸ்களிலிருந்து 30—40 கி. மீ. தூரத் தில் முன்னணிப் படையணிகள் இறக்கப்பட்டன. காலாட்படை கள், துப்பாக்கிப்படை கோர்பஸ்கள் மற்றும் டிவிஷன்களிலிருந்தும் முன்னணிப் படையணிகள் பிரிக்கப்பட்டன, பின் இவற்றிற்கு வாகனங்கள் அளிக்கப்பட்டன. படைகளில் இவை 60 கி. மீ. தூர மும் கோர்பசில் 15—20 கி. மீ. தூரமும் டிவிஷனில் 10—15 கி. மீ. தூரமும் பிரதானச் சக்திகளிடமிருந்து தள்ளியிருந்தன. முன்னணிப் தனிப்படையணிகள் முக்கிய எல்லைகளை (இடங்களை) பிடித்து, பிரதான சக்திகள் வரும் வரை அவற்றை வைத்திருந் தன. இதோ ஒரு உதாரணம்.

1வது கார்டு டாங்கிப் படையைச் சேர்ந்த 11வது கார்டு டாங்கி கோர்பசின் முன்னணிப் படையணி கர்னல் குசகோவ்ஸ்கியின் தலைமையில் 44வது கார்டு டாங்கி பிரிகேடைக் கொண்டு முனைப் பாக முன்னேறி ஹோஹ்வால்தே அருகே மெஸேரித் பலப்படுத்தப் பட்ட பிரதேசத்தைப் பிளந்து குஸ்ட்ரினுக்குத் தெற்கே ஓதெர் ஆற்றை அடைந்தது. பிப்ரவரி 2ஆம் தேதி பிரிகேடு ஆற்றைக் கடந்து தாக்குமுனையைக் கைப்பற்றியது. இரண்டு நாட்களுக்கு டாங்கி வீரர்கள் தாக்குமுனையில் கடுமையாகப் போரிட்டு எதிரியின் எல்லா பதிலடிகளையும் முறியடித்து, தமது பிரதானச் சக்திகள் வரும் வரை கைப்பற்றிய நிலைகளை தம் வசம் வைத்திருந்தனர்.

துரத்திச் சென்ற போது 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்பு கள் எதிரியின் போஸ்னன், ஷ்னைதெமியூல் படைத் திரட்டுகளைச் சுற்றி வளைத்தன. ஜனவரி 29ஆம் தேதி இவை பாசிச ஜெர்மனி யின் பரப்பினுள் நுழைந்தன. இது சோவியத் போர்வீரர்களுக்கு ஒரு பெரும் சம்பவமாக அமைந்தது. படைப்பிரிவுகளில் நடை பெற்ற கூட்டங்களில் போர்வீரர்கள், எதற்காகப் பாடுபட் டோமோ, மூன்று ஆண்டுகள் எதைப் பற்றி கனவு கண்டோமோ,

எதற்காக இரத்தம் சிந்திேேனாமோ அதை இறுதியாக அடைந்துள்ளோம் என்று கூறினார்கள். துருப்புகளின் மத்தியில் உயர்வான போர்க்குணமுள்ள மனவெழுச்சி நிலவியது. இத்தகையச் சூழ்நிலைகளில் சாத்தியமான எந்த ஒரு தகாத செயலையும் அனுமதிக்காது இருப்பதற்காக, ஜெர்மானிய மக்களின் பால் மனிதாபிமான உறவின் கோட்பாடுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு சோவியத் அரசாங்கம் தன் துருப்புகளுக்குக் கட்டளையிட்டது. இக்கட்டளைக்கேற்ப கமாண்டர்களும் அரசியல் போதகர்களும் எல்லாப் படைப் பிரிவுகளிலும் படைவீரர்களின் மத்தியில் பெரும் விளக்கப் பணியை மேற்கொண்டனர். செஞ்சேனை வீரர்கள் தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி சோவியத் மனிதனின் பெருமையையும் கௌரவத்தையும் வானுயரத்திற்கு உயர்த்தினார்கள்.

1வது உக்ரேனிய சேனையின் துருப்புகளும் முனைப்போடு செயல்பட்டன. எதிரியைப் பின் தொடர்ந்து செல்லுகையில் இவை பக்கவாட்டிலும் பின்னணியிலும் நடைமுறைத் தந்திரத்தை வெற்றிகரமாக நிறைவேற்றின. இவ்விஷயத்தில் எதிரியின் சிலேஸியப் படைத் திரட்டின் பின்னணியில் ஜெனரல் ரிபால்கோவின் தலைமையில் 3வது கார்டு டாங்கிப் படையின் தந்திரம் கவனிக்கத் தக்கது. மிகப்பெரும் நிலக்கரிச் சுரங்கங்களும் உலோகத் தொழிற்சாலைகளும் உடைய இப்பிரதேசத்தைக் கைவசம் வைத்திருக்க பாசிஸ்டுகள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். டாங்கிப் படையின் தந்திரம் பாசிஸ்டுகளுக்கு எதிர்பாராததாக அமைந்தது. சுற்றி வளைக்கப்படலாம் என்று அஞ்சிய அவர்கள் அவசர அவசரமாக வேர்ஹ்னயா சிலேஸியாவை விட்டு வெளியேறினார்கள். ஆனால் இதற்கு மேற்கே அவர்கள் ஒழிக்கப்பட்டார்கள். பாசிஸ்டுகளால் அழிக்க முடியாது போன இந்தத் தொழிற்துறை பிரதேசத்தின் தொழிற்சாலைகளை உடனடியாக இயக்கி வைக்கும் வாய்ப்பு போலந்து அரசாங்கத்திற்குக் கிட்டியது.

வேர்ஹ்னயா சிலேஸியா வட்டத்திற்காகவும் பின்வாங்கிய எதிரி படைத் திரட்டை ஒழித்துக் கட்டுவதற்காகவும் நடந்த சண்டைகளில் விமானப்படை சோவியத் தரைப்படையினருக்குப் பெரும் உதவி அளித்தது.

ஜனவரி 27ஆம் தேதி சேனையின் இடது புறத் துருப்புகள் அஸ்வென்சிம் கொடுஞ்சிறை முகாமைக் கைப்பற்றின. பாசிஸ்டுகளின் அகோரச் செயல்கள் சோவியத் போர்வீரர்களின் கண்களில் பட்டன.

இக்கொடுஞ்சிறை முகாமில் சிறைக் கைதிகளின் ஆடைகளிருந்த 35 கிடங்குகள் இருந்தன. இவற்றில் 29 கிடங்குகளை பாசிசக் கொலைபாதகர்கள் கடைசி தருணத்தில் அழித்திருந்தனர். ஆனால்

செஞ்சேனையின் முனைப்பான தாக்குதல், இவர்கள் தமது குற்றங்களின் சுவடுகளை முற்றிலுமாக அழிப்பதைத் தடுத்தது. எஞ்சிய 6 கிடங்குகளில் மட்டும் சித்திரவதைப்படுத்தப்பட்டவர்களின் 12 லட்சம் ஜோடி மேலாடைகளும் உள்ளாடைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அஸ்வென்சிம் முகாமின் தோல் தொழிற்சாலையிலோ 1,40,000 பெண்களின் தலைகளிலிருந்து எடுக்கப்பட்ட 7,000 கிலோ தலை முடி கண்டெடுக்கப்பட்டது. இம்முகாமில் மட்டும் சோவியத் யூனியன், போலந்து, பிரான்ஸ், யுகோஸ்லாவியா, செக்கோஸ்லொவாக்கியா, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, ஹாலந்து, பெல்ஜியம் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த 40 லட்சத்திற்கும் குறையாதோர் கொன்று குவிக்கப்பட்டதாக நிபுணர் குழு மதிப்பிட்டது.[°]

ஜனவரி இறுதியில் 1வது உக்ரேனியா சேனை பரவலான போர் முனையில் ஓதெர் ஆற்றை அடைந்து அதைக் கடந்து, ஒரு சில தாக்கு முனைகளைக் கைப்பற்றியது.

1வது பெலோருஷ்ய சேனைகளின் துருப்புகள் முனைப்போடு முன் சென்று ஓதெர் ஆற்றை அடைந்ததால் இவற்றிற்கும் கிழக்கு பிரஷ்யாவை நோக்கி வடக்கே முன்னேறிய 2வது பெலோருஷ்ய சேனையின் பிரதான சக்திகளுக்கும் இடையில் இடைவெளி தோன்றியது. இதை மூடுவதற்காக மார்ஷல் ஜூக்கவ், வார்ஸா விடுவிக்கப்பட்ட பின் இரண்டாவது படை வரிசையிலிருந்த போலந்து இராணுவத்தின் 1வது படையைச் சேர்ந்த இரண்டு டிவிஷன்களை ஒதுக்கினார். ஆனால் இந்த இடைவெளி மேற்கொண்டு அதிகரிக்கத்தான் செய்தது, வட மேற்குத் திசையில் முன்னேறிய 47வது மற்றும் 61வது படைகள் மட்டுமே 1வது பெலோருஷ்ய சேனையின் வலப் புறத்தில் இருந்தன.

சோவியத் துருப்புகள் ஓதெர் ஆற்றை அடைந்ததை அடுத்து வடக்கேயிருந்து எதிரி பதிலடி தொடுக்கும் அபாயம் அதிகமானது. எனவே இத்திசையில் இயங்குவதற்காக சேனைத் தளபதி பிப்ரவரி 1ஆம் தேதி 2வது கார்டு டாங்கிப் படையையும் மறு நாளன்று 1வது கார்டு டாங்கிப் படையையும் திருப்பினார். இவ்வாறாக, பிப்ரவரி 3ஆம் தேதி வாக்கிலேயே 1வது பெலோருஷ்ய சேனையின் 4 காலாட்படை, 2 டாங்கிப் படைகளும் குதிரைப்படை கோர் பசும் எதிரியின் பொமெரானியப் படைத் திரட்டின் ஏராளமான பதிலடிகளை முறியடித்து உறுதியோடு வடக்கு நோக்கி முன்

[°] பிரதான ஜெர்மானிய போர்க் குற்றவாளிகளின் மீதான நியூரென்பர்க் விசாரணை. விவரத் தொகுப்பு, 7 தொகுதிகளில் (பின்னால் ''நியூரென்பர்க் விசாரணை'', 7 தொகுதிகளில்), தொகுதி 4, மாஸ்கோ, 1959, பக்கங்கள் 367—369.

னேறின. பெர்லின் திசையிலோ முந்தைய சண்டைகளில் பலவீன மடைந்த 4 காலாட்படைகளும் 2 டாங்கி கோர்பஸ்களும் 1 குதிரைப்படை கோர்பசும் இருந்தன.

இத்தகைய சூழ்நிலைகளில் பெர்லினை நோக்கிய தாக்குதலைத் தொடர்வது விவேகமற்றதாக மாறியதால் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் கட்டளைகளுக்கேற்ப இது நிறுத்தப்பட்டது. ''நிச்சயமாக, இந்த அபாயத்தை ஒதுக்கித் தள்ளி, 2 டாங்கிப் படைகளையும் 3 – 4 காலாட்படைகளையும் நேரடியாக பெர்லினை நோக்கி அனுப்பி நெருங்கியிருக்கலாம். ஆனால் எதிரி வடக்கேயிருந்து தாக்கி நமது அணிகளை எளிதாகப் பிளந்திருப்பான், ஓதெரில் உள்ள கடக்கும் வழிகளை அடைந்து பெர்லின் வட்டத்தில் சேனைகளின் துருப்புகளை மிக இக்கட்டான ஒரு நிலையில் வைத்திருப்பான்''° என்று மார்ஷல் ஜூக்கவ் பின்னால் எழுதினார்.

சோவியத் இராணுவத்தின் வீஸ்லா-ஓதெர் போர்த்தந்திர தாக்குதல் நடவடிக்கை பெரும் இராணுவ-அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட தன் பயனாய் சோவியத் துருப்புகள் போலந்தின் தலைநகரமாகிய வார்ஸா உட்பட போலந்தின் மத்திய மற்றும் மேற்குப் பிரதேசங்களை பாசிஸ்டுகளிடமிருந்து விடுவித்தன, ஓதெர் ஆற்றைக் கடந்து இதன் மேற்குக் கரையிலிருந்த முக்கியத் தாக்குமுனைகளைக் கைப்பற்றின. பெர்லின் வரை 60 கி. மீ. மட்டுமே எஞ்சியிருந்தது.

20 நாள் நடவடிக்கையின் போது 60 எதிரி டிவிஷன்கள் வரை முறியடிக்கப்பட்டு, ஒழிக்கப்பட்டன, 1,47,000க்கும் அதிகமான போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்டனர், 1,300க்கும் கூடுதலான டாங்கிகள், திடீர்தாக்குதல் பீரங்கிகள், 14,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,360 விமானங்கள் முதலியன கைப்பற்றப்பட்டன.

500 கி. மீ. நீளத்திலும் 500 – 600 கி. மீ. ஆழத்திலுமான போர்முனையில் போகும் போக்கில் தற்காப்பு எல்லைகளையும் பெரும் ஆறுகளையும் கடந்து தாக்குதல் தொடுக்கப்பட்டது. துப்பாக்கிப் படைகளின் துரத்திச் சென்ற வேகங்கள் நாளொன்றுக்கு 35 – 40 கி. மீ.களாகவும் கவச டாங்கிப் படைகளின் வேகங்கள் 70 கி. மீ.களாகவும் இருந்தன. இத்தகைய வேகங்களை சோவியத் துருப்புகள் யுத்தத்திலேயே முதலாவதாக அடைந்தன.

''1945ஆம் ஆண்டின் முதல் மாதங்களில் வீஸ்லாவிற்கும் ஓதெருக்கும் இடையே நடந்தது அனைத்தையும் விவரிப்பது இயலாதது. ரோமானியப் பேரரசு வீழ்ந்த பின் இதைப் போன்ற

° கெ. ஜூக்கவ், நினைவுகளும் சிந்தனைகளும், தொகுதி 2, பக்கம் 267.

ஒன்றை ஐரோப்பா பார்த்ததில்லை''[6] என்று முன்னாள் ஜெர்மானிய ஜெனரல் மெலேன்தின் எழுதினான்.

ஒரே போர்த்தந்திரத் திசையில் ஒவ்வொரு சேனையிலும் இரண்டு டாங்கிப் படைகளைப் பயன்படுத்தியது நடவடிக்கையின் சிறப்பு அம்சமாக இருந்தது. இதன் பயனாய் சேனைகளின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகளின் பிளந்து செல்லும் திறமை அதிகரித்தது, தாக்குதல் நடவடிக்கையில் உயர்வான வேகங்களுக்கு வகை செய்யப்பட்டன. முந்தைய நடவடிக்கைகளுக்கு மாறாகத் தனி டாங்கி பிரிகேடுகளும் ரெஜிமென்ட்டுகளும் கம்பெனி வரை சிறிதாக்கப்பட்டன; துப்பாக்கிப்படைப் பட்டாலியன்களுக்கு அளிக்கப்பட்ட இவை எதிரி தற்காப்பின் பிளவு ஆழம் முழுவதும் பாட்டாலியன்களுக்கு ஆதரவாக இயங்கின. இது காலாட்படைக்கு நேரடி ஆதரவளித்த டாங்கிகளுக்கும் துப்பாக்கிப்படைத் துணைப் பிரிவுகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பைக் கணிசமாக மேம்படுத்தியது.

நடவடிக்கையின் இன்னொரு சிறப்பு அம்சம் என்னவெனில் முக்கியத் திசைகளில் பீரங்கிப்படையின் பெரும் தாக்குதலாகும். இதில் ஒரு சில பீரங்கிப்படைக் கோர்பஸ்களும் பிளவு டிவிஷன்களும் பங்கேற்றன. திடீரென ஒரே நேரத்தில் பீரங்கித் தாக்குதலைத் தொடுக்கும் நோக்கத்தோடு பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதல் சேனைகளின் அளவில் மையப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டது.

நடவடிக்கையின் வெற்றியில் விமானப்படைப் பெரும் பங்காற்றியது. விண்ணில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய இது காலாட்படைகள், டாங்கிப் படைகளின் நடவடிக்கைகளை ஆதரித்தது, எதிரியின் சேமப் படைகள், தற்காப்பு எல்லைகள், படைத் தலைமையகங்கள், பின்னணிகள் மீது பலத்த தாக்குதல்களைத் தொடுத்தது. இரண்டு சேனைகளின் விமானப்படைகளும் 54,000க்கும் அதிகமான விமானப் பறத்தல்களை மேற்கொண்டன, 1,150 வான் சண்டைகளை நடத்தின, 908 எதிரி விமானங்களை அழித்தன. விமானங்களைக் கிளப்புவதற்கும் இறக்குவதற்கும் சோவியத் விமானிகள் வாகனச் சாலைகளைப் பயன்படுத்தினர். உதாரணமாய் மும்முறை சோவியத் யூனியன் வீரர் விருது பெற்ற கர்னல் பக்ரீஷ்கின் தலைமையிலான 9வது கார்டு விமானப்படை டிவிஷன் விமானங்களை கிளப்பி இறக்கும் தளமாக பிரெஸ்லாவ்ல்-பெர்லின் வாகனச் சாலையைப் பயன்படுத்தியது.

---

[6] எஃப். மெலேன்தின், **1939—1945ஆம் ஆண்டுகளின் டாங்கிச் சமர்கள்**, மாஸ்கோ, 1957, பக்கம் 280.

போலந்தை விடுவிப்பதில் போலந்து இராணுவத்தின் யூனிட்டுகள் தீவிரப் பங்கேற்றன. போலந்து போர்வீரர்கள் உயர்வான போர்த் திறமையைக் காட்டினர், வீரத்தையும் ஆண்மையையும் வெளிப்படுத்தினர். போர்க் களங்களில் சோவியத், போலந்து போர்வீரர்களுக்கு இடையிலான வீர நட்பு வலுவடைந்தது.

போலந்து மக்கள் சோவியத் இராணுவத்தின் வீரச் செயலை உயர்வாக மதிக்கின்றனர். வார்ஸாவிலும் மற்ற போலந்து நகரங்களிலும் போலந்து பூமியைப் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதற்காக நடந்த சண்டைகளில் இன்னுயிர் ஈந்த சோவியத் போர்வீரர்களுக்காக மகத்தான நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

2. கிழக்கு பிரஷ்யாவிலும் கிழக்கு பொமெரானியாவிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் முறியடிப்பு

கிழக்கு பிரஷ்ய நடவடிக்கை (1945 ஜனவரி 13—ஏப்ரல் 25). இந்நடவடிக்கை 2வது, 3வது பெலோருஷ்ய சேனைகளின் துருப்புகளாலும் 1வது பால்டிக் சேனையின் ஒரு பகுதியாலும் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையின் உதவியோடு நிறைவேற்றப்பட்டது. கிழக்கு பிரஷ்யாவிலும் போலந்தின் வட பகுதியிலும் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடிப்பதுதான் இதன் நோக்கமாகும்.

பாசிஸ்டுகள் கிழக்கு பிரஷ்யாவை எப்படியாவது தம் வசம் வைத்திருப்பதென முடிவு செய்தனர். இந்நோக்கத்தோடு அவர்கள் 6 பலப்படுத்தப்பட்ட வட்டங்களுடன் பலத்த பல படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பை ஏற்படுத்தினர். ''சென்டர்'' படைத் தொகுதியைக் கொண்டு இப்படைத் திரட்டு அமைக்கப்பட்டிருந்தது. ஜனவரி 26 முதல் ''வடக்கு'' படைத் தொகுதியாக (தளபதிகள் முறையே கர்னல் ஜெனரல் ரெய்ன்ஹார்டும் கர்னல் ஜெனரல் ரென்தூலிச்சும்) பெயர் மாற்றம் செய்யப்பட்ட இதில் 1 டாங்கிப் படை, 2 போர்க்களப் படைகள் மற்றும் 1 வான் படை முதலியன அடங்கியிருந்தன. இவற்றில் மொத்தமாக 7,80,000 நபர்கள் இருந்தனர். இவர்களிடம் 8,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 700 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 755 விமானங்களும் இருந்தன.

சோவியத் படைத் தலைமை இரண்டு பலத்த தாக்குதல்களைத் தொடுப்பதென முடிவு செய்தது. 3வது பெலோருஷ்ய சேனையின் சக்திகளைக் கொண்டு மசூர் ஏரிகளுக்கு வடக்கே ஷ்தாலுபென்னென்

பிரதேசத்திலிருந்து இன்ஸ்தெர்புர்க் மற்றும் கேனிக்ஸ்பெர்க் திசையில் ஒரு தாக்குதலையும், 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகளைக் கொண்டு மசூர் ஏரிகளுக்குத் தெற்கே ரஷான், செரோத்ஸ் தாக்குமுனைகளிலிருந்து மிலாவா, மரியென்புர்க் திசையில் இரண்டாவது தாக்குதலையும் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. இந்த இரண்டு தாக்குதல்களைத் தொடுப்பதன் மூலம் ''சென்டர்'' படைத் தொகுதியை வேர்மஹ்டின் எஞ்சிய சக்திகளிடமிருந்து துண்டித்து, கடலோரமாக அதை நெருக்கி, தனித் தனிப் பகுதிகளாக அதைப் பிரித்து பின் பால்டிக் கப்பற்படையின் உதவியோடு அவற்றை பகுதி பகுதிகளாக ஒழித்துக் கட்டுவதென திட்டம் தீட்டப்பட்டது. சேனைகளின் தாக்குதல்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று 200 கி. மீ.களுக்கும் அதிகமான தொலைவில் தொடுக்கப்பட்டாலும் இவற்றின் நடவடிக்கைகள் மார்ஷல் வசிலேவ்ஸ்கியின் மூலம் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தால் கண்டிப்புடன் ஒத்திசைவிக்கப்பட்டன.

நடவடிக்கையில் 14 காலாட்படைகள், 1 டாங்கிப் படை, 5 டாங்கி மற்றும் இயந்திரப்படைக் கோர்பஸ்கள், 2 வான் படைகள் — மொத்தமாகச் சுமார் 16,70,000 நபர்கள் 25,426 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 3,859 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகள், 3,097 விமானங்கள் முதலியன — பங்கேற்றன.

ஜனவரி 13ஆம் தேதி காலையில் சோவியத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. ஏராளமான நீண்ட கால பீரங்கி சுடுமிடங்கள், மரத்தாலான பீரங்கி சுடுமிடங்களை ஏற்படுத்தி நன்கு பலப்படுத்தப்பட்ட தற்காப்பை ஆதாரமாகக் கொண்டு இயங்கிய எதிரியின் உறுதியான எதிர்ப்பாலும் மோசமான பருவநிலையாலும் தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தைப் பிளந்து செல்வது இழுபறி தன்மையைப் பெற்றது. 2வது பெலோருஷ்ய சேனையில் இந்தத் தற்காப்பு மண்டலம் 2 — 3 நாட்களிலும் 3வது பெலோருஷ்ய சேனையில் 5 — 6 நாட்களிலும் பிளக்கப்பட்டது. இப்பிளவை முற்று பெறச் செய்வதற்காக சேனைகளின் தளபதிகள், சேமப் படைகளையும் மொபைல் படைக் குழுக்களையும் மொபைல் சேனைக் குழுவையும் (3வது பெலோருஷ்ய சேனை) ஈடுபடுத்தினர். எதிரியும் தன் வசமிருந்த எல்லாச் சேமப் படைகளையும் பயன்படுத்தினான்.

மேற்கொண்டு துருப்புகளின் தாக்குதல் வேகங்கள் நாளொன்றுக்கு துப்பாக்கிப்படை யூனிட்டுகளுக்கு 15 கி. மீ. வரையும் டாங்கிப்படை யூனிட்டுகளுக்கு 22 — 26 கி. மீ. வரையும் அதிகரித்தன. இதனால் பிப்ரவரி 1 வாக்கில் சோவியத் துருப்புகளால் எதிரியின் கிழக்கு பிரஷ்ய படைத் திரட்டு முழுவதையும் சுற்றி

வளைத்து ஹைல்ஸ்பெர்க் பகுதி (1 டாங்கி டிவிஷன், 3 மோட்டார் டிவிஷன்கள், 2 தனிப் பிரிவுகள், 1 பிரிகேடு உட்பட 23 டிவிஷன் கள்), கேனிக்ஸ்பெர்க் பகுதி, ஜெம்லான்ட் பகுதி என்று 3 பகுதி களாகப் பிரிக்க முடிந்தது. 2வது பாசிச ஜெர்மானியப் படையின் ஒரு பகுதி சக்தியால் மட்டுமே கிழக்கு பொமெரானியாவிற்கு பின்வாங்கிச் செல்ல முடிந்தது.

பிப்ரவரி 10இலிருந்து 2வது பெலோருஷ்ய சேனையின் பிரதான சக்திகள் கிழக்கு பொமெரானிய நடவடிக்கையைத் துவக்கின. 3வது பெலோருஷ்ய சேனை, 2வது பெலோருஷ்ய சேனையிலிருந்து தனக்கு அளிக்கப்பட்ட 4 படைகளோடும் 1வது பால்டிக் சேனையோடும் (பிப்ரவரி 24இலிருந்து இது ஜெம்லான்ட் படைத் தொகுதியாக மாற்றியமைக்கப்பட்டது) சேர்ந்து, படை மாற்றங்களுக்குப் பின் எதிரியின் கிழக்கு பிரஷ்ய படைத் திரட்டை அழித்தொழிப்பதில் இறங்கியது. எதிரியின் ஹைல்ஸ்பெர்க் படைத் திரட்டு 1945 மார்ச் 13 முதல் 29 வரையிலும் கேனிக்ஸ்பெர்க் படைத் திரட்டு ஏப்ரல் 6 முதல் 9 வரையிலும் ஜெம்லான்ட் படைத் திரட்டு ஏப்ரல் 13 முதல் 25 வரையிலும் அழிக்கப்பட்டன.

கிழக்கு பிரஷ்ய நடவடிக்கையில் சுற்றி வளைக்கப்பட்டு பிரிக் கப்பட்ட எதிரியின் படைத் திரட்டுகள் ஒழிக்கப்பட்டதன் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு: முதலாவதாக, இவையனைத்தும் நன்கு பலப்படுத்தப்பட்ட வட்டங்களில் இருந்தன, பெருமளவு பீரங்கி களைக் கொண்டிருந்தன, உள்போக்குவரத்து மார்க்கங்களில் பரந்த அளவில் அங்குமிங்கும் செல்லும் நிலையில் இவை இருந்தன. அதே நேரத்தில் சோவியத் துருப்புகளுக்கு முந்தைய சண்டைகளில் பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிருந்தன, பொருளாயத சாதனங்கள் மற்றும் ஆயுதத் தளவாட இருப்புகள் கிட்டத்தட்ட முழுமையாகச் செலவிடப்பட்டிருந்தன. இரண்டாவதாக, சுற்றி வளைக்கப்பட்ட படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்டுவது நீண்ட கால (103 நாட்கள்), கடுமையான சண்டைகளில் நிறைவேற்றப் பட்டது; இச்சண்டைகள் காடுகளும் சதுப்பு நிலங்களும் மிகுந்த இடங்களில் தாக்குதலுக்கு ஒவ்வாத பருவநிலைகளில் நடைபெற்றன. மேலும் இப்படைத் திரட்டுகள் கடல் பக்கத்திலிருந்து முழுமை யாக முற்றுகையிடப்படவில்லை. மூன்றாவதாக, சுற்றி வளைக்கப்பட்ட துருப்புகளுடன் சேர்ந்து கொண்டு அவற்றுடன் தரைவழித் தொடர்பை ஏற்படுத்த முயன்ற எதிரியின் பலத்த பதிலடிகளை சோவியத் துருப்பு கள் முறியடிக்க நேர்ந்தது. அபாயம் வந்த திசையில் சக்திகளையும் சாதனங்களையும் விரைவாக மாற்றியமைத்ததால்தான் சோவியத் படைத் தலைமையால் முதலில் எதிரியைத் தடுத்து நிறுத்தவும் பின் நல்ல அடி கொடுத்து ஆரம்ப நிலைக்குப் பின்தள்ளவும் முடிந்

தது. கேனிக்ஸ்பெர்கிற்கு மேற்கே மட்டுமே எதிரி வளேகுடாவின் ஓரமாகச் சிறு இடைவழியை ஏற்படுத்த முடிந்தது. இதுவும் நீண்ட காலம் நிலேத்திருக்கவில்லே. திடீர் தாக்குதல் அணிகள், குழுக் களேப் பரவலாகப் பயன்படுத்தி நான்கு நாட்களில் எதிரியின் நீண்ட கால காப்பரண்களே அழித்த பின் கேனிக்ஸ்பெர்கில் இருந்த எதிரி யின் பாதுகாப்புச் சக்திகள் ஒழித்துக் கட்டப்பட்டன.

கேனிக்ஸ்பெர்கில் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் முறியடிக் கப்பட்டது ஹிட்லருக்கு ஆத்திரமூட்டியது. மூர்க்கமடைந்த ஹிட்லர், கோட்டையின் தலேவனுகிய ஜெனரல் லாஷுவிற்கு (இவன் எற் கெனவே சோவியத் துருப்புகளால் சிறைபிடிக்கப்பட்டிருந்தான்) முன்கூட்டியே மரண தண்டனேயளித்தான். 4வது ஜெர்மானிய போர்க்களப் படையின் தளபதி ஜெனரல் மியூல்லர் பதவி நீக்கம் செய்யப்பட்டு அந்த இடத்திற்கு ஜெனரல் வான் ஸாவுகென் நிய மிக்கப்பட்டான்.

நடவடிக்கையில் பால்டிக் கப்பற்படை சிறப்பாகச் செயல்பட்டது. கண்ணிவெடிகள் இருந்த சிக்கலான சூழ்நிலேயையும் மோசமான பருவநிலேயையும் பொருட்படுத்தாது கப்பற்படையின் விமானங் களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் டர்பேடோ படகுகளும் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களே வெற்றிகரமாகத் தாக்கின, எதிரியின் சரக்கு போக்குவரத்துகளேக் குலேத்தன. விமானப்படை மற்றும் கப்பற்படையின் பீரங்கித் தாக்குதல்களாலும் இறக்குப்படையை இறக்கியும் கப்பற்படைவீரர்கள் சோவியத் தரைப்படைத் துருப்பு களின் தாக்குதலுக்கு வழி கோலினர். ஆனுல் தேவையான கப்பற் படை சக்திகள் இல்லாததால், கடலோரமாக நெருக்கப்பட்ட எதிரியின் படை திரட்டுகளேக் கப்பற்படையால் முற்றிலுமாக முற்றுகையிட இயலவில்லே.

எதிரியின் கிழக்கு பிரஷ்ய படைத் திரட்டை முறியடித்தது பெரும் இராணுவ முக்கியத்துவமுடையது. வேர்மஹ்டின் பெரும் சக்திகள் (25க்கும் அதிகமான டிவிஷன்கள் முற்றிலுமாக அழிக் கப்பட்டன, 12 டிவிஷன்களுக்கு 50 முதல் 75 சதவிகிதம் சேத முற்றன) செயலற்றவையாக்கப்பட்டன, ஜெர்மானியக் கப்பற் படையோ ஒரு சில கப்பற்படைத் தளங்களே இழந்தது. கிழக்கு பிரஷ்ய நடவடிக்கையானது பெர்லின் நடவடிக்கையை வெற்றிகர மாக நடத்த உதவியது.

தாக்குதலின் போது 3வது பெலோருஷ்ய சேனேயின் துருப்புகள் ஒரு சில சிறு கொடுஞ்சிறை முகாம்களேப் பிடித்தன. உதாரண மாகத் தோம்ஞவுவில் இராணுவ மருத்துவமனே வடிவத்தில் இருந்த பாசிச மரண முகாமை 28வது படை பிடித்தது. அங்கே சோவியத், பிரெஞ்சு, பெல்ஜிய, இத்தாலிய, போலந்து இராணுவங்களேச்

சேர்ந்த 664 சிறைக் கைதிகள் இருந்தனர். முகாமைச் சுற்றி முள் வேலி போடப்பட்டு எஸ். எஸ். ஆட்களால் முகாம் பாதுகாக்கப்பட்டது. கைதிகளைக் கொடூரச் சித்திரவதைக்கு உள்ளாக்கினர், இம்சித்தனர், நாய்களை ஏவி விட்டு கடிக்கச் செய்தனர். போர்க் கைதிகள் மிக மோசமான சுகாதார நிலைகளில் இருந்தனர், எவ்வித மருத்துவ உதவியும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஒரு நாளுக்கு ஒரு முறை மட்டும் பீட்ரூட் சூப்பும் 200—250 கிராம் மரத்தூள் கலந்த ரொட்டியும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. நோயாளிகளையும் சோர்ந்திருந்தோரையும் சுட்டுக் கொன்றனர். குறிப்பாக சோவியத் போர்க் கைதிகளுக்கு மிகக் கடும் கட்டுப்பாடுகள் இருந்தன. இவர்கள் மற்ற போர்க் கைதிகளுடன் பழகிவிடாமலிருப்பதற்காக இவர்களை பாசிஸ்டுகள் தனிக் கொட்டகைகளில் அடைத்திருந்தனர்.

போர்க் கலையின் நோக்கிலிருந்து பார்க்கையில் நடவடிக்கை உறுதியான லட்சியங்களுடன் நிறைவேற்றப்பட்டது, ஒன்றிலிருந்து ஒன்று வெகுதொலைவிலுள்ள சேனைகளின் பிரதான தாக்குதல் திசைகள் சரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன, தரைப்படையும் விமானப்படையும் பால்டிக் கப்பற்படையும் திட்டவட்டமாக ஒத்தியைந்து இயங்கின.

எதிரியைப் பால்டிக் கடலுக்கு நெருக்கும் நோக்கத்தோடு கத்தரிக்கும் தாக்குதலைத் தொடுத்து எதிரியைச் சுற்றி வளைப்பது நிறைவேற்றப்பட்டது. சுற்றிவளைக்கப்பட்ட எதிரியின் படைத் திரட்டுகளை ஒழித்துக்கட்டுவது தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்டது, அதிலும் ஒவ்வொன்றும் பொது போர்த்தந்திர திட்டத்திலிருந்து பிறந்த தனி நடவடிக்கையாக அமைந்தது. இந்த தனி நடவடிக்கைகளுக்கு முன் துருப்புகளின் படைமாற்றம் நடந்தது. உதாரணமாக, கேனிக்ஸ்பெர்க் நடவடிக்கையில் குறுகிய காலகட்டத்தில் 5 காலாட்படைகள் படைமாற்றத்திற்கு உள்ளாயின, இவற்றில் 3 படைகள் 3—4 இரவுகளில் 100 முதல் 160 கி. மீ. வரை நடை போட்டன. கேனிக்ஸ்பெர்கின் மீது தாக்குதல் தொடுத்த போது தொலை தூர விமானப்படை முதன் முதலாகப் பகல் நேரத்தில் நகரத்தைத் தாக்கியது.

குர்லாந்தில் சோவியத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் கிழக்கு பிரஷ்ய சம்பவங்களின் மீது செல்வாக்குச் செலுத்தின. இங்கே பால்டிக் நடவடிக்கையின் பயனாய் குர்லாந்தில் ஜெர்மானியர்களின் பெரும் சக்திகள் கடலோரமாக நெருக்கப்பட்டிருந்தன. ஐந்து மாதங்களுக்கும் மேலாக எதிரி துருப்புகளுடன் கடுமையான சண்டைகள் நடைபெற்றன. இதன் பயனாய் ஜெர்மானிய உயர் மட்ட படைத் தலைமையால் இவற்றை சோவியத்-ஜெர்மானியப்

போர்முனையின் மற்ற இடங்களில் பயன்படுத்த முடியவில்லை. மே 8ஆம் தேதி குர்லாந்து படைத் திரட்டு சரணடைந்தது. சோவியத் துருப்புகள் 2,00,000 எதிரி போர்வீரர்களையும் இராணுவ அதிகாரி களையும் ஆயுதங் களைத்து கைது செய்தனர்.

கிழக்கு பொமெரானிய நடவடிக்கை 2வது, 1வது பெலோருஷ்ய சேனைகளின் துருப்புகளால் பால்டிக் கப்பற்படையின் உதவியோடு பிப்ரவரி 10 முதல் ஏப்ரல் 4 வரை நடத்தப்பட்டது.

1945 ஜனவரி இறுதியில் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்பு கள் ஓதெர் ஆற்றைக் கடந்து அதன் மேற்கு கரையில் இருந்த தாக்குமுனையைக் கைப்பற்றின. இவற்றிற்கும் 2வது பெலோருஷ்ய சேனைக்கும் இடையே 100 கி.மீ.களுக்கும் அதிகமான இடைவழி உருவானது. பாசிச ஜெர்மானிய படைத் தலைமை கிழக்கு பொமெரா னியாவில் ''வீஸ்லா'' படைத் தொகுதியின் ஒரு பகுதியை (தளபதி ரைஹ்ஸ்பியூரர் ஹிம்லர்) அவசரமாக நிறுத்த ஆரம்பித்தது. இதில் 3 படைகள்—4 டாங்கி மற்றும் 2 மோட்டார் டிவிஷன்கள் உட்பட 22 டிவிஷன்கள் அடங்கியிருந்தன. 1வது பெலோருஷ்ய சேனையின் வலது பிரிவின் மீது தாக்குதல் தொடுத்து இது பெர்லினை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கும் கடமை இத்துருப்புகளுக்கு அளிக்கப் பட்டிருந்தது.

கிழக்கு பொமெரானியாவில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பெரும் சக்திகள் குவிக்கப்படுவதை கண்டுபிடித்த சோவியத் படைத் தலைமை, எதிரியின் கிழக்கு பொமெரானிய படைத் திரட்டை முறியடிக்குமாறும் டான்டஸிங்க், கிதீனியா துறைமுகங்களைக் கைப்பற்றி பால்டிக் கடலின் கரையோரத்தை எதிரியிடமிருந்து விடுவிக்குமாறும் 2வது பெலோருஷ்ய சேனைக்கு (தளபதி மார்ஷல் ரக்கசோவ்ஸ்கிய்) பிப்ரவரி 8ஆம் தேதி கட்டளையிட்டது. இச் சேனையில் 4 காலாட்படைகளும் 1 வான் படையும் 2 டாங்கி கோர்பஸ்களும் 1 இயந்திரப்படை கோர்பசும் 1 குதிரைப்படைக் கோர்பசும் அடங்கியிருந்தன.

கிட்டத்தட்ட இடைவெளியின்றி (கிழக்கு பிரஷ்ய நடவடிக்கை யின் முதல் கட்டத்திற்குப் பின்) பிப்ரவரி 10இல் தாக்குதலில் இறங்கிய 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் எதிரியின் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தன. எதிரியின் தற்காப்பை பிளந்து செல்வது இழுபறி தன்மையைப் பெற்றது. காடுகளும் சதுப்பு நிலங்களும் மிகுந்த கடினமான சூழ்நிலைகளில் 10 நாட்கள் கடுமை யான, உறுதியான சண்டைகளுக்குப் பின் 40—70 கி.மீ. தூரம் மட்டுமே முன்னேற முடிந்த துருப்புகள் தாக்குதலை நிறுத்தும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. இதனிடையே பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை பிப்ரவரி நடு வாக்கில் கிழக்கு பொமெரானியா

வில் சுமார் 40 டிவிஷன்களைக் குவித்தது, பிப்ரவரி 16ஆம் தேதி 6 டிவிஷன்களைக் கொண்டு ஷ்டார்கார்த்திற்குத் தெற்கேயிருந்த பிரதேசத்திலிருந்து 1வது பெலோருஷ்ய சேனையின் வலப் பிரிவின் மீது பதிலடி தொடுத்தது, 47வது படையை 8—12 கி. மீ. நெருக்கி பிரித்ஸ், பான் நகரங்களைப் பிடித்தது. எதிரியின் கிழக்கு பொமெரானிய படைத் திரட்டை முறியடிக்க 2வது பெலோருஷ்ய சேனையின் பலம் மட்டும் போதாது என்பது சோவியத் படைத் தலைமைக்குத் தெளிவானது. எனவே ''வீஸ்லா'' படைத் தொகுதியை முறியடிப்பதில் இது 1வது பெலோருஷ்ய சேனையின் வலப் புறத் துருப்புகளையும் ஈடுபடுத்தியது.

19வது படையாலும் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் சேம இருப்பைச் சேர்ந்த டாங்கி கோர்பசாலும் பலப்படுத்தப்பட்ட 2வது பெலோருஷ்ய சேனை பிப்ரவரி 24ஆம் தேதி த்சேம்பல்புர்க் பிரதேசத்திற்கு வடக்கேயிருந்து கியோஸ்லின் மீது தாக்குதல் தொடுத்தது. மார்ச் 1ஆம் தேதி 1வது பெலோருஷ்ய சேனை அர்ன்ஸ்வால்டெ பிரதேசத்திலிருந்து கோல்பெர்க் திசையில் தாக்கியது. இதில் போலந்து இராணுவத்தின் 1வது படையும் இருந்தது. மார்ச் 5 வாக்கில் சோவியத் துருப்புகள் கிழக்கு பொமெரானியப் படைத் திரட்டை இரண்டாகப் பிளந்து பால்டிக் கடலின் கரையோரத்தை அடைந்தன. இதன் பின் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் ஓதெர் ஆற்று முகப்பை நோக்கி முன்னேறி மார்ச் 20ஆம் தேதி அந்த இடத்தை அடைந்தன. 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் வட கிழக்காகத் திரும்பின. மார்ச் 28ஆம் தேதி கடுமையான சண்டைகளுக்குப் பின் கிதீனியா விடுவிக்கப்பட்டது; இரண்டு நாட்களுக்குப் பின் 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் டான்ட்ஸிங்கைப் பிடித்தன. கிதீனியா பிரதேசத்தில் தடுத்து நிறுத்தப்பட்ட 2வது பாசிச ஜெர்மானியப் படையின் மிச்ச சொச்சங்கள் ஏப்ரல் ஆரம்பத்தில் இறுதியாக முறியடிக்கப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டன. கிதீனியா, டான்ட்ஸிங்க் கடல் துறைமுகங்களைப் பிடிப்பதில் பால்டிக் கப்பற்படை 2வது பெலோருஷ்ய சேனைக்கு உதவியது.

கிழக்கு பொமெரானியா நடவடிக்கையின் பயனாய் எதிரிக்குத் தீவிர இழப்புகள் ஏற்பட்டன. 21க்கும் மேற்பட்ட டிவிஷன்களும் 8 பிரிகேடுகளும் முறியடிக்கப்பட்டன. 2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் 63,500க்கும் அதிகமான போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைபிடித்தன, சுமார் 680 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 3,470 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 431 விமானங்கள் இன்னும் பல ஆயுதங்களைக் கைப்பற்றின. பொமெரானியாவில் பாசிச ஜெர்மானிய படைத் தலை

மையின் திட்டங்கள் தோற்றுப் போனதற்காக ஹிம்லர் ''வீஸ்லா'' படைத் தொகுதியின் தலைமையிலிருந்து அகற்றப்பட்டான். அவனுக்குப் பதில் ஜெனரல் ஹைன்ரிட்சி நியமிக்கப்பட்டான்.

இந்நடவடிக்கையில் போலந்து துருப்புகளின் சேவைகளை உயர்வாக மதிப்பிட்ட சோவியத் படைத் தலைமை 1வது போலந்து டாங்கி பிரிகேடிற்கு செம்பதாகை விருதளித்து கௌரவித்தது.

கிழக்கு பொமெரானிய நடவடிக்கை பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முதலாவதாக, இந்நடவடிக்கையின் விளைவாக ஓடெர் ஆற்றை அடைந்த 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகளின் பக்கவாட்டின் மீது எதிரி தாக்குதல் தொடுக்கும் அபாயம் அகற்றப்பட்டது. இரண்டாவதாக, போலந்தின் பமோரியே (கடற்பகுதி) முழுவதும் அதன் பெரிய நகரங்களும் துறைமுகங்களும் போலந்திற்குத் திருப்பியளிக்கப்பட்டன. மூன்றாவதாக, கடலிலிருந்து எதிரியின் குர்லாந்து படைத்திரட்டை முற்றுகையிடுவதற்கு பால்டிக் கப்பற்படைக்கு உள்ள வாய்ப்புகள் மேம்பட்டன. நான்காவதாக, பெர்லின் திசையில் இடமாற்றத்திற்காக 10 படைகள் ஒதுக்கப்பட்டன. இதனால் பெர்லின் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்பட்டன.

கிழக்கு பொமெரானிய நடவடிக்கையின் சிறப்பு அம்சம் என்னவெனில் இதில் கலந்து கொண்ட இரண்டு சேனைகளுமே பிரியும் திசைகளில் தாக்குதல் தொடுத்ததாகும். இது எதிரியின் கிழக்கு பொமெரானியப் படைத் திரட்டை பகுதி பகுதியாக அழிக்கும் வாய்ப்பையளித்தது.

3. ஆஸ்திரியா, செக்கோஸ்லொவாக்கியாவின் விடுதலை

வியென்னு தாக்குதல் நடவடிக்கை (1945 மார்ச் 16 — ஏப்ரல் 15)

ஹங்கேரியின் மேற்குப் பகுதியில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முற்றிலுமாக முறியடித்து ஆஸ்திரிய தலைநகரமாகிய வியென்னுவைக் கைப்பற்றுவதுதான் வியென்னு தாக்குதல் நடவடிக்கையின் நோக்கமாயிருந்தது. இந்நடவடிக்கையில் பங்கேற்பதற்காக சோவியத் படைத் தலைமை, 6 காலாட்படைகள், 1 டாங்கிப் படை, 1 வான் படை, 2 டாங்கி கோர்பஸ்கள், 1 இயந்திரப்படை கோர்பஸ், 1 குதிரைப்படைக் கோர்பஸ் ஆகியவை அடங்கிய 3வது உக்ரேனிய சேனையையும் (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல் தல்பூகின்), 46வது படை, 2வது கார்டு இயந்திரப்படைக் கோர்பஸ், துனைய் இராணுவ ப்ளீட், 5வது வான் படை அடங்கிய 2வது உக்ரேனிய சேனையின் (தளபதி சோவியத் யூனியனின் மார்ஷல்

மலினோவ்ஸ்கிய்) இடப் புறத் துருப்புகளையும் அழைத்தது.

3வது உக்ரேனிய சேனையின் 9வது, 4வது கார்டு படைகளைக் கொண்டு பாப்பா, ஷோப்ரோான் திசையில் ஒரு தாக்குதலையும் 2வது உக்ரேனிய சேனையின் 45வது படை, 2வது கார்டு இயந் திரப்படை கோர்பஸ் சக்திகளைக் கொண்டு தியோர் திசையில் ஒரு தாக்குதலையும், ஆக சேனைகளின் அடுத்தடுத்த பக்கவாட்டுப் பகுதிகளில் இரண்டு பலத்த தாக்குதல்களைத் தொடுக்க உயர் மட்ட பிரதானப் படைத் தலைமை திட்டமிட்டது. மேற்கொண்டு வியென்னாவை நோக்கி இரண்டு சேனைகளின் தாக்குதலையும் தொடரத் திட்டமிடப்பட்டது.

3வது ஹங்கேரியப் படை, ஜெர்மானியர்களின் 6வது போர்க் களப் படை மற்றும் 6வது, 2வது டாங்கிப் படைகள் ஆகியவை அடங்கிய ''தெற்கு'' என்ற பாசிச ஜெர்மானியப் படைத் தொகுதி (தளபதி காலாட்படை ஜெனரல் வேலர்) சோவியத் துருப்புகளுக்கு எதிராக நின்றது. தெற்காக 1வது பல்கேரிய, 3வது யுகோஸ்லா வியப் படைகளுக்கு முன் "F" படைத் தொகுதியின் பிரிவுகள் இயங்கின. 700 விமானங்களடங்கிய 4வது வான் படை பாசிச ஜெர்மானியப் படைத் திரட்டிற்கு ஆதரவளித்தது.

மார்ச் 16ஆம் தேதி பலத்த பூர்வாங்க பீரங்கிப்படை தாக் குதலுக்குப் பின் 3வது உக்ரேனிய சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் துருப்புகள் சேகெஷ்பேஹெர்வாருக்கு வடக்கே யுள்ள பிரதேசத்திலிருந்து தாக்குதலில் இறங்கின. அதற்கடுத்த நாளன்று 2வது உக்ரேனிய சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. சோவியத் துருப்புகள் எதிரியின் தற்காப்பைப் பிளந்து, ''தெற்கு'' படைத் தொகுதி யைத் தோற்கடித்து, வியென்னாவின் நுழைவாயில்களை அடைந்தன. ஏப்ரல் 6ஆம் தேதி 3வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் தென் கிழக்கிலிருந்தும் தென் மேற்கிலிருந்தும் வட மேற்கிலிருந்தும் வியென்னா மீது ஒரே நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்தன. 2வது உக்ரேனிய சேனையின் 46வது படை துனாய் ஆற்றின் இடது கரையோரமாக முன்னேறியது.

குடிமக்களின் மத்தியில் அநாவசியமான இழப்புகள் ஏற்படு வதைத் தவிர்க்கும் பொருட்டும் நகரத்தின் ஏராளமான வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் 3வது உக் ரேனிய சேனையின் படைத் தலைமை வியென்னா வாசிகளுக்கு அறை கூவல் விடுத்தது. அந்தந்த இடங்களிலேயே இருக்குமாறும் சோவி யத் துருப்புகளுக்கு உதவுமாறும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் நகரத்தை அழிக்க வாய்ப்பளிக்காமலிருக்குமாறும் நகர வாசிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. பாசிசத் துருப்புகளை முறியடித்து

நாட்டை ஜெர்மானிய சார்பு நிலையிலிருந்து விடுவிக்கும் நோக்கத்தோடுதான் சோவியத் இராணுவம் ஆஸ்திரிய எல்லையினுள் நுழைந்துள்ளது என்றும் 1938ஆம் ஆண்டிற்கு முன், அதாவது பாசிஸ்டுகள் நுழையும் முன் ஆஸ்திரியாவில் நிலவிய ஒழுங்குமுறையைப் புனர் நாட்ட சோவியத் துருப்புகள் உதவுமென்றும் தேசிய சோஷலிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்கள் சோவியத் துருப்புகளுக்கு எதிர்ப்பு காட்டாமலிருந்தால் அவர்களின் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படாமல் தேசிய சோஷலிஸ்டுக் கட்சி கலைக்கப்படுமென்றும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் சோவியத் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில், ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைப் பற்றிய நேச நாட்டவரின் மாஸ்கோ பிரகடனத்தைச் சற்றும் பிறழாமல் நிறைவேற்றும் உறுதி ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருந்தது.[°] ஆஸ்திரிய மக்கள் பெரும் மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் இந்த அறிக்கையை வரவேற்றனர்.

ஏப்ரல் 13ஆம் தேதி வியென்னு பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது. எதிரியின் சிதறடிக்கப்பட்ட படைப்பிரிவுகள், யூனிட்டுகளின் மிச்ச சொச்சங்களை துரத்திச் சென்ற இரண்டு சேனைகளின் துருப்புகளும் ஏப்ரல் 15 வாக்கில் மொராவா ஆறு, ஷ்தோக்கெராவு, மரிபோரின் கிழக்குப் பகுதி ஆகியவற்றை அடைந்து மேற்கொண்டு திராவா ஆற்றின் வடக்கு கரையை அடைந்தன.

வியென்னு நடவடிக்கையின் பயனுய் சோவியத் துருப்புகள் ஹங்கேரி, ஆஸ்திரியாவின் கிழக்குப் பகுதியிலிருந்த தலைநகரமாகிய வியென்னு ஆகியவற்றை முழுமையாக விடுவித்தன, எதிரியின் 32 டிவிஷன்களை முறியடித்தன, 1,30,000 எதிரி போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகள் சிறைபிடிக்கப்பட்டனர், ஏராளமான ஆயுதங்களும் இராணுவத் தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன. ஆஸ்திரியாவின் விடுதலைக்காக நடந்த சண்டைகளில் 26,000 சோவியத் போர்வீரர்கள் இன்னுயிர் ஈந்தனர். பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பால்கன் படைத்திரட்டு தனிமைப்படுத்தப்பட்டு அவசர அவசரமாகப் பின்வாங்கிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆஸ்திரிய மக்கள் பாசிச ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆஸ்திரிய அரசு முறையின் புனரமைப்பிற்கு வழிகோலப்பட்டது.

செஞ்சேனை ஆஸ்திரிய மக்களுக்குப் பேருதவி நல்கியது. சோவியத் போர்வீரர்கள் வியென்னு பிரதேசத்தில் துனுய் ஆற்றின் மீதிருந்த வட மேற்கு, தெற்குப் பாலங்களைப் புனரமைத்தனர், துனுய்

[°] மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை. ஆவணங்கள், தொகுதி III , பக்கம் 171.

ஆற்றின் ஆஸ்திரியப் பகுதியிலிருந்த கப்பல்கள் செல்லும் வழியைக் கண்ணி வெடிகளிலிருந்து தூய்மைப்படுத்தினர், மூழ்கிப் போன 128 கப்பல்களை வெளியே எடுத்தனர், 30 சதவிகித பாரந்தூக்கிகள், மற்ற துறைமுகச் சாதனங்களைச் சரி செய்தனர், 1,719 கி. மீ. நீள இருப்புப் பாதையையும் 42 இருப்புப்பாதை பாலங்களையும் 27 டிப்போக்களையும் சரிபார்த்தனர், ஆஸ்திரியர்களோடு கூட்டாகச் சேர்ந்து 300 நீராவி என்ஜின்களையும் சுமார் 10,000 இரயில் பெட்டிகளையும் பழுது பார்த்தனர்.

குடிமக்களின் பரிதாபகரமான நிலையை கவனத்தில் கொண்ட சோவியத் யூனியன் ஆஸ்திரியாவிற்கு ஏராளமான உணவுப் பொருள்களை அனுப்பி உதவியது. பாசிஸ்டுகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைதியான சாதாரண வாழ்க்கையை நிலைநாட்ட சோவியத் போர்வீரர்கள் ஸ்தல மக்களுக்கு உதவினர். 1945 மே 16ஆம் தேதி ஆஸ்திரிய தற்காலிக அரசாங்கத்தின் தலைவர் ரேன்னர் ஸ்தாலினுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "...பாசிஸ்டுகளால் முற்றிலுமாக அழிக்கப்பட்ட ஆஸ்திரிய அரசு முறை புனர் நாட்டப்படும் வேகத்தின் மீது எனக்கு முழு திருப்தி. இதில் எனக்குப் பெரும் உதவியையும் ஆதரவையும் அளித்த செஞ்சேனை அதே நேரத்தில் எங்களுடைய நடவடிக்கைகளின் சுதந்திரத்தை மட்டுப்படுத்தவில்லை என்பதைக் கூற வேண்டும்."[6]

செக்கோஸ்லொவாக்கியப் பூமியில்

மேற்கு கர்பாத்து நடவடிக்கை 1945ஆம் ஆண்டு ஜனவரி 12 முதல் பிப்ரவரி 18 வரை 2வது உக்ரேனிய சேனையுடன் சேர்ந்து, 1வது உக்ரேனிய சேனையின் உதவியோடு 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது.

மலைகள், காடுகளடர்ந்த கர்பாத்து பிரதேசம், வெண் பனி, மழை, மேக மூட்டம் மற்றும் பொறியியல் ரீதியாக முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எதிரியின் தற்காப்பு ஆகியவை சோவியத் துருப்புகளின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தின. ஆனால் சோவியத் துருப்புகள் இந்த இடர்ப்பாடுகளைப் பொருட்படுத்தாது எதிரியின் தற்காப்பைப் பிளந்து கொண்டு முன்னேறின. 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ் வெற்றிகரமாக இயங்கியது. ஜனவரி 28ஆம் தேதி பொப்ராத் நகரை விடுவித்த இது வாக் ஆற்றுப் படுகையின் வழியாக ருஷெம்பெரோக்கை

---

[6] **கம்யூனிஸ்டு** என்னும் பத்திரிகை, 1975, № 4, பக்கம் 67.

நோக்கி முன்னேறியது. பாசிஸ்டுகள் இந்த இடத்தில் பலத்த ஆதார நிலையங்களோடு கூடிய பல படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பை ஏற்படுத்தி வாக் ஆற்றுப் படுகையை உறுதியாக மூடினர். ஆனால் தமது சொந்தப் பூமியை விடுவித்த செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களின் தாக்குதல் வேகத்தை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. பிப்ரவரி மத்தியில் கோர்பஸ் லிப்தோவ்ஸ்கியையும் . செயின்ட் மிக்குலாஷையும் நெருங்கியது. கொரில்லாப் படைவீரர்கள் இதில் கோர்பசிற்குப் பெரும் உதவி புரிந்தனர்.

4வது, 2வது உக்ரேனிய சேனைகளின் ஜனவரி-பிப்ரவரி தாக்குதல்களின் பயனாய் 15 லட்சம் மக்கள் வாழும் கோஷித்சே, பிரெஷோவ், பான்ஸ்க-பீஸ்த்ரிட்ஸா ஆகிய செக்கோஸ்லோவாக்கிய மாகாணங்கள் கிட்டத்தட்ட முழுமையாக விடுவிக்கப்பட்டன. ''சென்டர்'' மற்றும் ''தெற்கு'' படைத் தொகுதிகளைச் சேர்ந்த ஐந்து பாசிசப் படைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. 1,37,000க்கும் அதிகமான எதிரி போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சோவியத் துருப்புகள் சிறைபிடித்தன. இது தவிர 230 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 320 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 65 விமானங்கள், ஏராளமான மற்ற வகை போர்த் தளவாடங்கள், இராணுவ சாதனங்கள் கைப்பற்றப் பட்டன. மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறைப் பிரதேசத்தை விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நடவடிக்கை *(1945 மார்ச் 10—மே 5)* ''ஹைன்ரித்சி'' என்ற பாசிச ஜெர்மானிய படைத் தொகுதியை முறியடித்து மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்தை விடுவிக்கும் நோக்கத்தோடு 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் (தளபதி ஜெனரல் பெத்ரோவ், மார்ச் 25இலிருந்து ஜெனரல் யெரியோமின்கோ) நடத்தப்பட்டது. சோவியத் துருப்புகளோடு சேர்ந்து ஜெனரல் ஸ்வோபடாவின் தலைமையில் (ஏப்ரல் ஆரம்பத்திலிருந்து ஜெனரல் கிளாபலெக்) 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசும் இயங்கியது.

ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் எதிரியைச் சிறிதளவே விஞ்சியிருந்த ஒரு நிலையில், அதாவது காலாட்படையில் 1.7 மடங்கும் பீரங்கிகளில் 2 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 1.8 மடங்கும் விமானப்படையில் 3.4 மடங்கும் விஞ்சியிருந்த நிலையில் கடினமான மலைகளும் காடுகளும் அடர்ந்த சூழ்நிலையில் சேனை தாக்குதலைத் தொடுக்க வேண்டியிருந்தது, பலமான, முன்கூட்டியே தயார்படுத்தப்பட்ட எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

மார்ச் 10ஆம் தேதி சேனையின் துருப்புகள் தாக்குதலில் இறங்

கின. கடுமையான, இரத்தக் களறியான சண்டைகள் மூண்டன. எதிரியின் கடும் எதிர்ப்பை உடைத்துக் கொண்டு சேனை உறுதியாக முன்னேறி மார்ச் மாதம் எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

சோவியத் துருப்புகள் சென்ற இடங்களில் எல்லாம் ஸ்தல மக்களுக்கு தன்னலங்கருதா உதவி புரிந்தன, ஆதரவளித்தன. பாசிச ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு சில ஆண்டுகளாக சுரண்டி, கொள்ளையடித்து வந்த பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டதும் அங்கெல்லாம் யுத்தத்தின் விளைவுகளை அகற்றவும் சமூக வாழ்வை நிலைநாட்டவும் சோவியத் போர்வீரர்கள் நகர, கிராம மக்களுக்கு உதவினர். சோவியத் இராணுவப் பிரிவுகள் இம்மக்களுக்குக் கோதுமை மாவு, சர்க்கரை, எரிபொருள் முதலியவற்றை அளித்தன, வீடுகள், சாதாரண மற்றும் இருப்புப் பாதைப் பாலங்களில் இருந்த கண்ணி வெடிகளை அகற்றின, சாலைகள், இருப்புப் பாதைகளைப் பழுது பார்த்தன இத்தியாதி. இது செக்கோஸ்லொவாக்கிய மக்களின பாலான சோவியத் நாட்டின் சோதர உணர்வுகளின் தெளிவான வெளிப்பாடாக இருந்தது.

ஏப்ரல் ஆரம்பத்தில் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் வாழ்வில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நடந்தது. நாட்டின் ஜனநாயக சக்திகள் தேசிய முன்னணியின் முதல் அரசாங்கத்தை ஏற்படுத்தின. இதில் முக்கிய மந்திரிப் பதவிகளைக் கம்யூனிஸ்டுகள் வகித்தனர். ஏப்ரல் 5ஆம் தேதி கோஷித்சே நகரத்தில் நடைபெற்ற புதிய அரசாங்கத்தின் கூட்டத்தில் தேசிய முன்னணியின் வேலைத்திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இது செக்கோஸ்லொவாக்கிய மக்களுக்கு சோஷலிசத்தின் வெற்றியை நோக்கிய பாதையைத் திறந்து விட்டது.

இந்த வேலைத்திட்டத்தில், செக்கோஸ்லொவாக்கியாவை பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதில் செஞ்சேனை புரிந்த சேவைகளும் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் எதிர்காலத்திற்கு வகை செய்வதில் இதன் தீர்மானகரமான பங்கும் உயர்வாக மதிப்பிடப்பட்டன, சோவியத் போர்வீரர்களின் வீரத்திற்கும் ஆண்மைக்கும் உரிய மரியாதை அளிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் ஏற்படுத்தபட்டு கோஷித்சே வேலைத்திட்டம் ஏற்கப்பட்டதையடுத்து செக்கோஸ்லொவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சி மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. ''நம்மை விடுவிக்க வந்த செஞ்சேனைக்குச் சகல விதங்களிலும் உதவி செய்யுங்கள், புதிய செக்கோஸ்லொவாக்கிய இராணுவத்தில் சேருங்கள். இருப்புப் பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், தந்தி போன்றவற்றை, அதாவது போர்முனைக்குத் தேவையான எல்லாவற்றையும் புனர்நாட்டுங்

கள்...''[*] என்று அந்த அறைகூவலில் கூறப்பட்டிருந்தது.

ஏப்ரலிலும் சற்றும் குறையாத அளவு கடுமையான சண்டைகள் நடைபெற்றன. எதிரியின் கடும் எதிர்ப்பை உடைத்துக் கொண்டு துருப்புகள் ஏப்ரல் 21ஆம் தேதி மொராவ்ஸ்க-அஸ்த்ராவா வெளித் தற்காப்பு வளையத்தை அடைந்து நகரின் நுழைவாயில்களில் சண்டையிலறங்கின. சோவியத் போர்வீரர்களோடு சேர்ந்து செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களும் போரிட்டனர். உதாரணமாக 38வது படையோடு சேர்ந்து 1வது தனி செக்கோஸ்லொவாக்கிய டாங்கிப் பிரிகேடின் டாங்கிஸ்டுகள் போரிட்டனர். குறிப்பாக ஓதெர் ஆற்றின் மேற்கு கரையில் நடந்த சண்டைகளில் இவர்கள் எதிரியின் எண்ணற்ற பதிலடிகளை முறியடித்து சிறப்பாகச் செயல்பட்டனர். கடுமையான சண்டைகளுக்குப் பின் ஷிலிஞுவின் நுழைவாயில்களை அடைந்த 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ் 18வது படையோடு சேர்ந்து இயங்கியது.

8வது வான் படையும் இதனோடு கூட்டாகச் சேர்ந்து இயங்கிய 1வது செக்கோஸ்லொவாக்கிய கலப்பு வான் டிவிஷனும் தரைப் படைகளுக்குப் பெரிதும் உதவின. இவை 2,589 வான் தாக்குதல்களைத் தொடுத்து எதிரியின் ஏராளமான ஆயுதங்கள், போர் வாகனங்கள் இராணுவத் தளவாடங்களை ஒழித்துக் கட்டின.

ஏப்ரல் 26ஆம் தேதி மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நகரின் மீதான தீர்மானகரமான தாக்குதல் ஆரம்பமாகியது. தாக்குதல் துவங்கும் முன் 4வது உக்ரேனிய சேனைத் தளபதியின் பார்வையிடத்திற்கு செக்கோஸ்லொவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் கிளிமென்ட் கோட்வல்ட், செக்கோஸ்லொவாக்கிய அரசாங்கத்தின் தலைவர் ஸ்தேனெக் ஃபீர்லிங்கர், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லுட்விக் ஸ்வோபடா ஆகியோர் வந்தனர். சோவியத் மற்றும் செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்கள் இவர்களை அன்போடு வரவேற்றனர். உருக்கனைய உறுதியான சோவியத் டாங்கிகளில் இரும்பைப் போன்று உறுதியான குடியரசின் இதயத்தை விடுவிப்பது என்பது செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களுக்கு மாபெரும் கௌரவமாகும் என்று செக்கோஸ்லொவாக்கிய டாங்கிப் பிரிகேடின் கமான்டராகிய லெப்டினன்ட் கர்னல் யான்கோவுடன் நடத்திய உரையாடலின் போது கிளிமென்ட் கோட்வல்ட் குறிப்பிட்டார். சண்டைக்குப் புறப்பட்ட டாங்கி பிரிகேடு இராணுவ அதிகாரிகளுக்கு விடைகொடுத்து அனுப்புகையில் சேனைத் தளபதி ஜெனரல் யெரியோமின்கோவும் அவர்கள்

---

[*] இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் இராணுவத்தின் விடுதலைப் பணி, மாஸ்கோ, 1974, பக்கம் 343.

முதலாவதாக அஸ்த்ராவாவினுள் நுழைய வேண்டுமென வாழ்த்தி அனுப்பினர். கோட்வல்ட் மற்றும் சேனைத் தளபதியின் உரைகள் செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களின் நெஞ்சை ஆழமாகத் தொட்டன. தாக்குதல் வெற்றிகரமானதாக அமைந்தது.

ஏப்ரல் 30ஆம் தேதி 1வது கார்டு படை மற்றும் 38வது படையின் துருப்புகள் மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நகரையும் 18வது படையின் துருப்புகள் மேற்கு கர்பாத்து மலைகளில் முக்கிய சாலை மையமாகிய ஷிலினுவையும் கைப்பற்றின.

மொராவ்ஸ்க-அஸ்த்ராவாவை விடுவித்ததானது போர் நடவடிக்கைகளின் போக்கில் திருப்பு முனையாக அமைந்தது. நன்கு பலப்படுத்தப்பட்ட பிரதேசத்தை இழந்த பாசிஸ்டுகளால் இதற்குப் பின் இத்திசையில் போதுமான அளவு உறுதியான, நிலைத்த தற்காப்பை ஏற்படுத்த இயலவில்லை. மே 6ஆம் தேதி 4வது உக்ரேனிய சேனை ஷ்தேர்ன்பெர்க் நகரைப் பிடித்து ஒலோமோலூத்ஸ் நகரின் நுழைவாயில்களை அடைந்தது. 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகளும் தென் மேற்கிலிருந்து இந்நகரை நோக்கிச் சென்றன. சுற்றி வளைக்கப்படும் அபாயத்தின் கீழ் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் அவசர அவசரமாக மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்திலிருந்து பின்வாங்க ஆரம்பித்தன.

இந்நடவடிக்கையின் பயனுய் 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்தைக் கைப்பற்றின. செக்கோஸ்லொவாக்கியாவின் மத்தியப் பகுதியினுள் மேற்கொண்டு முன்னேறிச் செல்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. பாசிஸ்டுகளின் தரப்பில் 1,00,000க்கும் அதிகமான போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர், 1,50,000க்கும் கூடுதலானோர் சிறைபிடிக்கப்பட்டனர். 4,000 சாதாரண பீரங்கிகள், 1,570 மார்டர் பீரங்கிகள், 1,087 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 737 விமானங்கள் முதலியன அழிக்கப்பட்டன, அல்லது கைப்பற்றப்பட்டன.

பிராதிஸ்லாவா-பிர்னோ நடவடிக்கை 1945ஆம் ஆண்டு மார்ச் 25 முதல் மே 5 வரை 2வது உக்ரேனிய சேனையின் (1வது, 4வது ருமேனியப் படைகள் இதில் அடங்கியிருந்தன) வலப் புற துருப்புகளால் நடத்தப்பட்டது. கிரோன், நீத்ரா, வாக், மொராவா ஆகிய ஆறுகள் மற்றும் மலைத்தொடர்களடங்கிய அனுகூலமான இயற்கை எல்லைகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்த எதிரியின் பலத்த, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பை இத்துருப்புகள் பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

2வது உக்ரேனிய சேனையின் 42 டிவிஷன்களுக்கு (இதில் 14 ருமேனிய டிவிஷன்களும் அடங்கியிருந்தன) எதிராக செக்கோஸ்

லொவாக்கிய பரப்பில் ''தெற்கு'' படைத் தொகுதியைச் சேர்ந்த (மே 1இலிருந்து ''ஆஸ்திரிய'' படைத் தொகுதி) 11 பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் நின்றன. சோவியத், ருமேனியத் துருப்புகள் எதிரியை ஆள் பலத்தில் 1.7 மடங்கும் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 3.4 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 2 மடங்கும் விமானங்களில் 4.3 மடங்கும் விஞ்சி நின்றன.

எதிரியின் மீதான பிரதான தாக்குதல் கிரோன் ஆற்றின் எல்லையிலிருந்து (லேவித்ஸே பிரதேசம்) பிராதிஸ்லாவா, மலாத்ஸ்கி, பிர்னோ திசையில் தொடுக்கப்பட்டது. 5வது வான் படையும் பகுதியளவிற்கு துணைய் இராணுவ ப்ளீட்டும் சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் நடவடிக்கைகளை ஆதரித்தன.

மார்ச் 25ஆம் தேதி இரவு 53வது மற்றும் 7வது கார்டு படைகளின் முன்னணி பட்டாலியன்கள் எதிரி எதிர்பாரா விதமாக 17 கி. மீ. நீளமுள்ள போர்முனையில் வெள்ளப் பெருக்கெடுத்தோடிய கிரோன் ஆற்றைக் கடந்து ஒரு சில தாக்குமுனைகளைக் கைப்பற்றின; தாக்குதலின் முதல் நாளன்றே படைகளின் பிரதான சக்திகள் இங்கு அனுப்பப்பட்டன. மார்ச் 26ஆம் தேதி பிளவினுள் அனுப்பப்பட்ட ஜெனரல் பிளீயெவின் குதிரைப்படை-இயந்திரப் படை பிரிவு எதிரி தற்காப்பின் ஆழத்தினுள் துணிவுடனும் உறுதியாகவும் முன்னேற ஆரம்பித்தது. மார்ச் 28ஆம் தேதி வாக்கிலேயே பிளவு 150 கி. மீ. நீளம் வரையிலும் 40 கி. மீ. ஆழத்திற்கும் விரிவாக்கப்பட்டது.

மேற்கொண்டு நடந்த கடுமையான சண்டைகளின் போது துருப்புகள் எதிரியினுடைய பெரும் படைத் திரட்டின் எதிர்ப்பைச் சமாளித்து அதற்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்தின. பிராதிஸ்லாவா முன் நின்றது. எதிரி இதன் தற்காப்பிற்கான பரிபூரண ஏற்பாடுகளில் இறங்கியிருந்தான். நகரத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு இதை வட மேற்கிலிருந்து சுற்றிச் செல்லுமாறு சோவியத் யூனியனின் மார்ஷல் மலினேவ்ஸ்கிய் கட்டளையிட்டார். சுற்றி வளைக்கப்படும் அபாயத்தின்கீழ் எதிரி பின்வாங்க ஆரம்பித்தான்.

ஏப்ரல் 4ஆம் தேதி 7வது கார்டு படையின் துருப்புகள் ஜெனரல் ஷுமீலவின் தலைமையில், ரியர் அட்மிரல் ஹலாஸ்தியாக்கோவின் துணைய் இராணுவ ப்ளீட்டின் உதவியோடு கூட ஸ்லொவாக்கியாவின் தலைநகரமாகிய பிராதிஸ்லாவாவை விடுவித்தன. பாசிஸ்டுகள் மொராவா ஆற்றிற்குப் பின்னால் சென்றனர். வியென்னா பிரதேசத்திலிருந்து 6வது எஸ். எஸ். டாங்கிப் படை உடனடியாக இங்கு அனுப்பப்பட்டது. ஆனால் சோவியத் துருப்புகளின் தாக்குதல் வேகத்தை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. ஏப்ரல் 12ஆம் தேதி மொராவா தற்காப்பு எல்லை பிளக்கப்பட்டது. 2வது உக்

ரேனிய சேனையின் துருப்புகள் முன்னேறி, அளவிலும் முக்கியத் துவத்திலும் இரண்டாவது பெரிய செக்கோஸ்லொவாக்கியத் தொழிற் துறை மையமாகிய பிர்னோவை விடுவிப்பதில் இறங்கின. ஏப்ரல் 23ஆம் தேதி நகரத்தின் நுழைவாயில்களில் கடுமையான சண்டை கள் மூண்டன. இங்கே எதிரி பலமான தற்காப்பை ஏற்படுத்தி யிருந்ததோடு கூட மற்ற பகுதிகளிலிருந்து 6 டிவிஷன்களை இங்கு அனுப்பியிருந்தான். நகரத்தை எல்லா பக்கங்களிலுமாகச் சுற்றி வளைத்த சோவியத் துருப்புகள் ஏப்ரல் 25ஆம் தேதி நகரத்தை முற்றுகையிட்டு ஏப்ரல் 26ஆம் தேதி இரவு தாக்குதலைத் துவங் கின. எதிரியால் தாக்குப் பிடிக்க இயலவில்லை. அன்றே எதிரி முறியடிக்கப்பட்டான். முன்போன்றே நகர வாசிகள் சோவியத் துருப்புகளுக்குக் கணிசமான உதவி நல்கினர்.

பிர்னோவிலும் சுற்றிலுமிருந்த கிராமங்களிலும் விடுதலை வந்த உடனேயே தேசியக் கமிட்டிகள் தோற்றுவிக்கப்படலாயின. இவை சமாதான வாழ்வை புனரமைத்தன. நகரம் மிக மோசமான நிலை யிலிருந்தது: தண்ணீரும் மின்வசதியும் இருக்கவில்லை, உணவுப் பொருட்களும் மருந்துகளும் போதவில்லை. சமூக வாழ்க்கைக்கு அவசியமான எல்லாவற்றையும் நகர மக்களுக்கு வழங்கி சோவியத் படைத் தலைமை உடனடி உதவியளித்தது.

ஏப்ரல் 27ஆம் தேதி 2வது உக்ரேனிய சேனை 6வது கார்டு டாங்கிப் படை மற்றும் 53வது படை ஆகியவற்றைக் கொண்டு, முன்னேறிக் கொண்டிருந்த 4வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை நோக்கி (இந்த சேனை இந்நேரத்தில் மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நடவடிக்கையை நடத்தியது) 1வது பாசிச ஜெர்மானியப் படையின் பக்கவாட்டிலும் பின்னணியிலுமாக ஓலோமோவூத்ஸ் மீது தாக் குதல் தொடுத்தது. சுற்றி வளைக்கப்படும் அபாயம் அவசர அவசர மாக பின்வாங்குமாறு எதிரியைக் கட்டாயப்படுத்தியது.

கிட்டத்தட்ட ஒன்றரை மாத சண்டைகளின் பயனாய் 2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 200 கி.மீ. தூரம் முன்னேறி எதிரியின் 9 டிவிஷன்களை முறியடித்தன. ஸ்லொவாக்கியா முழுவது மாக விடுவிக்கப்பட்டது; பிராதிஸ்லாவா மற்றும் பிர்னோ தொழிற் துறை பிரதேசங்கள், செக்கோஸ்லொவாக்கிய மக்களுக்குத் திருப்பி யளிக்கப்பட்டன. செக்கோஸ்லொவாக்கியாவின் மத்தியப் பிரதேசங் களுக்கான பாதை சோவியத் துருப்புகளுக்குத் திறந்து விடப்பட்டது.

மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நடவடிக்கையைப் போன்றே பிரா திஸ்லாவா-பிர்னோ நடவடிக்கையும் செக்கோஸ்லொவாக்கியாவின் தலைநகரமாகிய பிரேக் உட்பட நாட்டின் எஞ்சியப் பகுதி முழு வதையும் விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்று வித்தது.

சோவியத் துருப்புகள் மேற்கு நோக்கி முனைப்போடு முன்னேறிய தால் உந்தித் தள்ளப்பட்ட அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங் கள், ஜெர்மானியப் படைகளின் சரணடைவை ஏற்றுக் கொள்வதற் காகவும் பிரேக் நகத்தைக் கைப்பற்ற முயலுவதற்காகவும் தமது துருப்புகளை செக்கோஸ்லொவாக்கியாவினுள் அனுப்ப முடிவு செய் தன. குறிப்பாக சர்ச்சில் இதை வற்புறுத்தினர். ஏப்ரல் 30ஆம் தேதி ட்ருமனுக்கு அனுப்பிய தந்தியில் அவர் இயன்ற வரை விரை வாக பிரேகைக் கைப்பற்றுமாறும் இயன்ற அளவு அதிக மேற்கு செக்கோஸ்லொவாக்கியப் பரப்பைப் பிடிக்குமாறும் கோரினர்.*

மே ஆரம்பத்தில் ஜெனரல் பாட்டனின் 3வது அமெரிக்கப் படை செக்கோஸ்லொவாக்கியப் பரப்பினுள் நுழைந்தது. இப்படை பிடித்த நகரங்களில், உதாரணமாக பெல்சேனில், தேசியக் கமிட்டி கள் கலைக்கப்பட்டன, ஜெர்மானியர்களோடு ஒத்துழைத்த செக் கோஸ்லொவாக்கியர்களுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பு ஆட்சி ஏற்படுத் தப்பட்டது. பெல்சேனில் அமெரிக்கத் துருப்புகள் புகும் முன் நகரம் குண்டு வீச்சிற்கு ஆளாக்கப்பட்டது. இதில் நகரிலிருந்த வீடுகளில் மூன்றில் இரண்டு பகுதி அழிக்கப்பட்டது, பெருத்த சேதமேற் பட்டது.

பிரேக் நடவடிக்கை (1945 மே 6 — 11)

ஐரோப்பாவில் யுத்தத்தை முடித்து வைத்த இந்த தாக்குதல் நடவடிக்கையின் சிறப்பு அம்சம் இதன் முனைப்பான வேகமாகும். இதன் காரணங்கள் பின்வருமாறு. முதலாவதாக, நேச நாட்ட வரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுமென்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்களுடன் சேர்ந்து சதி செய்யலாம் என்றும் நம்பி பாசிஸ்டுகள் இயன்ற வரை நீண்ட காலம் செக்கோஸ்லொ வாக்கியாவில் தங்கியிருக்கத் திட்டமிட்டிருந்தனர். கிழக்கே சோவி யத் துருப்புகளை உறுதியாக எதிர்த்து நிற்கும் அதே சமயம் மேற்கே அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளுக்குப் பாதையைத் திறந்து விட்டு இவற்றின் முன் செக்கோஸ்லொவாக்கியாவில் எஞ்சியிருந்த கிட்டத் தட்ட 10 லட்சம் பேரடங்கிய படைத் திரட்டை சரணடையச் செய்ய அவர்கள் எண்ணியிருந்தனர். இரண்டாவதாக — இதுதான் முக்கியமானது — 5ஆம் தேதி பிரேகில் ஆயுத எழுச்சி ஆரம்ப மாகியது. கிளர்ந்தெழுந்தோருக்கு எதிராக பாசிச ஜெர்மானியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. நகர வீதிகளில் கடும் சண்டைகள் மூண்டன. கிளர்ந்தெழுந்தோரின் நிலை ஒவ்வொரு மணி நேரம்

* *Churchill, The Second World War*, Vol. VI, p. 506.

சென்றதும் மேன்மேலும் கடுமையாகி வந்தது. ''எல்லா நேச நாட்டு இராணுவங்களுக்கும் பிரேக் நகரத்தின் வேண்டுகோள். எல்லா பக்கங்களிலிருந்தும் ஜெர்மானியர்கள் பிரேகை நோக்கி முன்னேறுகின்றனர். ஜெர்மானிய டாங்கிகளும் பீரங்கிகளும் காலாட் படையும் இயங்குகின்றன. பிரேக் நகரத்திற்கு அவசர உதவி தேவை. விமானங்கள், டாங்கிகள், ஆயுதங்களை அனுப்புங்கள். உதவுங்கள், உதவுங்கள், விரைவாக உதவி செய்யுங்கள்'' என்ற அறைகூவல்கள் பிரேகிலிருந்து வந்தன. ''உடனடியாகப் பாராசூட் ஆதரவு அளிக்கு மாறு வேண்டுகிறோம். இறக்கம் பிரேகில் 12-வினோகிராதி – ஓல்ஷான் கல்லறை. அடையாளம்—முக்கோணம். ஆயுதங்களையும் விமானங் களையும் அனுப்புங்கள்'' என்ற வேண்டுகோள் மே 6ஆம் தேதி சுமார் 5 மணிக்கு ருஷ்ய மொழியில் நேரடியாக 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு அளிக்கப்பட்டது.

பாசிச ஜெர்மானியத் துருப்புகள் பிரேக் நகரத்தைத் தாக்க ஆரம்பித்த போது அமெரிக்கா தனது துருப்புகள் நகரத்தை நோக்கிச் செல்வதை நிறுத்தியது. ஆனால் முற்றுகையிடப்பட்ட நகரத் திற்கு உதவி வந்து சேர்ந்தது. தமது சர்வதேசியக் கடமைக்கு விசுவாசமான சோவியத் இராணுவம் உதவி கோரிய பிரேக் நகர வாசிகளின் அறைகூவலுக்கு உடனடியாகச் செவிமடுத்து மே 6ஆம் தேதி, திட்டமிட்டதற்கு 1 நாள் முன்னதாக தாக்குதலில் இறங் கியது. எல்லாமே ''பிரேக் நகரத்தை நோக்கி முன்னேறுவது!'' அதைக் காப்பற்றுதல்; பாசிச மிருகங்கள் அதை அழிக்காமலிருக் கும்படி பார்த்துக் கொள்வது* எனும் கட்டளைக்குக் கட்டுப்பட் டிருந்தது என்று 1வது உக்ரேனிய சேனையின் தளபதி மார்ஷல் கோனெவ் நினைவு கூறுகிறார். அதே நேரத்தில் 2வது, 4வது உக் ரேனிய சேனைகளின் துருப்புகளும் உறுதியான தாக்குதலில் இறங் கின. 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ், போலந்து இராணுவத்தின் 2வது படை, 1வது, 4வது ருமேனியப் படைகள் ஆகியனவும் சோவியத் துருப்புகளுடன் தோளோடு தோள் நின்று போரிட்டன.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் சக்திகளின் சமன்நிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாயிருந்தது. 20 லட்சத்திற்கும் கூடுதலான சோவியத் துருப்புகளின் வசம் சுமார் 30,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் கிட்டத்தட்ட 2,000 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 3,000க்கும் மேற்பட்ட விமானங்களும் இருந்தன. பாசிச ஜெர்மானிய ''சென்டர்'' படைத் தொகுதியில் 9,00,000க்கும் அதிகமானோர் இருந்தனர். இவர்களின் வசம்

---

* இ. கோனெவ், **1945ஆம் ஆண்டு**, மாஸ்கோ, 1966, பக்கம் 235.

9,700 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,900 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 1,000 விமானங்களும் இருந்தன.

1வது, 4வது, 2வது உக்ரேனிய சேனைகளின் சக்திகளைக் கொண்டு பிரேகை நோக்கிய பொதுவான திசையில் ஒரே நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்து பீல்ட்மார்ஷல் ஜெனரல் ஷேர்னர் தலைமையிலுள்ள எதிரியின் பெரும் படைத் திரட்டை சுற்றி வளைத்து அழிப்பதும் செக்கோஸ்லொவாக்கியத் தலைநகரத்தை விடுவிப்பதும்தான் பிரேக் நடவடிக்கையின் திட்டமாகும்.

சோவியத் கமான்டர்கள் மற்றும் படைத் தலைமையகங்களின் உயர்வான திறமை மறைவாகவும் குறுகிய காலகட்டங்களிலும் படை மாற்றம் செய்யவும் துருப்புகள் தாக்குதலுக்கான ஆரம்ப நிலையை மேற்கொள்ளவும் உதவின. உதாரணமாக 3வது, 4வது கார்டு டாங்கிப் படைகளும் 1வது உக்ரேனிய சேனையின் துப்பாக்கிப்படை யூனிட்டுகளும் 3 நாட்களில் பெர்லின் அருகேயிருந்து 100—200 கி. மீ. தூரத்தைக் கடந்து வந்து டிரெஸ்டனுக்கு வட மேற்கேயிருந்து தாக்குதலைத் தொடுப்பதற்கான ஆரம்ப இடத்தை அடைந்தன.

மே 6ஆம் தேதி, தனிப்பட்ட திசைகளில் எதிரி பின் சென்றதைப் பயன்படுத்திக் கொண்ட 1வது உக்ரேனிய சேனையின் வலப்புறத் துருப்புகள் எதிரியைத் துரத்திச் செல்ல ஆரம்பித்தன. முன்னணிப் படையணிகள் எதிரியின் பின்னணிகளைத் தகர்த்து விரைவாக முன் சென்று பிரதான சக்திகளுக்குப் பாதையமைத்தன. இரவும் பகலும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன. மே 7ஆம் தேதி சேனையின் இடப் பிரிவு மற்றும் மையப் பிரிவின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின.

2வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஸ்னேய்மோ, மீரஸ்லாவ், யார்மெர்ஜீத்ஸே ஆகிய நகரங்களைக் கைப்பற்றி தென் கிழக்கிலிருந்து பிரேகை நோக்கி தொடர்ந்து முன்னேறின. 4வது உக்ரேனிய சேனை மே 8ஆம் தேதி ஒலோமோவூத்ஸ் நகரைப் பிடித்தது. இதன் பின் மே 9ஆம் தேதி காலை இச்சேனை 2வது உக்ரேனிய சேனையின் படைபிரிவுகளுடன் இணைந்தது.

மே 9ஆம் தேதி இரவு 1வது உக்ரேனிய சேனையின் 3வது, 4வது கார்டு டாங்கிப் படைகள் ஜெனரல்கள் ரிபால்கோ, லிலுஷேன்கோவின் தலைமையில் 80 கி. மீ. தூரத்தை முனைப்பான பாய்ச்சலில் கடந்து மே 9ஆம் தேதி காலை பிரேக் நகரத்தினுள் நுழைந்தன. அதே நாளன்று 2வது, 4வது உக்ரேனிய சேனைகளின் முன்னணிப் படைப்பிரிவுகள் பிரேக் நகரத்தை நெருங்கின. கிளர்ந்தெழுந்த பிரேக் நகரத்தின் இராணுவ வாலண்டியர் குழுக்களின்



சோவியத் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட சோவியத் யூனியன், கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளின் பிரதேசங்கள்

தீவிர உதவியுடன் செஞ்சேனை மே 9ஆம் தேதி செக்கோஸ்லொவாக்கியத் தலைநகரத்தை முழுமையாக விடுவித்தது. பிரேக் நகர வாசிகளின் மகிழ்ச்சி கரை புரண்டோடியது. அதிகாலைப் பொழுதாயிருந்த போதிலும் எங்கும் மக்கள் கூட்டம் அலைமோதியது. முதியோரும் குழந்தைகளும் இளைஞர்களும் யுவதிகளும் தம்மை விடுவித்தவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். ''செக்கோஸ்லொவாக்கிய மக்களை விடுவித்த செஞ்சேனை நீடூழி வாழ்க!'' என்ற வாழ்த்தொலி எல்லா பக்கங்களிலும் கேட்டது. வீடுகளின் உச்சிகளிலும் பால்கனிகளிலும் கோபுரங்களிலும் மூவண்ண செக்கோஸ்லொவாக்கியக் கொடியும் சோவியத் கொடியும் பறக்கவிடப்பட்டன.

சோவியத் துருப்புகள் பிரேக் நகரத்தினுள் காலடி எடுத்து வைத்த நாளாகிய மே 9ஆம் தேதி செக்கோஸ்லொவாக்கியாவின் தேசிய விழாவாக, விடுதலை நாளாக ஆனது. இந்நாள் நாட்டு மக்களினங்களின் வாழ்வில் ஒரு அடிப்படைத் திருப்புமுனையாக அமைந்தது. இவர்கள் குறுகிய காலகட்டத்தில் வாழ்வின் எல்லா துறைகளிலும் முக்கிய புரட்சிகர மாற்றங்களை நிறைவேற்றி சோஷலிச வளர்ச்சிப் பாதையில் உறுதியாக நின்றனர்.

சுற்றி வளைக்கப்பட்ட பாசிச ஜெர்மானியத் துருப்புகள் மே 10—11இல் எதிர்ப்பை நிறுத்தி ஆயுதங்களைக் கீழே போட்டன. 60 ஜெனரல்கள் உட்பட சுமார் 86,000 போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்டனர். மேலும் பறிபொருளாக 9,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,800 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், ஏராளமான மற்ற வகை ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள் முதலியன கைப்பற்றப்பட்டன.

650 கி. மீ. நீளப் போர்முனையில் நடைபெற்று ஆறு நாட்கள் நீடித்த பிரேக் நடவடிக்கை செக்கோஸ்லொவாக்கியா முழுவதும் விடுவிக்கப்பட்டதுடன் முடிவடைந்தது. சோவியத் துருப்புகளின் முனைப்பான நடவடிக்கைகள் ஐரோப்பாவின் மிக அழகிய நகரங்களில் ஒன்றாகிய பிரேக் நகரத்தைக் காப்பாற்றின, நாட்டின் மற்ற நகரங்கள், கிராமங்களை அழிவிலிருந்தும் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களின் நாசத்திலிருந்தும் மீட்டன. செக்கோஸ்லொவாக்கிய மக்கள் விடுதலையடைந்து, தம் தாயகத்தின் எதிர்காலத்தை தாமே முடிவு செய்யும் வாய்ப்பைப் பெற்றனர்.

''சோவியத் யூனியனின் பாலும் மனிதகுலத்தைக் காப்பாற்றுவதற்காகவும் எங்களுடைய நகரங்களை விடுவிப்பதற்காகவும் நடந்த கடுமையான போராட்டத்தில் எங்கள் பூமியில் இரத்தம் சிந்திய புகழ்மிகு சோவியத் போர்வீரர்களின் பாலும் எல்லையற்ற அன்புடனும் நன்றியுடனும் எங்கள் மக்கள் இந்த நினைவுநாளை என்றென்றும் எண்ணிப் பார்ப்பார்கள். எங்களை விடுவித்த வெற்றிகர

செஞ்சேனையின் பாலான எல்லையற்ற அன்புடனும் நன்றியுடனும் அவர்கள் இந்நாளை நினைவு கூர்வார்கள்''* என்று வெற்றித் திரு நாளையொட்டி செக்கோஸ்லொவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட் டிருந்தது.

செக்கோஸ்லொவாக்கிய மக்களின் மே மாத எழுச்சி (பிரேகில் நடந்த ஆயுதப் போராட்டம் இதன் உச்சக்கட்டமாயிருந்தது) செக்கோஸ்லொவாக்கிய மக்களின் பாசிச எதிர்ப்பு போராட்ட வரலாற்றில் மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. எழுச்சியில் பங்கேற்ற தேசபக்தர்கள் 1வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசின் போர்வீரர்களோடும் கொரில்லாப் படை வீரர்களோடும் சேர்ந்து பாசிஸ்டுகளை முறியடிக்கும் பொது லட்சியத்திற்கு கணிசமான பங்கைச் செலுத்தினர்.

செக்கோஸ்லொவாக்கியப் பரப்பில் நடந்த சண்டைகளில் சோவியத் துருப்புகள் 122 எதிரி டிவிஷன்களை அழித்தன, முறியடித்தன, சிறைபிடித்தன. 12,00,000 எதிரி போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்டனர். 18,100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 3,200 டாங்கிகளும் 1,900 போர் விமானங்களும் கைப்பற்றப்பட்டன. செக்கோஸ்லொவாக்கியப் பூமியில் நடந்த கடுமையான சண்டைகளில் செஞ்சேனைக்கும் பல இழப்புகள் ஏற்பட்டன. கிட்டத்தட்ட 5 லட்சம் சோவியத் போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் இங்கு இரத்தம் சிந்தினர், இவர்களில் சுமார் 1,40,000 பேர்கள் இங்கே மீளாத் துயில் கொள் கின்றனர். செக்கோஸ்லொவாக்கியாவின் விடுதலை சர்வதேசியத் தன்மையுடையதாயிருந்தது. இதன் பரப்பில் சோவியத் போர்வீரர் களோடு சேர்ந்து செக்கோஸ்லொவாக்கிய, போலந்து, ருமேனிய யூனிட்டுகளும் போரிட்டன.

4. பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்

1945ஆம் ஆண்டு பனிக்கால நடவடிக்கையின் பயனாய் 1வது, 2வது பெலோருஷ்ய சேனைகளும் 1வது உக்ரேனிய சேனையும் போலந்து முழுவதையும் விடுவித்து ஓதெர், நேய்சே ஆறுகளை அடைந்தன, ஓதெர் ஆற்றின் மேற்கு கரையில் ஒரு சில தாக்குமுனைகளைக் கைப்பற்றின. இவற்றில் குஸ்ட்ரின் பிரதேசத்தில் 1வது பெலோ

---

* செக்கோஸ்லொவாக்கியாவின் விடுதலைக்காக, மாஸ்கோ, 1965, பக்கம் 275.

ருஷ்ய சேனையால் கைப்பற்றப்பட்ட தாக்குமுனை மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

ஆனால் பாசிச ஜெர்மனியோ இன்னமும் பலமான, ஆபத்தான எதிரியாக இருந்தது. 1945ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஜெர்மனியின் தொழிற்துறை சுமார் 1,000 டாங்கிகளையும் 2,800 விமானங்களையும் உற்பத்தி செய்தது. இவற்றில் ஒரு சில நூறு விமானங்கள் Me-262 ரக ஜெட் சண்டை விமானங்களாகும். இந்த ஆண்டு ஏப்ரல் வாக்கில் எதிரியிடம் ஒரு சில மில்லியன் பயன் மிகு டாங்கி எதிர்ப்பு சாதனங்களாகிய பாவுஸ்ட் குண்டுகளும் ஏராளமான மற்ற வகை ஆயுதங்களும் போர்த் தளவாடங்களும் இருந்தன. இராணுவத்தில் ஏற்பட்ட பெரும் ஆட்சேதத்தை ஈடு கட்டுவதற்காகப் பாசிஸ்டுகள் ஜனவரி—மார்ச்சில் ''முற்றமுழு'' அழைப்பு விடுத்து 16—17 வயது இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்தனர். அதே நேரத்தில் பெர்லின் போர்த்தந்திர திசையில் தற்காப்பை பலப்படுத்துவதற்காக பாசிசப் படைத் தலைமை உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு எவ்விலையை கொடுத்தாவது பெர்லினை நோக்கிய செஞ்சேனையின் தாக்குதலைக் குலைக்க முடிவு செய்தது.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் இத்திசையின் தற்காப்பு ஓடெர்-நேய்சே தற்காப்பு எல்லையையும் பெர்லின் தற்காப்பு வட்டாரத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. தற்காப்பின் பொது ஆழம் 100—120 கி. மீ.களை எட்டியது.

''கடைசி மனிதனும் கடைசி குண்டும் எஞ்சியிருக்கும் வரை தலைநகரத்தைத் தற்காத்து நிற்க வேண்டும்... எதிரியை ஒரு நிமிடம் கூட நிம்மதியாய் இருக்க விடக் கூடாது, ஆதார நிலையங்கள், தற்காப்பு மையங்கள் மற்றும் எதிர்ப்பு உறைவிடங்கள் அடங்கிய அடர்த்தியான வலையில் அவன் சிக்குண்டு பலமிழந்து பலவீனமடைய வேண்டும். இழந்த ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு ஆதார நிலையமும் உடனடியாக பதிலடியால் மீட்கப்பட வேண்டும்... பெர்லின் யுத்தத்தின் முடிவைத் தீர்மானிக்கக் கூடும்''* என்று பெர்லினின் தற்காப்பிற்குத் தயாராவதைப் பற்றி மார்ச் 9இல் வெளியிடப்பட்ட கட்டளையில் கூறப்பட்டிருந்தது.

சோவியத் இராணுவத்தின் தாக்குதலை முறியடிக்கத் தயாராகிக் கொண்டிருந்த பாசிசப் படைத் தலைமை தனது துருப்புகளை ஒழுங்கமைந்த முறையில் வலுப்படுத்துவது சம்பந்தமான பல நடவடிக்கைகளை நிறைவேற்றியது. போர்த்தந்திர சேம இருப்புகள், கையிருப்புப் படைபிரிவுகள், இராணுவக் கல்விக் கூடங்கள் ஆகியவற்றைக் கொண்டு கிட்டத்தட்ட எல்லா டிவிஷன்களின் ஆள் பலமும்

---

* *Zeitschrift für Militärgeschichte*, 1965, № 2, S. 182—183.

ஆயுத பலமும் புனர்நாட்டப்பட்டன. ஏப்ரல் நடுப்பகுதி வாக்கில் காலாட்படை கம்பெனிகளின் எண்ணிக்கை 100 வரை கொண்டு செல்லப்பட்டது. ''வீஸ்லா'' படைத் தொகுதியின் தளபதியாக மேலே கூறப்பட்டபடி ஹிம்லருக்குப் பதிலாக வேர்மஹ்டில் தற்காப்புத் துறையில் பெரும் நிபுணனுக கருதப்பட்ட ஜெனரல் ஹைன்ரிட்சி நியமிக்கப்பட்டான். ''சென்டர்'' படைத் தொகுதியின் தளபதியான ஷேர்னருக்கு ஏப்ரல் 8ஆம் தேதி பீல்ட்மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டது. தரைப்படை பிரதான படைத் தலைமையகத்தின் புதிய தலைவனுகிய ஜெனரல் கிரேப்ஸ் யுத்தத்திற்கு முன் மாஸ்கோவில் இராணுவ ஆலோசனையாளரின் உதவியாளராக இருந்ததால் ஹிட்லரின் இராணுவ நிபுணர்களின் கருத்துப்படி சோவியத் இராணுவத்தைப் பற்றி மிக நன்ருக அறிந்தவனுக இருந்தான்.

ஏப்ரல் 15ஆம் தேதி ஹிட்லர் கிழக்குப் போர்முனையின் போர் வீரர்களுக்கு விசேஷ அறைகூவல் விடுத்தான். எப்படியாவது சோவியத் இராணுவத்தின் தூக்குதலை முறியடிக்குமாறு ஹிட்லர் அவர்களை அறைகூவி அழைத்தான். இருந்த இடத்தை விட்டு யார் நகரத் துணிகின்ருர்களோ அல்லது பின்வாங்கும்படி கட்டளையிடுகின்ருர்களோ அவர்களை அந்த இடத்திலேயே சுட்டுத் தள்ளுமாறும் ஹிட்லர் கோரினுன். சோவியத் துருப்புகளிடம் சரணடையும் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களின் பாலான அச்சுறுத்தல்களும் இந்த அறைகூவலில் அடங்கியிருந்தன.

இராணுவத்தின் பிரதான படைத் தலைமையகத்தின் தலைவன் பீல்ட்மார்ஷல் கைடலும் கட்சிக் காரியாலயத் தலைவன் ரைஹ்ஸ் லேய்டர் போர்மனும் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியையும் கடைசி மனிதன் இருக்கும் வரை பாதுகாக்குமாறும் மிகச் சிறு உறுதியின்மையைக் காட்டினுலும் மரண தண்டனை கிடைக்குமென்றும் கட்டளையிட்டனர்.

ஓதெர் ஆற்றை அடைந்து பெர்லினிலிருந்து 60 கி. மீ. தூரத்திலிருந்த சோவியத் துருப்புகளுக்கு எதிராக ''வீஸ்லா'', ''சென்டர்'' படைத் தொகுதிகளைச் சேர்ந்த பலத்த படைத் திரட்டு நின்றது. ''வீஸ்லா'' படைத் தொகுதியில் 3வது டாங்கிப் படையும் 9வது போர்க்களப் படையும் இருந்தன, ''சென்டர்'' படைத் தொகுதியில் 4வது டாங்கிப் படையும் 17வது போர்க்களப் படையும் இருந்தன. மொத்தமாக பாசிச ஜெர்மானியப் படைத் தலைமை இத்திசையில் 48 காலாட்படை, 4 டாங்கி, 10 மோட்டார் டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 85 டிவிஷன்களையும் ஒரு சில டஜன் தனி ரெஜிமென்டுகள், பட்டாலியன்களையும் நிறுத்தியது. இது தவிர பெர்லின் வட்டாரத்தில் 200 வரையிலான பால்க்ஸ்டோம்

பட்டாலியன்கள் (இவை சாதாரண மக்களைக் கொண்டு அமைக்கப் பட்டன) உருவாக்கப்பட்டன. பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் மொத்த எண்ணிக்கை 10 லட்சமாக இருந்தது. எதிரியிடம் 10,400 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 1,500 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 3,300 போர் விமானங்களும் 30 லட்சத் திற்கும் கூடுதலான பாவுஸ்ட் குண்டுகளும் இருந்தன.

ஜெர்மனியின் இராணுவத் தலைமை, பாசிச எதிர்ப்பு கூட்டணி யில் பிளவேற்படுத்தவும் பிரிட்டன், அமெரிக்காவுடன் தனி சமா தான உடன்படிக்கை செய்து கொள்ளவும் முயன்றது. இந்நோக்கத் தோடு இது ஆங்கிலேயர்களுடனும் அமெரிக்கர்களுடனும் பன்முறை பேச்சுவார்த்தைகளை நடத்தியது, மேற்குப் போர்முனையிலிருந்து பெரும் சக்திகளை கிழக்குப் போர்முனைக்கு அனுப்பி மேற்குப் போர் முனையில் எதிர்ப்பைத் தளர்த்தியது. பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்பு களுக்கு விரைவாக முன்னேறும் வாய்ப்பு கிட்டியது. முன்னர் மெது வாகச் செயல்பட்டதற்கு மாறாக அவை மிக அவசரமாக செயல் படத் துவங்கின. ஜெர்மானிய ஏகாதிபத்தியம் முழுவதுமாக முறி யடிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றும் பொருட்டு அமெரிக்க, பிரிட் டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இயன்ற வரை அதிகமாக ஜெர்மா னியப் பரப்பைப் பிடிக்கவும் பெர்லினைக் கைப்பற்றவும் பாடு பட்டனர். ஆனால் இத்திட்டங்கள் நிறைவேறவில்லை. ஓல்தென்புர்க் — மாக்தெபுர்க் — டெஸ்ஸாவு — நியூரென்பர்க் எல்லைக் கோட்டை நேச நாட்டினர் அடைந்த போது சோவியத் துருப்புகள் பெர்லின் மீதான தாக்குதலில் இறங்கியிருந்தன.

சோவியத் துருப்புகளின் பனிக்கால தாக்குதலின் போதே பெர்லின் நடவடிக்கையின் திட்டம் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை யால் தீட்டப்பட்டது. ஐரோப்பாவில் உருவாகிய இராணுவ-அரசியல் நிலவரத்தை பன்முகக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்த உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை, நடவடிக்கையின் லட்சியத்தை வரையறுத்தது, சேனைகளின் படைத் தலைமையகங்கள் தயாரித்த திட்டங்களை ஆராய்ந்தது. அரசுத் தற்காப்பு கமிட்டியின் உறுப்பினர்களும் 1வது பெலோருஷ்ய சேனை மற்றும் 1வது உக் ரேனிய சேனையின் தளபதிகளும் கலந்து கொண்ட உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையின் விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தில் ஏப்ரல் ஆரம்பத்தில் இறுதி தாக்குதல் திட்டம் ஆமோதிக்கப்பட்டது. பெர்லின் தாக்குதல் திட்டம் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை, உயர்மட்ட படைத் தலைமையகம், தளபதிகள் மற்றும் சேனைப் படைத் தலைமையகங்களின் கூட்டுப் படைப்பின் முடிவாக விளங்கியது.

1வது, 2வது பெலோருஷ்ய, 1வது உக்ரேனிய சேனைகளின்

சக்திகளைக் கொண்டு எதிரியின் பெர்லின் படைத் திரட்டு முழு வதையும் சுற்றி வளைத்து அதே நேரத்தில் அதை சிறுசிறு பகுதி களாகப் பிளந்து ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஒழிப்பது தான் நடவடிக்கையின் திட்டமாக இருந்தது.

பால்டிக் கடற்படை (தளபதி அட்மிரல் திரிபுட்ஸ்) கடலின் கரையோரமாக 2வது பெலோருஷ்ய சேனையின் தாக்குதலுக்கு உதவி, லியபாயாவிலிருந்து ரஸ்தோக் வரை கடல் போக்குவரத்து மார்க்கங்களின் மீது விமானப்படை, நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தியது. இந்நடவடிக்கையில் 1வது பெலோருஷ்ய சேனைக்கு கட்டுப்பட்ட தினேப்பர் இராணுவ ப்ளீட் டுக்கு (தளபதி ரியர் அட்மிரல் கிரிகோரியெவ்) தற்காப்பைப் பிளந்து செல்வதில் தரைப்படைத் துருப்புகளுக்கு உதவும்படியும் ஓதெர் ஆற்றைக் கடந்து செல்லவும் அதில் கண்ணிவெடி எதிர்ப்பு தற்காப் பிற்கும் வகை செய்யும்படியும் கட்டளையிடப்பட்டது. மேலும் 1வது பெலோருஷ்ய சேனையின் மண்டலத்தில் தொலைதூர விமானப் படையின் 18வது வான் படையைப் பயன்படுத்தவும் திட்டமிடப் பட்டது.

பெர்லின் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற் காக உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை தனது சேம இருப்பு களிலிருந்து கணிசமான அளவு சக்திகளையும் சாதனங்களையும் அளித்து சேனைகளைப் பலப்படுத்தியது. இவற்றின் பயனாய் நடவடிக் கையின் ஆரம்பத்தில் மூன்று சேனைகளிலுமாகச் சேர்த்து 25,00,000 பேர்கள் இருந்தனர். இவர்களிடம் 42,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7,500 போர் விமானங்களும் 6,250 டாங்கி களும் இருந்தன. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் சக்திகளும் சாதனங்களும் இது வரை ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட வில்லை. சோவியத் துருப்புகள் எதிரியைக் கணிசமான அளவு விஞ்சி நின்றன.

ஏப்ரல் 16ஆம் தேதி அதிகாலை 5 மணிக்கு, இன்னமும் இருட்டு விலகாத போது பீரங்கிப்படை மற்றும் விமானப்படையின் பூர் வாங்க தாக்குதலும், 20 நிமிடங்களுக்குப் பின் பொதுத் தாக்குத லும் ஆரம்பமாயின. நடவடிக்கையின் முதல் நாளன்று முடிவில் எதிரியின் தற்காப்பின் பிரதான மண்டலத்தை முற்றிலுமாகப் பிளந்து இரண்டாவது மண்டலத்தை (ஆழம் 8 – 10 கி. மீ.) அடைய முடிந்தது.

அடுத்த மூன்று நாட்களில் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் எதிரியின் ஏராளமான பதிலடிகளை முறியடித்து 30 – 40 கி. மீ. ஆழத்திற்கு ஓதெர் தற்காப்பு எல்லை முழுவதையும் முற்றிலு மாகப் பிளந்து சென்றன.

1வது உக்ரேனிய சேனையின் தாக்குதல் சிறிது மாறுபட்டதா யிருந்தது. காலையில் பீரங்கிப்படை, விமானப்படையின் பூர்வாங்க தாக்குதலுக்குப் பின் முதல் படை வரிசையின் யூனிட்டுகள் நேய்சே ஆற்றைக் கடந்து அதன் எதிர் கரையிலிருந்த தாக்குமுனையைப் பிடித்தன, நாளின் முடிவில் எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத் தைப் பிளந்தன. அடுத்த நாளன்று, ஏப்ரல் 17ஆம் தேதி, டாங்கிப் படைகள் உட்பட முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் துருப்பு கள் எதிரி சேமப் படைகளின் பதிலடிகளை முறியடித்து, இரண்டா வது மண்டலத்தைப் பிளந்தன, இரண்டு நாட்களில் 18 கி. மீ. ஆழத்திற்கு முன்னேறின. எதிரி ஷ்பிரேயே ஆற்றின் பின்னிருந்த மூன்றாவது தற்காப்பு மண்டலத்திற்குப் பின்வாங்கத் துவங் கினான்.

நடவடிக்கையின் மூன்றாவது நாளாகிய ஏப்ரல் 18ஆம் தேதி சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் துருப்புகள் போகும் போக்கில் ஷ்பிரேயே ஆற்றைக் கடந்து, பகுதியளவு சக்தியைக் கொண்டு எதிரியின் மூன்றாவது தற்காப்பு மண்டலத்தை உடைத் தன. பாசிஸ்டுகளுக்கு பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. சேனையின் டாங்கிப் படைகள் எதிரியின் பெர்லின் படைத் திரட்டைச் சுற்றி வளைக்கும் நோக்கத்தோடு வட மேற்குத் திசையில் தொடர்ந்து முன்னேறின. நடவடிக்கையின் நான்காவது நாளன்று 1வது உக்ரேனிய சேனை போர்முனை பூராவும் நேய்சே தற்காப்பு எல்லையைப் பிளந்து எதிரியின் தற்காப்பினுள் 50 கி. மீ. ஆழம் வரை உட்புகுந்தது.

2வது பெலோருஷ்ய சேனையின் போர் நடவடிக்கைகள் இரண்டு நாட்கள் கழித்து ஏப்ரல் 18ஆம் தேதி ஆரம்பமாயின. இரண்டு நாட்களில் இத்துருப்புகள் ஓஸ்த் ஓதெர் ஆற்றைக் கடந்தன, ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியை எதிரியிடமிருந்து விடுவித்தன, வெஸ்த் ஓதெர் ஆற்றின் கிழக்கு கரையின் மீது தாக்குதல் தொடுப் பதற்கான ஆரம்ப நிலையை மேற்கொண்டன. இதன் மூலம் இவை பாசிஸ்டுகளின் 3வது டாங்கிப் படைச் சக்திகளைக் கட்டிப்போட் டன, 1வது பெலோருஷ்ய சேனையின் தாக்குதல்களின் கீழ் தோல் வியைத் தழுவி வந்த 9வது படைக்கு உதவியாக இந்த 3வது டாங்கிப் படையை பாசிசப் படைத் தலைமை அனுப்ப இயலாமல் செய்யப்பட்டது.

ஓதெர்-நேய்சே தற்காப்பு எல்லையைப் பிளந்ததும் 1வது பெலோ ருஷ்ய சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் துருப்பு கள் வட கிழக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும், 1வது உக்ரேனிய சேனை யின் துருப்புகள் தெற்கிலிருந்தும் தென் கிழக்கிலிருந்துமாகத் தொடர்ந்து பெர்லினை நோக்கி முன்னேறின. ஏப்ரல் 20, 21 தேதி

களில் 1வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் பெர்லின் வெளி தற்காப்பு வளையத்தைப் பிளந்து கொண்டு புறநகர் பகுதியில் நுழைந்தன. ''உயர்மட்டப் படைத் தலைமையின் மேல் மட்டங்களைப் பொறுத்தமட்டில் ஜெர்மானிய இராணுவம் மடிந்து வீழ்வதன் கடைசி காட்சி துவங்குகிறது... எல்லாமே அவசர அவசரமாக நடைபெறுகின்றன, ஏனெனில் ருஷ்ய டாங்கிகள் சுடுவது தொலைதூரத்திலிருந்து காதில் விழுகிறது... மோசமான ஒரு மனநிலை நிலவுகிறது''* என்று ஏப்ரல் 20ஆம் தேதி வேர்மஹ்டின் உயர் மட்ட பிரதானப் படைத் தலைமையின் நாட்குறிப்பில் எழுதப்பட்டிருந்தது.

1வது உக்ரேனிய சேனையின் படைப்பிரிவுகளும் தெற்கேயிருந்து பெர்லினை அடைந்தன. பாசிஸ்டுகள் தமது தலைநகரம் சுற்றி வளைக்கப்படாமல் இருப்பதற்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். ஏப்ரல் 22ஆம் தேதி நடுப்பகலுக்குப் பின் பேரரசின் காரியாலயத்தில் கடைசி அவசரக் கூட்டம் நடைபெற்றது. இதில் கைடல், யோடல், போர்மன், கிரேப்ஸ், இன்னும் சிலர் கலந்து கொண்டனர். மேற்குப் போர்முனையிலிருந்து எல்லா துருப்புகளையும் அகற்றி அவற்றை பெர்லினுக்காக நடைபெறும் சமரில் ஈடுபடுத்த வேண்டும் என்ற யோடலின் ஆலோசனையை ஹிட்லர் ஒப்புக் கொண்டான். இதன் தொடர்பாய் எல்பா ஆற்றில் தற்காப்பு நிலையிலிருந்த ஜெனரல் வேன்கெயின் 12வது படைக்கு கிழக்கு நோக்கித் திரும்பி, 9வது படையுடன் சேருவதற்காக பெர்லினை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. அதே நேரத்தில் எஸ். எஸ். ஜெனரல் ஷ்டைனரின் தலைமையில் தலைநகரத்துக்கு வடக்கே செயல்பட்ட ஆர்மித் தொகுதி வடக்கேயிருந்தும் வடமேற்கேயிருந்துமாக அதைச் சுற்றி வந்த சோவியத் படைத் திரட்டின் பக்கவாட்டில் தாக்க வேண்டும்**.

12வது படையின் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்வதற்காக பீல்ட்மார்ஷல் கைடல் வேன்கெயின் படைத் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டான்.

ஏப்ரல் 23, 24இல் எல்லாத் திசைகளிலும் போர் நடவடிக்கைகள் உக்கிரமாக நடைபெற்றன. சோவியத் துருப்புகளின் முன்னேற்ற வேகங்கள் சிறிதளவு குறைந்த போதிலும் பாசிஸ்டுகளால் இவற்றைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. தனது படைத் திரட்டு சுற்றி வளைக்கப்பட்டு பிளக்கப்படுவதைத் தடுக்க எண்ணிய பாசிச படைத் தலைமையின் திட்டம் குலைக்கப்பட்டது. ஏப்ரல் 24ஆம் தேதி

---

* *KTB/OKW*, Bd. IV.

** KTB/OKW, Bd. IV, S. 1457—1458.

1வது பெலோருஷ்ய சேனையின் 8வது கார்டு படையும் 3வது, 69வது படைகளும் பெர்லினுக்குத் தென் கிழக்கே 1வது உக்ரேனிய சேனையின் 3வது கார்டு டாங்கிப் படை, 28வது படை ஆகியவற்றுடன் இணைந்தன. இதன் மூலம் இவை எதிரியின் 9வது படையை பெர்லின் படைத் திரட்டிலிருந்து துண்டித்து அதே நேரத்தில் சுற்றி வளைத்தன.

அடுத்த நாள், ஏப்ரல் 25ஆம் தேதி, 1வது பெலோருஷ்ய சேனையின் 47வது மற்றும் 2வது கார்டு டாங்கிப் படைகள் பாட்ஸ்டாமிற்கு வட மேற்கே 1வது உக்ரேனிய சேனையின் 4வது கார்டு டாங்கிப் படைத் துருப்புகளுடன் இணைந்து பெர்லின் படைத் திரட்டு முழுவதையும் முற்றிலுமாகச் சுற்றி வளைத்தன.

டிரெஸ்டன் திசையில் முன்னேறிய போலந்து இராணுவத்தின் 2வது படையும் 1வது உக்ரேனிய சேனையின் 52வது படையும் கோர்லிட்ஸ் பிரதேசத்திலிருந்து வந்த எதிரியின் (3 காலாட்படை, 2 டாங்கி, 1 மோட்டார் டிவிஷன்களின்) பலத்த பதிலடியை முறியடித்து சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டு முன்னேற வகை செய்தன.

ஏப்ரல் 25ஆம் தேதி 1வது உக்ரேனிய சேனையின் 5வது கார்டு படையைச் சேர்ந்த பிரதானச் சக்திகள் தோர்காவு பிரதேசத்தில் எல்பா ஆற்றின் கிழக்குக் கரையை அடைந்து 1வது அமெரிக்கப் படையின் துருப்புகளைச் சந்தித்தன. இதன் பயனாய் ஜெர்மனியும் அதன் இராணுவமும் துண்டிக்கப்பட்டன.

2வது பெலோருஷ்ய சேனையின் துருப்புகள் வெஸ்த் ஓதெரைக் கடந்து, தாக்குமுனையை விரிவுபடுத்துவதற்காகக் கடும் சண்டைகளில் இறங்கின. வடக்கு, கிழக்கு, தெற்கு திசைகளிலிருந்து ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல்களைத் தொடுத்ததன் மூலம் பெர்லினுக்கு தென் கிழக்கே சுற்றி வளைக்கப்பட்ட எதிரியின் பிராங்க்பர்ட்-கும்பினேன் படைத் திரட்டு மே 2ஆம் தேதிக்கு முன் அழிக்கப்பட்டது.

இப்படைத் திரட்டைச் சேர்ந்த 60,000க்கும் மேற்பட்ட போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர், 1,20,000 நபர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். சோவியத் துருப்புகள் 300க்கும் அதிகமான டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் 1,500க்கும் மேற்பட்ட போர்க்கள பீரங்கிகளையும் 17,600 வாகனங்களையும் இன்னும் பல இராணுவத் தளவாடங்களையும் கைப்பற்றின. மிகச் சிறிய அளவு எதிரி குழுக்களால் மட்டுமே காடுகள் வழியே தப்பி மேற்கே செல்ல முடிந்தது.

பெர்லினில் சுற்றி வளைக்கப்பட்ட எதிரி, நகரத்தின் மையத்தை நோக்கி எல்லா பக்கங்களிலிருந்தும் தொடுக்கப்பட்ட ஆழ்ந்த

தாக்குதல்களால் ஒழிக்கப்பட்டான். இத்தகையத் தாக்குதல்கள் முழு வட்டாரங்களைத் துண்டிக்கவும் எதிரியை பகுதி பகுதியாக ஒழித்துக் கட்டவும் வாய்ப்பளித்தது. 2,00,000க்கும் மேற்பட்டோர் அடங்கிய பெர்லின் படைத் திரட்டு (பெர்லின் பாதுகாப்புச் சக்திகள்) கடுமையான தெருச் சண்டைகளில் ஒழித்துக் கட்டப்பட்டது. பாசிஸ்டுகள் மூர்க்கத்தனமான எதிர்ப்பைக் காட்டினர். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் அவர்கள் சண்டையிட்டனர்.

வேன்கெயின் 12வது படைத் துருப்புகளைக் கொண்டு ஜெர்மானியப் படைத் தலைமை தொடுத்த பதிலடிகள் முறியடிக்கப்பட்டன.

''வெளியிலிருந்து தாக்குவதன் மூலம் பெர்லினைப் பாதுகாத்து நிற்பவர்களின் நிலையை இலகுவாக்கும் பொருட்டு எல்பாவில் இருந்த எங்கள் துருப்புகள் அமெரிக்கர்களுக்கு முதுகைக் காட்டித் திரும்பின''* என்று OKWஇன் நாட்குறிப்பில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தாக்குதல் நடைபெறவில்லை... முறியடிக்கப்படாமல் தப்பிய 12வது படையின் துருப்புகளில் ஒரு பகுதி அமெரிக்கத் துருப்புகளால் போடப்பட்ட பாலங்களின் வழியே எல்பா ஆற்றின் இடது கரைக்குச் சென்று அமெரிக்கர்களிடம் சரணடைந்தது.

சோவியத் துருப்புகள் பெர்லினின் மத்தியப் பகுதியை அடைந்து, மிக முக்கிய எதிர்ப்பு மையங்களில் ஒன்றாக மாறிய ரைஹ்ஸ்டாக் கட்டிடத்திற்கான கடும் சண்டைகளில் இறங்கின. ஜெர்மானியர்களோ வெறித்தனமான எதிர்ப்பைக் காட்டினர், சண்டைகள் இழுபறித் தன்மையைப் பெற்றன, கடுமையானவையாக மாறின. பல இடங்களில் இவை கைகலப்புச் சண்டைகளாக மாறின.

ரைஹ்ஸ்டாக் கட்டிடத்தின் உள்ளேயோ ஒவ்வொரு இடைவெளிக்காகவும் ஒவ்வொரு அறைக்காகவும் சண்டை நடந்தது. ஏப்ரல் 30ஆம் தேதி ரைஹ்ஸ்டாக் கட்டிடத்தின் உச்சியின் மீது சார்ஜென்டுகள் யெகோரவும் கன்டாரியாவும் வெற்றிச் செம்பதாகையைப் பறக்க விட்டனர். பெர்லின் படைத் திரட்டு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாகத் துண்டிக்கப்பட்டது.

பாசிசத் தலைமையின் மத்தியில் பீதி கிளம்பியது. தான் இழைத்த கொடும் பாதகச் செயல்களுக்கான பொறுப்பிலிருந்து தப்பிப்பதற்காக ஏப்ரல் 30ஆம் தேதி ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான். இராணுவத்திடமிருந்து இதை மறைக்கும் நோக்கத்தோடு, பெர்லின் அருகே போர்முனையில் ஹிட்லர் கொல்லப்பட்டதாக பாசிச வானொலி அறிவித்தது. அதே நாளன்று ஷ்லேஸ்விக்-கோல்ஷ்தேய்னில் ஹிட்லரின் வாரிசாகிய கிரோஸ்-அட்மிரல் தேனிட்ஸ் ''தற்காலிக பேரரசு அரசாங்கத்தை'' அமைத்தான். பின்னர்

---

* KTB/OKW, Bd. IV, S. 1269.

நடந்த சம்பவங்கள் காட்டியபடி இது சோவியத் எதிர்ப்பின் அடிப்படையில் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் தொடர்பு கொள்ள முயன்றது* .

ஆனால் பாசிச ஜெர்மனியின் நாட்கள் ஏற்கெனவே எண்ணப்பட்டு விட்டன. பெர்லின் படைத் திரட்டின் நிலை படுமோசமானது. மே 1ஆம் தேதி 3 மணிக்கு ஜெர்மானிய தரைப்படைகளின் பிரதான படைத் தலைமையகத் தலைவன் ஜெனரல் கிரேப்ஸ் சோவியத் படைத் தலைமையின் ஒப்புதலோடு பெர்லினில் போர்முனைக் கோட்டைக் கடந்து வந்து 8வது கார்டு படையின் தளபதி ஜெனரல் சுய்க்கோவைச் சந்தித்தான். கிரேப்ஸ் ஹிட்லரின் தற்கொலையைப் பற்றி அறிவித்து, புதிய பேரரசு அரசாங்கத்தின் உறுப்பினர் பட்டியலைத் தந்தான், ஜெர்மனிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலைகளைத் தயார்படுத்தும் பொருட்டு தலைநகரத்தில் போர் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்ற கேபெல்ஸ், போர்மனின் முன்மொழிவைத் தெரிவித்தான். ஆனால் இந்த ஆவணத்தில் சரணடைவதைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இது ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் பிளவு ஏற்படுத்துவதற்காக பாசிச கொலைபாதகர்கள் மேற்கொண்ட கடைசி முயற்சியாகும். ஆனால் எதிரியின் இத்திட்டத்தை சோவியத் படைத் தலைமை கண்டு கொண்டது.

கிரேப்ஸ் கொணர்ந்த செய்தி மார்ஷல் ஜூக்கவ் மூலம் உயர் மட்ட பிரதானப் படைத் தலைமையகத்திற்குத் தெரியப்படுத்தப் பட்டது. பெர்லின் பாதுகாப்புச் சக்திகளை உடனடியாக, நிபந்தனையின்றிச் சரணடையச் செய்யவும் என்று மிகச் சுருக்கமான பதில் வந்தது.

பேச்சுவார்த்தைகள் பெர்லினில் நடைபெற்ற சண்டைகளின் வேகத்தைப் பாதிக்கவில்லை. எதிரியின் தலைநகரத்தை முழுமையாகப் பிடிப்பதற்காக சோவியத் துருப்புகள் தொடர்ந்து தீவிரமாக முன்னேறின, பாசிஸ்டுகளோ தொடர்ந்து உறுதியான எதிர்ப்பைக் காட்டி வந்தனர். பாசிசத் தலைவர்கள் நிபந்தனையற்று சரணடையும் கோரிக்கையை நிராகரித்தது மாலை 6 மணிக்குத் தெரிய வந்தது. இதன் மூலம் அவர்கள், லட்சக்கணக்கான சாதாரண ஜெர்மானியர்களின் விதிகளின் பால் தாங்கள் எவ்வளவு அலட்சியமாக உள்ளனர் என்பதை இன்னுமொரு முறை மெய்ப்பித்தனர்.

பெர்லினில் உள்ள எதிரியின் படைத் திரட்டை மிகக் குறுகிய

---

* பிளேயர், இதரர், **இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனி (1939 — 1945).** ஜெர்மன் மொழியிலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, மாஸ்கோ, 1971, பக்கம் 416.

காலகட்டத்தில் ஒழித்துக் கட்டுமாறு சோவியத் படைத் தலைமை தன் துருப்புகளுக்கு கட்டளையிட்டது. வடக்கேயிருந்து முன்னேறிய 3வது முக்கியத் தாக்குதல் படையின் பிரிவுகள் தெற்கேயிருந்து முன்னேறிய 8வது கார்டு படையின் பிரிவுகளை ரைஹ்ஸ்டாக் கட்டிடத்திற்குத் தெற்கேச் சந்தித்தன. மே 2ஆம் தேதி மதியம் 3 மணி வாக்கில் நகரத்தில் எதிரியின் எதிர்ப்பு முழுவதுமாக அடங்கியது, பெர்லின் பாதுகாப்புச் சக்திகளில் எஞ்சியிருந்தோர் பெர்லின் தற்காப்பின் தலைவன் ஜெனரல் வைட்லிங்க் தலைமையில் சரணடைந்தனர். சோவியத் துருப்புகள் நகரத்தை முழுவதுமாகக் கைப்பற்றின.

2வது பெலோருஷ்ய சேனையின் யூனிட்டுகள் நடவடிக்கையின் இறுதியில் எல்பாவையும் ஷ்வெரின், ரஸ்தோக் நகரங்களையும் அடைந்து அங்கே பிரிட்டிஷ் துருப்புகளைச் சந்தித்தன. பாசிஸ்டு களின் 3வது டாங்கிப் படையின் ஒரு பகுதி கடலோரமாக நெருக் கப்பட்டு ஒழித்துக் கட்டப்பட்டது, மற்றொரு பகுதி ஆங்கிலேயர் களிடம் சரணடைந்தது.

பாசிச ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைந்ததும் ஐரோப் பாவில் யுத்தம் முடிவடைந்ததும்தான் பெர்லின் நடவடிக்கையின் மிக முக்கிய விளைவாகும். பெர்லின் நடவடிக்கை நிறைவு பெற்ற தானது ஹிட்லரின் ''புதிய முறை'' தவிடுபொடியானதையும் ஐரோப்பாவின் அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் விடுதலையையும் உலக நாகரிகம் பாசிசத்திலிருந்து காப்பாற்றப்பட்டதையும் குறித் தது.

பெர்லின் நடவடிக்கையின் போது சோவியத் துருப்புகள் 70 காலாட்படை, 12 டாங்கி, 11 மோட்டார் டிவிஷன்களை முறி யடித்தன; ஏப்ரல் 16 முதல் மே 7 வரை 4,80,000 எதிரி போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைபிடித்தன. இதே காலகட்டத்தில் 1,500க்கும் மேற்பட்ட டாங்கிகளும் 4,500 விமானங்களும் சுமார் 11,000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கி களும் கைப்பற்றப்பட்டன.

பாசிச ஜெர்மனியின் மீது இறுதி வெற்றி பெறுவதற்காக சோவி யத் மக்கள் பெரும் விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது. 1945 ஏப்ரல் 16 முதல் மே 8 வரையிலான காலகட்டத்தில் மட்டும் 1வது, 2வது பெலோருஷ்ய சேனைகள், 1வது உக்ரேனிய சேனையைச் சேர்ந்த சுமார் 3,00,000 பேர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் காயமடைந்தனர். அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் 1945ஆம் ஆண்டு பூராவும் மேற்குப் போர்முனையில் 2,60,000 நபர்களை இழந்தன.

சோவியத் போர்வீரர்கள் ஆக்கிரமிப்பாளர்களைப் போலின்றி

விடுதலை வீரர்களாக ஜெர்மானியப் பரப்பினுள் நுழைந்தனர். ஜெர்மானியப் பாசிசத்தின் கொடும்பாதகக் கொள்கை நாட்டை அழிவிற்கும் மக்களை நாசத்திற்கும் கணக்கிலடங்கா இன்னல்களுக்கும் ஏழ்மைக்கும் இட்டுச் சென்றிருந்தது. இந்த பயங்கரத்திலிருந்து மீளும் தருணம் வந்தது. செஞ்சேனையால் கைப்பற்றப்பட்ட ஜெர் மானியப் பரப்பில் சமாதான வாழ்வை சீரமைக்கவும் முதலாவதாக மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கவும் சோவியத் அரசாங்கமும் சோவியத் இராணுவத்தின் படைத் தலைமையும் பல நடவடிக்கை களை மேற்கொண்டன. சண்டைகள் நடந்து கொண்டிருந்த போதே சோவியத் போர்வீரர்கள் தமக்களிக்கப்பட்ட உணவை ஜெர்மானிய குடிமக்களுடன் பகிர்ந்து கொண்டனர்; போர் நடவடிக்கைகள் முடிந்ததும் பெர்லின் வாசிகளுடன் சேர்ந்து நகர வாழ்க்கையைப் புனரமைப்பதில் ஈடுபட்டனர். நகரத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு வரவும் மருத்துவ நிலையங்களை அமைக்கவும் சோவியத் படைத் தலைமை உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. சோவி யத் அரசாங்கம் 96,000 டன் தானியம், 60,000 டன் உருளைக் கிழங்கு, 50,000 வரையிலான கால்நடைகள், சர்க்கரை, கொழுப்பு முற்ற பொருட்களை பெர்லினுக்கு அனுப்பியது. தொற்று நோய் களைத் தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. ஜூன் 21 வாக்கில் பெர்லினில் 96 மருத்துவமனைகளும் (இவற்றில் 4 குழந்தைகளுக்காக) 10 மகப்பேறு விடுதிகளும் 146 மருந்தகங்களும் 6 அவசர சிகிச்சைப் பிரிவுகளும் திறக்கப்பட்டன, இவற்றில் 654 மருத்துவர்கள் பணியாற்றினர். சுமார் 800 மருத்து வர்களுக்குத் தனி மருத்துவம் பார்க்க அனுமதியளிக்கப்பட்டது.

சோவியத் படைத் தலைமையும் மாஜிஸ்ட்ரேட் அலுவலகமும் பெர்லினில் முனிசிபல் நிர்வாகம் செயல்பட உடனடி நடவடிக்கை களை மேற்கொண்டன. சோவியத் போர்வீரர்களாலும் பாசிச எதிர்ப்பு வீரர்களாலும் காப்பாற்றப்பட்ட கிளீன்கென்பெர்க் மின்நிலையத்திலிருந்து ஏப்ரல் 29ஆம் தேதி கார்ல்ஸ்ஹோர்ஸ்ட் வட்டம் முதன்முதலாக மின்சக்தியைப் பெற்றது. இவ்வட்டத்தில் [illegible] இடங்களை விட முன்னதாகத் தண்ணீர் சப்ளையும் கழிவுநீர் குழாய்களும் புனரமைக்கப்பட்டன.

பாசிச சித்தாந்தம் பெரிதும் பின்னுக்குத் தள்ளிய ஜெர்மானியக் கலாச்சார மறுமலர்ச்சிப் பிரச்சினைகளின் தீர்வின் மீது பெர்லின் விடுவிக்கப்பட்ட முதல் நாட்களிலிருந்தே சோவியத் படைத் தலை மையும் ஜெர்மானிய பாசிச எதிர்ப்பாளர்களும் கவனம் செலுத் தினர். மே நடுவில் பெர்லின் வானொலி தன் ஒலிபரப்புகளைத் துவக் கியது, மாத இறுதியில் நாடக மன்றம் திறந்தது, ஜூன் நடுவில் நகரத்தில் 120 திரைப்பட அரங்குகள் இயங்கின. அரசியல் வாழ்வை

விழித்தெழச் செய்வதற்காக சோவியத் படைத் தலைமை மிக அனுகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது. நகர நிலவரத்திற்குப் பொறுப்பு வகித்த 5வது முக்கியத் தாக்குதல் படையின் படைத் தலைமையும் பெர்லின் வட்டார இராணுவக் காரியாலயங்களும், விடுதலை வந்த முதல் மணிப் பொழுதிலேயே ஜெர்மானிய மக்களின் பாசிச எதிர்ப்பு, தேசபக்தச் சக்திகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தின. இச்சக்திகள் மே ஆரம்பத்திலிருந்தே ஜெர்மானிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பிரதிநிதியாகிய வால்டர் உல்பிரிஹ்டின் தலைமையிலிருந்த முன்முயற்சிக் குழுவை தனது உறுதியான அரசியல் தலைமையாகக் கொண்டிருந்தன. சோவியத் அரசாங்கத்தின் கட்டளைகளைப் பின்பற்றிய இராணுவ ஆட்சியினர் ஜெர்மானிய சுயநிர்வாகத்தின் உரிமைகளையும் கடமைகளையும் படிப்படியாக விரிவுபடுத்தினர். இவை ஜெர்மானியப் பூமியில் புதிய அரசாட்சியை—தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மக்களின் எல்லா உழைப்பாளிப் பிரிவினரின் ஆட்சியை—ஏற்படுத்துவதற்கான முதல் நடவடிக்கைகளாக அமைந்தன.

ஜூலை மாதம் ஜெர்மானிய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் வில்ஹெல்ம் பீக் தலைமைப் பணியாளர்கள் குழுவுடன் நாடுகடத்தலிலிருந்து பெர்லின் திரும்பினர். அவர் திரும்பியதையடுத்து கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கை தீவிரமடைந்தது, இது விரைவிலேயே நாட்டின் முக்கியக் கட்சியாக மாறியது. ''யுத்தம் முடிந்து ஐந்து வாரங்கள் கழித்த பின் ஆக்கிரமித்த அரசின் மக்களுக்குக் கட்சியை அமைக்கவும் பத்திரிகைகளை வெளியிடவும் வாய்ப்பளித்த, கூட்டங்களுக்கும் பேச்சுகளுக்கும் சுதந்திரம் வழங்கிய ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தை வரலாற்றில் எங்கே கண்டுபிடிப்பது?'' என்று அக்காலத்தில் ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவராயிருந்த ஒத்தோ கிரோட்டெவால் எழுதினர். ஜூலை 1 வாக்கில் நகரத்தில் பெரும்பாலும் மாமூல் வாழ்க்கை புனர் நாட்டப்பட்டு பொருளாதாரத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. கிழக்கு ஜெர்மனியின் யுத்தத்திற்குப் பிந்தைய சமுதாய அமைப்பை ஜெர்மானிய மக்களே தமது பாசிச எதிர்ப்புக் கட்சிகள் மற்றும் பிரதேச அரசாங்கங்களின் மூலம் நிர்ணயித்தனர். மார்ஷல் ஷுக்கவ் தலைமையில் ஜெர்மனியிலிருந்த சோவியத் இராணுவ நிர்வாகம் இதற்கு சகல விதங்களிலும் உதவி, வகை செய்து அவற்றின் நடவடிக்கைக்கு உத்திரவாதம் அளிக்க மட்டுமே செய்தது.

பெர்லின் நடவடிக்கையானது, யுத்த ஆண்டுகளில் சோவியத் இராணுவமும் சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையும் பெற்ற பெரும் அனுபவத்தின் உருவாகத் திகழ்ந்தது. இது

தான் இரண்டாவது உலகப் யுத்தத்திலேயே மிகப்பெரும் நடவடிக்கை ஆகும். இதற்கான நேரடித் தயாரிப்பு இரண்டு வாரங்களுக்கும் குறைவாகவே நீடித்தது. இந்நடவடிக்கையில் இரு தரப்பிலுமாகச் சேர்த்து 35 லட்சத்திற்கும் கூடுதலானோர் பங்கேற்றனர், 50,000க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 8,000 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 9,000க்கும் மேற்பட்ட விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கைக்கு தனிச் சிறப்பு அம்சங்களிருந்தன. முதலாவதாக, இது ஐரோப்பாவில் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் முடிவு நடவடிக்கையாக இருந்தது. இரண்டாவதாக, சோவியத் யூனியனுக்கும், அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கும் இடையே பகைமையை ஏற்படுத்த பாசிஸ்டுகள் செய்த முயற்சிகளைக் குலைக்கும் அவசியம்தான் இதற்கான தயாரிப்புகளின் காலக்கெடுவை குறைத்த தன் காரணம் ஆகும். மூன்றுவதாக இந்நடவடிக்கை, பாசிசக் கூட்டணி முழுவதுமாகத் தகர்ந்து விழுந்த நிலையில் நடத்தப்பட்டது.

எதிரியின் பெரும் படைத் திரட்டை சுற்றி வளைத்து அதே நேரத்தில் அதைச் சிறு சிறு பகுதிகளாகப் பிளந்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒழித்துக் கட்டியதானது சோவியத் துருப்புகளின் உயர்வான போர்க் கலை, போர்த் திறமையின் வெளிப்பாடாகத் திகழ்ந்தது. நடவடிக்கையில் இரவு நேர போர் நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன; இரவு நேரக் கடமைகள் சாதாரணமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. டாங்கிகளாலும் பீரங்கிகளாலும் பலப்படுத்தப்பட்ட திடீர் தாக்குதல் அணிகளையும் குழுக்களையும் பெர்லினுக்காக நடந்த சண்டைகளில் பரவலாகப் பயன்படுத்தியதானது முன்னேறித் தாக்கியவர்கள் எதிரியின் ஆதார நிலையங்களையும் எதிர்ப்பு மையங்களையும் விரைவாகக் கைப்பற்ற உதவியது.

பீரங்கிப்படையைப் பயன்படுத்தியதில் புதிய அம்சம் இரவு நேரச் சூழ்நிலைகளில் குறுகிய நேர (1வது பெலோருஷ்ய சேனையில் 20 நிமிடத்திற்கு) பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதலை நிறைவேற்றியதும் 2 கி. மீ. தூரத்திற்கு இரட்டை பீரங்கித் தாக்குதல் அலையாலும் மேற்கொண்டு இன்னமும் 2 கி. மீ. தூரத்திற்கு ஒரே பீரங்கித் தாக்குதல் அலையைக் கொண்டும் பீரங்கிப் படை ஆதரவை நிறைவேற்றியதும் ஆகும்.

வேறெந்த நடவடிக்கையையும் விட பெர்லின் தாக்குதல் நடவடிக்கையில் அதிகபட்ச விமானங்கள் கலந்து கொண்டன. மிகப் பரவலாகவும் மிக அதிக அளவிலும் இவை பயன்படுத்தப்பட்டன. முதல் 14 நாட்களில் மட்டும் மூன்று சேனைகளின் விமானப்படையும்



பால்டிக்
கடல்
2 மு. ப.
ஷ்ட்ரால்ஸுன்ட்
ரஸ்தோக்
விஸ்மார்
2ப.(இங்.)
ஷ்வெரின்
65ப.
70ப.
19ப.
"விஸ்லா" படைத் தொகுதி
2வது பெ. சேனை
2மு.ப.
3டா.ப.(ஜெ.)
4 வா.ப.
49ப.
ஷ்தேத்தின்
வித்தென்பெர்கே
61ப.
1போ.இ.ப.
47ப.
3மு.ப.
5மு.ப.
7 கார். கு.கோ.
1வது பெ. சேனை
18 வா.ப.
எல்பா



பெர்லின் இராணுவ நடவடிக்கை (1945 ஏப்ரல்—மே)

91,384 பறத்தல்களை நடத்தி 14,528 விமான குண்டுகளை வீசியது. பெர்லின் நடவடிக்கையின் போது சோவியத் விமானப்படை 1,282 வான் சண்டைகளை நடத்தி 1,116 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. ஜெட் விமானங்கள், குண்டு விமானங்கள்* போன்ற புது போர் சாதனங்களை ஜெர்மானியர்கள் பயன்படுத்திய ஒரு சூழ்நிலையில் இந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. விண்ணில் சோவியத் விமானப்படை முழு ஆதிக்கம் செலுத்தியதானது இந்தப் புதிய சாதனங்களின் செயல் வன்மையைக் கணிசமான அளவு குறைத்தது. எனவே எதிரி இவற்றைப் பயன்படுத்தியும் பெரும் பயன் எதுவும் ஏற்படவில்லை. விமானப்படையின் புதிய நடைமுறைத் தந்திரமாக FB-190 சண்டை விமானங்களைக் குண்டு வீச்சு விமானங்களாகப் பயன்படுத்தியதும் பாசிஸ்டுகளுக்குப் பயன் தரவில்லை. விண்ணில் சோவியத் விமானப்படைச் செலுத்திய ஆதிக்கம் எதிரியின் இந்த நடைமுறைத் தந்திரத்தைக் கிட்டத்தட்ட ஒன்றுமில்லாததாக ஆக்கியது.

ஆக்கிரமிப்பு மற்றும் கொள்ளையடித்தலின் மையமாயும் மக்களின் விடுதலை, சுதந்திரத்திற்கு எதிரான பிற்போக்கின் புதிய போர்களுக்கான தாக்குமுனையாகவும் மீண்டும் பெர்லின் என்றென்றும் மாறக் கூடாதென சோவியத் போர்வீரர்களின் தியாகம் வருங்கால சந்ததியினருக்கு நினைவுப்படுத்துகிறது. பாசிச நுகத் தடியை உதறி எறிந்து விட்டு சோஷலிசக் கட்டுமானப் பாதையில் உறுதியோடு நிற்கும் புதிய, ஜனநாயக ஜெர்மனி இதற்கு உத்திர வாதமாகத் திகழுகிறது.

5. மேற்குப் போர்முனையில் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள்

1945 ஜனவரி இறுதியில் ஜெர்மனியுடனை எல்லையில் அமெரிக்க-பிரிட்டிஷ் படைத் தலைமை சுமார் 70 டிவிஷன்களை நிறுத்தியிருந்தது. அர்டேன்னி முகப்பிலிருந்து பாசிசத் துருப்புகள் அகற்றப்பட்டபின் 60 முழுமை பெறு பாசிச ஜெர்மானிய டிவிஷன்கள் இவற்றிற்கு எதிராக இருந்தன. இவற்றின் நடைமுறை எண்ணிக்கை நேச நாட்டுத் துருப்புகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கை விஞ்சவில்லை. அதே நேரத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில் 185 ஜெர்மானிய டிவிஷன்களும் 21 பிரிகேடுகளும்

* குண்டு விமானம்—இது வெடிமருந்தால் நிரப்பப்பட்ட U-88 குண்டு வீச்சு விமானம். FB-190 சண்டை விமானம் இதில் பொருத்தப்பட்டது. பறக்கும் போது இவை இரண்டாகப் பிரிந்தன: சண்டை விமானம் தொடர்ந்து பறக்க, குண்டு வீச்சு விமானம் விமானியின்றி இலக்கை நோக்கிச் சென்றது.

இயங்கின. இவை உள்ளடக்கத்திலும் போர்த் திறமையிலும் மேற்குப் போர்முனையிலிருந்த ஜெர்மானிய யூனிட்டுகளைக் கணிசமாக விஞ்சி நின்றன.

அனுகூலமான நிலவரத்தைப் பயன்படுத்திக் கொண்ட நேச நாட்டுப் படைத் தலைமை ஜெர்மனியின் ஆழத்திற்குள் தாக்குதல் தொடுப்பதென முடிவு செய்தது. பிப்ரவரி—மார்ச்சில் நேச நாட்டுத் துருப்புகள் விசேஷத் தடையின்றி ரைன் ஆற்றின் மேற்கு கரையை அடைந்தன. இதைக் கடந்ததால் முக்கியத் தொழிற்துறை பிரதேசமாகிய ரூரைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. ரூர் பிரதேசத்தைச் சுற்றி வடக்கேயிருந்து 21வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டும் தெற்கேயிருந்து 12வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டும் இரண்டு தாக்குதல்களைத் தொடுத்து பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் ரூர் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து ரூர் நடவடிக்கையை நிறைவேற்றுவதென பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைத் தலைமை திட்டமிட்டது. அதே நேரத்தில் 6வது படைத் தொகுதியின் சக்திகளைக் கொண்டு ரைன் ஆற்றைக் கடந்து ஜெர்மனியின் தென் பகுதியை நோக்கி மேற்கொண்டு முன்னேறுவது என்றும் திட்டமிடப்பட்டது.

மூன்று நாள் விமானப்படை, ஒரு மணி நேர பீரங்கிப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் வேஸல் பிரதேசத்தில் மே 23ஆம் தேதி 21வது படைத் தொகுதியின் துருப்புகள் ரைனைக் கடப்பது துவங்கியது. இது வெற்றிகரமாக நடந்தது. அடுத்த நாள் காலை வாக்கில் நேச நாட்டுத் துருப்புகள் ஒரு சில தாக்குமுனைகளைக் கைப்பற்றி அங்கே தமது துருப்புகளைக் குவிக்க ஆரம்பித்தன. அதே நாளன்று ரைனிலிருந்து 6—8 கி. மீ. தள்ளி இரண்டு வான் இறக்குப்படை டிவிஷன்களின் படையிறக்கம் ஆரம்பமாகியது. போக்குவரத்து விமானப்படைக்குக் கணிசமான இழப்புகள் ஏற்பட்ட போதிலும் இதுவும் வெற்றிகரமாக நடந்தேறியது. 1,595 விமானங்களில் 493 விமானங்களும் 1,347 கிளைடர் விமானங்களில் 337 விமானங்களும் சேதமுற்றன. மார்ச் 24ஆம் தேதி இரண்டாம் பாதியில் விமான இறக்குப்படை டிவிஷன்கள் ஜெர்மானியர்களின் எதிர்ப்பைச் சந்திக்காது ஒன்றுடன் ஒன்றும் முன்புறம் முன்னேறிக் கொண்டிருந்த துருப்புகளுடனும் இணைந்தன. தரைப்படை மற்றும் வான் இறக்குப்படைத் துருப்புகளின் வெற்றி பலத்த விமானப்படை ஆதரவாலும் பொறியியல் துருப்புகளின் விரைவான, திறமையான பணியாலும் வகை செய்யப்பட்டது. மார்ச் 24ஆம் தேதி மட்டும் நேச நாட்டு விமானப்படை சுமார் 8,000 வான் பறத்தல்களை நடத்தியதெனில் ஜெர்மானிய விமானப்படையோ 100க்கும் குறைவான வான் பறத்தல்களை மட்டுமே நடத்தியது. நேச நாட்டவரின்

பொறியியல் படைப்பிரிவுகள் மார்ச் 26ஆம் தேதி மாலை வாக்கிலேயே 21வது படைத் தொகுதியின் மண்டலத்தில் ரைன் ஆற்றின் மீது 12 பாலங்களை அமைத்தன. இவையனைத்தும் மார்ச் 28ஆம் தேதி இறுதியில் 60 கி. மீ. நீளமும் 30 கி. மீ. ஆழமும் உடைய தாக்குமுனையைப் பிடிக்க அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்பு களுக்கு உதவின.

12வது, 6வது படைத் தொகுதிகளின் துருப்புகள் மாய்ன், ரிமாயினுக்கு தெற்கேயுள்ள பிரதேசங்களில் முன்னர் கைப்பற்றிய தாக்குமுனைகளை விரிவுபடுத்தி மான்கெய்ம் பிரதேசத்தில் ரைன் ஆற்றைக் கடந்தன. இதையடுத்து 1வது, 9வது அமெரிக்கப் படைகள் ரூரைத் தெற்கேயிருந்தும் வடக்கேயிருந்துமாகச் சுற்றி வந்து ஏப்ரல் 1ஆம் தேதி லிப்ஷ்தாத், பாதெர்போர்ன் பிரதேசத்தில் இணைந்தன. 325,000 பேர்களடங்கிய பாசிச ஜெர்மானியத் துருப்பு களின் ரூர் படைத் திரட்டு சுற்றி வளைக்கப்பட்டது. விரைவிலேயே இது சரணடைந்தது.

சோவியத் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் அச்சமும் தமது தொழில் நிலையங்கள், சுரங்கங்களை அழிவிலிருந்து காப்பாற்ற ரூர் பணமுதலைகள் கொண்டிருந்த நாட்டமும் பாசிச ஜெர்மானியத் துருப்புகள் விரைவாகச் சரணடைய உதவின.

எதிரியின் ரூர் படைத் திரட்டை நேச நாட்டினர் முறியடித்த பின் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் மேற்குப் போர்முனை சிதறியது. அணி அணியாகச் சென்ற நேச நாட்டுத் துருப்புகள் எதிர்ப்பைச் சந்திக்காது முன்னேறி ஏப்ரல் 25ஆம் தேதி எல்பா ஆற்றில் தோர்காவு பிரதேசத்தில் 1வது உக்ரேனிய சேனையின் துருப்புகளைச் சந்தித்தன.

இத்தாலியப் போர்முனையில் நேச நாட்டுத் துருப்புகள் 1945 ஜனவரியில் தாக்குதலில் இறங்கி மாத நடுவில் 15—20 கி. மீ. தூரம் முன்னேறின. எதிர்ப்பு இயக்கப் பிரிவுகளும் யூனிட்டுகளும் இவற்றிற்குப் பெரிதும் உதவின. கிளர்ந்தெழுந்த மக்கள் ஏப்ரல் 25ஆம் தேதி மிலான் நகரைக் கைப்பற்றினர். மலைகளுக்குத் தப்பியோடிய இத்தாலிய சர்வாதிகாரி முஸ்ஸோலீனி கொரில்லாப் படைவீரர்களால் கைப் பற்றப்பட்டு விசாரணைக்குப் பின் தூக்கிலிடப்பட்டான். நேச நாட்டுத் துருப்புகள், சரணடைந்த பாசிச ஜெர்மானியத் துருப்பு களை ஏற்க ஆரம்பித்தன. ஆனால் திடீரென 1945 ஏப்ரல் 12ஆம் தேதி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காலமானார். இவருடைய மரணத்தால் பாசிசத் தலைமையின் மத்தியில் பாசிச ஜெர்மனியைக் காப்பாற்றும் நம்பிக்கை தோன்றியது. 1762ஆம் ஆண்டு ஏழாண்டு யுத்தத்தின் போது ருஷ்யப் பேரரசி யெலிஸவேத்தா எதிர்பாரா விதமாக மரணமடைந்து மூன்றாம் பீட்டர் சிம்மாசனத்திற்கு வந்தது

பிரஷ்யாவைத் தோல்வியிலிருந்து காப்பாற்றியதைப் போன்றே இப்போதும் நடைபெறுமென ஹிட்லர் எதிர்பார்த்தான். பாசிச பிரச்சாரம் ரூஸ்வெல்ட்டின் மரணத்தை வரப்பிரசாதமாயும் யுத் தத்தின் திருப்புமுனையாகவும் அறிவித்தது. ஆனால் பாசிசப் படைத் தலைமை பாசிச ஜெர்மனியைக் காப்பாற்றலாமென வீணாகக் கணக்கு போட்டது. யுத்தம் நடந்தவரை பாசிச எதிர்ப்புக் கூட்டணி பாசி சத்தை முறியடிக்கும் பொதுக் கடமையை நிறைவேற்றியது.

1945ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் நேச நாட்டுப் படைத் தலைமை இத்தாலியப் போர்முனையில் தாக்குதல் நடவடிக் கைகளை மேற்கொள்ள முடிவு செய்யவில்லை, ஏப்ரல் ஆரம்பத்தில் தான் நேச நாட்டுத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. விமானப் படை இவற்றின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆதரித்தது. பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் நுழைந்த பெரும்பாலான நகரங் களும் கிராமங்களும் கொரில்லாப் படை வீரர்களாலும் கிளர்ந் தெழுந்த மக்களாலும் விடுவிக்கப்பட்டன. ஏப்ரல் 29ஆம் தேதி இத்தாலியிலிருந்த ஜெர்மானியப் படைத் தலைமையின் பிரதிநிதிகள் நிபந்தனையற்று சரணடையும் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இது 1945ஆம் ஆண்டு மே 2ஆம் தேதி 12 மணிக்கு அமலுக்கு வந்தது.

அட்லாண்டிக்கிலும் மத்திய தரைக் கடலிலும் நேச நாட்டவரின் போர் நடவடிக்கைகள் பெரும்பாலும் தமது கடல், சமுத்திரப் போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாப்பதில் அடங்கியிருந்தன. இவற்றின் வழியாகத்தான் துருப்புகளும் போர்த் தளவாடங்களும் உணவுப் பொருட்களும் போர்த்தந்திர மூலப்பொருட்களும் மேற்கு ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன. நார்வே, ஹாலந்து கரையோர மாக இருந்த எதிரி போக்குவரத்து மார்க்கங்களை (இவற்றின் வழி யாகத்தான் எதிரி நார்வேயிலிருந்து துருப்புகளையும் இரும்புத் தாதுவையும் அனுப்பினான்) அழிப்பதும் சற்றும் குறையாத முக்கியத் துவம் வாய்ந்த கடமையாக இருந்தது. இது பெரும்பாலும் பிரிட் டிஷ் கடற்படையால் நிறைவேற்றப்பட்டது. நேச நாட்டவரிடம் பலத்த கப்பல் எதிர்ப்பு தற்காப்பு இருந்ததால் ஜெர்மானிய நீர் மூழ்கிக் கப்பல்களால் கணிசமான வெற்றிகளை அடைய முடிய வில்லை. 1942ஆம் ஆண்டில் மூழ்கடிக்கப்பட்ட ஒவ்வொரு ஜெர் மானிய நீர்மூழ்கிக் கப்பலுக்கும் சமமாக 13.6 நேச நாட்டு கப்பல் கள் அழிக்கப்பட்டன என்றால் 1945இல் இந்த எண்ணிக்கை 0.3ஆக இருந்தது. 1942ஆம் ஆண்டோடு ஒப்படுகையில் யுத்தத்தின் இறுதி யில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் போர் நடவடிக்கைகளின் வல்லமை 45 மடங்கு குறைந்தது என்று இவ்விகிதம் காட்டுகிறது. எனவே ஜெர்மானியர்களின் நேரடி யுத்தம் தன் வல்லமையை

இழந்தது.

மத்திய தரைக் கடலில் ஜெர்மானிய கடற்படைச் சக்திகள் குறைவாகவே இருந்ததால் பாசிஸ்டுகளின் முக்கியக் கடமை போக்கு வரத்து மார்க்கங்களைப் பாதுகாப்பதாக இருந்தது. இவற்றின் வழியாகத்தான் வட இத்தாலியில் இயங்கிய துருப்புகளுக்கும் ஏஜியன் கடலின் தீவுகளிலும் கிரீட்டின் மேற்குப் பகுதியிலும் இருந்த படையிருப்பிடங்களுக்கும் சப்ளைகள் எடுத்துச் செல்லப்பட்டன. எதிரியின் கரையோர சரக்குப் போக்குவரத்துக் கப்பல்களுக்கு எதிரான போரில் நேச நாட்டினர் விமானப்படையை ஈடுபடுத்தினர். இது தன்னுடைய வெற்றிகரமான நடவடிக்கைகளால் பாசிஸ்டுகளுக்குக் கணிசமான இழப்பை ஏற்படுத்தியது. நேச நாட்டவரின் கப்பற்போக்குவரத்திற்கோ ஜெர்மானியக் கப்பல்களும் விமானப்படையும் தீவிர அபாயத்தை ஏற்படுத்தவில்லை. ஆனாலும் கண்ணி வெடி அபாயம், தனது கப்பல்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்காகக் கண்ணி வெடியகற்றும் கப்பற்படையின் கணிசமான சக்திகளை ஈடுபடுத்துமாறு நேச நாட்டினரைக் கட்டாயப்படுத்தியது. மொத்தத்தில் அட்லாண்டிக்கிலும் மத்திய தரைக் கடலிலும் பாசிச ஜெர்மனியின் கடற்படைச் சக்திகள் தோல்வியடைந்தன.

பாசிச ஜெர்மனி நிபந்தனையற்ற சரணகதி உடன்பாட்டில் கையொப்பம் இட்ட பின் அட்மிரல் தேனிட்ஸ், போர் நடவடிக்கைகளை நிறுத்தி தம்முடைய தளங்களுக்குத் திரும்புமாறு கடலிலிருந்த எல்லா நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் கட்டளையிட்டான். அந்நேரத்தில் ஜெர்மனியிடமிருந்த 407 நீர்மூழ்கிக் கப்பல்களில் 221 நீர்மூழ்கிக் கப்பல்கள் மாலுமிகளோடு மூழ்கடிக்கப்பட்டன, 30 நேச நாட்டவரிடையே பிரித்துக் கொள்ளப்பட்டன, 156 சமரச உடன்படிக்கைக்கு ஏற்ப பின்னால் ஒழித்துக் கட்டப்பட்டன.

1945ஆம் ஆண்டில் நேச நாட்டுத் துருப்புகள் வெளிப்படுத்திய போர்க்கலையின் சிறப்பு அம்சம் என்னவெனில் நடவடிக்கைகளுக்கு திட்டமிடும் போதும் தயாராகும் போதும் இந்நடவடிக்கைகளின் இரகசியத்தின் மீது கவனம் செலுத்தியதாகும். பெரும்பாலும் இரவு நேரங்களில் போர்த்தந்திர மற்றும் நடைமுறைத் தந்திர உருமாற்றத்தின் எல்லா நடவடிக்கைகளையும் பின்பற்றித்தான் ஆரம்ப வட்டங்களில் துருப்புகள் குவிக்கப்பட்டன. சாதாரணமாகத் துருப்புகளின் அணிவகுப்பு ஆழமானதாக இருந்தது. ஆர்மி கோர்பஸ்களின் இரண்டாவது, மூன்றாவது படை வரிசைகளில் கவச டாங்கி டிவிஷன்கள் நின்றதானது, செயல்முறை ஆழத்தில் வெற்றியைப் பெருக்க இவற்றைப் பயன்படுத்த நேச நாட்டுப் படைத் தலைமைக்கு உதவியது.

துருப்புகளின் தாக்குதலுக்கு முன் பலத்த பூர்வாங்க விமானப் படை, பீரங்கிப்படைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக ரூர் தொழிற்துறை பிரதேசத்தில் பாசிஸ்டுகளைச் சுற்றி வளைக்கும் நடவடிக்கையில் எதிரியை ஜெர்மனியின் எஞ்சிய பகுதியிலிருந்து தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் ஒரு மாதம் நீடித்தது, நேரடி விமானப்படைத் தாக்குதல் 40 நிமிடம் முதல் (இத்தாலியப் போர்முனையில்) 10 மணி வரையும் மேற்குப் போர்முனையில் 3 நாட்களும் நீடித்தது. பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதல் 45 நிமிடம் முதல் 8 மணி நேரம் வரை நீடித்தது.

எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்வது பீரங்கிப்படை, டாங்கிகள், விமானப்படையின் உதவியோடு காலாட்படை யூனிட்டுகளால் நிறைவேற்றப்பட்டது. திட்டமிட்ட தயாரிப்புடனும் திடீர் தாக்குதலை நோக்கமாகக் கொண்ட பன்முக பொருளாயத-தொழில்நுட்ப உதவியுடனும் தாக்குதலின் போக்கில் ஆறுகள் கடக்கப்பட்டன. உதாரணமாக 21வது படைத் தொகுதியின் துருப்புகள் ரைன் ஆற்றைக் கடந்த போது பொய்யான கடக்கும் வழிகளை ஏற்படுத்தவும் பிரதான தாக்குதல் திசையில் துருப்புகள் மற்றும் போர்த்தளவாடங்களை நன்கு மூடி மறைக்கவும் பரவலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆற்றைக் கடப்பதற்கு வகை செய்யும் பொருட்டு தீவிர பூர்வாங்க பீரங்கிப்படை, விமானப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இவையனைத்தும் துருப்புகள் போர்க் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவின.

ரைனை வெற்றிகரமாகக் கடக்க உதவிய வான் இறக்குப்படைத் துருப்புகளை நேச நாட்டினர் பரவலாகப் பயன்படுத்தினர். திட்டத்திற்கேற்ப, உற்சாகமாகவும் செயல்வன்மையோடும் அவை இயங்கின. மொத்தத்தில் 1945ஆம் ஆண்டு பாசிச ஜெர்மானியத் துருப்புகளை முறியடிப்பதில் நேசநாட்டுத் துருப்புகள் தம் பங்கைச் செலுத்தின.

6. ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியைப் பற்றிய உடன்பாடு கையெழுத்தாதல்

1945ஆம் ஆண்டு மே 8ஆம் தேதி நள்ளிரவு பெர்லினின் தென் கிழக்குப் பகுதியில் கார்ல்ஸ்ஹோர்ஸ்டில் பாசிச ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியைப் பற்றிய உடன்படிக்கையில் கையெழுத்திடும் வைபவம் நடைபெற்றது. சோவியத் யூனியனின் தரப்பில் ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியை ஏற்கும் பொறுப்பு

சோவியத் இராணுவத்தின் உயர்மட்ட பிரதானப் படைத் தளபதி யின் துணைத் தலைவர் மார்ஷல் ஜூக்கவிற்கு அளிக்கப்பட்டிருந்தது. நேச நாட்டவரின் பயணப் படைகளின் உயர்மட்ட படைத் தலை மையை ஐசன்ஹோவரின் துணைவரும் கிரேட் பிரிட்டனின் பிரதான மார்ஷலுமான தேட்டரும்*, அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணு வத்தை போர்த்தந்திர வான் சக்திகளின் தளபதி ஜெனரல் ஸ்பாட் சும், பிரெஞ்சு இராணுவத்தை பிரதான இராணுவ படைத் தளபதி ஜெனரல் டெ லாட்ர் டெ டஸ்ஸின்யீயும் பிரதிநிதித்துவப்படுத் தினர்.

முறியடிக்கப்பட்ட பாசிச ஜெர்மனியின் சார்பில் சரணாகதி உடன்பாட்டில் கையெழுத்திடும் அதிகாரங்களுடன் வேர்மஹ்டின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையக முன்னாள் தலைவன் பீல்ட்மார்ஷல் கைடல், கடற்படைச் சக்திகளின் தளபதி அட்மிரல் ஃபிரிடெபூர்க், விமானப்படையின் கர்னல் ஜெனரல் ஷ்டூம்ஃப் ஆகியோர் பெர்லினுக்குக் கொண்டு வரப்பட்டனர். சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் அரசுக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அறையில் சோவியத் ஜெனரல் களும் (இவர்களின் துருப்புகள்தான் பெர்லின் மீது தொடுக்கப் பட்ட தாக்குதல்களில் பங்கேற்றன) சோவியத் மற்றும் அன்னிய நாட்டு பத்திரிகையாளர்களும் இருந்தனர்.

உடன்பாட்டில் கையெழுத்தடும் வைபவத்தை சோவியத் யூனி யனின் மார்ஷல் ஜூக்கவ் ஆரம்பித்து வைத்தார். ''சோவியத் இராணுவத்தின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமை மற்றும் நேசநாட்டுத் துருப்புகளின் உயர்மட்ட படைத் தலைமையின் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு ஜெர்மானிய இராணுவப் படைத் தலைமையிடமிருந்து நிபந்தனையற்ற சரணாகதியை ஏற்குமாறு ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் அரசாங்கங்கள் அதிகாரம் அளித்துள் ளன''** என்று அவர் கம்பீரமாக அறிவித்தார்.

பின்னர் ஜெர்மானிய உயர்மட்ட படைத் தலைமையின் பிரதி நிதிகளை அறையினுள் அழைத்தனர். ஷூக்கவின் முன்மொழிவின் பேரில், சரணாகதி உடன்பாட்டில் கையெழுத்திட ஜெர்மானிய தூதுக் குழுவிற்குத் தேனிட்ஸ் அதிகாரம் வழங்கிய ஆவணத்தைக்

---

* பாசிச ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதி உடன்பாடு கையெழுத்தாகும் வைபவத்தில் ஐசன்ஹோவர் முதலில் தானே கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆனால் சர்ச்சிலும் தனது இரண்டு நெருங்கிய சகப் பணியாளர்களும் மறுப்பு தெரி வித்ததால் தனது முடிவை மாற்றிக் கொண்டார் (போக்யூ, உயர்மட்ட படைத் தலைமை, பக்கம் 499).

** ஜூக்கவ், நினைவுகளும் சந்தனைகளும், தொகுதி 2, பக்கம் 499.



1945 ஜனவரி—மேயில் ஐரோப்பாவில் இராணுவ நடவடிக்கைகள். பாசிச

கைடல் நேச நாட்டுத் தூதுக் குழுக்களின் தலைவர்களுக்கு அளித்தான். அதன் பின், நிபந்தனையற்ற சரணாகதி உடன்பாடு ஜெர்மானியத் தூதுக் குழுவின் கைவசம் உள்ளதா, அதைப் படித்தாகி விட்டதா என்று கேட்கப்பட்டது. ஆம் என்று கைடல் பதிலளித்தான். பின் மார்ஷல் ஷூக்கவ் சைகை காட்டியதும் ஜெர்மானிய இராணுவத்தின் பிரதிநிதிகள், 9 பிரதிகளில் இருந்த உடன்பாட்டில் கையொப்பமிட்டனர். கையெழுத்திடும் வைபவம் முடிந்த பின் ஜெர்மானியத் தூதுக் குழுவிற்கு அறையை விட்டு வெளியேறுமாறு கூறப்பட்டது.

உடன்பாடு கீழ்க்காணும் 6 அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

''1. கீழே கையெழுத்திட்டுள்ள நாங்கள், ஜெர்மானிய உயர் மட்ட படைத் தலைமையின் சார்பாக, தரையிலும் கடலிலும் வானிலும் உள்ள எங்களுடைய எல்லா இராணுவங்களும் மற்றும் தற்போது ஜெர்மானியப் படைத் தலைமைக்குக் கட்டுப்பட்ட எல்லாச் சக்திகளும் செஞ்சேனையின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமைக்கும் அதே நேரத்தில் நேச நாடுகளின் பயணப் படைகளின் உயர்மட்ட படைத் தலைமைக்கும் முன் நிபந்தனையின்றி சரணாகதி அடைய ஒப்புக் கொள்கிறோம்.

2. 1945ஆம் ஆண்டு மே 8ஆம் தேதி மத்திய ஐரோப்பிய நேரப்படி இரவு 11.01க்கு போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறும், இந்நேரத்தில் இருக்கும் இடங்களிலேயே நிற்குமாறும், தம் வசமுள்ள எல்லா ஆயுதங்கள், போர்த் தளவாடங்களையும் ஸ்தல நேச நாட்டு படைத் தலைவர்களின் வசமோ அல்லது நேச நாட்டு உயர்மட்டப் படைத் தலைமையின் பிரதிநிதிகளால் ஒதுக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கோ அளித்து முழுவதுமாக ஆயுதம் களைக்குமாறும், கப்பல்கள், படகுகள், தோணிகள், விமானங்கள், இவற்றின் என்ஜின்கள், உபகரணம், இயந்திரங்கள், ஆயுதங்கள், கருவிகள் பொதுவாக யுத்தத்தை நடத்துவதற்கான இராணுவ-தொழில்நுட்ப சாதனங்கள் ஆகியவற்றை அழிக்கக் கூடாதென்றும் அவற்றிற்கு எவ்வித சேதங்களையும் ஏற்படுத்தக் கூடாதென்றும் எல்லாத் தரைப்படை, கடற்படை, வான்படைச் சக்திகளின் ஜெர்மானியத் தளபதிகளுக்கும் ஜெர்மானிய படைத் தலைமையின் கீழுள்ள எல்லாச் சக்திகளுக்கும் ஜெர்மானிய உயர்மட்டப் படைத் தலைமை உடனடியாகக் கட்டளையிட வேண்டும்.

3. ஜெர்மானிய உயர்மட்டப் படைத் தலைமை தேவையான கமான்டர்களை உடனடியாக ஒதுக்கி, செஞ்சேனையின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையும் நேச நாட்டு பயணப் படைகளின் உயர்மட்ட படைத் தலைமையும் மேற்கொண்டு இடும் கட்டளைகளை நிறைவேற்ற வகை செய்யும்.

4. ஐக்கிய நாடுகளாலோ அல்லது அவற்றின் சார்பாகவோ ஏற்கப்பட்டதும் ஜெர்மனிக்கும் பொதுவாக ஜெர்மானிய இராணுவத்திற்கும் பொருந்தி வரக் கூடியதுமான சரணாகதியைப் பற்றிய இன்னொரு ஆவணத்தால் இந்த உடன்பாட்டை மாற்றீடு செய்ய இது தடையாக இருக்காது.

5. ஜெர்மானிய உயர்மட்டப் படைத் தலைமையோ அல்லது இதன் கீழுள்ள வேறு ஏதாவது சக்திகளோ சரணாகதியைப் பற்றிய இந்த உடன்பாட்டிற்கு ஏற்ப செயல்படா விட்டால் செஞ்சேனையின் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையும் நேச நாட்டு பயணப் படைகளின் உயர்மட்ட படைத் தலைமையும் தாம் அவசியமெனக் கருதும் அடக்குமுறை நடவடிக்கைகளையோ வேறு நடவடிக்கைகளையோ மேற்கொள்ளும்.

6. இந்த உடன்பாடு ருஷ்ய, ஆங்கில, ஜெர்மானிய மொழிகளில் உள்ளது. ருஷ்ய, ஆங்கில வாசகங்கள் மட்டுமே மூல வாசகங்களாகும்''*.

இச்சம்பவத்தை மதிப்பிட்ட சோவியத் அரசாங்கத் தலைவர் இ.வி. ஸ்தாலின், சோவியத் மக்களுக்கு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''இது ஒரு மகத்தான வெற்றி நாள். செஞ்சேனையாலும் நமது நேச நாட்டவரின் துருப்புகளாலும் மண்டியிடச் செய்யப்பட்ட பாசிச ஜெர்மனி தான் தோற்கடிக்கப்பட்டதை ஒப்புக் கொண்டு நிபந்தனையற்று சரணடைவதாக அறிவித்துள்ளது... விடுதலை மற்றும் நமது தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக நாம் கொடுத்த மகத்தான பலிகளும் யுத்தத்தின் போக்கில் மக்கள் அனுபவித்த எண்ணற்ற இழப்புகளும் சந்தித்த சோதனைகளும் தாய்நாட்டின் நன்மைக்காக உள்நாட்டிலும் போர்முனையிலும் அர்ப்பணித்த கடும் உழைப்பும் வீணாகாமல் எதிரியின் மீதான முழு வெற்றியில் முடிந்துள்ளன''**.

பாசிச ஜெர்மனியின் மீது அடையப்பட்ட வெற்றியைக் கொண்டாடும் முகமாக சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு மே 9ஆம் தேதியைப் பொது விழாவாக—வெற்றித்திரு நாளாக அறிவித்து, ''1941—1945ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாபெரும் தேசபக்த யுத்தத்தில் ஜெர்மனியின் மீது அடையப்பட்ட வெற்றிக்காக'' எனும் பதக்கத்தை ஏற்படுத்தியது. 13.5 மில்லியன் சோவியத் போர்வீரர்களுக்கு இப்பதக்கம் அளித்து கௌரவிக்கப்பட்டது.

பாசிச ஜெர்மனியின் மீது அடையப்பட்ட வெற்றியைக் கௌர

---

* மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை. ஆவணங்கள், தொகுதி 3, பக்கங்கள் 261—262.

** இ. ஸ்தாலின், சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தத்தைப் பற்றி, மாஸ்கோ, 1953, பக்கங்கள் 192, 193.

விக்கும் முகமாக ஜூன் 24ஆம் தேதி மாஸ்கோவில் வெற்றி அணி வகுப்பு நடைபெற்றது. இதில் நிரந்தர இராணுவம், கடற்படை மற்றும் மாஸ்கோ பாதுகாப்பு சக்திகள் ஆகியவற்றின் துருப்புகள் கலந்து கொண்டன. 10 சேனைகள் தமது மிகச் சிறந்த போர்வீரர் களை இதற்கு அனுப்பின. ஐக்கிய ரெஜிமென்டுகள் பிரபல போர்ப் பதாகைகளின் கீழ் செஞ்சேனையில் வீறு நடை போட்டன. முரசு கள் ஒலியெழுப்ப 200 சோவியத் போர்வீரர்கள், முறியடிக்கப் பட்ட ஜெர்மானிய இராணுவத்தின் 200 கொடிகளை வி. இ. லெனி னுடைய கல்லறையின் காலடியில் வீசியெறிந்தனர். இந்த அடை யாளச் சிறப்பு மிக்கச் செய்கையால் சோவியத் போர்வீரர்கள் தம் மக்களின், தம் மகத்தான இராணுவத்தின் வீரச் செயலை மனித குலத்தின் நினைவில் என்றென்றைக்குமாகப் பதித்தனர். ''பேய் ஒன்று கொல்லப்பட்ட இந்நேரம் வெற்றி பெற்றவர்களுக்கு மட்டு மின்றி ஜெர்மனிக்கும் மகத்தானதாகும். தேசிய சோஷலிசம் என்ற பயங்கரமான, அசாதாரணமான ஒரு விபரீதம் உயிரிழந்தது, ஜெர்மனியானது குறைந்தபட்சம் ஹிட்லரின் நாடு என்றழைக்கப் படும் ஒரு சாபத்திலிருந்து தப்பியது''* என்று பிரபல ஜெர்மானிய எழுத்தாளர் தோமஸ் மான் அந்த மறக்க இயலா நாட்களின் போது குறிப்பிட்டார்.

7. பாட்ஸ்டாம் மகாநாடு

1945ஆம் ஆண்டு ஜூலை 17 முதல் ஆகஸ்டு 2 வரை சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய அரசாங்கங் களின் தலைவர்கள் கலந்து கொண்ட பாட்ஸ்டாம் மகாநாடு நடை பெற்றது. யுத்தத்திற்குப் பிந்தைய ஜெர்மனியின் அமைப்பு, அதனிட மிருந்து பெற வேண்டிய போர் நஷ்ட ஈடுகள், போலந்தின் மேற்கு எல்லை, விடுவிக்கப்பட்ட ஐரோப்பாவைப் பற்றிய யால்தா பிரகட னத்தின் நிறைவேற்றம் போன்ற பிரச்சினைகள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன. ஜெர்மனியை ஆயுதக் களைப்பிற்கு உள்ளாக்கி இராணுவத் தன்மையை அகற்றுவதை நிறைவேற்றுவது, ஹிட்லர் கட்சியை ஒழித்துக் கட்டி எல்லா நாஜி நிறுவனங்களையும் கலைப்பது, ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள், விமானங்கள், கப்பல்கள் ஆகியவற்றை ஜெர்மனி உற்பத்தி செய்வதற்குத் தடை விதிப்பது, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கேற்ப கல்வி, நீதிபரிபாலனம், ஸ்தல சுய நிர்வாக முறைகளை மாற்றியமைப்பது, ஜனநாயக அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு அனுமதியளித்து, ஊக்குவிப்பது,

---

* *Sowurde Deutschland gespalten Dokumentation,* Berlin, 1966, S. 8.

பத்திரிகை, பேச்சு, மத சுதந்திரங்களின் மதிப்பிற்கு வகை செய்வது என்று மகாநாடு முடிவு செய்தது. கிழக்குப் பிரஷ்யாவின் ஒரு பகுதியையும் டான்ட்ஸிங்க் பிரதேசத்தையும் போலந்து பெற்றது. ஓதெர்—மேற்கு நேய்சே கோடு இதன் மேற்கு எல்லைகளாக வரையறுக்கப்பட்டது. கேனிக்ஸ்பெர்கையும் இதையொட்டிய பிரதேசத்தையும் சோவியத் யூனியன் பெற்றது.

ஜெர்மனியின் இராணுவப்-பொருளாதார உள்ளாற்றலை ஒழித்துக் கட்ட வேண்டுமென சோவியத் யூனியன் வற்புறுத்தியது. ஆனால் ஜெர்மானிய இராணுவ வெறியின் இராணுவப்-பொருளாதாரத் தளமாகிய ரூர் தொழிற்துறைப் பிரதேசத்தின் மீது நான்கு பெரும் வல்லரசுகளின் கூட்டு கண்காணிப்பை ஏற்படுத்தலாம் என்ற சோவியத் ஆலோசனையை அமெரிக்காவும் பிரிட்டனும் ஒப்புக்கொள்ளவில்லை.

பாட்ஸ்டாம் மகாநாட்டில் போர் நஷ்ட ஈட்டைப் பற்றிய முக்கியப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. நான்கு வல்லரசுகளும் தாம் பிடித்துள்ள பிரதேசங்களிலிருந்தும் அயல்நாடுகளில் உள்ள ஜெர்மானிய முதலீடுகளிலிருந்தும் போர் நஷ்ட ஈட்டைப் பெற வேண்டியிருந்தது. சோவியத் யூனியன் இதற்குக் கூடுதலாக மேற்குப் பிரதேசங்களிலிருந்து பெறப்படும் தொழிற்துறை உபகரணங்களின் மொத்தத்தில் இன்னமும் 25 சதவிகிதத்தைப் பெற வேண்டியிருந்தது. இதில் 15 சதவிகிதம் நிலக்கரி, உணவுப் பொருட்கள், மற்றப் பொருட்களின் சமமான சப்ளைக்கு மாற்ருகப் பெற வேண்டியிருந்தது. தான் போர் நஷ்ட ஈடாகப் பெற்றதிலிருந்து சோவியத் யூனியன் போலந்தின் போர் நஷ்ட ஈட்டு கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தது. சோவியத் தூதுக் குழுவின் முன்மொழிவின் பேரில் ஜெர்மனியின் இராணுவ மற்றும் வர்த்தகக் கப்பல்களைச் சமமான அளவில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இடையில் பிரித்துக் கொள்வது என்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை மூழ்கடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சோவியத் தூதுக் குழு மேற்கொண்ட உறுதியான நிலை, மக்கள் ஜனநாயக போலந்து அரசாங்கத்தில் பிற்போக்குச் சக்திகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இதை விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளைப் போலந்தின் மீது திணிக்க அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கொண்ட முயற்சிகளைப் பலிக்காது போகுமாறு செய்தது. மேலும் மத்திய மற்றும் தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் ஜனநாயக சமூக அமைப்பிற்கு எதிராக இந்நாடுகளின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிடும் முடிவுகளை மகாநாட்டின் மீது திணிக்கச் செய்த முயற்சிகளும் பலிக்கவில்லை.

இம்மகாநாட்டின் அறிக்கையில் 3வது பிரிவில் (''ஜெர்மனியைப் பற்றி'') பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

''நேச நாட்டு இராணுவங்கள் ஜெர்மனி முழுவதையும் ஆக்கிரமித்துள்ளன. ஜெர்மானிய மக்கள் யாருடைய வெற்றிகளின் போது அவர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு நல்கி கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிந்து நடந்தார்களோ அவர்களின் தலைமையில் இழைக்கப்பட்ட படுபயங்கரமான குற்றங்களுக்குப் பரிகாரம் தேடத் துவங்கியுள்ளார்கள்.

நேச நாட்டவரின் கண்காணிப்பின் போது வெற்றி கொள்ளப்பட்ட ஜெர்மனியின் விஷயத்தில் நேச நாட்டவரின் ஒத்தியைந்த கொள்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பற்றி மகாநாட்டில் உடன்பாடு அடையப்பட்டது.

ஜெர்மனியைப் பற்றிய கிரீமிய உடன்படிக்கையை நிறைவேற்றுவதுதான் இந்த உடன்பாட்டின் நோக்கமாகும். ஜெர்மானிய இராணுவ வெறியும் நாசிசமும் வேரறுக்கப்படும், நேச நாட்டினர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு இன்றும் எதிர்காலத்திலும் ஜெர்மனி என்றென்றும் அண்டை நாடுகளுக்கோ உலக அமைதிக்கோ அச்சுறுத்தலை ஏற்படுத்தாது இருப்பதற்காக மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவார்கள்.

ஜெர்மானிய மக்களை ஒழித்துக் கட்டும் நோக்கமோ அடிமைப்படுத்தும் எண்ணமோ நேச நாட்டினருக்குக் கிடையாது. ஜனநாயக, சமாதான அடிப்படையில் ஜெர்மானிய மக்கள் தமது வாழ்க்கையை மேற்கொண்டு மாற்றியமைப்பதற்குத் தயார்ப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை ஜெர்மானிய மக்களுக்கு அளிப்பதுதான் நேச நாட்டவரின் எண்ணமாகும். இந்த நோக்கத்தை அடைவதன் மீது ஜெர்மானிய மக்களின் சொந்த முயற்சிகள் இடையறாது திருப்பப்படுமானால் இம்மக்களால் காலப் போக்கில் உலகின் சுதந்திரமான, சமாதானமான மக்களின் மத்தியில் இடம் பிடிக்க முடியும்'' *.

இவ்வாறாக பாட்ஸ்டாம் மகாநாட்டில் கடும் வர்க்கப் போராட்டச் சூழ்நிலைகளில் நடைபெற்ற விவாதங்களும் முடிவுகள் ஏற்கப்பட்டதும் இறுதியில் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியில் முடிவடைந்தன. இக்கொள்கை மக்களின் ஆழ்ந்த மதிப்பைப் பெற்றது, சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் செல்வாக்கு வளர்ந்து வலுவடைய உதவியது.

---

* டெஹ்ரான் — யால்டா — பாட்ஸ்டாம், பக்கங்கள் 386—387.

அமெரிக்க, பிரிட்டிஷ் பிற்போக்கு ஆளும் வட்டங்கள் யுத்தம் நடந்து கொண்டிருந்த போதே பாசிச சதியாளர்களின் மீது நீதி விசாரணை நடக்காதிருக்குமாறு செய்வதை நோக்கமாகக் கொண்ட பரவலான பிரச்சாரத்தைத் துவக்கின.

நெப்போலியனை வெற்றி கொண்ட அரசுகள் நீதி விசாரணை ஏது மின்றியே நெப்போலியனுக்கு ஆயுள் தண்டனை அளித்து செயின்ட் யெலேனு தீவிற்கு அனுப்பியதைப் போன்றே ஹிட்லரின் விஷயத் திலும் நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை பத்திரி கையில் விவாதிக்கப்பட்டது*. பாசிச கொலைபாதகர்களின் குற்றம் விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்றாலும் குற்றங்களை நிரூபிப் பதற்கான சான்றுகளைத் தேட ஏராளமான நேரத்தையும் சக்தி யையும் செலவிட வேண்டி வரும் என்ற கருத்து இத்தகையதொரு முடிவின் முக்கிய வாதமாக முன்வைக்கப்பட்டது.

ட்ரூமனின் சாட்சிப்படி சர்ச்சில் 1943ஆம் ஆண்டு அக்டோபரி லேயே, பிரதான போர்க் குற்றவாளிகளை விசாரணை ஏதுமின்றி சுட்டுக் கொல்ல வேண்டும் என்று சோவியத் அரசாங்கத் தலைவரை நம்ப வைக்க முயன்றார்**.

பாசிச ஜெர்மனியின் பலமான இராணுவ இயந்திரத்தைத் தோற்றுவிப்பதில் ஹிட்லருக்குத் தாம் செய்த உதவியும் சோவியத் யூனியனின் மீது தாக்குதலைத் தொடுக்குமாறு தூண்டிவிட்டதும் அம்பலப்படுத்தப்பட்டு விடுமோ என்று மேலைய வல்லரசுகள் அஞ்சி யதுதான் இத்தகைய ஆலோசனைகளின் முக்கியக் காரணம் ஆகும்.

சோவியத் யூனியன் மட்டும்தான் பாசிச ஜெர்மானியக் குற்ற வாளிகளின் மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென் றும் கடுமையான நியாயமான தண்டனை இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் பாடுபட்டது. இது சம்பந்தமாக சோவியத் அரசாங்கம் பன்முறை அறிக்கைகளை வெளியிட்டது. அமெரிக்க, பிரிட்டிஷ் பிற்போக்கு வட்டங்கள் எதிர்த்த போதிலும் முற்போக்கு மனிதகுலம் முழுவதாலும் ஆதரிக் கப்பட்ட சோவியத் முன்மொழிவு நடைமுறையாக்கப்பட்டது.

1945 நவம்பர் 20 முதல் 1946 அக்டோபர் 1ஆம் தேதி வரை நியூரென்பர்கில் சர்வதேச இராணுவ ட்ரிப்யூனலில் முக்கிய இராணுவக் குற்றவாளிகளின் மீது நீதி விசாரணை நடந்தது. வர

---

* திராய்னின், நியூரென்பர்க் விசாரணை. கட்டுரைத் தொகுப்பு, மாஸ்கோ, 1946, பக்கம் 20.

** H. Truman, *Memoirs,* Vol. I, New York, 1955, p. 284.

லாற்றிலேயே முதல் தடவையாக குற்றவாளிகள் மட்டுமின்றி அவர்கள் தோற்றுவித்த நிறுவனங்கள், ஸ்தாபனங்களும் மனித வெறுப்பு ''தத்துவங்கள்'' ''கருத்துகளும்'' விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டன.

ஜெர்மானிய பாசிசத்தின் மனித வெறுப்பு சாரத்தையும் பல லட்சக்கணக்கான மக்களை ஒழித்துக் கட்டவும் முழு மக்களினங்களையும் அரசுகளையும் அழிக்கவும் அது தீட்டியிருந்த திட்டங்களையும் ஜெர்மானிய இராணுவ வெறியின் ஆக்கிரமிப்புச் சாரத்தையும் உலக ஆதிக்கத்தின் பாலும் உலகின் முதல் சோஷலிச அரசை ஒழித்துக் கட்டுவதன் பாலும் இது கொண்டிருந்த நாட்டத்தையும் நியூரென்பர்க் விசாரணை அம்பலப்படுத்தியது.

அந்நிய பரப்புகளைக் கொள்ளையடித்து சிவில் மக்களின் பால் கொடுமையாக நடந்து கொள்வதைப் பற்றிய கருத்தமைப்புகள் இந்தத் தாக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னரே பரிபூரணமாக உருவாக்கப்பட்டிருந்தன என்று ட்ரிப்யூனல் கோடிட்டுக் காட்டியது. 1940ஆம் ஆண்டு இலையுதிர்காலத்திலேயே சோவியத் யூனியனின் மீது தாக்கும் பிரச்சினை பாசிசத் தலைமையால் விவாதிக்கப்பட்டது.

சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி தொடுத்த தாக்குதலின் ''பிரிவென்டிவ்'' தன்மையைப் பற்றி நாஜிகளால் இட்டுக் கட்டப்பட்ட கற்பனை எவ்வளவு பொய்யானது என்பது விசாரணையின் போது சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டது. ஹிட்லர் நடத்திய பல்வேறு கூட்டங்களைப் பற்றிய ஏராளமான குறிப்புகள், பீல்ட்மார்ஷல் பாவுல்சின் சாட்சி, குற்றஞ்சாட்டப்பட்ட ஃபிரிச், யோடல், மற்றவர்களின் ஒப்புதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில், சோவியத் யூனியனின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கு ''சிறிதளவு கூட சட்ட அடிப்படை கிடையாது. இது ஒரு தெட்டத் தெளிவான ஆக்கிரமிப்பு''* என்று தீர்ப்பில் எழுதப்பட்டது.

''ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதானது... மிகக் கொடுமையான சர்வதேச குற்றமாகும். இதற்கும் மற்ற போர் குற்றங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், மற்ற எல்லா குற்றங்களிலும் உள்ள தீமை அனைத்தும் இதில் ஒரு திரட்டாக உள்ளதுதான்''** என்று குறிப்பிட்ட இராணுவ ட்ரிப்யூனல், குற்றம் சாட்டப்பட்டவர்கள், ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான தயாரிப்பிற்காகவும் அவற்றை நடத்துவதற்காகவும் சதித் திட்டங்களில் ஈடுபட்ட குற்றத்தைப் புரிந்தார்கள் என்றும் இன்னும் ஏராள

---

* பிரதான ஜெர்மானியப் போர்க் குற்றவாளிகளின் மீதான நியூரென்பர்க் விசாரணை. ஆவணங்கள், தொகுதிகள் 1—7, மாஸ்கோ, 1966, பக்கம் 359.

** அதே நூல், தொகுதி 7, மாஸ்கோ, 1961, பக்கம் 327.

மான போர் குற்றங்களிலும் மனிதகுலத்திற்கு எதிரான மிக்க கொடும் பாதகச் செயல்களிலும் ஈடுபட்டார்கள் என்றும் அறிவித் தது.

ட்ரிப்யூனல், ஹேரிங்க், ரிபென்ட்ரோப், கைடல், கால்டன்புரு னெர், ரோஸென்பெர்க், ஃபிரான்க், ஷ்டிரேய்கர், ஸவுகெல், யோடல், ஸைஸ்-இன்க்வர்ட், போர்மன் (இவன் இல்லாத நேரத் தில்) ஆகியோருக்கு மரண தண்டனையையும் ஹேஸ், ஃபூன்க், ரேடர் ஆகியோருக்கு ஆயுள் தண்டனையையும் ஷீரஹ், ஷ்பெயெருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் நேய்ரட்டிற்கு 15 ஆண்டு கள் சிறைத் தண்டனையையும் தேனிட்சிற்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் வழங்கியது. நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட் டிருந்த லேய் விசாரணை ஆரம்பமாவதற்கு சில நாள் முன் சிறையில் தூக்கிலிட்டுக் கொண்டான், குருப்பிற்கு தீர்க்கப்பட முடியாத வியாதி இருப்பதாக அறிவிக்கப்பட்டு அவன் மீதிருந்த விசாரணை கைவிடப்பட்டது. விஷத்தால் பாதிக்கப்பட்ட ஹேரிங்கைத் தவிர மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்ற அனைவரும் 1946ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி இரவு நியூரென்பர்க் சிறையில் தூக்கி லிடப்பட்டனர்.

நியூரென்பர்க் விசாரணை பெரும் அரசியல் முக்கியத்துவம் உடை யதாக இருந்தது. இது ஆக்கிரமிப்பை மிகக் கொடுமையான சர்வ தேசக் குற்றமாக அறிவித்தது, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான தயாரிப்பில் ஈடுபட்டு, யுத்தங்களைக் கட்டவிழ்த்து விட்டு நடத்தி யோரைத் தண்டித்தது, லட்சோபலட்சம் பாமர மக்களைக் கொன்று குவித்து, முழு மக்களினங்களையே அடிமைப்படுத்தும் தீய திட்டங் களைத் தீட்டி நிறைவேற்றியவர்களை நியாயமாகத் தண்டித்தது. இது பாசிசத்தின் மீதும் ஆக்கிரமிப்பின் மீதும் வரலாறு நடத்திய விசாரணையாக இருந்தது. இது சமாதான நலன்களுக்குச் சேவை புரிகிறது, சமாதானத்திற்கும் விழிப்புணர்ச்சிக்கும் அறைகூவல் விடுக் கிறது.

நியூரென்பர்க் ட்ரிப்யூனலின் தீர்ப்பில் காணப்படும் சர்வதேச உரிமை பற்றிய கோட்பாடுகளை ஐ. நா. சங்கப் பொதுச் சபை ஊர்ஜிதப்படுத்தியது. இதன் மூலம், ஆக்கிரமிப்பு யுத்தமும் மனித குலத்திற்கு எதிரான போர் குற்றங்களும் மிகக் கொடுமையான சர்வதேசக் குற்றங்களாகும் என்று ஐ. நா. சங்கம் அறிவித்தது.

அத்தியாயம் 7

இராணுவ ஜப்பானின் தோல்வி

1. 1945 கோடையில் இருந்த இராணுவ-அரசியல் நிலவரம்

பல ஆண்டுகளாக ஜப்பானிய இராணுவ வெறியர்கள் ஆசிய நாடுகளில் ஆக்கிரமிப்புக் கொள்கையை நிறைவேற்றி வந்தனர், சோவியத் யூனியனுக்கு எதிராக ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தீட்டி வந்தனர். பாசிச ஜெர்மனியிலிருந்த ஜப்பானியத் தூதுவராகிய இயோசிமா 1943ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி ரிபென்ட்ரோப்பிடம் பின்வருமாறு தெரிவித்தான்: ''ஏற்கெனவே 20 ஆண்டுகளாக ஜப்பானிய பிரதான படைத் தலைமையகம் தீட்டி வரும் திட்டங்கள் எல்லாம் ருஷ்யாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காகவே என்பது மட்டும் விவாதத்திற்கு அப்பாற்பட்டது...''. பிரதான ஜப்பானிய போர் குற்றவாளிகள் மீது நடந்த சர்வதேச ட்ரிப்யூனலின் ஆவணங்களும் இதை மெய்ப்பிக்கின்றன.*

சோவியத் யூனியனுக்கு எதிரான போராட்டத்தில் பாசிச ஜெர்மானியோடு சேர்ந்து ஜப்பானுக்கு முக்கியத் தாக்குதல் சக்தியின் பங்கையளித்த அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டங்கள் கிழக்கில் ஏகாதிபத்திய ஜப்பானின் ஆக்கிரமிப்புகளுக்கு ஊக்கமளித்தன. ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையில் இவை தலையிடாததற்கு இதுதான் காரணம்.

குறிப்பாகப் பாசிச ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கிய பின் ஜப்பானிய ஆளும் வட்டங்கள் சோவியத் யூனியனுள் நுழைவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக ஆரம்பித்தன. 1941ஆம் ஆண்டு கோடையின் முடிவில் ஜப்பானிய பிரதான படைத் தலைமையகம் தனது அரசாங்கத்தின் கட்டளைக்கேற்ப ''கோன்தோகூயென்'' (''குவாண்டுங் இராணுவத்தின் விசேஷ நடவடிக்கைகள்'') எனும் பெயரில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத் தயாரிப்புத் திட்டத்தைத் தீட்டியது. செயல்முறைத் திட்டங்களின் படி ஒரே நேரத்தில் பிரிமோர்யேவிலும் (சோவியத் தொலைக் கிழக்கைக் கைப்பற்றும் நோக்கத்தோடு) டிரான்ஸ் பைகாலிலும் (ஓம்ஸ்க் தீர்க்க

---

* *Trial of the Major War Criminals before the International Military Tribunal*, Vol. 31, Nurenberg, 1948, p. 309.

ரேகை வரை சைபீரியாவைக் கைப்பற்றுவதற்காக) ஜப்பானியத் துருப்புகள் நுழைவதென்று திட்டமிடப்பட்டது. இதே திட்டத் தால் குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கையை இரண்டு மாதங்களில் 3,00,000லிருந்து 6,00,000மாக உயர்த்தத் திட்ட மிடப்பட்டது.

சோவியத் யூனியனின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அனுகூல மான தருணத்தை மட்டுமே ஜப்பான் எதிர்நோக்கியது. மாஸ்கோ அருகே பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் வெற்றி இத்தகைய தருணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இது நடைபெறவில்லை. மாறாக சோவியத் தலைநகரருகேதான் பாசிசத் துருப்புகள் தங் களுடைய முதல் பெரும் தோல்வியைச் சந்தித்தன. ஜப்பானும் சோவியத் யூனியனுக்கு எதிரான போரில் இறங்கவில்லை.

1942ஆம் ஆண்டு ஜப்பானிய பிரதானப் படைத் தலைமையகம் சோவியத் யூனியனுக்கு எதிரான புதிய யுத்த திட்டத்தைத் தீட்டியது. இதன்படி விளாடிவஸ்தோக் மீது தரைப்படைகளோடு சேர்ந்து கடற்படை மற்றும் வான் படையின் திடீர் தாக்குதலை தொடுப்பதென முடிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில் குவாண் டுங் இராணுவம் பிளாகவேஷென்ஸ்க் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

ஸ்தாலின்கிராத், கூர்ஸ்க் சமர்களில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றிகள் சோவியத் யூனியனுக்கு எதிரான இராணுவ ஜப்பானின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைக் குலைத்தன. ஆனால் ஜப்பா னியத் தரப்பு நடு நிலையைப் பற்றி 1941 ஏப்ரல் 13இல் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை தொடர்ந்து மீறி வந்தது. 1941 கோடை முதல் 1944 இறுதி வரை ஜப்பானிய கடற்படை 178 சோவியத் கப்பல்களைப் பிடித்தது. 1944ஆம் ஆண்டில் மட்டும் குவாண்டுங் இராணுவம் 144 தடவைகள் சோவியத் எல்லையை மீறியது, சோவியத் பரப்பை நோக்கி 39 தடவைகள் சுட்டது. ஜப்பான் தன்னுடைய இராஜதந்திர, இராணுவ அமைப்புகளின் மூலம் சோவியத் நாட்டின் பொருளாதார, அரசியல், இராணுவ நிலவரம் பற்றிய இரகசியத் தகவல்களை நாஜிகளுக்கு அளித்தது.

சாரம்சத்தில் தொலைக் கிழக்கில் இயக்கம் இல்லாவிட்டாலும் போர்முனை நிலவியது. இப்பிரதேசத்தில் இருந்த உண்மையான நிலவரத்தைக் கணக்கில் கொண்ட சோவியத் யூனியன் 40 டிவி ஷன்களைப் பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்திலிருந்து பிரித்து மஞ்சூரிய எல்லையில் நிறுத்தியிருந் தது. ஸ்தாபன ரீதியாக இவை ஜெனரல் புர்காயெவ் தலைமை யிலிருந்த தொலைக் கிழக்கு சேனையிலும் ஜெனரல் கவலேவ் தலைமை யிலிருந்த டிரான்ஸ் பைகால் சேனையிலும் அடங்கியிருந்தன.

ஐரோப்பாவில் பாசிச ஜெர்மனியும் இதன் துணை நாடுகளும் முறியடிக்கப்பட்ட பின் ஏகாதிபத்திய ஜப்பான், நேச நாட்டின ருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. நிபந்தனையற்ற சரணகதியைப் பற்றி 1945ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் தேதி அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனு விடுத்த கூட்டு பிரகடனத்தை இது நிராகரித்தது. இதனுல் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் இறங்குமாறு அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் சோவியத் அரசாங்கத்திற்கு முன் மொழிந்தன. தனது நேச நாட்டு கடமைக்கு விசுவாசமான சோவியத் யூனியன் யால்தா மகாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவை ஏற்றது.

பாசிச ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தின் சுமை முழுவதும் சோவியத் யூனியன் மீது விழுந்தது எனும் அம்சத்தைப் பயன் படுத்திக் கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடு ஜப்பானியர்களால் பாழ டிக்கப்பட்ட தனது கப்பற்படையைப் புனர்நாட்டியது, மேலும் பிரிட்டன் ஏகாதிபத்திய ஜப்பானுக்கு எதிரான போராட்டத்திற்குக் கூடுதல் சக்திகளை ஒதுக்கியது. இது 1945 கோடையில் போர் நடவடிக்கைகளை ஜப்பானுக்கு அருகில் கொண்டு செல்லும் வாய்ப் பைப் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளுக்கு அளித்தது.

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 6,9 தேதிகளில் அமெரிக்கர்கள் ஜப்பானிய நகரங்களாகிய ஹிரோஷிமா, நாகசாகி மீது அணு குண்டுகளை வீசினர். இந்த கொடுமையான மனிதத் தன்மையற்ற நடவடிக்கையால் இரண்டு நகரங்களும் தரைமட்டமாக்கப்பட்டன, ஒன்றுமறியா 4,47,000 பாமர மக்கள் கொல்லப்பட்டனர், அங்கஹீனமாக்கப்பட்டனர். பிரிட்டிஷ் பேராசிரியர் பிலேக்கெட் கூறியபடி இந்தக் குண்டு வீச்சுகள் "இரண்டாம் உலக யுத்தத்தின் கடைசி இராணுவ நடவடிக்கையாக இருக்கவில்லை, மாருக, ருஷ்யா விற்கு எதிரான இராஜதந்திர கெடுபிடி யுத்தத்தின் முதல் நடவடிக்கை யாக விளங்கின"*.

அணு குண்டுகளைப் பயன்படுத்த இராணுவ அவசியம் ஏதும் இருக்கவில்லை. இது ஜப்பானை சரணடையவும் செய்யவில்லை. ஜப் பான் எதிர்த்து நிற்க உறுதி பூண்டிருந்தது.

ஜப்பானியத் துருப்புகளின் படைத் திரட்டுகளிலேயே மஞ்சூரி யாவில் குவிக்கப்பட்டிருந்த குவாண்டுங் இராணுவம்தான் மிகப் பலம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் ஆசியாவில் தமது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறை

---

* P.M.S. Blackett, *Military and Political Consequences of Atomic Energy*, p. 127.

வேற்றுவதைப் பற்றிய பெரும் நம்பிக்கைகளை இதன் மீது வைத்திருந்தனர்.

தென் கிழக்கு ஆசியாவில் நேச நாட்டவரின் விஞ்சி நின்ற சக்திகளின் நிர்ப்பந்தத்தால் ஜப்பானியச் சக்திகள் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. பர்மாவை இழக்கும் உண்மையான அபாயம் தோன்றியது. பசிபிக் சமுத்திரத்தின் ஜப்பான் தன் பொறுப்பிலிருந்த எல்லாத் தீவுகளையும் பிலிப்பீன் தீவுகளின் கணிசமான பகுதியையும் இழந்தது. ஜப்பானிற்கு அருகேயிருந்த நுழைவாயில்களிலும் தென் சீனக் கடலிலும் போர் நடவடிக்கைகள் மூண்டன. மரியான் தீவுகளிலிருந்த அமெரிக்க விமானப்படை ஹோன்சூ, சிக்கோகு, கியூசூ தீவுகளில் இருந்த தலைநாட்டு தொழிற்துறை மையங்களின் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தது. நேச நாட்டு துருப்புகள் பனீன், வொல்கானோ, ரூக்யூ, தைவான் ஆகிய தீவுகளையும் சீனாவின் கிழக்கு கரையோரத்தையும் இந்தோசீனாவையும் அடைந்திருக்க முடியும்.

ஆனால் ஜப்பான் ஆயுதங்களைக் கீழே போடத் தயாராயில்லை. மேலே குறிப்பிட்டபடி நேச நாட்டவருக்கு எதிராக ஜப்பானிடம் பெரும் இராணுவம் இருந்தது, இவர்களுக்கு எதிராக இறுதி வரை இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இது உறுதி பூண்டிருந்தது. இப்பிரதேசத்தின் தரைப்பரப்பில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரிவுகளையும் ஜப்பானியத் துருப்புகளின் பின்னணியில் இயங்கிய கொரில்லாப் படை அணிகளையும் முறியடிக்கவும் மத்திய மற்றும் தெற்கு சீனாவை முழுமையாகப் பிடிக்கவும் திட்டமிடப்பட்டது. பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் தலைநாட்டின் நுழைவாயில்களில் உறுதியான தற்காப்பிற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் அமெரிக்க இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து அமெரிக்காவையும் பிரிட்டனையும் சமரச சமாதானத்திற்கு இணங்கச் செய்யவும் திட்டமிடப்பட்டது.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்திற்கு அமெரிக்கா 13,85,000 போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் அடங்கிய 3 போர்க்களப் படைகளையும் (19 காலாட்படை டிவிஷன்கள், 1 வான் இறக்குப்படை டிவிஷன், 1 குதிரைப்படை டிவிஷன், பின்னணிப் பிரிவுகள்) 4,73,000 நபர்களடங்கிய 2 கடல் காலாட்படை கோர்பஸ்களையும் (6 டிவிஷன்களும் மற்ற படைப்பிரிவுகளும்) வைத்திருந்தது. பசிபிக் சமுத்திர கடற்படையில் 23 முக்கியத் தாக்குதல் மற்றும் 54 பாதுகாப்பு விமானந் தாங்கிக் கப்பல்களும் 23 போர்க்கப்பல்களும் 2 பெரிய குரூசர்களும் 50 குரூசர்களும் 256 நாசகாரிக் கப்பல்களும் 188 நீர்மூழ்கிக் கப்பல்களும் ஏராளமான மற்ற வகைக் கப்பல்களும் படகுகளும் இருந்தன. மொத்தம் 25,000

விமானங்கள் இருந்தன. இவற்றில் 18,000 முதல் வரிசையில் நின்றன. கிரேட் பிரிட்டன் கணிசமான சக்திகளை — மொத்தமாக 6,00,000 நபர்களடங்கிய 10 காலாட்படை டிவிஷன்கள், 3 காலாட்படை பிரிகேடுகள், 3 டாங்கிப் பிரிகேடுகளையும் 10 விமானந் தாங்கிக் கப்பல்கள், 6 போர்க்கப்பல்கள், 19 குரூசர்கள், 49 நாசகாரிக் கப்பல்கள், 31 நீர்மூழ்கிக்கப்பல்கள், சுமார் 1,300 விமானங்களையும் — அளித்தது.

ஜப்பானிடம் பெரிய இராணுவம் உள்ளதைக் கணக்கில் கொண்ட அமெரிக்கா 1946ஆம் ஆண்டிற்கு முன்னதாகத் தலைநாட்டின் தீவுகளில் தனது துருப்புகளை இறக்குவதில்லையென முடிவு செய்தது. படையிறக்கத்திற்குப் பின் ஜப்பானியத் தீவுகளிலும் ஆசியா கண்டத்திலும் எவ்வளவு காலம் நடவடிக்கைகள் நீடிக்குமென யாராலும் கூற முடியவில்லை. இதுதான் ஜப்பானுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கி கூட்டு முயற்சிகளால் அதை முறியடிக்கும்படி யால்தா மகாநாட்டிலேயே (1945 பிப்ரவரி) சோவியத் யூனியனுக்கு வேண்டுகோள் விடுக்கும்படி அமெரிக்காவையும் பிரிட்டனையும் கட்டாயப் படுத்தியது.

2. பசிபிக் சமுத்திரப் பகுதியிலும் ஆசியாவிலும் நேச நாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள்

பசிபிக் சமுத்திரப் பகுதியில் ஜப்பானியப் படைத் தலைமை சிறிய அளவு சக்திகளைத்தான் விட்டு வைத்திருந்தது. இவையும் சிறு சிறு படையிருப்பிடங்களாக 45 லட்சம் சதுர கி.மீ. அளவுள்ள பெரும் பரப்பில் சிதறிக் கிடந்தன.

பசிபிக் சமுத்திரத்தில் நேச நாட்டவரிடம் 3 படைகளும் பலமான கடற்படை, வான் படைச் சக்திகளும் இருந்தன. இச்சக்திகள் ஜப்பானியர்களைக் கணிசமான அளவு விஞ்சி நிற்க உதவின, படையிறக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் மிகப் பெரிய நடவடிக்கைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

பிலிப்பீன் தீவுகளில் உள்ள லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்காக நேச நாட்டினர் மேற்கொண்ட நடவடிக்கை

1945ஆம் ஆண்டின் துவக்கத்தில் அமெரிக்கா லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்பில் இறங்கியது. ஜப்பானிய ஜெனரல்

யாமசிட்டாவின் தலைமையில் 2,50,000க்கும் மேற்பட்டோர் அடங்கிய ஜப்பானியத் துருப்புகளும் 4வது வான் படையின் 400—500 விமானங்களும் அத்தீவில் இருந்தன. இதே அளவு விமானங்கள் தைவான், ஹோக்கினவா, மற்ற பிரதேசங்களிலுமிருந்தும் லுசோனுக்கு அனுப்பப்படலாம்.

லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்காக நேச நாட்டினர் சுமார் 2,75,000 நபர்களையும் 2,200 விமானங்களையும் (1,300க்கும் கூடுதலான விமானந் தாங்கிக் கப்பல்களின் விமானங்கள் உட்பட) சுமார் 1,000 போர், போக்குவரத்து, படையிறக்க கப்பல்களையும் ஈடுபடுத்தினர். பிரதான தாக்குதல் திசையில்—லின்காயேன் வளைகுடா, மணிலா—2,03,000 நபர்கள் அடங்கிய 6வது படையின் பிரதான சக்திகள் செயல்பட வேண்டும். 12 பாதுகாப்பு விமானந் தாங்கிக் கப்பல்கள், 6 போர்க் கப்பல்கள், 6 கனரக குரூசர்கள், 49 நாசகாரிக் கப்பல்கள் உட்பட 7வது கப்பற்படையின் 164 சண்டை கப்பல்கள் மற்றும் இழுவைப் படகுகள், பீரங்கி படகுகள் மற்ற வகை கப்பல்களும் படையிறக்கத்திற்கு வகை செய்தன.

தைவான், ரூக்யூ, லுசோன் தீவுகளில் உள்ள ஜப்பானிய விமானப் படைச் சக்திகளை 3வது அமெரிக்க கடற்படையின் விமானப் படையைக் கொண்டு செயலற்றதாக்கும் கடமை இக்கடற்படையின் செயல்முறை யூனிட்டிற்கு அளிக்கப்பட்டது.

ஜெனரல் மாக்கார்துர் பொது படைத் தலைமை பொறுப்பை வகித்தார்.

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின் போது அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களின் விமானங்கள் ஜப்பானிய விமானத் தளங்கள், துருப்புகளின் திரட்டு, தற்காப்பு நிலைகள் மற்றும் லுசோன் தீவிலிருந்த மற்ற இடங்களின் மீது குண்டு மழை பொழிந்தன.

ஜனவரி 9ஆம் தேதி லின்காயேன் வளைகுடாவின் கரையில் 6வது அமெரிக்கப் படையின் துருப்புகள் இறக்கப்படலாயின. இது கப்பல்களின் பீரங்கிப்படையின் பலத்த குண்டு மழை மற்றும் விமானப்படை தாக்குதல்களின் கீழ் நடந்தது. இதன் பயனாய் முதல் நாளன்று தீவில் 68,000 நபர்கள் இறக்கப்பட்டனர், 32 கி.மீ. நீளமும் 7.5 கி.மீ. வரை ஆழமும் உடைய தாக்குமுனை கைப்பற்றப்பட்டது. இதன் பின் அமெரிக்கத் துருப்புகள் கடுமையான, உக்கிரமான சண்டைகளோடுதான் தீவின் ஆழத்திற்குள் செல்ல முடிந்தது. ஜப்பானியர்கள் ஒவ்வொரு எல்லையையும் உறுதியாகத் தற்காத்து நின்றனர். லுசோன் தீவில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளோடு கூட அமெரிக்கர்கள் 8வது அமெரிக்கப் படையின் (தளபதி ஜெனரல் ஏய்கெல்பேர்கெர்) சக்திகளைக் கொண்டு

தெற்கு பிலிப்பீன் தீவுகளை (மின்டனுவோ, பாலவான் இத்தியாதி) விடுவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

லுசோன் தீவிலோ பிலிப்பீன் தீவுகளின் தலைநகரத்திற்காகக் கடும் சண்டைகள் நடைபெற்றன. அமெரிக்கர்கள் மார்ச் 4ஆம் தேதி மணிலாவைக் கைப்பற்றிய பின் இராணுவ நடவடிக்கைகள் பெரும்பாலும் தனித்தனியே இருந்த ஜப்பானிய படைத் திரட்டு களை ஒழித்துக் கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. மாக்கார்துர் படைத் தலைமையகத்தின் அறிக்கையின்படி அதிகார பூர்வமாக பிலிப்பீன் தீவுகளில் இராணுவ நடவடிக்கைகள் ஜூலை 5ஆம் தேதி முடிவடைந்தன.

பிலிப்பீன் கொரில்லாப் படைவீரர்களின் ''ஹுக்பாலாஹாப்'' என்ற ஜப்பானிய எதிர்ப்பு படை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கர்களுக்குப் பெரிதும் உதவியது. லுசோனின் பல வட்டங்களை விடுவிப்பதில் இவர்கள் தீவிர பங்கேற்றனர்.

அமெரிக்கர்களின் தரப்பில் 37,800 நபர்களும் ஜப்பானியர் களின் தரப்பில் 2,05,500 நபர்களும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கத் துருப்புகள் பிலிப்பீன் தீவுகளைக் கைப்பற்றியதன் விளைவாய் நேச நாட்டினர், தென் சீனக் கடலிலும் இந்தோசீனு, மலாயா கரையோரங்களிலும் ஜப்பானிய போக்குவரத்து மார்க்கங் களின் மீது கடலிலிருந்தும் வானிலிருந்தும் நன்ருக தாக்குதல் தொடுக்கவும் தலைநாட்டின் மீது செயல் வன்மையோடு தாக்கம் செலுத்தவும் வாய்ப்புகளைப் பெற்றனர்.

இயோ (இவாட்ஸுமா) தீவில் அமெரிக்க இறக்குப்படையின் படையிறக்கம்

இவாட்ஸுமா என்பது எரிமலையிலிருந்து தோன்றிய ஒரு தீவு. இதன் பரப்பு 20.3 சதுர கி. மீ.. இதில் ஜப்பானியர்களுக்கு இரண்டு விமானத் தளங்கள் இருந்தன, மூன்றுவது கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. படையிருப்பிடத்தில் 23,000 நபர்கள் இருந் தனர். விமானத் தளங்களிலோ 10 விமானங்கள் மட்டுமே நின்றன. ஆனல் வானிலிருந்து தனது துருப்புகளுக்கு ஆதரவு அளிப்பதற் காக ஜப்பானியர்களால் டோக்கியோவில் விமானத் தளங்களில் இருந்த 3வது வான் படையின் விமானங்களைப் பயன்படுத்த முடிந் தது.

இவாட்ஸுமா தீவைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கப் படைத் தலைமை 3 கடற் காலாட்படை டிவிஷன்களையும் ஆர்மி பிரிவு

களையும் ஒதுக்கியது. இவற்றில் 1,11,000 நபர்கள் இருந்தனர்; 1,522 விமானங்களும் (1,170 விமானந் தாங்கி கப்பல்களின் விமானங்கள் உட்பட) 680க்கும் அதிகமான போர், போக்குவரத்து, இறக்குப்படைக் கப்பல்களும் அடங்கியிருந்தன. படையிறக்க நடவடிக்கையின் பொதுத் தலைமை அட்மிரல் நிமிட்ஸ் வசம் அளிக்கப்பட்டிருந்தது.

ஏன் அமெரிக்க படைத் தலைமை இவாட்ஸூமா தீவைக் கைப் பற்ற முடிவு செய்தது? இத்தீவு மரியான் தீவுகளுக்கும் ஜப்பா னுக்கும் இடையில், டோக்கியோவிலிருந்து 1,200 கி. மீ. தூரத் தில் உள்ளது. மரியான் தீவுகளில் உள்ள அமெரிக்க விமானங்கள் ஜப்பான் மீது குண்டு வீசுவதற்காக சென்று விட்டு திரும்பும் போது இவாட்ஸூமா தீவின் விமானத் தளங்களில் இருந்த ஜப்பானிய சண்டை விமானங்களின் தாக்குதலுக்கு உள்ளாயின. சேதப்படுத் தப்பட்ட அமெரிக்க விமானங்கள் தண்ணீரில் விழுந்தன, விமானி கள் மாண்டனர். இத்தீவைக் கைப்பற்றியதால் துல்லியமாகவும் குறைவான சேதங்களுடனும் அமெரிக்கர்களால் ஜப்பானை விண்ணி லிருந்து தாக்க முடிந்தது.

படையிறக்கம் ஆரம்பமாவதற்கு முன் ஒரு சில மாதங்கள் அமெரிக்க போர்த்தந்திர மற்றும் விமானந் தாங்கி கப்பல்களின் விமானப்படை விண்ணில் ஆதிக்கத்தை வெல்லும் பொருட்டு இயோ தீவிலும் அருகேயிருந்த தீவுகளிலுமிருந்த விமானத் தளங் களின் மீது முறையான தாக்குதல்களைத் தொடுத்தது.

பிப்ரவரி 19ஆம் தேதி மூன்று நாள் பீரங்கிப்படை மற்றும் விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் இயோ தீவின் தென் கிழக்கு கரையில் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் படை யிறக்கம் ஆரம்பமாகியது. பலப்படுத்தப்பட்ட நிலைகளை ஆதார மாகக் கொண்ட ஜப்பானியத் துருப்புகள் கடும் எதிர்ப்பு காட்டின. மார்ச் 16ஆம் தேதி வாக்கில்தான் இவர்களுடைய எதிர்ப்பு முறி யடிக்கப்பட்டு அமெரிக்கர்கள் முழு தீவையும் பிடித்தனர். போது மான விமானப்படை, பீரங்கிப்படை ஆதரவு இல்லாததால் இவர் களுக்குக் கணிசமான இழப்பேற்பட்டது—28,600 நபர்கள் பாதிக் கப்பட்டனர், இவர்களில் 6,300 பேர்கள் கொல்லப்பட்டனர். அமெரிக்க விமானப்படை 168 விமானங்களை இழந்தது, கடற்படை ''பிஸ்மார்க்'' எனும் பாதுகாப்பு விமானந் தாங்கி கப்பலை பறி கொடுத்தது. இது தவிர ''சரத்தோகா'' முக்கியத் தாக்குதல் விமானந் தாங்கி கப்பல், ''பென்சகோலா'' குரூசர் கப்பல் உட்பட 30 கப்பல்கள் பெரும் சேதமடைந்தன. படையிறக்க நடவடிக்கை ஆரம்பமாகும் முன்னரே ஜப்பானிய கரையோர பீரங்கிப்படை மட்டும் அவசரப்பட்டு வேடத்தைக் கலைக்காமலிருந்தால் அமெரிக்

கர்களின் சேதங்கள் இன்னமும் அதிகமாக இருந்திருக்கும்.*

தீவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளின் தரப்பில் 21,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், 212 நபர்கள் காயமடைந்தனர்.

இவாட்ஸூமா தீவைக் கைப்பற்றியதன் விளைவாய் ஜப்பானிய பொருளாதார, அரசியல் மையங்கள் வரையிலான தூரம் இரு மடங்கு குறைந்து, பயண நேரம் 3 மணி நேரமாக மட்டுமே இருந்த தால் இவற்றின் மீது பலத்த தாக்குதல்களைத் தொடுக்கும் வாய்ப்பு அமெரிக்க விமானப்படைக்குக் கிட்டியது. இதன் தொடர்பாய் ஏராளமான அமெரிக்க விமானங்கள் தீவிற்கு அனுப்பப்பட்டன, யுத்தம் முடியும் வரை இத்தீவின் விமானத் தளங்களிலிருந்து 2,400க்கும் குறையாத குண்டு வீச்சு விமானங்கள் இயங்கின.

ஹோக்கினுவா நடவடிக்கை
(1945 மார்ச் 25 — ஜூன் 21)

ரூக்யூ தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஹோக்கினுவா தீவில் அமெ ரிக்கத் துருப்புகள் இறக்கப்பட்டதுதான் இரண்டாவது உலக யுத்தத் தில் பசிபிக் சமுத்திர போர் அரங்கில் அமெரிக்கா மேற்கொண்ட கடைசி நடவடிக்கையாகும். ஹோக்கினுவா தீவைக் கைப்பற்றி ஜப்பானிற்கு அருகிலுள்ள நுழைவாயில்களை அடைந்து தலைநாட் டினுள் நுழைவதற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவிப் பதுதான் இதன் நோக்கமாகும்.

ஹோக்கினுவா தீவில் (நீளம் 95 கி. மீ. சராசரி) அகலம் 10 கி. மீ.) 77,000 நபர்களைக் கொண்ட 32வது ஜப்பானியப் படை யின் பிரிவுகளும் யூனிட்டுகளும் தற்காப்பில் நின்றன. இதன் வசம் 90 டாங்கிகளும் பீரங்கிப்படை மற்றும் மார்ட்டர் பீரங்கிப்படை பிரிவுகளும் இருந்தன. கடற்படைத் தளமும் (சுமார் 10,000 நபர்கள்) கரையோர பீரங்கிப்படையின் பேட்டரிகளும் விமான எதிர்ப்புப் பீரங்கிப்படைப் பிரிவுகளும் 32வது படைக்கு கட்டுப் பட்டிருந்தன. 250 விமானங்களை உள்ளடக்கிய 5வது வான் படை விண்ணிலிருந்து 32வது படைக்கு ஆதரவளிக்க வேண்டும். அமெரிக்க இறக்குப்படையினரை முறியடிப்பதில் முக்கியப் பங்கு, வெறி கொண்ட படைவீரர்களிடமிருந்து கூலிக்கு அமர்த்தப்பட்ட மரணப் படையினருக்கு (''காமிகாத்ஸே'' என்ற விமானிகள் மற்றும் ''காய்தேன்'' என்ற நீர்மூழ்கி படைவீரர்களுக்கு**) அளிக்கப்பட் டிருந்தது.

---

* S. Morison, *History of United States Naval Operations in World War II*, Vol. XIV, p. 69.

** ''காமிகாத்ஸே'' —''புனிதக் காற்று''; ''காய்தேன்'' —''சுவர்க்கத்திற்கான பாதை''.

தீவின் படையிறக்க எதிர்ப்பு பலவீனமாயிருந்தது. இது தீவின் தென் பகுதியில் 7—8 கி.மீ. பொது ஆழத்திற்கு 3 தற்காப்பு எல்லைகளைக் கொண்டதாயிருந்தது. ஒரு சில ஆதார நிலையங்களைக் கொண்ட முதல் எல்லை சிறிய அளவு சக்திகளால் பாதுகாக்கப் பட்டது. பிரதான எல்லையாகிய இரண்டவது எல்லை பொறியியல் ரீதியாக பலமானதாயிருந்தது, பிரதான சக்திகளால் பாதுகாக்கப் பட்டது. மூன்றுவது எல்லையில் சேமப் படை இருந்தது. தீவின் தென் பகுதிக்கான நுழைவாயில்கள் கடற்பாறைகளில் கண்ணி வெடி வயல்களின் அருகே வரிசையாக அமைக்கப்பட்ட மரப் பலகை களால் மூடி மறைக்கப்பட்டிருந்தன.

ஹோக்கினுவா தீவைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்க படைத் தலைமை பெரும் பயணப் படையை ஒதுக்கியிருந்தது. இதில் 4,52,000 நபர்கள் இருந்தனர், 59 முக்கியத் தாக்குதல் மற்றும் பாதுகாப்பு விமானந் தாங்கிக் கப்பல்கள் (1,727 விமானங்கள்), 22 போர்க் கப்பல்கள் 36 குரூசர்கள், 140க்கும் அதிகமான நாசகாரி மற்றும் கண்ணி வெடிக் கப்பல்கள் உட்பட 1500 சண்டைக் கப்பல்கள், இறக்குப்படை போக்குவரத்து, துணைக் கப்பல்கள் ஆகியவை இருந் தன. இது தவிர 700 விமானங்களைக் கொண்டிருந்த போர்த்தந்திர விமானப்படையும் பின்னுல் செயல்முறை விமானப்படையும் மற்றும் ஜப்பானிய கடற்படைத் தளத்தின் நுழைவாயில்களில் நிறுத்தப் பட்டிருந்த நீர்மூழ்கிக் கப்பல்களும் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டன. இவ்வாருக அமெரிக்க படைத் தலைமை ஆள் பலத்தில் ஆறு மடங்கும் விமானங்களைப் பொறுத்த மட்டில் மும்மடங்கிற்கு அதிகமாகவும் கடற்படைச் சக்திகளில் பரிபூரணமாகவும் எதிரியை விஞ்சியிருந்தது.

பூர்வாங்க விமானப்படை தாக்குதல்களின் மூலம் ஜப்பானியர் களின் தற்காப்பை அதிகபட்சம் பலவீனமாக்கி, கேராமா தீவுகளை (இவை ஹோக்கினுவா தீவின் அருகே உள்ளன) கைப்பற்றுவது, ஏப்ரல் 1ஆம் தேதி காலையிலிருந்து ஹோக்கினுவா தீவின் தென் மேற்குப் பகுதியில் இறங்கி ஒரே நேரத்தில் மூன்று திசைகளை நோக்கி (கிழக்கு, வடக்கு, தெற்கு) தாக்குதல் தொடுத்து தீவைக் கைப்பற்றுவது என்று அமெரிக்க படைத் தலைமை திட்டமிட்டது.

மார்ச் மாத ஆரம்பத்தில் அமெரிக்க விமானப்படை ஹோக்கினுவா தீவின் மீது தாக்குதலைத் துவக்கியது. மார்ச் 25ஆம் தேதி முதல் கடற்படையின் பிரதான சக்திகள் கரையோரத்தை இடையருத பீரங்கிப்படை தாக்குதலுக்கு உள்ளாக்கின.

ஏப்ரல் 1ஆம் தேதி காலை பலத்த விமானப்படை, பீரங்கிப் படையின் தாக்குதலுக்குப் பின் 10 கி.மீ. நீள போர்முனையில் தீவில் படையிறக்கம் ஆரம்பமாகியது. இது கிட்டத்தட்ட ஜப்பா

னியத் துருப்புகளின் எதிர்ப்பின்றியே நடந்தேறியது. நாள் இறுதியில் 60,000 நபர்கள் தரையிறக்கப்பட்டனர்; இறக்குப்படையினரால் கைப்பற்றப்பட்ட தாக்கு முனை 14 கி. மீ. நீளமும் 5 கி. மீ. ஆழமும் உடையதாயிருந்தது.

இதன் பின், கடலிலிருந்தும் விண்ணிலிருந்தும் பலத்த ஆதரவு இருந்தும் கூட தீவின் ஆழத்தினுள் அமெரிக்கத் துருப்புகள் மிக மெதுவாகத்தான் முன்னேறின. எதிரி கடும் எதிர்ப்பைக் காட்டினான். இரண்டு மாத கால சண்டைகளுக்குப் பின் ஜூன் 3ஆம் தேதிதான் அமெரிக்கத் துருப்புகளால் ஜப்பானியர்களின் பிரதான தற்காப்பு எல்லையைக் கைப்பற்ற முடிந்தது. அதற்கடுத்த நாள் ஜப்பானியர்களின் பின்னணியில் கடல் இறக்குப்படை தரையிறக்கப்பட்டது. இதன் பின் அமெரிக்கத் துருப்புகளின் தாக்குதல் வேகம் அதிகரித்தது. ஜூன் 21ஆம் தேதி, அதாவது படையிறக்கத்திற்குப் பின் 82 நாட்கள் கழித்து ஹோக்கினவா தீவு முழுவதுமாக கைப்பற்றப்பட்டது.

நடவடிக்கையின் போக்கில் நேச நாட்டினரின் தரப்பில் 12,513 நபர்கள் கொல்லப்பட்டனர், 36,631 நபர்கள் காயமடைந்தனர்; 33 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, 370 கப்பல்கள் சேதமடைந்தன; 1,000க்கும் மேற்பட்ட விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஜப்பானியர்களின் தரப்பிலோ 1,00,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர், 7,800 பேர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்; சிறு கப்பல்களைச் சேர்க்காது 16 பெரிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, 420க்கும் கூடுதலான விமானங்கள் அழிக்கப்பட்டன.

தீவிலிருந்த 1,50,000 குடிமக்களும் சண்டைகளுக்குப் பலியானார்கள். "இராணுவத்தினருக்குச் சேவை செய்வதற்காக அழைக்கப்பட்டிருந்த பள்ளிச் சிறுவர் சிறுமியர் கூட சண்டைகளில் மாண்டு போயினர். "லில்லி அணியின்" சோக முடிவு, தலைநாட்டிற்காக நடைபெறவிருக்கும் "தீர்மானகரமான" சண்டையில் சாதாரண ஜப்பானிய குடிமக்களின் சோகமயமான முடிவை முன்கூட்டியே அறிவித்தது"*.

ஹோக்கினவா நடவடிக்கைதான் பசிபிக் சமுத்திரத்தில் மிகப் பெரும் நடவடிக்கையாக இருந்தது. ஆனால் அமெரிக்கத் துருப்புகள் எதிரியைப் பெரிதும் விஞ்சியிருந்த போதிலும் தனிமைப் படுத்தப்பட்ட ஜப்பானிய படையிருப்பிடத்தை முறியடிக்க சுமார் 3

---

* பசிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தின் வரலாறு, தொகுதி 4, பக்கம் 160. ("லில்லி அணி" என்பது ஜப்பானிய பள்ளிச் சிறுமியரின் அணி. சுகாதாரப் பணி புரிந்த இவர்கள் ஹோக்கினவா தீவில் நடைபெற்ற போர் நடவடிக்கைகளின் போது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டனர்).

மாதங்கள் தேவைப்பட்டன. ஜப்பானியர்கள் இட வசதிகளைத் திறமையாகப் பயன்படுத்தி கடுமையான எதிர்ப்பைக் காட்டினர்.

குறிப்பாக ஜப்பானிய விமானப்படைக்கு எதிரான போர் கடுமையானதாயிருந்தது. ஏப்ரல் 5 முதல் ஜூன் 22 வரை ''காமிகாத்ஸே'' விமானிகள் அமெரிக்க கப்பல்களின் மீது 10 பெரும் தாக்குதல்களை நடத்தினர். ஒவ்வொரு தாக்குதலிலும் 110—185 விமானங்கள் பங்கேற்றன, ஒரு தாக்குதலில் 355 விமானங்கள் கலந்து கொண்டன. அமெரிக்கர்கள் தமது வான் எதிர்ப்பு பாதுகாப்பை மாற்றியமைக்கும்படி நேர்ந்தது. ராடார் சாதனங்களைக் கொண்ட கப்பல்கள் படையிறக்க பிரதேசத்தில் 55 கி. மீ., 135 கி. மீ. அரை விட்டங்களில் இரண்டு வளையங்களை ஏற்படுத்தின. வான் எதிர்ப்பு பாதுகாப்பின் ஒவ்வொரு கப்பலையும் 4 முதல் 12 வரையிலான சண்டை விமானங்கள் மூடி பாதுகாத்தன. எதிரி விமானங்களைக் கண்டுபிடித்ததும் கண்காணிப்பு நிலையம் உடனே சண்டை விமானங்களை அழைத்து அவற்றை இலக்கை நோக்கி அனுப்பியது.

விமானப்படைத் துறையினர் மோசமாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்ததாலும் இயந்திர சாதனங்கள் பழமையாகிப் போயிருந்ததாலும் விமானத் தாக்குதல்களால் அமெரிக்க இறக்குப்படையை முறியடிக்க ஜப்பானியர்கள் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

ஹோக்கிஞவா தீவைக் கைப்பற்றியதையடுத்து அமெரிக்கர்கள் ஜப்பானின் நுழைவாயில்களில் அனுகூலமான நிலைகளைப் பெற்றனர். ஆனால் ஜப்பானுக்கு எதிரான இவர்களின் போர் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட இத்துடன் முடிவடைந்தன. ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் இறங்க வேண்டுமென நேச நாட்டினர் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஹாலந்து இந்திய திசையிலான போர் நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் இங்கே ஜப்பானியர்கள் அனேகமாக அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகளுக்கு எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை, இவை மே—ஜூனில் பர்னேவோ தீவைக் கைப்பற்றின.

பிரிட்டிஷ் துருப்புகள் மே 6ஆம் தேதி ரங்கூனில் தரையிறங்கின. இந்நேரத்தில் பர்மாவின் முக்கிய நகரங்கள் மக்கள் ஜனநாயக இராணுவத்தால் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டன. பர்மியக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த இராணுவத்திற்குத் தலைமை தாங்கியது.

1945 ஆகஸ்டு—செப்டெம்பரில் 1,00,000 நபர்கள் அடங்கிய அமெரிக்கக் கடற் காலாட்படை துருப்புகள் சீன பரப்பில் தியான்த்ஸின், ஸிந்தாவ், ஷான்ஹாய் மற்ற பிரதேசங்களில் தரையிறங்கின. இது சீன மக்களுக்கு எதிரான அமெரிக்க ஐக்கிய நாட்டின்

நேரடியான தலையீடாக அமைந்தது.

இந்த காலகட்டத்தில் நேச நாட்டவரின் போர் நடவடிக்கை களில் புதிய அம்சம் என்னவெனில் பல்வேறுவித போர்த் தளவாடங் களை, குறிப்பாக விமானங்களை மிகப்பெரும் அளவில் குவித்ததாகும். நடவடிக்கையின் லட்சியங்களை அடைவதில் பிரதான பங்கு விமானப் படைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

நல்ல தொழில்நுட்பப் பயிற்சியும் பெரும் கடற்படை, விமானப் படைச் சக்திகளைக் கொண்டு கடலிலிருந்தும் விண்ணிலிருந்தும் தரைப்படையினருக்கு நம்பகரமான ஆதரவு அளித்ததும் கவனிக்கத் தக்கது.

படைகளை ஏற்றுவது, கடல் மூலம் கடந்து சென்று கரையில் பெரும் சக்திகளை இறக்குவது ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யும் திறமை, இறக்குப்படைக்கான நம்பகரமான விமானப்படை, கடற்படை ஆதரவு மற்றும் நவீன படையிறக்க சாதனங்களைப் பயன்படுத்தியது முதலியன நேச நாட்டவரின் கடல் படையிறக்க நடவடிக்கைகளின் வலிவான அம்சங்களாகும். அதே நேரம் இவை கரையில் மெதுவாகத்தான் இயங்கின, தாக்குமுனையில் ஏராளமான துருப்புகளும் போர்த் தளவாடங்களும் குவிந்து கிடந்தன.

இவ்வாறாக 1945ஆம் ஆண்டின் முதல் பகுதியில் நேச நாட்டுத் துருப்புகள் இராணுவ வெறி கொண்ட ஜப்பானியத் துருப்புகளின் மீது பசிபிக் சமுத்திரத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் ஒரு சில வெற்றிகளை அடைந்தாலும் ஜப்பானை முறியடிக்க இவற்றால் இயல வில்லை. தொலைக் கிழக்கில் யுத்தத்தைத் தொடருவதற்கான சக்தி களும் வாய்ப்புகளும் இன்னமும் அதற்கு இருந்தன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது பெரும் முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்தது.

பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகளின் நட வடிக்கைகள் முன்போன்றே அனுகூலமான சூழ்நிலைகளில்—எதிரியை இவை ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் கணிசமாக விஞ்சி நின்றன, தயாரிப்புகளுக்கு நிறைய நேரமிருந்தது—நடைபெற்றன. நேச நாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள் முப்படைகளின் முயற்சிகளால் நிறைவேற்றப்பட்டன. கடற்படையில் பெரிய போர்க் கப்பல்களுக்குப் பதிலாக விரைவாகச் செல்லும் விமானந் தாங்கிக் கப்பல்கள் முக்கியப் பங்காற்றத் துவங்கின, விமானந் தாங்கிக் கப்பல்களின் விமானங்கள்தான் கடற் சண்டைகளின் முடிவைத் தீர்மானித்தன. கப்பல்களுக்கு எதிரான சண்டைகளில், குறிப்பாக எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களில் நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பங்காற்றத் துவங்கின.

மேற்குப் போர்முனைக்கு மாறாக பசிபிக் சமுத்திரத்தில் நடந்த பெரும்பாலான படையிறக்க நடவடிக்கைகளில் 1—2 டிவிஷன் களுக்கு மேலாகப் பங்கேற்கவில்லை. ஒரு சில தனிப்பட்ட பெரும் நடவடிக்கைகளில் மட்டுமே (லேய்தெ, லுசோன், ஹோராக்கிளுவா தீவுகள்) இவற்றின் எண்ணிக்கை 7 வரை சென்றது.

நடவடிக்கைகளுக்கான தயாரிப்பு 2—3 மாதங்கள் நீடித்தது. இந்நேரத்தில் வேவு பார்த்தல், வானில் ஆதிக்கத்தை வெல்லுதல், திடீரென தாக்குதல் தொடுத்தல் ஆகியவற்றின் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. படையிறக்கம் விமானப்படை, பீரங்கிப்படை யின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் ஆரம்பமாகியது, விமானப் படை, கப்பல் பீரங்கிப்படை ஆதரவுடன் இது குறுகிய காலத்தில் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. படையிறக்கத்திற்குப் பின் உடனடி யாக தன் விமானங்கள் இறங்கத் தேவையான விமானத் தளங்கள் அமைக்கப்பட்டன.

பசிபிக் சமுத்திரப் பகுதியில் நடந்த யுத்தத்தில் நப்பாம் மற்றும் ஜெட் குண்டுகள், நவீன ராடார் சாதனங்கள், திசைகாட்டி உப கரணம், பெரும் மிதக்கும் கிடங்குகள், பட்டறைகள், பல்வேறு படையிறக்க சாதனங்கள் போன்ற புதிய போர் சாதனங்கள் பயன் படுத்தப்பட்டன.

3. குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் நிபந்தனையற்ற சரணகதியும்

சோவியத் படைத் தலைமை கிரீமியா மகாநாட்டிற்குப் பின் உடனடி யாக ஏகாதிபத்திய ஜப்பானுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயா ராக ஆரம்பித்தது. பெரும் ஒழுங்கமைப்பு பணி மேற்கொள்ளப் பட்டது. தொலைக் கிழக்கில் இருந்த இரண்டு சேனைகளிலிருந்து (டிரான்ஸ் பைகால் சேனை, தொலைக் கிழக்கு சேனை) 1945ஆம் ஆண்டு ஏப்ரலில் பிரிமோர் படைத் தொகுதி ஏற்படுத்தப்பட்டது. ஆகஸ்டு 2ஆம் தேதி இதற்கு 1வது தொலைக் கிழக்கு சேனை என்று பெயரிடப்பட்டது. அதே நேரத்தில் தொலைக் கிழக்கு சேனை, 2வது தொலைக் கிழக்கு சேனை என்று அழைக்கப்படலாயிற்று.

குவாண்டுங் இராணுவத்தை விரைவாக முறியடிக்கும் நோக்கத் தோடு 3 மாதங்களில் (மே—ஆகஸ்டு) மேற்கே பணியை நிறை வேற்றிய 3 காலாட்படைகள் (5,39 மற்றும் 53வது படைகள்), 1 டாங்கிப் படை (6வது கார்டு டாங்கிப் படை), குதிரைப்படை-இயந்திரப்படைப் பிரிவு, ஏராளமான தனி யூனிட்டுகள் (மொத்த மாக 39 துப்பாக்கிப்படை, டாங்கி மற்றும் இயந்திரப்படை

துருப்புகளின் யூனிட்டுகள்), மற்றும் ஏராளமான விமானங்கள், பீரங்கிகள் முதலியன இருப்புப் பாதை வழியே 9,000—11,000 கி. மீ. தூரத்திற்குத் தொலைக் கிழக்கிற்கு அனுப்பப்பட்டன. அதே நேரத்தில் 'தொலைக் கிழக்கில் பெரும் படைமாற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. நல்ல போர் அனுபவம் உள்ள இராணுவ அதிகாரிகள் படைத் தலைமையிடங்களுக்கும் கமாண்டர் பதவிகளுக்கும் அனுப்பப்பட்டனர்.

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 8ஆம் தேதி சோவியத் அரசாங்கம், மறு நாளிலிருந்து சோவியத் யூனியன் ஜப்பானுக்கு எதிராக யுத்த நிலையில் இருக்கும் என்றும் 1945 ஜூலை 26ஆம் தேதி அமெரிக்கா, பிரிட்டன், சீனு விடுத்த பிரகடனத்துடன் சேர்ந்து கொள்வதாயும் ஜப்பானியத் தூதுவரிடம் அறிவித்தது. ''தன்னுடைய இத்தகைய கொள்கை மட்டுமே சமாதானத்தை விரைவில் நிலைநாட்டவும், மக்களைச் சேதங்கள், தவிப்புகளிலிருந்து காப்பாற்றவும், ஜெர்மனி நிபந்தனையற்று சரணடைய மறுத்ததும் அது அனுபவித்ததைப் போன்ற அபாயங்கள், அழிவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பை ஜப்பானிய மக்களுக்கு அளிக்கவும் வல்ல ஒரே வழி என்று சோவியத் அரசாங்கம் கருதுவதாக''* அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஜப்பானுக்கு எதிராக யுத்தத்தை அறிவிப்பது என்ற சோவியத் அரசாங்கத்தின் முடிவை சோவியத் மக்களும் எல்லா ஆசிய மக்களும் முழுவதுமாக ஆமோதித்தனர்.

ஆனல் எதிரியின் நாட்டில் இது குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆகஸ்டு 9ஆம் தேதி உயர்மட்ட இராணுவ கவுன்சில் கூட்டத்தில் ஜப்பானிய பிரதமர் சுட்ஸுகி பொது மனநிலையை வெளிப்படுத்தி பின்வருமாறு கூறினர்: ''இன்று காலை சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது... மேற்கொண்டு யுத்தத்தைத் தொடருவதை இயலாததாக்குகிறது''**.

போர் நடவடிக்கைகள் ஆரம்பமாகிய போது தொலைக் கிழக்கில் சோவியத் படைத் திரட்டில் 17 லட்சத்திற்கும் கூடுதலானேர் இருந்தனர், 29,835 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 5,250 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 5,171 போர் விமானங்களும் இருந்தன.

ஜப்பானியர்களின் குவாண்டுங் இராணுவத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இருந்தனர், 6,640 சாதாரண மற்றும் மார்டர்

---

* மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை, தொகுதி 3, மாஸ்கோ, 1947, பக்கங்கள் 362—363.

** நவீன ஜப்பானிய வரலாறு, மாஸ்கோ, 1955, பக்கம் 264 (ருஷ்ய மொழியில்).

பீரங்கிகளும் 1,215 டாங்கிகளும் 1,907 விமானங்களும் இருந்தன. சோவியத் யூனியனுடனுன எல்லையில் ஜப்பானியர்கள் மொத்தம் 1,000 கி. மீ. நீளமுள்ள 17 பலப்படுத்தப்பட்ட வட்டங்களை ஏற்படுத்தியிருந்தனர். இவற்றில் சுமார் 8,000 நீண்ட கால பீரங்கி அமைப்புகள் இருந்தன.

செயல்முறை ஆழத்தில் ஜப்பானியர்கள் இரண்டு தற்காப்பு எல்லைகளை (கிழக்கு நோக்கி மூதன்த்ஸியான்-யான்ட்ஸூ கோட்டில் ஒன்று, கிரின்-சான்சூன்-முக்டன் கோட்டில் மற்றது) ஏற்படுத்தினர்.

குவாண்டுங் இராணுவத்தில் 3 சேனைகள் (1வது, 3வது, 17வது சேனைகள்), ஒரு தனி போர்க்களப் படை (14வது), இரண்டு வான் படைகள் (2வது, 5வது), சுன்காரி ஆற்று இராணுவ பளீட் (25 டர்பேடோ, ரோந்து படகுகள் மற்றும் பீரங்கிப் படகுகள்) ஆகியன அடங்கியிருந்தன.

ஸ்தல பொம்மை துருப்புகளும்—மஞ்ஜோவு-கோ இராணுவம் (கா. டி.—2, கா. பி—12, கு. டி.—2, கு. ரெ—4)—சிற்றரசன் தே வான் தலைமையிலான உள் மங்கோலிய இராணுவமும் (கு. டி.—5, கு. பி.—2) குவாண்டுங் இராணுவத்திற்குக் கட்டுப்பட்டிருந்தன. தெற்கு ஸகாலீனிலும் குரீல் தீவுகளிலும் 4 காலாட்படை டிவிஷன் களையும் ஒரு டாங்கி ரெஜிமென்டையும் உள்ளடக்கிய 5வது சேனை யின் துருப்புகள் நின்றன.

1945ஆம் ஆண்டு வசந்தத்தில் ஜப்பானிய படைத் தலைமை பின்வருமாறு திட்டம் தீட்டியது: தற்காப்பு நடவடிக்கையின் முதல் கட்டத்தில் சோவியத் துருப்புகளின் முன்னேற்றத்தை எல்லைப் புற மண்டலத்தில் தடுத்து நிறுத்துவது. இரண்டாம் கட்டத்தில் பலப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் பிளக்கப்பட்டால் மத்திய மஞ்சூரி யாவில் குவிக்கப்பட்டுள்ள பிரதான சக்திகளைக் கொண்டு பலத்த பதிலடி தந்து சோவியத் துருப்புகளை ஆரம்ப நிலைக்குப் பின்தள்ளு வது. சோவியத் துருப்புகள் பெரும் வெற்றியடைந்தால் மட்டுமே குவாண்டுங் இராணுவத்தின் பிரதான சக்திகளுக்குக் கொரியா வுடனுன எல்லையில் உள்ள மலைப் பிரதேசத்திற்குப் பின்வாங்க அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

சோவியத் துருப்புகள் ஆள் பலத்தில் கிட்டத்தட்ட 2 மடங்கும் பீரங்கி பலத்தில் 4 மடங்கும் டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 4.6 மடங்கும் விமானங்களில் 2 மடங்கிற் கும் மேலாகவும் ஜப்பானிய குவாண்டுங் இராணுவத்தை விஞ்சி நின்றன.

டிரான்ஸ் பைகால், 1வது மற்றும் 2வது தொலைக் கிழக்கு சேனைகளைக் கொண்டு பசிபிக் சமுத்திர கடற்படை, அமூர் இராணுவ ப்ளீட் ஆகியவற்றின் உதவியால் குவாண்டுங் இராணுவத்தைச்

சுற்றி வளைத்து அதே நேரத்தில் இதைப் பிளந்து ஒவ்வொரு பகுதியாகத் தனித்தனியே ஒழித்துக் கட்டுவதென உயர்மட்ட பிரதானப் படைத்தலைமையகம் திட்டமிட்டது.

மங்கோலிய மக்கள் குடியரசின் பரப்பிலிருந்து இயங்கிய டிரான்ஸ் பைகால் சேனை (தளபதி மார்ஷல் மலிநோவ்ஸ்கிய்) மூன்று காலாட் படை (17, 39, 53வது) மற்றும் 6வது கார்டு டாங்கிப் படைகளைக் கொண்டு சான்சூன் திசையில் பிரதான தாக்குதலைத் தொடுத்தது. இது தவிர இச்சேனை, குதிரைப்படை-இயந்திரப்படைப் பிரிவின் சக்திகளைக் கொண்டு (இதில் மங்கோலியத் துருப்புகளும் இடம் பெற்றன) தோலோநோர், கால்கான் திசையில் ஒன்றும், 36வது படையைக் கொண்டு ஹாய்லார், ஜாலான்தூன் திசையில் இன்னொன்றுமாக இரண்டு துணைத் தாக்குதல்களைத் தொடுத்தது.

1வது தொலைக் கிழக்கு சேனை (தளபதி மார்ஷல் மெரெட்ஸ்கோவ்) பிரிமோரியாவிலிருந்து முன்னேறி 1வது செம்பதாகை மற்றும் 5வது படைகளைக் கொண்டு மூதன்த்ஸியான் திசையில் பிரதான தாக்குதலையும் 35வது படையைக் கொண்டு பொலீ திசையிலும் 25வது படையைக் கொண்டு வான்ட்ஸுன் திசையிலும் துணைத் தாக்குதல்களையும் தொடுத்தது.

2வது தொலைக் கிழக்கு சேனை (தளபதி ஜெனரல் புர்காயெவ்) அமூர் பகுதியிலிருந்து இயங்கி ஹார்பீன், த்ஸித்ஸிக்கார் மீது தாக்குதல் தொடுத்தது.

பசிபிக் சமுத்திரக் கடற்படை (தளபதி அட்மிரல் யுமாஷெவ்) தனது துறைமுகங்கள், கடல் போக்குவரத்து மார்க்கங்களை மூடி பாதுகாத்து தரைப்படைத் துருப்புகள் வட கொரியா, ஸகாலீன், குரீல் தீவுகள் ஆகிய இடங்களில் உள்ள எதிரி துறைமுகங்கள், கடற்படைத் தளங்களைக் கைப்பற்ற துணை புரிந்தது.

இவ்வாறாக உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தின் திட்டத்தில் செயல்முனைப்பும் உறுதியும் இருந்தன. இது ஏகாதிபத்திய ஜப்பானின் பிரதானத் தாக்குதல் சக்தியாகிய குவாண்டுங் இராணுவத்தை முறியடித்து, அதை சரணடையுமாறு நிர்ப்பந்தித்து இதன் மூலம் ஆசியாவில் இரண்டாவது உலக யுத்தத்தின் தோற்றுவாயை அழிக்கும் கடமையைத் துருப்புகளின் முன் வைத்தது. எதிரியின் பக்கவாட்டு படைத் திரட்டுகளை முறியடிப்பதன் மீது தான் பிரதான முயற்சிகள் ஒருமுனைப்படுத்தப்பட்டன. இத்தகைய ஒரு முறை எதிரியின் நடவடிக்கைகளைக் கட்டிப் போட்டு எதிரியின் பிரதான சக்திகள் சுற்றி வளைக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது.

முக்கியப் பங்கு டிரான்ஸ் பைகால் மற்றும் 1வது தொலைக் கிழக்கு சேனைகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இவை ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல்களைத் தொடுத்தன. 2வது தொலைக் கிழக்கு

சேனைக்கு குவாண்டுங் இராணுவத்தைப் பிளந்து, ஒழித்து கட்ட உதவுமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

மஞ்சூரிய நடவடிக்கையின் சிறப்பு அம்சம் திடீரென தாக்குதல் தொடுக்கப்பட்டதாகும். தாக்குதலுக்கான தயாரிப்புகளை இரகசிய மாக வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்முறை உருமாற்றம் மற்றும் சோவியத் துருப்புகளின் பிரதான தாக்குதல் திசைகள் சம்பந்தமாக எதிரியைக் குழப்பியது ஆகியவற்றின் மூலம் இது அடையப்பட்டது. ஆனால் இத்தகையதொரு கடமையை நிறைவேற்றுவது எளிதாயிருக்கவில்லை. ''சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் தவிர்க்க இயலாதது என்று ஜப்பானியர்கள் நீண்ட காலமாகவே உறுதியாக நம்பியதானது திடீர் நடவடிக்கையைச் சிக்கலாக்கியது. போர்த்தந்திர ரீதியாகத் திடீர் தாக்குதலைத் தொடுக்க முடியுமா என்று சந்தேகமாயிருந்தது. என்றாலும் இப்பிரச் சினையைப் பற்றிச் சிந்திக்கும் போது மாபெரும் தேசபக்த யுத்தத் தின் ஆரம்ப நாட்களை நாங்கள் பன்முறை எண்ணிப் பார்த்தோம். இதை நம் நாடு எதிர்பார்த்து, அதற்குத் தயாராகி வந்தாலும் ஜெர்மானியர்களின் தாக்குதல் திடீர் தாக்குதலாக அமைந்தது. எனவே இப்போதும் முன்கூட்டியே திடீர் தாக்குதலைக் கைவிட வேண்டியதில்லை''* என்று இராணுவ ஜெனரல் ஷ்திமேன்கோ எழுதினார்.

ஏகாதிபத்திய ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தைத் திடீரென துவக்குவது முதலாவதாக நடவடிக்கையின் திட்டத்தை இரகசிய மாக வைத்திருப்பதையும் தாக்குதலுக்கான சோவியத் துருப்பு களின் தயார் நிலையையும் பொறுத்தது.

உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையக ஆணையின்படி தளபதி, படைத் தலைமையகத் தலைவன், சேனைப் படைத் தலைமையகத்தின் செயல்முறை நிர்வாகத் தலைவன் ஆகியோர் மட்டுமே முழு அளவில் திட்டம் தீட்டும் நடவடிக்கையில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். படை வகைகள், உட்பிரிவுகளின் தலைவர்கள் திட்டத்தின் விசேஷ பிரிவுகளை உருவாக்குவதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், ஆனால் சேனையின் பொதுவான கடமைகள் இவர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை. ''சேனைத் தளபதி படைத் தளபதிகளுக்குத் தனிப்பட்ட முறையில் எழுத்து வடிவத்திலான ஆணைகள் எதுவுமின்றி வாய் மொழியாகக் கட்டளைகளைச் சொல்ல வேண்டும். படையின் திட்டத் தைத் தீட்டுவதையும் சேனையின் திட்டத்தைத் தீட்டிய முறை யிலேயே செய்ய வேண்டும். துருப்புகளின் நடவடிக்கைகள் சம்பந்த

* செ. ஷ்திமேன்கோ, **யுத்த ஆண்டுகளில் பிரதானப் படைத் தலைமையகம்,** மாஸ்கோ, 1968, பக்கம் 347 (ருஷ்ய மொழியில்).

மான எல்லா ஆவணங்களையும் சேனை மற்றும் படைத் தளபதி களின் தனிப்பட்ட காப்பகங்களில் வைக்க வேண்டும்''* என்று ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சோவியத் துருப்புகள் தாக்குதலுக்கு எந்த அளவு தயாராக உள்ளன என்ற விவரத்தை இரகசியமாக வைத்திருக்கும் பொருட்டு படைமாற்றத்திற்காக விசேஷ முறை மிகக் கண்டிப்பாகப் பின் பற்றப்பட்டது. இராணுவ நடவடிக்கைகள் எப்போது ஆரம்பமாகப் போகின்றன என்ற விவரம் யாருக்குமே அறிவிக்கப்படவில்லை. டிரான்ஸ் சைபீரிய இருப்புப் பாதையின் ஒப்பீட்டளவில் குறைவான போக்குவரத்து திறனையும் மஞ்சூரியாவில் ஆகஸ்டில் பெய்யும் பருவ மழைகளையும் கவனத்தில் கொண்டு ஜப்பானிய படைத் தலைமை, சோவியத் துருப்புகள் இலையுதிர் காலத்தில்தான் இராணுவ நடவடிக்கைகளைத் துவக்கத் தயாராக இருக்கும் என்று நினைக்கும் என பிரதான படைத் தலைமையகம் கணித்தது. சோவியத் பிர தானப் படைத் தலைமையகத்தின் இக்கணிப்பு சரியாக இருந்தது என்பது பின்னர் தெளிவாயிற்று. உண்மையிலேயே ஜப்பானிய படைத் தலைமை 1945 செப்டெம்பர் நடுவில்—அக்டோபர் ஆரம்பத் தில்தான் யுத்தத்தின் ஆரம்பத்தை எதிர்பார்த்தது. சிறைபிடிக்கப் பட்ட ஜப்பானிய ஜெனரல்களின் கூற்றுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. ''1945ஆம் ஆண்டு மார்ச் முதல் மஞ்சூரியாவுடனான எல்லையில் சோவியத் துருப்புகளின் எண்ணிக்கை இடையறாது அதிகரித்து வந்தது படைத் தலைமையகத்திற்குத் தெரிந்தது. ஆனால் சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கும் திட்டவட்டமான காலக் கெடுகள் தெரியவில்லை. சோவியத் யூனியன் ஆகஸ்டு 8ஆம் தேதி யுத்தத்தை அறிவித்தது குவாண்டுங் இராணுவத்தைப் பொறுத்த மட்டில் முற்றிலும் எதிர்பாராததாக இருந்தது''** என்று குவாண் டுங் இராணுவத்தின் படைத் தலைமையகத் துணைத் தலைவன் மேஜர் ஜெனரல் தமக்காட்சு கூறினார்.

துருப்புகளைக் குவிப்பதும் மாற்றியமைப்பதும் ஆரம்ப நிலையில் நிறுத்துவதும் பரிபூரண மறைவில் நடைபெற்றன.

வந்து சேர்ந்த படைப்பிரிவுகள், யூனிட்டுகள் குவிக்கப்படும் வட்டங்கள் பரவலான போர்முனையிலும் ஒன்றிலிருந்து ஒன்று தள்ளி இடைவெளி விட்டும் இருந்தன. இந்த இடைவெளி விரை வாகவும் ஒரே சமயத்திலும் ஆரம்ப வட்டங்களுக்கு வர போது மானதாயிருந்தது. துருப்புகளின் இடமாற்றங்கள் எல்லாம் பயிற்சி களோடு ஒன்று சேர்த்து நடத்தப்பட்டன. இது இரகசியமாக

---

* அதே நூல், பக்கங்கள் 354—355.

** அதே நூல், பக்கம் 372.

இதைச் செய்யவும் அதே நேரத்தில் படைப்பிரிவுகள் மற்றும் யூனிட்டுகளின் கட்டமைவை அதிகப்படுத்தவும் உதவியது.

எல்லைக்காவல் துருப்புகள் முன்போன்றே தம் இடங்களில் சேவை புரிந்தன. பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் விசேஷமாக ஒதுக்கப்பட்ட குழுக்கள் எதிரியின் கண்ணில் படும்படியாக அறு வடை வேலைகளில் ஈடுபட்டு சாதாரணமாக இக்காலத்தில் படை யிருப்பிடங்களின் வாழ்க்கை நடப்பதாகப் பாசாங்கு செய்தனர்.

போர்முனைக்கு அருகிலுள்ள இடங்களின் மக்கள் குடிபெயர்க்கப் படவில்லை, சாதாரண வாழ்க்கை எவ்விதத்திலும் குலைக்கப்பட வில்லை. படைமாற்றம், படைக்குவிப்பு மற்றும் படைநிறுத்தங் களின் போது துருப்புகளின் எல்லா இடமாற்றங்களும் இரவு நேரத் தில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. காடுகளிலும் மறைவிடங் களிலும்தான் துருப்புகள் ஓய்வெடுத்தன; அப்போது வாகனங்கள், சாதனங்கள் நன்கு மூடி மறைக்கப்பட்டிருந்தன. தவூரியா மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின் ஸ்டெப்பி பிரதேசங்களில் டாங்கி கள், பீரங்கிகள், வாகனங்கள் முதலியன விசேஷ மறைவிடங்களில் பதுக்கப்பட்டன. இவற்றின் மேலே திரைகளும் வலைகளும் போடப் பட்டு மூடப்பட்டன.

அரசு எல்லைக் கோட்டின் ஓரமாக ஆரம்ப நிலைக்கு துருப்புகள் நடவடிக்கை துவங்குவதற்கு 1—2 நாள் முன்னர்தான் கொண்டு வரப்பட்டன. ஆரம்ப வட்டங்களில் அங்குமிங்கும் செல்வதும் உணவு தயாரிப்பதும் காடுகளில் மரம் வெட்டுவதும் தடை செய்யப் பட்டன.

ஏற்கெனவே எல்லையில் இருந்த படைப்பிரிவுகளில் மட்டுமே வானொலிக் கருவிகள் ஒலிபரப்பில் ஈடுபட்டன, புதிதாக வந்த படைப்பிரிவுகளில் இவை செய்திகளை மட்டுமே பெற்றன.

எல்லா சேனைகளிலும் பொய்யான இருப்புப் பாதை மற்றும் வாகன சரக்கு போக்குவரத்துகள் நடத்தப்பட்டன, பொய்யான படைக் குவிப்பு வட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. எதிரியின் கண் பார்வையிலுள்ள சாலைகள் செங்குத்தான மறை வேலிகளாலும் மற்ற சாலை மறைப்பு திரைகளாலும் மறைக்கப்பட்டிருந்தன. 5வது படையின் மண்டலத்தில் மட்டும் பிரதான தாக்குதல் திசையில் 18 கி. மீ. செங்குத்தான மறை வேலிகளும் 1,515 சாலை மறைப்பு திரைகளும் போடப்பட்டன. வேவு பார்த்த நேரத்தில் இராணுவ அதிகாரிகள் போர்வீரர்களின் ஆடைகளில் இருந்தனர். பொய்யான விமானத் தளங்களை ஏற்படுத்துவது, விமானங்களை முற்றிலுமாக மூடி மறைப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம் விமானப்படைத் தளங்களின் செயல்முறை மூடு மறைவிற்கு வகை செய்யப்பட்டது.

ஜப்பானிய படைத் தலைமையைக் குழப்பத்தில் ஆழ்த்தி, பிர

தான தாக்குதல்களின் திசைகள் சம்பந்தமாக அதற்கு தவறான தகவல்களைக் கொடுப்பதற்காக ஆரம்ப வட்டங்கள் போர்முனை முழுவதும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பிரதான திசைகளில் பொறியியல் பணிகள் பெரும்பாலும் இரவு நேரத்தில் மேற்கொள்ளப் பட்டன.

சோவியத் யூனியனின் மார்ஷல்கள் வசிலேவ்ஸ்கிய், மலினேவ்ஸ்கிய், மெரெட்ஸ்கோவ் ஆகியோரும் இன்னும் சில ஜெனரல்களும் தொலைக் கிழக்கிற்கு வருவதை இரகசியமாக வைத்திருக்கும் பொருட்டு இவர்களின் பெயர்களையும் பதவி அடையாளச் சின்னங்களையும் தற்காலிகமாக மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது*.

புதிய துருப்புகள் தொலைக் கிழக்கிற்கு வருவதை இரகசியமாக வைத்திருப்பதன் மீது சோவியத் படைத் தலைமை குறிப்பான கவனம் செலுத்தியது. இக்கடமையை நிறைவேற்ற 1வது தொலைக் கிழக்கு சேனையின் 5வது படை மிகவும் கஷ்டப்பட்டது. ஏனெனில் ஹபாரவ்ஸ்க் முதல் விளாடிவஸ்தோக் வரை 400 கி. மீ.க்கும் அதிகமான தூரத்திற்கு இருப்புப் பாதை, அரசு எல்லைக்கு மிக அருகாக, தனிப்பட்ட சில இடங்களில் எதிரியின் கண் பார்வையில் படும்படியாகச் செல்கிறது. மேலும் 5வது படையானது அரசு எல்லைக்கு அருகே அளவில் மட்டான பிரதேசத்தில் இருக்க வேண்டி வந்தது. ஆரம்ப இடத்தில் இதை இரகசியமாக நிறுத்துவதற்காகப் புகைவண்டிகளிலிருந்து இது இறங்குவதும் எல்லையை நோக்கிச் செல்வதும் இரவு நேரங்களில் மட்டுமே ஸ்தல மக்களுடன் எவ்விதத் தொடர்புமின்றி அனுமதிக்கப்பட்டது. 1வது தொலைக் கிழக்கு சேனையின் துணைத் திசைகள் ஒன்றில் துருப்புகளைக் கொண்டு வந்து குவிப்பதைப் போன்ற பொய்யான வட்டம் தயார்படுத்தப்பட்டது.

சோவியத் துருப்புகளின் தாக்குதல் துவங்கும் நேரம் சம்பந்தமாக ஜப்பானிய படைத் தலைமையைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்காக எல்லையோரமாயுள்ள இடங்களில் தற்காப்பு வேலைகள் மும்முரமாக நடந்தன. இவ்வேலைகள் முன்னரும் அங்கே நடந்து கொண்டிருந்தன.

எல்லா சேனைகள், படைகளின் நடவடிக்கைகளும் திடீரென தாக்கி அதே சமயம் பெரும் சக்திகளை இயக்கத்தில் ஈடுபடுத்தும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

எல்லா சேனைகளிலும் மேற்கொள்ளப்பட்ட செயல்முறை உரு

---

* வசிலேவ்ஸ்கிய் — கர்னல் ஜெனரல் வசீலியெவ், மலினேவ்ஸ்கிய் — கர்னல் ஜெனரல் மரோஸவ், மெரெட்ஸ்கோவ் — கர்னல் ஜெனரல் மக்சீமவ் (முடிவு, மாஸ்கோ, 1969, பக்கம் 132).

மாற்றம் பெரும் பயனளித்தது என்று நடவடிக்கையின் போக்கு காட்டியது. சோவியத் துருப்புகளின் பிரதான தாக்குதல்களின் பலமும் திசையும் ஜப்பானிய படைத் தலைமைக்குப் பெரும்பாலும் எதிர்பாரததாக இருந்தன. ''ருஷ்ய இராணுவம் தைகா காட்டின் ஊடாகச் செல்லும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை, செல்வதற்குக் கடினமான பிரதேசங்களிலிருந்து ருஷ்யர்களுடைய பெரும் சக்திகளின் தாக்குதல் எங்களுக்கு முற்றிலும் எதிர்பாராததாக இருந்தது''[*] என்று 5வது ஜப்பானிய படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் செமிட்ஸு கூறினன்.

சோவியத்-ஜப்பானிய யுத்தம்தான் பாலைநில-ஸ்டெப்பி மற்றும் மலைப்பாங்கான தைகா காட்டுப் பிரதேசங்களில் மூன்று சேனைகள், விமானப்படை, கடற்படை, ப்ளீட் மற்றும் நாட்டின் வான் எதிர்ப்பு பாதுகாப்பு ஆகியவற்றின் ஒத்திசைவான போர் நடவடிக்கைகளின் முதல் அறிவூட்டும் அனுபவமாகும். டிரான்ஸ் பைகால் சேனையின் பிரதேசம் பாலைநில-ஸ்டெப்பி தன்மையைக் கொண்டிருந்ததால் இது அதன் துருப்புகள் அந்தந்த திசைகளில் பலப்படுத்தப்பட்ட வட்டங்களை ஆழமாகச் சுற்றி வளைத்து சென்று தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யும் வாய்ப்பை அளித்தது. மாறுக 1வது தொலைக் கிழக்கு சேனை பிரதேசத்தின் மலைப்பாங்கான தைகா காட்டுப் பிரதேசத் தன்மை பலப்படுத்தப்பட்ட வட்டங்களைச் சுற்றி வளைத்து செல்வதை இயலாததாக்கி, பலப்படுத்தப்பட்ட வட்டங்களைப் பிளந்து கொண்டு முன்னேறும் தாக்குதலுக்கு வகை செய்தது.

மஞ்சூரியாவில் இராணுவ நடவடிக்கைகள், டிரான்ஸ் பைகால்-மஞ்சூரிய திசை, அமூர்பகுதி-மஞ்சூரிய திசை, பிரிமோர்-மஞ்சூரிய திசை ஆகிய 3 போர்த்தந்திர திசைகளில் ஏற்பாடு செய்யப்பட்டன.

நடவடிக்கைக்கான தயாரிப்பின் போது துருப்புகளின் தலைமையும் நிர்வகிப்பும் திட்டவட்டமாக ஒழுங்கமைக்கப்பட்டன. தொலைக் கிழக்கு போர்முனை நீண்ட தூரம் தள்ளியிருந்தது, அதன் பெரும் பரப்பளவு, சிக்கலான இயற்கைச் சூழ்நிலைகள் மற்றும் மூன்று சேனைகளின் நலன்களுக்காகவும் மிக விவேகமாயும் உரிய நேரத்திலும் பசிபிக் சமுத்திர கடற்படையைப் பயன்படுத்தும் அவசியம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்ட அரசுத் தற்காப்பு கமிட்டி இராணுவ நடவடிக்கைகளுக்கான போர்த்தந்திர தலைமைக்காக மார்ஷல் வசிலேவ்ஸ்கியின் தலைமையில் தொலைக் கிழக்கில் சோவியத் துருப்புகளின் பிரதான படைத் தலைமையை தோற்றுவித்தது. இவரோடு கூட சோவியத் விமானப்படையின் தளபதி பிரதான

---

[*] பாதுகாப்பு அமைச்சகத்தின் மத்திய ஆவணக் காப்பகம், தொகுப்பு 294, பட்டியல் 36402, பத்திரம் 3, தாள் 87.

விமானப்படை மார்ஷல் நோவிக்கவ், சோவியத் கடற்படையின் பிரதான தளபதி அட்மிரல் குஸ்னெத்ஸோவ், தகவல் தொடர்பு துருப்புகளின் துணைத் தலைவர் தகவல் தொடர்பு துருப்புகளின் கர்னல் ஜெனரல் பிசூர்ட்ஸவ், பீரங்கிப்படையின் துணைத் தளபதி பீரங்கிப்படை மார்ஷல் சிஸ்த்யாக்கோவ், பின்னணிப் படையின் துணைத் தலைவன் கர்னல் ஜெனரல் வினகிராதவ் மற்றும் பாதுகாப்பு மக்கள் கமிசாரகத்தின் பல பெரிய பணியாளர்கள் ஆகியோரை உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் தொலைக் கிழக்கிற்கு அனுப்பியது. படைத் தலைமையகத் தலைவராகக் கர்னல் ஜெனரல் இவனோவ் நியமிக்கப்பட்டார்*.

தொலைக் கிழக்கில் பிரதான படைத் தலைமை போர்த்தந்திர தலைமை உறுப்பாகத் தோற்றுவிக்கப்பட்டதானது முற்றிலுமாகச் சரியென நிருபணமாகியது. இது உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையின் கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்றவும், செயல் முறை-போர்த்தந்திர மற்றும் இராணுவ-அரசியல் சூழ்நிலையில் எல்லா மாற்றங்களையும் கவனத்தில் கொள்ளவும், இவற்றிற்கு உரிய நேரத்தில் பதில் நடவடிக்கை எடுக்கவும் மற்றும் அந்தந்த இடங்களில் சேனைகளுக்குத் தேவையான உதவியளிக்கவும் வாய்ப்பளித்தது.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் அதன் விரைவான தன்மையாகும். போர்த்தந்திர கடமைகளை மிகக் குறுகிய காலகட்டத்தில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. யுத்தத்தின் ஆரம்பத்திற்கே உரித்தான அம்சங்களுடன் (துருப்புகளை இரகசியமாக கொண்டு வந்து நிறுத்துவது, திடீர் நடவடிக்கை, முதல் படை வரிசையில் அதிகபட்ச சக்திகளோடு தாக்குதல் தொடுப்பது) தாக்குதல் நடவடிக்கைக்கான தயாரிப்புகள் நடந்தன. சோவியத் அரசு மற்றும் இதன் இராணுவத்தின் பலம், நாட்டின் உயர்மட்ட இராணுவ-அரசியல் தலைமையின் ஸ்தாபன அமைப்பு பணி மற்றும் பாசிச ஜெர்மனிக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் பெற்ற அனுபவம் ஆகியவைதான் இந்நடவடிக்கையின் வெற்றிக்கு வகை செய்த தீர்மானகரமான காரணிகளாக அமைந்தன. மேற்கில் செஞ்சேனை மேற்கொண்ட போர்த்தந்திர நடவடிக்கைகளுக்கு மாறாக மஞ்சூரிய நடவடிக்கை யுத்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே தயார்படுத்தப்பட்டது.

நடவடிக்கைக்கான தயாரிப்பு காலகட்டத்தின் போது போர் நடவடிக்கைகளுக்கு இரகசிய நடவடிக்கைகளுக்குப் போர்வீரர்களைத்

---

* அ. வசிலேவ்ஸ்கிய், **வாழ்க்கை லட்சியம்**, மாஸ்கோ, 1973, பக்கம் 509 (ருஷ்ய மொழியில்).

தயார்படுத்தவும் (ஏனெனில் யுத்தம் இன்னமும் பிரகடனப்படுத்தப் படவில்லை) மலைப்பாங்கான தைகா காட்டு, பாலைவன தன்மை யுடைய சிக்கலான சூழ்நிலைகளில் துருப்புகள் தாக்குதல் முறைகளை கற்றுக் கொள்ளுமாறு செய்வதையும் நோக்கமாகக் கொண்ட அரசியல்-வளர்ப்பு பணி துருப்புகளிடையே நடத்தப்பட்டது. சோவியத் நாட்டின் மீது ஜப்பான் அடிக்கடி நடத்திய கயமைத் தனமான தாக்குதல்கள், 1918—1922ஆம் ஆண்டுகளில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் கொள்ளை நடவடிக்கைகள், 1938ஆம் ஆண்டு ஹசன் ஏரிப் பகுதியில் தொலைக் கிழக்கிலும் 1939ஆம் ஆண்டு ஹால்கின்-கோல் ஆற்றுப் பகுதியில் மங்கோலிய மக்கள் குடியரசிலும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் ஆக்கிரமிப்பு ஆகியவற்றைப் பற்றி படைவீரர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. போரில் இறங்கும் கட்டளை கிடைத்ததும் ஆகஸ்டு 8ஆம் தேதி நடந்த கூட்டங்களில் போர்வீரர்கள் தம் முன் உள்ள கடமைகளைக் கௌரவமாக நிறைவேற்றுவதாக உறுதிமொழியளித்தனர்.

தொலைக் கிழக்கிலிருந்த சோவியத் துருப்புகளின் பிரதான தளபதி சீன மக்களுக்கு நடவடிக்கை துவங்கும் முன் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது: ''மாபெரும் சோவியத் மக்களின் இராணுவமாகிய செஞ்சேனை நேச நாட்டு சீனாவிற்கும் நண்பர்களாகிய சீன மக்களுக்கும் உதவி புரிய வரு கிறது. இங்கே, கிழக்கிலும் இது சீனா, மஞ்சூரியா, கொரியா நாட்டு மக்களை ஜப்பானிய ஒடுக்குமுறை, அடிமைத்தனத்திலிருந்து விடு விக்கும் விடுதலை வீரனுகைத் தன் போர்ப்பதாகையை உயரே தூக்கி வருகிறது''.

ஆகஸ்டு 9ஆம் தேதி இரவு சோவியத் துருப்புகள் கிட்டத்தட்ட பீரங்கிப்படை, விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலின்றியே தாக்குதலில் இறங்கின. மங்கோலிய மக்கள் குடியரசின் துருப்புகள் அடுத்த நாளன்று போர் நடவடிக்கைகளில் இறங்கின.

டிரான்ஸ் பைகால் சேனையின் முன்னணிப் படைப்பிரிவுகள் எதிரியின் எல்லைக் காவலையும் மூடி பாதுகாக்கும் அணிகளையும் ஒழித்து கட்டின. இவற்றின் பின் பிரதான சக்திகள் முன்னேறத் துவங்கின. குறிப்பாக 6வது கார்டு டாங்கிப் படை பெரும் வெற்றி களை அடைந்தது. இரண்டே நாட்களில் இது 300 கி. மீ. நீளமுள்ள அரைப் பாலைவன பிரதேசத்தைக் கடந்து, மூன்றாவது நாளன்று பல்ஷோய் ஹின்கான் சிகரத்தைக் கடந்தது. ஆகஸ்டு 14ஆம் தேதி வாக்கில் சேனையின் துருப்புகள் வட கிழக்கு சீனாவின் மத்தியப் பகுதிகளை அடைந்தன.

1வது தொலைக் கிழக்கு சேனையின் மண்டலத்தில் சோவியத் துருப்புகள் பலப்படுத்தப்பட்ட வட்டங்களிலிருந்த பாதுகாப்புச்



பசிபிக் சமுத்திரம்
கனடா
12.5.43
அத்து தீவு
கிஸ்கா தீவு
16.8.43
அலெஷூத் தீவுகள்
பரமுஷீர்
குரில் தீவுகள்
சான்பிரான்சிஸ்கோ
மிட்வே தீவுக் கூட்டம்
ஹவாய்த் தீவுகள்
ஹொனலூலு
ஹவாய்த் தீவு
பசிபிக் சமுத்திர மத்தியப் பகுதி சக்திகளின் படைத் தலைமை
5 கப்பற்படை
ஜோன்ஸ்டன் தீவுக் கூட்டம் (அமெ.)
5 கப்பற்படை, 7 வா.ப.
எனிவேத்தக் தீவுக் கூட்டம் 19-23.2.44
குவாஜெலீன் தீவுக் கூட்டம் 1-8.2.44
மக்கின்-மெயாங் தீவு
தராவா தீவுக் கூட்டம் 19-23.11.43
பல்மீரா தீவு
நியூ அயர்லாந்து தீவுகள்
புகெய்ன்வில் 1.9.43
நியூ ஜார்ஜியா தீவுகள்
26.6.43
குவாதல்கனல் தீவு
7.8.42—9.2.43
எஸ்பிரிட்டு-சான்டோ
சமோவா தீவுகள்
பாகோ-பாகோ
பிஜித் தீவுகள்
7வது கப்பற்படை
பசிபிக் சமுத்திர தென் மேற்குப் பகுதி சக்திகளின் படைத் தலைமை



1943 – 1945இல் பசிபிக் சமுத்திரத்திலும் ஆசியாவிலும் இராணுவ நடவடிக்கைகள்

சக்திகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. தாக்குதல் தைகா காட்டினுள் சாலைகள் எதுவும் இல்லாத இடத்தில் நடத்தப் பட்டதால் சிக்கல் அதிகமானதாயிருந்தது. துருப்புகளுக்கு முன்ன தாகச் சென்ற டாங்கிகள் மரங்களை முறித்து செல்ல பின்னால் வந்த தானியங்கி துப்பாக்கி வீரர்களும் கன்னி வெடி அகற்றும் வீரர்களும் இவற்றை அப்புறப்படுத்தி 5 மீட்டர் வரை அகலமுள்ள பாதையை ஏற்படுத்தினர். இதன் வழியாக மற்றவர்கள் எல்லோரும் சென்றனர். நடவடிக்கையின் முதல் நாளன்று 2,322 ஜப்பானிய போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர், 35 நபர்கள் மட்டுமே சிறைபிடிக்கப்பட்டனர். எதிரியின் எதிர்ப்பு எவ்வளவு கடுமையானதாக இருந்தது என்பதற்கு இது சான்று பகர்கிறது. ஆறு நாள் சண்டைகளில் சேனையின் யூனிட்டுகள் ஜப்பா னியர்களின் பலப்படுத்தப்பட்ட வட்டங்களைப் பிளந்து கொண்டு 100 கி. மீ. தூரம் முன்னேறி எதிரியின் பலத்த எதிர்ப்பு மையமா கிய மூதன்த்ஸியான் நகருக்கான சண்டைகளில் இறங்கின.

அதே நாளன்று இரவில் 2வது தொலைக் கிழக்கு சேனையின் துருப்புகள் சுன்காரி, ஜாவோஹேய் திசைகளில் தாக்குதலைத் துவக் கின. செம்பதாகை விருது பெற்ற அமூர் ப்ளீட்டின் ஆதரவோடு இவை அமூர் ஆற்றைக் கடந்து எதிர்க்கரையிலிருந்த தாக்குமுனை களைக் கைப்பற்றி, இதன் பின் நாட்டின் உட்பகுதியை நோக்கி முன்னேற ஆரம்பித்தன. ஆகஸ்டு 14ஆம் தேதி வாக்கில் துருப்பு கள் எதிரிக்குப் பேரிழப்பை உண்டாக்கி, 50—200 கி. மீ. தூரம் முன்னேறின.

இவ்வாறாக தாக்குதலின் முதல் 6 நாட்களில் சோவியத் துருப்பு கள் பலப்படுத்தப்பட்ட வட்டங்களின் கோட்டை பிளந்து, எதிரித் துருப்புகளின் பிரதான சக்திகளை முறியடித்து ஜப்பானிய ஆக்கிர மிப்பாளர்களை பேரழிவின் முன் கொண்டு வந்து நிறுத்தின.

ஆகஸ்டு 14ஆம் தேதி ஜப்பானிய அரசாங்கம் சரணடைவதென முடிவு செய்தது. ஆனால் போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு இராணுவத்திற்குக் கட்டளையிடப்படவில்லை. குவாண்டுங் இராணு வம் தொடர்ந்து எதிர்ப்பு காட்டி வந்தது. எனவே சோவியத் துருப்புகளுக்குத் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடருமாறு கட்டளை யிடப்பட்டது.

ஆகஸ்டு 17ஆம் தேதி வாக்கில் மூன்று சேனைகளின் துருப்பு களும் வட கிழக்கு சீனாவின் மையப் பிரதேசங்களை அடைந்து வட கொரியத் துறைமுகங்களைக் கைப்பற்றி 8வது சீன மக்கள் விடுதலை இராணுவத்துடன் கால்கான் பிரதேசத்தில் இணைந்தன. இதன் விளைவாய் குவாண்டுங் இராணுவம் தலைநாட்டிலிருந்து துண்டிக்கப் பட்டது. மேலும் இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எல்லா

தற்காப்பு எல்லைகளையும் இழந்தது. எனவே இராணுவ நடவடிக் கைகளை நிறுத்துமாறு தொலைக் கிழக்கிலிருந்த சோவியத் படைத் தலைமைக்கு வேண்டுகோள் விடுக்குமாறு குவாண்டுங் இராணுவத் தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது. அதே நாளன்று ''போரிடும் குவாண் டுங் இராணுவத்தின் எல்லாப் படைப்பிரிவுகளும் உடனடியாகப் போர் நடவடிக்கைகளை நிறுத்தி ஆயுதங்களைக் கீழே போட வேண் டும்'' என்ற குவாண்டுங் இராணுவத் தளபதி யமாடாவின் கட்டளை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் கட்டளைக்குப் பின்னரும் ஜப்பானியத் துருப்புகளில் பெரும் பகுதி தொடர்ந்து எதிர்ப்பைக் காட்டியது. போர்முனையின் ஒரு சில இடங்களில் மட்டுமே எதிரி சரணடைய ஆரம்பித்தான்.

சரணடையும் ஜப்பானியத் துருப்புகளின் ஆயுதக் களைப்பையும் அவை கைப்பற்றிய பிரதேசங்களை விடுவிப்பதையும் துரிதப்படுத்தும் பொருட்டு சோவியத் யூனியனின் மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் மூன்று சேனைகளின் துருப்புகளுக்கும் பின்வருமாறு கட்டளை பிறப்பித்தார்: ''ஜப்பானியர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு விட்டதாலும், சாலைகள் மோசமாக உள்ளதானது தம் முன் உள்ள கடமைகளை நிறைவேற்றும் போது நமது துருப்புகளின் பிரதான சக்திகள் விரை வாக முன்னேற தடையாக இருந்ததாலும் சான்சூன், முக்டன், கிரின், ஹார்பீன் ஆகிய நகரங்களை உடனடியாகக் கைப்பற்ற விசேஷமாக உருவாக்கப்பட்ட, விரைவாக முன்னேறும், நன்கு சாதனப்படுத்தப்பட்ட அணிகளை நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும்''*. கவச டாங்கி படைப் பிரிவுகளும் யூனிட்டுகளும் இந்த அணிகளின் அடிப்படையாக விளங்கின. அதே நேரத்தில் முக்டன், ஹார்பீன், கிரின், சான்சூன், தால்னிய் துறைமுகம், பியென்யான், உட்பட வட கிழக்கு சீனாவின் மிகப் பெரும் நகரங் களில் ஆகஸ்டு 18 முதல் 22 வரை வான் இறக்குப்படைகள் இறக்கப் பட்டன. வான் இறக்குப்படைகளின் சுறுசுறுப்பான நடவடிக்கை களின் பயனாய் பல இராணுவ-பொருளாதார கட்டுமானங்களை அழிவிலிருந்து காப்பாற்றவும் ஜப்பானியத் துருப்புகளின் சரணாக தியை துரிதப்படுத்தவும் முடிந்தது. முக்டன் விமானத் தளத்தில் ஜப்பானிய விமானம் ஒன்று இறக்குப்படையினரால் கைப்பற்றப் பட்டது. ஜப்பானுக்குத் தப்பியோடத் தயாராயிருந்த மஞ்ஜோவு-கோ பொம்மை அரசின் பேரரசன் இதிலிருந்தான்.

ஆகஸ்டு 19ஆம் தேதி குவாண்டுங் இராணுவ படைத் தலைமை யகத் தலைவன் லெப்டினன்ட் ஜெனரல் ஹாட்டா 1வது தொலைக் கிழக்கு சேனையின் படைத் தலைமையகத்திற்குக் கொண்டு வரப்பட்

---

* அதே நூல், பக்கம் 523.

டான். இவன் மூலம் தொலைக் கிழக்கிலிருந்த சோவியத் துருப்பு களின் பிரதான தளபதி மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் குவாண்டுங் இராணுவத் தளபதி ஜெனரல் யமாடாவிற்கு பின்வருமாறு காலக் கெடுவை அனுப்பினர்: ''எல்லா இடங்களிலும் குவாண்டுங் இராணுவ படைப்பிரிவுகளின் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். எங்கே உடனடியாக போர் நடவடிக்கைகளை நிறுத்தும் கட்டளையைத் துருப்புகளுக்கு விரைவாகத் தெரிவிப்பது இயலா ததோ அங்கே 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் தேதி நடுப்பகல் 12 மணிக்கு முன்னர் போர் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்''. இதன் பின் போர்முனையின் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் ஜப்பானியத் துருப்புகள் ஆயுதங்களை கீழே போட ஆரம்பித்தன. தனிப்பட்ட சில குழுக்கள் மட்டுமே தொடர்ந்து எதிர்ப்பு காட்டின. இவற்றை சோவியத் படைப்பிரிவுகள் விரைவிலேயே ஒழித்து கட்டின.

மஞ்சூரியாவில் நடைபெற்ற போர் நடவடிக்கைகளோடு கூட ஒரே நேரத்தில் 2வது தொலைக் கிழக்கு சேனையின் துருப்புகள் பசிபிக் கடற்படையுடன் சேர்ந்து ஆகஸ்டு 11 முதல் 25 வரை தென் ஸகாலீன் தாக்குதல் நடவடிக்கையையும் ஆகஸ்டு 18 முதல் செப்டெம்பர் 1 வரை குரீல் படையிறக்க நடவடிக்கையையும் மேற்கொண்டு தென் ஸகாலீன் மற்றும் குரீல் தீவுகளை ஜப்பானியத் துருப்புகளிடமிருந்து முழுமையாக விடுவித்தன. தென் ஸகாலீனில் 18,000 ஜப்பானிய போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளும் குரீல் தீவுகளில் 54,442 நபர்களும் சரணடைந்தனர்.

சோவியத் பசிபிக் சமுத்திரக் கடற்படையின் தீவிர நடவடிக் கைகளின் போது அமெரிக்க-பிரிட்டிஷ் கடற்படை ஜப்பானியக் கடற்படைச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தைக் கிட்டத்தட்ட கைவிட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது போதா தென்று வட கொரியாவின் துறை முகங்களும் கடற்படைத் தளங் களும் இருந்த பிரதேசத்தில் அமெரிக்கர்கள் ஏராளமான கண்ணி வெடிகளை வைத்தனர். ''நகின்'', ''தால்ஸ்த்ரோய்'' போன்ற பெரிய போக்குவரத்து கப்பல்கள் உட்பட ஒரு சில சோவியுத் கப்பல்கள் இதில் சிக்குண்டு பாதிக்கப்பட்டன.

குவாண்டுங் இராணுவத்தை முறியடிக்கும் நடவடிக்கையில் மங்கோலிய மக்கள் குடியரசின் துருப்புகள் சோவியத் இராணு வத்தோடு தோளோடு தோள் நின்று போரிட்டன. சோவியத் யூனியன், மங்கோலிய மக்கள் குடியரசின் மீது பன்முறை படை யெடுத்த பொது எதிரியாகிய இராணுவ வெறி கொண்ட ஜப்பா னுக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் யூனியனுக்கும் மங் கோலியாவிற்கும் இடையிலான வீர ஒத்துழைப்பு மேலும் வலு வடைந்ததற்கான தெட்டத் தெளிவான சான்றாக இது விளங்கியது.

மங்கோலிய மக்கள் புரட்சிக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகிய த்ஸெதென்பால் (இவர்தான் மங்கோலிய மக்கள் புரட்சி இராணுவத்தின் அரசியல் நிர்வாக அமைப்பின் தலைவராக வும் இருந்தார்) இரு சோதர இராணுவங்களின் போர்வீரர் களுக்கும் இடையிலான வீர ஒத்துழைப்பைப் பலப்படுத்த பெரிதும் பாடுபட்டார்.

சோவியத் துருப்புகள் குவாண்டுங் இராணுவத்தை முறியடித்த தன் பயனும் ஏகாதிபத்திய ஜப்பான் நிபந்தனையின்றி சரணடையும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. குவாண்டுங் இராணுவத்தை சோவி யத் துருப்புகள் முறியடித்ததானது இராணுவ வெறி கொண்ட ஜப்பான் முழு இராணுவ தோல்வி அடைவதில் தீர்மானகரமான பங்காற்றியது. இராணுவ வெறி கொண்ட ஜப்பான் சரணடைந்த தையடுத்து இரண்டாவது உலக யுத்தத்தின் கடைசி பிறப்பிடம் ஒழித்துக் கட்டப்பட்டது. நீண்டகாலமாக உலகம் முழுவதும் எதிர்பார்த்த சமாதானம் வந்தது. **1955**ஆம் ஆண்டு செப்டெம்பர் **30**ஆம் தேதி சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் ஆணையின் படி ''ஜப்பானின் மீதான வெற்றிக்கான'' விருது ஏற்படுத்தப்பட்டது.

1945ஆம் ஆண்டு தொலைக் கிழக்கில் சோவியத் இராணுவம் அடைந்த வெற்றியானது அனைத்துலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப் பட்டதானது ஜப்பானை சரணடையுமாறு நிர்ப்பந்தித்தது. எந்தத் தாக்குமுனைகள், இராணுவத் தளங்களிலிருந்து சோவியத் யூனி யனுக்கு எதிரான ஆக்கிரமிப்பிற்குப் பல ஆண்டுகளாக ஜப்பான் தயாராகி வந்ததோ அவையனைத்தையும் அது இழந்தது. ஆண் டாண்டு காலமாக ருஷ்யர்களின் பூமியாக இருந்த தென் ஸகாலீனை யும் குரீல் தீவுகளையும் சோவியத் இராணுவம் தாய்நாட்டிற்கு மீட்டுத் தந்தது.

எதிரிக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. சுமார் **84,000** போர்வீரர் களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர், **5,93,000**க்கும் அதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டனர். ஏராளமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

தொலைக் கிழக்கில் ஜப்பானியச் சக்திகள் விரைவாக முறியடிக் கப்பட்டதானது நூறாயிரக்கணக்கான அமெரிக்க, பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, இந்திய, சீனப் போர்வீரர்களின் உயிர்களைக் காப் பாற்ற உதவியது. சோவியத் யூனியன் வட கிழக்கு சீனாவை விடு வித்ததன் மூலம் சீன மக்களை அடிமைப்படுத்த சர்வதேச ஏகாதி பத்தியமும் குவோமிந்தான்வாதிகளும் தீட்டிய திட்டங்களைக் குலைத்தது. நவீனக் காலனியாதிக்கம் மஞ்சூரியாவில் புகுவதற்கு

மிக வசதியான பாதைகளாகிய போர்ட் ஆர்தர் மற்றும் தால்னிய் துறைமுகம் சோவியத் இராணுவத்தால் உறுதியாக மூடப்பட்டன.

சோவியத் துருப்புகள் மங்கோலிய மக்கள் புரட்சி இராணுவத்துடன் சேர்ந்து, சீன மக்கள் விடுதலைச் சக்திகள், கொரிய கொரில்லாப் படைவீரர்கள் ஆகியோரின் பங்கேற்போடு விடுவித்த மஞ்சூரியா (இதுதான் பொருளாதார ரீதியாக சீனாவில் அதிக வளர்ச்சியடைந்த பிரதேசம்) நாட்டு புரட்சிகரச் சக்திகளின் நம்பகரமான இராணுவப்-போர்த்தந்திர தாக்குமுனையாக, சீனப் புரட்சியின் புதிய அரசியல் மையமாக மாறியது. மஞ்சூரியாவில் இருந்த புரட்சித் துருப்புகளிடம் சோவியத் யூனியன் வழங்கிய ஆயுதங்களும் ஆயுதத்தளவாடங்களும் போதுமான அளவில் இருந்தன. இரண்டு சோவியத் சேனைகளிடமும் 3,700க்கும் அதிகமான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 600 டாங்கிகள், 861 விமானங்கள், சுமார் 12,000 இயந்திரத் துப்பாக்கிகள், சுமார் 680 பல்வேறு விதக் கிடங்குகள் மற்றும் சுன்காரி இராணுவ ப்ளீட்டின் எல்லாக் கப்பல்கள் ஆகியவை இருந்தன. இவையனைத்தும் சீன மக்கள் விடுதலை இராணுவத்தை மறு ஆயுதந்தரிக்கும் வாய்ப்பையளித்தன. சோவியத் ஆயுதங்களில் ஒரு பகுதியும் அதற்களிக்கப் பட்டது.

இந்தத் திட்டவட்டமான உதவி எண்ணிக்கையிலும் தரத்திலும் வலுவடையவும் கொரில்லா முறையிலிருந்து நிரந்தர இராணுவத்தை ஏற்படுத்த மாறிச் செல்லவும் சீன மக்கள் விடுதலை இராணுவத்திற்கு உதவியது. 1945ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 5,22,000 போர்வீரர்கள், கமான்டர்களில் 3,97,000 நபர்கள் வட சீனாவில் இருந்தனர் என்று கூறுவதே போதுமானது. மஞ்சூரியாவிலிருந்துதான் இவர்கள் 1947—1949இல் குவோமிந்தான் துருப்புகளுக்கு முதல் கடும் தோல்விகளை ஏற்படுத்தின. அழுகிப் போன சியான்காய்ஷேக் ஆட்சியிடமிருந்து சீனா முழுவதையும் விடுவிக்க இவர்கள் வழிகோலினர். மா சே துங் அக்காலத்தில் பின்வருமாறு எழுதினார்: ''ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடிப்பதில் சீன மக்களுக்கு உதவுவதற்காக செஞ்சேனை வந்துள்ளது. சீன வரலாற்றில் இதைப் போன்றதொரு எடுத்துக்காட்டு இருந்ததில்லை. இச்சம்பவத்தின் செல்வாக்கு மதிப்பிடப்பட முடியாதது''*.

சோவியத் யூனியன் கொரிய மக்களுக்கும் ஜப்பானியக் கொடுமையிலிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தது. ''இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் யூனியனின் வெற்றியும் சோவியத்

* அ. வசிலேவ்ஸ்கிய், குறிப்பிடப்பட்ட நூல், பக்கம் 525.

இராணுவத்தால் ஏகாதிபத்திய ஜப்பான் முறியடிக்கப்பட்டதும் எங்கள் நாடு நீண்டகால காலனியாதிக்கக் கொடுமையிலிருந்து விடுதலை பெற வகை செய்து கொரிய மக்களின் முன் புதிய சுதந்திர வாழ்க்கைக்கான பாதையைத் திறந்து விட்டது''* என்று கிம் இர் சேன் கூறினார்.

கொரிய மக்களை ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் காலனி யாதிக்க கொடுமையிலிருந்து விடுவித்த சோவியத் இராணுவத்தைக் கௌரவிக்கும் முகமாக கொரிய மக்கள் ஜனநாயக குடியரசின் உயர்மட்ட மக்கள் சபையின் தலைமைக் குழு 1948ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி விடுத்த ஆணையின் படி ''கொரியாவை விடுவித்ததற்காக'' எனும் விருது ஏற்படுத்தப்பட்டது. கொரி யாவை விடுவிப்பதில் பங்கேற்ற சோவியத் இராணுவ, கடற்படை வீரர்கள் இவ்விருது அளித்து கௌரவிக்கப்பட்டனர்.

1948ஆம் ஆண்டு கொரிய மக்கள் ஜனநாயக குடியரசு தோற்று விக்கப்பட்டதானது நாட்டின் வரலாற்றில் பெரும் நிகழ்ச்சியாக அமைந்தது. சோவியத் யூனியன் முதலாவதாக இதை அங்கீகரித்து, இத்துடன் நட்பு உறவுகளை ஏற்படுத்தியது.

தொலைக் கிழக்கில் சோவியத் இராணுவத்தின் நடவடிக்கைகள் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட் டத்தில் வியட்நாமிய, இந்தோனீஷிய மக்களின் இறுதி வெற்றிக்கு உதவின. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் மீது சோவியத் இராணு வம் அடைந்த வரலாற்றுச் சிறப்புடைய வெற்றியுடன் எல்லாத் தென் கிழக்காசிய, பசிபிக் சமுத்திரப் பிரதேச நாடுகளின் எதிர் காலமும் ஓரளவிற்காவது தொடர்பு கொண்டிருந்தது என்று மிகைப் படுத்தலின்றி கூற முடியும். இந்த வெற்றிதான் கிழக்கில் ஏகாதி பத்தியத்தின் காலனியாதிக்க முறையின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

இவ்வெற்றியும் ஜெர்மானிய பாசிசத்தின் மீது அடையப்பட்ட வெற்றியும் லத்தீன் அமெரிக்கா, அராபிய கிழக்கு உட்பட உலகம் முழுவதும் தேசிய விடுதலை இயக்கத்தின் பேரெழுச்சிக்கு பெரிதும் உதவியது. இது வெட்கக் கேடான காலனியாதிக்க முறையின் முழு வீழ்ச்சியில் முடிந்தது.

ஜப்பானிய இராணுவ வெறி முறியடிக்கப்பட்டதானது ஜப்பா னிய மக்களுக்கே பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. இது லட்சோப லட்சம் ஜப்பானிய குடிமக்களைச் சோதனைகள், தவிப்புகளிலிருந்து காப்பாற்றியது, இராணுவ-பாசிச சர்வாதிகாரத் திலிருந்து மீட்பையளித்தது, ஜப்பானின் சமாதானமான, ஜனநாயக

---

* கிம் இர் சேன், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும், மாஸ்கோ, 1962, பக்கம் 129.

வளர்ச்சிக்காகப் போராட நாட்டின் ஜனநாயகச் சக்திகளுக்கு வாய்ப்பளித்தது. யுத்தத்திற்குப் பின் சோவியத் யூனியன் ஜப்பானுடன் நல்லண்டை உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடு, சோவியத்-ஜப்பானிய உறவுகளை சோவியத் நலன்களுக்கும் தொலைக் கிழக்கு நாடுகளின் ஒத்துழைப்பிற்கும் பாதகமாகப் பயன்படுத்த முயலுகிறது. சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் இது, சமாதானக் கொள்கையை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் பின்பற்றி பரஸ்பர அடிப்படையில் சோவியத்-ஜப்பானிய உறவுகளை மேற்கொண்டு வளர்க்கவும் சோவியத், ஜப்பானிய மக்களுக்கு இடையேயான நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தவும் பாடுபடுகிறது.

தொலைக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட போர்த்தந்திர நடவடிக்கையானது போர்க் கலையின் நோக்கிலிருந்து பார்க்கையிலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. கடந்த யுத்தத்தில் 20 நாட்கள் நடைபெற்ற போர் நடவடிக்கைகளில் அனேகமாக, ஆசியாவின் மிக வலிமையான ஏகாதிபத்திய அரசின் இராணுவம் முறியடிக்கப்பட்ட ஒரே நடவடிக்கையாக இது இருந்தது. அதிலும் இவ்வளவு வலிமையான எதிரியின் மீதான வெற்றி ஒப்பீட்டளவில் குறைவான சேதங்களுடன் அடையப்பட்டது. சோவியத் இராணுவத்தின் தரப்பில் மொத்தத்தில் சுமார் 32,000 நபர்கள் கொல்லப்பட்டனர். சோவியத் படைத் தலைமையின் உயர்வான நிர்வாகத் திறனுக்கும் சோவியத் துருப்புகளின் சிறப்பான போர்க் கலைக்கும் இது தெட்டத் தெளிவான எடுத்துக்காட்டாகும்.

சோவியத் வான் படைச் சக்திகள் குவாண்டுங் இராணுவத்தை முறியடிப்பதில் பெரும் பங்காற்றின. விமானப்படை மொத்தம் 22,000க்கும் கூடுதலான வான் பறத்தல்களை நடத்தி எதிரியின் மீது சுமார் 3,000 டன் குண்டுகளை வீசியது. விமானப்படை எதிரியின் தற்காப்பை பிளந்து செல்ல உதவியது, சேமப் படைகளை மாற்றியமைப்பதை முடமாக்கியது, வேவு பார்த்தல், படையிறக்கம் மற்றும் ஜப்பானியர்களின் பதிலடிகளை முறியடித்தல் போன்றவற்றில் பெரும் பங்காற்றியது.

நடவடிக்கையின் போது 16,500 போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் விமானங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர், 2,780 டன் எரிபொருள், 563 டன் ஆயுதத் தளவாடங்கள், 1,496 டன் பல்வேறு வித சரக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன.

ஏகாதிபத்திய ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தின் போது 3 சேனைகளும் பசிபிக் சமுத்திரக் கடற்படையுடனும் அமூர் இராணுவ ப்ளீட்டுடனும் சேர்ந்து இயங்கின. வட கொரியா, தென் ஸகாலீன் ஆகியவற்றின் துறைமுகங்களை விடுவிப்பதற்காக படையிறக்க



இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் குவாண்டுங் இராணுவத்தின் முறியடிப்பு (1945 ஆகஸ்டு 9 – செப்டெம்பர் 2)



கம்சாத்கா தீபகற்பம்
2வது தொலை கிழக்கு கப்பற்படை
கம்சாத்கப் பாதுகாப்புப் பிரதேசம்
நிக்கலாயெவ்ஸ்க்-நா-அமூரே
20.08
சுமுஸு தீவு
பரமுஷீர்
91கா.டி
ஒனெக்கதான்
சியாசிகோட்டான் தீவு
மட்ஸுவா தீவு
சமுஷீர் தீவு
உருப் தீவு
இதுரூப் தீவு
ஷிக்கோதான் தீவு
குனஷீர் தீவு
ஹொக்காய்தோ தீவு
ஸகாலீன் தீவு
16ப.
88 கா.டி.
தோரோ
சோவியத் ஹவான்
5வது சேனை
தோயோஹாரா
மவோக்கா
20.08
லபேருஸா ஜலசந்தி
கம்ஸமோல்ஸ்க் -நா-அமூரே
கிழக்குச் சேனை
ஹபாரவ்ஸ்க்
5 தனி து.கோ.
பிக்கின்
35ப.
1வது தொலைக் கிழக்குச் சேனை
9வா.ப.
டோக்கியோ
— ஆகஸ்டு 9இல் போர்முனை எல்லைக்கோடு
— எதிரியின் வலுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்
— எதிரியின் பாதுகாப்பு எல்லைப் பகுதிகள்
— சோவியத் துருப்புகளின் தாக்குதல் திசைகள்
— அமூர் ப்ளீட்டின் நடவடிக்கைகள்
— ஆகஸ்டு 14 முடிவில் சோவியத் துருப்புகளின் நிலவரம்
— எதிரியின் எதிர்த்தாக்குதல்கள்
22.08 — வான் மற்றும் கடல் இறக்குப் படைகள் இறங்கும் தேதிகள்
— சீன மக்கள் விடுதலை இராணுவப் பிரிவுகள் தொடுத்த தாக்குதல்களின் திசைகள்

நடவடிக்கைகளை மேற்கொண்டு கரையோரப் பக்கவாட்டுப் பகுதிக்கு வகை செய்வதிலும் கடற் கரையோர தற்காப்பிற்கு ஏற்பாடு செய்வதிலும் 1வது தொலைக் கிழக்கு சேனைக்கு கடற்படை கணிச மான உதவியளித்தது.

பசிபிக் சமுத்திரக் கடற்படை நடத்திய படையிறக்க நடவடிக் கைகளின் சிறப்பு அம்சம் அவற்றின் உயர்வான வேகமாகும். இறக்குப் படைகளைக் கொண்டு செல்லவும் இறக்கவும் விசேஷக் கப்பல்களையும் படகுகளையும் சோவியத் கடற்படை பயன்படுத்திய தானது இதற்குத் துணை புரிந்தது.

அமூர், உஸ்ஸூரி, சுன்காரி போன்ற பெரிய ஆறுகளைக் கடக்க வும் பலத்த தற்காப்பு எல்லைகளை உடைக்கவும் 2வது தொலைக் கிழக்கு சேனையின் துருப்புகளுக்குச் செம்பதாகை விருது பெற்ற அமூர் இராணுவ ப்ளீட்டின் கப்பல்கள் உதவின.

கடந்த யுத்தத்தில் இதுவரை காணப்படாத மிகப் பெரும் பரப்பில் யுத்த நடவடிக்கைகள் நடந்தது மஞ்சூரிய நடவடிக்கையின் சிறப்பு அம்சம் ஆகும். பொதுவாக 3 வாரங்களுக்கும் குறைவாகவே நீடித்த போர் நடவடிக்கைகள் 5,000 கி. மீ.க்கும் கூடுதலான நீளமுள்ள போர்முனையில் நடந்தன, துருப்புகள் 600—800 கி. மீ. ஆழம் வரை முன்னேறின. காலத்திலும் இட அளவிலும் மஞ்சூரிய நடவடிக்கையின் போர்த்தந்திர விளைவு மிகவும் குறிப்பிடத்தக்கது என்பது மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. மஞ்சூரிய நடவடிக்கை மிக அதிக பயன் குணகத்தோடு—இப்படிச் சொல்லலா மெனில்—நடத்தப்பட்டது எனலாம்.

4. ஜப்பான் நிபந்தனையற்ற சரணகதி உடன்பாட்டில் கையெழுத்திடுதல்

1945ஆம் ஆண்டு செப்டெம்பர் 2ஆம் தேதி டோக்கியோ குறுங் குடாவில் ''மிஸ்ஸூரி'' என்ற அமெரிக்க போர்க் கப்பலில் ஜப்பான் நிபந்தனையற்ற சரணகதி உடன்பாட்டில் கையெழுத்திடும் வைபவம் நடைபெற்றது. நேச நாட்டு உயர்மட்ட தளபதி என்ற வகையில் ஜெனரல் மாக்கார்துருக்கு சரணகதியை ஏற்கும் பொறுப்பு அளிக் கப்பட்டிருந்தது. இந்த வெற்றி பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு கிட்டத்தட்ட நூறாண்டுகளாகக் கடைபிடித்து வரும் கொள்கைக்குச் சிகரம் வைத்தாற்போல் விளங்குவதை வலியுறுத்தி காட்டுவதற்காக அமெரிக்கர்கள், எந்த கொடியோடு 1854இல் கமான்டர் பெர்ரி ஜப்பானை ''கண்டுபிடித்தாரோ'' அதாவது பீரங்கிகளின் உதவியால் சமமற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடு மாறு நிர்ப்பந்தித்தாரோ அக்கொடியை போர்க் கப்பலுக்கு கொண்டு

வந்து கண்பார்வையில் படும்படியான இடத்தில் வைத்தனர். ''மிஸ்ஸூரி'' கப்பலின் மேற்தளத்தில் போடப்பட்ட மேசையில் அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், சோவியத் யூனியன், பிரான்ஸ், சீனு, ஆஸ்திரேலியா, கானடா, ஹாலந்து, நியூ ஜீலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுக் குழுக்களின் பிரதிநிதிகள் அமர்ந்த னர். ஏராளமான பத்திரிகையாளர்களும் அங்கே குழுமியிருந்தனர். ஜப்பானியத் தூதுக் குழு 8 மணி 55 நிமிடத்திற்குப் போர்க் கப்பலுக்கு கொண்டு வரப்பட்டது. மேசைக்குச் சற்று முன் ஜப்பா னியத் தூதுக் குழுவினர் நின்றனர். ''வெட்கக் கேடான நிமிடங் கள்'' வந்தன. ஜெனரல் மாக்கார்தூரின் சுருக்கமான உரைக்குப் பின் 9 மணி 04 நிமிடத்திற்கு ஜப்பானிய வெளிவிவகாரத் துறை யமைச்சர் மமோரு சிகெமீட்சுவும் பிரதான படைத் தலைமையகத் தலைவன் யெசிட்ஸீரோ உமேட்ஸுவும் நிபந்தனையற்ற சரணுகதி உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். அதன் பின் நேச நாட்டு வல்லரசுகளின் பிரதிநிதிகள் இதில் கையொப்பமிட்டனர்: எல்லா நேச நாடுகளின் சார்பாக உயர்மட்ட தளபதி ஜெனரல் மாக்கார்தூர், அமெரிக்க ஐக்கிய நாட்டின் சார்பாக அட்மிரல் நிமிட்ஸ், சீனுவின் சார்பாக குவோமிந்தான் ஜெனரல் சு யூன்-சான், கிரேட் பிரிட் டன் சார்பாக அட்மிரல் ஃபிரேய்ஸர், சோவியத் யூனியனின் தரப்பில் ஜெனரல் தெரெவியான்கோ, ஆஸ்திரேலியாவின் தரப்பில் ஜெனரல் பிலேமி, பிரான்சின் சார்பில் ஜெனரல் லெக்லேர்க், ஹாலந்தின் சார்பாக லெப்டினன்ட் ஜெனரல் வான் ஓயன், நியூ ஜீலாந்து சார்பாக விமானப்படையின் வைஸ் மார்ஷல் இசிட், கானடாவின் சார்பில் கர்னல் மூர்-கோஸ்கிரேய்வ் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

சரணுகதி உடன்பாட்டின்படி ஜப்பான், 1945ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் தேதி பாட்ஸ்டாம் பிரகடனத்தின் நிபந்தனைகளை ஏற்று தனது இராணுவமும் தன் கண்காணிப்பின் கீழுள்ள இரா ணுவச் சக்திகளும் நிபந்தனையின்றி சரணடைவதாக அறிவித்தது. உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கப்பல் கள், விமானங்கள், இராணுவ மற்றும் சிவில் சொத்து ஆகிய வற்றைப் பாதுகாக்குமாறும் எல்லா ஜப்பானியத் துருப்புகளுக்கும் குடிமக்களுக்கும் கட்டளையிடப்பட்டது; சிவில், இராணுவ, கடற் படை அதிகாரிகள் நேச நாட்டு வல்லரசுகளின் உயர்மட்ட தளபதி யின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும்; எல்லா நேச நாட்டு போர்க் கைதிகளையும் பிடித்து வைக்கப்பட்டிருந்த பாமர மக்களையும் உடனடியாக விடுவிக்குமாறு ஜப்பானிய அரசாங்கத்திற்கும் பிரதான படைத் தலைமையகத்திற்கும் கட்டளையிடப்பட்டது; பேரரசரின் ஆட்சியும் அரசாங்கமும் நேச நாட்டு வல்லரசுகளின் உயர்மட்ட

தளபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன, அவர் சரணுகதி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்*.

சரணுகதி உடன்பாடு கையெழுத்தானதும் ஜப்பான் இறுதியாக எதிர்ப்பை நிறுத்தியது. பிரிட்டிஷ், ஆஸ்திரேலியத் துருப்புகளின் பங்கேற்போடு அமெரிக்க இராணுவம் தலைநாட்டை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது. அதே நேரத்தில் பசிபிக் சமுத்திரம், சீனு, தென் கிழக்கு ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் நேச நாட்டு படைத் தலைமையின் பிரதிநிதிகளிடம் ஜப்பானியத் துருப்புகள் சரணடைய ஆரம்பித்தன. இது ஒரு சில மாதங்கள் தொடர்ந்தது.

இராணுவ வெறி கொண்ட ஜப்பானை முறியடிப்பதில் அமெரிக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் பெரும் பங்காற்றின. ஆனுல் ஜப்பானின் பிரதான தரைப்படைச் சக்தியாகிய குவாண்டுங் இராணுவத்தைத் தோற்கடித்த சோவியத் துருப்புகள்தான் தீர்மானகரமான பங்காற்றின. அக்காலத்தில் மேலைய நாடுகளைச் சேர்ந்த பல அரசியல், இராணுவப் பிரமுகர்கள் இதை ஒப்புக் கொண்டனர். உதாரணமாக 1945ஆம் ஆண்டு சீனுவில் அமெரிக்க விமானப்படைச் சக்திகளுக்குத் தலைமை தாங்கிய அமெரிக்க ஜெனரல் சேனல்ட் **நியூ யார்க் டைம்ஸ்** பத்திரிகையின் நிருபருக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினுர்: ''ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் இறங்கியதானது பசிபிக் சமுத்திரத்தில் யுத்தம் முடிவதைத் துரிதப்படுத்திய தீர்மானகரமான காரணியாக அமைந்தது. அணு குண்டுகள் பயன்படுத்தப்படாமலிருந்தாலும் கூட யுத்தம் நிச்சயம் முடிந்திருக்கும். செஞ்சேனை ஜப்பானின் மீது தொடுத்த உறுதியான தாக்குதல் முற்றுகைக்கு முடிவு கட்டியது. இது ஜப்பானை மண்டியிடச் செய்தது''**.

ஹிரோஷிமா, நாகசாகி மீது அணு குண்டுகள் வீசப்பட்டது தான் ஜப்பான் சரணடைந்ததில் தீர்மானகரமான பங்காற்றியதாக ஒரு வாதம் இப்போது மேற்கே பரவியுள்ளது. ஆனுல் வரலாற்றின் உண்மைகளை மறுக்க முடியாது. அணு குண்டுகள் வீசப்பட்ட பின்னும் ஜப்பான் ஆயுதங்களைக் கீழே போடவில்லை. தலைநாட்டிலும் சீனுவிலும் மஞ்சூரியாவிலும் இதனிடம் பெரும் இராணுவம் இருந்தது. சோவியத் துருப்புகளால் அதன் முக்கியத் தாக்குதல் சக்தியாகிய குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதுதான்

---

* **மாபெரும் தேசபக்த யுத்தக் காலத்தில் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை,** தொகுதி 3, பக்கங்கள் 480—481.

** *The New York Times*, 15.8.1945.

நிபந்தனையின்றி சரணடையுமாறு ஜப்பானிய இராணுவ வெறியர்களை நிர்ப்பந்தித்தது.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் இறங்குவதற்கு ஏதோ அமெரிக்க ஐக்கிய நாடு பொதுவாகவே எதிராக இருந்ததாக ஒரு வாதமும் அமெரிக்காவில் கூறப்படுகிறது. ஆனால் சோவியத் யூனியன் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் இறங்க வேண்டும் என்று அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் உறுதியாகவும் முறையாகவும் போராடி வந்தன என்று உண்மைகள் கூறுகின்றன. 1943இல் நடைபெற்ற டெஹ்ரான் மகாநாட்டிலும் சர்ச்சிலும் ஈடானும் சோவியத் தலைவர்களுடன் 1944ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் 1945 பிப்ரவரியில் நடைபெற்ற கிரீமியா மகாநாட்டிலும் பாட்ஸ்டாம் மகாநாட்டிலும் இப்பிரச்சினை பிரிட்டனாலும் அமெரிக்காவாலும் எழுப்பப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் இத்தகைய உறுதி ''இதனுடைய இராணுவ ஆலோசகர்களின் ஒருமித்த கருத்தை'' ஆதாரமாகக் கொண்டிருந்தது என்று பிரிட்டிஷ் பூர்ஷ்வா வரலாற்றாசிரியர் டேய்லர் கோடிட்டுக் காட்டினார்.

எனவே ஜப்பானின் மீதான வெற்றி தனக்கு மட்டுமே ''முற்ற முழுக்கச்'' சொந்தமானது என்ற அமெரிக்க ஐக்கிய நாட்டின் கூற்றுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

5. டோக்கியோ சர்வதேச ட்ரிப்யூனல்

1946ஆம் ஆண்டு மே 3ஆம் தேதி பிரதான இராணுவ குற்றவாளிகளின் மீது டோக்கியோ சர்வதேச ட்ரிப்யூனலில் விசாரணை ஆரம்பமாகியது.

ஆக்கிரமிப்புக் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்திய 28 ஆட்கள் விசாரிக்கப்பட்டனர்: பல்வேறு வருடங்களில் ஜப்பானின் பிரதமர்களாக இருந்த கோய்சோ, தட்ஸூவா, ஹிரனூமா, ஹிரோட்டா, உதவிப் பிரதமர் ஹசீனோ, இராணுவ அமைச்சர்களாகிய அராகி, இடகாகி, மினாமி, ஹாட்டா, இராணுவத் துணை அமைச்சர் கிமூரா, கடற்றுறை அமைச்சர்களாகிய நகானோ, சிமாடா, கடற்றுறைத் துணை அமைச்சர் ஓகா, மத்திய சீனாவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளின் தளபதி மட்சுயி, இராணுவ அமைச்சக போர் விவகார காரியாலயத் தலைவர்களாகிய முட்டோ சாட்டோ, உயர் மட்ட இராணுவ கவுன்சில் உறுப்பினர் டயிஹாரா பிரதான படைத் தலைமையகத் தலைவன் உமேட்ஸு, அயல்விவகாரத் துறை அமைச்சர்களாகிய மட்சுவோகா, சிகெமீட்சு, தோகோ, இராஜதந்திரிகளாகிய ஓசிமா, சிரடோரி, நிதித் துறை அமைச்சர் காய்யா, பாசிச

இளைஞர் இயக்க அமைப்பாளன் ஹசிமோட்டோ, ஜப்பானிய பாசி சத்தின் சித்தாந்தவாதி ஒகாவா, சான்ஸலர் கிடோ, அமைச்சரவை திட்டக் கமிட்டி தலைவன் சுட்ஸூகி ஆகியோர் விசாரிக்கப் பட்டனர்.

''ஆக்கிரமிப்பு நாடுகள் உலகின் மீது ஆதிக்கத்தை ஏற் படுத்தி உலகை சுரண்டும்''* நோக்கத்தோடு ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் கூட்டு சேர்ந்து சதி செய்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

55 குற்றங்கள் சாட்டப்பட்டன. இவற்றை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1) ''உலகிற்கு எதிரான குற்றங்கள்'' — சர்வதேச உரிமைகளை மீறிய ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு தயார் செய்து அவற்றை நடத்தியது இதிலடங்கும்; 2) ''கொலைகள்''. — சட்ட விரோதமான இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்ட போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இராணுவத்தினரையும் சிவில் மக்களையும் கொன்று குவித்தனர். பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட சட்டங்கள், யுத்த வழக்கங்களை மீறி செய்யப்பட்ட மற்ற கொலைகளும் (போர்க் கைதிகளைச் சுட்டுக் கொன்றது, சிவில் மக்களை மிகப்பெருமளவில் கொன்றது) இவற்றிலடங்கும்; 3) ''போர்க் குற்றங்களும் மனிதாபிமானத்திற்கு விரோதமான குற்றங்களும்'' — போர்க் கைதிகள் மற்றும் பிடித்து வைக்கப்பட்ட சிவில் மக்களை மிருகத்தனமாக நடத்திய குற்றங்கள் இதிலடங்கும்.**

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் கிட்டத்தட்ட பாதிப்பேருக்கு மேலானவர்கள் மீது (டயிஹாரா, இடகாகி, கிமுரா, கோய்சோ, மட்சுயி, முட்டோ, சிகெமீட்சு, தட்ஸூவா, ஹாட்டா, ஹிரோட்டா ஆகியோர் மீது) போர்க் கைதிகள் மற்றும் பிடித்து வைத்திருந்த சிவில் மக்களை மிருகத்தனமாக நடத்தியதாக குற்றஞ் சாட்டப் பட்டது.

பரந்த அளவிலான கொலைகள், ''மரண பவனிகள்'' ஆகிய வற்றின் போது நோய்வாய்ப்பட்டவர்கள் உட்பட போர்க்கைதி களை, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட துருப்புகளால் கூட தாங்க முடி யாத சூழ்நிலைகளில் நீண்ட தூரங்களைக் கடக்கும்படி கட்டாயப் படுத்தினர்கள், சூரிய வெப்பத்திலிருந்து எவ்வித பாதுகாப்பை யும் அளிக்காமல் கொடும் சூரிய வெட்கையில் கட்டாய உழைப் பிற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், அவர்களுக்குத் தங்கு

---

* அக்டோபர் புரட்சியின் பெயர் தாங்கிய அரசு மத்திய ஆவணக் காப்பகம், தொகுப்பு 7867, பட்டியல் 1, பத்திரம் 9, தாள் 9.

** அக்டோபர் புரட்சியின் பெயர் தாங்கிய அரசு மத்திய ஆவணக் காப்பகம், தொகுப்பு 7867, பட்டியல் 1, பத்திரம் 9, தாள்கள் 81 — 82.

மிடங்களும் மருந்துகளும் அளிக்கப்படாததால் ஆயிரக்கணக்கானோர் நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு மாண்டனர், சாட்சியங் களுக்காக அல்லது ஒப்புதல் பெறுவதற்காக இவர்களுக்கு எதிராக சகலவித சித்திரவதை முறைகளும் கையாளப்பட்டன, மனிதர் களைக் கொன்று உண்ண கூடச் செய்தார்கள். விசாரணையின் போது நிரூபணங்கள் காட்டப்பட்ட மிருகத்தனமான கொடிய நடவடிக் கைகளில் மேலே கூறப்பட்டவை ஒரு சில மட்டுமே.

சோவியத் யூனியனுக்கு எதிரான ஜப்பானின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பற்றிய பிரச்சினை விரிவாக ஆராயப்பட்டது. ஹசன் ஏரியருகே சோவியத் யூனியனின் மீதும் ஹால்ஹின்-கோல் ஆறருகே மங்கோலிய மக்கள் குடியரசின் மீதும் படையெடுக்கப் பட்டது தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பாசிச ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கிய பின் ஜப்பான் கயமைத்தனமாக நடந்து கொண்டதையும் ட்ரிப்யூனல் சரிவர மதிப்பிட்டது.

தட்ஸூவா, ஹிரோட்டா (முன்னாள் பிரதம மந்திரிகள்), இட காகி (முன்னாள் இராணுவ அமைச்சர், 1944-45இல் கொரியாவில் ஜப்பானியத் துருப்புகளின் தளபதி), மட்சுயி, டயிஹாரா, கிமூரா, முட்டோ (உயர்மட்ட ஜெனரல்கள் அமைப்பின் பிரதிநிதிகள்) ஆகிய ஏழு பேர்களுக்கு தூக்கு தண்டனையையும்; 16 பேர்களுக்கு ஆயுள் தண்டனையையும்; ஒருவனுக்கு (முன்னாள் அமைச்சர் தோகோ) 20 ஆண்டு சிறைத் தண்டனையையும், இன்னொருவனுக்கு (முன்னாள் அயல் விவகாரத் துறை அமைச்சர் சிகெமீட்சு) 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் இராணுவ ட்ரிப்யூனல் விதித்தது. முன்னாள் அயல் விவகாரத் துறையமைச்சர் மட்சுவோக்காவும் அட்மிரல் நகானோவும் விசாரணையின் போது இறந்தனர். ஜப்பானிய இராணுவ வெறியின் சித்தாந்தவாதியாகிய ஒகாவா பைத்தியக்காரனாக ஒப்புக் கொள்ளப்பட்டு அவன் மீதான விசாரணை நிறுத்தி வைக்கப் பட்டது.

டோக்கியோ விசாரணையின் முடிவுகளைத் தொகுத்துரைக்கையில் **இஸ்வேஸ்தியா** பத்திரிகை 1948ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி பின்வருமாறு எழுதியது: ''பிரதான ஜப்பானிய குற்றவாளி களின் வக்கீல்கள், மற்ற பாதுகாவலர்களின் ஏராளமான முயற்சி கள், ஒரு சில ட்ரிப்யூனல் உறுப்பினர்களின் தந்திரங்கள் ஆகிய வற்றையெல்லாம் பொருட்படுத்தாது நியாயமான, கண்டிப்பான தீர்ப்பை அளித்ததில்தான் ட்ரிப்யூனலின் சிறப்பு அம்சம் அடங்கி யுள்ளது... விசாரணை நடந்த நேரம் முழுவதும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிரபல பதவிகளில் உள்ள பலர் பிரதான ஜப்பா னிய போர்க் குற்றவாளிகளுக்கு ஆதரவாக அவர்களைப் பாதுகாத்து நின்றனர். தண்டிக்கப்பட்டவர்களின் விதியை இலகுவாக்குவதற்

காக இப்பாதுகாவலர்கள் கடைசி முயற்சியை மேற்கொள்ளக் கூடும் என்பது சாத்தியமே''.

அப்படியேதான் நடக்கவும் செய்தது. ஜெனரல் மாக்கார்தூர் தீர்ப்பை ஆமோதித்தார், ஆனால் அதை நிறைவேற்றவில்லை. தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்த அவர் தண்டிக்கப்பட்ட ஹிரோட்டா, டயிஹாராவிடமிருந்து மனுக்களை வாங்கி அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டிற்கு அனுப்பினார், மற்ற தண்டனைகளைப் பெற்றவர் கள் விஷயத்தில் தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்தார். பின்னால் கிடோ, ஒகா, சாட்டோ, சிமாடா மற்றும் தோகோ ஆகியோரும் மனுக்களை அளித்தனர். அமெரிக்க சுப்ரீம் கோர்ட் இவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

தன் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்த மாக்கார்தூரின் நடத்தையும் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டின் சட்ட விரோதமான தலையீடும் முற்போக்கு மக்கள் அனைவர் மத்தியிலும் ஒரு நியாய மான எதிர்ப்பைத் தூண்டி விட்டது. இது பிரதான ஜப்பானிய போர்க்குற்றவாளிகளின் மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள் வதென்ற சுப்ரீம் கோர்ட்டின் முடிவை எதிர்க்கும் கட்டாயத்திற்கு அமெரிக்க அரசாங்கத்தை உள்ளாக்கியது.

1948ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதி இரவு தீர்ப்பு நிறை வேற்றப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரும் டோக்கியோ சுகாமோ சிறை முற்றத்தில் தூக்கிலடப்பட்டனர்.

நியூரென்பர்க் விசாரணையைப் போன்றே டோக்கியோ இராணுவ ட்ரிப்யூனலும் சர்வதேசக் கோட்பாடுகள், சட்ட வரையளவுகளை நிறைவேற்றுவதில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கி யது, ஜப்பானிய ஆக்கிரமிப்பை அதன் சகலவித வடிவங்களிலும் கண்டித்தது, சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ வெறி கொண்ட ஜப்பான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண் டதை ஒப்புக் கொண்டது.

டோக்கியோ விசாரணை பிரகடனப்படுத்தி, நடைமுறையில் பயன்படுத்திய சட்டக் கோட்பாடுகள் நவீன சர்வதேச சட்டத்தில் இடம் பெற்றுள்ளன, சர்வதேச குற்ற சட்டத்தின் அம்சங்களாக இவை பின்னால் ஐ. நா. சங்கத்தால் ஆமோதிக்கப்பட்டன. சமா தானத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்பை இவை முன்னனுமானிக்கின்றன.

அத்தியாயம் 8

யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

சர்வதேச ஏகாதிபத்தியத்தால் திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இரண்டாவது உலக யுத்தம் ஆக்கிரமிப்பாளர்களின் முழுத் தோல்வியில் முடிந்தது. இந்த யுத்தத்தில் வரலாற்றிலேயே இதுவரையில்லா அளவிற்கு இராணுவ நடவடிக்கைகள் நடந்தன, இராணுவ உற்பத்தி மிகப்பெரும் அளவை எட்டியது, ஏராளமான ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. மொத்தத்தில் இது 2,194 நாட்கள் (6 ஆண்டுகள்) நீடித்தது. 1.7 பில்லியன் மக்கட் தொகையை உடைய (இது உலக மக்கட்தொகையில் கிட்டத்தட்ட 80 சதவிகிதமாகும்) 61 அரசுகள் இந்த யுத்தத்தினுள் இழுக்கப் பட்டன. ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களில் உள்ள 40 நாடுகளின் பரப்புகளிலும் அட்லாண்டிக், ஆர்க்டிக், பசிபிக் மற்றும் இந்து மகா சமுத்திரங்களின் பரந்த நீர்ப்பரப்புகளிலும் போர் நடவடிக்கைகள் நடைபெற்றன; 110 மில்லியனுக்கும் கூடுதலா ஞோர் இராணுவ சேவைக்காக அழைக்கப்பட்டனர். இவ்வாறுக முன்னர் நடைபெற்ற வேறெந்த யுத்தத்தோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு அதிகமாக பரவலான மக்கள் திரளினர் இந்த யுத்தத்தில் பங்கேற்று பாசிசத்திற்கு எதிராகத் தீவிரமாகப் போரா டினுர்கள்.

இராணுவ உற்பத்திக் குறியீடுகள் ஆயுதப் போராட்டத்தின் அளவுகளுக்குச் சான்று பகர்கின்றன. யுத்த ஆண்டுகளில் (1939 செப்டெம்பர் 1 முதல் 1945 செப்டெம்பர் 2 வரை) ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி நாடுகளில் மட்டும் 588,000 விமானங்களும் (இவற்றில் 425,000 போர் விமானங்கள்) 236,000 டாங்கிகளும் 14,76,000 சாதாரண பீரங்கிகளும் 6,16,000 மார்டர் பீரங்கி களும் உற்பத்தி செய்யப்பட்டன; ஜெர்மனியில் சுமார் 1,09,000 விமானங்களும் 46,000 டாங்கிகள் மற்றும் திடீர் தாக்குதல் பீரங்கி களும் 4,35,000க்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் மற்ற வகை ஆயுதங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

வரலாறு அறிந்த யுத்தங்களிலேயே இரண்டாவது உலக யுத்தம் தான் மிக அழிவுகரமானதாக இருந்தது. ஐரோப்பாவில் மட்டும் போர் அழிவுகளினுல் (முழுமை பெருத புள்ளி விவரங்களின்படி) ஏற்பட்ட பொதுவான பொருட்சேதத்தின் மதிப்பு 260 பில்லியன்

டாலர்களாகும் (1938ஆம் ஆண்டு விலைவாசிகளில்); போரிட்ட அரசுகளின் இராணுவச் செலவீனங்கள் அவற்றின் தேசிய வருமானத்தில் 60—70 சதவிகிதமாக இருந்தன. 50 மில்லியனுக்கும் கூடுதலானோர் மாண்டனர். 20 மில்லியனுக்கும் கூடுதலானோரை பறிகொடுத்த சோவியத் யூனியனுக்குத்தான் மிக அதிக இழப்பு ஏற்பட்டது; சோவியத் நாட்டில் 1,710 நகரங்களும் 70,000 கிராமங்களும் குக்கிராமங்களும் இடிபாடுகளில் மூழ்கிக் கிடந்தன, 32,000 தொழில் நிலையங்கள் நாசப்படுத்தப்பட்டிருந்தன. ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் போலந்து (சுமார் 6 மில்லியன்), யுகோஸ்லாவியா (1.7 மில்லியன்), மற்ற அரசுகளுக்கும் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடு 4,00,000 நபர்களையும் பிரிட்டன் 3,70,000 நபர்களையும் பறிகொடுத்தன. ஜெர்மனியின் தரப்பில் 13.6 மில்லியன் பேர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், சிறைபிடிக்கப்பட்டனர், இதனுடைய ஐரோப்பிய கூட்டு நாடுகளின் தரப்பில் 1.5 மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

போர் முறைகளைப் பொறுத்த மட்டில் இரண்டாவது உலக யுத்தத்தில் இராணுவங்கள் பெரும்பாலும் ஒப்பீட்டளவில் மட்டான பலத்தையும் குறைந்த அளவு இயங்கு எல்லையையும் உடைய ஆயுதங்களைப் பயன்படுத்தின. யுத்தத்தின் இறுதியில் பயன்படுத்தப்பட்ட அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைகளின் தோற்றம் துருப்புகளின் ஆயுதத் தளவாடங்கள் விஷயத்திலும் யுத்தத்தை நடத்தும் முறைகளிலும் அடிப்படை மாற்றத்தை குறித்தது.

1. இராணுவ-அரசியல் முடிவுகள்

பாசிச எதிர்ப்பு அரசுகளின் கூட்டணியும் உலகின் முற்போக்குச் சக்திகளும் ஏகாதிபத்தியத்தின் மிக ஆக்கிரமிப்புகரமான சக்திகளின் மீது அடைந்த வெற்றி தான் இரண்டாவது உலக யுத்தத்தின் முக்கிய முடிவாகும். இவ்வெற்றி உலகில் அரசியல் மற்றும் வர்க்கச் சக்திகளின் சமன்நிலையை அடியோடு மாற்றியமைத்தது, யுத்தத்திற்குப் பிந்தைய வளர்ச்சி முழுவதையும் நிர்ணயித்தது. சோவியத் யூனியனின் தீர்மானகரமான பங்கேற்போடு ஏகாதிபத்தியத்தின் பிரதான தாக்குதல் சக்திகள் மீது அடையப்பட்ட வெற்றி பெரும் உலக வரலாற்று முக்கியத்துவம் உடையதாயிருந்தது. நவீன சகாப்தத்தின் மிக முக்கிய அம்சம்—சோஷலிசத்தின் வெல்ல முடியா தன்மை—அதில் தெட்டத் தெளிவாகத் தென்பட்டது. ஆயுதத்தின் உதவி கொண்டு சோவியத் சோஷலிச அரசை ஒழித்துக் கட்டவோ பலவீனப்படுத்தவோ ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு சக்தி

களின் முயற்சிகள் தோல்வியடையும் என்று வரலாறு இன்னொரு முறை ஆணித்தரமாக மெய்ப்பித்தது. மாறாக ஏகாதிபத்திய வாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தம் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பாசிசக் கூட்டணியின் மற்ற நாடுகளில் நிலவிய மிக பிற்போக்கான ஆட்சிகளை ஒழித்துக் கட்டவும் அவற்றின் அரசியல் மற்றும் சித்தாந்தத்தைத் தவிடு பொடியாக்கவும் வழிகோலியது. வேறு விதமாகச் சொன்னால், யுத்தங்கள் மூலதனத்தின் ஆதிக்கத்தைப் பலப்படுத்தாமல் குலைக்கவே செய்கின்றன என்பது இன்னொரு முறை மெய்ப்பிக்கப்பட்டது.

அதே சமயம் பாசிசம், இராணுவ வெறியின் மீது அடையப்பட்ட வெற்றியானது பல நாடுகளுக்கும் மக்களுக்கும் விடுதலை, சுதந்திரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான பாதையைத் திறந்து விட்டது. மகத்தான விடுதலைப் போராட்ட அலை, பாசிஸ்டுகள் மற்றும் ஜப்பானிய இராணுவ வெறியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும் அவர்களின் கொடும்பாதகச் செயல்களுக்கும் மக்களின் பதிலாக அமைந்தது. பாசிச-இராணுவ வெறிக் கூட்டின் இராணுவத் தோல்வியும் பூமியெங்கும் பரவிய தேசிய விடுதலை இயக்கமும் உலக ஆதிக்கத்தை வெல்ல வேண்டும் என்ற ஜெர்மானிய, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கியதோடு கூட ஏகாதிபத்திய அமைப்பு முழுமைக்குமே பெரும் சேதத்தை ஏற்படுத்தின. இந்த முறியடிப்பானது கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு சில ஆசிய நாடுகளிலும் சோஷலிசப் புரட்சி வெற்றியடையவும் வலிமையான உலக சோஷலிச அமைப்பு தோன்றவும் உதவியது. இது தான் 1917ஆம் ஆண்டு அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் உலக வரலாற்றில் நடைபெற்ற மிகப் பெரும் சம்பவமாகும்.

மேற்கு ஐரோப்பாவில் சோவியத் இராணுவத்தின் வெற்றிகள், நேச நாட்டு இராணுவங்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றின் செல்வாக்கின் கீழ் பாசிச எதிர்ப்பு விடுதலை இயக்கம் வளர்ச்சியடைந்தது. ஆனால் அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன, இதனால் தமக்கு நேரடியான ஆபத்து ஏற்படக் கூடும் என்று அஞ்சி சமுதாய அமைப்பை மேற்கொண்டு ஜனநாயகமயமாக்கவும் தடையாக இருந்தன. என்றாலும் இத்தாலி, பிரான்ஸ், மற்ற சில அரசுகளின் தேசிய சுதந்திரங்கள் மறுமலர்ச்சி பெறுவதில் வெகுஜனங்களின் போராட்டம் தீர்மான கரமான பங்காற்றியது.

சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தில் இறங்கியவுடனேயே ''பழைய'' காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தேசிய விடுதலை இயக்கம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. இந்நாடு

களின், முதலாவதாக கொரியா, வியட்நாம், இந்தியா, பர்மா, மலாயா, சிரியா, லெபனுன் ஆகிய நாடுகளின் மக்கள் தமது விடுதலைக்கு அதிக அனுகூலமான, புதிய சூழ்நிலைகள் இப்போது உருவாகி வருகின்றன என்று கண்டு அவற்றைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை சிதறி புதிய சுதந்திர அரசுகள் தோன்றும் நிகழ்ச்சிப் போக்கு கணிசமான அளவு துரிதமடைந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய முதல் 15 ஆண்டுகளில் மட்டும் 22 புதிய சுதந்திர அரசுகள் தோன்றின. ஆனல் இரண்டாவது 15 ஆண்டுகள் தான் (1960—1975) ''தீர்மானகரமான'' ஆண்டுகளாக விளங்கின. முந்தையக் காலனிகள், அரைக் காலனிகள் இருந்த இடத்தில் 62 சுதந்திர அரசுகள் தோன்றின. 70ஆம் ஆண்டுகளில் பெரும் காலனியாதிக்கப் பேரரசுகள் வரலாற்றுப் பழமையாகிப் போயின. உலகம் முழுவதையும் தழுவிய வெல்லற்கரிய விடுதலைப் போராட்ட அலையைத் தடுத்து நிறுத்தும் சக்தியை ஏகாதிபத்தியம் இழந்தது. ஏகாதிபத்தியத்தின் அந்திமக் காலம், அழியும் நேரம் வந்தது, பெரும்பான்மையான மனிதகுலத்தின் மீது தான் செலுத்திய ஆதிக்கத்தை அது திரும்பிப் பெற முடியாதபடி இழந்தது. ஒடுக்கப்பட்ட மக்களினங்களை விடுவிக்கும் சகாப்தம் பிறந்தது.

மிகவும் பிற்போக்கான சக்திகளின் மீது இரண்டாவது உலக யுத்தத்தில் அடையப்பட்ட வெற்றியானது முற்போக்கு மாறுதல்களுக்கும் சிக்கலான பிரதேச பிரச்சினைகளின் தீர்வு உட்பட சர்வதேச உறவுகள் துறையில் ஆழ்ந்த மாற்றங்களுக்குமான பாதையை மக்கள், அரசுகள் முன் திறந்து விட்டது. இது முதலாவதாக, யுத்தத்தின் போதும் அது முடிந்த பின்னரும் சோவியத் யூனியன், போலந்து மற்ற சில அரசுகளின் நியாயமான அரசு எல்லைகள் நிலைநாட்டப்பட்டதில் வெளிப்பட்டது. உலகின் முதல் சோஷலிச நாட்டைச் சுற்றி முதலாளித்துவ நாடுகள் மட்டுமே இருந்த நிலை மாற்றப்பட்டது. சோவியத் யூனியனுக்கு எதிரான போராட்டத்திற்காக நீண்டகாலமாகத் தயார்ப்படுத்தி வந்த முக்கியத் தாக்கு முனைகளை ஏகாதிபத்தியவாதிகள் இழந்தனர்.

பாசிசமும் இராணுவ வெறியும் தோற்கடிக்கப்பட்டதானது நவீன சகாப்தத்தில் ஆக்கிரமிப்பின் அடித்தளம் சுருங்கி வருகிறது, முற்போக்குச் சக்திகளின் அடித்தளம் விரிவடைந்து வருகிறது என்று மெய்ப்பித்தது. பல மக்களினங்கள், அரசுகளின் ஒன்றிணைந்த சக்திகள் பாசிசம், இராணுவ வெறிக்கு எதிராகப் போரிட்டன. விடுதலை, தேசிய அரசுரிமை, ஜனநாயகம் மற்றும் முன்னேற்றத்தைப் பாதுகாப்பதில் இவற்றின் நெருக்கமான ஒத்துழைப்பு சமா

தானம் மற்றும் மக்களுடைய பாதுகாப்பின் வெற்றியின் அடிப்படை யாக அமைந்தது.

ஆனால் இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவுகளை அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் உறுதிப்படுத்த சோவியத் யூனியன், மற்ற சோஷலிச முகாம் நாடுகளின் சுமார் 30 ஆண்டு கால முயற்சி கள் தேவைப்பட்டன. ஐரோப்பிய பாதுகாப்பு, ஒத்துழைப்பு சம்பந்த மாக 1978ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் கையெழுத்தான உடன் படிக்கை இந்த விஷயத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது கடந்த யுத்த முடிவுகளைத் தொகுத்துரைத்து, சமாதானத் தையும் மக்களினங்களின் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறந்து விட்டது.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டம் முழுவதும் சோவியத் யூனி யன் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் சமாதானக் கொள்கையை, சமாதான சகவாழ்வு, ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைப் பிடித்தது, கடைப்பிடித்து வருகிறது. லெனினிய சமாதான போர்த் தந்திரத்தின் மீதான விசுவாசத்தை சோவியத் யூனியன் கம்யூ னிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் மீண்டும் ஊர்ஜிதப்படுத் தியது: ''சமாதானத்தைப் பேணிப் பாதுகாப்பதைக் காட்டிலும் நமது கட்சிக்கும் நமது மக்களுக்கும் ஏன் உலக மக்கள் அனைவருக் கும் சர்வதேச அரங்கில் முக்கியக் கடமை வேறு எதுவுமில்லை''* என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி யின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

சோவியத் யூனியனில் இருந்த எல்லா மக்களினங்களின் தன்னல மற்ற ஆதரவின் பயனாய் சோவியத் இராணுவம் வெற்றி பெற்றது. போர்முனைக்கும் பின்னணிக்கும், இராணுவத்திற்கும் மக்களுக் கும் இடையேயான ஒற்றுமை வெற்றிக்கான தீர்மானகரமான காரணியாக இருந்தது.

அரசியல் மற்றும் இராணுவத் தலைமையின் ஒற்றுமை, மார்க்சிய-லெனினியத் தத்துவத்தையும் வளர்ச்சியடைந்த சோவியத் போர் விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட சோவியத் அரசின் அரசியல் மற்றும் இராணுவ போர்த்தந்திரத்தின் இடையறாத் தொடர்பு ஆகியன சோவியத் துருப்புகளின் வெற்றிகளுக்கான காரணங்களாகும்.

ஆக்கிரமிப்பு துவங்குவதற்கு முன் சோவியத் இராணுவத்தை விட சக்தியிலும் சாதனங்களிலும் விஞ்சி நின்றதோ, பாசிச வேர் மஹ்டின் கைவசமிருந்த மேற்கு ஐரோப்பா முழுவதன் பெரும்

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசின் ஆவணங்கள், மாஸ்கோ, 1981, பக்கம் 31.

பொருளாதார மூலாதாரங்களோ, திடீர்த்தாக்குதலோ எதுவுமே ஹிட்லரின் இராணுவத்திற்கு உதவவில்லை.

சோவியத் இராணுவம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது நடத்திய எல்லா மகத்தான சமர்களிலும் சோவியத் போர்க் கலைக்கே உரித்தான உயர்ந்த போர்க் குணம், செயல் முனைப்பு, போர் நடவடிக்கைகளின் வடிவங்களையும் முறைகளையும் தேர்ந் தெடுப்பதில் வளைந்து கொடுக்கும் தன்மை போன்ற அம்சங்கள் வெளிப்பட்டன. சோவியத் இராணுவத்தின் வெற்றி அதே நேரத் தில் எதிரியின் போர்த் தளவாடங்களின் மீது சோவியத் போர்த் தளவாடங்கள் அடைந்த வெற்றியாக, வெற்றிக்கான அடிப்படை களைத் தமது தன்னலமற்ற உழைப்பால் உருவாக்கிய உள்நாட்டு உழைப்பாளிகளின் வெற்றியாகத் திகழ்ந்தது.

யுத்தத்தின் போது சோவியத் துருப்புகள் உயர்வான தார்மீகப் பண்புகளையும் வெல்லற்கரிய போர்த் திறமையையும் வெளிப்படுத் தின, புகழ் மிகு சோவியத் தாயகப் பற்று சோவியத் போர்வீரர் களைப் பரந்த அளவு வீரச் செயல்களில் ஈடுபடுமாறு ஊக்குவித்தது. யுத்தத்தின் போது 7 மில்லியனுக்கும் கூடுதலான போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சோவியத் யூனியனின் விருதுகளும் பதக் கங்களும் அளித்து கௌரவிக்கப்பட்டனர். கம்யூனிஸ்டுக் கட்சி விடுத்த அறைகூவலுக்கேற்ப பரவலாக வெடித்த கொரில்லா இயக் கம் சோவியத் மக்களின் நாட்டுப் பற்றையும் தாயகத்திற்கு அவர் கள் வழங்கிய தீவிர ஆதரவையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத் தியது. எதிரியின் பின்னணியில் சுமார் 6,200 கொரில்லாப் படை அணிகளும் குழுக்களும் (மொத்தம் 13 லட்சம் தேசபக்தர்கள்) இயங்கின; 735 தலைமறைவு கட்சி உறுப்புகள் இருந்தன. கொரில் லாப் படை இயக்கம் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் முக்கியப் போர்த்தந்திரக் காரணியாக விளங்கியது. பாசிச ஆக்கிரமிப்பாளர் களைத் தோற்கடித்து வெற்றி காண்பதில் இது மதிப்பிடப்பட முடி யாத பங்கினை ஆற்றியது.

2. யுத்தத்தின் பிரதான, தீர்மானகரமான போர்முனை

பாசிசத்தின் மீதான வெற்றி ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி நாடு களிலிருந்த மக்களின் கூட்டு முயற்சிகளால் அடையப்பட்டது. மூன்றாவது ரைஹிற்கு எதிரான போராட்டத்தில் இவர்கள்தான் பிரதான சக்தியாக விளங்கினர். ஆனால் பொது எதிரியின் மீது அடையப்பட்ட வெற்றியில் கூட்டணி உறுப்பு நாடுகளின் பங்கு ஒரே மாதிரியானதல்ல. பாசிசக் கூட்டை முறியடிப்பதில் சோவியத்

யூனியன் தீர்மானகரமான பங்காற்றியது. உலக ஆதிக்கத்தை நோக்கி நடை போட்ட ஜெர்மானிய பாசிசத்திற்கு இது தடையாக நின்றது, யுத்தத்தின் முக்கியச் சுமையைத் தன் தோள்களில் தாங்கியது, ஹிட்லரின் ஜெர்மனியையும் பின் இராணுவ வெறி கொண்ட ஜப்பானையும் முறியடிப்பதில் தீர்மானகரமான பங்காற்றியது. யுத்த ஆண்டுகளில் யாரும் இதை அதிகார பூர்வமாக ஆட்சேபிக்கவில்லை. அந்நாட்களில் சோவியத் யூனியனின் தீர்மானகரமான பங்கைப்பற்றி மேற்கே நிறையப் பேசினார்கள்.

''செஞ்சேனையின் வெற்றிகரமான நடவடிக்கைகள் இல்லாமலிருந்தால் அமெரிக்கத் துருப்புகளால் ஆக்கிரமிப்பாளனை எதிர்த்து நின்றிருக்க முடியாது, யுத்தமானது அமெரிக்க கண்டத்திற்கு பரவியிருக்கும்''* என்று அமெரிக்க ஜெனரல் மார்ஷால் கூறினார்.

பாசிச ஜெர்மானியத் துருப்புகள் இரண்டாவது கோடைகாலத் தாக்குதலைத் தொடுக்கும் அபாயம் சோவியத் யூனியனை எதிர் நோக்கியிருந்த கடினமான 1942 மே மாத நாட்களில் ஜெனரல் மாக்கார்துருக்கு ரூஸ்வெல்ட் பின்வரும் தந்தியை அனுப்பினார்: ''பெரும் போர்த்தந்திர நோக்கிலிருந்து பார்க்கும் போது ஐக்கிய நாடுகளின் 25 அரசுகளும் ஒட்டு மொத்தமாகச் செய்வதை விட ருஷ்யர்கள் அதிகமான எதிரிப் போர்வீரர்களைக் கொன்று குவிக்கின்றனர், எதிரியின் அதிக ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் அழிக்கின்றனர் எனும் எளிய உண்மை தெட்டத் தெளிவு''**.

கிரேட் பிரிட்டனின் பிரதமர் சர்ச்சில் — சோவியத் யூனியனின் மீது இவர் அனுதாபம் காட்டினார் என்று சந்தேகப்படவே முடியாது — ''ருஷ்ய இராணுவம்தான் ஜெர்மானிய இராணுவ இயந்திரத்தைக் குலை நடுங்கச் செய்தது''*** என்று ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். மேற்கு ஐரோப்பாவிலிருந்த நேச நாட்டு ஒன்றிணைந்த பயணப் படைகளின் உயர்மட்ட பிரதான தளபதி ஜெனரல் ஐசன்ஹோவர், ''ருஷ்யர்களின் அற்புதமான தாக்குதல்கள்'' குறித்து வியப்பு தெரிவித்தார், ''அவர்களின் மகத்தான வெற்றிகளுக்கு உரிய மதிப்பு'' அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து எழுதினார். ''குறிப்பாக ருஷ்யப் போர்வீரர்களுக்கு உரிய மதிப்பளித்து அமெரிக்கர்கள் தமது போர்வீரர்களின் நன்றியை தெரிவிக்கின்றனர். மூன்றாண்டுகள் இடையறாது

---

* *The War Report of George G. Marschall, H. H. Arnold, Ernest S. King,* New York, 1947, p. 149.

** *New York Times,* 20.10.1955, p. 10.

*** அமெரிக்க ஜனாதிபதிகள், பிரிட்டிஷ் பிரதமர்களுடன் சோவியத் பிரதமரின் கடிதத் தொடர்பு, தொகுதி 1, பக்கம் 260.

நடைபெற்ற போராட்டத்தில் ஜெர்மானியர்களுடைய தாக்குதலின் முழுச் சுமையையும் தம் தோள் மீது தாங்கி அவர்களை எப்படி முறியடித்தனர் என்பதை நாம் கண்டோம்... இப்போராட்டத்தின் மையத்திலிருந்த ருஷ்யப் போர்வீரர்களின் சேவைகளை நாகரிக உலகம் முழுவதும் குறிப்பாக நன்கு மதிப்பிட வேண்டும்''* என்று அமெரிக்கத் தரைப்படை சக்திகளின் தளபதி ஸ்திலுவேல் குறிப்பிட்டார். இது போன்ற கூற்றுகளின் பட்டியலை இன்னமும் தொடரலாம்.

ஆனால் யுத்தம் முடிந்த பின் அமெரிக்கா, பிரிட்டன், மற்ற முதலாளித்துவ நாடுகளில், பாசிசத்தை முறியடித்ததில் சோவியத் யூனியனின் பங்கை குறைத்து மதிப்பிடும் கூற்றுகளைப் பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்களும் இராணுவப் பிரமுகர்களும் வெளியிட ஆரம்பித்தனர். இன்றும் கூட இக்கூற்றுகள் ஆக்கிரமிப்பு வட்டங்கள், சர்வதேசப் பதட்டநிலை தணிவின் எதிரிகள் ஆகியோருக்கு ஆதரவாக மேலைய நாடுகளில் கூறப்படுகின்றன. ஆனால் வரலாற்றின் உண்மைகளை மறுக்க முடியாது.

ஹிட்லரின் ஜெர்மனிக்கு எதிரான சோவியத் மக்களின் ஆயுதப் போராட்டம் சுமார் 4 ஆண்டுகள் நீடித்தது. இக்காலகட்டம் முழுவதும் சோவியத்-ஜெர்மானியப் போர்முனைதான் (இதை மேலைய இலக்கியங்களில் கிழக்கு அல்லது ருஷ்யப் போர்முனை என்று சாதாரணமாகக் குறிப்பிடுவது வழக்கம்) இரண்டாவது உலக யுத்தத்தின் முக்கியப் போர்முனையாக விளங்கியது. இக்காலகட்டம் முழுவதும் இது பாசிச ஜெர்மனி மற்றும் இதன் ஐரோப்பிய கூட்டு நாடுகளின் இராணுவங்களின் பெரும் பகுதியைக் கட்டிப் போட்ட நிலையில் வைத்திருந்தது. 1941—1942ஆம் ஆண்டுகளில் வேர்மஹ்டின் மொத்த டிவிஷன்களில் 70—76 சதவிகிதம் சோவியத் யூனியனுக்கு எதிராகச் செயல்பட்டது என்றால் 2—4 சதவிகிதம் மட்டுமே பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிராக இயங்கியது. ஐரோப்பாவில் 1944ஆம் ஆண்டு கோடையில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட மொத்த பாசிச டிவிஷன்களில் பாதிக்கும் மேற்பட்டவை சோவியத்-ஜெர்மானியப் போர்முனையிலிருந்தன, மேலைய நேச நாட்டினருக்கு எதிராக சராசரியாக மூன்றில் ஒரு பகுதி மட்டுமே செயல்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் அளவிலும் உக்கிரத்திலும் கடந்த யுத்தத்தின் மற்றப் போர்முனைகளிலிருந்து சோவியத்-ஜெர்மானியப் போர்முனை பெரிதும் மாறுபட்டிருந்தது. இத்தாலியிலும் மேற்கு ஆப்பிரிக்காவிலும் போர்முனைகளின் நீளம் 300—500 கி. மீ.களுக்கு

---

* ''பிராவ்தா'' பத்திரிகையின் செய்தி காரியாலயத் தாள், 1975, மார்ச் 5.

மேற்படாமலும் மேற்கு ஐரோப்பாவில் 800 கி. மீ. ஆகவும் இருந்ததெனில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் நீளம் யுத்தத்தின் பல்வேறு கட்டங்களில் 3,000 முதல் 6,200 கி. மீ. வரையிருந்தது.

இப்போது போர் நடவடிக்கைகளின் உக்கிரத் தன்மையை ஒப் பிடுவோம். இத்தாலியில் போர்முனை நிலவிய நேரத்தில் 74 சதவிகித மும் வட ஆப்பிரிக்காவில் 29 சதவிகிதமும் மேற்கு ஐரோப்பா வில் 86.7 சதவிகிதமும் இவை நீடித்தன என்றால் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் தீவிரப் போர் நடவடிக்கைகள் 93 சதவிகித நேரம் நீடித்தன.

சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில்தான் ஜெர்மனி மற்றும் அதன் துணை நாடுகளின் பிரதான சக்திகள்—607 டிவிஷன்கள்—அழிக்கப்பட்டன. வடக்கு ஆப்பிரிக்காவிலும் மேற்கு ஐரோப்பா விலும் நேச நாட்டினர் மொத்தம் 176 டிவிஷன்களை சிதறடித்து சிறைபிடித்தனர். சோவியத் துருப்புகளுக்கு எதிராக நடைபெற்ற சண்டைகளில் பாசிஸ்டுகள் பெரும் பகுதி பீரங்கிகள், டாங்கிகளை யும் மூன்றில் ஒரு பங்கு விமானங்களையும் 1,600க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள், போக்குவரத்துக் கப்பல்களையும் இழந்தனர். பாசிச ஜெர்மனியின் தரப்பில் 13.6 மில்லியன் பேர்கள் காய மடைந்தனர், கொல்லப்பட்டனர், தொலைந்து போயினர். இதில் 10 மில்லியன் பேர்கள் (73 சதவிகிதத்திற்கும் அதிகமானோர்) சோவியத்-ஜெர்மானியப் போர்முனையில் பாதிக்கப்பட்டவர்கள்.

சோவியத் இராணுவத்தின் பலத்த தாக்குதல்களின் கீழ்தான் பாசிசக் கூட்டு தகர்ந்து விழுந்தது. செஞ்சேனையின் வெற்றிகளின் பயனாய் மன்னராட்சியின் கீழிருந்த ருமேனியா, ஜாரிச பல்கேரியா, மான்னர்கேய்ம பின்லாந்து, ஹோர்டிஸ்டு ஹங்கேரி ஆகிய நாடுகள் பாசிச ஜெர்மனிக்கு ஆதரவான யுத்தத்திலிருந்து வெளிவந்தன.

யுத்தம் என்பது இரு தரப்புகளுக்கிடையேயானது. எனவே பாசிச ஜெர்மனியை வெற்றி கொள்வதற்காக ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி அரசுகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் அளவையும் கணக்கில் கொள்ள வேண்டும். சோவியத் யூனியனுக்குத்தான் மிகப் பெரும் இழப்பேற்பட்டது. சண்டைகளிலும் பாசிச முகாம்களிலும் சிறைக் கூடங்களிலும் 20 மில்லியன் சோவியத் மக்கள் இன்னுயிர் ஈந்தனர். பிரிட்டிஷ் தரப்பில் 3,70,000 நபர்களும் அமெரிக்க ஐக்கிய நாட் டின் தரப்பில் 4,00,000 நபர்களும் மாண்டனர்.

இவையனைத்தும் இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத்-ஜெர்மானியப் போர்முனையின் தீர்மானகரமான பங்கிற்கு நன்கு சான்று பகர்கின்றன.

''ஹிட்லரின் தோல்வி—பாசிச இராணுவம், பாசிச நெறியின்

தோல்வியைக் குறித்த போராட்டத்தின் முடிவு—வட ஆப்பிரிக்க பாலைவனங்களிலோ அல்லது நார்மாண்டியின் கரைகளிலோ நடந்த சண்டைகளில் அல்ல, மாறாக ஸ்தாலின்கிராதிலும் லெனின்கிராதிலும் கூர்ஸ்கிலும் நடந்த சண்டைகளில் முன் நிர்ணயிக்கப்பட்டது. ஹிட்லரைப் பொறுத்த வரை பிரிட்டனோ அல்லது வட ஆப்பிரிக்காவோ இரண்டாம் பட்ச முக்கியத்துவம் உடையவையாக மட்டுமே யிருந்தன. ருஷ்யாவில் அவனுடைய பேய் வெறி பயங்கரமாக வெளிப்பட்டது. ருஷ்யாவில் அவன் வெற்றி கொள்ளப்பட்டான்'' என்று பிரிட்டிஷ் முற்போக்கு எழுத்தாளர் பீர்ஸ் போல் ரீட் குறிப்பிட்டார்.

உலகிலுள்ள நேர்மையான மனிதர்கள் அனைவரும் இந்த மதிப்பீட்டின் கீழ் கையொப்பமிடலாம். ஆனால் பூர்ஷ்வா சித்தாந்த வாதிகள், சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டம், பாசிசத்தை முறியடித்ததில் இவர்களின் தீர்மானகரமான பங்கு ஆகியவற்றைப் பற்றிய உண்மையை எப்படியாவது மக்களிடமிருந்து மறைக்கப் பார்க்கின்றனர். ''உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய ஒரு இராணுவ நடவடிக்கையின் போது கிழக்கே—சோவியத் யூனியனில்—இரண்டாவது உலக யுத்தம் முடித்து வைக்கப்பட்டது என்ற உண்மையை மேலைய நாட்டு வாசகர்களில் பெரும்பாலோர் இன்னமும் உணரவில்லை'' என்று 1978ஆம் ஆண்டு லண்டனில் வெளியான ''ருஷ்யப் போர்முனை'' எனும் நூலின் சுருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் சகலவிதங்களிலும் இதற்குத் தடையாக இருப்பதால்தான் இது உணரப்படவில்லை. பாசிச ஜெர் மனியை முறியடித்ததில் சோவியத் யூனியனின் பங்கை குறைத்து கூறும் பூர்ஷ்வா பிரச்சாரம் சோஷலிசத்தையும் இதன் மகத்தான உயிர்ப்புச் சக்தியையும் பற்றிய உண்மையை மக்களிடமிருந்து மறைக்கவும் இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பதை இழுத்த டித்ததன் காரணங்களையும் அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புகள் சில சமயங்களில் வேண்டுமென்றே கடைபிடித்த செயலின்மையையும் அமுக்கவும் கணக்கிடுகிறது.

இன்று மேலைய நாட்டு சித்தாந்தவாதிகள் இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சேவைகளைப் பற்றி மிகவும் சிரமப்பட்டு புகழ்பாடுகின்றனர். ஒரு சில பூர்ஷ்வா கட்டுரையாளர் களும் வரலாற்றாசிரியர்களும் யுத்த காலத்தில் அமெரிக்காவை ''முதல் வல்லரசு'' என்றும் ''நேச நாட்டவரின் வெற்றிக்கு வழி கோலிய நாடு'' என்றும் சித்தரிக்கின்றனர். பிரபல அமெரிக்க வரலாற்று நிபுணரும் பத்திரிகையாளருமாகிய போல்டுயினின் கூற் றுப்படி ''இரண்டாவது உலக யுத்தத்தில் பங்கேற்ற அரசுகளிலேயே

அமெரிக்க ஐக்கிய நாடுதான் சந்தேகத்திற்கிடமின்றி மிக வலிமை யான வல்லரசாக இருந்தது''. எனவே வெற்றியில் அமெரிக்காவின் பங்கு ஏதோ நிர்ணயிக்கப்பட்டதாம்.

உண்மைக்கு அப்பாற்பட்ட இத்தகையக் கூற்றுகளின் உதவி யால் 1941ஆம் ஆண்டில் பாசிச ஆக்கிரமிப்பை முறியடித்ததில் சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் முக்கியத் துவத்தைக் குறைக்க மட்டுமின்றி பிரிட்டிஷ்-அமெரிக்கத் தலைமையின் போர்த்தந்திரத்தை நியாயப்படுத்தவும் முயற்சி செய்யப்படுகிறது. அக்காலகட்டத்தில் சோவியத் யூனியனின் தோல்வி தவிர்க்க இயலா தது என்று கருதிய இத்தலைமை, விமான குண்டு வீச்சுகள், பொரு ளாதார முற்றுகை, மட்டான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் ஜெர்மனியை முறியடிக்கலாம் என்று ஆதாரமின்றி நம்பியது.

நிச்சயமாக, பாசிச கூட்டு அரசுகளுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கிய பின் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் உள்ளாற்றல் அதிகரித்தது. ஆனால் இதுதான் பாசிசக் கூட்டை முறியடிப்பதில் ''தீர்மானகரமான காரணியாக'' விளங் கியது என்று கூற எவ்வித ஆதாரமும் கிடையாது. வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவாய் சோவியத் யூனியனுக்கு எதிரான ஹிட்லரின் ''மின்னல் வேக யுத்த'' திட்டத்தை சோவியத் இராணு வம் முறியடித்து, பாசிச ஆக்கிரமிப்பு மற்ற நாடுகளுக்கும் கண்டங் களுக்கும் பரவாது தடுத்து நிறுத்திய ஒரு நேரத்தில்தான் அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கியது என்பதை நினைவு கூற வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கும் முன்னதாகவே 1941ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் தேதி சோவியத் துருப்புகள் மாஸ்கோ அருகே தீர்மானகரமான எதிர்த்தாக்குதலில் இறங்கின. 1942ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் தேதி லண்டன் வானொலியில் உரையாற்றுங் காலை ஜெனரல் டெ கோல் மாஸ்கோ அருகே பாசிச எதிரி ''வரலாறு இதுவரை அறிந்தவற்றிலேயே மிகப் பயங்கர தோல்வியை அடைந் தான்''* என்று குறிப்பிட்டார்.

''யார் யாரை'' எனும் பிரச்சினை நடைமுறையில் சோவியத் யூனியனுக்கும் பாசிச ஜெர்மனிக்கும் இடையிலான போரில்தான் தீர்க்கப்பட்டது. யுத்தத்தின் முக்கியத் துருப்புமுனை பெரிதும் சோவியத் யூனியனின் முயற்சிகளால் அடையப்பட்டது. இது நடந்த போது அமெரிக்க இராணுவமும் இராணுவப் பொருளாதாரமும் இன்னமும் சூடு பிடித்துக் கொண்டிருந்தன. 1943ஆம் ஆண்டு கோடையில் அமெரிக்க இராணுவத் தலைமையகத் தலைவராயிருந்த

---

* ஷா. டெ கோல், யுத்தக்கால நினைவுகள், தொகுதி 1, மாஸ்கோ, 1957, பக்கம் 657 (ருஷ்ய மொழியில்).

ஜெனரல் மார்ஷால் இராணுவ அமைச்சருக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் கூறியதை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாயிருக்கும்: ''யுத்தத்தின் ஆரம்பத்திலிருந்தே நாட்டிற்குத் தீர்மானகரமான காரணியாக இருந்தது நேரம்... சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த எதிர்ப்பின் பயனாய் இந்நேரம் நமக்கு கிடைத்துள்ளது''.

பாசிச ஜெர்மனியை முறியடித்ததில் சோவியத் யூனியனுக்கு லென்ட்-லீஸ் ஒப்பந்தத்தின் படி வழங்கப்பட்ட நேச நாட்டு சப்ளைகளின் முக்கியத்துவத்தை பூர்ஷ்வா அரசியல்வாதிகளும் வரலாற்றாசிரியர்களும் அடிக்கடி மிகைப்படுத்திக் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இச்சப்ளைகள்—இவை சோவியத் மக்களுக்கு நன்றாக நினைவிலுள்ளன, இவற்றை அவர்கள் உயர்வாக மதிப்பிடுகின்றனர்—மொத்த சோவியத் ஆயுத உற்பத்தியில் 4 சதவிகிதமாக மட்டுமே இருந்தன.

அதிகாரபூர்வமான அமெரிக்கப் புள்ளி விவரங்களின்படி யுத்த காலத்தில் அமெரிக்காவிலிருந்து சோவியத் யூனியனுக்கு 14,450 விமானங்களும் சுமார் 7,000 டாங்கிகளும் அனுப்பப்பட்டன; பிரிட்டனிலிருந்து (1944 ஏப்ரல் 30 முடிய) 3,384 விமானங்களும் 9,292 டாங்கிகளும் வந்தன; கானடாவிலிருந்து 1,118 டாங்கிகள் அனுப்பப்பட்டன. யுத்தத்தின் கடைசி மூன்று ஆண்டுகளில் சோவியத் யூனியன் ஆண்டுதோறும் 30,000க்கும் மேற்பட்ட டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளையும் 40,000 வரையிலான விமானங்களையும் உற்பத்தி செய்தது. மொத்தத்தில் லென்ட்-லீஸ் ஒப்பந்தத்தின் படி சப்ளை ஆண்டுகளின் போது சோவியத் யூனியன் 4,88,000 பீரங்கிகள், 1,04,000 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், 1,37,000 விமானங்களை உற்பத்தி செய்தது. எனவே வெற்றிக்குத் தேவையான உண்மையான போர்த்தளவாடங்கள் சோவியத் மக்களின் தன்னலமற்ற உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டன. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டே இதைப் பற்றிக் குறிப்பிட்டார்: ''... ஹிட்லரை முறியடித்ததில் லென்ட்-லீஸ் ஒப்பந்தத்தின் படியான எமது சப்ளைகள்தான் முக்கியக் காரணியாக விளங்கின என்று நாங்கள் எப்போதுமே கருதியதில்லை. பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் குருதி சிந்தி, தம் உயிரைத் தந்த செஞ்சேனையின் போர்வீரர்கள்தான் இதைச் சாதித்தனர்.*

யுத்த ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து வந்த லென்ட்-லீஸ் சப்ளைகளின் மொத்த மதிப்பு 46 பில்லியன் டாலர்களாகும். இதில்

---

* ராபர்ட் ஷேர்வுட், **ரூஸ்வெல்டும் கோப்கின்சும். இவர்களை நேரில் கண்டவர்களின் கூற்றுகள்**, தொகுதி 2, மாஸ்கோ, அந்நிய இலக்கியப் பதிப்பகம், 1958, பக்கம் 626 (ருஷ்ய மொழியில்).

கிரேட் பிரிட்டன் 30 பில்லியன்களுக்கும் அதிகமான டாலர்களை, அதாவது மொத்த உதவியில் 3/5 பங்கிற்கும் அதிகமான பங்கைப் பெற்றது.

1942ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் தேதி அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் லெண்ட்-லீஸ் சப்ளை உடன்படிக்கை செய்து கொண்ட சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் சோவியத் யூனியனுக்கு அனுப்பப்பட்ட மொத்த சப்ளைகளின் மதிப்பு சுமார் 10 பில்லியன் டாலர்களாகும். அதே நேரம் லெண்ட்-லீஸ் அமெரிக்கர்களுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அமெரிக்காவிற்கு இதன் முக்கியத்துவத்தை மதிப்பிடும் போது, இது ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் இராணுவ முயற்சிகளில் தவிர்க்க இயலாதவாறும் அமெரிக்காவிற்கு அனுகூலமாயும் பங்கேற்கும் வடிவமாக இருந்தது என்று ஒப்புக் கொள்ளும்படி அமெரிக்க அரசாங்கப் பிரமுகர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ''...இந்த லெண்ட்-லீஸ் சப்ளைகளுக்குச் செலவான பணம் நிச்சயமாக ஏராளமான அமெரிக்க உயிர்களைக் காப்பாற்றியது. இச்சப்ளைகளின்படி இராணுவத் தளவாடங்களைப் பெற்று போருக்குச் சென்ற ஒவ்வொரு ருஷ்ய, பிரிட்டிஷ், ஆஸ்திரேலியப் போர்வீரனும் அதே அளவிற்கு நமது சொந்த இளைஞர்களை எதிர்நோக்கிய இராணுவ அபாயங்களைக் குறைத்தான்'' என்று ஜனாதிபதி ட்ரூமன் கூறினார்.

கடந்த யுத்தத்தில் அமெரிக்காவின் பங்கைச் சகலவிதங்களிலும் மிகைப்படுத்திக் கூறுவதானது இன்று ''உலகில் தலைமை ஸ்தானத்தை'' அடைவதற்காக அமெரிக்கா செய்யும் முயற்சிகளை நியாயப் படுத்தும் நோக்கத்தோடு பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளால் பயன் படுத்தப்படுகிறது. கடந்த யுத்தத்தில் அமெரிக்காவின் ''வல்லமையும்'' ''வெற்றியின் ஆசானுக'' அமெரிக்கா பங்காற்றியதும் ஏதோ யுத்தத்திற்குப் பின் ''உலகளாவிய பொறுப்பை'' ஏற்றுக் கொள்ள அமெரிக்காவைத் தயார்ப்படுத்தியதாக 1979 செப்டெம்பரில் *US News and World Report* சஞ்சிகை எழுதியது தற்செயலானதல்ல.

பாசிச ஜெர்மனியையும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானையும் முறியடிப்பதில் தீர்மானகரமான பங்காற்றிய சோவியத் யூனியன் இன்றும் யுத்த மற்றும் ஆக்கிரமிப்புச் சக்திகளின் பாதையில் பெரும் தடைக்கல்லாக நிற்கிறது, சமாதானம், மக்களின் பாதுகாப்பிற்கு நம்பகரமான அரணாகத் திகழ்கிறது.

யுத்தத்தின் போது சோவியத் மக்களும் சோவியத் இராணுவமும் சோஷலிசத் தாயகத்தின் விடுதலையையும் சுதந்திரத்தையும் காத்து நின்றதோடு கூட வரலாற்று ரீதியான விடுதலைப் பணியை நிறை வேற்றினர் சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் ஐரோப்பிய, ஆசிய மக்கள் நடத்திய நியாயமான போராட்டத்திற்கு உதவி யளித்தனர், தம் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றினர்.

மாபெரும் விடுதலைப் பணியானது, மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற நாளிலிருந்தே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் இடை யறுது, உறுதியாகப் பின்பற்றி வரும் சர்வதேசிய அரசியலின் இயற் கையான, நியதியான தொடர்ச்சியாக அமைந்தது. இது சோவியத் சமுதாய மற்றும் அரசு அமைப்பின் சாரத்திலிருந்தும் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்திலிருந்தும் பிறக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்தில் இறங்கிய நாள் முதலாகவே, அசாதாரணமாகச் சிக்கலான இராணுவ அரசியல் சூழ்நிலையில் சோவி யத் யூனியன், ஜெர்மானிய பாசிசத்தாலும் ஜப்பானிய இராணுவ வெறியாலும் அடிமைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய, ஆசிய மக்களை விடுவிக்கும் பணியை நிறைவேற்றத் துவங்கியது. ஐரோப்பிய மக்களை மட்டுமின்றி மற்ற கண்டங்களிலிருந்த மக்களையும் உண் மையான அபாயம் எதிர்நோக்கியிருந்ததை அப்போது அமெரிக்க, பிரிட்டிஷ் அரசு, இராணுவப் பிரமுகர்கள் ஒப்புக் கொண்டனர். 1941ஆம் ஆண்டு மே 27ஆம் தேதி அமெரிக்க மக்களுக்கு விடுத்த அறிக்கையில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், லத்தீன் அமெரிக்காவை வென்ற பின் நாஜிகள் ''அமெரிக்க ஐக்கிய நாட்டையும் டொமினியன் கானடாவையும் நசுக்கத் திட்டமிட்டு உள்ளனர்'' என்று எச்சரித் தார்.

பாரென்ட்ஸ் கடலிலிருந்து கருங்கடல் வரையிலான மிகப் பெரும் போர்முனையில் சோவியத் போர்வீரர்கள் ஹிட்லர் கூட்டின் இராணுவங்களுக்கு எதிராக மகத்தான போர் நடத்திக் கொண் டிருந்த அந்நாட்களில் ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகை பின்வருமாறு எழுதியது: ''முன்னேறிக் கொண்டிருந்த ஜெர்மா னியத் துருப்புகளின் தாக்குதலின் கீழ் செஞ்சேனை முறிந்து வீழ்ந் திருந்தாலோ, ருஷ்ய மக்கள் இவ்வளவு வீரத்தையும் அச்சமின் மையையும் காட்டாமலிருந்தாலோ என்ன நடந்திருக்கும் என்ற எண்ணமே நடுக்கத்தை ஏற்படுத்துகிறது... இந்தப் புகழ்மிகு போராட்டத்தை நடத்தும் ருஷ்யர்கள் அதே நேரத்தில் நாகரி கத்தை மனித குலத்தின் எல்லா எதிரிகளிடமிருந்தும் காத்து

நிற்கின்றனர். அவர்கள் இதுவரையில்லா பங்கை பொது லட்சியத்திற்குச் செலுத்தியுள்ளனர்''.

சோவியத் மக்கள் மற்றும் இராணுவத்தின் போராட்ட லட்சியங்கள் யுத்தத்தின் ஆரம்ப நாட்களிலேயே சோவியத் யூனியன் மக்கள் கமிசார்களின் கவுன்சில், அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டி ஆகியவற்றின் ஆணையிலும் (1941ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் தேதி) தற்காப்புக் கமிட்டியின் தலைவர் இ. வி. ஸ்தாலின் 1941ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் தேதி வானொலியில் நிகழ்த்திய உரையிலும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருந்தன. ''பாசிச ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிரான பொது மக்களின் தேசபக்த யுத்தத்தின் லட்சியம் நம் நாட்டைச் சூழ்ந்துள்ள அபாயத்தை ஒழித்துக் கட்டுவது மட்டுமின்றி ஜெர்மானிய பாசிசக் கொடுமையால் அவதியுறும் எல்லா ஐரோப்பிய மக்களுக்கும் உதவுவதாகும்'' என்றும் ''இந்த விடுதலை யுத்தத்தில் நாம் மட்டும் தனியாக நிற்கவில்லையென்றும் இந்த மகத்தான யுத்தத்தில், ஹிட்லர் எடுபிடியாட்களால் அடிமைப்படுத்தப்பட்ட ஜெர்மானிய மக்கள் உட்பட ஐரோப்பிய, அமெரிக்க மக்கள் நம்முடைய நம்பகரமான கூட்டாளிகளாக இருப்பார்கள்''* என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டி, சோவியத் அரசாங்கத்தின் சார்பில் ஸ்தாலின் அறிவித்தார்.

சோவியத் யூனியனின் அரசு எல்லையை செஞ்சேனை அடைந்ததும், விடுவிக்கப்படும் அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாதென்றும் தம் விதியை முடிவு செய்யும் உரிமையை அந்தந்த மக்களிடமே விட்டு விட வேண்டுமென்றும் அரசுத் தற்காப்புக் கமிட்டியும் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையும் செஞ்சேனைக்குக் கண்டிப்பான ஆணைகளைப் பிறப்பித்தன. இந்த ஆணைகள், சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் பாசிசத்தால் அடிமைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்திற்கு உதவும் செயல்திட்டத்திலிருந்து தோன்றியவை. இந்தச் செயல்திட்டத்தை நிறைவேற்றிய சோவியத் இராணுவம் எந்தப் பாட்டாளி வர்க்கச் சர்வதேசிய லட்சியங்களுக்கு அது எப்போதும் விசுவாசமாக இருந்து வந்துள்ளதோ முற்றிலும் அவற்றிற்கேற்ப இயங்கியது.

சோவியத் இராணுவம் முற்றிலுமாகவோ அல்லது பகுதியளவிற்கோ 2.5 மில்லியன் ச. கி. மீ. பரப்பளவையும் 100 மில்லியனுக்கும் கூடுதலான மக்கட்தொகையையும் கொண்ட 10 ஐரோப்

---

* இ. ஸ்தாலின், சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம், 5வது பதிப்பு, மாஸ்கோ, 1948, பக்கம் 16.

பிய நாடுகளையும் 2 ஆசிய நாடுகளையும் விடுவித்தது. ஐரோப்பிய நாடுகளை விடுவித்த சோவியத் துருப்புகள் தொழிற்சாலைகள், ஆலைகள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், நகரங்கள், கிராமங்களை இயன்ற அளவு அழிவிலிருந்து பாதுகாக்க முயன்றன. உதாரணமாக போலந்தை விடுவித்த போது சோவியத் இராணுவம் கிராக்கவ் நகரையும் சிலேஸியா தொழிற்துறைப் பிரதேசத்தையும் செக்கோஸ்லொவாக்கியாவை விடுவித்த போது ஓஸ்திராவா தொழிற்துறைப் பிரதேசத்தையும் பிரேக் நகரத்தையும் காப்பாற்றியது. ஆனால் அமெரிக்க-பிரிட்டிஷ் படைத் தலைமை தான் செயல்பட்ட போது நகரங்கள், கலாச்சார நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதன் மீது அக்கறை செலுத்தவில்லை என்பது கவனிக்கத் தக்கது. டிரெஸ்டன், சோபியா, மற்ற நகரங்களின் மீது அமெரிக்க-பிரிட்டிஷ் படைத் தலைமை நடத்திய மிருகத்தனமான குண்டு வீச்சுகளே இதற்குச் சான்று. இத்தகைய தாக்குதல்களுக்கு இராணுவ அவசியம் ஏதும் இருக்கவில்லை. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டில் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்களின் மீது அணு குண்டுகளை வீசி அவற்றை ஒன்றுமறியா பாமர மக்களோடு அழித்ததன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாடு மனிதகுலத்தின் முன் இதுவரை கேள்விப்படாத பெரும் குற்றத்தை இழைத்தது.

போலந்து, செக்கோஸ்லொவாக்கியா, யுகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகளின் யூனிட்டுகளும் ஒரு சில ஹங்கேரிய வாலன்டியர் துணைப் பிரிவுகளும் பிரெஞ்சு நாட்டு விமானப்படை ரெஜிமென்டும் சோவியத் இராணுவத்தோடு தோளோடு தோள் நின்று பாசிச ஜெர்மானியத் துருப்புகளுக்கு எதிராகப் போரிட்டன. தொலைகிழக்கில் நடந்த சமர்களில் மங்கோலிய மக்கள் இராணுவம் ஏகாதிபத்திய ஜப்பானுக்கு எதிராக சோவியத் துருப்புகளுடன் சேர்ந்து போரிட்டது. சோவியத் இராணுவத்திற்கும் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் இராணுவங்களுக்கும் இடையிலான போராட்ட ஒத்துழைப்பு, சோவியத் யூனியன் நடத்திய மாபெரும் தேசபக்த யுத்தத்தின் விடுதலைத் தன்மையிலிருந்தும் சோவியத் மக்களின் மற்றும் சுதந்திரம், விடுதலைக்காக ஜெர்மானிய, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகப் போரிட்ட மற்ற மக்களினங்களின் நலன்கள், லட்சியங்களின் பொதுமையிலிருந்தும் நியதியாகத் தோன்றியது.

ஜெர்மானிய மக்களுக்கே சோவியத் யூனியனும் இதன் இராணுவமும் பாசிசத்திலிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தன. சோவியத் இராணுவம் ஆக்கிரமிப்பாளனாகவோ அல்லது பழிதீர்ப்பவனாகவோ ஜெர்மனிக்கு வரவில்லை, மாறாக விடுதலை இராணுவமாக, பாசிசத்தை பூண்டோடு அழித்து, இராணுவ வெறியை ஒழித்துக்

கட்டி, ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநாட்டும் பணியோடு வந்தது. ஜெர்மானியர்களே இதை முற்றிலுமாகத் தம் கண்களால் கண்டனர்.

ஐரோப்பிய மக்களை விடுவிக்க சோவியத் இராணுவம் பெரும் முயற்சிகளைச் செலவிட்டு இழப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ருமேனியப் பரப்பின் நடந்த சண்டைகளில் 69,000 சோவியத் போர்வீரர்களும் போலந்தில் சுமார் 6,00,000 நபர்களும் செக்கோஸ்லொவாக்கியாவில் 1,40,000 நபர்களும் ஹங்கேரியில் 1,40,000 நபர்களும் ஜெர்மனியில் 1,02,000க்கும் மேற்பட்டோரும் தம் இன்னுயிர் ஈந்தனர். மொத்தமாக ஐரோப்பிய நாடுகளில் 10 லட்சத்திற்கும் கூடுதலான சோவியத் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளின் அஸ்திகள் உள்ளன.

விடுவிக்கப்பட்ட நாடுகளின் உழைப்பாளிகள் தம்மை விடுவித்த சோவியத் போர்வீரர்களின் வீரத்திற்கு நினைவாஞ்சலி செலுத்துகின்றனர். சோவியத் போர்வீரர்களின் நினைவாக ஏராளமான நினைவுச் சின்னங்கள், சிலைகள் எழுப்பப்பட்டுள்ளன, தெருக்கள், சதுக்கங்கள், தொழிற்சாலைகள், பள்ளிகளுக்கு இவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான சோவியத் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளுக்கு அயல்நாடுகளின் விருதுகளும் மெடல்களும் அளிக்கப்பட்டுள்ளன.

சோவியத் இராணுவத்தால் பாசிச ஜெர்மானிய கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்கப்பட்ட அரசுகளின் மக்கள் சோவியத் யூனியனுக்கும் இதன் இராணுவத்திற்கும் நெஞ்சார நன்றி கூறுகின்றனர். ''செக்கோஸ்லொவாக்கியாவை விடுவிப்பதற்காக நடந்த சண்டைகளில் சோவியத் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை எம் மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வார்கள்''* என்று செக்கோஸ்லொவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் கூஸ்டவ் கூசக் கூறினார்.

''சோவியத் யூனியனின் தீர்மானகரமான உதவியோடுதான் பல்கேரியாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றது. சோவியத் யூனியனின் உதாரணத்தைப் பின்பற்றி அதன் தாராளமான, தன்னலமற்ற உதவியின் பயனாய் பல்கேரியா தன் நூற்றாண்டு கால பின்தங்கிய நிலைக்கு முடிவு கட்டி மலர்ந்த தொழிற்துறை-விவசாய சோஷலிச நாடாக மாறியது'' ** என்று பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் செயலாளரும் பல்கேரிய மக்கள் குடியரசு

* **சோவியத் யூனியன் உருவானதன் 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வந்த வாழ்த்துகள்,** *மாஸ்கோ, 1973, பக்கங்கள் 63 – 64.*

** **பிராவ்தா,** *1972, டிசம்பர் 23.*

அரசுக் கவுன்சிலின் தலைவருமான தோதர் ஜிவ்கவ் கூறினார்.

1979ஆம் ஆண்டு அக்டோபரில் ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசின் 30ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்ட போது, யுத்த கால நிகழ்ச்சிகளையும் ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசின் இன்றைய நாட்களையும் மதிப்பிடுங்காலை ஜெர்மானிய சோஷலிச ஐக்கியக் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் ஏரிஹ் ஹோனக்கர் ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசின் மக்களின் சார் பில் பின்வருமாறு கூறினார்: ''சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் தீர்மான கரமான போர்முனையில் பாசிசத்தின் மீது தான் அடைந்த வெற்றி யாலும் தன்னுடைய இறவாப் புகழ் பெற்ற விடுதலை தியாகத் தாலும் எங்களுடைய மக்களின் மகிழ்ச்சிகரமான எதிர்காலத்திற்கும் பாதையைத் திறந்து விட்டது. தம்முடைய இன்னுயிரை ஈந்த 20 மில்லியன் சோவியத் மக்களின் நினைவை நாங்கள் என்றென்றும் புனித உணர்வோடு போற்றுவோம்''*.

பாசிச ''புதிய முறையின்'' கொடுமையை அனுபவித்த மற்ற ஐரோப்பிய மக்களும் விடுதலையைப் பெற்றுத் தந்த சோவியத் இராணுவத்தின் பால் தம் ஆழ்ந்த மரியாதையைத் தெரியப் படுத்துகின்றனர். ''சோவியத் ருஷ்யா தங்களுக்கு என்ன செய்தது என்று பிரெஞ்சு மக்களுக்குத் தெரியும், தம்மை விடுவித்ததில் சோவியத் ருஷ்யாதான் முக்கியப் பங்காற்றியது என்று அவர்கள் அறிவார்கள்''** என 1944 டிசம்பரில் டெ கோல் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நாடுகளில் நிலவிய எதிர்ப்புச் சக்திகளுடன் சோவி யத் இராணுவத்திற்கு இருந்த போராட்ட ஒத்துழைப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை அடைவதற்கான முக்கியக் காரணி யாக விளங்கியது. எதிர்ப்பு இயக்கம் 1944ஆம் ஆண்டு, சோதர கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க பல சோவியத் கொரில்லாப் படை யூனிட்டுகள் தமது போர் நடவடிக்கைகளைத் தாய்நாட்டிற்கு வெளியே எடுத்துச் சென்ற போது மிக உயர்ந்த கட்டத்தை அடைந்தது. உதாரணமாக 1944 வசந்த காலத்தில் போலந்தில் 10க்கும் மேற்பட்ட சோவியத் கொரில்லாப் படை யூனிட்டுகளும் அணிகளும் இயங்கின. 10 சோவியத் கொரில்லாப் படை யூனிட்டுகளும் அணிகளும் ஸ்லொவாக்கிய தேசிய எழுச்சிக்கு உதவி புரிவதற்காக வந்தன. அதோடு கூட செக்கோஸ்லொவாக் கியா, போலந்து, ருமேனியா, மற்ற நாடுகளுக்கு அனுபவம் மிக்க கொரில்லா படைவீரர்களடங்கிய ஸ்தாபன அமைப்பு குழுக்களும்

---

* பிராவ்தா, 1979, அக்டோபர் 7.

** பிராவ்தா செய்தி காரியாலயத் தாள், 1975, மார்ச் 5.

அணிகளும் அனுப்பப்பட்டன. இவை இந்நாடுகளில் தேசிய கொரில்லாப் படை இயக்கம் வளர உதவின.

ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்திற்கு சோவியத் யூனியன் வழங்கிய உதவிக்கு பெரும் இராணுவ, தார்மீக முக்கியத்துவம் இருந்தது. சோவியத் துருப்புகளின் வெற்றியோடு கூட இது லட்சோப லட்சம் சாதாரண மக்கள் பாசிசத்திற்கு எதிராக நடத்திய போராட்டத்தை ஊக்குவித்தது, வெற்றியின் மீதான நம்பிக்கையையும் பலத்தையும் அவர்களுக்கு ஊட்டியது.

பாசிச எதிர்ப்புச் சக்திகளுக்குக் கணிசமான உதவியளித்த சோவியத் யூனியனுக்கு மாறாக அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்கள் விடுதலை இயக்கத்தின் அளவைக் குறைக்க முயன்றன. இவை தேசபக்தர்களுக்குச் சென்ற ஆயுத சப்ளைகளைக் குறைத்தன, இவர்களின் நடவடிக்கைகளைத் தம் நலன்களுக்கு உட்படுத்த முயன்றன. பின்வரும் சம்பவம் இதற்குச் சான்று பகர்கிறது. 1944 ஜூலை 17இல் சர்ச்சில் ஜெனரல் டாஸ்டியேவுடன் நடத்திய உரையாடலின் போது, பிரெஞ்சு நாட்டவர் தாம் பெறும் ஆயுதங்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் ஜெனரல் ஐசன்ஹோவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்கள் என்றும் அவர் உத்திரவாதம் தர முடியுமா என்று கேட்டார். 1944 டிசம்பரில் இத்தாலியிலிருந்த நேச நாட்டுத் துருப்புகளின் தளபதி பீல்ட்மார்ஷல் அலெக்சாந்தேர் கொரில்லாப் படையைக் கலைக்க முற்பட்டார். அதே மாதம் பிரிட்டிஷ் துருப்புகள் சர்ச்சிலின் கட்டளைக்கேற்ப கிரீஸ் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டு முடியாட்சி-பாசிசப் பிற்போக்கிற்கு ஆதரவான நிலையை மேற்கொண்டன.

இராணுவ வெறி கொண்ட ஜப்பானால் அடிமைப்படுத்தப்பட்ட ஆசிய மக்களின், முதலாவதாக சீன மக்களின் விஷயத்திலும் சோவியத் இராணுவம் தன் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றியது. ஜப்பானிய இராணுவ வெறி முறியடிக்கப்பட்டதானது ஆசியாவின் மக்களை அயல்நாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்ததோடு கூட ஜப்பானிய மக்களுக்கும் இராணுவ பாசிச சர்வாதிகாரத்திலிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தது.

ஏகாதிபத்திய ஜப்பானை முறியடித்ததிலும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தமக்கு விடுதலையைப் பெற்றுத் தந்ததிலும் சோவியத் யூனியன் மற்றும் சோவியத் இராணுவம் ஆற்றிய பெரும் பங்கை கிழக்கு, தென் கிழக்கு ஆசிய மக்கள் போற்றுகின்றனர். கொரிய மக்கள் ஜனநாயக குடியரசின் தலைநகரமாகிய பியென்யானின் மத்தியில் மொரான்போன் மலையில் உள்ள மாபெரும் நினைவுச் சின்னத்தில் பின்வரும் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டுள்ளன:

''கொரிய மக்களை ஜப்பானிய அடிமைத்தளையிலிருந்து விடுவித்து கொரியாவின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் வழி கோலிய வீரஞ் செறிந்த சோவியத் இராணுவத்திற்கு மங்காப் புகழ் உண்டாகட்டும். 1945 ஆகஸ்டு 15''.

சோவியத் யூனியனின் விடுதலைப் பணியின் வரலாற்று முக்கியத்துவம் விடுவிக்கப்பட்ட அரசுகளின் எல்லைகளோடு நின்று விடவில்லை. ஏற்கெனவே கூறப்பட்டபடி சோவியத் இராணுவத்தின் வெற்றிகள் சர்வதேச நிலவரம் முழுவதையும் சமாதான, சோஷலிசச் சக்திகளுக்கு ஆதரவாக மாற்றின. இவ்வெற்றிகள் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றி பெறுவதற்கு அனுகூலமான வெளிச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க உதவின, காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சியுற வழி கோலின.

இவ்வாறாக உலகின் முதல் சோஷலிச அரசின் விடுதலைப் பணி, சோவியத் நாட்டின் ஸ்தாபகரான வி. இ. லெனினின் வார்த்தைகளைக் கண்கூடாக மெய்ப்பித்தது. அவர் கூறினார்: ''நாம் எதற்கும் எவர்க்கும் துரோகம் செய்யவில்லை; எந்த ஒரு பொய்யையும் புனிதமாக்கவில்லை, மூடி மறைக்கவில்லை; துயரில் சிக்கிய எந்த நண்பருக்கும் தோழருக்கும் நமது சக்தி அனைத்தையும் பயன்படுத்தி இயன்ற எல்லா வழிகளிலும் உதவி புரிய நாம் மறுக்கவில்லை''.*

இந்தியாவுடன் நட்புறவை வளர்க்க வேண்டும் என்ற லெனினிய ஆணையை நிறைவேற்றும் முகமாக சோவியத் மக்கள் இந்திய தேசிய விடுதலை இயக்கத்திற்குச் சகலவிதங்களிலும் ஆதரவு நல்கினர். இந்தியர்கள் தம் பங்கிற்கு சோவியத் நாட்டின் பால் இடையறா நட்பையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி வந்தனர். உதாரணமாக 1943ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட ஸ்தாலின்கிராத் நகரத்துக்கு இந்திய உழைப்பாளிகளால் நெய்யப்பட்ட கூடாரத் துணிகள் கல்கத்தாவிலிருந்து வந்த நெஞ்சை நெகிழச் செய்யும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். 1981ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் தேதி இந்திய-சோவியத் கலாச்சாரக் கழகம் சோவியத் மக்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: ''இந்தியர்களாகிய நாங்கள் சோவியத் மக்களுக்கு, குறிப்பாக ஸ்தாலின்கிராத் நகரத்தின் பாதுகாவலர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளதை என்றென்றும் மறக்க மாட்டோம். இவர்கள் ஈடு இணையற்ற தம் வீரத்தாலும் தியாகத்தாலும் பாசிசத் துருப்புகள் பின் திரும்புமாறு நிர்ப்பந்தித்து, எங்களுடைய

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 12.

புனிதப் பூமியில் ஜப்பானிய ஏகாதிபத்தியச் சக்திகளுடன் இணை வதற்கு ஹிட்லர் தீட்டியிருந்த திட்டங்களைக் குலைத்தனர்''.

4. மறக்க கூடாத படிப்பினைகள்

யுத்தம் முடிந்து நீண்ட நாட்களாகி விட்ட போதிலும் இன்று வரை இரண்டாவது உலக யுத்தம் பல்வேறு நாடுகளின் அரசியல், அரசு, இராணுவப் பிரமுகர்கள், வரலாற்றாசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள், மற்ற விஞ்ஞானிகள், பரவலான பொதுமக்கள் ஆகி யோரின் பெரும் கவனத்தைக் கவர்ந்து வருகிறது. இதைப் பற்றி ஏராளமான நூல்கள், நினைவுக் குறிப்புகள், ஆவணத் தொகுப்பு கள் வெளியாகியுள்ளன, பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு சில முதலாளித்துவ நாடுகளில் யுத்தத்தின் காரணங்கள், தன்மை, முடிவுகள் மற்றும் படிப்பினை களைக் கொச்சைத்தனமாகத் திரித்துரைக்கின்றனர். ஆனால் இவற்றிற்குதான் ஆழ்ந்த, யதார்த்தமான ஆராய்ச்சி தேவைப்படு கிறது, இவற்றைதான் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண் டும், இன்று கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த யுத்தத்தின் முக்கியப் படிப்பினைகள் யாவை?

இரண்டாவது உலக யுத்தத்தின், மாபெரும் தேசபக்த யுத்தத் தின் முதலாவது, முக்கியப் படிப்பினை, பாசிச ஜெர்மனி மற்றும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானின் மீது சோவியத் யூனியன் அடைந்த வெற்றியின் நியதி ஆகும்.

பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்களும் இராணுவத்தினரும் (குறிப்பாக தோற்கடிக்கப்பட்ட பாசிச ஜெனரல்களும்) பாசிசக் கூட்டின் மீது சோவியத் யூனியன் அடைந்த வெற்றியை தற்செயலானது, சோவி யத் நாட்டின் பெரும் பரப்பளவு, ருஷ்யப் பனிக் காலம், சாலைகள் இல்லாமை, ஹிட்லரின் தவறுகள் போன்றவற்றின் விளைவு என் றெல்லாம் சித்தரிக்க முற்படுகின்றனர். இவையெல்லாம் வெட்கங் கெட்ட முறையில் சொல்லப்படும் பொய்யாகும். பாசிசத்தின் மீது சோவியத் மக்கள் அடைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி என்பது முதலில் சோஷலிச அமைப்பின் மகத்தான உயிரோட்டத் திற்கான ஆணித்தரமான சான்றாகும். யுத்தத்தில் சோவியத் மக்கள் மாபெரும் வெற்றியடைந்தனர், ஏனெனில் சோஷலிசம் சோவியத் சமுதாயம் முழுவதன் உறுதியான ஒருமைப்பாட்டிற்கு வகை செய்தது, சோவியத் பொருளாதாரத்தை இதுவரையில்லா அளவு அணி திரட்டி அதை பலப்படுத்தியது, இராணுவ விஞ்ஞா னத்தின் உயர்வான வளர்ச்சிக்கு வழிகோலியது, அற்புதமான போர்வீரர்களையும் சேனாதிபதிகளையும் பயிற்றுவித்தது. சோஷ

லிசத்தை வீழ்ச்சியுறச் செய்து, தன்னுடைய சோஷலிசத் தாயகத்திற்கு விசுவாசமான மக்களை மண்டியிடச் செய்யும் சக்தி எதுவும் உலகில் இல்லை என்று யுத்தம் ஆணித்தரமாக மெய்ப்பித்தது.

சோஷலிச சமுதாய அமைப்பின் மிகப் பெரும் அனுகூலங்களும் திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதார முறையின் அனுகூலங்களும், சோவியத் மக்களின் தன்னலமற்ற உழைப்பை ஆதாரமாகக் கொண்டு நாட்டின் எல்லா சேம இருப்புகள், வாய்ப்புகளையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி ஆயுதங்கள், போர்த் தளவாடங்களின் உற்பத்தியில் பாசிச ஜெர்மனியை விஞ்சவும் ஏகாதிபத்தியத்தின் முக்கியத் தாக்குதல் சக்திகளின் மீது பொருளாதார, அரசியல், இராணுவ வெற்றியை அடையவும் சோவியத் அரசாங்கத்திற்கு வாய்ப்பளித்தன.

மாபெரும் தேசபக்த யுத்தம் என்பது போர்முனையிலும் உள் நாட்டிலும் சோவியத் மக்கள் புரிந்த ஈடு இணையற்ற வீரச் செயல். பிரேஸ்த் கோட்டையையும் ஒதேஸ்ஸா, சிவஸ்தோப்பல், லெனின் கிராத் ஆகிய நகரங்களையும் பாதுகாத்து நின்றவர்களின் உருக்கனைய உறுதியை உலகம் முழுவதும் அறியும். மாஸ்கோ அருகிலும் காக் கஸசிலும் கூர்ஸ்க் அரைவட்டத்திலும் நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கச் சமர்களிலும் 1944, 1945ஆம் ஆண்டுகளின் அற்புதமான நடவடிக்கைகளிலும் சோவியத் போர்வீரர்கள் மகத்தான வீரத்தை வெளிப்படுத்தினார்கள்.

சோவியத் மக்கள் எந்த மகத்தான மூலாதாரங்களிலிருந்து இச்சக்தியைப் பெற்றனர்? முதலாவதாக அவர்களின் உயர்ந்த சித்தாந்தம், சோவியத் தாயகத்தின் பாலான தன்னலமற்ற விசுவாசம், எதிரியின் மீதான வெற்றியிலும் கம்யூனிசத்தின் வெற்றியிலும் உள்ள அசைக்க இயலா நம்பிக்கை ஆகியவையே அந்த மூலாதாரங்களாகும்.

கடந்த யுத்தத்தில் சோவியத் யூனியனின் வெற்றிக்கு வழி கோலிய முக்கியக் காரணிகளில் ஒன்று சோவியத் போர்க் கலை ஹிட்லருடைய வேர்மஹ்டின் போர்க் கலையை விட மேம்பட்டு இருந்ததும் போர் நடவடிக்கைகளை நடத்துவதில் தலைமை மற்றும் அரசியல் ஊழியர்கள் வெளிப்படுத்திய உயர்வான திறமையுமாகும். சிக்கலான இராணுவ-அரசியல் சூழ்நிலைகளில் சோவியத் இராணுவத்தால் நடத்தப்பட்ட அற்புதமான நடவடிக்கைகளே இதற்குச் சான்றாகும். மாஸ்கோ அருகே நடந்த சமர் (இதில் ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் எதிரி விஞ்சி நின்ற ஒரு சூழ்நிலையில் பாசிச ஜெர்மானியத் துருப்புகளின் பெரும் படைத் திரட்டு முறியடிக்கப்பட்டது), ஸ்தாலின்கிராத் சமர் (கிட்டத்தட்ட சமமான சக்திகள் இரு தரப்பிலும் இருந்த சூழ்நிலையில் 3,30,000

பேர்களடங்கிய எதிரியின் படைத் திரட்டு சுற்றி வளைக்கப்பட்டு முறியடிக்கப்பட்டது), சோவியத் இராணுவத்தின் மற்ற நடவடிக்கைகள் லட்சிய உறுதி, பெரிய அளவு, ஆழ்ந்த நோக்குடைய திட்டம், துல்லியமாக இதை செயல்படுத்திய தன்மை, திறமையான தந்திரங்கள், துருப்புகளை நன்கு நிர்வகித்தது ஆகியவை வெளிப்பட்டன.

சோவியத் யூனியன் பாசிசத்தின் மீது அடைந்த வெற்றியானது சோஷலிசத்தின் இராணுவ ஸ்தாபன அமைப்பின் வெற்றி, இது சோவியத் இராணுவமும் சோவியத் இராணுவ விஞ்ஞானமும் போர்க் கலையும் பாசிச ஜெர்மனியின் இராணுவ விஞ்ஞானம், போர்க் கலையின் மீது அடைந்த வெற்றி.

ஹிட்லரின் ஜெனரல்கள், மற்ற பூர்ஷ்வா பிரமுகர்களை சோவியத் இராணுவ விஞ்ஞானமும் போர்க் கலையும் மேம்பட்டு நின்றதை ஒப்புக் கொள்ளும் கட்டாயத்திற்குள்ளாயினர். போர்க் குற்றவாளிகளின் மீதான நியூரென்பர்க் விசாரணையின் போது ஹேரிங்கின் வக்கீல், பீல்ட்மார்ஷல் பாவுலுஸ் சிறைப்பட்டிருந்த போது சோவியத் உயர் இராணுவ விஞ்ஞானப் பேரவையில் போர்த்தந்திரம் பற்றி ஏதோ விரிவுரைகளை ஆற்றியதாக வன்மத்தோடு குறிப்பிட்ட போது பாவுலுஸிடமிருந்து பின்வருமாறு பதில் வந்தது: ''சோவியத் போர்த்தந்திரம் நம்முடைய போர்த்தந்திரத்தை விட பெரிதும் உயர்வானதாயிருந்தது. எனவே இளம் இராணுவ அதிகாரிகளுக்கான பள்ளியில் பாடம் சொல்லித்தரக் கூட என்னுடைய சேவை ருஷ்யர்களுக்குத் தேவைப்பட்டிருக்காது. வோல்காவில் நடந்த சமரின் முடிவும்—இதன் விளைவாகத்தான் நான் சிறைபட்டேன்—இந்தக் கனவான்கள் எல்லோரும் இங்கே குற்றவாளிக் கூண்டில் நிற்பதும் இதற்கு தக்கச் சான்றாகும்''*.

அமெரிக்கக் கட்டுரையாளராகிய இன்கெர்சோல் **முற்றிலும் இரகசியமானது** எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: ''ருஷ்யர்கள் ஒரு சதுரங்கப் பலகையைப் பார்ப்பதைப் போல் போர்க்களத்தைக் கண்டனர். அவர்கள் பலவற்றை முன்கூட்டியே கண்டு, ஜெர்மானியர்கள் தம் சக்திகளை இடையறாது மாற்றும்படி செய்தனர், பால்டிக் முதல் துனைய் ஆற்று முகத்துவாரம் வரை நீண்டிருந்த பெரிய சதுரங்கப் பலகையின் எல்லா இடங்களிலும் எதிரியின் தாக்குதலை முறியடித்தனர். இந்தப் பலகையில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டதில் ஜெர்மானியர்களை ருஷ்யர்

---

* பிரதான ஜெர்மானியப் போர்க் குற்றவாளிகளின் மீது நடைபெற்ற நியூரென்பர்க் விசாரணை. *ஆவணத் தொகுப்பு, தொகுதிகள் 1—7, மாஸ்கோ, 1966.*

களுடன் ஒப்பிட முடியவில்லை''*.

சோவியத் மக்களும் இராணுவமும் ஹிட்லர் ஜெர்மனிக்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் பலத்த அடி தந்து ஆக்கிரமிப்பாளன் மற்ற நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் செல்லாதவாறு தடுத்தனர். ஏகாதிபத்தியத்தின் இராணுவ அதிசாகச் செயல்களும் அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இறுதியில் கண்டிப்பாக அதற்கு எதிராகவே முடியுமென வரலாறு இன்னுமொரு முறை ஆணித் தரமாக மெய்ப்பித்துள்ளது.

யுத்தத்தின் இரண்டாவது, சற்றும் குறையா முக்கியத்துவமுடைய படிப்பினை என்னவெனில் இது உண்மைக் குற்றவாளியாகிய சர்வதேச ஏகாதிபத்தியத்தைத் தோலுரித்துக் காட்டி, ஏகாதிபத் தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகளை ஒடுக்கவும், புதிய, இன்னமும் அதிக இரத்தக் களறியான, பேரழிவை ஏற்படுத்தக் கூடிய உலக யுத்தத்தைத் தடுத்து நிறுத்தவும், உலகில் நிலையான அமைதியை ஏற்படுத்தவும் உறுதியாகப் போராட வேண்டியதன் அவசியத்தின் முன் உலக மக்கள் அனைவரையும் கொண்டு வந்து நிறுத்தியுள்ள தாகும்.

யுத்தத்தின் உண்மையான குற்றவாளிகள், அதன் காரணங் களைப் பற்றிய உண்மைகளை மக்களிடமிருந்து மறைக்க பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் எப்படிப்பட்ட தந்திரங்களைக் கையாண்டு முயற்சி செய்தாலும் பாசிச ஜெர்மனியின் ஆக்கிரமிப்பை உலகின் முதல் சோஷலிச நாடாகிய சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்பலாம் என்ற நம்பிக்கையில் மேலைய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள்தான் இதற்கு உதவியளித்தனர் என்று யதார்த்தமும் ஆவணங்களும் ஆணித்தரமாக மெய்ப்பிக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சின் கடன்கள், தொழில்நுட்ப உதவி, அவற்றின் மூனிக் கொள்கை ஆகியவை இல்லாமல் பாசிச ஜெர்மனியால் இரண்டாவது உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்க முடியாது.

யுத்தத்தின் போக்கிலும் அமெரிக்காவும் பிரிட்டனும் நேச நாட்டு ஒப்பந்தங்களைப் பொருட்படுத்தாது, மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதை இழுத்தடித்ததன் மூலம், பாசிச ஜெர்மனி தோற்கடிக்கப்பட்ட பின் யுத்தத்திற்குப் பிந்தைய உலகை மாற்றியமைப்பதில் தன் நிபந்தனைகளை முன்வைப் பதற்காக சோவியத் யூனியனை அலைக்கழித்து, பலமிழக்கச் செய் வதை நோக்கமாகக் கொண்ட அரசியலைப் பின்பற்றின.

---

* ரா. இன்கெர்சோல், **முற்றிலும் இரகசியமானது**, மாஸ்கோ, அந்நிய இலக்கியப் பதிப்பகம், 1947, பக்கம் 418.

யுத்தத்தை இழுத்தடித்து, பாசிச ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு சில நாடுகளில் பிற்போக்கு ஆட்சிக் கும்பல்களைத் தக்க வைப்பதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க, பிரிட்டிஷ் கொள்கைகளுக்கு மாறாக சோவியத் யூனியன் தனது நேச நாட்டு கடமைகளை நேர்மையாக நிறைவேற்றியது.

யுத்தத்தின் தோற்றுவாயாக எப்போதும் இருந்து வந்துள்ள, இப்போதும் இருக்கின்ற ஏகாதிபத்தியத்திடமிருந்து வரும் யுத்த அபாயத்திற்கு எதிராக இடையறாது, உறுதியாக, தீர்மானகரமாகப் போராட வேண்டுமென இரண்டாவது உலக யுத்தத்தின் பாடங்கள் ஆணித்தரமாகவும் தெட்டத் தெளிவாகவும் காட்டுகின்றன. வரலாற்று அனுபவம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவத் தயாரிப்புகளை உன்னிப்பாகக் கவனிக்கவும் அவர்களின் பிரதேச வெறி கொண்ட மேலாதிக்க நாட்டங்களை உரிய நேரத்தில் வெளிப்படுத்தி ஆக்கிரமிப்பாளனை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சமாதான ஆதரவாளர்களைத் தட்டியெழுப்புகிறது.

முந்தைய முடிவிலிருந்து வரும் மூன்றாவது படிப்பினை, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள், நடவடிக்கைகளுக்கு எதிராக மிக உயர்வான விழிப்புணர்ச்சியின் அவசியத்தைப் பற்றிக் கூறுகிறது. யுத்தங்களைக் கட்டவிழ்த்து ஏகாதிபத்தியவாதிகள் அவற்றின் அரசியல் சாரத்தையும் பொருளாதார அடிப்படையையும் முற்றிலுமாக மூடி மறைக்கின்றனர், இவற்றின் உண்மைக் காரணங்களையும் நோக்கங்களையும் மறைக்க முயலுகின்றனர், இதற்காகச் சகலவித தந்திரங்களையும் நாடுகின்றனர், தம் நாடுகளிலுள்ள மக்களையும் உலக மக்களையும் ஏமாற்றுகின்றனர்.

உதாரணமாக ஜெர்மானிய பாசிசம், உலக ஆதிக்கத்தை வெல்லும் தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நியாயப்படுத்தும் முகமாக ஏதோ ஜெர்மனிக்கு ''ஜீவாதார பிரதேசம்'' போதவில்லை என்ற வாதங்களை முன்வைத்தது, ''கம்யூனிச அபாயம்'' என்ற கூற்றுகளால் அவற்றை மூடி மறைத்தது. ஏதோ சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் தடுப்புத் தாக்குதலாகத்தான் தாங்கள் சோவியத் யூனியன் மீது தாக்குதல் தொடுத்ததாக பாசிஸ்டுகள் தமது கயமைத்தனமான, திடீர் தாக்குதலை நியாயப்படுத்தினர். இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் அமெரிக்காவிற்கு எதிராக யுத்தத்தை அறிவிக்காமலேயே பசிபிக் கடலில் பேர்ல்-ஹார்பர் மீது பலத்த திடீர் தாக்குதலைத் தொடுத்தது.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்திலும் ஏகாதிபத்தியவாதிகள் இந்த துரோக முறைகளைப் பின்பற்றினர். உதாரணமாக 1956இல் பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஏதோ

சூயஸ் கால்வாயின் ''சுதந்திரத்தைப்'' பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு எகிப்திற்கு எதிராக ஆக்கிரமிப்பைத் துவக்கின. ஆனால் உண்மையில் அக்கால்வாயை யாருமே அச்சுறுத்தவில்லை. வடக்கு வியட்நாமிற்கு எதிராக அமெரிக்கா யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டபோது தென் வியட்நாமிய மக்களின் ''சுதந்திரத்தை பாது காப்பதாக'' அமெரிக்கப் பிரச்சாரம் கூறிய கூற்று ஆரம்பம் முதல் கடைசி வரை பொய்யானது. மேற்கூறிய எல்லா அரசுகளும் திடீர்த் தாக்குதலைப் பயன்படுத்தி குறைந்த காலகட்டத்திலேயே முன்முயற் சியைக் கைப்பற்றி தீர்மானகரமான விளைவுகளை அடைவதற்காக யுத்தத்தை அறிவிக்காமலேயே போர் நடவடிக்கைகளைத் துவக்கின.

நம் காலத்திலும் தாங்களாகவே கற்பனை செய்து கொள்ளும் ''சோவியத் இராணுவ அபாயம்'' என்ற பொய்யின் கீழ் மறைந்து கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உருவாகியுள்ள சக்தி களின் சமன்நிலையைத் தமக்கு ஆதரவாகத் திருப்பவும் சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் மீதான இராணுவ மேம் பாட்டை அடையவும் முயலும் முகமாக இராணுவ இயந்திரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளை நோக்கி குறி பார்த்த புதிய அணு ஆயுத முதல் தாக்குதல் சாதனங்களை (பாலிஸ் டிக் மற்றும் உலாவு ஏவுகணைகள்) அமெரிக்க ஐக்கிய நாடு மேற்கு ஐரோப்பாவில் நிறுவியுள்ளதானது இதற்குச் சான்று பகர்கிறது.

பொதுவான அரசியல் லட்சியங்களை அடைவதற்காக வெவ் வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கிடையே பன்முக ஒத்துழைப்பை ஏற்படுத்த எவ்வளவு பரவலான வாய்ப்புகள் உள்ளன என்று யுத்தம் காட்டியுள்ளது நான்காவது படிப்பினையாகும். இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் நடவடிக்கை இத்தகைய ஒத்துழைப்பிற்கான தெட்டத் தெளிவான வரலாற்று உதாரணமாகும். வெவ்வேறு சமூக அமைப்பு களையுடைய அரசுகளுக்கு இடையே நெருக்கமான, பன்முக ஒத்து ழைப்பை ஏற்படுத்துவதிலும் உலக அணு ஆயுத ராக்கெட் யுத்தத் தைத் தவிர்ப்பதிலும் இது இன்றைய சூழ்நிலைகளிலும் மாறா முக் கியத்துவமுடையது.

''பலத்தின் நிலையிலிருந்து'' சோவியத் யூனியனுடன் பேச ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு வட்டங்கள் செய்யும் முயற்சிகள் பயனற் றவை என்பது ஐந்தாவது படிப்பினையாகும். மாபெரும் அக்டோபர் புரட்சியின் சாதனைகளை எந்த ஒரு ஆக்கிரமிப்பாளனிடமிருந்தும் பாதுகாக்க சோவியத் மக்களும் இராணுவமும் உறுதி பூண்டுள்ளனர் என்பதை இராணுவ அதிசாகசங்களின் மீது விருப்பம் கொண்டுள்ள வர்கள் நினைவு கொள்ள வேண்டும். சமாதானம் மற்றும் மக்

களுடைய பாதுகாப்பின் பலத்த கோட்டையாகிய வார்ஸா ஒப்பந்த நாடுகள் சோஷலிசத்தையும் முன்னேற்றத்தையும் பாதுகாப்பதில் இன்று சோவியத் யூனியனுடன் சேர்ந்து நிற்பதற்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு.

இரண்டாவது உலக யுத்தம், உலக ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏகாதிபத்தியவாதிகள் தீட்டிய திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாதவை என்பதை நன்கு வெளிப்படுத்தியது. இன்று சோவியத் யூனியனும் உலக சோஷலிச அமைப்பு முழுவதும் பலம் மிக்க தேசிய விடுதலை இயக்கமும் கம்யூனிச, தொழிலாளர் இயக்கங்களும் சமாதானம், முன்னேற்றம், சுதந்திரத்திற்காகப் போராடி வரும் சூழ்நிலையில் இத்தகையத் திட்டங்களை நிறைவேற்றுவது இன்னமும் கடினமானது.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்து 40 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் இதன் விளைவுகள், படிப்பினைகளிலிருந்து உரிய முடிவுகளைச் செய்யவில்லை. இவர்கள் நிலப்பரப்பிலும் நீர்ப்பரப்பிலும் விண்வெளியிலும் தீவிர இராணுவத் தயாரிப்புகளை மேற்கொள்கின்றனர், புதிய ஆக்கிரமிப்புக் கூட்டுகளை உருவாக்குகின்றனர், நிலவும் இத்தகையக் கூட்டுகளைப் பலப்படுத்துகின்றனர், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்கும் நோக்கத்தோடு இராணுவச் சக்தியை வெளிப்படையாகப் பயன்படுத்துகின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் 'அமெரிக்க ஐக்கிய நாடு தன் ஆக்கிரமிப்பு நோக்கங்களை அடைவதற்காக 200 தடவைகளுக்கும் மேலாக இராணுவத்தைப் பயன்படுத்தியுள்ளது. மத்திய ஒற்றுடல் ஸ்தாபனமும் (சி. ஐ. ஏ.) மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் வேவு ஸ்தாபனங்களும் முற்போக்கு ஆட்சிகளைக் கவிழ்ப்பதை நோக்கமாகக் கொண்ட எண்ணற்ற சீர்குலைவு நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றன. இன்று அமெரிக்க இராணுவத்தினரில் நானகில் ஒரு பங்கினர் அமெரிக்காவிற்கு வெளியே உள்ளனர். அமெரிக்க தரைப்படை, கடற்படை, விமானப்படைகளின் பெரும் சக்திகள் அமெரிக்காவிலிருந்து ஆயிரக்கணக்கான கி. மீ. களுக்கு அப்பால் உள்ளன. இச்சக்திகள் மற்ற அரசுகளின் மீதான அரசியல், இராணுவ நிர்ப்பந்தத்தின் நிரந்தரக் காரணியாக விளங்குகின்றன.

இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவுகளையும் படிப்பினைகளையும் மறக்கக் கூடாது. அச்சுறுத்தல்கள், பொருளாதார முற்றுகை அல்லது இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் சோஷலிச நாடுகளின் வளர்ச்சிக்கும் தேசிய விடுதலை, சமூக நியாயம் ஆகியவற்றிற்காக மக்கள் நடத்தும் போராட்டத்திற்கும் இடையூறு விளைக்கும் கணிப்பு

கள் யாவும் விவேகமற்றவை. இத்தகைய முறைகள் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பயன்படாதது மட்டுமின்றி அவர்கள் எதிர்பார்த்த தற்கு முற்றிலும் நேர் மாறுன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்று இரண்டாவது உலக யுத்தமும் யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளும் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளன. ஆனால் யுத்தத்தின் படிப்பினைகளை எல்லோரும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை யெனத் தெரிகிறது.

நம் காலத்தில் யுத்தம் மற்றும் சமாதானத்தைப் பற்றிய பிரச்சினை குறிப்பாகத் தீவிரமாகியுள்ள போது, சர்வதேச ஏகாதிபத்தியத்தின், எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் இரண்டாவது உலக யுத்தத்தின் சோகமயமான படிப்பினைகளை அலட்சியப்படுத்துவது கடும் விளைவுகளை ஏற்படுத்தும்.

யுத்த அபாயத்தைக் குறைத்து மதிப்பிடும் தவறை மீண்டும் செய்யக் கூடாது. இந்தத் தவறுக்காக மக்கள் ஏராளமான மனித உயிர்களையும் பொருட் சேதத்தையும் விலையாகக் கொடுத்தனர். இது திரும்ப நடைபெறுது இருக்க வேண்டுமெனில், யுத்தம் ஆரம்பமாகும் முன்னரே இதற்கு எதிராகப் போராட வேண்டுமென்ற மறுக்க இயலா உண்மையை நன்கு நினைவு கொள்ள வேண்டும். யுத்த அபாயத்திற்கு எதிராக வெகுஜன மக்கள் இயக்கத்திற்கு ஏற்பாடு செய்வதற்காகவும் யுத்த ஆதரவாளர்கள், சகலவிதப் பழிவாங்குபவர்கள், நவீன பாசிஸ்டுகள் அவர்களின் சித்தாந்தங்களை அம்பலப்படுத்துவதற்காகவும் யுத்த எதிர்ப்புச் சக்திகளை அணி திரட்டுவது அவசியம்.

எனவேதான் யுத்தத்தின் முடிவுகள், படிப்பினைகளை ஆராய்வதும் அவற்றைப் பிரச்சாரம் செய்வதும் இது தோன்றிய காரணங்கள் அதன் சமூக-அரசியல் தன்மையை வெளிப்படுத்துவதும் புதிய யுத்தத்தைத் தடுப்பதற்காகப் போராட உலகின் முற்போக்குச் சக்திகள் அனைத்திற்கும் உதவுகின்றன.

• • •

பூர்ஷ்வா வரலாற்று இயல் இரண்டாவது உலக யுத்தம் தோன்றிய பிரச்சினையைக் கருத்துமுதல்வாதக் கற்பனைகள், குழப்பங்கள், உணர்வுபூர்வமான பொய், அவதூறுகள் ஆகியவற்றால் மூடி மறைத்தது. ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கொள்கைதான் யுத்தத்தின் பிரதான, ஏன் ஒரே காரணம் என்ற வாதம் மேற்கே பரப்பப்படுகிறது. ஏதோ ஹிட்லரும் அவனுடைய நெருங்கிய கூட்டாளிகளும்தான் யுத்தத்தை மூட்டிவிட்டு ஜெர்மனியையும் அதன் கூட்டு

நாடுகளையும் தோல்வியடையச் செய்தார்களாம்.

நிச்சயமாக நாம் கடுமையான போர்க் குற்றங்களில் ஹிட்லர், அவனுடைய கூட்டாளிகளின் தனிப்பட்ட பங்கைக் குறைத்துக் கூறவில்லை. ஆனால் ஒரு தனி மனிதனின் நடவடிக்கைகளும் முடிவுகளும்தான் உலக யுத்தத்தின் காரணங்களாக விளங்கின என்ற கூற்றுகளுக்கும் உண்மையான வரலாற்று விஞ்ஞானத்திற்கும் பொதுவானது எதுவுமில்லை. இத்தகைய கூற்றுகளைக் கூறுவோர் பின்வரும் உண்மைகளைப் பற்றி மௌனம் சாதிக்கின்றனர், மூடி மறைக்கின்றனர்:

—ஏகாதிபத்தியத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஹிட்லரிசம் ஜெர்மானிய மற்றும் சர்வதேச மூலதன முதலைகளால் முக்கிய கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்புச் சக்தியாக வளர்க்கப்பட்டு, ஆட்சியில் அமர்த்தப்பட்டு கடுமையாக ஆயுதந்தரிக்கப்பட்டது;

—இரண்டாவது உலக யுத்தம், உலக ஆதிக்கத்திற்காக ஏகாதிபத்தியவாதிகள் நடத்திய போராட்டக் கொள்கையின் தொடர்ச்சியாக முதலாளித்துவ அமைப்பினுள் தோன்றி, வெடித்தது. முதல் கட்டத்தில் இது இரு தரப்புகளுக்குமே ஏகாதிபத்திய யுத்தமாக இருந்தது;

—பரவலான வெகு ஜனங்கள் போராட்டத்தில் ஈடுபடுகையில் யுத்தத்தின் தன்மை ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைப் பொறுத்த மட்டில் படிப்படியாக மாறியது. சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதுதான் இதை பாசிச எதிர்ப்பு, விடுதலை யுத்தமாக மாற்றிய பிரதான, தீர்மானகரமான காரணியாகும்.

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் கடந்த யுத்தத்தின் உண்மைக் காரணங்களையும் அரசியல் தன்மையையும் பூசி மெழுகி, மூடி மறைத்து, ஏதோ மேலைய வல்லரசுகள் ''ஜனநாயகத்தின் தன்னலமற்றப் பாதுகாவலர்களாகத்தான்'' ஆயுதமேந்தி யுத்தத்தில் இறங்கியதாக நிரூபிக்க சகலவிதங்களிலும் முயலுகின்றனர். இத்தகையதொரு கருத்துநிலை பொதுமக்களின் கருத்தை ஏமாற்ற உதவுகிறது, அதே நேரத்தில் யுத்தத்திற்கு முந்தைய ஆண்டுகளிலும் யுத்த ஆண்டுகளிலும் சோவியத் யூனியனின் பால் அன்றைய அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் கடைப்பிடித்த கள்ளங்கபடமான, இரட்டைவேடக் கொள்கையை நியாயப்படுத்துகிறது. இதன் மூலம் ''தலையிடாமை'' கொள்கையையும் ஆக்கிரமிப்பாளனைத் ''திருப்திப்படுத்தும்'' கொள்கையையும் பின்பற்றியதும் சோவியத் யூனியன் முன்மொழிந்த கூட்டுப் பாதுகாப்பு முறையை நிராகரித்ததும் ஆமோதிக்கப்படுகிறது; ஹிட்லருடனை மூனிக் சதி நியாயப்படுத்தப்படுகிறது. 1939ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சோவியத்-ஜெர்மானிய ஒப்பந்தத்தின் காரணங்களையும் நிலைமை

களையும் கொச்சைத்தனமாகத் திரித்துரைக்கும் பிற்போக்கு, ஏகாதிபத்திய வட்டங்கள் ஏதோ சோவியத் யூனியன்தான் பாசிச ஜெர்மனியுடன் சேர்ந்து ''சதி'' செய்து இரண்டாவது உலக யுத்தத்தைக் கட்டவிழ்ப்பதில் அக்கறை கொண்டிருந்ததாயும் எனவே இதற்கான குற்றம் அதைத்தான் சாரும் என்றும் அப்பட்டமான அவதூறைப் பரப்புகின்றன. ''லெனின் கருத்துப்படி யுத்தங்கள் புரட்சிக்கு இட்டுச் செல்வதால்'' சோவியத் யூனியனும் கம்யூனிஸ்டுகளும் யுத்தங்களை மூட்டி விடுவதில் அக்கறை கொண்டுள்ளனர் எனும் ஆத்திரமூட்டும் கருத்து சொல்லப்படுகிறது. இதன் மூலம் சமாதான சகவாழ்வின் அடிப்படைக் கோட்பாடே முரட்டுத்தனமாகத் திரிக்கப்படுகிறது, யுத்தத்தின் மூலம் புரட்சியை ''தள்ளி விடுவதைப்'' பற்றிய இடதுசாரி-திரோட்ஸ்கி கருத்து லெனினியக் கருத்தாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆனால் லெனின் இதற்கு எதிராகத் தான் தீவிரமாகப் போராடினார். தனது வரலாற்று நடவடிக்கை முழுவதன் மூலமாயும் சமாதானத்திற்கான இடையறாப் போராட்டத்தின் மூலமும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் மற்ற மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் ''யுத்தமானது பொதுவாகவே கம்யூனிஸ்டுக் கட்சியின் நலன்களுக்கு எதிரானது''* என்ற லெனினியக் கூற்றை மெய்ப்பிக்கின்றன. ''... சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்வோம் என்று தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நாங்கள் உறுதி கூறுகிறோம். இதை நிச்சயமாகச் செய்வோம்''** என்றார் வி. இ. லெனின். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த லெனினுடைய ஆணைக்கு எப்போதும் விசுவாசமாக இருந்து வந்துள்ளது, இப்போதும் இருக்கிறது.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 27, p. 492.

** வி. இ. லெனின், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 303.

சுருக்கக் குறியீடுகள்

ப. — படை
கார். ப. — கார்டு படை
மு. ப. — முக்கியத் தாக்குதல் படை
டா. ப. — டாங்கிப் படை
வா. ப. — வான் படை
ப. தொ. — படைத் தொகுதி
டா. பி. — டாங்கிப் பிரிவு
கா. டி. — காலாட்படை டிவிஷன்
து. டி. — துப்பாக்கிப்படை டிவிஷன்
து. கோ. — துப்பாக்கிப்படைக் கோர்பஸ்
மோ. கா. டி. — மோட்டார் காலாட்படை டிவிஷன்
மோ. து. டி. — மோட்டார் துப்பாக்கிப்படை டிவிஷன்
டா. டி. — டாங்கி டிவிஷன்
கு. கோ. — குதிரைப்படைக் கோர்பஸ்
இ. கோ. — இயந்திரப்படைக் கோர்பஸ்
தெ. மே. சே. — தென் மேற்கு சேனை
தோ. சே. — தோன் சேனை
ஸ். சே. — ஸ்டெப்பி சேனை
மு. அ. — முன்னணித் தனிப்படையணி
ஆ. கோ. — ஆர்மி கோர்பஸ்
வே. பட். — வேவுப் பட்டாளம்
மோ. பிரி. — மோட்டார் பிரிகேட்
இ. கு. — இயங்கு குழு

த. பி. ப. — தனி பிரிமோர் படை.
க. க. — கருங்கடல் கப்பற்படை
பெ. சே. — பெலோருஷ்ய சேனை
வி. க. — விமானந்தாங்கி கப்பல்
போ. க. — போர்க் கப்பல்
கு. — குரூசர்
ஸ். க. — ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல்
பா. ப. — பாராசூட் இறக்குப் படை
வா. இ. டி. — வான் இறக்கு டிவிஷன்
யு. ம. வி. ப. — யுகோஸ்லாவிய மக்கள் விடுதலைப் படை
போ. இ. ப. — போலந்து இராணுவப் படை
மோ. சை. ரெ. வே. பி. — மோட்டார் சைக்கிள் ரெஜிமெண்ட் வேவுப்பிரிவு
ரு. — ருமேனியா
போ. — போலந்து
ஹ. — ஹங்கேரி
ஜெர். — ஜெர்மனி
ஸ்பெ. — ஸ்பெயின்
இத். — இத்தாலி
பிரிட். — பிரிட்டன்
இங். — இங்கிலாந்து
பிரா. — பிரான்ஸ்
அமெ. — அமெரிக்கா
நியூ. ஜீ. — நியூ ஜீலாந்து
ஜப். — ஜப்பான்
நெ. — நெதர்லாந்து
ஆஸ்தி. — ஆஸ்திரேலியா
நா. — நார்வே

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்

சென்னை — 600 098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600 002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625 001

3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641 018

42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620 008

செர்ரி ரோடு, சேலம் — 636 001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, *மதுரை சாலை;*

திருநெல்வேலி ஜங்ஷன் — 627 001

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643 001

நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624 001